215191.
to
215203

ஆர்யதர்மம்
4/22 ஸை 25
1-7-1937

[illegible].

383

28 JUL 1937

215/191

Registered No. M. 2913.

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 22 | கும்பகோணம் கலி 5039 ஈஸ்வர-ஞு ஆனி-மீ 18உ 1937-ஞு ஜூலை-மீ 1உ | லம 25

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணு 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

புஸ்தகப்பறிமுதல்

ஹிந்துமத தூஷணம்.

ஆமதாபாத்தில் ஒரு மஹமதியரால் ஹிந்து மததத்வங்களை தூஷணைசெய்துஎழுதப்பட்ட "ஸத்யபிபந்தா" என்ற புஸ்தகத்தைப்பறிமுதல்செய்யவேண்டுமென்று அவ்வூர் ஹிந்துமிஷின்ஸங்கத்தார் கேட்டுக்கொண்டதின் மேல் ஜில்லா கலெக்டர் அந்தப்புஸ்தகங்களைப் பறிமுதல்செய்யும்படி உத்திரவு போட்டிருக்கிறார்.

2 ஆயிரம் சொச்சம் புஸ்தகங்களை போலீஸார் கைப்பற்றிவிட்டார்கள், இந்தப் புஸ்தகங்களைக் கொளுத்திவிடும்படி கலெக்டர் உத்திரவு செய்திருக்கிறார்,

இங்கிலாந்தில் விவாஹ மசோதா.

ஆர்ச்சுபிஷப்பின் அபிப்பிராயம்.

லார்டு ஸபையில் விவாக சீர்திருத்தமசோதா ஒன்று கொண்டுவரப்பட்டிருக்கிறது. விவாக ரத்து விஷயமாக இதில் சில மாறுதல் செய்யப்படுமாம். இதைப் பற்றி காண்டர்பரி ஆர்ச்சுபிஷப் பேசுகையில் விவாஹ ரத்து செய்துகொண்ட பிறகு மறு விவாஹம் செய்துகொள்வதை மதம் அங்கீகரிக்கவில்லை என்று குறிப்பிட்டார். விவாக ரத்துக்கு வியபிசாரம் முக்யகாரணமாகக் கோர்ட்டில் காட்டவேண்டியிருப்பதாயும் கணவனோ மனைவியோ வியபிசாரம் செய்ததாகக் காட்டாதவரையில் விவாக ரத்துக்கிடைப்பது கஷ்டமாயிருப்பதாயும், இந்த சங்கடத்தை இந்தச் சட்டமூலம் மாற்ற வேண்டுமென்றும் பலர் வற்புறுத்தினர்.

ராணுவச்சட்டக் கைதி விடுதலை.

பஞ்சாபில் பல வருஷங்களாக ராணுவச்சட்டப்படி தண்டிக்கப்பட்டிருந்தசிலகைதிகளை அந்த கவர்மெண்டார் விடுதலைசெய்ய முன்வந்திருக்கிறார்கள்- இதுவரையில் 6பேர்கள் விடுவிக்கப்பட்டனர், மாகாண ஸ்வய ஆக்ஷியின் முதல் பயன் இதுஎன்று அங்கு நினைக்கப்படுகிறதாம்.

பஞ்சாபில் [illegible]

மந்திரி கூறும் கணக்கு.

ஆயிரம் ஸ்திரீகள்.

பஞ்சாப் சட்டசபையில் நர சோரத்தைப் பற்றிக்கேட்டகேள்விக்குப்பதில் கூறுகையில் 600 பேர்கள் மோசடியாகத்தூக்கிக்கொண்டு போகப்பட்டதாயும், 500 பேர் வரையில் நர சோரம் செய்யப்பட்டிருப்பதாயும் 948 பேர் ஸ்திரீகளென்றும் 1937ம் வருஷத்தில் நான்கு மாதங்களுள் 300பேர்கள் வரையில் இந்த விபத்திற்கு உள்ளாயிருப்பதாயும் மந்திரிகூறினர்.

பாதிரிக்கு 144

ஹிந்து உத்ஸவத்திற்குக் தடை செய்யக் கூடாது.

திருநெல்வேலி ஜில்லா கஞ்சாங்குளம் கிராமத்தில் கிறுஸ்துவரல்லாத தீண்டாதார் மாரியம்மனுக்கு கொடை உத்ஸவம் நடத்துவது வழக்கம். கோவிலுக்கு ஸமீபத்திலுள்ள ஒரு கத்தோலிக்கு கிறஸ்தவ சர்ச் பாதிரி இந்த உத்ஸவத்தைத் தடை செய்ததாகப் புகார் செய்யப்பட்டது. பாதிரிமீது 144-பிறப்பிக்கப்பட்டது. அவர் அப்பீல் செய்தார். மாரியம்மன் கோவிலும், உத்ஸவமும் வெகு நீண்டகாலமாக இந்து ஆதித்ராவிடர்களால் நடத்தப்பட்டு வருவதாயும், சர்ச் சமீபத்தில் தான் ஏற்பட்டதென்றும் ஆதலால் பாதிரி, மாரியம்மன் உத்ஸவத்திற்கு இடையூறு செய்யக்கூடாதென்றும் 144-பிரிவு போட் நியாயமென்றும் அப்பீலில் முடிவு செய்யப்பட்டது.

காங்கிரஸ்காரர்களுக்கு அபராதம்.

எலெக்ஷன் கலஹம் செய்ததாக.

சென்ற சட்ட சபை எலெக்ஷன் காலத்தில் ஜஸ்டிஸ் கக்ஷி அபேக்ஷகராக நின்ற சேத்தூர் ஜமீந்தாருக்கு விரோதமாக 8-காங்கிரஸ் வாலண்டியர்கள் குற்றம் செய்ததாகக் கொண்டுவரப்பட்டிருந்த கேஸில் ஸ்ரீவில்லிபுத்தூர் மாஜிஸ்ட்ரேட்டால் மேற்படி எதிரிகளுக்குத் தலா 20-ரூ. அல்லது 3-வாரம் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

சேத்தூர் ஜமீன்தார் வீட்டில் நுழைந்து எதிரிகள் ஜே கோஷம் போட்டு உபத்திரவம் செய்தார்களாம்.

கொச்சி திவான் உத்யோக நீடிப்பு.

கொச்சி திவானாக இருந்துவரும் ஸர்.ஷண்முகம் செட்டியாருடைய உத்யோக காலம் முடிந்துவிட்டபோதிலும் இன்னும் 3-வருஷங்களுக்கு அவர் திவான் உத்யோகம் பார்க்கும்படி உத்திரவு போடப்பட்டிருக்கிறதாம்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாருதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷீட் ஜெம்ஷேட் சன்ஸ் & Co,
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட் பெரியதெரு, கும்பகோணம்

குடந்தையில் மஹாமஹோபாத்யாய
ஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள்.
பண்டித ஸபையில் பிரஸங்கம்.

கல்கத்தா ஸர்வகலாசாலை ஸம்ஸ்கிருத ஆசிரியரான பிரம்ம ஸ்ரீ மஹாமஹோபாத்யாய பண்டித அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள் 25௳ வெள்ளிக்கிழமை கும்பகோணத்திற்கு விஜயம்செய்தார் அன்றுமாலை 6மணிக்கு டவுன் ஹாலில் லேபெரிமண்டபத்தில் குடந்தைப்பண்டிதர்களின் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் ஸநாதநிகளின் தற்கால நிலைமையையும், கொச்சி திருவாங்கூர் ஸம்பவங்களையும்பற்றி ஓர்பிரசங்கம்செய்தார். குடந்தையிலுள்ள அநேக வித்வான்கள் மேற்படி கூட்டத்திற்கு வந்திருந்ததுடன் ஸநாதன தலைவர்களான பல லௌகிககனவான்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

மஹாமஹோபாத்யாய பண்டிதராஜ ஸ்ரீ.உ.வே. ஆர். வி. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமிகள் மேற்படி ஸபையில் தலைமை வகித்தார்கள்.

பிரம்மஸ்ரீ அனந்தகிருஷ்ணசாஸ்திரிகள் பேசியதன் ஸாராம்சமாவது:—

இன்று இங்கு இந்தஸபையில் பேசும்படி நேர்ந்ததற்கு சந்தோஷிக்கிறேன் ஸநாதன தர்மத்தின் தற்காலஸ்திதியைப்பற்றி நாம்கவலையுடன் ஆலோசிக்க வேண்டிய ஸந்தர்ப்பமிது. முக்கியமாகத்திருவாங்கூர், கொச்சிஸம்பவங்களைப்பற்றியே எங்கும்பேசப்படுகிறது நான் சிலநாட்களாகக்கொச்சியில் தங்கி அங்குள்ள நிலைமையை அறிந்துகொண்டேன். மஹாராஜா முதலியவர்களுடன் பேசினேன். கொச்சி மஹாராஜா ஆலயப்பிரவேச விஷயமாகத்திருவாங்கூர் செய்த கார்யத்தைக்கண்டிக்கவோ ஆதரிக்கவோ செய்யாமல் நடுநிலைமையில் இருக்கவேண்டுமென்றே நினைத்திருந்தார். ஆனால்திருவாங்கூர் விஷயமானது இவருடைய ராஜ்யத்தில் ஸம்பந்தப்பட ஆரம்பித்தபிறகு தான் கொச்சிராஜா தம்முடைய அபிப்ராயத்தை வெளியிட்டு கார்யம் செய்யநேர்ந்தது. கூடல்மாணிக்கம் கோவில் விஷயமாக அவர் எடுத்துக்கொண்ட நடவடிக்கையாவருமறிந்ததே. மஹாராஜா இந்த விஷயத்தில்மிக்க உறுதியுடன் இருக்கிறார். இவருடையகாலத்தில் அங்கு ஆலயப்பிரவேசஅதர்மத்திற்கு நிச்சயமாக இடம்கொடுக்கமாட்டார். இவருக்குப் பிறகு பட்டத்திற்கு வரக்கூடியவர்களிலும் நல்லபடித்தவர்களாயும்ஆஸ்திகர்களாயும்பலர் இருந்துவருவதால் அந்த ஸம்ஸ்தானத்தில் ஆலயப்பிரவேச இயக்கம்என்றும் பலிக்காது நான் அங்கு சென்றபிறகு அநேக நம்பூதிரிப்பண்டிதர்களை ஸந்தித்தேன். பண்டிதர்களின் ஸபைகளும் அநேகம் நடந்தன. மஹாராஜாவின் அநுமதிபெற்ற சிலஸபைகளும் நடந்தன. தீண்டாதார்ஆலயப்பிரவேசம் அசாஸ்திரீயமென்பதற்கும், அதர்மமென்பதற்கும் ஆகமாதிபிரமாணங்களிலிருந்து பிரமாணங்களை சேகரிப்பதற்காக ஒரு ஸமிதி நியமிக்கப்பட்டிருக்கிறது. அதில் நானும் ஒரு ஸப்யன். பிரமாணங்களை சேகரிக்கும் கார்யமாகவே நான் பலவிடங்களுக்குப்போய் வருகிறேன். இவ்வூரிலும் அந்தக்கார்யத்தைச்செய்து கொடுக்கப் பண்டிதர்கள் முன்வரவேணும். இந்தவேலை முடிந்தபிறகு பிரபலமடாதிபதிகள், பண்டிதர்கள் முதலியவர்களுடைய ஆதரவில் தென்னிந்தியாவில் ஒரு மத்யஸ்தலத்தில் பெரிய பண்டித மஹாஸபை ஒன்றை நடத்த உத்தேசமிருக்கிறது, இந்தியாவில் பலபாகங்களிலிருந்தும் குறைந்தது 500பண்டிதர்களையாவது வரவழிக்க உத்தேசமிருக்கிறது.

ஸநாதனமும் ராஜீயமும்.

ஸநாதனமும் ராஜீயமும் வேறுபட்டதென்றும், ஸநாதனிகளுக்கு ராஜீயம் தெரியாது என்றும் இக்காலத்தில் நினைக்கப்படுகிறது. உண்மையில் இவ்விரண்டும் பிரிக்க முடியாதது. நம் ஸநாதன தர்மத்தில் முற்றிலும் ராஜீய சம்பந்தம் அடங்கியிருக்கிறது. மநு யாக்ஞவல்க்யாதிகளுடைய கிரந்தங்களைப் பார்க்கலாம். அவைகளில் ஸநாதன தர்மத்துடன் ராஜநீதிகளும், அர்த்த சாஸ்திர தத்வங்களும் கலந்தே போதிக்கப்படுகின்றன. ராஜ்யமென்பது பெரும்பாலும் அர்த்தசாஸ்திரத்தையே அஸ்திவாரமாகக் கொண்டது. சுக்ரநீதி, காமந்தக நீதி, சாணக்ய நீதி முதலியவைகளும் ராஜீயத்தைப் போதிக்கும் நூல்களேயாம். ஸநாதன தர்மத்தை ஆஸ்ரயித்து நிற்கும் எவனும் மேற்படி நீதிகளின் அபிப்பிராயங்களைத் தெரிந்துகொள்ளாமலிருக்க முடியாது. ஆகையால் நம்முன்னோர்களும் நாமும் ராஜீயம் நன்கு தெரிந்தவர்களேயாவோம் இப்போதும் நமது ஸநாதனதர்மிகள் ராஜீயத்தில் ஸம்பந்தப்பட்டு ஸநாதன தர்ம பிரசாரம் செய்வது நல்லது. ஆனால் ராஜீயப்ரசாரம் செய்கிற தற்கால காங்கிரஸ்காரர்கள் தான் இந்த உண்மை உணரவில்லை தர்மத்திற்கும், ராஜ்யத்திற்கும் ஸம்பந்தமில்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள். அதனால் தர்ம சிரத்தைக் குறைந்து ராஜீய நன்மைக்காக தர்மத்தைக் கெடுக்க முயலுகிறார்கள்.

ஸநாதநிகளே மெஜாரிடி.

தேசத்தில் மெஜாரிடி ஜனங்களுடைய அபிப்பிராயப்படி நடப்பதாகக் காங்கிரஸ் சீர்திருத்த வாதிகள் வாதிக்கிறார்கள். இந்தியாவில் யார் மெஜாரிடி? இதை எப்படி கண்டுபிடிப்பது? ஸநாதனிகளே மெஜாரிடி என்று நாம் நினைக்கிறோம். வெளிக் கூட்டங்களில் கூடும் ஜன ஸங்கியையைக் கொண்டு மெஜாரிடி மைனாரிடி நிர்ணயம் கூடாது. ராஜீய கார்யத்திற்குத் தான் வெளிக் கூட்டம் வேணும். தர்மாநுஷ்டானத்திற்கு வேண்டியதில்லை. ஸந்த்யாவந்தனமோ, விவாஹமோ, சிரார்த்தமோ, ஒவ்வொரு மனிதனுடைய தனியான காரியம். பெரிய ஜனக்கூட்டம் கூடி இதில் செய்யவேண்டியது என்ன? அவரவர் வீட்டிலேயே ஏகாந்தமாக இவை செய்யத் தக்கவை. ஸமூஹத்திற்கு இவை ஸம்பந்தப்பட்டவை அல்ல. ராஜீய கார்யத்தில் இப்படி இல்லை. அது ஸமூஹ விஷயத்தையேபொருத்தது கூட்டம்கூடியே அதைச் செய்யவேணும். ஆதலால் இந்தியா முழுவதும் ஸ்வதர்மாநுஷ்டானம் செய்கிறவர்களை ஒன்று சேர்த்தால் தார்மிகர்களே மெஜாரிடியாய் இருப்பார்கள். ஆகையால் தர்ம விஷயத்தில் மெஜாரிடியார் விருப்பப்படியே சீர்திருத்தக்காரர் நடப்பது நியாயமாகும். நாம் மெஜாரிடி என்பது க்ஷேத்திரங்களிலும், உத்ஸவங்களிலும், கும்பகோணம் மகாமகம் போன்ற ஸந்தர்ப்பங்களிலும் கூடும் லக்ஷக்கணக்கான ஜனங்களைக்கொண்டுநிச்சயப்படுகிறது. காங்கிரஸ்காரர் இஷ்டப்படி தார்மிகர் மைனாரிடி என்று வைத்துக்கொண்டாலும் எனக்கு ஆக்ஷேபமில்லை. மைனாரிடி வகுப்பாரின் உரிமைகளைக் காப்பதே ராஜீய சாஸ்திரத்தின் உயிராகும். காங்கிரஸ்வாதிகளும் இந்த நியமப்படி நமது உரிமையைக் காத்துக்கொடுக்கக் கட்டுப்பட்டிருக்கிறார்கள்.

திருவாங்கூர் ஆலயப்ரவேசம்!

ராஜீய நோக்கம் ஸித்தியடைவதற்காகவே தீண்டாமை விலக்கும் ஆலயப்ரவேசமும் அவச்யமென்று ராஜீய வாதிகள் வாதித்து வந்தார்கள். இது உண்மையல்லவென்று திருவாங்கூர் விஷயத்திலிருந்து விளங்கிவிட்டது. திருவாங்கூரில் ஸ்வதேச அரசரே ஆக்ஷிபுரிகிறார். அந்நியரான வெள்ளைக்காரரல்ல. அங்கு ஜனங்கள் ஸ்வராஜ்யம் கோரவில்லை. அப்படியிருந்தும் அங்கு ஆலயப்பிரவேச அதர்மம் ஏன் செய்யவேணும்? காங்கிரஸ்வாதிகளும் அதை ஆதரிப்பதேன்? ஆதலால் ராஜீயகார்யத்திற்காக மத சீர்திருத்தமென்பது பொய்வாதமே. ராஜீய நன்மை முக்யமானால் திருவாங்கூரில் கிறிஸ்தவர், மஹம்மதியர், முதலிய எல்லா ஜாதியாரையும் பத்மநாபர் கோவிலில் விடவேண்டாமா? மசூதிகளிலோ சர்ச்சுகளிலோ ஹிந்துக்களும் பிரவேசிக்க உரிமை கொடுக்கவேண்டாமா? இப்படிச் செய்தாலல்லவோ ஸர்வ வகுப்பு ஒற்றுமை ஏற்பட்டு ராஜீயம் ஸித்திக்கும்.

திருவாங்கூரில் உண்மையாய் ஆலயப்ரவேசம் ஸாதிக்கப்படவில்லை கண்காக்ஷிசாலையில் தெய்வ விக்ரஹத்தைக் காண்பது போலவே அங்கு பலன் ஏற்பட்டிருக்கிறது. துப்பாக்கி, பீரங்கி, அடக்கு முறை இவைகளின் பலத்தால் ஸாதிக்கப்படும்கார்யமானது சாஸ்திரீயமாகிவிடுமா? அங்கு சீர்திருத்தக்காரர்கள் சாஸ்திரமூலமான வெற்றியடைந்ததாக ஒருக்காலும் பெருமை பேசமுடியாது.

நான் சில்ப சாஸ்திரங்களையும் படித்தேன். அவைகளின்படியும் ஜாதிபேத நியமம் கோவில்களில் அவச்யமென்று தெரிகிறது சில்ப சாஸ்திரங்களில் கோவிலில் உபயோகிக்க வேண்டிய மரங்களில் கூட ஜாதிபேதம் கூறப்பட்டிருக்கிறது. இன்னின்ன லக்ஷணம் உள்ள விருக்ஷங்கள் பிராம்மண விருக்ஷங்கள் என்றும், இன்னின்னது க்ஷத்ரிய விருக்ஷம் என்றும் நான்கு ஜாதிப் பிரிவு சொல்லப்பட்டு நீச ஜாதி விருக்ஷங்களும் சொல்லப்படுகின்றன. நீச ஜாதி விருக்ஷங்களை கோயிலுக்கு வெளியில் செய்யப்படவேண்டிய வேலைகளுக்கு உபயோகிக்கலாமேயல்லது கோவிலுக்குள் அந்த மரங்களை உபயோகிக்கக் கூடாது என்று சொல்லப்படுகிறது. இந்த விஷயத்தை ஒரு விச்வகர்ம ஆசாரியரிடமிருந்து நான் தெரிந்துகொண்டேன். இதிலிருந்தும் கோவில்களில் ஜாதி நியம ஏற்பாடுகளை அறிவது நலம்.

ஆபத்தர்மமல்ல.

ஆலயப்ரவேசாதி சீர்திருத்தங்களை ஆபத்தர்மமாக நினைக்கலாம் என்று சிலர் கருதுகிறார்கள். அது நியாயமல்ல. சாஸ்திரங்கள் முக்கியம், கௌணம், ஆபத் என்ற பிரிவுப்படி தர்மங்களை வகுத்திருப்பது உண்மையே. ஆனால் ஆபத் தர்மமென்பது எவனுக்கு ஆபத்து உண்மையில் ஏற்பட்டிருக்கிறதோ, அவன் மட்டில் அதைச் செய்ய அநுமதிக்கிறது. இப்போது கூட நம் தேசத்தில் எல்லாரும் ஆபத்தர்மத்தைக் கைக்கொள்ள நிலைமை ஏற்பட்டு விட்டதா? அனேகர் அதை அபேக்ஷிக்கவில்லை. ஆபத்து ஏற்பட்டவர் கைகொள்வதற்காக ஏற்பட்ட சலுகையை ஆபத்தில்லாதவர்களும் அவலம்பிக்கும்படி நிர்ப்பந்திப்பது என்ன நீதியில் சேர்ந்தது? ஆபத் தர்மத்தின் உண்மையான நோக்கத்தையே இவர்கள் அறியாதவர்கள்.

பண்டிதபரிஷத்.

சென்னையில் சீர்திருத்தக்காரர்கள் பரிஷத் ஒன்று நடத்தப்போகிறார்கள். இதனால் பிரயோஜனமில்லை. ஏற்கனவே காஞ்சியிலும் திருவாதியிலும் நடந்த பரிஷத்தால் எவ்வித பயனும் ஏற்படவில்லை. அந்தப் பரிஷத்திற்கு

மேலூர் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்.

20—6—37 இரவு 7½ மணிக்கு மேலூரில் ஒரு பெரிய ஸநாதனஸபை கூடிற்று. மேலூர் அட்வொகேட் ப்ரும்மஸ்ரீ V. ராமஸ்வாமி ஐயர் B. A., B. L. அவர்கள் அக்ராஸனம் வகித்தனர். ஸ்ரீக்ருஷ்ண பகவானுக்கு பூஜை நடந்தபின் ஸ்ரீமான் ராகவாசாரியார் அவர்கள் பகவானின் பேரில் அநேக ஸ்தோத்திரங்களை ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் இனிமையாயும் உருக்கமாயும் கானம் செய்தார்கள். மதுரையிலிருந்து அகில இந்தியா வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தலைவர் ப்ரம்மஸ்ரீ ராவ்சாஹிப் N நடேசய்யர் B. A. B. L. அவர்களும் ராமேசுவரம் தேவஸ்தானம் பாடசாலை மாஜி ப்ரின்ஸிபல் ப்ரம்மஸ்ரீ V S ராமஸ்வாமி சாஸ்திரிகள் B. A. B. L. அவர்களும் சேதுபதி ஹைஸ்கூல் உபாத்யாயர் ப்ரம்மஸ்ரீ B. S. ஜகதீசய்யரவர்களும் வந்து உபந்யஸித்தார்கள்.

2 அக்ராஸனாதிபதி முகவுரையில் வர்ணாச்ரமதர்மம் என்பது என்னவென்று விளக்கி வர்ணாஸ்ரம ஸங்கம் ஸ்தாபிக்கவேண்டிய அவச்யத்தையும் எடுத்துக் கூறவேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் பேரில் ப்ரம்மஸ்ரீ ராவ்சாஹிப் N நடேசய்யரவர்கள் ஸநாதனதர்மம் வர்ணாஸ்ரமதர்மம், ஸ்வதர்மம் இவைகளின் தாத்பர்யங்களை புராணங்களிலிருந்தும் சரித்திரங்களிலிருந்தும் அனேக உதாரணங்களுடன் நன்கு விளக்கினார்கள், வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் நோக்கம் நமக்கு ஸ்வராஜ்யம் கிடைக்கவேண்டியதுதான் என்றும் இது விஷயத்தில் காங்கிரஸுக்கும் நமது சங்கத்திற்கும் அபிப்ராயபேதமில்லையென்றும் எடுத்துக்காட்டினார்கள். ஆனால் நமது சங்கத்தின்மூலம் நாம் அடைய ப்ரயத்னப்படுவது வர்ணாஸ்ரமதர்மத்திற்கு விரோதமில்லாத ஸ்வராஜ்யமென்றும் காங்க்ரஸ் தலைவர்களாகிய ஜவஹர்லால் நேரு, C. ராஜகோபாலாசாரியார், காந்திஜி முதலியவர்கள் நமது வர்ணாஸ்ரம தர்மத்திற்கு விரோதமாய் முயற்சி செய்கிறார்கள் என்றும் எடுத்து உரைத்தார்கள். மத விஷயங்களில் சமீபகாலம்வரை காங்க்ரஸ் ப்ரவேசிப்பதில்லை என்கிற கொள்கையுடன் இருந்துவந்தது. காந்திஜி காங்கிரஸில் புகுந்ததுமுதல் ராஜீய விஷயங்களோடு மத விஷயங்களை கலந்து நமக்கு பெரும் தீங்கு நேர்ந்திருக்கிறது. நாம் ஸ்வராஜ்யம் அடைய முயற்சிப்பதில் நமது வர்ணாஸ்ரம தர்மத்தையும் பாதுகாத்துக்கொள்வதற்காக நமது தேசத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் வர்ணாஸ்ரம ஸ்வராஜ்யசங்கம் ஏற்படுத்தி நமது சங்கத்தை பலப்படுத்திக்கொள்ளவேண்டியது நமது கடமையென்று வற்புறுத்தினார்கள்.

3. ப்ரும்மஸ்ரீ பி. எஸ். ஜெகதீசய்யரவர்கள் நாம் முன்னேற்றமடைய நமக்கு தர்மாநுஷ்டானம் இன்றியமையாதது என்றும் அதற்கு யாதொரு தீங்கும் வாராதபடி முயற்சிக்க வேண்டியது நமது கடமையென்றும் அனேக சாஸ்திர ப்ரமாணங்களுடன் எடுத்துக் காட்டினார்கள். காங்கிரஸ் தலைவர்களால் தர்ம தத்துவங்களை அறியமுடியாததால் அவர்கள் பிசகான வழிகளில் வேலை செய்கிறார்கள் என்றும், அதைப் பொருள்படுத்தாமல் நாம் சாஸ்திரப்படி நடப்பதற்கு வேண்டிய அனுகூலங்கள் செய்துகொள்வதற்கு நமது வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கங்களை பலப்படுத்திக்கொண்டு அவைகளின் மூலமே நாம் வேலை செய்யவேண்டும் என்று ஸ்தாபித்தார்கள்.

4. ப்ரும்மஸ்ரீ வி. எஸ். ராமஸ்வாமிசாஸ்திரிகள் அவர்கள தேவாயலங்களில் பஞ்சமர்கள் பிரவேசிக்கவேண்டுமென்று காங்கிரஸ் தலைவர்கள் கூறுவது நமது சாஸ்திரங்களுக்கு நேர்விரோதமென்றும், அதனால் பஞ்சமர்களுக்கே அனுகூலம் இல்லை என்றும் நன்கு விளக்கிக் காட்டினார்கள்.

5. பிறகு ஸபையோர்கள் வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய ஸங்கம் ஒன்று மேலூரில் ஸ்தாபித்து அதற்கு அட்வகேட் ப்ரும்மஸ்ரீ வி. ராமஸ்வாமி அய்யர் பி.ஏ. பி.எல். அவர்களை அக்ராஸனாதிபதியாகவும் ப்ரும்மஸ்ரீ வெங்கடநாராயண அய்யர் பி. ஏ. பி. எல். அவர்களையும் டி. ஆர். சுப்பிரமணிய அய்யரவர்களையும் கார்யதரிசிகளாகவும் தெரிந்தெடுத்தார்கள் அனேக பிரமுகர்கள் உடனே சங்கத்தின் அங்கத்தினர்களாக தாக்கல்செய்துகொண்டார்கள் பிறகு அக்ராஸனாதிபதி அவர்களுக்கும் உபந்யாசகர்களுக்கும் வந்தனோபசாரங்கள் அளிக்கப்பட்டன. ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு பூஜை நிவேதனம் செய்து பகவத்ப்ரசாதங்கள், பழவகைகள், தாம்பூலம் முதலியவைகள் ஏராளமாய் சபையோர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு சபை இனிது கலைந்தது.

எம். வெங்கடாசலம், கார்யதரிசி.

மேல்மங்கலம்.
ஆஸ்திக மஹாஜன சபை

ஈச்வர-ஹு ஆனி-மீ 6௳ மாலை 4 மணிக்கு சபையின் கூட்டம் ஆரம்பமாயிற்று. சபையின் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவ்வமயம் இச்சபையை அகில பாரதீய சபைக்குக் கிளையாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட தலைவர்களின் கடிதமும் வந்து சேர்ந்தது. சபையிலுள்ளோர் யாவரும் சந்தோஷமடைந்தனர்.

இவ்வாஸ்திக மஹாஜன சபைக்கு பிர்ம்மஸ்ரீ பிளாஞ்சேரி சுப்பிரமணிய அய்யாவர்கள் அக்ராசனாதிபதியாகவும், பிர்ம்மஸ்ரீ ப. விஸ்வநாதய்யாவர்கள் உப அக்கிராசனாதிபதியாகவும், சிவராமகணபதி கனபாடிகள் கார்யதரிசியாகவும் பிர்ம்மஸ்ரீ சு. அய்யாமு சாஸ்திரிகள் உப காரியதரிசியாகவும் N. R. அய்யாவர்கள் B.A., பொக்கிஷதாரராகவும் கமிட்டி மெம்பர்கள் 18 பேர்களும் ஆக 23 பேர்களும் சபையை நிர்வாஹிக்க கிராம மஹாஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

அக்கிராசனர் சனாதன தர்மம் என்னும் விஷயத்தை எளிய தமிழ் நடையில் அழகாக உபன்யசித்தார்கள். பிறகு அக்கிராசனரின் கீழ் ப்ரும்மஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரிகள் தற்பொழுது சனாதனிகளுக்கும் தர்மத்திற்கும் ஏற்பட்டிருக்கும் இடையூறுகளையும், அதை விலக்க நம்மை நாம் சீர்திருத்திக்கொண்டு தர்மத்தை யாவரும் அறியும் வண்ணம் பிரசாரம் செய்யவேண்டிய அவசியத்தையும் முக்கியமாய் சிறுவர்களை சீர்திருத்தவேண்டும் என்பதை அழகாக எடுத்துரைத்தார்கள்.

கார்யதரிசி அவர்கள் முன்கால பாரத தேச நிலை, தற்போதய நிலை அதன் பரிஹாரம், சபையின் விதிகள் முதலியவைகளை விளக்கினார்கள்.

பிறகு ப்ரும்மஸ்ரீ சிவராம ச்ரௌதிகளால் அக்கிராசனாதிபதி முதலியோருக்கு வந்தனோபசாரம் சொல்லப்பட்டு கற்கண்டு தாம்பூலம் வழங்கப்பட்டு சபை 6 மணிக்கு பூர்ணமானது.

சிவராமகணபதி கனபாடிகள்,
கார்யதரிசி,
ஆஸ்திக மஹாஜன சபை

ஆத்தன்குடி.
ஸநாதந தர்ம ஸபை.

ஈச்வர-ஹு ஆனி-மீ 10௳ புதன்கிழமை மாலை 4மணிக்கு கடவுள் வாழ்த்துக்குப்பின் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ் பண்டிதர் ப்ரும்மஸ்ரீ ஜெ. சாமிநாதய்யரவர்கள் தலைமை தாங்கினார்கள். ஸ்ரீமான் கதிரேசன் செட்டியார் 'ஆலயபாதுகாப்பு' என்பதைப் பொருளாகக்கொண்டும ஜெகதீசய்யர் 'வாய்மை' என்பதைப்பற்றியும் சொற்பொழிவாற்றினர். தலைவர்கள் ஹரிச்சந்திர புராணம், திருக்குறள், நாலடியார், திருவாசகம் முதலானவற்றிலிருந்து அரியமேற்கோள்களுடன் இனிய முடிவுரை பகன்றார். வந்தனோபசாரத்துடன் 6 மணிக்குக் கலைந்தது.

வேதசாஸ்திர வித்வான் ப்ரும்மஸ்ரீ கல்யாணசுந்தர கனபாடிகளவர்களால் நகரத்தார் ஆதரவில் சுமார் 6 மாத காலமாய் ப்ரவசனம் செய்யப்பட்டு வந்த கந்தபுராணம் பூர்த்தி அடைந்தது.

கார்யதரிசி

மாம்பலம்.

ராமேஸ்வரம் ரோட் 13-நெ பங்களாவில் சென்ற 22-6-37 செவ்வாய்க்கிழமை அன்று இரவு 8-மணி முதல் 10-மணி வரையில் சேங்காலிபுரம் புராணகேஸரீ ராமாயணம் ப்ரும்மஸ்ரீ அப்பாஸ்வாமிசாஸ்திரிகளவர்களால் ஸ்ரீ ஸீதாகல்யாண கட்டம் வெகு அழகாய் ஸங்கீத ரசத்தோடுகூட பிரவசனம் செய்யப்பட்டது. நகரவாஸிகள் எல்லாரும் வந்து ஷெடி சாஸ்திரிகள் அவர்களுடைய குணநிசயத்தையும் கொண்டாடி சிரத்தையுடன் சிரவணம் செய்து பேரானந்தமடைந்தார்கள். அநேக வைதீக கோஷ்டிகளும் சிரோமணிகளும் வந்து சிரவணம் செய்து ஷெடிசாஸ்திரியாருக்கு வேதம் சாஸ்திர புராணங்களிலுள்ள பாண்டித்யத்தைக் கொண்டாடினார்கள். பிறகு எல்லாருக்கும் சந்தனம் புஷ்பங்கள் கொடுத்து ஸபை கலைந்தது.

ஒரு நிருபர்.

புதிய ரயில்வண்டிகள்.
4 கோடி ரூபாய் அநுமதி.

இந்தியா கவர்ன்மெண்ட் வரவு செலவு இலாகாக் கமிட்டியானது இந்தியாவில் புது மாதிரியான ரயில்வண்டிகள், வாகன்கள் செய்வதற்கு 4 கோடி ரூபாய் சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்.

புத்தக வரவு.

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீசங்கரபகவத்பாதாள்:— தமிழ் நாடகம தேவீதாஸன் எஸ். ஸந்தானராமன் இயற்றியது. விலை. 0—8—0 (80-பக்கங்கள் கொண்டது.)

ஸ்ரீ சங்கரகுரு வைபவச் சுருக்கம்:— பங்கா நாடு மஹோபதேசக கவிரத்னம் ப. பஞ்சாபகேச சாஸ்திரிகளால் இயற்றப்பட்டது. மஹாமஹோபாத்யாய கணபதி சாஸ்திரிகளால் இயற்றப்பட்ட சங்கர அஷ்டோத்தர நாமாவளியுடன் கூடியது. விலை. 0—0—6.

சென்னை ஆர்யமத ஸம்வர்த்தனீ அச்சுக் கூடத்தில் கிடைக்கும்.

சத்திய விளக்கம்.— நேடிவ் டாக்டர் டி. என். சுந்தரராஜய்யர் அவர்களால் பிரசுரம் செய்யப்பட்டது. (விலை 0—1—3)
43, லக்ஷ்மீபுரம், குருக்குத்தெரு,
மதுரை. என்றவிடத்தில் பெறலாம்.

ஸ்ரீமத்பாகவதம்:—ச்லோகங்களைச் சுருக்கி வாக்கியார்த்தங்களைத் தமிழில் திருநெல்வேலி அட்வகேட் டி. ஆர். கணபதிராமய்யர் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. விலை ரூ. 1—8—0

353



அநாவசியமாக ஏன் - -
அவஸ்தைப்படுகிறீர்கள்
அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்தி [illegible] நிவிர்த்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது
அமிர்தாஞ்சனம்

2/5/91

குழந்தை
குடல் ஈரல் கட்டிகளுக்கு
ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள
மதுரை வைத்ய நிபுணர் T.R. ஆராவமுதய்யங்காரின்
மருந்தை உபயோகியுங்கள். ஆயிரக்கணக்காக சௌக்கியம். தங்கமெடல் பரிசும் பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது.
ஒரு மாதம் மருந்து விலை ரூ. 4--8—0 வி. பி. வேறு.
டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,
20, வடக்கு வெளிவீதி, மதுரை

மதிப்புரை.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயண ஸாரம்.

திவான்பஹதூர் வி. கே. ராமாநுஜாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டு, ஸ்ரீமான் விஜயராகவாசாரியாரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. விலை ரூ. 1—8—0

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தை ஸ்திரீகள், பாலர்கள், ஸாமான்யர்கள் யாவரும் சுலபமாகப் படிக்கவேண்டி வெகு எளிய தமிழ் நடையில், முக்ய விஷயங்கள் விட்டுப்போகாமல் இந்தப் புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது. சுலோகங்களை கலக்காமல் வசனநடையிலேயே எழுதப்பட்டிருப்பினும் சில முக்ய ஸந்தர்ப்பங்களுக்கு ஏற்ற சுலோகங்கள் மட்டும் ஸமயோசிதமாக எடுத்து எழுதப்பட்டிருக்கின்றன. • ஸ்ரீ ராமாயணத்தைப் படிப்பதால் மனிதஸமூஹத்திற்கு என்னென்ன ஸாமான்ய தர்மம் சிக்ஷிக்கப்படுகிறதென்பதை ஆசிரியர் உதாஹரணத்துடன் எடுத்துக் காட்டியிருக்கிறார். பிள்ளையின் தர்மம், ராஜ தர்மம், பார்யை தர்மம், பர்த்தா தர்மம், மந்திரி தர்மம் முதலான பல தர்மங்கள் ஸ்ரீராமாயண கதை உதாஹரணத்துடன் விளக்கப்பட்டிருக்கிறது. கடைசியிலுள்ள அநுபந்தத்தில் பல ரிஷிகள் ராக்ஷஸர்கள் முதலியவர்களுடைய கதை விவரிக்கப்பட்டிருக்கிறது. புதிய மாதிரியில் பல விஷயங்களுடன் வெளிவந்திருக்கும் இப்புஸ்தகம் பலருக்கும் விசேஷ நன்மை பயக்கக் கூடியதாய் இருக்கிறது. ஒவ்வொரு காண்டத்திற்கும் விரிவான அட்டவணை கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீமான் வி. விஜயராகவாசாரியார் (மாஜி, ஸ்கூல் இன்ஸ்பெக்டர்) இவ்வரிய புஸ்தகத்தை அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். இவர் குடந்தை ஸ்ரீராமர் தேவாலயத்திலுள்ள சித்ர ராமாயணத்தை ஏராளமான செலவில் புதிப்பித்து இந்த வாரத்தில் அதைப் பட்டாபிஷேக வைபவத்துடன் திறந்துவைக்க உத்தேசித்திருக்கிறார். இந்த சிறந்த கைங்கர்யத்தில் அவருக்கு திரவிய உதவி கிடைக்க வேண்டி எல்லோரும் இப்புஸ்தகத்தை ஆதரிக்கவேண்டியது அவச்யமாகும். ஏற்கனவே சித்ராமாயண புஸ்தகமொன்றைப் பல பாஷைகளில் பிரசுரித்திருக்கிறார். சித்திராமாயண கைங்கர்ய பூர்த்திக்காக இவ்வளவு ச்ரமங்களை அவர் எடுத்துக்கொண்டும் இன்னும் பாக்கித் தொகை ஏராளமாகத் துண்டு விழுந்திருப்பதாகத் தெரிகிறது. இந்த ராமாயண சார புஸ்தகத்தை ஆதரிப்பதன் மூலம் ஸ்ரீராம கைங்கர்யம் நன்கு பூர்த்தியாகும்படி செய்ய வேண்டியது ஒவ்வொரு பக்தரின் கடமையாகும்.

இப்புஸ்தகத்திற்கு திவான் பகதூர் கே. எஸ். ராமஸ்வாமிசாஸ்திரியார், ஆங்கிலத்திலும், மகாமகோபாத்தியாய ஸ்ரீ உ-வே. கிருஷ்ணமாசார்யஸ்வாமி ஸம்ஸ்க்ருதத்திலும் மகாமகோபாத்யாய ம. வீ. ராமாநுஜாசார்ஸ்வாமி தமிழிலும் சிறந்த முகவுரை எழுதியிருப்பதே இப்புஸ்தகத்தின் மேன்மையை விளக்கப் போதுமான ருஜுவாகும்.

ஸ்ரீராமநிலயம் 57 பெரிய தெரு,
கும்பகோணம்

என்ற விலாஸத்தில், ஸ்ரீமான் விஜயராகவாசார்யரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீசங்காரண்யயோகி-என்கிற சங்கர பகவத் பாதாசார்யாளது விக்ரஹ விமர்சனம்.

காசியாரண்யம் என்பது பூர்வம். தண்டகாரண்யத்தின் தக்ஷிணதிக் பாகம் காவேரி தீரத்தில் பஞ்சாரண்யப்ரதேசத்தின் மத்திய ப்ரதேசம். சுவேதாரண்யம் காச்யாரண்யம் பில்வாரண்யம்-வேதாரண்யம் சம்பகாரண்யம் என்ற இந்த ஐந்து அரண்யங்களுக்கு மத்திய ஸ்தானம். பூர்வத்தில் அதாவது ஆதி சங்கர பகவத் பாதார் அவர்கள் காலத்தில் யோக பூமிகள்: முழுவதும் அரண்யப்ரதேசம். சித்த புருஷர்கள் வசித்தநாடு-சித்தர் வாழூர் என்ற கிராமம் இன்றும் உண்டு. இந்த பாதேசங்களில் பிற்காலத்தில் ராஜாக்கள் நகரங்கள் அமைத்து தேவாலயங்கள் நிர்மாணித்துள்ளார்கள். நால்வர்கள் திராவிடவேதத்தைப் பரப்பிக்ஷேத்ரங்கள் தோறும் சென்று பதி சங்கர் பாடி மகாத்மியத்தை விருத்தி செய்ததன் பயனாக நாலவர்களுக்கு விக்ரஹங்களும் உத்ஸவங்களும் பிற்காலத்தில் ஏற்பட்டு இன்றுவரை வருஷந்தோறும் நடைபெற்று வருகின்றன.

அங்கங்கே தோன்றிய ஆலயங்களில் பிராசீனமான உத்ஸவவிக்ரஹங்கள் பலஇருக்கின்றன. ஆலயங்கள் ஜீர்ணமடைந்து பூமிகளில் புதைபட்டும் நஷ்டமாகிவிட்டன.

வேதாரண்யப்ரதேசத்தில் நமது ஆசார்யாளவர்கள் சிறிதுகாலம் வசித்து வந்ததாக ஊகிக்கப் பல ஆதாரங்கள் உள. இந்த ப்ராந்தத்தில் காசியாரண்யத்தில் திரு: இரும்பூளைவனம்- (பூளைப்பூண்டுகள் இன்றும் காணலாம்) ஆலங்குடி தேவாலயத்தில் உள்ள விக்ரஹம் ஸ்ரீசங்காரண்ய யோகி அல்லது காசிவாசி என்று இன்றும் வழங்கி வந்தது ஸ்ரீ சங்கர பகவத் பாதாசாரியாளுடையதே: இதில் சந்தேகமில்லை: இந்த ஆலங்குடியிலேயே தான் ஸ்ரீ ஸத்குரு தக்ஷிணாமூர்த்தியை உபாஸித்து யோகைச்வர்யத்தைப்பெற்று பிறகே திக்விஜயம் செய்துள்ளார்கள் காசியாரண்ய க்ஷேத்ரமாத்மியத்தில் 12, 13 அத்யாயங்களில் விவரிக்கப்பட்டிருக்கும் விருத்தாந்தமே இதற்குப் போதிய ஆதாரம்.

வேதாரண்யப்ரதேசத்தில் கடற்கரையில் குடகர்கோயில் ஆலயத்தில் ஜீர்ணமான நிலையில் ஓர் இடிந்ததூர்ந்த மண்டபத்தில் நால்வர்களின் விக்ரஹங்கள் வெகு அழகாக அமைந்துள்ளன: ஸம்பந்த மூர்த்தி ஸ்வாமிகளது விக்ரஹம் சுமார் 2¼ அடி உயரம். தற்காலம் பூஜை செய்யப்படுகிறதாக தெரியவில்லை: ஏராளமான ஐவேஜியுள்ள தேவஸ்தானக்காரர்கள் இவ்விக்ரஹங்களை ஜாக்ரதையான இடத்தில் வைத்து பந்தோபஸ்துடனும் பூஜை நைவேத்யங்கள் நடைபெறுமாறு செய்யவேண்டிய தவசியமாயிருக்கிறது.

என். ஸ்ரீநிவாஸ சாஸ்திரி:

முக்கிய கவனிப்பு
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது)
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னுஸ்ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்.— என் கன்னுஸாமி பத்தர்.
பெரியதெரு. கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

அன்புதர்மம்

4 ல்

22 26

8-7-1937

215192

215192

397

Registered No. M. 2913.

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 22 | கும்பகோணம். கலி 5039 ஈஸ்வர-௵ ஆனி-௴ 25௳ 1937-௵ ஜூலை-௴ 8௳ | வ 26

ஆர்யதர்மம்
ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணா 1.
விளம்பர விகிதம்
பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.
மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.

பிராயச்சித்தம்.

பஞ்சாபில் 18வருஷம் ராணுவச்சட்டப்படி ஜயில்வாஸம் செய்த ஸ்ரீமான் மஹாசயரத்னசந்த் என்பவர் ஸமீபத்தில் விடுவிக்கப்பெற்ற பிறகு முஸோரியில் மாளவியாவை ஸந்தித்து அவரது விருப்பப்படி ஹரித்வாரத்தில் கங்காஸ்நானமும் வேறு பிராயச்சித்த சுத்திகளும் செய்துகொண்டார்.

வங்காள பந்தோபஸ்துக் கைதிகள்.

விடுதலை கிடையாது.

வங்காள பந்தோபஸ்துக் கைதிகள் விடுவிக்கப்படலாமென்று பிரஸ்தாபமிருந்து வந்தது. ஆனால் முதல் மந்திரியான பஸ்லுல் ஹக் என்பவர் அந்தக் கைதிகளின் குற்றங்களைப் பரிசீலனை செய்து பார்த்ததாயும் அவர்களை விடுவிப்பது அபாயமென்று தாம் நினைப்பதாயும் சொல்லிவிட்டார். இதனால் வங்காளத்தில் பலத்த அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. முதல் மந்திரி, பந்தோபஸ்துக் கைதிகளை விடுவிக்கத் தாம் முயற்சிப்பதாக எலெக்ஷன் காலத்தில் வாக்குறுதி கொடுத்திருந்தாராம்.

அபேதவாதிக்குத் தண்டனை.

பம்பாயைச்சேர்ந்த பிரபல அபேதவாதியான, மேஹராலி என்பவர் மலையாளம் ஜில்லாவில் அபேதவாதப் பிரசாரம் செய்யவந்தார். ஜில்லா மாஜிஸ்ட்ரேட் இவருக்குத் தடை உத்திரவு போட்டார். அதை மீறி இவர் பேசிய குற்றத்திற்காக 6மாதம் வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

இந்தியா சட்டஸபை.

காலகெடு நீடிப்பு.

இந்தியா சட்டஸபையின் காலகெடு 20—1—38-ல் முடிவடைகிறது. மறு எலெக்ஷன் நடத்தவேண்டியிருந்தபோதிலும் ஸமீபத்தில் ஏற்படப்போகிற ஸமஷ்டி திட்டத்தை முன்னிட்டு மத்யகவர்ன்மெண்டில் மாறுதல் ஏற்படப்போவதால் அதன் காரணமாக இப்போதுள்ள சட்டஸபையின் காலகெடுவை இன்னும் ஒருவருஷம், அதாவது 20-1-39 வரையில் நீடித்துவிட இந்திய கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

கொத்தப்பட்டணம் அரசியல் பள்ளிக்கூடம்.

வெடிகுண்டு, துப்பாக்கிப் பயிற்சி?

காங்கிரஸ்வாதிகள் கொத்தப்பட்டணத்தில் ஸ்தாபித்த ராஜீயப் பள்ளிக்கூடத்தை சென்னை கவர்ன்மெண்டார் கலைத்துவிட்டதுபற்றி பிரமாதமான புகார் செய்யப்பட்டுவருகிறது.

இதற்கு சென்னை ஸர்க்கார் வெளியிட்டுள்ள பதில் அறிக்கையில், மேற்படி பள்ளிக்கூடத்தில் பலாத்காரம், புரட்சி இவைகள் மாணவர்களுக்குப் போதிக்கப்பட்டு வந்ததுடன், பஹிரங்கமான ராணுவப்பயிற்சி, வெடிகுண்டு போடும் பயிற்சி முதலியவைகளும் அங்கு போதிக்கப்பட்டு வந்தனவாம். இவ்வளவு அபாயகரமான அந்தப் பள்ளிக்கூடத்தை கலைத்தது நியாயமென்று கவர்ன்மெண்டார் சொல்லியிருக்கிறார்கள்.

ஜான்ஸி, உபதேர்தல்

காங்கிரஸ்—லீக், போட்டி.

ஐக்கிய மாகாண சட்டசபையில் ஜான்ஸி டிவிஷனில் ஒரு மகம்மதியருடைய ஸ்தானம் காலியாகியிருக்கிறது. இதற்கு காங்கிரஸ்காரர்கள் ஷெர்வானி என்பவரை அபேக்ஷகர்களாக நிறுத்தியிருக்கிறார்கள். முஸ்லீம் லீக்கின் சார்பாக ஜின்னா கக்ஷியார் மற்றொருவரை நிறுத்தியிருக்கிறார்கள். பலமான போட்டி, பிரசாரம் நடக்கிறது. ஸ்ரீமான் நேரு நேரில் இதில் அக்கரை செலுத்தி வருகிறார். மஹம்மதியர்களிடம் காங்கிரஸின் செல்வாக்கைப் பரிசோதிக்க இந்த எலெக்ஷன் ஒரு ருஜுவென்று நேரு நினைக்கிறார். ஜின்னா விடுத்துள்ள அறிக்கையில் மஹம்மதியர்களின் மதம், ராஜீயம் ஆகியவைகளை முஸ்லீம்லீக்குத் தான் ரக்ஷிக்குமென்றும், காங்கிரஸ் ரக்ஷிக்காதென்றும், ஆதலால்மஹம்மதியர்கள் காங்கிரவை ஆதரிக்கக்கூடாதென்றும் சொல்லியிருக்கிறார்.

The Sarangapani Swami Devasthanam.
Kumbakonam.

Post of Cashier vacant. Applications invited, Salary Rs 35 to Rs 50 per mensem according to qualifications. Cash Security Rs 1000. Selected applicants will be appointed on probation for 6 months. Applications to reach the undersigned on or before 20th July 1937. Further particulars may be had from the undersigned.

R. Srinivasachari.
Managing Trustee.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த **R. J. S. & Co.,**
மேலான **T. T. M. A.** மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறாதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஷீட் ஜெம்லேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம டெண்டிஸ்ட் பெரியதெரு, கும்பகோணம்

மறுபிறப்பிலேயே ஜாதிமாறும்.

ஆபஸ்தம்பரின் அபிப்பிராயம்.

சென்ற வியாஸத்தில் தர்மாதர்மங்களில் அரசனுக்குள்ள அதிகாரத்தை நிரூபித்தோம் "பாரததர்ம"த்தில் வியாஸம் எழுதிவர் 'தர்மாசரணத்தால் கீழ்ஜாதியில் பிறந்தவன் அதே ஜன்மாவில் உயர்ந்த ஜாதியை அடைகிறான்' என்ற தமதகொள்கைக்கு ஆபஸ்தம்ப ஸூத்ரத்தை எடுக்கிறார். இங்கு ஆபஸ்தம்பஸூத்ரத்திற்கு அவர் சொல்லும் அர்த்தம் பொருந்துமா என்பதை கவனிப்போம்

பாரததர்ம வியாஸக்காரர் பின்வருமாறு அபிப்ராயப்படுகிறார்:—

𑌧𑌰𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌯𑌾 𑌜𑌘𑌨𑍍𑌯𑍋 𑌵𑌰𑍍𑌣𑌃
𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌵𑌰𑍍𑌣𑌮𑌾𑌪𑌦𑍍𑌯
𑌤𑍇 𑌜𑌾𑌤𑌿𑌪𑌰𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍌 ।

என்று கீழ்வர்ணத்தைச் சேர்ந்தவனும், 'தன்னுடைய தர்மத்தை அனுஷ்டித்து வந்தால் ஜாதி மாறுங்காலத்தில் மேல் ஜாதியையடைகிறான். இதனால் அடுத்தப் பிறப்பில் இல்லாமல் ஒரே ஜன்மாவிலேயே ஜாதி மாறுவதாக ஏற்படுகிறதென்பதே அவரின் அபிப்பிராயம்

இந்த ஸூத்ரத்தை தயானந்த ஸரஸ்வதி முதலிய பல சீர்திருத்தக்காரர்களும் ஒரே பிறப்பில் தர்மாநுஷ்டானத்தால் ஜாதிமாறும் என்பதற்கு பிரமாணமாக எடுக்கின்றனர். அநேகமாக இந்த ஸூத்ரத்தை எடுக்காத சீர்திருத்தவாதிகள் கிடையாதென்றும் சொல்லலாம். ஆனால் இந்த ஸூத்ரத்தில் அவர்களுக்கு ஸ்பஷ்டமான ஆதாரமொன்றுமில்லை. ஜாதிமாறுங்கால் தர்மாநுஷ்டானத்தால் மேல்ஜாதியை அடையலாம் என்றே இந்த ஸூத்ரம் சொல்லுகிறது. எப்பொழுது மாறுதல் ஏற்படும் என்ற கேள்விக்கு இந்த ஸூத்ரத்தில்நேரானபதில்விளக்கப்படவில்லை. 2-வது ப்ரசநம் முதல்படலம் இரண்டாவது கண்டத்தில் 1 முதல் 7 ஸூத்ரங்கள் சிறிதும் ஸந்தேஹிக்க இடமில்லாமல் உதாஹரணங்களுடன் மறுபிறவிலேயே ஜாதிமாறும் என்பதை நன்கு விளக்குகிறார். இந்த நிலையில் ஒரே ஜன்மாவில் ஜாதிமாறும் என்பதற்கு ஆபஸ்தம்பர் பிரமாணமாகுவதாக நினைக்கக் கூட இடமில்லை. ஆனாலும் அடிக்கடி சீர்திருத்தக்காரர் இந்த ஸூத்ரத்தை வைத்துக்கொண்டு கூச்சல் போடுவதால்இந்த ஸூத்ரத்தையும் இதன்மூலம் ஆபஸ்தம்பரின் உண்மையான அபிப்ராயத்தையும் விளக்கிவிடுவோம்.

𑌧𑌰𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌯𑌾 𑌜𑌘𑌨𑍍𑌯𑍋 𑌵𑌰𑍍𑌣𑌃
𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌵𑌰𑍍𑌣𑌮𑌾𑌪𑌦𑍍𑌯
𑌤𑍇 𑌜𑌾𑌤𑌿𑌪𑌰𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍌 ।
𑌅𑌧𑌰𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌯𑌾 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋 𑌵𑌰𑍍𑌣𑍋
𑌜𑌘𑌨𑍍𑌯𑌂 𑌜𑌘𑌨𑍍𑌯𑌂 𑌵𑌰𑍍𑌣𑌮𑌾𑌪𑌦𑍍𑌯𑌤𑍇
𑌜𑌾𑌤𑌿𑌪𑌰𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍌 ।

என்றுஸூத்திரகாரர் கீழ்வர்ணத்தைச்சேர்ந்தவன்.கர்மாநுஷ்டானம் செய்துவந்தால் ஜாதி மாறுங்கால் தனக்கு முன்னுள்ள ஜாதியை அடைகின்றான். அவ்விதமே மேல்வர்ணத்தை சேர்ந்தவன், அதர்மத்தை அநுஷ்டித்தால் ஜாதி மாறுங்கால் கீழ் ஜாதியை அடைகிறான் என்று சொல்லுகிறார். இங்குள்ளஜாதி பரிவ்ருத்தௌ என்பதற்கு ஹரதத்தர்ஜந்மபரிவர்த்தநே என்று அர்த்தம் செய்தார். இதனால் ஸ்பஷ்டமாக மறுபிறப்பில் ஜாதிமாறும் என்று இந்த ஸூத்திரத்தால் ஏற்படுகிறது. அவ்விதமில்லாது 'ஜாதி மாறுதல் காலத்தில்' என்று பொதுவாகஅர்த்தம்கொண்டால் இந்த ஸூத்திரத்தில் ஜாதி எப்பொழுது மாறும் என்ற கேள்விக்கு பதில் இல்லாமற்போய்விடுகிறது. அப்பொழுது நாம் ஆபஸ்தம்ப ஸூத்ரப்படியே ஜாதி மாறும் ஸமயத்தை நிர்ணயிக்காவிட்டால் இந்தஸூத்ரம் பூர்ணமானதாக ஆகாது. ஆபஸ்தம்பர் தர்மசாஸ்த்ரத்தில் இங்கு (ஜாதி மாறும்கால விஷயத்தில்) என்ன சொல்லுகிறார்? 2ம் கண்டிகையில் ஜாதி மாறுதல் காலத்தை ஸ்பஷ்டமாகச்சொல்லுகிறார். இதை நிரூபிப்போம்.

𑌸𑌰𑍍𑌵𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍁-
𑌷𑍍𑌠𑌾𑌨𑍇 𑌪𑌰𑌮𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌂 𑌸𑍁𑌖𑌂 । 𑌤𑌤𑌃
𑌪𑌰𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍌 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌶𑍇𑌷𑍇𑌣 𑌜𑌾-
𑌤𑌿𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌵𑌰𑍍𑌣𑌂 𑌬𑌲𑌂 𑌮𑍇𑌧𑌾𑌂 𑌪𑍍𑌰-
𑌜𑍍𑌞𑌾𑌂 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌣𑌿 𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌮𑌿𑌤𑌿
𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ।

என்று ஸ்வதர்மாநுஷ்டானத்தால் எந்தவருணத்தினரும் அபரிமிதமானஸுகத்தைஅடைகின்றனர். அவ்வித ஸுகத்தை அனுபவித்த பிறகு திரும்புங்காலத்தில் அநுபவித்த ஸுகத்தின்சேஷத்துடன் இவ்வுலகில் பிறக்கிறான். அப்பொழுது உள்ள கர்மபலத்தின் சேஷத்தால் ஜாதி, ரூபம், சரீரத்தின் வர்ணம், பலம் புத்தி சக்தி, ஐச்வர்யம், தர்மாநுஷ்டானம் இவைகளை அடைகிறான், என்று சொல்லுகிறான். இங்கு அபரிமிதமான ஸுகத்தை ஸ்வதர்மாநுஷ்டானத்தால் அடைவதாக ஸூத்ரகாரர் சொல்லுகிறார். இந்த ஸுகம் எது? அபரிமித ஸுகம் ஸ்வர்க்கம் என்று ஹரதத்தர் சொல்லிவிட்டார். ஸூத்ரகாரரும் மேல்ஸூத்திரத்தில்; திரும்புங்காலத்தில் கர்மபல சேஷத்தால் என்று சொல்லுகிறார் கர்மபலசேஷம் என்பதால் மேல் லோகங்களில் அநுபவித்த கர்மபலத்தின் சேஷமே குறிப்பிடப்படுகிறது. இதனாலும் அபரிமித ஸுகம் என்பது மேல்லோகங்களில் அனுபவிக்கப்படவேண்டிய ஸுகம் என்று ஸ்பஷ்டமாகிறது. மேலும் பரிவ்ருத்தௌ என்று மறுபிறப்பில் என்று ஸ்பஷ்டமாகச் சொல்லுகிறார். கர்மபல சேஷத்தால் அடையப்போகுமவைகளைச் சொல்லுங்கால் ரூபம், மனிதனுக்குள்ள வர்ணம், பலம் இவைகளையும் சேர்க்கிறார். இவைகள் பிறக்கும் காலத்தில் ஏற்படக்கூடியவை என்பது ஸ்பஷ்டம் இதனால் இவ்விரண்டு ஸூத்ரங்களால் தர்மாநுஷ்டானம் செய்தவன் ஸ்வர்க்காதி ஸுகங்களை அநுபவித்துவிட்டு திரும்பி இவ்வுலகில் பிறக்கிறான். பிறக்கும் காலத்தில் ஜாதிமுதலியவைகளை அடைகிறானென்று நேராகச் சொல்லப்படுகிறது. ஸூத்ரகாரரும் உதாஹரணமூலமாக இவ்வபிப்ராயத்தை உடனே தெளிவாக பின்வருமாறு சொல்லுகிறார்.

𑌸𑍍𑌤𑍇𑌨𑍋𑌭𑌿𑌶𑌸𑍍𑌤𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌰𑌾-
𑌜𑌨𑍍𑌯𑍋 𑌵𑍈𑌶𑍍𑌯𑍋 𑌵𑌾 𑌪𑌰𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌲𑍋-
𑌕𑍇 𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑍇 𑌨𑌿𑌰𑌯𑍇 𑌵𑍃𑌤𑍍𑌤𑍇 𑌜𑌾𑌯𑌤𑍇
𑌚𑌾𑌣𑍍𑌡𑌾𑌲𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌪𑍌𑌲𑍍𑌕𑌸𑍋
𑌰𑌾𑌜𑌨𑍍𑌯𑍋 𑌵𑍈𑌣𑍋 𑌵𑍈𑌶𑍍𑌯𑌃 ॥

என்று பஞ்சமஹாபாதகங்களில் திருட்டு, ப்ராஹ்மஹத்தி இவைகளைச் செய்த ப்ராஹ்மணன் முதலியவர்கள் மேலுலகங்களில் ஏராளமான நரகங்களை அனுபவித்துவிட்டு சண்டாளன் முதலியவர்களாகப் பிறப்பதாக ஸூத்ரகாரர் சொல்லுகிறார். இங்கு நரகத்தை அநுபவித்துவிட்டு "சண்டாளனாக பிறக்கிறான் என்பனபோன்ற வார்த்தைகள் சிறிதும் ஸந்தேகமில்லாமல் மறுபிறப்பில் ஜாதிமாறுதல் ஏற்படுவதைத் தெரிவிக்கின்றன. ஒரே ஜந்மாவில் நல்ல குணங்களால் ஜாதிமாறுதலை அடையும் என்று வாதிப்பவர்கள் இந்த ப்ரகரணத்தை நன்கு கவனிக்கவேண்டுகிறேன். மறுபிறப்பிலேயே ஜாதிமாறும் என்று இந்தஇடத்தில் வெளியாகும் ஸித்தாந்தத்தை எந்த பிராமாணிகனும் ஆக்ஷேபிக்கமுடியாது. இதே ஸித்தாந்தத்தை கௌதமர், வ்யாஸர் முதலிய பல ஸூத்ரகாரர்களும் வெளியிடுகின்றனர். ஜாதி தத்வத்தில் இதுதான் வைதிகர்களுடைய ஸித்தாந்தம்.

ஆகவே ஜாதிமாறுதல் மறுப்பில் ஏற்படும் என்ற கொள்கையை வெளியிடும் இந்த பிரகரணத்தை முக்யமாக வைத்துக்கொண்டே தர்மசர்யயா என்ற ஸூத்ரத்திற்கு அர்த்தம் செய்யவேண்டும். அப்பொழுது தர்மாநுஷ்டானத்தால் கீழ்வர்ணத்தவன் மேல்வர்ணத்தை அடைகிறான், எப்பொழுது? மறுபிறப்பில் என்ற அர்த்தமாகிறது.

இவ்விதம் ஸ்பஷ்டமாக உள்ள ஸூத்ரம் சீர்திருத்த வாதிகளுக்கு எப்படி பிரமாணமாகும்? மறுபிறப்பில் ஜாதி மாறுவதாகச்சொல்லும் ஆபஸ்தம்பஸூத்ரத்தை இவர்கள் எதற்காக எடுக்கின்றனர்? ஜாதி பரிவ்ருத்தௌ என்பதை ஹரதத்தர் போன்றே Dr.G Bukler மறுபிறப்பில் என்றுவ்யாக்னம் செய்தார். பாரததர்ம வியாஸக்காரர் இதைகாண்பித்து ஏன் கண்டிக்க வேண்டும்.

ஸூத்ரக்காரரின் போக்கை அடியோடு கவனிக்காது, அல்லது அலக்ஷியம் செய்து ஸூத்ரத்தை விளக்குபவர் வ்யாக்யாதாவை அநுசரித்து மேனுட்டினரைகண்டிப்பது ஆச்சர்யமானதே. மறுபிறப்பில் ஜாதிமாறுவதாக ஒப்பினால் ஸூத்ரங்கள் தப்பாக ஆகிவிடும் என்று கூறுகிறார். ஏன்? இந்த ஸூத்ரத்தின் உண்மையான அர்த்தம் வெளியாவதற்கு ஜாதிமாறுதல் ஸமயத்தைச் சொல்லும் ஸூத்ரத்தையும் சேர்த்தே கவனிக்கவேண்டும். அவ்விதம் செய்தால் இந்த ஸூத்ரத்திற்கு ஏற்படும் அர்த்தம் எவ்வழியிலும் தப்பில்லாததாகவும் குறைவில்லாததுமாகும்: இவ்வர்த்தம் தப்பான அர்த்தமாவதற்கு காரணமென்ன?

ஜன்மாந்திரத்தில் செய்த கர்மாவிற்கநுகுணமாக பலானுபவம் என்ற 'தத்வம் உலகம் முழுவதற்கும் பொதுவானது.. ஜாதி தத்துவம், இந்தியாவிற்குமட்டுமேற்பட்டது இந்நிலையில் ஜாதியும் கர்மபலமாகச் சொல்வதானல் ஜாதிமுறை இல்லாத தேசத்தில் பிறப்பு ஏற்படுவது பொருத்தமற்றதாகுமென்று நினைக்கிறார். ஜாதி வ்யவஸ்தை ஆர்யாவர்த்தத்தில் மட்டுமா, மற்ற இடங்களிலுமுண்டாமென்ற விவாதத்தை மற்றொரு ஸமயம் செய்வோம். ஆனால் இவ்விதம் கர்மபலத்தால் மேல் ஜாதியடையவேண்டியவன் ஆர்யாவர்த்தத்திலேயே பிறப்பதாக ஒப்பினால் தோஷமென்ன? ஜாதிமுறையிருக்கும் தேசத்தில் பிறந்தால் மேல்ஜாதியடைகிறான். ஜாதிமுறையில்லாத தேசத்தில் பிறந்தால் ஜாதிதவிர கர்மபலங்களை அடைகின்றான். என்று அர்த்தம் செய்யப்பட்டதால் யாதொரு தோஷமும் ஏற்படாது. இதை வைத்துக்கொண்டு ஸூத்ரார்த்தத்தை மாற்றவேண்டியதில்லை. ஆகவே தர்மஅநுஷ்டானத்தால் ஜாதி மாறுமென்பது ஆர்யாவர்த்தத்தில் ஏற்படும் பிறப்பையே சொல்லும். இதனால் மறுபிறப்பில் ஜாதிமாறும் என்ற கொள்கைக்கு கெடுதி ஏற்படாது.

அக்நிஹோத்ரம்
ராமாநுஜதாதாசாரியர்.

முக்கிய கவனிப்பு
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது)
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— என். கண்ணுசாமி பத்தர்.
பெரியதெரு. கும்பகோணம்.

கல்விப்பயிற்சி.

சென்னை ஸர்க்கார் அறிக்கை.

டவுன் ஹைஸ்கூல் மாஜிஹெட்மாஸ்டர் பிரம்மஸ்ரீ
ஆர். ஸாமிநாதய்யர் எழுதுகிறார்:—

ஆரம்பம், உயர்தரம், நடுத்தரம் எந்த நிலையிலும், நம் மாகாணப் படிப்பு குறையுள்ளதென்று கருதி துரைத்தனத்தார் அநேகமாறுபாடுகளைமேற்சொல்லியஅறிக்கை மூலமாக வெளியிட்டு, பொதுஜன அபிப்பிராயத்தை வேண்டுகிறார்கள். அவர்கள் கருதிய மாறுபாடுகள் பெரும்பாலும் நன்மையளிக்கத் தக்கவைகளே. அவைகளை ஏற்றுக்கொள்வதில் ஒருவருக்கும் ஆக்ஷேபமிரா. மற்றவைகளைப்பற்றி சில குறிப்புகளை எழுதத் துணிகிறேன்.

ஆரம்ப சாமான்யப் படிப்பு.

தெய்வம், அரசன், மூத்தவர்கள் இவர்களிடம் பயம், பக்தி, சட்டத்திற்கு கீழ்படிதல் தன்னுடைய தர்மம், உரிமை, கடமை, தொழில் முதலியவைகளில் சிரத்தை, ஒற்றுமை அனுதாபம், இரக்கம், கூட்டுழைப்பு, முதலிய யோக்யதைகள் பொதுவாக கல்வியால் ஏற்படக்கூடியவை. அந்நற்குணங்கள் ஏற்பட சிறுவர்களுக்கு ஏறக்குறைய ஐந்துவருஷப் படிப்பு வேண்டியிருக்கும். மூத்தவர்களுக்கு கொஞ்சம் குறைந்தகாலப் போதுமானது. அன்றியும், கற்பிக்கும் உபாத்தியாயர்கள் படிப்பு,போதனுமுறை, அறிவு, நன்னடக்கை ஊக்கம் இவைகள் வாய்ந்தவர்களாக இருக்கவேண்டும். பிள்ளைகளின் பாட திட்டங்கள் கிராம சம்பிரதாயம், குடும்ப வழக்க ஒழுக்கம், பிள்ளைகளின் புத்தி சக்தி, பெற்றோர்களின் கொள்கை, சௌகரியம் இவைகளை அனுசரித்திருத்தல் வேண்டும். இடத்தின் தேவைக்குத் தக்கபடி சுற்றுமிருக்கும் சாதனங்களையும் நன்று விசாரித்து கிராமவாசிகளின் விருப்பத்திற்கு இணங்கி இரண்டு வகுப்புகளுக்குள்ள பள்ளிக்கூடமோ அல்லது மேற்கொண்ட வகுப்புகள் உள்ளதோ ஏற்படுத்தப்படவேண்டும். படிப்படியாகத் தேறுகிற பிள்ளைகளுக்கு அனுகூலமாக கீழ்வகுப்புள்ள பள்ளிக்கூடம், சமீபத்திலுள்ள மேல்வகுப்புள்ள பள்ளிக்கூடத்திற்கு கிளையாகவிருக்கவேண்டும் இதற்குத் தக்கபடி பாடதிட்டம், போதனுமுறை முதலியவைகள் அமைக்கப்படவேண்டும்.

வீண்செலவுக்குக் காரணமாயும், பயனற்றவுமிருக்கிறஎளியபள்ளிக்கூடங்களைரத்துசெய்யாமல் எவ்விதத்திலும் பலமாக்கத்தக்க ஏற்பாடுகளை செய்தல் வேண்டும். உபாத்தியாயர்கள் தங்கள் தங்கள் கடமையை ஒழுங்காகவும் பயன்தரத்தக்கதாகவும்செலுத்தத்தக்க சாதனங்கள் அந்தஸ்து, சம்பள ஏற்பாடு,போதனுமுறை, ஞானவிருத்தி முதலிய சௌகரியங்கள் சர்க்கார் அறிக்கையில் சொல்லியபடி பூர்ணமாக அமைக்கப்படவேண்டும்.

போதனுமுறை கற்பிக்கும் பள்ளிக்கூடங்களின் ஏற்ற நிர்மாணம் ஆரம்பப் பள்ளிக்கூட பாடகிரமங்கள், உபாத்தியாயர்களின் யோக்கியதாபிவிர்த்தி,பள்ளிக்கூட மேல்விசாரணை அதிகாரிகளை அதிகப்படுத்தல் முதலிய திருத்தங்களை செப்பனிட சர்க்கார் முன்வந்திருப்பது போற்றத்தக்கதே. மற்ற சர்க்கார் உத்யோகஸ்தர்களும் பிரஸித்த பரோபகாரிகளும் பள்ளிக்கூடங்களை கவனிக்கச் செய்வதும் ஹிதமானதுதான். ஆனால் கிராமங்களில் கக்ஷி, பிரிவு பெரும்பாலும் இருத்தலால், கிராமத்தலைவர்களுக்கு பள்ளிக்கூட விசாரணை அதிகாரம், அறிக்கையில் சொல்லியபடி ஏற்படுவது யுக்தமாகாது இவ்விஷயத்தில் சர்க்காரின் நோக்கம் முற்றும் பயன்தர ஸ்கூல் இன்ஸ்பெக்டர்களின் சிபார்சுகளே நிறைவேற்றத்தக்கவை: இலாபம், நஷ்டம் இவ்விரண்டிற்கும் அவர்கள் உத்திரவாதியாவார்கள். படிப்பு முன்னேற்றமடைவதில் அவர்களுக்கு பொறுப்பு, ஊக்கம் முதலியவைகள் பூர்ணமாக உண்டு. அவைகளையே நம்பவேண்டும்.

கட்டாயப் படிப்பு ஏற்பாடு,படிக்கிரமமாக ஆண், பெண் அனைவர்களுக்கும் நகரங்களிலும் கிராமங்களிலும் பத்துவருஷ காலத்திலாவது குறிப்பிட்ட வயதுக்குள் நடைபெறவேண்டும். வேண்டுமிடங்களில் முன் யோசனையுடன் யுக்தம்போல் தக்க பள்ளிக்கூடங்களை தகுந்த ஸாதனங்களுடன் வீண் செலவிடாமல் ஜனங்களுடன் கலந்து ஸ்தாபித்தல்வேண்டும். ஸ்டாண்டர்டு, பாடதிட்டம், படிப்புகாலம், சம்பள வசூல் முதலிய விவரங்கள் இன்ஸ்பெக்டர்களின் அபிப்ராயப்படி தீர்மானிக்கப்படவேண்டும். கிராமத்தின் தேவையை அறிய அவர்கள் கிராமத்தார்களுடன் கலந்து யோசனைசெய்தபிறகுதான் தங்கள் அபிப்பிராயத்தை அவர்கள் வெளியிடவேண்டும். பின்பட்ட ஜாதி, ஸத்ரீ ஜாதி சாமான்யர்கள் இவர்களுக்கு தனித் தனி பள்ளிக்கூடங்களோ, கலப்புப் பள்ளிக்கூடங்களோ, நன்றாக ஆலோசனைசெய்து ஆவசியகப்படி ஏற்படுத்தல் வேண்டும்.

உயர்ந்த ஆரம்பக் கல்விச்சாலைகள்.

ஏற்கனவே ஏற்பட்டஸ்தாபனங்களை ரத்து செய்யாமல் அவைகளின் குறைவுகளை மாத்திரம் திருத்தவேண்டும். பாடதிட்டம், முறை படிப்பிக்கும் உபாத்தியாயரின் யோக்யதை ஒவ்வொன்றும், ஜனங்களின் விருப்பம், தேவை, தொழில் இவைகளுக்குத் தக்கவாறு சர்க்கார் விதி, நியாயம் கொள்கைப்படி தீர்மானிக்கப்படவேண்டும் செகண்டரி ஸ்கூல்களிருக்குமிடங்களில் அவைகளிருத்தல் கூடாது. அப்படியிருந்தால் அனாவச்யமான போட்டியும், தீமையும் உண்டாகும். இப்படியான பள்ளிக்கூடங்களில் தேறினவர்களுக்கு பொது பரீக்ஷை அனாவச்யம். ஸ்கூல் சாக்ஷியே போதுமானது. அத்துடன் படிப்பைநிறுத்தி சில்லறை வேலைக்குபபோகலாம. அல்லது மற்படிப்பு வேண்டுமானால் செகண்டிரி ஸ்கூலில் தனக்கேற்ற கிளாசில் சேர்ந்து படிக்கலாம். இவ்விஷயத்தில் படிப்பவர்களின் நோக்கத்திற்கிணங்குவதே நலம். அதில் மற்றவர்கள் தலையிடுவது சரியல்ல. தொழிலுக்குப் போனாலும் தொழிற்சாலைக்குப் போனாலும் அவரவர்கள் யோக்கியதைக்குத் தக்கபடி ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். அது நம்முடைய காரியமல்ல தக்க பள்ளியின் ஸ்தாபனமே ஸர்க்காரின் உரிமை.

ஜில்லா வித்தியா சபை

சட்டப்படி இச்சபைகேற்பட்ட உரிமைகள் குறைவுபடாமல் செலுத்தல்வேண்டும். தவறினால் எச்சரித்தல்வேண்டும். அதனாலும் தக்கதிருத்தம் ஏற்படாவிடில் ஸர்க்கார் சட்டத்தை மாற்றி ஸபையின் புனர் நிர்மாணத்தை கைகொள்ளவேண்டும். ரூல்களையும், மாற்றவேண்டும். எவ்விதத்திலும் வித்தியாபிவிருத்தி குறைவுபடக்கூடாது.

உயர்தரப்படிப்பு.

நடுத்தரப்படிப்பு (middle school education) பாரம் 1முதல்4முடிய உள்ளதாக விருக்கலாம். இப்பொழுது இருக்கும் பாடதிட்டங்களை இந் நான்கு கிளாஸிலும ஒழுங்காக விபாகித்து, கைத்தொழிலுணர்ச்சி ஊன்றும்படி தக்கபடிப்பை சேர்த்து பிள்ளைகளைப்பயிலச்செய்யவேண்டும். தணிந்த ஆரம்பப் பாடசாலை, உயர்ந்த ஆரம்பப்பாடசாலை இவைகளிலிருந்து வரும் பிள்ளைகள் தங்கள் தங்கள் யோக்கியதைக்கேற்ற நடுத்தர பாடசாலை கிளாஸில் சேர்ந்து படிக்கலாம். இப்பாடசாலையில் 4வது பாரம படிப்பு முடிந்தவுடனே தணிந்த ஸாமான்னிய படிப்பாளியாகக்கூறலாம். ஆனால் இந்த நிலையில் கலாசாலைப்படிப்புக்கேற்றவனு இல்லையா என்று தீர்மானிக்கமுடியாது. அத்தீர்மானம் செய்யப்போதுமான வயது அப்பிள்ளைக்கு வந்திராது. 5,6 பாரப்படிப்பும் சேர்ந்தால்போதுமானவயதும் ஆகும். புத்தி வைபவமும் வெளிப்படும். அந்நிலையில் தான் திருப்திகரமாக நிச்சயிக்கலாம். மேல்படிப்புக்கு திவ்ய சாதனமில்லாதவர்கள் தாங்களே சாமான்யப்படிப்பை 4வது பாரத்தில் நிறுத்தி தொழிலுக்கோ, தொழில் படிப்புக்கோ,செல்லுவார்கள். திராணிஉள்ளவர்கள் 5,6 பாரப்படிப்பையும் கைக்கொள்வார்கள். 6வதுபாரப்படிப்பை முடித்தவர்களை உயர்ந்த ஸாமான்யப்படிப்புள்ளவர்களென்றுகூற வேண்டும். இந்நிலையில் ஸர்வகலாசாலை படிப்புக்கேற்ற புத்திவைபவம் உண்டு இல்லையென்று நிர்ணயிக்கலாம். அதற்கேற்கப் பொதுப் பரீக்ஷையும் செய்யப்படலாம். அந்தப் பரீக்ஷையில் ஸர்வகலாசங்கத்தார் குறிப்பிட்ட மார்க்குவாங்கினவர்களை மாத்திரம் மேலனுப்பி மற்றவர்களை தொழில், தொழில் சாலை இவைகளில் இஷ்டப்படி சேர விடலாம். நம்மிஷ்டப்படி வரையறுத்து பொதுவான படிப்பிலோ, தொழில் படிப்பிலோ,சிறு பிள்ளைகள் விஷயத்தில் திட்டங்கட்டுவது எனக்கு உசிதமாகத்தோன்றவில்லை. ஆனால் 5,6பாரங்களில் யுக்தமான பொதுஜனப்படிப்புக்கேற்ற பாடங்களும் நம்முடைய தேச தேவை, பழக்கம், ஏற்பாடு, நன்மை, முதலியவைகளுக்குத்தக்க உத்யோகம், தொழில் ஏற்படக்கூடுமாறு பல தொழில் பாடதிட்டங்களும் ஸ்தாபிக்கப்படவேண்டும். பிள்ளைகள் தங்கள் புத்திவைபவம், திரவிய சாதனம், சௌகரியம், இவைகளை அநுசரித்து பொதுப்பாடங்களையும் இரண்டு தொழில் பாடங்களையும்பயிலவிடலாம். ஸர்வகலா சங்க உரிமைப் படிமேல்படிப்புக்கேற்றவர்கள் மேலே போவார்கள். தொழிலுக்கு [illegible] யாஸம்,தொழில் பயிலும் நிலைமை, இவைகளுக்குச் செல்லுவார்கள். இப்படிச்செல்லவேண்டிய சௌகரியத்தை சர்க்காரும் தொழில் ஸ்தாபனங்களும் அளிக்கவேண்டும். சர்க்கார் அறிக்கையில் கண்டபடி 4வது பார முடிவில் ஒரு இலகுவான பரீக்ஷையும், 6வது பார முடிவில் ஸர்வகலாசாலை சங்ககொள்கைப்படி ஒரு பரீக்ஷையும் ஏற்படுத்தப்படலாம். 4வது பார பரீக்ஷையில் இங்கிலீஷ், தேச பாஷை, கணக்கு பொதுவான ஞானம், இந்நான்கும் விஷயங்களாக விருக்கவேண்டும். 6வது பார பரீக்ஷையில் பொதுவான கலாசங்கபடிப்பு விஷயமும் தொழிலுக்கேற்ற விசேஷப்படிப்பும் சேர்க்கப்படலாம். காலேஜ் சம்பந்தமான ஜூனியர் இண்டர் மீடியேட் கிளாஸை ஹைஸ்கூல் 7வது பாரமாகச்சேர்த்தலும், பாக்கி காலேஜிலிருக்கும் 8, 9, 10 கிளாஸ்களை மாத்திரம் கலாசங்க கிளாஸுகளாகச்செய்வதும் உசிதமாக எனக்கு தோன்றவில்லை இப்படிச் செய்தால்ஹைஸ்கூல்களுக்கும்அசௌகரியம். காலேஜிகளுக்கும் அசௌகரியம் கல்விப்பயிற்சி,பொருள் சாதனம்,இரண்டுமே ஒழுங்குபடாது. சில ஹைஸ்கூல்களில் மாத்ரம் 7வது பார பொதுப்படிப்புடன் விசேஷ தொழில் படிப்பு இருப்பதும், சில ஸ்கூல்கள் கீழ் அந்தஸ்த்திலிருப்பதும் பொருந்தாது. அநேக சங்கடங்கள் நேரும். தவிர காலேஜ்களுக்கு வரும்படி குறைவும் பொதுவாககல்விப்பயிற்சிக் குறைவும்ஏற்படலாம். அங்கேயிருக்கும் உபாத்யாயர்களின் கல்வி சாதனங்களும் வியர்த்தமாவார்கள். ஹைஸ்கூல்களிலோ அவைகள் புதிதாக ஏற்பட வேண்டும். [illegible] தரணி இருக்குமோ என்கிற சந்தேகம் [illegible] உண்டு. தரணி இருந்தாலும் [illegible], காலேஜில் காலேஜ் உபாத்யாயர்கள் [illegible] படிப்பதே எவ்விதத்திலும் சிலாக்[illegible] 7வது பாரம் பிள்ளைகள் காலேஜிலிரு

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-ஹூ ஆனி-மீ 25௨

நமது எதிர்காலம்.

ஸநாதனதர்மிகளின் எதிர்காலத்தைப் பற்றிய கவலையும், அதில் அவர்கள், ராஜீய மத ஸமூஹவிஷயங்களில் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்பதைப்பற்றிய சிந்தையும் இப்போது சிலரிடம் தோன்ற ஆரம்பித்திருக்கிறது, இதற்குக் காரணமென்னவென்பது நன்குதெரிந்ததே. சீர்திருத்தக் காரர்கள் வெறும் பிரசாரத்துடன் நிற்காமல், சட்டமூலமான நிர்பந்தத்தினால் மதாசார அனுஷ்டான உரிமையைப் பறிக்க முற்பட்டுவிட்டார்கள். புதியராஜீய அமைப்பும், உலகப் போக்கும் அவர்களுக்குப் பின் பலமாக அமைந்திருக்கின்றன. நமது மாகாணத்தைப் பற்றியவரையில் சட்ட நிர்மாணஸபையில் சீர்திருத்தவாதிகளான காங்கிரஸ்காரர்களே மெஜாரிடியாக இருந்து வருகிறார்கள். ராஜீய விஷயத்தில் அபிப்பிராயபேதம் இருந்தபோதிலும், ஸமூஹசீர்திருத்த அம்சம் ஸம்பந்தப்பட்டவரையில், மிதவாதிகள், ஜஸ்டிஸ், சுயமரியாதைபோன்ற பற்பல ஸங்கத்தினரின் ஆதரவு காங்கிரஸுக்கு விசேஷமாகக் கிடைக்கக்கூடியதே. மேலும், மாகாணஸ்வய ஆக்ஷிநிர்வாஹத்தைக் காங்கிரஸ்வாதிகள் நடத்தப் போகிறார்கள். அவர்கள் மந்திரிபதவியேற்கலாமென்று கார்யகமிட்டி முடிவு சொல்லிவிட்டது. நமது மாகாணத்தில் முதன் மந்திரியாகவரப்போகும் ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியரின் அபிப்பிராயம் தெளிவாக நமக்குத் தெரிந்ததே. ஸமீபத்தில், நேருஜியும் ராஜகோபாலாசாரியரும், வெளியிட்டுள்ள மனோபாவத்தைப் பற்றிநாம் குறிப்பிட்டிருக்கிறோம். ஹிந்துக்களின்மதாசாரவிஷயத்தில் காங்கிரஸ் பிரவேசித்துத் தீருமென்று அவர்கள் திட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலைமையில் தார்மிகர்கள் கவலையடைவது முற்றிலும் நியாயமானதே.

ஆனால் இந்த விபத்தை எந்தவழியில் தடுத்துக் கொள்ளுவது என்பதே தற்போது முக்யமாக யோஜிக்கப்படவேண்டும். ஸனாதனிகளுடைய எதிர்ப்பிரசாரங்களும், தீர்மானங்களும் மஹஜர்களும் ஒருவழிதான். ஆயினும் அவை பலன் தரக்கூடியவையா என்பதை நன்கு ஆலோசிக்க வேண்டும். எதிர்க்கக்ஷியாருடைய பிடிவாதமும், பின்பலமும், புத்திப்போக்கும் நமது வேண்டுகோள்களை லக்ஷ்யம் செய்யக்கூடியவைகளாயில்லை ராஜ சக்கிரவர்த்தியின் ஆஜ்ஞாபத்திரப்படிச் சிறுபான்மை ஸமூஹத்தின் மதாசாரவிஷயங்களைக்காத்துக் கொடுக்க கவர்னர்களுக்கு விசேஷாதிகாரமிருந்தபோதிலும் ராஜீய நன்மைகளை உத்தேசித்து கவர்னர்கள் மந்திரிகளின் செய்கைகளில் பிரவேசிக்கத்தயங்கக்கூடும்.

இந்த நிலைமையில் தார்மிகர்கள் என்னசெய்வது? இவ்விஷயமாகப் பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் வெளிப்பட்டுவருகின்றன. முக்யம், கௌணம், ஆபத்து என்ற மூன்று வகையிலுள்ள தர்மங்களில் கடைசியான வழியில் நாம் நின்று நம்மைரக்ஷித்துக்கொள்ள வேண்டுமென்று நினைப்பவர்பலர். சாஸ்திரங்களில் கௌணமாகவே, ஆபத்கல்பமாகவோ எங்கெந்த விஷயங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றனவோ அவைகளை மூடிவைக்காமல் வெளிப்படுத்தி ஆசரிக்கும்படி செய்யவேண்டுமென்று சிலர் நினைப்பதாகத் தெரிகிறது. கொஞ்சம் இடம்கொடுத்தால் அந்த வழியில் தர்மமர்யாதைகளே அழிந்து விடக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடுமென்று சிலர் அஞ்சக்கூடும். ஆயினும் அந்த மனோபாவத்தை கொள்ளாமல் விசாலநோக்கத்துடன் போவதே தற்போது ஏற்பட்டுள்ள ஸங்கட நிலைமைக்கேற்றதென்றும் சிலர்வாதிக்கின்றனர். தக்ஷிணாயநத்தில் பிரதம விவாஹம் செய்யலாமா? ருதுவுக்கு முன் விவாஹம் நடத்த முடியாதபடி சட்டம், குறுக்கிடுகையில் ஆஸ்திகரான கிருஹஸ்தன் சாஸ்திரீயமாக அவலம்பிக்கக்கூடியவழி என்ன? ருதுகாலத்தை மறைத்து கிரஹத்தில் அசுத்தியைப் பரவவிடுவதைவிட ருதுகாலத்திற்குப் பிறகும் தாமதமில்லாமல் விவாஹம் செய்ய அநுமதிக்கக் கூடாதாவென்றும் பலர் நம்மை எழுதிக்கேட்டிருக்கிறார்கள். இவ்விஷயங்களில் இரண்டொருவரோ, அல்லது ஒரு சிலரோமட்டும் சேர்ந்து ஒருமுடிவு செய்வது விரும்பத்தக்கதாயிருக்காது! ஏது செய்தாலும் எல்லாரும் சேர்ந்து ஒருவழியைக் கண்டுபிடித்துக் கட்டுப்பாடாக அதை ஆசரிப்பதே விரும்பத்தக்கதாம்.

தர்மங்களையோ, தர்ம ஸ்வரூபங்களையோ எவருக்கும் மாற்ற அதிகாரம் கிடையாதென்ற அடிப்படையான ஸித்தாந்தத்தை நாம் விட்டுக்கொடுப்பதற்கில்லை. ஆனால் பெரிய நிர்பந்த மூலமான ஆபத்து ஏற்படவிருக்கையில் சாஸ்த்ர விதிகளுக்குட்பட்டு நாம் செய்துகொள்ளக்கூடிய மாறுதல் என்னவென்பதே இப்போது யோஜிக்கப்படவேண்டுமென்றும் ஸௌகரியமான நிலைமை ஏற்பட்டவுடன் ஆபத்கால தர்மத்தை விட்டுவிட்டு மீண்டும் பழைய ஸம்பிரதாயப்படி விவாகாதிகளை நாம் அநுஷ்டிக்க கட்டுப்பட்டிருப்பதாயும் அவர்கள் சொல்லுகிறார்கள்.

பண்டித பரிஷத்திற்கு தர்மஸ்வரூபத்தை மாற்ற அதிகாரமில்லையென்பது நிச்சயமானாலும், சாஸ்திர விதிகளுக் குள்பட்டு ஆபத்கால தர்மங்களை எடுத்துக்காட்டுவதில் பிசகு இருக்க நியாயமில்லையென்றும் சொல்லப்படுகிறது.

இந்த விஷயங்களை நமதுமதாசாரியர்களும் மற்ற வித்வான்களும் ஸநாதனத் தலைவர்களான ஆஸ்திக லௌகிகர்களும் அவஸரமாகக் கவனித்து ஒரு முடிவுசெய்வது அவச்யமென்பதை மட்டும் யாவரும் அங்கீகரிக்கத் தடையில்லை. இதைப்பற்றித் தக்க முயற்சி எடுத்துக்கொள்ளுவது ஸமயோசிதமே.

ஸ்ரீஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
Palakol,
West Godavary Dt.

குறிப்புகள்.

சாரணர் இயக்கம் சாய்ந்து விடுமா?

சீமையிலுள்ள வெள்ளைக்காரரின் தலைமையில் இந்திய சாரணர் இயக்கம் நடந்து வருகிறது. தலைவரான லார்டு பேடன்பவல் என்பவர் இந்தியாவிற்கு வந்துவிட்டுப்போனார். பலவிடங்களில் நம்மவர்கள் அவருக்கு ராஜோபசாரம்செய்து துதிபாடினார்கள். அவர் திரும்பும்போது என்ன சொன்னார்? இந்தியர்களுக்கு ஸன்மார்க்கமில்லையென்றும், ஒற்றுமை முதலிய குணம் கிடையாதென்றும் தூஷணம் செய்தார். அதன்மேல் தேசிய வீரர்களுக்கு ரோஷம் பிறந்து விட்டது. லார்டு பேடன்பவல் தலைமையிலுள்ள சாரணர் இயக்கத்திலிருந்து விலகிவிட வேண்டுமென்று எங்கும் ஆர்ப்பாட்டம் நடக்கிறது. பம்பாய், சென்னை முதலிய கார்ப்பரேஷன்களிலும் இந்தத் தீர்மானம் செய்யப் பட்டிருக்கிறது. வேறு பல பொதுக்கூட்டங்களிலும் தீர்மானம் நடக்கிறது ஆயினும் அந்த லார்டு தமது வார்த்தையை வாபீஸ் பெறவோ ஸமாதானம் சொல்லவோ முன் வரவில்லை. சென்னை கார்ப்பரேஷனில் ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி முதலியவர்கள் ஐரோப்பிய நாகரிகத்தை பதிலுக்கு பதில் குறை கூறிப் பேசினார்கள். இதெல்லாம் ஸரியே?

ஆனால் நம்மை ஸன்மார்க்க மற்றவர்களென்று ஆங்கிலேயர் முதலியவர்கள் தைர்யமாகக் கூறுவதற்குக்காரணம் என்ன? நம்மவர்களேதான்! நமது ஸமூஹ தர்மங்களையும், ஜாதிகுல தர்மங்களையும் ஓயாமல் குறை கூறியும் பரிஹஸித்தும் பேசி நம், சீர்திருத்தக்காரர்களே வழிகாட்டியுள்ளார்கள். விதவா விவாஹத்தை ஆதரிக்கவேண்டுமானால் ஹிந்து விதவைகள் வியபிசாரம் செய்கிறார்களென்று பழிசொல்லி தம்கக்ஷியைப் பலப்படுத்திக்கொள்ள நினைக்கும் சீர் திருத்தவாதிகளை நாம் பார்க்கவில்லையா? இதுபோல் நம்ஸமூஹ மதக்கொள்கைகளையும் ஆசாரங்களையும் நாமே பரிஹஸிக்கையில் மிஸ் மேயோ, பேடன் பவல் முதலியவர்கள் நம்மை தூஷிப்பதில் ஆச்சர்யமென்ன? முதலில் நம் சீர்திருத்தக்காரர்களே இதில் பெரிய குற்றவாளிகள். அவர்கள் இப்போது ரோஷப்படுவதில் அர்த்தமிருக்கிறதா?

சாரணர் இயக்கத்தால் நன்மையுண்டாவென்பதில் அபிப்பிராய பேதமிருக்கிறது. அது எப்படியாயினும் இந்தியாவில், ஜாதிகுல ஆசாரங்கள் நசிப்பதற்கு ஏற்பட்ட பல ஸாதனங்களுள் சாரணர் இயக்கமும் ஒன்றாகும். பிராம்மணன், பஞ்சமன், மஹம்மதியன், கிறிஸ்தவன், ஸ்திரீகள் ஆகிய யாவரும் பல வழிகளிலும் கலந்து பழகுவதற்கு இந்த இயக்கம் வெகுதூரம் உதவியாயிருக்கிறது. சாரணர் முகாமில் எந்த ஜாதியான் சமயல் செய்தாலும் எல்லா ஜாதியாரும் எவ்வித வித்யாஸமின்றி ஒரே பங்க்தியில் ஸாப்பிடுவது வழக்கமாயிருக்கிறது. ஸ்திரீகள், புருஷர்களுடன் சேர்ந்து தொண்டு புரியும்படி செய்யப்பட்டிருப்பதிலும் விசேஷத் தீங்கு விளையக்கூடும். காந்திஜியின் ஸ்தாபனங்களிலேயே ஸ்திரீ, புருஷத்தொண்டர்களுடைய நடத்தையில் விசேஷ அபவாதம் நேரிடவில்லையா? "இந்தியர்களுக்கு ஸன்மார்க்கமில்லை" யென்று பேடன்பவல் கூறியதற்கு சாரண இயக்கத்தில் அவருக்கு ஏற்பட்ட அநுபவமே காரணமாயிருக்கலாம். எப்படியும் சாரணர் இயக்கம் தலை சாய்வதில், ஸமூஹக் கலப்பை விரும்பாத தார்மிகர்கள் வருத்தப்பட நியாயமில்லை.

நேருஜிக்கு பரமானந்தர் சாட்டை!

இந்தியாவின் எல்லைப்புற வாஸிகளான மஹம்மதிய ஜனங்கள் மீது பிரிட்டிஷ் கவர்மெண்டார் தற்போது கையாண்டுவரும் முறையைப்பற்றி பத்திரிகைகளில் விவாதம் நடக்கிறது- எல்லைப்புற வாசிகளான துஷ்டர்கள் அடிக்கடி சமீபத்திலுள்ள நகரங்களிலும் கிராமங்களிலும் புகுந்து ஜனங்களுடைய, முக்கியமாக ஹிந்து ஜனங்களுடைய ஸொத்துக்கும், உயிருக்கும் பெரிய சேதம் விளைவித்துவருகிறார்கள். ஹிந்து ஸ்திரீகளை அந்த துஷ்டர்கள் பலாத்காரமாக தூக்கிக்கொண்டு போய் மானபங்கமும், மதமாற்றமும், கொலையும் செய்துவிடுவது வெகு சாதாரணமாக இருக்கிறது இந்தநிலைமையில்பிரிடிஷார் அந்த துஷ்டர்கள்மீது படையெடுத்து அவர்களை அடக்க முற்பட்டதற்கு ஹிந்துஸமூஹம் சர்காரிடம் நன்றியல்லவோசெலுத்தவேண்டும்! இதைவிட்டு காங்கிரஸ் தலைவராக விளங்கும் நேருஜி பிரிட்டிஷாரின் எல்லைப்புறக்கொள்கையைக் கண்டிக்க முன்வந்திருப்பது விநோதமாயிருக்கிறது. பிரிடிஷார் நாடுபிடிக்கும் ஏகாதிபத்திய ஆசைகொண்டு எல்லைப்புறத்தில் கார்யம் செய்வதாயும், ஸ்பெயினில் நிரபராதிகளான ஸ்திரீகள், குழந்தைகள்கள்மீது வெடிகுண்டு எறியும் கொடிய செயலைப்போல இது இருப்பதாயும் புகார்சொல்லுகிறார். துஷ்டர்களாயும், அடங்காமல், கொலை களவு முதலியவை செய்து எப்போதும் அமைதியின்மையை உண்டுபண்ணி வருகிறவர்களாயிருப்பவர்களை எப்படி அடக்குவது? அவர்கள் மறைந்துகொண்டிருந்து அபாயம் விளைவிப்பவர்களாயிருப்பதால் அவர்களை கண்டுபிடிக்க எல்லாவித வழியிலும் முயற்சிக்க வேண்டியிருக்கிறதென்பதே உண்மை.

நேருஜிக்கு, தன் இனத்தைச்சேர்ந்த ஸ்திரீகளும் குழந்தைகளும் அந்த துஷ்டர்களால் குரூரமாக கொலைசெய்யப்படுவது கண்ணில் படவில்லையோ? அந்த துஷ்டர்களுக்குப் பரிந்து பேசுகிறவர் தன் இனத்தார் படும் அவதிக்குப் பரிஹாரம் என்ன சொல்லுகிறார்? அந்த துஷ்டர்களைக் கண்டித்து நேருஜி ஒரு வார்த்தைகூடச்சொல்லாதது அதிசயமாகவே இருக்கிறது-

காங்கிரஸ்காரர்கள் மஹம்மதியர் விஷயத்தில் பணிந்துகொடுப்பதற்கும், ஹிந்துக்கள் விஷயத்தில் விட்டுக்கொடுப்பதுமானதுரோககார்யத்திலும் முனைந்திருப்பதற்கு இதுவும் ஒரு உதாஹரணமென்று ஸ்ரீமான் பரமானந்தர் சொல்லுவது உண்மையிலும் உண்மையன்றோ!

நேருஜியின்போக்கைக்கண்டித்து ஸ்ரீமான் பரமானந்தர் கொடுத்துள்ள சாட்டையில் பல உண்மைகள் நிறைந்திருப்பதை காங்கிரஸ் வாலாக்கள் மறைக்கமுடியாது.

ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமை எங்கே?

எவ்வளவோ வருஷங்களாகக் காங்கிரஸ் தலைவர்கள் ஹிந்துக்களின் உரிமைகளை விட்டுக்கொடுத்து முஸ்லீம்களுக்குப் பணிந்து நடந்தும் தேசத்தில் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையை உண்டுபண்ண முடிந்ததா? நாளுக்குநாள் மனஸ்தாபம் அதிகரித்து ஹிந்துக்களுக்கு உயிர், பொருள் நஷ்டமேற்பட்டு வருவதைத் தவிர வேறுபலன் என்னவென்பதை நேருஜி நிரூபிப்பாரா? பரமானந்தர் சொல்லுவது போல், முஸ்லீம்கள், மதம் காரணமாக ஹிந்துக்களைக் கொல்லுகிறவர்களை "பிராணத்யாகிகள்" என்று கொண்டாடவும், அவர்கள்மீது நடக்கும் கேஸ்களுக்குப் பஹிரங்கமாகப்பண உதவி செய்தும், கோர்ட்டுக்களில் கூட்டம் கூடி ஆரவாரித்தும் பின்பலமாக நிற்கிறார்களல்லவா?

எல்லைப்புறத்தில் ஸ்ரீமதி ராமகௌரீ என்ற ஹிந்துப்பெண்ணை அந்த துஷ்டமுஸ்லீம்கள் தூக்கிக்கொண்டு போனதும், பிறகு அவளை எவ்வளவோ கஷ்டப்பட்டு திருப்பிக்கொண்டு வந்ததும் அதன் நிமித்தமாக அந்த துஷ்டர்கள் ஹிந்துக்களைப் பலாத்காரம் செய்ததும் ஸமீபத்தில நடந்த ஸம்பவங்கள். இதன் மேல்தான் அதிகாரிகள் அந்த துஷ்டர்கள் மீது ராணுவ நடவடிக்கை எடுக்கவேண்டியதாயிற்று. இதில் என்ன பிசகு என்று ஸ்ரீ பரமானந்தர் கேட்கிறார். துஷ்டர்களுக்குப் பரிந்து பேசும் நேருஜி, மேற்படி ராமகௌரிக்காவது அவளுடைய பெற்றோர் முதலிய ஹிந்துக்களுக்காவது சிறிதுகூடப் பரிவுகாட்டாததை பரமானந்தர் எடுத்துக்காட்டுகிறார். அந்த துஷ்டர்களை அடக்கி சாந்தர்களாகச் செய்து ஹிந்துக்களிடம் ஸமரஸமாகப் பழகும்படி செய்யும் சக்தியோ, யோக்யதையோ நேருவுக்காவது, மற்றகாங்கிரஸ் தலைவர்களுக்காவது இருக்கிறதாவென்று ஸ்ரீமான் பரமானந்தர் அறைகூவி அழைப்பதற்குக் காங்கிரஸ் வாலாக்கள் என்னபதில் கூறமுடியும்?

தேசஸங்க மகாநாடு முதல் கூட்டம் செங்கல்பட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ நாளது ஈச்வரஹூ ஆடிமீ 4௨ (19—7—37) திங்கள்கிழமை முதல் 9௨ (24—7—37) சனிக்கிழமை முடிய 6 நாட்கள் ஷை தேச ஸங்க மகாநாடு செங்கல்பட்டில் நியமாத்யயன வேத பாடசாலை புது கட்டிடத்தில் கூடும். அது ஸமயம் ஸ்ரீ பரமஹம்ஸ பிக்ஷு ஸந்நியாஸிகளான ஸ்ரீ சிவபிர ஆனந்தகிரிஸ்வாமிகள் அவர்கள் அக்ராஸனம் வஹிப்பார்கள்.

வைதிக தர்ம ஸங்கத்து மந்திராலோசன ஸபை அதிகாரிகளான பிரும்மா, வக்தா முதலானவர்களும் மகாநாட்டிற்கு வந்திருந்து ஸபையை அலங்கரிப்பார்கள்.

வைதிக ஸமூகம் வைதிக தர்மம் இவைகளது அபிவிருத்தியில் மிக்க ஆவலுள்ள எல்லா ஆஸ்திகர்களும் வைதிக தர்ம ஸங்கத்தை சேர்ந்தவர்களும் அவசியம் ஷை மகாநாட்டிற்கு அன்புடன் வந்திருந்து மகாநாட்டை சிறப்பித்து நடத்திவைக்கவேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம்,

நிகழ்ச்சிக் குறிப்புகள்.

ஈச்வரஹூ ஆடிமீ 4௨ திங்கள் காலை மணி 10 முதல் 11. ஸங்கத்து தர்ம த்வஜ ஆரோஹணம். மாலை 4-30—6 மகாஜனங்களுக்கும் மகாநாட்டுத்தலைவருக்கும் வரவேற்பு உபசார உபன்யாஸம். ஆடிமீ 5௨ செவ்வாய் காலை மணி 8—9-30 அக்கிராஸனாதிபதி அவர்கள் பிரஸங்கம். ஆடிமீ 6௨ புதன்கிழமை மாலை மணி 2-30—4-30 அந்தரங்க கைங்கரிய சபைபொது கூட்டம். ஆடிமீ 7௨ வியாழன் மாலை மணி 2-30—4-30 அந்தரங்க சபைபொதுக்கூட்டம் ஆடிமீ 9௨ சனிக்கிழமை மாலை மணி 3—4-45 அந்தரங்க கைங்கரிய சபை தீர்மானமகள்மஹாசபை-இரவு 8-20—9-35 அக்ராஸனாதிபதி அவர்கள் முடிவுரை- 9-35—9-45 ஸங்கம் ராஜகுலகாணி வந்தனோபசாரம்- குறிப்பு:—(1)ஷை 6 நாட்களிலும் காலை மாலை இரவு நேரங்களில் 16 உயர்ந்த உபன்யாசங்கள் 16 மகாவித்வான்களைக்கொண்டு நடைபெறும்-

(2)வெளியூர்களிலிருந்து வரும் வித்வான்கள் கிரஹஸ்தர்கள் தர்மாபிமானியானஎல்லோருக்கும் ஒரு அசௌகரியமும் இல்லாமல் தங்க இட வஸதியும் 2 காலம் போஜனாதிகளும் செய்து வைப்பதற்கான தக்கஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன-

மகாநாட்டிற்கு எல்லோரும் வருக.

இப்படிக்கு,
R. ராதாகிருஷ்ணய்யர், B.A., B.L., Tanjore
ஸங்கம இராஜகுலகாணி,
கு: கிருஷ்ணமூர்த்தி சர்மா, ஸ்ரீ கார்யம்,
அந்தரங்க கங்கரிய ஸபை,

ஸ்ரீ ஆசார்ய பூஜா மஹோத்ஸவம்

ஸ்வஸ்தி ஸ்ரீ நாளது ஈஸ்வரஹூ ஆடிமீ 4௨ (19—7—37) திங்கள்கிழமை ஆஷாட சுத்தஸயன ஏகாதசி அன்று இராத்திரி வைதிக தர்மசங்கத்து ஸ்ரீபாத கைங்கர்ய பாராளல் பிரதி வருஷத்திலும் நடத்தப்பட்டு வரும் ஸ்ரீஆசார்ய பூஜை கிரமப்படி ஸ்ரீவேங்கடராம சர்மா என்கிற ப்ரஹ்மசாரியைக் கொண்டு நடத்தப்படும். அது சமயம் எல்லா ஆஸ்திகர்களும், வைதிக தர்ம ஸங்கத்தில் சேர்ந்தவர்களும் வந்திருந்து தர்சனம்செய்து ஸ்ரீஆசார்யாளது பரிபூர்ண அநுக்ரஹத்தை அடையும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்,

நமது வைதிக தர்ம ஸங்கத்தை அபிமானித்து ஸ்ரீபாத ராஜர் ஸ்தானம் வஹித்து அநுக்ரஹித்துவரும் பரமஹம்ஸ பிக்ஷு ஸந்நியாஸிகளான ஸ்ரீசிவப்ரகாச ஆனந்தகிரிஸ்வாமிகளவர்கள் இவ்வருஷம் சாதுர்மாஸ்யஸங்கல்பம் செங்கல்பட்டு கிராமத்தில் செய்து கொள்ளுகிறார்கள்,

ஷை ஸ்ரீஆசார்ய பூஜையும்செங்கல்பட்டில் நியமாத்யயன வேதபாடசாலை. புதுக்கட்டிடத்தில் நடக்கிறது,

இப்படிக்கு,
ஆர். இராதாகிருஷ்ண அய்யர், பிஏ, பிஎல்
ஸங்கம் ராஜகுலகாணி:
கு, கிருஷ்ணமூர்த்தி சர்மா ஸ்ரீகார்யம் அந்தரங்க கைங்கரிய ஸபை,
வி, அகோராமய்யர், காரியதர்சி ஹிந்து மத்தியமகமிட்டி செங்கல்பட்டு,
வி, விச்வநாதய்யர், Rtd. Post Master Chengleput.
சேங்காலிபுரம் அநந்தராம தீக்ஷிதர், செங்கல்பட்டு.
தி சீனுவாஸாசாரியார் மிராசுதார், செங்கல்பட்டு.
இராமமூர்த்தி சர்மா, ஸ்ரீபாத கைங்கர்யம்.

அதிக வட்டியைக் குறைக்க மசோதா

இந்தியா சட்டஸபையில் வரும்.

தஞ்சை திருச்சிஜில்லா பிரதிநிதியாக இந்திய சட்டசபை மெம்பராயிருந்து வரும் ஸ்ரீமான் கே. ஸந்தானம் இந்திய சட்டசபையில் வட்டியைக் குறைக்கும் மசோதா ஒன்றைக் கொண்டுவரப் போவதாக நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். ஏழைகளுடையவும் வியவஸாயிகளுடையவும், சௌகர்யத்தை உத்தேசித்து 100-க்கு, 6-விதமே வட்டி வாங்கவேண்டும் என்றும் அதற்குமேல் வாங்குகிறவர்களுக்குச் சட்டப்படி தண்டனை விதிக்க வேண்டுமென்றும் அந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ப்பதால் காலேஜ் படிப்பு திட்டமே குறைவடைகிறது என்பது என் மனத்திற்குவாவில்லை, நான்கு வருஷம் காலேஜில் படித்துப்பெற்ற பி. ஏ. அந்தஸ்துதான் உயர்ந்தது. ஹைஸ்கூலில் ஏற்படக்கூடிய 7ம் பாரம் நாம் உத்தேசிக்கும் கார்யசித்தியைத்தராது. 7ம் பாரம் ஏற்படுத்த திராணியற்ற ஹைஸ்கூல் விசேஷ தொழில் பாடதிட்டத்தை ஏற்படுத்தவும் யோக்யதையுள்ளதாக இராது. இண்டர்மீடியெட் காலேஜை விசேஷ தொழில் படிப்பு திட்டத்தைக் கைகொண்டு ஹைஸ்கூல் அந்தஸ்துக்கு தாழ்த்துவது எவ்வகையிலும் பொருந்தாது. இப்பொழுதிருக்கிற சட்ட திட்டங்களை விரிவாக மாற்றாமல் தொழில் படிப்பு, அப்பியாஸம், அனுபவமடைதல் இவைகளுக்கு தக்க வசதிகளையும் சர்க்கார் விரிவாக்குவதே நலம்.

பொதுவான சாமான்யப்படிப்பு ஓங்குவது ராஜ்ய பரிபாலனத்திற்கும், தேச க்ஷேமத்திற்கும் மிக்க அனுகூலமானது. பிள்ளைகளுக்கு தொழில் நோக்கம் ஏற்படுவதற்கு ஹைஸ்கூல்களில் நானாவித தொழில்படிப்பின் ஆரம்பம் அவச்யமானது. சர்க்கார் அறிக்கையில் குறித்தபடி காலேஜ்களிலும் ஹைஸ்கூல் தொழில்படிப்பை அனுசரித்து பற்பல தொழிலுக்குரிய பாடங்களை தொழில் ஸ்தாபனங்களின் தேவைக்கிணங்கி ஏற்படுத்தல் வேண்டும். ஹைஸ்கூல் மானேஜர்களும், சர்வகலாசங்க அதிகாரிகளும், தங்கள் பார்வையில் படித்துத் தேரும் பிள்ளைகளுக்கு உத்யோகம் ஏற்படுத்த முயலுவது தங்களுடைய உரிமைகளில் ஒன்றாக நினைக்கவேண்டும். இதுவிஷயமாக தக்க பெரிய உத்தியோகஸ்தர்களுடனும் தொழில் ஸ்தாபனாதிகாரிகளுடனும் அடிக்கடி கலந்து ஆலோசித்தல் வேண்டும். இன்னமும், ஜில்லாமூலஸ்தானங்களில் தேவைக்கிணங்கி, சர்க்கார், தாங்களோ, லோகல்பாடி மூலமாகவோ, தனியான நிர்வாக சபை மூலமாகவோ, தக்க தொழில் பாட ஸ்தாபனங்களை யுக்தமான உதவி புரிந்து ஏற்படுத்தவேண்டும். ஒவ்வொன்றிலும் தாழ்ந்தது உயர்ந்தது என்று இரண்டு பகுதிகள் இருக்கவேண்டும். தாழ்ந்த வகுப்பில் ஹைஸ்கூல் நாலாவது பாரம் பரீக்ஷையில் தேறினவர்களும், உயர்ந்த வகுப்பில் ஹைஸ்கூல் 6-வது பாரம் பரீக்ஷை கொடுத்தவர்களும், மற்றும் காலேஜிலிருந்து வருபவர்களும், சேர்ந்து படிக்கலாம். படித்து தேர்ச்சியடைந்தவர்களுக்கு ஸ்தாபனாதிகாரிகள் சாத்தியமான உதவியைச் செய்யவேண்டும் ஹைஸ்கூல் 4-வது பாரம் பரீக்ஷையை ஜில்லா அதிகாரி பார்வையில் ஜில்லா அறிஞர்களைக் கொண்டும், 6ம் பாரம் பரீக்ஷையை மாகாண டைரெக்டர், சர்வகலா சங்காதிகாரிகள் இவர்கள் சேர்ந்து தங்கள் பார்வையில் ஒரு ஸபையை ஏற்படுத்தி அவர்களைக்கொண்டு ஸர்க்கார் அதிகாரத்தின் கீழ் நடத்தவேண்டும். மேற்சொல்லிய விஷயங்கள் பொதுஜன க்ஷேமார்த்தமாக இருப்பதால் எல்லா படிப்பாளிகளும் தங்களாலியன்றமட்டும் நன்றாக யோஜித்து உதவி புரியவேண்டும். இதுவிஷயமான அபிப்ராயமுள்ளவர்கள் அபிப்ராயம் கொடுக்கலாமென்று சர்க்கார் அறிக்கை சொல்வதால் நான் என் தாழ்ந்த அபிப்ராயத்தை கொடுக்கத் துணிந்தேன்.

மந்திரி பதவி ஏற்கத்தீர்மானம்.

கார்யக்கமிட்டின் முடிவு.

வார்தாவில் நடந்து வரும் காங்கிரஸ் கார்யக் கமிட்டியில் காங்கிரஸ்காரர் மந்திரிப்பதவி ஏற்பதைப்பற்றிய விஷயம் சிலதினங்களாக விவாதிக்கப்பட்டு வந்தது.

கடைசியாக மெஜாரிடி பலமுள்ள மாகாணங்களில் காங்கிரஸ்காரர்கள் மந்திரி பதவி ஏற்கலாமென்றுமுடிவு செய்யப்பட்டுவிட்டது.

ஸ்ரீ வாஞ்சியம்.

ஜீவன்முக்தி க்ஷேத்திரமாகிய இந்த ஸ்ரீவாஞ்சியமென்ற காசியாதிக்ய ஸ்தலத்தில் நாளது ஈச்வர-௵ ஆனி-மீ 11, 12, 13தேதிகளில் கும்பகோணம் ஸ்ரீ அத்வைதஸபாவின் ஆதரவில் வருஷாந்திர உபன்யாஸமாக ஷ்டிஸபா பிரதான பண்டிதரான சாஸ்திரரத்னாகர மஹாமஹோபாத்யாய பிர்மஸ்ரீ யஜ்ஞஸ்வாமி சாஸ்திரிகளவர்கள் விஜயஞ்செய்து உபன்யாஸித்த வைபவம்.

ஸநாதன தர்மாபிமானிகளும், க்ஷேத்திரவாஸிகளான விப்ரோத்தமர்களின் அபீஷ்டத்தையும் வேண்டுகோளையும் அனுசரித்து இவ்வூர் காலம் சென்ற ராமாயணம் பிர்மஸ்ரீ நடேசசாஸ்திரியாளவர்களின் புத்திரரும் தற்காலம் வேதாந்த சிரோன்மணி வாசித்துக் கொண்டிருப்பவருமான ஸ்ரீ என். கணேச அய்யரின் சிறத்தையோடு கூடிய முயற்சியினால் ஸ்ரீ சாஸ்திரிகளவர்களை பிரார்த்தித்துக்கேட்டுக் கொள்ளப்பட்டு அவர்களும் கருணைகொண்டு விஜயம் செய்தார்கள்.

ஆரம்பதினம் 11ௗ மாலை 3மணிக்கு வரும் வீதியில் விசித்திர தோரணங்களாலும் நல்வரவு கூறும் வசனம் பிரகடனங்களாலும், அலங்கரித்தும் உபன்யாஸ ஸ்தானமாகிய ஸ்ரீ வாஞ்சேச்வரர் ஆலயத்திற்குள்பட்டதும் அப்பாமேசுவரனால் நிர்மாணிக்கப்பட்டதுமான புண்ய புஷ்கரணி யென்ற குப்தகங்கா தீரத்திலுற்ற அந்தணர் மடத்தில் பந்தல்களாலும் தோரணங்களாலும் அலங்கரித்தும் பகவத்ரூபமான படத்தை வைத்து புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டும், மேளவாத்யத்துடன் பிராமணர்கள் ஸ்ரீயவர்களை எதிர்கொண்டழைத்து வந்து உபன்யாஸ ஸ்தலத்தில் வந்தமர்ந்ததும்.

கெ. ராமச்சந்திரன் என்ற பிராமணச் சிறுவனால் வரவேற்பு உபசாரமாக ஒரு கீர்த்தனம் இயற்றிப் பாடிக்கொடுக்கப்பட்டது.

பிறகு ஸ்ரீ. சாஸ்திரியளவர்கள் முதல் நாள் (ஸதாசாரம்) என்ற விஷயத்தையும். 2வது தினம். (பக்தி மார்கம்) என்ற விஷயத்தையும். 3வது தினம் (சிவோத்கர்ஷம்) என்ற விஷயத்தையும் அதிமதுரமாயும் யாவருக்கும் பரவசமாகும் படிக்கும் உபன்யசித்து ஆனந்தத்தை யளித்தார்கள்.

இறுதியில் ஷ்டி கணேசய்யரால் வந்தனோபசாரமாக ஸம்ஸ்கிருதத்தில் இயற்றி வாசித்துக் கொடுக்கப்பட்டும், ஷ்டி ராமச்சந்திரனால் பின்னால் குறிப்பிட்டிருக்கும் "மங்கள வாழ்த்து" கீதம் இனிமையாய்ப் பாடி அந்தக்கீர்த்தனத்தையும் வந்தனோ உபசாரப்பத்திரத்துடன், ஸ்ரீசாஸ்திரிகள் அவர்களிடம் கொடுக்கப்பட்டு, . இனிது முற்றுப் பெற்றதுடன் ஸநாதன தர்மாபிமானமுள்ள, விப்ரோத்தமர்களால் தங்கள் சக்தியானுசாரம் ஷ்டி அத்வைத சபாநிர்வாகத்திற்கென்று ஸ்வல்ப திரவிய உபகாரமும் பண்ணப்பட்டது,

ஐக்யமாகாண மந்திரிஸபை ராஜீநாமா.

ஐக்யமாகாணத்தில் இடைக்கால மந்திரிகளாக இருந்துவந்த சத்ரி நவாப் கோஷ்டியார் மந்திரி பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்கள். கவர்னர் இன்னும் இதை அங்கீகரிக்கவில்லை. வைஸ்ராய் அறிக்கையை அனுஸரித்து காங்கிரஸ்காரர் மந்திரிபதவி ஏற்பது நியாயம் என்றும் அதற்கு அனுகூலமான நிலைமையை உண்டுபண்ணவே தாங்கள் ராஜிநாமா செய்ததாயும் அவர்கள் அறிக்கை விடுத்திருக்கின்றனர்.

மைசூரில் ஆலயப்ரவேச விசாரணைக் கமிட்டி நியமிக்கப்படமாட்டாது

சில மாதங்களுக்கு முன் மைசூர் சட்டசபையில் ஆலயப்ரவேச விஷயமாகச் சர்ச்சை ஏற்பட்டுக் கடைசியாக அந்த ராஜ்யத்தில் ஆலயப்ரவேசச் சட்டம் செய்யமுடியாதென்று கவர்ன்மெண்டார் சொல்லிவிட்ட விஷயம் ஏற்கனவே யாவரும் அறிந்ததே.

அந்த விவாதகாலத்தில் இது விஷயமாக ஒரு கமிட்டியை நியமித்து விசாரிக்கக்கூடுமா என்று சில சீர்திருத்தக்காரர்கள் கேட்டுக் கொண்டதற்கு கவர்ன்மெண்டார் அதற்கு அவச்யமுண்டாவென்று யோசிப்பதாக சொல்லியிருந்தார்கள்.

இதை அனுசரித்து இரண்டொரு தினங்களுக்கு முன் கமிட்டி நியமனத்தைப் பற்றி கேள்வி ஏற்பட்டபோது அம்மாதிரி கமிட்டி ஒன்று நியமிக்க அவச்யமில்லையென்று ஸர்க்கார் தீர்மானித்து விட்டதாயும் ஆகலால் கமிட்டி நியமிக்கப்படாதென்றும் கூறிவிட்டார்கள்.

கிறிஸ்தவமதத்தில் புகுந்த ஹிந்துக்கள்.

பூர்வஸொத்தில் பாத்யம் வேணுமாம்!

கிறிஸ்தவமதம் புகுந்த ஹிந்துக்களுக்குத் தங்களுடைய பூர்வ குடும்பத்தின் ஸொத்தில் பங்கு கொடுக்கும்படி சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று பாதிரிகளின் தூண்டுதல் பேரில் மைசூர் சட்டஸபையில் ஒருமசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவர்களாகப் போனவர்களுக்குக்கூட பூர்வ ஹிந்து குடும்ப ஸொத்தில் பாத்யம் ஏற்பட்டால் கிறிஸ்தவமதம் பிரவேசிப்பவர்களுக்கு விசேஷ ஸௌகர்யமுண்டாகி அவர்களின் ஸங்கியை விருத்தியடையுமென்பது பாதிரிகளின் நோக்கம். இந்த மசோதா விஷயமாக நேற்று முன்தினம் மைஸூர் சட்டஸபையில் விசேஷவிவாதம் நிகழ்ந்தது இந்தமாதிரி சட்டத்தைத் திருத்துவது பெரிய அனர்த்தம் என்று பலர் எடுத்துக் காட்டினர்.

கடைசியாக இந்த மசோதாவை அடுத்த மாதம் வரையில் ஒத்தி வைக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

பிராம்மணகிறிஸ்தவர் மீண்டும் ஹிந்துவானார்.

பூனாவில் 100 வர்ஷங்களுக்கு முன் கிறிஸ்தவ மதத்தைத் தழுவியிருந்த குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பிராம்மணர் தமதுமனைவி, குழந்தை முதலிய ஸகலருடன் மறுபடியும் ஹிந்து மதத்தில் பிரவேசித்தார்! ஆர்யஸமாஜிகள் சுத்திச் சடங்கு நடத்திவைத்தனர்!

மேல தஞ்சாவூர் அபிஷியல் ரிசீவர் கோர்ட்

I. P. No 32/36

R. கணேசய்யர் வகையறு } மனுதார்
A முத்துவேலு செட்டியார் } இன்ஸால்வெண்டார்

ஷை நம்பரில் ஷை மனுதார் தன்னையும் ஒரு Creditor ராக சேர்த்துக்கொள்ள பெடிஷன் கொடுத்து நோட்டீஸுக்கு உத்தரவு ஆயிருக்கிறது. அதில் ஸவருக்கேனும் ஆக்ஷேபனை இருந்தால் மேல தஞ்சாவூர் அபிஷியல் ரிசீவர் ஆபீஸில் 15ௗ பகல் 3-மணிக்கு ஆக்ஷேபணையை தெரிவித்துக் கொள்ளவும்.

இப்படிக்கு,
R. கணேசய்யர்.

TRAVANCORE POSITION EXAMINED.

(By Mr. N. Natesa Aiyar.)

Sydney Smith observed long ago back and the observation is as true now as it was when it was made.

"In the name of mankind, if mankind is dear to you, seek not that easy and accursed fame which is gathered in the world of revolutions; and deem it better to be for ever unknown than to found a name upon the basis of anarchy and irreligion."

Sree Krishna Bhagavan observed 5000 years back,

'Do not unsettle the settled view of the ignorant masses which are attached to action."

We shall examine the happening in Travancore in the light of these wise observations.

2. In colorable exercise of a Jurisdiction which the Travancore Durbar never had and never before had claimed, and in the teeth of all existing laws and customs and practices and usages which have been holding the field for over 2000 years of her well-documented history, the young Maharaja chokeful of the west which he had imbibed during his foreign travels, suddenly pronounced, with Hitlerite rapidity and Mussolonian sweep, an unforeseen death sentence on Vedic Religion, Vedic Culture, and Vedic Dharma, in lamentable disregard of the laws of natural justice, without any previous notice, charge or trial and in absenti. As if in expiation of this sin of attempt at Veda-Hatti, His Highness has started on a holy pilgrimage to foreign parts, leaving behind, his six-month old giant baby viz., that unwanted and almost universally resented and condemned Temple-entry Proclamation to continue its work and he is reported to be leaving Batavia now. This ill-starred child, bulky and strong to all appearances, now stands striped to the white skin, battered and bruised by blows from above and below and from all sides. It is still living. but as what and how. Need it be told?

3. It is common knowledge that no modern event has created a greater stir and ferment in the Sanatani world or sent a ruder shock to it, barring that legislative monster which is strutting India under the name of Sarda Act and which is trying to set its foot on the soil of French India and Indian India. As well it is a matter of authentic history now:—

(a) that unhappy, thrice unhappy Travancore now stands wan and lean, *in the midst of temples* deserted alike by savarnas and Avarnas in spite of the enforced attendance of the officialdom and with the figures in walls and pillars as primary worshippers, *in the midst* of her children muzzled and scared out of their wits and stealthily uttering in hushed up accents in pale twilight and in odd nooks and corners groans of suppressed agony - the very pictures of blank wonderment, consternation, dismay and despair and *in the midst* of abandond tanks and discarded choultries dumb-stuck Pothis and terrified temple-servants Mr. T. R. Venkatarama Sastrigal Says (see Hindu of 3—6—37) "I shall not say that it has the approval of all Travancoreans. Probably they are a good number who disapprove"

(b) that the lip-loyalty, lip worship, lip adoration and lip devotion which were manufactured and flashed forth in suffocating abundance in and outside Travancore are all dying a deserved death and

(c) that the costly, artificial respirations which were being breathed into it these 6 months to keep it in life, in the shape of amusing press boostings, tell-tale platform outbursts make-believe entertainments, demonstrations and dinners and disingenuous Statue funds, have become powerless.

Under the urge of these happenings reinforced by the contemparaneous happenings in the sister state of Cochin, a legitimate hope aprouted in the minds of the people that the Proclamation will be recalled and that the temples will be purified by the ordained Agamic ceremonies. But Providence appears to have willed otherwise.

4. At this stage, one is reminded of the restive horse which not only threw away its rider but also dug out a pit to bury him. Imbued with an overpowering sense of duty to himself to the glorious traditions of his illustrious family, and to the Varnashrama Dharma which has been and is holding undisputed sway over the Indian continent in spite of attacks from within and from without and which in his Coronation oath he has solemnly sworn to obey and transmit unimpaired to his successor, the Maharaja of Cochin full of years and honors, knowledge and wisdom and anxious solicitude for the happiness of his subjects here and hereafter, declared at a critical moment in the prescribed manner, his unwavering faith in the laws and customs of the land and his fixed resolve to carry them out in the fear of God and without fear of man; and by his considered order accepted by the President, he prohibited the offending Travancore Nambudries from functioning officially in the Koodal Manickam temple which is lying in the ambit of his own State and over which he has sovereign powers in addition to other powers. It would have been part of wisdom on the part of the Travancore Durbar to stay its hand and to withdraw the poisoned arrow from the hastily strung bow before it became too late. But that was not to be. Instead, the Travancore Durbar in the plenitude of its superior temperal power has thought fit to add insult to the injury by issuing a supplemental proclamation threatening to confiscate the customary annual perquisites of two lakhs of Rupees provided for the Cochin Nambudries should they fail to adhere to the letter and spirit of the mother Proclamation. The report goes that the threat is being carried. out.

5. This is not all. A challenge has been thrown very boldly by Dewan of Travancore a few days back to pilgrim groups, to visit Travancore and satisfy themselves at first hand about the correctness and truth of the charges against the Travancore Durbar to the effect that protest meetings have been banned there and that the subjects of His Highness stand mercilessly muzzled, with a view to prevent the exposure of the real inwardness of the situation and the growing unpopularity of the Proclamation. There is an old saying that Cats close their eyes and then imagine that the world has gone to sleep. Thousand groups, which are however bound to be non-pilgrimage groups until the necessary purifications are made to the temples which have now been reduced to the level of museums are prepared to take up the challenge and to tour the State and to hold public meetings and record the genuine views of the people provided full amnesty is vouchsafed to the subjects and the groups are in no way molested. A Deputation of peaceful and law abiding and learned gentlemen not exceeding 20 in number is also prepared to wait upon His Highness or the Dewan and to place their view points before them. It will be to the good of all parties, if in the interval the Dewan will be pleased to give a plain and direct answer to the following questions.

(1) Why did Mr. K. G. Sesha Aiyar, retired Chief Court Judge make at first a clear declaration that the submission to the Proclamation will never be voluntary and why did he virtually retract it the next day.

(2) Was not the *attendance of the officials for daily worship* enforced by means of departmental circulars and for filling the void created by the boycott of the temples by the public?

(3) Were not numerous meetings held and resolutions passed throughout the State prior to the proclamation, condemning all movements against untouchability and in favour of temple-entry by the Avarnas and why did such meetings and declarations cease abruptly immediately after?

(4) Why did the Travancore Durbar throw away the advice of the Special Committee to convene a special Parishat and ascertain its views regarding untouchability and temple worship before taking final action?

(5) Do the State papers disclose whether at any time before a Proclamation of the kind in controversy or in respect of any other religious matter has been issued by any Maharaja of Travancore and if so when and by whom and how often?

(6) Will the Travancore Durbar or the Maharaja or the Dewan be prepared to issue a similar Proclamation throwing open churches and Mosques to the public including Non-Muslims and Christians?

(7) Is slippery political expediency or groundless apprehension of loss of Sovereignity or of a reduction in the numerical strength of the Hindu subjects of His Highness good ground for signing the death warrant of a religion, a morality and a culture which are the chiselled products of aeons of meditation and introspection?

(8) Will the Travancore Durbar be pleased to withdraw the Proclamation if it is established before an impartial tribunal in the light of Sruti, Yukti and Anubhavam that there is overwhelmingly abundant sanction for untouchability and the regulation of temple worship in the accustomed manner?

Will the Travancore Durbar be pleased to respond?

The Socialistic programme:—

At a Mayavaram Mirasdar's meeting presided over by Mr. D. Vaidyanatha Dikshitar Mr. Buvaraghava Iyengar said that remission of land tax could by itself be of no benefit to the poor, and the purchasing power of the poor could be increased only through *socialistic programme which could be put through only by the Congress* succeading in getting real political power. Mr. T. K. Srinivasa Iyer of Mannargudi strongly criticised the Mayavaram Mirasdars' Association for requsting the present Madras Government for remission of land assessment.

* * * * *

"Most Parishads will only give conservative opinion. Parishads which give progressive opinion will never escape the suspicion of influence," if not of bribery and corruption." *T. R. Venkatarama Sastri.*

Stalin Exhorts Russian Youths to become Atheists,

Acceleration of Anti-God Campaign.

(The B. P. Service)

In a letter addressed to the Pioneer Club at Moscow, composed of children aged 8 to 12 years, Stalin states "You must all become atheists." He also warns them against being dominated by foreign influences.

"You must all become atheists," the letter reads, "He who is an atheist is a true revolutionary and a good Communist. When you think of God, you betray the revolution and the Communist dictatorship. I am an atheist and I have learned that Communism with atheism is a step toward true socialism'.

வாரக் குறிப்புகள்.

(வே. ஸோ. சர்மா.)

உருதா ஹிந்தியா? இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் வந்தால் ஹிந்தியே பொதுபாஷையாக்கலாம் என தேசியசபை முயற்சிக்கின்றது. முஸ்லீம் வழக்கப்படி இதற்கு எதிராக உருதே பொது பாஷை என ஆரம்பிக்கிறது. இதுவும் வேண்டாம் அதுவும் வேண்டாம். எல்லாபாஷைக்கும் மூல பாஷையான கீர்வாணபாஷை இருக்கட்டுமே.

பஹிஷ்கரிப்பதே மேல்! வட நாட்டில் ஓர் பாதிரி கலாசாலையில் மிக பிரசித்தமான ஓர் ஏகாதசிக்கு லீவ் கொடாததால் பலத்த கிளர்ச்சி நடந்தது. இதர கலாசாலை கிடைக்குமிடத்தில் பைபிளைக் கட்டாயமாக போதிக்கும் பாதிரி கலாசாலைகளைப் பஹிஷ்கரிக்க வேண்டும்

துக்காதே! சீர்திருத்து!! தற்கால மிஷின்களை நம்பி பல நகரங்கள் குளங்களையும் கிணறுகளையும் தூர்த்துவிட்டுப் பின்னர் சென்னையைப் போல் தவிக்கின்றன. திருச்சியும் மங்கவாரம்பிக்கிறது. பரலோகத்தை நாடி பல தார்மிகர் வெட்டிய குளங்களைத் தூர்ப்பது மஹா பாபம்! ஜலத்தை இறைத்து மாடு குடிக்கும்படியாவது பாதுகாப்பது தர்மமாகும்.

ஸ்வதர்மத்தை போதிக்க! கோயம்புத்தூர் வைஷ்ணவபந்து ஸபை ஆங்கிலம் கற்கும் மாணவருக்கு உதவ சிறிது தொகை பங்கிட்டிருக்கிறது. வேதவியாசர் கூறியபடி வைஷ்ணவர் உலகிற்கே பந்துவாம்!! வைஷ்ணவ தர்மத்தையே நாசம் செய்யுமாங்கிலக் கல்விக்கோ உதவி? மதக்ரந்தம் வேதம் முதலியவைகளைக் கற்பவருக்கு உதவாதா?

ஸம்மதமாகாதா? திருவாங்கூர் மன்னன் தேச சஞ்சாரத்தில் கூடவே சென்ற கசின்ஸ் என்பார் மன்னனது திருவுளத்தை விசால புத்தியை மதாபிமானத்தை விளக்கி பத்திரிகைகளுக்கு சமாசாரம் எழுதுகிறார். திடீரென மஹாராஜாவுக்கு மதபக்தி தோன்றிற்றே? இஃதெல்லாம் ஸஹோதரா ஸசிவோத்தமர் தந்த்ரமன்றோ? யார் ஏமாறுவர்.

ஸமூக அட்டூழியம்!! சீர்திருத்தக்காரர் சொல்லால் பற்பல தீமைகள் விளைகின்றன? லெக்ஷ்மணபுரியில் ஓர் கனவான் இரண்டாவது மனைவியை மணக்க, இருநாலு துஷ்டர்கள் அதைத் தடுத்தனர். அவரோ மிக அவசரமாக ஓடி பயத்தால் தான் கோரிய பெண்ணின் சகோதரியை மணந்தார். பின்னர் அதை உணர்ந்து மூன்றுவதாக கோரிய பெண்ணை மணந்தார். இப்படித்தான் சீர்திருத்தக்காரரால் பற்பல பலாத்கார அட்டூழியங்கள் நடக்கின்றன.

இங்கு அவர்களுக்குப் பலமில்லை!! இதைவிட இன்னும் மோசமான கருத்துள்ளவர் நம் நாட்டிலுண்டு. இங்கு பரிபூர்ண பலத்துடன் ஸநாதனிகள் அதிகமிருப்பதாலும் கிளர்ச்சி பலமாக இருப்பதாலும் அவர்கள் அட்டூழியம் ஓங்கவில்லை! நம் பலத்தை இன்னு மதிகப்படுத்தினால் அதை அடியோடு அழிக்கலாம்.

தமிழ் மடாதிபதிகள்!! இப்போதுதான் விழித்துக்கொண்டு சங்கம், தர்மப்ரசாரமென பேசுகின்றனர். அவர்களுக்கிருக்கும் செல்வம் செல்வாக்கு முதலியவைகளை நல்வழியில் செலுத்தி பத்திரிகைகளை நடத்தி மதாபிமானத்தை வளர்த்தல் வேண்டும்.

ஸ்ரீ வைதிக தர்ம வித்யா ஸொஸைட்டி ஸ்தாபனம்.

ஹிந்து ஸசோதர ஸகோதரிகளுக்கு தஞ்சை ப்ராம்மணர் ஸங்கம் அனுப்பும் செய்தியாவது:— எல்லோரும் இந்த வைதிக தர்ம வித்யாஸங்கத்தின் மெம்பர்களாகச் சேர வேண்டும். ஒருநாள் காபிச் செலவை மாதச் சந்தாவாகக் கொடுத்தால் போதுமானது. ஸொஸையட்டீஸ் ஆக்ட்டுப்படி ரிஜிஸ்டர் செய்துகொண்டு ஸொஸையட்டி நடத்தப்படும். ஒரு மெம்பருக்கும் லாப நஷ்ட ஜவாப்தாரியில்லை. நடந்தமட்டில் சுகிருதம் இப்போதைய படிப்புச்செலவை நாம் தாங்கமுடியாது. மேலும் நமக்குப்பயனற்றது. கீழ்த்ர படிப்புச்செலவையே முதலாகவைத்தால் பையன்கள் பிழைக்கமுடியும். படித்து பாஸ் செய்தும் வேலையில்லாத் திண்டாட்டம் ஒருபுறமிருக்க 100க்கு 90 பேர் ஒன்றுக்கும் பிரயோஜனமற்றவர்களாய் பூமிக்குப் பாரமும் சோற்றுக்குக்கேடுமாய் வெளிவருகின்றார்கள்.

சிஷ்டர்களான தனிகர்கள் இப்படிப்பட்ட ஸ்தாபனங்களில் ஈடுபடுவது கோவில் கட்டி குளம் வெட்டுவதைவிட மேலான தர்மம். 15 வயதுவரையில் நல்வழியில் நம் குழந்தைகளைப்பழக்க ஏழைகளுக்குத்தக்க கல்விச் சாலைகள் ஏற்படவேண்டும்.

ஹிந்துமதமென்று வழங்கும் நம் ஸநாதன தர்மத்தையும் வேத சாஸ்திரங்களையும் புகழ்ந்து நம் வேதசாஸ்திரங்கள் அநாதியென்றும் இதரமதங்கள் புருஷகல்பிதம் என்றும் நமது ஒன்றே இஹபரசுகங்களை கொடுக்ககூடியதென்றும் பிரசங்கமேடைகளில் பேசி வருகிறோம். மத சாஸ்திர விரோதமான சட்டங்கள் ஏற்பட்டு நம் [illegible]நிசித்தமான மற்ற கொள்கைகளை கெடுக்கின்றனவென்றும் மீட்டிங்குகள் கூடித்தீர்மானங்கள் செய்கிறோம். நம்மவர்களாலேயே நமக்குக்கேடுகள் விளைகிறதாகவும் அறிகிறோம்.

ஆயினும் இதற்கெல்லாம் மூலகாரணமான கல்விப்பயிற்சி விஷயத்தில் நம்புத்தியை நாம் எள்ளளவும் செலுத்தவில்லை. "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டில்" என்றொரு பழமொழியுண்டு. இளம்பிராயத்தில் எந்த ஸஹவாஸமும் வாஸனையும் நம் குழந்தைகளுக்கு ஏற்படுகிறதோ அப்படித்தான் அவர்களாயுள் முடிய நடப்பார்கள். இந்த உண்மையை நன்கறிந்த மேல்நாட்டார்கள் நம்தேசத்தில் நுழைந்த நாளாக கிருஸ்தவப்பாதிரிமார்களைக் கொண்டு கல்விச்சாலைகள் ஏற்படுத்தி நம்மை மோஹனாஸ்திரத்தினால் கட்டிவிட்டார்கள். மேல்நாட்டு ஆபாஸ நாகரீகங்களும் நம் நாட்டிற்கும் வீடுகளுக்கும் நம் ஆசாரங்களுக்கும் தகாதவைகளும் அனாவசியமானவைகளுமான நடையுடை பாவனைகளிலும் சாமான்களிலும் ருசி ஏற்பட்டு நம்நாடு பாழாகி மேல்நாடுகள் கொழிக்கின்றன. இதுமட்டுமல்ல. நம் குழந்தைகளே நம் அரியபழக்க வழக்கங்களையும் மதக்கொள்கைகளையும் சாஸ்திரங்களையும் அவமதிக்கின்றனர். அப்படித்தயாரான குழந்தைகளுக்கு தான் இக்காலத்திய சட்டசபை மெம்பர்கள் அல்லவா?

தற்போது அநாசாரப்பழக்கங்களுள்ள குழந்தைகள் மத்தியிலும் அநாசாரப்பக்கங்களும் நம்மாசாரங்களில் விரோத புத்தியுமுள்ள உபாத்தியாரிடத்திலும் நம் குழந்தைகள் பழகும்படி விட்டுவிடுகிறோம். உதாரணமாக வாயில் கூசாமல் விரலைப்போடுவது, ஸ்லேட்டில் எச்சிலைத்துப்பி யழிப்பது, முதலிய பழக்கங்களுமுள்ள குழந்தைகள் மத்தியில் நம் குழந்தைகளையனுப்புவது உசிதமா? நகங்களை கடிப்பது, பல்லைகோண்டி விட்டு சட்டையில் துடைத்துக்கொள்ளுவது, இன்னும் பல கொடிய அநாசாரங்கள் நிறைந்த உபாத்தியயர் மத்தியில் அனுப்புவது உசிதமா? 'உங்கள் கோவில்களில் கல்லை வைத்து ஸ்வாமியென்று கும்பிடுகிறீர்களே' இதோ ஒருபெரிய கல்லிருக்கிறது இதை உதைத்தால் என்ன செய்யும், இதை ஸ்வாமியென்பது முட்டாள் தனமல்லவாவென்று நம் மதக்கொள்கைகளை பழித்து நம் அறியாக்குழந்தைகளுக்கு போதிக்கும் உபாத்தியாயர்களிடம் அனுப்புவது உசிதமாவென்று யோசிக்கவேண்டும். 15 வயதுக்குட்பட்ட சிறு குழந்தைகளை அப்படிப்பட்ட இடங்களுக்கு நாம் அனுப்புவது மஹா பாதகம். அந்த வயது வரையில் நம் ஆசார பழக்க வழக்கங்களையும் தர்மங்களையும் கீழ்தரப் பாடசாலைகளில் போதித்துவிட்டால் பிந்தி எங்கு அவர்கள் போனாலும் நம்மூறும் கெடாது. குழந்தைகளுக்கு க்ஷேமமுமுண்டு. இப்போது ஆண்குழந்தைகள் மட்டுமல்லாமல் பெண் குழந்தைகளும் கெட்டு வருகிறார்கள்.

இந்தச்சீர்கேட்டைத் தடுக்க தற்காலத்தில் நம்மவர்கள் சர்க்கார் உதவி தேடினால் முடியாது. நாம் பாடுபட்டுத் தேடிய திரவியத்தைக்கொண்டு நம் குழந்தைகளுடைய சரீர போஷணைக்கு வேண்டியவைகளை சம்பாதித்து அவர்களை எப்படி போஷிக்கிறோமோ அதைவிட குழந்தைகளுக்குஆத்மார்த்தமான பழக்கவழக்கங்களையும் மதக் கல்வியையும் இளம் பிராயத்தில் ஊட்டி அவர்களின் ஆத்மாவை ரக்ஷிப்பது பெற்றோர்களின் முதல் கடமையாகும்.

அல்பாரம்ப: க்ஷேமகர: என்றபடி வைதிக தர்மரக்ஷணத்தை முன்னிட்டு ஸொஸைட்டி ஏற்பாடு செய்து இப்போதுள்ள வேதசாஸ்திர பாடசாலைகளையும் தஞ்சை ஆர்யமத பாடசாலை போன்ற இதர பாடசாலைகளையும் ஸ்தாபித்துக் காக்கும் பொருட்டு எல்லோரும் முன்வரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்

விதைமுதலை யழியவிடாதீர்கள். மீட்டிங்குகளில் வெறும் பேச்சுக்களும் கூழுகையும் மட்டில் காரியமில்லை. பயப்படாதீர்கள். காரியத்தில் பிரவிருத்தியுங்கள். கடவுள் நம்பக்கம் நிச்சயம், மஹர்ஷிபுத்திரர்களாகிய நாம் நம்கடமையைச் செய்யவேண்டும்.

ஜி. வி லக்ஷ்மண சாஸ்திரிகள்.

திப்பிராஜபுரம்.

ஸாமவேத பாடசாலை.

(கும்பகோணம் தாலூகா திப்பிராஜபுரம் கிராமத்தில் ஸாமவேத பாடசாலையானது கிராமத்தார்களுடைய ஒத்தாசையின் பேரில் நடந்து வருகிறது. வெகு பேர்கள் சொல்லிக் கொண்டும் வந்துகொண்டும் இருக்கிறார்கள். சுமார் 15வருஷ காலமாக நடந்து வருகிறது. மகா-ள-ஸ்ரீ திருக்களாவூர் T.L.சுப்பையர் இதை மேல் மேலும் நடத்த வேணுமென்று ரொம்ப ஒத்தாசை செய்து வருகிறார்.

பாலையூர் முத்து சாஸ்திரிகள்.

சென்னை.

விஜயம். பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ தஞ்சை ஸ்வாமிகளவர்கள் சென்னைக்கு விஜயம்செய்துள்ளார். பக்தர்களது பிரார்த்தனைக்கிணங்க சில தர்ம உபதேசஞ்செய்து செங்கல்பட்டில் ஓர் மஹா ஸபை நடத்துவார்கள்.

வருகை. மீமாம்ஸா கேசரி பிரம்மஸ்ரீ சின்னஸ்வாமி சாஸ்திரிகளவர்கள் காசியிலிருந்து இங்குவந்து பல தர்ம ஸ்தாபனங்களையும் நண்பர்களையும் பார்த்துவருகிறார். அவரும் பல உபன்யாஸம் செய்வாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

நமது நிருபர்.

தற்போது நாம் செய்ய வேண்டியதென்ன?

இப்போது தர்மப்ரதானமாயுள்ள இப்பாரத பூமியில் வசிக்கும் நம்மால் நமக்குறித்தான தர்மாசார ஸம்பிரதாயங்களை முன்போல் சரிவர அனுஷ்டிக்க முடியவில்லை இதற்குக் காரணங்கள் அனேகங்களுண்டு. அக்காரணங்களென்னவென்பதைப்பற்றி விமர்சம் செய்து விரிவுபடுத்துவதில் விசேஷப்பயன் யாதொன்றும் கிடையாது. ஜனங்களுக்கு ஸ்வேச்சா ப்ரவிருத்தியில் (தன்னிஷ்டப்படி நடப்பதில்) ருசிஸ்வாபாவிகமாகவே ஏற்பட்டிருக்கிறது. அதனைத் தடுப்பதற்குச் சாஸ்திரமே அவச்யமாயிருக்கிறது. அதுவும் இப்போது அவமதிக்கப்பட்டிருக்கிறது. அஸூயப்ரகிருதிகளாகிய சிலர், தர்மத்ரோகிகளாகக் கிளம்பி ஒன்றுமறியாத பாமர ஜனங்களை, சாஸ்திரம் தெய்வம், மதம், பூர்வீக ஸம்பிரதாயங்கள் இவற்றிலெல்லாம், நம்பிக்கை வைக்காமலிருக்கும்படி செய்துவருகிறார்கள். இத்தகைய நிலைமையில் உண்மையாக உள்ளன்போடு தர்மாபிவிருத்தியைக் கோரிப் பிரவிருத்திப்பவர் கிடைப்பது அரிதாய்விட்டது. தார்மிகர்களுக்கு இதைக்காட்டிலும் வேறு ஆபத்தான காரியமில்லை. இந்த சமயத்தில் நாம் செய்யவேண்டியதென்னவென்பதைப் பற்றி சிந்தனை செய்வாருமில்லை. தேசத்தில் தர்ம விப்லவம் நேர்ந்த காலத்தில், அதுசம்பந்தமாக ஆலோசனை செய்ய அர்ஹதை உள்ளவர்கள் தர்மக்ஞர்களாகிய வித்வான்களே யாவர். மற்றவர்களுக்குக் கிடையாது. தென்னாட்டு ஸம்ஸ்கிருத வித்வான்களுக்கு இதைப் பற்றிய சிந்தனையே இல்லை. தீண்டாமை விலக்கு, ஆலயப்பிரவேசம், ருதுமதீ விவாஹம், புனர்விவாஹம், விவாஹரத்து முதலிய அதர்மங்கள் சட்டமூலமாக நம்மிடம் வியாபிக்கின்றனவே; இதற்கு என்ன பரிஹாரம், என்பதைப்பற்றி வித்வான்கள் விமர்சிக்கவேண்டியது முக்கியமான காரியமாகும்.

இதைத்தவிர உபநயனம், விவாஹம் முதலிய சுபசோபனாதிகார்யங்களும், அபரகார்யங்களும், அந்தந்த ஸூத்ரக்காரர், பிரயோககாரர் சொன்னபடி நடக்காமல் சீர்குலைந்துவிட்டன. இது விஷயத்தில் உபாத்யாய ஸ்தானம் வஹிப்பவர்களிடத்தில்தான் தோஷமிருப்பதாகச் சொல்லவேண்டியிருக்கிறது. பல உபாத்தியாயர்களுக்குச் சரிவர பண்ணிவைக்கும் முறை தெரியவில்லை. தெரிந்தும் பலர் வேணுமென்றே, சரிவர நடக்காமல் செய்துவிடுகிறார்கள். கிருஹஸ்தர்களோ 'வாத்யார் சொன்னபடி தர்பயாமி' என்று பேசாமலிருந்து விடுகிறார்கள், இதனால் வைதிககாரியங்கள் யாவும் கெட்டுவிடுகின்றன. இந்த விஷயத்திலும், வித்வான்கள் தலையிட்டு சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவச்யம் என்று நான் கருதுகிறேன்.

தவிர கர்மாக்களைச் செய்வதில் முக்யம், கௌணம், என இருவிதமுண்டு. முக்ய கல்பம் அனுஷ்டான ஸாத்யமில்லாத பட்சத்தில் கௌணபக்ஷத்தைப் பின்பற்றவேண்டும் என்பது சாஸ்திரீயமேயாகும், விவாஹத்தை முக்யகாலத்தில் சட்ட நிர்பந்தத்தால் அனுஷ்டிக்க முடியவில்லை. சட்ட நிர்ப்பந்தத்தால் அகாலத்தில் அதைச் செய்யும்படி நேர்ந்துவிட்டது. இதைப்பற்றி என்ன செய்வது என்று பல ஆஸ்திகர் மனம் கொதிப்புக்குள்ளாகியிருக்கிறது. சிலர் சட்டத்திற்குப் பயந்து ஒளிந்து சுதேசஸமஸ்தானங்களிலும் பிறஞ்சு தேசங்களிலும் விவாஹத்தை நடத்தி வருகிறார்கள். இவ்விதம் எத்தனை நாட்கள் நடத்த முடியும். ஆகவே சட்டபூர்வமாயேற்பட்டவயதில் பிரிட்டிஷ் ராஜாங்கத்திலேயே பிராயச்சித்தம் செய்துகொண்டு நடத்துவதுதான் சிலாக்யமென்று தோன்றுகிறது. அவ்விதம் பிராயச்சித்தம் செய்யலாமா? என்பதையும், அது என்ன? எப்படி என்பதையும் பண்டிதர்கள்தான் ஒற்றுமையுடன் ஒருவியவஸ்தை செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள் சட்ட நிர்பந்தத்தால் 14வயதில் விவாஹம் செய்ய நேர்ந்ததாலும், மேற்கொண்டு இத்தனை வயதிற்குள் விவாஹத்தை நடத்தி தீர வேண்டுமென்றும், அதை மீறினால் தவறு என்றும், நிச்சயப்படுத்தவேண்டியதும் தார்மிகர்கள் கடமையாகும்:

தவிர, சட்டத்தால் 14வயதில் விவாஹம் செய்ய நேர்ந்தபோது பெண்கள் அனேகமாக ருதுவாகிவிடுகிறார்கள். அக்காலத்தில் அப்பெண்களை ஒதுக்கிவைக்காமல் வீடு பூராவுக்கும் தீட்டுக் கலக்கும்படி பல கிருஹஸ்தர்கள் செய்து வருகிறார்கள். அதனால் அந்த கிருஹத்தில் நடக்கும், வைதிககர்மாக்கள் யாவும் கெட்டுவிடுகின்றன. ஆதலால் அப்படிப்பட்ட ஸந்தர்ப்பத்தில் அப்பெண்களை 3நாள் வெளியில் பஹிரங்கமாகப் பயப்படாமல் ஒதுங்கி இருக்கும்படி ஏற்பாடு செய்வதே மேலானது. அதனால் யாதொரு குறைவும் ஏற்படமாட்டாது. ஒளித்து வைப்பதால்தான் மஹா பாபம் ஸம்பவிக்கும் இதையும் தவிர, பூர்வகார்யங்களோ, அபரகார்யங்களோ, மந்திரலோபம், கிரியாலோபம், இன்றிக் கூடியமட்டும் சரிவர நடக்க ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கு உபாத்யாயர்களே ஜவாப்தாரிகள். அவர்களில் அர்த்தப்ரதானமாகவுள்ளவர்களை ஸமூக பஹிஷ்காரம் செய்து பாபபயமுள்ளவர்களாயும், தர்மக்ஞர்களாயும் சப்தக்ஞானமுள்ளவர்களாயு முள்ளவர்களை உபாத்யாயஸ்தானத்தில் வைத்துக்கொள்வதோடு, அவர்களை அனேக விதத்தில் உத்ஸாகப் படுத்தவும் வேண்டும். இவ்விஷயத்தை கிருஹஸ்தர்களுக்குப் பிரசுரப்படுத்தவேண்டியதும் வித்வான்களின் விசேஷப் பொறுப்பாகும். இதற்கு தர்மசாஸ்திராபிக்ஞர்களாகிய வித்வான்களின் பரிஷத் ஒன்று அவசியமென்று தோன்றுகிறது. அதில், நமது பூர்வீக தர்மங்களையும் ஆசார ஸம்பிரதாயங்களையும் பாதுகாப்பதற்கு வேண்டிய உபாயங்களை தீர்க்காலோசனைசெய்து நிர்ணயிக்கவேண்டியது வெகு முக்கியமாயிருக்கிறது. இல்லாவிட்டால் எதிர்காலத்தில் நமது ஆசாரங்கள் யாவும், அடியோடு அழிந்துவிடுவது நிச்சயம். இத்தகைய நெருக்கடியானநிலையில் வித்வான்கள் வேதாந்தம் பேசிக்கொண்டு தர்ம விஷயத்தில் உதாஸீனமாயிருத்தல் தகாது.

இதற்குமுன் மொகலாய சக்ரவர்த்திகள் அரசாக்ஷியில் தர்மத்திற்கு எவ்வளவோ ஆபத்துக்கள் நேர்ந்தன. அந்த ஸமயத்தில் பல ஆஸ்திகர்கள் தர்மத்தைக் காப்பாற்றிவரவில்லையா? இப்போதும் அதேமாதிரி ஏன் முயற்சி எடுத்துக்கொள்ளக்கூடாது. நமது ஆசாரங்களிலுள்ள ஊழல்களை நிவிருத்தி செய்துகொள்ள சீர்திருத்தம் அவசியமென்றே நான் கருதுகிறேன். இவ்வூழல்களைக் கவனியாமல் இருந்ததாலேயே, எதிரிகள் அவ்வித ஊழல்களை திருஷ்டாந்தமாகக்காட்டி அதர்ம வழியில் சீர்திருத்தம் செய்ய முற்பட்டுவிட்டார்கள். சீர்திருத்தமே தேவையில்லை என்று நினைப்பதும் தவறு. சாஸ்திரீயமான வழிகளில் அச்சீர்திருத்தம் அமைய வேண்டுமென்பதுதான் நமது நோக்கம்.

இவ்விஷயத்தை யெல்லாம் சிந்திப்பதற்கு, இவ்வருஷம் நடக்கப்போகிற அத்வைத ஸபையில் நடுவில்ஒருநாள் அவகாசம்கொடுப்பதாக ஷடிஸபாத்யக்ஷர்கள் தீர்மானித்திருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். அந்த ஸமயத்தில் விஜயம் செய்யும் வித்வான்கள் மேற்கண்ட விஷயங்களை ஸூக்ஷ்மதிருஷ்டியால் விமர்சித்து சாஸ்திர பூர்வமாயுள்ள ஸித்தாந்தங்களை தெளிவாக. நிர்ணயித்துப்பொதுஜன நன்மையைச்செய்யவேண்டியது முதற்கடமை. ஆகவே, அந்தஸமயத்தில் விஜயம் செய்யும் வித்வான்கள், நமது ஆசாரஸம்பிரதாயங்களிலும், தர்மங்களிலும், என்னென்ன ஊழல்களிருக்கின்றனவென்பதையும், அதற்குரிய பரிஹாரங்களையும், பிரமாணங்களையும், நன்கு பரிசீலனை செய்துகொண்டு, ஷடிஸபையில் தெளிவுபடுத்தவேண்டுமாறு வேண்டுகிறேன்.

ஒருபண்டிதர்.

சென்னை சட்டஸபைக்கூட்டம்.

ஜூலை 14உ

காங்கிரஸ் பதவி ஏற்க மறுத்த தன்காரணமாக இதுவரையில் கூட்டப்படாதிருந்த சென்னை சட்டஸபை, ராஜாங்கஸபை இவைகளின் முதல் கூட்டம். ஜூலை 14உ நடக்குமென்று சென்னை அரசாங்கத்தார் அறிவித்திருக்கிறார்கள். 14உ ராஜவிச்வாஸப் பிரமாணமும், மறுநாள் சட்டஸபைத் தலைவர்கள் எலெக்ஷனும் நடைபெறும்.

பம்பாய், பீஹார் முதலிய மற்றமாகாண ஸபைகளும் இந்தமாதத்திலேயே கூட்டப்படுமென்று தெரிகிறது.

திருக்கருகாவூர்.

பிரபல விவாஹம்.

சிறந்த தர்மிஷ்டரும், ஸநாதனத் தலைவருமான ஸ்ரீமான் டி. எல். ஸுப்பய்யர் அவர்கள் கிருஹத்தில் ஆனி-மீ 19உ வெள்ளிக்கிழமை விவாஹங்களும், உபநயனங்களும் நடைபெற்றன. ஸ்ரீமான் சுப்பய்யர் அவர்களுடைய குமாரனுக்கு உபநயனமும், குமாரத்திக்கு விவாஹமும் நடந்ததுடன் அவருடைய பௌத்திரனுக்கும் ஸஹோதரருடைய புத்திரனுக்கும் உபநயனம் நடந்தது. தர்ம உபநயனமும் ஒன்று ஸ்ரீமான் அய்யரவர்களால் செய்துவைக்கப்பட்டது.

இந்த சுபகாலத்தை முன்னிட்டு ஜில்லாவின் பலபாகங்களிலிருந்தும் ஸ்ரீமான் அய்யர் அவர்களுடைய பிரபல பந்துமித்ரர்களும் மற்றவர்களும் ஏராளமாக விஜயம் செய்திருந்தனர்.

அநேக ஆஹிதாக்னிகளும், சிரௌதிகளும் வேதவித்களும், பண்டித சிரேஷ்டர்களும், வந்திருந்தனர். திருவாதி சாஸ்திர ரத்னாகர விச்வநாத சாஸ்திரிகள், மஹாமஹோபாத்யாய கிருஷ்ணமாச்சாரியார், பிரஸங்கபானு வைத்யநாத சாஸ்திரிகள், அக்நிஹோத்ரம் தாதாசாரியர், ஜநதிச்வர சாஸ்திரிகள் முதலிய பல வித்வான்கள் வந்திருந்தனர். இக்கலியாணத்தில் வைதிக விஷயங்கள் நன்கு சிரத்தையுடன் நடத்தப்பட்டன. ஏராளமாக பிராம்மண போஜனமும் நடத்தப்பட்டது. வித்வத்ஸம்பாவனைகளும், பூரி தக்ஷிணையும், விசேஷமாகச் செய்யப்பட்டன.

கல்யாணதினத்தன்றே ஊர்வலமும், ஆசீர்வாதமும் நடத்தப்பட்டு சாஸ்திரவிதியை அநுசரித்து ஔபாஸனத்துடன்வருவார்கள் வரனுடைய கிரஹத்திற்கு அனுப்பப்பட்டனர். அங்கு மற்றநாள் வைதிக காரியங்கள் நடந்தனவென்று தெரிகிறது. சாஸ்திரீயமான இந்த வழக்கம் எங்கும் பரவினால் பெண்வீட்டுக்காரர்களுடைய சிரமம் குறைந்து விவாஹவிஷயமாகப் புதிய உத்ஸாகம் உண்டாகக்கூடுமென்று நினைக்கப்படுகிறது.

நமது நிருபர்.

215192
சென்னை-600 005.

ம[illegible]ர்சளியே

[illegible]பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்

SOVEREIGN-REMEDY
AMRUTANJAN
Best Indian Pain Balm
Amrutanjan Depot
BOMBAY, MADRAS

மதிப்புரை.

ஸ்ரீ சங்கர பகவத்பாதர்.

சிவாஷ்டபதி ராமாஷ்டபதி பிரசுரகர்த்தர் ஜகத்குரு ஸேவாதுரந்தர பிரும்மஸ்ரீ நா. சீனிவாச சாஸ்திரிகள் இயற்றிய ஸ்ரீ சங்கர திக் விஜய நாடகத்தை ஆதாரமாகக்கொண்டு தேவீதாஸன் ஸ்ரீமான் எஸ். ஸிந்தானராமன் இயற்றியது 80 பக்கங்கள் கொண்டது. விலை 0—8—0.

நம் நாட்டில் நவீன முறைகளில் அநேக புராண இதிஹாஸ நாடகங்கள் வெளியாகி நடிக்கப்பட்டுப், பேசும் படக்காக்ஷி மூலம் காட்டப்பட்டு அதன் மூலமாகத் தமிழ் மக்களனைவரும் கண்டு களித்து வருகின்றனர். ஸ்ரீ ஜகத்குரு சங்கர பகவத் பாதாசாரியாருடைய திவ்ய சரித்திரத்தை அனைவரும் வெகு எளிதில் தெரிந்துகொண்டு அன்னவர்பால் பக்தியும் அமையவேண்டி நாடக ரூபமாக நவீன முறையில் தயாரித்த தேவீ தாஸரின் முயற்சியை நாம் மிகவும் பாராட்டுகிறோம். இந்நூல் பல ஆண்டுகளாக தஞ்சை சாஸ்வதி மஹால் புத்தகசாலையிலுள்ள பல பாஷைகளிலுள்ள நூல்களை நன்கு அறிந்து ஆராய்ச்சி செய்து பிறகு வெளியிட்டிருப்பதால் இதை அறிவாளிகள் நன்கு ஆதரிப்பார்களென்பதில் ஐயமில்லை. ஸ்ரீ சங்கரதிக்விஜய நாடகமென்ற நூலை ஆதாரமாக்கொண்டும் பல பங்க்திகளைவிடாமல் தமிழ் நடையில் சுருக்கமாக 3-மணிநேரத்தில் நடிக்கும்படியாக இது அமைக்கப்பட்டிருக்கிறது இதில் நாடக பாத்திரங்கள் ஏராளமாக இருப்பதாகத் தோன்றிய போதிலும் நமது சொந்த அனுபவத்தை ஒட்டி ஒருவருக்கே பல வேடங்களைக் கொடுக்கும்படி ஓர் குறிப்பு தயார் செய்திருப்பது அவச்யம் விருப்பத்தக்கதே. வசன நடையில் இது இருப்பினும் சில முக்ய சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு ச்லோகங்கள் தகுந்த வர்ணமெட்டுக்களுடனும், முக்ய விஷயங்களை விடாமலும் எடுத்து எழுதப்பட்டிருக்கிறது. இச்சிறந்த கைங்கர்யத்திலீடுபட்ட ஸ்ரீசாஸ்திரிகள் அவர்களின் முயற்சியை விருத்தி செய்ய எல்லோரும் இச்சிறு நூலை ஆதரிக்கவேண்டியதவச்யமாகும். ஆஸ்திகர்கள் இந்நூலை ஆதரிப்பதின் மூலம் இந்நூலாசிரியர் இயற்றிய (1) ஸ்ரீ பகவந்நாம போதேந்திர விஜயம், (2) ஸ்ரீ கோவிந்த பகவத்பாதர் விஜயம் முதலிய இனிய தமிழ்நாடகங்களையும் சீக்ரம் வெளியிடும்படி உதவி செய்யவும் கோருகிறோம். இந்நூலிற்கு அனந்தப்பூர் கல்லூரி மாஜி ஆசிரியர் ஸ்ரீமான் என். கே வெங்கிடேச பந்துலுகாரு எம். ஏ எல். டி. அவர்கள் ஆங்கிலத்தில் சிறந்த முகவுரை எழுதியிருப்பது இந்நூலின் மேன்மையை நன்கு விளக்கப் போதுமானது. ஷை புத்தகங்களை ஆசிரியரிடமும் (கூத்தாநல்லூர் போர்டு மிடில் ஸ்கூல் ஆசிரியர் ஸ்ரீனிவாசசாஸ்திரிகள்) மன்னார்குடி பாரதீ அச்சுக்கூடத்திலும், கும்பகோணம் ஆர்யதர்மம் ஆபீஸிலும் வேண்டியவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

கே. ஆர். வைத்தியனாத சாஸ்திரிகள்,
மேலக்காவேரி.

ஒரு விஞ்ஞாபனம்.

சென்ற வார "ஆர்யதர்மம்" பத்திரிகையில், மகா-ா-ஸ்ரீ N. ஸுப்பிரமணிய அய்யர் அவர்கள், காங்கிரஸ் ஸநாதனக்கக்ஷி ஒன்று ஏற்படுத்தவேண்டுமென்று அறிவித்துள்ளார். ராஜீய விஷயத்தில், நாம் காங்கிரஸிலிருந்து வேறுபட்டவர்களல்ல மதவிஷயத்திலும் ஸநாதனிகளின் கொள்கைதான் கராச்சி தீர்மானத்தில் தெளிவாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும், தற்கால காங்கிரஸ் தலைவர்களென்று சொல்லுவார்கள் அத்தீர்மானத்திற்கு விருத்தமாய் பேசுவதுடன் நடந்தும் வருகிறார்கள், நாம் ஏராளமாய் காங்கிரஸில்சேர்ந்து ராஜியத்தில் காங்கிரஸிலிருந்து வேறுபட்டவர்களல்லவென்பதை, வெளிதேசத்தவர்களுக்கும் தேசிய விரோதிகளுக்கும் காட்ட வேண்டியது அவசியமே. தற்கால காங்கிரஸ் வாதிகள் மதவிஷயத்தில் செய்து வரும் விபரீதங்களை காங்கிரஸிலிருந்துகொண்டே, கண்டிப்பதுடன் நாமே உண்மையான காங்கிரஸ் வாதிகளென்பதை தேசத்திற்கு, நிரூபித்து விடவேண்டியது அவசியம், ஆனால் நாம் காங்கிரஸில் சேர்ந்து நமது கொள்கைகளை வற்புறுத்த விதி இடங்கொடுக்கும்.

வர்ணாசிரம ஸ்வராஜ்ய ஸங்க கார்யதரிசிக்கும் காங்கிரஸ் பிரிஸிடெண்ட்,C ராஜகோபாலாச்சாரியார் அவர்களுக்கும் கடிதப்போக்குவரத்தும் கவனிக்கத்தக்கது. நமது கொள்கைகளை தேசத்தில் தீவிர பிரசார மூலம், நாம் தேசியத்திற்கு விரோதிகளல்லவென்பதையும் தர்மத்தோடு கூடிய ஸ்வராஜ்யம்பெற முயற்சிப்பவர்களென்பதையும் தெரியப்படுத்தவேண்டும். வர்ணாசிரம ஸங்கத்தார் காகிதமூலமான பிரசாரம்தவிர நமது மாகாணத்தில் எவ்விதமான பிரசாரமும் நடந்ததாக தெரியவில்லை எனவே நாம் ஸநாதனதர்மக்கொள்கைகளுக்கு விரோதமில்லாமல் காங்கிரஸில் சேர்ந்து பிரசாரம் செய்வதை நான் மனப்பூர்வமாய் ஆதரிக்கிறேன். இதுவிஷயத்தை தகுந்தபடியோசிக்க ஸுப்பிரமணிய அய்யர் அவர்களையும் இதர தலைவர்களையும் வணக்கமாய் பிரார்த்திக்கிறேன்.

பி.என். நாராயண சாஸ்திரி.

தர்மசாஸ்திர ஸந்தேஹம்.

வித்வான்கள் இந்த சந்தேஹத்தை ஆர்யதர்ம மூலமாய் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். இந்த ஆர்யதர்ம பத்திரிகை ஸநாதனிகளுக்கு ரொம்ப முக்யமாக இருக்கிறது. சில வைதீகர்கள் தர்மசாஸ்திரம் ஸம்ஸயம் போட்டுவருவதால் அதற்காக சிலர் இந்த பத்திரிகை வரவழைக்கிறார்கள். ஒருவர் ஒரு சந்தேகத்தை கேட்டு பத்திரிகைமூலமாய் பிரசுரமானால் அதை தெரிந்துகொண்டு சந்தேஹம் நிவர்த்தியாய்விடுகிறது. நான் மேலே கேட்கிற சந்தேகமானது பிரக்ருதத்தில் நடத்தவேண்டியிருப்பதால் ஷை தர்மசாஸ்திர வித்வான்கள் சிரமத்தை பார்க்காமல் எழுதியனுப்பவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சந்தேகமாவது:—அண்ணன் தம்பி இரண்டுபேர். தம்பி ஸ்வீகாரம். தம்பியினுடைய ஜனகபிதா காலமாய்விட்டார். தமயன் பிதாவுக்குக் கிருத்யம் செய்துவிட்டான். கொஞ்சகாலம் கழித்து அவனுடையகாலம் ஆய்விட்டது. ஸ்வீகாரபையனுக்கு ஜனகமாதா இருக்கிறாள். ஜனகபிதாவுக்கு சிராத்தம் வருகிறது. ஸ்வீகாரபையன் 'ஜனகபிதா' என்று பண்ணவேணுமா? அல்லது ஜனகமாதாவே 'பர்த்தா' என்று பண்ணவேணுமா? இதை வசனபுரஸ்ஸரமாய்த் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு சந்தேகம்:—ஒருவன் பிறந்த கோத்ரம் பாரத்வாஜகோத்ரம். ஸ்வீகாரம் போனது ஹரிதகோத்ரம். அவனுடைய விவாஹத்திற்கு இரண்டு கோத்ரமும் வர்ஜிக்க வேண்டியதவசியமா? அவருடைய பிள்ளை விவாஹத்திற்கு பாரத்வாஜகோத்ரம் சம்பந்தம் செய்யலாமா?

இந்த இரண்டு கேழ்வைக்கும் விவரமாய்ப் பதில் எழுதும்படி வித்வான்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ரெங்கனாத ச்ரௌதிகள்,
ரெங்கனாதபுரம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

அழைத்தால் நாமும் போவோம். நாம் நடத்த உத்தேசிக்கும் பண்டிதசபைக்கும் அவர்களை அழைப்போம். நமது சாஸ்திரங்கள் தர்மங்களை நிர்ணயித்துவிட்டன. அவை ஆசாரத்திலுமிருந்துவருகின்றன. இவைகளில் நமக்கு எவ்வித சந்தேஹமும் இல்லை. பரிஷத் விதியானது பிராயச்சித்தங்களுக்குக்காகவே சொல்லப்பட்டிருக்கிறது. தர்மங்களை மாற்ற முடியாது ஒருவருக்கும் அதிகாரம் இல்லை. தர்மங்களில் மாறுதல் ஏற்பட்டுவாவில்லையா என்று சீர்திருத்தக்காரர்கள் கக்ஷி சொல்லுகிறார்கள். சாஸ்திர விதிகளுக்குட்பட்ட மாறுதலே ஏற்பட்டிருக்கலாம். அதர்மத்தை தர்மமாகவும், தர்மத்தை அதர்மமாகவும், மாற்றி மாறுதல் ஏற்பட்டிருப்பதாக சீர்திருத்தவாதிகள் ஒரு உதாஹரணமாவது கூற முடியுமா? ஒருநாளுமில்லை.

ராஜா காலத்திற்குக் காரணமென்று சொல்லிக்கொண்டு தர்மத்தை அதர்மமாக மாற்றலாம் என்கிறார்கள். அந்த சுலோகத்திற்கு அது அர்த்தமேயல்ல. ராஜா தனது ஆக்ஷி மூலம், நல்ல காலத்திற்கும், கெட்ட காலத்திற்கும் காரணமாகிறான் என்பதே அதன் பொருள். அரசனுக்கும் தர்மத்தை மாற்ற அதிகாரம் இல்லை.

காங்கிரஸ்.

காங்கிரஸ் நமக்கு விரோதியல்ல. நாமும் அதை விரோதிக்கவில்லை. மஹம்மதியர், கிறிஸ்தவர் போன்றவர்களின் மத உரிமையில் அது நடுநிலைமை வகிப்பது போல் நமது மதத்திலும் நடுநிலைமை வஹிக்க வேண்டும் என்றே நாமும் கோருகிறோம், மற்றபடி காங்கிரஸுடன் நாம் சேர்ந்து வேலை செய்ய விருப்பமுடையவர்களே."

இவ்வாறு ஸ்ரீமான் சாஸ்திரியார் பேசி முடிந்த பிறகு சில கேள்விகளுக்குப் பதில் கூறுகையில் கொச்சியில் இருகக்ஷியாரும் இருப்பதாயும், ஆலயப்ரவேசக் கிளர்ச்சியும் நடக்கிறதென்றும், எதிர்ப்பவர்களும் பலமாக வேலை செய்வதாயும் குறிப்பிட்டார்.

காங்கிரஸ்காரர் மந்திரிபதவி ஏற்று ஆலயப்ப்ரவேசாதி ஸமூஹ மதச் சீர்திருத்தச் சட்டங்களை இயற்றினால் ஸநாதனிகள் அவைகளை எதிர்க்க வேண்டுமென்றும், எதிர்த்தும் பலிக்காமல் போனால் மஹம்மதியர் முதலியவர்களுடைய ஆக்ஷியில் நடந்துகொண்டது போல் தார்மிகர்கள் நல்லகாலத்தை எதிர்பார்த்து தைர்யத்துடன் ஸஹித்துக்கொண்டிருக்க வேண்டும் என்றார், கனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் பண்டிதர்களை அலக்ஷ்யமாகப் பேசியது தமக்கும் வருத்தமாயிருப்பதாயும், அது நமது பண்டிதர்களால் கண்டிக்கப்பட வேண்டியது அவச்யமென்றே தாம் நினைப்பதாயும் ஸ்ரீ சாஸ்திரியார் கூறினார்.

தலைவர் மஹாமஹோபாத்ய ஸ்ரீகிருஷ்ணமாசாரியார் முடிவுரை கூறுகையில் பிரம்மஸ்ரீ சாஸ்திரியாரின் முயற்சிகளுக்கு நன்றி தெரிவித்துவிட்டு, கொச்சியில் மஹாராஜா ஆலயப்பிரவேசத்திற்கு எதிராக இருந்தும் அங்குசீர்திருத்தக்காரர்கள் மஹாராஜாவை எதிர்த்துக்கிளர்ச்சி செய்வதாயும் அதைமஹாராஜா தடுக்காமல் இடம்கொடுத்திருக்கையில் திருவாங்கூரில் மட்டும் விபரீதம் நடப்பதாயும், அங்கு தார்மிகர்கள் ஆலயப்பிரவேசத்தை எதிர்த்து பேசமுடியாமல் அடக்குமுறை பயமிருக்கிறதாயும், அவ்வளவு பெரியதேசத்தில் ஆலயப்பிரவேசத்தை எதிர்ப்பவர்கள் சிலராவதுஇருக்கக்கூடுமென்றும், அவர்களுடைய அபிப்ராயமே வெளிவராமல் அடக்கப்பட்டிருக்கிறதென்றும் குறிப்பிட்டு பிரிட்டிஷ் மலபாரில் படித்தவர்களாயும், பணக்காரர்களாயும், பல நம்பூரிகளும், பிராம்மணர்களல்லாத ஜமீன்களும் இருப்பதாயும் அவர்களுடைய அபிப்ராயம் முக்யமென்றும், அவர்கள் ஆலயப்பிரவேசத்தை எதிர்ப்பவர்களென்றும், ராஜ நிர்பந்தமில்லாமல் ஸ்வதந்திரமாக இவர்கள் அபிப்ராயம்கூறக்கூடியவர்களென்றும்சொன்னார்

பிராம்மணசபை காரியதரிசிஸ்ரீமான் ஸ்வாமிநாத சாஸ்திரிகளால் உபன்யாஸகருக்கும் மற்றவர்களுக்கும் உபசார வார்த்தைகள் கூறப்பட்டு இரவு 8-மணிக்கு சபை பூர்த்தி ஆயிற்று.

நமது நிருபர்.

வாரக் குறிப்புகள்.

(வே. ஸோ. சர்மா.)

காலித்தனத்திற்கு யார் குரு? பூனாவில் சவர்கருக்கு வரவேற்பு நடந்தது. அதை வெறுக்கும் சிலர் கறுப்புக்கொடி கல் மண் எறிதல் முதலிய சின்னங்களைக் காட்டினர். இப்போது எங்கு எது நடந்தாலும் நிருபர்கள் ஸநாதனிகள் மீது பழிசுமத்த அஞ்சுவதில்லை. பூனா ஸம்பவம் உண்மையானால்கூட தேசிய வாதிகள் கற்றுக்கொடுத்தபாடமே அது!!

இதைக் கற்கலாகா? பசு தர்மத்திற்கு நம்மவர் மேனாட்டவரை உதாஹரிப்பர். நங்க பர்வதத்தின் சிகரத்தைக் காண அவர்கள் பகீரத ப்ரயத்நம் செய்கின்றனர்! நான்காவது முறையாக சென்றவாரம் சிலர் முயற்சித்து உயிரைத் துறந்தனர். இதுபோன்ற கார்யங்களில் ஏன் முன்வருவதில்லை?

நமக்குப் பாடமில்லையா? பிரிட்டனில் விவாஹரத்து மசோதாவைப்பற்றி பார்லிமெண்டில் நடக்கும் வாதம் நமக்கும் பல பாடங்களைக்கற்பிக்கின்றன. பிஷப்பு, விவாஹரத்துக்கு பைபிள் இடமளிக்கவில்லை என்கிறார் ஹோடல் பில்கள், விவாஹரத்துக்காக இதர பெண்களுடன் சேர்ந்ததாக பொய்யாக வாங்கவேண்டியிருக்கிறதென்கிறார் மற்றொருவர். ஹோடல்களது அழகு தெரியவில்லையா? நமது மேதாவிகளோ விவாஹரத்து சட்டம் வேண்டுகிறார்.

ஸோல்ஜர்களின் முறட்டுத்தனம்!! போலீஸாரிடம் சிறிது முறட்டுத்தனம் வேண்டுமாயினும், இடம் பொருளறியாது தயவுதாக்ஷிண்யமின்றி நடப்பதே கடமைஎன சென்னை வீரர்களில் சிலர் கருதுகின்றனர். ஏழைக் கடைக்காரர்களையும் கூட்டத்தையும் இவர்கள் படுத்தும்பாடு செப்பத்தரமன்று, திருவல்லிக்கேணி ரதமிழுக்கும் போது நடந்ததற்கு காங்க்ரஸ் வீரர் எப்படி பரிஹாரம் தேடுவர் பார்ப்போம்!

மதபோதனை அவச்யமே!! சென்னை நகரபரிபாலனஸபை விவாதத்தில் மஹம்மதியர் மதபாடத்தை அரசாங்கம் அங்கீகரித்து ஹிந்து மதபாடத்தைத் தனிப்பாடமாக கருதவில்லை என வெளியாயிற்று. ஒருவர் கீதைபோதி என்றார், இங்கு போதிக்கும் மதத்திலே நமக்கு நம்பிக்கை இல்லை எனினும் நமது மதத்தையே மறந்து நிந்தித்திருக்க இது ஓர் வழியென இதை ஆமோதிப்போம்!

விபரீத வக்கீல்:— பாரிஸால் என்கிற இடத்தே ஓர் பெண் தன் கணவன்பதிதனாய் விட்டதால் ஹிந்து சாஸ்திரப்படி தனக்கு மறுமணத்திற்கு உத்திரவளிக்க வேண்டும் என்று வழக்குத் தொடர்ந்தாள். அவள் வகீல் ஹிந்துமதத்திற்கே ஆபத்தான இதில் அவகாசம் அளிக்கும்படி இதர வக்கீல்கள் கேட்க, அவர்களுக்கு அதிகாரமே இல்லை என்றும் உடனே தனக்கனுகூலமாக தீர்ப்பு அளிக்கும்படியும் கோருகிறார் இவர் எந்த முறையில் இப்படி வாதித்தாலும் தவறே!

பேசக் கற்கவில்லையா:— அறிஞர் ராதாகிருஷ்ணன் சிறிது ஈசனருளால் வேதாந்த உலகில் புகழ்பெற்றவர். ஒரே விஷயம். கூறப்படும் முறையில் விபரீதமாக மாறுகின்றது என உணர்ந்து அவர் பேசவில்லை. மத விஷயங்களில் பாஹ்யாசாரம் உடல், ஆந்தராசாரம் உயிர் என்ற விஷயத்தை வெளி ஆசாரமும் வைதிகமுமே நம் மதத்தை மழுங்கும்படி செய்துவிட்டதென்கிறார். பாஹ்யாசாரம் கூடாதென்ற கலிஸித்தாந்தத்தைத் தழுவி இப்படி பேசியிருந்தால் அதைக் கண்டிக்க வேண்டும்.

இத்தகையோரால் வருந்தீமை — ஆசார ஸமுதாய கட்டுகளைக் கேலிசெய்து தூஷிப்பதால் கட்டுக்கடங்காத காளைகள் காமவெறியால் தங்களையும் தம் ஸமூஹத்தையும் அழிக்கின்றனர். சென்றவாரம் ஓர் உயர் குலத்தவரும் தாழ்ந்த குலத்தவனும் காமவெறியால் கட்டுண்டு நர்மதையில் வீழ்ந்திறந்தார்: அவர்களது தொல்லைக்கே வருந்துகிறோம்,

ஸந்தேஹம்.

பரதாழ்வார் சக்ராவதாரம் என்பதற்கு சாஸ்திரப்ரமாணம் எங்குளதென பத்திரிகையில் தெரிவிக்கும்படி அறிஞர்களை வேண்டுகிறேன்:

ஸந்தேஹீ

காந்திஜி மீது அபேத வாதிகளின் அதிருப்தி.

எல்லூரில் நடந்த ஆந்திர மாகாண மகாநாட்டில் ஸ்ரீமான் காந்தி மீது தங்களுக்கு பூர்ண நம்பிக்கையிருப்பதாக ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது இதைப்பற்றி விசேஷ விவாதம் நடைபெற்றது. அபேதவாதிகள் இந்த தீர்மானத்தைப்பலமாக எதிர்த்தார்கள். உறுதிமொழி கேட்ட விஷயத்திலும் வேறுபல விஷயங்களிலும் காந்திஜி தவறாக நடந்து காங்கிரஸின் கௌரவத்தைக்கெடுத்து விட்டதாக் அவர்கள் கூறினார்கள். ஸ்ரீமான் புலுசு ஸாம்பமூர்த்தி முதலியவர்களும் இதில் பங்கு எடுத்துக் கொண்டார்கள். ஸ்ரீமான் பிரகாசம் ரொம்பவும் ஸமாதானம் சொல்ல வேண்டியதாயிற்று.

புனர் விவாக வழக்கு.

கணவன் பதிதனாகியது காரணம்.

பாரிஸாலில் ஸ்ரீமதி ஜோதிதாஸ், பி.ஏ. என்ற ஹிந்துஸ்திரி, தனது பர்த்தாவான தேவவிரத தாஸ் என்பவர் இங்கிலாந்தில் வெகு காலமாக வஸித்து வருவதுடன் அங்கு ஒரு கிறிஸ்தவஸ்திரீயை விவாகம்செய்துகொண்டு ஹிந்து சாஸ்திரப்படி பதிதனாகி விட்டதாயும் ஆதலால் தாம் புனர்விவாஹம் செய்து கொள்ள சட்டப்படி உரிமை கொடுக்கவேண்டுமென்றும் ஒரு கேஸ் போட்டிருக்கிறாள். மனுதார் வக்கீல், கணவன் பதிதனாகி விட்டால் புனர்விவாஹம் செய்து கொள்ள ஹிந்து சாஸ்திரம் இடம் கொடுப்பதாக வாதித்தார்

எதிர்தரப்பில் ஒருவரும் ஆஜரில்லாததால், அந்த கோர்ட்வக்கீல்கள் 25பேர்சேர்ந்து ஜட்ஜியிடம் இந்த வியவஹாரம், ஹிந்து சட்டத்திலும், மதத்திலும் பெரிய புரட்சியை உண்டு பண்ணுகிறதென்றும் இதனால் பெரிய அனர்த்தம் ஸமூஹத்தில் ஏற்படுமென்றும் தெரிவித்துக்கொண்டார்கள். ஜட்ஜ இன்னும் தீர்ப்பு சொல்லவில்லை;

ஹிமாலயம் உச்சியில் ஏற முயற்சி.

அனைவரும் மாண்டனர்.

ஹிமாலய பர்வதத்தின் உச்சியைக்கண்டுபிடிக்க ஜர்மன்காரர்கள் சில வர்ஷங்களாக முயற்சிக்கின்றனர். ஏற்கனவே ஒரு கோஷ்டியார் இந்த வேலையில் இறங்கி மாண்டு விட்டனர். இப்போது மற்றொரு ஜர்மானியக்கூட்டத்தார் மலைமீது ஏறுகையில பனிக்கட்டிச் சரிவால் மாண்டு போய் விட்டார்கள்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்ய தர்மம்.

ஈச்வர-௵ ஆனி-௴ 18௳

ஸ்வபாவத்திற்கேற்ற விபரீதப் பேச்சு!

காங்கிரஸ்ஸானது ஹிந்துமத விஷயத்தில் புகுவதை, முக்யமாகத் தீண்டாமைவிலக்குப் பிரசாரத்தை, விட்டுவிட முடியாதென்று ஸ்ரீமான் ராஜகோபாலசாரியர் அழுத்தமாகச்சொல்லியதைச் சென்றவாரம் குறிப்பிட்டோம். காராச்சித் தீர்மான பலத்தைக்கொண்டு ஸநாதநிகள் வெளிக்கிளம்பிவிட்டால் என்னசெய்வதென்ற அச்சம் காங்கிரஸ் தலைவர்களின் மனதில் தோன்ற ஆரம்பித்துவிட்டதாகத் தெரிகிறது. இதனால் தூண்டப்பட்டு ஸ்ரீமான் நேரு, காராச்சித் தீர்மானத்திற்குப் புதிய கருத்துக் கற்பித்தும், ஸநாதநிகளை தலைதூக்கவிடமாட்டோமென்று பயமுறுத்தியும் ஸ்ரீமான் T. S. ராமஸாமி அய்யருக்கு எழுதிய கடிதமூலம் தெரிவித்திருக்கிறார். நேருஜியின் இந்தக் கடிதத்தைப் படிக்கும் நிஷ்பக்ஷபாதியான விவேகியெவனுக்கும் நேருவின் புரட்சி ஸ்வாபாவத்திற்கு ஏற்றபடியே அவருடைய விபரீதப் பேச்சுக்களுமிருப்பது வெகு தெளிவாகப் புலப்படக்கூடியது.

காராச்சித் தீர்மானத்தில் மத நடுநிலைமை வஹிப்பதாகக் கூறியிருப்பது உண்மையென்றும், ஆனால் மதத்தின் பெயரால் மனித ஸ்வபாவத்திற்கு ஏற்காத அகார்யங்களைச் செய்யவோ, பிற மனிதர்களுடைய பொது உரிமைகளைப் பறிக்கவோ தாம் இடம் கொடுக்க முடியாதென்றும், காராச்சித் தீர்மானமிருப்பதைக்கொண்டு தீண்டாதாரை அமிழ்த்திவிடலாமென்று நினைப்பதற்குக் காங்கிரஸ்வாதிகள் ஒரு க்ஷணம்கூட உட்படமுடியாதென்றும், இத்தகைய ஸநாதநிகளை காங்கிரஸ் எதிர்த்துத்தீருமென்றும், ஸநாதநிகள் வேண்டுமானால் ஹிமாலய மலைசென்று தங்கள் கக்ஷியையும் கார்யத்தையும் நடத்திக்கொண்டிருக்கலாமேயன்றி தேசத்தில் அவர்களுடைய வேலை பலிக்காதென்றும் வெகு கர்வமான போக்கில் நேருஜி பேசியிருக்கிறார். தீண்டாதார் நமது தேவாலயங்களில் பிரவேசிப்பது அவர்களுடைய உரிமைகளில் ஒன்றாம். ஆகலால் ஸநாதநிகள் இந்த உரிமையை மறுக்க முடியாதென்ற தோரணையில் இவர் பேசுகிறார்.

உரிமையைப்பற்றி இவர் பேசுகையில் தீண்டாதாரைமட்டும் நினைத்துக்கொண்டாரேயன்றி ஜாதி ஹிந்துக்களின் உரிமையை நினைத்தவராகத் தெரியவில்லை. தீண்டாதாருக்கு ஆலயப்பிரவேச உரிமையுண்டென்று சொல்ல ஆதாரமென்ன? தார்மிகர்கள், அந்த தேவாலயங்களில் நீண்டகாலமாகவும், சாஸ்திர ரீதியாகவும் தங்களுக்குள்ள உரிமையை வற்புறுத்தி நேருஜியை ஏன் எதிர்க்கக்கூடாது? ஒரு கூட்டத்தார் தங்களுக்குச் சொந்தமாக அநுபவித்துவரும் தேவாலயங்களில் அநார்ஹர்கள் பிரவேசிக்கக்கூடாதென்று சொல்ல உரிமை பெற்றிருக்கவில்லையா? ஒருவருடைய நீண்டகால உரிமையைப்பறித்துப் புதிதாக வேறு ஒருவருக்கு உரிமை கொடுப்பது என்ன நீதியில் சேர்ந்தது? நேருஜி போன்ற தர்மாத்மாக்கள், எல்லாருடைய உரிமைகளையும் காப்பாற்ற வேண்டாமா?

உலகத்தில் தனிப்பட்ட மனிதர்களுக்கு ஸொத்து, பணம், வஸ்திரம், ஆபரணம் முதலியவை ஸொந்தமாக இருக்கின்றன. ஒருவனுக்கு யஜமானத்வமிருப்பதைக்கொண்டு மற்றவர்களுக்கு அவைகளில் பாத்யம் கிடையாதென்று நினைக்கப்படுகிறது. ஒரு தனி மனிதனுக்கு ஒன்று ஸ்வத்வத்தை அடைவதுபோல் ஒரு கூட்டத்தாருக்கும், ஒரு ஸமூகத்தாருக்கும் சேர்ந்து ஸொத்தாக அமைந்திருப்பவைகளுமுண்டு. அந்த ஸமுதாய ஸொத்தில் அந்த ஸமுதாயத்தாருடைய உரிமையே காக்கப்பட வேண்டுமென்பது உலக தர்மமாகும். காங்கிரஸ்ஸையே இதற்கு உதாஹரணமாகக் கூறுவோம். பொது ஜனங்களுடைய பண உதவியைக்கொண்டு பல ஊர்களில் காங்கிரஸ் விடுதிகள் கட்டப்பட்டிருக்கின்றன. இவை "காங்கிரஸ்காரர்" என்ற ஒரு ஸமுதாயத்தினரின் ஸொத்தாகவே கருதப்படுகிறது. ஹிந்து ஸபையோ, முஸ்லீம் லீக்கோ, ஜஸ்டிஸ் கக்ஷியோ இந்த காங்கிரஸ் விடுதிகளுக்கு பாத்யஸ்தர்களல்லவென்றும், அவர்களுக்கு அதில் யாதொரு உரிமையும் கிடையாதென்றும் நிச்சயமாக நம்புகிறார்கள். அலஹாபாத் ஆனந்த பவனத்தில் ஆங்கிலோ இந்தியரோ ஹிந்து ஸபையாரோ, முஸ்லீம் லீக்கினரோ, பிரவேசித்துத் தங்களிஷ்டப்படி உரிமைகொண்டாட நேருஜி ஸம்மதிப்பாரா?

ஒரு குறிப்பிட்ட கொள்கையுள்ளவர்கள் சேர்ந்து தங்கள் கார்ய ஸௌகர்யத்திற்காக ஏற்படுத்தும் ஸ்தாபனங்களில் அதற்கு மாறான கொள்கையுள்ளவர்கள் உரிமைகொண்டாட என்ன நியாயமிருக்கிறது? காங்கிரஸ் நிர்வாஹத்தில் எவ்வளவு வரையறைகளும், நியமங்களும் ஸங்கேதங்களுமிருக்கின்றனவென்பதை நேருஜி நினைத்துப் பார்த்தாரா? இந்த ஸாமான்ய நியாயத்தைக்கூட நேருஜி அறியாமல் தீண்டாதாருக்கு உரிமைஸ்தாபனம் செய்துவைக்க முற்பட்டிருப்பது விசித்ரமாயிருக்கிறது. பிரமாணங்களுக்கும், நீதிக்கும், வியவஸ்தைகளுக்கும் கட்டுப்படாத புரட்சி நோக்கம் படைத்தவருக்கு நியாய புத்தி ஏற்பட என்ன அவகாசமிருக்கிறது? புரட்சியையும், கலஹத்தையும், ரக்தக்களரியையும் அடிப்படையான கொள்கையாகக்கொண்ட, லெனின், ஸ்டாலின், ட்ராட்ஸ்கி முதலியவர்களைத் தமது ஆசார்யர்களாக அடிக்கடி கூறிக்கொள்ளும் நேருஜிக்கு நியாயமான எண்ணம் உண்டாகாமலிருப்பது அதிசயமல்லவே? இந்தியாவில் அவர் உண்டுபண்ண நினைக்கும் பயங்கர நிலைமைக்கு இத்தகைய கொள்கை ஒரு சின்னமென்பதில் என்ன ஸந்தேஹம்?

ஸநாதநிகளை ஹிமாலயத்திற்கு விரட்டிவிடுவதாகப் பயமுறுத்துகிறார். தார்மிகர்கள் ஹிமாலயம் போவார்களா, அல்லது நேருஜி ருஷ்யாபோக நேருமா என்பதை யார் சொல்லமுடியும்? ஹிமாலயம் தெய்வசக்திவாய்ந்த தர்ம ஸ்வரூபமான புனிதஸ்தானம். நம் முன்னோர்கள் அந்த புண்ணிய ஸ்தலத்திலிருந்துகொண்டுதான் மனித ஸமூஹத்திற்கு சகல நன்மைகளையும் கொடுக்கக்கூடிய அரிய பல தத்வங்களை வெளியிட்டு உலகத்தின் க்ஷேமத்தை உண்டாக்கினார்கள். அவர்களுடைய நிஷ்பக்ஷபாதமும், ராகத்வேஷமற்றதுமான உபதேச அநுஷ்டானத்தினாலேயே இன்றுகூட இந்தியா உலகத்தில் ஓர் உன்னத நிலைமையில் விளங்கி வருகிறது. ஹிமாலயத்திலிருந்து நம் பெரியோர் வெளியிட்ட தர்மங்களில் சிந்திப்போன சில திவலைகளை வைத்துக்கொண்டே எல்லா தேசங்களும் இன்று ராஜ்யத்திலும், விஞ்ஞான சாஸ்திரத்திலும், மற்றதிலும் மேன்மையுற்றிருக்கின்றனவென்பதை நேருஜி அறிவாரோ? ஆதலால் ஹிமாலயம் போவதினால் தேச க்ஷேமமே கிடைக்கும். ஆனால் இவர் ருஷ்யாவிலிருந்து இந்தியாவுக்கு என்ன கொண்டுவந்தார்? ருஷ்யாவைப்பார்த்து இன்று உலகம் அடைந்த நன்மை என்ன? கலஹமும் புரட்சியும் அவ்யவஸ்தையும், பயங்கரநிலைமையும்தானே? இவைகளே தமது உத்தேசமென்று நேருஜி நினைத்தால் அவர் ருஷ்யாவிற்கு போவதே நல்லது. தர்ம தேசமாகிய பாரத வர்ஷத்தில் இவருடைய மனோரதம் பலிக்காது. இன்னும் சில வருஷங்களில் இந்த அநுபவம் இவருக்கு ஏற்படுவது நிச்சயமே.

குறிப்புகள்.

மஹம்மதியர்களின் ஸ்வாபிமானம்.

இந்தியாவில் மஹம்மதியர்கள் தங்கள் மத ஸமூஹரக்ஷணம் மூலமாகத் தம் இனத்தைக் காப்பதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்து வருகிறார்களென்பதற்கு அடிக்கடி பல உதாரணங்களைக் காட்டிவருகிறோம். இப்போது மற்றொரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறோம். இந்த விஷயத்தை நமது ராஜீய வாதிகளோ மற்றவர்களோ கவனித்திருக்க மாட்டார்கள். இந்திய சட்டஸபையில் ஸர். மஹம்மத்யாகூப் என்பவர், மஹம்மதியர்களில் வாரிசு இல்லாதவர்கள் சொத்துவிஷயமாக ஒரு மசோதா கொண்டுவந்திருக்கிறார். அதாவது இப்போதுள்ள சட்டப்படி வார்சு அற்றவர்களின் ஸொத்துக்கு பிரிடிஷ் அரசாங்கம் பாத்யப்பட்டதாயிருக்கிறது. இந்த பாத்யத்தை நீக்கி, வார்ஸு அற்ற மஹம்மதியர்களின் ஸொத்தானது மஹம்மதிய ஸமூஹத்தின் நன்மைக்காக மஹம்மதிய டிரஸ்டிகள் வசம் ஒப்பிவிக்கப்படவேண்டுமென்று மேற்படி மசோதா வற்புறுத்துகிறது. மஹம்மதியர்களில், ஏழைகள், குருடர், அங்கஹீனர் முதலியவர்களுடைய ஸம்ரக்ஷணத்திற்கு அந்த சொத்து உபயோகப்படும்படி மஹம்மதியர் வசமே கொடுக்கப்படவேண்டுமாம்.

இந்த மசோதாவைப்பற்றி கவர்ன்மெண்டார் அபிப்பிராயம்தெரிவிக்கும்படி எல்லா மாகாண மஹம்மதிய ஸ்தாபனங்களையும் கேட்டிருக்கிறார்கள். சென்னை மஹம்மதியர்கள் இந்த மசோதாவை வரவேற்று, இது மஹம்மதிய மதக்கோட்பாட்டுக்கு மிகவும் பொருத்தமாயிருப்பதாயும், குரானின் விதியும் இப்படியே இருப்பதாயும் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள்.

மஹம்மதியர்களுடைய தாய விபாகமுறையானது எல்லோருக்கும் நலம் உண்டாகும்படியாக விரிவான போக்கு உள்ளதாயிருப்பதாயும், அதை யநுஸரித்து வார்ஸு அற்றவர்களின் ஸொத்தும் மஹம்மதிய ஏழைகளுக்கு உபயோகப்படுவதே நியாயமென்றும், குரானும் இதை ஸ்பஷ்டமாக விதித்திருப்பதாயும் மஹம்மதியர்களுக்கே மஹம்மதியர்கள் ஸொத்து உபயோகப்படவேண்டுமென்று நியமமிருப்பதாயும், ஆகலால் இந்த மசோதா மிகவும் அவசியமென்றும் சென்னை மாகாண மஹம்மதியர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்களாம்.

இந்த விஷயத்தை எல்லா ஜாதியார்களும், முக்யமாக நமது ஹிந்துத் தலைவர்களும் கவனிப்பது அவசியம். மஹம்மதியர்கள் தங்கள் இனத்தைக் காக்க எந்தெந்த வழிகளெல்லாம் முயற்சி செய்கிறார்கள் பார்த்தீர்களா? தங்களுடைய வேதம், மதம், இவைகளுக்கு விரோதமாக ஒரு சிறு கார்யமும் செய்யத் துணியாததுடன் அன்னிய கவர்ன்மெண்டார்கூட தங்கள் மதக்கட்டளையை அநுஸரித்தே கார்யங்களைச் செய்யவேண்டுமென்றும் வற்புறுத்த தைர்யம் பெற்றிருக்கிறார்கள். தங்கள் இனத்தாருடைய ஸொத்தோ, பணமோ, தங்கள் இனத்தின் நன்மைக்கே உபயோகப்படவேண்டுமென்று பிடிவாதமாகவும், கட்டுப்பாடாகவும் மனப்போக்கு உள்ளவர்களாயிருக்கிறார்கள். இதுவன்றோ ஸ்வாபிமானம்? இனம் இனத்தைக் காக்குமென்பதற்கு இதுவல்லவோ உண்மையான அர்த்தம்?

நமது ஹிந்துத் தலைவர்களுக்கு இதில் ஏக தேசமாவது ஸ்வாபிமானமுண்டா? தம் இனத்தைப் பல வழியிலும் பிரித்தும், காட்டிக்கொடுத்தும், உபத்திரவித்தும் அதை உருவற்றதாக, பௌருஷமற்றதாகச் செய்து தேசத்திற்கு ஸ்வாராஜ்யம் வாங்கித்தரப் போகிறார்களாம்! மஹம்மதியர்களின் ஸ்வாபிமானத்தைப் பார்த்து ஹிந்துத் தலைவர்கள் புத்தி கற்பார்களா?

கிறிஸ்தவ தேவாலயங்களிலும் சட்டம் செய்யலாமே!

'வெங்காயம் தின்றும் வியாதி தீரவில்லை' என்று வசனமுண்டு. தீண்டாதார் கிறிஸ்தவமதம் புகுந்தும் தீண்டாமைக்கு விமோசனமில்லை. குடந்தையிலுள்ள கத்தோலிக் கிறிஸ்தவர்களில் உயர்ந்த வகுப்பார், தாழ்ந்த ஜாதிக் கிறிஸ்தவர்களுக்கு தேவாலயங்களில் ஸம அந்தஸ்து கொடாமல் அவர்களை ஒதுக்கி வைத்திருப்பதைப்பற்றி பெரிய தகராறு நடைபெறுகிறது. சர்ச்சுக்களில் தாழ்ந்த ஜாதியாருக்கு ஒதுக்குப்புறமாகத் தனியிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. உயர்ந்த ஜாதியார் உட்காருமிடத்தில் இவர்கள் பிரவேசிக்கக்கூடாது பாதிரி கையைத் தாழ்ந்த ஜாதியார் முத்தமிடக்கூடாது. உயர்ந்த ஜாதியார் உட்காரும் ஆஸனங்களைத் தொட்டுவிட்டதற்காக, தீண்டாதாருக்கு அடி விழுந்ததாம். இன்னும் எவ்வளவோ! இந்த விநோதங்களெல்லாம் அவர்கள் வாயினாலேயே வெளிவந்தவை. குடந்தையில் மட்டும் இப்படியில்லை. இந்தியாவெங்குமே இப்படி இருக்கிறது. ஜாதிபேத உணர்ச்சியற்றவர்களாகச் சொல்லிக்கொள்ளும் பெரிய பெரிய பாதிரிகளே இம்மாதிரி தீண்டா ஜாதி கிறிஸ்தவர்களைத் தாழ்மையாக நடத்திவருவது வெகுகாலமாக பிரஸித்தம். இந்த அவமானத்தைக் கண்டிக்கக் குடந்தை தீண்டாதார் கிறிஸ்தவர்கள் ஒரு கூட்டம் போட்டார்கள். சென்னை அபிவிருத்தி இலாகா மந்திரியாக விளங்கும் ஸ்ரீமான் எம். ஸி. ராஜா இதில் அக்கிராசனமலங்கரித்தார்.

வாய்கொண்டவரையில் இந்த ஜாதிபேத உணர்ச்சியைக் கண்டித்து, பாதிரிகள் இதை நிவர்த்திக்கவேண்டுமென்று கோரினார். தீண்டாதாருக்கு புத்தி சொல்லுகையில் அவர்கள் கட்டுப்பாடாகவும், சாந்தமாகவும் கிளர்ச்சி நடத்தவேண்டுமென்றும், முக்கியமாக போப் முதலிய பெரிய மதாசாரியர்களிடம் தெரிவித்து இந்த பேதத்தைப் போக்க வழிதேடுவதே நியாயமென்றும் உபதேசித்தார்.

இவ்விஷயத்தில் இவர் இவ்வளவு சாந்தமூர்த்தியாக நடித்தது விசேஷந்தான். ஹிந்துக்களில் தீண்டாமை விலக்குச் செய்ய மட்டும் இவர் தடபுடலாகச் சட்டம் செய்யவும் வேறு பயமுறுத்தல்களை கையாளவும் துணிந்தாரே! ஹிந்து தேவாலயங்களில் ஜாதிவித்யாஸம் கூடாதென்று சட்டம்செய்யத் துடித்தாரே! இப்போதும் சட்டமூலமாக ஆலயப்ரவேசத்தை ஸாதிக்க இவர் முயற்சிக்கவில்லையா?

இத்தகையவர் கிறுஸ்தவ தீண்டாதாருக்கு மட்டும் வேறுவிதமாக யோஜனை கூறுவது ஏன்? மதாசாரியர்களிடம் சென்று முறையிட்டுக் கொண்டு இந்த தகராறைத் தீர்த்துக் கொள்ளச் சொல்லுவானேன். சட்டசபையில் இவ்விஷயமாகச் சட்டம் செய்யக்கூடாதா? ஹிந்து தேவாலயங்களில் தீண்டாதாரும் பிரவேசிப்பதற்கு நிர்ப்பந்தச் சட்டம் செய்வதுபோல் சர்ச்சுகளிலும் தீண்டாதார் எங்கும் பிரவேசிக்கவும், எதையும் தொடவும் உரிமை கொடுத்துத் தீண்டாமையைப் போக்க ஏன் சட்டம் செய்யக்கூடாது? ஸ்ரீமான் ராஜா தாம் மந்திரியாக இருக்கும்போதே இத்தகைய சட்டமொன்றைச் செய்து சர்ச்சுகளில் தீண்டாமையைத் தொலைத்துவிடலாமே! இவர் மந்திரி பதவியை விடவேண்டி வந்தபோதிலும், சட்டசபை மெம்பராயிருக்கிறபடியால் இம்மாதிரி மசோதாவைக்கொண்டு வருவாரா! அல்லது மெஜாரிடிக் கக்ஷியாரைக் கொண்டோ வேறு சீர்திருத்தக்காரரை கொண்டோ இந்த முயற்சியை இவர் பௌருஷத்துடன் செய்வாரா?

அமெரிக்காவின் அநாகரிகம்.

உலகத்தில் எல்லாதேசத்தையும்விட அமெரிக்கா மிகுந்த நாகரிகமுள்ளதென்று நினைக்கப்படுகிறது. அதன் பிறகுதான் ஐரோப்பிய தேசங்கள். இந்தியாவில் நவீனப் பித்துப்பிடித்த பலர் நாமும் அந்த தேசங்களைப்போல் நடை, உடை, பாவனை எண்ணம் எல்லாவழியிலும் மாறிவிடவேண்டுமென்று பிரமம் பிடித்து நிற்கிறார்கள். அமெரிக்க நாகரிகமே சிறந்ததென்பது இவர்களுடைய எண்ணம். அந்தப் பிரமத்தால், மஹாமேன்மைபெற்று விளங்கும் நம் தேச நாகரிகத்தை இவர்கள் அலக்ஷ்யம் செய்யவும் துணிந்துவிட்டார்கள்! அந்தோ!

மேற்றிசைகளின் நாகரிகாபாஸம் பல வழியிலும் நாளுக்கு வெளிப்பட்டு நாற்றமடிக்க ஆரம்பித்துவிட்டதை நம்மவர்கள் இன்னுமா கவனிக்காமலிருப்பது? அமெரிக்காவில் நீக்ரோ ஜாதியர் ஏராளமாக வஸிக்கிறார்கள் அவர்களை அமெரிக்க வெள்ளையர்கள் படுத்தும்பாடு உலகம் முழுதும் சிரிக்கிறது. வெள்ளையருக்கு விரோதம் செய்யும் நீக்ரோவனை கொலைசெய்துவிட அமெரிக்கருக்கு உரிமையுண்டாம் இதை ஸர்க்கார் தடுக்கமுடியாதாம். இதுவரையில் இந்த அநாகரிக வழக்கம் அங்கு இருந்துவருகிறது. இதைத் தடுப்பதற்காக அமெரிக்கப் பிரதிநிதி ஸபையில் ஒரு மசோதாவை மிஸ்டர் கவகன் என்பவர் கொண்டுவந்தார். இந்த மசோதாவை அமெரிக்க பிரபலஸ்தர்களில் பெரும்பாலோர் எதிர்த்தார்களாம். அதாவது நீக்ரோவனை இஷ்டப்படி கொலைசெய்யும் உரிமையை விடமுடியாதென்று பார்லிமெண்டில் வாதிக்கப்பட்டது. இந்த மசோதாவுக்கு எதிராக 199 பேர் வோட் செய்திருப்பதிலிருந்து அமெரிக்கரின் மனோபாவம் நன்கு விளங்குகிறது. கீழ் ஸபையில் இந்த மசோதா நிறைவேறிவிட்டதாயினும் ஸெனேட்டில் அதாவது பெரிய ஸபையில் இது நிச்சயம் நிறைவேறுதாம்.

இந்த மசோதா விவாத காலத்தில் நீக்ரோ பிரதிநிதிகள் வெளியிட்ட பல விவரங்கள் பயங்கரமாயிருக்கின்றன மனிதர்களிடையில் இத்தகைய கோர அநாகரிக வழக்கமிருக்குமாவென்று யாவரும் அதிசயப்படக்கூடியதாயிருக்கிறது. ஒரு நீக்ரோவன் ஒரு வெள்ளைக்காரியை அடித்த குற்றத்திற்காக பெருங்கூட்டமாக வெள்ளையர் கூடி அவனை நெருப்புப் பந்தங்களால் உடம்பு முழுவதும் பொசுக்கினார்களாம். அவன்மீது கிரோஸின் எண்ணையை ஊற்றி உயிருடன் எரித்தார்களாம்! பெரிய போலீஸ் காரனின் பாதுகாப்பில் இருந்த ஒரு நீக்ரோவனை ஜனங்கள் தங்களிடம் விட்டுவிடும்படி கேட்டார்கள். அந்த அதிகாரி ஸம்மதிக்காததால் அவரை ஜனங்கள் கட்டிப்போட்டுவிட்டு அந்த நீக்ரோவைத் தூக்கிக்கொண்டுபோய் இஷ்டப்படி வதைத்தார்களாம். இதுபோல் இன்னும் எவ்வளவோ நடக்கின்றனவாம் இவையெல்லாம் அமெரிக்க ஜனப்பிரதிநிதி ஸபையிலேயே வெளிவந்த விவரங்களானதால் இதில் பொய் இருக்க நியாயமில்லை. இதுவரை 5 ஆயிரம் நீக்ரோக்கள் மேற்கண்டபடி கொலை செய்யப்பட்டிருக்கிறதாக ஒருமெம்பர் சொன்னார்.

இம்மாதிரி மனிதக்கொலை செய்வதும், அதை ஒரு உரிமையாகக் கொண்டாடுவதும், அந்த உரிமையைவிட்டுக்கொடுக்கமுடியாதென்று வாதிப்பதும் என்ன நாகரிகம்? என்ன அநீதி? இந்த அநாகரிக தேசம்தான் நம் தேசத்தில் நாகரிகத்திற்கு வழிகாட்டியாம்! என்ன வெட்கக்கேடு!

இந்தியாவில் ஜாதிக்கொடுமை அதிகமென்று பிதற்றும் பாதிரிகளும், நம் தேசத்திய மூடர்களும் அமெரிக்காவைப்பற்றி என்ன பதில் சொல்லுவார்கள்? அமெரிக்காவில்போல் பயங்கரக்கொடுமைகளும், கொலைகளும் நம் தேசத்தில் உண்டா? சாந்தியிலும், ஜீவகாருண்யத்திலும் பாரத தேசத்தை மிஞ்சிய தர்ம தேசம் வேறு ஒன்று உண்டோ? இதைப்பற்றி நாம் எவ்வளவு பெருமைப்படவும் இடமுண்டு.

கல்விச் சீர்திருத்தம்.

சென்னை ஸர்க்கார் அறிக்கை.

ஆரம்பக்கல்வி, நடுத்தரக்கல்வி, கலாசாலைப் படிப்பு விஷயமாகப் பல சீர்திருத்தங்களைச் செய்யக்கருதி சென்னை கவர்ன்மெண்டார் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதில் பல யோசனைகளைக் கூறியிருக்கிறார்கள். நான்காவது பாரம் படிப்பு முடிந்ததும் ஒரு பொதுப் பரீக்ஷை நடத்தப்படும். ஸர்க்கார் குமாஸ்தாவேலைக்கும் வேறு தொழில்களுக்கும் போக உத்தேசிக்கிறவர்களுக்கு நான்காவது பாரத்திலேயே பயிற்சிப் பாடங்கள் கற்பிக்கப்படும். ஹைஸ்கூல் படிப்பு இன்னும் ஒருவருஷம் நீடிக்கப்படும். இண்டர்மீடியேட் வகுப்பு எடுக்கப்பட்டு யூனிவர்ஸிடிப் படிப்பு மூன்று வருஷங்களாக்கப்படும். அதில் முதல் வருஷப்படிப்பு இண்டர்மீடியேட்டாகக் கருதப்படும். இம்மாதிரியும் சில யோஜனைகளையும் வெளியிட்டு இதில் பொதுஜன அபிப்பிராயத்தை அறியவிரும்புகிறார்கள்.

ஆரம்பக்கல்வி விஷயத்திலும் சில சீர்திருத்த யோஜனைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
Jagannathapuram
Maruter
East Godavary Dt.,

ஸநாதனிகளின் ஆபத்தான எதிர்காலம்.

தைர்யத்துடன் ஸஹித்துக்கொள்ள வேண்டியதே !

ஆபத்கால அதர்மம் பாபமில்லை.

நம் தேசத்தில் தற்போது தோன்றியுள்ள நிலைமையில் எதிர்காலத்தில் ஸநாதன தர்மத்திற்குப் பல வழிகளிலும் இடையூறு ஏற்படப்போவது நிச்சயமே. அத்தகைய ஆபத்காலத்தில் தார்மிகர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பது இப்போது ஒரு முக்கிய விஷயமாக பலர் மனதில் தோன்ற ஆரம்பித்திருக்கிறது. இவ்விஷயத்தில் சாஸ்திரங்களையும் பழைய சரித்திரங்களையும் அனுசரித்து நாம் சில யோஜனைகளைச் சொல்ல விரும்புகிறோம்.

இப்போது மிகுந்த நெருக்கடி ஏற்பட்டிருப்பது உண்மையே! திருவாங்கூர் முதலிய பலவிடங்களில் ஆலயப்ரவேச அதர்மமூலமாக ஜாதி வியவஸ்தை அழிக்கப்பட்டுவருகிறது. பிரிட்டிஷ் இந்தியாவிலும் எல்லா கோவில்களிலும் தீண்டாதார் பிரவேசம் நிச்சயமாக ஏற்படுமென்றே தோன்றுகிறது காங்கிரஸ்காரர்கள் மந்திரிபதவி ஏற்பதுதான் தாமதம். உடனே ஆலயப்ரவேசச் சட்டம் நிறைவேற்றிவிடுவது நிச்சயம். சட்டபூர்வமான மெஜாரிடி பலம் அவர்களுக்கு இருக்கிறது. தார்மிகர்கள் எவ்வளவு நியாயமாகச் சொன்னாலும் அதைச் சீர்திருத்தக்காரர்கள் ஆள் பல அஹம்பாவத்தால் லக்ஷ்யம் செய்யப்போவதில்லை. சாரதாசட்டப் பேயோ பயங்கரமாக நர்த்தனமாடுகிறது. ஸநாதன தர்மத்தைக் கொல்ல அது இன்னும் நல்ல பலம் பெறப்போவதும் நிச்சயம்.

இவ்வாறு எதிர்காலம் இருக்கிறது. தர்ம விரோதமான சட்டங்கள் ஏற்படுகையில் தார்மிகர்கள் அவைகளை நியாயமான வழியில் எதிர்த்துக் கிளர்ச்சி செய்யவேண்டியது நியாயமே. ஆயினும் அது பலிக்காமல் போய்விட்டால் என்ன செய்கிறது? இப்போதுள்ள ராஜீய நிலைமை சீர்திருத்தக்காரர்களுக்குப் பலம் கொடுக்கக் கூடியதாகவே இருக்கிறது. கவர்னர்கள் நேரிட உறுதிமொழி கொடுக்காவிடினும் மந்திரிகளின் நிர்வாஹத்தில் தாங்கள் குறுக்கிடப்போவதில்லையென்றும் நிர்வாக விஷயங்களில் மந்திரிகளுக்கே பூர்ண அதிகாரம் இருப்பதாயும் வியாக்யானம் செய்யப்பட்டு விட்டது. கவர்னர்களுடைய விசேஷாதிகாரத்திற்கு உள்பட்ட விஷயங்களில் கூட மந்திரிகளுடைய விருப்பத்தையனுசரித்தே கவர்னர்கள் நடந்துகொள்வார்கள் என்றும் உறுதி கூறப்பட்டிருக்கிறது.

மதவிஷயங்களுக்கு இருந்துவந்த பாதுகாப்புக்கள் போய்விட்டனவாயினும் ராஜ சக்ரவர்த்தியின் ஆக்ஞாபத்திரப்படி மதவிஷயத்தில் ஒரு வகுப்பாருக்கும் கஷ்டம் நேராமல் பாதுகாக்க வேண்டியது கவர்னர்களின் விசேஷாதிகாரத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது. ஆயினும் பிரயோஜனம் என்ன? ஒரு மந்திரி ஆலயப்ரவேச சட்டமோ, விவாஹத்திருத்தச் சட்டமோ, கொண்டு வந்து நிறைவேற்றினால் கவர்னர், மந்திரி தாக்ஷிண்யத்திற்காக அதைத் தடைசெய்ய முன்வர மாட்டாரென்று தெரிகிறது.

இப்படி நிர்க்கதியான நிலைமை ஏற்பட்டு விட்டால் தார்மிகர்கள் என்னசெய்வது? சட்டரீதியான கிளர்ச்சிகள் பலிக்காமல் போய்விட்டால், ஆபத்கால தர்மத்தை அநுஸரித்து நாம் கஷ்டப்படவேண்டியதுதான். மஹம்மதியர் சிலருடைய ஆக்ஷிகாலத்தில் நமது தேவாலயங்களும், தர்மங்களும் நாசமாக்கப்படவில்லையா? அப்போது நம் முன்னோர் அநுஷ்டித்த வழியென்ன? ஜைந, பௌத்தாதிகளுடைய ஆளுகை காலத்தில் வைதிக தர்மத்தை நாம் எப்படிக் காத்துவந்தோம். இவைகளை ஞாபகப்படுத்திக்கொண்டு இப்போதும் ஏற்படும் நிலைமைக்குத்தக்கபடி நாமும் நடந்துகொள்ள வேண்டும். நாம் உத்ஸாஹக் குறைவோ, நிர்வேதமோ அடையக்கூடாது. நம்முடைய முயற்சிகள் பலிக்கவில்லையென்று சோர்ந்துவிடாமல் அவைகளைச் செய்துகொண்டே இருக்கவேணும். ஆபத் காலங்களில் தார்மிகர்கள் நடந்துகொள்ளவேண்டிய விதத்தைப் பற்றி சாஸ்திரங்கள் நமக்கு ஏராளமான வழிகளை வகுத்துக் காட்டியிருக்கின்றன. நாம் ராஜாங்க நிர்ப்பந்தங்களுக்கு உட்பட்டு நிர்கதியாக அதர்மத்தை ஆசரிக்கநேர்ந்தாலும் நாம் அதார்மிகர்களாக மாட்டோம்.

பாபங்களில் புத்திபூர்வமாகச் செய்யப்படும் பாபத்திற்கே அதிக தோஷமும் பிராயச்சித்தமும் சொல்லப்பட்டிருக்கிறது. ராஜ நிர்ப்பந்தத்தாலும், மிலேச்ச, சோராதிகளான துஷ்டர்களுடைய நிர்பந்தத்தாலும் அபுத்திபூர்வகமாக, அதாவது மனதுக்குப் பிடிக்காமல் ஒருவன் அதர்மம் செய்யநேரிட்டால் அது பாபமாகாது. மநு, யாக்ஞவல்க்ய விஜ்ஞானேச்வராதிகள் இதை நன்கு விசாரித்து ஸித்தாந்தம்செய்திருக்கிறார்கள். சோர, மிலேச்சாதிகளுடைய ஹிம்ஸையால், ஒருவன் கோவதம் பிராஹ்மஹத்தி முதலிய பாபங்களைச் செய்யநேரிட்டால் அது புத்தி பூர்வக பாபமல்லவென்றே நிச்சயித்தார்கள். ஏனெனில் கோவதம் செய்யவேணுமென்ற ஆசையால் அதை அவன் செய்யவில்லை. அது பாபமென்று தெரிந்தும் பிறர் நிர்ப்பந்தத்தால் செய்கிறான். புத்தி பூர்வக பாபங்களில் அவனுடைய மனப்பூர்வமான இச்சையும் சேர வேண்டும். அது இல்லாதவரையில் அது புத்திபூர்வமாகாது. அதற்குத் தோஷமும் அதிகமில்லை. இது மேற்கண்ட ஸ்மிருதிகளில் பிராயச்சித்தாத்யாயத்தில் வெகு தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்போது சட்ட நிர்ப்பந்தத்தால் நாம் ருதுமதி விவாஹமோ, வேறு அதர்மமோ அகதிகமாக செய்ய நேர்ந்தால் நாம் அசாஸ்திரீயமான காரியம் செய்கிறோமென்பது நமது மனதிற்குத் தெரிந்ததே. நமது ஆஸ்திக்யத்தையோ, பாபபயத்தையோ, சாஸ்திரவச்யதையையோ, நாம்விட்டுவிடவில்லை. தீண்டாதார் பிரவேசிக்கும் தேவாலயங்களுக்கு நாம் போகவேண்டிய நிர்ப்பந்தமில்லை. கிருஹத்திலேயே தேவ பூஜைகளையோ, சாஸ்திரீய கர்மானுஷ்டானங்களையோ நாம் நடத்திக் கொள்ளலாம். இந்த வழியில் நாம் நடந்துகொண்டு நல்லகாலம் வருவதை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதே உசிதம். ஸநாதனப் பிரசாரம் பலிக்கவில்லையென்றோ, நாம் எவ்வித வேலையும் செய்யவேண்டியதில்லையென்றோ முடிவு செய்துவிடக்கூடாது.

ஒரு நிருபர்

ஸேத் ஜமன்லால்பஜாஜ் மீது புகார்

காங்கிரஸ் தலைவர்களுள் ஒருவரான சேத் யமுனாலால் பஜாஜ் மீது நாகபுரி "ஸாவதான்" என்ற பத்திரிகை சில புகார்களை குறிப்பிட்டு ஒருவியாஸம் பிரசுரித்தது. அதில், அவருக்கு ஸொந்த ஸொத்தே கிடையாதென்றும், தன் ஸொத்துக்களை பாக்ராஜ் என்ற கம்பெனியின் பெயரால் வைத்துக்கொண்டிருப்பதாயும், காங்கிரஸ் ராஜியவேலையால் தம் ஸொத்துக்கு நஷ்டமேற்படாமல் பாதுகாக்கவேயிம்மாதிரி அவர் மோசடியாகச்செய்திருப்பதாயும், ஷை கம்பெனியின் பெயரால் தேசபக்தியை வியாஜமாகக்காட்டி ஏராளமான லாபம் ஸம்பாதிக்கப்படுவதாயும், பொதுப்பணத்தைக்கொண்டு சில கட்டிடங்களைகட்டி, காந்திஜி காலதிற்கு பிறகு அதுதன் குடும்பத்திற்குச்சேரும்படி செய்திருப்பதாயும் வேறுபல புகாரும் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஸ்ரீமான் பஜாஜ் அந்தப்பத்திரிகை மீது அவதூறுவழக்குக்கொடுத்திருக்கிறார். நாகபுரி கோர்ட்டில் விசாரணை நடக்கிறது. திலகர் ஸ்வராஜ்யநிதிக் கணக்குப் புஸ்தகங்களையும், கணக்குப் பரிசோதகர் ரிபோர்ட்டையும் கோர்ட்டில் ஆஜர்படுத்தும்படி எதிரி கோரியிருக்கிறார்.

"ஹரிஜன" ஸங்க நிர்வாஹ யாதாஸ்து.

அகில இந்திய ஹரிஜன ஸேவா ஸங்கத்தின் 35, 36-ம் வருஷத்திய நிர்வாஹ யாதாஸ்து, பத்திரிகைகளில் பிரபலமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. யாதாஸ்தில் நிர்வாஹிகளே அதிகம் பெருமையை காட்டிக்கொள்ளாததால் நாம் அதில் அதிக விமர்சனம் செய்யவேண்டிய அவச்யமில்லை. ஆயினும் இரண்டொரு முக்ய விஷயத்தை மட்டும் குறிப்பிடுவது அவச்யமாகிறது. சேலம் முதலிய சில விடங்களில் கிறிஸ்தவப் பாதிரிகள் தீண்டாதாரை கிறிஸ்தவ மதத்தில் சேர்க்கப் பிரசாரம் நடத்திவருவதாயும், ஆனால் ஹரிஜன ஸேவாஸங்கம் அதை ஆக்ஷேபிக்காமலிருந்துவிட்டதாயும் யாதாஸ்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பெருமையை எதற்காக எழுதிக்கொண்டார்களென்று தெரியவில்லை. இந்த ஸேவாஸங்கமானது தீண்டாதார் கிறிஸ்தவ மதம் போவதைத்தடுக்கக் கட்டமைப்பட்டிருக்கவில்லையா? பாதிரிகளுக்கு எதிர் பிரசாரம் செய்து தீண்டாதாரை ஹிந்துக்களாகவே இருக்கும்படி செய்யவேண்டியது இந்தச்சங்கத்திற்கு முக்கிய வேலையாகத் தோன்றாதது மிகவும் வேடிக்கையாயிருக்கிறது. தீண்டாதார் முன்னேற்றத்தில், அவர்கள் மதம் மாறாமல் பாதுகாப்பதும் அடங்கவில்லையா? பின் இந்த ஸங்கத்தின் வேலைதான் என்ன? ஜாதி ஹிந்துக்களுடன் சண்டை மூட்டிவிடுவதும், தேவாலயங்களை நாசமாக்குவதும் தானா? இதுதான் தீண்டாதார் முன்னேற்றமோ? கிறிஸ்தவராகப் போகக்கூடியவர்களைத் தடுக்காமலிருந்து விட்டதாக இந்த ஸங்கம் சொல்லிக்கொள்ள வெட்கப்படவில்லையே? ஹிந்துக்களின் பணத்தைக்கொண்டு ஹிந்துக்களாலேயே நிர்வஹிக்கப்படும் இந்த ஸங்கம் தீண்டாதார் மதமாற்ற விஷயத்தில் கவலை கொள்ளவில்லையானால் இந்த ஸங்கம் மறைந்துவிடுவதே மேலாகும். மதமாற்றப் பூச்சாண்டியைக் காட்டி ஜாதி ஹிந்துக்களைப் பயமுறுத்தும் வேலைக்கு குந்தகம் ஏற்பட்டுவிடுமென்ற அச்சமே இதற்குக் காரணம் போலும்!

யாதாஸ்தில் மற்றொரு விஷயமும் கவனிக்கத் தக்கது. பலவிடங்களில் தீண்டாமை விலக்குக்குத் தீண்டாதாரே விரோதிகளாயிருக்கிறார்களாம். தீண்டாதார் ஜாதிக்குள்ளேயே வகுப்பு பேதமும் தீண்டாமையும் கடுமையாயிருக்கிறதாம். ராஜ்கோட்டில் சமார் என்ற தீண்டாதார் வகுப்பார் பங்கி என்ற வகுப்புத் தீண்டாதாருடன் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்க மறுத்துவிட்டதால் அந்தப் பள்ளிக்கூடம் மூடப்பட வேண்டி வந்ததாம்.

இந்த உண்மையிலிருந்து தீண்டாதார் தீண்டாமையை விலக்கத் துடிப்பதாயும், ஜாதி ஹிந்துக்களே இவ்வியக்கத்திற்கு எதிரியாய் இருப்பதாயும் பேசிவந்தது பொய் என்பது நிரூபணமாகிறதல்லவா?

389

Registered No. M. 2913.

The Arya Dharmam.

ENGLISH SUPPLEMENT.

Vol. 22.] KUMBAKONAM, THURSDAY 1st JULY 1937. [No. 25

THE NEAD FOR A CONSERVATIVE PARTY.

(By Mr. N. Natesa Aiyar.)

The South Indian Brahmanas Conferred recently at Kumbakonam and resolved to form an independent Conservative group. Swarajya has been declared as its goal and special stress has been laid upon the preservation of Vedic Religion, Dharma and Culture. No exception has been or can possibly be, taken to the goal which is the goal practically of all Indians or the anxiety to preserve the Vedic Religion, Dharma, and Culture. The wisdom of creating a separate group has however been doubted in some quarters. It has become necessary therefore to examine the position.

2. It may be conceded that the step taken is perhaps bold. That such a resolution has been passed and at a time when the Congress party is considered to be holding a Sovereign sway in the country must itself be a sufficient circumstance to raise a presumption in its favour, in the minds of honest seekers of the truth. What repercussion it will have upon the march of events and what strength it will wield as a political body we need not now pause to consider. It may not be irrelevant however to point out that the Congress party was hardly 30 in number in 1885 and that modern European History has furnished so recently as May 1937 an instance of a party whose strength is only 2 and whose help was courted anxiously and assiduously by every other party in the field. All that the people now know is that such a resolution has been passed. What they do not yet know is what has led to it. A plain narration of a few facts is all that is now needed in this connection.

3. The sum and substance of them is that the lamentable obstinacy of a few leaders at the top has driven the Conference to this step. The wise policy of not dabbling in religious and socio-religious matters which the Congress had followed in the pre-Gandhian days was given the go-bye 17 years ago for no understandable reason and with sad results. An era of even increasing splits, schisms and conflicting parties began to dawn in the Indian horizon and tear the country from end to end. It has to be confessed, to our shame, that India now stands more disunited and more disintegrated in spirit than ever before. The Sanatani members of the Congress party who had been its life and soul all along and enabled it to reach its present position, instead of continuing to work from within and check-mating the newborn tendencies and forces as they ought to have done, in an evil hour for themselves and the country, took off their hands and made it easy for the leaders of the group which remained inside to soar higher and higher into forbidden regions unhampered by the steadying Sanatanist influences which had so far and so long been operating for good. This growing power of theirs was first misused in the matter of the Sarda Act. This misuse was latter on repeated aggressively in connection with the Temple Entry and untouchability removal bills. Perturbed and perplexed beyond measure by this defiant attitude of the Congress leaders the unsophisticated and guileless Sanatanists imbued with a sense of duty to themselves and to their country engaged themselves in a series of bonafide missions of peace for 6 long years in the fond hope of winning back their erring bretheren. Entreaties, importunities, remonstrances and threats, all alike fell on deaf ears. At first there were interviews through Pandits, which proved abortive. Open letters were then attempted which shared a similar fate. Later on there appeared a turning of the tide in favour of the Sanatanists in 1934 during the elections to the central assembly. Liberal promises of legislative non-interference in religious and social matters were profusely made on behalf of the Congress. The unsuspecting Sanatanists thereupon wholeheartedly gave their votes to the Congress candidates. The promises were however cruelly broken. The Sanatanists grew alarmed again. Subsequently election campaign under the New Constitution Act were started furiously on all sides. Placing once again the cause of the country over every other consideration and casting away their own self respect, the Sanatanists forget and forgave the Congress leaders' previous breach of faith and set to work to explore fresh avenues peace. A wire and a letter were sent by the President of the Madras Varnashrama Swarajya Sangha to the Congress President about the close of 1936 offering co-operation on political matters in return for an official assurance of legislative non-interference in religious and socio-religious matters. They merely wanted that the Karachi resolution may be given full effect in practice and not remain as a paper resolution. The Congress President turned down the proposal in his own characteristic way. Any other party would have at once given the signal for war. But the patient and suffering Sanatanists were made of nobler stuff. They once again carried the olive branch to their opposing camp. They passed a resolution at the Provincial Sanatana Conference at Madras in February 1937 repeating the Madura offer of the previous year and informed the Conference President by wire. But he was adamant. It is a matter of record, how in the election speeches that followed, the Congress leaders vilified the Sanatanists as the sworn allies of foreign imperialism, as the enemies of Indian Nationalism, opposed to Swaraj and as persons who have no place either in this world or any other world and what profuse promises of reducing land revenue and taxation and driving out poverty and unemployment were freely made and how the electorate reacted to these sentiments and voted. Even after the elections, the leader of the Congress party in Madras never let slip a single opportunity of openly declaring that he will have no rest or peace of mind until untouchability is removed and temples were thrown open to the Panchamas, and until the caste system is wiped out. In spite of all these yet another attempt was made by the general Secretary of the Madras Provincial Varnashrama Sangh a month back. The Congress President made a statement in April in the following terms:-

> "The Congress being a political organisation does not concern itself with religion or connected matters.".

The leader of the Congress party in Madras was requested to give an assurance in the light of this statement. His answer is as follows:—

> "If you want the Congress to give up the programme of the removal of untouchability or give an undertaking not to agitate for reform or justice in regard to matters which touch religion as well as social and political issues, such an undertaking cannot be given."

Will anybody still doubt the propriety of the Kumbakonam Resolution? It will be remembered that Congress ministerial power is still prospective. It will not be difficult to visualize to what length it may go after acquiring it actually. The Congress may now hug to itself the strength of its pocket majority and look down upon the Sanatanists in the first flush of success. Ere long the masses will awaken to the realities. The results will be better imagined than told. Will the Congress now at least retrace its steps and give the much needed gentleman's assurance.

GONGRESS AND HINDU RELIGION

Pandit Nehru out-does Mr. C. R. Achariar.

(Pandit Jawaharlal's Letter to Mr. T. S. Ramaswamy Iyer.)

"On my return from Burma and Malaya I received your letter of the 9th June together with its enclosures. The statement that I issued some time back regarding Congress policy towards religion is a correct statement of the Congress position in so for as the Karachi Congress laid it down. The Congress stands for the free exercise of religion and for freedom of conscience subject to public order and morality.

"You have however sought to extend this definition so as to prevent the Congress from considering questions of untouchability, temple-entry and the like. You should know that this is a totally unjustified interpretation of the Congress position *and the removal of untouchability in all its forms has been one of the fundamental planks of the Congress for many years past.* It is obvious that your conception of religion includes in it the forcible suppression by law and otherwise of other people to conform to your own opinion in the matter. That is the very reverse of what the Congress thinks and lays down in regard to religious freedom. The very idea of untouchability is one which offends against the Karachi Resolution of Fundamental Rights. It offends against freedom of religion. It is open for an individual if he objects to mixing with any other group to retire to some place where he may live apart from the world. He may go to the Himalayas or to some island in the sea. It is not open to him in order to please himself to impose his will on large numbers of others and prevent them from taking their share in social life. If any number of your organisation objects to meeting untouchables the Congress does not force him to meet them. He can pray in solitude in his own house or wherever else he pleases. But if your organisation on the other hand seeks to compel others to conform to your way of thinking in the matter of religion, then it goes beyond its function, and according to my way of thinking beyond public order and morality.

"It is obvious that there may be a difference of opinion on this issue as there is between you and me. I have not a shadow of doubt that you are hopelessly in error and it surprises me that anybody should think in terms which are repugnant to me because they are based on the suppression of human beings by others of their kind. How should these questions then be decided? Obviously the democratic way of settling these questions is for the majority to decide. I am perfectly prepared to accept the verdict of the Hindu majority on this issue when the time comes. When we have the power to do so we shall no doubt consult the people concerned and abide by their decision in the matter. Meanwhile it is open to all of us to carry on propaganda in behalf of the policy we approve of. That policy in so far as I am concerned is one of complete and absolute removal of untouchability in all shapes and forms.

"In this matter it is evident that we differ and as I have stated above the only way to settle it is democratically. To enable such a settlement to take place we must work for a free India whatever our opinions on these questions might be.

"I have therefore to inform you that in this matter I am entirely in agreement with Mr. C. Rajagopalachari."

(Sd) Jawaharlal Nehru.

All-India Congress Sanatanist Party.

Sir

Referring to your leading article in your issue of the 24th instant, I suggest the formation of an All-India Congress Sanatanist Party. "Sanatanism" meaning the *permanent welfare of all.* Non-Hindus joining it will stand assured of non-interference by Government in all matters of religious and socio-religious practice. The Hindus have besides their religious and socio-religious creed, a definite top item of thought, even in the matter of economics and politics, besides being the Major Community in India. All these will of course have to be supported on rational grounds. Rational grounds, not excluding honest, intelligent faith. This is the position of the United India League.

Gentlemen who agree in this proposal are requested to communicate at once with the undersigned (77 Lloyds Road, Royapetta, Madras) who undertakes the labour and cost involved in bringing about a preliminary meeting in Madras about the middle of July; or at any other convenient date.

N. Subramania Ayyar.

LATE Mr. G. V. GANESA IYER.

Dewan Bahadur K. S. Ramaswami Sastri writes:—

All lovers of Hindu culture and Hindu Dharma feel keenly the pasing away of the late Mr, G. V. Ganesa Iyer as a poignant personal bereavement. To the Arya Dharmam his loss is specially poignant as he took a paternal interest in it for the lost two years. I have known him for many years. His passion for the things of the spirit was an undying flame, and the love of Devi and of the religious literature relating to Devi worship was his master passion. But though religion was the Queen of his manifold interests in life, she was not a tyrant. He was an insatiable devourer of books on modern thought. He keenly desired to bring India into line with the great countries of the modern world while maintaining the disciplines of *Brahmacharya* and *achara* and *mantra* and *yoga.* He was thus an alert and modern and progressive and yet conservative Hindu. It is as pity that the gods, so partial to him in other respects, with held from him the greatest form of all viz. longeivit of life. He crewded much distinguished achievement into a brief span of life and has left behind him sore and sorrowful and stricken hearts. May his noble soul rest in peace!!

A Condolence Meeting.

"At a General Body meeting of the above Sabha held at 6-30 P.M. on Sunday the 20th June with M. R. Ry. N. Subramania Iyer, the President in the chair after the usual prayer and puja, tributes were paid to the memory of the late Mr. G. V. Ganesa Iyer B. A., B. L., Hony. Editor, Arya Dharma and the following resolution was unanimously passed.

"Resolved to place on record, our deep sense of sorrow at the great loss sustained by the learned sanatanist Hindus and especially by the Sri Vidya Upasakas by the untimely demise of M. R. Ry. G. V. Ganesa Iyer Avl, B. A., B. L., who by his versatile intelect and learned expositions on Sri Vidya did invaluable service to the Hindu Religion and that the same be communicated to his family and to his brother Mr. G.V. Venkatarama Iyer B. A., B. L., through the Manager Arya Dharmam."

(Proposed by Mr. E R. Krishnaswami Iyer, Vice President & Seconded by Mr. Anjaneya Iyer, a member of the Sabha.

CONDITIONS OF LIFE IN RUSSIA.

(From the B. P. S. News Bulletin.)

Sir Fergus Graham in a meeting during his recent North Cumberland tour said there was a great deal of misunderstanding in to conditions in Russia today. Visitors to the country were struck by the fact that there were no old people living there. The reason was that the old people could not survive under the servile conditions under which the people lived- There was no private property and no privacy in Russia; there was no religion except the worship of Stalin. There were three classes in Russia. The first were the privileged Communists who supported Stalin's forced dictatorship, numbering two and a half millions. Then there was the half-preferential community-workers for the State and People whose conditions of life did not compare favourably with those on the 'dole' in Great Britain - numbering 15 millions, and the third class were the 145 million peasants. *No* one in Russia was allowed to write an uncensored letter. Yet they found people supporting the Russian systems, To one such person, only the previous night, he offered a single ticket to Russia, but he would not accept it. (Laughter).

It is a long age since the Hindus had forgotten the art of real political organisation. How else can we account for the succession of alien dominations? Even today the Sanatanists representing the core of Hindu Society would fain follow their Dharma without ever caring for politics. They may be willing to leave politics alone, but politics refuses to leave them alone.

* * * * * *

The socialist challenge should be treated as a cultural challenge threatening to tear up by the roots all the social values to which we have been accustomed. It seeks to impose upon us a radically different way of living.

ஆர்யதர்மம்

4 27

22

15-7-1937

215193

215123
28 JUL 1937
411

Registered No. M. 2913.

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 22 | கும்பகோணம். கலி 5039 ஈஸ்வர-௵ ஆனி-மீ 32உ 1937-௵ ஜூலை-மீ 15உ | வ 27

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0

தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்

பதவி யேற்புத் தீர்மானம்.
எங்கும் திருப்தியாம்:

காங்கிரஸ் மந்திரி பதவியேற்கலாமென்று காரியக்கமிட்டி அநுமதி கொடுத்ததைப்பற்றி தேசத்தில் எல்லாக்கக்ஷிகளும், எல்லாப்பத்திரிகைகளும் மிகுந்த திருப்தி காட்டுகின்றன. இங்கிலாந்திலும் இப்படியேதான் இருக்கிறதாம்.

காங்கிரஸ் அபேதவாதிகளுக்கு இத்தீர்மானம் பிடிக்காவிட்டாலும் அவர்கள் இத்தீர்மானத்திற்குக் கட்டுப்பட்டு ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறார்களாம்.

காங்கிரஸ் மந்திரிகள் 500ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறக்கூடாதென்றும், காங்கிரஸ் சட்டஸபை வேலைகளைக் காரியக்கமிட்டி மேற்பார்வையிடுமென்றும், அதற்காக ஒரு கமிட்டி நியமிக்கப்படுமென்றும் தெரிகிறது.

படேல்—நரிமன் தகராறு,

பம்பாய் சட்டஸபைக்கக்ஷித்தலைவராகத்தாம் நின்றதை எதிர்த்ததற்கு விரோதமாக ஸ்ரீமான் படேல் வேலை செய்தாரென்று ஸ்ரீமான் நரிமன் ஒரு ஆக்ஷேபணையைக் காரியக்கமிட்டியிடம் தெரிவித்திருந்தார். காந்திஜியின் யோஜனையின் மேல் இந்தத்தகராறை விசாரிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறதாம். படேலும், நரிமனும் தங்கள் தங்கள் கக்ஷியை வெளியிட்டு ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஷௌகத் அலி பயமுறுத்தல்.
நேருவைக் கண்டிக்கிறார்.

ஜான்ஸி உபதேர்தலில் காங்கிரஸுக்கும் லீக்குக்கும் நடக்கும் போட்டியை முன்னிட்டு லீக்கின் சார்பாக ஷௌகத்அலி பிரசாரம் செய்ய முன் வந்திருக்கிறார்.

இவர் நேருவுக்கு விடுத்துள்ள பதிலில், நேருஜி எப்பொழுதும் எங்கும் தமது அதிகாரமே மேலிட்டிருக்கவேண்டுமென்று நினைப்பதாயும், நேருஜி, ஹிந்துக்கள், மஹம்மதியர், முதலிய எல்லோருடனும் சண்டையிடுகிறாரென்றும், ஆனால் முஸ்லீம்கள் இதை ஒருபோதும் ஸஹிக்கமாட்டார்களென்றும், முஸ்லீம்கள் அந்நியர்களுக்கு [illegible] களாக இருக்கமாட்டார்களென்றும் முஸ்லீம்கள் விஷயத்தில் நேருஜி தலையிட்டால் இந்தியாவில் பெரிய உள்நாட்டுச்சண்டை ஏற்படுவது நிச்சயமென்றும் ஹிந்துமுஸ்லீம் கலகம் ஏற்படுமென்றும் பயமுறுத்தியிருக்கிறார்.

ஆலயப்பிரவேசத்தால் பயனில்லை.
தீண்டாமை விலகாது

கேரளத்தில் தீயவகுப்பிலிருந்து சீக்கியமதத்தில் புகுந்து ஜடசிங் என்ற பெயர் வகிக்கும் ஒருவர் அங்குள்ள தாழ்ந்த வகுப்பாருக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

ஆலயப்பிரவேசக் கிளர்ச்சியால், தீயர் சமூஹத்திற்கு எவ்வித நன்மையும் முன்னேற்றமும் ஏற்படாதென்றும், ஸமூஹ ஸமத்வம் இதனால் ஒருகாலும் கிடைக்காதென்றும், ஆலயப்பிரவேச உரிமை கிடைத்தால் கூட தீண்டாமை போய்விடாதாகையால், எல்லாத் தீயர்களும் சீக்கியமதம் புகுவதுதான் நல்லதென்றும் அவர் அதில் சொல்லுகிறார்.

Re: The Estate of Mr. V. R. Srinivasan Under administration by Trustees.

வீடு, காடிகானா ஏல நோட்டீஸ்.

கும்பகோணம் பெரியதெருவிலிருக்கும் ஸர்வே 683 நம்பரும் டோர் 54 நம்பரும் உள்ள கட்டுக்கோப்பு தார்சு மெத்தைமேல் மாடி கட்டிடமுள்ள வீடு ஒன்றையும், ஷை தெருவிலுள்ள 813 நம்பர் உள்ள காடிகானாவையும், 1937-ம் ௵ ஆகஸ்டு-மீ 7உ [illegible] எஸ்டேட் டிரஸ்டிகளால் கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் ரோடு, 29, நம்பர் கட்டிடத்தில் பகிரங்கமாய் ஏலம் போடப்படும். ஏல நிபந்தனைகளுக்கும், மற்றும் இதர விபரங்களுக்கும், கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் ரோட்டு 29-நம்பர் கட்டிடத்திலிருக்கும் மானேஜிங் டிரஸ்டியிடம் தெரிந்து கொள்ளலாம்.

K. Rm. சிங்காரம் செட்டியார்.
A. R. ராமய்யர்.
S. மகாலிங்கய்யர், B. A. B. L.
டிரஸ்டிகள்.

முக்கிய கவனிப்பு
3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது.)
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— என் கண்ணுசாமி பத்தர்.
பெரியதெரு. கும்பகோணம்

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J S & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஷிட் ஜெம்வேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட் பெரியதெரு, கும்பகோணம்

நாளது ஈச்வர-வருஷத்திய அத்வைத ஸபையில் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

நாளது ஈச்வர வருஷத்திய அத்வைதஸபையில் வேதாந்தம், பக்தி முதலிய விஷயங்களை உபன்யாஸ விஷயமாகக் குறிப்பிடுவதோடு, தர்ம சாஸ்திர சம்பந்தமான விஷயங்களையும் உபன்யாஸ விஷயங்களாக சேர்த்தெடுக்கவேண்டியதும் தற்போது வெகு முக்கியமாயிருக்கிறது. வேதாந்த வித்யாப்யாஸத்திற்கும் மூலகாரணமாயுள்ள வைதிக வர்ணாச்ரம தர்மானுஷ்டானங்களுக்கெல்லாம் பல வழிகளில் ஆபத்துக்காலம் தற்போது நேர்ந்திருப்பதை பண்டிதர்கள்தான் போக்கடிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அடியிற்கண்ட மாதிரியில் தர்மசாஸ்திர ஸம்பந்தமான விஷயங்களை வித்வான்கள் விமர்சித்தல் நலமென்று நான் கருதுகிறேன்.

(1) பிரமாண விவரண பூர்வம், அஸ்பிருச்யர்களின் ஆலயப்பிரவேசவாத நிராகரணம்.

(2) பதநீய, மஹாபாபாதி பாபங்களையும் அதன் பலன்களையும், அதற்குரித்தான ப்ராயச்சித்தங்களில் முக்ய, கௌண பக்ஷபேதங்களையும் சாஸ்திரீயமாக நிரூபித்தல்.

(2) நித்ய, நைமித்திகாதி கர்மானுஷ்டான விஷயத்தில் இப்போதுள்ள ந்யூநதைகளும் சாஸ்திரீயமான அதன் பரிஹாரோபாயங்களை விமர்சம்பண்ணுவதும்.

(4) ப்ராசீந ராஜநீதி நிர்வாஹ ரீதியும், "ராஜா காலஸ்யகாரணம்" என்ற ச்லோக தாத்பர்யமும்.

(5) ஜன்ம ஸித்தஸ்வத்வ வாதமும், ஸர்வ ஸ்வத்வவாத நிராகரணமும்.

1. முதலாவது விஷயத்தில் நிரூபிக்கவேண்டியவைகளாவன:—

(1) ப்ரத்யக்ஷம், மனஸ்ஸாக்ஷி, தர்க்கம், இவைகளைக் காட்டிலும், சப்தப்ரமாணமே முக்யம். (2) வேதாகம தந்த்ரப்ராமாண்ய தாரதம்ய விசாரம். (3) வேத விரோதமில்லாத விஷயத்தில் தந்த்ராகமங்களையும் வைதிகர்கள் ஒப்புக்கொள்ளவேண்டுமென்பது. (4) பிறவியில் (ஸஹஜமான) அசுத்தி உண்டென்று நிரூபணம். (5) அஸ்பிருச்யஜாதி இருப்பதற்கு சுருதி, ஸ்மிருதி, ஆகமம், தந்த்ரம் இவைகளினின்றும் ஆதாரவசனங்கள். (6) தேவாலயமிருப்பதற்கும், தேவாலயங்களில் தேவ தர்சனம் அவசியமென்பதற்கும் வேதப்ரமாணவர்ணனம். (7) இதரப்ரமாண நிரூபணம். ஆலயங்களில் அஸ்பிருச்யாதி ஸங்கரஜாதிகள் பிரவேசித்தால் செய்யவேண்டிய ப்ராயச்சித்த விசேஷத்தை ஆதாரத்துடன் எடுத்துரைத்தல். (9) இவ்விஷயத்தில் சட்ட நிர்பந்த மேற்பட்டால் அஸ்பிருச்யேதரர்கள் செய்யவேண்டிய கார்யத்தை நிர்ணயித்தல். (10) திருவாங்கூர் ஆலயப்ரவேச விளம்பரம் அசாஸ்திரீயமென்று கண்டனம் பண்ணுதல். (11) கொச்சி மஹாராஜாவை அபிநந்தனம் பண்ணுதல். இவை முதலியன.

2. இரண்டாவது விஷயத்தில் விமர்சிக்கவேண்டியவைகளாவன:—

(1) பாபஸாமான்ய விசேஷ ஸ்வரூப நிரூபணம். (2) பாபப்ரவிருத்தி நிதானவர்ணனம். (3) பாபகர்மவிபாக விமர்சனம். (4) மஹாபாபாதி பாபவிசேஷங்களை ஸ்மிருதிகளில் சொன்னபடி விஸ்தரித்தல். (5) பிராயச்சித்தாதிகாரி நிர்ணயம். (6) புத்திபூர்வகமாயும் அபுத்தி பூர்வகமாயும், நிர்பந்த வசமாயும் செய்யப்படும் பாபங்களுக்குப் பிராயச்சித்த வியவஸ்தாவர்ணனம். (7) காலத்திற்கேற்றவாறு அதிலுள்ள கௌண, முக்ய பக்ஷபேதங்கள். இவை முதலியன.

3. இதில் சொல்லவேண்டியவையாவன:—

(1) ப்ராமண்ய ஸம்ரக்ஷணத்துக்கு நித்யாதி கர்மாக்கள் அவசியம். (2) அவற்றுள் முக்கியமாக அனுஷ்டிக்கவேண்டியவை. (3) அவற்றையும் ஸாங்கோபாங்கமாகச் செய்ய முடியாத ஸந்தர்ப்பத்தில் ஆதரிக்கவேண்டிய கௌண, ப்ரதிநிதி பக்ஷபேதவர்ணனம். (4) இதனை திருஷ்டாந்த மூலமாகக் காண்பித்தல். (5) அசக்தியாலோ, ராஜசாஸன நிர்பந்தத்தாலோ, வேறு எந்தக்காரணத்தாலோ ந்யூநதைகள் ஏற்பட்டால், அவற்றில் அங்கீகரிக்கத்தக்கவையை அங்கீகரித்து, தள்ளத்தகுந்தவையைத் தள்ளிவிட்டு, பிராயச்சித்த முள்ளவைகளை பிராயச்சித்த நிர்ணயம்செய்து வியவஸ்தை செய்யவேண்டியதின் ஆவச்யகதையை விஸ்தாரமாக வர்ணித்தல்.

(6) காலத்தையும், சக்தியையும், அனுசரித்து சாஸ்திரீயமான வழியில் தர்ம ஸம்ரக்ஷணம் அவச்யமெனல்.

(7) உபாத்யாயஸ்தானம் வஹிப்பவர்களின் அக்ரமங்களை எடுத்துக்காட்டல்.

(8) சப்தக்ஞானமுள்ளவர்களாயும், பாபபயமுள்ளவர்களாயுமுள்ள உபாத்யாயர்களையே நியமித்துக்கொள்ளும்படி கிருஹஸ்தர்களுக்குத் தெரிவித்தல்.

(9) லௌகிக, வைதிக, விபாகம் பிசகென்றும், லௌகிகர்களும், ருத்ரம், சமகம், புருஷஸூக்தம், முதலிய உபயுக்தவேத பாகத்தையும், ஸந்த்யை, ஜபம், தர்பணம், சிராத்தம் இவைகளையும் நன்கு தெரிந்துகொள்ளவேண்டுமென்றும் வற்புறுத்தல்.

(10) நாஸ்திகப்ராம்மணர்களைக் கண்டித்து ஆஸ்திக ப்ராம்மணர்களை ஒற்றுமையுடனிருக்குமாறு வேண்டிக்கொள்ளல். இவை முதலியன.

4 இதில் விசாரிக்கவேண்டியவை:—

(1) அரசனொருவன் அவசியமென்று கூறல்.

மதாந்தரஸ்தனை ராஜா பரிபாலனம் பண்ணவேண்டிய நீதி நிரூபணம்.

(3) ஜநநாயகத்தையும், மெஜாரிட்டி மைனாரிட்டி ப்ரமாணத்தையும் கண்டித்தல்.

(4) ஏகாதிபத்ய அரசாக்ஷியில் உள்ள ஸாதக பாதகங்கள்.

(5) பிராசீன ராஜாங்கத்தில், தர்ம, நீதி, சபைகளின் ஸ்வரூப வர்ணனம்.

(6) அரசனுக்கு தர்மாதர்ம விஷயத்தில் ஸ்வாதந்த்ரயமில்லை என்று நிரூபித்தல்.

(7) திருவாங்கூர் அரசனின் ஆலயப்ரவேச விளம்பரத்தில் இதை ஸங்கமனம் பண்ணுதல். மஹாபாரத வசனம் அதர்மத்தை த்தர்மமாக மாற்றுவதற்கு ஆதாரமாகாதென்று விஸ்தரித்தல்.

(9) அந்த சுலோகத்திற்கு பூர்வோத்தர ஸந்தர்ப்பத்தை அனுஸரித்து அர்த்தவர்ணனம்.

(10) இதை நிர்ணயிப்பதற்காகச் சென்னையில் நடக்கப்போகும் சீர்திருத்த வித்வத் பரிஷத்தின் கண்டனமும், ஸம்ஸ்கிருத வித்வான்கள் போகக்கூடாதென்று நிரூபித்தலும் இவை முதலியன.

5. இதிலடங்கிய விஷயங்களாவன:—

(1) ஸ்வத்வம், ஜன்மஸித்தமா? தாயபாகத்திற்குப் பிறகு நடுவில்வந்ததா?

(2) ஸ்வஸ்வாமி பாவஸம்பந்தம்.

(3) கர்மானுஸாரேண ஸ்வத்வதாரதம்யம்.

(4) கர்மா, ஜன்மாந்தரம், தெய்வம், மதம் இவைகளை புறக்கணித்தல் தவறு.

6 (5) தைவ புருஷகார ஸ்வரூபநிரூபணம்.

(6) ஸ்வத்வ ஸமத்வத்திற்குச் சாஸ்திரமில்லை.

(7) அதிலுள்ள அனர்த்தங்களின் விவரணம்.

(8) காங்கிரஸ்காரர்களின் அபேதவாதம் அஸங்கதம் என்பது முதலியன.

அத்வைதஸபா பண்டிதர்.

திருவண்ணாமலையில் ஏமாற்றம்!

திருவண்ணாமலை ஜில்லாபோர்டுத் தலைவர் காங்கிரஸ் வாதியாயிருந்தும் அதன் விதிகளுக்கு மாறாக காங்கிரஸுக்கே விரோதம் செய்வதால் அவர்மீது நம்பிக்கையில்லைத் தீர்மானம் கொண்டுவரவேண்டுமென்று தமிழ்நாடு கார்யக்கமிட்டி உத்திரவு போட்டிருந்தது. ஆயினும் இந்த தீர்மானம் தோற்றுப்போய்விட்டது. காங்கிரஸ் மெம்பர்களே வெகுபேர் வேண்டுமென்றே அச்சமயம் அங்கு வாராமலிருந்து தீர்மானம் தோற்றுப்போகும்படி செய்துவிட்டனர். கார்யக்கமிட்டியின் உத்திரவைக்கூட அவர்கள் லக்ஷ்யம் செய்யாததைப்பற்றி மிகுந்த ஏமாற்றமும் அவமானமும் காங்கிரஸ் வாதிகளுள் ஏற்பட்டிருக்கிறதாம்.

பாலஸ்தீனத்தில் யூதர் பிரதேசம்.

அரேபியாவிலுள்ள பாலஸ்தீன நாட்டில் வெள்ளைக்கார யூதர்கள் அதிகமாகக்குடியேறி அங்கு தங்கள் ஆதிக்யத்தை ஸ்தாபித்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள். இதை அந்த தேச ஜனங்களாகிய அரேபியர் ஆக்ஷேபிக்கிறார்கள். இதனால் அங்கு அடிக்கடி கலஹமும் கொலைகளும் நடந்துவருகின்றன.

ஸர்வதேச சங்கத்தின் நிர்வாஹத்திற்குள்பட்ட அந்ததேசத்தில் பிரிடிஷார் அதிகார பத்திரமூலம் ஆட்சி செலுத்தி வருவதால், இந்த சச்சரவைத் தீர்க்க லார்டு பீல் என்பவரின் தலைமையில் ஒருகமிஷன் நியமித்து விசாரணை நடத்தினார்கள். அதன் பயனாக வெளியிடப்பட்டுள்ள யாதாஸ்தில் பாலஸ்தீனத்தை இரண்டாக்கி, யூதர் வசிக்குமிடத்தையும், அரேபியர் வசிக்குமிடத்தையும் பிரித்துவிடவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

இந்த முடிவு இருகாப்பினருக்கும் அதிருப்தியைக் கொடுத்திருக்கிறது.

இந்தியாவிலோ அந்நியர்கள் குடியேறுவதில் எவ்வித கஷ்டமும் கிடையாது!! இது சிறந்த வீடல்லவா?

டாக்டர் கஸின்ஸுக்கு அநுக்ரஹம்!

டாக்டர் கஸின்ஸ் என்ற வெள்ளைக்காரர் தியாஸபிஸங்கத்தைச் சேர்ந்தவர். அவர் ஸமீபத்தில் திருவாங்கூரில் ஹிந்துமதப்பிரவேசம் செய்து ஸ்ரீ பத்மநாபர் கோவிலுக்குள்ளும் போய் ஸ்வாமியை தர்சித்தாரல்லவா? நவீந பத்மநாபர் தமது பக்தராகிய கஸின்ஸுக்கு அநுக்ரஹம் செய்துவிட்டார்.

திருவாங்கூரில் ஏற்படப்போகும் ஸர்வ கலா ஸ்தாபன விஷயமாகப் பூர்வாங்க வேலைகளைச் செய்ய இவர் ஸ்பெஷல் உத்யோகஸ்தராக ஸசிவோத்தமனால் நியமிக்கப்பட்டிருக்கிறார். டாக்டர் கஸின்ஸ், அத்தேச மஹாராஜா, ராணி முதலியவர்களுடன் ஸமீபத்தில் ஜாவா முதலிய வெளிதேசங்களுக்கு யாத்ரைசெய்து வந்ததும் பலருக்குத் தெரியும். புதிய பத்மநாபர் வரப்ரஸாதியாகிவிட்டார்!

நிலவரி விசாரணைக் கமிட்டியின் முடிவு.

சென்னை மத்யகால மந்திரிகள் நியமித்த நிலவரி விசாரணைக்கமிட்டியானது தனது வேலையை முடித்து யாதாஸ்தும் வெளியிட்டுவிட்டது.

1913-14 வருஷங்களுக்குப் பிறகு மறுபைஸல் காரணமாக உயர்த்தப்பட்ட வரியை ரத்துசெய்துவிடவேண்டுமென்றும் கோதாவரி கிருஷ்ணா ஜில்லாக்களில் தண்ணீர் தீர்வையை 5 ரூபாயாகக் குறைத்தும் இனி எங்கும் மறுபைஸலே கிடையாதென்றும் யாதாஸ்தில் எழுதப்பட்டிருக்கிறது.

சித்திரராமாயணத் திறப்புவிழா.

திருக்குடந்தை ஸ்ரீ ராமஸ்வாமிகோவில் உட்பிராகாரத்தில் வெகுகாலமாயிருந்துவந்த இராமாயண கதாரூபமான சித்திரமானது மலினமாயிருந்து வந்ததைப் புதுப்பிக்கப் பல வருஷங்களாக முயற்சி நடந்து கடைசியாக ரிடையர்ட் டெப்டிஸ்கூல் இன்ஸ்பெக்டரான ஸ்ரீமான் வி. விஜயராகவாசாரியர் அவர்களால் 2 வருஷங்களுக்கு முன் இந்தக் கைங்கர்யம் ஆரம்பிக்கப்பட்டது, இந்தச் சித்ர வேலைகள் பூர்த்தியாகி 12வ திங்கள் கிழமை மாலை 6 மணிக்கு திவான் பஹதூர் ஸ்ரீ-உ-ப-வே வி. கே. ராமானுஜாசாரியஸ்வாமிகளால் திறப்புவிழா நடத்தப்பட்டது. அன்று மத்தியானம் ஸ்ரீ ராமபிரானுக்கு ஸகல உபசாரங்களுடன் காவேரியிலிருந்து தீர்த்தம் கொண்டுவரப்பட்டு பிரபலமான திருமஞ்ஜனோத்ஸவம் நடைபெற்றது.

மாலை 6 மணிக்குத் திறப்புவிழாவை முன்னிட்டு ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. நகரப் பிரபலஸ்தர்களும், பொது ஜனங்களும் வெகுபேர் விஜயம் செய்திருந்தனர். முனிஸிபல் சேர்மன் ஸ்ரீமான் சிங்காரம் செட்டியார் அவர்கள் இந்த சித்திர ராமாயண கைங்கரிய விஷயத்தில் ஸ்ரீமான் விஜயராகவாசாரியர் எடுத்துக்கொண்ட சிரத்தையைப் பாராட்டிவிட்டு திவான் பகதூர் வி கே. ராமானுஜாசாரியஸ்வாமிகளை அந்தச் சித்திரங்களைத் திறந்து வைக்கும்படி கேட்டுக்கொண்டார்

ஸ்ரீமான் ராமானுஜாசாரியர் பேசுகையில் இந்த சித்திர கைங்கரியத்தின் ஆரம்பவரலாற்றைக்கூறி இதற்கு 3 ஆயிரத்திற்குமேல் செலவு ஆகியிருப்பதையும் அநேக கனவான்கள் நன்கொடை கொடுத்திருப்பதாயும் ஆயினும் இன்னும் 400 ரூ. சொச்சம் துண்டு விழுந்திருப்பதாயும் இந்தத் தொகையையும் பொதுஜனங்கள் கொடுத்து உதவவேண்டுமென்றும், சித்திரராமாயண புஸ்தகமொன்றை ஒவ்வொருவரும் வாங்கி உபகரிக்கலாமென்றும், ஸ்ரீமான் விஜயராகவாசாரியர் இவ்வூரில் எல்லா தேவாலயங்களிலும் அடிக்கடி விசேஷ கைங்கரியங்கள் செய்துவருவதைக் குறிப்பிட்டும், அவர் அரோக திடகாத்திரராக இருக்கும்படி ஸ்ரீராமன் அருள் புரியவேண்டுமென்றும் பிரார்த்தித்தார்.

மாஜி, ஜில்லா ஜட்ஜ் ஸ்ரீமான் திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார் சென்னையிலிருந்து ஒரு அபிநந்தனச் செய்தி அனுப்பியிருந்தார். அது அச்சிட்டு ஸபையில் எல்லோருக்கும் வழங்கப்பட்டது. அதில் அவர், தமக்கு அந்த சித்ர ராமாயணத்தில் அதிக உத்ஸாகம் உண்டென்றும் சிறு வயதில் அடிக்கடி அங்குபோய் அதைப் பார்ப்பது வழக்கமுண்டென்றும் இப்போதும் அதைப் பார்த்ததில் ஸந்தோஷமுண்டென்றும் ஸ்ரீமான் விஜயராகவாசாரியார் இதைப் புதுப்பித்துச் செய்துள்ள கைங்கர்யம் பாராட்டத் தக்கதென்றும், காந்திஜீயின் தலைமையில், காங்ரெஸ்காரர்கள் ராமராஜ்யத்தைஸ்தாபிக்க முன்வந்திருக்கும் இச்சமயத்தில் இந்த சித்திர ராமாயணம் திறக்கப்படுவது பொருத்தமாயிருப்பதாயும் சொல்லியிருந்தார்.

ராமாயணம்,பிரமமஸ்ரீ அப்புசாமி சாஸ்திரிகள் ஸ்ரீமான் கோபாலதேசிகாசாரியார்ஆகியவர்கள் ஸ்ரீமான் விஜயராகவாசாரியரின் கைங்கரியத்தைப் புகழ்ந்து பேசிய பின் ஸ்ரீமான் விஜயராகவாசாரியார் தமக்கு இவ்விஷயத்தில் உபகரித்த பலருக்கும் நன்றி செலுத்தினர்,

பிறகு வாத்யகோஷத்திற்கிடையே ஸ்ரீமான் ராமாநுஜாசாரியரால் பிராகாரத்தின் கதவு திறக்கப்பட்டு எல்லோரும் உள்ளே சென்று சித்திரங்களைப் பார்த்து மகிழ்ந்தார்கள். ஸ்திரீகளும் புருஷர்களுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் கூட்டம் கூட்டமாகச் சென்றுப் பார்த்தவண்ணமாயிருக்கிறார்கள்.ராமாயணக் கதை முழுவதும் அழகிய ரூபங்களில் வெகு நன்றாக எழுதப்பட்டிருக்கின்றன. பட்டாபிஷேக ஸேவை வெகு அத்புதமாயிருக்கிறது.

இந்த வைபவத்தை முன்னிட்டு உடையாளூர் பிரும்மஸ்ரீ அப்புசாமிசாஸ்திரிகளால் நவாஹ ராமாயணம் பிரவசனம் நடந்துவருகிறது.

ஒரு நிருபர்.

ஊருக்கிளைத்தவர்.

வேறுபட்டுக்கிடப்பதே உலக இயற்கை. பல்வேறு வேற்றுமைகளிலும் ஒருமையைக் காண்பதே அறிவுக்குப் பயன். வெகுளியால் ஒன்றை வெறுப்பதும், மற்றொன்றைத் தூஷிப்பதும் அறிஞர் கடனாகா. தீர்க்காலோசனையின்றிப் பேசுவதெல்லாம் பயன்தரா. பேசுவோரது வெண்மையையே புலப்படுத்தும். வைதிகர், லௌகிகர் என்ற வகுப்பின் தத்துவம் நன்கு உணராமலே ஒருவரை ஒருவர் வெறுக்கின்றனர் பண்டிதரை என்நாடு செவ்வையாய்க் கொண்டாடுகிறதோ அந்நாடே நாகரீகமுள்ள நாடு, அங்கனில்லாத நாடே அநாகரீகமான நாடாகும்-

மேனாட்டு நாகரீகங்களை அங்ஙனே கைக்கொண்டொழுகச் சித்தமாயிருக்கும் நம்மவரிற் பலர், அவர்கள் அனுஷ்டித்துவரும் நல்விஷயங்களை ஏனோ விலக்கிவிடுகின்றனர்- குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வதற்காகவோ? இங்கிலாந்திலுள்ள வைதிகத் தலைவர் பிராசீன சம்பிரதாயத்துக்கு மாறி நடப்பதாக இருந்தால் அன்னவர் மன்வராக இருக்கமுடியாது. அவர் சிரசில் முடிசூட்ட முடியாதெனினும் மன்னரையே மாற்றவேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது. மன்னவர் முடி துறந்ததாக அவரை வீணே புகழ்தல் எதைக்கொண்டோ? இத்தத்துவத்தை நன்கு ஆராய்ந்தால் வைதிகரையும் பண்டித கோஷ்டியினரையும் ஒருவரும் இகழ மாட்டார்கள். இகழ்ந்தால் பரீக்ஷித்துக்குவந்த கதிதான் வரும்-

அயோத்யாதிபதிகளனைவரும் வசிட்டன் கட்டளைப்படி நடந்தே உய்ந்தனர்- ஞான வசிட்டன் என இவரை வேதமே கொண்டாடா நிற்கும்- அநேககாலங்களில் ராஜாயில்லாத சமயத்தில் இவரே ராஜ்யத்தை நடத்தியுள்ளார். வசிட்டருக்கு சமயோசிதபுத்தியும் காலத்துக்கநுகுணமான கார்ய நிர்வாகமும் இல்லை என்பரேல் அவரை என்னென்று கொள்வது? மொகலாய அரசர்கள் காலத்தில் சிறந்த பண்டிதர்களாலேயே தத்தளிப்புவருவது தடுக்கப்பட்டதாக சரித்திரவாயிலாக அறிகிறோம், சிறந்த வைதிக பண்டிதோத்தமர்கள் ராஜ நிர்வாகங்களை வெகு சாமார்த்தியமாய் நடத்திவந்த திருஷ்டாந்தங்கள் பல.

ஊருக்கிளைத்தவன் பிள்ளையார்கோவில் ஆண்டி என்ற கணக்கிலே வைதிகரையும் பண்டிதரையும் அவமதிப்பாக நடத்துவது பெருந்தன்மைக்கு அழகில்லை. இன்சொல் இனிது ஈன்றல்காண்பான் எவன்கொலோ வன்சொல் வழங்குவது', என்றும் இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருக்கக் காய் கவர்ந்தற்று என்ற வள்ளுவர் வாய்மொழிகள் ஒவ்வொருவர் மனத்தின் கண் பிரதிஷ்டிதமாக யிருப்பின் அநேக அல்லல்கள் பஞ்சாம் பறக்கும்- இனியாவது பண்டித கோஷ்டியை நன்கு பரிபாலித்து நடத்துவாராக. பகவானுக்கு அபிமதன் ஞானியே என்பதும் அனைவர் ஞாபகத்திலும் இருக்க வேண்டும்-

நமது நிருபர்.

ஸநாதனிகள் என்ன செய்யப் போகிறார்கள்.?

சென்னை மாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கக்கார்யதரிசிக்கும், ஸ்ரீமான் ஸி.ராஜகோபாலாச்சாரியார், பண்டித ஜவர்லால் நேரு இவர்கட்கும் நடந்த கடிதப்போக்கு வரவு சமாச்சாரம் நாடறிந்த விஷயம். தூதாகச் சென்ற மாருதியை ஹிம்ஸிக்க நினைத்தனர். தூதாய்ச்சென்ற கண்ணனை முடிக்க ஏற்பாடு செய்தனன் துரியோதனாதியர். கடைசியில் நடந்ததென்ன? ஆனாலும் மாருதி, கண்ணன் இவர்கள் ஆற்றல் ஆச்சரியப்படத்தக்கது:

ஸநாதனிகளால் ஒன்றும்செய்ய இயலாது, வெறுமனே பேசுவர், காரியத்தில் சூரர்களில்லை என்று பிறர் கண்டால் ஏளனம்செய்யாது வேறென்ன செய்வர்? பண்டித நேருவின் மனோபாவம் ஸ்பஷ்டமாகத்தெரிந்தாகி விட்டது இனிமேலும் சமாதானத்துக்கு வழி உண்டோ என்பது நன்கு சர்ச்சிக்க வேண்டிய விஷயம், வருமுன்னர்க்காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்வைத்தூறுபோலக்கெடுமாதலின் நிமிஷம் தாமதியாது ஸநாதனிகள் கௌரவத்தைக்காப்பாற்றிக்கொள்ள முன்வரல் வேண்டும். கொம்பைவிட்டு வாலைப்பிடிப்பதில் பயனில்லை. சொல்லளவில் நிற்பதில் பயனின்று. செய்கையே வேண்டுவது. சுயநலப்பற்றற்ற சநாதனிகள் இனி என்ன செய்ய உத்தேசம்? விழிமின்! எழுமின்! கார்யங்கைகூடும் வரை உறங்கேன்மின். அச்சுதன் அருள் புரிகுவன்.

P. R. T.

மாத்வ கலைஞான சங்கம் கும்பகோணம்.

நமது நகர் மாத்வ கலைஞான சங்கத்தின் ஆதரவிலும் ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகள் மடத்தின் ஆதரவிலும் மார்க்கயம் கோட்டையிலிருந்து வந்திருக்கும் அத்வைதபண்டிதர் ஸ்ரீமான் வேதவ்யாஸா சாரியார் அவர்களால் முறையே 'நாஸ்திகவாதகண்டனம்' 'குருபக்தியும் ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகளின் மகிமையும்' என்ற இரண்டு அரிய உபந்யாஸங்கள் செய்யப்பட்டன. என்று ஸ்ரீ எம் ராமராவ் அறிவிக்கிறார்.

மதருஸ் லா ஜர்னல் அச்சுக்கூடம் பிரசுரங்கள்.

	ரூ.	அ.	ப.
வால்மீகி ராமாயணம் 7 காண்டம் (தேவநாகாலிபியில்)			
ஃபின்பேப்பர்	5	0	0
கிக்பேபர்	4	0	0
த்வாதச உபநிஷத் (தமிழில்)	3	0	0

Books:—
by Mr R. KRISHNASWAMI IYER M.A. B.L.,

From His Master's Lips	1	0	0
Thoughts from Gita	1	0	0
Hindu Ideal	3	0	0

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-ஞு ஆனி-மீ 32உ

கீதை போதிப்பதென்ன ?

டாக்டர் குருத்கோடி என்கிறவரைப்பற்றி நமது வாசகர்கள் நன்கு அறிந்தவர்களே. இவர் ஸ்ரீ சங்கராசார்யர் என்ற பெரிய பெயர் வைத்துக்கொண்டு பல விரோதக் கொள்கைகளையும், செய்கைகளையும் கொண்டிருப்பதும் தெரிந்த விஷயமே. இவர் சென்ற வாரம் பூனாவில் பேசுகையில் ஸநாதன தர்மிகளுக்குப் புத்திமதி சொல்லியும், பகவத்கீதையின் உபதேசத்தைப் பற்றி விளக்கியும் ஒரு பிரஸங்கம் செய்திருக்கிறார்.

"பழைய ஸ்மிருதிகளை குருட்டுத் தனமாக அநுஸரிப்பது ஸநாதன தர்மமல்லவென்றும், காலத்திற்கு ஏற்றபடி மாறுதல்செய்து கொள்வதே நியாயமென்றும்" இவர் ஸாதிக்கிறார். இந்த 'ஜகத் குரு'வின் உபதேசமொழியைப் பின்பற்றும் ஸநாதன தர்ம சிஷ்யர்கள் இவருக்கு எவ்வளவு பேர் கிடைப்பார்களென்பது தெரிந்ததே. ஆர்யஸமாஜி அவ்வியவஸ்தைக்காரர் சிலரைத் தவிர தார்மிகர்களில் எவரும் இந்த அபத்தத்தை அங்கீகரிக்க மாட்டார்கள்.

கீதையைப் பற்றி இவர் வெளியிட்டுள்ள அபிப்ராயமும் புதிதல்ல. அனேகமாகச் சீர்திருத்தவாதிகள் யாவருமே கீதையைப் பற்றி இந்தக் குருட்டுக் கொள்கையைக் கொண்டிருப்பது நாம் அறிந்ததே "தற்காலப் போக்கானது ஸமத்வத்தை விரும்பி நிற்பதாயும், கீதை இந்த ஸமத்வத்தை போதிப்பதாயும், தற்காலத்தில் தோன்றிய இது போன்ற பிரச்னைகளைத் தீர்க்க கீதையானது உதவியாக இருப்பதாயும், இவர் கூறுகிறார். சீர்திருத்தக்காரர்கள் கீதையானது தங்களுக்கு நெருங்கிய ஆப்தக்ரந்தமென்று பிரமித்த போதிலும் உண்மையில் அது அவர்களுடைய கொள்கைக்குப் பெரிய கோடரி என்பதை அவர்கள் அறிவதில்லை. வேண்டுமென்றே விபரீத அர்த்தம் செய்யாதவரையில் கீதையின் வசன நடையாலும் ஸ்பஷ்டமான தாத்பர்யத்தாலும் அது சீர்திருத்தத்தை வேருடன் வெறுக்கின்றதென்பதை மறுக்க முடியாது. கீதையில் ஸமத்வம் போதிக்கப்படுவதாக டாக்டர் குருத்கோடி நினைக்கிறார். கீதை போதிக்கும் ஸமத்வம் என்ன ? இவர் விரும்பும் ஸமத்வம் என்ன? பிராமணனும், பஞ்சமனும் கலந்திருப்பதும், வர்ண ஆச்ரம முறையை விட்டு எல்லா ஜாதியாரும் விவாஹாதிகளால் கலப்பு செய்துகொள்வதுமே இவர் விரும்பும் ஸமத்வமாகும். இந்த வர்ணஸங்கர ஹேதுவான ஸமத்வத்தை கீதை வெகு பலமாகக் கண்டிப்பதன்றோ உண்மை? கீதையின் ஆரம்பத்திலேயே இவ்விஷயம் தெளிவாக இருப்பதை வர்ணாச்ரம விரோதிகள் எப்படி மறைக்க முடியும் ? அர்ஜுனன், தான் யுத்தம்செய்ய மறுத்ததற்குக் காரணம் கூறுகையில், கணக்கற்ற ஜனங்கள் மடிவதன் மூலமாகப் பல குடும்பங்கள் நசிக்கவும், அதனடியாக ஜாதி குல தர்மங்கள் அழிந்து, ஸ்திரீகளும் கெட்டு வர்ணஸாங்கர்யமென்ற பெரிய ஆபத்து நேருமென்றும், நல்ல ஸந்ததிகளால் கொடுபட வேண்டிய சிரார்த்த, பிண்டதானாதிகள் இல்லாமல் பித்ரு தேவதைகள் வீழ்ச்சியடைவார்களென்றும் அர்ஜுனன் பயப்படுகிறான். இங்கு வர்ணஸாங்கர்யம் ஒருமுக்ய அனர்த்தமாகக் கூறப்படுகிறது இது ஜாதி ஸமத்வவாதத்தை எவ்வளவு தூரம், தூரத்தியடிக்கிறதென்பது விளங்கவில்லையா ?

மேலும் இந்தவிடத்தில் கீதையில் காணப்படும் ஜாதி தர்மம், குலதர்மம், ஜாதிக்கலப்பு, பித்ரு தேவதை, பிண்டம், உதகம், நரகம் போன்ற சொற்கள் வர்ணாச்ரமத்திலன்றி வேறு எந்த மதத்திலாவது வியவஹாரத்திலோ கொள்கையிலோ இருக்கின்றனவா ? காலத்திற்கேற்றபடி தர்மத்தை மாற்றலாம் என்று டாக்டர் குருத்கோடி வாதிப்பதற்கும் இங்கு தகுந்த பதில் இருப்பதை அவர் கவனித்தாரா ? ஸமயத்திற்கேற்றபடி தர்மத்தை மாற்றமுடியுமானால் அர்ஜுனன் ஏன் இவ்வளவு பயப்பட வேண்டும்? பெரிய யுத்தம் நேர்ந்துள்ள ஆபத்துக்காலத்தில் கூட அவன் ஜாதி குல தர்மங்களை மாற்ற முடியுமென்று நினைத்திருந்தால் இப்படிப் பேசியிருக்க நியாயமில்லையே!

மேலும், கீதையின் ஒவ்வொரு அத்யாயத்திலும் பகவான் வெகு பலமாக வர்ணாச்ரம முறைகளை வற்புறுத்திப் பேசியிருப்பதை சீர்திருத்தக்காரர்கள் மறந்துவிட்டார்கள்.

"எந்த மனிதனும் சாஸ்திரவிதிகளை அநுஸரித்தே நடக்கவேண்டுமென்றும், அப்படிச் செய்யாமல்காமகாரமாக, அதாவது தன் இச்சைப்படி நடப்பவன் இஹ, பரலோகங்களில் நன்மை அடையமாட்டா"னென்றும் பகவான் சொல்லுகிறார். ஸ்வதர்மமே அந்தந்த ஜாதிக்கு ஹிதம் செய்யுமென்றும், பிறருடைய தர்மத்தை எந்த ஆபத்காலத்திலும் பின்பற்றக்கூடாதென்றும் பகவான் போதிப்பதின் தாத்பர்யமென்ன ? 18-வது அத்யாயத்தில் "எந்த ஜாதியானும் ஸ்வதர்மத்தை அநுஷ்டிப்பதாலேயே நற்கதியை அடையலா"மென்று சொல்லிவிட்டு ஒவ்வொரு ஜாதிக்கும் ஏற்பட்டுள்ள தர்மங்களையும் தெளிவாகக் கூறியிருக்கிறார். கீதை ஜாதி ஸமத்வம் போதிப்பதாகச்சொன்னால் இவ்வாறு ஜாதி தர்மமும், ஜாதி வ்யவஸ்தையும் சொல்லுவது எப்படிப்பொருந்தும்? கீதையில் எல்லா பிராணிகளிடமும், ஸமத்வபுத்தி செய்யும்படி சொல்லியிருப்பது உண்மையே. அது ஆத்மாவைப் பற்றியவரையிலேயல்லது சரீரத்தைப் பற்றியதல்லவென்கிற வைதிகதர்ம தத்வத்தை அறிந்தவர்களுக்கு இத்தகைய குதர்க்கபுத்தி தோன்ற வழியேயில்லை. ஆனால் குருத்கோடியும் அவரது சீர்திருத்த கோஷ்டிக்கும் இந்த உண்மையை அறிந்து கொள்ள ஆவலோ, ஆற்றலோ உண்டா? தேசத்தில் அவ்யவஸ்தையையும், அதர்மத்தையும் பரவச் செய்யவேண்டியதல்லவோ அவர்களின் நோக்கம்? இதற்கு கீதையை ஏன் பிரமாணமாக இழுக்கவேண்டும்?

ஸ்ரீஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
நரஸிபூர்.
West Godavary Dt.

குறிப்புகள்

ஜாதி பேதமும், ஜாதித்வேஷமும்.

இன்று 20-வது நூற்றாண்டான நாகரிக காலத்தில்கூட உலகம் முழுவதும், ஜாதி பேதம், ஸ்வஜாதி அபிமானம், அந்நிய ஜாதி த்வேஷம் இவைகளை அடிப்படையாகக்கொண்டே எல்லா தேச ராஜ்ய நிர்வாஹங்களும் நடைபெற்று வருகின்றன என்பதை விவேகிகள் விமர்சிக்கலாம்.

ஒவ்வொரு தேசமும் தம் ஜாதியினரைக் காப்பாற்றவும் இதர ஜாதியாரை அடக்கவுமே வேண்டிய அளவு சட்டதிட்டங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஐரோப்பாவைப் பாருங்கள் ! ஆங்கிலேயன், பிரஞ்சுக்காரன், ஆஸ்திரியன், ருஷ்யன் என்ற பற்பல ஜாதிக்காரர்களும், தங்கள் ஜாதியார் மேன்மையுற்று விளங்கவும், தங்களது வியாபாரிகள் எங்கும் பரவித் தங்கள் இனத்தான் வாழ்ந்தால் போதுமென்றுமே நினைந்து ராஜ்யம் நடத்துகிறார்கள். ஒரு ஜாதியினுடைய தேசத்தில் மற்றொரு தேச ஜாதியான், வியாபாரமோ, உத்யோகமோ, செய்து குடியேறி வஸிப்பதென்றால் அதற்கு எவ்வளவோ நிர்ப்பந்தங்கள். ஐரோப்பிய தேசங்களில் தற்போது ஏற்பட்டுள்ள அமைதியின்மைக்கு ஜாதி த்வேஷமே முக்ய காரணம் என்பதை மறைக்க முடியாது.

வெள்ளைக்காரர்களில் யூதர் என்ற ஒரு பிரிவினர் இருக்கிறார்கள். இந்த ஜாதியார் புத்திமான்களாகவும், சுறுசுறுப்பாளிகளாகவும் இருப்பதால் எல்லா தேசங்களிலும் சுலபமாகக் குடியேறி ஆங்காங்கு ஸ்திரவாஸம் செய்துவருகிறார்கள் இவர்களைக் கண்டால் மற்ற ஜாதியாருக்கு அஸூயை. ஒவ்வொரு தேசத்தாரும் யூதர்களைத் தங்கள் தேசத்திலிருந்து விரட்டிவிட இப்போது பலமான வேலை செய்ய முன்வந்து விட்டனர். ஜர்மனியில் ஹிட்லர் இந்த யூத ஜாதியாரைத் துரத்த ஏற்பாடு செய்தார். யூதர்களின் வாஸனையே ஜர்மனியில் கூடாதென்றும், அவர்களுடன் விவாஹாதி சம்பந்தம் கூடாதென்றும், ஜர்மனியில் அவர்கள் நிலம் முதலிய ஸொத்துக்கள் வைத்துக்கொள்ளக்கூடாதென்றும் உத்திரவு போட்டார். அங்கிருந்து பல யூதர்கள் வெளியேறி விட்டார்கள். ஆனால் யூதர்கள் எங்குபோனாலும் துரத்தப்படுகிறார்கள். இங்கிலாந்தில் கூட ஒரு குறிப்பிட்ட இடத்தில் யூதர்கள் அதிகம் குடியேறுவதைப் பற்றி பார்லிமெண்டில் ஆக்ஷேபம் பிறந்தது.

இப்போது அரேபியாவில் யூதர்கள் அதிகம் குடியேறுவதால் தங்கள் ஜாதி, மதம், வியாபாரம் நாகரிகம் இவைகளுக்கு பெரிய தீங்கு ஏற்படுவதாகக் கருதி அரேபியர்கள் பெருத்த கிளர்ச்சி செய்து வருகிறார்கள். இதனால் அங்கு கலஹமும் கொலையும் அதிகரித்துவருகிறது. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நியமித்த கமிஷனானது அந்த தேசத்தை இரண்டாக்கிப் பாதியை யூதர்களுக்குத் தானஞ்செய்ய சிபார்சு பண்ணியிருக்கிறது. இதை ஸ்வதேசிகளான அரேபியர்கள் எதிர்க்கிறார்கள்.

யூதர்கள் வெள்ளைக்காரர்களாயும், ஏசு கிறிஸ்துவின் ஜாதியினராயுமிருந்தும் ஐரோப்பிய தேசங்கள் கூட அவர்களிடம் ஜாதித்வேஷமும் வெறுப்பும் காட்டுவது ஏன் ? அவர்களை துரத்தியடிப்பது ஏன் ? அந்நிய தேசமாகிய அரேபியாவில் யூதர்களுக்கு இடம் பொறுக்கிக்கொடுப்பதை விட ஐரோப்பாவிலேயே அவர்களை ஆதரிக்க ஐரோப்பிய தேசங்கள் ஏன்ஏற்பாடுசெய்யக்கூடாது? ஆப்பிரிக்காவில் ஜாதிபேதம், அரேபியாவில் ஜாதி பேதம், இங்கிலாந்தில், பிரான்ஸில், ஜர்மனியில், இதாலியில் எல்லா விடங்களிலும் வெள்ளையர்களுக்குள்ளேயே ஜாதிபேதமும் ஜாதி அஹம்பாவமும், அன்னிய ஜாதி த்வேஷமும் நர்த்தனமாடுகின்றன!

இது எவருடைய கண்களிலும் படுவதில்லை. இந்தியாவைப்பற்றி மட்டும் வாய் கொண்டமட்டும் அவதூறுப் பேச்சு?

விபரீத சரித்திரங்களால் விளையும் தீங்கு.

நம் தேசத்தில் தற்போது தோன்றியுள்ள கோரமான வகுப்புத்வேஷத்திற்கு இந்திய சரித்திர ஆசிரியர்களும் ஒருவழியில் காரணபூதர்களென்பது வெகுகாலமாகத் தெரிந்த விஷயம், தங்கள்மனதில்தோன்றியகல்பனைகளையும் ஊஹங்களையும் நிலைநாட்டுவதற்கு அவர்கள் பயப்படுவதில்லை. தாங்கள் எந்த விஷயத்தை ஸாதிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் சரித்திர புஸ்தகம் எழுத முன்வந்தார்களோ, அதற்கேற்றபடி மொட்டைத் தலையையும், முழங்காலையும் ஒன்று பிடித்துச் சேர்த்துக் கதையைக் கற்பித்து விடுவார்கள். இந்த புண்யாத்மாக்கள் போட்ட விஷவிதைகள்தான் இன்று இந்தியாவில் பெரும் விஷவிருக்ஷமாக வளர்ந்து தேசத்தை நாசமாக்கி வருகின்றது. பாரததேசத்தின் உயர்ந்த நாகரிகங்களும், கலைகளும், ஜாதிகளும் இன்று அநாதரிக்கப்பட்டு வருவதற்கு இந்த சரித்திரப் புஸ்தகங்களே பெரும்பாலும் காரணம். மத்ய ஏஷ்யாவிலிருந்து வந்தது, ரிக்வேதம் எழுதியதுபோன்ற அபத்தக் கதைகளும், திராவிடர், ஆதித்திராவிடர் போன்ற கற்பனைகளும், ஒருமதத்தின் மீது மற்றொரு மதத்தை ஏவிவிடும் விஷமங்களும் இந்த சரித்திரங்களால் வந்த வினைகளே. ஆயினும் காலம் மாறிவிட்டது. பழைய காலத்திய சரித்திர ஆதாரங்களை மாற்றிப் புதியமாதிரியில் பல தேசாபிமானிகள் சரித்திரமெழுத முன் வந்திருக்கிறார்கள்.

ஆனால் தற்போதுள்ள ஆங்கிலப்பாடசாலைகளில் இன்னும் பழைய காலத்திய விபரீதச் சரித்திரங்களை மாற்ற மனமில்லை. பஞ்சாபில் மாகாண ஸ்வய ஆக்ஷி ஏற்பட்டு ஜனப்ரதிநிதிகள் நிர்வாஹத்திற்கு வந்தவுடன் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தியிருப்பது கொண்டாடத்தக்கது. அத்தேசப் பள்ளிக்கூடங்களில் போதிக்கப்பட்டுவரும் சரித்திரப் புஸ்தகங்களில் வகுப்புத்வேஷமும், உண்மையற்ற கற்பனைகளும் நிரம்பியிருப்பதால் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் அந்த சரித்திர புஸ்தகங்களை விலக்கிவிட்டு புதியமாதிரியில் உண்மையாக எழுதப்பட்ட புஸ்தகங்களை வாங்கி போதிக்க ஏற்பாடு செய்துவிட்டது போற்றத்தக்கது. சென்னைக் கார்ப்பரேஷனுக்கு உள்பட்ட பள்ளிக்கூடங்களிலும் தேசாபிமானமும், உண்மை விவரமும் அடங்கிய சரித்திரங்களைப் போதிக்கக் காங்கிரஸ் வாதிகள் முற்பட்டிருப்பது ஸந்தோஷமே. ஆயினும் தலைவலி போய், திருகுவலி வந்ததுபோல் வெள்ளைக்காரப் பாதிரிகளின் புரட்டுக்கதைப் புஸ்தகங்களை விட சீர்திருத்தக்காரர் வெளியிடும் சரித்திர புஸ்தகம் ஹிந்துக்களுள்ளேயே பலத்த மதாசாரப் புரக்ஷியை உண்டாக்கக்கூடியவைகளாயிருந்தால் பிரயோஜனமென்ன? இந்த அம்சம் கவனிக்கப்படுமா?

காங்கிரஸ் கவர்ன்மெண்டைப் பற்றி ஸ்ரீமான் ஆசாரியார்.

ஸ்ரீ பெரும்பூதூரில் பிரஸங்கம்.

ஸ்ரீ பெரும்பூதூரில் நடைபெற்ற ரயித்துக்கள் மஹாநாட்டில் ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியார் தலைமை வகித்துப் பேசுகையில், காங்கிரஸ்காரர்கவர்ன்மெண்ட்ஏற்பட்டபிறகு நடக்கவேண்டிய விஷயங்களைப்பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுச் சொன்னார்:—

காங்கிரஸ் கவர்ன்மெண்ட் ஏற்பட்டுவிட்டதிலிருந்து ஒவ்வொரு காங்கிரஸ் மெம்பரும் கவர்ன்மெண்டாக ஆகிவிட்டனர். எல்லோரும் காங்கிரஸில் சேரவேண்டும். இப்போது காங்கிரஸ்வேறு,கவர்ன்மெண்டு வேறு என்பதில்லை. ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் தனக்குப் பொறுப்பு ஏற்பட்டிருப்பதாக நினைத்துக் கொள்ளவேணும்.

தனி ஸபைகள் இனிவேண்டாம்:— வியவஸாயிகளுள்பட எல்லோருடைய க்ஷேமத்திற்காகவும் காங்கிரஸ் உழைக்கிறது. தனி ஸங்கங்கள் இருந்தால் காங்கிரஸுக்கு என்ன வேலையிருக்கிறது? காங்கிரஸானது நடுவில் நின்று ஸர்க்காருடன் வாதாடி வியவஸாயிகளுக்கு வேண்டியதைச் செய்து கொடுக்கும். ஆகலால் தனிஸங்கங்களை நிறுத்திவிட்டு காங்கிரஸிலேயே சேரவேண்டும்.

காங்கிரஸே ஏஜண்டு. காங்கிரஸ் மந்திரி பதவி ஏற்றபின் கிராமங்களில் உள்ள காங்கிரஸ் கமிட்டிகள்தான் காங்கிரஸ் மந்திரிகளுக்கு ஏஜண்டாக விளங்கும். கிராம உத்யோகஸ்தர்களும், போலீஸ்காரரும், காங்கிரஸ் மெம்பர்களும் ஒன்று என்று நினைக்கவேண்டும் இந்த உத்யோகஸ்தர்கள் கிராம விஷயங்களைப் பற்றி மேலதிகாரிகளுக்கு ரிபோர்ட் எழுதும்போது, வாஸ்தவமான விஷயங்களை எழுதுகிறார்களாவென்று கவனிக்கவேண்டும். காங்கிரஸ் மந்திரிகள் போடும் உத்திரவுகள் ஸரியாக நிறைவேற்றப்படுகின்றனவா வென்பதைக் காங்கிரஸ் கமிட்டிகள் மேற்பார்வையிடவேண்டும்.

மந்திரி பதவி.
கார்யக்கமிட்டித் தீர்மானம் ஜனநாயகத்திற்கு ஏற்றதல்ல

ஸ்ரீமான் மஸானியின் கண்டனம்.

திருச்சியில் நடந்த அபேதவாதிகளின் கூட்டத்தில் தலைமை வகித்த ஸ்ரீமான் மஸானி என்றவர் காங்கிரஸ்காரர்கள் மந்திரி பதவி ஏற்கும்படி கார்யக்கமிட்டி அநுமதித்ததைப் பற்றிக் கண்டித்துப் பேசுகையில், காங்கிரஸ் மஹாஸபையானது ஏகாதிபத்ய சிலந்திக் கூண்டில் அகப்பட்டுக் கொண்டுவிட்டதாயும், கார்யக்கமிட்டியின் தீர்மானம் பலருக்குத் திருப்தியளிப்பதாகத் தோன்றினும் அது வெகு அனர்த்தகரமென்றும், இவ்விஷயமாக அகில இந்தியக் கமிட்டியைக்கலக்காமல் முடிவு கூறியது யதேச்சையாயிருப்பதாயும் ஜனநாயக தத்வத்திற்கு விரோதமாயிருப்பதாயும் அகில இந்தியக் கமிட்டியில் பெரும் பான்மையோர்பதவி யேற்புக்கு விரோதமாயிருப்பார்களென்றும், அகில இந்தியக்கமிட்டியை கலக்காமல் இப்படிச் செய்தது முறைதவறென்றும், அதன் உரிமையைப் பறித்ததாகுமென்றும் இந்தமாதிரி காங்கிரஸ் தலைவர்கள் தவறு செய்து எல்லோரையும் கட்டுப்படுத்திவிட்டது ஜனநாயகத்திற்கு அடுக்குமாவென்றும், காங்கிரஸ் மந்திரிகள் ஏகாதிபத்யத்தின் ஒரு பங்காக ஆகிவிட்டார்களென்றும், மிதவாதிகளுக்கும் இவர்களுக்கும் வித்யாஸமில்லாமல் போய்விட்டதாயும் கண்டித்துப் பேசினார்.

சென்னை சட்டஸபை
காங்கிரஸ் கக்ஷி.

சட்டஸபைத் தலைவர் நிர்ணயம்.

12உ யன்று சென்னை சட்டஸபைக் காங்கிரஸ் கக்ஷியின் கூட்டம் நடைபெற்றது. மந்திரிகளைப் பொறுக்குவதில் ஸ்ரீமான் ஆசாரியாருக்குப் பூர்ண அதிகாரம் கொடுக்கப்பட்டது

சட்டஸபைக்கு புலுசு ஸாம்பமூர்த்தியைத் தலைவராயும், ஸ்ரீ ருக்மணிலக்ஷ்மீபதியை உபதலைவியாயும் ராஜாங்க ஸபைக்கு டாக்டர்ராமராவைத் தலைவராயும் ஸ்ரீமான் வெங்கிடசாமி நாயுடுவை உபதலைவராயும் நிர்ணயிக்கப்பட்டது.

ஸ்ரீமான் டி. ஏ. ராமலிங்கம் செட்டியாருக்கு ராஜாங்க ஸபை உபதலைவர் பதவி கொடுக்கப்பட்டதாயும் ஆனால் அவர் ஏற்க மறுத்து விட்டதாயும் மெயில் பத்திரிகையில் காணப்படுகிறது.

அங்குளீய ப்ரதான கட்டம்.

சென்ற 1—2—37 முதல் ஸ்ரீ ஜெகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் மடத்தில், அத்வைதஸபாபண்டிதர், மஹாமஹோபாத்யாய, பிரும்மஸ்ரீ யெக்ஞசாமி சாஸ்திரிகள் சிஷ்யர், மன்னார்குடி வேம்பு சாஸ்திரிகளால் நடைபெற்று வரும் ஸ்ரீமத் ராமாயண உபந்யாஸத்தில் நாளது ஈச்வர-ஞு ஆனி-மீ 32உ (15—7—37) வியாழக்கிழமை இரவு 7 மணிக்குமேல் கணையாழி கொடுக்கும் கட்டம் நடைபெறும் ஆஸ்திகர்கள் அனைவரும் வந்து கதாச்ரவணம் செய்து ஸ்ரீ ஸீதாராம கிரு~~பைக்குப் பாத்திரர்களாகக் கோரப்படுகிறது.~~

ஒரு நிருபர்.

ஸ்ரீ வியாஸ பூஜா மஹோத்ஸவம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியஸ்வாமிகள் அவர்கள் நாளது ஈசுவர வருஷம் ஆடி மீ 8உ 23-7-37 சுக்ரவாரத்தன்று வருகிற நாளது வருஷத்திய ஸ்ரீ வியாஸபூஜா மஹோத்ஸவத்தை ஸ்ரீ கோதாவரீதீரபிராந்தத்திலுள்ள பாலகொல்லு என்கிற க்ஷீராராம் க்ஷேத்திரத்தில் ஸ்ரீ ராமலிங்கேசுவரஸ்வாமி சன்னதியில் நடத்த நிச்சயமாயிருக்கிறது

N. B —பாலகொல்லு (Palakol) என்னும் ஸ்தலம் மதராஸ், கல்கத்தா லயனில் (Nidadavolu) நீடதவோலுஜங்க்ஷனிலிருந்து நரசபூர் போகும் மார்க்கத்திலுள்ள ஒரு ரயில்வேஸ்டேஷன்.

சண்டை குணமா ? அபிமானமா?:- சாரணத் தலைவர் இந்தியர் ஒழுக்க மற்றவர் என்றார் அதைக் கண்டிக்க சென்னையில் சில சிறுவர் ஸபை கூட்டினர். இவ்வளவு இந்தியா என்ற அபிமானம் அவர்களுக்கு இருந்தால் கொண்டாடுவோம் இந்த அபிமானம் இருந்தால் ஸ்வதேசிய ஆடை அணியும்வகை இது முதலியவர்களை விடுவார்களா ? இயற்கையான யுத்த குணமே காரணமோ ?

திருடனுக்கும் மதாபிமானம்:- லாஹூர் சிறையிலுள்ள மஹம்மதிய குற்றவாளிகள் தங்கள் வேதமான குரானை அச்சிறை அதிகாரி அவமதித்தாரென பட்டினிகிடந்து அவரை வேலையை விட்டு விலகும்படி செய்தனர். நமது மதமே முதன்மையானது என்ற அபிமானம் நம்மவருக்கு ஜநிக்காதா ?

வெ. ஸோ. சர்மா.

மாணாக்கன்.

'தன்மகன் ஆசான் மகனே மன் மகன்
பொருள் நனி கொடுப்போன் வழிபடு
வோனே
உரை கோளாளற்கு உரைப்பது நூலே'.

நல்லாசிரியர் தன்புதல்வனுக்கும், தன்னாசிரியன் புதல்வனுக்கும், அரசன் புதல்வனுக்கும், பொருளை மிகுதியாகக் கொடுப்போனுக்கும், வழிபாடு செய்வோனுக்கும், தன்னாற் சொல்லப்பட்ட உரையை விரைவிலே கற்கும் அறிவுடையோனுக்கும் நூலைக் கற்றுக்கொடுக்கலாம். அப்படிப்பட்ட மாணவர்கள் மூவகையினர். அவை முறையே தலையிடை மாணாக்கர் என்ப. அன்னப் பறவையையும் பசுவையும் போல்வார் முதல் மாணாக்கர். மண்ணையும் கிளியையும் போல்வார் இடை மாணாக்கர். பொள்ளற் குடத்தையும், ஆட்டையும் போல்வார் கடை மாணாக்கர்.

அன்னம் பாலையும் நீரையும் வேறு பிரித்துப் பாலைமாத்திரம் உட்கொண்டு நீரை நீக்கிவிடும். உத்தம மாணாக்கன் குணத்தையும் குற்றத்தையும் வேறுபிரித்துக் குணத்தைமாத்திரம் கொள்வான். பசு மிகுந்தபுல்லையுடைய இடத்தைக்கண்டால் அப்புல்லை வயிறு நிறைய மேய்ந்தபின் போரிடத்திற் போயிருந்து சிறிது சிறிதாக வாயில் வருவித்துக்கொண்டு மென்றுதின்னும். அதுபோல முதல்மாணாக்கன் மிகுந்த கல்வியுடைய ஆசிரியனைக் கண்டால் அக்கல்வியைத் தன்னுள்ள நிறையக் கேட்டுக்கொண்டுபின் போரிடத்துப் போயிருந்து சிறிது சிறிதாக நினைவிற் கொண்டுவந்து சிந்திப்பன்.

மண் உழவர் வருந்திப் பயிர்செய்யுமுயற்சியளவினதாகிய விளைவைத்தரும். இடைமாணாக்கன் ஆசிரியன் வருந்திக் கற்பிக்கு முயற்சியளவினதாகிய கல்வியறிவைத் தங்கட்காட்டுவன். கிளி தனக்குக் கற்பித்த சொல்லையன்றி வேறொன்றையுஞ்சொல்லமாட்டாமை போல இடை மாணாக்கன் தனக்கு கற்பித்த நூற்பொருளையன்றி வேறொரு நூற்பொருளையுஞ் சொல்லமாட்டான்.

பொள்ளற்குடம் நீரைவார்க்குந்தோறும் ஒழுகவிடுதல்போலக் கடை மாணாக்கன் நூற்பொருளைக் கற்பிக்குந்தோறும் மறந்து விடுவன். ஆடு ஒரு செடியிலே தழை நிறைந்திருந்தாலும் வயிறு நிறைய மேயாது செடிதோறும்போய் மேயும். அதுபோலக் கடை மாணாக்கன் ஓராசிரியனிடத்து மிகுந்த கல்வியிருந்தாலும் புலமை நிறையக் கற்றுக்கொள்ளாது பலரிடத்தும்போய்ப் பாடங்கேட்பன்; எருமை குளத்து நீரை கலக்கிக் குடித்தல்போல அதம மாணாக்கன் ஆசிரியனை வருத்திப் பாடங்கேட்பன். பன்னாடை தேன் முதலியவற்றைக் கீழேவிட்டு அவற்றிலுள்ள குற்றங்களைப்பற்றிக்கொள்ளுதல் போலக் கடை மாணாக்கன் நல்லபொருளை மறந்துவிட்டுத் தீயபொருளைச் சிந்தித்துப் பற்றிக்கொள்வன்.

கள்ளுண்டு களிப்பவன், சோம்பேறி, அகங்கார முடையவர், காமமுடையவன், திருடன் நோயாளி, அறிவில்லாதவன், மாறுபாடுடையவன், கோபமுடையவன், மிகத் தூங்குவோன், புத்தி நுட்பமில்லாதவன், அஞ்சத்தக்கவைகளை அஞ்சாதவர், பாவஞ் செய்வோன், பொய்பேசுவோன் ஆகிய இப்படிப்பட்ட குற்றமுடையோர் மாணாக்கராகாதவர்.

பாடங்கேட்டலின் வரலாறு பகர்வாம். தக்க காலத்திலே சென்று வழிபாடு செய்தலில் வெறுப்பில்லாதவனாகி ஆசிரியன் குணத்தோடு பொருந்தப்பயின்று, அவன் குறிப்பின் வழியிலே சேர்ந்து இருவென்று சொன்னபின் இருந்து படியென்று சொன்னபின் படித்து பசித்துண்பவனுக்கு உணவினிடத்துள்ள ஆசைபோலப் பாடங்கேட்டலில் ஆசையுடையவனாகி, சித்திரப் பாவைபோல் அவ்வாசைவறு குணத்தினோடு அடங்கி, காதானது வாயாகவும் மனமானது கொள்ளுமிடமாகவும் முன் கேட்கப்பட்டவற்றை மீட்டுங் கேட்டு அப்பொருள்களை மறந்துவிடாது உள்ளத்தின் கண் நிறுத்திக்கொண்டு போ என்றபின் போகுதலாகும். உலகவழக்குஞ் செய்யுள் வழக்குமாகிய இருவகை நடையை ஆராய்ந்தறிதலும், மூலபாடங்களை மறவாது பாதுகாத்தலும், தான் கேட்ட பொருள்களைப் பலகாற் சிந்தித்தலும், ஆசிரியனை யடுத்து அவைகளைத் தன் மனத்துள் அமையும்படி மீட்டுங் கேட்டலும் அக்கற்குந் தொழிலையுடையவரோடு பழகுதலும், தான் ஐயுற்ற பொருளை அவரிடத்து வினவுதலும் அவர் வினவியவைகளுக்குத் தான் உத்தரங் கொடுத்தலும் என்று சொல்லப்பட்ட இச்செயல்களை முறைபடக மாணாக்கன் கொண்டால் அறியாமையானது அவனை மிகுதியும் விட்டு நீங்கும். ஒரு நூலைப் பாடங் கேட்பவன் ஒரு தரங் கேட்ட அளவின் அமையாது இரண்டு தரங்கேட்டானாயின் அந் நூலிலே மிகுதியும் பிழைபடுதல் இலனாவான். மூன்று தரங் கேட்டானாயின் ஆசிரியன் கற்பித்த முறைமை உணர்ந்து பிறர்க்குச் சொல்லுவான். ஆசிரியன் கற்பித்த பொருளைத் தன்னறிவினிடத்து நிறையக் கற்றானாயினும் புலமைத் திறத்திற்கு காற்பங்கல்லது அதற்கதிகமாகப் பெறாதவனாவன். அக்கற்குந் தொழிலாளரோடு பழகும் வகையாற்காற்கூறும் தன் மாணாக்கருக்குஞ் சபையாருக்கும் உணர்வித்துரைத்தால் அரைக்கூறுமாக குற்றமற்ற புலமையானது நிரம்புதலுடைத்தாகும். குளிர்காய்வோன் விட்டு நீங்காமலும் நெருங்காமலுமிருக்கின்ற நெருப்பைப்போல ஆசிரியனை நினைத்து அச்சமுற்றுவிட்டு நீங்கானாகியும் நெருங்கானாகியும் இருந்து விடாது பின் செல்லும் நிழலைப்போலத் தொடர்ந்து சென்று, அன்பு நிறைந்த கருத்துடனே கூடிய தன்மையினாலே ஆசிரியனானவன் மகிழ்வானே அத்தன்மையோடுபொருந்தி அறத்தினின்றும் வேறுபடாத நடத்தலானது மாணாக்கன் ஆசிரியனுக்குச் செய்யும் வழிபாடாகும். உத்தம மாணாக்கனாய் உலவுவதே உத்தமன் கடமையாகும்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

ஹிந்து முஸ்லீம் கலஹம்.

3-ஹிந்துகொலை.

ஹைதராபாத்தைச் சேர்ந்த பீடார்ஜில்லா ஹோம்லா என்ற கிராமத்தில் ஒரு ஹிந்து ஸ்திரீயை மகம்மதிய மதத்தில் சேர்த்தக் காரணமாக இரு வகுப்பாரும் மனத்தாங்கல் அதிகமாய் இருந்தது. ஷை ஹிந்து ஸ்திரீ ஆர்யஸமாஜிகள் சுத்தி செய்து மீண்டும் ஹிந்து மதத்தில் சேர்த்தார்கள். இது விஷயமாகக் கோர்ட்டில் கேஸ் நடக்கிறது.

இது காரணமாக இருவகுப்பாருக்கும் பலமான கலஹம் நடந்தது. மகம்மதியர்கள் கத்தி, கோடரி, அறிவாள் முதலிய ஆயுதங்களைக்கொண்டு ஹிந்துக்களை தாக்கினார்கள். 3-ஹிந்துக்கள் கொலை செய்யப்பட்டனர். போலீஸார் வந்து கலகத்தை அடக்கியிருக்கிறார்கள். 13-மகம்மதியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

REFORM THROUGH LIBEL!

The name of Mahakavi, Ullur S. Parameswara Aiyar often appears in the Hindu in connection with the propaganda in favour of the Travancore Temple Entry proclamation.

What sort of gentleman this 'Mahakavi' is, and how this 'Aiyar' is serving the Brahmin Community will be apparent from the following taken from the 'Madras Mail'.

"A problem play 'Mangalyam' or 'Think about it' by Aundy was produced in many parts of Travancore as a means of propaganda in favour of Hindu marriage reform, by Mrs. R. Ranganayaki, Organising Secretary of the Women's Protection League, Madras. The artists, consisting of ladies and gentlemen drawn from various amateur theatrical societies, finished their tour of Quilon and Trivandrum and arrived here.

Written on the advice of Mrs. E. G. Hatch of America (a missionary lady interested in Indian rural reconstruction) and dedicated to her by the author, the play was produced here under the patronage of Sir C. P. Ramaswami Ayyar, Dewan of Travancore, as a benefit performance in aid of the Mahila Mandiram, the premier women's organisation of the State.

The play has raised a storm of controversy and protest from orthodox Hindus. This is perhaps the first time in the history of social reform in Travancore that the stage has been used by leaders of the women's movement as a medium for social propaganda. Brahmin ladies including a widow appeared on the stage advocating revolutionary changes, such as divorce, in Hindu marriage law.

Mahakavi Ulloor S. Parameswara Ayyar spoke at Trivandrum enthusiastically in support of this new movement. It seems also that the party has a repertoire of other social plays also, including one on the evils of child marriage. The success of the drama in Nagercoil was mostly due to the untiring efforts of Miss Thankamma, the Secretary of the Mahila Mandiram."

விக்ஞாபனம்.

நான் நாளது ஆனிமீ த்தில் ஸோமயாகம் செய்வதாய் பலஊர்களில் ஆஸ்திகர்களிடமிருந்து யாகத்துக்காக சிலதுகைகள் வசூல் செய்திருக்கிறேன். ஆனால் அநேக அசௌகரியங்களால் ஷை யாகத்தை பத்திரிகையில் கண்டபடி இந்த ஆனிமீ த்தில் நடத்தமுடியாமல் போய்விட்டது. பகவானுடைய கிருபையால் அடுத்த உத்தராயணத்தில் செய்வதாய் உத்தேசித்திருக்கிறேன். வசூலான துகையில் ரயில் செலவு போக பாக்கி ரூ 127 திருக்களாவூர் மகா-ா-ஸ்ரீ டி எல். சுப்பய்யரவர்களிடம், பிறகு யாகம் நடக்கும்போது வாங்கிக்கொள்வதாக, கொடுத்திருக்கிறேன்,

K. S. ராதாகிருஷ்ண அய்யர்.

மூகபஞ்சசதியின் முதல் பாகம்.
" ஆர்யா சதகம் "
Mr. G. V. கணேசய்யர், B. A., B. L.
அவர்களால் மூலம் நாகரத்திலும், தமிழிலும்,
விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
100 பக்கங்களுக்குமேல் கொண்டது.
தபால்செலவு வேறு] [விலை அணா 0-8-0.
கிடைக்குமிடம்:— மானேஜர், 'ஆர்யதர்மம்'
கும்பகோணம்.

ஹிந்துமத வேத விமர்சனம்.

(கார்க்கழணி கிருஷ்ணமூர்த்தி.)

நம் இந்தியாவில் பல மதங்களுள் ஒவ்வொரு மதத்திற்கும் அததற்குரிய வேதம் என்று ஒன்றுண்டு. கிறிஸ்தவர்களுக்கு பைபிள் வேதமாகும். மஹம்மதியர்களுக்கு வேதம் கொரான் என்னும் நூலாகும். இவ்விதமே பற்பல மதங்களுக்கும் அததற்கு தனித்தனியே வேதம் என்பதுண்டு. அவைகள் யாவும் அந்தந்த மதஸ்தாபகர்களின் அவதாரத்துக்குப் பிறகே இயற்றப்பட்டவைகள். ஹிந்துமத வேதமோ அப்படியன்று. அது அநாதியாயுள்ளது. அதை இயற்றியவர் யாரென்றும் அது உண்டான காலமும் யவராலும் சொல்லமுடியாது.

நாயனார் இயற்றிய திருக்குறளை அரங்கேற்றிய பொழுது "செய்யாமொழிக்கும் திருவள்ளுவர் புகன்ற பொய்யாமொழிக்கும் பொருளொன்றே அந்தணருக்கு அது உ-ஆம் அஃதில்லாதாருக்கு இது உ-ஆம்" என்று புலவர்களால் எடுத்துக்காட்டப்பட்டிருப்பதால் ஸம்ஸ்கிருத பாஷாபிவிர்த்தியுள்ள பிராமண சமூஹங்களுக்கு உரியதான வேதமே திருக்குறளில் எடுத்தாளப்பட்டிருக்கிறதென்றும், வேதம் பிராம்மணர்களுக்கு உரியது போல் ஏனையோர்களுக்கு திருக்குறள் உரியதாகுமெனவும் வேதம் செய்யாமொழியெனவும் நன்கு விளக்குவதாகும்.

ஜகத் சிருஷ்டிக்குக் காரணமான பிர்மாவின் சிருஷ்டிக்கு முன்பே வேதம் உண்டென்றும்; பிர்மாவின் அவதாரத்தில் அவர் ஆதி வஸ்துவை உபாசித்து தன் ஞான திருஷ்டியால் வேதத்தை கிரஹித்து அதை தன் நான்கு முகங்களாலும் இருக்கு, யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்ற நான்கு பிரிவுகளாக வெளியிட்டாரெனவும் ஐதீகம். அவைகளை சீர்திருத்தி பங்திகளாகச்செய்த காரணத்தால் வியாஸ பகவானுக்கு வேதவியாசனென பெயர் வந்தது

வேதமானது மொத்தம் 1180 சாகைகள் கொண்டது. அதாவது:— இருக்கு 21-ம் யஜுர் 106-ம், ஸாமம் 1000-ம், அதர்வணம் 50-ம் ஆக 1180 உள்ளது. ஒவ்வொரு சாகைகளையும் ஒவ்வொரு உபநிஷத்துக்களாக பிரதிபாதிக்கப்படுவதால் ஒவ்வொரு உபநிஷத்துக்கள் எனப்படுகிறது. இவ்வுபநிஷத்துகளில் 840 உபநிஷத்துக்கள் கர்மகாண்டமாகவும் 232 உபநிஷத்துக்கள் தியேயப் பிர்ம உபாஸனாகாண்டமாகவும், 108-உபநிஷத்துக்கள் ஞேயப்பிர்மத்தை போதிக்கும் ஞானகாண்டமாகவும் அமைந்திருக்கிறது. ஞானகாண்டமான 108-உபநிஷத்துக்களில் ஈச, கேன, கட, பிரச்ன, முண்டக, மாண்டூக்ய, தைத்திரீய, ஐதரேய, சாந்தோக்ய, பிருஹதாரண்ய உபநிஷத்துகளாகிய பத்தும் மிகவும் சிலாக்யமானதால் இவைகளையாவது ஒரு பிராம்மணன் அதன் பொருளோடு கற்கவேண்டியது அவசியமாகும்

நீதி சாஸ்திரத்தில் 'வேதமூலமிதம் ப்ராஹ்மம்' என்று சொல்லப்பட்டிருப்பதால் தனக்கு மூலமான வேதமே தன்னிடம் கொஞ்சமும் இல்லாதவன் தன்னை பிராம்மணனாக சொல்லிக்கொள்வதற்கில்லை.

வேதத்தின் ஸம்ஹிதைகள் உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம், ப்ரசயமென்ற பேதங்களுடன் பதம், கிரமம், ஜடை, கனம் என்ற பங்திகளாக அத்யயனம் செய்யப்படுவதால் வேதத்தை ஒவ்வொருவரும் ஒரு குருவின் மூலியமாகவே கிரஹிக்கவேண்டிய அவசியமாகிறது. பூர்வம் ஒரு சிஷ்யன் மஹா மஹிமை பொருந்திய ஒரு மஹரிஷியை குருவாயடைந்து, அவருக்கு ஆத்மம், அங்கம், தானம், ஸத்பாவம் என்று சொல்லப்படும் சதுர்வித பணிவிடைகளையும் செய்து தன் குருவின் அநுக்கிரஹபலத்தால் வேத சாகைகள் 1180 யும் அதன் பொருள்களையும் அநாயாசமாய் அடைந்து ஆநந்தித்தான். இதைத்தவிர வேத முழுமையும் சந்தை சொல்லி திருவை போட்டு கற்றுக்கொள்வதென்றால் அதற்கு அநேக ஜன்ம ஆயுளும் போதாததாகும்.

வேதத்தை வெளியிட்ட பிர்மாவே பின் ஜீவர்களின் கஷ்டங்களைக்கண்டு, கருணை புரிந்து அவர்களின் கஷ்டங்கள் நீங்கி சுக வாழ்வெய்த சாதனமாக அர்த்தவேதம், ஆயுர்வேதம், காந்தர்வவேதம், தனுர்வேதம் எனப்படும் நான்கு உபவேதங்களை இயற்றினார். பின் அவதரித்த மஹரிஷிகள் பலரால் வேத அங்கங்களான சிக்ஷை, கல்பம், வியாகர்ணம் நிருக்தம், ஜோதிடம் பிங்களம் என்ற ஆறு நூல்கள் இயற்றப்பட்டன. தவிர நியாயாதி சூத்திரங்களையும், மீமாம்சாதி கிரந்தங்களையும் பதினெண் புராணங்களையும், தர்ம சாஸ்திரங்களையும் கருணையினால் வேதப் பொருள்கள் ஸுலபமாய்ப்பலருக்கும்விளங்கி கிருதார்த்தர்களாகும்பொருட்டு மஹரிஷிகளால் வெளியிடப்பட்டது. இவ்விதம் வெளியான வேதம் 4 உபவேதம் 4, வேத அங்கம் 6, புராணங்கள் 1, நியாயாதி சூத்திரங்கள் 1, மீமாம்சை 1, தர்ம சாஸ்திரம் 1, ஆக பதினெட்டையும் சேர்த்து வித்தை என்று பெரியோர்கள் சொல்வதுண்டு. அக்காலத்தில் இந்த வித்தை என்பதை சம்சயமன்றி அறிந்தவர்களைக்கண்டால் அவர்களை வித்வான் என்று கொண்டாடுவார்களாம்.

இவ்விதம் பல நூற்றாண்டுகளாக நம் நாட்டில் அங்கீகரிக்கப்பட்டு அனுஷ்டிக்கப்பட்டு வந்த சுருதி, ஸ்மிருதி, இதிஹாஸ, புராண, கலைஞான, ஆகம, தர்மசாஸ்திர சர்வானுஷ்டானங்களும் எக்காரணம் பற்றியோ இக் கலியில் காற்றில் பறக்கும் பஞ்சாகிவிட்டது.

தர்ம, அர்த்த, காம, மோக்ஷம் என்ற சதுர்வித புருஷார்த்தங்களையும் நமக்களிப்பது நமது வேதம், பிர், க்ஷத்திரிய, வைசிய, சூத்திர நான்கு வர்ணத்தார்களுக்கு நன்மையை அடைய அவரவர்களுக்குரிய அநேகம் சாதனங்களை உடையது நமது வேதம். பூர்வம் நான்கு வர்ணத்தார்களும் வேத ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டு வரம்புகடவாமல் நடந்து க்ஷேமத்தை அடைந்தார்கள். நம் வேதமானது பாமர பண்டிதர்களான எல்லா அதிகாரிகளுக்கும் சாதனமாக அமைந்திருப்பது அதில் சொல்லிய பிரவிர்த்திமார்க்க வழியால் இக பர சௌக்கியங்களும் பத முக்திகளும் அடையப்படுகின்றன. நிவர்த்தி மார்க்க வழியால்மட்டும் ஜீவபந்தம் போய் துக்கநிவிருத்தி ஏற்படுகிறதாகிறது. அதாவது:— அதன் கர்மகாண்டத்தில் சித்த சுத்திக்கான கர்மயோகத்தையும், உபாஸனா காண்டத்தில் சித்தம் ஒன்றுபடும் யுக்தியையும், ஞான காண்டத்தில் சித்தமே நசித்து அகண்டாகாரமாயுண்டாகும் ஆத்மஞான சித்தியையும் அது போதிக்கிறது.

கர்மகாண்டத்தில் சித்தசுத்திக்கான வழிகள் போதிக்கப்பட்டிருப்பதை விளங்கச் செய்யவே வர்ணாசிரமதர்மங்களும், ஸ்மிருதிகள் என்ற சட்டங்களும், ஏற்பட்டிருக்கின்றன. உபாசனா காண்டத்தை அனுசரித்து பற்பல மதங்களும், ஆகமப் பிரமாணங்களும், சதாசார சன்மார்க்கங்களும், விருதாதி சிலங்களும் ஏற்பட்டதாகும். ஞானகாண்டத்தை யனுசரித்து சத் விசாரணா ரூபமாய் சித்தம் சாந்தியை அடைய சாதனமான பல வேதாந்த கிரந்தங்களும் பல சித்தாந்தங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

இவ்வளவு பெருமை வாய்ந்த நம் நாட்டு சதாசாரங்களை நாம் புறக்கணித்துவிட்டு, கேவலம் இந்திரிய திருப்தியை மட்டுங் கருதி, நச்வரமான பல போகபாக்யங்களில் சிக்கி, சிக்கனமில்லாது பெருமைக்காக பல வீண் செலவுகளைச் செய்து, பல துராசாரப் பழக்கம் ஏற்பட்டுவிட்டதால் இப்பொழுது இக லோக சுகத்தையும் நாம் இழந்ததுடன் நாம் சாஸ்திர ஆசரணையை நாம் அறவே விட்டுவிட்டதால் பரலோக வாழ்வையும் மறந்தோம். இந்த ஸ்திதியில் நமக்கு பரமபுருஷார்த்தமான மோக்ஷ இச்சை எங்ஙனமுண்டாகும்?

நம் பெரியோர்களால் நமது மேன்மைக்கே செய்யப்பட்ட சாஸ்திரங்களை நாம் அப்பியாசிக்காமல் கேவலம் வயிற்றுப் பிழைப்புக்கும் தற்காலம் வழிகாட்ட முடியாமல் தவிக்கும் அந்நியக் கல்வியைக் கற்று வெகுகாலமாய் வழிதப்பி நடந்துவிட்டோம். 'நிலத்தியல்பால் நீர்திரிந்தற்றாகு மாந்தர்க் கினத்தியல்ப தாகு மறிவு' என்றபடி அன்னிய பாஷாபிவிர்த்தியினும், அன்னிய சகவாசத்தாலும், அன்னிய துராசாரத்தாலும் ஏற்பட்ட சகவாச தோஷத்தால் நமக்குள் நாமே பகைமை பாராட்டவும், நமது சாஸ்திரோபதேசமான சத்தியம், தயை, ஈவு, இரக்கம், பச்சாதாபம், பரோபகாரம் முதலான நற்குணங்களை மறந்து சுயநலத்தில் புத்தியை செலுத்தி நசுவரமான பொருளாதாயத்திலேயே பலகாலும் பாடுபட முற்பட்டுவிட்டோம். நம்மில் சிலர் துராசாரதுரந்தர்களாக தோன்றி நமது மதத்தையே நாசமாக்க கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்தோ! இதுதான் கலியின் கொடுமை போலும்!

இனியாவது நமது சாஸ்திர ஆராய்ச்சியில் பலர் ஈடுபட்டு, தர்மாசரணைகள் நசிக்காவண்ணம் பாடுபட்டு, நாட்டின் நன்னிலைமையைக் காப்பாற்ற முன்வருவது அத்யாவசியம். பிராம்மண சிறுவர்களுக்கு சிலவருஷங்களாவது வேதாத்யயனம் செய்துவைப்பது முக்கியமானதாகும்.

பொதுப்பள்ளிக்கூடத்தில் படிக்க ஆரம்பித்துவிட்டாலுங்கூட தினம் ஒருமணிநேரமாவது வேதம், சாஸ்திரம் இவைகளைக் கற்க தனி விடுதிகள் ஒவ்வொரு ஊரிலும் அமைக்கப்படவேண்டும். பிரமுகர்களும் ரீடிங்ரூம், பாட்மெண்டன் இவைகளில் பொழுது போக்குவதுபோல் ஒவ்வொரு நாளும் ஒரு மணிநேரமாவது வேதாத்தியயனம் அல்லது சாஸ்திரபாடம் இவைகளை அவசியம் செய்ய வேண்டும். எவ்வளவோ விஷயங்களுக்கு வீண் செலவுசெய்வதுபோல் உபயோகமுள்ள இக்காரியத்தில் பலர் தங்களாலியன்ற பொருளுதவிசெய்து தகுந்த சாதனத்தை அமைத்துவிடின் அதில் பலரும் சேர்ந்துழைத்து பலன்பெறுவார்கள்.

ஒவ்வொருவருக்கும் வேதாத்தியயனத்தில் சிரத்தை வந்துவிட்டால் அவர்களுக்கு தானாய் சதாசார அனுஷ்டானமும் உண்டாகிவிடும். தற்காலம் க்ஷீண கெதியை அடைந்திருக்கும் பிராம்மண சமூகங்கள் உத்தாரணமாக இது ஒரு சிறந்த வழியாகும்.

வேதகோஷம் முழங்கும் ஒவ்வொரு இடத்திலும் தர்ம தேவதையின் தயவால் சர்வமங்களங்களும் உண்டாகு மென்பது திண்ணம்.

ஸ்ரீ சங்கரபகவத் பாதாசார்யாளவர்கள்
அருளிச்செய்த
ஸௌந்தர்ய லஹரி
by G.V. கணேச அய்யர், B.A., B.L.,
மூலம் நாகரத்திலும், தமிழிலும், பதவுரை
பொழிப் புரை குறிப்புகளுடனும்.)
விலை ரூ. 1 8 0
கிடைக்குமிடம்:— ஜனார்த்தன அச்சுக்கூடம்
லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

ஸநாதனதர்ம ஸபை வீரபாண்டி.

வித்தியார்த்திகளின் வித்தியாப்பியாசம்.

8-7-37 மாலை மணி 4க்கு சபை கூடியது பெரியகுளம் வேதவிலாஸ் வைதீசுவர கனபாடிகள், மேல்மங்கலம் அம்பி சுப்பிரமணிய கனபாடிகள், பழனி கலையப்புதூர் அங்கிரஹாரம் கெடவாத்தியம் வித்வான் கே. ஆர். ரெங்காராஜன் முதலிய முக்கியமான ஸநாதன தர்ம அபிமானிகளும் வந்திருந்தார்கள். அவரவர்கள் தனது அபிப்பிராயத்தை முன்னிட்டுத் தற்காலம் வித்தியார்த்திகளின் வித்தியாப்யாச விஷயத்தைப்பற்றிச் சுருக்கமாகப் பேசி முடித்தார்கள். பிறகு அக்கிராசனம் வஹித்த கே. ஆர். ஸதாசிவப் பிரும்மம் அவர்கள் உபன்யசித்ததாவது.—

நமது பாரதனாட்டில் பிள்ளைகளுக்கு ஐந்தாவது வயதில் அக்ஷராப்யாஸம் என்பது ஓர் உற்சாகமான காரியமாகும். அன்று மங்கள ஸ்நானம் மங்கள வாத்தியத்துடனும் பிள்ளைகளுக்கு மங்களகரமான சொல்லைச் சொல்லி வைத்து உபாத்தியாயரிடம் ஒப்பிவிப்பது வழக்கம். எழுத்தறிவித்தல், எழுத்துக்கூட்டல், வாசித்தல், எழுதல் முதலியதுகள் வரிசைக்கிரமமாக கற்றவுடன் லோக வியவகாரம், ராஜீக முறை, வியாபார முறை, மதக்கொள்கை, கிராம வழக்கமுறைகள் இதுகள் சரிவர திருத்தமாகதெரிந்துகொள்வதற்கு பத்து வயதில் படித்திருக்கும் படிப்பே அடிப்படை நாளாகப் பரம உபகாரத்தைச்செய்துவந்தது. அவாச்ய சப்தமும், தேவஹேளனம் பிராமண ஹேளனம், குல சம்பிரதாய ஹேளனம் இப்பேர்பட்ட குறும்பான வார்த்தை ~~பிரயோகங்களை காரணமாகப் பிள்ளைகள்~~ பழகுவதற்கு ஆனந்தவிகடன் முதலிய பேப்பர்களாவது, நாவல்கள் முதலிய நூல்களாவது அக்காலத்தில் கிடையாது. நல்ல வாக்கியம் நல்லொழுக்கங்களே குழந்தைகளுக்குப் பழகி வந்தது. கிருஷ்ண யஜுர் வேதத்தில் கெட்ட வாக்கியத்தைச் சொல்லாமலிருப்பதே தேவதைகளுக்கு சந்தோஷமான காரியம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நமது வீட்டுவழக்கத்தில் கெட்டவாக்கியம் அவசியமான காலத்திலும்கூட சுபமான சப்தங்களே பிரயோகிக்கும் வழக்கம். எப்படி என்றால்? வீட்டைத்துடை என்பதற்கு மெழுகு, பெருக்கு என்றும் கழுத்து சரடு அறுந்துவிட்டால் அது பெருகி விட்டது என்றும், செவ்வாக்கிழமையாயிருந்தாலும் அன்று மங்களவாரம் என்றும் பந்துக்கள் ஊருக்குப் புறப்பட்டால் போய் வருகிறேன் போய்வாருங்கள் என்றும், வீட்டில் ஸாமான் இல்லாவிடில் அரிசி வாங்கவேணும், பருப்புவேணும் என்றும், தான் தரித்திரனாயிருந்தாலும் தான்பெற்றகுழந்தைகளுக்கு ரத்தினம், தங்கம், தனபாக்கியம், மங்களம் என்றும் இப்படிக்கிச் சொல்லி வாழ்நாட்கள் கழிப்பது வழக்கம்.

கிராமப்படிப்பும் தெருத்திண்ணைப் பள்ளிக்கூடமும் போய் மேல்நாட்டு வழக்கப்படி ஸ்கூல்படிப்பு வந்ததும் தமிழ் நூலாதாரம் என்ற ஓர் புஸ்தகம் வந்தது. அதில் நான் படித்த சில சொற்கள் எனக்கு இப்போது ஞாபகத்தில் வருகிறது. அத்தி என்றும், அம்மி, அரிவாள், துயரம், துக்கம் என்றும் இப்பேர்ப்பட்ட சொல்லை நானும் படித்திருக்கிறேன். அத்தி என்பதற்கு அத்திப்பழம் என்று உரை. உபாத்தியாயர் சொல்லிக் கொடுப்பார். அப்படிக்கி அர்த்தமிருந்தாலும் வடமொழியில் அந்தச் சொல்லுக்கு கொல்லுதல் என்றுதான் அர்த்தம். தற்காலத்திலோ படிப்புக்கு ஆரம்பம் பட, பட என்று ஆரம்பிக்கப்படுகிறார்கள். அதை அநுசரித்துத்தான் காலமும் நடக்கிறது. குல தர்மம் பட, குடித்தனமும் பட, நிரோகபலமும் பட, கோவிலும் கெட என்று காலமும் வந்துவிட்டது. கிராமப்படிப்புக்கு சம்பளமும் மிகவும் குறைவு. டிவிஷன் பரீக்ஷை முதலியதுகளுக்கு செலவு இல்லை. படித்த பிள்ளைகளில் ஒருவராவது பேல்கிடையாது.

நமது நாட்டு கல்விகற்கும் காலமோவிடியற்காலத்தில்பிள்ளைகளை எழுப்பி பழயபாடம்கற்பித்தல். காலை 6 முதல் மணி 8வரை 9முதல் 12வரை, மாலை மணி 2முதல் 5வரை ராத்திரி 7முதல் 8½வரை இப்படிக்கி வித்தியாப்பியாச காலம் ஏற்பட்டிருந்தது. நடுப்பகலில் சுமார் இரண்டுமணி நேரமும், மாலையில் சுமார் ஒரு மணி நேரமும் தவிர பாக்கிகாலம் படிப்பிலேயே பிள்ளைகளுக்கு கருத்துவரும்படி செய்து வந்தோம். ரேனாட்டுப்படிப்பு படிக்கும் காலமோ காலை மணி 11 முதல் மணி 1, மாலை மணி 2முதல் 4, இப்படிக்கு வித்தியாப்பியாச காலம் நாள் 1க்கு நாலுமணிநேரமே. பாக்கி நேரம் டெனிஸ், புட்பால், ஸினிமா, டிராமா, நாவல், பேபர், சீட்டு இவைகளில் போது போக்கிவிடுகிறார்கள். இந்த நான்கு மணிநேரம் வித்தியாப்பியாச காலத்திலாவது ஒரே பாடத்தை வரிசைக்கிரமமாகப் படித்து ப்பூர்த்தி செய்வதும் வழக்கமில்லை. சிலநிமிஷம் பூகோளம், சில நிமிஷம் ஸான்ஸ்கிரிட்டு, சிலநிமிஷம் ஸைன்ஸு இப்படிக்கி நடக்கிறது. வாரமிரண்டுநாள் லீவு. வெயில்கால லீவு மாதம் 1½. நவராத்திரி ஜனவரிப் பண்டிகை வகையரு லீவு மாதம் 1½. ஞாயர் சனி அமாவாசை வகையரு லீவுநாள் நீக்கினால் அதில் மூன்றுமாதம் தலைந்துவிடும்.

இப்படிக்கு சுமார் வருஷத்தில் இருநூறு நாட்களில் தினம் 1க்கு நாலுமணிநேரம் படிப்பு நடக்கிறது. படிக்கும் காலமோ சரியான கடும்பகல் (அப்ரயோதவேளை) இப்படிக்கு அல்பகாலத்தில் பல்வித படிப்பைப் பலஉபாத்தியாயரை கொண்டு படிப்பிவித்தால் அப்பிள்ளைகள் எப்படி பரீக்ஷையில் தேறும், ஒருசமயம் விருதா காலக்ஷேபமில்லாமல் வீட்டில் டிவிஷன் வைத்துகொண்டு படித்து பாஸ்ஆனாலும் வேலைகிடைப்பது திண்டாட்டம். வேலை கிடைத்தாலும் கிடைக்கும் சம்பளம் படிப்பிற்குச் செலவழித்த பணத்திற்கு கால்வட்டிகூடக்கிடைக்காது. இதுகளை யோஜித்து கிராமவாசிகள் அந்தந்த படிப்பு ஆசானை தங்கள் கிராமத்திலேயே வைத்துகொண்டு படித்து தேறினால் போதுமே. மேனாட்டார் பரீக்ஷைகேட்டால் சொல்ல ரெடியாக இருப்போம். பரீக்ஷைக்கு எடுத்துகொள்ளாவிடில் ராஜாங்கவேலை தவிர எவ்வளவோ தொழில் இருக்கிறது. படித்தபிள்ளைகள் ஏன் அப்படிக்கி தொழில் வைத்துக்கொள்ளக்கூடாது கிளப்பு, உபாத்தியாய டிவிஷன் ஸ்கூல் சம்பளம் உடுப்பு வகையறுக்களை கவனித்து தொகை கூட்டினால் ஏதாவதொரு தொழிலுக்கு முதல் சேராதா? இப்படிக்கு வீண் பணச்செலவும் கஷ்டமும் ஏற்படுவதை கிராமவாசிகள் கவனிப்பார்களாக. சென்ற வைகாசி-மீ 25உயில் பாதநாட்டு படிப்புக்கும், மேனாட்டுப் படிப்புக்கும் உள்ள வித்தியாசத்தை எனது சிற்றறிவிற்கு எட்டியமட்டில் தெரிவித்தேன். நமது ஆர்யதர்மம் பத்திரிகை 24 புஸ்தகம்22ல் பார்க்கலாம்.

சிவாராம கணபதி கனபாடிகள்
மேல்மங்கலம்.

(3-ம் காலம் தொடர்ச்சி)

க்கலாம். ஆனால் 'அதேனும் தேநமிநிப்ருயாத்' என்ற நீதியையும் லௌகிகத்தையும அனுசரித்து இன்னும் சிறிது அழகான சொற்களால் உத்ஸாஹப்படுத்தி தானும் வேலை செய்க!!

வாரக் குறிப்புகள்.

(வே ஸோ. சர்மா.)

கோடாலிக் காம்புகள்! தர்மரக்ஷணார்த்தம் ஏற்பட்டவை மடங்கள். அதர்மத்தையாவது விருத்திசெய்யாதிருத்தலவச்யமல்லவா? குருத்ரோடி, 'மடாதிபதிகளின்' பேரைக்கெடுக்கவந்தவர். பூனாவில் பழய குருட்டு நம்பிக்கை ஸநாதனதர்மமல்ல என்று கூறுகிறார். இவர் சொல்லை மதிப்பவர் யார்?

பேச்சளவுதானோ? காந்திஜி நல்லொழுக்கம் மிக அவச்யமாகவேண்டுமென்று அழகாக பேசுகிறார். தன்மனதில் பட்டதையே அவர் நல்லொழுக்கமென கருதினால் அந்த பேச்சுகூட மதிப்பதற்கில்லை. அவரவரும் தன்மனதேஸாரிகளில் இவருக்கு சிஷ்யர்யார்? எப்படியோ சிலஸமயம் நல்லதை பேசுகிறார்.

அவர் வேண்டாம், நான்? திருப்பேரூர் ஓர் சுப்ரமண்ய திவ்யக்ஷேத்ரம். அதில் தர்மகர்த்தா ஸ்வாமி த்ரவ்யத்திற்கு ஒழுங்காக கணக்குவைக்கவில்லை என 'எண்டோன்மண்ட்' ஸபை, தான் நிர்வாஹத்தை ஏற்றது. கணக்கு இச்சபையால் நன்கு வைக்கப்படலாம். ஆனால் கர்மத்ரவ்யத்தைச் சிறிதும் வீண்செலவு செய்யாமல் தர்மத்தை நடத்துமா?

ஜாக்ரதை! ஜாக்ரதை!! தேசீயஸபை மந்திரி பதவி ஏற்கப்போகிறது. இச்சமயத்தில் கக்ஷிபிளவுபடாமலும் மதத்ரோஹம் செய்யாமலுமிருக்கும்படி அசற்கும், ஸ்வபாவ குணத்தை அது ஆரம்பிக்கும்போது பூர்ண பலத்தோடு எதிர்த்து நிற்க நம்மவருக்கும் எச்சரிக்கை செய்யவேண்டிய காலமிது.

யார் குற்றமிது? நாகபுரியில் ஓர் கல்வி அதிகாரி ஓர் பெண்ணை பலாத்காரம்செய்து மானத்தையும் பட்டத்தையும் இழந்தார். கல்வி அதிகாரிகள் அதிகாரதோரணையில் பெண்மக்களுடன் பழகும்போது பல தீங்குகள் நேரிடுகின்றன. சென்னையிலும் வெளிக்குவராமல் பல இதுபோன்ற வழக்குகளுண்டு. பெண்கள் உத்தியோகத்திற்கு வரக்கூடாது. கல்வியால் அடக்கமில்லாதவரை அங்ஙனம் பழகும்படி விடக்கூடாது. குற்றவாளி நன்கு சிக்ஷிக்கப்படவேண்டும்.

விச்வகர்மரும் விரும்பவில்லை! திருநெல்வேலிக்கருகே அந்த்யஜர் ஊர்வலம் தங்கள் தெருவழி வரக்கூடாதென விச்வகர்மா வேண்ட, அதிகாரி தடைசெய்தனர். இதைரத்துசெய்யும்படி எதிரி சார்பாக ஓர்பிராமணரே வழக்காடுகிறார். பண்டைய ஆசாரத்தை எல்லோருமே விரும்புகின்றனர். சீர்திருத்தக்காரர் பத்ரிகையுடன் சேர்ந்து பிராமணத்வேஷம் அதிலும் வைதிக த்வேஷத்தை வளர்க்கின்றனர்.

தகவல் அறிவியுங்கள்! தென்னாட்டில் பற்பல ஆஸ்திகஸபைகளிருக்கின்றன. அவைகள் தனது பெயர் நிர்வாஹகர் பெயர் ஸபை அங்கத்தினர் தொகை, தான் செய்த செய்து வருகிற தர்ம வேலை அனைத்தையும் சென்னை மாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்யஸங்க காரியதர்சி லலிதாஸதநம் ராயப்பேட்டை. என்றவிலாஸத்திற் கனுப்பினால் ஒற்றுமையாக வேலை செய்யலாம்.

குறைகூறுதீர்! வேலைசெய்! பத்ரிகை அளவோடு நிற்கும் காலம் சிறிதுண்டு ஸபைகளுக்கு என்பதை நேயர்கள் உணரவேண்டும். சென்னை மாகாண வ. ஸ். சங்கம் இன்னும் அதிக வேலை செய்ய வேண்டுமென்ற விருப்பத்துடன் ஓர்பண்டிதர் குறைகூறி எழுதி இரு

(தொடர்ச்சி 2ம் காலம் பார்க்க)

செங்கல்பட்டு.

தேச ஸங்க மகாநாடு முதல் கூட்டம்.

உபந்யாஸ குறிப்புகள்:

தேச ஸங்க மகாநாடு நாளது ஈச்வர-ஹு ஆடி-மீ 4உ முதல் 9உ முடிய (19—24ht Jnly.) 6 நாட்கள் கூடும். அது ஸமயம் பரமஹம்ஸ பிக்ஷுஸந்நியாஸிகள் ஸ்ரீ பரதாராஜர் ஸ்ரீ சிவபிரகாச ஆனந்தகிரி ஸ்வாமிகள் அவர்கள் அக்ராஸனம் வஹிப்பார்கள்.

ஆடி மீ 4உ (19—7—37)திங்கள் காலை மணி 10—11. விக்னேச்வர பூஜை, நவகிரஹப்ரீதி, ஸங்கத்து தர்மத்வஜ ஆரோஹணம். மாலை 4-30—6. மகாஜனங்களுக்கும் மகாநாட்டு தலைவருக்கும் வரவேற்பு உபசார உபந்யாஸம். இரவு மணி 7—9-30. ஸ்ரீ ஆசார்ய பூஜை மகா-ா-ா-ஸ்ரீ திருப்புகழ்மணி T. M. கிருஷ்ணஸாமி அய்யர் அவர்கள் பஜனை

ஆடி மீ 5உ (20—7—37) செவ்வாய். காலை மணி 8—9-30. அக்ராஸனாதிபதி அவர்களின் பிரஸங்கம். மாலை மணி 4 நகர ஸங்கத்தா பிரும்மஸ்ரீ சாஸ்திர ரத்னாகரம் விச்வநாத சாஸ்திரிகள் அவர்கள் உபந்யாஸம். 'வைதிக தர்ம ஸங்கம்.' இரவு மணி 7 மகா-ா-ஸ்ரீ திருமலை ஐயங்கார் பகவத் பக்தியும் தர்மாபிவிருத்தியும். இரவு மணி 8 பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் 'தர்மபிரமாணத்தில் அதிருதபுத்தி'

ஆடி மீ 6உ (21—7—37) புதன். காலை மணி 8 நகரஸங்கம் பிரும்மா பிரும்மஸ்ரீ அக்னி ஹோத்ரம் தாததேசிக் தாதாசார்யஸ்வாமிகள் 'வைதிக மந்திரபிரபாவம்' மாலை மணி 2-30—4-30 அந்தரங்க கைங்கரிய சபைகூட்டம். மாலை மணி 4 பிரும்மஸ்ரீ ~~அக்னிஹோத்ரம் ராமானுஜ தாதாசார்யர்~~ 'தர்மவிஷயத்தில் பிராம்மணர்களும் மற்றவர்களும். இரவு மணி 7 பிரும்மஸ்ரீ ஸோமதேவ சர்மா 'பிராமண ஸமூகம்.

ஆடி மீ 7உ (22-7-37) வியாழன். காலை மணி 8 பிரும்மஸ்ரீ ராமா சாஸ்திரிகள் 'சித்தசுத்தி, தத்வத்ரயஞானம் முக்தி. மாலை மணி 2-30—4-30. அந்தரங்க கைங்கரிய சபை கூட்டம். மாலை மணி 4-45—6. பிரும்மஸ்ரீ ராமசந்திர தீக்ஷிதர் 'பரிஷத், தர்மசாஸ்திர பிரமாணம், விதாயகர்த்தா.' இரவு மணி 7 பிரும்மஸ்ரீ குருஸ்வாமி சர்மா 'காங்கிரஸ் வாதிகள்' இரவு மணி 8 பிரும்மஸ்ரீ கவிரத்னம் மஹோபதேசக பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்கள் உபந்யாஸம். 'அக்ரஹாரங்கள் ஆச்ரமங்கள் தபோவனங்கள்'

ஆடிமீ 8உ (23—7—37) வெள்ளி காலை மணி-8 பிரும்மஸ்ரீ ஜகதீச்வரசாஸ்திரிகள் ஆலயதரிசனம். காலை 10-30— 12. பரமஹம்ஸ பிக்ஷுகர்களான வித்வத் ஸந்நியாஸிகள் அவர்களின் மானஸிக வியாஸபூஜை சாதுர்மாஸ்ய ஸங்கல்பம். மாலை 4 பிரும்மஸ்ரீ U. H. ஸுப்ரமணிய சாஸ்திரிகள் 'அன்புமதம்.' இரவு மணி 7 பிரும்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகள் அவர்கள் உபந்யாஸம். 'உண்மையான லோகஸங்கிரஹம்.' இரவு மணி 8 மகா-ா-ா-ஸ்ரீ G. கிருஷ்ணமாசாரியார் அவர்கள் உபந்யாஸம் 'ராமாயண ஸாரம்.'

ஆடி மீ 9உ (24—7—37) சனி. காலை மணி 8 பிரும்மஸ்ரீ மார்கஸகாய சர்மா 'தர்மரக்ஷககர்த்தா.' மாலை மணி 3 மஹாசபையில் அந்தரங்க கைங்கரிய சபை தீர்மானங்கள் நிரூபணம். மாலை மணி 5 மகா-ா-ா-ஸ்ரீ M. ராமராவ் 'ஸத்வித்யா பிரசாரம்.' இரவு மணி 7 மகா-ா-ா-ஸ்ரீ, T. S. ராமஸ்வாமி அய்யர் , தர்ம பிரசாரகர்களிடம் இருக்க தகுந்த குண விசேஷங்கள். இரவு மணி 8 ஸ்ரீ ஆசார்ய புனః பூஜை. இரவு மணி 8-20 அக்ராஸனாதிபதி அவர்களின் முடிவு பிரஸங்கம். இரவு

மேல்மங்கலம்.

ஆஸ்திக மஹாஜன ஸபை.

ஆனி-மீ 16-ய்உ (29—6—37) மங்கள வாரதினம் மாலை 4 மணிக்கு சபை கூடிற்று. அவ்வமயம் மதுரை கவிரத்ன பிரம்மஸ்ரீ V.S ராமசாமி சாஸ்திரிகள், கொடிமுடி பிரம்மஸ்ரீ ராஜகோபால சாஸ்திரிகள் முதலியோர் விஜயம்செய்திருந்தனர். உள்ளூர் மஹாஜனங்களும் ஏராளமாக விஜயம்செய்திருந்தனர். சபை அக்கிராசனர் பிரம்மஸ்ரீ பிராஞ்சேரி சுப்ரமணிய அய்யாவர்கள் அக்கிராசனம் வஹித்தார். பிரம்மஸ்ரீ V. S ராமசாமி சாஸ்திரிகளின் பிரேரணையின் பேரில் கொடிமுடி பிரம்மஸ்ரீ ராஜகோபால சாஸ்திரிகள் வர்ணாஸ்ரமதர்மம் என்னும் விஷயத்தை எளிய தமிழ் நடையில் யாவரும் அறியும்வண்ணம் உபந்யசித்தார்கள்.

பின்னர் பிரம்மஸ்ரீ V. S. ராமசாமி சாஸ்திரிகள் காங்கிரஸ் மஹாசபை, வர்ணாஸ்ரம ஸ்வாராஜ்ய சபை இவைகளின் தாரதம்யங்களை விளக்கினார்கள்.

நம் பாரததேசம் அடிமை வாழ்கையை நடத்திவருகிறது. என்பது யாவரும் அறிந்ததே. அதைக்கூடியமட்டில் விலக்கி யாவரும் சௌக்கியமாயிருக்கவேண்டுமென்னும் நோக்கத்துடன் கோபால கிருஷ்ண கோகலே போன்ற மிதவாதிகளால் 52 வருஷங்களுக்கு முன் காங்கிரஸ் மஹாசபை ஆரம்பிக்கப்பட்டு பின்னர் பூர்ண ஸ்வாராஜ்யவாதிகளான திலகர் முதலிய ஸநாதனதர்ம வீரர்களால் அச்சபை வளர்க்கப்பட்டு தற்பொழுது பொதுஉடமை ஆலயப்பிரவேசம், தீண்டாமை முதலியவைகளைக் கையாண்டிருப்பவர்களால் அச்சபை நாசப்படுத்தப்பட்டு வருகிறது. முக்கியமாக ஸநாதனிகளாலேயே காங்கிரஸ் மஹாசபை முன்னேற்றமடைந்தது. ஆனால் தற்காலம் ஸநாதன தர்மத்தையும், பிராசீன ஆகமங்களையும் அழித்து அதன் மூலம் ஸ்வாராஜ்ய மடையும் நோக்கத்தைத் தலைவர்கள் கையாண்டிருப்பதால் ஸநாதனிகள் (வர்ணாஸ்ரம தர்மங்களுக்குள்பட்டவர்கள்) காங்கிரஸ் மஹாசபையிலிருந்து விலகி, வர்ணாஸ்ரமஸ்வாராஜ்யசபை என்பதைத் தனியாக ஏற்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. மேலும் சீர்திருத்தவாதிகள் தர்மத்திற்கு விரோதமாகவும், பிராசீன வழக்கங்களுக்கு விரோதமாகவும் சாரதாச் சட்டம் முதலியவைகளை ஏற்படுத்திவிட்டார்கள். காலவித்யாசத்தால் ஏற்கனவே வர்ணாஸ்ரம தர்மத்தை மீறி சில காரியங்களை நம்மவர்கள் நடத்திவருகின்றார்கள் அதோடு நிற்காமல் தர்மத்திற்குள்பட்டுச்செய்யும் சிலர்களையும் இச்சட்டங்கள் புண்படுத்துவதைத்தான் ஆக்ஷேபிக்கிறோம். நம் தர்மத்தை யாவராலும் அழிக்கமுடியாது. ஆனால் தர்மத்திற்குள்பட்டுச் செய்யும் சிலர்களையும், சட்டங்கள் செய்யமுடியாமல் செய்வதால் ராஜாங்கத்திற்குத் தெரிவித்து எங்களின் தர்மங்களை நாங்கள் செய்யும்படியான சலுகை எங்களுக்கு வேண்டுமென்று தெரிவிக்க வேண்டும். மற்றசபைகள் பலத்து சீர்திருத்தச்சட்டங்கள் ஏற்படுத்தவேண்டுமென்பதை

மணி 9 ஸங்கம் ராஜதுலகாணி மகா-ா-ா-ஸ்ரீ R, ராதாகிருஷ்ணய்யர் அவர்கள் அக்ராஸனாதிபதி அவர்களுக்கும் ஸபைக்கும் வந்தனோபசாரம்.

குறிப்பு:—(1) ஆடி மீ 4உ முதல் 9உ முடிய பிரதிதினமும் மூன்று வேதபாராயணமும் லோக க்ஷேமார்த்தமாக சில வைதிகமான ஹோமங்களும் நடைபெறும்

(2) உசிதம்போல், மகாசபைக்கு விஜயம் செய்யும் மகா வித்வான்களைக்கொண்டு அநேகபடியான உபந்யாசங்கள் நடைபெறும்

நம்மவர்கள் அவ்வளவாக கவனிக்காமல் இருந்துவிட்டபடியால் சட்டங்கள் ஏற்பட்டு நம்மை அனேகம் துயரங்களுக்கு ஆளாக்கிவிட்டன ஆகையால் நம்மவர்கள் நம்சபைகளை பலப்படுத்தி, அதன்மூலம் தர்மவிரோதமான சட்டங்களை கண்டித்து கவர்ன்மெண்டாருக்கு தெரியப்படுத்தினால் ஏதோ இது ஒரு பெரியசபை இருக்கிறது என்பதை ராஜாங்கமறியநேரிடும்.

மேலும் ஸ்வராஜ்யம் என்றால் ஸ்வதர்மத்துடன் கூடினது என்றுதான் தாத்பர்யம். ஸ்வதர்மத்துடன் கூடினதே உயிருடன் கூடின பூர்ண ஸ்வராஜ்யமாகும். அதல்லாமல் ஸ்வதர்மத்தை அழித்து அதன் மூலம் ஸ்வராஜ்யத்தை அடைவது உயிரற்ற உடல் போலும், வேரற்ற மரம்போலவேதானாகும். ஸ்வதர்மத்தைத் தவிர்த்து ஸ்வராஜ்யத்தைப் பிரிக்கமுடியாது. முக்கியம் ஸ்வராஜ்யம்தானென்றும் ஸ்வராஜ்யமடைந்த பிறகு ஸ்வதர்மத்தை அனுஷ்டிக்கலாமென்றால் பணத்திற்காக அகார்யம செய்து பிற்பாடு ஒழுங்காக இருக்கலாமென்னும் நோக்கத்திற்கும் இதற்கும் வித்தியாசமில்லை என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. ஆகையால் ஸ்வதர்மம் முக்கியமானதால் அதை நாம் சௌகர்யமாக அனுஷ்டிக்க வழி தேடினால் பின்னர் பூர்ண ஸ்வராஜ்யத்தை ஒற்றுமையுடன் அடையலாம். மேலும் நாம் ஸ்வதர்ம, ஸ்வராஜ்யம் ஸ்வதேசம் மூன்றிற்கும் உழைக்கவேண்டுமென்பதை லக்ஷ்யமாகக் கொண்டிருக்கிறோம். ஆனால் காங்கிரஸ் தலைவர்கள் கேவல ஸ்வராஜ்யம் ஒன்றையே லக்ஷ்யமாகக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் ஸநாதனிகள் எவ்விதத்திலும் காங்கிரஸ்காரர்களுக்கு மேலானவர்கள் என்பதில் ஐயமில்லை! நாம் காங்கிரஸ்காரர்களிடத்தில் விருப்புடனேயே இருக்கிறோம். அவர்களும் நம்மைச் சார்ந்தவர்கள். ராஜீய விஷயத்தில் அவர்களுடன் உழைக்கத் தயாராயிருக்கிறோம். ஆனால் மதவிஷயங்களில் பிரவேசிக்கக்கூடாது என்பதை வற்புறுத்துகிறோம். நம் தலையில் நாமே மண்ணைப் போட்டுக்கொள்ளுவது அழகல்ல. இதுவே நம் தலைவர்களின் ஆழ்ந்த அபிப்பிராயம் என்பதை யாவரும் அறியும் வண்ணம் அழகாக உபந்யசித்தார்கள்

ஜனங்கள் உபன்யாசாமுதவெள்ளத்தைப் பருகி ஆனந்தக்கிலாழ்ந்தனர். பிறகு பிரம்மஸ்ரீ சிவராமசிரௌதிகளால் அக்கிராசனருக்கும் உபந்யாசகர்களுக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு சபை மாலை 6மணிக்கு இனிது பூர்ணமானது.

சு சுப்பராமு சாஸ்திரிகள்

பல தேவாலயங்களுக்கு நோட்டீஸ்

நிர்வாஹ அதிகாரி நியமிக்க யோஜனை.

சென்னை ஹிந்துமத ஸ்தாபன போர்டார் தமிழ் ஜில்லாக்களிலுள்ள அநேக தேவாலயங்களின் நிர்வாஹம் சீர்கெட்டிருப்பதன்காரணமாக அவைகளுக்கு சம்பளத்துடன் கூடிய ஒரு நிர்வாஹ உத்யோகஸ்தரை நியமித்து போர்டின் மேற்பார்வைக்கு எடுத்துக்கொண்டுவிட முயற்சி நடக்கிறது.

திருச்சி மலைக்கோட்டை கோவில், கும்பகோணம் ஸமீபமான திருபுவனம் கோவில் சீர்காழி தாலூக்கா வைத்தீஸ்வரன் கோவில், மதுரை ஜில்லா நிலக்கோட்டை மல்லிப்பள்ளம். வரதாஜர் கோவில், எட்டுக்குடி சுப்ரமண்யஸ்வாமி கோவில், திருச்செந்தூர் சுப்ரமண்ய ஸ்வாமிகோவில், சிக்கல் நவனீதேச்வரர் கோவில் முதலியவைகளின் நிர்வாஹ ஒழுங்காயில்லாததால் அவைகளுக்கு ஏன் நிர்வாஹ உத்யோகஸ்தரை நியமிக்கக்கூடாதென்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

215193

பப்பாய்.

பெரியாரின் விஜயம்.

இந்த ஸ்ரீ மோஹமயி நகரத்தில் 'மஹாலக்ஷ்மீ' என்ற ரயில்வே ஸ்டேஷன் அமைந்து விளங்குவது பாராட்டத் தகுந்தது. இதற்கிணங்க ஆஸ்திகஸமாஜம் என்று கோர்த்தியான கல்யாண மண்டபங்களேற்படுத்தப் பெற்றிருக்கின்றன. இங்கு ஆஸ்திக மஹாஜனங்களுடைய கோரிக்கைப்படி நாச்சியார்கோவில் லக்ஷ்மீமந்திரம் ஸ்ரீ உபய வேதாந்தசார்ய பீடம் அபிநவஸரஸ்வதீ வாங்மூக ரத்நாகோச: வித்வத் சிரோமணி: குருவார்ய' நடாதூர் கிருஷ்ணமாசார்ய ஸ்வாமீ ஆஸ்திகஸபா திருமண்டபத்தில் பகவத்பக்தி விஷயத்தைப்பற்றி அனைவரும் பரமானந்தபரிதர்களாகக் கேழ்க்குமாறு ஸநாதனதர்மம் ஆசார்யாபி பக்தி இவைகளை பல ஆதார வசனங்களுடன் மூன்றுமணி ஸாவகாசம் உபந்நியஸித்தனர். பப்பாய் வாஸிகளான மஹாஜனங்களின் ஆனந்தத்திற்கறிகுறியாக ஸ்ரீ நடாதூர் ஸ்வாமிகளுக்கு நல்வரவேற்பு உபசார மங்களவாழ்த்துப் பத்திரிகை படித்து அதை வெள்ளிசித்திர ஸ்ரீ ரங்கநாதஸ்வாமி பிர்பலாங்கிருத அழகிய பெட்டியில் வைத்து ஸமர்ப்பித்து பூமாலை சூட்டி வந்தன புகழ்மொழி கூறி கொண்டாடின வைபவம் திருப்தியை யளிக்கிறது.

ஆஸ்திக நிரூபர்.

ஷண்முகநாதபுரம்.

ஷண்முகவித்யாசாலையின் முதல் ஆண்டு நிறைவு விழா.

ஈச்வர-௵ ஆனி-௴ 26௳ வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-மணிக்கு ஸ்ரீமான் ராம. கும. சு. குமாரப்ப செட்டியாரவர்களின் பங்களாவில், புதுக்கோட்டை மஹாராஜா கல்லூரி கணித போசிரியர் ப்ரும்மஸ்ரீ வ. கே. பஞ்சாபகேசய்யர் அவர்கள் தலைமையில் விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கீழச்சிவல்பட்டி, திருப்பத்தூர், குன்னக்குடி, பலவான்குடி, ஆத்தன்குடி முதலான ஊர்களிலிருந்து ஆசிரியர்கள் பலரும், மற்றும் பலரும் மற்றும் பல கனதனவான்கள் பலரும் விஜயம்செய்தனர். வித்தியாசாலையின் நிர்வாகஅங்கத்தினர்களில் ஒருவரான ப்ரம்மஸ்ரீ சிவராமய்யரவர்கள், 31மாணவிகள் வாசித்துவருவதாகவும்நான்காவது வகுப்புவரை அங்கீகாரம் பெற்றிருப்பதாகவும் பலபெரியார்களின் மேலான அபிப்பிராயங்களையும் பள்ளிக்கூட நடை முறையையும் அறிக்கையினின்றும் வாசித்தார்கள்.

மாணவ மாணவிகளின் நடிப்பு, சம்பாஷணை, பேச்சு மகிழ்ச்சியை அளித்தது. அவர்களுக்குப் பரிசுகளும் சிற்றுண்டியும் வழங்கப்பட்டன. தெய்வவழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு சிறப்பாக கலாசாலை நடைபெற்றுவருவதையும், ஆசிரியர் சுப்பிரமணிய அய்யரின் திறமையையும், நிர்வாக சபையாரின் சிரத்தையையும் தலைவரவர்கள் சிலாகித்து மூலாதாரக் கல்வி சுவாசக்காற்று போன்றதென்றும், சமயாசாரமில்லாத கல்வி பயனற்றதென்றும் விளக்கி, கீதையினின்றும் அரிய மேற்கோள்களுடன் இனிய பிரசங்கம் செய்தார்கள்.

டெபுடி இன்ஸ்பெக்டராப் ஸ்கூல்ஸ் ஸ்ரீமான் ராமச்சந்திர அய்யரவர்கள் சில இடங்களில் சமயபோதனை அலக்ஷியம் செய்யப்பட்டு வருவது வருந்தத்தக்கது என்றும் தேவாரம், திருவாசகம், திருப்புகழ், பிரபந்தம், முதலானவற்றை குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுத்து வரவேண்டியது அவசியம் என்றும், சிறுவயது முதல் சுய உணர்ச்சி இன்றியமையாததென்றும், அவ்வித போதனைதான் இந்தியாவின் க்ஷேமத்திற்கு உரியதென்றும், இக்கலாசாலை அவ்விதமுறையில் நடைபெற்றுவருவது பெரிதும் மகிழ்ச்சியைத் தருகிறதென்றும் உருக்கமாகக் கூறினார்கள். குன்னக்குடி ஸ்ரீமான் கே. என். சுப்பிரமணிய சாஸ்திரிகள், கணபதி சுப்பிரமணிய தீக்ஷிதர், திருப்பத்தூர் ஆசிரியர் எஸ் கிருஷ்ணசாமி அய்யர், பலவான்குடி ஆசிரியர் காசீஸ்வரய்யர் ஆத்தன்குடி ஆசிரியர் ஜெகதீசய்யர் முதலானோர் பாராட்டுமொழிகள் பகன்றனர். வந்தன வாழ்த்துடன் வைபவம் இரவு 9-மணிக்கு இனிது நிறைவெய்தியது. வந்திருந்திருந்தோரனைவருக்கும் உணவு அளிக்கப்பட்டது. பள்ளிக்கூட அபிவிருத்தியில் விசேஷ சிரத்தை எடுத்துவரும் ஸ்ரீமான் ராம. குமா. சு. குமாரப்ப செட்டியார் (பலவான்குடி) பெரி. அரு. அருணாசலஞ் செட்டியார் (ஆத்தன்குடி) வி. சிவராமய்யர் (ஷண்முகநாதபுரம்) முதலானோர்களை அனைவரும் பாராட்டுகின்றனர்

ஒரு நிரூபர்.

சென்னை.

ஸதுபதேசம். மைலை ஸ்ரீபாகவத ஸபையில் சென்ற வெள்ளியன்று பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ ஆனந்தகிரி ஸ்வாமிகள் விஜயம்செய்து ஸ்ரீ ஸோமதேவசர்மா நடத்தும் பாகவத உபன்யாசத்தை ச்ரவணம் செய்து மறுநாள் ஸ்ரீ சர்மாவின் பிரார்த்தனைக்கிணங்கி தேஹசௌசம் நாமஜபம் பகவதாராதனம் ஏகதேவ நிஷ்டை என இவைகளைத்தழுவ மிக அரிய உபன்யாஸம் செய்தார்கள்.

பிக்ஷையும் அஷ்டபதி பஜனையும். ஸ்ரீ சர்மாவின் பிரார்த்தனைக்கிணங்கி ஸ்ரீ ஸ்வாமிகள் கீதாச்ரவண சபையில் மிக அருமையான உபதேசஞ்செய்து விதிப்படி ஸ்ரீ சர்மா அவர்களது கிருஹத்தில் பிக்ஷை செய்தார். மாலை 7மணிக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில் ஸ்ரீராமசந்திர ஹரிஹரி தன் கோஷ்டியுடன் வந்து 24 அஷ்டபதிகளையும்பாடி ஸந்த்யா வந்தனத்திற்குப் பிறகு திவ்யநாம சங்கீர்த்தனம் செய்தார். பக்தர்கள் பரவசமாயினர். மஹாக்நிசித் ப்ரும்மஸ்ரீயாக தீக்ஷிதர்வாளும் செ மா. வர்ணச்ரம ஸ்வாராஜ்யசங்க காரியதர்சி ராஜமான்ய ஸ்ரீ லலிதாப்ரசாத தண்டலம் ராமஸ்வாமி அய்யரவர்களும் விஜயம் செய்திருந்தனர்

சென்னை பிரதிநிதிகள். ஸ்ரீ பரமஹம்ஸ ஆனந்தகிரி ஸ்வாமிகள் சென்னையில் சர்மா உள்பட பல அங்கத்தினரைச் சேர்த்து செங்கல்பட்டில் நடக்கும் வியாஸபூஜையை ஒட்டி நடக்கும் தேச தர்மசங்கத்திற்கு பல பிரதிநிதிகளையும் பஜனை கோஷ்டியையும் வரும்படி ஆஞ்ஞாபித்தனர். வெள்ளிக்கிழமை ஸ்ரீஸ்வாமிகள் செங்கல்பட்டு வருவார்.

நாது நிரூபர்.

ஸ்ரீ வியாஸ பூஜா மஹோற்சவம்.

திருக்குற்றாலம், தென்காசி.

திரிகூடாசல க்ஷேத்திர மடாதிபதியாகிய ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீசிவசிதானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் என்னும் பிரசித்திபெற்ற ஸ்ரீ மௌனானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஸ்ரீ ஈஸ்வரநாம௵ ஆடி௴ 10௳ ஞாயிற்றுக்கிழமை சரியான 1937௵ ஜூலை௴ 25௳ திருநெல்வேலி ஜில்லா, தென்காசி தாலுக்கா, திருக்குற்றால க்ஷேத்திரத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளால் நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீ தத்தாத்திரேய மந்திரத்தில் ஸ்ரீ வியாஸ பூஜா மஹோற்சவத்தை நடத்துவதாய் கிருபை செய்திருக்கிறார்களானதால் பக்தர்கள் எல்லோரும் விஜயஞ்செய்து, இந்த வியாஸ பூஜையைப் பார்த்து ஆனந்தித்து மந்திராக்ஷதை பிரஸாதமும் ஸ்ரீ ஸ்வாமிகள் அனுக்கிரஹமும் அடையுமாறு விரும்பப்படுகிறது.

பக்தர்கள்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.

ஸ்ரீமந்நாத முனிகள் திருநாட் கொண்டாட்டம்.

சங்கக் காரியாலயமான ஸ்ரீ ரங்கவிலாசத்தில் 4—7—37௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 7மணிக்கு ஸ்ரீமந்நாதமுனிகள் திருநாட் கொண்டாட்டம் ஆரம்பமாகியது. காரியதரிசி கடவுள் வாழ்த்து பாடியபின் முன்னுரையாகப் பேசுகையில் இச்சங்கத்தில் ஸ்ரீமந்நாதமுனிகள் திருநாள் இன்றுதான் முதன்முதல் கொண்டாடப்படுகிறது. அவரது அவதாரதினம் ஆனி அனுஷம். நம்மாழ்வாருக்கடுத்தவர் இவரென்பது விசாகத்துக்குப்பின் இவர் தோன்றுதலிலேயே சூசிப்பிக்கப்படுகிறது. இவரது பிரபாவம் அறிஞரான நம் அவைத்தலைவரான ஸ்ரீமான் கேசவய்யங்காரவர்களால் இன்று உபன்யாஸம் கேட்டு நாம் இன்புறுவோமாக என்றுகூறினார்.

சங்கத்தலைவரான ஐயங்காரவர்கள் "நாதமுனி பிரபாவம்" எனும் விஷயம் பற்றி அரியதோர் உபன்யாஸம் செய்தார்; காரியதரிசி வந்தனோபசாரம் வழங்கியபின் இனிது முடிவடைந்தது.

பெரியாழ்வார் திருநாள். நாளது ஜூலை௴ ஒன்றாந்தேதி சங்கக்காரியாலயமான ஸ்ரீரங்கநிலயத்தில் மாலை 6-30 மணிக்கு ஒரு வித்வத் ஸதஸ் நடந்தது. அட்வகேட் ஸ்ரீ உ. வே பகவத் விஷயம் கிரணூர் நரசிம்மாசாரியார் ஸ்வாமி தலைமை வகித்தார்; அன்று பெரியாழ்வார் திருநாள் மிகச்சிறப்பாக நடந்தது.

ஸ்ரீஉபவே குரிச்சி ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரியார் ஸ்வாமி "பெரியாழ்வார் வைபவம்" என்னும் விஷயம்பற்றி மிக அரியதோர் உபன்யாஸம் செய்தார். தலைவர் முடிவுரையில் இங்ஙனம்தான் இதுவரை கேட்டதில்லை என்றும் அடிக்கடி இம்மஹான் எழுந்தருளி உபன்யசிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். காரியதரிசி வழங்கிய வந்தனோபசாரத்துடன் சபை இரவு 8-30 மணிக்கு இனிது முடிவடைந்தது.

ப. ரெ. திருமலை ஐயங்கார் காரியதரிசி

குழந்தை
குடல் சால் கட்டிகளுக்கு
ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள
மதுரை வைத்ய நிபுணர் T.R. ஆராவமுதய்யங்காரின்
மருந்தை உபயோகியுங்கள். ஆயிரக்கணக்காக சௌக்கியம். தங்கமெடல் பரிசும்
பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது.
ஒரு மாதம் மருந்து விலை ரூ. 4—8—0 வி. பி. வேறு.
டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,
20, வடக்கு வெளிவீதி, மதுரை

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Publsihed by A Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆர்யதர்மம்

ஸ

4/ 28

22

22 — 7 — 1937

21594

607

215214

28 JUL 1937

425

Registered No. M. 2913.

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)

குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 22 | கும்பகோணம். கலி 5039 ஈஸ்வர-ளு ஆடி-மீ 7உ 1937-ளு ஜுலை-மீ 22உ | வெ 28

திருவிசலூர் நீலகண்ட சாஸ்திரிகள் ஸம்ஸ்கிருத பாடசாலை,

திருவிசலூர், தஞ்சாவூர் ஜில்லா.

(31—3—1937 தேதியோடு முடிந்த வருஷத்து கணக்கு சிட்டம். Balance Sheet)

	ரூ.	அ.	ப.		ரூ.	அ.	ப	ரூ.	அ.	ப.
பொருப்பு:—				ஆஸ்தி:—						
பொது—மூலதனம்—சென்ற வருஷத்திய ஸ்டேட்மெண்டுப்படி, மொத்தம்	37,770	8	9	பாடசாலைக் கட்டடம்				2,500	0	0
				சென்ற வருஷ கணக்குப்படி புஸ்தகசாலை புஸ்தகங்கள்				227	11	3
				சென்ற வருஷ கணக்குப்படி சமையல் பாத்திரங்கள், கருவிகள், முதலிய	311	12	9			
				நடப்பு வருஷத்தில் சேர்க்கப்பட்டது	9	13	3			
								321	10	0
				சென்ற வருஷ கணக்குப்படி தட்டுமுட்டு ஸாமான்				240	8	0
				வருஷமுடிவில் கைவசமிருந்த நெல்பொருமானம்				188	2	0
				வரவேண்டிய கடன்கள்:—முதல்	24,300	0	0			
				„ வட்டி	1095	4	3			
								25,395	4	3
				சர்க்கார் கடன் பத்திரங்கள் (ரூ. 5000 விலையுள்ளது)				4900	0	0
				கையிருப்பு தனம்:—						
				மதராஸ் Provincial Co-operative Bankல்	3321	15	3			
				ரொக்கம்	3	6	5			
				பாடசாலை பிரதம பண்டிதர் அவர்களிடம்	8	7	3			
								3333	12	11
				சென்றவருஷத்திய ஸ்டேட்மெண்டின்படி அதிகச்செலவு	693	12	11			
				நடப்பு வருஷத்தின் அதிக வரும்படி	30	4	7			
								663	8	4
ஆக மொத்தம் ...	37,770	8	9	ஆக மொத்தம்				37,770	8	9

ஆடிட்டர் ரிப்போர்ட்டு:—1937-ளு மார்ச்சு-மீ 31உ யோடு முடிந்த வருஷத்திய திருவிசலூர் நீலகண்ட சாஸ்திரிகள் ஸம்ஸ்கிருத பாடசாலை கணக்குகளையும் அந்தக் காலத்தைப்பற்றிய ஆஸ்தி, பொருப்பு ஸ்டேட்மெண்டையும் அவை சம்பந்தமான கணக்குப் புஸ்தகங்களுடனும் வவுச்சர்களுடனும் ஒத்துப்பார்த்து பரிசோதனை செய்தேனென்றும் என்னுடைய அபிப்பிராயத்தில் மேலேகாட்டிய ஆஸ்தி, பொருப்பு ஸ்டேட்மெண்டானது ஷைபாடசாலையின் ஸ்திதியைப்பற்றி கணக்குக் கொடுக்கப்பட்ட தகவல்களின்படிக்கும் ஸமாதானங்களின்படிக்கும் பாடசாலையின்புஸ்தகங்களின்படிக்கும் உண்மையானதும் சரியானதுமான நோக்கத்தை தெரிவிக்கிறதென்றும் சர்டிபைசெய்கிறேன்.

நெ. 317, தம்புசெட்டித்தெரு,
மதராஸ், 29—5—1937.

(ஒப்பம்) K. R. சுப்பிரமணியப் பிள்ளை A.L.A.A.,
Certified Accountant & Auditor.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்

ஜாதி ஜன்மாந்திர கர்மாவினால் ஏற்படுவதே.

சென்ற வியாஸத்தில் 'தர்மசர்யயா' என்ற ஸூத்ரம் மறுபிறப்பிலேயே ஜாதி மாறுவதை வெளியிடுகிறதென்று நிரூபித்தோம். "பாரத தர்ம" வியாஸகாரர் ஜாதிபரிவ்ருத்தெள என்பதற்கு ஹாதத்தர் Dr. G. Buhler. இவர்கள் மறுபிறப்பில் என்று அர்த்தம்செய்ததை ஆக்ஷேபிக்கிறார். ஆக்ஷேபத்திற்கு காரணத்தையும் சொல்லுகிறார். அவரது ஆக்ஷேபத்தின் ஸாராம்சம்:—கர்மதத்வம் உலகிற்குப் பொதுவானது. ஒரு ஜன்மத்தில் செய்த நன்மை தீமைகளின் பயனை மறு ஜன்மாவில் அநுபவிப்பதென்பது உலக முழுவதற்கும் ஏற்பட்ட வேதாந்த ஸித்தாந்தம். ஜாதிமுறை என்பது ஆர்யர்களுக்கு மட்டும் ஏற்பட்டது. இந்நிலையில் ஜாதி தத்வத்தையும் ஜன்மாந்திர கர்மாதீனமென்று ஒப்பினால் ஜாதி தத்வமே இல்லாத தேசத்தில் பிறப்பது முரண்படும். அதாவது—உதாஹரணமாக ஒரு சூத்ரன் ஸ்வதர்மத்தை நன்கு அநுஷ்டிக்கிறான். நற்கர்மாக்களுக்கநுகுணமான ஜாதியை அவன் மறு பிறப்பிலேயே அடைய வேண்டும். மறு பிறப்பில் ஜாதிமுறை உள்ள தேசத்தில் பிறந்தாலல்லவோ அவன் மேல் ஜாதியை அடையலாம். உலகில் ஜாதி முறை அடியோடு இல்லாத தேசங்களும் இருக்கின்றன. அங்கு அடி சூத்திரன் பிறந்தால் மேல்ஜாதியை அடையமுடியாது. ஆகவே ஜன்மாந்திரத்தில் பூர்வ ஜன்மாவில் செய்த கர்மானுகுணமாக ஜாதிமாறும் என்ற ஸித்தாந்தமே யுக்தமானதன்று"

இவ்வாக்ஷேபத்தை கவனிப்போம். ஸ்தூலமாக கவனிக்குங்கால் இவ்வாக்ஷேபம் ஆழ்ந்த சிந்தனையுண்டுபண்ணுவது நிச்சயம். இவ்வாக்ஷேபம் பல முக்யமான அல்லது அடிப்படையான கொள்கைகள் ஸம்பந்தப்பட்டது. இதிலிருந்து தோன்றக்கூடிய ப்ரச்னைகளையும் இப்பொழுது விசாரிப்பது அஸாத்யமானாலும் சுருக்கமாக இங்கு ஸமாதானம் கூறுவோம்.

ஒரு ஜன்மாவில் செய்த நன்மை தீமைகளின் பலன்களை மறுபிறப்பில் அநுபவிக்கிறான் என்ற தத்வம் உலகிற்குப் பொதுவானதே. அப்படி மறு ஜன்மாவில் அடையக்கூடியவை எவை? இதை யார் நிர்தாரணம் செய்வது? ஸுக துக்கங்கள் ஜன்மாந்திர பாக்யத்தின் காரணமானவை என்பது ப்ரஸித்தமானது. உலகில் ஸஹாரா, ஸைபீரியா போன்ற தேசங்களும், ஸ்விட்ஸர்லாந்து, பாரீஸ் போன்ற தேசங்களும் இருக்கின்றன. இங்கெல்லாம் ஸுகம் ஒரேவிதமானதென்று யாராவது சொல்லமுடியுமா? மறுபிறப்பில் விசேஷ ஸுகத்தை அடையக்கூடிய கர்மாவைச் செய்தல் ஸ்விஸ்காரர் ஸஹாராவில் பிறந்தால் ஸ்விஸ் ஸுகத்தை எப்படி அடையமுடியும்? ஐச்வர்ய விஷயத்திலும், அமேரிக்காபோன்று பணக்காரர் நிறைந்த தேசங்களும் இருக்கின்றன. அமேரிக்காவில் உள்ள ஒரு பணக்காரன் ஜன்மாந்திரத்தில் நல்ல பலன்களைக் கொடுக்கக்கூடிய கர்மாக்களை செய்து மறுபிறப்பில் இந்தியாபோன்ற ஏழை நாட்டில் பிறந்துவிட்டால் எப்படி பணக்காரனாகமுடியும்? ஐச்வர்யம் ஜன்மாந்திர கர்மாவினால் ஏற்படுவது என்பது ஹிந்து மதத்தின் த்ருடமான கொள்கை. இவ்வித கர்மாவினால் தான் ஏழை பணக்காரன் என்ற வித்யாஸம் ஏற்படுவது. இங்கு தனி சொத்துரிமை அடிப்படையானது. உலகில் ஏழை பணக்காரன் என்ற வகுப்பு பேதமே இல்லாத பொது உடமை ரஷ்யாபோன்ற நாடுகள் இருக்கின்றன. வேறு தேசங்களில் ஏழையாகவோ பணக்காரனாகவோ ஆகுவதற்கு வேண்டிய கர்மாக்களை ஜன்மாந்தரத்தில்செய்து மறுபிறப்பில் ரஷ்யாவில் பிறந்தால் ஜன்மாந்திரபலனை எப்படி அநுபவிப்பது? ஆகவே—இந்த ஜன்மாவில் நாம் அனுபவிப்பதெல்லாம் முன்ஜன்மாவில் செய்த கர்மாவின் பலமேயானாலும் நாம் பிறந்துள்ள தேசத்திற்கநுகுணமாகவே ஜன்மாந்திர கர்மா பலனைக்கொடுக்கிறது. ஜன்மாந்திரகர்மா ஒரே விதமாகவே எங்கும் பலிப்பதாக நினைப்பது தவறானது. ஜன்மாந்திரத்தில் ஜாதிமாறக்கூடிய கர்மாவைச் செய்தவன் இந்தியாவில் பிறந்தால் உயர்ந்தஜாதியை அடைகிறான். ஜாதிமுறை இல்லாத இடங்களில் பிறந்தால் ஜாதியைக் கொடுக்கக்கூடிய கர்மா பலனளிக்காது போய்விடலாம், அல்லது ஜாதிஸ்தானத்தில் வேறு பலனை கொடுக்கலாம். இதனால் ஜாதி ஜன்மாந்திர கர்மாதீனம் என்ற கொள்கைஎப்படி தவறானதாகும்?

ஜாதி தத்வம் இல்லாத தேசத்தில் பிறப்பது காரணமாக ஜாதி ஜன்மாந்தர கர்மாதீனமாகாதானால் பலவித சீதோஷ்ணஸ்திதியும், புத்தி பலமும் உள்ள பரந்த இவ்வுலகில் எதையும் ஜன்மாந்திர கர்மாதீனமானதாக ஸ்தாபிக்க முடியாது போய்விடும்.

உண்மையிலோ, ஜாதி தத்வம் இல்லாத தேசமே கிடையாது. வகுப்பு வித்யாஸம் ரஷ்யாவிலும் அங்கீகரிக்கப்படுவதாக கேள்விப் படுகிறோம். இங்கு ஜாதி என்பதால் அதற்குறித்தானதொழிலைக்குறிப்பிடுகிறோம். உலகில் ஸமூகத்திற்கு தேவையான கார்யங்களைச் செய்வதற்காகவே ஜாதிபேதம் என்னும் பெயரால் தொழில்கள் பிரிக்கப்படுகின்றன. பலவாறாகவே அத்தொழில்கள் உள்ளன. எந்த தேசம் எவ்வளவு சீர்திருத்தப்பட்டாலும் உலகின் நாகரிகம் எவ்வளவு ஆகாயத்தில் பறந்தாலும், பரஸ்பரம் முரண்பட்டும் உயர்வு தாழ்வைக் குறிப்பிடக்கூடிய தொழில்கள் இல்லாத தேசமே கிடையாது. இத்தொழில்கள் ஸமூஹத்திற்கு இன்றியமையாதவை. யாரும் இத்தொழில்களில் ஒன்றை செய்தாகவேண்டியதவசியம். அவனவனது ஜன்மாந்தர பாக்யத்திற்கு அநுகுணமாக இவைகளில் ருசி உண்டாகிறது. அவ்விதம் தனக்கிடப்பட்டுள்ள தொழிலை ஒருவன் ஸமூஹ கைங்கர்ய புத்தியால் செய்து வந்தால் மறு ஜன்மாவில் உயர்ந்த தொழிலைச் செய்யக்கூடிய ஆற்றலை அடைகிறான். உதாரணமாக கீழ் ஜாதி மாறுவதற்கு ஸ்வதர்மாநுஷ்டானம் காரணமென்று வைத்துக் கொள்வோம். இங்குள்ள தர்மாநுஷ்டானம் என்பது ஸந்தியாதி ஸ்வதர்மாக்களையும் இஹலோக ஸம்பந்தமான தொழில்களையும் குறிப்பிடுவது. மற்ற தேசங்களில் ஸந்தியாதிகள் இல்லாவிடினும் இகலோக ஸம்பந்தமானதொழில் இல்லாத தேசமே கிடையாது. ஆகவே தன் ஸ்வபாவத்திற்கு அனுகுணமான தொழிலைக் கைக்கொண்டவன். அதை நன்கு அநுஷ்டித்தால் உயர்ந்த தொழிலை மறு ஜன்மாவில் அடைகிறான் என்றும் சொல்லலாம். ஆகவே ஜாதி ஜன்மாந்தரகர்மாதீனம் என்று ஒப்புவதால் யாதும் விரோதமில்லை

அக்நிஹோத்ரம் ராமாநுஜ தாதாசாரியர்.

பெரிய ரயில் விபத்து.

100 பேர் கோர மரணம்.

பஞ்சாப்புர்கும் கல்கத்தாவுக்கும் மிடையே வந்துகொண்டிருந்த பிரயாணி வண்டியானது தண்டவாளத்தைவிட்டு இறங்கிய காரணமாகக் குடைசாய்ந்து விழுந்துவிட்டது. இதனால் ஸ்திரீகளும், புருஷர்களும், குழந்தைகளுமாக 100 பேர் இறந்துவிட்டார்கள் 200 பேர் வரையில் காயம் அடைந்திருக்கிறார்கள்.

பத்ரிகைத் தடை.

திருவாங்கூரிலிருந்து வெளியாகும் மலையாளி, பாரதப்பத்திரிகை ஆகிய இரண்டும் கொச்சி ஸம்ஸ்தானத்திற்குள் வரக்கூடாதென்று கொச்சி ராஜா உத்திரவு செய்திருக்கிறார். இவ்விரண்டு பத்ரிகைகளும் கொச்சி ஸம்ஸ்தான நிர்வாஹத்தைப்பற்றி தூஷணையாக எழுதி வந்தன.

மாருதிகோவில் தகராறு.

ஸமரஸம் பலிக்கவில்லை.

புனா ஸோன்யா மாருதிக் கோவிலில் மணியடித்துப் பூஜைசெய்வது நிமித்தமாகப் பெரிய போராட்டம் ஸமீபத்தில் நடந்ததல்லவா? அங்கு ஸர்க்கார் யோஜனைப்படி ஹிந்து, முஸ்லீம் தலைவர்களைக்கூட்டி ஸமரஸமாக ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டது. புனா கலெக்டரின் தலைமையில் இருவகுப்புத் தலைவர்களும் 14உ கூடினார்கள். ஆயினும் மாருதிகோவிலில் எல்லா தினத்திலும், எந்த நேரத்திலும் ஹிந்துக்கள் பூஜை நடத்த இருந்துவரும் உரிமையை அங்கீகரிக்க மஹம்மதியர்கள் இணங்காததால் ஸமரஸ மஹாநாடு பிரயோஜனமற்றுக் கலைந்துபோய்விட்டது.

மந்திரிகளுக்கு காந்திஜியின் யோஜனை.

மாகாணங்களில் ஏற்பட்டுள்ள காங்கிரஸ் மந்திரிகளுக்கு சில யோஜனையும் எச்சரிக்கையும் செய்து காந்திஜி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். புதிய சட்டத்தை அமுல் நடத்துவதற்காகக் காங்கிரஸ்வாதிகள் மந்திரி பதவி ஏற்கவில்லையென்றும் சட்டமறுப்பு இயக்கத்தையும், ரத்தக்களரியுடன் கூடிய ராஜீய கலஹத்தையும் தடுக்கவே பதவி ஏற்றதாயும், காங்கிரஸ் மந்திரிகள் உடை, உணவு பிரயாணம் முதலிய யாவற்றிலும் வெகு சிக்கனமாகவும் ஆடம்பரமற்றும் ஸாதாரணமனிதர்களைப் போலவே வாழவேண்டுமென்றும், ஏழைகளுக்கு உப்பு இலவசமாகக் கிடைக்கச் செய்யலாமென்றும், கதரை விருத்திசெய்யலாமென்றும் கள் குடியைக் குறைத்தும், வரிகளைக் குறைத்தும், ஏழைகளுக்கு நன்மை செய்வதே முக்ய நோக்கமாயிருக்கவேண்டுமென்றும் வேறு பல முக்ய யோஜனைகளையும் சொல்லியிருக்கிறார்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
துணம், மணம், காறம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஷிட் ஜெம்ஸெட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்

ஸ்ரீ நாரதபக்தி ஸூத்ரங்கள்.

(திவான்பஹதூர் ராமஸ்வாமி சாஸ்திரியாரின் மொழிபெயர்ப்பு).

अथातो भक्तिं व्याख्यास्यामः ॥ १ ॥

1. ஆகையால் இப்பொழுது பக்தியைப் பற்றி சொல்லுகிறோம்.

(அத என்ற வார்த்தையே ஓம் என்ற சப்தம் போல மங்களமானது, பக்திமார்க்கத்தில் செல்வதற்கு உயர்ந்த குலத்தில் பிறப்போ, படிப்போ, வேறு எவ்விதமான பெருமையோ அவச்யமில்லை. அத: என்ற சொல் அன்பு அளவற்ற முடிவற்ற பேரின்பத்தைக் கொடுப்பதால் என்று தெரிவிக்கிறது.)

सा त्वस्मिन्प्रेमरूपा ॥ २ ॥

2. பக்தி கடவுளிடத்தில் உயர்ந்த அன்பின் வடிவாக இருக்கிறது.

अमृतस्वरूपा च ॥ ३ ॥

3. அது அமிருதச் சுவையுள்ளது. அழிவு அற்றது என்றும் அர்த்தமாகும்.

यल्लब्ध्वा पुमान् सिद्धो भवति अमृतो भवति तृप्तो भवति ॥

4. எதை அடைந்தால் ஒருவன் ஸித்தனாகவும் அழிவற்றவனாகவும் திருப்தியுள்ளவனாகவும் ஆகிறானோ (அது பக்தி) (அன்புள்ளவனுக்கு ஆனந்தம் பொங்கிக்கொண்டே இருக்கும்.)

यत्प्राप्य न किञ्चिद्वाञ्छति न शोचति न द्वेष्टि न रमते

5 எதை அடைந்தால் வேறு ஒன்றையும் கண்டு விரும்ப மாட்டானோ, வருந்தமாட்டானோ, வெறுக்கமாட்டானோ, களிக்க மாட்டானோ, படபடப்புடன் இருக்கமாட்டானோ (அது பக்தி)

(கடவுளிடம் அன்பு நிறைந்து கடவுளை அடைந்தால் வேறு எது அந்த மனிதனின் மனதைக் கவர முடியும் ?)

नोत्साही भवति ॥ ५ ॥

यज्ज्ञात्वा मत्तो भवति स्तब्धो भवति आत्मारामो भवति ॥

எதை அறிந்தால் ஆனந்தப்பித்தனாவனோ, மெய்மறந்திருப்பானோ, தன்னுள்ளத்திலேயே களிப்பனோ (அது பக்தி).

सा न कामयमाना निरोधरूपत्वात् ॥ ७ ॥

7. அது (அது பக்தி) காமத்தின் தன்மை உள்ளதல்ல. காமத்தை அடக்கும் தன்மையுள்ளது.

निरोधस्तु लोकवेदव्यापारन्यासः ॥ ८ ॥

8. அடக்குதல் (நிரோதம்) என்றால் உலகத்தில் செய்யும் கார்யங்களையும், வேத விதிப்படிச் செய்யும் கார்யங்களையும் அவனிடம் அர்ப்பணம் செய்தல்

(தம்முடைய சுகத்திற்காக என்று செய்யாமல் ஈச்வரார்ப்பணம் பண்ணி ஈச்வரனிடம் ஒப்படைக்கவேண்டியது)

तस्मिन्ननन्यता तद्विरोधिषूदासीनता ॥ ९ ॥

9. (அடக்குதல்) என்றால் ஈச்வரனிடத்தில் மனதை வேறிடம் செல்லாமல் செலுத்தலும், ஈச்வரனுக்கு எதிரிகளிடத்தில் இருந்து ஒதுங்கி இருத்தலும் (சேர்ந்தது)

अन्याश्रयाणां त्यागोऽनन्यता ॥ १० ॥

10, மனதை வேறிடம் செலுத்தாமல் நிறுத்துதல் என்றால் வேறு ஆச்ரயங்களை (பிடிப்புகளை) விட்டுவிடுதல்

लोकवेदेषु तदनुकूलाचरणं तद्विरोधिषूदासीनता ॥ ११ ॥

11: ஈச்வரனுடைய எதிரிகளிடத்திலிருந்து ஒதுங்கி இருத்தல் என்றால் உலக விஷயமானதும், வைதிகவிஷயமானதுமான செய்கைகளில் ஈச்வரனுக்குகந்த செய்கைகளையே செய்தல்

(இப்படி செய்துகொண்டேயிருந்தால் ஈச்வரனுக்கு எதிரான விஷயங்களிலோ, எதிரியானவர்களிடத்திலோ மனம் செல்ல ஒழிவே இருக்காது)

भवतु निश्चयदार्ढ्यादूर्ध्वं शास्त्ररक्षणम् ॥ १२ ॥

12: அன்பின் உறுதியும் பிடிப்பும் ஏற்பட்ட பிறகு சாஸ்திரப்படி நடத்தல் இருக்கவேணும்,

अन्यथा पातित्याशङ्कया ॥ १३ ॥

13. அப்படி செய்யாவிட்டால் நழுவுதல் ஏற்படும்

लोकोपि तावदेव भोजनादिव्यापारस्त्वाशरीरधारणावधि ॥

14 உலக விஷயமான செய்கைகள் அதுவரையில் (அன்பின் உறுதியும் பிடிப்பும் ஏற்படும் வரையில்) தான். உணவு முதலிய செய்கைகள் உடலைத் தாங்குவதற்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு தான் செய்யவேணும்.

(சுவரை வைத்துக்கொண்டுதான் சித்திரம் எழுதவேணும் என்பதுபோல் உடலிருந்தால் தான் மனதைக் கடவுளிடம் செலுத்தலாம். ஆனால் உடலை வளர்ப்பதில் நோக்கம் இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் கர்மங்களுக்கு உட்படுவோம். உடலைக் காப்பாற்றுவதற்கு எந்த உணவு முதலியவைகள் வேணுமோ அவைகளை மட்டும் விரும்பலாம்)

तल्लक्षणानि वाच्यन्ते नानामतभेदात् ॥ १५ ॥

15: அதன் லக்ஷணங்கள் அனேகர் மதப் பிரகாரம் சொல்படுகின்றன.

पूजादिष्वनुराग इति पाराशर्यः ॥ १६ ॥

16: வியாஸர் பூஜை முதலியவைகளில் விருப்பம் என்று சொல்லுகிறார்

कथादिष्विति गर्गः ॥ १७ ॥

17. கர்கர் கதைகளில் விருப்பம் என்று சொல்லுகிறார்:

आत्मरत्यविरोधेनेति शाण्डिल्यः ॥ १८ ॥

18, சாண்டில்யர் அக்காரியங்களை பரமாத்மாவிடத்தில் இரண்டற கலத்தலுக்கு விரோதமில்லாத முறையாகச் செய்தல் என்று சொல்லுகிறார்:

नारदस्तु तदर्पिताखिलाचारता तद्विस्मरणे परमव्याकुलतेति ॥

19: நாரதர் எல்லாச் செய்கைகளையும் பரமாத்மாவுக்கு அர்ப்பணம் செய்து அவனை மறந்தால் மிகவும் வருந்துதல் என்று சொல்லுகிறார்

अस्त्येवमेवम् ॥ २० ॥

20. அத்தகைய பக்தி உண்டு.

यथा व्रजगोपिकानाम् ॥ २१ ॥

21. பிருந்தாவனத்தில் கோபிகளுக்கு (அத்தகைய பக்தி இருந்தது).

(பாகவதம் பரம்ஹவைவர்த புராணம் கிருஷ்ணகர்ணாமிர்தம் முதலிய நூல்களில் கோபிகளுடைய அன்பின் பெருமை விளங்குகின்றது.)

तत्रापि न माहात्म्यज्ञानविस्मृत्यपवादः ॥ २२ ॥

அத்தகைய பக்தியிலும் பரமனுடைய பெருமை மறந்திருத்தல் என்ற குறை கிடையாது. (ஆதலால் பக்தியிலும் ஞானாம்சம் உண்டு).

तद्विहीनं जाराणामिव ॥ २३ ॥

அத்தகைய ஞானம் இல்லாத அன்பு,கள்ள இன்பத்தில் விருப்பங்கொண்ட ஆசை நாயகன் அன்பை ஒத்தது.

காங்கிரஸ் மந்திரிஸ்தானம்

ஸ்திரீகளின் கோபம்.

சென்னை காங்கிரஸ் மந்திரிஸபையில் ஸ்திரீகளுக்கு ஒரு மந்திரிஸ்தானம் கொடுக்கப்படாததைப்பற்றி டாக்டர் முத்துலக்ஷ்மி கோஷ்டியார் மிகுந்த ஏமாற்றமும், வருத்தமும் தெரிவித்துப் பத்திரிகைகளில் எழுதியிருக்கிறார்கள். புருஷ மந்திரிகளால் ஸாதிக்க முடியாததும், ஸ்திரீ மந்திரிகளாலேயே நிறைவேற்றக் கூடியதாயுமுள்ள அநேக குறைகளை நிவிர்த்திக்க ஸ்திரீ மந்திரி அவச்யமென்று அவர்கள் வாதிக்கிறார்கள்.

பஞ்சாப் சட்டஸபையில் வாய்ச்சண்டை.

பஞ்சாப் மந்திரியான ஸர். ஸேதுராம் என்பவர் ஒரு பிரஸங்கத்தில் காங்கிரஸ்காரர்களை "வெறிபிடித்த நாய்கள்" என்று வர்ணித்துப் பேசிய காரணமாகச் சட்டஸபையில் ஒரு அவஸரப் பிரேரணைமூலம் விவாதம் நடந்தது. காங்கிரஸ் சட்டஸபை மெம்பர்கள் வெகு ஆத்திரமாக இதைக் கண்டித்துப்பேசினர். மந்திரிக்கக்ஷியார் ஸமாதானம்சொன்னார்கள். ஸர். ஸேதுராம், தாம் அந்தமாதிரி பேசியது உண்மையென்று ஒப்புக்கொண்டார், சட்டஸபையில் இரைச்சலும் கலவரமும் அதிகமாயிற்று. கடைசியாக அக்கிராஸனரின் யோஜனையால் ஸர். ஸேதுராம் தமது தவறை ஒப்புக்கொண்டு ஸமாதானம் சொல்லியபின் அமைதியேற்பட்டது.

பெரிய நன்கொடை.

காசி ஸர்வகலாசாலைக்கு ஸ்ரீயுதமாளவியாஜி பணம் சேகரித்து வருகிறார். அந்த நிதிக்கு பன்னா மஹாராஜா ஒரு லக்ஷமும், தேவாஸ் ராஜா 20 ஆயிரமும் நன்கொடை அளித்தார்கள்!

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-௵ ஆடி-௴ 7௳

நவீனக் கல்வியால் விளைந்த தீங்கு.

தற்காலம் நமது பாரத தேசத்தில் பாவியுள்ள அன்னியக் கல்வியால் அநேக தீங்குகள் விளைந்திருப்பதால், அதைச் சீர்திருத்த வேண்டியது அவசியமென எங்கும் பேசப்படுகிறது. ஸமீப காலத்தில் இந்த அபிப்பிராயம் பலட்பட்டு தேசிய தோரணையில் கல்வி முறையை மாற்றி மாணவர்களை நல்வழிப்படுத்தவேண்டுமென்ற கவலையும் எங்கும் அதிகரித்திருக்கிறது.

நமது தேசம் பழைய உயர்ந்த நிலைமைக்கு வரவேண்டுமானால் முக்கியமாக நமது பின்ஸந்ததியாரின் கல்வியறிவைப் பொறுத்தே அது ஏற்படவேணும், இப்போது பள்ளிக்கூடங்களும், ஸர்வகலாசாலைகளும் மெஷின்களைப்போல் கணக்கற்ற மாணவர்களை ஒவ்வொரு வருஷத்திலும் உற்பத்தி செய்து வருகின்றன. ஆனால் அவர்களுடைய படிப்பானது வயிற்றுப்பிழைப்புக்கும், ஸ்வயநலத்திற்கும் பிரயோஜன மாகிறதேயல்லது தேசப்பொது நன்மைக்கு உபயோகப்படுவதில்லை இந்த அபாயத்தினால்தான் நம் தேசத்தின் மதிப்பும் ஒற்றுமையும், சாந்தியும் பாதிக்கப்பட்டுவிட்டதென்பது படித்த விவேகிகளான தீர்க்க தர்சிகளின் அபிப்பிராயமாக இருக்கிறது.

இந்த முக்ய விஷயங்களில் தற்காலக் கல்வியால் ஏற்பட்டுள்ள தீங்குகளைப்பற்றி சென்னை ஸர்வகலாசாலை வைஸ் சான்ஸலரான திவான்பகதூர் ஸ்ரீமான் ரங்கநாதம் வெளியிட்டுள்ள சிறந்த அபிப்ராயம் தார்மிகர்களாலும் மற்றவர்களாலும் கவனிக்கத்தக்கதாயிருக்கிறது. அறிவு வளர்ச்சியை அடைவதற்கே படிப்பு ஏற்பட்டதென்ற புராதன முக்ய தத்வம் இக்காலத்தில் அடியோடு மறைந்துவிட்டதென்பதை ஸ்ரீமான் ரங்கநாதம் வருத்தத்துடன் குறிப்பிடுகிறார். இதனாலேயே தற்கால மாணவர்கள் புராதன மஹிமைகளை அடையமுடியவில்லையென்றும் அவர் கூறுகிறார். மாணாக்கனும் அவனது பெற்றோர்களும் தற்காலம், பரீக்ஷையில் தேறுவதும், ஜீவனம்பெறுவதுமே கல்வியின் முக்ய லக்ஷ்யமாகக்கருதி அதற்கு வேண்டிய வழியில் உழைக்கிறார்களேயன்றி வேறில்லையென்பது முற்றிலும் உண்மையே. ஆனால் பிராசீனகாலத்தில் இப்படியில்லை. மாணவன் குருகுலவாஸம் செய்து கிலேசப்பட்டு வித்யை ஸம்பாதிப்பதின் நோக்கம் வயிற்றுப் பிழைப்பாக முன் காலத்தில் கருதப்படவில்லை. ஸ்ரீமான் ரங்கநாதம் சொல்லுவதுபோல் புத்தித்தேர்ச்சி, தேஹபலம், ஆத்மசக்தி, ஸன்மார்கம், ஸமூஹஸேவை ஆகியவைகளே கல்வியின் முக்ய லக்ஷ்யங்களாகக் கருதப்பட்டுவந்தன. இக்காலத்திய மாணாக்கர்களுக்கு இந்த உயர்ந்த நன்மைகள் உண்டாகவில்லையென்று இவர் கூறுவது உண்மையே. 150 வருஷங்களாக நம் தேசத்தில் அன்னியக் கல்விமுறை பாவியிருந்தும் ஸரியான முன்னேற்றம் ஏற்படவில்லையென்று கல்வி நிபுணராகிய இவரே கூறுகையில் அதற்கு வேறு என்ன அத்தாக்ஷிவேண்டும்? மாணவர்களின் நடத்தை, தேகபலம், மதநம்பிக்கை ஆகிய பலவும் இக்கல்வியால் கலகலத்துவிட்டனவென்று இவர் தெளிவாக ஒப்புக்கொள்ளுகிறார். மேலும் தற்காலப்படிப்புப்பெற்ற மாணவர்கள் தகுந்த வழிகாட்டிகளில்லாமல் வழி தவறிப்போய்விட்டதாயும், இப்போது படித்து வெளிவரும் மாணவர்கள் பெரும்பாலும் ஸ்வயநலப்பேய் பிடித்தவர்களாகவே இருப்பதாயும் ஸ்ரீமான் ரங்கநாதம் வருத்தப்படுகிறார்.

இவர் வெளியிட்டுள்ள ஒவ்வொரு வார்த்தையிலும் உண்மை நிறம்பியிருக்கிறதென்பதை ஒருவரும் ஆக்ஷேபிக்கமாட்டார்கள் ஆயினும் இம்மாதிரி தோஷங்கள் இருப்பது வெளிப்பட்ட பிறகுகூட இவரைப்போன்ற நிபுணர்கள் அதைப் பரிஹரிக்க எடுத்துக்கொண்ட முயற்சி என்ன? யுகம், யுகமாக இந்த மாதிரி பேசிக்கொண்டே இருந்தால் போதுமா? நமது மாணவர்கள், தேகபலமும் ஆத்ம சக்தியும் குன்றி பிரயோஜனமற்றப் பிரஜைகளாக தேசத்தில் நிறம்பிவருவதைத் தடுக்க உடனே வழிசெய்ய வேண்டாமா?

மத்தியகால மந்திரி ஸபையார் ஏதோ சில யோஜனைகளை வெளியிட்டுக்கல்வியைச்சீர்திருத்தப்போவதாகக்கூறினார்கள். ஆனால் அவர்களுடைய போக்கு ஸ்ரீமான் ரங்கநாதம் போன்றவர்களுடைய விசாலமானநோக்கத்தைப்பூர்த்தி செய்துவைக்கக்கூடியவைகளாயில்லை. வயிற்றுப்பிழைப்பிற்கும், ஸ்வநலத்திற்கும் வகைசெய்யக்கூடிய வழியிலேயே புதிய யோஜனைகள் இருக்கின்றனவேயன்றி பாரத தேசத்தின் பிராசீன லக்ஷியங்கள் நிறைவேறக்கூடிய வழியிலில்லையென்பது தெளிவு. ஆதலால் ஸ்ரீமான் ரங்கநாதம் தேசியவாதிகளான காங்கிரஸ் மந்திரிகளைக்கொண்டு நமது தேச நாகரீகம், கலை, மதம், பொருளாதாரம்முதலியவைகளுக்கு ஏற்றதான ஒரு புதிய யோஜனையைச்செய்து தமது எண்ணத்தை நிறைவேற்றுவாரா?

குறிப்புகள்.

கனம் சாஸ்திரியார் என்ன பதில் சொல்லுவார்?

சில வாரங்களுக்கு முன் கனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் நமது ஸம்ஸ்கிருதப் பண்டிதர்களின் உடையைப்பற்றி மைசூரில் பரிஹாஸமாகப் பேசிய விஷயம் ஏற்கனவே யாவரும் அறிந்த விஷயம். பண்டிதர்கள் கர்னாடக மாதிரியில் உடுத்துவதை விட்டு புதிய நாகரிக மாதிரியில் சட்டையும் தலைப்பாகையும் அணிந்து கொள்ளவேணுமென்று யோஜனை சொன்னார்.

நமது பண்டிதர்கள் சாஸ்திரங்களையும் பரம்பரை வழக்கத்தையும் சிக்கனத்தையும் உத்தேசித்து உடுத்திவரும் முறையானது நாகரிகமற்றதாக நமது நாகரிக சாஸ்திரியாருக்கு தோன்றியது. அதனாலேயே அவர் வெள்ளைக்கார மாதிரியில் உடுப்பு அணிவதை மேலாகவும் இந்திய முறையில் அணிவது நிக்ருஷ்டமாயும் நினைத்தார்.

ஆனால் இப்போது அவருடைய கண் முன்னிலையிலேயே சென்னை சட்டசபையில் நடப்பதைப் பற்றி அவர் என்ன பதில் சொல்வார்? சட்டசபை மெம்பர்களான அநேக காங்கிரஸ்காரர்கள் சட்டைப்போட்டுக்கொள்ளாமலும் தலைக்குல்லாய் அணியாமலும் ஸாதாரண ஹிந்து தேச உடையாகிய வேஷ்டியை மட்டும் தரித்துவந்திருந்தார்கள்.

பார்லிமெண்ட் ஸ்பீகருக்கு ஸமானமான பெரிய பதவியில் அமர்ந்துள்ள சட்ட சபைத் தலைவரான கனம் புலுசு ஸாம்பமூர்த்தி முழங்காலுக்கு மேல் வேஷ்டியும், ஒரு மேல் வேஷ்டியுமே தரித்து தமது உன்னதஸ்தானத்தில் விளங்கினார். முதன் மந்திரியாக வந்துள்ள கனம் ஆசாரியார் கவர்னரை அடிக்கடி பார்க்க வேண்டியவராயிருந்தும் தமது ஸாதாரண வேஷ்டி உடையிலேயே தலைப்பாகை இல்லாமல் கவர்னருடன் ஸம்பாஷித்து வருகிறார். நேற்றுவரை இந்தியாவில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் மஹோந்நத ப்ரதிநிதி ஸ்தானமாயும், பிரிடிஷ் முறையிலேயே சகல சம்ப்ரதாயங்களும் நடந்துவந்த கவர்ன்மெண்ட் நிர்வாக ஸ்தானத்திலேயே உடை விஷயமாக இவ்வளவு பெரிய மாறுதல் திடீரென்று ஏற்பட்டு விட்டது. புல்ட்ராஸ் போடாமலும், முகக்ஷவரம் செய்துகொள்ளாமலும் வெள்ளைக்காரர்களையும், ஸர்க்கார் உத்யோகஸ்தர்களையும் பார்ப்பது அஸாத்தியமாயும் அநாகரிகமாயும் இருந்த காலம் போய் இந்திய உடைக்கும் ஓர் சிறந்த மதிப்பு ஏற்படும் காலம் வந்துவிட்டதே!

மேலும் இன்று உலக சிரேஷ்டராக விளங்கும் காந்திஜி எவ்விதம் உடைதரித்திருக்கிறார் என்பதை கனம் சாஸ்திரியார் கவனிக்கட்டும். வெள்ளைக்காரரைப்போலவோ அல்லது வேறுவித நாகரிகமாகவோ உடுக்காததற்காக காந்திஜியின் கௌரவம் குறைந்துவிட்டதா? அப்படியிருக்க கனம் சாஸ்திரியார் எதெற்காகப் பண்டிதர்களை நாகரிகவேஷம் போடும்படி சொல்லவேணும்!

ஸ்ரீமான் காந்தி தற்போது மந்திரிகளுக்குச் சில யோஜனைகள் சொல்லி வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில் முக்யமாக மந்திரிகளின் உடுப்பு விஷயத்தைக் குறிப்பிட்டிருக்கிறதும் கவனிக்கத்தக்கது. கவர்னர் முதலிய பெரிய வெள்ளைக்காரர்களைப்போல் மந்திரிகள் உடைதரிக்கக்கூடாதென்றும், இந்திய தேச முறையில் சிக்கனமாக உடைதரிப்பது அவசியமென்றும் வற்புறுத்தியிருக்கிறார்.

காங்கிரஸ்காரர்கள், ஸனாதிகளைப்போல் ஏதோ ஒருமாதிரியாகக் கட்டுப்பாடும் கொள்கையும், நியமங்களும் தங்களுக்குள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் கட்டுப்பாடு அவர்களாகவே கூடிச் செய்து கொண்டதுதான். ஆனாலும் அதை அநுஸரித்து நடப்பதை அவர்கள் கடமையாகவும் கருதுகிறார்கள். தேசிய முறையில் உடுப்பதும் அவர்களுடைய கட்டுப்பாட்டில் சேர்ந்தது.

ஆனால் கனம் சாஸ்திரியாருக்கோ ஒரு கொள்கையும், ஒரு நியமமும் இருப்பதாகத் தெரியவில்லை. அதனால்தான் பாரததேசத்தின் சிறந்த சின்னங்களாகிய நமது உடுத்தும் முறை முதலியவைகளில் ஒரு நியமம் வேண்டியதில்லையென்று கனம் சாஸ்திரியார் நினைக்கிறார் போலும்?

தேவஸ்தானச்சட்டம் சீர்திருத்தப்படுமா?

சென்னை மந்திரிகள் பதவியேற்றுச் சிலதினங்கள்கூட ஆகவில்லை. கவர்ன்மெண்டின் நிலைமையை ஸரிவர அறிந்து கொள்ளக்கூட இன்னும் அவர்களுக்கு அவகாசமில்லை. இதற்குள் அவர்களை ஸங்கடத்தில் வைக்கும்படியான யோஜனைகளை வெளியிடுவது யுக்தமல்லவென்று நினைக்கலாம். ஆயினும் இதற்குள்ளாகவே பத்திரிகைகளில் காங்கிரஸ்காரர்களே பற்பல யோஜனைகளை வெளியிட முன்வந்துவிட்டதால் மற்றவர்கள் ஸங்கோசப்பட நியாயமில்லை. முக்யமாக ஸ்ரீயுத காந்திஜியே இந்தக் கார்யத்தில் இருங்கியிருப்பதையும் காண்கிறோம். மேலும் கனம் ஆசாரியார் போன்ற மந்திரிகளும் தங்களது உத்தேசங்களைச் சிறிது சிறிதாக வெளியிடவும் முற்பட்டிருப்பதால் நாம் மேற்கண்ட விஷயத்தைப் பற்றிப் பிரஸ்தாபிப்பது ஸந்தர்ப்பமற்றதாக நியாயமில்லை.

தவிரவும் இந்த விஷயத்தை நாமாக வலுவில் பிரஸ்தாபிக்கவும் முன் வரவில்லை

18உயன்று தஞ்சைஜில்லா பந்தநல்லூரில் நடைபெற்ற தஞ்சை ராஜீய மஹாநாட்டில் தலைமை வகித்த ஸ்ரீமான் முத்துரங்கமுதலியாரின் பேச்சை ஒட்டியே தேவஸ்தானச் சட்டத்தைப்பற்றி நாம் பேச முன்வந்தோம். ஸ்ரீமான் முதலியார், காங்கிரஸ் ஆக்ஷி ஏற்பட்டுவிட்டதைப்பற்றி ஸந்தோஷிக்கையில் சென்ற 5வர்ஷமாக நடந்துவந்த பொப்பிலி ஆக்ஷி அலங்கோலம் முடிவடைந்து விட்டதற்கும் மிகுந்த ஸந்தோஷத்தை வெளியிட்டார். பொப்பிலி ஆக்ஷியின் ஊழலுக்கும், யதேச்சாதிகாரத்திற்கும் அவர் தேவஸ்தானச் சட்டத்தையே ஓர் உதாஹரணமாகக் காட்டி அங்கு பேசியிருக்கிறார். தேவாலய நிர்வாஹ விஷயத்தில் பழைய மந்திரிக்கக்ஷியார் செய்த அதிக்ரமங்களை நினைத்துப் பாக்கவேண்டுமென்றும், இடைக்கால மந்திரிகள்கூட ஸமீபத்தில் தேவாலயங்கள் விஷயமாகப் பெரியதவறான, தாறுமாறான உத்திரவுகளைப் போட்டிருப்பதாயும், ஸ்ரீமான் முத்துரங்க முதலியார் தமது பிரஸங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்

ஸ்ரீமான் முதலியார், காங்கிரஸில் தமிழ் மாகாணக் கமிட்டியின் பொறுப்பு வாய்ந்த தலைமை ஸ்தானத்தை வகிப்பவர். அத்தகையவர் தேவஸ்தானச்சட்டம் மிக அநீதியானதென்று சொல்லுவதால், இவரைப்போல் இன்னும் அனேக காங்கிரஸ்காரர்கள் இம்மாதிரியே நினைத்திருப்பார்கள் என்பதும் நிச்சயம். ஏற்கனவேயே காங்கிரஸ் தலைவர்களில் பலர் தேவஸ்தான சட்டத்தை எதிர்த்து வந்திருப்பதை நாம் அறிவோம். ஸ்ரீமான் வெங்கடராமசாஸ்திரிகள், திவான் பகதூர் மாசிலாமணிப்பிள்ளை போன்ற வேறு பல நிபுணர்களும் அச்சட்டம் அநீதியென்று பஹிரங்கமாகச் சொல்லிவருகிறார்கள். அந்த ஸ்தாபனம் மூலமாக ஜஸ்டிஸ் கக்ஷியார் உத்யோகத்தையும், பண ஸௌக்யத்தையும் தேடிக்கொள்ள நினைத்ததாகவே புகார் சொல்லப்பட்டு வருகிறது.

இப்போது காங்கிரஸ் மந்திரி பதவி ஏற்ற சமயத்தில் காங்கிரஸ் தலைவரான ஸ்ரீமான் முதலியார் முதல்முதலாக தேவஸ்தானச் சட் அநீதியைப்பற்றி, தேவஸ்தானங்கள் மிகுந்துள்ள தஞ்சை ஜில்லாவில் பேசியிருப்பது கவனிக்கத்தக்கது, காங்கிரஸ் கவர்ன்மெண்ட் சிக்கனத்தைத் தேட வேண்டிய அவசியம் நேரும்போது வீண் பணச் செலவுக்கும், வருத்தத்திற்கும், அபவாதத்திற்கும் இடமான இந்த இலாகாவைக் கவனிக்குமென்றே ஊஹிக்கக் கூடியதாயிருக்கிறது. பொதுஜன அபிப்பிராயத்தையும், முக்கியமாக மதாசாரியர்களின் விருப்பத்தையும், கௌரவத்தையும் அநுஸரித்து இந்துமத தேவஸ்தானச் சட்டத்தைத் திருத்தவோ எடுத்துவிட்டு வேறு தக்க ஏற்பாடு செய்யவோ முயற்சிப்பது வரவேற்கத் தக்கதாம்.

மேஹறாலி விடுதலை.

முதல் காரியம்.

கள்ளிக்கோட்டையில் 144 வது பிரிவை மீறிய குற்றத்திற்காக தண்டிக்கப்பட்ட பம்பாயைச்சேர்ந்த அபேதவாதியான மேஹரலி என்பவரை உடனே விடுதலைசெய்ய வேண்டுமென்று சென்னை கவர்ன்மெண்டு உத்திரவுசெய்திருக்கிறது. காங்கிரஸ் கவர்ன்மெண்டின் முதல் நடவடிக்கை இது என்று நினைக்கப்படுகிறது.

" பிராம்மண ராஜ்யம். "

சென்னையில் காங்கிரஸ்காரர்கள் மந்திரி பதவி ஏற்றுக்கொண்டதில் அஸூயையடைந்த ஒரு சிலர் "பிராம்மண ராஜ்யம்" ஆரம்பித்து விட்டதாயும் இனிமேல் பிராமணரல்லாதாரின் கதி என்னவென்றும் கிளப்பி விட்டு சென்னை முழுவதும் சுவர் ஒட்டி விளம்பரம் செய்திருப்பதாகச் சென்னை மெயில் பத்திரிகையில் காணப்படுகிறது. இப்போது மந்திரிகளாக வந்திருப்பவர்கள் "பிறப்பினால் ஜாதிபேதம்" என்ற கொள்கையை விட்டு அதை அனுஷ்டானத்திலும் கொண்டுவந்தவர்கள். ஆயினும் இவர்கள் பிராம்மணர்களென்று நினைக்கப்படுகிறார்கள். பிறப்பு ஜாதிபேதம் கூடாதென்றே கூச்சல் போடப்படுகிறது அப்படியிருந்தும் "பிறப்பு ஜாதிபேதத்தை" ஒப்புக்கொண்டு இப்போதுபேசப்படுகிறது இதென்ன வேடிக்கை? பிறப்பு ஜாதிபேதத்தை ஒழித்தவர்களைக் கூடவா நிந்திப்பது?

உப்பிலியப்பன் கோவிலில் பஜனை.

கும்பகோணத்திலிருந்து பண்டர்பூர் க்ஷேத்திரத்துக்குப்போய் பக்தி பஜனைசெய்துகொண்டிருந்த ஸ்ரீமதி அம்மாளு அம்மாள், காசியாத்திரை முடித்துக்கொண்டு, ராமேசுவரம்யாத்திரை போகும்வழியில், கும்பகோணம் மேல அய்யங்தெருவில், ஸ்ரீமான் ஷாப் ராகவேந்திரராயர் அவர்கள் வீட்டில் தங்கி, சென்றமாதம் நரஸிம்மஜயந்தியன்று முதல் பிரதிதினமும் பஜனை செய்துவரும் விஷயம் அநேகர் அறிவார்கள் அந்த ஸ்ரீமதி அம்மாளு அம்மாள், சென்ற 27—6—37 ஞாயிற்றுக்கிழமை காலை 5மணிக்கு தன் சிஷ்யபரிவாரங்களுடன் 'உப்பிலியப்பன்கோவிலுக்கு' பஜனை செய்துகொண்டே நடந்துபோய், கோவிலிலுள்ள புதுமண்டபத்தில், ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் சன்னதியைப் பார்த்துக்கொண்டு கோலாட்டம் முதலிய வைபவங்களுடன், வெகு விமரிசையாக பஜனை செய்தார்கள். அச்சமயம் அந்த அம்மாளுக்கு கடவுளுடைய அருள்யேற்பட்டு ஆனந்த நர்த்தனம் செய்துவரும்போது அந்த க்ஷேத்திரத்தின் விசேஷமான சிரவண நக்ஷத்திரம், உப்பில்லாமல் பிரஸாதம் நிவேதனம் செய்வது முதலிய விசேஷங்களைக் குறிப்பிட்டும், அக்கோவிலில் எழுந்தருளியிருக்கும், ஸ்ரீனிவாஸப் பெருமானை பிரதிதினம் பஜனை செய்யுங்கள் என்ற ஒரு கீதம் எல்லோரும் ஆச்சரியப்படும்படி கவனம் ஆயிற்று. அன்று சிரவண நக்ஷத்திரமாகையால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் பார்த்து சந்தோஷமடைந்தார்கள். மேற்படியூரில் சிரவணத்தன்று பெருமாள் தரிசனத்திற்கு வரும் பக்தகோடிகளுக்கு வெகுகாலமாய் அன்னதானம் செய்துவரும் ஸ்ரீமான் கோபிநாதராயருடைய சத்திரத்தில் அவருடைய ஆதரவில் அன்று ராத்திரியும் பஜனை வெகுவிமரிசையாக நடத்தினார்கள். மறுநாள் திங்கட்கிழமை மாலை 5மணிக்கு அவ்வூரை விட்டுப் புறப்பட்டு கால்நடையாக தன்பரிவாரங்களுடன் ரோட்டில் பஜனைசெய்துகொண்டே கும்பகோணம் மேலய்யங்தெரு ஜாகைக்கு வந்துசேர்ந்தார்கள். இந்த 2தினங்களிலும் பஜனைகோஷ்டியாருக்கு வேண்டியசௌகரியங்களையும் இடவசதியையும் செய்துகொடுத்த கோபிநாதராயரின் தர்மகுணம் கொண்டாடத்தக்கது.

ஒரு நிருபர்.

அத்வைத பாடசாலை.

கும்பகோணம் அத்வைதஸபை ஆதரவில் நடந்துவரும் அய்யுவய்யர்-லெக்ஷ்மி அம்மாள் அத்வைத வேதாந்த பாடசாலையில் சென்ற பரிவிருத்தியில் வாசித்துவந்த வித்யார்த்திகளான (1) V. R கல்யாணஸுந்தர சாஸ்திரிகள். (2) V S. ராஜகோபால சாஸ்திரிகள். (3)V. S குருஸ்வாமிசாஸ்திரிகள் இவர்கள் மூவரும் கும்பகோணம் அத்வைதஸபை பரீக்ஷையில் நன்றாய்த்தேறியதுடன் சென்னை யூனிவர்ஸிடி வேதாந்த சிரோமணி பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறியிருக்கிறார்கள். அவர்களில் இருவர்களுக்கு சென்னையில் கெவர்ன்மெண்டு உத்தியோகமும் ஆகியிருக்கிறது. ஷை பாடசாலை ஆரம்பமுதல் பிரும்ஹஸ்ரீ வேப்பத்தூர் வைத்யநாத சாஸ்திரிகள் பாடம் சொல்லிவருகிறார்கள்.

ஓர் நிருபர்.

வித்யார்த்திகள் தேவை.

கும்பகோணம் அத்வைத ஸபை ஆதரவில்நடந்துவரும் அய்யுவய்யர் லெக்ஷ்மி அம்மாள் அத்வைத வேதாந்த பாடசாலைக்கு வித்யார்த்திகள் தேவை. அவர்கள் வேதாந்த சிரோமணி அல்லாமல் வேறு சிரோமணியாகவாவது அல்லது நல்ல வ்யுபத்தி உள்ளவர்களாவது இருக்க வேண்டும். வித்யார்த்தியாக சேர விருப்பமுள்ளவர்கள் தங்கள் யோக்யதை வயது இவைகளைக் கண்டு கீழே கண்ட விலாஸதாரருக்கு மனுச் செய்துகொள்வதுடன் 31-7-37 க்குள் கீழ் விலாஸதாரிடம் நேரில் ஆஜராக வேண்டும்.

அத்வைத ஸபை; } M,K. வைத்யநாதய்யர்,
கும்பகோணம். } B.A. B.L.
செக்ரடரி.

ஸ்ரீ சங்கரபகவத் பாதாசார்யாளவர்கள்
அருளிச்செய்த
'ஸௌந்தர்யலஹரி'
by G.V. கணேச அய்யர், B.A., B.L.,
மூலம் நாகரத்திலும், தமிழிலும், பதவுரை,
பொழிப் புரை குறிப்புகளுடனும்.)
விலை ரூ. 1 8 0
கிடைக்குமிடம்:— ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

ஸ்ரீஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

நரஸிபூர்.
West Godavary Dt.

The Magic of Noise.

The laws of all civilized countries have recognized several modes of acquisition of properties and rights. It has however been reserved to the present decade to invent quite a new method. It has begun to recognize noise as a very sure and comparatively inexpensive method.

In this way, the Muslim is acquiring the right to kill Hindu worship, to dominate politically every other party and to have his own way whenever and wherever he chooses. In this way the *woman* is acquiring the right to unsex herself, to abandon home and child, to exercise all the rights of men without giving up an inch of her own. In this way the *reformer* is acquiring the right to declare wrong as right, vice as virtue, religion as the silly imagination of fools, and sex purity and morality as ante-diluvion conventions which have outlived their purpose. In this way the *Congress politician* is acquiring the right to declare the Sanatani group as enemies of Swaraj and country and as sinners condemned to eternal hell, that Religion is a petty issue by the side of politics, that religious questions are only social questions, and that stiff and unbending orthodoxy has forfeited all claims to respect and that their place in this world is hill tops, sandy deserts and thorny forests.

Facts are often times stranger than fiction. That sheer noise without more is able to assert itself and carry the unwary with it is perhaps the saddest tragedy of the "time spirit". Why then should the Sanatanis not act likewise? If noise can succeed as a weapon of attack and in a manifestly wrong cause, how much more can it succeed as a weapon of defence and in a right cause and as a shield for warding off the attacks on Dharma or tried age-long customs, practices rituals which have bravely withstood and survived successive waves of foreign conquest?

N. Natesa Aiyer.

Time Spirit.

I. Will any body give an authoritative definition of the term Time-spirit which is in the lips of every body now.

Does it include the following elements?

(1) that caste system ought to go.

(2) that, race-purity and national purity ought to be sacrificed if by doing so political independence can be won.

(3) that marital rights and obligations ought not to be emphasized.

(4) that Religion ought to be treated as a petty issue if it is to be an issue at all.

(5) that Hindu culture, and religion and civilization must be disregraded if the attainment of Swaraj so requires.

(6) that the institution of private property must be abolished and that the State must be recognized as the owner of all the properties, people and children in the State to be dealt with in any manner it pleases.

II. Will any body give an authoritative definition of the terms Hindu Culture, Religion and Civilization?

Do they exclude.

(a) the existing marriage institution which prohibits marriage among members of different Varnas and castes.

(b) the existing caste institution which recognizes a Varna by birth alone and prohibits inter dining.

(c) the existing institution of private property and Joint family property and law of inheritance.

(d) the existing institution of temple-worship which unequivocally allots for worship specified places for specified communities.

If these matters do not form part of Hindu culture etc., what are the matters that can be called Hindu Culture etc.

N. Natesa Aiyer.

Congress ministry and Sanatanists.

Mr. N. Sriniyasacharya in the course of a communication to the "Hindu" writes:—

It is necessary to say a word to the powers that be on behalf of the vast community of *orthodox Hindus.* The Sanatanist is also a tax-payer and an Indian entitled to the inherent rights such as those defined by the Congress Karachi resolutions. It wont do for the responsible President of the Congress Mr. Jawaharlal Nehru to say that those safeguards apply only to Mahomedans and not to the Sanatanists. In spite of him the Sanatanists will remain in India and not flee to the Himalayas or the islands in the ocean. If it becomes a question of trial of strength, they may not leg behind. Mr. C. Rajagopalachariar is at least more patient and says that the present business of the Congress is more political than otherwise. After all, the Sanatanist asks for no special rights or favours; but only wants to be left alone and guaranteed against unlawful and unjustifiable confiscations, which they apprehend. No righteous Government can refuse this simple demand.

காங்கிரஸ் மந்திரிகளின் சம்பளம் 500 ரூபாய்.

முதன் மந்திரியான கனம் ஆசாரியார் மந்திரிகளின் சம்பளக்குறைவு விஷயமாகச் சட்டஸபையில் ஒரு மசோதா கொண்டுவரப் போவதாக அறிவித்தார்.

அந்த மசோதாவின்படி மந்திரிகளுக்கு மாஸம் 500 ரூ. சம்பளமும், வீட்டு வாடகை பிரயாணப்படிக்காகத் தனித் தனியாக ரூ. 150-ம் நிர்ணயிக்கப்படும் காரியதரிசிகளின் சம்பளம் 250 என்று நிச்சயப்படுத்தப்படும்.

சட்டஸபை மெம்பர்களுக்கு மாதம் 100 ரூபாய் சம்பளமாகக் கொடுத்துவிட யோஜனை நடக்கிறதாம்.

புதிய சட்டஸபை.
சில விசேஷங்கள்.

சென்னை புதிய சட்டஸபையில் சில விசேஷங்கள் நடைபெற்றன. காங்கிரஸ் மெம்பர்கள் அனேகர் தலையில் காந்தி குல்லாயுடன் விளங்கினார்கள். பலர் சட்டையேபோட்டுக் கொள்ளாமல் இந்திய ரீதியில் உடம்பைப் போர்த்திக்கொண்டும், தலையில் ஒன்றும் அணியாமலும் வந்திருந்தார்களாம்.

சட்டஸபைத் தலைவரான புதுசு ஸாம்பமூர்த்தி சட்டைபோடாமலும் குல்லாய் தரிக்காமலும் ஸாதாரணவேஷ்டியுடனேயே சபையில் அக்கிராஸனஸ்தானத்தில் விளங்கினார்.

சட்டஸபை ஆரம்பத்தில் தேசிய கீதங்கள் பாடப்பட்டன. அப்போது அனைவரும் எழுந்து நின்றனர். மெம்பர்கள் தமிழ், தெலுங்கு, மலையாளம் முதலிய தேசபாஷைகளில் பேசினார்கள்.

முதன் மந்திரி கனம் ஆசாரியார் தமது வழக்கமான ஆடம்பரமற்ற வேஷ்டியுடையிலேயே கவர்னரைப் பார்க்கப்போவது வழக்கமாயிருப்பதுடன் சட்டஸபையிலும் அப்படியே ஆஜராகி வருகிறார். இந்த வழிகளில் புதிய சட்டஸபையில் தேசிய வாஸனை வீசுகிறது.

வாரக் குறிப்புகள்.

(வே ஸோ. சர்மா.)

ஒன்பது வயதில் விவாஹம் !! தற்சமயம் பௌதிக வகையில் உலக மதிப்பைப் பெறுவது அமெரிக்கநாடு எந்த ஒரு மனிதனிடமும் (ஈசனைத் தவிர) தேசத்தினிடமும் குணமே காணமுடியாது. குணத்தில் சிறிது குற்றம் மறைவதியல்பு. நீக்ரோவை அந்நாடு நடத்தும் வகை ஒன்றுபோதும். அங்கு ஒன்பது வயது கன்யகையை 30 வயது புருஷன் மணந்தான்! இது குணமா தோஷமா?

மதப் படிப்பே தேவை !! அக்குழந்தைக்கு கல்வி வேண்டாமா? என்று கேள்வி பிறக்க இந்த நாட்டக்கல்வி தேவையில்லை, குடும்ப வேலையும் மதப்படிப்புமிருந்தால் போதுமென்றார் அவளது பெற்றோர். இவ்விரண்டிலிருந்து இந்திய சீர்திருத்தக்காரர் கற்கவேண்டியதைக் கற்பாரா?

மனப்போக்கு !! காந்திஜி ஒத்தை வேஷ்டி (மங்களமல்ல)—கட்டுகிறார் என்று அவர் சீடர் சிலர் மனம் போனபடி ஆடை அணிகின்றனர். அதில் புதுஸா. ஸாம்பமூர்த்தி சட்டசபைத்தலைவர் சொக்காய் போடாமல் உட்கார்ந்தார். இது நம் நாட்டிற்கோ மதத்திற்கோ பெரிய ஸாதகமாகிவிடாது! மற்ற அன்யாசாரத்தையும் விடுவாரா?

அதுகூட பொருக்கவில்லை !! ஓர் பெண் அங்கத்தினர் அவரைப் பாராட்டும்போது ஸமயம் வந்தால் நமது பூர்வீக ஆசாரத்தைக் கைவிட தாங்கள் தாமதிக்கக்கூடாதென்றாள். ஏதாவதோர் புதிய வகையில் பெருமை அடைய ஆவல்கொண்ட அவரையும் அவரைப்போன்ற மற்றொருவரையும் நன்றாக உணரவில்லைபோலிருக்கிறது!

இஃதல்ல வழி !! காங்க்ரஸ் மந்திரிகள் சம்பளம் 500ம் வீடு வண்டிகளுக்காக 300ம் பெறப்போகின்றனர். மந்திரிபதவி சண்டையை யகற்ற எல்லா அங்கத்தினருக்கும் அன்றன்று படித்தனம்போக மாத சம்பளம் 100 ரூபாய் கொடுக்கவும் தீர்மானமாம்! இவைகளால் பணமும் மிச்சமாகாது !! ஆனாலும் ஏழைகளுக்கும் வேலையில்லாதார்க்கும் பயன்படாது!

வலைவீசுகிறார் !! சென்னை சீர்திருத்தக்காரர் செல்லப்பிள்ளையான ஓர் பண்டிதர், ஆகமமறிந்த பண்டிதர் ஸேவை தேவை! வாருங்கள்! தக்க ஸன்மானமளிப்போமென்று அரைகூவி அழைக்கிறார் !! படித்துப் பட்டம் பெற்றோ, பெருமலோ பல பண்டிதர்கள் ஏழ்மையில் வருந்துகின்றனர். அவர்களை இழுக்க இந்தவழி!

தர்மமா தனமா? உயிரைவிட மதம் பெரிது தனத்தைவிட தர்மம் பெரிதென நினைக்கும் ஆஸ்திக வித்வத்மணிகள் இதில் சிக்கார். வாலிழந்த நரியின் தந்த்ரத்தை அறிவர். ஆனாலிது சோதனைகாலமவர்களுக்கு. தர்மம் பெரிதா தனம்பெரிதா என்ற கேள்வி பிறந்துளது.

ஸ்ரீஜகத்குரு ஸ்ரீபூரிஸ்வாமிகளின் வியாஸபூஜை.

பிகானீரில் செய்வார்.

ஸ்ரீ ஜகன்னாதபுரி ஸ்ரீகோவர்த்தன பீடாதீச்வர ஸ்ரீமத்ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் பிகானீர் மஹாராஜா அவர்களின் பிரார்த்தனைக்கிணங்கி பிகானீர் ஸ்டேடில் இவ்வருஷம் வியாஸபூஜா சாதுர்மாஸ்ய சங்கல்பாதி பூஜைகளை நடத்துவார்கள்.

டி. என். எஸ். சர்மா.

அரசனுக்கும் அதிகாரமில்லை.

ஜாதி குல தர்மங்களை மாற்ற முடியாது.

சாஸ்திரங்களின் நிர்ணயம்.

திருவாங்கூர் மஹாராஜா, சாஸ்திரங்களையும், ஆசாரங்களையும், தமதுமுன்னோர் சென்ற வழியையும் மீறி தமது யதேச்சாதிகாரமொன்றைக்கொண்டு தீண்டாதாருக்கு ஆலயப் பிரவேச உரிமையைக் கொடுத்தார். இதன் மூலம் அவர் சாஸ்திர ஸித்தமான ஜாதி தர்மங்களையும், குலதர்மங்களையும் தமது இஷ்டபடி மாற்றத்துணிவு கொண்டுவிட்டது ஸ்பஷ்டமாகிறது. ஆகையால் வைதிக தர்மத்திற்கு அடிப்படையான ஜாதி விஷயத்தை இவர் அழிக்க முன் வந்து விட்டதாக தார்மிகர்கள் நினைக்கிறார்கள்.

ஆயினும், அந்த அரசனை இந்த அதர்மத்தில் இறங்கத்தூண்டிய ஸசிவோத்தமனும் அவருக்கு பின் பலமாக நிற்கும் சில அவ்யஸ்தாவதிகளும் அரசர்களுக்கு இத்தகைய அதிகாரம் இருப்பதாக வாதிக்க முன் வந்திருக்கிறார்கள். அதாவது கால தேச நிலைமைக்கு ஏற்றபடி அரசன் தர்மாதர்ம விஷயங்களில் மாறுதல் செய்ய அதிகாரமுள்ளவனென்று வாதிக்கிறார்கள். இந்த துர்வாதம் ஸமீபகாலத்தில் பத்திரிகைகளில் பிரபலப்பட்டு எங்கும் பரவி வருவதைப்பார்க்கிறோம். இதற்கு சாதக அவர்கள் சாஸ்திரங்களையோ, முன்னோர் ஆசாரங்களையோ ஆதாரமாகக்காட்ட முடியவில்லை. பிரகிருதத்திற்கு ஒட்டாததும், வேறு அர்த்தமும் நோக்கமும் உள்ளதுமான "ராஜா காலஸ்ய காரணம்,, என்ற ஒருதுண்டு வாக்யத்தை முன் பின் பாராமல் எழுதிக்காட்டி ஏமாற்றி வருகிறார்கள். ஆதலால் அரசனுக்கு தேச தர்மத்தை மாற்ற அதிகாரமுண்டாவென்பதையும், "ராஜா காலஸ்யகாரணம்,, என்பதின் உண்மையான அர்த்தமென்ன வென்பதையும் எடுத்துக்காட்டி சீர்திருத்தக்காரர்களுடைய அறியாமையை அகற்றுவது அவசியமாகிறது. அவர்கள் திருந்தினாலும் இல்லாவிட்டாலும் மத்யஸ்தர்கள் உண்மையை அறிந்து கொண்டாலே நமக்குப்போதுமானது.

அரசனின் இந்த அதிகாரத்தைப்பற்றி சீர்திருத்த வாதிகள் நமது சாஸ்திரங்களை ஆதாரமாகக்காட்ட முன் வந்திருப்பதால், உண்மையில் நமது சாஸ்திரங்கள், இவர்கள் சொல்வது போல் இருக்க வில்லையென்பதை நிரூபணம் செய்வோம்.

முன் உதாஹரணம் உண்டா?

திருவாங்கூர் ராஜாவின் செய்கைக்கு நமது தேசத்தில் ஏதாவது ஒரு, முன் உதாஹரணம் உண்டாவென்பதையும் கவனிக்கத்தக்கது. பாரத தேசத்தில் இன்று வரை அரசாண்ட பல அரசர்களும், சக்ரவர்த்திகளும் இம்மாதிரி தர்ம விஷயத்தில் யதேச்சாதிகாரமாக நடந்து கொண்டதாக ஸ்மிருதி புராணாதிகளில் ஒரு ஆதாரமும் கிடையாது. எந்த அரசனும், ஸ்வதர்மத்தை நிலைநிறுத்தி அந்தந்த ஜாதி குல தர்மங்களை அப்படியே காத்து வந்ததாகவே ஸ்ரீராமாயணாதிகளில் காண்கிறோம். விபரீதமாக நடந்த வேனன் முதலிய பல அரசர்கள் ராஜ்யத்தை விட்டு ப்ரஜைகளால் துரத்தப்பட்டதாகவே தெரிகிறது.

அர்ஜுனன் சொல்லுவதென்ன?

இப்போது உலகத்தாரால் போற்றப்படும் கீதையின் ஆரம்பத்தில் அர்ஜுனன் வெளியிட்டுள்ள அபிப்பிராயம் இந்த ஸந்தர்ப்பத்தில் கவனிக்கத் தக்கது. அது ராஜதர்மத்தின் தத்வத்தை நன்கு வெளிப்படுத்துவதாயிருக்கிறது.

பெரிய யுத்தத்தில் பிரஜைகள் மடிவதன் மூலம் குலஸ்திரீகள் கெடவும், அதனால் ஜாதிக் கலப்பு ஏற்பட்டு, "சாச்வதமான, ஜாதி தர்மங்களும் குலதர்மங்களும் நசித்துவிடுகின்றன"

उत्साद्यन्ते जाति धर्माः कुलधर्माश्चशाश्वताः ।

என்று அர்ஜுனன் பயந்தான். அரசனுக்கு ஜாதிதர்மங்களையும், குலதர்மங்களையும் தன்னிஷ்டப்படி மாற்ற அதிகாரமிருந்தால் அர்ஜுனன் ஏன் இப்படிப் பேசவேண்டும்? யுத்தத்திற்குப் பிறகு மிகுந்துள்ள ஜனங்களிடையில் இவன் இஷ்டப்படி புதிய ஜாதி, குலதர்மங்களை ஏற்படுத்திவிடலாமல்லவா! அப்படியிருந்தும் அவன் ஜாதி குலதர்மங்கள் அழிந்துவிடுமென்று பயந்ததின் காரணமென்ன! அவைமாற்றப்படகூடியவை, அல்லது புதிதாகக் கற்பிக்கக் கூடியவை அல்லவென்பதாலேயே அவன் இப்படி பயந்தான். அந்த அபிப்பிராயத்துடன் அவன் அங்கு "சாச்வதங்களான" என்ற பதத்தை உபயோகித்து ஜாதி, குலதர்மங்கள் அனாதியாக வியவஸ்தையுடன் ஸ்திரப்பட்டு நிற்பவையென்பதை விளக்கியிருக்கிறான்.

ஜாதிகுல தர்மங்களை ரக்ஷிக்கவேணும்.

அர்ஜுனன் இவ்வாறு சொல்லியதற்கு அவன் சாஸ்திரஞ்யனாக இருப்பதே காரணம். சாஸ்திரங்கள் ஜாதி, குலதர்மங்களை அரசன் ஜாக்கிரதையாக அப்படியே காப்பாற்ற வேண்டுமென்று ஆஞ்ஜையிடுகின்றனவன்றோ?

சுக்ரநீதியில்:—

देशधर्माः जातिधर्माः कुलधर्मा स्सनातनाः ।
मुनिप्रोक्ताश्चयेधर्माः प्राचीनानूतनाश्चये ॥
तेराष्ट्रगुप्त्यैसंधार्याः ज्ञात्वायत्नेनसन्नृपैः । (4-10)

'ஸநாதனங்களான தேச தர்மங்கள், ஜாதி குலதர்மங்கள், ரிஷிகளால்சொல்லப்பட்ட பிராசீன, நவீன தர்மங்கள் ஆகியவைகள் நல்ல அரசனால் ராஜ்ய க்ஷேமத்தின்பொருட்டு ஜாக்ரதையாக அறிந்து ஸம்ரக்ஷிக்கத்தக்கவை' என்று வெகு தெளிவாக அரசனின் கடமை சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வசனங்களில் பிராசீனமாகவும், பாரம்பரை பாரம்பயாகவும் இருந்துவரும், ஜாதி, குல தர்மங்களை அரசன் அப்படியே காக்கவேண்டுமென்று சொல்லப்படுவதால் அவைகளை மாற்றும் அதிகாரம் அவனுக்குக் கிடையாதென்பது தெளிவாகிறது.

மேலும் சுக்ரநீதியில் மற்றொருவிடத்தில் :—

स्वस्वजात्युक्तधर्मोयः पूर्वैः आचारितस्सदा ।
तमाचेरच्च सा जातिः दंड्यास्यादन्यथानृपैः ॥

என்று சொல்லப்படுகிறது. அதாவது :—

ஒவ்வொரு ஜாதியும், தம் தமக்கு என்று விதிக்கப்பட்டதும், முன்னோர்களால் எப்பொழுதும் விடாமல் ஆசரிக்கப்பட்டுவருவதுமான தர்மத்தையே ஆசரிக்கவேணும். இல்லையேல் அந்த ஜாதியானது அரசனால் தண்டிக்கத்தக்கதாகும்.4-37

என்று ஜாதி தர்மத்தை மீறுகிறவனுக்கு தண்டனை சொல்லப்படுகிறது. இந்த ராஜதண்டனை பயத்தாலேயே ஜனங்கள் தம் தம் தர்மங்களை அனுஸரிப்பவர்களாவார்கள், என்று

राजदंडभयात् लोकः स्वस्वधर्म परोभवेत् ।

என்பதால் சொல்லப்பட்டது. இந்த வசனங்களிலிருந்து ஜாதிகளும், ஜாதி தர்மங்களும் தனித்தனியாக இருக்கவேண்டியவையென்பது ஸ்பஷ்டமாகிறது ஜாதிகளும் தர்மங்களும் கலந்து விடாமல் பார்த்துக்கொள்வதற்காக அரசன் ஒவ்வொரு ஜாதிகளையும், ஆச்ரமங்களையும் அததற்கென்று ஏற்பட்ட தனித்தனியான அடையாளங்களை தரிக்கும்படி செய்ய வேணுமென்றும் அந்த சுக்ர நீதியிலேயே

जातिवर्णाश्रमाचारान् पृथक् चिह्नैः सुलक्षयेत्

என்பதால் ராஜ தர்ம பிரகரணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

பாரத தேசத்தின் பிரபல ராஜ்யசாஸ்திரமாகிய சுக்ரநீதியிலேயே இப்படியிருக்கையில் அரசனுக்கு தர்மத்தை மாற்ற அதிகாரம் எப்படி கிடைக்கும்? மற்ற நீதிக்கிரந்தங்களும் ஸ்மிருதிகளும் இந்த அபிப்ராயத்தையே ஸ்திரப்படுத்தியிருக்கின்றன.

யாக்ஞவல்கயஸ்மிருதியில்:—

यस्मिन् देशे य आचारः व्यवहारः कुलस्थितिः ।
तथैव परिपाल्योऽसौयदा वशमुपागतः ॥ 343

என்று ராஜ தர்மத்தில் காணப்படுகிறது. எந்த தேசத்தில் எது ஆசாரமோ, வ்யவஹாரமோ, குல வழக்கமோ, அவை அப்படியே பரிபாலிக்கத் தக்கவை. (அந்ததேசம் அரசன் வசப்பட்டபிறகு) ஒரு அரசன் புதிதாக ஒரு தேசத்தை யுத்தத்தில் ஜயித்து வசப்படுத்திக் கொண்டால்கூட அங்கு அத்தேச ஜாதி குலதர்மங்களை அப்படி அப்படியே ரக்ஷிக்கக் கடமைப்பட்டிருப்பதாகக் சொல்லப்படுகிறது

மனுஸ்மிருதியிலும் ராஜதர்மபிரகரணத்தில்:—

जाति जानपदान् धर्मान् श्रेणीधर्मान् च शाश्वतान्
समीक्ष्य कुलधर्मान् च स्वधर्मं प्रतिपादयेत् ॥

என்பதால் ஜாதிதர்மம், தேசதர்மம், ச்ரேணிதர்மம், குலதர்மம் இவைகளைக் கவனித்து தர்மபராணா அரசன் ஸ்வதர்மத்தை நிலைநிறுத்தவேணும் என்று சொல்லப்படுகிறது.

அரசன் இஷ்டப்படி ஜாதிகுல தர்மங்களை அவ்வப்போது மாற்றக்கூடியவைளாயிருந்தால் இம்மாதிரி மனு முதலியவர்கள் சொல்லுவது எப்படிப் பொருந்தும்?

மிதாக்ஷரையிலும் இவ்வர்த்தம் ஸ்திரப்படுத்தப்பட்டிருக்கிறது. மாதவ, விஜ்ஞானேச்வராதிகள் உதாஹரித்துள்ள தேவல வசனமும்

यस्मिन् देशे पुरे ग्रामे त्रैविद्येनगरेऽपिवा ।
यो यत्र विहितोधर्मः तंधर्मं न विचालयेत् ॥

எந்த தேசத்தில், எந்த கிராமத்தில், எந்த பட்டணத்தில் எது தர்மமாக இருந்து வருகிறதோ அந்த தர்மத்தை அசைக்கக்கூடாது" என்று சொல்லுகிறது.

பிரஹஸ்பதி ஸ்மிருதியிலும்,

देश जात्यादि धर्मस्य प्रामाणयात् अविरोधिनः ।
शास्त्रेणातो नृपस्सर्वं शास्त्रदृष्ट्या प्रवर्तयेत् ॥

என்பதால் "சாஸ்திர விரோதமில்லாத தேச தர்மங்களும், ஜாதி தர்மங்களும் பிரமாணங்களாகையால், அரசன் சாஸ்திரங்களைக் கொண்டே கவனித்து அவைகளை நடப்பிக்க வேணும்" என்று அரசனின் தர்மரக்ஷணப் பொறுப்பு கூறப்பட்டிருக்கிறது.

देश जातिकुलधर्माः आम्नायैरविरुद्धाः प्रमाणं ।

என்று ஆபஸ்தம்பாதிகள் சொல்லுகிறபடி தேச, ஜாதி, குலங்களில் வேத விரோதமில்லாத பாரம்பரை ஸம்பிரதாய தர்மங்கள்கூடப் பிரமாணங்களென்றும் அந்த ஸம்பிரதாயங்களைக்கூட அரசர்கள் அப்படியே காக்க

வேண்டுமென்றும் ஏற்படுகிறது. ஸாக்ஷாத்தாக சுருதிஸ்மிருதிகளில் விதிக்கப்பட்டுள்ள ஜாதி குலதர்மங்களைப்பற்றிக் கேட்பானேன்? அவைகளை மாற்றாமல் அப்படியே பரிபாலிக்க வேண்டியதே நல்லரசாக்ஷியின் முறையென்பது பிரமாணங்களின் நிஷ்கர்ஷமாகும்.

தவிர ஹிந்து அரசர்கள் வேதஸ்மிருதி விதிகளுக்கு உட்பட்டே ராஜ்யம் நடத்தவேண்டுமென்றும், அதிலும் தர்ம சாஸ்திரத்திற்கும் அர்த்த சாஸ்திரத்திற்கும் விரோதம் ஏற்பட்டால் தர்மசாஸ்திர விதியே பிரபலமென்றும், அதன்படியே அரசன் நடக்கவேண்டுமென்றும் சாஸ்திர நிச்சயமாகையால் அந்த விவரத்தை இங்கு நாம் பிரஸ்தாவிக்க வேண்டியது அவசியமில்லை. ஆதலால் அரசர்கள் அந்தந்த ஜாதி குலதர்மங்களை அப்பப்படியே காத்து வரவேண்டிய கடமையுள்ளவர்களேயல்லது தங்களிஷ்டப்படி அவைகளைச் சீர்திருத்த அதிகாரம் பெற்றவர்களல்லவென்பது தெளிவாகிவிட்டது.

திருவாங்கூரின் முந்திய அரசர்கள் இந்த தர்ம தத்வத்தை அறிந்தே அங்கு பரம்பரையான ஜாதி குல தர்மங்களை நேற்றுவரையில் அப்படியே ரக்ஷித்து வந்திருக்கிறார்கள். புதிய அரசரோவெனில் இந்த வியவஸ்தையை மீறி நடந்திருக்கிறார்.

“ராஜா காலஸ்ய காரணம்”

இவ்வாறு அரசர்கள் ஜாதி தர்மாதிகளை மாற்றமுடியாதென்று நேரிட பிரமாணங்கள் சொல்லுகையில், சீர்திருத்தக்காரர்கள் கக்ஷிக்கு நேர்முகமான ஆதாரம் கிடைக்காமல் 'ராஜாகாலஸ்ய காரணம்' என்ற ஒரு துண்டு வாக்யத்தைக் காட்டி வாதாடுவது விநோதமாயிருக்கிறது. இதன் பொருத்தமின்மை விளக்கி உண்மையான அர்த்தத்தை வெளியிடுவோம்.

ராஜா காலஸ்ய காரணம்.

என்றதை எடுத்தவர்கள், இந்த துண்டு வாக்யத்தின் இதர பாகங்களையோ, முன் பின் பிரகரணங்களையோ, இந்த வாக்யத்தின் பொருத்தமின்மையையோ கவனித்துப்பேசுவதாகத்தெரியவில்லை.

ராஜா தர்மங்களை மாற்றலாமென்பதற்கு இந்த வாக்யத்தில் இடமிருக்கிறதாவென்று முதலில் கவனிக்கவேண்டும். “அரசன் காலத்திற்கு காரணம்,, என்ற அளவே இதில் காணப்படுகிறது. இது எப்படி தர்மத்தை மாற்றலாமென்பதற்கு பிரமாணமாகும்? அத்தகைய அர்த்தமுள்ள பதமோ தாத்பர்யமோ இங்கு உளதா?

“காலத்திற்கு காரணம்,, என்பதில் “காலம்,, என்பதற்கு “தர்மம்,, என்ற அர்த்தம் எப்படி கிடைத்தது? “காரணமாயிருக்கிறான்,, என்பதாலும் மாற்ற அதிகாரமுள்ளவனென்ற அர்த்தம் எப்படி கிடைக்கும்? நேர்முகமான பதப்பிரயோகம் ஒன்றும் இங்கு இல்லாதிருக்கையில் சீர்திருத்தக்காரர்களின் எண்ணத்திற்கு இங்கு என்ன வழியிருக்கிறது? ஆகையால் இங்குள்ள பதங்களின் சக்தியைக்கொண்டும் பார்த்தால் “அரசன் தர்மத்தை மாற்றலா,, மென்ற அர்த்தத்திற்கு வழி கிடையாது.

இந்த “ராஜா காலஸ்டகாரணம்” என்றதானது சுக்ரநீதி, மஹாபாரதம் ஆகிய சிலவற்றில் இருக்கிறது. அவ்விடத்தின் பூர்வோத்திர ஸந்தர்ப்பங்களையும், மனு முதலியவர்களின் அபிப்பிராயங்களையும் ஒற்றுமைப் படுத்திப்பார்த்தால் இந்த சுலோகத்தின் தாத்பர்யமே வேறுவிதமாயிருக்கிறதைக் காணலாம். இது சீர்திருத்தக்காரர் சொல்லும் அர்த்தத்தைக் கொடுக்கக்கூடியதுமல்லவென்பதும் விளங்கும். மனுஸ்மிருதியில் உள்ள விஷயத்தை முதலில் மனதில் வாங்கிக்கொண்டால் இவ்விஷயம் வெகுதூரம் தெளிவாகி விடக்கூடியது.

மனுவானவர்—

कृतत्रेतायुगं चैव द्वापरं कलिरेवच ।
राज्ञो वृत्तानि सर्वाणि राजाहि युगमुच्यते ॥9-30

என்பதால் அரசனே நான்கு யுகங்களாகச் சொல்லப்படுவதாயும், அவனுடைய கார்யங்களால் நான்கு யுகங்களை அவன் உண்டாக்கக் கூடியவனாகையால் அவன் யுகரூபமான காலத்திற்குக் காரணமாகின்றானென்றும் சொல்லுகிறார். இதை மனுவானவர் அடுத்த சுலோகத்தால் வெகு ஸ்பஷ்டமாக நிரூபிக்கிறார்.

कलिः प्रसुप्तोभवति स जाग्रत् द्वापरंयुगं ।
कर्मसु अभ्युदितः त्रेता विचरंस्तु कृतंयुगं ॥ 31

என்பதால் ராஜாவானவர் யுகரூப காலத்திற்கும் காரணமாகும் வழியைக்காட்டுகிறார். அதாவது — அரசன் அக்ஞானத்தினாலோ சோம்பலாலோ ராஜகார்யங்களை அறியாமலிருந்தால் அப்போது அவன் கலியுகத்தை உண்டாக்குகிறான். ராஜகார்யத்தை அறிந்தும் அதன்படி நடக்காவிட்டால் அவன் அப்போது த்வாபர யுகத்தை உண்டாக்குவான். ராஜகார்யங்களை அறிந்தும் செய்தும்வந்தால் திரேதாயுகத்தை அவன் ஸிருஷ்டிசெய்கிறான். எப்போதும் சாஸ்திர விதிப்படி அறிந்தும் அநுஷ்டித்தும் தர்மமாக ராஜ்யம் நடத்துகிறானே அப்போது அவன் கிருதயுக கர்த்தாவாக ஆவான். ஆகையால் ராஜா தனது செய்கையால் மேற்கண்ட காலங்களுக்கு காரணமாகிறானென்று வெகு ஸ்பஷ்டமாக மனுஸ்மிருதி கூறுகிறது. இந்த அர்த்தங்களை மேற்கண்ட 2 சுலோகங்களிலும் குல்லூகபட்டர் பின் வருமாறு விளக்குகிறார்.

कृतत्रेताद्वापर कलयो राज्ञ एव चेष्टित विशेषाः तैरेव सत्यादिप्रवृत्तेः । तस्मात् राजैव कृतादियुगमुच्यते ॥

अज्ञान, आलस्यादिना यदा निरुद्यमःराजा भवति तदा कलिः स्यात् । यदा जानन्नपि नानु तिष्ठति तदा द्वापरं । यदा कर्मानुष्ठानेऽवसितः तदा त्रेता युगं । यथाशास्त्रंपुनः कर्माणि अनुतिष्ठन् विचरति तदा कृतयुगं ।

ஆகையால் அரசன் தனது சிரத்தை, அச்ரத்தை, ஜாக்ரதை, அஜாக்ரதை முதலிய கார்யங்களால், கலி முதலிய யுக காலங்களுக்குக் காரணமாயிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இந்த மனுஸ்மிருதியின் தாத்பர்யத்தைத்தான் 'ராஜா காலஸ்ய காரணம்'என்ற வசனம் கூறுகிறதேயல்லது தர்மத்தை மாற்றலாமென்று சொல்லவரவில்லை. “ராஜாவானவன் தனது செய்கையால், கலிமுதலிய காலத்திற்குக் காரணமாகிறான்” என்பதே அதன் பொருளாக ஏற்படுகிறது.

இவ்விஷயத்தைத்தான் சுக்ரநீதியும் விளக்குகிறது. அங்கு, “அரசனுடைய” ஆசாரம் அதாவது ராஜ்ய நிர்வாஹ கார்யத்தால் காலம் மாறுபாட்டை அடைவதாயும், ஸதாசார ப்ரவர்த்தகனை அரசனே அந்த மாறுபட்ட காலத்திற்குக் காரணமென்றும்.

इष्टा निष्टाधिकन्यूनाचारैः कालस्तु भिद्यते ।
'आचार प्रेरको राजाह्येतत् कालस्यकारणं । 1-22

என்பதால் சொல்லப்படுகிறது. 'இஷ்டமாயும், அநிஷ்டமாயும், அதிகமாயும், குறைச்சலாயுமுள்ள, அரசனுடைய ஆசாரத்தால் காலம் மாறுபடுவதாயும், அதாவது மனு சொல்லியபடி கலி முதலிய காலம் ஏற்படுவதாயும் இந்தக்கால மாறுபாட்டிற்கு ஆசாரப்பிரவர்த்தகனும் அரசனே காரணமென்றும், மனுஸ்மிருதியில் சொல்லப்பட்ட தாத்பர்யமே சுக்ரநீதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விடத்திலும் அரசன் மாறுதல் செய்ய அதிகாரமுள்ளவனென்று விதிக்க வில்லை. நல்ல நிர்வாஹத்தால், கிரதயுகம் முதலியநல்ல காலத்திற்கும்,கெட்ட நிர்வாகத்தால் கலி போன்ற கெட்டகாலத்திற்கும் ராஜா காரணமாகிறான். என்ற விஷயமே இதிலும் கூறப்படுகிறது. இதே தாத்பர்யத்தைத்தான் மகாபாரதாதிகளிலும் காண்கிறோம்.

राज्ञोवा कारणं कालः राजावा काल कारणं ।
इति ते संशयो माभूत् राजा कालस्यकारणं ॥

என்ற பாரத ச்லோகத்தில் ராஜாவுக்கு காலம் காரணமா ராஜாகாலத்திற்குக்காரணமா, என்று சங்கித்து “ராஜாவே காலத்திற்கு காரணம்,, என்று ஸித்தாந்தம் சொல்லப்பட்டது இவ்விடங்களிலெல்லாம் மனுஸ்மிருதியை அநுசரித்து யுக ரூபமான காலத்திற்கு ராஜாவே தனதுசெய்கைமூலம் காரணமாகிறான் என்ற அர்த்தமே கொள்ளவேண்டியதேயல்லாது வேறில்லை.

ஆதலால் சீர்திருத்த வாதிகள் காட்டிய இந்த சுலோகம் அவர்களுக்கு உபயோகமற்றது. அத்துடன் அவர்களுக்கு விபரீதமாயுமுள்ளது. இப்படியிருக்க இந்த சுலோகத்தின் உண்மை அர்த்தத்தையும் சந்தர்பத்தையும், பத பதார்த்தங்களின் சக்தியையும் கவனிக்காமல், தங்கள் மனம்போனபடி அர்த்தம் சொல்வது எந்த விவேகியாலும் ஏற்கத்தக்கதில்லை. அவர்களுடைய அபிப்பிராயத்திற்கு சாதகமில்லாததும், விபரீதமாயுமுள்ள இந்த துண்டு வாக்யத்தைத்தவிர வேறு ஒரு எழுத்தும் பிரமாணமாக இவர்களுக்கு கிடைக்காததும் கவனிக்கத்தக்கது. மேலே நாம் உபபாதித்தபடி தர்மத்தை மாற்ற அரசனுக்கு அதிகாரமில்லையென்பதற்கு நேர்முகமாயும் ஸ்பஷ்டமாயும் பல வசனங்கள் இருக்கையில் இந்த துர்வாதம் ஒரு க்ஷணமும் ஜீவித்து நிற்கமுடியாது?

சென்னை சட்டஸபை காங்கிரஸ் மந்திரிஸபை அமைப்பு.

சென்னை அஸெம்பிளியின் முதல் கூட்டம் 14௳ நடைபெற்றது. மெம்பர்கள் ராஜவிச்வாஸப் பிரமாணம் செய்தனர். மறுநாள் ஸபையில் புலுஸு ஸாம்பமூர்த்தி சட்டஸபைத் தலைவராகவும், ஸ்ரீமதி ருக்மணீ லக்ஷ்மீபதி உபத்தலைவராகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

ராஜாங்க ஸபைக்கு டாக்டர் ராமராவ் தலைவராகவும், ஸ்ரீமான் கே. வெங்கடஸாமி நாயுடு உபத்தலைவராகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர். மீண்டும் ஸபை ஆகஸ்ட் 16௳ கூடும். அப்போது புதிய வரவு செலவு திட்டம் ஆஜர் செய்யப்படும்.

ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியர், டி. பிரகாசம், யாகூப்ஹஸன், டாக்டர் ஸுப்பராயன் ஸ்ரீமான் வி. வி. கிரி, ஸ்ரீமான் ராமன்மேனன் முனுஸாமிப்பிள்ளை, டாக்டர் ராஜன், கோபாலரெட்டி, ஸ்ரீமான் ராமநாதன் ஆகிய 10பேர் மந்திரிகளாக நியமிக்கப்பட்டார்கள். இவர்களுக்குக் கார்யதர்சிகளும் 10 பேர் நியமனம் செய்யப்பட்டார்கள்.

பம்பாய் முதலிய மற்ற மாகாணங்களிலும் காங்கிரஸ் மந்திரிஸபை அமைக்கப்பட்டு வருகிறது.

ஐக்ய மாகாணத்தில் பண்டித நேருவின் ஸஹோதரியான, ஸ்ரீமதீ விஜயலக்ஷ்மீ என்பவளும் ஒரு மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறாள்.

வெளியூர்ச் செய்திகள்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்
திருநாட் கொண்டாட்டம்.

11-7-37௳ ஞாயிற்றுகிழக்மை மாலை 6-30 மணிக்கு சங்கக்காரியாலயமான ஸ்ரீரங்க நிலயத்தில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் திருநாட்கொண்டாட்டம் ஆரம்பமாகியது. ஆரம்பத்தில் சைவசிகாமணியார் தேவாரம் திருவாசகம் கானத்துடன் அழகாக ஓதினர்.

ஸ்ரீமான் யஸ். சோமசுந்தரம் செட்டியாரவர்கள் 'ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள் மஹிமை' எனும் விஷயம் பற்றி மிக உருக்கமாக உபந்யசித்தார். இடையில் ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி ஸேவை தந்தருளினர்.

காரியதரிசி வந்தனோபசாரம் வழங்க கொண்டாட்டம் இரவு 8-45 மணிக்கு இனிது முடிவடைந்தது.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

பெரியகுளம்.

தர்மஸம்வர்த்தநீ ஸபா.

நாளது ஆடி௴ 2௳சனிக்கிழமை 17-7-37 மாலை 4மணிக்கு பெரியகுளம் தெற்கு அக்ரஹாரம் ஸ்ரீவேதவிலாஸ் கட்டிடத்தில் சபை ஆரம்பமாயிற்று. அச்சமயம் வீரபாண்டி பிரும்ஹஸ்ரீ K. R. ஸதாசிவ பிர்ம்மம் அவர்கள் அக்ராஸநம் வகித்தார். அந்த சமயம் வேதவிலாஸ் அங்கத்தினர்களும் உள்ளூர் மஹாஜனங்களும் மேல்மங்கலம் பிர்ம்ஹஸ்ரீ சிவராம கணபதி கனபாடிகள், சு. சுப்பராமு சாஸ்திரிகளும் கூடினார்கள். அக்ராசனாதிபதி பிர்ம்ஹஸ்ரீ K. R. சதாசிவபிர்ம்ஹம் அவர்கள் பிரேரேணையின்பேரில் பிர்ம்ஹஸ்ரீ K. C. ராமசுவாமி சாஸ்திரிகள் தற்காலம் நம்பாரததேசம் வர்ணாஸ்ரமதர்மத்திலிருந்து தவறி விட்டதைப்பற்றியும், பிராமணனுடைய கடமை என்பதைப்பற்றியும் உபமான உபமேயத்துடன் விவரமாகக் கூறினார். ஜனங்கள் உபன்யாஸத்துடன் ஆனந்தத்தோடு கூடினவர்களாய்க் கொண்டு இரவு 7½மணிக்கு ஷெ சபை அங்கத்தினர், V. T. ராஜன் அவர்களுடைய மங்கள வந்தனோபசாரத்துடன் சபை இனிது முடிவுபெற்றது. ஈ. ஸோமசுந்தரசர்மா.

மதராஸ்.

மத உபன்யாஸங்கள்.

சென்னையம்பதியின் ப்ரதான விடங்களில் ஸ்ரீ உபவே வித்வான் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அண்ணங்கராசாரியார்,உப-வே பண்டிட் பாவஸ்து ஸ்ரீநிவாஸாச்சாரியார், பிரும்மஸ்ரீ பண்டிட் ஸோமதேவ சர்மா முதலியோர்களால் ரஸமான உபன்யாஸங்கள் நடத்திவரப்படுவதுடன் ஸ்ரீரங்கம் உபவே சடகோபாச்சாரியாராலும் மிக ரமணீயமாக பல விடங்களிலும் பிரசங்கங்கள் செய்யப்பட்டு வருகின்றன. உபன்யாஸ சமயங்களில் ஜனங்கள் வந்து பரமானந்தமுறுகின்றனர்.

பத்ரீ நாராயண யாத்ரா விஜயம். ஆழ்வார் திருநகரியில் ஒருவருஷ காலமாய் காலக்ஷேப உபன்யாஸங்கள் செய்துகொண்டிருந்த காரப்பங்காடு வித்வான் தேசிக வரதாச்சாரியார் பதரிகாச்ரம யாத்ரையாய் புறப்பட்டு செல்கையில் சென்னையில் இரண்டு வாரம் தங்கியிருந்து பல உபன்யாஸங்கள் செய்துவிட்டு பலராலும் கௌரவித்து வழியனுப்பப்பட்டு சென்றவாரம் வடதேசயாத்ரையாய் சென்றார்.

புதிய மந்திரிகள். சென்னையில் காங்கிரஸ் சார்பாக புதியமந்திரிகள் நிர்வாஹத்தை ஒப்புக்கொண்டது முதல் ஜஸ்டிஸ் சுயமரியாதை நபர்கள் பத்திரிகைகள் மூலமும் சுவரொட்டி விளம்பரம் மூலமும் பார்ப்பன ராஜ்யம் ஆரம்பமாயிருப்பதாய் ப்ரலாபித்துஓலமிடுகிறார்கள். ந. வி. நி.

மாத்வகலை ஞானசங்கம்
கும்பகோணம்.

ஓர் திருத்தம்.

சென்ற இதழில் ஷெ தலையங்கத்தின்கீழ் துவைத பண்டிதர் என்பதற்குப் பதிலாக அத்வைதபண்டிதர் என தவறாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதை நாம் இரண்டுவிதமாகத் திருத்திக்கொள்ளலாம். அடுத்த இதழாகிய இவ்விதழில் துவைதபண்டிதர் என்ற திருத்தத்தைப் பிரசுரிப்பது ஒன்றாகும். இரண்டாவதாக, அ இதி ப்ரஹ்ம என்று உபநிஷத்துக்களில் அ என்பது பகவானையும் துவைதமென்பது வேறுபட்டது அல்லது பின்னமானது என்றபொருளையும் குறிக்கும். ஆகவே (அத்துவைதம் - பகவானிடமிருந்து வேறுபட்டது) அத்வைதம் என்றால் இந்த ஜகத்தெல்லாம் பகவானிடமிருந்து வேறுபட்டிருப்பது என்றபடி பிரபஞ்சபேதத்தையேமுக்கிய கொள்கையாகக் கொண்ட மாத்வ மதமே தான் என்று ஏற்படும். மாத்வர்களாகிய நாம் அனைவரும் 'அத்வைதாமிருதவர்ஷிணீம் பகவதீம் அஷ்டாதசாத்யாயினீம்' என்ற கீதாதியான சுலோகத்திலுள்ள அத்வைதபதத்திற்கு இவ்வாறே வியாக்யானம் செய்ய வேண்டும், செய்தும் உள்ளோம் இதற்கேற்ப அத்வைதபண்டிதர் என்று பிரசுரிக்கப்பட்டதும் துவைத பண்டிதரையே குறிக்கும் என்றும் திருத்திக்கொள்ளலாம் என கும்பகோணம் மாத்வகலை ஞானசங்கத்தின் காரியதரிசி எம். ராமராவ் எழுதுகிறார்.

மதிப்புரை.

"ஸ்ரீமத் பாகவதம்"

ச்லோகங்களை சுருக்கி வாக்கியார்த்தங்களைத் தமிழில் அட்வகேட் டி. ஆர். கணபதிராம அய்யர் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. விலை 1—8—0

இந்நூல் ஆதியில் ஸ்ரீமந் நாராயணனால் பிரும்மதேவருக்கும் பிரும்மதேவரால் நாரத முனிவருக்கும் உபதேசிக்கப்பட்டு அவரால் ஸ்ரீ வேதவ்யாஸருக்கும் அவரால் சுகப்ரம்மத்திற்கும் உபதேசிக்கப்பட்டதென்ற பாரம்பரையாகவந்த பாகவதம் 12-வது ஸ்கந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, இம்மஹா சாஸ்திரத்தை நைமிசாரண்யமென்றும் க்ஷேத்திரத்தில் 'கலியுகத்தில் வரக்கூடும்கொடுமைக்குப்பயந்து' பல முனிவர்கள் நடத்திய சத்திரயாகமென்றும் யாகத்தில் ஸூத முனிவரால் சௌனகாதி மகரிஷிகளுக்குச் சொல்லப்பட்டது. இந்நூல் பன்னிரண்டு ஸ்கந்தங்களையும் மூன்று பாகமாக வகுத்து வெளியிடப்பட்டிருக்கிறது. இதில் பகவானின் அவதாரக்கிரமங்களும் அதன் பிரயோஜனங்களும் லீலா விசேஷங்களும் விராட்புருஷனுடைய உற்பத்தியும் அவரின் வைபவங்களும் பிரும்மநாரதர் சம்பாஷணைகளும் விதுரமைத்ரேயஸம்வாதமும்சிருஷ்டியும் மனுக்களுடைய வம்சமும் ஆதி ராஜாக்களின் சரித்திரங்களும் ரிஷபயோகி, பரதயோகீ முதலிய யோகீச்வரர்களுடைய சரித்திரங்களும் பிரஹ்லாத, வாமனவதார அமிர்தமதனம் கஜேந்திர மோக்ஷமும், பக்தி வைராக்ய ஞான சாதனங்களால் ஜீவாத்மா, பரமாத்மாவுடன் ஐக்யமாகும் தன்மையும் பலவிதமான யோக மார்க்கங்களும் விஸ்தாரமாய் சொல்லப்பட்டிருக்கின்றன. தசமஸ்கந்தமும், ஸ்ரீ கிருஷ்ணவதாரமும், பகவானுடைய வைபவங்களும் யோகமாயா ப்ரபாவம். அஸுரவதங்கள் கம்ஸவதமும், அதிமானுஷ்யமான பகவானுடைய ஆச்சர்யமான செய்கைகளும் அவ்வவதாரத்திலேற்பட்ட பலவித லீலா விசேஷங்களும் மிகவும் விரிவாய் சொல்லப்பட்டிருக்கிறது. பதினோராவது ஸ்கந்தத்தில் மற்ற பிரகரணங்களிலும் உபதேசிக்கப்படுகிற பக்தி, ஞான, வைராக்ய ஸம்பத்துகளும் சாதனங்களும் ஸ்ரீமத் பகவத்கீதையில் உபதேசித்தபடி மிகவும் விஸ்தாரமாய் உத்தவருக்கு ஸ்ரீ பரமாத்மாவால் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. இந்நூலில் கிருஷ்ணவதாரத்தில் ஆநடசமாதி யோகிகள் போன்ற பரமபாகவத சிரோமணிகளாகிய கோபிகளுக்கும் பகவானுக்கும் உண்டான ஸம்வாதங்களும் கோபிகளின் பராபக்தியும் அதன் ஸ்வரூபமும் அப் பக்தியால் தன்னை மெய்மறந்து பகவானிடம் ஈடுபட்ட சரித்திரங்களும் அதன் தத்வங்களும் விரிவாகச் சொல்லப்படுகின்றன. வேண்டிய இடங்களில் வடமொழி ச்லோகங்களும் முக்யமான கருத்துரையுடன் விளங்குகின்றது. கோபிகா கீதை முதலிய இடங்களில் தமிழ் எழுத்துடன் தேவ நாகரீ எழுத்தும் கூடவே அமைக்கப்பெற்றிருந்தால் ரொம்பவும் உபயோகமாயிருக்கும் ஒவ்வொரு பாகங்களிலும் விஷயங்களுக்குப் பொருத்தமான அழகான பல படங்கள் ஆங்காங்கு அமைக்கப்பெற்றிருப்பது மிக மிகப் போற்றத்தக்தாகும். பிழைத் திருத்தங்கள் நான்குபக்கங்கள் அமைத்திருந்தும் இன்னும் பல பிழைகள் தோன்றுகின்றன. இதை மறுபதிப்பில் சீர்திருத்தம் செய்வார்களென நம்புகிறோம். இப் பெரிய கைங்கர்யத்தி லீடுபட்ட இப்பெரியோரின் புத்தகங்களை வாங்கி ஆதரிப்பதன் மூலம் அவரது ஊக்கத்தை விருத்திசெய்யவேண்டுமென வேண்டுகிறோம். இந்நூலை நாள்தோறும் ஐந்து நிமிஷமாவது ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவிற்கு அர்ப்பணம் செய்யப்பட்டமனதுடன் வாசிப்பதாக ஒப்புக்கொண்டும் இந்தப் புத்தகத்தை வாங்குவதற்கு தான் ஏழை என்றும் உறுதிமொழி கொடுப்பவர்கள் இனமாக ஓர் காபி ஆசிரியரிடமிருந்து பெறலாம்.

வேண்டியவர்கள்: ஜி. சுப்பிரமணியம் அண்டு. கோ.
ஸ்ரீமத் பாகவதம் பப்ளிஷிங் ஹவுஸ்.
திருநெல்வேலி ஜங்க்ஷன், என்ற இடத்தில் பெறலாம்.

மேலக்காவேரி, K. R. வைத்தியநாதசாஸ்திரி.

மூகபஞ்சசதியின் முதல் பாகம்.
“ ஆர்யா சதகம் ”

Mr. G. V. கணேசய்யர், B. A, B L.
அவர்களால் மூலம் நாகரத்திலும், தமிழிலும்,
விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
100 பக்கங்களுக்குமேல் கொண்டது.
தபால்செலவு வேறு] [விலை அணா 0-8-0.

மதராஸ் லாஜர்னல் அச்சுக்கூடம்
பிரசுரங்கள்.

	ரூ.	அ.	ப.
வால்மீகி ராமாயணம் 7 காண்டம் (தேவநாகாலிபியில்)			
தின்பேப்பர்	5	0	0
திக்பேபர்	4	0	0
த்வாதச உபநிஷத் (தமிழில்)	3	0	0

கிடைக்குமிடம்:— மானேஜர், ' ஆர்யதர்மம் '
கும்பகோணம்.

215194

435


அநாவசியமாக ஏன் - - - - அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது

அமிர்தாஞ்சனம்

மாம்பலம்.

ஸத்வித்யாப்ரகாசினீ ஸபா.

இச்சபையினாதரவில் ஸபைத் தலைவரான ப்ரம்ஹஸ்ரீ கடலங்குடி நடேசசாஸ்திரிகளின் நன்முயற்சியால் இவ்வாண்டு ஸ்ரீசங்கரஜயந்தி மஹோத்ஸவமானது வெகு சிறப்பாக 10தினங்கள் கொண்டாடப்பட்டு கடைசி தினத்தன்று அத்வைதஸபையொன்றும் நடத்தப்பட்டது. பிறகு ப்ரம்ஹஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகள் பலபக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்க இதற்கெனப் புதிதாய் அமைக்கப்பெற்ற தனது சொந்தமான 'ப்ரம்ஹ வித்யா நிலயம்' என்ற கட்டிடத்தில் அத்யயன தினங்களில் ப்ரதிதினமும் காலையில் 6½ மணி முதல் 8மணிவரை ப்ரஹதாரண்யக உபநிஷத் பாஷ்ய ப்ரவசனம் செய்து வருகின்றனர். இதற்கு இந்நகரிலுள்ள பல ஆஸ்திகர்கள் வந்து கூடி சாந்திகள் சொல்லி தக்ஷிணாமூர்த்தி அஷ்டகமும் சொல்லி குருவந்தனஞ்செய்து பாஷ்ய சிரவணஞ் செய்து பரமானந்தமடைகின்றனர். அத்துடன் ப்ரம்ஹஸ்ரீ சாஸ்திரிகள் தமக்குள்ள அபாரமான வேலைகள் யாவையும் நிறுத்தி சிஷ்யர்களிடத்தில் பூர்ண விசுவாஸத்துடன் ப்ரதிப்ரயோஜனங்கருதாது ப்ரவசனஞ் செய்வதைப் பாராட்டாதாரில்லை

மேலும் அதே இடத்தில் ப்ரம்ஹஸ்ரீ கடலங்குடி சாஸ்திரிகள் ப்ரதி ஞாயிறிலும் மாலை 5மணிமுதல் 6மணிவரை 'ஸ்வாராஜ்யஸித்தி' என்ற அத்வைத வேதாந்தக் கிரந்தத்தைக் கேட்போர் மனத்தில்நன்கு பதியும்படி உபன்யஸித்து வருகின்றனர். இவ்வுபன்யாஸத்துக்கு சைதாப்பேட்டை, நுங்கம் பாக்கம் டவுன் முதலிய விடங்களிலிருந்தும்கூட ஏராளமான பக்தர்கள்வந்து வெகுபக்தி சிரத்தையுடன் வந்தன வழிபாடு செய்து சிரவணஞ் செய்துவருகின்றனர். ஒவ்வொரு உபன்யாஸத்தின் முடிவிலும் சாஸ்திரிகள் அவர்களின் உபதேச முறையைக் கொண்டாடி ஜன்மஸாபல்யத்தையடைந்தோம் எனச் சாஸ்திரிகள் அவர்களைப் போற்றுதாரில்லை.

மேலும் ஸத்வித்யா ப்ரகாசினீ ஸபையின் ஆதரவில் வித்யார்த்திகளுக்கென்று வேதவகுப்பு ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டு தக்க கனபாடிகளைக்கொண்டு ஸ்ரீருத்ரம், சமகம், புருஷஸூக்தம் முதலிய உபயுக்த வேதபாகங்களுபதேசிக்கப்பட்டு வருகின்றன. இதற்குச் சுமார் 60 மாணாக்கர் வரை தவறாது வருகின்றனர், தற்சமயம் இந்நகரவாஸிகளின் வேண்டுகோளுக்கிணங்க மாம்பலத்தில் விஜயம் செய்திருக்கும் சேங்காலிபுரம் ப்ரம்ஹஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரவர்கள் ஷை ஸபையின் ஆதரவில் 9—7—37முதல் 17—7—37வரை மாலை 8 மணி முதல் 10மணி வரை ஸ்ரீமத்ராமாயணநவாஹப்ரவசனஞ் செய்து வருகின்றனர். இதற்கு பலவிடங்களிலிருந்தும் பக்தர்கள் விஜயஞ்செய்து நான் முன்னே என இடம் பொத்திக்கொண்டு கதாசிரவணஞ்செய்துவருகின்றனர். தீக்ஷிதரவர்களின் வாக் மாதுரியத்தையும், ப்ரவசனஞ் செய்யும் முறையையும் சுலோகங்களைச் சொல்லும் மாதிரியையும் கேட்டு ஒவ்வொருவரும் பரமானந்த ஸாகரத்தில் முழுகிவிடுகின்றனர். அத்துடன் இப்புதிதாய் அமைந்தபட்டினத்தில் ப்ரம்ஹஸ்ரீ கடலங்குடி சாஸ்திரிகள்வந்துகுடியேறியிருப்பதாற்றான் இம்மாதிரியான ஸத்விஷயங்களை ஓயாது அனுபவிக்கும் பாக்கியம் எங்களுக்கு கிடைக்கின்றன என் மனமார சாஸ்திரிகளை யாவரும் புகழ்கின்றனர். ப்ரம்ஹஸ்ரீ தீக்ஷிதரவர்கள் காலையில் சூரியநமஸ்கார வகுப்பு ஒன்றை நடத்திவருகின்றனர். இதற்கு சுமார் 60 பேர் வரை வருகின்றனர்.

ஒரு நிருபர்.

முக்கிய கவனிப்பு
3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது)
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— என் கண்ணுசாமி பத்தர்.
பெரியதெரு, கும்பகோணம்.

உ

கல்யாணராம சாஸ்திரிகள் தர்மங்கள், கும்பகோணம்.

1936-௵த்திய வரவு சிலவு கணக்கு.

வரவு.	
ஆரம்ப இருப்பு	6—3—3
குத்தகைக் காரர்களிடமிருந்து நெல்லின் கிரயத்திற்காக வரவு.	108-13—6
வாளி வகையறு விற்ற வகையில் வரவு.	2—0—0
	117—0—9

சிலவு.	
O. S. 68/30 & 200/34 டிக்ரிக்காக கொடுத்தது	65—0—0
மெமோ ஸ்டாம்பு சிலவு	2—8—0
ஸ்டேஷனரி சாமான்கள்	0—7—0
வாளிவகையறு வாங்கியது	3—4—3
ஆற்றில் பந்தல் போட	5—5—6
கிணறுகள், ஊற்றுகள் வெட்ட சிலவு	1-14—0
கிஸ்தி கொடுத்தது	9—6—0
சிப்பதிகள் சம்பளம்	20—6—9
கிராமத்தில் வாய்க்கால் வெட்ட சிலவு	3—0—0
கையிருப்பு	5-13—3
	117—0—9

சரிபார்த்தேன். சரியாயிருக்கிறது.

கும்பகோணம்,
20—6—37.

G. நடேசன், G. D. A., R. A.
பப்ளிக் அக்கௌண்டண்ட் அண்டு ஆடிட்டர்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Publsihed by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஈஸ்வர௵
4 ௳
22 29
29-7-1937

215195

215195

OFFICE OF THE REGISTRAR OF [illegible]
2 AUG 1937

Registered No. M. 2913.

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்.

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
[illegible]பாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 22 | கும்பகோணம். கலி 5039 ஈச்வர-௵ ஆடி-௴ 14௳ 1937-௵ ஜூலை-௴ 29௳ | ஸ 29

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0

தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
[illegible]
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

பிரிடிஷ் விவாஹரத்து மசோதா

இங்கிலாந்தில் நடந்துவரும் விவாஹரத்து முறையில் சில சீர்திருத்தங்கள் செய்வதற்காக பார்லிமெண்டில் கொண்டுவரப்பட்டிருந்த மசோதா காமன்ஸ் ஸபையில் நிறைவேறி விட்டது.

இந்த மசோதாவின்படி இனிமேல் தம்பதிகளின் வியபிசாரம் விவாஹரத்துக்கு முக்ய ஆதாரமாகக் காட்டப்படவேண்டிய அவசியமில்லை. தம்பதிகளின் பலத்த மனஸ்தாபமும் பரஸ்பரம் அடிதடி முதலிய காரணங்களும், சித்தஸ்வாதீனமில்லாமையும் விவாஹரத்துக்குக் காரணமாகும்.

விவாஹமாகி மூன்று வர்ஷத்திற்குள் விவாஹரத்துக்கு மனுசெய்துகொள்ளமுடியாமல் இந்த மசோதா தடுக்கும்.

ஒரிஸா மந்திரிஸபை
மஹம்மதியர் வேண்டியதில்லை.

ஒரிஸா மந்திரிஸபையில் நான்கு ஹிந்துக்களே மந்திரியாக இருக்கின்றனர். ஒரு முஸ்லீமை மந்திரியாக நியமிக்கவேண்டுமென்று அங்கு முஸ்லீம்கள் கிளர்ச்சிசெய்து கவர்னருக்குத் தெரிவித்தார்கள். கவர்னருடைய விசேஷாதிகாரத்தை பிரயோகிக்கும்படியும் கேட்டார்கள்.

ஆயினும் கவர்னர் இதில் தாம் பிரவேசிக்க முடியாதென்றும் முஸ்லீம் மந்திரியில்லாததால் அவர்களுடைய நலத்திற்கு எவ்விதகுந்தகமும் ஏற்படாதென்றும் சொல்லிவிட்டார்.

பம்பாய் மந்திரிகளின் சுறுசுறுப்பு.

ஸ்ரீமான் பாலகங்காதரகெர் என்பவருடைய தலைமையிலுள்ள பம்பாய் மந்திரிஸபையார், தாங்கள் பதவியேற்றவுடன் காங்கிரஸின் நீண்டகாலக் குறைகளை ஒவ்வொன்றாகப் பரிஹரிக்க முற்பட்டுவிட்டார்கள்.

ஸ்ரீ பாபத் என்ற ராஜீயக் கைதி விடுதலை செய்யப்பட்டார். இவர் ராஜத்துவேஷம் காரணமாகக் கடுங்காவல் அனுபவித்து வந்தார். இவர் மஹாராஷ்டிரத் தலைவர்.

தவிரவும் 1932-ம் வருஷத்தில் கூர்ஜரத்தில் [illegible] மறுப்பு வரிமறுப்பு முதலிய காரணங்களுக்காக ஜப்திமுதல் செய்யப்பட்ட நிலங்களை, இருந்தவர்களுக்கு மீண்டும் திருப்பிக்கொடுத்துவிட யோஜனை நடக்கிறது. அநேக பத்திரிகைகளின் ஜாமீன் தொகை திருப்பிக் கொடுக்கப்பட்டு வருகிறது. அநேக ஸ்தாபனங்கள்மீது போட்டிருந்த தடைகளும் நிவர்த்திசெய்யப்பட்டு வருகின்றன.

புதிய ஆள்வார் மஹாராஜா.

காலஞ்சென்ற ஆள்வார் மஹாராஜாவுக்கு ஸந்ததியில்லாததாலும், அவர் ஸ்வீகாரம் செய்துகொள்ளாததாலும் அந்த ஸம்ஸ்தானத்திற்கு தாகூர் தேஜஸிங் என்றவரை வைஸ்ராய், மஹாராஜாவாக ஏற்படுத்திவிட்டார். இவருக்கு வயது 24. இவர் ராஜவம்சத்தைச்சேர்ந்த தானா என்ற ஸந்ததியில் பிறந்தவர்.

காங்கிரஸில்சேர யோஜனை.
மஹம்மதியர்களின் நிபந்தனை.

மஹம்மதியர்கள் காங்கிரஸில் சேரும் விஷயம் இப்போது அதிகம் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகிறது. காங்கிரஸ்காரர் மந்திரிபதவியேற்று மாகாண நிர்வாஹத்தைக் கைப்பற்றியிருப்பது இதற்குக்காரணம். ஐக்ய மாகாணத்தில் பிரபல முஸ்லீம்கள் ஸர். வாஸிர் ஹாஸன் தலைமையில் கூடி யோஜித்தார்கள். காங்கிரஸானது மஹம்மதியர்களின், மதம் நாகரிகம், கலை இவைகளில் பிரவேசிப்பதில்லையென்று உறுதிகொடுத்தால், முஸ்லீம்கள் [illegible] பட்டதாம்.

முஸ்லீம் லீக் மெம்பர்கள் சிலர் காங்கிரஸில் சேர்ந்துவருவதாயும் தெரிகிறது.

சென்னை சட்டஸபை
ஆகஸ்ட் 31௳ கூடும்.

ஏற்கனவே அறிவித்தப்படி 16௳ நடக்காது. வரவு செலவு திட்டங்களைப் பற்றிய விஷயங்கள் தீர்மானிக்கப்பட அதிக நாள் பிடிக்குமாதலால் சென்னை சட்டஸபைகளின் கூட்டம் ஆகஸ்ட் மாதம் 31௳யே நடைபெறுமென்று இப்போது அறிவிக்கப்படுகிறது.

முக்கிய கவனிப்பு
3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது)
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே சவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— என். கன்னுசாமி பத்தர்.
பெரியதெரு கும்பகோணம்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிக்ஸி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஷித் ஜெம்லேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

உபாகர்மப்ரயோக தத்துவம்.

(ஒரு வைதிகன்.)

ஆர்யதர்மப்ரிய வாசகர்களே !

நாளது வருஷத்திய உபாகர்மகாலம் நெருங்கிவிட்டது. பிரதி வருஷமும் உபாகர்ம விஷயத்தில் ஏதாவது சண்டை சச்சரவுகள் பத்திரிக்கைகளில் வெளிவந்தவண்ணமாயிருக்கும். இவ்வருஷத்தில் அப்படியாதொன்றும் இல்லாமலிருப்பது பெருத்த சந்தோஷத்திற்கிடமாயிருக்கிறது. நமது பத்திரிகையில் ஒவ்வொரு வருஷத்திலும் உபாகர்மாவைப் பற்றி ப்ரஸ்தாபிப்பது வழக்கம். அதையனுஸரித்து இவ்வருஷத்திலும் தங்களுக்கு அதன் ஆவச்யகதையை எடுத்துரைக்க ஆரம்பித்திருக்கிறோம்.

உபாகர்ம பதத்திற்கு வேதாரம்பமென்று தாத்பர்யம். இதிலிருந்து வேதாத்யயன உத்ஸர்ஜனமுமுண்டென்று தெரிகிறது. நமது மஹரிஷிகள் சிராவணபூர்ணிமைமுதல் தைமீ பூர்ணிமைவரையில் வேதாத்யயன காலமென்றும், தை-மீ பூர்ணிமை முதல் சிராவண பூர்ணிமை வரையில் வேதவிராம (ஒழிவு) காலமென்றும் பிரித்திருக்கிறார்கள்.

"तैष्यां पूर्णमास्यां विरमेत्

என்று ஆபஸ்தம்பர் தை-மீ பூர்ணிமையை உத்ஸர்ஜனத்திற்குக் காலமென்று சொல்லியிருந்தும் அதன்படி அப்போது நாம் நடத்துவதில்லை. உபாகர்மகாலத்திலும் நடத்துவதில்லை. ஆனால் தைமாஸ பூர்ணிமையில் உத்ஸர்ஜனம் செய்யாமலிருந்த குற்றத்திற்கு பிராயச்சித்தமாகவே காமோகார்ஷீத் என்ற மந்திர ஜபம் இப்போது உபாகர்ம தினத் [illegible] செய்யப் படுகிறது. இதையும் சரிவர செய்யாமலிருந்தால் பிசகு. மேற்சொன்ன தத்வத்தை உணர்ந்துகொண்டு அதை அனைவரும் 1008 தடவை ஜபிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் இன்றேல் தோஷமுண்டு.

பிராம்மணர்களுக்கு வேதாத்யயனம் முக்யமென்பது நம்முனிவர்களின் ஸித்தாந்தம். நான்கு வேதங்களையும் அத்யயனம் செய்வது தான் முக்கிய கல்பமாகும். தன் தன் முக்கிய சாகையாவது பூர்ணமாக அத்யயனம் பண்ணவேண்டும் என்பது இரண்டாம் பக்ஷம். உபயுக்தமாயுள்ள வேதபாகத்தையாவது அத்யயனம் செய்வது அதமபக்ஷம். காயத்ரியையாவது மறக்காமலிருப்பது அதமாதம பக்ஷமாக அமைக்கப்பட்டிருக்கிறது. வேதாத்யயனத்தைச் செய்யாமல் பாஷாந்தராப்யாஸத்தைச் செய்தால் பெரிய பாவமென்றும் அதற்குப் பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டுமென்றும், யாக்ஞவல்க்யர் முதலிய முனிவர்கள் முறையிடுகிறார்கள். வேதநிந்தை, வேதத்யாகம் இவ்விரண்டாலும் அகாலமிருத்யு முதலிய அனர்த்தங்கள் ஏற்படுவதாக பாரதம் முதலியவை பறைசாற்றுகின்றன. ஆகவே ப்ராம்மணனாய் பிறந்தவன் ஒவ்வொருவனும், காரணப்ரச்னமின்றி, ருத்ரம், சமகம், புருஷஸூக்தம் முதலிய உபயுக்த வேதபாகத்தையாவது அத்யயனம் செய்யாமலிருக்கலாகாது. இதையெல்லாம் இவ்வுபாகர்மா நமக்கு ஞாபகப்படுத்துவதாக இருக்கிறது. இவ்வுபாகர்மா பிரும்மசாரிக்கும், கிருஹஸ்தனுக்கும் நித்யமாக விதிக்கப்பட்டிருக்கிறது. இதைச் செய்யாவிட்டால் வேதத்தியாகத்திற்குரிய தோஷத்திற்குள்ளாவான். சிராவண பூர்ணிமை முக்கியகாலமாக இதற்குச் சொல்லியிருந்தாலும், உபாகர்ம தோஷங்கள் நேர்ந்தகாலத்தில் ஆடி மாதம், புரட்டாசிமாதம் பூர்ணிமையும் ஆபஸ்தம்ப ஸூத்ரானுஸாரிகளுக்கு விஹிதமாயிருக்கிறது. உபாகர்மகாலத்தை விஸ்தரித்துக்கூறுவது இப்போது தேவையில்லை. என்று கருதுகிறோம்.

உபாகர்ம தினத்தன்று உபவாஸம் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மாறுதலாக, காலையில் இட்லி காபியும், மத்யானம் அறுசுவையுண்டியும், இரவு இட்லி முதலிய பலகாரங்களும் எல்லோராலும் சாப்பிட்டுவரப்படுகின்றன. இது வெகு அநுசிதம். இத்துர்வழக்கத்தை நாம் கூடியமட்டும் விலக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

உபாகர்ம தினத்தில் விடியற்காலையில் ஸ்நானம், ஸந்த்யாவந்தன ஜபம் செய்துவிட்டு "காமோகார்ஷீத்" என்ற மந்திரஜபம் 1008 ஆவிருத்தி செய்யவேண்டும்.

பிரும்மசாரிகள் உபாகர்மாங்கமாக க்ஷவரம் செய்துகொண்டு ஷடி ஜபத்தை செய்ய வேண்டும். அன்றைக்காவது பிரும்மசாரிகள் ஸமிதாதானம் அவச்யம் செய்யவேண்டும்: க்ஷவரத்திற்காக உபவீத தாரணமும் அவச்யம்.

மத்யானகாலம் வந்தவுடன் மஹாநதிக் கரைக்குச்சென்று மாத்யான்ஹிகம், பிரும்மயக்ஞம் இவற்றை முன்புசெய்யவேண்டும் பின்பு மஹாசங்கல்ப பூர்வகமாக மஹாநதி ஸ்நாநம், அந்தந்த ஸூத்ரக்காரர் சொன்னபடி அவச்யம் செய்யவேண்டும். மஹாநதி என்றால் ஸமுத்ரகாமிநதி என்று அர்த்தம். மஹாநதி ஸ்நாநத்தை ஸகல பாபநிவர்த்தகமாக சாஸ்திரங்கள் உத்கோஷிக்கின்றனவாதலால், இதை அநாவச்யமென்று நினைக்கக் கூடாது. ஒருவருஷத்தில் நாம் ஸம்பாதித்திருக்கிற பாபமூட்டைகளை மஹாநதியில் கரைத்துவிடலாம்.

[illegible] த்துக்கொண்டு நூதனயக்ஞோபவீதத்தைப் போட்டுக்கொள்ளவேண்டும். பிரும்மசாரிகள் க்ஷவரத்திற்காக போட்டுக்கொள்ளப்பட்ட யக்ஞோபவீதத்தைத் தவிர வேறு யக்ஞோபவீதம் தரித்துக்கொள்ளவேண்டும் இதன்றி மௌஞ்ஜீ, கிருஷ்ணாஜினம், தண்டம் இவற்றை மந்திர பூர்வகம் ஸ்வீகரித்துக் கொள்ள வேண்டும்.

இதன் பிறகு உபாகர்மாவிற்கு அங்ககர்மாவான காண்டரிஷி தர்ப்பணம் செய்யவேண்டும். இந்த ஒன்பது ரிஷிதர்ப்பணத்தையும், நிவீதியாய் ரிஷிதீர்த்தத்தால் ஒவ்வொரு ரிஷிக்கும், 3 தடவை செய்யவேண்டுமென்று பிரயோகத்தில் சொல்லியிருக்கிறது. பிரும்மயக்ஞத்திலோ வென்றால் ரிஷிதர்ப்பணம் 2 தடவைதான். ஒவ்வொரு ரிஷிக்கும் விஹிதமாயுள்ளது.

प्रजापतिमुखानां हि प्रत्येकं त्रिस्तिलोदकं ।
उद्धृत्य तर्पणं कुर्युः श्रावण्यां तैत्तिरीयकाः ॥

என்ற ஸ்மிருதி வசனம் மேற்கண்ட வியவஸ்தைக்கு ஆதாரமாயிருக்கிறது.

காண்டங்களைக் கண்டுபிடித்த முனிவர்களுக்கு காண்டரிஷிகளென்று நாமதேயம். காண்டரிஷிகளுக்குத் தர்ப்பணமிருப்பதுபோல் ஹோமமும் உண்டு. வேதாத்யயன காலத்தில் வேதத்ரஷ்டாக்களான மஹரிஷிகளை ஹோம தர்ப்பணங்களால் திருப்தியடையச் செய்வது பொருத்தமானதே.

பிறகு ஸங்கல்ப பூர்வகம் உபாகர்ம ஹோமம் சாந்திவாகாந்தம் செய்யவேண்டும்.

ஆசார்யரால் தனக்கும், தன் சிஷ்யர்களுக்குமாக இந்த ஹோமம் செய்யப்படுவதால் சிஷ்யர்கள் ஆசார்யரை அன்வாரம்பம் (தொட்டுக்கொண்டு) செய்துகொண்டு இருக்கவேண்டுமென்பது முக்யவிதி.

ஜயாதி ஹோமாந்தம் செய்தவுடன், வடக்குத்திக்கிலோ, ஈசான்யதிக்கிலோ அரிசியின் மேல் கும்பம் வைத்து அதில் வருணனையும் ஸபரிவாரமாக வேதவ்யாஸரையும் ஆவாஹநம் பண்ணி, ஆஸநாதி பூஜைகளைச்செய்து ஆசார்யரும், சிஷ்யர்களும் நமஸ்காரம் செய்யவேண்டும். பிறகு ஆசார்யர், தர்ப்பபாணிகளான சிஷ்யர்களுக்கு, தன் சாகையின் ஆரம்பத்தில் 4 அநுவாக பர்யந்தம் சொல்லிக் கொடுக்கவேண்டும். தன் சாகையை முதலில் ஆரம்பிக்காமல் அன்ய சாகையை முதலில் ஆரம்பிப்பது ச்ருதி ஸ்மிருதி விருத்தமானதால் உபாத்யாயர்கள் அவ்விதம் செய்யலாகாது.

பிறகு, 'பிருஹ்ம ஸந்தத்தம்' 'பத்ரம் கர்ணேபி:' 'ஸம்ஞானம்' 'ப்ராஸாங்மந்தா' 'அதகர்மாணி' 'அதாதோ தர்சபூர்ணமாஸௌ வ்யாக்யாஸ்யாம:' 'அதாதஸ்ஸாமயாசாரிகாந்' 'அக்நிமீளே' 'அக்ந ஆயாஹி' 'சந்நோதேவீ:' 'அதி உண் வர்ணஸமாம்நாய' 'பூர்ண: ச்ரேய:' 'அதாதோ தர்மஜிஜ்ஞாஸா' 'அதாதோ ப்ரும்ஹஜிஜ்ஞாஸா,' என்ற க்ரமத்தில், வேத வேதாந்தங்கள் யாவையும் ஆரம்பம் செய்விக்கவேண்டுமாய்

इषे त्वा, ब्रह्मभद्रं च संज्ञानं मन्त्र गृह्यके ।
श्रौतं च धर्मो वेदाश्च लक्षणं प्रातिशाख्यगीः ॥
कर्मशास्त्रं ज्ञानशास्त्रं इत्यत्र क्रमशो विदुः ॥

என்ற ப்ராசீநகாரிகாவசனத்தால் தெரிகிறது.

இப்படி வேதாரம்பத்தின் இறுதியில் எல்லோரும் நமஸ்கரிக்கவேண்டும். பிறகு ப்ராணீதாமோக்ஷணமும் அக்னி யுபஸ்தானமும், செய்து ஹோமத்தை முடிக்கவேண்டும்.

கும்பத்திலிருந்து வருணனையும் ஸபரிவார வேதவ்யாஸரையும் யதாஸ்தானம் பண்ணி, அந்த தீர்த்தத்தை யாவரும் ப்ராசநம் செய்ய வேண்டும். பின்பு, ஆசார்ய ஸம்பாவனமும், ஆசீர்வாதமும் நடத்திவிட்டு வேதகோஷத்துடன் கோஷ்டியாய் ஆலயதர்சனம் செய்துகொண்டு ஆசார்யரும் சிஷ்யர்களும் அவரவர் கிருஹத்திற்குச் செல்லவேண்டும்.

இவ்வுபாகர்ம தினத்தில்

श्रावण्यां पौर्णमास्यां तिलभक्षउपोष्य

என்று ஆபஸ்தம்பர், தர்மஸூத்ரத்தில் (காயத்ரீஜபாங்கமாக) உபவாசம் விதித்திருக்கிறார்.

காயத்ரீஜபம்.

மறுநாள் காலையில் ஸ்நாநாதி நித்யகர்மா முடிந்தவுடன், பிரும்மசாரிகள் ஸமிதாதனமும் செய்தவுடன் காயத்ரீஜபகர்மாங்கமாக, ஸங்கல்பபூர்வகம் மஹாநதிஸ்நாநம் செய்ய வேண்டும். வஸ்திரம், புண்ட்ரம் முதலியவற்றைத் தரித்துக்கொண்டு 1008 தடவை காயத்ரீ மந்திரத்தால் அக்நியில் 1008 ஸமித் ஹோமம் செய்யவேண்டும்.

காயத்ரீ மந்திர ஸமிதானம் செய்ய சக்தியில்லாமல் போனால் காயத்ரீ மந்திரத்தை 1008தடவை ஜபமாவது செய்யவேண்டும்: இந்த கர்மாவுக்குப் பிரயோஜன மென்னவென்ற சங்கையை இதன் ஸங்கல்பமே அகற்றிவிடுகிறது. இந்த கர்மாவின் ஸங்கல்பத்தில் 'மித்யாத்யயநதோஷம்' (பொய்யான முறையில் அத்யயனம் செய்ததோஷம்) 'ஸம்வத்ஸரதோஷம்' 'அபதநீயதோஷம்' இம்மூன்று தோஷத்தையும் விலக்கிக் கொள்வதற்காகவென்று காணப்பட்டிருக்கிறது. இதுவே இதற்குப்பிரயோஜனம், மித்யாத்யயன தோஷத்தில் அத்யயனம் பண்ணாமலிருந்த தோஷமும் சேரலாம். ஸர்வபாப ப்ராயச்சித்தமாயுள்ள இந்த கர்மாவை ஸமிதாதான ரூபமாகச் செய்யமுடியாவிட்டாலும் ஜபாவிருத்தி ரூபமாகவாவது அவச்யம் செய்வது ஆஸ்திகர் கடமையாகும். பிரும்மக்ஞானியைத் தவிர மற்றவர்களுக்குப் பாபஸம்பந்த

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ நாரதபக்தி ஸூத்ரங்கள்

(திவான்பஹதூர் ராமஸ்வாமி சாஸ்திரியாரின் மொழிபெயர்ப்பு)

(முன் வாரத்தொடர்ச்சி.)

नास्त्येव तस्मिंस्तत्सुखसुखित्वम् ॥ २४ ॥

அத்தகையக் கள்ள விருப்பத்தில் தலைவனுடையவோ தலைவியுடையவோ இன்பத்திலே மட்டும் நோக்கம் இருக்காது.

(உலகத்தில் காணும் விருப்பங்களில் யாவரும் தன் இன்பத்தையே விரும்பி நாடுகிறார்கள். அன்பின் பாத்திரமான பொருளின் சுகத்தை நாடி தன்னை மறந்திருக்குந் தன்மை அறிது. பரமனிடத்தில் செலுத்தும் அன்பு சுயநலத்தை மறந்து அவன் பெருமையே புணர்ந்து அவனையே நினைந்துருகும் தன்மை உள்ளதாக இருக்கவேணும். பரமனுக்கு மனம் எப்பொழுது களிக்கும்? அவனுடைய குழந்தைகளான எல்லோரிடத்திலும் அன்பு பாராட்டவேணும். அவனையே ப்ரேமையுடன் நாடவேணும். நம்மை மறந்து அவனையே நினைத்து தியானம் செய்யவேணும். அப்பொழுது தான் அவன் மனம் களிக்கும்).

सा तु कर्मज्ञानयोगेभ्योप्यधिकतरा ॥ २५ ॥

25. பக்தியானது ஞான, காம், யோகங்களைக் காட்டிலும் உயர்ந்தது.

फलरूपत्वात् ॥ २६ ॥

29. ஏனென்றால் அதுவே அடையும் பயனாக இருப்பதால்.

ईश्वरस्याप्यभिमानिद्वेषित्वाद्दैन्यप्रियत्वाच्च ॥ २७ ॥

27. பரமனுக்கு சுயநலமுள்ளவர்களிடத்தில் வெருப்பும் ஏழைகளிடத்தில் விருப்பமும் இருப்பதால்.

(ஏனைய புண்யமார்க்கங்களில் தான் பெரியவன் என்ற உணர்ச்சி வந்தாலும் வரலாம். ஆனால் பக்திமார்க்கத்திலோ அது வரவே வாராது. தன்னை அடக்கி சுயநலம் அற்று இருத்தலே அதன் உயிர்நிலையாகும். இதுவுந்தவிற மற்ற மார்க்கங்களால் கிடைக்கக்கூடிய இன்பம் அன்பின் உருவாக இருப்பதால் அன்பே எல்லாவற்றிலும் உயர்ந்தது).

तस्य ज्ञानमेव साधनमित्येके ॥ २८ ॥

28. சிலர் பக்திக்கு ஞானம் காரணம் என்று சொல்லுகிறார்கள்.

अन्योन्याश्रयत्वमित्यन्ये ॥ २९ ॥

29. சிலர் பக்தியும் ஞானமும் ஒன்றுக்கொன்று ஆதாரமாக சொல்லுகிறார்கள்.

स्वयं फलरूपतेति ब्रह्मकुमारः ॥ ३० ॥

30. நாரதர் பக்தி தனக்குத்தானே பயன் என்று சொல்லுகிறார்.

(அன்பே ஆனந்தமாதலால் அன்புக்கு வேறுபயன் சொல்வது தகாது. அதற்கு அதேபயன்.

राजगृहभोजनादिषु तथैव दृष्टत्वात् ॥ ३१ ॥

31. அரசனுடைய அரண்மனை உணவு முதலியவைகளில் அப்படியே காணப்படுகிறது.

न तेन राजपरितोषः क्षुच्छान्तिर्वा ॥ ३२ ॥

32. அவைகளால் அரசனுக்கு ஆனந்தமாவது பசியாறுதலாவது கிடையாது.

(கர்மயோக ராஜயோக ஞானயோகங்கள் பரமனுக்குக் கொடுக்கக்கூடிய ஆனந்தங்களைக் காட்டிலும் பக்தியோகத்தால் பரமனுக்கு உண்டாகும் ஆனந்தமே அதிகம். கர்மயோகிகள் அரசனுடைய பணிசெய்யும் ஆள்கள். ஞானயோகிகள் அரசனுடைய அந்தப்புரம் காப்பாளிகள். இப்படி அரசனுடைய வேலைகளை செய்யப்பட்டவர்களுக்கு சில சமயங்களில் அகங்காரம் வந்தாலும் வரும். ஆனால் பக்தியோகத்திலீடுபட்டவர்கள். சுயநலமற்று அகங்காரத்தால் தீண்டப்படாமலிருப்பவர்கள். அவர்களிடத்தில்தான் பரமனுக்கு ப்ரேமை அதிகம்.

தவிர, அரசனுடைய அரண்மனையை கண்டால்மட்டும் எப்படி அரசனுக்கு சந்தோஷம் ஏற்படாதோ அதுபோல பரமன் படைத்திருக்கும் உலகங்களை அறிந்து அவைகளை நடத்தினால் மட்டும் பரமனுக்கு ஆனந்தம் உண்டாகுமா? அவரை யல்லவா விரும்பி தேடவேணும். உணவைப்பார்த்தால் உள்ளங்களிக்குமா? உணவை உட்கொண்டால் அல்லவா பசி ஆறி களிப்புண்டாகும்.

तस्मात् सैव ग्राह्या मुमुक्षुभिः ॥ ३३ ॥

33. ஆகையால் மோக்ஷத்தை விரும்புகிறவர்களால் பக்தியையே கடைப்பிடிக்கவேணும்.

तस्याः साधनानि गायन्त्याचार्याः ॥ ३४ ॥

34. பக்தியின் சாதனங்களை ஆசார்யர்கள் சொல்லுகிறார்கள்.

तत्तु विषयत्यागात् सङ्गत्यागाच्च ॥ ३५ ॥

35. அது விஷயங்களையும் பற்றுதலையும் விடுதலால் உண்டாகும்.

अव्यावृत्तभजनात् ॥ ३६ ॥

36. இடைவிடாத பஜனத்தால் உண்டாகும்.

लोकेऽपि भगवद्गुणश्रवणकीर्तनात् ॥ ३७ ॥

37. உலகத்தில் பரமனுடைய குணங்களைக் கேட்டுத் தொழுதலால் உண்டாகும்.

मुख्यतस्तु महत्कृपयैव भगवत्कृपालेशाद्वा ॥ ३८ ॥

38. முக்யமாக பெரியோர்கள் கிருபையாலாவது அல்லது பரமனுடைய துளி கிருபையாலாவது உண்டாகும்.

महत्सङ्गस्तु दुर्लभोऽगम्योऽमोघश्च ॥ ३९ ॥

39. பெரியோர்களின் சேர்க்கையோ கிடைப்பது அரிது, தேடுவது அரிது, பயனுள்ளது.

लभ्यतेऽपि तत्कृपयैव ॥ ४० ॥

40. அதுவும் பரமன் கிருபையால்தான் கிடைக்கும்.

तस्मिंस्तज्जने भेदाभावात् ॥ ४१ ॥

41. பரமனுக்கும் பரமனுடைய பக்தர்களுக்கும் வேற்றுமை இல்லை.

तदेव साध्यतां तदेव साध्यताम् ॥ ४२ ॥

42. அதையே அடையவேணும், அதையே அடையவேணும்.

(ஆகையால் பக்தியைப் பெறுவதற்கு பரமனுடைய அனுக்ரகம் வேணும். அதனால்தான் ஆசார்ய தர்சனம் கிடைக்கும். உலகப்பற்று குறைந்து அவனுடைய குணங்களைக்கேட்டுத் தொழுது அவனை பஜனை பண்ணினால் பரமனிடத்தில் பக்தி பெருகும்).

दुःसङ्गः सर्वथैव त्याज्यः ॥ ४३ ॥

43. கெட்டவர்களின் பழக்கத்தை அறவே ஒழிக்கவேணும்.

कामक्रोधमोहस्मृतिभ्रंशबुद्धिनाशसर्वनाशकारणत्वात् ॥ ४४ ॥

44. அது காமத்துக்கும், கோபத்துக்கும், மோகத்துக்கும், நினைவு மறதிக்கும், புத்தியின் அழிவுக்கும், முழு அழிவுக்கும் காரணமாயிருப்பதால் அதை விடவேணும்.

तरङ्गायिता अपीमे सङ्गात् समुद्रायन्ति ॥ ४५ ॥

45. அவைகள் சிறிய அலைகளாகத் தொடங்கினாலும் சேர்க்கையால் பெரிய கடலாகிவிடும்.

(பகவத் கீதை இரண்டாவது அத்யாயத்தில் 62-63 செய்யுட்களில் இதையே பகவான் சொல்லி இருக்கிறார். அதையே நாரதர் ஸூத்திரமாக அமைத்திருக்கிறார்)

कस्तरति कस्तरति मायां ? यः सङ्गं त्यजति यो महानुभावं
सेवते निर्ममो भवति ॥ ४६ ॥

46. எவன் மாயையை தாண்டுகிறான்? எவன் மாயையை தாண்டுகிறான்? எவன் கெட்ட சேர்க்கையைவிட்டு பெரியோரை வணங்கி ஆசையற்று இருக்கிறானே.

यो विविक्तस्थानं सेवते यो लोकबन्धनमुन्मूलयति
निस्त्रैगुण्यो भवति यो योगक्षेमं त्यजति ॥ ४७ ॥

47 எவன் கூட்டமில்லாததும் தனித்திருக்கும் தன்மையுள்ளதுமான இடத்தை நாடுகிறானோ எவன் உலகப்பற்றை அறுக்கிறானோ எவன் முக்குணங்களிலிருந்து நீங்குகிறானோ எவன் வரவு சிலவுகளில் ஈடுபட்டிருப்பதை விடுகிறானோ.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-ஞு ஆடி-மீ 14உ

முதல் மந்திரியின் ஸம்ஸ்கிருதபாஷாபிமானம்.

சென்னை லயோலா காலேஜ் ஸம்ஸ்க்ருத ஸங்கத்தில், முதன் மந்திரி ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியர் செய்த ப்ரஸங்கமொன்றில் நமது தெய்வ பாஷையான ஸம்ஸ்க்ருதத்தைப் பற்றி மிகவும் புகழ்ந்து பேசியிருக்கிறார். இக்காலத்தில் தெய்வம், மதம், பாஷை, நாகரிகம், ஆகிய எல்லாம் ஒரு மனிதன், அல்லது கூட்டத்தாருடைய புகழ்ச்சி இகழ்ச்சிக் கூற்றுக்களை ஆதாரமாகக்கொண்டே கவனிக்கப்படுகிறவைகளாய் இருப்பதால், பெரிய காங்கிரஸ் தலைவரும் மாகாணத்தின் பிரதான நிர்வாஹியாயுமுள்ள கனம் ஆசார்யரின் இந்தப் புகழ்ச்சியானது அந்த பாஷைக்குப் புதிய ஒரு மேன்மையை உண்டு பண்ணுவதாக நினைப்பவர் பலர் இருக்கக்கூடும். நாம் அப்படி நினைக்காவிட்டாலும் ஸ்ரீமான் ஆசாரியர் ஸந்தர்ப்பம் ஏற்பட்டபோது தமது அனுபவபூர்வமாக ஏற்பட்ட உண்மையான அபிப்பிராயத்தைப் பலரும் அறியும் நோக்கத்துடன் பேசியிருக்கிறதாகவே நினைக்கவேண்டும். "ஸம்ஸ்க்ருதம் மிகவும் அழகான பாஷையென்றும், அதனால்தான் அதை தேவ பாஷை என்று சொல்வது பொருத்தமாயிருப்பதாயும், பாரத தேசத்தின் புராதன நாகரிகத்தை ஸம்ஸ்க்ருதபாஷையின் மூலமாகத் தான் அறியமுடியும் என்றும், கலாசாலைகளில் ஸம்ஸ்க்ருதம் படிக்காமல் வெளிவருகிறவர்கள் இந்திய நாகரிக பொக்கிஷம் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியின் திறவுகோலை இழந்தவர்களாவார்கள் என்றும் வெகு நேர்த்தியாகவும், உண்மையாகவும் பேசியிருக்கிறார். அவருடைய வார்த்தைகளை ஊன்றிக்கவனித்தால், கேவலம் ஸமயோசிதமாக ஸ்துதி செய்யவேண்டுமென்கிற எண்ணத்துடன் பேசியிருப்பதாக நினைக்க இடமில்லை. இவ்வளவு உறுதியாக அவர் வெளியிட்ட அபிப்பிராயம் காரணமாக ஒரு பிரிவினரால் அவர் தூற்றப்படவும் கூடும் என்று நினைக்கிறோம். அவர் வகித்துவரும் பதவியில் குற்றங் குறைகளை வெளியிடுவதற்கென்றே ஏற்பட்ட சிலர் இதையும் ஒரு வகுப்பு விஷயமாக வம்பளக்க முன் வருவார்கள். இது தெரிந்திருந்தும் கனம் ஆசாரியர் சிறிதும் தயங்காமல் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டதற்கு நாம் அவரைப் பாராட்டவேண்டியதே. ஸ்ரீமான் ஆசார்யர் ஸம்ஸ்க்ருத பாஷையைப்புகழ்ந்ததைக்கொண்டு இதர பாஷைகளின் சிறப்பை அவர் ஏற்கவில்லை என்று அர்த்தமாகாது. தென்னிந்தியாவைப் பற்றினவரை, சைவவைஷ்ணவ பெரியோர்கள் இத்தேசபாஷையின் சிறப்பையும் வெளியிட்டு அதை ஆதரித்து அபிவிருத்தி செய்து வந்திருப்பதை இச்சமயம் மறக்கலாகாது.

ஸ்ரீமான் ஆசாரியாருடைய பேச்சில் காணப்படும் ஒவ்வொரு எழுத்தும் ஸம்ஸ்கிருத பாஷையின் சிறப்புக்கு ஏற்றதே என்பதில் ஸந்தேஹம் வேண்டியதில்லை. இப்பாஷையின் மேன்மையை அறியாத சிலர் இதை 'இறந்த பாஷை' என்று சொல்லித் தங்களது அஸூயையை வெளிக்காட்டிக்கொண்டபோதிலும் இன்று உலகில் எல்லா நவீன நாகரீக தேசங்களிலும் உயிருடன் வாழ்ந்துவரும் ஓர் உலக பாஷையாகவே இது விளங்கிவருவதை மறுக்க முடியாது. நம் தேசத்தில் இது சில காலம் தேசபாஷையாக இருந்துவந்ததையும், இந்த பாஷையில், ராஜ்யம், பொருளாதாரம், நீதி, மதம், வைத்தியம், சில்பம், விஞ்ஞானம் போன்ற ஒன்று பாக்கியில்லாது ஸகல கலைகளும் அடங்கியிருப்பதை அறிந்தே தற்கால உலகினர் யாவரும் இதைப்போற்றி வளர்க்கத் தம் தேசங்களில் பெரிய முயற்சி செய்திருப்பதையும் பார்க்கிறோம். இந்தபாஷையின் உதவியால் நவீன விக்ஞானிகள் அடைந்த நன்மைகளும் பலபல. இத்தகைய மஹோன்னத பாஷைக்கு அன்னிய தேசங்களில் அபரிமிதமான ஆதரவுகாட்டப்பட்டு வருகையில், அதன் பிறப்பிடமாகிய பாரத தேசத்தில் அது எவ்வளவு தூரம் கௌரவிக்கப்படுகிறது? இதைநினைக்கும்போதுதான் இந்தியர்கள் யாவரும் தலைகுனிந்து வருந்தவேண்டிய நிலைமையிலேயேஇருக்கின்றோம். பாஷாபிவிருத்திக்காகக் கணக்கற்ற பணச்செலவு செய்யும் சர்வகலாசாலைகளில் பாஷா பக்ஷபாதம் காட்ட முடியவில்லையென்ற சாக்குப் போக்குச் சொல்லி ஸம்ஸ்கிருத பாஷை நன்கு ஆதரிக்கப்படவில்லையென்பது தெரிந்தவிஷயம்.

நமது மாகாணத்தில் இதுகாறும் கல்வி இலாகா நிர்வாஹம் நடத்திவந்த வகுப்புவாதக் கக்ஷியார் ஸம்ஸ்கிருத பாஷையையும் ஒரு வகுப்பு பாஷையாகவே நினைத்து அதனை அலக்ஷியம் செய்யவும், அதன்மீது அஸூயைப்படவும் முற்பட்டார்கள்.

பனகால் ராஜா ஆட்சி நடந்துவந்த காலத்தில் இந்த ஸம்ஸ்கிருத பாஷாத்வேஷம் எப்படி நர்த்தனமாடியதென்பதைப் பலர் மறந்திருக்கமாட்டார்கள். 1925ல் கீழ்திசை பாஷை ஆராய்ச்சிக்காகஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தவேண்டுமென்று சென்னை சர்வகலாசாலையில் யோஜனை நடந்தபோது திவான் பகதூர் ராமஸ்வாமி முதலியார் ஸம்ஸ்கிருத பாஷையை பலமாகத் தாக்கி இது "இறந்த பாஷை' என்றும் எவ்வித உதவியும்செய்ய வேண்டியதில்லை யென்றும் பேசவில்லையா? அப்போது ஸபையில் வீற்றிருந்த அவரது கக்ஷிமெம்பர்கள் கரகோஷம்செய்து ஆனந்த பரவசமடையவில்லையா? "ஆந்திர சர்வகலாசாலை" என்ற சொற்றொடரில் "ஆந்திர" என்ற பதமானது வடமொழியாயிருப்பதால் அதை நீக்கிவிடவேண்டுமென்றும் ஒரு பிரேரபணை நடக்கவில்லையா! அத்தகைய ஸர்வகலா ஸ்தாபனத்தின் நிர்வாஹம் கனம் ஆசாரியருடைய மந்திரிசபையிடம் இப்போது வந்திருப்பதால் அவர் ஸம்ஸ்கிருத கிருத பாஷையின் அபிவிருத்திக்காக எவ்வளவோ கார்யங்களைச் செய்யலாம் ஸம்ஸ்கிருத பாஷையை எங்கும் கட்டாயபாடமாக செய்வதுடன், அதிலுள்ள அபூர்வ விஷயங்களை ஆராய்ச்சிசெய்ய தனியாக ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்துவதும் விரும்பத்தக்கதாம்.

ஸம்ஸ்க்ருத பாஷையை விருத்தி செய்ய வேண்டுமானால் அப்பாஷை அறிந்த உண்மையான பண்டிதர்களை ஸர்க்கார் பல வழிகளிலும் ஆதரிக்கவேணும். இப்போது மற்ற உபாத்தியாயர்களை விட பண்டிதர்களின் நிலைமை மிகவும் கீழ்ப்பட்டதாய் இருப்பதை கல்விஇலாகா முதலில் கவனிக்க வேண்டும்:

மேலும் தற்கால யூனிவர்ஸிடிப் பட்டம் பெறாமல் பிராசீன ரீதியில் படித்துப் பிரசித்தி அடைந்துள்ள பண்டிதமணிகள் பலர் ஆங்காங்கு இருந்து வருகிறார்கள். அவர்களுடைய சிறந்த ஞானத்தையும் அநுபவத்தையும் ஸர்வகலாசாலையார் உபயோகித்துக் கொள்வதும் மிக்க அவசியமாகும். இக்காலத்தில் வழங்கப்படும் கீழ்த்திசை பாஷை பட்டங்கள் வெறும் பகட்டாக இல்லாமல் உண்மையான யோக்யதைகளை வெளியிடக் கூடியவைகளாயிருக்க வேண்டும்.

ஸ்ரீமான் ஆசாரியர் மந்திரிபதவி ஏற்றதும் தமது ஸம்ஸ்க்ருத பாஷாபிமானத்தை காட்டிக் கொண்டது ஸந்தோஷிக்கத் தக்கது ஆயினும் இது வெறும் புகழ்ச்சியோடு மட்டும் நிற்காமல் எல்லோருடைய மனதையும் கவரத்தக்க வழியில் கார்யத்திலும் காட்டப்படுமென்று நம்புவோம்.

குறிப்புகள்.

எம். ஸி. ராஜா மசோதா வந்துவிட்டது

தாழ்ந்த வகுப்பாரின் அசௌகர்யங்களை நிவிர்த்திசெய்வதற்கென்று இந்திய சட்டசபையில் எம். ஸி. ராஜா ஒரு மசோதா கொண்டுவந்திருந்தது நமது வாசகர்கள் அறிந்ததே. ஸ்ரீமான் ராஜா இப்போது சென்னை சட்டசபையை அலங்கரிக்க வந்துவிட்டதால் தமது அந்த மசோதாவையும் இவ்விடத்திற்கு அழைத்துவிட்டார்.

சென்னை சட்டஸபையில், தாழ்ந்த ஜாதியாரின் அசௌகரிய நிர்விருத்தி மசோதா ஒன்றைக்கொண்டுவரப்போவதாக நோட்டீஸ் கொடுத்துவிட்டார். இதன் மூலம் அவர் தமது பிரஸித்தியைப் பெருக்கிக்கொள்ள விருப்புவதுடன் காங்கிரஸ் மந்திரிகளையும், காங்கிரஸ் மெம்பர்களையும் தர்மஸங்கடத்தில் மாட்டிவிட நினைத்திருக்கலாம். காங்கிரஸ் எலக்ஷன் அறிக்கையிலுள்ள விஷயங்களைக் கூடியவரையில் நிறைவேற்றவே மந்திரிகள் திட்டம்போடக் கூடும். ஆயினும் ஸ்ரீமான் ராஜாவிற்கும், காங்கிரஸ்வாதிகளுக்கும் இப்போது ஏற்பட்டுள்ள தகராறு ஸந்தர்ப்பத்தில் இந்த மசோதாவை அவர் குறுக்கே விட்டடித்து காங்கிரஸ்காரரின் மனப்போக்கைச் சோதிக்கவும், பொது ஜனங்களுக்கு காங்கிரஸ்வாதிகளிடம் அதிருப்தி உண்டு பண்ணிவிடவும் இந்த மசோதாவை அவர் ஒரு கருவியாகக்கொண்டிருக்கிறாரோ வென்று ஸந்தேஹிக்கவேண்டியிருக்கிறது. இல்லையேல் இதற்குள் இவர் இவ்விஷயத்தில் இவ்வளவு அவசரம்காட்டவேண்டிய அவச்யமென்ன?

இந்த மசோதா பொது ஸ்தலங்களில் தீண்டாமை பாராட்டக் கூடாதென்று சொல்லுவதால் காங்கிரஸ்வாதிகள் இதை ஆதரிப்பதில் சற்றும் தயங்கமாட்டார்கள் என்றே நினைக்கலாம். ஆதலால் இந்த மசோதா சட்டசபையில் அதிகக் கஷ்டமில்லாமல் நிறைவேறிவிடுமென்றே எதிர்பார்க்கலாம். தற்கால சட்டசபையின் அமைப்பை அறிந்தவர்களுக்கு இதில் ஆச்சர்யமோ வருத்தமோ நேரக்காரணமில்லை.

ஏற்கனவே சென்னை லோகல் போர்டுசட்டங்களில் இம்மாதிரி பிரிவு ஒன்று சேர்க்கப்பட்டு அநுஷ்டானத்தில் இருந்து வருகிறது. பொது ரஸ்தாக்கள், பொது ஸ்தலங்களாகியவற்றில் தீண்டாதாரைத் தடை செய்பவர்களுக்குத் தண்டனை விதிக்கும்படி ஏற்பட்டு இருக்கிறது. அதன்படி இப்போது தீண்டாதார் ஸ்வச்சந்தமாயும், சலுகையுடனும் எங்கும் நடமாடத் தடையில்லை. ஆதலால் ராஜா மசோதாவினால் புதியநிலைமை ஒன்றும் ஏற்பட்டு விடாது. ஆனால் கோர்ட்டுகளில் வரும் வழக்களில் தீண்டாமையை ஒரு காரணமாகக் காட்டித் தீர்ப்புக் கூறுவதையும் நிறுத்திவிட வேண்டுமென்று இந்தியாசட்டசபையில் இவர் கொண்டுவந்துள்ள மசோதாவில் கூறப்பட்டிருக்கிறது. இப்போதும் அந்த அம்சம் மசோதாவில் இருக்கலாம். மசோதாவின் விவரம் கூடியசீக்கிரம் வெளியாகலாம். இதில் தந்திரமாக ஆலயப்ரவேச விஷயமும் புகுத்தப்பட்டிருந்தால் அதற்கும் நாம் சிறிதும் ஆச்சர்யப்பட இடமில்லை. காங்கிரஸ்காரர்கள் என்ன செய்யப்போகிறார்களோ? பொறுத்துப் பார்ப்போம்.

விவாஹரத்தில் விபரீத விளைவு.

இங்கிலாந்தில் அனுஷ்டானத்திலிருந்து வரும் விவாஹரத்துச் சட்டத்தைத் திருத்துவதற்காகக் கொண்டுவரப்பட்டிருந்த மசோதா பார்லிமெண்ட் காமன்ஸ் சபையில் நிறைவேறிவிட்டது. விவாகரத்துச் சட்டத்தால் அங்கு விளைந்துள்ள கணக்கற்ற விபரீதங்களைக் கண்டு தான் இந்த திருத்தமசோதா கொண்டுவரப் பட்டதாகும். தம்பதிகள் விவாஹரத்துச் செய்துகொள்ளுவதற்கு புருஷன், அல்லது ஸ்திரீயினுடைய வியபிசாரம் ஒரு முக்கிய, காரணமாக இருக்கவேண்டும் என்று இதுவரையில் அனுஷ்டானத்தில் இருந்து வருகிறது. இதனால் விவாகரத்து வழக்குக் கொடுப்பவர்கள், வேறு மனஸ்தாபம் காரணமாகக் விவாஹரத்துச் செய்து கொள்வதாயிருந்தாலும் வியபிசாரத்தை ஓர் காரணமாகக் காட்டவேண்டியிருந்தது. உண்மையில் வியபிசாரமில்லாதவர்கள் கூட, கோர்ட்த் தீர்ப்புப் பெறவேண்டிய காரணத்திற்காக வியபிசார தோஷ கற்பனை செய்யவேண்டியிருந்தது. பெரிய கௌரவம் வாய்ந்தவர்கள் கூட விவாகரத்து செய்துகொள்ள வேண்டிய அவச்யம் நேர்ந்தபோது இந்த அவமானத்திற்கு உள்ளாக வேண்டியிருக்கிறது. இதை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன் இம்மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த புதிய மசோதாவின்படி வியபிசாரகாரணத்தையே முக்கியமாக காட்ட வேண்டிய அவச்யம் இனி கிடையாது. பலமான மனஸ்தாபங்கள், அடிதடி வரையில் போகக் கூடிய கலஹம், மீளக் கூடாத சித்தப்பிரமம் ஆகிய காரணங்கள் இருந்தாலும் விவாஹரத்துக் கிடைக்கும்படி செய்யப்பட்டிருக்கிறது.

இந்தப் புதிய மசோதாவினால் இங்கிலாந்தில் விவாகரத்துக் கேஸ்கள் அதிகரிக்க நேருமேயல்லது குறைய நியாயமில்லை. கோர்ட்டில்போய் வியபிசாரத்தை வெளியிட வேண்டியிருக்கிறதே என்ற ஸங்கோசத்தால் பலர் விவாஹரத்துக்குப்போக முன்பு தயங்கக்கூடும். இப்போதோ வென்றால் ஸாதாரண மனஸ்தாபத்திற்குக்கூட விவாஹரத்துக் கிடைப்பதாயிருப்பதால் விவாஹரத்துக் கோர்ட்டுகளுக்கு ஓய்வு ஒழிவு இராது. நினைத்ததற்கெல்லாம் கேஸ் கொடுத்துவிடலாம். மேலும் நல்ல சித்தஸ்வாதீனமுள்ளவர்களைக்கூட சித்தப் பிரமம் பிடித்தவரென்று ருஜூசெய்ய முயற்சிக்கப்படும். இதன் உண்மையை அறிந்துகொள்ள கோர்டுகளுக்கும், டாக்டர்களுக்கும் அதிக வேலை ஏற்படும். தவிரவும் உண்மையாக வியபிசாரமுள்ளவர்கள் அந்தக் காரணத்தினால் பிரிய இஷ்டப்பட்டாலும் அதற்கு இடமில்லாமல் போய் தம்பதிகள் கஷ்டமும் வேதனையும் அடைய நேரலாம்.

ஆனால் விவாஹமாகி மூன்று வருஷங்களுக்குள் விவாஹரத்து மனுக்கொடுக்கக் கூடாதென்று ஒரு நியமம் இந்தப் புதிய மசோதாவில் காணப்படுகிறது. இது சிறிது நல்லதாயினும் சில குறிப்பிட்ட விஷயங்களில் மூன்று வர்ஷத்திற்குள்ளும் விவாஹரத்துச்செய்ய கோர்ட்டுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதிலிருந்து அதன் பிரயோஜனம் குன்றிவிடுகிறது. எப்படியும் இந்த மசோதா இங்கிலாந்தின் விவாஹரத்து அநாகரிகத்தை விருத்தி செய்வதாக இருக்கிறதேயல்லது குறைப்பதாக இல்லை. கோர்டுகளில் வந்து குவியும் விவாஹரத்து வழக்குகள் மூலமாக ஆங்கில ஸ்திரீ புருஷர்களின் ஸன்மார்க்கக் குறைவும் வியபிசாரித்தனமும் வெளிப்பட்டு ஆங்கில ஜாதிக்கு ஏற்பட்டுவந்த ஒரு அவமானத்தை மறைப்பதற்காகவே இந்தமசோதா கொண்டுவரப்பட்டதாகிறதேயல்லது வேறில்லை.

இந்தியாவிற்கு அது வேண்டாம்! வேண்டாம்!!

பார்லிமெண்டில் இந்த மசோதா விவாத காலத்தில் மதாசாரியரான காண்டர்பரி ஆர்ச்பிஷப்பு விவாஹரத்து விஷயமாகக் கிறிஸ்தவ மதத்தின் தத்வத்தை விளக்கினார். பைபிளின் அபிப்பிராயப்படி விவாஹரத்துக்கு ஆதாரமில்லையென்று அவர் வாதித்தார். தவிர விவாஹரத்துச் செய்துகொண்டபின்பு இருவரும் மறுவிவாஹம் செய்துகொள்ள கிறிஸ்தவ மதப்படி அதிகாரம் கிடையாதென்றும் அவர் சொன்னார். ஆதலால் அது கிறிஸ்தவ சாஸ்திரத்திற்கு ஏற்றதில்லையென்று ஏற்படுகிறது. ஆயினும் பிரிடிஷ் ஜனங்கள் இத்துராசாரத்தை ஆசரித்து வருகிறார்கள். விவாஹரத்து அசிங்கமென்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தும் அதை விடமுடியவில்லை. அரச குடும்ப விஷயத்தில் இந்த விவாஹரத்து விஷயத்தை ஆங்கிலப் பொதுஜனங்கள் அங்கீகரிக்கவில்லையென்பதை ஸமீபத்தில் நடந்த பெரிய ஸம்பவத்தால் அறிந்தோம். விவாஹரத்துச் செய்துகொண்ட ஸ்திரீ தங்களுக்கு அரசியாக வருவதை அவர்கள் கண்டிப்பாக ஏற்க மறுத்துவிட்டார்கள். இதிலிருந்து அவர்களுடைய புத்திப்போக்கு இவ்விஷயத்தில் எப்படியிருக்கிறதென்பதை நாம் அறியக்கூடும். இந்த துராசாரத்தைத் தங்கள் நாட்டில் அவர்கள் கசந்துவிழுங்கிவருதாகவே ஏற்படுகிறது.

நாகரிக தேசமாகிய இங்கிலாந்தில் விவாஹரத்து அலங்கோலம் இப்படியிருக்கையில் நமது புண்ய தேசத்திற்கும் இந்த ஆபாஸ வழக்கம் வேண்டுமென்கிற மூடர்களைப்பற்றி நாம் என்னசொல்லுவது? பொறுப்பற்றவர்களும், வியவஸ்தை கெட்டவர்களுமான சில ஸ்திரீகளும் புருஷர்களும் இந்தியாவிற்கும் விவாஹரத்து வழக்கம் வேணுமென்று சொல்லிவருகிறார்கள். அவர்கள் இங்கிலாந்தின் உதாஹரணத்தை விவேகத்துடன் சிந்திப்பது அவச்யம். இப்போது பார்லிமெண்டில் வந்துள்ள திருத்தச்சட்டம், எவ்வளவு கஷ்டத்திற்கும் அவமானத்திற்கும் பிறகு கொண்டுவரப்பட்டிருப்பதென்பதை கவனிக்கவேண்டாமா?

அன்னியர்களின் அநாகரிகம்.

அன்னியர்களின் அநாரிகாசாரத்தின் உண்மைகளை நம்மவர்கள் நன்கு அறிந்துகொள்ளுவதில்லை. அதனாலேயே நம்மவர்கள், பத்திரிகைகளில் வரும் சில பகட்டான ஸமாசாரங்களை நம்பி ஏமாந்துபோகிறார்கள். இங்கிலாந்து முதலிய அன்னிய தேசங்களில் நடக்கும் ஸ்திரீ புருஷர்களுடைய அநாரிக கார்யங்கள் பலவற்றை அவர்கள் இந்தியாவுக்கு அனுப்பாமல் மறைத்துவிடுகிறார்கள். அத்தேசத்தாரைப்பற்றி நாம் வாசிப்பது ஒன்று. அங்கு நடக்கும் அநாகரிக கார்யமோ வேறு. அதை நாம் அறியமுடிவதில்லை. உதாஹரணமாக ஒன்று கூறுவோம். மேற்றிசை தேசங்கள் பலவற்றில் ஞாயிற்றுக்கிழமை வந்துவிட்டால் அது பெரிய அபாயதினமாக கருதப்படுகிறதாம். அன்று குழந்தைகளின் கொலை தினமாக நினைக்கப்படுகிறதாம். அதாவது ஞாயிற்றுக்கிழமை விடுமுறைகளில் ஸ்திரீகள் கணக்கில்லாமல் குடித்து மயக்கத்தால் புரளுவது வழக்கமாம். இதனால் அவர்களுடைய இளங் குழந்தைகள் மீது புரண்டு அக்குழந்தைகள் உயிர்விடநேருமாம். இம்மாதிரி எவ்வளவோ குழந்தைகள் அங்கு இறந்து போவதாக நாம் பத்திரிகைகளில், படிக்கிறோம். இது என்ன நாகரிகம்? இம்மாதிரி கணக்கற்ற அநாகரிகம் அத்தேசங்களில் உண்டு. ஆகையால்மேற்றிசையாரின்செய்கையென்றால் அப்படியே அது சிறந்த நாகரிகமென்றுநாம்நினைத்துவிடமுடியாது. விவாஹரத்து விஷயமாக மனித ஸமூஹம் தலைகுனியக் கூடிய எவ்வளவு விகாரமான ஸம்பவங்கள் அத்தேசங்களில் ஏற்படுகின்றனவென்பதை நம்நாட்டுச் சீர்திருத்தவாதிகள் கவனித்தார்களா? துரோஹ சிந்தையையே அடிப்படையாகக் கொண்டதும், தாம்பத்யரஸம், குடும்ப தர்மம் முதலிய ஸகல நன்மைகளையும் நாசமாக்கி மிருகப் பிராயமான நிலைமையைக் கொடுக்கக்கூடியதுமான இந்த ஆபாஸ வழக்கம் நமது தர்மதேசத்திற்கு வேண்டுமா?

ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீ மடம் வியாஸ பூஜா மஹோத்ஸவம்.

ஸ்ரீமடம் முகாம் மானேஜர் எழுதுகிறார்:—நாளது ஈசுவரஞு ஆடிமீ 8உ (23-7-37) ஆஷாட பூர்ணிமை சுக்கிரவார தினம் முதற்கொண்டு இவ்வருஷத்திய வியாஸபூஜாமஹோத்ஸவம் சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் முதலியவைகளையும் அது முதல் வழக்கம்போல் வித்வத் ஸதஸ் முதலானதையும் கோதாவரீ தீர ப்ராந்தியம் பாலகொல்லு என்கிற க்ஷீரா ராம க்ஷேத்திரத்தில் (Palokol, a Ry. Station on the Nidadavolw Nousapur branch line M. S. M. Ry) ஸ்ரீ ராமலிங்கேசுவர ஸ்வாமி ஸந்நிதியில் நடத்துவதாக நிச்சயமாகி இருக்கிறது.

மூகபஞ்ச சதீ

காலஞ்சென்ற ஸ்ரீமான் ஜீ. வி. கணேச அய்யர் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு பிரசுரமாகிவந்த மூகபஞ்ச சதீயில் முதல் பாகமான ஆர்யாசதகம் நமது பத்திரிகையில் பூர்ணமாக வெளிவந்துவிட்டது.

இதற்கு மேல்பாகமாகிய கடாக்ஷ சதகத்திற்கும் ஷை கணேசய்யரவர்களாலேயே ஏற்கனவே எழுதிவைக்கப்பட்டிருந்த மொழிபெயர்ப்பும் நமக்குக் கிடைத்திருப்பதால் அடுத்தவாரம்முதல் நமது பத்திரிகையில் அது பிரசுரிக்கப்படுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஸ்ரீஜகத்குரு
விஜயபூஜா முகாம்

Palokol
(க்ஷீராராம க்ஷேத்திரம்.)
West Godavary Dt.

வைதிக தர்மஸங்கம்.

தமிழ்நாடு வைதிக தர்ம ஸங்கத்தின் ஆதரவில் தேச ஸங்கமகாநாடு 19-7-37 முதல் 24-7-37 சனிக்கிழமை வரையில் செங்கற்பட்டு நியமாத்யயன வேதபாடசாலை புதிய கட்டிடத்தில் வெகு உத்ஸாகத்துடன் நடைபெற்றது. ஸ்ரீ பரமஹம்ஸகூஷ ஸன்யாசிகளான ஸ்ரீ சிவபிரகாச ஆனந்தகிரிஸ்வாமிகள் அக்ராஸனம் வகித்தார்கள். 19-7-37 திங்கட் கிழமை காலை 10-க்கு அக்ராஸனாதிபதி அவர்களுக்கு பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களால் பகல் 4-மணிக்கு ஒரு ஸ்வாககப் பத்திரமும் வரவேற்பு பிரசங்கமும் செய்தார். ஹனுமத்வஜ ஆரோகணம் நடைபெற்றது, 2*-7-37 செவ்வாய்கிழமை முதல்சனிக்கிழமை வரை முன்னம் ஆர்யதர்மம் பத்திரிகையில் அறிவித்தபடி பல ஊர்களிலிருந்து அனேகவித்வான்களும்,சென்னைமாகாணவர்ணாச்ரமஸ்வராஜ்யஸங்க கார்யதரிசிமகா-௱-ஸ்ரீ டி. எஸ். ராமஸ்வாமி அய்யர், கும்பகோணம் அட்வகேட்களான மகா-௱-ஸ்ரீ எஸ். மகாலிங்கய்யர் முதலிய லௌகிகர்களாலும் உபந்யாஸங்கள் நடைபெற்றன. 23-7-27 இந்த 6-நாட்களிலும் வேதபாராயணங்களும் சில வைதிகமான ஸ்ரீ ஸூக்தம் முதலிய ஹோமங்களும் நடைபெற்றன. வெள்ளிக்கிழமை ஸ்ரீ வியாஸபூஜா, சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மகோத்ஸவங்கள் ஸ்ரீ பரமஹம்ஸ ஸன்யாஸிகளால் நடத்தப்பட்டது. இந்த மகோத்ஸவத்திற்கு உள்ளூர், வெளியூர்களிலிருந்து ஆஸ்திகர்கள் ஏராளமாய் விஜயம் செய்திருந்தார்கள். இவ்வூர் ஜில்லா முன்ஸீப் மகா-௱-ஸ்ரீ M. சேஷாத்ரி அய்யர் I. C. S. முதலியவர்களும் வந்திருந்து கடைசிவரையிலிருந்து ஸ்ரீ ஆசார்யர்களுடைய பிரஸாதத்தை அடைந்தது ரொம்பவும் போற்றத்தக்கது. 24-7-37 சனிக்கிழமை பகல் 4-மணிக்கு அந்தரங்க கைங்கர்ய ஸபை கூடி கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றியது. இரவு மகா-௱-ஸ்ரீ மகாலிங்கய்யர், மகா-௱-ஸ்ரீ டி. எஸ். ராமஸ்வாமி அய்யர் முதலியவர்கள் பேசிய பிறகு அக்ராஸனாதிபதியவர்கள் தமது முடிவுரையை நிகழ்த்தினார்கள். வைதிகதர்மஸங்கத்தின் சார்பாக சங்கம் ராஜ குலகாணி மகா-௱-ஸ்ரீ ஆர். ராதாகிருஷ்ணய்யர் அவர்கள் அக்ராஸனாதிபதி அவர்களுக்கும் மஹா ஜனங்களுக்கு வந்தனோபசார உபன்யாஸம்செய்தார். பிறகு செங்கற்பட்டு வாசிகள் சார்பாக பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் இங்கு மகாநாட்டை நடத்தியதற்காக வைதிகதர்ம சங்கத்திற்கும் அக்ராஸனாதிபதிகளான ஸ்ரீ ஸ்வாமிகளுக்கும் மற்றும் மகா ஜனங்களுக்கும் வந்தனோபசார பிரஸங்கம் செய்கையில் உணர்ச்சித் ததும்பும்படி. ஸதாசாரம் வேதம், முதலியவைகளைக் கட்டாயம் அனுஷ்டிக்க வேண்டிய முறையை வற்புறுத்தினார்கள். பிறகு மகா-௱-ஸ்ரீ டி. எஸ். ராமஸ்வாமிய்யர் அவர்கள் அக்ராஸனாதிபதி ஆக்ஞைப்படி அகில இந்திய வர்ணாச்ரமஸங்கபிரஸிடெண்டு ராவ் ஸாஹிப் என். நடேசய்யர் அவர்கள் மதுரையில் கூட்டப்போகும் ஸனாதனதர்ம மகாநாடுஸம்பந்தமாகஅறிக்கையை வாசித்து மகாநாட்டை எல்லோரும் ஆதரிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அது பிரகாரம் ஸ்ரீ ஸ்வாமிகள் வைதிக தர்மஸங்கத்தைச் சேர்ந்தவர்களை வர்ணாச்ரமஸங்கத்தில் சந்தா செலுத்தி சேரும்படி ஆக்ஞாபித்தார். இம்மகாநாடு நடைபெறும் விஷயத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் அனுக்ரஹத்தினால் வைதிக தர்மஸங்கம் செங்கற்பட்டு ஹிந்துமத்யகமிட்டியைச்சேர்ந்த பிரம்மஸ்ரீ அனந்தராமதீக்ஷிதர் மகா-௱-ஸ்ரீ அகோராய்யர் முதலியவர்களுடைய சிரத்தைப் போற்றத் தக்கது. மகாநாட்டிற்கு பிரபல ஸநாதனத் தலைவரான கும்பகோணம் மகா-௱-ஸ்ரீ எம். கே. வைத்யனாதய்யர் அவர்களும், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரான ஸ்ரீமான்முத்துரங்கமுதலியார் அவர்களும் வந்திருந்தது குறிப்பிடத் தக்கது. வரவேற்பு அக்ராஸன பிரஸங்கம் பின் வரும்.

25-7-37 ஞாயிற்றுக்கிழமை பகல் 1-மணி முதல் இரவு 9-மணி வரையில் மாம்பலத்திலிருந்து சுமார் 30-பேர்களடங்கிய லௌகிக உத்யோகஸ்தர்களால் வைதிக முறையுடன் சாஸ்திரீயமான அஷ்டபதி திவ்யநாமஸங்கீர்த்தனம் முதலியபஜனைகள் நடைபெற்றது கண்கொள்ளா காக்ஷியாகவும் ச்ரோத்ரானந்தமாயும் இருந்தது ரொம்பவும் விசேஷமானது. அது ஸமயம் சில சுலோகங்களுக்கு பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் ஆனந்தமாய் அர்த்தம் சொன்னார்கள். அன்று பஜனைக்குப் பிறகு ஸ்ரீ ஆசார்ய புன:பூஜைக்குப் பிறகு ஸ்ரீவியாஸாக்ஷதப்ரஸாதம் முதலியவை ஸ்ரீ ஸ்வாமிகளால் அனுக்ரஹிக்கப்பட்டு மகோத்ஸவம் பூர்த்தியடைந்தது.

24-7-37 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஸ்ரீ பாதராஜர் பரமஹம்ஸ, ஸன்யாஸிகளான ஸ்ரீ சிவப்பிரகாச ஆனந்திரிஸ்வாமிகள் அக்ராஸனத்தின் கீழ்கூடிய அந்தரங்க கைங்கர்ய ஸபையில் நிறைவேறிய தீர்மானங்கள்.—

1. வைதிகதர்மதேசஸங்கம் இன்று முதல் ஸ்தூலத்தில் விளங்கி வருகிறது. இது செங்கற்பட்டு, தென்ஆற்காடு, வடஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய 11 ஜில்லாக்களை தன்னுள் அடக்கியது. இதற்கு 7 நகரங்களாக பிரிக்கப்பட்டு 12000 அங்கத்தினர்கள் சேர்க்கவேண்டுமென்றும் தீர்மானிக்கிறது.

2. ஆஸ்திக தர்மஸங்கம்:— இது க்ஷத்ரகலையுடன், பிராம்மணேதரர் ஆகிய இவர்களை சேர்ந்ததாய்க்கொண்டு ஸமூஹத்தில் தர்மரக்ஷணத்தின் பொருட்டு அரசாங்கம் மற்றும நவீன ஸமூஹசீர்திருத்த ஸமாஜங்கள் இவைகளிடன் அவ்வப்பொழுது செய்யவேண்டிய வியவஹாரங்களை நிர்ணயம் செய்துகொண்டு தகுந்த உபாயங்களால் ஸாதிப்பது ஆஸ்திக சங்கத்தின்நோக்ககாகும். இப்போது ஸமூஹஸேவைக்கு முன்னின்று விளங்கும் அகில இந்திய வர்ணாசிரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் லக்ஷ்யங்களை இது அங்கீகரிக்கிறது. முக்யமாய் தமிழ் தேசத்தில் மாகாண வர்ணாசிரம ஸ்வராஜ்ய சங்கத்தை ஸகோதர ஸங்கமாக கருதுகிறது.

3. அந்தரங்க கைங்கர்ய ஸபைக்கு பிரதிஞையுடன் அங்கத்தினர்களை சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று தீர்மானித்து சில நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது.

4 கும்பகோணம் ஆர்யதர்மம் பத்திரிகையை இந்த ஸங்கம் ஆதரிப்பதுடன், இந்த ஸங்கத்தின் அங்கத்தினர்களும் சந்தாதார்களாகச் சேர்ந்து பத்திரிகையை அபிமானிக்கும்படி கோருகிறது.

5. இந்த ஸங்கத்தின் நோக்கங்களை தமிழ் நாட்டில் பிரசாரம்செய்ய லௌகிகர்கள் வித்வான்களைக்கொண்டு ஸன்மானம் கொடுத்து ஒரு பிரசார கோஷ்டி நியமிக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறது.

6. வைதிகதர்ம தேசஸங்கத்தின் லௌகிக வியவஹாரங்களைக் கவனிக்க ராஜகுலகாணி R. ராதாகிருஷ்ணய்யர் அவர்களை இன்னும் ஒருவருஷத்திற்கு ராஜகுலகாணியாக நியமிக்கிறது.

இந்த ஸங்கத்தின் கௌரவ அங்கத்தினரான, ஸ்ரீமான் C. N. முத்துரங்க முதலியார் அவர்கள் மேற்பார்வையில், செங்கற்டு ஜில்லாவில் ஒரு தேவார பாடசாலை நடத்த வேண்டுமென்று தீர்யானிக்கிறது.

8. இச்சங்கத்தின் 4-வது அப்த பூர்த்தியை தஞ்சைஜில்லா நாகப்பட்டணத்தில் நடத்தவேண்டுமென்றும், அப்போது தஞ்சை ஜில்லா மந்திராலோசனை ஸபையும் கூட்ட வேண்டுமென்று வைதிக தர்மஸங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

9. தஞ்சை ஆர்யமதபாடசாலையையும், செங்கற்பட்டு நியமாத்யயன பாடசாலையையும் வைதிக தர்மஸங்கம் ஆதரிக்கவேண்டுமென்று தீர்மானிக்கிறது.

10. தஞ்சை ஜில்லா உடையாள்புரம் கிராமத்தில் நடந்துவந்த பிரம்மசர்ய ஆசிரமத்தில் இருந்த பிரம்மசாரிகளில் வரத்யாராயிருப்பவர்களை திருவெண்காட்டில் பிரம்மஸ்ரீ முத்து சாஸ்திரிகள் நடத்திவரும் பாடசாலையில் சேர்த்துக்கொண்டு நடத்திவர வேண்டியதென்று தீர்மானிக்கிறது.

P. N. நாராயணசாஸ்திரி.

சாரதாச்சட்டப்படி கேஸ்.

திருவாங்கூர் எல்லையில் செய்தது குற்றமாகாது.

திருநெல்வேலி ஜில்லாவில் பிராம்மணர் ஒருவர் திருவாங்கூர் ஸம்ஸ்தான எல்லையில் போய் பால்ய விவாஹம் நடத்தியதாக ஒரு பிராம்மணரல்லாதாரால் ஒரு வழக்கு திருநெல்வேலி ஜில்லா மாஜிஸ்ட்ரேட் முன் கொடுக்கப்பட்டது. பிரிடிஷ் எல்லைக்கு வெளியில் இந்த விவாஹம் நடந்திருப்பதால் தாம் அதை விசாரிக்கமுடியாதென்று மாஜிஸ்ட்ரேட் கூறித் தள்ளிவிட்டார்.

சென்னை ஹைகோர்ட்டில் மேற்படி கேஸ் அப்பீல் விசாரணை நடந்தது. ஜஸ்டிஸ் லக்ஷ்மணராவும், ஒரு ஐரோப்பிய ஜட்ஜும், அப்பீலைத் தள்ளிவிட்டார்கள். பிரிடிஷ் எல்லைக்குள் நடக்காததை விசாரிக்க மாஜிஸ்ட்ரேட்டிற்கு அதிகாரமில்லையென்று அவர்கள் காரணம் சொன்னார்கள்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படமாட்டாதென்று சொல்லமுடியாது. பிரும்மஞானியென்று தன்னை நினைத்துக்கொண்டுவிட்டதால் நாம் அவனாக ஆகிவிடமாட்டோம். நாம் முதலில் பாபத்தை இப்படிப்பட்ட பிராயச்சித்தங்களால் போக்கிக்கொண்டோமானால் பிரும்மஞானம் தானாக ஓடிவரும். உபாகர்மாவிற்கும் காயத்ரீ ஜபத்துக்கும் பாபநிவிருத்தியே முக்ய ப்ரயோஜனமாயிருப்பதால் விதிப்படி இவ்விரண்டையும் செய்யவேண்டுமென்று வேண்டுகிறேன். இதுகாறும் ஆபஸ்தம்ப ஸூத்ரானுஸாரிகளின் உபாகர்ம ப்ரயோக விமர்சம் செய்யப்பட்டது.' மற்ற ஸூத்ரங்களுக்கும் அதிக வித்யாஸமில்லையாதலால் அதைவிஸ்தரிக்கவில்லை.

உபாகர்ம விஷயத்தில்தான் நமக்குள் பரஸ்பரம் சத்ருத்வத்தை ஸ்தாபித்துக் கொள்வது ஆபாஸ வழக்கமாயிருக்கிறது. அதாவது இதுவிஷயத்தில் ஒற்றுமையுடன் யாவரும் நதிக்குச்சென்று உபாகர்மாவைச் செய்து ச்ரேயஸ்ஸை யடையவேண்டும் என்பது என் விருப்பம்.'

மூகபஞ்சசதியின் முதல் பாகம்.
“ ஆர்யா சதகம் ”

Mr. G. V. கணேசய்யர், B. A, B L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

100 பக்கங்களுக்குமேல் கொண்டது.
தபால்சிலவு வேறு] [விலை அணா 0-8-0.
கிடைக்குமிடம்:— ஸ்ரீஜனார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், (லிமிடெட்), கும்பகோணம்.

Congress Ministries and their Immediate Work.

(*by Mr. B. S. Vaidyanatha Iyer.*)

Mr. C. Rajagopalachariar in his interview by the representative of the 'Hindu' (published in the 'Hindu' of the 10th July 1937) is reported to have stated that the 'first result of the identification of the Congress with the Provincial administration should be that in every village there should be a Congress Sabha which functioned in reality. The best men of those places should have no difficulty now to join the local Congress Sabhas which are now a limb of the Government, work for the people, make the places clean abodes of good, diligent and patriotic people. He appeals to the entire body of workers to divide the responsibility with the Ministers and work for increasing the happiness of the people and help the Congress in raising the status of India to that of a completely free country.' Every patriotic Indian is bound to wish him all success in his good work.

For the first time in its long history, the Congress ministers will have the best opportunity for serving the Great Indian Nation for strengthening and unifying it in all respects. Every one looks forward to the efficient administration of the Congress ministry. Congressmen are pledged to be fair and just in all their dealings with the minority communities and the British Government have generously promised not only to be fair and just in the matter of their using the reserve powers but also help and co-operate fully with the ministers in the most friendly spirit. To reduce and simplify the complex administration of the country, to give substantial relief to the poor and suffering masses by devoting special attention to all their needs, and improvement of villages in all respects, have been said to be the chief aim of all parties viz: the British Government, Justice Party and others who were successively in charge of administration. The Congress leaders also have all along been expressing their sympathy for the lot of the masses and are now evidently determined to make full use of the present opportunity to serve their countrymen to the best of their ability and win their affections. Their general programme seems to include improvement of sanitary conditions of villages, health, morale, education and economic condition of villagers and also of the whole nation. They also aim at full responsible Government in the provinces.

It has been truly said that the Indian nation lives in villages which are 700,000 in number. It has also been said by eminent historians and British administrators and Western observers of Indian institutions that 'in no country in the whole world has village autonomy been so well developed as in India.' 'It was self-Government in all its purity. Well developed were the relations between the people and the state. The village communities are little republics having nearly everything they can want within themselves and almost independent of foreign control.' 'They seem to last where nothing lasts. Dynasty after dynasty tumbles down, revolution after revolution succeeds and Greeks, Pathans, Moghuls, Mahrattas, Sikhs and the English are all masters in turn, but the Village communities remain the same. This is well known of all Village communities which formed the main support of the state. The Villages were themselves little states and were in a high degree conducive to the happiness of all people and to the enjoyment of a great protion of freedom and independence.'

It is a well known and undoubted fact that the eminent and patriotic organisers of the Congress (Europeans and Indians) from its very inception were always wise enough to bring pressure on the British Government year after year for the resuscitation of the efficient and economical village autonomy system as before. It is well known to every experienced administrator in this country, both European and Indian, that every village in this land from the remotest times, was a complete self-governing Republic, selfcontained, having full control ever all its affairs viz: 'Revenue collections, Civil, Criminal and Police administrations, construction, repairs and supervision of all their public buildings, irrigation works, tanks, rivers, canals, temples, roads, schools, matams, chatrams and all other public, charitable and philonthropic institutions. Their Council of Elders exercised the power of appointment, punishment and dismissal of all the officers and servants of the village, exercised supervision over all their daily work, protected the village forests, communal lands, pasturage ground, maintained schools and provided for the medical and sanitary needs of all people and exercised general supervision over all the civic and economic welfare of all people in the village consisting of various castes, creeds and communities. They took special care for the reservation and protection of grazing grounds and special tanks for the benefit of all their cattle, maintenance of breeding bulls and horses, organisation and maintenance of markets, fairs, festivals and amusements such as dramas, bhajanas, puranas, sports, tournaments etc., which were regularly and systematically conducted, celebrated and supervised year after year at particular seasons with clockwork regularity and thus contributed to the health, happiness, protection, education, economic and intellectual improvement and amusement of the people.

The State settled with the Council of Elders and fixed the land revenue in lump, generally in kind, but sometimes in cash for the whole village, and the Council of Elders equitably divided the same among themselves. Every village possessed a common public fund derived from the produce of communal lands, grazing grounds, fines, confiscations etc. All village officers and servants were allotted lands, service inams, as remuneration for their services and salaries were generally paid in kind. Administration of civil and criminal justice was prompt and very cheap. All disputes were efficiently and satisfactorily settled by the Elders. There was complete unity in the village and peace, plenty and happiness prevailed in the village. The outside authority did not interfere with the autonomy of the village, except when applied for, to settle disputes between adjacent villages regarding boundaries, grazing grounds, forest limits, irrigation rights, public ways for men and cattle etc.

In this glorious work of restoring the village to its original autonomous state, which fact admitted to have been in existance for untold centuries, and contributed to the health, wealth and happiness of the people from time immemorial, our patriotic congress ministers will, not only have the backing and co-operation of the majority communities, but also the solid support of all parties and communities in the land, irrespective of caste, creed, religion etc. This ancient system of autonomy in villages is not yet totally extinct, in any village. It is still, though partially, in existance with regard to many of the common village affairs.

As the maximum good of the people is the only justification of political power at the hands of any party or Government, as self-governed people are considered to be the best governed and least governed from outside, and as frequent outside interference in the village matters even in petty and trivial affairs discourages self help, initiative and patriotic efforts on the part of people, the whole country hopes and earnestly desires that our patriotic popular ministers will not let slip this rare opportunity of restoring our villages to their original glorious independent position. The foundations of true Swaraj or independence will thus have been laid deep and broad in the villages and the people of the country who have in their blood a genius to successfully work such institutions from prehistoric times, will instinctively catch it with avility, work it with great enthusiasm and bless our Congress and Congress leaders for ever and ever.

The democratic system of India begins with the village and grows up by the aggregation of villages, Vattams or circles, firkas Talukas, Districts etc., each keeping its own self-governing power. In Western countries on the other hand, they had to fight out and win liberty by wrenching power away from their kings and others who held it tight at the top, but in India, the power was built up from the villages as unit. Each village had its own Council of Elders as Government, which was elected by the people on population basis, and a number of Committees were appointed by the Council to manage the different departments of the village administration. In large villages there were as many as 12 Sub Committees. The Village Headman (Gramani) and other village officials such as Accountants etc., were appointed by the Council of Elders and were answerable to them. Resuscitation and revival of the village autonomy throughout the country will, in the opinion of all well informed people, solve almost all our urgent problems such as, relief to the large unemployed, relief to the poor villagers in the matter of

(*Continued on page 8*)

Hinduism in Multiple Danger.

(by Mr. N. K. Venkatesam Pantulu)

Social and Political Expediencies have led to a lot of new ideas and legislations based on those ideas threatening the effacement of Hinduism as a Power of Dharma and Satya in India, the Two ideals of the Veda. We are told we should move with the times. Yes, how far and to which goal, we are not able to realise. We may move too far away from our moorings and we may get into too deep waters. Mr. K. R. Srinivasa Aiyangar, speaking at the Mysore Council referred to the British Indian Act XXI of 1850 giving rights of inheritance under the Hindu Law to those who choose to leave the fold of Hinduism to get a seat quickly in the Christian Kingdom of God, said that that Act was 'passed in British India nearly a century ago by a Christian Government at the instance of Christian Missionaries at a time when public opinion in India had no opportunity to make itself felt and heard in responsible legislative bodies'. When, now, after a century we have been forming and ventilating, even very inconveniently sometimes, our Public opinion, how much hearing are we getting and how far have we advanced? If the Mysore Legislation, on the model of the British India Act is passed, there is danger to Hinduism, which of course the Christian and the Moslem members do not look upon as grave, because it is not their house that ~~is on fire. On the other hand they stand~~ to gain distinctly by such legislation.

The Temple Entry Proclamation of the Travancore Maharaja has brought a new sort of danger to our Hindu Ideas and Ideals of Temple Worship. The Sarda Act and similar Acts have begun to affect the social and religious structure of Hinduism. Whether it is all for good or bad, no man can say now. Anyhow Hinduism has entered the Danger Zone. Pandit Jawaharlal Nehru would have no part or lot with the poor Sanatanists, however educated and patriotic they may be, if they do not subscribe to his creed on Capital and Labour.

English Education and the Western mode of studying Philosophy have made us all philosophers in the blossom, and the proverb in India goes that the bud which becomes a fruit at that stage rots sooner than it ought to, even as little girls, who become mothers when they should be girls, fall prey to untold evils under the un-Dharmic mode of the modern Boys' lives.

What more? We read from the 'The Advancing Church,' in the Chapter on India, Burma and Ceylon, quoted on P-13 of 'The Hindu' of 27th June, that there is a mass advanne going on in those countries towards Christianity, and that for ten years ten thousand adherents were enrolled each month; at present the increase is fifteen thousand each month. The Christian Church hopes even for more splendid success in that direction, but for the fact that the most active influences are seeking to divert this movement from finding its goal in the Church. Did not Hindus who had not formed their public opinion vociferously when Act XXI of 1850 was passed realise and can they not realise now too that the Old Game is still being played by the Christian Church in India? The Danger Zone was in this matter entered by Hinduism when the Hindu religion was reduced to the position of a necessary evil. Our leaders now desire to destroy that necessary evil to resuscitate Hinduism, which may mean the Christianisation of Hinduism, as the more learned among the Christian Missionaries have claimed publicly in my hearing and also everywhere where they are heard by the educated Hindus. Thus we are increasingly exposing Hinduism to multiple dangers, because religious instruction in the Vedic Texts have been denied to the Hindu boys and girls, under the soul-saving Conscience Clause, while the Holy Bible and the Koran are the spiritual food for boys and girls in their schools. Hindu boys and girls have been trained to love to read the Bible and the Koran, and the Zend Avesta and the Buddhist, Jain and all sorts of Texts, but not the Vedas, because they represent an exploded civilisation and culture, though still all Hindus are the living followers of the Vedic Life in private.

(Continued from Previous page)

costly civil and criminal litigation, expansion of education, improvement of the existing and the establishment of new industries, improvement of sanitation, and of physical, economic and cultural condition of the people and many other ways too numerous to mention.

A Questionaire.

Dear Editor,

A public man at the the top noted for sobriety of views and gentleness of expression stated in one of his lectures that 'Hinduism is a religion riddled with rituals'. Another gentleman of provincial fame observed very recently that 'some of the men constituting our orthodoxy are blind to the spirit of the times and blind to the consequences of their stiff and unbending attitude. A third gentleman of international fame charged the Pandit class 'as having no sense of value, as exhibiting a spirit of arrogant touch-me-not-ism and as paying greater attention to mere externals and rituals".

The Sanatanis beg in all humility to approach the trio for straight answers to the following questions.

1. What are the rituals and externals from which they desire to free Hinduism?
2. Which rituals are fundamentals and which external? What are the tests for differentiating the one from the other?
3. Which of the following are fundamentals and which externals:—

   Upanayanam, Vivaham, Garbhadhanam, Pumsavanam, Seemantham, Sandhyavandanam, Parvana Sradham, Abdika Sradham, Aupasanam, Vaisua Devam, Brahma Yagnam, Sravanam.

4. Will these gentlemen attribute the blindness and stiffness of the orthodox few to perversity or hypocrisy or ignorance or cowardice or anxiety for temporal advancement.
5. Do the orthodox stand to gain in any direction by being unbending? If not can any reason be assigned for their blindness and stiffness?
6. What is meant by 'the spirit of the times'. If it demands the annihilation of what constitutes one a Hindu, are the orthodox to submit to it lying down?
7. What is meant by 'sense of values'. Is not the expression relative Kanchanam and Kaminee (Gold and woman) have no value for the Parama Hamsa but the fullest value for the worthy Charcoal and Diamond have the same scientific value for a Chemist. Will a layman exchange a carat of diamond for a carat of charcoal?
8. What is the touch-me-not-ism on which the Pandit class is charged with - social, political or philosophical. Will these gentlemen attribute this touch-me-not-ism to an anxiety for material advancement or perversity or ignorance or hypocracy?

N. Natesa Aiyar.

அபேதவாதக் கக்ஷி
காங்கிரஸிலிருந்து பிரியவேண்டும்
எம். என் ராய். அபிப்பிராயம்.

சென்னைக்கு வந்திருக்கும் பிரபல அபேதவாதியாகிய எம் என். ராய் அங்கு செய்த பிரஸங்கமொன்றில் காங்கிரஸ்காரர் மந்திரி பதவி ஏற்றதைப் பலமாக ஆதரித்துப் பேசினார். அபேதவாதிகளில் சிலர் பதவியேற்பைக் கண்டிப்பதை இவர் பலமாக ஆக்ஷேபித்தார்

உண்மையான அபேதவாதம் பரவவேண்டுமானால் அதைக் காங்கிரஸுக்குள் இருந்து நிறைவேற்ற முடியாதென்றும் காங்கிரஸுக்குள் அபேதவாதக் கக்ஷியென்று தனியாக இருப்பது கூடாதென்றும் அபேதவாதிகள் வெளியில் தனியாகக் கக்ஷி நடத்துவதே நலமென்றும் அதுதான் தமது நிச்சயமான கொள்கை என்றும் சொன்னார்.

ராஜீயக் கைதிகள் விடுதலை.

ஐக்யமாகாண மந்திரி ஸபையார் அந்த மாகாணத்திலுள்ள எல்லாவித ராஜீயக்கைதிகளையும் விடுதலை செய்ய உத்திரவு பிறப்பித்து விட்டார்கள். பத்திரிகைகளின் ஜாமீன் தொகைகளையும் திருப்பிக் கொடுத்துவிட யோஜனை நடக்கிறது. அந்த மாகாணத்தில் 2 மஹம்மதிய மந்திரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு வித்வானின் மரணம்.

தஞ்சைஜில்லாவில் பிரஸித்திபெற்ற வித்வானாக விளங்கிவந்த ஸ்ரீமான் உ. வே. தில்லையம்பூர் சக்ரவர்த்தியாசாரியர் சென்ற ஞாயிற்றுக்கிழமை வலங்கிமானுக்கு அடுத்த தில்லையம்பூர் கிராமத்தில் பரமபதம் சென்றுவிட்டதை அறிந்து வியஸனிக்கிறோம். இவர் சிறிது காலம் ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தான வித்வானாக இருந்தார்.

சிறிது காலமாக இவர் ஹிருதய நோயால் பிடிக்கப்பட்டு வந்ததாக தெரிகிறது. இவர் நல்ல பாண்டித்யமும், உபந்யாசசக்தியும் பெற்றவர். பல விடங்களில் ஸ்ரீராமாயணம் பிரவசனம் செய்துவந்தார். இவருடையமரணம், பலருக்கும் வருத்தத்தை கொடுக்கக்கூடியது.

ஒரு நிருபர்

காங்கிரஸில் சேர்ந்தார்.

கும்பகோணத்தில் வஸித்துவரும் ஸ்ரீமான் திவான்பகதூர் வி. கே. ராமானுஜாசாரியர் தமது 86-வது வயதில் மீண்டும் காங்கிரஸில் சேர்ந்தார். காங்கிரஸ் மந்திரிகளை உத்ஸாஹப்படுத்தும் நோக்கத்துடனேயே இப்படிச் செய்ததாக அவர் கூறியிருக்கிறார்.

தர்மப்பற்றுள்ளவர்க்கு எச்சரிக்கை.

காங்கிரஸ் மந்திரிஸபை பரிசிலநம்.

(எழுளூர் R. நாராயணஸ்வாமி அய்யர்.)

காங்கிரஸ்கக்ஷி பதவி ஏற்றுக்கொண்டது சட்டத்தில் இடம் கொடுக்குமளவு அதிக மந்திரிகளும் மற்ற சில்லரை உத்தியோகங்களும் காங்கிரஸ்காரர்களுக்குக் கிடைத்துவிட்டன. மந்திரிகளை நியமனம் செய்யும்பொருப்பு முழுவதும் ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியாருடையதே யல்லவா? மந்திரிகள் நியமனத்தில் நாம் கவனிக்கவேண்டிய விசேஷங்களுண்டு. காங்கிரஸ் கக்ஷியிலிருந்து ஹத்துமீறிய குற்றத்திற்காக சமீபத்தில் தண்டனையாகப் பதவியிலிருந்து நீக்கப்பட்டவரும் தேர்தலுக்கு நிற்காதவருமாகிய ஸ்ரீமான் T. S. S ராஜன் ஒருமந்திரி. இதற்காக மேல்சபையில் ஒருநியமன பீடம் இவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. சீர்திருத்த வெறியில் இவர் ஸ்ரீமான் C. R. ஆசாரியாருக்குச் சிறிதும் பின்வாங்கியவரல்ல. இதுவே இவருக்குச் சிபார்சுபோலும்! மற்றொரு மந்திரி ஸ்ரீமான் S. ராமநாதன், இவர் ஸ்ரீமான் E. V. ராமசாமிநாயகருக்கு வலதுபுஜமாக நின்று "ரிவோல்ட்" என்கிற ஆங்கிலப்பத்திரிகையை நடத்தியதும் தீவிர சு.ம. கொள்கையையுடையவராய் காங்கிரஸையும் மதக்கொள்கைகளையும் பலமாகத் தாக்கியதும் பலருக்குத் தெரியும். இப்போதும் இவர் அக்கொள்கைகளை விட்டதாகத் தெரியவில்லை. இதுவே இவருக்குப் பதவி கிடைத்ததற்குக் காரணமோ? இருக்கலாம்.

ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியார் தேர்தல் காலத்தில் ஒருவகையாகப் பிரசாரம் செய்தாலும் மற்றகார்யங்களுடன் சீர்திருத்த சட்டங்களையும் நிறைவேற்றவேண்டுமென்ற எண்ணமுள்ளவர் என்பது இவர் செய்கைகளால் விளங்குகிறது. சீர்திருத்தச் சட்டங்களுக்குத் தனியே வோட்டர்களிடம் "ரிபரண்டம்" எடுக்கவேண்டுமென்று காங்கிரஸ்காரரின் மதம் போதிக்கவில்லை. அரசியல் பேரில் காங்கிரஸ்காரர் முக்கியமாக காந்திஜீ தீரர் என்று ஜனசமூகம் ஏற்றுக்கொண்டது. உறுதிமொழிகேட்ட நிகழ்ச்சியால் அந்த நம்பிக்கைத் தவறல்ல என்று விளங்கிவிட்டது இந்தபலத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியாரும் மற்றும் பல காங்கிரஸ்வாதிகளும் ஆஸ்திக ஹிந்துக்களையும் வைதிகதர்மத்தையும் அலட்சியமாகப் பேசிவருகிறார்கள். எப்படியோ சட்டசபைக்குள் புகுந்துகொண்டோம், இனி நம்மை தடைசெய்வாரில்லை என்று எண்ணம் கொள்வது நீதியல்ல என்று ஜனசமூகம் அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும். வெள்ளம் வந்த பிறகு அணைகட்டத் தொடங்கி, அப்போதும் தீவிர உணர்ச்சிகாட்டாமல் பணத்தை வீணாக்குவதும் உபயோகமில்லை. ஏராளமான தொகையினராகிய ஆஸ்திக சமூகம் இப்போதே கவனிக்கவேண்டிய விசேஷங்களுண்டு.

தேர்தல் முடிந்தவுடன் ஒரு விருந்துப்பேச்சில் சட்டசபை கூடியவுடன் தீண்டாமைவிலக்கு மசோதாவும், கோயிற் பிரவேச மசோதாவும் தாம் கொண்டுவரப்போவதாக ஸ்ரீமான் M. C. ராஜா தெரிவித்தார். காங்கிரஸ்காரர் பலர் அதை வரவேற்றார்கள். காங்கிரஸில் தீண்டாமைவிலக்குத் திட்டமும் அவசியமென்றும் எக்காரணத்தாலும் அதை நீக்கமுடியாதென்றும் மததர்ம சம்மந்தமானாலும் அவ்விஷயத்தில் காங்கிரஸ் குறுக்கிடாமலிருக்க முடியாதென்றும் (ஹிந்துமத தர்மம் தவிர மற்ற மததர்மங்களில் காங்கிரஸ் குறுக்கிடாது.) ஸ்ரீமான் ஆசாரியார் சமீபத்தில் வெளியாக்கினார். பண்டித ஜவஹரும் அப்படியே என்றார்.

மந்திரிசபை நியமனம் செய்யப்பட்டபோது முதல்நாள் பகலில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் பெயர் சேர்க்கப்பட்டதாக பலமான வதந்தி பரவியது. திடீரென்று இரவில் இதுமாறி, திருச்சிராஜன்பெயர் தோன்றியது. பலவருஷங்களாகக் காங்கிரஸ்காரர் மந்திரிபதவி ஏற்கவேண்டுமென்று பலமாகப் போராடியவரும் தேர்தல்காலத்தில் காங்கிரஸ் கட்சி அபரிமிதமாக வெற்றிபெற இராப்பகலாய்ப் பலமாதங்கள் சுற்றியவரும் பார்லிமெண்டரி முறையில் தேர்ச்சியடைந்தவருமாகிய ஒரு தீவிர காங்கிரஸ் தலைவரான ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யருக்கு மந்திரிஸ்தானம் இல்லையா என்று இளைஞர் பலர் வருந்துகிறார்கள், கோபமும் கொள்கிறார்கள் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் பெயர் வந்து மறைந்ததற்குக் காரணமென்ன! வேறு பல காரணங்களிருக்கலாம். ஆனால் ஹிந்துமத தர்ம உரிமைகளை பலவந்தமாக நீக்க இவர் உடந்தையாயிருக்கமாட்டாரென்பது ஒரு காரணமென்று அநுமானிக்கலாம்.

இக்கநிலையில் சீர்திருத்தச்சட்டங்கள் முளைக்கத்தொடங்குமென்று உறுதியாகப் பலாம் ஆஸ்திகர்களும் தர்மசாஸ்திரப்பற்றுள்ளவர்களும் இப்போது யாதுசெய்ய வேண்டும். வெள்ளம்வருமுன்னர் அணைகோலிக்கொள்வது அறிவுடைமை. நாடெங்குமுள்ள ஆஸ்திக சிகாமணிகளும் பண்டித தர்மசாஸ்திர பிரசாரர்களும் தாமதம் செய்யாமல் கடமையை ஏற்றுக்கொள்ளவேண்டும். கூடுமானவரையில் பல ஜில்லாக்களிலும் பல கிராமங்களிலும் கூட்டங்கள் கூடிப் பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றுமாறு செய்யவேண்டும்.

(1) புதிய சட்டசபைகளில் தீண்டாமைவிலக்குப்போன்ற சாஸ்திர விரோதமான மசோதாக்கள் முளைக்குமென்ற சந்தேஹம் எங்கும் நிறைந்திருப்பதால் ஆஸ்திக ஹிந்துக்கள் நிறைந்த இக்கூட்டம் சட்டசபை அங்கத்தினர்களை, முக்கியமாக காங்கிரஸ்காரர்களை எச்சரிக்கைசெய்து புது சட்டப்படி தேர்தல் பொறுப்பாட்சிக்காகப் போராடுவது என்ற ஒரே பிரச்சனையை முக்கியமாக நடத்தப்பட்டது என்பதைநினைப்பூட்டுகிறது.

(2) தேச முன்னேற்ற காரியங்களில் நியாயமான திட்டங்களை வரவேற்க இக்கூட்டம் பின்வாங்காதாயினும் மததர்மசாஸ்திர விதிகளை மீறி சட்டசபைகள் எவ்வித முடிவும் செய்யக்கூடாதென்றும் அவ்வித சந்தேகமுள்ள காரியங்கள் சமூகமுன்னேற்றத்துக்கு அவசியமென்று தோன்றினால் ஒழுங்கான கேள்விகள் மூலம் பொது ஜனசம்மதத்தை "ரிபரண்டம்" எடுத்து அறிந்தபிறகு சட்டசபை முன் அவைவரவேண்டும் என்றும் இக்கூட்டம் சட்டசபை அங்கத்தினர்க்குத் தெரிவிக்கிறது.

(3) சாஸ்திர சம்பந்தமான பிரச்னங்களில் அபிப்பிராயம் கொடுக்கத் தகுதிபெற்ற பண்டிதர்களையும் ஆசாரியர்களையும் கலக்காமல் வோட்டர்கள் சட்டசபை அங்கத்தினர்களுக்கு எவ்வித அதிகாரமும் கொடுக்கலாகாதென்று இக்கூட்டம் வேண்டிக்கொள்கிறது.

மேலே கண்ட தீர்மானங்களைப் பல கிராமங்களில் நிறைவேற்றி நகல்களை "ஆர்யதர்ம"த்திலும் மற்ற பத்திரிகைகளிலும் பிரசுரிக்குமாறு அனுப்புவதுடன் சட்டசபைக் கட்சித்தலைவர்களுக்கும், அரசாங்கத்தார்க்கும் அனுப்பவேண்டும். இந்த உணர்ச்சி படிப்படியாக அப்போது எல்லா கிராமங்களுக்கும் பரவும். அப்போது சட்டசபைகள் இவ்வுணர்ச்சியை அலட்சியம் செய்ய நடுக்கமடையும். ஆஸ்திக ஸபைகள் உடனே செய்யவேண்டிய காரியங்கள் இவை. மற்றவைபின்.

வாரக்குறிப்புகள்.

(வே. ஸோ. சர்மா)

மதக்கல்விக்கு 25000ரூ. குண்டூர் வியாபாரி ஒருவர் ஓர் லக்ஷம்ரூபாய் தர்மம் செய்தார். அதில் 25 ஆயிரம்ரூ மதக்கல்விக்காக குறிப்பிட்டிருக்கிறார். அதை வர்ணாச்ரம தர்ம சங்கத்தார் வாங்கி நல்லவினியோகம் செய்தால் நலமுண்டு !!

கீழ்த்திசை பாஷைக்கு மேல்திசை தலைவரா ? திருவாங்கூரில் ஷஷ்டி சபை நடக்கிறது. அதற்குமேல்திசை பண்டிதரையா அழைக்கவேண்டும்? இங்கு ஓர் நல்ல வித்வான் கிடைக்கவில்லையா? இந்தப்ராந்தி ஒழிந்தாலன்றோ நாடு நலம்பெறும்!! திருவாங்கூரில் இதுவும் இன்னமும் நடக்கும் !!

வேண்டிய அளவு ஒத்துழைப்போம் !! புதிய மந்திரிகளுடன் தர்மவிரோதமில்லாது வேண்டிய அளவு ஒத்துழைப்பது நமது ஸமயோசிதமான கடமையாகும். கல்விமந்திரியுடன் பேட்டிகண்டு ஒவ்வோர் ஆங்கில கலாசாலையிலும் மதக்கல்வியும், பிராமணப்பிள்ளைகளுக்கு ஸந்யாவந்தனாதி வேதபாகமும். இதரர்களுக்கு தேவார திருவாசகாதிகளைக் கற்கும்படியும் செய்யலாம்.

நம்பிக்கை !! திபெத்தின் மதகுரு இறக்கும்பொழுது சில அடையாளங்களைக் கூறி தான் அவதரிக்கப்போவதாக கூறினார். சில நாட்களாகத் தேடி அத்தகைய ஓர் குழந்தையைக் கண்டுபிடித்துவிட்டனர். இதை மேல்நாட்டு ஸகவாசத்தால் நம்மவர் நம்பமாட்டார். மதவிஷயத்தில் பூரண நம்பிக்கை யுள்ளோர் க்ஷேமமடைவர் !

சிறிது அடக்கத்துடன் நடப்பரா? புதிய மந்திரிகள் சிலவகையில் நன்மார்க்கத்தை கைப்பற்றினும் பல பழைய ஆடம்பரம் விருந்துகொண்டாட்டம் விடவில்லை. அன்றியும் எந்த விஷயத்திலும் சிறிது அடக்கத்துடன் இருந்து தர்மவிரோதமில்லாமல் குடிகள் அன்பிற்கு பாத்ரமாவார்களா?

பூர்ணதேசிய மணம்வீசுமா? நமதுதேசத்திற்கு ஒவ்வாததும் வீண்செலவும் உள்ள பல அம்சங்கள் அன்ய அரசாங்கத்தால் நம் மீது சுமத்தப்பட்டிருக்கிறது. முதலில் படிப்பிற்காக ஆடம்பர கட்டடம் பெஞ்ச் நாற்காலி வருஷத்திற்கோர் புத்தகம் சட்டைகள் இவைகளைப் படிப்படியாக குறைத்து வாழ்க்கையையே மிகச்சிக்கனமாகவேண்டும்.

அதர்மம் வேண்டாம்!! திருக்கழுக்குன்றத்தில் பகவத் தர்சனம் செய்பவருக்கு வரிபோடுவதாக தீர்மானம்செய்துளது. இந்த க்ஷேத்திரம் ஏற்பட்டநாளாக இத்தகைய சம்பவம் நிகழ்ந்ததில்லை. இத்தகைய பாபங்களால்தான் அங்கு காலத்தில் மழை இல்லாமல் தவிக்கின்றனர் இன்னும் பக்தர்களை கஷ்டப்படுத்தி என்னதுன்பம் விளைவிக்கப்போகின்றனரோ அறியோம் !!

குழந்தையுடன் விவாஹமா ? சில விஷயங்கள் வாதிருத்தல் நலம். ஆனாலும் சீர்திருத்தவும் நன்மை பெறவுமே எழுதவேண்டியிருக்கிறது. இவ்வாண்டு நானறிந்த இரண்டு இடங்களில் விவாகமான சில நாளுக்கெல்லாம் சாந்தி ஆரம்பிக்கும்போது பெண் கர்ப்பிணியாயிருக்கக்கண்டு இருபுருஷரும் தவிக்கின்றனர். இத்தகைய பல அநர்த்தங்களை தவிர்க்கவே பால்யவிவாஹம் நடத்துவதவசியம்.

449

21/195

வெளியூர்ச் செய்திகள்.

ஆத்தன்குடி

ஸநாதனதர்ம மகாசபை.

ஈசுவர-ஞு ஆடி-மீ 8உ வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு கடவுள் வாழ்த்துக்குப்பின் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரர் வித்யாசாலை அதிபர் ப்ருப்மஸ்ரீ திரு. சாமி அய்யங்காரவர்களின் தலைமையில் ஸ்ரீமான் சு. வீர. கதிரேசன் செட்டியார், சுப்பிரமணிய சாஸ்திரிகள் முறையே "பக்தி" "பதிதர்மம்" என்ற பொருள்பற்றி உபன்யாஸம் செய்தனர். காங்கிரஸ் மந்திரிபதவி ஏற்பை வரவேற்று திரு ஜெகதீசய்யர் பேசுகையில் அதன் வரலாற்றை விரித்துக்கூறியபின் சிக்கனத்துடன் ஆடம்பர நிர்வாஹமில்லாத முறையில் அரசியலை நடத்தி நாட்டின் வறுமையை போக்க நேரிய வழியில் சாத்தியமானவரை மாகாண சுயாக்ஷியின் நன்மையைப்பெற காங்கிரஸ் பெரிதும் முயற்சிக்கும் என்றும், சென்னை மாகாண வர்ணாசிரமதர்ம சுயராஜ்ய சங்கக் காரியதர்சி ஸ்ரீமான் டி. எஸ். ராமஸ்வாமி அய்யர் அவர்களுக்கும் காங்கிரஸ் தலைவர் ஸி. ராஜகோபாலாச்சாரியார், ஜவஹர்லால் நேரு அவர்களுக்கும் சமீபத்தில் நடந்த கடிதப்போக்குவரத்தினின்றும் காங்கிரஸ் முக்கியமாக ஹிந்துமத ஸமூக விஷயங்களில் ஏதேச்சாதிகாரமாய் தலையிடத் தயங்காது என்பது ஸ்பஷ்டமாகத் தெரிவதால் அவ்வரம்புமீறிய அநீதியான தன்மையைக் கண்டித்தும், விரிவுரை நிகழ்த்தினார்கள். தலைவர்கள் சாஸ்திரங்களினின்றும் அரிய மேற்கோள்களுடன் இனிய முடிவுரை பகன்றார்கள்.

இறுதியில் தேவகோட்டை பிரபல வக்கீலும் தீவிர ஸநாதனியுமான ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாஸராகவய்யங்காரவர்கள் தேகவியோகமானதுபற்றி அனுதாபத் தீர்மானத்தை ஜெகதீசய்யர் பிரேரணை செய்ய சு. வீர. கதிரேசன் செட்டியாரவர்கள் ஆமோதிக்க, தலைவர்கள் அவரைப்பற்றி சில அறிய அனுபவ நன்மொழிகளைக் கூற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றிற்று. இரவு 8-30 மணிக்கு சபை கலைந்தது.

சென்றவாரம் வேதபாடசாலை மாணவர்கள் மகாலிங்கன், கைலாசம், வெங்கட்டராமன் வேத அத்யயனம் முடித்து பக்தி சிரத்தையுடன், தங்கள் குரு, வேதசாஸ்திர வித்வான் ப்ரும்மஸ்ரீ கல்யாணசுந்தர கனபாடிகளுக்கு தக்ஷிணை சமர்ப்பித்து தங்கள் ஊர்களுக்குப் பிரயாணமானார்கள். எல்லாவகையாலும் அம்மாணவர்கள் மேன்மையுற இறைவன் இன்னருள் புரிவாராக.

ஒரு நிருபர்.

பெரியகுளம்.

தர்ம ஸம்வர்த்தனீ ஸபா.

நாளது ஆடி-மீ 7உ வியாழக்கிழமை (22-7-37) அன்று மாலை 7மணிக்கு ஸ்ரீவேதவிலாஸில் வழக்கம்போல வேதபாராயணம் முடிவுபெற்றது. அன்று இரவு 8-மணிக்கு மதுரை, ராமேஸ்வரம் தேவஸ்தானம் கலாசாலையில் உபாத்யாயராய் இருக்கும் பிர்மஸ்ரீ பண்டித சீதாராம சாஸ்திரிகள் அவர்கள் ஷை சபை உப அக்கிராசனாதிபதி மகா-ா-ஸ்ரீ தீக்ஷதர் பி. ஆர். சங்கரய்யர் அவர்களுடைய பிரேரணையின் பேரில், கர்மயோகம் என்ற விஷயத்தைப்பற்றி ஓர் நல்விருந்து நடத்தினார் அச்சமயம் அநேக வித்வம்மஹாஜனங்களும் மேல்மங்கலம் மஹாஜனங்களும் வந்துகூடி உபன்யாஸத்தைக் கேட்டு மிக்க ஆநந்தப்ரவசரானார்கள். வந்தமஹாஜனங்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி, மறுதினம் சுக்கிரவாரத்தன்று பிரும்மஸ்ரீ பண்டித சீதாராம சாஸ்திரிகள் இரவு 8-மணிக்கு பக்தியோகத்தைப்பற்றி உபன்யாஸம் செய்தார். ஒரு மனிதனுக்கு பக்தி மிகவும் முக்யமென்றும், உத்தம பக்தி, மத்தியபக்தி, அதம பக்தி என்று பக்தியை மூன்றுவிதமாக பிரித்து அநேக அத்தாக்ஷியுடன் சிறு குழந்தைகளுக்குப் தெரியும்படி மிகவும் விவரமாக அன்று இரவு 10-45 மணியுடன் உபன்யாஸத்தை முடித்தார். அதற்குமேல்பட்டு உபஅக்கிராஸனாதிபதி மகா-ா-ஸ்ரீ தீக்ஷிதர் பி. ஆர். சங்கரய்யரவர்கள் ஸ்ரீ வேதவிலாஸ் ஸெகரட்டரி பிரம்மஸ்ரீ பி எஸ் வைத்தீஸ்வர கனபாடிகள், வேதஸ்ரீ வெ. சுந்தர தீக்ஷிதர் மற்றுமுள்ள ஆஸ்திக மஹாஜனங்களும் கூடி பிர்மஸ்ரீ பண்டித சீதாராம சாஸ்திரிகள் அவர்களுக்கு தாம்பூலம் வழங்கி மங்களச்லோகவந்தனோபசாரத்துடன் சபை முடிவு அடைந்தது. மஹாஜனங்கள் யாவரும் இன்னும் என்று சபை கூடுமோ என்று மிக்க ஆவல் உள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள்.

ரா. ஸோமசுந்தர சர்மா.

தர்மசாஸ்திர ஸந்தேஹத்திற்கு பதில்.

ஈச்வர-ஞு ஆனி-மீ 25உ ஆர்யதர்ம பத்திரிகையில் வெளியான சிராத்த விஷயமான ஸந்தேஹத்தைப் பார்த்தேன். ஸ்வீகாரப் பையன் 'ஜநகபிதா' என்றுதான் சிராத்தம் செய்யவேணும். ஜனகமாதா 'பர்த்ரா' என்று சிராத்தம்செய்யக்கூடாது. ஜநகமாதாவினுடைய மிருதியில் ஜனகமாதாவுக்கு பெண் தௌஹித்ரன் இவர்கள் இருந்தபோதிலும் தத்தன் ஸ்வீகாரப்பையனே 'ஜநகமாதா' என்றுதான் கிருத்தியம் செய்யவேணும், வைத்யநாத தீக்ஷிதீய சிராத்த காண்டத்தில் கர்த்ருக்கிரமத்தில் நன்றாக சொல்லப்பட்டிருக்கிறது. லோகத்தில் ஜநகமாதா இருந்தாலும் ஸ்வீகாரப்பையனைக்கொண்டே ஜநகபிதரு சிராத்தத்தை நடத்திக்கொண்டு வருகிறார்கள். பிருகிருதத்தில் சிராத்தம் செய்யவேணுமென்று தெரிவித்திருந்தபடியால் இதைநான் தெரிவித்தேன்.

ஸ்வீகாரப்பையனுடைய விவாஹ விஷயத்தில் ஜநக கோத்திரமும் ஸ்வீகார கோத்திரமும் இரண்டும் வர்ஜிக்கவேண்டியதவசியம். அந்த ஸ்வீகாரப்பையனுடைய பிள்ளை விவாஹத்தில் ஸ்வீகாரம் வந்த கோத்திரத்தை மட்டும் வர்ஜிக்கவேண்டியது. ஜனக கோத்திரத்தை வர்ஜிக்க வேண்டிய அவசியமில்லை.

திப்பிராஜபுரம் நாராயணஸாமி சிரௌதிகள்.

சென்னையில் அபேதவாத முழக்கங்கள்.

ஜனாப் மேஹராலி என்பவர் இந்த மாகாணம் பலவிடங்களில் சுற்றி அபேதவாதப்பிரசாரம் நடத்தி சென்னைக்குத் திரும்பினார். இவர் வள்ளிக்கோட்டையில் தண்டிக்கப்பட்டு விடுதலையாகி சென்னைக்கு வந்த போது முதன் மந்திரி கனம் ஆசாரியார் ரயில் வேஸ்டேஷனுக்குச்சென்று மேஹராலியை வரவேற்றாராம்?

மஸானி என்ற அபேதவாதியும் தென்னிந்தியாவில் பல இடங்களில் அபேதவாதப் பிரசாரம்செய்தார். இப்போது ஸ்ரீமான் எம். என். ராய் என்பவர் சென்னைக்கு வந்திருக்கிறார். இவரும் பல இடங்களுக்குப்போய் அபேதவாதப்பிரசாரம் செய்வாராம்!!

மந்திரிகளுக்கு மோட்டார்.

ஜஸ்டிஸ் பத்திரிகை ஆக்ஷேபம்.

டாக்டர் ஸுப்பராயன், யாகூப்ஹஸன், கோபாலரெட்டி, ராமன்மேனன், ஆகிய நான்கு மந்திரிகளைத்தவிர பாக்கி 6 மந்திரிகளுக்கும் ஆறு மோட்டார்கார்கள் 18 ஆயிரம் ரூபாயில் சென்னை ஸர்க்காரால் விலைக்கு வாங்கப்பட்டிருக்கின்றன. பொது ஜனங்களுடைய பணத்தை இவ்வாறு வாரி இறைக்கலாமாவென்று ஜஸ்டிஸ பத்திரிகை முதலெடுப்பிலேயே குற்றம் சொல்ல ஆரம்பித்துவிட்டது!! ரயிலிலும் டிராம்களிலும் மந்திரிகள் ஏன் பிரயாணம் செய்யக்கூடாதென்று அது கேட்கிறது!

நவீன நாகரிகத்திற்கு எதிர்ப்பு.

பிலிப்பைன் தீவில்.

பிலிப்பைன் தீவிலுள்ள [illegible] நகர பூர்வீக ஜனங்கள், தற்கால நவீன நாகரிகம் தங்கள் ஜனங்களிடையில் பரவி வருவதை விரும்பவில்லை. அதை பலமாக அவர்கள் எதிர்க்கிறார்கள். நவீன நாகரிகத்தை விரும்புகிறவர்களை அவர்கள் கூட்டமாகச்சென்று கொலைசெய்துவிடுகிறார்களாம். இதனால் ஜனங்கள் பயந்து வேறு தேசத்திற்கு ஓடுகிறார்களாம். அந்த நகரத்தில் துருப்புக்கள் காவலுக்கு வைக்கப்பட்டிருக்கின்றனவாம்!

சாரதாச்சட்டத்திருத்த மசோதா!

மீண்டும் உயிர் கொடுக்கப்படும்.

ஸ்ரீமான் பி. தாஸ் என்பவரால் சாரதாச்சட்டத்தைக் கடுமையாக்க இந்தியா சட்டஸபையில் கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவுக்குக் காலாவதியாகிவிட்டபோதிலும் அதற்கு மறுபடியும் உயிர்கொடுத்து அதைப் பிரேரேபிக்க அனுமதி கொடுக்கவேண்டுமென்று அவர் ஸர்க்காரைக் கேட்டிருக்கிறாராம்?

குழந்தை
குடல் ஈரல் கட்டிகளுக்கு
ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள
மதுரை வைத்ய நிபுணர் T.R.ஆராவமுதய்யங்காரின்
மருந்தை உபயோகியுங்கள். ஆயிரக்கணக்காக சௌக்கியம். தங்கமெடல் பரிசம்
பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது.
ஒரு மாதம் மருந்து விலை ரூ. 4—8—0 வி. பி. வேறு.
டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,
20, வடக்கு வெளிவீதி மதுரை

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Publsihed by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆரியதர்மம்

ஸ

4/22 30

5-8-1937

21596

987

215796

25 AUG 1937
OFFICE OF THE REGISTRAR MADRAS

453

Registered No. M. 2913.

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4/22 கும்பகோணம். கலி 5039 ஈச்வர-௵ ஆடி-௴ 21௳ 1937-௵ ஆகஸ்டு-௴ 5௳ வா 30

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0

தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
[illegible] ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

வாரக்குறிப்புகள்.

(வே. ஸோ. ஸர்மா.)

அவஸரமாகச் செய்க!! எதிர்பார்த்தபடி ஒருவர் தீண்டாமை விலக்கை ஓர் சட்டரூபமாக கொண்டுவருகிறார். ஆதலால் ஸ்ரீமான் எழுளூர் நாராயணஸாமி அய்யர் கூறியவண்ணம் ஒவ்வோர் ஊரிலும் கூட்டம் கூடி மஹாஜநங்கள் அபிப்பிராயத்தையும் ஸ்ரீமடாதிபதிகளின் உத்திரவுமில்லாமல் இத்தகைய சட்டம் செய்யக்கூடாதென்பதையும் உடனே தீர்மானம் செய்தனுப்பினால் பயனுண்டாகலாம்!

ராஜ்யதந்திரத்திற்கேற்றகாலம்!! நமது தலைவர்கள் தர்மத்தை முக்யமாகக் கருதி மந்திரிகளிடம் சென்று இந்த சட்டத்தின் விஷத்தை அகற்ற ஏதேனும் உடனே வேலை செய்தாக வேண்டும். வித்யாவிஷயத்தில் இவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

வழிகாட்டுகிறது!! சென்னை அமாகலாவிலாஸினீ ஸபையும் முத்யால்பேட் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸபையும், ஞாயான்று ஸ்ரீபாகவத வகுப்பில் இத்தகைய தீர்மானம்செய்து ஏனைய ஆஸ்திகருக்கு வழிகாட்டுகிறது. இச்சமயம் ஏமாறாமல் உடனே விழித்துக்கொள்ளுங்கள்!

நல்லதை ஆமோதிப்போம்!! தேசிய மந்திரிகள் வடமொழி ஆமோதிப்பையும் சேலத்தில் கள்கடைகளை ஒழித்ததையும் துணிந்து வைத்யகலாசாலைத்தலைவர் பதவியை இந்தியருக்களித்ததையும் கைதிகளுக்கு மோரளித்ததையும் ஆமோதிப்போம். ஆனால் இத்தகைய வேலையைவிட்டு மதத்ரோகத்தில் புகுந்தால் நிர்தாக்ஷிண்யமாக கண்டிப்போம்

71 பட்ட பெண்கள்!! இவ்வாண்டில் 1294 பேர் பட்டம் பெற்றவர். இதில் 171 பெண்மக்கள், மற்றவர் இவர்களை நாடி களித்தாலும் நமக்கு மிக்க வருத்தமாயிருக்கிறது! ஒவ்வொருவரும் எவ்வளவுரூபாய் செலவுசெய்திருப்பர்? இதில் ஏகதேசத்தையேனும் ஸம்பாதிக்க என்னபாடுபடுவர்? பெண்களில் பெரும்பாலோர் பிராமணராயிருப்பர். அவர்கள் தேஹபலத்தையும் உத்தமதர்மத்தையுமிழந்து அடிமைகளாகப் போகின்றனர்.

[illegible] ஸபை உபதலைவர் மதாபிமானி. வைஷ்ணவ பக்ஷபாதி. தனிகாரதலின் தனக்குரிய சம்பளம் வேண்டாமென்றார். ஆனால் இதனால் ஓர் பெரிய மிச்சம் காட்டி நாட்டிற்கு நலம் புரிய முடியாது. இவர்கள் கௌரவத்தைக் காட்ட சம்பளத்தைக்குறைத்துக் கொண்டதே போதும். அதை வாங்கி மதாபிவிருத்திக்களித்தல் நலமாகும்.

இரண்டுவகையான வேலை! செங்கல்பட்டில் ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜக ஆனந்தகிரி ஸ்வாமிகள் நடத்திய வைதிக மஹாஸபையில் வேதகாவ்ய ஸதாசாராநுஷ்டானபாகம் ஸ்ரீ ஸ்வாமிகள் தலைமையிலும், அநாசார சட்டங்களை எதிர்ப்பது வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்திலும் நடப்பது நல்லதென்று அடியேன் கூறியதை ஸ்ரீ ஸ்வாமிகள் ஆதரித்தார்கள். இவ்விரு சங்கமும் ஒன்றாகவும் சேர்க்கப்பட்டது.

நிரூபர் தவறு!! ஷெடி ஸபை சிறப்பு ஆர்ய தர்மத்தில் கூட ஸரியாகவரவில்லை. பிரும்மஸ்ரீ உ. வே. அக்நிஹோத்ரம் தாதாசார்யஸ்வாமிகளது அரிய வேதார்த்தோபன்யாஸங்கள் போன்றவைகளின் விவரம்கூட வெளிவாராதது யார் குற்றம்! இதனால் ஒருவர் தனது புகழை விரும்புவதாக எண்ணலாகாது. ப்ரஸித்த பண்டித ரத்னங்களது மொழிகளை பலரறியவேண்டும்.

மதுரை ஸபைவாழி!! நல்ல ஸமயத்தில் அந்த வர்ணாச்ரமஸபை நடக்கிறது. ஈசனருளால் அது அழகாக நடந்து நற்காரியத்தை உடனே துவக்குமா? பத்ரிகைகளில், நமது பத்ரிகையிலாவது விரிவாக விஷயத்தை முன்னதாக அது பிரசுரிக்கவேண்டும்.

[illegible] காங்கிரஸ் கக்ஷித் தலைமைப் பதவிபற்றி படேலுக்கும், நரிமனுக்கும் தகராறு ஏற்பட்டதும், இது கார்யக்கமிட்டிவரையில் போய் ஒரு விசாரணைக் கமிட்டி நியமிக்கப்பட்டதும் ஏற்கனவே தெரிந்தவிஷயம்.

தற்போது ஸ்ரீமான் நரிமன் இந்த தகராறைத் தாம் விருத்திசெய்ய விரும்பவில்லையென்றும், காங்கிரஸின் கௌரவத்தையும், தலைவர்களின் ஆக்ஞையையும் முன்னிட்டு இத்துடன் இந்த விவாதத்தை நிறுத்திவிட்டு காங்கிரஸ் வேலைகளில் முனைந்திருக்கப்போவதாயும் ஸ்ரீமான் நரிமன் அறிக்கை விடுத்திருக்கிறார்.

ஐக்யமாகாண சட்டஸபைத்தலைவர்.

பாபு புருஷோத்தமதாஸ் தண்டன்.

பிரபல தேசாபிமானியும், சிறந்த த்யாகியும் பலதடவை ஜயிலுக்குப்போய் வந்தவருமான ஸ்ரீமான் புருஷோத்தமதாஸ்தண்டன் ஐக்யமாகாணச் சட்டஸபைத் தலைவராக ஏகமனதுடன் தெரிந்தெடுக்கப்பட்டார்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறாதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஷிட் ஜெம்ஷெட் சன்ஸ் & Co.,
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

வியாஸ பூஜையும். சாதுர்மாஸ்ய ஸங்கல்பமும்.

பிரியவாசகர்களே! மேற்கண்ட விஷயத்தைப்பற்றி நீங்கள் கொஞ்சம் தெரிந்துகொண்டிருக்கலாம். தர்மதத்வம் லோபித்தபோன ஸமயத்தில், திருப்பி திருப்பி எத்தனைதடவை ஒரு விஷயத்தையே நிரூபித்தபோதிலும் தோஷமில்லை. குணமேயாகும். ஆதலின் வெறுப்பின்றி இதை ஒருமுறை வாசிக்கத் தங்களைக் கோருகிறேன்.

வியாஸபூஜை என்பது ஸன்யாஸிகளால் அனுஷ்டிக்கக்கூடிய தர்மமாகும். அது சிராவண சுத்த பூர்ணிமையில் செய்யவேண்டும்: இதில் வ்யாஸருக்கு மட்டிலும் பூஜையென்பதில்லை. ஸ்ரீமந்நாராயணன் முதற்கொண்டு குருபர்யந்தமாயுள்ள ஸகல குருக்களுக்கும் அன்று பூஜைசெய்யப்படுகிறது. இதைப்பற்றி விஸ்தாரமாய் "யதிதர்ம ஸமுச்சயம்" என்ற க்ரந்தத்தில் காணலாம். இந்த பூஜைக்குமுன்பு யதிகள் க்ஷவரம் செய்துகொள்ளவேண்டும். வியாஸாதி ஆசார்யர்களின் பூஜைக்குப்பிறகு "சாதுர்மாஸ்ய விருத ஸங்கல்பம்" செய்துகொள்வது வழக்கம். அதாவது நாலுமாதகாலபர்யந்தம் ஒரே இடத்தில் வாஸம் செய்வதாக அந்த ஸங்கல்பத்தின் அர்த்தம். அதன் கருத்தாவது: ஸன்யாஸாச்ரமம் அஹிம்ஸாப்ரதானமான ஆச்ரமம். ஸன்யாஸிகள் ஓரிடத்தில் தங்கலாகாது.. கிராமத்தில் ஒரு இரவும், பட்டணத்தில் ஐந்து இரவும் தங்கலாம் என்பதாக.

एकरात्रं वसेद्ग्रामे नगरेपंचरात्रकं

வா[illegible] வர்ஷாகாலத்தில் ஜீவஹிம்ஸை அதிகம் நேரக்கூடுமென்பதைக் கருதி, ஆடி-மீ முதல் கார்த்திகை-மீ பர்யந்தம், ஸன்யாஸிகள் எங்கும் ஸஞ்சரிக்காமல் ஒரேஇடத்தில் வாஸம்செய்யவேண்டும் இல்லாவிட்டால்

पक्षा वै मासा:

என்றபடி நாலுபக்ஷமாவது ஒரே இடத்தில் இருந்துதீரவேண்டும். இவ்விதம் யதிகளுக்கு சாதுர்யமாஸ்யவிதியை ப்ரதிபாதிக்க ஸ்மிருதிகள் ஏராளமாயிருக்கின்றன. நாலுமாதகாலம் வசிப்பதற்கு ஸௌகர்யமான இடம் பூர்ணிமைக்குள் கிடைக்காவிட்டால் பூர்ணிமைக்கு அடுத்த பஞ்சமிக்குள் ஸௌகர்யமானஇடத்தைத் தேடிக்கொள்ளவேண்டும்.

स्थानाभावात्व्रजेत्तावद्यावद्भवतिपंचमी

என்று ஸ்மிருதிகள் பஞ்சமி பர்யந்தம் அவ்விடம் கொடுத்திருக்கின்றன. சாஸ்திரவிதிப்படி ஸன்யாசிரம தர்மத்தைப் பரிபாலனம் பண்ணுகிறவர்கள் இப்போது வெகு துர்லபமாயிருக்கிறார்கள். கிருஹஸ்தாச்ரம தர்ம பரிபாலனம் பண்ணுகிறவர்களை எப்படி அலக்ஷியம் பண்ணி வருகிறோமோ, அப்படியே ஸன்யாஸாச்ரமதர்மபரிபலனம் பண்ணுகிறவர்களையும் நாம் அவமதித்து வருகிறோம். இப்படி இருப்பது ஆஸ்திக்யத்திற்கு அழகாகாது. அந்தந்த ஆச்ரமதர்மங்களை காப்பாற்றுகிறவர்களாலேயே லோகக்ஷேமம் ஏற்படவேண்டுமேயன்றி, மற்றவர்களாலில்லை. தர்மஸம்ரக்ஷணம் அவச்யம் என்று ஆங்காங்கு உபன்யஸிப்பதால் மட்டும் தர்மம் ரக்ஷிக்கப்பட்டதாகக் கருதமுடியாது. சக்திக்குத் தகுந்தபடி தார்மிகர்களை ஆதரிப்பது ப்ராம்மண ஸமூஹத்தின் ஸாமான்யதர்மமாகும். இதனை ப்பிராம்மண ஸமூஹம் மறக்கலாகாது. நமது நகரில் 4, 5 மாதகாலமாய் வயோவிருத்தராயும், ஞானபிக்ஷுகராயும், ஆச்ரமதர்ம பரிபாலகராகவும் இருக்கிற ஒரு யதீச்வரர் பக்தபுரி அக்ரஹாரம் காவேரி படித்துறையில் வசித்துவருகிறார். அவரிடம் கிருஹஸ்தர்கள் வெறுப்புக்குரிய கோபதாபமிருப்பதாகத் தெரியவில்லை. கலிகால ஸன்யாஸிகளைப்போல், மந்திரம், ஜோதிஷம், வைத்யம் முதலிய உபாயங்களால் கிருஹஸ்தர்களை ஆவர்ஜனம் பண்ணுவதில் ஆஸக்தி அற்றவராயிருப்பதால் அவரிடம் ஒரு குற்றமாக யாவரும் நினைக்கலாம். மந்திரம், ஜோதிஷம், முதலிய ஆடம்பரங்களால் பிக்ஷைக்காக அடாம் பண்ணுவது ஸன்யாஸிகளின் தர்மமில்லை என்பதை நாம் நன்கு தெரிந்துகொள்ளவேண்டும். அத்தகைய ஸன்யாஸிகளை ஆதரித்தும் கிருஹஸ்தர்களுக்கு யாதொரு லாபமும் கிடைக்காட்டாது. அத்தகைய ஸன்யாஸிகள் வேஷதாரிகளேயொழிய உண்மை ஸன்யாஸிகளாகமாட்டார்கள். பக்தபுரி அக்ரஹாரம் படித்துறைவாஸியான பெரியவாளேவென்றால் இத்தகைய ஸ்வபாவமுள்ளவரல்ல. இத்தகைய பெரியவாள் விஷயத்தில் நாம் உதாஸினமாயிருப்பது நமக்கு ச்ரேயஸ் ஆகாது. ஏனென்றால் இவ்வருஷத்திய வியாஸபூஜையை அவர்கள் உசிதகாலத்தில் அனுஷ்டிக்க முடியாமல் கிருஹஸ்தர்களின் அச்ரத்தையால் நேர்ந்துவிட்டது. ஆனாலும் ஸங்கிரஹமாக அன்று நடந்தேறியது. அதில் ஒரு விசேஷம். நமது நகரில் பகவத்படித்துறையில் வேறு ஒரு ஸன்யாஸிகள் வியாஸபூஜைக்காகவந்துவஸிக்கிறார்கள். இவ்விரு பெரியவாளுக்குள் பூஜ்யபூஜகத்வம் சாஸ்திரீயமாக ஏற்பட்டிருக்கிறது. அதிக வியாஸபூஜை செய்தவர் பூஜ்யாளென்றும் அது குறைந்துள்ளவர் பூஜகர் என்பதும் வ்யவஸ்திதமானது. இது இரண்டு சன்யாஸிகள் ஓர் இடத்தில் இருந்தால் மேற்கண்ட வ்யாஸபூஜா ஸந்தர்ப்பத்தில் இரு ஸன்யாஸி ஸமாகமம் நேர்ந்தால் பெரியவர் பூஜைசெய்ய இளையவர் வியாஸாக்ஷதை ப்ரஸாதம்மட்டிலும் பெற்றுக்கொண்டால் போதும், தனியாய் பூஜைசெய்யலாகாது. எக்காரணத்திலாவது தனியாய் பூஜைசெய்ய நேர்ந்தால் பெரியவருடைய அனுமதி அவச்யம். அனுமதியின்றி பூஜைசெய்வது தவறென்று "யதிதர்மஸமுச்சயம்" "வைத்யநாத தீக்ஷிதீயம்" முதலியவைகளால் ஸ்பஷ்டமாய் தெரிகிறது. தவிர அப்படிச்செய்த பூஜை நிஷ்பிரயோஜனம் என்றும் மறுபடியும் செய்யத்தக்கதென்றும் தர்ம சாஸ்திரங்கள் கோஷிக்கின்றன.

இதற்கு விரோதமாகச் செய்வது அசாஸ்திரீயமென எனது அபிப்ராயம். பந்தபுரி அக்ரஹாரம் படித்துறை ஸ்வாமிகள் கௌணபக்ஷத்தை அவலம்பித்து ஸாங்கோபாங்கமாக மேற்படி பூஜையை நடத்த ஸங்கல்பித்திருக்கிறார்கள்.

அதற்கு நாம் சக்திக்கிசைந்தவாறு உபகரிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அப்போதாவது பகவத் படித்துறைஸ்வாமிகள் ஸமீபத்திலிருந்தால் தோஷம்விலகும். ஆதலால் ஆஸ்திகர் அனைவரும் மேற்கண்ட வியாஸபூஜையை நடத்திவைத்து ஆசார்ய ப்ரஸாதத்தையும் பெற்றுக்ருதார்த்தர்கள் ஆகவேண்டுமாறு வேண்டுகிறேன். இந்த வியாஸபூஜா காரியம் ஸ்வாமிகளுக்காகவல்ல, உலக க்ஷேமத்திற்காகத்தான்.

முக்கிய கவனிப்பு
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது)
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— என். கன்னுசாமி பத்தர். பெரியதெரு. கும்பகோணம்.

சென்னை அட்வகேட் ஜனரல்
500-ரூபாயே சம்பளம் பெறுவார்.

சென்னை அட்வகேட் ஜனரலாக இருந்துவரும் ஸ்ரீமான் ஸர். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரவர்கள், காங்கிரஸ் மந்திரி ஸபையாரின் விருப்பத்திற்கும், வேண்டுகோளுக்கும் இணங்கி இனிமேல் 500 ரூபாயே மாதச் சம்பளம் பெற்றுக் கொள்ளுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறதாகத் தெரிகிறது.

பூர்ண மது விலக்கு
சேலத்தில் அமுல்

புதிய மந்திரி ஸபையார் தங்களது மது விலக்குக் கொள்கையின்படி சேலம் ஜில்லாவில் பூர்ண மது விலக்குத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர நிச்சயித்திருக்கிறார்கள். அங்கு எல்லாக் கள்ளுக் கடைகளும் எடுத்துவிடப்படும். அந்நிய தேச சாராய வகைகளும் தடை செய்யப்படும். இதன் மூலம் ஸர்க்காருக்கு 11-லக்ஷம் ரூபாய் வருமானம் குறைந்து விடும்.

டாக்டர் ஸுப்பராயன்
மந்திரிபதவி ஏற்றார்.

கல்வி மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கும் டாக்டர் ஸுப்பராயன் லண்டனிலிருந்து ஆகாச விமான மூலமாக கராச்சி வந்து, சென்னைவந்தார். அவர் ராஜ விசுவாஸப்பிரமாணம் செய்து மந்திரி பதவி ஏற்றார். 30உபன்று கவர்னர் தலைமையில் சென்னை மந்திரிசபைக் கூட்டம் நடை பெற்றது. வரவு செலவு திட்டத்தைப் பற்றி விவாதம் நடந்ததாகத் தெரிகிறது.

அயர்லாந்தில் அமளி.

ஜார்ஜ் சக்ரவர்த்தியாரும் அவரது மனைவியும் அயர்லாந்து எல்லைப்புறத்திற்கு விஜயம் செய்தார்கள். ஜனங்கள் குதூஹலமாக வரவேற்றனர்.

ஆனால் குடியரசுக்காரர்கள் மன்னரிடம் த்வேஷத்தால் அந்த ஸமயம் அங்கு வெடிகுண்டு, தீ வைத்தல் முதலிய பல அக்ரமங்களை செய்தனர்.

அபேதவாதக் கக்ஷியை கலைத்து விட வேண்டும்.
அமதாபாத்தில் விருப்பம்

ஆமதாபாத்திலுள்ள அபேதவாதக் கக்ஷியைச் சேர்ந்த பலர், இனிமேல் அபேதவாதக் கக்ஷியென்று ஒரு தனிக் கக்ஷி இருக்க வேண்டியது அவச்யமில்லை என்றும், பெய்ஸ்பூர் காங்கிரஸ் தீர்மானங்கள் அனேகமாக அபேதவாதக் கொள்கைகளை ஆதரிப்பவைகளாகவே இருப்பதால் காங்கிரஸில் அபேதவாதக் கக்ஷி தனியாக இருக்கவேண்டிய அவச்யமில்லையென்று அக்கக்ஷியிலிருந்து விலகிவிட்டார்கள்.

மூகபஞ்சசதியின் முதல் பாகம்.
"ஆர்யா சதகம்"
Mr. G. V. கணேசய்யர், B. A., B L.
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
100 பக்கங்களுக்குமேல் கொண்டது.
தபால்செலவு வேறு] [விலை அணா 0-8-0.
கிடைக்குமிடம்:— ஸ்ரீஜனார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், (லிமிடெட்), கும்பகோணம்.

ஸனாதனிகள் காங்கிரஸில் சேரலாமா?

(ஒரு ராஜீயவாதி எழுதுகிறார்.)

ஸநாதனதர்மிகள் காங்கிரஸில் சேர்ந்துவிடலாமா என்பதைப்பற்றி வெகுகாலமாகச் சிலர் யோஜனை சொல்லிவந்திருந்தபோதிலும் ஸமீபத்தில் இந்த பிரஸ்தாபம் அதிகப்பட்டிருப்பதாக அறிகிறோம். ஆர்யதர்மம் பத்திரிகையில் இவ்விஷயமாக இரண்டு நிருபங்கள் வெளிவந்திருப்பதைப் பலர் படித்திருக்கலாம். காங்கிரஸ்காரர்கள் மந்திரி பதவியேற்று மாகாண நிர்வாஹத்தை நடத்தச் செய்யப்போவதால் இச்சமயத்தில் ஸநாதனிகள் தங்களுடைய நிலைமையைப்பற்றி தீர்க்கமாக ஆலோசிக்கவேண்டியது அவச்யமே. இதுவரையில் அவர்கள் எந்தக் கொள்கையைக் கொண்டிருந்தபோதிலும், தற்போது ஏற்பட்டுள்ள ராஜீய நிலைமையை அனுஸரித்து அவர்களும் நடந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் ஸநாதனிகள் காங்கிரஸில் சேர்ந்து தங்கள் கொள்கைகளை வற்புறுத்துவது நல்லதா? அல்லது எப்போதும்போல் வெளியில் நின்று பேசிக்கொண்டிருப்பதா, என்ற யோஜனை கிளம்புகிறது.

இவ்விஷயத்தில் நாம் சில அபிப்ராயங்களை இங்கு வெளியிட விரும்புகிறோம். அவைகளை ஸனாதனிகள் நல்ல மனதுடன் பரிசீலனம் செய்து பார்ப்பார்களென்று நம்புகிறோம்.

இதுவரையில் ஸநாதனிகள் தனித்துநின்று பிரசாரம் நடத்திவந்ததில், பயன் ஏற்படவில்லையென்று நாம் சொல்லவில்லையாயினும் அது பரிபூர்ணமாயில்லாததுடன் சில விஷயங்களில் நாம் தோல்வியும் அடைந்துள்ளோம்.—நமது பிரசார[illegible]க்குப் பணமும், மனித ஸஹாயமும் கிடைப்பதில் நமக்கு ஏற்பட்டுள்ள அனுபவமும் இச்சமயம் கவனிக்கத்தக்கது. சுத்த வைதிக தோரணையில் இருப்பவர்களைக்கொண்டு நமது பிரசாரத்தைத் திறம்பட நடத்துவது அஸாத்யமே. அவர்களைத் தூண்டிவிட்டுக்கொண்டேயிருந்தால் அசைந்துகொண்டிருப்பார்கள். தாங்களாகவே ஒரு இயக்கத்தை முன்னின்று நடத்தும் உத்ஸாஹமும், தைர்யமும், சிரத்தையும் அவர்களுக்குப் போதாது. ராஜீய பரிசயத்துடன் விஷயங்களைப் பேசவேண்டிய இக்காலத்தில் அவர்களுடைய வெறும் சாஸ்திர ஸம்பிரதாயப் பேச்சுக்கள் எடுபடுவதில்லை. ஆகையால் சுத்த வைதிகர்களுடைய உதவியைக்கொண்டு நமது இயக்கத்தை நாம் திறமையாக நடத்திப் பலன்பெற முடியுமென்று எனது அனுபவத்தில் தோன்றவில்லை.

[illegible]யிலுள்ள பல ஸநாதனிகள் அங்காங்கு தொழில்களில் ஒட்டிக்கொண்டும், சர்க்கார் வேலைகளில் அமர்ந்தும் ஜீவனம் செய்கிறவர்களாயிருப்பதால், நமது இயக்கத்தை அவர்கள் முன்னின்று நடத்தமுடியாது. இதுவும் நமது அநுபவத்தில் தெரிந்ததே.

வேறு பலர் உண்மையான ஸநாதனிகளாயிருந்தாலும் "நமக்கென்ன இந்த வம்பு" என்று உதாஸீன புத்தியால் ஒதுங்கியிருப்பதையும் பார்க்கிறோம். பெரிய அந்தஸ்திலுள்ள ஸநாதனிகளைப்பற்றிக் கேட்கவேண்டாம். அவர்கள் காங்கிரஸ் முதலிய ராஜீயக் கக்ஷிகளுக்கும், சீர்திருத்தக்காரர்களுக்கும், நாகரீக வேஷதாரிகளுக்கும் பயந்து, உள்ளே பதுங்குவதுடன் நமது ஆசாரதர்மங்களைப் பற்றிபஹிரங்கமாக ஆதரித்துப் பேசவும் வெட்கப்படுகிறவர்களாயிருக்கிறார்கள்.

மதாசாரியஸ்தானங்களில் வீற்றிருப்பவர்களாவது இந்த அபாயகாலங்களில் தர்மத்தை ரக்ஷிக்க சிரத்தைகாட்டுகிறார்களா? அதுவுமில்லை. ஸநாதனப் பிரசாரத்திற்கு அவர்கள் செய்யும் ஒத்தாசை நாம் அறிந்ததே. அவர்களில் பலர் இப்போது தேசத்தில் என்ன நடக்கிறதென்பதை அறியாமலேயோ, அல்லது அலக்ஷியத்தாலோ, தங்கள் சொந்தக் காரியமொன்றிலேயே மூழ்கிநிற்கிறார்கள். பத்து லக்ஷக்கணக்கான பணங்களுள்ள பல தர்மஸ்தாபனங்கள் நம் தென்னிந்தியாவில் நிறைந்து இல்லையா? நமது பிரசாரத்திற்கு ஒரு தினசரி அல்லது வாரப்பத்திரிகைகூட நடத்த நமக்கு ஆர்ஹதையில்லையென்றால் நமது நிலைமையை வர்ணிக்கவேண்டுமா? நமது ஸநாதனப் பிரசாரத்திற்குப் பணம்கூடக் கிடைக்காமல் நாம் கஷ்டப்படவில்லையா?

இவ்வளவு அநாதரவிற்கிடையிலும் நாம் ஏதோ சிறிது பிரசாரம் நடத்திவந்ததற்குப் பெருமைப்படவேண்டியதுதான்.

ஆயினும், இந்த நிலைமையிலேயே நாம் இருப்பதைவிட வேறு புதியவழியில் சென்று ஏன் பரீக்ஷைசெய்யக்கூடாது? அத்தகைய உபாயம் என்னவென்பதை நமது தலைவர்கள் ஏன் யோஜிக்கக்கூடாது?

ஸமீபத்தில் பல ஸநாதனக் கூட்டங்களில் பேசிய நம் தலைவர்களும், அங்கு செய்யப்பட்டுள்ள தீர்மானங்களும் ராஜீய விஷயங்களில் நாம் காங்கிரஸ் கொள்கையை ஏற்றுக்கொள்ளுவதாகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். நமது தர்மங்கள் காக்கப்படவேணுமென்கிற ஒரு அம்சந்தான் நமக்கும் காங்கிரஸுக்கும் ஏற்பட்டுள்ள வேற்றுமைக்குக் காரணமென்று சொல்லுகிறோம். ஆகையால் பெரும்பாலான அம்சத்தில் நாம் காங்கிரஸை ஆதரிக்க தயாராக இருக்கையில் ஒரு விஷயத்திற்காக அதை விட்டுப் பிரிந்துநிற்க வேண்டுமா? நாமும் காங்கிரஸில் சேர்ந்து நமது மதப்பாது[illegible] அங்கு வற்புறுத்தக்கூடாது? இப்போது நமது கக்ஷிகளை நமது கூட்டங்களிலேயே நாம் சொல்லி வருகிறோம். அவை தேசத்தில் ஸரியானபடி பிரசுரப்படுவதில்லை. பத்திரிகைகள் நமது பிரசாரத்தை ஒழுங்காகப் பிரசுரிப்பதில்லை. காங்கிரஸ்காரர்களுக்கு நமது கக்ஷியின் நியாயங்கள் தெரியவழியில்லை. ஆதலால் ஸநாதனிகள் காங்கிரஸில்சேர்ந்து காங்கிரஸ் கூட்டங்களிலேயே நமது எண்ணங்களைத் திறமையாக எடுத்துச்சொன்னால் அவர்களுடைய மனதையே திருப்பிவிடமுடியும்.

எல்லோரும் திருந்தாவிடினும் ஒரு சிலராவது நமது கக்ஷியை ஆதரிப்பவர் ஏற்பட்டு அங்கு நாம் ஒரு பிரிவினராக இருந்துவரமுடியுமல்லவா? நமது அபிப்ராயங்களை பெரிய காங்கிரஸ்தலைவர்கள் உள்பட எளிதாக புறக்கணித்துவிட முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். காங்கிரஸ் கூட்டங்களிலேயே நாம் விவாதம் நடத்தினால் பத்திரிகைகளும் அதைப் பிரசுரிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு நமது அபிப்ராயம் பிரசுரமாகும். பலரும் அதைக் கவனித்துப்படித்து அதிலுள்ள நியாயத்தை உணரக்கூடும்.

காங்கிரஸில் சேருவதற்காக நாம் ஸநாதனக் கொள்கைகளை எள்ளளவேனும் குறைத்துக்கொள்ள வேண்டியதில்லை. விட்டுக்கொடுக்கவும் வேண்டியதில்லை. இப்போது காங்கிரஸில் தீவ்ரவாதிகள், அபேதவாதிகள், போன்ற சில பிரிவினர் இருந்துவரவில்லையா? அதுபோல் ஸநாதனிகளும் ஒரு பிரிவினராக இருந்து வரமுடியாதா? ஸநாதனிகள் காங்கிரஸ் நிர்வாஹஸ்தானங்களை ஏற்றுக்கொள்ளவேண்டிய அவச்யமும் இல்லை. ஸாதாரண மெம்பர்களாக தற்காலம் இருந்தாலே போதுமானது. மஹம்மதியர் முதலியவர்கள்கூடக் காங்கிரஸில்சேர யோஜனை செய்வதையும் கவனிக்கவேணும். காங்கிரஸில் நமது முயற்சி பலிக்காவிட்டால் நாம் மீண்டும் தனியாகப்பிரிந்துவிடமுடியும். காங்கிரஸ் ஒரு கட்டுப்பாடுள்ள பலமான ஸ்தாபனமாயிருக்கிறது. அதுதேச நிர்வாஹத்தையும் நடத்துகிறது. அதிலுள்ளவர்கள் உடல், பொருள், ஆவிகளைக்கூட லக்ஷ்யம் செய்யாமல் தியாகம்செய்துவருவது உண்மை. அதனாலேயே அதற்கு ஏற்றம். ஸநாதனிகளில் இத்தகைய நிலை இருப்பதாக நாம்சொல்லிக்கொள்ளமுடியுமா? ஆகையால் அதிகார சக்தியும் வலுவும் உள்ள அந்தஸ்தாபனத்தில் புகுந்து அதன்மூலம் நமது பிரசாரத்திற்குப் பலம் தேடிக்கொள்ளுவது புத்திசாலித்தனமாகுமென்று நினைக்கிறோம். நாம் பெரிய கூட்டங்கள் போட்டுச் செய்யும் பிரசாரத்தைவிட ஒரு சிலர் காங்கிரஸில் சேர்ந்து நமது கொள்கையை வற்புறுத்துவது அதிக பிரயோஜனமுள்ளதாயிருக்கும். ஆகையால் அங்காங்கு சில ஸநாதனிகள் கட்டுப்பாடாகக் காங்கிரஸில் சேரலாமென்று நமது யோஜனை.

காங்கிரஸ் காரர்கள் கூட ஸர்க்காருக்கு வெளியில் நின்று வேலை செய்வதைவிட ஸர்க்கார் நிர்வாஹத்தில் புகுந்தே தங்கள் கொள்கைளைப்பிரபலப்படுத்தி காரியத்திலும் நிறைவேற்ற முடிகிறதல்லவா?

சென்னை மந்திரிஸபையின் காரியங்கள்.

சென்னை மந்திரிஸபையார் ராஜீய விஷயங்களில் பல ஸௌகர்யங்களை ஒவ்வொன்றாகச் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

கொத்தப்பட்டணம் ராஜீயப் பள்ளிக்கூட வழக்கில் தண்டிக்கப்பட்ட 16 பேர்களையும் [illegible] ஜேல், சிறைகளில் கைதிகள் யாவருக்கும் மோர் கொடுக்கவேண்டுமென்று உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த மாகாணத்தில சில பத்திரிகைகளிடமிருந்து வாங்கப்பட்டிருந்த ஜாமீன் தொகைகளைத் திருப்பிக்கொடுத்து உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை வைத்திய கலாசாலை
டாக்டர லக்ஷ்மணஸாமி முதலியார்தலைவர்

சென்னை மெடிகல் காலேஜிக்கு இதுவரை வெள்ளைக்காரர்களே தலைமை உபாத்தியாயர்களாக நியமனம் பெற்றுவந்தார்கள். ஆனால் புதிய மந்திரி ஸபையார் டாக்டர் லக்ஷ்மணஸாமிமுதலியாரை தலைமை உபாத்தியாயராக நியமித்து விட்டார்கள்.

ஐ. எம். எஸ். வெள்ளைக்காரர்கள் இதை ஆக்ஷேபித்துக் கிளர்ச்சி செய்கிறார்களாம்.

தடைநீக்கமும், ஜாமீன் ரத்தும்.

பம்பாயில் மந்திரிகள் ஏற்கனவே யிருந்த கவர்ன்மெண்டால் சட்ட விரோதமென்று தடைசெய்யப்பட்டிருந்த 227 பொதுஸ்தாபனங்களின்மீது இருந்த தடைகளை ரத்துசெய்துவிட்டார்கள்.

பல அச்சுக்கூடங்கள், பத்திரிகைகள் இவைகளின் ஜாமீன் வாபீஸ் செய்யப்பட்டது. 19பத்திரிகைகளின் ஜாமீன்தொகை திருப்பிக் கொடுக்கப்பட்டது.

ஸ்ரீமான் காந்தியால் பிரபலமாக நடத்தப்பட்டுவந்த நவஜீவன் பத்திரிகை, நவஜீவன் அச்சுக்கூடம் இவைகளும் இந்த ஜாப்தாவில் சேர்ந்தவை.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈஸ்வர-ஷு ஆடி-மீ 21உ

மந்திரிகள் கவனிக்க வேண்டிய விஷயம்.

மாகாண ஸ்வய ஆக்ஷி நிர்வாஹத்தை ஏற்றுக்கொண்டிருக்கிற மந்திரிகளின் பொறுப்பு மிக்க அதிகமானது. ஜனநாயகமுறைப்படி யேற்பட்டுள்ள ராஜ்யமெங்கும் மந்திரிகளின் நிலைமை இத்தகையதே. லக்ஷக்கணக்கான ஓட்டர்களுக்கு இவர்கள் ஜவாப்தாரிகளாயிருக்கிறார்கள். பற்பலவிதக் கொள்கையுள்ள ஓட்டர்களில் ஒவ்வொருவரும் தம்தம் விருப்பத்தை மந்திரிகள் நிறைவேற்றிவைப்பார்க [illegible] இதற்கு மாறாக நடந்தால் அதிருப்தி ஏற்படுவதும் ஸஹஜம். லக்ஷக்கணக்கான வோட்டர்களில் யாருடைய அபிப்ராயத்தை அநுஸரிப்பது? எதை விடுவது? எல்லாவற்றையும் அப்படியே அநுஷ்டிப்பதும் ஸாத்யமா? ஆதலால் யாராவது ஒரு சிலருடைய எதிர்ப்பு மந்திரிகளுக்கு இருந்துகொண்டுதானிருக்கும்; இது ஜனநாயகத்தின் அமைப்பிலுள்ள குறையே.

ஆயினும் இந்த வியாஜத்தை, அல்லது தைர்யத்தைக்கொண்டு மந்திரிகள் பெரிய புரட்சிகரமான மாறுதல்களில் இறங்கிவிடுவது நேர்மையாகாது, நீதியுமாகாது என்று ராஜதந்திரிகள் ஒப்பிய விஷயம். நமது மாகாணத்தில் மந்திரிகள் பதவியேற்றது முதல் பத்திரிகைகளில் அநேகர் அநேகவிதமாக ஆலோசனைகளை அவர்களுக்குச் சொல்லிவருகிறார்கள். மந்திரிகளும் சுறுசுறுப்பாக, எதிர்பாராத பல கார்யங்களை தைர்யமாகச் செய்துவருகிறார்கள். மந்திரிகள் ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கை நடத்தியும், இந்தியதேசப் பழக்கவழக்கங்களை ஆசரணைக்குக்கொண்டுவந்து நடந்துகொள்வதில் பலருக்கு திருப்தியையும் ஸந்தோஷத்தையும் உண்டுபண்ணியிருக்கிறார்கள். ஆயினும் இனிமேல்தான் அவர்கள் மிக்க அபாயகரமான வழிகளையெல்லாம் கடக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

பொருளாதார விஷயங்களில் நிலவரிவஜா முதலிய அவச்யமான சீர்திருத்தங்கள் ஒரு புறமிருக்க, வியவஸாயிகளின் கடன்பளு நிவாரணம், குடிவார பாத்யம், ஜமீன் ஒழிப்பு ஸொத்துரிமை நிர்ணயம் போன்ற புரட்சிகரமான பலயோஜனைகள் காங்கிரஸ் கூட்டங்களிலேயே சொல்லப்படுவதைப் பார்க்கிறோம். காங்கிரஸ் மெம்பர்களில் அநேகர் இந்த மாறுதல்களைச் செய்துவிடத் துடித்துக்கொண்டிருப்பதை யாவரும் அறிவர். ஜமீன் ஒழிப்பு முதலிய விஷயமாக இப்போதே மசோதா கொண்டுவர முயற்சி நடப்பதையும் பார்க்கிறோம்.

பொருளாதார விஷயத்தில்போல் மதாசார விஷயத்திலும் தீவ்ரமான மாறுதல் செய்யத் துடித்துக்கொண்டிருப்பவர் பலரை நாம் அறிவோம். மந்திரிகளிலேயே சிலர் இந்த மனோபாவமுள்ளவர்களென்பதை யாவரும் அறிந்ததே. இந்தச்சலுகையை முன்னிட்டுப் பல மெம்பர்கள் தங்கள்மனப்போனபடியெல்லாம் மதாசாரத் திருத்த மசோதாக்களைக்கொண்டுவரக்கூடும். அதற்கேற்ற அறிகுறிகளும் தென்பட ஆரம்பித்திருக்கின்றன.

இந்த நிலைமையில் காங்கிரஸ் மந்திரிகள் என்னசெய்யப்போகிறார்களென்பதை ஓட்டர்கள் அறிந்துகொள்ளப் பாத்யப்பட்டிருக்கிறார்கள். மந்திரிகள் தற்போது வரவுசெலவு திட்டத்தை ஆலோசித்து வருவதுடன், தங்களுடைய எதிர்காலப் பொதுவேலைத் திட்டத்தையும் நிர்ணயிக்கும்காலம் இதுவே. பொருளாதார விஷயத்திலும், மதாசார விஷயத்திலும் காராச்சித் தீர்மானப்படி நடக்கப்போவதாக காங்கிரஸ் எலெக்ஷன் அறிக்கையில் கூறப்பட்டிருந்தபோதிலும், அதற்கு விரிவான வியாக்யானம் செய்வதன் மூலம் அதன் போக்கே மாறிவிடக்கூடியதாக இருக்கிறது. ஸ்ரீமான் நேரு மதஸம்பந்தமான காராச்சித் தீர்மானத்திற்கு ஸமீபத்தில் வெளியிட்ட வ்யாக்யானம் பலர் அறிந்ததே. ஆதலால் காராச்சித் தீர்மானம் குழப்பத்தில் அகப்பட்டுக் கொண்டிருப்பதால் அதைக் காட்டாமல் மந்திரிகள் தெளிவான வேறு ஒரு வியவஸ்தையை இப்போது ஏற்படுத்திக் கொள்ளுவது விரும்பத்தக்கதாகும்.

இவ்விஷயமாக ஐக்யமாகாணமந்திரிகனம் வல்லபபந்து வெளியிட்டுள்ள வேலைத்திட்டம் கவனிக்கத்தக்கது. மதாசாரவிஷயமாகத் [illegible] ஸபை தெரிவித்[illegible] சென்னை மந்திரிகளும் கவனிப்பது நலம்

பொருளாதார விஷயமாகவோ, மதாசார விஷயமாகவோ அடிக்கடி மசோதாக்கள் வந்துகொண்டிருக்கும் போதெல்லாம் நினைத்தபடி பேசாமலிருக்கவும், நினைத்தபடி தீர்மானிக்காமலிருக்கவும் இப்போதே காங்கிரஸ்காரர்களுள் ஒரு உடன்பாடு ஏற்படுத்திக் கொள்வது விரும்பத் தக்கது. மதாசார விஷயமாக வரும் மசோதாக்கள் இன்னின்ன வகையில் தான் இருக்கவேண்டுமென்றும், அவைகளை விவாதிப்பதிலோ, முடிவு செய்வதிலோ, இன்னின்ன ஸம்பிரதாயங்களை அநுஸரிப்பதென்றும் ஓர் வியவஸ்தை ஏற்பட்டுவிடவேண்டும். இங்கிலாந்தில் பார்லிமெண்டில் மதஸம்பந்தமான விஷயங்கள்கள் வந்தால் மதாசாரியர்களின் அபிப்ராயம் கேட்கப்படுவது வழக்கமாயிருக்கிறது. அதுபோல் இங்கும் ஒரு மசோதா வருமுன் அதைப்பற்றி மதாசாரியர்களின் அபிப்ராயம் அறியப்படுவது அவச்யமென்ற ஸம்பிரதாயம் ஏற்படவேண்டும். கிறிஸ்தவர், மஹம்மதியர் விஷயத்தில் மத மசோதாக்கள் வந்தால் என்னமுறை அநுஷ்டிக்கப்படுமோ அந்த ரீதியே ஹிந்துக்கள் மத விஷயத்திலும் அநுஸரிக்கப்படவேண்டும்.

புதிய அரசியல்படி சட்டஸபைகளுக்கு மத விஷயத்திலும் அதிகாரம் கிடைத்திருப்பதால் அதை வெகு ஜாக்ரதையாக உபயோகிக்க வேண்டிய கடமை மந்திரிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. தீவ்ரவாதிகளான சில மெம்பர்கள் மனம்போனபடியெல்லாம் தாறுமாறாக மதத்தைப்பற்றிப் பேசவோ, தீர்மானிக்கவோ இடம்கொடுத்துவிட்டால் வியவஸ்தையேயிராது. தினம் பொழுதுவிடிந்தால் சட்டஸபையில் இதேவேலையாகிவிடும். மதாபிமானிகளின் அதிருப்தியும், எதிர்ப்பும் அதிகரிக்கும். மந்திரிகள் விரும்பும் அமைதியான ஆக்ஷி ஏற்படுவது சிரமமாகும். ஆதலால் முன்னாடியே யோஜித்து இவ்விஷயத்தில்சிறந்ததும் ஆக்ஷேபத்திற்கு இடமில்லாததும், எல்லாக் கக்ஷியினரும் ஒப்பக்கூடியதுமான ஒரு ஸம்பிரதாயத்தை ஏற்படுத்திவிடவேண்டும்.

மந்திரிகள் தங்கள் காலத்தில் தேசோத்தாரண வேலைகளைத் தட்டுத் தடையின்றி செய்துகொண்டுபோகவும், ஒற்றுமையை வளர்க்கவும், அமைதியை நிலை நிறுத்தவும் விரும்புவதால், அதற்குப் பாதகம் நேரிடக்கூடிய விஷயங்களில் பிரவேசிக்காமலோ, அல்லது ஜாக்ரதை காட்டியோ நடந்துகொள்வார்களென்று பொது ஜனங்கள் எதிர்பார்ப்பது வீணாகக்கூடாதென்று நமது கோரிக்கை. பொது ஜனங்களுடைய ஒத்துழைப்பைக் கோரிவரும் மந்திரிகள் அத்தகைய நிலைமையை உண்டுபண்ண முயற்சிப்பது அவச்யமல்லவா?

மதுரை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம்.

4-வது வருஷாந்திர மகாநாடு.

மதுரை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் ஆதரவின்கீழ் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலிஜில்லா சனாதனிகளின் 4-வது மகாநாடு மேற்கண்ட சங்க கட்டிடமான மதுரை தமிழ்சங்கம்ரோடு 55 நெ. கட்டிடத்தில் நாளது ஆகஸ்டுமீ 13, 14, 15 தேதிகளில் கூடும். ஆத்தங்குடி ஸ்ரீமான் கதிரேசன் செட்டியார் அவர்கள் தலைமை வகிக்க இசைந்துள்ளார். மதுரை அட்வகேட் ப்ரும்மஸ்ரீ N. S விச்வநாதய்யர் அவர்கள் வரவேற்புகமிட்டித் தலைவர். மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான் V. V. ஸ்ரீனிவாஸய்யங்கார் அவர்கள் ஷை மகாநாட்டை திறந்து வைப்பார்.

அச்சமயம் ஒருபண்டித பரிஷத்தும் நடைபெறும். [illegible] பரிஷத்தில் [illegible] டாமை, ஆலயப்பிரவேசம் முதலிய மதசமூக விஷயங்களில் அரசர்கள் தலையிட்டு மாற்றலாமா என்பனபோன்ற விஷயங்கள் பரிசீலனை செய்யப்படும். ப்ரதிநிதிகளுக்கும் பண்டிதர்களுக்கும் வேண்டிய போஜன வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது. எல்லோரும் வரவேணுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறது,

ச்ருதி, ஸ்ம்ருதி, இதிகாச புராணங்களை ஏற்றுக்கொள்ளும் ப்ரதிநிதிகள்தான் ஷை சங்கத்தின்நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அநுமதிக்கப்படுவார்கள்.

யதேச்சாதிகாரம் ஓரளவு வேண்டியது தான்.

தமிழ் நாடு கமிட்டித்தலைவர் கூற்று.

பட்டுக்கோட்டையில் நடைபெற்ற தென் தஞ்சைராஜீய மஹாநாட்டில், மந்திரிஸபையை வாழ்த்தி ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. ஸ்ரீமான் கோவிந்தசாமி செட்டியார் என்ற பிரதிநிதி இதை எதிர்த்து, டாக்டர் ராஜனை மந்திரி ஸபையில் சேர்த்ததைப்பற்றி பலமாக கண்டித்து ஒரு திருத்தப்பிரேரணை கொண்டு வந்தார். இது ஒரு யதேச்சாதிகாரமென்று அவர் கண்டித்தார். இதை வாபீஸ் பெறும்படி பலர் வற்புறுத்தினர்.

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவரான ஸ்ரீமான் முத்துரங்க முதலியார் இதைப்பற்றி பேசுகையில்:—

> தேசம் முன்னேற்றமடைய வேண்டுமானால் ஓரளவு ஹிட்லரிஸம்(யதேச்சாதிகாரம்)வேண்டியதவச்யம். நூற்றுக்கு நூறுஜனநாயகம் இருந்தால் ஒரு கார்யமும் நடைபெறாது, என்று சொன்னார்.

அதனால் காங்கிரஸ் தலைவர்கள் ராஜனை நியமித்த விஷயத்தில் யதேச்சாதிகாரமாக நடந்ததை மற்றவர்கள் அப்படியே ஒப்பவேண்டியது தானென்று அவர் குறிப்பிட்டார். கடைசியாக திருத்தம் வாபீஸ் பெறப்பட்டதாம்.

457

குறிப்புகள்.

மேற்றிசைகளில் ஸ்திரீ மந்திரிகள் உண்டா ?

சென்னை மந்திரிஸபையில் ஸ்திரீகளுக்கு ஒரு ஸ்தானம் கொடுக்காததைப்பற்றி முத்துலக்ஷ்மீ ரெட்டி கோஷ்டியார் ஏமாற்றமும் கோபமும்காட்டிவருகிறார்கள். பிரஸவம், சிசுபரிபாலனம் போன்று ஸ்திரீகளாலேயே கவனிக்கப்படத்தக்க பல விஷயங்கள் ஸ்திரீ மந்திரி நியமனத்தால்தான் சீர்படுமென்றும் புருஷ மந்திரிகளால் முடியாதென்றும் வாதிக்கிறார்கள்.

இதுவரையில் ஸ்திரீகள் பிரஸவிக்காமலோ, சிசு பரிபாலனம் நடக்காமலோ போய்விட்டதா? அல்லது புதிய அரசியலில் அவைகளும் புதுமாதிரியாக இருக்கப்போகின்றனவா? இந்தியாவில், அதிலும் சென்னை மாகாணத்தில் இந்தக் கூக்கூரல் நடக்கிறதாயினும் ஜநநாயகம் நடக்கும் வேறு எந்த தேசத்திலாவது ஸ்திரீ மந்திரிகள் ஏற்பட்டதாக நாம் கேள்விப்படுகிறோமா! மேற்திசைகளில் உள்ள எந்த நாட்டிலும் ஸ்திரீகள் ராஜாங்க நிர்வாஹஸ்தானத்தில் வந்ததாகத் தெரியவில்லை.

இப்போது ஜனநாயக தத்வத்தை நிலைநிறுத்தி வருவதும், இந்தியாவிற்கு அதை உபதேசித்து அநுஷ்டானத்தில் கொண்டுவந்துள்ளதுமான இங்கிலாந்திலாவது ஸ்திரீமந்திரிகள்உண்டா? அங்குலிபரல், கன்ஸர் வேடிவ், தொழில், தேசியம் முதலிய பல கக்ஷிகள் மாறி மாறி அரசு புரிந்தனவே? ஒரு கக்ஷியாவது இதுவரையில் ஸ்திரீ மந்திரிகள் நியமித்ததா? தற்போதுள்ள பால்டுவின் மந்திரிஸபையாவது ஒரு ஸ்திரீயை மந்திரியாக நியமித்து, தேசத்தினுடையவும், தம் கக்ஷியினுடையவும், வெள்ளை ஸ்திரீகளுடையவும் முற்போக்கைக்காட்டியிருக்கக் கூடாதா? இதுமட்டுமில்லை. ஜனநாயகமும், முற்போக்கும்மிகுந்துள்ள இங்கிலாந்தில் ஸ்திரீ ஸ்வாதந்திரியம் எப்படியிருக்கிறதென்பதே கவனிக்கத்தக்கது. வெகுகாலம்வரையில் ஆங்கு ஸ்திரீகளுக்கு வோட்உரிமை கொடுக்கப்படவில்லை. ஸமீபத்தான் அது கிடைத்தது. 600 மெம்பர்கள் உள்ள காமன்ஸ் ஸபையில் 60 ஸ்திரீகளே அபேக்ஷகர்களாகச்சென்ற தேர்தலில் முன்வந்தார்கள். அதிலும் 8 பேர்களே ஜயித்தார்கள். புருஷ வோட்டர்களைவிட ஸ்திரீ வோட்டர்கள் அதிகமாயிருந்தும் 8 ஸ்திரீகளே பார்லிமெண்ட் மெம்பர்களாக இருப்பது ஆச்சர்யமல்லவா?

வெள்ளைக்காரஸ்திரீகள் தங்களுக்கு மந்திரி பதவி வேண்டுமென்று அங்கு கிளர்ச்சி செய்ததாகவும் நாம் கேள்விப்படவில்லை.

ஜர்மனியில் ஹிட்லர் ஸ்திரீகளைக் குடும்ப வேலையோடு நிற்கும்படி செய்திருக்கிறார். பிரான்ஸ், இதாலி, ரஷ்யா, ஆஸ்திரியாபோன்ற எந்ததேசத்திலும் ஸ்திரீகள் மந்திரிகளாக வர முயற்சியைக்கூட காணவில்லையே?

வெள்ளைக்காரர்களிடமிருந்தே நம்தேச சீர்திருத்த ஸ்திரீகள் நாகரீகமும் முற்போக்கும் கற்று சிரழிய ஆரம்பித்திருக்கிறாள். அப்படியிருந்தும் அவர்கள்கூட விரும்பாத மந்திரி பதவியை இந்தியஸ்திரீகள் விரும்புவது விநோதமல்லவா?

அடக்கம், அச்சம், நாணம், ஸன்மார்க்கம் முதலிய நற்குணம் நிறைந்த இந்தியஸ்திரீகளுக்கு ஏற்காத ஓட்டு ஸ்வதந்திரமும், பிரதிநிதி ஸ்தானமும் கிடைத்தபின், அதிலிருந்து மேல்படிக்கும் இவர்கள் ஏறப்பார்க்கிறார்கள் போலும்?

கோடிக்கணக்கான குலஸ்திரீகள் குடும்பத்தைவிட்டு வெளிவர வெட்கப்படுகிறவர்களாயிருப்பார்கள். அவர்கள் பெயரால் பிரதிநிதித்வம் பெறவும், மந்திரிப்பதவி வஹிக்கவும் சில சீர்திருத்த ஸ்திரீகளுக்கு என்ன உரிமை இருக்கிறது?

கவர்ன்மெண்டாரும், சீர்திருத்தக்காரர்களும் இந்திய ஸ்திரீகளின் கிளர்ச்சிக்கு அதிகம் இணங்கி இங்கிலாந்திலில்லாத வகையில் கூட அவர்களுக்கு அதிக இடம் கொடுத்துவிட்டதாலேயே இப்போதைய மந்திரிபதவிக் கிளர்ச்சிக்கும் ஸ்திரீகள் துணிந்துவிட்டார்கள். தாங்கள் கண்மூடித்தனமாகச் செய்த பிசகின் பலனை கவர்ன்மெண்டாரும் சீர்திருத்தவாதிகளும் இப்போது அநுபவிக்கிறார்கள். நீதியும், தர்மமும், ஸன்மார்க்கமும் ராஜ்யத்தில் நிலைத்திருக்கவேணுமானால், ஸ்திரீகள் மந்திரிகளாக வருவதற்கு இடமில்லை.

முதல்மந்திரி வேஷ்டி துவைக்கிறார்! ஸநாதநத்தின் வெற்றியா ?

சென்னை முதல் மந்திரியான ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியார் மந்திரி பதவி ஏற்றபிறகுகூடத் தமது வேஷ்டியைத் தாமே துவைத்துவருகிறார். இதை போட்டோ பிடித்துச் சென்னை மெயில் பத்திரிகை 27உ யன்று பிரசுரித்திருக்கிறது. இந்தியாவில் ஒவ்வொரு மனிதனும் தனது துணிகளைத் தானே துவைத்துக்கட்டும் வழக்கம் எங்கும் இன்றும் இருந்துதான் வருகிறது. ஆயினும் ஆங்கிலம் படித்து ஆகாசத்தில் பறக்கும் சில நவீந நாகரிகர்கள் நாற்காலியில் சாய்ந்தபடியே டம்பமாகக் காலம் கழித்து வருவார்கள். அவர்கள் இந்த வழக்கத்தை விட்டிருக்கலாம். இந்த நவீன துர்ப்புத்தியால் பலர் தங்களுடைய கார்யங்களைத் தாங்களே செய்துகொள்வதுகூட கௌரவக் குறைவென்று நினைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். காலை வேலைகளில் [illegible] வேஷ்டி துவைப்பதும் அநாகரிகமென்று இக்காலத்தில் சிலருடைய எண்ணமாயிருக்கிறது. வெள்ளைக்கார ரீதியில் குடும்பத்தை நடத்தி வாழ்க்கை செய்கிறவர்களுக்கு மேற்கண்ட ஆசாரம் ஆச்சர்யமாகத்தோன்றுவது அதிசயமல்ல

ஆயினும் மிகுந்த படிப்பாளியும், மேதாவியும் தேசத்தலைவருமான ஸ்ரீமான் ஆசாரியர் கூட வேஷ்டி துவைக்கிறாரென்றால் நவீன காலத்தியவர்களுக்கு இது அதிசய ஸமாசாரம்தான்.

அதிலும் அவர் 4½கோடி ஜனங்களுக்கு அதிபதியாகி ஆங்கில அரசாட்சியில் வெகு உன்னதமாகக் கருதப்படும் ஒரு முக்ய மந்திரி ஸ்தானத்திலிருந்து கொண்டு இம்மாதிரி எளிய வாழ்க்கை முறையை அநுஸரிப்பதென்றால் இந்த 20வது நூற்றாண்டில் இது ஒரு முக்ய விஷயமல்லவா? சிறிய உத்யோகத்தில் ஸ்வல்பச் சம்பளத்தில் அமர்ந்திருப்பவர்கள் கூடத் தலைகால் தெரியாமல், ஆடம்பர ஆடை தரிப்பதும், ஸ்வதர்மத்தைக்கூட கௌரவக் குறைவாக நினைப்பதும், அம்மாதிரி செய்வோரைப் பரிஹஸிப்பதுமாக இருக்கையில், உயர்ந்த பதவியில் அமர்ந்துள்ள ஆசாரியர் இம்மாதிரி தம்தேச எளிய வாழ்க்கையையும், சிறந்த ஆசாரத்தையும் அநுஷ்டித்துக் காட்டுவது எவ்வளவு உயர்ந்த தேசாபிமானமென்பது சொல்லத் தேவையில்லை. இம்மாதிரி நம்தேச ஸம்பிரதாயத்தை அநுஷ்டிப்பதுதான் ஸநாதநமெனப்படுகிறது. ஸ்ரீமான் ஆசாரியாரின் இந்த ஆசரணையால் ஸநாதநத்திற்கே வெற்றியென்போம்.

பழைய ஆசாரங்களை அநுஷ்டிப்பவர்களை கர்நாடகமென்றும் மடிஸஞ்சியென்றும் நகைத்துவந்த ஆனந்தவிகடன் முதலிய பத்திரிகைகளும், சிலசீர்கெட்டவர்களும் இப்போது என்ன பதில் சொல்வார்கள்?

ஓர் ஸநாதநி.

சரீர உழைப்பு வரி. ஸ்ரீமான் கே. ஸந்தானத்தின் யோஜனை.

இந்தியா சட்டஸபை மெம்பரும், இந்தியன் எக்ஸ்பிரெஸ் பத்திரிகை ஆசிரியரும், அபேதவாத நோக்குமுள்ளவருமான ஸ்ரீமான் கே. ஸந்தானம் என்ற காங்கிரஸ் தலைவர் பவானியில் பேசுகையில், தமது கொள்கைப்படி இந்தியாவில், நிலவரி தத்வம் ஜமீன்தாரி முறை, சொத்து உரிமை இவைகளில் செய்ய வேண்டிய அபேதவாதச் சீர்திருத்தங்களைப் பற்றிப் பேசியிருக்கிறார்.

இதைத்தவிர அவர் இன்னொரு புதிய ஆலோசனை சொல்லியிருப்பது தான் விசேஷம். அதாவது:— நம் தேசத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிலிருப்பவர்களும் வர்ஷத்தில் சில தினங்கள் 12 ஆள்கள் செய்யக்கூடிய சரீர உழைப்பு வேலையை ஸர்க்காருக்குச் செய்து கொடுக்கவேண்டுமாம். இம்மாதிரி சரீர உழைப்பு வேலையைக் கட்டாயமாக்கி ஒரு சட்டம் செய்யவேண்டுமாம். அம்மாதிரி சரீர உழைப்புச்செய்யமுடியாத அசக்தர்களுக்கு அதற்குப் பதிலாக ஒரு ரூபாய் வரி விதிக்கவேண்டுமாம்" காங்கிரஸில் "சரீர உழைப்பு" நிபந்தனை சந்தாவாக வைக்கப்பட்டுப் பிறகு அது பயன்படாமல் மாற்றப்பட்டது ஞாபகம் இருக்கும். இந்த வேடிக்கை யோஜனையைப்பற்றிப் பிறகு விமர்சிப்போம்.

ஸ்ரீமான் அருண்டேலின் பயம்.

கன்ஸர்வேடிவ் கக்ஷி வேணுமென்கிறார்.

தியாஸபி ஸங்கத்தின் தலைவரான ஸ்ரீமான் டாக்டர் அருண்டேல் சென்னை மெயில் பத்திரிகையில் நீண்டவியாஸமொன்று எழுதியிருக்கிறார்.

ஸ்ரீமான் எம். என் ராய் போன்ற பலர் சென்னையில், அபேதவாதம், பொதுவுடமை இவைகளைப்பற்றி அதிகம் பேசியதை அவர் குறிப்பிட்டு, அவர்களுடைய பிரஸங்கங்களில் இந்தியா தேசத்திற்கு ஏற்றதான யோஜனை ஒன்றுமில்லையென்றும் ரஷ்யாபோன்ற மேற்றிசை தேசங்களின் நாசகரமானயோஜனையே இந்த உபந்நியாஸத்தில் நிறைந்திருப்பதாயும், ஸொத்துரிமையைப் பிடுங்குவது, நிலங்களைப் பங்கிடுவது ஸமூஹவியவஸ்தைகளை உடைப்பு போன்ற நாச வேலைகளையே எம். என். ராய் போன்றவர்கள் பேசி வருகிறதாயும், இதைப் பல ஜனங்கள் கேட்டுவருவதாயும், ஸாத்விக தோரணையில் வாழ்ந்துவரும் இந்தியாவிற்கு இந்தக் கொள்கைகள் மிகத் தீங்கு இழைக்கக் கூடுமென்றும், ஆதலால் பொதுவுடமை, அபேதவாதம் இவைகளை எதிர்க்கத் தனியாக ஒரு கக்ஷி உடனே அமைந்து வேலைசெய்ய வேண்டுமென்றும் அதில் சொல்லியிருக்கிறார்.

ஜமீன்களை ஒழிக்க மசோதா.

சென்னை சட்டஸபை மெம்பரும், தர்மபுரி ஜமீன்தாருமாகிய ஸ்ரீமான் நடேசசெட்டியார் என்பவர் சென்னை மாகாணத்தில் ஜமீன்களை எடுத்துவிட வேண்டுமென்று ஒரு மசோதா கொண்டுவர முயற்சிசெய்து வருவருகிறாராம்! பல ஜமீன்தார்களுடைய அபிப்பிராயத்தையும் கேட்டு வருகிறாராம்!

ஸ்ரீஜகத்குரு
வியாஸபூஜா முகாம்

Palokol
(க்ஷீராராம க்ஷேத்திரம்.)
West Godavary Dt.

நாகபட்டிணம் ஹிந்துமதாபிமான ஸங்கம்.

45-வது வருஷபூர்த்தி உத்ஸவம்.

நாகபட்டிணம் ஹிந்துமதாபிமான ஸங்கத்தின் 46-வது வருஷபூர்த்தி உத்ஸவமானது 23—6—37 சுக்ரவாரம் மாலை 7மணிக்கு ஸ்ரீ சட்டநாதஸ்வாமிகோவிலில் ஆரம்பிக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை இரவு 10மணிக்கு முடிவு பெற்றது. ஸநாதனதர்மத்திற்காக மிகுதியான தியாகம் செய்து உழைத்துவரும் திருக்கருகாவூர் பிரம்மஸ்ரீ T. L. சுப்பய்யர் அவர்கள் அக்ராசனம் வகித்தார்கள். வெள்ளிக்கிழமை சபையானது வேதகோஷத்துடன் ஆரம்பம் செய்யப்பட்டு சங்கத்தின் தலைவரான பிரம்மஸ்ரீ சிவராமய்யர் அவர்களால் அக்ராசனர் அவர்களுக்கு ஓர் வரவேற்பு பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

அக்ராசனர் முன்னுரை உபன்யாசத்தில் நம்முடைய தேசத்தில் ஏற்பட்டிருக்கும் கஷ்டங்கள் சுபிக்ஷமின்மை இவைகளுக்கெல்லாம் காரணம் ஸ்வதர்ம பரித்யாகமென்றும் காயத்ரீயை மட்டும் உபாஸிக்கும் பக்ஷத்தில் எவ்வித பலனும் தானே சித்திக்குமென்றும் எல்லோரும் கிராமங்களுக்குப் போய் கிராமங்களை சந்தோஷமாக விளங்கும்படி செய்யவேண்டுமென்று காங்கிரஸ் வாதிகள் சொல்லுவதை தானும் ஒப்புக்கொள்வதாகவும் ஆனால் அவ்விதம் செய்வதற்கு அவர்களால் குறிக்கப்படும் வழிகளை மாத்திரம் தான் ஒப்புக்கொள்ளவில்லையென்றும் [illegible] குப்போய் ஸ்வதர்மானுஷ்டானங்களைச் செய்துகொண்டும் வர்ணாச்ரம தர்மங்களை காப்பாற்றிக்கொண்டும் காயத்ரீ உபாசன பரர்களாக இருக்கும் பக்ஷத்தில் ஈச்வரானுக்ரகம் ஏற்பட்டு சுபிக்ஷமுண்டாகுமென்றும் வற்புறுத்திப் பேசினார்கள்.

பிறகு நாகை வக்கீல் ஸ்ரீ உ.வே. வி. நாராயண அய்யங்கார் அவர்கள் முக்தியென்ற விஷயத்தைப் பற்றி உபன்யசித்தார்கள். முக்தியென்றால் விடுதலையென்று அர்த்தமென்றும் இந்த சம்சாரமாகிற ஸாகரத்தில் இருந்து ஒவ்வொருவரும் விடுதலை அடைய பிரயத்தனம் செய்யவேண்டுமென்றும் முக்தியில் ஜீவன்முக்தி மிகவும் விசேஷமானதென்றும் அதற்குத் தகுந்த சிரத்தை மாத்திரம் இருக்கும்பக்ஷத்தில் இந்த ஜன்மாவிலேயே நாம்விடுதலையடையக்கூடுமென்றும் அதற்கு ஸ்வதர்மானுஷ்டானம் ஈச்வரோபாஸனம் வைராக்யம் இவைகள் அவசியமென்றும் ஜீவன் முக்தர்களுடைய லக்ஷணங்களையும் சொல்லிமுடித்தார்கள்.

திருவானைக்காவல் ஸ்ரீ ஜகத்குரு வித்யாஸ்தானத்திலிருந்து போலகம் பிரம்மஸ்ரீ ராமா சாஸ்திரிகள் அவர்கள் விஜயம் செய்து 'ஸ்வதர்மம்' 'ஈச்வரோபாசனம் என்று இரண்டு அரிய உபன்யாஸங்கள் செய்தார்கள். தர்மஸ்வரூபத்தை முதலில் நிருபணம் செய்தும் எதிலும் வியவஸ்தையானது அத்யாவச்யமென்றும் நம்முடைய மதத்தில் வர்ணாச்ரம தர்மமானது அவ்வித வியவஸ்தைகளில் முக்யமானதென்றும் அவரவர்கள் தங்கள் தங்கள் வர்ணாச்ரமங்களுக்குத் தகுந்தபடி ஸ்வதர்மங்களை அனுஷ்டிக்கவேண்டுமென்றும் ஸ்வதர்மானுஷ்டானம் சரிவர கைக்கொள்ளபடும் பக்ஷத்தில் மோக்ஷபர்யந்தமான சித்திகள் தானே நேருமென்றும் சொல்லி முக்யமான தர்மங்களையும் நிரூபணம் செய்தார்கள். பிறகு ஈச்வர சப்தத்தின் தாத்பர்யத்தை எடுத்துக்காட்டியும் உபாஸனம் என்ற சப்தத்தின் அர்த்தத்தைப்பற்றியும் விஸ்தாரமாகச் சொல்லி தர்மாசரணைத்தால் சித்தசுத்தி ஏற்பட்டு நைர்மல்யம் சித்தித்தால் ஈச்வர ஸ்வரூபத்தைத் தானே நாடுமென்றும் மூர்த்தி பேதங்களில் வித்யாசங்களைகவனியாமல் அவரவர்கள் தங்களுக்குப் பொருத்தமான ஒரு மூர்த்தியை கைப்பிடித்து உபாஸிக்கவேண்டுமென்றும் சொல்லி தற்காலம் தர்மத்திற்கு ஹானி உண்டாகும்படி செய்யப்பட்டுவரும் ஏற்பாடுகளை வெகுவாக கண்டித்துப் பேசினார்கள்.

ஆத்ம வித்யா பூஷணம் இஞ்சிக்கொல்லை பிரம்மஸ்ரீ ஜெகதீச்வர சாஸ்திரிகள் அவர்களும் சபைக்கு விஜயம் செய்து முதலில் தற்காலம் தர்மாசரண விஷயத்தில் உள்ள குறைவுகளும் அவைகளை நிவர்த்திக்க உபாயங்களும் என்ற விஷயத்தை வெகு கெம்பீரமாகவும் ச்ருதியுக்தி பூர்வமாகவும் பேசினார்கள். தற்காலம் ஆசாரம் மிகவும் சீர்குலைந்து இருப்பதாகவும் அதற்கு முக்ய காரணம் மேல்நாட்டாருடைய ஸம்பந்தமும் அவர்களுடைய நடை உடை பாவனைகளில் அபிருசியும் அவர்களுடைய பாஷைகளில் மிகுந்த அபிமானமும் தான் என்றும் ஏதோ இக்காலத்திலும் தர்மாசரணத்தை நடத்திவரும் பண்டிதர்களால் அழைக்கப்பட்ட ஓர் பெரியார் அவர்களுடைய சபையிலேயே அவர்களை பரிஹஸித்துப் பேசியது மிகவும் கண்டிக்கத்தக்கதென்றும் இவ்விதமான நிந்தைக்கு உள்படுவதால் பண்டிதர்கள் தங்கள் பாபங்களை போக்கிக்கொள்வதைத் தவிர இப்படிப்பட்ட வார்த்தைகள் அவர்கள் கௌரவத்தை எவ்விதத்திலும் குறைக்க முடியாதென்றும் நாம் நம்மிடத்தில் உள்ள குறைவுகளை மறைத்துவைத்து ஸம்ஸ்காரங்களை பிரயோசனமில்லாமல் செய்துகொ[illegible]மல்லவென்றும் தற்காலம் பல காரணங்களால் சம்பவிக்கும் பாபங்களுக்குதகுந்த பிராயசித்தங்களைகண்டுபிடித்து அவைகளை சபலமாகச் செய்துகொள்வதுடன் பாபங்களை விலக்குவதற்கு எவ்விதத்திலும் முயற்சி செய்யவேண்டுமென்றும் வெகு ஆவேசத்துடன் பேசினார்கள்.

பிறகு மறுநாள் 'ராஜயோகம்' என்ற விஷயமானது அவர்களால் உபன்யசிக்கப்பட்டது. ஞானசாதனமான வழிகளில் யோகம் முக்யமென்றும் அந்த யோகசாஸ்திரங்களை நன்கு ஆராய்ச்சி செய்து யோகத்திற்குத் தகுதியாக சித்தத்தை செய்வதற்கு நிஷ்காம்ய கர்மானுஷ்டானம் அவச்யமென்றும் யோகங்களில் பலவிதமான யோகங்கள் சொல்லப்பட்டிருந்தபோதிலும் அவைகளுக்குள் அஷ்டாங்கயோகமே மிகவும் நியமம் அத்யாவச்யமென்றும் ஹடயோகாதிகளை அப்யாசம் செய்து சிறிய சித்திகளில் அகப்பட்டு ஏமாற்றமடையாமல் கேவலம் ஞானசாதனமாகக்கூடிய அஷ்டாங்க யோகமே அவலம்பனத்திற்கு யோக்யமென்றும் சொல்லி யோக ஸ்வரூபங்களையும் நிருபணம் செய்தார்கள்.

இவ்வருஷம் கும்பகோணத்திலிருந்து ஸ்ரீ உ.வே. அக்னிஹோத்ரம் தாததேசிகாசாரியார் ஸ்வாமிகள் அவர்கள் சபைக்கு விஜயம் செய்து 'கீதாதத்வம்' என்ற வெகு அழகான உபன்யாசம் செய்தார்கள். நம்முடைய மதத்திற்கு முக்யமான ஆச்ரயம் வேதமென்றும் வேதத்தை அனுசரிக்காத எவ்வித சாஸ்திரமும் நமக்கு உபாஸிக்கயோக்யமில்லையென்றும் சொல்லி ஸ்ரீமத் பகவத்கீதையில் உபதேசிக்கப்பட்ட விஷயங்களில் ஸ்வதர்மானுஷ்டானமே முக்யமானதென்றும் அந்த தர்மத்தை, உபதேசம் செய்வதற்காகவே கீதாசாஸ்திரம் பிரவர்த்தித்ததென்றும் பக்தியோகம் ஞானயோகம் முதலிய பாகங்கள் கர்மயோகத்தை உபதேசிக்க அனுகுணமாக மட்டும் உபதேசம் செய்யப்பட்டதென்றும் சொல்லி தன்னுடைய அபிப்பிராயத்தை கீதாச்லோகங்கள் ச்ருத்யர்த்தத்தை எவ்விதம் அனுசரித்து உபதேசிக்கப்பட்டிருக்கிறதென்பதை நிருபணம் செய்வதின் மூலமாக ஸித்தாந்தப் படுத்தினார்கள். ச்ருதியையே முக்ய ஆதாரமாக வைத்து சாஸ்திரீயமாக செய்யப்பட்ட அவர்களுடைய உபன்யாசமானது மிகவும் ஆஹ்லாதகரமாக இருந்தது.

ராஜமன்னார்குடி ராமாயணவித்வான் பிரம்மஸ்ரீ வேப்பு சாஸ்திரிகள் அவர்கள் அத்யயன கௌரவத்துடனும் ஆராய்ச்சியின் மிகுதியுடனும் சங்கீதத்தின் சௌஷ்டவத்துடனும் ஸ்ரீமத் ராமாயணத்தில் அஹல்யா சாப விமோசனம் என்ற கட்டத்தை வெகு அழகாக உபன்யஸித்தார்கள்.

காளியாகுடி ராமாயணவித்வான் பிரம்மஸ்ரீ நடேச சாஸ்திரிகளவர்கள் அநேகவிதமாக எல்லோருடைய மனதையும் கவரும்படி ஹனுமத்ராவண ஸம்வாதம் என்ற கட்டத்தை வெகு மரிசையாக உபன்யஸித்தார்கள்

நாகை பிரம்மஸ்ரீ சேதுராம தீக்ஷிதர் அவர்கள் தர்மமும் மீமாம்ஸா சாஸ்திரமும் என்ற விஷயத்தை வெகு அழகாக உபன்யஸித்தார்கள். அவர்களுடைய உபன்யாஸத்தில் விவாஹ ஸம்ஸ்காரத்தை பிரதானமாக எடுத்துக்கொண்டு மந்திரார்த்தங்களையும் சொல்லி தற்காலம் ஏதோ பணக்குறைவால் ஒருநாள் செய்வதாக எல்லோரும் சொல்லிக்கொள்வதாகவும் விவாஹத்தை சாஸ்திரீயமாக செய்வதால் எவ்வித பணச்செலவும் ஏற்படாதென்றும் சாஸ்திர சம்மதத்தை சரிவர தெரிந்துகொள்ளாமலிருப்பதே முக்யகாரணமென்றும் கன்னிகாதானம் பெற்றவுடன் வரனானவன் பெண்ணை அழைத்துக்கொண்டு தன்னுடைய கிரஹத்திற்குப்போய் பிரவேச [illegible] னம் செய்து விவாஹத்தை ஸபலமாக செய்துகொள்வதால் ஒருவருக்கும் நஷ்டம் ஏற்படாதென்றும் தர்மானுஷ்டானத்தில் சிரத்தை ஏற்படவேண்டும் என்றும் சொன்னார்கள்.

நாகை D. H. ஸ்கூல் ஸம்ஸ்கிருத பண்டிதர் சிரோமணி பிரம்மஸ்ரீ ஸ்வாமிநாத சாஸ்திரிகள் அவர்கள் 'பக்தி' என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டு உபன்யஸித்தார்கள். அவர்களும் கர்மானுஷ்டானம் அவச்யமென்றும் த்ருடமான கர்மானுஷ்டானத்தால் சித்தத்தில் சுத்தி ஏற்பட்டு ஈச்வரனை மனது தானே நாடுமென்றும் அதிலிருந்து பக்தியானது விருத்தியடையுமென்றும் சிவானந்த லஹரியில் நிருபணம் செய்யப்பட்டபடி பக்தியினுடைய லக்ஷணங்களை விமர்சனம் செய்தார்கள்.

அக்ராசனாதிபதி அவர்கள் மூன்று தினங்களும் விடாமல் சபைக்கு விஜயம் செய்து வெகு உத்ஸாகத்துடன் சபையை நடத்தியதுடன் நடுவில் ஸ்மிருதிஸாரம் என்ற உபன்யாசத்தை செய்தும் கடைசியில் முடிவுரையாக எல்லா உபன்யாசங்களுடைய சாரத்தையும் எடுத்துரைத்து ஸ்வதர்மானுஷ்டானத்தின் அவச்யத்தை பன்முறையும் வற்புறுத்திப் பேசியதுடன் மனுஸ்மிருதியின் விசேஷத்தை எடுத்துரைத்து ஒவ்வொரு அத்யாயத்திலும் உள்ள விசேஷங்களை சங்கிரஹமாகச் சொல்லிமுடித்தார்கள்.

பிறகு சபையின் காரியதரிசியினால் ஸங்கத்தை மிகுந்த அனுக்ரஹபுத்தியுடன் கவனித்துவரும் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களுடைய பாதாரவிந்தங்களில் சபையோருடைய சாஷ்டாங்க நமஸ்காரங்கள் சமர்ப்பிக்கப்பட்டும் அக்ராசனாதிபதி அவர்களுக்கும் பண்டிதர்களுக்கும் வந்தனோபசாரங்கள் கூறப்பட்டன.

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

The Place of Religion in Educational Reconstruction.

The following paper was read at the Provincial Educational Conference held at Tanjore recently by Mr. T. A. Ramachandra Aiyar B.A., L.T., Head Master, Board High School, Ayyampet.

Some fundamental aspects of education as conceived by religion. Man is an entity composed of 'Soul,' or 'Spirit' or 'Atman,' 'Mind,' and 'Body,' of which the most important component is the 'Soul.' The main aim of education is therefore the culture of the soul (*Adyatma Vidya or Atma Gnanam*) which alone leads to *Moksha* or liberation from the wheel of births and deaths. Soul culture has been recognised by all great religions as the goal of man. Christ has truly said that 'it does not profit a man in the least, even if he gains the whole world, but loses his soul in so doing.' Hindu religion is saturated through and through with this cardinal truth. Mind and body are not ignored but are given only secondary places, the mind being, of course, considered superior to the body. So the cultivation of the mind and body should be such as to aid, and not to hinder, the process of perfection of the soul. The training of mind and body should not be an end in itself, but only a means to the main aim in view, namely, culture of the soul and its final emancipation or salvation. The chief purpose of life is therefore the purification and redemption of the soul and the training of mind and body should thoroughly harmonise with this principal object. This is the true perspective of the life and goal of mankind as envisaged by the great religions of the world and any sound system of education should aim at the harmonious development of soul, mind and body, with the final objective of the salvation of the soul.

Starting with this basic conception of education, religion has set up various institutions and prescribed several practices, rites, and rituals—all with the ultimate object of realising this end in view. This perfect, comprehensive, and harmonious vision of the problems of *life* was possible in ancient and mediaeval times, when religious inspiration and revelation were the chief instruments for discovering truth, and the eternal verities of life. But in these days when truth is sought to be discovered and established by mere human reason, aided by imperfect scientific instruments, the correct perception and goal of life are missed, and man goes about eternally experimenting, and often wandering from blunder to blunder and receding away from truth, but all the while swearing that he is progressing from one truth to another and delighting in such catch words and expressions as 'up-to-date,' 'modern' 'abreast of the times,' 'in tune with the time-spirit,' and so on.

In ancient and mediaeval times, society was moulded on the fundamental concepts of life above outlined. As the spirit was exalted above mind and body, holy men such as *Rishis* and saints were given the first place of honour and respected even more than kings. Intellectual men were given only a second place, and men who cared only for their bodies were given the lowest place in society. A civilized man or a highly evolved being was considered to be one who attained true wisdom or *Gnanam*, not by merely acquiring learning or knowledge but by developing such qualities as humility, patience, etc., which are graphically portrayed by Sri Krishna in verses 7 to 11 of Chapter XIII of the celestial song, the *Bhagavad Gita*. Wisdom consists in the spiritualization of every fibre of one's being and no wonder that sovereignty bowed before it in ancient times. Men of intellect and learning were accorded only a second place, because mere knowledge without discipline and restraint in life, was considered not only useless, but even dangerous to society. As for men who cared only for their bodies, who ate and dressed and led a merely sensual life, they were considered on a level with brutes.

Starting with these fundamental values of life, true education was considered as synonymous with soul-culture and attainment of wisdom, and a system of mass education was perfected for spiritualising society in various ways. Religious habits for all (*Acharas*) were therefore considered essential for laying out a true foundation for character building, which is directly related to self-discipline and control. Much importance was not attached to mere literacy which was not considered necessary for all. *Achara* or disciplinary practice for the mass of the people from the very beginning, was considered essential for the welfare and stability of society. Hence the true Guru or Acharya was defined as one who, while himself leading a pious life of discipline, initiates his disciples in religious practices and makes them observe the same along with himself. These then are the fundamental ideas of life, as conceived by religion, and to which education was related in ancient times, not only in India but all the world over.

In ancient and mediaeval Europe, religion was the most potent influence in moulding and educating men's minds. Churches, monasteries, and abbeys, were the centres of culture and learning, and clergymen were accorded the most honoured place in society. But with the digging of coal and the discovery of steam power came the construction of machines, culminating in the industrial revolution, the effect of which was that workshops and factories pushed churches into the background. With the advance of science and its dazzling discoveries, the mind of the ordinary man was first dazed, and then nearly blinded, so much so, that scientific reason displaced 'revelation,' and 'transcendental reason.' Religion itself came to be regarded as a bundle of superstitions and prophets considered an anochronism. Not only in Europe, but also in Asia, the birth-place of all religions, spirituality stands to day discredited and dishonoured. Successive onslaughts of rationalism, materialism, industrialism, socialism, and other blessed 'isms' of the West have been shaking to its very foundation, the magnificent edifice of religion, reared for centuries by the wise men of the East.

Having thus briefly outlined the cause of decay of religion and the consequent misdirection of education in Europe and Asia, let us now turn to our land, which has been the citadel of religion from time immemorila. Religion was born and cradled in India at the begining of creation and had reached manhood even before the dawn of history. It had been nurtured through centuries and kept alive and vigorous by the kindly care of the *Rishis* of old. It is therefore an irony of fate that, in this land of spirituality, an appeal has to be made now about the importance of religion in educational reconstruction. It seems most amazing that little or no attention has been paid to this most important aspect of education in this sacred land—this *Punya Bhumi*, where for centuries together, religion has been coursing through every part of man's body, tingling with every drop of his blood, and throbbing with every fibre of his being. Yet that is the tragedy of our present situation! To find the cause of this most extraordinary phenomenon, and trace the cause of the mischief to its source, let us go back to the year 1834 when the present system of education was first launched in India with the real purpose of manufacturing clerks to help the carrying on of the British administration. During the time of Lord William Bentinck, a strenuous fight took place between the Orientalists headed by Wilson who wanted the vernacular system of education, and the Occidentalists headed by the brilliant and more vocal Lord Macaulay who wanted English education. The latter won the day and Lord William Bentinck then proclaimed (I am quoting his very words) that 'all the funds appropriated for the purpose of education would be *best employed in English education alone*,' and thus sounded the death knell of our culture. In his famous despatch advocating the English system of education Lord Macaulay pleaded that, as a result of the new education to be introduced there would be produced a class of persons '*Indians in blood and colour only, but English in taste, opinions, morals, and intellect.*' Lord Macaulay was a typical Englishman of the trued imperialist type who had a profound contempt for everything Indian. for our culture, our religion, our literature, etc. Had not his Lordship, who could not claim to have any intimate knowledge of our religion or literature, declared, like an oracle, that one book of English literature was more valuable than a whole shelf of Oriental literature? It is no wonder than that a system of education born under such vicious auspices and introduced against this background of utter contempt for our old culture has, after a century, produced, such a disastrous effect on the minds of our men that Lord Macaulay may be said to have realized his dreams beyond his wildest expectations.

We have been culturally conquered as Macaulay had prophesied. We have been made to hate everything our own, and admire and love anything coming from the West. We cannot look at any question or solve any problem in our land without the borrowed spectacles of the West. We have developed a taste for foreign customs and manners, and outlandish dress and food We have begun to feel a sort of contempt for our simple modes of life and our indigenous methods of doing things. We have developed

(Cont. on page 8)

a profound contempt for our own mother-tongue. The printing of even marriage invitations in the English style is a symptom of the depths to which this cultural degradation of ours have gone. We have been almost cut off from our ancient precious heritage held dear by us for ages. We have been denationalised, de-Indianised in every walk of life and in every branch of activity. The wonder is that we have not been wiped off altogether, but still continue to live. Thanks to the inherent vitality of our culture, due to the centuries of penance of the wise men of old, there is still life left in our society, which, though it appears dead on the outside of the trunk, and withered in its branches and leaves, has its roots alive, deep in the soil of our souls, and is already re-asserting itself, putting forth fresh leaves like our perennial Aswatha tree. It is therefore our bounden duty to protect our culture by relating our education once again to religion. A century of this English education has created greater havoc in our society than several centuries of foreign invasions, political conquests, alien domination and economic exploitation. Let me now analyse the defects underlying the present system of education, and the lines along which it has attacked our culture, so that we can remedy these defects and fortify our culture against further attacks from the West.

1. The inherent defect in the present system is that it produces in our minds a general glamour for Western culture, Western ideals and Western institutions, and develops in us a tendency to copy the same in our land. This defect is inevitable, because the whole scheme of curricula is modelled after the West, and presented to young minds in the most impressionable period of their lives.

2. The excessive importance given to English and the almost insignificant place given to the mother-tongue is a vital defect in the scheme already noted by all and proposed to be remedied now.

3. The complete exclusion of the study of religion and our indigenous culture is the greatest drawback in the present system.

All these three defects must be rectified in reconstructing our education.

(to be continued).

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கடைசியாக பிரம்மஸ்ரீ வேம்புசாஸ்திரிகள் அவர் ஸங்கத்தில் தனக்குள்ள பிரேமையை பிரகடனம் செய்தவர்களாக சபையானது இவ்வருஷம் வெகு விமரிசையாக நடந்த விஷயத்திலும் அக்ராசனாதிபதி அவர்கள் ஸ்வதர்மத்தைப்பற்றி அடிக்கடி வற்புறுத்திப் பேசியதில் இவ்வருஷம் சபையானது தர்ம ஸ்தாபனம் செய்ததாக தனக்கு மிகுந்த சந்தோஷத்தை உண்டுபண்ணியதென்றும் சொல்லி ஸ்ரீமத் ராமாயணத்தில் ராவணன் சீதையை அபகரித்துப்போன காலத்தில் ஜடாயுவானவர் வழியில் மறைத்து தன்னுடைய ஜீவன் உள்ளவரையில் சீதையைக் கொண்டுபோக இடங்கொடுக்க மாட்டேன் என்று சொன்ன வாக்யத்தை உதாகரித்து ஸனாதனிகள் எல்லோரும் தர்மத்திற்கு எவ்வளவு இலானி ஏற்பட்டாலும் தங்கள் ஜீவன் உள்ளவரையில் காப்பாற்ற முயற்சிசெய்ய வேண்டியது தங்களுடைய கடமையாகக் கருதவேண்டுமென்றும் அவ்விதம் செய்யும் பக்ஷத்தில் ஸ்ரீ ராமசந்திர சரித்திரத்தைப்போல் நமக்கும் முடிவு சபலமாகவே இருக்குமென்றும் சொல்லி ஸங்கமானது மேன்மேலும் அபிவிருத்தி அடையவேண்டுமென்ற ஆசீர்வாத வசனங்களுடன் அழகாக முடித்தார்கள். இத்துடன் இவ்வருஷ சபையானது பூர்த்தி அடைந்தது.

N. ஸாம்பசிவ அய்யர் B.A., B.L.

ஆயுர்வேத மஹிமை.

(கார்க்ரமுனி கிருஷ்ணமூர்த்தி)

பிரம்மதேவரால் செய்யப்பட்ட உபவேதம் நான்குள் ஒன்றான ஆயுர்வேதமானது, ஆதியில் ஒரு லக்ஷம் சுலோகங்கொண்ட பெரிய கிரந்தமாயிருந்தது ஆயுர்வேதத்தை யாவரும் இலகுவாய் அறிந்துகொள்ளும் பொருட்டு, பின் பிர்மாவினாலேயே சாஸ்திரீகம், ஊர்த்துவாங்க சாலக்யம், காயசிகிச்சை பூத வைத்தியம், கௌமார பிரித்யம், அகத தந்திரம், ரசாயன தந்திரம், வசீகரண தந்திரம் என எட்டுப்பிரிவுகளாகச்செய்து, அவைகளை தக்ஷப்பிர்மாவிற்கு உபதேசிக்கப்பட்டது.

அதைக் கற்றுக்கொண்ட தக்ஷப்பிர்மாவினால் கொஞ்சம் லெகுநடையில் சிகிச்சாரத்னம் என்ற நூலைக் கற்றுணர்ந்த சூரிய புத்திரர்களான அசுவினி தேவர்கள் தேவ வைத்தியர்களானார்கள் பின் அசுவினிதேவர்களால் சிகிச்சாரத்ன தந்திரம், பிர்ம்ம ஹிக்கியம் என்கிற இரண்டு நூல்கள் செய்யப்பட்டது. இந்த இரண்டையும் தேவேந்திரன் படித்துப் பண்டிதனானான்.

முன் ஒருகாலத்தில் ஹிமவத்கிரியில் பல மஹரிஷிகள் சபைகூடினபொழுது, பூவுலகில் மனுஷியர்கள் வியாதியினால் கஷ்டப்படுவதை நிவர்த்திசெய்ய யாதுவழியென அவர்களின் ஞானதிருஷ்டியால் யோஜித்து தேவேந்திரனிடமிருந்து ஆயுர்வேதத்தைக் கற்றுவருவதே வழியென தீர்மானித்து, தேவேந்திரனிடம் பரத்வாஜ மஹரிஷியை அனுப்பினார்கள்.

தேவேந்திரனிடமிருந்து ஆயுர்வேதத்தைச் கற்றுவந்த பரத்வாஜரிடம் பின் பலரிஷிகள் ஆயுர்வேதத்தை அறிந்துகொண்டார்கள். அவர்களில் ஆத்ரேயரென்பவரால் ஒரு வைத்திய வித்யாசாலை ஸ்தாபிக்கப்பட்டது. அதில் அனேகம் சிஷ்யர்கள் சேர்ந்து ஆயுர்வேதத்தை கற்றுக்கொண்டார்கள். ஆத்ரேயரின் சிஷ்யர்களில் அக்னிவேஸர், பிலர், ஜடுகர்ணர், பாராசரர், ஹாரீதர், க்ஷீரபாணி என்ற ஆறு பேர்களும் வைத்தியத்தில் நல்ல நிபுணர்களாகி முறையே அக்னிவேஸ தந்திரம், பிலதந்திரம், ஜடுகர்ண ஸம்ஹிதா, பாராசரஸம்ஹிதா, ஹாரீதஸம்ஹிதா, க்ஷீரபாணி தந்திரம் என்ற நூல்களைச் செய்தார்கள். அந்நூல்களை அரங்கேற்றியபொழுது அவைகளில் அக்னிவேஸ தந்திரமே சிலாக்யமானதென்று மஹரிஷிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டது

பின் அக்னிவேஸ தந்திரத்தின் பாவங்களை அனுஸரித்து, சரகம் என்ற நூலை சரக முனிவரும் ஸுஸ்ருதம் என்ற நூலை ஸுஸ்ருதரும் செய்தார்கள். இந்த இரண்டு நூல்களுந்தான் ஆயுர்வேதத்துக்கு மூல கிரந்தமாக விளங்குகிறது. அதற்கு முன்னுள்ள நூல்கள் காலாநுசாரமாய் நாசமடைந்து விட்டதாய்த் தெரிகிறது.

மேற்கண்ட சரகம், ஸுஸ்ருதம் என்ற இரண்டு நூல்களையும் பல ரிஷிகள் கற்றுணர்ந்து, பல கிரந்தங்கள் சம்ஸ்கிருத பாஷையில் சுலோகரூபமாகவும், தமிழில் செய்யுள்களாகவும் இயற்றியிருக்கிறார்கள். ஆயுர்வேதத்தைக் கையாண்டுவந்த நம்பெரியோர்களும் பிரேத பரிசோதனை செய்தே சரீர ஸ்தானங்களையும், ரோகஸ்தானங்களையும் நிர்ணயித்திருக்கிறார்கள் என்று யூகிக்க இடமிருக்கிறது. ஸுஸ்ருதத்திலுள்ள (1) சூத்ரஸ்தானம், (2) நிதானஸ்தானம், (3) சரீரஸ்தானம் (4) சிகிச்சாஸ்தானம், (5) கல்பஸ்தானம் (6) லோக உஸ உத்ரஸ்தானம் என்னும் பிரிவுகளை கவனித்தால் அவை வெளியாகிறது.

இவ்விதம் பிரக்யாதி யடைந்திருந்த நமது ஆயுர்வேதத்தை அராபியர், யூதேயா, ஜினேவா, வேனிஸ், கிரேக்கர் முதலானவர்களும் இ[illegible] என்று பல [illegible]கிறது. சால மன் அரசன், இ[illegible]ஸ்துநாகர் முத ஹாதுர்களும் [illegible] [illegible] [illegible]கிருக்கிறார். மேற்கண்ட [illegible] டையும் அநுஸரித்து வெளி[illegible] இப்பொழுது அநுஷ்டா[illegible] பெரும்பாலும் பாகட்டம் என்ற [illegible] இது பாகட்டாசாரியார் என்பவரால் எழுதப்பட்டது. இந்நூல் மலையாள இராஜ்யத்தில் பிரசித்தியுடன் விளங்குகிறது. இந்நூலுக்கு அங்கு அஷ்டாங்க ஹிருதயம் என்ற மற்றொரு பெயருமுண்டு.

நமக்கு நோயணுகாமல் "நோய்க்கிடங்கொடேல்' என்றபடி நம்மை நாம் காப்பாற்றிக்கொள்ளவும், அநுசரித்த நோய்களை நீக்கிக்கொள்ளவும் பல சிகிச்சைகள் நமது ஆயுர்வேதத்தில் சொல்லப்பட்டிருப்பதுடன் நம் சதாசாரங்கள் மூலமாகவும் நமக்கு சுக வாழ்வு உண்டாக பல சாதனங்கள் நமது வர்ணாசிரம தர்மமூலம் நமக்கு போதிக்கப்பட்டிருக்கிறது.

நமக்கு நோயணுகாமலிருப்பதற்காகவே அன்னப்பிராசனம் முதல் பிண்டப்பிரதானம் வரையில் அநேகம் ஸம்ஸ்காரங்கள் அந்தக் காலத்தில் மந்திரபூர்வமாய்செய்துவந்தோம். அதினால் நமக்கு கர்பதோஷம், பீஜதோஷம் (மாதாவின் அசுத்தத்தால் சம்பவிப்பது கர்ப்பதோஷம், பிதாவின் தேஹஸ்ஸால் ஏற்படுவது பீஜதோஷம்) முதலியன உண்டாகாமல் வாழ்ந்தோம்; கர்ப்பதோஷமும் பீஜதோஷமும் இல்லாவிடில் பாரம்பரிய ரோகங்கள் அணுகவே அணுகாது. இவ்வுயர்ந்த ஸம்ஸ்காரங்களில் பல இப்பொழுது ஆண்களுக்கு உபநயன காலத்திலும், பெண்களுக்கு விவாஹகாலத்திலும் ஒரு நொடிப்பொழுதில் ஒன்றின்மேலொன்றாய் செய்து அவைகளை சாஸ்திரோக்தமாய் செய்துவிட்டதுபோல் நினைத்து சந்தோஷப்படுகிறோம். தவிர, அனுதினமும் அவச்யம் செய்ய வேண்டிய பல விதிவத்தான கர்மாக்களை பலர் அகற்றியும், பலர் நாடகம்போன்று நடத்தியும் வருகிறோம். இவ்விதம் நம்முன்னோர்களின் சதாசாரங்களை நாமே கைவிட்டுவிட்டு நச்வரமான போக ஆசையால் நவீனங்களில் ஈடுபட்டு உழலுவதால் நம் சுகாதாரங்கள் யாவும் பாழாகி, பல நோய்களுக்காளாகி, அற்ப ஆயுளுடனும், அற்ப சக்தியுடனும் வாழ்ந்து வாடி ஏங்குகிறோம்.

ஆயுர்வேத மூலியமாய் நாம் பல நன்மைகளை அடையவே, சர்வேசுவரன் அநேகம் இயற்கைப் பொருள்களை சிருஷ்டித்திருக்கிறார். அவைகளில் அநேகம் பதார்த்தங்கள் மஹிமையினை போதிக்கின்றன. அநேகம் பதார்த்தங்களுக்கு விஷமிக்குங்குணமிருப்பதனால் அவைகள் வியாதிகளின் நிவிர்த்திக்காக ஔஷதமாய் உபயோகப்படுகின்றன. ஓஷதி என்ற பச்சிலைகளால் செய்யப்படும் மருந்துகளுக்கு ஔஷதம் எனப் பெயர்வந்ததாகும். இவ்விதம் கடவுள் கருணையினால் பல சாதனங்களைச் செய்திருந்தும், அவைகளை ஆராய்ந்து அறிந்து நம் நன்மைக்கு உபயோகப்படுத்திக்கொள்ள நாம் தவறிவிட்டதாலேயே தற்காலம் நமக்குப் பல தீங்குகளுண்டாகி, நாம் பெருநிதி படைத்திருப்பினும், நமக்குப் பந்துமித்திரர்கள் அநேகரிருப்பினும், நம் சரீர சௌக்யத்தையும், மனஸ் சந்தோஷத்தையும் அடைய முடியாமல் பல அனர்த்ததிற்குள்ளாகி விட்டோம். நம் சரீராரோக்கியங்களை நாம் கெடுத்துக்கொண்டபிறகு இகலோக சுகத்துக்கோ, பரலோக ப்ராப்திக்கோ, தர்மானுஷ்டானத்துக்கோ, ஆத்மஞான ஆராய்ச்சிக்கோ எதிலாவது பாடுபட நம்மால் முடியுமா? ஒருவிதத்திலும் முடியாது.

(தொடரும்).

ஆறுவது சினம்.

(ப. ரெ. திருமலை ஐயங்கார்.)

நந்தமிழ்நாட்டில் விளங்கிய நல்லிசைப் புலவர்களில் பாலர் முதல் பண்டிதர் ஈறாக அநுபவிக்குமாறு உபகரித்தவர் அவ்வையார். முன்னர் ஆர்யதர்மத்தில் 'அறஞ்செயவிரும்பு' என்ற முதுரையை விளக்கினோம். தற்போது அதற்கடுத்த 'ஆறுவது சினம்' என்ற வாக்கியத்தை எடுத்துக்கொள்வோம்.

அரிவர்க்கம் ஆறு. அவையாவன. காமம் குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம். கூறிடுங் கொடிய காமங்குரோதமே யுலோபமோகம். பாறிய மதங்களே மாச்சரிய முட்பகையாறென்ப' என்பது நிகண்டு, குரோதம், வெகுளி, சினம், என்பன ஒரே பொருளைக் குறிப்பன. தனக்கு வேண்டிய காரியங்களை ஒருவன் விக்கினஞ்செய்தால் அவனிடத்தில் ஆக்கிரகமாக விகற்பித்தெழுகின்ற சித்தவிருத்தி வெகுளி, 'காற்றுமுள்ளுறும் விருப்பம் தடைபட்டுலெழுஞ், சீற்றமேயுருவாம்' வெகுளிக்கிலக்கணம் என்ப. கோபமென்பது, ஒருவனுக்குத் தனது எண்ணமும் செயலும் நிறைவேறாது தடைபட்ட காலத்தும், தன்னை பிறர் இகழ்ந்த காலத்தும், மனதிற் பொங்கி வெளிப்படுவதோர் துர்க்குணம். அது தனது பிறப்பிடமான மனத்தைத் தன்வசமாக்கி, வாக்கின் வழியாகவும், காயத்தின் வழியாகவும் வெளிபடுவதோர் கொடும் பேய். அப்பேயாற் பிடிபட்டவர், தமக்கேயன்றி தம்மைச் சார்ந்தார்க்கும் கேடுசூழ்பவராவர். சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லியினமென்னு, மேமப் புணையைச்சுடும்; சேர்ந்தாரைக்கொல்லியென்பது காரணப்பெயர், தான் சேர்ந்தவிடத்தை கொல்லும் தொழிலையுடையதென்பது இதன்பொருள். உலகத்து நெருப்புச்சுடுவது தான் சேர்ந்தவிடத்தை மாத்திரம் கோபமாகிய நெருப்போ, தான் சேர்ந்தவிடத்தையேயன்று சோரதவிடத்தையும் சுடும். மேலும் இக்கோபம் தன்னையுடையவனையும் பிறவிக்கடலில் வீழச்செய்து தத்துவ உபதேசத்தால் அவனை எடுக்கவரும் தத்துவஞானியரையும் அகற்றும். நிலத்தின்கண் அறைந்தவன் கை அந்நிலத்தை அடைதல் தப்பாது. அதுபோல சினத்தைத் தன்னாற்றல் உணர்த்துவதோர் குணமென்று கொண்டவன் தவறாது கேடடைவான். ஒருவன் தன்னின் மெலியாரிடத்தில் தனது கோபத்தைச்செலுத்துவானாயின் அவன் இம்மையில் அரசனாலும் மறுமையில் கடவுளாலுந்தண்டிக்கப்படுவான் தன்னின் வலியாரிடத்தில் செலுத்தின் அவ்வலியானே அதற்குரிய தண்டனையை உடனேகொடுக்கப்பெறுவான். இக்கருத்தைத் திருவள்ளுவர் 'செல்லிடத்துக்காப்பான் சினங்காப்பானல்லிடத்துக், காக்கினென்? காவாக்காலென்? என்றும், 'செல்லாவிடத்துச் சினந்தீது செல்லிடத்து, மில்லதனிற்றீய பிற' என்றும் கூறுவர். ஆகவே சினம் எல்லாவிடத்தும் தீமையே தரும் என்பது வெளிப்படை. துறவாற் புறப்பகையிலாயினும் உட்பகையாய் நின்று அருள் முதலிய நட்பினையும் பிரித்துப் பிறவித்துன்பமும் எய்துவித்தலான் அவர்க்குச் சினத்தின் மிக்க பகையில்லை. 'மூங்கிலிற் பிறந்த முழங்குதீ மூங்கின் முதலாமுடிக்குமா போலத், தாங்கருஞ் சினத்தீ தன்னுளே பிறந்து தன்னுறவினையெலாந் தகிக்கும் ஆங்கதன் வென்மை யறிந்தவர்க் கமையாலதனை உள்ளடக்கவுமடங்கா, தோங்கிய கோபத்தீயினை யொக்குமுட்பகையுலகில் வேறுண்டோ? என்பது இராமாயணம். கோபத்தால் கலகமும், கலகத்தாற் கொலையும், கொலையாற் கொடிய நரகவேதனைகளும் வருதலால், அதனை அடியோடு போக்குதலே புருஷலக்ஷணம்.

இதனாலன்றோ 'தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காக்காற், றன்னையே கொல்லுஞ் சினம்' என்கிறார் மாதாநுபங்கி. உள்ளங்கவர்ந்துக் கொள்ளுங்குணமே குணமாகலின் தன்னைத்தான் துன்பமெய்தாற் காக்க நினைத்தானாயின், தன்மனத்துச்சினம் வாராமற் காக்க; காவானாயின் அச்சினந்தன்னையே கெடுக்குங்கடுத்துன்பங்களை யெய்துவிக்கும். அளவிறந்த கோபத்தையுடையவர் செத்தாரொடொப்பர். அதனையொழித்தவர் முத்திபெற்றாரொடொப்பர். குரோதமுள்ளவர் நாடிபுரிந்த ஜப, தப, விரத, தானங்களும் தேடிக்குவித்த தனதானிய சம்பத்துகளும் பயனின்றிப் பாழ்பட்டொழியும் சான்றோர் 'கோபமுள்ளவனைக் கட்குடியனெனவும் பித்தனெனவும், சண்டாளனெனவும் கூறிவிலக்குவது வழக்கம். இவற்றையெல்லாங் கருதியே அவ்வைப்பிராட்டியார் சூத்திரமாக 'ஆறுவது சினம்' என்றார். கோபம் தணிகவென்பது இதன் பொருள். கோபத்தை அடியோடு ஒழிக என்னாது அதனைத் தணிக என்றதின் நயம்கண்டு தெளிக. தன்னைச் சார்ந்தோர் தீயவழியிற் போகுங்காலை கோபித்துக்கண்டித்து அவரை நல்வழிப்படுத்தற்கு கோபம் வேண்டும். அதனை அதிகப்படுத்தாமல் விஷயம் முடிந்தவாறே நீக்கிவிட வேண்டும். பெற்றோர் உபாத்தியாயர் முதலியோர் தம்மக்கள், சீடர் இவர்களைத் திருத்தற்பொருட்டு கோபம்மேற்கொள்வது குற்றமாகாது. தவஞ்செய்யுமவன் தன்மனத்தால் வெகுளியை ஒருகாலும் நினையானாயின் தான் கருதியபேறெல்லாம் ஒருங்கே பெறும்.

தமக்கு உரியதாய் வசிஷ்டர் முன்னிலையில் ஏவல் பூண்டொழுகி நின்ற காமதேனுவைப் பெறவேண்டுமென்ற துராசை காரணமாயுண்டான கோபத்தினால், விசுவாமித்திரர், குலநாசமும், அபஜயமும், அபகீர்த்தியும் அடைந்தமை அவனி அறிந்ததே. கோபம் தவத்தைககெடுத்து, அவத்தைக் கொடுத்து, குணத்தைப்படுக்கும். வசிட்ட சாபமேற்ற திரிசங்குவை ஸ்வர்க்கா ரோஹணம் செய்ய முயன்ற விசுவாமித்திரர் பல்லாண்டுகளாக வருந்திப் புரிந்த தவங்களனைத்தையும் அரைநொடியில் கோபத்தினால் பாழ்படுத்திவிட்டார்.

கோபம் தீயசிந்தைகளெல்லாவற்றையும் உண்டாக்கும். பழி பாவங்களுக்கஞ்சாமை, கருணையில்லாமை, கலைஞானமில்லா தொழிதல், மேற்கொண்டுள்ள விரதத்தை விட்டுவிடல் முதலியன தீயவெண்ணங்களாம். வசிட்டர் மக்களை விசுவாமித்திரர் வேடர்களாகும்படி சபித்தமையும், கபிலர் சகரரைச் சபித்தமையும், இந்திரன் விசுவரூபனென்னுங் குருவின் தலையை வெட்டினமையும் நினைக. கோவலன் பாற்பெற்ற சிலம்பைக் கொண்ட பொற்கொல்லன் கோப்பெருந்தேவியின் பொற்சிலம்பின் களவைக் கோவலன் மேல் ஏற்ற எண்ணி அரசன் முன் சென்று தான் எண்ணியவாறே கூறலும் அதனைக்கேட்ட அரசன் ஆராயானாய்ச் சினந்து தன் காவலரை நோக்கி 'கோவலனைக் கொன்று, சிலம்பினைக் கொணர்க' எனக் கட்டளையிட்டான். அவ்வாறே அக்காவலரும் பொற்கொல்லனோடு சென்று அங் கோவலனை வாளால் வெட்டி வீழ்த்தினர். பின்னர் கண்ணகி சிலம்பை உடைத்தலும் மணிகள் தெறித்துவீழ்ந்தன. அவற்றைக் கண்டு "தாழ்ந்தகுடையன் தளர்ந்த செங்கோலன் 'பொன்செய் கொல்லன்றன் சொற்கேட்ட, யானோ அரசன் யானே கள்வன், மன்பதை காக்கும் தென்புலங்காவல், என் முதற் பிழைத்தது கெடுக வென்னாயுள்'' என மன்னவன் மயங்கி மண்ணில் விழுதலும், கோப்பெருந்தேவியும் குலைந்து விழுந்து தன் கணவனுடன் வானுலகஞ் சென்றாள்.

வீணே வளர்த்துக்கொண்ட சினத்தின் கொடுமையால் பரசுராமர் வாய்ச் சொல்லும் கைவில்லும், தவமும் இழந்து, நகமும் பல்லும் பறிகொடுத்த கொடும் புலிபோலாகி, வனாந்தரங்களிற் புகுந்து உறைவாராயினர்.

கோபத்தை யடக்கா வேந்தனால் அல்லல் பல உண்டாம். நல்லமைச்சர் தலைமகன் வெகுண்டபோதும் வெம்மையைத் தாங்கி நீதிவிடாது நின்றுரைக்கும் வீராய்த்திகழ்வர். கடுங்கோபத்துரைகளையும் ஒரு நாளும் கட்பொறுதே என்பது விவேகசிந்தாமணி.

குணமெனுங் குன்றேறி நின்றார் வெகுளி கணமேனுங் காத்தலரிது. கௌசிகன் குறிப்பறிந்த வசிட்டர் தயரதனுக்கு எடுத்துரைக்க அம்மன்னர் மன்னனும் இராம லட்சுமணர்களை முனிவனிடம் நல்க கொடுத்த மைந்தரைக்கொண்டு விசுவாமித்திரன் எடுத்தசீற்றம் விட்டு இனிது வாழ்த்தினான் என்பர் கம்பர்.

'கோபச் சண்டாளன்' என்ற பழமொழிக்கிணங்க கோபங்கொண்டிருப்பவனை நீசனெனக்கருதி ஆன்றோர் அவனைத் தொழுவதேயில்லை. சினமடங்கிய பிறகு, அவனைப் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வித்தே தம் இனத்திற் சேர்த்துக்கொள்வர். எனவே கோபத்தைக் கனவிலும் கைக்கொள்ளல் தகுதியன்று என்ற உண்மை அறிக. இந்நிலவுலகத்தில் சாந்தத்தால் தாழ்ந்தாரும் கோபத்தால் வாழ்ந்தாரும் இலர்.

ஆறுவது சினம் என்ற மூதாட்டியின் முதுரையை நன்குணர்ந்து சினந்தவிர்ந்தொழுகலே சாலப்பயனுடைத்து வெல்வது வேண்டின் வெகுளி விடல் என்பதற்கிணங்க பொறையால் வெற்றியும் புகழும் பெற்று விளங்குவது திண்ணம். வெல்வதுவேண்டி வெகுளாதான் நோன்பினிதே. பொறுத்தவர் பூமியாள்வார். பொங்கினவர் காடாள்வார். கோபத்தை யடக்குதலே கோதற்ற குணமாகும். கோபமின்றேல் பாவமில்லை., பழியுமில்லை. சினத்தைச் சினந்து சீரியராய்த் திகழ்மின். முகமலர்ச்சி அகமலர்ச்சியுடனிருத்தலே ஆன்றோர்க்கு அழகு.

அலையன்ஸ் கம்பெனியாரின் பிரசுரங்கள்.

	ரூ.	அ.	பை.
மஹாபாரதம் by சேங்காலிபுரம் V. பஞ்சாபகேசய்யர்	0	8	0
9 ராஜாதேசிங்கு	0	5	0
10 தேசிங்கு ராஜன்	0	10	0
11 தசகுமார சரித்ரம்	0	6	0
12 கந்தாலங்காரம்	0	3	0
13 திருப்புகழ் ரத்னமாலை	0	3	0
14 திருக்குறள் நீதிக்கதைகள்	0	10	0
15 திருப்புகழ் பாராயண திருமுறை	1	4	0
16 பாராயண திருப்புகழ்	0	2	0
17 திருப்புகழ் விருத்தியுரை	8	0	0
18 திராவிட வேததிரட்டு	3	8	0
19 வேல், மயில் விருத்தம்	0	1	0
20 திருவகுப்பு	0	4	0
21 குகன்	0	4	0
22 ஞானசம்பந்தர்	0	2	0
23 விசாரசன்மர்	0	3	0
24 மூர்த்தி நாயனர்	0	3	0
25 திருநாவுகாசர்	0	2	0

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.

215176

மார்சலியே

சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்

வெளியூர்ச் செய்திகள்.

திருச்சி ஆயுர்வேதஸபை.

திருச்சிராப்பள்ளி ஜில்லா ஆயுர்வேத சபா அங்கத்தினர் சங்கம் 25-7-37ல் ஆண்டார் வீதியில் ஸ்ரீ ராமசந்திர ஆயுர்வேதசாலாவில் மாலை 3-30 மணிக்கு கூடியது. அச்சமயம் கரூர் வைத்ய வித்வான் மகா-௱-ஸ்ரீ ராகவேந்திராசார் தலைமை வகித்தார். சென்ற மாதத்திய மீட்டிங்கின் ஸாம்சத்தை, காரியதரிசி Dr. இராகவராவ் A. L. I. M. அவர்கள் வாசித்தவுடன், கரூர் Dr. நாகப்பிள்ளை என்பவர் மூல வியாதியைப்பற்றி இனிய தமிழ் மொழியில் ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினார். மூலரோகத்தில் 21 விதம் உண்டென்றும் அவைகளில் 9 அனுகூலமாகும் என்றும் மற்ற 12-ம் குணமாகாதென்றும்கூறி ரோகத்தின் காரணங்களையும், உத்பத்தி கிரமம், உபத்ரவ லக்ஷண முதலியவைகளை தமிழ் சுலோக பூர்வமாக விவரித்து, அக்னி க்ஷார சஸ்திர பிரயோகமன்னியில், மேல்பூச்சு ஔஷதத்தாலேயே தான், அனுபவத்தில் சிகித்ஸைசெய்து குணம் கண்டு வருவதாயும் கூறினார். மற்ற ஆயுர்வேத வைத்யர்கள் யாவரும் மேற்படியாரை ஆக்ஷேபணை செய்யாது காணவே, Dr. T. V. ஜெயராம சாஸ்திரிகள், காரணம் நாசமானால் அல்லாமல் காரியம் நாசத்தை அடையாது என்றும், எப்படி த்ருதோஷம், இவைகள் கெட்டு தோஷதாது வைஷம்யம் ஏற்பட்டு மூல ரோகம் ஏற்படுகிறதோ அதே வழியில் அந்த தோஷங்களையும் தாதுக்களையும் சமநிலைக்கு வரும்படி ஔஷதங்களை உள்ளுக்குக்கொடுத்து சிகித்ஸை செய்தால் ஒழிய கேவலம் வெளிப் பிரயோகத்தால்குணம்ஆகாதுஎன்று கூறவே உபன்னியாஸகர் உடனே தானும் அவ்வாறே அபிப்பிராயப்படுவதாயும் அதைப் பின்னால்கூற எண்ணினார் என்றுகூறி உபன்னியாசத்தை முடித்தார் உபன்னியாஸகர் மூலம், பவுத்ரம் முதலிய நோய்களைத் தீர்ப்பதில் கியாதிபெற்றவர் என்றும் ஏற்படுகிறது. பின்னால் எல்லா வைத்யர்களும் சர்ச்சையில் கலந்துபேசி, வழக்கம்போல் மாலை 6மணிக்கு தாம்பூல, பல பிரசாதத்துடன் சபை இனிது கலைந்தது.

T. V. ஜெயராம சாஸ்திரி.
செகரட்டரி.

ஸ்ரீ காஞ்சீபுரம், விசேஷ பூஜை.

நான் 22—7—37 வியாழக்கிழமையதினம் காஞ்சிபுரம் ஸ்ரீ வரதராஜர் கோவில் அத்திவரதரை தரிசனம் செய்யப்போயிருந்தேன். அன்று சாயங்காலமாய் பெரிய காஞ்சீபுரத்தில் ஸ்ரீ காமாக்ஷி அம்மனை தரிசனம்செய்யப் போனேன். அங்கு அர்ச்சகர் நான் வித்யா உபாஸகன் என்று கேழ்வைப்பட்டு என்னிடம் அன்றையதினம் ராத்திரி பவுர்ணமியானதினால் ஸ்ரீ சக்கரத்திற்கு ஆவரண பூஜை நடக்கப்போகிறதாக சொன்னார். அதன் பேரில் நான் இராத்திரி இருந்து தரிசனம் செய்துபோவதாக தீர்மானித்தேன். இரவு சுமார் 9 மணிக்கு சிந்தாத்ரிபேட்டை E. R. கிருஷ்ணஸாமியய்யரும் இன்னும் சிலரும் பெண்டுகளும் ஸாமான்களுடன் வந்தார்கள். உடனே நானும் அவாளுடன் கோவிலுக்குள்ளே போனேன். ஸ்ரீ காமாக்ஷிக்கு புஷ்ப மாலைகளினால் அலங்காரம் செய்யப்பட்டது. அலங்காரமானது ரொம்ப நன்றாயிருந்தது. மகா-௱-ஸ்ரீ அமோக சாஸ்திரிகள் தான் பூஜை செய்தார். ஷை மகா-௱-ஸ்ரீ கிருஷ்ணஸாமி அய்யர் பூஜையை தன்னிடமுள்ள கல்பபடி ரொம்ப அழகாகவும், தீர்மாகவும் ஸ்பஷ்டமாக செய்துவைத்தார். பூஜையானது கல்பஸூத்திரப்படி ரொம்ப நன்றாக செய்துவைத்தார், அவரே உபாஸகர் ஆனதினால் யதோக்தமாகவும் இருந்தது. நான் இந்த மாதிரியாக ஒரு கோவில்களிலும் நடந்து பார்க்கவில்லை. ஒவ்வொரு ஆவரண பூஜை முடிவிலும் ஸ்வாமிக்கு தேங்காய் எல்லாஜாதி பழங்களும் நைவேத்தியம் செய்து தீபாராதனை ஆச்சுது. கடைசியில் ஸஹஸ்ர நாமமும் அர்ச்சனை ஆச்சு. பிற்பாடு, வடை சக்கிரப் பொங்கல், தேங்காய் பழதினுசுகளுடன்நைவேத்தியம் தீபாராதனை யாச்சுது. உடனே மந்த்ரபுஷ்பம், ரொம்ப அழகாக நடந்தது.

பிற்பாடு ஸுவாஸினிகள் 7 பேருக்கு ரவிக்கை, கண்ணாடி, குங்கும சிமிழ், சீப்பு முதலியதுகள் கொடுத்துபூஜை நடந்தது இதை ரொம்ப விமர்சமாக நடத்தினார். அன்று அங்கு பூஜைக்கு வெகுஜனம் வந்திருந்தார்கள். எல்லாரும் பூஜைமுடியும்வரை அதாவது 1 மணிவரையில் இருந்து பிரஸாதம் வாங்கி கொண்டுபோனார்கள். அன்று அவ்விடம் செங்கல்பட்டு ஸப்ஜட்ஜ மகா-௱-ஸ்ரீ வெங்கிட்டராமய்யரும், செங்கல்பட்டு டிஸ்டிரிக்டு முன்ஸீபு சேஷாத்ரிஅய்யர்அவர்கள்சம்ஸார ஸஹிதமாய் வந்து கடைசிவரையில் இருந்து பிரஸாதம் வாங்கிக்கொண்டு போனார்கள். இம்மாதிரியாக 5, 6, வருஷமாய் ஷை கிருஷ்ணஸாமி அய்யர் நடத்திக்கொண்டுவருவதாக கேழ்வை பட்டேன். ஆகையால் இம்மாதிரியான பூஜையை பார்க்கவோ, அந்த பூஜைக்குவேண்டிய திரவிய ஸஹாயம் செய்யவோ எல்லாரும் சிரத்தை எடுத்துக் கொள்ளவேணும் என்று பிரார்த்திக்கிறேன்.

வெங்கிடராம சாஸ்திரி.

சந்தேகத்திற்கு பதில்.

ஆர்யதர்மம் ஈசுவர-ஸு ஆனிமீ-25-உ 1937-ஸு ஜூன்-மீ 8-உ பத்திரிகையில் 10வது பக்கம் கடைசிகாலத்தில் கண்ட தர்மசாஸ்திர ஸந்தேகம். அதாவது தத்தன் ஜனகமாதா இருக்கிறாள். [illegible] பண்ணுகிறதா [illegible] மாக பண்ணுகிறதாக என்ற சந்தேகம். எனக்கு தெரிந்த வரையில் எழுதியிருக்கிறேன். இதைபார்க்கும் வித்வான்கள் பிசகு இருந்தால் சீர் திருத்தவும். [illegible] இந்த வசனங்களால் ஜனகபித்ருசிராத்தம் தான் பண்ண வேணுமாய் தோணுகிறது. மற்றொருசந்தேகம் விவாக விஷயம். [illegible]

[illegible] இம்மாதிரி வாக்யங்கள் ரொம்ப இருப்பதால் தத்தனுக்கும் அவனுடைய ஸந்ததிகளுக்கும் இரண்டு கோத்ரத்திலும் விவாகம் செய்யக் கூடாதென்று. தான் தோன்றுகிறது [illegible]

கோதண்டராமதீக்ஷிதர்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Publsihed by A Gopaladesikachariar, and S. Kalyanasundaam,

ஆர்யதர்மம்

4 ஸ
22 31

12-8-1937

உ15197

215197
சென்னை-600 030.
20 AUG 1937
MADRAS

Registered No. M. 2913.

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 22 கும்பகோணம். கலி 5039 ஈச்வர-௵ ஆடி-௴ 28௳ 1937-௵ ஆகஸ்டு-௴ 12௳ ஸ 31

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்
பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்ம ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

வைஸ்ராய்— காந்தி ஸந்திப்பு.

ராஜப்பிரதிநிதியான லார்டு லின்லித்கோ, காந்திஜிக்கு ஒருகடிதம் எழுதி அவரைத்தாம் பார்க்க விரும்புவதாகத்தெரிவித்தார். அதன்மேல் காந்திஜி டெல்லி சென்று வைஸ்ராயுடன் 80 நிமிஷம் பல விஷயங்களைப்பற்றி பேசிவிட்டுத்திரும்பினார்.

இதன் பலனாக, காந்திஜியும், அப்துல் காபர்கானும் எல்லைப்புறத்திற்குப்போகக்கூடிய வசதி ஏற்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

காந்தி— வைஸ்ராய் ஸந்திப்பதைப் பற்றி இந்தியாவிலும் இங்கிலாந்திலும் விசேஷ திருப்தியுண்டாயிருக்கிறதாம்.

மந்திரி பதவி கிடைக்காததில் அதிருப்தி.

எல்லா மாகாணங்களிலிருந்தும் அநேக காங்கிரஸ் வாதிகள், தங்களுக்கு மந்திரிபதவி அளிக்காததைப்பற்றிக்குற்றம் சாட்டி காந்திஜிக்கு கடிதம் எழுதியிருக்கிறதாகத்தெரிகிறது. இதைப்பற்றி காந்திஜீ தமது பத்திரிகையில் ஒரு வியாசம் எழுதி யிருக்கிறார்.

ஹிந்து முஸ்லீம் சண்டை.

ஆமத் நகரத்தில் நாமதேவர் உத்ஸவத்தை முன்னிட்டு ஹிந்துக்கள் ஊர்வலம் நடத்தினர். ஒரு மசூதியின் ஸமீபம் ஊர்வலம் செல்லுகையில் முஸ்லீம்கள், ஊர்வலத்தை தாக்கி கலகம் செய்தனர். 13 ஹிந்துக்களுக்கு பலமான காயம் ஏற்பட்டிருக்கிறது.

அந்தமான் கைதிகள்.

உபவாஸ ஹடம்.

வங்காள பந்தோபஸ்துக்கைதிகள் யாவரையும் விடுதலை செய்து விட வேண்டுமென்ற காரணத்திற்காக அந்தமானில் உள்ள ராஜீய கைதிகள் 200 பேர் வரையில் உபவாஸ ஹடம் செய்ய ஆரம்பித்திருக்கின்றனர். [illegible] சட்ட ஸபையில் இதைப்பற்றி வந்த அவசரப் பிரேரணை தோற்று விட்டது. வங்காள மந்திரிகள் சொன்ன பதிலிலிருந்து அந்தக்கைதிகள் உபவாஸ ஹடத்தை நிறுத்திய பிறகு தான் அவர்களுடைய வேண்டுகோளை கவனிக்க முடியுமென்று கூறி விட்டதாகத் தெரிகிறது. 2 ஆயிரம் மாணவர்கள் ஆர்பாட்டம் செய்தனர். ஆனால் அவர்கள் சட்ட ஸபைக்குள் வர முடியாமல் கதவுகள் சாத்தப்பட்டு விட்டன.

காச்மீரத்தில் கலஹம்.

பசு வதம் காரணம்.

காச்மீரஸமஸ்தானத்தில் பசு வதை கூடாதென்று சட்ட உத்திரவு இருந்த போதிலும் அதை மீறி சில மகமதியர்கள் பசு வதம் நடத்தினார்கள். இதற்காக அவர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் அவ்வூர் ஹைக்கோர்ட்டார் அந்த தண்டனையைக் குறைத்து விட்டார்கள். ஹிந்துக்களுக்கு இதனால்வருத்தம் ஏற்பட்டு அவர்கள் ஹர்த்தால் அனுஷ்டிக்கிறார்கள். ஹிந்துக்களின் ஊர்வலத்தைப் போலீசார் தடியடியால் கலைத்தனர். ஹிந்துக்கள் மீது 144 வது போடப்பட்டிருக்கிறது. அநேகர் இதை மீறி ஸத்யாக்ரஹம் செய்து வருகிறார்கள்- ஹிந்துக்களின் கோவில் போலீஸ் பந்தோபஸ்தில் இருந்து வருகிறது.

கௌரவப்பட்டங்கள் ஒழிந்து போகுமோ?

பிரதி வருஷமும் அரசாங்கத்தார் பலருக்கு பல வித கௌரவப்பட்டங்கள் கொடுத்துவருகிறார்களல்லவா? இந்தப் [illegible] ரித்த விஷயம்.

இப்போது வருகிற வருஷத்தில் பட்டம் பெறக்கூடியவர்களின் ஜாப்தாவை அனுப்பும்படி இந்திய கவர்ன்மெண்டார் மத்ய மாகாண மந்திரிகளுக்கு எழுதினார்கள்.

ஆனால் மந்திரிகள் பட்டத்திற்கு எதிராயிருப்பவர்களாதலால் அந்தமாதிரி ஜாப்தா அனுப்ப மறுத்து விட்டனர். இதைப்பற்றி கார்யக்கமிட்டியில் யோஜிக்கப்படும்.

கவர்னருடன் ஸந்திப்பு.

பிரபல காங்கிரஸ் தலைவரான ஸ்ரீமான் பாபு ராஜேந்திரபிரசாத்தை பீஹார் கவர்னர் அழைத்து அவருடன் சில முக்ய விஷயங்களைப்பற்றிப்பேசியதாகத்தெரிகிறது.

மீண்டும் வேலை கொடுக்கப்படும்.

பர்டோலி முதலிய இடங்களில் சட்ட மறுப்பு, வரி மறுப்பு காலங்களில் தங்கள் வேலையை ராஜிநாமா செய்த கிராம அதிகாரிகளுக்கு மீண்டும் அந்த வேலையைக் கொடுக்க காங்கிரஸ் மந்திரி சபை முயற்சி செய்து வருகிறது.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co,.
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறாதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஷிட் ஜெம்ஷேட் சன்ஸ் & Co,
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

ஸ்ரீ நாரதபக்தி ஸூத்ரங்கள்.

(திவான்பஹதூர் ராமஸ்வாமி சாஸ்திரியாரின் மொழிபெயர்ப்பு)

(29—7—37 வாரத்தொடர்ச்சி.)

यः कर्मफलं त्यजति कर्माणि संन्यस्यति ततो निर्द्वन्द्वो भवति ॥४८॥

48. எவன் செய்கைகளில் பயனை விடுகிறானோ எவன் செய்கைகளைக்கூட விடுகிறானோ அவன் அப்படி செய்வதால் "இரட்டையாக" இருக்கும் தத்வங்களிலிருந்து விடுபட்டவனாகிறானோ.

यो वेदानपि संन्यस्यति केवलमविच्छिन्नानुरागं लभते ॥

49. எவன் வேதங்களைக்கூடவிட்டு இடைவிடாத பக்தியையே கடைப்பிடித்திருக்கிறானோ.

स तरति स तरति लोकांस्तारयति ॥५०॥

50. அவன் தாண்டுகிறான். அவன் தாண்டுகிறாள். பிறன்களையும் தாண்டும்படி செய்கிறார்.

(த்வந்தங்கள் என்றால் இரட்டையாகவே காணப்படும் தத்வங்கள் அதாவது சீதோஷ்ணம். நன்மை, தீமை. சுகம் துக்கம் முதலியவை).

अनिर्वचनीयं प्रेमस्वरूपम् ॥५१॥

51. ப்ரேமையின் தன்மை வெளியிடமுடியாது.

मूकास्वादनवत् ॥५२॥

52. ஊமையன் உணவுபோல்.

प्रकाश्यते क्वापि पात्रे ॥५३॥

53. தகுந்தவனிடத்தில் விளங்கும்.

गुणरहितं कामनारहितं प्रतिक्षणवर्धमानमविच्छिन्नं [illegible]

54. அது முக்கியகுணங்களைத் தாண்டினதாகவும் காமமற்றதாகவும் ஒவ்வொரு நிமிஷமும் ஓங்கிவளரும் தன்மையுள்ளதும் இடைவிடாததும் மிகவும் சூக்ஷ்மமானதுமான உணர்ச்சியாகும்.

तत्प्राप्य तदेवावलोकयति तदेव शृणोति तदेव चिन्तयति ॥५५॥

55. அதை அடைந்தபிறகு அதையே பார்ப்பான். அதைப் பற்றியே கேட்பான், அதையே நினைப்பான்.

गौणी त्रिधा गुणभेदादार्तादिभेदाद्वा ॥५६॥

56. குண சம்பந்தமுள்ள பக்தி குணபேதங்களால் அல்லது ஆர்த்தன் (வருந்தப்பட்டவன்) முதலானவர்கள் பேதங்களால் மூவ்வகைப்படும்.

उत्तरस्मादुत्तरस्मात् पूर्वपूर्वा श्रेयाय भवति ॥५७॥

57. அவைகளில் பின் சொன்னவைகளைக் காட்டிலும் முன் சொன்னவைகள் மேன்மையைக் கொடுக்கும்.

(பகவத் கீதையில் ஏழாவது அத்யாயத்தில் 16, 17, 18, 19 செய்யுட்களை இந்த ஸூத்திரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. ஆனால் பின் சொன்னவைகளைக் காட்டிலும் முன் சொன்னவைகள் மேன்மையைத்தரும் என்பது முக்குணபேதமான பக்தி அதாவது சாத்விக பக்தி ராஜஸபக்தி, தாமஸ பக்திகளுக்கே பொருந்தும்.)

கீதையில் ஏழாவது அத்யாயத்தில் சொல்லி இருப்பது நான்கு விதபக்தி. அதாவது ஆர்த்த பக்தி (வருந்துகிறவன்) ஜிஜ்ஞாஸு பக்தி (ஞானத்தை விரும்புகிறவன்) அர்த்தார்த்தி பக்தி (பொருளை விரும்புகிறன்) ஞானியின் பக்தி. ஆர்தன் என்றால் வியாதியாலோ, விரோதியாலோ கஷ்டப்படுகிறவன். மதுஸூதனர் ஆர்தனும் அர்த்தார்த்தியும் ஜிஜ்ஞாஸு ஆனதுபிறகு தான் ஞானி ஆகலாம் என்று சொல்லுகிறார். ஆகையால் 57-வது ஸூத்திரம் முக்குணபக்திகளையே சொல்லுகின்றது என்ற கொள்கை பொருத்தமுள்ளதாகும்.

ஆனால் ஆர்த்தபக்தி முதலியவைகளுக்கும் 57வதுஸூத்திரத்தை பொருத்தவேண்டுமானால், ஆர்த்தபக்தி என்பது பரமனை அடைய வேண்டும் என்று வருந்துகிறவன் என்று சொல்லவேணும். பொருளை விரும்புகிற பக்தனைவிட ஞானத்தை விரும்பும் பக்தன் உயர்ந்தவன். என்றும், ஞானத்தை விரும்பும் பக்தனைவிட பரமனையே விரும்பி வருந்தும் பக்தன் பெரியவன் என்றும் சொல்லலாம். இப்படிச் சொன்னால் கீதையில் சொல்லி இருக்கும் ஞானியாகிற பக்தனுக்கு இந்த ஸூத்திரத்தில் இடம் இல்லை. அவனைப்பற்றி 67-வது ஸூத்திரம் வேறாக ஏற்பட்டது என்று சொல்லக்கூடும்.

अन्यस्मात् सौलभ्यं भक्तौ ॥५८॥

58. மற்றவைகளைக்காட்டிலும் பக்தி சுலபமான வழி.

प्रमाणान्तरस्यानपेक्षत्वात् स्वयं प्रमाणत्वात् ॥५९॥

59. வேறு பிரமாணம் வேண்டியதில்லை. தானே தனக்கு பிரமாணம்.

शान्तिरूपात् परमानन्दरूपाच्च ॥६०॥

60. அமைதியின் உருவாக இருக்கிறது. பரமானந்தமாகவும் இருக்கிறது.

(அமைதியும் ஆனந்தமும் எல்லாவற்றைக்காட்டிலும் உயர்ந்தன. அவை அன்பால் கிடைக்கின்றன. ஆகையால் அன்பின் உயர்வு தனக்குத்தானாகவே தெரிகின்றது. சிரமமே இல்லாமல் அன்பினால் ஆனந்தம் கிடைக்கும்.)

लोकहानौ चिन्ता न कार्या निवेदितात्मलोकवेदत्वात् ॥६१॥

61. உலகம் வேதம் எல்லாவற்றையும் பரமனுக்கே அர்ப்பணம் செய்துவிட்டதால், உலகத்திற்கு கெடுதி நேருமோ என்று கவலை கூடாது.

न तत्सिद्धौ लोकव्यवहारो हेयः किन्तु फलत्यागस्तत्साधनञ्च कार्यमेव ॥६२॥

62. பக்தி நிறம்பி இருக்கும் போது உலகக் கடமைகளை விடக்கூடாது. அவைகளின் பயன்களை மட்டும் விடவேணும். கடமைகளைச் செய்யவேணும்.

(ஆகையால் பக்திமார்க்கத்தில் போகப்பட்டவன் உலகத்துக்கு என்ன வருமோ என்று கவலைப்படக்கூடாது. ஆனால் கடமைகளை விடக்கூடாது. செய்கைகளின் பயன்களில் பற்றுதலை மட்டும் விடவேணும்.)

स्त्रीधननास्तिकचरित्रं न श्रवणीयम् ॥६३॥

63. பெண்களின் அழகின் சரித்திரமும் நாஸ்திகர்களின் சரித்திரமும் கேட்கக்கூடாது.

अभिमानदम्भादिकं त्याज्यम् ॥६४॥

64. அகங்காரம் செருக்கு முதலியவை விடவேணும்.

तदर्पिताखिलाचारस्सन् कामक्रोधाभिमानादिकं तस्मिन्नेव करणीयम् ॥६५॥

65. பரமனுக்கு எல்லா செய்கைகளையும் அர்ப்பணம் செய்வதால் ஆசை, சினம் பற்றுதல் எல்லாம் அவனிடமே காட்டவேணும். (கோபம்கூட, ஏன் அவன் வரத்தாமதம் என்று அவனிடமே செலுத்தலாம்.)

त्रिरूपभङ्गपूर्वकं नित्यदासनित्यकान्ताभजनात्मकं प्रेमकार्यं प्रेमैवकार्यम् ॥६६॥

66. முக்குண பக்தியையும் தாண்டி பரமனுக்கு நித்யதாஸ பக்தி உருவான ப்ரேமையோ நித்யகாந்தா பக்தி உருவான ப்ரேமையோ செய்யவேணும்.

भक्ता एकान्तिनो मुख्याः ॥६७॥

67. இத்தகைய ஒரே எண்ணமுடிய ஏகாந்த பக்தர்களே சிறந்தவர்கள்.

कण्ठावरोधरोमाश्रुभिः परस्परं लपमानाः पावयन्ति कुलानि पृथिवीञ्च ॥ ६८ ॥

68. தழதழத்த பேச்சுடனும்மயிர்சிலிர்ப்புடனும், ஆனந்தக் கண்ணீருடனும் ஒருவரை ஒருவர் கண்டுபேசி குலத்தையும் ஞானத்தையும் புனிதமாக்குகிறார்கள்.

तीर्थीकुर्वन्ति तीर्थानि सुकर्मीकुर्वन्ति कर्माणि सच्छास्त्रीकुर्वन्ति शास्त्राणि ॥ ६९ ॥

69. புண்ணிய ஸ்தலங்களை மிகவும் தூய்மையுள்ளதாகச் செய்கிறார்கள். நூல்களை நன்னூல்களாக்குகிறார்கள்.

तन्मयाः ॥ ७० ॥

70. ஈச்வர மயமாகவே இருக்கிறார்கள்.

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

‘மூகபஞ்சசதீ’

கடாக்ஷ சதகம்.

1. மோஹாந்தகார நிவஹம் விநிஹந்தும் ஈடே
மூகாத்மனாம் அபி மஹாகவிதாவதான்யான் |
ஸ்ரீ காஞ்சிதேச சிசிரீக்ருதி ஜாகரூகான்
ஏகாம்ரநாத தருணீ கருணாவலோகான் ||

மூகாத்மனாம் அபி - ஊமையாயிருப்பவர்களுக்குக் கூட, மஹாகவிதா வதான்யான் - உயர்ந்த கவித்வ சக்தியைக் கொடுப்பதில் தாராளமான ஸ்வபாவத்தையுடையவைகளும், ஸ்ரீ காஞ்சிதேச - ஸ்ரீ காஞ்சிதேசத்தை, சிசிரீக்ருதி - குளிர்ச்சி செய்வதில் (ஸந்தோஷமடையச் செய்வதில்) ஜாகரூகான் - ச்ரத்தையுள்ளவைகளும், ஏகாம்ரநாத தருணீ - ஏகாம்ரநாதருடைய பத்னியான ஸ்ரீ காமாக்ஷியின், கருணாவலோகான் - கருணை நிறைந்த பார்வைகளை, மோஹாந்தகாரநிவஹம் - (என்னுடைய) மோஹமாகிற இருள் கூட்டத்தை, விநிஹந்தும் - போக்கடிப்பதற்கு வேண்டி, ஈடே - ஸ்தோத்ரம் செய்கிறேன்,

1. இதிலிருந்து இந்த சதகம் முழுவதிலும் கவியானவர் அம்பிகையின் கடாக்ஷத்தை (கடைக்கண் பார்வையை) வர்ணிக்கிறார்.

2. ‘மூகாத்மனாமபி........வதான்யான்’ என்பதில் கவியானவர் தன்னைப்பற்றிச் சொல்லிக் கொண்டதாகவும் சொல்லலாம்.

2. மாதர் ஜயந்தி மமதாக்ரஹமோக்ஷணானி
மாஹேந்த்ர நீல ருசி சிக்ஷண தக்ஷிணானி |
காமாக்ஷி கல்பித ஜகத்ரய ரக்ஷணானி
த்வத் வீக்ஷணானி வரதான விசக்ஷணானி ||

மாத: காமாக்ஷி - தாயே! காமாக்ஷி! மமதாக்ரஹ மோக்ஷணானி - மமதையாகிற பலமான பிடிப்பிலிருந்து விடுதலை செய்கிறவைகளும். மாஹேந்த்ர நீல ருசி - இந்த்ர நீலக்கல்லின் காந்தியை, சிக்ஷண தக்ஷிணானி - தோற்கடிப்பதில் ஸாமர்த்யமுள்ளவைகளும், கல்பித ஜகத்ரய ரக்ஷணானி - மூன்று லோகங்களையும் காப்பாற்றுகிறவைகளும், வரதான விசக்ஷணானி - வரங்களைக் கொடுப்பதில் தேர்ந்தவைகளுமான, த்வத் வீக்ஷணானி - உன்னுடைய பார்வைகள், ஜயந்தி - விளங்கிக்கொண்டிருக்கின்றன.

3. ஆனங்க தந்த்ர விதி தர்சித கௌசலானாம்
ஆனந்த மந்த பரிகூர்ணித மந்தராணாம் —
தாரள்யம் அம்ப தவ தாடித கர்ணஸீம்னாம்
காமாக்ஷி கேலதி கடாக்ஷ நிரீக்ஷணானாம் ||

அம்ப காமாக்ஷி - தாயே! காமாக்ஷி! ஆனங்க தந்த்ர விதி- காமசாஸ்திரத்திய நியமங்களில், தர்சித கௌசலானாம் - காட்டப்பட்ட ஸாமார்த்தியத்தையுடையவைகளும், ஆனந்த மந்த பரிகூர்ணித - ஆனந்தத்தினால் மெதுவாக சுழல்வதை, மந்தராணாம் - காட்டுகிறவைகளும், தாடித கர்ணஸீம்னாம் - காதுவரையில் நீண்டிருப்பவைகளுமான, தவ கடாக்ஷ நிரீக்ஷணானாம் - உன் கடைக்கண் பார்வைகளுடைய, தாரள்யம் - தளதளப்பானது, கேலதி - விளையாடிக்கொண்டிருக்கிறது. (சோபிக்கிறது).

4. கல்லோலிதேன கருணாரஸ வேல்லிதேன
கல்மாஷிதேன கமனீய ம்ருதுஸ்மிதேன |
மாம் அஞ்சிதேன தவ கிஞ்சன குஞ்சிதேன
காமாக்ஷி தேன சிசிரீகுரு வீக்ஷிதேன ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! கருணாரஸ வேல்லிதேன-கருணாரஸத்தின் (அலைகளின்) அசைவினால், கல்லோலிதேன - கொந்தளித்ததாயும், கமனீய ம்ருதுஸ்மிதேன - அழகான மந்தஹாஸத்தினால், கல்மாஷிதேன - பலநிறத்தொடு கூடியதாகத்தோன்றுவதும், அஞ்சிதேன - வளைந்ததும், கிஞ்சன குஞ்சிதேன-கொஞ்சம் குறுகியதுமான, தவ - உன்னுடைய, தேன வீக்ஷிதேன - அப்பேர்ப்பட்ட பார்வையினால், மாம் சிசிரீகுரு - என்னைக் குளிரச் செய்.

1. கருணாரஸத்தை சிகப்பு நிறமாகவும், மந்தஸ்மிதத்தை வெளுப்பாகவும் வர்ணிப்பது வழக்கமாகையால் அவையிரண்டும் சேர்வதை இங்கு ‘கல்மாஷிதம்’ என்று சொல்லப்பட்டது,

2. அஞ்சிதம், குஞ்சிதம் இரண்டும் (பார்வையானது) வளைந்து குறுகியிருப்பதைக் குறிக்கும் பதங்கள்.

5. ஸாஹாஸ்யகம் கதவதீ முஹுரர்ஜுனஸ்ய
மந்தஸ்மிதஸ்ய பரிதோஷித பீம சேதா: |
காமாக்ஷி பாண்டவ சமூரிவ தாவகீனா
கர்ணாந்திகம் சலதி ஹந்த கடாக்ஷலக்ஷ்மீ: ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! தாவகீனா கடாக்ஷ லக்ஷ்மீ :- உன்னுடைய கடைக்கண் பார்வையானது, மந்தஸ்மிதஸ்ய அர்ஜுனஸ்ய - புன்சிரிப்போடுகூடிய அர்ஜுனனுக்கு, முஹு: ஸாஹாய்யகம் கதவதீ - அடிக்கடி ஒத்தாசையை அடைவதாயும், பரிதோஷித பீமசேதா: - பீமசேனனுடைய மனதை ஸந்தோஷப்படுத்துகிறதாயுமுள்ள, பாண்டவ சமூ: இவ - பாண்டவர்களுடைய ஸேனைமாதிரி, அர்ஜுனஸ்ய மந்தஸ்மிதஸ்ய - வெளுப்பான புன்சிரிப்பினுடைய அடிக்கடி அடைவதாயும், பரிதோஷித பீம சேதா: - பரமசிவனுடைய மனதை ஸந்தோஷப்படச் செய்கிறதாயும் (இருந்துகொண்டு), கர்ணாந்திகம் சலதி - கர்ணனுக்கு ஸமீபத்தில் செல்ல ஆரம்பிக்கிறது. (காதுக்கு ஸமீபத்தில் வருகிறது.) ஹந்த! ஆச்சர்யம்.

1. இதில் அம்பாளுடைய கடாக்ஷத்தை பாண்டவசேனைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. அர்ஜுனமென்றால் வெளுப்பு என்று அர்த்தம். அதினாலேயே அர்ஜுனனுக்கு அம்மாதிரிப் பெயர் ஏற்பட்டது. பீமனென்பது பீமஸேனனைக் குறிப்பதும் தவிர பரமசிவனுடைய அஷ்டமூர்த்திகளில் ஒரு மூர்த்திக்கும் பெயர். கர்ணமென்பது கர்ணனைக் குறிப்பதுடன் காதையும் குறிக்கும்.

2. புன்சிரிப்பை வெளுப்பாகச் சொல்வது வழக்கம். அதனால் தான் இங்கு ‘அர்ஜுனஸ்ய மந்தஸ்மிதஸ்ய’ என்று சொல்பட்டது.

3. அர்ஜுனன் வீரர்களில் ச்ரேஷ்டமானவனாகையால் அவன் புன்சிரிப்புடன் யுத்தம் செய்வதாக ‘மந்தஸ்மிதஸ்ய அர்ஜுனஸ்ய’ என்று சொல்லப்பட்டது.

4. [illegible] டிருப்பதாகவர்ணிக்கப்படுவதை அநுஸரித்து ‘கர்ணாந்திகம் சலதி, என்று சொல்லப்பட்டது. கர்ணன் பாண்டவர்களுக்கு எதிர்கக்ஷியைச் சேர்ந்தவனாகையால் அவனோடு யுத்தம் செய்ய பாண்டவ ஸேனை போவதை ‘கர்ணாந்திகம் சலதி’ என்று சொல்லப்பட்டது.

6. அஸ்தம் க்ஷணான்னயது மே பரிதாபஸூர்யம்
ஆனந்த சந்தரமஸம் ஆனயதாம் ப்ரகாசம் |
காலாந்தகார ஸுஷமாம் கலயன் திகந்தே
காமாக்ஷி கோமள கடாக்ஷ நிசாகமஸ்தே ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷியே! தே - உன்னுடைய, கோமள கடாக்ஷ நிசாகம: - அழகான கடாக்ஷமாகிற ஸாயங்காலமானது, திகந்தே - எல்லா திக்குகளிலும், காலாந்தகார ஸுஷமாம் - கருத்ததான இருட்டின் அழகை, கலயன் - உண்டுபண்ணிக்கொண்டு, மே பரிதாபஸூர்யம் - என்னுடைய பரிதாபமாகிற ஸூர்யனை, க்ஷணாத் அஸ்தம் நயது - ஒரு க்ஷணத்தில் அஸ்தமிக்கச் செய்யட்டும், ஆனந்த சந்த்ரமஸம் - ஆனந்தமாகிற சந்திரனை, ப்ரகாசம் ஆனயதாம் - வெளிவரச் செய்யட்டும்.

7. தாடங்க மௌக்திக ருசாங்குர தந்த காந்தி:
காருண்ய ஹஸ்திப சிகாமணினாதிரூட: |
உன்மூலயத்வசுப பாதபம் அஸ்மதீயம்
காமாக்ஷி தாவக கடாக்ஷ மதங்கஜேந்த்ர: ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! தாடங்க மௌக்திக - தாடங்கத்திலிருக்கும் முத்துக்களுடைய, ருசாங்குர தந்தகாந்தி: - ப்ரகாசமாகிய வேரோடு கூடிய தந்தங்களுடைய காந்தியோடும், காருண்ய - கருணையாகிற, ஹஸ்திப சிரோமணினா - உத்தமமான மாவுத்தனால், அதிரூட: - ஏறப்பட்டதுமான (நடத்தப்பட்டதுமான) தாவக - உன்னுடைய, கடாக்ஷ மதங்கஜேந்த்ர: -கடாக்ஷமாகிற கஜச்ரேஷ்டமானது, அஸ்மதீயம் - நம்முடைய, அசுப பாதபம்- அசுபமாகிற வ்ருக்ஷத்தை, உன்மூலயது - வேரோடு களைந்து எறியட்டும்.

1. இதில் அம்பிகையின் கடாக்ஷத்தை யானைக்கு ஸமானமாக வர்ணிக்கப்பட்டது. மதங்கமென்றாலும் மதங்கஜமென்றாலும் யானைக்குப் பெயர்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-ஹு ஆடி-மீ 28உ

புதிய மாறுதலுக்கு இடம் கொடுப்பதா ?

தற்போது நமது பாரததேசத்தில் படித்த வகுப்பைச்சேர்ந்த சிலரிடமிருந்து தர்ம விஷயமாகப் புதிய சர்ச்சைகள் பல உதித்திருக்கின்றன. அவைகளில் நியாயமான ஒரு முடிவு ஏற்படவேண்டுமென்று அவர்கள் எதிர்பார்ப்பதாயும் தெரிகிறது. இந்த நிலைமையை ஸமாளிக்கவேண்டிய பொறுப்பு நமது மதாசார்யர்களுக்கும், பண்டிதர்களுக்கும் நிர்ப்பந்தமாக ஏற்பட்டிருக்கிறது. இதை [illegible] மயின்று நினைக்கப்படுவதாயும் தெரிகிறது. கால தேச நிலைமைக்கேற்றபடி தர்மங்களில் மாறுதல்களும், திருத்தங்களும் செய்ய வேண்டுமென்ற வாதம் நீண்டகாலமாக நம் தேசத்தில் நிகழ்ந்துவருவது நாம் அறிந்த விஷயமே. ஆயினும் அவ்வப்போது கிளம்பும் துர்வாதங்களை மதாபிமானிகளான பண்டிதர்கள் தக்க ஆதாரங்களுடன் மறுத்துப் பதில் சொல்லிவந்திருந்தால் சீர்திருத்தவாதங்கள் இப்போதுள்ள உச்சஸ்திதிக்கு வாராமல் தடுத்திருக்கலாம். நம்மவர்கள் உதாஸீனமாயிருந்ததின் பயனே இப்போது நாம் நிர்ப்பந்தமாகவும் அவஸரமாகவும் அந்த விஷயங்களுக்கு ஸமாதானம் கூறவேண்டிய நிலைமையைஉண்டுபண்ணியிருக்கிறது. நமது அச்ரத்தையின் பலனை நாமே அநுபவிக்க நேரிட்டிருக்கிறது.

அரசனுக்கு தர்மத்தை மாற்றும் அதிகாரம் உளதென்று கிளம்பியுள்ள வாதம் முதலானவைகள் ஒருபுறமிருக்க, நமது விவாஹாதி ஸம்ஸ்கார தர்மங்களையும் தாயவிபாக முறைகளையும் காலத்திற்கு ஏற்றபடி மாற்றவேண்டுமென்றும், கிறிஸ்தவாதி மதாந்தரங்களில் பிரவேசித்துவிட்ட ஹிந்துக்களைச் சுத்தி செய்து மீண்டும் நம்முடன் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றும், சில அபிலாஷைகள் உண்டாகியிருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் இதை தேச நலத்தைக் கருதி சீக்கிரத்தில் முடிவு செய்யவேண்டுமென்று தக்க பின் பலத்துடன் தார்மிகர்களை வற்புறுத்தப் புறப்பட்டிருப்பதாயும் தெரிகிறது.

இவ்விஷயத்தை நாம் விசாரிக்கப் புகும்போது, சில முக்ய விஷயங்களை கவனிக்க வேண்டியிருக்கிறது. மேற்கண்ட சீர்திருத்த அபிலாஷையானது, நம் தேச ஜனங்களின் ஆந்தரமான எண்ணத்தால் உண்டாகியிருக்கிறதா, அல்லது அந்நியர்களுடைய வித்யை, ஸஹவாஸம் முதலிய தூண்டுதல் முதலிய வெளிக்காரணங்களால் உண்டாகியிருக்கிறதா வென்று யோஜிக்கவேணும்.

நம் தேச ஜனங்களின் ஸ்வரூப ஸ்வபாவங்களையும் சாஸ்திரவச்யதையையும், ஆஸ்திக்யத்தையும், இன்று வரையில் அவர்கள் நடந்து வரும் மாதிரியையும் கவனிக்கவேணும். சாஸ்திர விதிகளுக்கு உட்பட்டும் அவைகளை மீறக்கூடாதென்ற நியமத்தாலும் இன்று வரையில் ஆஸ்திகர்கள் கஷ்டங்களை ஸஹித்துக்கொண்டார்களே யல்லது சாஸ்திர விதியை மீறத் துணியவில்லை. ஜாதிக்கலப்பு விவாஹம், விதவா விவாஹம் போன்றவை ஸௌகர்யமானவைகளாகத் தோன்றிய போதிலும், தேசத்தில் பெருவாரியாக நம் ஜனங்கள் அவைகளை அநுஷ்டிக்கத் துணியாமல் இன்றுகூட கட்டுப்பட்டு நிற்பதேன் ? சாஸ்திரவிதி பயத்திற்காகப் பெரிய கஷ்டங்களையெல்லாம் ஸஹித்துக்கொண்டிருப்பதேன் ?

ஆதலால்,இன்னும் பெரும்பான்மையோர் சாஸ்திரவச்யர்களாகவே இருந்து வருவதாலும், புதிய மாறுதலை வெறுப்பவர்களாயிருப்பதாலும், அவர்கள் ஆந்தரமாக மேற்சொல்லிய சீர்திருத்தங்களை விரும்புவதாகச் சொல்லமுடியாது. ஆகையால் ஆங்கிலம் படித்த ஒரு சிலர் அந்நியர்களைப் பார்த்து அவர்களைப் போலவே நாமும் இருக்கவேண்டுமென்ற அபிலாஷையாலேயே சீர்திருத்தருசியை வெளியிட்டு வருகிறார்கள். அதற்கு பின் பலமாக அன்யர்களும் நம் ஆசாரங்களை திருத்த வேண்டுமென்று தூண்டிவிட்டு வருகிறார்கள். ஆகையால் வெளியாருடைய தூண்டுதலாகிய வெளிக்காரணத்தாலேயே இப்போதிய ஆசாரத் திருத்தப்ரஸ்தாபங்கள் கிளம்புகின்றனவாயிருப்பதால் நாம் அதை பொருட்படுத்த வேண்டியது அவச்யமில்லை என்று சில தார்மிகர்கள் நினைக்கிறார்கள். அன்னியர்களுடைய தூண்டுதலுக்காக நமது மத தர்மங்களை நாம் திருத்திக்கொண்டே போனால் நமது மதத்தின் கதி என்னவாகும் ? இதற்கு நாம் சிறிதும் இடம் கொடுக்க முடியாது. சாரதாச்சட்டம் ஏற்பட்ட சரித்திரத்தை கவனிக்க வேணும். மிஸ்மேயோ முதலிய பல அன்னியர்களுடைய தூண்டுதலுக்குள்பட்டே நம்மவர்களில் சிலருக்கு பால்ய விவாகத்தைத் தடை செய்ய அபிலாஷை உண்டாகியது என்பது கவனிக்கத் தக்கது. இத்தகைய நிலைமைக்கு நாம் இடம் கொடுக்க முடியாது.

உண்மையிலேயே நம் ஜனங்களுக்குப் புதிய மாறுதல்கள் வேண்டுமென்ற விருப்பமிருப்பதாக வைத்துக்கொண்டு பேசினாலும் இந்த மாறுதலை உண்டுபண்ணவோ, அதை நிர்ணயிக்கவோ, யாருக்கு அதிகாரமுளது? தற்காலத்தில் தோன்றியுள்ள ஒரு சிறிய ஸௌகர்யத்தை உத்தேசித்து சாஸ்திர விதிகளையும், தர்மங்களையும்மாற்ற இடம் கொடுத்தால் பிறகு வியவஸ்தை எப்படி நிலை நிற்கும் ? அதே வழியில் ஓயாமல் மாறுதல் செய்ய இடமுண்டாகிக் கடைசியில் தர்ம ஸ்வரூபமே மறைந்துபோக நேருமல்லவா ? ஜனஸமூஹத்தில் ஒவ்வொருவருக்கும் ஒன்று ஹிதமாயும், அவச்யமாயும் தோன்றலாம் அதையெல்லாம் செய்துகொண்டே போனால் தர்மத்தின் கதி என்ன ? சாஸ்திரத்தின் கதி என்ன ?

ராகத்வேஷங்கள், பிரமம், தவறுதல், பக்ஷபாதம் அக்ஞான, அரைக்ஞானம் ஆகியவைகள் நிரம்பிய புருஷபுத்தியினால் ஏற்படும் நிர்ணயங்கள் எல்லோரையும் கட்டுப்படுத்துவதாயும், தேச க்ஷேமகரமாயும் எப்படி இருக்க முடியும் ? ஒருவர் அல்லது ஒரு கூட்டத்தார் செய்துள்ள யதேச்சையான வியவஸ்தைகளை மற்றவர் அங்கீகரிக்க வேண்டிய நிர்ப்பந்தமென்ன ? எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்ட ஞானசக்திமான் ஒருவன் இருக்கிறானா ? ஆதலால், சாஸ்திரத்தையும் ஸமூஹ வியவஸ்தையையும் ஆதரித்து நிற்கும் ஆஸ்திகர்கள், மனம் போனபடி யெல்லாம் தர்மத்திலும், ஆசாரத்திலும் மாறுதலைச் செய்ய உடன்படுவது உசிதமாயிருக்காது. தேசத்தில் தானாகவே அதர்மம் பரவிவருவது நிஜமாயினும், அதற்கு ஆதரவு அளித்து அதன் வழியே ஜனங்களைச் சீர்திருத்துவது புத்திசாலித்தனமாகாது. அதர்மம் தானாகப் பரவுவதுபோல் தானாக அடங்குங்காலமும் ஒன்று வரக்கூடும். அதுவரை ஆஸ்திகர்கள் நல்ல காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதே யுக்தமாய் இருக்குமென்று நினைப்பதே ஆஸ்திகர்களுக்கு முறையாகும்.

குறிப்புகள்

இனி என்ன செய்வது ?

சாரதாச் சட்டத்திற்குப் பயந்த பல ஆஸ்திகர்கள் சுதேச ஸம்ஸ்தானங்களிலும், பிரஞ்சுப் பிரதேசங்களிலும் போய் விவாஹம் நடத்திவந்தார்கள். இது சீர்திருத்தக் காரர்களின் கண்களில் உறுத்தி வந்தது. இதைத் தடுக்க அவர்கள் மேலான இடங்களில் சதி செய்து வெற்றியடைந்து வருகிறார்கள்.

இந்தியாவிலுள்ள பிரஞ்சுப்ரதேசங்களில் பால்யவிவாஹத்தைதடுக்கும் உத்திரவுஒன்று பிரஞ்சு கவர்ன்மெண்டாரால் போடப்பட்டிருக்கிறது. அதன்படி அங்கு பிள்ளைகளுக்கு 16-வயது வரையிலும், பெண்களுக்கு 14-வயது வரையிலும் விவாஹம் செய்வதுகுற்றமாக்கப்பட்டிருக்கிறது. பிரிடிஷ் இந்தியா வாஸிகள் சாரதா சட்டத்திற்குப் பயந்து பிரஞ்சுப் பிரதேசத்தில் விவாஹம் செய்வது பிரிடிஷ், பிரஞ்சு இருதேசத்திற்கும் அவமானத்தை விளைவிக்கிறதாம். ஆகலால் அதை தடுக்கவேண்டியது அவச்யமாகி விட்டதாக பிரஞ்சு கவர்ன்மெண்டார் சொல்லுகிறார்கள். இது இப்படியிருக்க, திருவாங்கூர் ராஜ்யத்தில் 16-வயதுக்குக் கீழ் பெண்களுக்கு விவாகம் செய்வது குற்றமாக்கப்பட்டு ஒரு மசோதா கொண்டுவந்து அது தனிக்கமிட்டி ஆலோசனைக்கு வந்திருக்கிறதாம். அதுவும் அங்கு சட்டமாகி விடுவதில் தடையொன்றுமிருக்காது

ஆதலால், பாபத்திற்குப் பயந்த ஆஸ்திகர்களுக்கு இருந்துவந்த சிறிது ஸௌகரியமும் போய்விட்டது. இனி தார்மிகர்கள் செய்யக் கூடியதென்ன ? சட்ட நிர்ப்பந்தத்திற்கு நிர்கதியாக உட்பட்டு, சாஸ்திரத்தையும் மனஸ்ஸாக்ஷியையும் பறிகொடுத்து அதர்ம விவாகத்தை அநுஷ்டிக்க வேண்டியதுதானா ? 14-வயதிற்கு மேல் விவாகம் செய்கையில் பெரும்பாலான பெண்கள் பிரௌடைகளாகியிருப்பார்கள். தார்மிகர்கள் இந்த ஸங்கடத்தை ஸமாளிப்பது எப்படி ? இதற்கு சாஸ்திர விரோதமின்றியும், ஆபத்கால தர்மத்தையநுசரித்தும் ஒரு வியவஸ்தை ஏற்படுத்தவேண்டும் என்று பலர் சிந்திக்க ஆரம்பித்துவிட்டதாகத் தெரிகிறது.

இதைப் பற்றி நமது மதாசார்யர்களும், பண்டிதர்களும் ஒரு க்ஷணம் கூட தாமதியாமல் ஒருதிட்டமான நியமத்தைக்காட்டி ஜனங்கள் அதைப் பின் பற்றும்படி செய்ய வேண்டும்.

ஸ்ரீஜகத்குரு
வியாஸபூஜா முகாம்

Palokol
(க்ஷீராராம க்ஷேத்திரம்.)
West Godavary Dt.

மத ரக்ஷணத்தைப்பற்றி மந்திரியின் உறுதிமொழி.

ஐக்யமாகாண மந்திரிஸபையின் சார்பாக பிரதம மந்திரியான ஸ்ரீமான் கோவிந்தவல்லப பந்து அவர்கள் தங்களுடைய வேலைத்திட்டத்தைப்பற்றி வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் மத ரக்ஷணத்தைப்பற்றி உறுதியான சில வார்த்தைகள் காணப்படுகின்றன. ஜீவாதார உரிமைகளை ஸம்ரக்ஷித்துக் கொடுப்பதில் அந்தந்த ஜாதி மதஸ்தர்களின் பாத்யம் உறுதியாக கவனிக்கப்படுமென்று அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

> எந்த ஜாதி மதஸ்தராயிருப்பினும், அவருக்கு மனச்சாக்ஷிப்படி நடக்கும் உரிமையும், பொது அமைதி, ஒழுக்கத்திற்கு விரோதமின்றி தங்கள் தங்கள் மதத்தைப் பின்பற்றும் உரிமையை அளிப்பதாகஉறுதி கூறுவதாயும், சிறுபான்மை வகுப்பினரின் பாத்யம் பாதுகாக்கப்படுமென்றும்,

அந்த அறிக்கையில் மந்திரி உறுதி சொல்லியிருக்கிறார்.

முதன் மந்திரி ஸ்ரீமான் பந்து தமது மாகாண நிலைமையை நிதானித்து மத விஷயமாக முன்னாடியே உறுதிகொடுத்து பொது ஜனங்களைத்திருப்திசெய்ய முன்வந்தது புத்திசாலித்தனமாகும். அந்த மாகாணத்தின் மஹம்மதியர்களுடைய ஸங்க்யையை கவனித்து அவர்களுடைய ஆதரவைப் பெறும் நோக்கத்துடன் இந்த அறிக்கை வெளியிடப்பட்டதாக நினைக்க ஹேதுவிருந்தாலும் இந்தப் பொதுக்கொள்கையானது ஹிந்துக்களின் மத விஷயத்திலும் கையாளப்படாமலிருக்க நியாயமில்லை. ஆனால் அறிக்கையில் "பொது அமைதிக்கும், ஒழுக்கத்திற்கும் விரோதமில்லாத வகையில்" என்று மதரக்ஷணத்திற்கு ஒரு வரையறை கொடுக்கப்பட்டிருப்பதின் அர்த்தம் விளங்கவில்லை. மதங்களை ஒருவன் அநுஷ்டிப்பதில் 'ஒழுக்க விரோதம்' என்ன ஏற்படக்கூடுமென்று நமக்குத் தெரியவில்லை. இது ஒரு தந்திரமான வார்த்தையாயிருக்கிறது. இதற்கு ஸெளகர்யமாக அவரவர் இஷ்டம்போல் வியாக்யானம் செய்துகொள்ளமுடியும். மதரக்ஷணம் செய்வதில் வரையறை எதெற்காக ? மதத்தின் பெயரால் சிலர் குரூரச்செய்கைகள் செய்வதைத் தடுக்க இது உத்தேசிக்கப்பட்டிருக்கலாம் ஆனால் அதை வியக்தமாகச் சொல்லி விடுவது மேலாகும். பால்ய விவாஹம் போன்றவை "ஒழுக்க விரோதம்" என்ற வரையறையில் வரக்கூடாதென்பது நமது விருப்பம்

சென்னை மந்திரிகள் இவ்விஷயமாக எப்படி நடக்கப்போகிறார்கள் ? இந்த மாகாணத்தினரின் மதப்பற்று அவர்களுக்குத் தெரியாமலிருக்க முடியாது. ஆதலால் மதாசார விஷயமாகத் தங்கள் கொள்கை என்னவென்பதையும், தாங்கள் எந்தவழியில் போக உத்தேசமென்றும் பொது ஜனங்களுக்கு நியாயமான உறுதிகொடுத்து அறிக்கை வெளியிடுவது அவச்யமாகும். அப்படிச் செய்துவிட்டால் சட்டஸபை மெம்பர்கள் நினைத்தபடியெல்லாம் மத மசோதாக்கள் கொண்டுவருவதும், அவைகளை ஆக்ஷேபித்துப் பொதுஜனங்கள் கிளர்ச்சி நடத்துவதும், இதனால் மந்திரிகளின் அமைதியான நிர்வாஹத்திற்கு பங்கம் நேருவதும் இல்லாமல் தடுக்கலாம்.

கார்யக்கமிட்டிக் கூட்டம்.

காங்கிரஸ் கார்யக்கமிட்டியின் கூட்டம் வார்தாவில் 17உயன்று கூட ஏற்பாடாகியிருக்கிறது. எதிர்பாராமல், அவஸரமாக இக்கூட்டம் கூட்டப்பட்டிருப்பதைப்பற்றி பலவிதாக பேச்சு நடக்கிறதாம்.

6 மாகாணங்களின் காங்கிரஸ் முதன் மந்திரிகள் இந்தக் கூட்டத்திற்கு வரவேண்டுமென்று கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறதாம்.

மந்திரிகளுக்கு உபசாரம்.

முனிஸிபாலிடி பணம் உபயோகிக்கக் கூடாது

சென்னை மந்திரிகளுக்கோ, வேறு எவருக்கோ, எந்த முனிஸிபாலிடியும் முனிஸிபல் பணத்திலிருந்து செலவுசெய்து உபசாரப்பத்திரம் படிப்பது கூடாதென்று முதன் மந்திரி ஓர் உத்திரவு போட்டிருக்கிறார்.

உபசாரப்பத்திரம் கொடுக்கும் வழக்கத்தையே நிறுத்திவிட-வேண்டுமென்று மந்திரிகள் கோரிக்கொண்டிருக்கிறார்கள்.

திருவாங்கூரிலும் "சாரதாச்"சட்டம்.

திருவாங்கூர் சட்டஸபையில் நாராயணி அம்மா என்பவளால் கொண்டுவரப்பட்டுள்ள பால்ய விவாஹத்தடை மசோதாவானது தனிக்கமிட்டி ஆலோசனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த மசோதா பெரும்பாலும் சாரதாச்சட்டத்தை அநுஸரித்ததாக இருக்கிறது.

ஆயினும் பெண்களுக்கு 15வயது முடிந்த பிறகுதான் விவாஹம் செய்யவேண்டுமென்று மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் உத்திரவுபெற்று 13 வயதுக்குப் பிறகும் விவாஹம் அநுமதிக்கப்படும். ஆனால் எக்காரணத்தைக்கொண்டும் ருதுசாந்திக் கல்யாணம் 15 வயதிற்கு முன்னதாக அநுமதிக்கப்படமாட்டாதாம்.

சம்பளக் குறைவு பிரஸ்தாபம்.

சென்னை ஸர்க்கார் உத்யோகஸ்தர்களில் ஸிவில் ஸர்விஸினர் உள்பட பலர் தாங்களாகவே சம்பளத்தைக் குறைத்துக் கொள்ள முன் வருவார்களென்று எதிர் பார்க்கப்படுகிறது, முதன் மந்திரியின் வேண்டுகோளே இதற்குக் காரணம்.

கோவில் குளத்தை மூடுவதா ?

மதுரையில் ஆக்ஷேபம்.
காங்கிரஸின் அச்ரத்தை.

மதுரையிலுள்ள முனிசிபல் தெப்பக்குளத்தை/முனிசிபல் கமிஷனர், நகர அழகை உத்தேசித்து மூடிவிட முயற்சிப்பதாகத் தெரிகிறது. இதை ஆக்ஷேபிப்பதற்காக மதுரையில் பிரபலஸ்தர்களுடைய கூட்டம் நடைபெற்றது.

பிரபல காங்கிரஸ்வாதி ஸ்ரீமான் வைத்யநாதய்யர் முனிசிபால்டியின் இச்செய்கையைப் பலமாகக் கண்டித்து காங்கிரஸ் கௌன்ஸிலர்கள் அனேகர் இருந்தும் அவர்கள் இவ்விஷயத்தில் சிரத்தைக் காட்டவில்லையென்றும், காங்கிரஸ் மந்திரிசபை கூட இதைக்கவனிக்கவில்லை என்றும், அத்தகைய செய்கைகளால் ஹிந்து மதத்திற்கே அபாயம் நேரிடுவதாய் இருப்பதாயும், தெய்வமும், பரிசுத்த ஸ்தலங்களும் பாதிக்கப்படுவதைத் தாம் ஹிந்து மதஸ்தர் என்கிற ஹோதாவில் கண்டிப்பதாயும், இதற்காகத் தாம் சிறைச் செல்லவும் தயாராயிருப்பதாயும் வெகு ஆவேசத்துடன் பேசினார். தேவஸ்தான போர்டு கமிஷனர் மதுரை வந்து இவ்விஷயமான விவாதத்தைக் கேட்டு விசாரணை செய்கிறார்

வேலூர் ஜெயிலுக்கு மந்திரிவிஜயம்

சாப்பாட்டுப் பரிக்ஷை.

சிறைச்சாலை மந்திரியான ஸ்ரீமான் ராமன் மேனன் தமது கார்யதர்சியுடன் திடீரென்று வேலூர் ஜெயிலுக்கு வந்தார். அவருக்கு அங்கு மரியாதை செய்யப்பட்டது. தினம் கைதிகளுக்குப் போடப்படும் உணவை இவர் சாப்பிட்டு பரிக்ஷை பார்த்தார்.

கைதிகளின் சமயல் அறை முதலானவைகளையும் இவர் சுற்றிப்பார்த்தார். கைதிகளுடன் நேரில் பேசிக் குறைகளை அறிந்துகொண்டார்.

திருவிடைமருதூர்.

ஸநாதன ஸபை.

மேற்படி ஸபையின் ஆதரவில் 8—8—37உ நடந்த கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) ஸநாதனிகளின் நோக்கமும், காங்கிரஸின் நோக்கமும் ஒன்றாய் இருப்பதால், எல்லா ஸநாதனிகளும் காங்கிரஸில் சேர்ந்திருக்கிறவர்களும் கூட தங்களாலான முயற்சியை செய்யவேண்டுமென்றும், (2) 13, 14, 15உ மதுரையில் நடைபெறப்போகும் மகாநாட்டிற்கு கீழ்கண்டவர்கள் திருவிடை மருதூரிலிருந்து பிரதிநிதிகளாகப்போக தீர்மானிக்கப்பட்டது. 1. மகா-ள-ஸ்ரீ வெங்கட்ராமையர் ரிடையர்டு இஞ்சினீயர் 2 எஸ். நடேசய்யர் ரிடையர்டு இஞ்சினீயர் 3. ஸ்ரீமான் வலங்கைமான் வித்வான் ஸுப்ரமணிய சாஸ்திரிகள், 4. டி. வி. கிருஷ்ணபாகவதர் 5. ஆதீனம் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் பிரும்மஸ்ரீ யன். பரமசிவ அய்யர், ஆதீனம் ஹைஸ்கூல் பிரம்மஸ்ரீ ஏ. ராஜகோபால அய்யங்கார்.

(3) தஞ்சை ஜில்லா ப்ராஹ்மண மஹாசபை, காமகோடிபீட ஸ்ரீ ஸ்வாமிகள், ஆதி சங்கராசார்யார் அவர்களுடைய உருவப்படங்களை சாதுசேஷய்யா லைப்ராரியில் வைக்கும் படியும், (4) ப்ரும்மஸ்ரீ பழமார்னேரி அய்யு அய்யர் அவர்களால் அத்வைத பாடசாலைக்கு ரூ 60,000 நன்கொடை கொடுக்கப்பட்டதை பாராட்டியும், கும்பகோணம், தஞ்சாவூர் ஜில்லா வாசிகள் மேற்படியாரின் ஞாபகம் இருக்கும்படி ஏதாவதொரு உயர்ந்த ஏற்பாடு செய்யும்படிக்கும், (5) கீழ்க்கண்டவர்கள் திருவிடைமருதூர் ஸநாதநிகள் மகாஸபைக்கு மெம்பர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

பிரஸிடெண்ட் பிர்மஸ்ரீ டி. வெங்கட்ராமஅய்யர் ரிடையர்டு இஞ்சினீயர், வைஸ் பிரஸிடெண்ட்கள் பிர்மஸ்ரீ எஸ். நடேசய்யர் ரிடையர்டு இஞ்சினீயர், ஸுப்ரமண்ய சாஸ்திரிகள் பிர்மஸ்ரீ பி. சாம்பசிவஅய்யர் ரிடையர்டு ஸப் ரிஜிஸ்ட்ரார், பிர்மஸ்ரீ டி. யன். ஸ்வாமிநாதநாயக், மிராசுதார். கார்யதர்சி பிர்மஸ்ரீ ஏ. ராஜகோபாலய்யங்கார் பி. ஏ. யல். டி. உதவி கார்யதர்சி பிர்மஸ்ரீடி.வி. கிருஷ்ணசாமி, மணி சாஸ்திரிகள் பிரசாரகர் பிர்மஸ்ரீ டி. வி. கிருஷ்ண பாகவதர் நிரூபர் என். பரமசிவய்யர் ஹெட்மாஸ்டர்.

யன். பரமசிவ அய்யர்
ஹெட்மாஸ்டர் & நிரூபர்

நாகப்பட்டணத்தில் உபன்யாசங்கள்.

என். ஸாம்பசிவ அய்யர், பி.ஏ., பி.எல்.

சென்றவார ஸஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டபடி ஹிந்து மதாபிமான ஸங்கத்தின் 46-வது வருஷபூர்த்தி உத்சவமானது 25—7—37 ஞாயிற்றுக்கிழமை இரவு பூர்த்தி அடைந்தபோதிலும் அடுத்த திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளிலும் பல உபன்யாசங்கள் நடைபெற்றன. பிரதி வருஷம் கும்பகோணம் அத்வைத ஸபையாரால் நடத்தப்பட்டுவரும் மூன்று உபன்யாசங்களும் இவ்வருஷம் ஹிந்து மதாபிமான ஸங்கத்தின் ஆதரவில் கும்பகோணம் அ. வே. பாடசாலை உபாத்யாயர் வேப்பத்தூர் பிரம்மஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகள் மூலம் நடைபெற்றன.

அவர்கள் தர்மா தர்ம தத்வம் கார்ஹஸ்த்யம் குருசேவா என்ற மூன்று விஷயங்களையும் உபன்யசித்தார்கள். நான்கு புருஷார்த்தங்களில் தர்மமே முக்யமானதென்றும் அதை அடிப்படையாகக்கொண்டுதான் மைத்த புருஷார்த்தங்கள் பிரவர்த்திக்க வேண்டுமென்றும் சாஸ்திரங்களில் சொல்லப்படுவதும் சாஸ்திரங்களை நம்பி அவைகளை அறிந்த பெரியோர்களால் அனுஷ்டிக்கப்படுவதும் தர்மமென்றும் ஒவ்வொருவரும் அவைகளை நன்கு பரிசீலனைசெய்து தர்மாசரணம் நடத்தவேண்டுமென்றும் பிறருக்கு உபகாரம் செய்வதும் தனக்கே உபகாரம் செய்து கொள்ளுவதும் தர்மமென்றும் சொன்னார்கள் அந்த தர்மானுஷ்டானத்திற்கு முக்ய சாதனம் வர்ணாச்ரம தர்மமென்றும் அந்த தர்மங் [illegible] வது புருஷார்த்தம்தானே சித்திக்குமென்றும் ஆச்ரமங்களில் இரண்டாவதான கிரஹஸ்தாச்ரமமானது மைத்த எல்லா ஆச்ரமங்களுக்கும் ஆச்ரயமாக இருப்பதால் மிகவும் சிறந்ததென்றும் சொல்லி மைத்த ஆச்ரம லெக்ஷணங்களையும் நிரூபணம்செய்தார்கள். பிறகு தர்மங்கள் எவ்வளவு அனுஷ்டானம் செய்யப்பட்டாலும் அதனால் சித்தசுத்தி ஏற்பட்டு பக்தி விருத்தி அடைந்தாலுங்கூட ஆசார்ய அநுக்ரஹம் அவச்யமென்றும் குருவின் லெக்ஷணங்களையும் குரு சிஷ்யபாவ லெக்ஷணங்களையும் நிரூபணம் செய்தார்கள்.

D. H. ஸ்கூல் தமிழ்பண்டிதர் ஸ்ரீமான் ஸந்தானம் அய்யங்கார் அவர்கள் கம்பரின் கவிநயம் என்ற விஷயத்தைப் பற்றி உபன்யாஸம் செய்ததில் ஸ்ரீமத் கம்பராமாயணத்திலிருந்து அவர்களுடைய பிரவசன விசேஷத்துடனும் சங்கீத சௌஷ்டவத்துடனும் அநேக செய்யுட்களைச் சொல்லி கம்பரின் கவிநயத்தை நிரூபணம் செய்தார்கள்.

நாகை ஜோதிஷ சாஸ்திர ஆராய்ச்சிக் கல்விக்கழகம் ஸ்ரீமான் A. S. நடராஜய்யர் அவர்கள் ஜோதிஷம் என்ற விஷயத்தைப் பற்றிப் பேசியதில் ஜோதிஷ சாஸ்திரமானது வேதத்தின் ஓர் அங்கமென்றும் வேதத்தின் நேத்திர ஸ்தானமாக ஜோதிஷத்தை சொல்லப்படுகிறதென்றும் அந்த சாஸ்திரமானது ஒவ்வொருவராலும் அப்யசிக்கப்படவேண்டுமென்றும் அந்த சாஸ்திர ஞானத்துடன் ஒருவன் ஜீவியத்தை நடத்தும் பக்ஷத்தில் ஐஹிக ஆமுஷ்மிக சுகங்களை அடையக்கூடுமென்றும் தற்காலம் நமது சாஸ்திரங்களில் ஆலச்ய புத்தி ஏற்பட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயமென்றும் சொன்னார்கள்.

கடைசியாக புதன்கிழமை இரவு கீழ்வேளூர் பிரம்மஸ்ரீ V. K. வெங்கட்டராமய்யர் அவர்கள் ஞானம் என்ற விஷயத்தை வெகு அருமையாகவும் கேட்பவர்களுடைய மனதில் பச்சைமரத்தில் ஆணியைப்போல் பதியும்படியாகவும் உபன்யாஸித்தார்கள். அவர்கள் இவ்விடம் District court ல் உத்யோகமாக இருந்தபோதிலும் தானும் வேதாந்த சாஸ்திரத்தை நன்குகப் பயின்று சென்ற 25 வருஷங்களாக பல சிஷ்யர்களுக்கும் பாடம் சொல்லிவருவதுடன் பிரவசன சக்தியும் வெகுவாக வாய்ந்தவர்கள். அவர்களுடைய உபன்யாஸத்தின் சாரமாவது:—ஞானம் என்னும் பதத்திற்கு அறிவு என்பது பொருளாகும். சாஸ்திரங்கள் அறிவையே கடவுள் என கீர்த்திக்கின்றன. இவ்வுபன்யாஸத்தில் அறிவு உருவமே கடவுள் என்பதைப்பற்றி பேசுவதினால் சொல்லுபவனுக்காவது கேட்பவர்களுக்காவது பயன் என்ன.

प्रयोजनमनुद्दिश्य नमन्दोऽपिप्रवर्तते ॥

என்ற வாக்கியப்படி ஒரு பிரயோஜனத்தையும் கருதாமல் உலகமோ ப்ரவிர்த்திப்பதில்லை என்பது இயல்பு. ஆகலால் அந்தக் கடவுளை அடைவதே சொல்வோருக்கும் கேட்பவர்களுக்கும் பயனாக இருத்தல் வேண்டும். ஆகலால் ஞானத்தை அடைவது அல்லது கடவுளை அடைவது இவ்வுபன்யாஸத்தின் கருத்தாகும்.

மானிடராய் பிறந்த ஒவ்வொருவரும் கடவுளை அடைவதே பிறவியின் முக்யபயனாகும். ஆனால் உலகத்தில் அவ்விதம் கடவுளை அடைய வழிகளைக்காட்டும் மதங்களோ பல உள. அவைகளில் முக்யமெனக் கருதப்படும் மதங்கள் த்வைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் என மூன்றாகும். பிறந்தவன் இனிப்பிறவாவண்ணம் வழி தேடிக்கொள்வதே முக்தி எனலாகும், அம்முக்தியிலும் இத்துணை பேதங்கள் உள. ஸாலோக்யம் [illegible] களே. இவைகளில் ஸாயுஜ்ய முக்தியையே உயர்ந்ததென்றும் அதையே பிரபல ச்ருதிகளான உபனிஷதாதிகள் போதிக்கின்றனதெனவும் இதையே அத்வைத மெனவும் மஹான்கள் சொல்லுகிறார்கள். அத்வைதமென்றால் இரண்டற்ற நிலை அடைவோனாகிய ஜீவனும் அடையப்படும் பொருளாகிய ஞான ஸ்வரூபமான கடவுளும் தனியே இருக்க த்வைதம் சித்திக்குமேயன்றி அத்வைதம் எவ்விதம் நிலைபெறும் என சங்கை நிகழலாம். அதுவே விசாரணைக்கு விஷயமாகும்.

'ஞானமலது கதி கூடுமோ; யெனும் சான்றோர் வாக்யத்தை கவனிக்கத்தக்க ஞானமே உயர்ந்த மார்க்கமென்றும் அதை அடைந்தவனே முக்திபெறுகிறானென்றும் அவனே மறுபடி பிறப்பதில்லை யென்றும் வெளியாகிறது. கர்மகாண்ட உபாசனாகாண்ட ஞான காண்ட கிரியங்களாய் எழுந்த வேதங்களும் மஹேச்வரனுடைய நான்கு முகங்களினாலேயே சப்தரூபமாய் வெளிவந்து அவைகளை ச்ரவணம் செய்துகொண்டிருந்த பாதராயணர் என்று பூர்வ நாமம் பெற்ற வியாசபகவானால் அவ்வேதங்களை முறையே ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என நான்காகத் தொகுத்து பிரித்துக் கூறப்பட்டது. அக்காலத்தில் அவருக்கு சிஷ்யர்களாக அமைந்த பைலர் வைசம்பாயனர் ஜெய்மினி என்ற மூன்று மஹர்ஷிகளே முதல் மூன்று வேதங்களையும் முறையே கற்றுக்கொண்டு உலகத்தில் பிரசித்தி செய்தார்கள். அவ்வேதங்களில் கிரமமாக தோன்றிய மூன்று காண்டங்களில் ஞானகாண்டமே உயர்ந்ததாகும். மகேச்வரனின் ஊர்த்வ சிரஸிலிருந்து வெளிப்பட்டு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களோடு கூடி அமைந்துள்ள இருபத்தெட்டு ஆகமங்களிலும் ஞானகாண்டமே உயர்ந்ததென்று சொல்லப்பட்டுள்ளது

ஆகவே ஞானத்தால் முக்தி பெறலாம் என்றும் முக்திக்கு ஞானமே முக்யசாதனமென்றும் அதனாலேயே இந்த ஸம்ஸாரமாகிற சாகரத்தைத் தாண்டக்கூடுமென்றும் செவ்வனே வெளியாகிறது. ஒரு விஷயத்தைப்பற்றி பேசுவதானால் ஐந்து அம்சங்களைத் தெரிந்துகொண்டே பேசவேண்டும். அவைகள் ஹேது,ஸ்வரூபம், கார்யம், அவதி, பலம் ஆகும். ஒருவன் ஞானத்தையடைய வேண்டுமானால் முதலில் அதற்கு ஹேது இன்னதெனத் தெரிந்து கொள்ளவேண்டும். ஹேதுவும் சாக்ஷாத் ஹேதுவென்றும் பரம்பரா ஹேதுவென்றும், இரண்டு வகையினதாகும். ஸாக்ஷாத் ஹேதுவோ மகாவாக்ய ஜன்யம ஞானமேயாம். மகா வாக்யமோ நான்கு வகையினதாகும். பிரக்ஞானம் பிரம்மம், அஹம் பிரம்மாஸ்மி, தத்வமஸி, அயமாத்மாபி பிரம்மம் என்பனவைகளே. இவைகளில் ஸாமவேத உபநிஷத் மகாவாக்யமான தத்வமஸி என்னும் மகாவாக்யத்தினையே ஆசார்ய பரம்பரையில் உபதேச வாக்யமாக உபதேசித்து வருகிறார்கள். இவ்வாக்யத்திற்கு வாச்யார்த்தம் லெக்ஷ்யார்த்தங்களை திருஷ்டாந்த தார்ஷ்டாந்த பூர்வமாக சொல்லக்கேட்டு முடிவில் தெளிவான திருட அபரோக்ஷநிச்சிதர ஞானத்தை அடைகிறான். ஆனதுபற்றி இதை உபதேச வாக்யம் என்கிறார்கள்.

பிறகு கேட்ட விஷயத்தை ஆலோசித்துப் பார்க்கையில் பிரக்ஞானம் ப்ரம்மம். அயம் ஆத்மா பிரம்மம் என்றும் முறையே ருக்வேத அதர்வணவேத இருவாக்யங்களும் உபதேச வாக்கியத்தின் பொருளுக்கு மாறுபடாமலும் ஜீவாத்மாவே பரமாத்மாவெனா ஜீவப்ரம்ம ஐக்யத்தை தெரிவித்ததற்கு பரீக்ஷை செய்வதில் உபயோகப்படுவதால் இவ்விரு வாக்யங்களையும் சிஷ்யனுடைய பரீக்ஷா வாக்யங்களெனவும் அப்பரீக்ஷையின் முடிவே [illegible] உத்புத்தமாகக் கூடிய அனுபவஞானமே. 'அஹம் பிரம்மாஸ்மி' எனும் யஜுர்வேத மகா வாக்யமாகும். ஆனால் சாக்ஷாத் சாதனமான இந்த 'தத்வமஸி' மகாவாக்கியத்தையே ஓர் அக்ஞானிக்கு உபதேசிக்கும் பக்ஷத்தில் அவனும் ஞானத்தை அடையவேண்டும். அப்படிக்கோ இல்லை. இம்முறையானது அதிகாரிகளுக்கேயன்றி ஏனையோர்க்கு இல்லை. அப்படிக்கின்றேல் அதிகாரிகளே இல்லாமற்போவார்கள். அதிகாரியாகவேண்டுமானால் ஒருவன் பரம்பரா ஹேதுவையநுஷ்டித்து அதிகாரியாக வேண்டும், பரம்பரா ஹேதுவோ ஒன்றின் பின் ஒன்றாய் ஒருவன் அடையவேண்டிய சோபான கிரமமாகும். அப்படிகளில் கர்மா முக்யமாய் அனுஷ்டிக்கத் தக்கதாகும்.

கர்மாக்களில் அனேக வகைகள் இருந்தபோதிலும் முக்யமாய் பிரயோஜனத்தைக் கருதாது செய்யப்படும் நிஷ்காம்ய புண்ய கர்மாக்களே இங்கு கர்மா என்னும் சொல்லுக்கு பொருளாகும்

कर्मण्येवाधिकारस्ते माफलेषुकदाचन ॥

என்ற கீதா வாக்யப்படி பலனை ஈச்வரார்ப்பணம் செய்து கர்மாவைச் செய்யும் பக்ஷத்தில் அக்கர்மாவே சித்தசுத்திக்கு ஹேதுவாகும். சுத்தமடைந்த சித்தத்திலேதான் சாதனங்களென்று சொல்லப்பட்ட விவேக வைராக்யாதி நான்கு குணங்கள் ஜனிப்பதற்கு இடமாகும். இவ்விதம் நான்கு சாதனங்களும் அமையப்பெற்றால் சத்குருவினுடைய லாபமுண்டாகும். அவரிடமிருந்து சிரவணம் பெறலாகும். அச்சிரவணமோ அவாந்தரவாக்ய சிரவணமென்றும் மஹாவாக்ய சிரவணமென்றும் இருவகையாகும். அவாந்தரவாக்யம் வரையில் சிரவணம் செய்யாதவனுக்கு சாக்ஷாத் ஹேதுவாகிய மஹாவாக்ய உபதேசம் பயன்படாது. ஆதலால் சாக்ஷாத்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

The Place of Religion in Educational Reconstruction.

(*by T. A. Ramaehandra Aiyar*, B.A.,L.T. *Headmaster, Board High School, Ayyampet.)*

(Continued from previous issue).

In the first place this glamour for Western culture, in preference to our own, must first be removed from our minds. Unless this is done the restoration of our lost individuality is not possible. This is a very important thing to bear in mind. We must assess the true worth of this culture from the West, and make our young men realise its proper value, as compared with our own. The materialistic nature of Western culture has been condemned in no uncertain terms by all the great thinkers and prophets—East and West—ancient and modern. Ruskin, Carlyle, Emerson and Tolstoy are some of the eminent thinkers of the West, who denounced it from the very beginning. It our own land Dr. Radhakrishnan has drawn our attention to the lopsided nature of the Western culture, because it stresses the physical more than the mental and intellectual aspects of man, while the moral or spiritual element is almost lost sight of. In his recent lectures in England he has appealed to Europe to rediscover her lost soul. Mahatma Gandhi has condemned almost all the ideals of the West in his book 'Hindu Swaraj'. The great prophet and poet, Dr. Rabindranath Tagore, has thoroughly denounced Western nationalism in his lectures in Japan, England, and America which have been embodied in his book 'Nationalism.' None has condemned the West in more forcible, picturesque and prophetic words than Dr. Tagore who describes Western civilization as "a huge monster carnivorous and cannibalistic, thrusting its tentacles into other peoples' bones and sucking them dry.' Thus the boasted ideals of the West as democracy, freedom, industrial competition, and the mechanisation of every branch of human life have been condemned not only by eminent thinkers and far-seeing prophets of the world, but stand discredited now even in the place of their origin. We already see the lurid portents of war on the Western horizon and hear the rumbling noises of the coming earthquake, which will raze to the ground the huge, glittering, hollow edifices of the West. So let us turn to our own land, learn our own culture, and proceed to reconstruct our education not on the rejected and decayed models of Europe, but on those ancient and eternal principles of life which, according to the grand conceptions of our religion, lie quiescent even during *Pralaya* or deluge, only to reassert themselves in every cycle of evolution, and which are the only unfailing remedies for all the evils of mankind, in the East as well in the West.

After removing this glamour for Western culture, let us proceed to the next step of restoring the vernacular to its original preeminence in the reconstruction of our education. The undue importance given to English has been one of the root causes of the failure of the existing system. Unless the mother-tongue is given the first place and all subjects taught through the vernacular the regaining of our indigenous culture and of our individuality as a nation is not possible. With the restoration of the mother-tongue to its original pedestal will come a new cultural outlook in our society whereby our own customs, habits, dress and modes of life will receive their due measure of importance. At the same time the process of restoring the dethroned Pandit to his honcured place will, also take place, because in the wise words, truly uttered by Sir Mirza Ismail, the Muslim Dewan of Mysore (I am quoting his very words), "The Pandits represent the secular forces of conservatism and stability. They are the inheritors of traditional learning which connotes depth and thoroughness. They are the custodians of national scholarship and culture and it is incumbent on them to make the heritage available in increasing measure to the coming generation. The preservation and transmission of the cultural life of the country are in their hands.' The raising of the Pandits from the lowest place they are now given to the highest place in the scheme of educational reconstruction will surely lead India back to her illustrious place and help to regain her original pristine fame and glory. The development of the vernacular will also be of effective help in imparting religious instruction in schools.

The third cause that led to the rapid disintegration of our culture, as a result of a century of the present system of education, is the exclusion of religion and indigenous culture from the scheme of studies. Any scheme of education unrelated to the religion or culture of the people is bound to fail in any land, and all the more so in our country where religion is the centre round which all the activities of life are made to revolve. Master minds in India noted this cardinal defect. The great Swami Vivekananda raised his stentorian voice against the godless and soulless nature of the existing system, and eloquently pleaded that, as religion is the bed-rock of Indian culture, and as spirituality enters every part of a man's life in India, no institution can successfully work in this country unless the appeal is made through religion. Hence movements started in India, divorced from religion, have all proved ineffective. Great Bengalis like Sir P. C. Ray, realising the harm done by this atheistic system of education, started the national system of education, giving it a religious turn, and basing it on the mother-tongue and indigenous culture. The great Bengali patriot Arabinda Ghosh (now a recluse in Pondichery) and his co-workers achieved a great measure of success in politics by giving it a religious twist during the great national and Swadeshi movement in Bengal. In our own day Mahatma Gandhi has achieved wonderful results by spiritualising politics. Even in modern India, with its transformed Western outlook, Gandhi is honoured more than a Tagore, a Bose or a Nehru, because of his *Tapas* and spirituality, thus demonstrating the hold which religion still has on the minds of our masses. This should be an eye-opener to us, educationists, who, in order to achieve success must base education once more on religion, and frame curricula of studies and prescribe text-books related to Indian culture and environment.

I shall now elaborate a little on the highly educative value of religion. We know that education and psychology are inter-related, and methods of education based on psychology are good or bad, according to the soundness or otherwise of the psychology underlying them. Now Western psychology, like Western science, is still in its experimental and infant stage and is bound to be so for ever by the very imperfect nature of the instruments adopted for discovering fundamental truths of matter and mind. The application of mere human reason, aided by all the paraphernalia of the physical sciences, can never discover the eternal principles of life, as has been clearly shown by Max Plank in his book "Where is Science Going?" translated by Murphy. In our own land, truths have been revealed by a higher power called intuition or 'eye of wisdom' (*Gnana Chahshus)* which is developed only by intense *Tapas*. Truths revealed by religion are our sure guides in all matters as declared authoritatively by Sri Krishna in verse 24 of Chapter XVI of the *Gita*. Scientific truths are not set aside but only subordinated to revealed truths. Wherever there is conflict between religion and physical science, religion is given precedence. Scientific principles can at best fortify religious truths but never supplant them. Hence the truth of the pregnant statement of a great American author: 'Religion begins where science ends" and it is therefore absurd to gauge the depths of religion by the foot-rule of science. If this fundamental principle is realised, a good deal of the misunderstanding about the term [illegible] Dharma' can be removed from men's minds. Now by the process of intuition psychology has been perfected in our own religion to such an extent that, in the opinion of the learned Dr. Nagaraja Sarma, it alone can explain successfuly all the phenomena of mind, and all its mysteries till now unravelled by Western psychology. Our ancient system of education was based on the fundamental principles of mind and body as revealed by our own scriptures and our own psychology, and these must be understood by us and applied in our educational reconstruction. I shall just refer to a few of the fundamental principles.

(To be contd.)

Secretary for Education; Upholder of Caste-system:— The best brains came from the Villages and not from the metropolis. The Village was the heart of India and the village children were the back-bone of education. He was one of those who uphold the Castesystem. The fine carvings which they see in temples even today was the result of the caste-system. If the elementary course would help parents to see that their ancestral vocation could be carried on by their children they would not object to sending their children to school.

உயர்ந்தது!
15 ஜோடி யக்ஞோப வீதமும் (பூணூல்கள்) கால்வலி தைலமும் பேதி மாத்திரை 50-ம் 8 அணா ஸ்டாம்பாக அனுப்பி பெறலாம் கடிதங்கள் இங்கிலீஷில் எழுதவும்.
கிடைக்குமிடம்:—
Kalbag Gangadha & Sons,
Kumta (Karwar).

வாரக்குறிப்புகள்.

(வே. ஸோ. ஸர்மா.)

இந்திய ஸம்பிரதாயத்தை தழுவுவேன்!! ஐக்கியமாகாண சட்டசபையில் தலைவரை நோக்கி முதன்மந்திரியும் ஏனையோரும் இந்திய ஸம்பிரதாயத்தைத் தழுவும்படி வேண்டினர்கள். அவரும் வாக்களித்தார். இந்த உணர்ச்சி ஒவ்வொரு அதிகாரிக்குமுண்டாகவேண்டும். நம்மாகாண மந்திரிகள் முழுசீர்திருத்தக்காரரெனினும் இந்த உணர்ச்சி ததும்ப நடப்பரா?

நல்ல பிதுருகள்!! குற்றாலம் மௌன ஸ்வாமிகள் வியாஸபூஜா காலத்தில் பல பக்தர்களுக்குப் பட்டமளித்தார். இங்ஙனம் உத்ஸாகப்படுத்துவது அழகுதான். அங்கிருந்து உபன்யாஸம்செய்த பிரும்மஸ்ரீ சாஸ்திரரத்னாகரம் விசுவநாத சாஸ்திரிகளுக்கு ஓர் பட்டம் கொடுத்திருக்கலாம். கொடுத்த பட்டங்கள் மிகச் சிறந்ததே. ஏனைய மடாதிபதிகளும் இதைத் தழுவி பக்தர்களை உத்ஸாகப் படுத்த வேண்டுகிறோம்.

ஆச்சர்யமென்ன? போலீஸ் அதிகாரிகள் தேசியகீதத்திற்கு மரியாதைசெய்வதை பத்திரிகைகள் ஆச்சரியமாக எழுதுகின்றன. ஸனாதநிகள் மந்திரிகளானால் நாஸ்திகர்களனைவரும் வைதிகராவர். உலகும் க்ஷேமமடையும் இது ஸகஜம்.

என்னசெய்வார்? டாக்டர் ராஜன் ஆலய விஷயத்தை மிகக் கூர்மையாக கவனிக்கிறாராம். தன் குலத்திற்கேற்க ஒவ்வோராலயத்திலும் வைதிக சிரத்தையுடன் காலந்தவறாமல் பூஜை உத்ஸவம் நடக்கும்படி செய்வாரா? ~~[illegible]~~ ஸத்வினியோகமாகும்படி பார்ப்பாரா?

இதுதானு? இன்னும் எவ்வளவோ? ஆலயத்தையே அசுத்தப்படுத்தியபின் திருவாங்கூரில் எதுதான் நடக்காது? பிரிட்டிஷ் அரசாங்கத்தைவிட ஒருபடி முன்னே சென்றதென காட்ட அங்கு சாரதாசட்டம் 15 வயதுக்குள் பட்டவருக்கு சிக்ஷை என மசோதாவருகிறது. அது சட்டமாய்விடுவதில் ஆக்ஷேபனையேது? ஆனால் தைவிக குற்றத்தை மீறிய குற்றத்திற்கு சிக்ஷை நிச்சயமுண்டு!!

மதுரை ஸத்யாக்கிரகம் செய்க!! சித்ரகுளத்தை இடிக்க கமிஷனர் உத்திரவிட்டார். நீதிஸ்தலத்தில் வழக்கும்நடக்கிறது. விபரீதமான முடிவு ஏற்படுமாயின் அங்கு நடக்கும் தர்ம ஸபை ஸத்யாக்ரகம் நடத்துவதற்கேற்ற ஏற்பாட்டை உடனே செய்யவேண்டும்!!

யார் அறியாமை இது!! அளவுக்கு மிஞ்சினால் எதுவும் அருவருப்பை உண்டாக்கும். ராஜாஜி மந்திரியானபின் மிகச்சிறிய காலத்திற்குள் எத்தினை சபைகள் அவரை அழைத்திருக்கும்!! எவ்வளவிடத்தில் பேசியிருப்பர்? எவ்வளவு இடம் பத்திரிகையில் இதனால் நிரம்பியிருக்கும்!! கேவலம் மந்திரி என்பதற்தாக மாத்ரம், அவருக்கு ஸம்பந்தமேஇல்லாத பல கூட்டம் அழைப்பதும் அவர் போவதும் பத்திரிகை பிரசுரிப்பதும் அளவுகடந்ததாகும்.

பெங்களூர்.

ஸ்ரீமத் வால்மீகி இராமாயண ஸத்கதா

ஈச்வர கிருபையை முன்னிட்டு நிகழும் ஈச்வர-ஹூ ஆடி-மீ 3உக்குச் சரியான 18—7—37 ஞாயிற்றுக்கிழமை முதல் பிரதி வெள்ளிக்கிழமை, திங்கட்கிழமை, புதன்கிழமை, ஆகிய மூன்று தினங்களிலும் மாலை 6-முதல் 8-வரையிலும் திருவையாறு ப்ரமஸ்ரீ கதாவித்வான் வேங்கடராம பாகவதரவர்களால் தண்டு இப்ராஹிம் சாஹேப் வீதியிலிருக்கும் வைஸியா ஹாஸ்டலில் 37 பாகங்களாக நடைபெறுகிறது. ஸ்ரீ ராம சரித்திரங்களுக்கு பக்த கோடிகள் அனைவரும் இஷ்டமித்திரகளத்ர பந்து ஜனங்களுடன் வந்து சிரவணானந்தமடைந்து பாகவதரவர்களையும் பெருமைப்படுத்தி பகவதனுக்ரஹத்திற்கும் பாத்திராகுமாறு அழைக்கப்படுகின்றது.

P. S. அனந்தநாராயண அய்யர்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.

ஸ்ரீ ஆளவந்தார் திருநாட் கொண்டாட்டம்.

1937-ஹூ ஜூலை-மீ 30உ வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் ஸ்ரீ ஆளவந்தார் திருநாட்கொண்டாட்டம் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

ஸ்ரீமான் குரிச்சி ஸ்ரீநிவாஸ வேதாந்தாசார் ஸ்வாமி 'ஸ்ரீ ஆளவந்தார் வைபவம்' எனும் விஷயம்பற்றி அதி ரமணீயமாய் ஸங்க்ரஹமாய் உள்ளங் கவரும்படியாய் பிராசீன வடகலை தென்கலைகளின் வழக்கை அநுஸரித்து அழகான உபந்யாசம் செய்தார். இவ்வருடம் கஜேந்திரமோக்ஷத்தன்று ஸ்ரீ ஆளவந்தார் திருநக்ஷத்திரம் வந்ததின் பிரபாவத்தை நன்கு எடுத்துரைத்தார்.

காரியதரிசிகூறிய வந்தனோபசாரத்துடன் சபை இரவு 8-30 மணிக்கு முடிவடைந்தது.

ப. ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி.

ஸ்ரீ வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம் மதுரை.

ஸநாதனிகளின் மகாநாடு.

இச்சங்கத்தின் சார்பாக மதுரை, இராமநாதபுரம்: திருநெல்வேலிஜில்லா ஸநாதநிகளின் மஹாநாடு, நாளது 1937ஹூ ஆகஸ்டு மாதம் 13, 14, 15உகளில் சங்க ஸ்தலமாகிய மதுரை தமிழ்ச்சங்கம் ரோடு, 55-நீர் பங்களா நந்தவனத்தில் நடைபெறும்.

அது சமயம் ஆத்தங்குடி ஸ்ரீமான் சு. வீரகதிரேசன் செட்டியார் அவர்கள் அக்ராசனம் வஹிக்க அன்புடன் அங்கீகரித்திருக்கிறார்கள்.

விஷய அட்டவணை.

13—8—37 வெள்ளிக்கிழமை மாலை 6-30க்கு அக்ராசனர் வரவேற்பு, பகவத் பிரார்த்தனை. 7-மணிக்கு மகாநாடு ஆடக்கம். 7-30க்கு வரவேற்பு கமிட்டி தலைவர் பிரசங்கம், அக்ராசனாதிபதி வரணம். 8-மணிக்கு மகாநாடு தலைவரின் முன்னுரை

14—8—37 சனிக்கிழமை காலை 7-30க்கு வித்வத்பரிஷத். மாலை 3—5 வித்வத்பரிஷத். இரவு 8-க்கு விஷயாலோசனை கமிட்டிக் கூட்டம்.

15—8—37 ஞாயிற்றுக்கிழமை காலை 7½—11 மகாநாடு. மாலை 3—5 மகாநாடு. 5-க்கு தலைவரின் முடிவுரை, வந்தனோபசாரம்.

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம் பம்பாய்

மேற்படி சங்கத்தின் கார்யக்கமிட்டியின் கூட்டமானது 11—7—37உ யன்று பம்பாயில் சங்கத்தின் வைஸ்பிரஸிடெண்டான ஸ்ரீ ஜேத்தேவிதாஸ்ஜி மாதவஜி தாக்கர்ஸி அவர்களின் தலைமையில் நடைபெற்று கீழ்கண்ட முக்ய தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின.

தீர்மானங்களின் சுருக்கம்.

கிராமப் புனருத்தாரணத்திற்கான செலவு ஒத்துக்கொள்ளப்பட்டது. வருகிற 4மாதங்கள் மஹாராஷ்ட்ர மாகாணஸங்கம் பிரசாரம் செய்ய ரூ 120ம் மத்தியமாகாண பிரார் மாகாணங்கள் மேடிபிரசாரம் செய்யவும், ஒரு ஸநாதன பேப்பர் நடத்தவும் ரூ 400-ம் மத்யமாகாண ஸங்கத்திற்கு டொனேஷன் வசூல் செய்ய ரூ 100-ம் டாக்டர் நளினரஞ்சன் ஸென் அவர்கள் மதவிஷயமாய் செய்யும் பிரசாரத்திற்கு நன்றி பாராட்டியும் பம்பாய் நகரை சுற்றுவட்டங்கள் உள்பட ஒரு தனி மாகாணமாக கருதப்பட்டும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

கீழ்கண்டவைகள் கமிட்டியால் முக்கியமானதாக கருதப்படுகிறது.

பிரஸிடெண்டிற்கு இந்தியா சுற்றுப் பிரயாணத்திற்கு ஏற்பாடுசெய்தல்; பிரஸிடெண்டின் சுற்றுப் பிரயாண செலவானது மெம்பர்களால் அங்கீகரிக்கப்பட்ட தொகையைவிட குறைவாயிருந்தால் அதற்கு கமிட்டியின் அங்கீகாரம் வேண்டாமென்றும், ஹரித்வாரில் நடக்கப்போகும் அடுத்த கும்பமேளாவில் பிரசாரம் செய்யவும் 1937 ஜூன் முடிய உள்ள வரவு செலவுகணக்குகளை அங்கீகரித்தும், பிரிண்டிங் செலவை ஒத்துக்கொண்டும், புரியில் நடந்த வரவேற்பு கமிட்டியின் அதிக செலவை ஏற்றுக்கொண்டும் அரசாங்கத்திடமிருந்து நமது தர்மங்களுக்கு ஆதரவு கிடைக்காத பக்ஷத்தில் அதற்க்கு நாம் தயாராயிருக்கவேண்டும் என்றும் பார்ஸாலர்கார் செய்துவரும் பிரசாரம் விரோதமாயிருப்பதால் அதை எதிர்த்து பிரசாரம் நடத்தவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டு கூட்டம் கலைந்தது.

S. M. பாரண்ட். ஜெனரல் கார்யதர்சி.

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

ஹேதுவான மஹாவாக்கிய உபதேசத்தை பெற மேல்குறித்த கர்மா முதலாயுள்ள ஒவ்வொன்றையும் அனுஷ்டித்துவருவதே பரம்பரா சாதனமாகும். இப்பரம்பரா சாதனத்தைப் பெற்றவனே அதிகாரியெனப்படுவன்.

இன்னும் சித்தம் சுத்தமடைவதற்கென்று வழிகளைச் சொல்லும்பொழுது சித்தத்திலே மூன்றுவிதமான தோஷங்களுள்ளதென்றும் அவைகள் முறையே மலம் விக்ஷேபம் ஆவரணம் என்றும் முதல் இரண்டு தோஷங்களை (கர்மத்தால் மலத்தையும் யோகம் அல்லது உபாசனையால் விக்ஷேபத்தையும்) நீக்கிக் கொண்டவனே அதிகாரியென சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆனால் கடைசியான ஆவரண தோஷமோ கேவல ஞானோபதேசத்தால் நிவர்த்தியாகும். ஆகவே உபதேசமென்பது தத்வமஸியாகும். ஆகவே உபதேசமென்பது தத்வமஸிமஹாவாக்கிய உபதேசமே. சாக்ஷாத் ஹேதுவென்பது ஞானத்திற்கு அத்யந்தம் சமீபத்திலுள்ளது. பரம்பரா ஹேதுவோ ஞானத்திற்கு தூரத்திலுள்ளது.

(தொடரும்).

திருநாடு சென்ற தில்லையம்பூர் ஸ்வாமிகள்

அனுதாபக்கூட்டங்கள்.

சென்னை.

அகில இந்திய பிராஹ்மண மஹாசபை, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம், சென்னை வர்ணாச்ரம சுயராஜ்யசங்கம் இவற்றின் ஆதரவில் 6-8-37 வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு திருவல்லிக்கேணி வெங்கடரங்கம் பிள்ளை தெரு ஸ்ரீ ரங்க விலாசத்தில், பரமபதித்த பண்டித பூஷணம் தில்லையம்பூர் சக்ரவர்த்தி ஆசார்யஸ்வாமியின் பிரிவாற்றாமையைக் குறித்த கூட்டம் ஆரம்பமாகியது.

தமிழ்ச்சங்கக் கமிட்டி மெம்பரும் சென்னை அபிவிருத்தி இலாகா அஸிஸ்டெண்டு செகரெட்டரியுமான ஸ்ரீமான் ஆர். ராமஸ்வாமி ஐயங்காரவர்கள் தலைமை வகித்தார்.

ஸ்ரீ உபவே ஆர். கேசவய்யங்கார் ஸ்வாமி பரமபதித்த ஸ்வாமியின் சிறந்த குணங்களை எடுத்துக் கூறினார்.

சென்னை வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத் தலைவரான ஸ்ரீமான் யன். ஸ்ரீனிவாஸாச்சாரியார் அகில இந்திய பிராஹ்மண மகாசபை உபதலைவரான ஸ்ரீமான் யம். யம். அனந்தராவ் தமிழ்ச்சங்கக் கமிட்டிமெம்பர் ஸ்ரீமான் ஸி. யம். ஷண்முகசுந்தர முதலியார், பெரும்பாக்கம் கிருஷ்ணமாசாரியார், திருப்பதி ஸ்வாமி, ஸ்ரீமான் குரிச்சி சே. ஸ்ரீநிவாஸ வேதாந்தாசார்யஸ்வாமி, ஸ்ரீமான் யஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீமான் யஸ். குமாரசாமி செட்டியார், சென்னை வர்ணாச்ரம ஸ்வராஜ்யசங்கக் காரியதரிசி ஸ்ரீமான் டி. யஸ். ராமஸ்வாமி அய்யர், சங்கவித்வான் ஸ்ரீஉபவே ஸ்ரீரங்கம் சடகோபாச்சார்யஸ்வாமி. பண்டித கௌஸிக யதுநாதாசாரியார், ஸ்ரீமான் யஸ் லக்ஷ்மீ நரசிமாசாரியார், முதலிடவர்கள் ஸ்வாமியின் பாண்டித்யத்தைப்பற்றியும் ஆடம்பரமற்ற வாழ்க்கையைக் குறித்தும் சநாதனதர்ம ப்ரசாரத்தைப்பற்றியும், ஸம்ப்ரதாய அபிவிருத்திக்காகச் செய்த காரியங்களைக் குறித்தும் உபன்யாச சக்தியைப் பற்றியும் மற்றும் அவர்களிடமிருந்த மேன்மையான குணங்களைப்பற்றியும் விரிவாக எடுத்துரைத்தனர்.

காரியதரிசி தாம் இயற்றிய ஐந்து பாசுரங்களைப் பாடினார்.

தலைவர் முடிவுரையில் ஸ்வாமியின் ஞான அநுட்டானங்கள் அபாரமென்றும், சொல் அதிசயிக்கத் தக்கதென்றும், பல விதங்களில் தொண்டியற்றியிருக்கிறார்களென்றும் அநுதாபத்தை அவரது குடும்பத்தாருக்குத் தெரிவிக்கவேண்டுமென்றும் கூறினார்.

காரியதர்சி கூறிய வந்தனோபசாரத்துடன் சபை இரவு 6-மணிக்கு முடிந்தது.

ப. ரெ. திருமலை ஐயங்கார்,
காரியதர்சி.

கும்பகோணம்.

இன்று மாலை 5 மணிக்கு ஸ்ரீ சக்ரபாணிஸ்வாமி கோவிலில் பாரதஸிம்ஹம் காபே ராமசந்திராசாரியார் அக்ராஸனத்தின் கீழ், ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தான வித்வான் பண்டித பூஷணம், கவிஸிம்ஹம் தில்லையம்பூர் மூடும்பி சக்ரவர்த்தி ராமபத்திராசாரியார் ஸ்வாமி ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹன் திருவடியை அடைந்த விஷயத்தை விசனத்துடன் எல்லோருக்கும், மேற்படியார் தம்பி ஸ்ரீ உ.ப.வே வித்வான் மூடும்பி சக்ரவர்த்தி வெங்கடாசாரியாருக்கும் தெரிவித்துக்கொள்ளும் பொருட்டு ஓர் பெரிய அனுதாபக்கூட்டம் நடைபெற்றது. மூன்று மதத்திலுமுள்ள அநேக வித்வான்கள் விஜயம் செய்திருந்தார்கள். மாஜி ஜில்லா ரிஜிஸ்தரார் ஸ்ரீ உ. ப. வே N. S. ரெங்கசாமி அய்யங்கார் B. A., சேட்லூர் ஆராவமுதாசாரியார், கனம் அக்கிராசனாதிபதி முதலியவர்கள் மேற்படி ஸ்வாமியின் உபன்யாஸ வன்மையைப்பற்றியும், புராண ப்ரவசன நுணுக்கங்களைப் பற்றியும் புகழ்ந்து பேசினர்கள். எல்லாராலும் ஏகமனதாய் அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேறியது. பண்டித உலகத்துக்கே ஓர் பெரிய துர் அதிர்ஷ்டம் ஏற்பட்டது, என்று எல்லாரும் மிகவும் அனுதாபப்பட்டது. அக்ராஸனாதிபதியின் உருக்கமான சொற்பொழிவுகளுடனும் N. S ரெங்கசாமி அய்யங்கார் அவர்களின் வந்தனோ உபசாரத்துடனும் பொதுக்கூட்டம் கலைந்தது.

ஆராவமுதாசாரியார்,

மதுரை.

தில்லையம்பூர் வித்வான் ஸ்ரீ உ. வே. சக்ரவர்த்தி ஸ்வாமி பரமபதம் சென்றதைப்பற்றி அநுதாபத்தைக்காட்ட மதுரை வர்ணாச்ரம ஸபை, தர்ம சாஸ்திரஸபை ஸ்ரீ தேசிக பக்த ஸபை இவைகளின் ஆதரவில் 1உயன்று ஸ்ரீமான் என். நடேசய்யர் பங்களாவில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீமான்களான ஸீதாராம சாஸ்திரியார், கிருஷ்ணஸாமி அய்யங்கார் முதலியவர்கள் அந்தஸ்வாமிகளுடைய பாண்டித்யம் முதலியவைகளைப் புகழ்ந்து பேசினர்கள். பிரம்மஸ்ரீ சிவராம கிருஷ்ண சாஸ்திரிகள் யஜ்ஞதீக்ஷிதர் இருவரும் சில சுலோகங்கள் மூலமாகத் தங்களுடைய வருத்தத்தைத் தெரிவித்தார்கள். ஸ்ரீமான் விச்வநாதய்யரால் பிரேரேபிக்கப்பட்டும், ராவ்பஹதூர் நரஸிம்ம அய்யங்காரால் ஆமோதிக்கப்பட்டும், ஸ்ரீமான் கே. ராமய்யங்காரால் ஆதரிக்கப்பட்டும் ஒரு அநுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அவருடைய ஸஹோதரர் வித்வான் வெங்கடாசாரியருக்கு அனுப்பப்பட்டது.

வெங்கடாசலய்யர், கார்யதர்சி.

பரமபதித்த பண்டித பூஷணம்.

தில்லையம்பூர் பண்டித பூஷணம் ஸ்ரீ உ. ப வே. சக்ரவர்த்தி இராமபத்ராசாரியரிடம் ஈடுபடாதார் இலர். ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தான வித்வானாயிருந்து அநேக கிரந்த காலக்ஷேபம் செய்துவைத்தவர். பண்டித பரிஷத்துக்கள் இவர் எழுந்தருளியே கௌரவம் அடைந்தன. தத்தலால் சமஸ்தான வித்வானாய் நின்று பரிஷத்துக்களைச் செவ்வையாய் நடத்தி பண்டித ஸமாஜத்துச் செய்த உதவி எல்லையற்றது. கைம்மாறு கருதாமல் மெய்வருத்தி தம்மை நாடி நச்சினார்க்கினியதாம் சிறந்த போதனைசெய்து ஆத்மவர்க்கனை உஜ்ஜீவிப்பித்துக் கொண்டிருந்தார். இவரது பிரிவால ஸந்நிதி ஸம்ப்ரதாயஸ்தர்கள் படுந்துயரம் பகரொணாது. கண்ணிழந்து கதறுகின்றனர் இவர்கள். 'பகவந் விஷய பாரங்கதர் நம்மிடை வேறுயாருளர்? யாரிடங்கேட்டு நம் ஐயந்தீர்வோம்' என அல்லலுறுகின்றனர் அந்தண ச்ரேஷ்டா.

எவ்வாறுனும் சமாதானமடையமுடியாதவாறு ஐம்பத்தைந்தாவது ஆண்டிலேயே பரமபதம் செல்லத் துணிந்ததற்குக் கலியே மூலகாரணம்போலும், நமது தௌர்ப்பாக்யத்தை என்னென்றுரைப்பது. திருப்பதி, மன்னார்கோவில், மதுரை முதலிய க்ஷேத்ரங்களில் ஸ்வாமிகளிடம் ஸ்ரீமத்ராமாயணாதி பிரசங்கங்கள் சிரவணஞ்செய்து உய்ந்தவர் பல்லாயிரவர். இவர்களெல்லாம் பரிதபிக்குமாறு செய்த கூற்றுவன் மிகக் கொடியன்போலும் திருவிண்ணகரில் பகவத்விஷயம் செவி சாய்த்தருள எம்பெருமான் அங்கு அழைத்துக்கொண்டான்போல் தோன்றுகிறது. ஸ்வாமி உபதேசித்த மார்க்கத்தில் நின்று நன்மை யடைவோமாக.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

மேல்மங்கலம்.

ஆஸ்திக மஹாஜன சபை.

ஈஸ்வரஹூ ஆடிமீ 15ம்உ வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவநரசிம்ம சாஸ்திரிகள்கிரஹத்தில் சபை கூடிற்று. சபையின் நிர்வாக மெம்பர்கள் யாவரும் வந்திருந்தனர் பிரம்மஸ்ரீ பிளாஞ்சேரி சுப்பிரமணிய அய்யரவர்கள் அக்ராசனம் வகித்தார்கள் சபையில் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேறின

(1) இக்கூட்டம் அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத் தலைவர் பிரம்மஸ்ரீ N. நடேச அய் [illegible] கள் சிரமத்தையும் அலுவல்க [illegible] செய்கை மப்பிரசாரம் செய்வதை ரொம்பவும் பாராட்டுவதுடன் தலைவர்களுக்கு தீர்க்காயுளைக்கொடுத்து மென் மேலும் தர்ம மார்க்கத்தில் பிரவிருத்திக்கும் உத்ஸாகத்தை கொடுக்க ஈச்வரனை பிரார்த்திக்கிறது.

(2) அகிலபாரதீப சபை காரியதரிசி பிரம்மஸ்ரீ T. S ராமஸ்வாமி அய்யர் அவர்களுக்கும் ஸ்ரீமான் C ராஜகோபாலசாரியார், நேரு முதலியவர்களுக்கும் நடந்த கடிதபோக்குவரத்துக்களில் ஸ்ரீமான் C. ராஜகோபாலாசாரியார், பண்டித நேரு முதலியவர்களின் அலக்ஷ்யமானதும் தர்மவிரோதமானதும் நியாயவிரோதமானதுமான பதில்களை இக்கூட்டம் கண்டிக்கிறது.

(3) இது விஷயமாக மதுரையில் ஆகஸ்டு 13, 14, 15 தேதிகளில் கூடும் சபை நிர்விக்னமாயும், மங்களகரமாயும் நடக்க எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறது.

(4) மேற்படி சபைக்கு சபையின் சார்பாக குறைந்தது ஒருவரையாவது அனுப்பத் தீர்மானிக்கிறது.

பிரம்மஸ்ரீ சிவராம சிரௌதிகளால் அக்ராசனர் முதலியோருக்கு வந்தனோபசாரம் கூறப்பட்டு சபை 5¾மணிக்குஇனிது பூர்ணமானது

சிவரும கனபாடிகள், காரியதரிசி.

குழந்தை
குடல் ஈரல் கட்டிகளுக்கு
ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள
மதுரை வைத்ய நிபுணர் T.R. ஆராவமுதய்யங்காரின்
மருந்தை உபயோகியுங்கள். ஆயிரக்கணக்காக சௌக்கியம். தங்கமெடல் பரிசும்
பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது.
ஒரு மாதம் மருந்து விலை ரூ. 4—8—0 வி. பி. வேறு.
டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,
20, வடக்கு வெளிவீதி, மதுரை

25797

வெளியூர்ச் செய்திகள்.

ஆத்தன்குடி.

ஸநாதன தர்ம மகாசபை.

ஈசுவர-௵ ஆடி-மீ 22௳ வெள்ளிக்கிழமைமாலை 6மணிக்கு கடவுள் வாழ்த்துக்குப் பின் பிரபல ஜோதிஷ பண்டிதரும் சபையின் தலைவருமான ப்ரும்மஸ்ரீ முத்துசாமி அய்யங்காரவர்கள் தலைமையில் ஸ்ரீமான் சு. வீர கதிரேசன் செட்டியாரவர்களும், ஜெகதீசய்யரவர்களும் முறையே "பெரியாரைச் சார்தல்" "மதுரை ஸநாதனிகள் மஹாநாடு" என்பன பற்றிச் சொற்பொழிவாற்றினர். ஆடி-மீ 29, 30, 31௳ களில் திருநெல்வேலி மதுரை இராமநாதபுரம் ஜில்லா மகாநாடு, மதுரையில் நடைபெறுவதற்கு ஸநாதன அன்பர்கள் பல இடங்களிலிருந்தும் பேராதரவளிக்க இசைந்துள்ளனர் என்பதைப்பற்றியும் முக்கியமாக செட்டிநாடு பகுதியிலுள்ள சிவநேச திருக்கூட்ட பிரமுகர்கள் மகாநாட்டினை வரவேற்றும் ஒத்துழைக்க உறுதிகூறியதைப்பற்றியும் ஜகதீசய்யர் கூறியபின் மஹாநாட்டில் நிறைவேறவேண்டிய காரியங்களை விளக்கினர். தலைவரவர்கள், திருக்குறள், நாலடியார் நூல்களிலிருந்து அரிய மேற்கோள்களுடன் இனியமுடிவுரை பகர வந்தனவாழ்த்துடன் சபை 8மணிக்குக் கலைந்தது.

காரியதர்சி.

சென்னை.

ஓர் கூட்டம். 1-8-37 காலை 8-மணிக்கு அ.க.வி. ஸபை. வர்ணாச்ரம கவனிக்கும் [illegible] சாமி செட்டியார் தலைமையில் [illegible] கூடிற்று. பாகவதோபன்யாஸகர் ஸ்ரீ ஸோமதேவ சர்மா அவர்கள் ஸ்ரீ எழுனூர் நாராயணசாமி அய்யர் எழுதியகடிதத்தைப் படித்துக்காட்டி காங்கிரஸ் மந்திரிகள் மதத்தில் தலையிடக் கூடாது. எம். ஸி. ராஜா கொண்டுவரும் மசோதாவை நிராகரிக்கவேண்டும். அவச்யமானல் இம்மாகாணம் முழுவதும் மஹாஜனங்கள் அபிப்பிராயத்தை அறிந்தபிறகு அதை கொண்டுவரச்சொல்லலாம். உடனே எல்லா கலாசாலைகளிலும் அவரவர் வர்ணாசிரம தர்மத்திற்கேற்றபடி வேத தேவாரப்பாடம் கற்பிக்கவேண்டும் என்ற தீர்மானங்களை பிரேரிக்க ஸ்ரீ அருணாசலய்யர் ஆமோதிக்க ஏகமனதாக தீர்மானம் நிறைவேறிற்று.

மஹேச்வர கண்டபூர்த்தி. ஸ்ரீ சங்கரமடத்தில் பதினைந்தாவது புராணமாக ஸ்ரீ மஹாஸ்காந்த உபன்யாஸம் நடைபெறுகிறது. அதில் தாத்ரு-௵ கார்த்திகை-மீ ஆரம்பிக்கப்பட்ட மாஹேச்வர கண்டம் ஈச்வர-௵ ஆடி-மீ 20௳ பூர்த்தியானது. அதில் கேதார கண்டம் கௌமாரகண்டம் அருணாசல மஹாத்ம்ய மண்டம் என 135 அத்யாயங்களுள. இதில் பற்பல அபூர்வமான கதைகளும் விசேஷமாக மஹீஸாகர ஸங்க மஹிமையுமமைந்துளது.

வைஷ்ணவ கண்டாரம்பம். முக்கிய கண்டங்களில் இரண்டாவதான இதில் வெங்கடாசல மஹாத்மியம் 40அத்யாயம் திங்களன்று ஆரம்பமானது. இதில் ஜகந்நாதபதிரிகா, கார்திக, மார்க்கசீர்ஷ, பாகவத, வைசாக அயோத்யா கண்டங்களிலிருக்கின்றன.

நமது நிருபர்.

மதுரை.

ஸ்ரீ ப்ாகவத ஸப்தாஹம்.

மதுரை புதுத்தெரு 112ம் நம்பர் கருப்பட்டி சத்திரத்தில் நிகழும் ஈச்வர-௵ ஆடி மாதம் 22௳ (4-8-37) புதன்கிழமை 7மணிக்கு சாலை பிரவேசம் செய்து அன்று முதல் கவிரத்னம் பாகவத பூஷணம் பிரம்மஸ்ரீ குழுமணி ஸேதுராம சாஸ்திரிகள் அவர்களைக் கொண்டு ஸ்ரீபாகவத ஸப்தாஹ ப்ரம்மஸத்ரம் ஆரம்பித்து பிரதிதினம் காலை 7மணிமுதல் 11 மணி வரையில் விசேஷ பூஜைகளுடன் மூல பாராயணமும் மாலை 3-மணிமுதல் 6-மணி வரையிலும் இரவு 7-30மணிமுதல் 9-30மணி வரையிலும் விசேஷார்த்தங்களுடன் ஸ்ரீபாகவத உபன்யாஸங்களும் நடைபெற்று வருகிறது

ஒரு நிருபர்.

தஞ்சை.

இராமாநுஜதர்சன ஸபா.

ஈச்வர-௵ ஆடி 17௳ (1—8—37) ஞாயிற்றுக்கிழமை கும்பகோணம் ராஜாதர்ம பாடசாலை உபாத்தியாயர் ந்யாய மீமாம்ஸா, ஸாஹித்ய, வித்வான் சிரோமணி உப்பிலியப்பன் ஸன்னிதி ஸ்ரீ உப. வே. வ. ந. சடகோபாச்சாரியர்ஸ்வாமி அவர்களால் ஷை ஸபையில் "திருமழிசைப் பிரான்வைபவம்" என்னும் விஷயம் உபந்யஸிக்கப்பட்டது ஷை ஸபையில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் மஹா வித்வான்களின் உபந்யாஸங்கள் நடைபெற்று வருகின்றன. ஸ்ரீ. உ. வெ. நாராயணசார்யர்ஸ்வாமி உபன்யாஸகரைப் புகழ்ந்து ஹாரஞ்சூட்டினர்.

ஸாரம் ரங்காசார்யர்.

மதராஸ்.

அநியாயமரணம்.

ஸ்ரீ உ. வே வித்வான் வடகரை வெங்கடவாதாச்சாரியார் சென்ற வாரம் காலஞ் சென்று விட்டதாய்த் தெரிவது வருந்தத்தக்கதாகும். மேற்படியாருக்கு 40 வயதேயாகிறதாம் மதராஸ் டவுனில் ஸத் விஷயப்ரசாரம் செய்வதையே காரியமாய் கொண்டவர். ஸத்சம்ப்ரதாய் சனாதன தர்மப்ரசாரத்தில் தீவிரமாய் ஈடுபட்டுழைத்து வரும் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த வைஜயந்தி பத்திராதிபர் ஸ்ரீமான் உ. வே பண்டிட் வீ. ராமாநுஜாச்சாரியார்க்கு இவர் மிக நெருங்கிய பந்து.

பெண் பாலின்உபந்யாஸம்:—ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ ரங்கநாயகி அம்மாளால் சென்னை டவுனில் பல முக்ய விடங்களிலும் மத சம்பந்தமான அரிய உபந்யாஸங்கள் செய்யப்படுவதாய் தெரிவதுடன் பெண் மணிகள் திரளாகச் சென்று கேட்டுவருவதாயும் பல பிரமுகர்களாலும் பொது ஸ்தாபனங்களாலும் விசேஷமாய் ஆதரவளிக்கப்பட்டு வருவதாயும் தெரிகிறது. ஸ்ரீமதி அம்மாளின் பிரசங்கங்களுக்கு ஸ்திரீகள் மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள்.

காஞ்சீபுரம்.

ஹஸ்திகிரி வரதர் அபூர்வஸேவை

காஞ்சி ஸ்ரீ வரதராஜர் சன்னதியிலுள்ள அனந்தசரஸ் என்ற தடாகத்தில் தண்ணீருக்குள் பூமிக்கடியிலுள்ள ஓர் மண்டபத்தில் ஆதி அத்திகிரிவரதர் மூலவர் எழுந்தருளப்பண்ணபட்டிருக்கிறார் (மரத்திருமேனி) பிரும்மாவாலும் திருவனந்தாழ்வானாலும் ஆராதிக்கப்படுவதாய் ஐதிஹ்யம். ஒரு மண்டலத்துக்கு ஒரு தடவை திருக்குளத்திலுள்ள ஜலம் இறைக்கப்பட்டு எம்பெருமானை வெளியில் எழுந்தருளச் செய்து பக்தர்களுக்கு சேவை சாதிக்கச் செய்வது வழக்கமெனவும் 45 ஆண்டுகளுக்கு முன் இம்மாதிரி நடைபெற்றதாயும் சொல்லப்படுகிறது. தற்போது காஞ்சி வரதராஜர் கோவில் வஸந்த மண்டபத்தில் ஆதிஹஸ்திகிரி வரதர் ஆனந்தமாக எளப்பண்ணப்பட்டு மிகவும் புண்ய சேவைசாதித்து வருகிறார். புருஷ ஆயுளில் ஒரு தடவையே நேருவதாயிருக்கும் இந்த அபூர்வதர்சனத்தை பக்தர்கள் கூட்டங் கூட்டமாய் வந்து சேவித்து செல்கின்றனர்.

நமது விசேஷ நிருபர்.

மதிப்புரை.

மாத்வ ரிக்வேதி ஸந்தியாவந்தனமந்திரங்கள் (தமிழில்.)

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் ஆசிரியரும் மாத்வ கலைஞான சங்கக் காரியதர்சியுமான ஸ்ரீமான் எம். ராமராவ் அவர்களால் பிரசுரிக்கப்பட்ட மேற்கண்ட புஸ்தகமொன்று எமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. மாத்வர்களின் சம்பிரதாயப்படி ஸம்ஸ்கிருதம் தெரியாதவர்களுக்கு உபயோகமாகும் பொருட்டு மந்திரங்கள் தமிழிலேயே எழுதப்பட்டுள்ளன. இதன் நான்காம் பதிப்பிலிருந்தே இத்தகைய பிரசுரங்களுக்கு மாத்வர்கள் அளித்திருக்கும் பேராதரவு நன்கு வெளியாகும். இப்பதிப்பில் போஜன மந்திரங்களும் யக்ஞோபவீததாரண மந்திரங்களும் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இதன்விலை 0-2-6 புக்போஸ்ட் 0-0-6 வேண்டுவோர் இதன் ஆசிரியருக்கு எழுதிப்பெறலாம்.

முக்கிய கவனிப்பு
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது)
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்,
தயாரிப்பவர்:— என். கண்ணுசாமி பத்தர்
பெரியதெரு. கும்பகோணம்.

அத்யாத்மயோகம் அல்லது ஆத்மப்பயிற்சி.
குருதாஸ் இயற்றியது. திவான்பஹதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகளது முகவுரையுடன் கூடியது. எளிய தமிழ்நடையில் உள்ளது. முற்றிலும் அநுபவங்கள் நிறைந்தது பற்பல ஆதாரங்களுடன் கூடியது. பகவத் விஷயத்தில் ஈடுபட்டுள்ள ஸகோதர-ஸகோதரிகளுக்கு அத்தியாவசியம் உள்ளது. எல்லா மதத்தினர்களுக்கும், கொள்கையினர்களுக்கும் ஓர் துணையாயிருப்பது. காமகோடி ஸ்ரீ ஜகத்குரு, ஸ்ரீ ரமணரிஷி, ஸ்ரீ ராமாநந்த ஸரஸ்வதி முதலிய மஹான்களது அநுக்கிரஹம் அடைந்தது. ஹிந்து, சுதேசமித்திரன், ராமகிருஷ்ணவிஜயம், ஆர்யதர்மம், முதலிய பல பத்திரிகைகளாலும், ஸ்ரீமான் A. S. P. அய்யர் I.C.S, அட்வகேட் திருப்புகழ் மணி T. M. கிருஷ்ணசாமி அய்யர் முதலிய பல சித்திய நிபுணர்களாலும் போற்றப்பட்டுள்ளது. 15 அத்தியாயங்கள் உள்ளது. 308 பக்கங்கள் கொண்டது. ஐந்து மகான்களினது படங்கள் ஆர்ட்டு பேபரில் உள்ளது. விலை காலிகோ ரூ 3—0—0 ராப்பர் ரூ 2—8—0 தபால்சார்ஜ் தனி.
கிடைக்குமிடம்:— "ஆர்யதர்மம்" ஆபீஸ், கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Publsihed by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

அர்ப்பணம்

ரூ
32

4
22

19-8-1937

215198

981
25198
481

Registered No. M. 2913.

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 22 கும்பகோணம். கலி 5039 ஈச்வர-ஞூ ஆவணி-மீ 4உ 1937-ஞூ ஆகஸ்டு-மீ 19உ வ 32

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0

தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

காச்மீரத்தில் பசு வதை தகராறு.

15 ஆயிரம் ஹிந்துக்கள் ஸத்யாக்ரஹம்.

காஷ்மீரத்தில் மகம்மதியர் செய்த பசு வதையொன்றை முன்னிட்டு ஹைகோர்ட்டார் முஸ்லீம்களுக்கு நியாயமான தண்டனை விதிக்கத்தவறிவிட்டதால் அதை ஆக்ஷேபிக்க வேண்டியதற்காக காச்மீர ஹிந்துக்கள் நடத்தி வரும் கிளர்ச்சி முற்றி விட்டது. ஹிந்துக்கள் சில நாளாகத்தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்து வருகிறார்கள். ஊர்வலங்களும் நடக்கின்றன. போலீஸார் தடிகொண்டு ஊர்வலத்தைக்கலைக்கின்றார்கள். 14உ யன்று 15ஆயிரம் ஹிந்து ஜனங்கள் கொண்ட ஒரு ஊர்வலம் தடுக்கப்பட்டதால் அவர்கள் நடுரோட்டில் கடும் வெய்யலில் உட்கார்ந்து ஸத்யாக்ரஹம் செய்தனர். இதில் 5 ஆயிரம் ஸ்திரீகளும் இருந்தனர். அநேக ஸ்திரீகள் உபவாசமிருக்கிறார்கள். பிரதம மந்திரியான திவான்பகதூர் கோபாலஸ்வாமி அய்யங்கார் இதில் ஸமாஸமுண்டுபண்ண முயற்சித்து வருகிறார்

பட்டங்கள் பஹிஷ்காரம்.

இந்தியாவில் கௌரவப்பட்டங்கள்கொடுத்துவரும் வழக்கத்தை அடியோடு நிறுத்திவிடவேண்டுமென்று இந்திய சட்ட ஸபையில் ஒரு மெம்பர் தீர்மானங்கொண்டு வரப்போவதாக அறிவித்திருக்கிறார்.

கல்கத்தாவில் அமளி;

100 பேருக்கு காயம் 100 பேர் கைதி,

அந்தமான் கைதிகள்தினத்தை முன்னிட்டுக்கல்கத்தாவில் பெரிய ஊர்வலமும் ஆடம்பரங்களும் நடந்தன மாணவிகளும் ஏராளமாகக்கூடினார்கள். தேசியக்கொடியைத் தணித்துப்பிடித்தும், ஊர்வலத்தை சிறுசிறு கூட்டமாகப்போகும்படியும் போலீசார் செய்த உத்திரவைக்கூட்டம் லக்ஷ்யம் செய்யாமல் சென்றதால் போலீஸார் ஊர்வலத்தைத்தடிகொண்டு கலைத்தனர். இதில்100பேர்களுக்கு காயம் ஏற்பட்டது.

காங்கிரஸ் வாதிகளில் நூறுபேர்கள் வரையில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மதுரையில் கோவில் குளம் தகராறு.

பக்தர்களின் வெற்றி.

வசந்த தெப்பக்குளத்தை மூடி விட முனிஸிபல் கமிஷனர் செய்த காரியங்களை ஆக்ஷேபித்துமதுரை பிரபலஸ்தர்கள் செய்த கிளர்ச்சி வெற்றி பெற்றது. கனம் மந்திரி, தேவஸ்தானபோர்டு கமிஷனர், ஆகியவர்களின் தலையீடினால் ஸமரசம் ஏற்பட்டு மேற்படிக்குளத்தை மூடுவதில்லையென்றும், இடித்த இடங்களைத்திரும்பியும் கட்டிக்கொடுத்து விடவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை சட்ட ஸபைக்கூட்டம்.

ஆகஸ்டு 31 யன்றுசென்னை சட்டஸபைக் கூட்டங்கள் ஆரம்பமாகும். இரண்டு ஸபைகளின் மெம்பர்களடங்கிய கூட்டத்தில் கவர்னர் பேசுவார்.

ஸெப்டம்பர் 1உயன்று மாகாண வரவு செலவுத்திட்டம் ஆஜர் செய்யப்படும். தொடர்ந்தால் போல் அநேக தினங்கள் கூட்டம் நடந்து வரவு செலவு திட்டம் ஆலோசிக்கப்படும்.

கட்டாய ஹிந்தி போதனை.

சென்னையில் திட்டம்.

சென்னை மகாணத்திலுள்ள பள்ளிக்கூடங்களில் முதல் பாரம் முதல் 3வது பாரம் வரை, ஹிந்தியைக்கட்டாயபாடமாக வைக்க சென்னை கவர்மெண்டார் தீர்மானித்திருப்பதாக முதன் மந்திரி வெளியிட்டிருக்கிறார்.

விதவா விவாஹ அநுமதி!

திருவாங்கூரில் சட்டம்.

திருவாங்கூர் சட்ட ஸபையில், விதவைகளின் உரிமையை ரக்ஷிக்கும் மசோதா ஒன்று நிறைவேற்றப்பட்டது. இஷ்டப்பட்ட விதவைகள் மீண்டும் விவாஹம் செய்து கொள்ள இந்த சட்டப்படி அநுமதியளிக்கப்படும்.

உயர்ந்தது!

15 ஜோடி யக்ஞோப வீதமும் (பூணூல்கள்) கால்வலி தைலமும் பேதி மாத்திரை 50-ம் 8 அணா ஸ்டாம்பாக அனுப்பி பெறலாம். கடிதங்கள் இங்கிலீஷில் எழுதவும்.

கிடைக்குமிடம்:—
Kalbag Gangadha & Sons,
Kumta (Karwar).

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
துணம், மணம், காறம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷிட் ஜெம்ஷெட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்,

மதுரை ஸனாதனதர்ம மஹாநாடு.

நடவடிக்கை விவரம்.

(நமது விசேஷ நிருபர்.)

மதுரை ஆகஸ்டு 15.

ஏற்கனவே பத்திரிகைகளில் அறிவிக்கப்பட்டிருந்தபடி மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம் ஜில்லாக்களின் ஸனாதனதர்ம மஹாஸபை 13, 14, 15 தேதிகளில் விசேஷ உத்ஸாகத்திற்கிடையில் வெகுவிமர்சையாக நடந்தேறியது. அகில இந்திய வர்ணாசிரம ஸ்வராஜ்ய சங்கத்தின் தலைவரும், பிரபல ஸனாதனிப் பெரியாருமாகிய ராவ்ஸாகிப் என். நடேசய்யர் அவர்களுடைய நன்முயற்சியால் எல்லாம் திருப்திகரமாயும் மிகுந்த முன்னேற்பாடுடனும் நன்கு நடைபெற்றது விசேஷமாகும். ஸ்ரீமான் அய்யரவர்களுடைய நந்தவனத்தில் உள்ள பெரிய கொட்டகையில் விசேஷ அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. பகவானுடைய திருவுருவப்படங்கள் ஸபையில் வரிசையாக எழுந்தருளப் பண்ணியிருந்தது ஒரு விசேஷ அலங்காரமாக விளங்கியது. ஒவ்வொரு வேளையிலும் மஹாநாடு ஆரம்பத்திலும் முடிவிலும் அத்திருவுருவப்படங்களுக்கு தீப ஆராதனம் முதலியது நடந்தது இச்சபையின் கருத்துக்கு மிகப் பொருத்தமாயிருந்தது.

பந்தலின் முன்புறத்தில் தர்மதேவதையின் தூதனாகத்தோன்றி ஹநுமான் உல்லாஸமாக த்வஜத்தில் விளங்கிவந்தார். ஸபை ஆரம்பிக்குமுன் ஹநுமத்வஜாரோகண வைபவம் விசேஷமாக நடந்தேறியது. ஸீதாதேவியின் சோகத்தை அகற்றி ஆறுதல் சொல்லப்போன ஹனுமான் தர்மதேவதையின் துக்கத்தையும் நீக்குவதற்கு அங்கு வந்திருப்பதாக அச்சமயம் பலர் பேசினர்.

13௳ மாலை 6மணிக்கு மஹாநாடு ஆரம்பமாகியது. அக்கிராசனாதிபதியான ஸ்ரீமான் சு. வீர. கதிரேசன் செட்டியார் அவர்கள் உத்ஸாகமாக வரவேற்கப்பட்டார்கள் கொட்டகை நிறைய ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தார்கள். உபசரணைசபைத் தலைவரான அட்வகேட் ஸ்ரீமான் விச்வநாதய்யர் அவர்கள் வெகு அழகான உபன்யாஸமூலமாக பிரதிநிதிகளை வரவேற்றுப்பேசுகையில் பல அரிய கருத்துக்களை வெளியிட்டார். பிறகு ஸ்ரீமான் கதிரேசஞ்செட்டியார் தலைமை வஹிக்கும்படி பிரேரேபிக்கப்பட்டு அதை பலர் ஆதரித்துப்பேசியபின் ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் தலைமைவகித்து அவையடக்கம்கூறி தமது சிறந்த உபன்யாஸத்தைச் செய்தார். (அதன் விபரம் இன்று பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது.) ஸ்ரீமான் செட்டியாருடைய பிரஸங்கமானது மிகவும் உயர்ந்த ரீதியில் அமைந்து ஸபையோரின் உள்ளத்தை கவரக்கூடியதாயிருந்தது. தலைவரின் முகவுரை முடிந்தபின் மஹாநாடு 15௳க்கு ஒத்திவைக்கப்பட்டது.

14௳ இரவு பரிஷத்காரியங்கள் முடிந்தபின் விஷயாலோசனைக் கமிட்டியின் கூட்டம் நடைபெற்றது.

15௳ காலை 8மணிக்கு மஹாநாடு மீண்டும் ஆரம்பமாகியது. ஸ்ரீமான் செட்டியாரவர்கள் தலைமை வஹித்தார். ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தனர். உள்ளூரிலிருந்து அநேக பிரபல வக்கீல்களும், உத்தியோகஸ்தர்களும் பொதுஜனங்களும் நிரம்ப வந்திருந்தார்கள். ௸ ஜில்லாக்களிலிருந்தும், அநேகபிரபலஸ்தர்கள் வந்திருந்தார்கள். திருநெல்வேலி பிரபல அட்வகேட், ஸ்ரீமான் ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யர், ஸ்ரீரங்கத்திலிருந்து பிரபல தார்மிகரான ஸ்ரீமான் பிரசன்னவெங்கடேச்வரராவ் அவர்களும், கும்பகோணத்திலிருந்து ஸ்ரீமான்கள் எம். கே. வைத்திநாதய்யர், எஸ் மஹாலிங்கையர், பி. ஓ. சிவராமையர், ஸ்வாமிநாத சாஸ்திரி திருக்கரு, காவூர் எல். சுப்பையர் அவர்களும், ஆத்தன்குடி, குன்னக்குடி ஸனாதனஸபை பிரதிநிதிகளும் பரிஷத்திற்காக வந்திருந்த பலவூர் பண்டிதர்களும் விஜயம் செய்திருந்தார்கள். ஸபையில் ஏராளமாகக் கூட்டம் காணப்பட்டது ஆரம்பத்தில் தெய்வப்பிரார்த்தனை நடந்தது.

அதன்பின் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதியவர்கள் ஸ்ரீமடத்திலிருந்து வந்திருந்த அநுக்ரஹ ஸ்ரீமுகம், ஸ்ரீமடம்வித்வானாகிய பிரம்மஸ்ரீ ஆத்மவித்யாபூஷணம் ஜகதீச்வர சாஸ்திரிகளால் வாசிக்கப்பட்டது.

ஸ்ரீ சிங்கேரி ஸ்ரீமடாதிபதிகளிடமிருந்து வந்திருந்தஸ்ரீமுகத்தை திருநெல்வேலி அட்வகேட் ஸ்ரீமான் ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யர் படித்தார். இதில் ஸ்ரீஸ்வாமிகள் திருவாங்கூர் ஆலயப்பிரவேசத்தைப்பற்றி பிரஸ்தாபித்து இத்தகைய அதர்மங்கள் இக்காலத்தில் ஏற்படுவதைப்பற்றி மிகவும் மனம் நொந்து ௸ திருவாங்கூர் தேவாலயங்களில் உள்ள தைவபிம்பங்களில் தெய்வ ஸான்னித்யம் போய்விட்டபடியால் அவை வெறும் சிலைகளேயன்றிவேறில்லையென்றும், பக்தர்கள் அங்கு நமஸ்காராதிகள் செய்யவேண்டியதில்லையென்றும் அவரவர்கள் கிருஹத்திலேயே தேவதாராதனம் முதலியவைகளைநடத்தி க்ஷேமத்தை அடையவேண்டுமென்றும் வெகு உருக்கமாக குறிப்பிட்டிருந்தார்கள்.

ஸ்ரீவானமாமலை ஸ்ரீமடம் ஜீயர் ஸ்வாமிகள் குற்றாலம் ஸ்ரீமௌனாநந்த ஸ்வாமிகள் மாஜி தேவஸ்தான போர்டு கமிஷனர் என். ஸ்ரீநிவாஸாசாரியர், வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்க கார்யதர்சி ஸ்ரீமான் டி. எஸ். ராமஸ்வாமி அய்யர் கடலூர் அட்வகேட் டி. சடகோபாசாரியர், திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார் முதலிய பல கனவான்களிடமிருந்து வந்திருந்த செய்திகள் படிக்கப்பட்டன.

குடந்தையிலிருந்து ஸ்ரீமான் கே. ஸுந்தரராமய்யர் அவர்கள் அனுப்பியிருந்த செய்தியொன்றை ஸ்ரீமான் ஸ்வாமிநாத சாஸ்திரி வாசித்தார்.

அதில் ஸ்ரீமான் ஸுந்தரராமய்யர், தமக்கு தர்மவிஷயமாக எப்போதும் ஒரேமாதிரியான கொள்கையே இருப்பதாயும் தர்மாதர்ம விஷயங்களில் ஸந்தேஹமேற்பட்டால் அதை சாஸ்திரங்களைக் கொண்டு பண்டிதர்கள் மூலமாகவே தெளியவேண்டுமேயல்லாது நாமாக ஒரு நிர்ணயம் செய்துகொள்ளக்கூடாதென்றும், எந்த தர்மாசாரவிஷயமாயும் சட்டஸபைகளில் சட்டமூலமான நிர்ப்பந்தம் செய்வதை தாம் எப்போதும் பலமாக ஆக்ஷேபித்து வருவதாயும் குறிப்பிட்டிருந்தார்.

பிறகு அக்கிராஸனாதிபதி ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் முன்னுரையாகச் சிறிது பேசி விஷயாலோசனைக் கமிட்டியில் தயாரிக்கப்பட்டிருந்த தீர்மானங்களை ஆலோசனைக்கு எடுத்துக்கொண்டார்.

ஆரம்பத்தில், காலஞ்சென்ற வித்வான் தில்லையம்பூர் சக்ரவர்த்தி ஆசாரியஸ்வாமி, தேவகோட்டை வக்கீலும் பிரபல ஸநாதநியுமான ஸ்ரீமான் எஸ் ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார் ஸ்ரீமான் ஜீ-வி கணேசய்யர் டி ராமையர் முதலியவர்களுடைய த்தீர்மானம் நிறைவேற்ப்பட்டது.

திருவாங்கூர் ஆலயப்பிரவேச கண்டனத் தீர்மானம் ஆலோசனைக்கு வந்தபோது உபசாரணைக்கமிட்டித் தலைவரான ஸ்ரீமான் என். எஸ். விச்வநாதய்யர் அவர்களின் விருப்பப்படித் தீர்மானம் சிறிதுமாற்றி வரையப்பட்டு ஏகமனதுடன் நிறைவேறியது.

பல முக்ய தீர்மானங்களைப்பற்றி அநேக கனவான்கள் வெகு அழகாயும், தீவ்ரமாயும் உறுதியாயும் செய்த பிரஸங்கங்கள் ஸபையில் பெரிய உத்ஸாஹத்தைக்கொடுத்து வந்தது.

காரச்சித் தீர்மானத்தின்படி ஏற்படும் மத பாதுகாப்பு ஹிந்துக்களுக்கும் ஏற்பட உரிமை உண்டென்பதைப் பற்றி கும்பகோணம் எஸ். மஹாலிங்கய்யர் அவர்கள் பேசுகையில் அநேக ரிகார்டுகள் மூலமாக காங்கிரஸ் தலைவர்களான ஸ்ரீமான் நேரு, ஸி. ஆர். ஆசாரியர் முதலியவர்களுடைய விபரீத மனப்போக்கைத் தெளிவாக எடுத்துக் காட்டியது ஸபையில் மிகுந்த உணர்ச்சியை உண்டாக்கியது. திருக்கருகாவூர் ஸ்ரீமான் ஸுப்பய்யர் அவர்களும் வழக்கம் போல் வெகு தீவ்ரமாக ஸநாதன தர்ம மஹிமைகளையும், காயத்ரியின் பிரபாவத்தையும் பற்றிப் பேசியது ஸபையோரைப் பரவசமாக்கியது.

அக்ராசனாதிபதியான ஸ்ரீமான் கதிரேசம் செட்டியார் அவர்கள் ஒவ்வொரு தீர்மானங்களையும் ஓட்டுக்கு விடுமுன் அவைகளை விளக்கிக் கூறுகையில் வெகு ஆவேசத்துடனும், சிறிதுகூட அதர்மத்திற்கு விட்டுக்கொடுக்காத மன உறுதியுடனும் கண்டிப்பாயும் தமது ஸநாதன தர்ம சிரத்தையை அவ்வப்போது வெளியிட்டு வந்தது ஸபையில் கூடியிருந்த ஸகலருக்கும் வெகு ஆச்சர்யத்தை உண்டாக்கி வந்தது. ஸ்ரீமான் செட்டியாரின் ஆஸ்திக்யத்தைப் போற்றாதவர்கள் இல்லை. ராமேச்வரம் பாடசாலை மாஜி பிரின்ஸ்பால் ஸ்ரீமான் வி. எஸ், ராமஸ்வாமி சாஸ்திரிகளால் எழுதப்பட்டிருந்த 2- அழகிய வாழ்த்து சுலோகங்கள் ஸ்ரீமான் நெரூர் நாராயண அய்யங்காரால் வாசிக்கப்பட்டன.

தீர்மானங்களும் பிரஸங்கங்களும் இரவு 9-மணிக்கு முடிந்தவுடன் அக்ராஸனாதிபதி வெகு கம்பீரமான முடிவுரை கூறி யாவரும் தம்முடன் ஒத்துழைத்ததற்கு நன்றி பாராட்டினார். பிறகு உபசாரணை ஸபைத் தலைவர் ஸ்ரீமான் விசுவநாதய்யர் அவர்களால் பிரதிநிதிகளுக்கும், பண்டிதர்களுக்கும், பொது ஜனங்களுக்கும், உபசார வார்த்தைகள் கூறப்பட்டு பரிஷத் தலைவர்களுக்கும், மகாநாட்டுத் தலைவருக்கும் மாலைகள் சூட்டப்பட்டன.

மாஜி இந்தியா சட்டசபை மெம்பரும் பிரபல அட்வோகேட்டுமானஸ்ரீராமய்யங்காரவர்கள் ஸநாதன மகாநாட்டுத் தலைவரான ஸ்ரீமான் செட்டியாரைப் புகழ்ந்தும் அவருடைய தர்மசிரத்தையைமெச்சியும் மகாநாட்டு நடவடிக்கைகளை அவர் திறமையாக நடத்திவைத்ததைப் பாராட்டியும், வெகு அழகாகப் பேசி உபசார வார்த்தைகள் கூறினார். பலகொல்லு ஸ்ரீ உமாமஹேச்வர சாஸ்திரிகள், திருநெல்வேலி அட்வோகேட் ஸ்ரீமான் ஆர், கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் முதலியவர்கள் பிரதிநிதிகளின்சார்பாக உபசாரணைக் கமிட்டியாருக்கும், மற்றவர்களுக்கும்நன்றிசெலுத்திப் பேசினார்கள். ஸநாதன தர்ம ஜய கோஷங்களுக்கிடையே மஹாநாடு இரவு 11-மணிக்குப் பூர்த்தியாகியது.

இந்த மஹாநாடு விஷயமாக ஸகல ஏற்பாடுகளும் செய்தும் தமது கிருஹத்திலேயே பிரதிநிதிகளுக்கு எல்லாவித சௌகர்யமும் நன்றாகச் செய்துகொடுத்து உபசரித்தும் தீவ்ர சிரத்தை எடுத்துக்கொண்ட நமது தலைவர் ஸ்ரீமான் என். நடேசய்யர் அவர்களின் ஊக்கத்தை யாவரும் பாராட்டினார்கள்.

தீர்மானங்களின் விவரங்களும், அவைகளைப்பற்றிப் பேசியவர்களின் பெயரும் அடுத்த ஸஞ்சிகையில் வெளிவரும்.

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

‘மூகபஞ்சசதீ’

(12—8—37 தொடர்ச்சி)

2. அவ்விதமான யானையினுடைய தந்தங்களின் காந்தியாக அம்பிகை காதுகளில் தரித்திருக்கும் தாடங்கங்களுடைய முத்துக்களின் ப்ரகாசத்தைச் சொல்லப்பட்டது.

3. அம்பிகையின் காருண்யத்தினால் கடாக்ஷமானது (பிறரிடம்) ஏற்படுவதால் அதை அவ்வித கடாக்ஷமான யானைக்கு மாவுத்தனாகச் சொல்லப்பட்டது.

4. மரங்களைப்பிடுங்கி எறிவதானது யானைகளுக்கு ஒரு விளையாட்டாகச் சொல்லப்படும். இங்கு அம்பிகையின் கடாக்ஷமாகிற யானையானது பக்தர்களுடைய அசுபமாகிற மரத்தைப் பிடுங்கி வேரோடு களைந்துவிடுவதாகச் சொல்லப்பட்டது. (அசுபமென்றால் சுபமல்லாதது - கெடுதல், கஷ்டம் துரத்ருஷ்டம் முதலியவை.)

8. ச்சாயாபரேண ஜகதாம் பரிதாபஹாரீ
தாடங்கரத்ன மணிதல்லஜ பல்லவஸ்ரீ: |
காருண்யநாம விகிரன் மகரந்த ஜாலம்
காமாக்ஷி ராஜதி கடாக்ஷஸுரத்ருமஸ்தே ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷியே! தே கடாக்ஷஸுரத்ரும் - உன்னுடைய கடாக்ஷமாகிற கல்பவ்ருக்ஷமானது, சாயாபரேண- தன்னுடைய அதிகமான நிழலினால், ஜகதாம் பரிதாபஹாரீ - லோகங்களுடைய தாபத்தைப் போக்குகிறதாயும், தாடங்க ரத்ன மணி - தாடங்கங்களின் ரத்னக் கல்லுகளாகிய, தல்லஜ பல்லவஸ்ரீ: - உயர்ந்த துளிர்களின் அழகையுடையதாயும், காருண்ய நாம - காருண்யமென்கிற, மகரந்தஜாலம் - பூந்தேனின் ப்ரவாஹத்தை, விகிரன் - பெருகவிட்டுக்கொண்டும், ராஜதி - விளங்கிறது.

1. இதில் அம்பாளுடைய கடாக்ஷத்தை தேவலோகத்திய வ்ருக்ஷத்திற்கு ஸமமாக வர்ணிக்கப்பட்டது. அவ்வித வ்ருக்ஷங்கள் மந்தாரம், பாரிஜாதம், ஸந்தானம், கல்பவ்ருக்ஷம், ஹரிசந்தனம் என்ற ஐந்து.

9. ஸூர்யாச்ரய ப்ரணயினீ மணிகுண்டலாம்சு-
லௌஹித்ய கோகனத கானன மானனீயா |
யாந்தீ தவ ஸ்மரஹரானன காந்திஸிந்தும்
காமாக்ஷி ராஜதி கடாக்ஷ களிந்த கன்யா ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! தவ கடாக்ஷகளிந்த கன்யா - உன்னுடைய கடாக்ஷமாகிற யமுனாநதியானது, ஸூர்யாச்ரய ப்ரணயினீ - ஸூர்யனை (பரமசிவனை) ஆச்ரயிப்பதில் ஆசையுள்ளதாயும், மணிகுண்டலாம்சு - ரத்னகுண்டலங்களின் காந்திகளாகிற, லௌஹித்ய கோகனத கானன-செந்தாமரைகளின் வனத்தால், மானனீயா - கௌரவிக்கத்தக்கதாயிருந்துகொண்டு, ஸ்மரஹரானன காந்தி ஸிந்தும் - பரமசிவனுடைய முகத்தின் காந்தியாகிற ஸமுத்ரத்தை, யாந்தி - அடைவதாக (அடைந்துகொண்டு) ராஜதி - விளங்குகிறது.

1. இதில் அம்பிகையின் கடாக்ஷத்தை யமுனாநதிக்கு ஸமமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. களிந்தமென்று பெயருடைய பர்வதத்திலிருந்து யமுனையானது உத்பத்தியாவதால் அதற்கு காளிந்தி, களிந்தகன்யா என்பதான பெயர்கள ஏற்பட்டன.

2. ஸூர்யனுக்கு யமன் புத்ரனாகவும், யமுனை புத்ரியாகவும் சொல்லப்படுவார்கள்.

3. ஸூர்யனென்று சிவனுக்கும் பெயருண்டு.

10. ப்ராப்னோதி யம் ஸுக்ருதினம் தவ பக்ஷபாதாத்
காமாக்ஷி வீக்ஷணவிலாஸகலாபுரந்த்ரீ |
ஸத்யஸ்தமேவ கில முக்திவதூர் வ்ருணீதே
தஸ்மான் நிதாந்தம் அனயோரிதம் ஐகமத்
[யம் ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! தவ பக்ஷபாதாத் - உன்னுடைய கடாக்ஷத்திலிருந்து, வீக்ஷணா விலாஸகலா - (உன்னுடைய) பார்வையினுடைய அழகின் ஒரு சிறிய பாகமாகிற, புரந்த்ரீ - குடும்பஸ்த்ரீயானவள், யம் ஸுக்ருதினம் - எந்த புண்யசாலியை, ப்ராப்னோதி - அடைகிறாளோ, ஸத்ய; - உடனே, தமேவ -அவனையே முக்திவதூ: - மோக்ஷமாகிற ஸ்த்ரீயானவள், வ்ருணீதேகில - வரிக்கிறாள் அல்லவா! தஸ்மாத் - அதிலிருந்து, அனயோ: - அவ்விரு ஸ்த்ரீகளுக்கும், இதம் ஐகமத்யம் - இவ்விதமான ஒற்றுமையானது, நிதாந்தம் - மிகவும் அதிகமாக (இருக்கிறது).

1. இதின் தாத்பர்யமென்றால் - அம்பிகையின் க்ருபையினால் அவளுடைய கடாக்ஷலேசமானது ஒருவன்மீது ஏற்பட்டால் அவனுக்கு ஐஹிகமான ஸகல ஸௌபாக்யங்களுமேற்படுவதுடன் ஆமுஷ்மிகமான மோக்ஷமென்கிற புருஷார்த்தமும் தானாகவே கிடைக்கிறதென்று சொல்லப்பட்டது. ஸாதாரணமாக, போகம் இருக்குமிடத்தில் மோக்ஷம் கிடைக்காதென்றும், மோக்ஷமிருக்குமிடத்தில் போகம் கிடையாதென்றும் நாம் பார்ப்பது வழக்கமாயிருக்கையில், அம்பிகையின் பக்தர்களுக்கு அவையிரண்டும் ஒருங்கே கிடைக்கப்பெறுமென்று சொல்லப்படும்.

‘யத்ராஸ்தி போகோ ந து தத்ரமோக்ஷ:
யத்ராஸ்தி மோக்ஷோ ந ச தத்ரபோக: |
ஸ்ரீஸுந்தரீ ஸாதக புங்கவானாம்
போகச்ச மோக்ஷச்ச கரஸ்த்த ஏவ ||’

11. யாந்தீ ஸதைவ மருதாம் அனுகூலபாவம்
ப்ரூவல்லி சக்ரதனுருல்லஸிதா ரஸார்த்ரா |
காமாக்ஷி கௌதுக தரங்கித நீலகண்டா
காதம்பினீவ தவ பாதி கடாக்ஷமாலா ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! தவ கடாக்ஷமாலா - உன்னுடைய கடாக்ஷங்களின் வரிசையானது, கதாம்பினீவ - மேகங்களின் நீண்டதோர் வரிசைபோல், ஸதைவ - எப்போதும், மருதாம் அனுகூலபாவம் - காற்றுகளுடைய (தேவர்களுடைய) அநுகூலமான தன்மையை, ப்ரூவல்லி - புருவமாகிய, சக்ரதனுருல்லஸிதா - வான வில்லினால் ப்ரகாசிப்பதாயும், ரஸார்த்ரா - நீர் (கருணாரஸம்) நிறைந்ததாயும், கௌதுக தரங்கிதா - ஸந்தோஷத்தினால் அலைபாயும் மனதுடைய, நீலகண்டா - மயிலை (பரமசிவனை)யுடையதாயும், பாதி - விளங்குகிறது.

1. இதில் அம்பிகையின் கடாக்ஷங்களான மாலையை காதம்பினிக்கு ஸமானமாக வர்ணிக்கப்பட்டது. வரிசையாய் இருக்கும் மேகக் கூட்டத்திற்கு காதம்பினீ என்று பெயர். காற்றானது அனுகூலமாய் இருந்தால் தான் அவ்வித சேர்க்கையானது கலைபடாமலிருக்குமாகையால் ‘மருதாம்’ அனுகூலபாவம் யாந்தீ’ என்று சொல்லப்பட்டது. மருத் என்ற பதமானது தேவவிசேஷங்களையும் குறிக்கும். மேகத்தில் இந்த்ர தனுஸ் இருப்பது போல் கடாக்ஷமாலைக்கு அம்பிகையின் புருவங்களாகிய தனுஸ் இருப்பதை ‘ப்ரூவல்லிசக்ரதனுருல்லஸிதா’ என்று சொல்லப்பட்டது. புருவங்களின் அமைப்பை வில்லுக்கு ஸமமாக வர்ணிப்பது வழக்கம். மேகம் நீருண்டிருப்பது மாதிரி கடாக்ஷமாலையானது கருணாரஸம் நிறைந்திருக்கிறது. (ரஸம் என்றால் ஜலமென்றும் அர்த்தம்.) நீருண்ட மேகத்தைக் கண்டு மயில்கள் நர்த்தனம் செய்யுமென்று சொல்வது வழக்கம். (மயிலுக்கு நீலகண்டமென்று பெயர்.) நீலகண்டமென்று பரமசிவனுக்கும் பெயராகையாலும், அவருடைய மனதானது அம்பிகையின் கடாக்ஷ மாலையைப் பார்த்து ஆனந்தமடையுமாகையால் ‘கௌதுக தரங்கித நீலகண்டா, என்று சொல்லப்பட்டது.

12. கங்காம்பஸி ஸ்மிதமயே தபனாத்மஜேவ
கங்காதரோரஸி நவோத்பல மாலிகேவ |
வக்த்ர ப்ரபாஸரஸி சைவல மண்டலீவ
காமாக்ஷி ராஜதி கடாக்ஷ ருசிச்சடா தே ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! தே கடாக்ஷ ருசிச்சடா - (உன்னுடைய, கடாக்ஷத்தின் காந்திகளுடைய கூட்டமானது, ஸ்மிதமயே - (உன்னுடைய) புன்சிரிப்பாகிற, கங்காம்பஸி - கங்கா ஜலத்தில், தபனாத்மஜேவ - யமுனாநதி போலும், கங்காதரோரஸி- பரமசிவனுடைய மார்பில், நவோத்பல மாலிகேவ - புதிதான கருநெய்தல் புஷ்பங்களின் மாலை போலும், வக்த்ரப்ராபாஸரஸி- (உன்னுடைய) முக காந்தியாகிற ஸரஸில், சைவ மண்டலீவ - பாசிக்கூட்டம்போலும், ராஜதி - விளங்குகிறது.

1. கங்காஜலமானது வெளுப்பாகவும், யமுனா நதியின் ஜலம் கருப்பாகவும் இருப்பதாகச் சொல்லப்படும். புன்சிரிப்பை வெளுப்பாகச் சொல்லப்படும். பரமசிவனுடைய சரீரமானது வெளுப்புநிறமாகச் சொல்லப்படும்.

2. தபனனென்று ஸூர்யனுக்குப்பெயராகையால் அவனுடைய பெண்ணான யமுனைக்கு தபனாத்மஜா, தபன தன்யா என்ற பெயர்கள் உண்டு.

3. கடாக்ஷத்தின் காந்தியினுடைய கூட்டமான சேர்க்கையானது கருப்பு நிறமாய் இருப்பதாக இங்கு வர்ணிக்கப்பட்டது.

13. ஸம்ஸ்காரத: கிமபி கந்தலிதான் ரஸக்ஞ-
கேதாரஸீம்னி ஸுதியாம் உபபோகபாக்யான் |
கல்யாண ஸூக்தி லஹரீ கலமாங்குரான் ந:
காமாக்ஷி கந்தலயது த்வத் அபாங்க மேக: ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! த்வத் அபாங்க மேக:-உனது கடைக்கண் பார்வையென்ற மேகமானது, ந: - நம்முடைய, ரஸக்ஞகேதாரஸீம்னி - நாக்காகிற வயலில், ஸம்ஸ்காரத: - செய் நேர்த்தியால், கிமபி கந்தலிதான் - ஒருவிதமாய் (கொஞ்சம்) கிளம்பியிருப்பதும், ஸுதியாம் - (புத்திமான்களுடைய)

தேவாலயச் சீர்திருத்தம்.

கனம் மந்திரி கவனிக்க வேண்டும்.

புதிய மந்திரி ஸபை ஏற்பட்ட பிறகு தேவாலயச்சீர்திருத்தத்தைப்பற்றி அதிகம் பேசப்படுகிறது. தேவஸ்தான போர்டுமந்திரியான டாக்டர் ராஜனே இவ்விஷயத்தைப்பற்றி தீவ்ரமாக யோஜித்து வருவதாயும், பொது ஜன அபிப்ராயத்தை அறியப்போவதாயும் தெரிகிறது. திருச்சியில் தேவஸ்தானகமிட்டியாரும், கோவில் டிரஸ்டிகளும் நடத்தியகூட்டத்தில் டாக்டர் ராஜன் தமது அபிப்ராயங்கள் சிலவற்றை வெளியிட்டுமிருக்கிறார்.

ஆதலால் இந்த உசிதமான ஸந்தர்ப்பத்தில் நாம் சில யோஜனைகளை மந்திரியவர்களுக்கு வெளியிடுவது அவசியமென நினைக்கிறோம்.

கனம் மந்திரி திருச்சியில் பேசியிருப்பதில் "தேவஸ்தான சட்டம் கண்டிக்கப்பட்டபோதிலும், அதனால் நல்ல பிரயோஜனம் ஏற்பட்டிருப்பதை மறக்க முடியாதென்று,, கூறியிருக்கிறார். இந்த அபிப்ராயத்தை இந்த மாகாணத்தில் பெரும்பாலோர் ஒப்புக்கொள்ள மாட்டார்களென்று நாம் நினைக்கிறோம். இந்த சட்டத்தினால் கோவில்களின் நிர்வாகம் எங்கேயாவது சீர்பட்டதாக ஒருவரும் நினைக்க இடமில்லை. கோவில்களின் பணத்தென்பு அதிகரித்ததாகவும் சொல்ல முடியாது. இந்த சட்டத்திற்கு பிறகே அநேக கோவில்களின் திரவ்ய சக்திகுன்றியும், வாகனம், ஆபரணம் நிலம் முதலியவை ஏலம் போடப்பட்டும், மாமூல் உத்ஸவங்கள் நிறுத்தப்பட்டும் பல வித ஊழல்களேற்பட்டிருக்கின்றன. ஆதலால்தான் அநேக சட்டநிபுணர்களும், புத்திமான்களும் பொது ஜனங்களும் இதை பலமாக எதிர்த்து வருகிறார்கள். இந்த நிலைமையில் கனம் மந்திரி இந்தசட்டத்தால் சிறிதுநன்மைஏற்பட்டிருப்பதாகக் கூறுவது பழைய மந்திரி சபையின் செய்கையைக் காட்டிக் கொடுக்கக் கூடாது என்ற பெருந்தன்மையாகவிருக்கலாம். உண்மையை அவர் அறியாதவரன்று.

ஆதலால் அந்த சட்டத்தை எடுக்கவோ, அல்லது நியாயமாயும்,சிக்கனமாயுமுள்ள வழியில் திருத்தவோ வேண்டியது மிக்க அவசியமாகும். முக்யமாக மதாசாரியாளான மடாதிபதிகளை கட்டுப்படுத்தியிருப்பதை உடனே திருத்த வேண்டியதவச்யம். இவ்விஷயமாக பலர் குறிப்பானநல்ல யோஜனைகளைச்சொல்லகூடுமாகையால் நாம் இப்பொழுது அதில்இறங்கவில்லை.

இங்கு நாம் பிரஸ்தாபிக்க விரும்புவது வைதிக விஷயமான சீர்திருத்தமே யாகும். போர்டோ, கமிட்டிகளோ, டிரஸ்டிகளோ ஒருவராவது தேவாலயங்களில் கவனம் செலுத்துவதாகத்தெரிய வில்லை. கோவில்பணம், நிலம், இவைகளின் நிர்வாஹத்தோடு தங்கள் வேலை முடிந்துவிட்டதாக நினைத்திருக்கிறார்கள். ஆனால் தேவாலயங்களின் ஜீவநாடியான பூஜாதி வைதிக கார்யங்களைப்பற்றி கேள்விமுறையே கிடையாது. அவைகள் சாஸ்திர விதிப்படி ஸரியான காலங்களில் ஸரிவர நடக்கின்றனவா? மந்திர தந்திரங்கள் சரியாகதெரிந்து கொள்ளப்பட்டு அநுஷ்டிக்கப்படுகின்றனவா? பூஜகர்கள் சன்மார்க்கத்துடன் இருந்து ஆகமவிதிப்படி கார்யங்கள் செய்கிறார்களா? இவைகளைப் பற்றி ஒரிடத்திலாவது டிரஸ்டிகள் சிரத்தைகாட்டுவதாக நாம் அறியமுடியவில்லை.

கனம் டாக்டர் ராஜன் கோவில்களில் எல்லா ஜாதியாரும் போய் ஸ்வாமி தர்சனம் செய்து க்ஷேமமடைய வேண்டுமென்று விரும்புகிறார். சாஸ்திரப்படி அங்கு தைவஸாந்நித்யமிருப்பதாகவே இவர் கருதுகிறார். தீண்டாதார் உள்ளே வந்தால் ஸ்வாமியின் சக்தி குன்றிவிடுகிறதாக மற்றொருசாரார் நினைக்கிறார்கள். ஆகவே இரண்டு கக்ஷியாரும் தெய்வஸாந்நித்யத்தை விரும்புகிறவர்களே. ஆனால் இந்த ஸான்னித்யம் சாஸ்திர விதிப்படியுள்ள பூஜை இல்லாவிட்டால் எப்படி ஏற்படும்? இதை கனம் மந்திரி நன்கு யோஜிக்கவேண்டும்.

நான், ஒரு பிரஸித்திபெற்ற விஷ்ணு தேவாலயத்தின் அநுபவத்தைக் கொண்டு பேசுகிறேன். இந்த பிரஸித்திபெற்ற தேவாலயத்திற்கு ஆதார பூதமான ஆகம ஸம்ஹிதை என்னவென்பதே தெரியாமல் பூஜை நடந்துவருகிறது. சிலர் பாத்ம ஸம்ஹிதையென்கிறார்கள். வேறு சிலர் வேறு பெயரைச் சொல்லுகிறார்கள். எந்த ஸம்ஹிதைப்படி பார்த்தாலும் இப்போது பூஜகர்கள் செய்துவரும் பூஜை ஒத்ததாக இருக்கவில்லை. ஒவ்வொருவர் ஒவ்வொரு மாதிரியாகப் பூஜைசெய்கிறார்கள். இதைப்பற்றி வித்வான்கள் கேட்டால் அவர்கள் பதில் அளிக்கமுடியாதவர்களாயிருக்கிறார்கள். பூஜகர்கள் அநேகர் சிறு வயதுள்ளவர்களாயும், ஆகமாதி பரிசயமற்றவர்களாயும், ஸரியானபடி வேத மந்திரங்களைத் தெரிந்துகொள்ளாதவர்களாயிருப்பதுமே இதற்குக் காரணம். அநேகமாக எல்லாக் கோவில்களின் நிலைமை இப்படியே. இது யாருடைய குற்றம்? பூஜகர்கள் பிறந்தவுடன் தங்கள் தொழிலில் இறங்குவது ஸஹஜம். ஆனால் அவர்கள் படிப்பும் ஆகம பரிசயமும் பெறும்படி செய்யவேண்டியது யாருடைய கடமை? பொது ஜனங்களும் டிரஸ்டிகளும் இதில் உதாஸீனமாயிருப்பதே இந்த நிலைமைக்குக்காரணம், பொது ஜனங்களுடைய ஸொத்தான கோவிலில் ஊழியம் செய்யும் பூஜகர்கள், அந்த வேலைக்கு அவச்யமான யோக்யதையும் ஆசாரமும் உள்ளவர்களாக இருக்கவேண்டுமென்று நிர்பந்திக்கப் பொது ஜனங்களுக்கு பாத்யம் பூர்ணமாயிருக்கிறது. டிரஸ்டிகளுக்கும் இதில் பூர்ண அதிகாரமிருக்கிறது. அப்படியிருந்தும் கோவில்களில் பூஜகர்கள் இஷ்டப்படியே எதைவேண்டுமானாலும் செய்யக்கூடியதாயிருக்கிறது. டிரஸ்டிகளும், கமிட்டி மெம்பர்களும் தாக்ஷிண்யப்படுகிறார்கள். மேலும் பூஜகர்கள் டிரஸ்டிகளை லக்ஷ்யம் செய்யும் வழக்கமும் பலவிடங்களில் இல்லை. டிரஸ்டிகள் தங்களுடைய உத்திரவுக்குக் கீழ்படியவேண்டிய பூஜகர்களிடம் அமுல் நடத்தப்பயப்படுகிறார்கள். இதனால் பூஜகர்களின் யதேச்சாதிகாரமே கோவில்களில் நர்த்தனமாடுகிறது. இந்த நிலைமை ஒழியவேண்டும். பூஜகர்கள் நன்கு படித்து ஸதாசாரமுள்ளவர்களாயிருக்கும்படி டிரஸ்டிகள் பார்த்துக்கொள்ளவேணும். அவர்களை நன்கு பரீக்ஷைசெய்தே பூஜைக்கு அநுமதிக்கவேணும். யோக்யதை அற்றவர்களை விலக்கவேணும்.

ஒவ்வொரு கோவிலிலும் பூஜைகள் நடக்கவேண்டிய காலங்களைக் கண்டிப்பாக ஏற்படுத்தவேண்டும் பூஜகர்களுக்கு இஷ்டமான போது, ஒழிந்த நேரத்தில் வந்து பூஜை செய்துவிட்டு பூட்டிக்கொண்டு போய்விடாமல் பார்த்துக்கொள்ளவேணும். பூஜகர்கள் சாஸ்திரவிதிப்படி நித்யபூஜையோ, விசேஷ பூஜைகளோ செய்கிறார்களாவென்று டிரஸ்டிகளோ வேறு அதிகாரியோ கவனித்துவரவேணும்.

இந்தமாதிரி முக்ய விஷயத்தில் கண்டிப்பான உத்திரவோ சட்டமோ செய்து டிரஸ்டிகளும் பொது ஜனங்களும் இதை நன்கு கவனிக்கும்படி செய்யவேண்டும். பூஜகர்களை சீர்திருத்தவும், அர்ஹதையில்லாதவர்களை விலக்கவும் டிரஸ்டிகளுக்குப் பூர்ண அதிகாரம் கொடுத்து சட்டத்தை வலுப்படுத்தவேண்டுமென்றும் கனம் மந்திரியிடம் சொல்லுவதற்காக மஹாஜர்களும் ஒரு டெபுடேஷனும் குடந்தையில் ஏற்பாடு செய்யப்படுமென்று தெரிகிறது.

ஆதலால் கனம் டாக்டர் ராஜன் அவர்கள் இப்போது தேவாலய சீர்திருத்த விஷயமாக யோஜித்து வருவதால் அதில்கண்ட விஷயங்களையும் சேர்த்து யோஜிப்பாரென்று நம்புகிறோம்.

குடந்தைவாஸி.

அபிஸீனிய அரசரின் பரிதாப அழுகை.

ஐரோப்பிய அநாகரிகத்திற்கு அபிஸீனிய ஸம்பவம் ஒரு உரைகல்லாயிருப்பது உலகம் அறிந்த விஷயமே. நாட்டையும், ஜனங்களையும், மானத்தையும் இழந்து திக்கற்றநிலைமையில் தவித்துவரும் அபிஸீனிய அரசருக்கு ஆதரவுகாட்டுவோர் இந்த நாகரிக உலகில் ஒருவராவது காணப்படவில்லை.

இப்போது லண்டனில் தங்கியிருக்கும் அந்த அரசர் தம்தேசத்தில் இதாலியர் நடத்திய அக்கிரமச் செய்கைகளை உலகம் மறந்துவிடாமலிருக்கும்படி மறுபடியும் ஞாபகப்படுத்தி ஓர் பரிதாபகரமான, அழுகை நிறைந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்: அதில் அவர் சொல்லுவதாவது:—

> எனது நாடு (அபிஸீனியா) முறியடிக்கப்பட்டு ஜனங்கள் இப்போது திக்கற்ற நிலைமையில் இருந்துவருகிறார்கள். அபிஸீனியத் தலைவர்கள் பெரும்பாலோர் கொல்லப்பட்டு விட்டார்கள்.
>
> இதாலிய ஸோல்ஜர்கள் சாதாரண ஸமயத்தில்கூட நூற்றுக் கணக்கான அபிஸீனியப் புருஷர்களையும், ஸ்திரீகளையும், குழந்தைகளையும் கொன்றுகுவித்திருக்கிறார்கள். கெம்படி என்ற நகரத்தில் ஒருபாவமுமறியாத 600ஜனங்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்: அநேகம் பேர் உயிருடன் கொளுத்தப்பட்டனர். விவாஹமாகாமலும், விதவைகளாயும், இருக்கும் அபிஸீனிய ஸ்திரீகளை வியபிசாரிகளாக வாழும்படி இதாலியர் நிர்ப்பந்திக்கிறார்கள்.
>
> மாகாகோவில்கள் பல இடிக்கப்பட்டுவிட்டன. இவ்வளவு அகாரியங்களும் நாகரிகத்தின் பெயரால் நடக்கின்றன.

இவ்வாறு அந்த அரசர் சொல்லிவிட்டு எல்லா தேச சர்ச்சுகளிலும் அபிஸீனியர்களுக்காக ஒரு தினத்தில் பிரார்த்தனை நடத்தி அவர்களுடைய அபிமானத்தை வெளியிடும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார்.

ஐரோப்பிய வெள்ளைக்கார நாகரிகத்தின் போக்குக்கு இன்னும் என்ன ருஜுவேண்டும்? இத்தகையவர்களைப் பார்த்துத்தான் நம் இந்தியர்களும் நாகரிகம் கற்று நம்மை இழிவாகப்பேசித் திரிகின்றனர். அந்தோ!

டிக்ரிகளை நிறை வேற்றக்கூடாது.

ஒரிஸா மந்திரி ஸபை உத்திரவு.

ஒரிஸா மாகாணக்காங்கிரஸ் மந்திரிகள், அம்மாகாணத்திலுள்ள வியவஸாயிகள் மீது கடனுக்காக யாராவது டிக்ரி பெற்றிருந்தால் கூட அதை உடனே நிறைவேற்றக்கூடாதென்று கூட்டுறவு ஸங்கங்களுக்கு ஒரு உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

வியவஸாயிகளின் கடன் பளுவை நீக்க காங்கிரஸ் மந்திரிகள் ஏதோ யோஜனைசெய்து வருவதாக இதிலிருந்து தெரிகிறது.

மதுரையில் பண்டித மஹாஸபை.

சாஸ்திரங்களை மாற்ற யாருக்கும் அதிகாரமில்லை.

சாஸ்திர சர்ச்சைகளும் தீர்மானங்களும்.

(நமது விசேஷ நிருபர்)

மதுரை ஆகஸ்டு 15௳

மதுரையில் நடைபெற்ற ஸநாதனதர்ம மஹாநாட்டை ஒட்டி ஒருபண்டிதபரிஷத்தும் கூட்டி தற்காலம் ஏற்பட்டுள்ள மதாசார விஷயமான விவாதங்களைக் கவனித்து முடிவு செய்ய உத்தேசித்துள்ள விஷயம் ஏற்கனவே பத்திரிகைகளில் பிரசுரமாயிருந்தது.

இதை அநுஸரித்து 14௳ சனிக்கிழமையன்று மதுரை தமிழ்ச்சங்கம்ரோட் ஸ்ரீமான் என். நடேசய்யர் நந்தவனத்தில் அமைக்கப்பட்டுள்ள பந்தலில் பண்டிதர்களின் ஸபையொன்று நடைபெற்றது. ஸபாதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்கி வெளியூர் உள்ளூர் ஸம்ஸ்கிருத வித்வான்கள் பலர் விஜயம் செய்திருந்தார்கள். அநேக லௌகிக கனவான்களும், பொதுஜனங்களும் நடவடிக்கைகளைக் கவனிக்க மிகுந்த ஆவலுடன் கூடியிருந்தார்கள்.

திருவையார் சாஸ்திரரத்நாகரம் பிரும்மஸ்ரீ விச்வநாத சாஸ்திரிகள், சாஸ்திர ரத்னம் தேதியூர்பிரும்மஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரிகள் போலகம் சுந்தரசாஸ்திரிகள், ஆத்மவித்யா பூஷணம் ஜகதீச்வரசாஸ்திரிகள், அக்னிஹோத்ரம் பண்டித கோபாலதேசிகாசாரிய ஸ்வாமிகள், ராமாநுஜதாதாசாரியர் செந்தமிழ் பத்திராதிபர் திருநாராயண அய்யங்கார் ஸ்வாமிகள், நெரூர் நாராயண அய்யங்கார், பலகொல்லு ஸ்ரீஉமாமகேச்வர சாஸ்திரிகள், எம். என். சுப்பிரமணிய சாஸ்திரிகள், கே. வி. சுப்பிரமணிய சாஸ்திரிகள், பூவராஹாசாரியர்முதலானவர்களும், இன்னும் அநேக பண்டிதர்களும் ஸபையில் காணப்பட்டனர்.

ஆரம்பத்தில் யஜுர்வேத உபநிஷத் பாராயணமும், ஸாமவேத பாராயணமும், நடைபெற்றது. தேவதா ஸ்தோத்ரங்களும் நடைபெற்றன. பண்டித பரிஷத் வரவேற்புஸபைத் தலைவரான பிரும்மஸ்ரீ தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள் தமது வரவேற்பு பிரஸங்கத்தை இனிமையாக ஸம்ஸ்க்ருதபாஷையில் செய்து அதன் அர்த்தத்தைத் தமிழில் அழகாக விவரித்தார். உருக்கமாகவும், கம்பீரமாகவும், உணர்ச்சி ததும்பியதுமாயுமுள்ள அவருடைய உபந்யாஸம் ஸபையோர் மனதை விசேஷமாக கவரச் செய்தது. அதன் பின் அவர் பண்டித பரிஷத் கூட்ட உத்தேசித்ததன் காரணத்தை விளக்கி, அதில் தலைமை வஹிக்கும்படி பிரும்மஸ்ரீ விச்வநாத சாஸ்திரிகளையும், ஸ்ரீ உ-வே. அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியரையும் ஸபையோர் சார்பாக பிரேரித்து அவர்களுடைய குணங்களைப் புகழ்ந்து கூறினார் பிரும்மஸ்ரீ பலகொல்லு ஸ்ரீ உமாமகேச்வர சாஸ்திரிகள் ஸம்ஸ்க்ருதத்தில் பிரேரணையை ஆமோதித்தார். ஸ்ரீமான் பூவராஹாசாரியரும் ஆதரிக்க பிறகு தலைவர் இருவருக்கும் பகவத் ப்ரஸாதமான புஷ்ப மாலை அளிக்கப்பட்ட பின் பிரம்மஸ்ரீ சாஸ்திர ரத்நாகர விச்வநாதசாஸ்திரிகள் தலைமை வஹித்து காலை நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தார். விஷயங்களை எந்த வழியில் சர்ச்சைசெய்து முடிவு செய்வதென்பதைப்பற்றி ஆரம்பத்தில் சிறிது யோஜனை நடந்தபின் ஸபையில் எதிர் கக்ஷியாரின் அபிப்பிராயங்களை எடுத்துக் கூற பூர்ண அவகாசம் அளிப்பதென்றும், எதிர் கக்ஷியார் வாதபக்ஷத்தில் அவர்களுடைய அபிப்பிராயங்களை நம்மில் சிலர் விவரமாக பூர்வபக்ஷ ரீதியில் வெளியிட வேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. முதலில் அரசனுள்பட இப்போதிய மனிதர்களுக்கு நமது சாஸ்திரங்களையோ, தர்மங்களையோ, காலதேச நிலைமைக்கு ஏற்றவாறு மாற்ற அதிகாரம் சாஸ்திரப்படி இருக்கிறதா? என்ற விஷயம் சர்ச்சைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஆத்மவித்யா பூஷணம், பிரம்மஸ்ரீ ஜகதீச்வர சாஸ்திரிகள் இவ்விஷயமாகப் பூர்வ பக்ஷிகளின் அபிப்பிராயங்களை விரிவாயும், தெளிவாயும் எடுத்துக் கூறுகையில், தர்மங்கள் மாறுபடும் குணமுள்ளவைகளென்றும், அம்மாதிரியே ஒவ்வொரு யுகங்களிலும் அவை மாறுபட்டு வந்திருப்பதாயும், ஸாங்க்யாதிகளின் அபிப்பிராயப்படி பாவங்கள் க்ஷணபரிவர்த்திகளென்று தெரிவதாயும் நாமும் அதை அங்கீகரிக்கவேணுமென்றும், இப்போதும் காலரீதியை அநுஸரித்து தர்மத்தை மாற்றுமதிகாரம் நமக்கு இருப்பதாயும் சொல்லிமுடித்தார்.

சாஸ்திரரத்நம் தேதியூர் பிரம்மஸ்ரீ ஸுப்பிரமணிய சாஸ்திரிகள், சாஸ்திரம், யுக்தி இவைகளை ஆதாரமாகக்காட்டி இந்த ஆக்ஷேபத்தின் ஒவ்வொரு அம்சத்திற்கும் தக்க பதில் அளித்தார்.

அதையநுஸரித்து ஸ்ரீமான் கோபாலதேசிகாசாரியார் பேசுகையில், சாஸ்திரங்களை மாற்றவோ, புதிதாக உத்பத்தி செய்யவோ, ஒருவருக்கும் அதிகாரமில்லை யென்றும், வைதிக மதஸித்தாந்தப்படி தர்மாதர்ம வியவஸ்தைகள் செய்ய வேதத்திற்குத்தான் அதிகாரமென்றும், ரிஷிகள்கூட வேதமூலமாகவே ஸ்மிருதிகளைச் செய்கிறார்களென்றும், ஸ்மிருதிகளுக்கும் வேதமூலகமென்ற காரணத்தாலேயே பிராமண்யம் ஏற்படுகிறதே யல்லது, ஒரு ரிஷி சொன்னார் என்பதற்காக அல்லவென்றும், அப்படியிருக்க நம்மைப்போன்று ஞானசக்தியோ, தபஸ் சக்தியோ அற்றவரும், பிரம, பிரமாத, பக்ஷபாதம் நிறைந்தவர்களுமான மனிதர்களுக்கு புதிதாக தர்மாதர்ம வியவஸ்தை செய்ய அதிகாரமில்லையென்றும், கலியுகத்தில், வேத மந்திரங்களைக் கண்டுபிடித்து தர்மா தர்ம வியவஸ்தை செய்யத்தக்க யோக்யதையுள்ள ரிஷிகள் உண்டாகமாட்டார்களென்று ஆபஸ்தம்பர் சொல்லிவிட்டதாலும், திரிகாலகாலஞ்ஞர்களான ரிஷிகள் எல்லா யுகங்களும், எல்லாக்கால தேச அதிகாரிகளுக்கும் ஏற்றவைகளான முக்யம், கௌணம், ஆபத் என்ற பலவித தர்மாநுஷ்டான முறைகளை ஏற்கனவே சொல்லியிருப்பதாயும், அவைகளே தற்காலத்திற்கும் போதியவைகளாயிருப்பதாயும் இப்போது புதிதாக நாம் எவ்விதமாறுதல்களையும் செய்யவேண்டிய நிர்ப்பந்தமும் இல்லையென்றும் ராஜாகாலஸ்ய காரணம் என்பது மனுஸ்மிருதி சுக்ரநீதி இவைகளை அநுஸரித்து அரசனுக்கு தர்மத்தை மாற்றும் அதிகாரம் அளிக்கவந்ததல்லவென்றும், அதன் அர்த்தமே வேறு என்றும், அரசர்களுக்கு, தேச, ஜாதி, குல தர்மங்களை மாற்றாமல் அப்படியே பாதுகாக்க வேண்டிய கடமை சாஸ்திரங்களால் ஏற்பட்டிருக்கிறதென்றும் அநேக பிரமாணங்களைக் கொண்டு விளக்கினார்.

பிறகு வித்வான், போலகம் பிரம்மஸ்ரீ ஸுந்தர சாஸ்திரிகளும் வெகு திறமையாக விஷயங்களை எடுத்துக்காட்டி கலிவர்ஜ்யத்திலிருக்கும் வசனங்களின் தாத்பர்யங்களை நன்கு விளக்கியும் சிறந்த பதில் கூறினார்.

பிறகு அக்ராஸனாதிபதி மேற்கண்ட அபிப்பிராயங்களை அநுஸரித்து, நமது சாஸ்திரங்கள், தர்மங்கள் இவைகளைமாற்றமுடியாதென்றும் அந்த அதிகாரம் ஒருவருக்கும் கிடையாதென்றும், மாற்றவேண்டிய நிர்ப்பந்தமோ இப்போது ஒன்றும் ஏற்படவில்லையென்றும், ராஜாகால காரணமென்பதின் அர்த்தம் வேறாக இருப்பதால் அரசன் தர்ம மாறுதல்செய்ய அதிகாரமுள்ளவனென்று அது கூறுவதாகச் சொல்லுவது தப்பென்றும், கருத்துக்களடங்கிய தீர்மானத்தைப் பிரேரேபித்து இதை ஆக்ஷேபிப்பவர் இருந்தால் பதில் சொல்லலாமென்றும் கூறினார்.

ஒருவரும் எதிர்க்க முன்வாராததால் அந்தத் தீர்மானம் பலத்த கரகோஷ ஸம்மதியுடன் ஏகமனதாக ஸபையில் அங்கீகரிக்கப்பட்டது.

இச்சமயம் நேரம் அதிகமாகிவிட்டதால் பரிஷத் மாலை 2½ மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பரிஷத்தின் மாலை நடவடிக்கைகள்.

பிறகு மாலை 3 மணிக்கு பரிஷத் மீண்டும் கூடியது. காலையில் போலவே ஜனக்கூட்டம் அதிகமாயிருந்தது.

பிரம்மஸ்ரீ சாஸ்திர ரத்நம் தேதியூர் ஸுப்பிரமண்ணிய சாஸ்திரிகள் எழுந்து ஆர்யதர்மம் பத்திராதிபர் பிரம்மஸ்ரீ அக்னிஹோத்ரம் கோபால தேசிகாசார்யரை பரிஷத்தில் அக்ராஸனம் வகிக்கப் பிரேரேபித்தார்.

அதற்கிணங்கி அவர், நமது தர்மங்களின் தற்கால துர்த்தசைகளைப்பற்றியும், பரிஷத்தில் ஆலோசிக்கவேண்டிய பல முக்ய விஷயங்களையும் குறிப்பிட்டும் முக்கால் மணிநேரம் ஸம்ஸ்கிருத பாஷையில் ஓர் முகவுரைப் பிரஸங்கம் செய்தார். பிறகு அது தமிழிலும் விவரிக்கப்பட்டது. அதில் அவர் தத்காலம் ஆசாரத்திருத்தக்காரர்களால் நமது தர்மங்களுக்கு ஏற்பட்டுவரும் தீமைகளைக் குறிப்பிட்டும் ஜாதி பேதம், ருது மதீ விவாஹம், கலப்பு விவாஹம் ஒருநாள் விவாஹம் முதலியவைகளைப்பற்றி எதிரிகளுடைய ஆக்ஷேபங்களைக் குறிப்பிட்டும் அவைகளுக்கு சாஸ்திர ரீதியாக உள்ள பதிலை அநேகவசன பிரமாணங்களுடன் பலமாக நிரூபித்துப் பேசினார். மதம் மாறியவர்களை மீண்டும் திருப்புவதைப்பற்றியும் சாஸ்திரரீதியாகச் சில அபிப்ராயங்களை வெளியிட்டார். முக்யமாக சூத்ர ஜாதியாருக்கும் வர்ணாச்ரமதர்மங்களில் உள்ள பாத்யங்களை எடுத்துக் கூறி அவர்களும் சாதுர்வர்ண்யத்தில் சேர்ந்தவர்களென்றும் பிராம்மணாதிகளுக்குப்போல் அவர்களுக்கு சாஸ்திரங்களில், ஸ்நானம் முதலிய தர்மங்களும் எல்லா ஸம்ஸ்காரங்களும் விதிக்கப்பட்டிருக்கின்றன வென்றும் அவர்கள் அதை அறியவோ ஆசரிக்க முன்வரவில்லையென்றும் அவர்களை நாம்ஒதுக்கிவைத்துவிடாமல் அவர்களுக்கு ஏற்பட்ட தர்மங்களையும் ஆசாரங்களையும் ஆங்காங்கு எடுத்து வெளிப்படுத்தி போதிக்கவும்வேண்டுமென்றும் க்ஷத்திரியர்கள் அல்லது க்ஷத்திரியர்போன்ற ஜாதியாருடைய உதவியை நாம் நாடவேண்டுமென்றும், அவர்களை முன்னிட்டே நாம் தர்மபிரசாரம் நடத்தவேண்டுமென்றும், தார்மிகர்கள் ராஜ்யவிஷயங்களில் கலப்பது சாஸ்திர விரோதமல்லவென்றும், ராமாயணாதிகளிலிருந்து வஸிஷ்டவாமதேவாதி பரமைகாந்தி மஹர்ஷிகள்கூட எல்லாஜாதியாரும் கலந்த கூட்டங்களில் ராஜ்ய கார்யங்களை முன்னிட்டுக் கூடியிருந்ததாக நாம் அறியவேண்டுமென்றும், பாதித்யம் உண்டாக்காததும், தாத்காலிக ஸ்நாநாதி சிறிய பிராயச்சித்தாதிகளால் ஸமாதானம் செய்துகொள்ளக் கூடியவைகளுமான ஸ்பர்சாதி விஷயங்களில் தற்போது ராஜ்யவாதிகளான தார்மிகர்களுக்குசாஸ்திரீயமாக கஷ்டமிருக்கநியாயமில்லையென்றும், இந்த விஷயங்களையெல்லாம் பரிஷத்தில்யோஜித்து ஒரு முடிவு செய்வது விரும்பத்தக்கதென்றும் கூறினார்.

(தொடர்ச்சி 8 ம் பக்கம் பார்க்க.)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-ஹு ஆவணி-மீ 4உ

மதுரை மஹாநாடு.

சென்றவாரத்தில் மதுரையில் ஸநாதநதர்ம மஹாநாடும் பண்டித மஹாஸபையும் நடந்து நமது தர்ம விஷயங்களைப்பற்றிக் கவலையுடன் யோஜனைசெய்து பல முக்ய விஷயங்களைத் தீர்மானித்திருப்பது ஸந்தோஷிக்கத்தக்கது. இந்த மகாநாடு பல வழிகளிலும் தற்சமயம் முக்யத்வமுள்ளதென்பதில் ஸந்தேஹமில்லை.

நமது மாகாணத்தில் காங்கிரஸ் காரர்கள் மந்திரிபதவியேற்று மாகாண ஸ்வயஆக்ஷியை நடத்த முன்வந்த பிறகு இந்த மஹாநாடே முதன்மையானது. ஜனநாயக ஆக்ஷி முறையில் எதிர்கக்ஷியொன்று எப்போதும் இருந்து வரவேண்டியது அவச்யமானது.

எதிர்கக்ஷியே இல்லாமல் ராஜ்யம் நடத்துவது யதேச்சாதிகாரி முறையேயாகும். ஆகலால் காங்கிரஸ் வாதிகள் ஆக்ஷியேற்ற பிறகு நாம் மதம், ராஜீயம், முதலிய ஸகல விஷயங்களிலும் ஒரு எதிர் கக்ஷியாக இருந்து அப்போதைக்கப்போது நிர்வாஹத்திலுள்ள குறைபாடுகளை எடுத்துக் கூறுகிறவர்களாக இருக்க முடியும். காங்கிரஸ் மந்திரிபதவியேற்றபின், ஜஸ்டிஸ், மிதவாதி சுயமரியாதை போன்ற ராஜீய ஸமூஹக் கக்ஷிகளின் கூட்டமும் ஆர்ப்பாட்டமும் குறைந்துவிட்டது நிதர்சனமாகும். அநேகர் எதிர்கக்ஷியிலிருந்து காங்கிரஸோடு ஐக்யமாகி வருகிறதையும் பார்க்கிறோம். இந்த நிலைமையில் ஸநாதர்மிகள் தனிக் கக்ஷியாக நின்று இன்னமும் தங்களது கக்ஷியை வற்புறுத்தி வருவது அவர்களுடைய உறுதியையும் தைர்யத்தையும் காட்டுகிறது. ஆகையால் நாம் கேவலம் மதாசார விஷயத்தைமட்டும் பேசாமல் ராஜீயத்தையும் சிறிது கலந்துகொண்டால் நாம் ஒரு திடமான எதிர் கக்ஷியாக இருக்க முடியுமென்பது மதுரை மஹாநாட்டின் நடவடிக்கையிலிருந்து தெரிகிறது
நாம் சட்டஸபைக்குள்ளிருந்துகொண்டு தான் எதிர்க்கக்ஷியாக இருக்கவேண்டுமென்ற அவச்யமில்லை. வெளியிலிருந்தும் ஆட்சியிலுள்ள குணதோஷங்களைத் தக்க பின்பலத்துடன் பேச ஆக்ஷேபணையில்லை. இப்போது வேறு கக்ஷிகள் மறைந்துவருவதாயிருப்பதால் நாம் எதிர்கக்ஷிஸ்தானத்தை அடைவது ஸுலபமாயும், விரும்பத்தக்கதாயுமிருக்கும். ஆனால் அந்த நிலைமை ஏற்படுவதற்கு ராஜீயக் கலப்பும் நமக்குச் சிறிது வேண்டியதவச்யம்

எப்படியும் தேசத்தில் ஆக்ஷிவிஷயமாக பெரிய மாறுதல் ஏற்பட்டு வருங்காலையில் கூட தார்மிகர்கள் தாக்ஷிண்யமாக ஒதுங்கிவிடாமல் தங்கள் பாத்யங்களைக் கண்டிப்பாக மதுரையில் வற்புறுத்தியது பெரிய விசேஷமேயாகும்.

பிராம்மணேதரர்கள் ஸநாதன தர்மத்தில் சிரத்தை யுள்ளவர்களாயினும் இதுவரையில் அவர்களை முன்னணியில் வைத்துப் பிரசாரம் நடந்ததில்லை. மதுரையானது இவ்வழியில் வர்ணாச்ரம தத்வத்தின் முக்கியமான அம்சத்தை வெளிக்குக் கொண்டுவந்து வழி காட்டியது மிகவும் பாராட்டத்தக்கது ஸ்ரீமான் கதிரேசன் செட்டியார் என்ற தார்மிகசிகாமணியை மஹாநாட்டுக்குத் தலைவராகத்தெரிந்தெடுத்த மதுரை தார்மிகர்களின் அரிய செயலை நாம் முற்றிலும் போற்றுகிறோம். அங்கு கூடியிருந்த அந்தண ச்ரேஷ்டர்கள், பண்டிதோத்தமர்கள் மத்தியில் ஸ்ரீமான் செட்டியார் தலைவராக அமர்ந்து ஸநாதந தர்மத்தை வெகு உறுதியாக ஆதரித்து கம்பீர கர்ஜனை செய்தது வெகு ஆச்சரியமாயிருந்தது. ஸ்ரீமான் செட்டியாரவர்களுடைய ஸநாதன தர்மச்ரத்தையும் உறுதியும் மற்றோரையும் விழிக்கச் செய்துவிட்டதென்பது மிகைச் சொல்லாகாது.

தலைவருடன் வந்திருந்த வேறு சில அப்பிராம்மண ஸஹோதரர்களும் ஆலயப்ரவேசத்தையும், தீண்டாமை விலக்கையும் ஆக்ஷேபித்து ஆவேசத்துடன் ஸபையில் பேசியது எல்லோருக்கும் மிக்க உத்ஸாகத்தை யூட்டியது.

ஸ்ரீமான் செட்டியாரவர்கள் தமது தலைமைப் பிரஸங்கத்தில் கூறியுள்ள ஒவ்வொரு விஷயமும் தீவிர ஸநாதனிகளின் கூற்றுக்கு மேற்பட்டதாகவே இருந்துவருகிறது. ஜாதி வியவஸ்தை, தீண்டாமை, ஆலயப்ரவேசம், காங்கிரஸ், ஆகிய தற்கால பிரச்னைகள் ஒவ்வொன்றையும் பற்றி கூறியுள்ளது 'பொன்னே' போல் போற்றத் தக்கதாம். இந்த வழியில் மதுரை மஹாநாட்டிற்கு மற்ற மகாநாடுகளைவிட விசேஷமதிகமென்பதில் ஐயமில்லை.

உபசாரனை ஸபைத் தலைவரான ஸ்ரீமான் விச்வநாதய்யர் பெரிய வக்கீலாக இருப்பதுடன் வடமொழியில் முக்கியமாக யோக, வேதாந்த நூல்களிலும் பெரிதும் பரிசயம் பெற்றவர். அத்தகையவர் தமது உபசாரனைப் பிரஸங்கத்தில் மிக கம்பீரமான கருத்துக்களடங்கிய விஷயங்களைப் பிரஸ்தாபித்திருப்பது அதிசயமல்ல. இத்தகைய பெரியார்யார் எல்லாரும் தார்மிக கோஷ்டியின் முன்னணியில் நிற்க முன்வந்திருப்பது தர்மதேவதையின் அதிருஷ்டகாலமென்றே நினைக்க வேண்டும்.

இச்சமயம் மதுரையில் பண்டித மகாசபை நடந்ததும் ஒரு விசேஷமேயாகும். சீர்திருத்தவாதிகள் சிலர் சேர்ந்து தங்களிஷ்டப்படி சாஸ்திரங்களுக்கு அர்த்தம் செய்து பெரிய குழப்பத்தைவிளைவிக்க யோஜித்துவருகையில் நம்மவர்கள் முன் ஜாக்ரதையுடன் காரியம் செய்ய முயற்சி எடுத்துக்கொண்டது மிகவும் பாராட்டத் தக்க விஷயம். இவ்விஷயமாக சிரத்தை எடுத்துக்கொண்ட தலைவர்களுடையவும் பண்டிதர்களுடையவும் சிரத்தையை நாம் மெச்சுகிறோம். பண்டித ஸபையில் சிறிது தாக்ஷிண்யத்திற்கு விட்டுக்கொடுக்கும் மனப்போக்குக் கொள்ளாமல் சாஸ்திரவிதிக்குக் கட்டுப்பட்டே பண்டிதர்கள் தங்கள் கடமையை நிறைவேற்றியது மிகக் கொண்டாடத் தக்கது.

இத்துடன் நமது பண்டிதர்கள் நின்றுவிடாமல் மதுரையில் நடந்த சர்ச்சைகளை ஆதாரமாகக்கொண்டு மேல் மேலும் விஷயங்களை விமர்சித்து பூர்வபக்ஷிகளின் ஆக்ஷேபத்தை நிரஸனம் செய்யக்கூடிய வழியில் நிர்ணயித்து ஸமீபத்தில் சென்னையில் நடக்கப்போவதாகச் சொல்லப்படும் சீர்திருத்த பரிஷத்தை தகர்க்க உபயோகமாகும்படி செய்துகொள்ளக் கோருகிறோம்.

யாஜுஷோபாகர்ம.

ஆவணி பூர்ணிமையில்தான் (21—8—37) செய்யவேண்டும்.

நாளது ஈச்வரஹுத்தில் யாஜுஷோபாகர்மானுஷ்டான விஷயத்தில் யாதொரு சர்ச்சையும் இல்லையென்று நினைத்திருந்தோம். இப்போது சிலர் புதுமாதிரியில் ஒரு சர்ச்சையைக் கிளப்பிக் குழப்பத்தை உண்டுபண்ணுவதாகத் தெரிகிறது. அதாவது:—

'ச்ராவண பூர்ணிமைக்கு இவ்வருஷத்தில் உதயகாலவ்யாப்தி இல்லாததால் இவ்வருஷத்திய உபாகர்மாவை யாஜுஷர்கள் ஆவணி மீ 6உ (21-8-37) செய்யக்கூடாது. புரட்டாசி மீ 4உ (20-9-37) பூர்ணிமை உதயகாலவ்யாப்தியுள்ளதாயிருப்பதால் அன்றையதினமதான் ஆபஸ்தம்பிகள் உபாகர்மம் செய்யவேண்டும்" என்று. இதுசரியானதல்ல.

ஆபஸ்தம்பிகளின் உபாகர்ம முக்யகாலமாகிய ச்ராவண பூர்ணிமைக்குச்சூர்யோதய காலவ்யாப்தி அவச்யமில்லை. ஸங்கவ ஸமாப்தி காலவ்யாப்தி மட்டிலும் இருக்கவேண்டியது அவச்யமாகும். ஆகவே ச்ராவண பூர்ணிமை எந்ததினம் ஸங்கவாந்த காலபர்யந்தம் இருக்கிறதோ, அன்றையதினத்தில் யாஜுஷர்கள் உபாகர்மம் செய்யவேண்டுமென்பது தான் தர்ம சாஸ்திர ஸித்தாந்தம். அப்படியே தான் சிஷ்டாசாரத்திலுமிருந்து வருகிறது. உபாகர்ம பிரகரணத்திலுள்ள "ஔதயிக" என்ற பதமானது பாரிபாஷிகபதமாகப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறதே யொழியலௌகிகபதமாகப்ரயோகிக்கப்படவில்லை என்பது.

श्रावणीपौर्णमासीतु संगवात्परतो यदि ।
तदेवौदयिकिग्राह्यानान्यदौ दयिकोभवेत् ॥

என்பதாதி வாக்யங்களால் தெரிகிறது. இதனாலேயே உதயகாலவ்யாப்தியை வெகு சிஷ்டர்கள் ப்ரதானமாக வைத்துக்கொள்ளாமல் ஸங்கவாந்த காலவ்யாப்தியை மட்டிலும் ப்ரதானமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கிரஹண ஸங்க்ராந்தி, மௌட்யாதி தோஷங்களில்லாதவரையிலும் ச்ராவணபூர்ணிமையை விட்டு விட்டு உதயகாலவ்யாபித்வமில்லை யென்ற அவச்யமில்லாத காரணத்தை அவலம்பித்து பாத்ரபத (புரட்டாசி) பூர்ணிமையில் அநுஷ்டானம் செய்வதோ, சாஸ்திர ஸம்ப்ரதாயங்களுக்கு ஒவ்வினதாக இல்லை. இதனாலேயே இப்பவும், கிரஹணாதி தோஷங்கள் நேர்ந்தாலும்,

पौर्णमासास्तु नित्यत्वादापस्तंबस्य शाखिनात् ।
मुक्त्वा भाद्रपदापाठौ श्रावण्यामेव कारयेत् ॥

என்ற வசனத்தை யவலம்பித்து ஸமத்தோக்தகாலத்திலேயே சாந்திபூர்வமாக வெகுபேர்கள் செய்துவரும்போது உதயகாலவ்யாபித்வம் இல்லை என்று புரட்டாசிமீ பூர்ணிமையில்செய்யவேண்டுமென்று புதுக்கிளர்ச்சிக்கு சிறிதும் அவகாசமில்லை.

ஆதலால், ப்ரதமோபாகர்மாவோ, த்விதீயோபாகர்மாவோ, எல்லாவற்றையும் இவ்வருஷத்தில் ச்ராவண பூர்ணிமையில் (21-8-37)தான் செய்யவேண்டும்- என்பது எங்களது அபிப்ராயமாகும் என்பதை இதன் மூலம்தெரிவித்துக்கொள்கிறோம்-

ஆத்மவித்யாபூஷணம்
பண்டிட் ஜகதீச்வர சாஸ்திரிகள்.

487

யாஜுஷ உபாகர்ம

ஸ்ரீமான் கடையம் நடேச சாஸ்திரிகளால் கிளப்பப்பட்டுள்ள புதிய குழப்பத்திற்கு பிரம்மஸ்ரீ ஜகதீச்வரசாஸ்திரிகள் அளித்துள்ள மேற்கண்ட சாஸ்திரீயமானபதிலைநாமும்ஆதரிக்கிறோம். அதை அநுஸரித்து இன்னும் சில விவரங்களை இங்கு வெளியிட விரும்புகிறோம். ஸ்ரீமான் நடேசசாஸ்திரிகள் கிளப்பியுள்ள ஆக்ஷேபம் இதுவரையில் தர்மசாஸ்திர உலகத்தில் தோன்றியதேயில்லை. சென்ற ஆறுவர்ஷங்களுக்குள் இவ்வருஷம்போல் பலதடவைகளில் நேர்ந்திருந்தும் இவர் சொல்லுவதைப்போல் ஒருவரும் ஆசரிக்கவில்லை. ஸ்ரீமான் சாஸ்திரியாரே தாம் இப்போது சொல்லுகிறபடி முன்பு ஆசரித்திருக்கிறாரா? இவர் சொல்லும் கக்ஷியை அநேக சிஷ்டர்கள் இதுவரையில் கவனிக்காமல் ஏமாந்துவிட்டார்களா? தீக்ஷிதீய கிரந்த தத்வத்தையறிந்த பல சிஷ்டர்கள் இருந்தும் இவர் சொல்லும் கக்ஷியை அவர்கள் இதுவரையில் ஆசரிக்காததாலேயே இவர் அக்கிரந்தத்திற்குச் சொல்லும் அர்த்தம் முன்னோர்களால் ஒப்பப்படாததென்பது நன்கு விளங்குகிறது.

யாஜுஷர்களுக்கு சிராவண பௌர்ணமி நித்யமான காலமாகும். அதற்கு கிரஹண ஸங்கிரமணாதி தோஷங்கள் இருந்தால் முதல் உபாகர்மாவைமட்டும் அடுத்தமாதத்தில் செய்ய விதியுள்ளது. த்விதீயாதி உபாகர்மாவுக்கு எவ்வித தோஷமும் இல்லையாகையால் சிராவணியிலேயே செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டுள்ளது. ஆதலால் சிராவண பௌர்ணமியைத் தாண்டுவதற்கு இவர் பிரபலமான சாஸ்திரீயமான தோஷத்தைக் காட்டாதவரையில் பிரயோஜனப்படாது.

मलमासे निपतिते सूतके मृतके पिवा ।
"श्रावणं दूषितं यदि ।"
"दुष्टायां पूर्वपूर्वस्या मुत्तरस्यां विधीयते ॥"

இத்யாதிகளான பல வசனங்களால் சிராவணிக்கு சாஸ்திர உக்தமான மலமாஸாதி தோஷமிருந்தால் தான் அடுத்தமாஸத்திற்குப் போக முடியுமென்பது தெளிவு.

இப்போது ஸ்ரீமான் சாஸ்திரியார் சிராவண மாதத்திற்கு என்ன தோஷம் சொல்லுகிறார்? இதுதான் இங்கு முக்யம். இவருடைய ஸஞ்சிகையில் இந்த முக்யவிஷயத்தில் வழுவழுவென்று விட்டுவிட்டு மேலே போய் விட்டார். தீக்ஷிதர் 'உதயாதித்வாதசகடிகாதிக' என்று சொல்லுவதாலேயே தோஷமும் ஆக்ஷேபஸித்தமென்று மெதுவாகச் சொல்லி விட்டுப் போய்விட்டார். ரிக்வேதிகள் விஷயமான சதுர்தசிவேதத்தை யாஜுஷ விஷயத்தில் தீக்ஷிதாதிகள் எங்கேயாவது உண்டென்று சொல்லியிருக்கிறார்களா வென்பது முக்யம். மேலும்

पर्वण्यौदयिकेकुर्युः । संधिः सङ्गवतः ॥

இத்யாதி வசனங்கள் பூர்வோத்திர தினங்களில் பௌர்ணமி வியாபித்திருந்தால் எந்த தினத்தில் உபாகர்மாவைச் செய்வது என்பதை நிஷ்கர்ஷிக்க வந்தவை. இவ்விஷயத்தில், எந்த தினத்தில் 12 நாழிகைக்கு மேல் பௌர்ணமியிருக்கிறதோ அன்றுதான் உபாகர்மா செய்யவேண்டுமென்பது ஸகல சாஸ்திர நிர்ணயமாயிருக்கிறது. இதில் ஸங்கவத்திற்குமேல் பௌர்ணமி இருக்கிறதா வென்பது முக்யமே தவிர அதற்குக் கீழ் பௌர்ணமி எப்போது வந்தது, எவ்வளவு நாழிகை இருக்கவேணும் என்றவை அவிவக்ஷிதங்களே. ஆதலால் எந்ததினத்தில் ஸங்கவத்திற்குமேல் பௌணர்மி இருக்கிறதோ அன்று தான் உபாகர்மாவென்பது நிச்சயமாக தீக்ஷிதீயத்தால் ஏற்படுகிறது. இதைத்தான்

संधिस्संगवतः ।

இத்யாதி வசனங்களும் நிர்ணயித்துக்கொடுக்கின்றன. ஔதயிகம் என்பதின் அர்த்தத்தை யௌகிகமாக ஒப்புக்கொண்டால் பாதகம் வருமென்று எண்ணியே

घटीपरिमितः कालः । तदेवौदयिकग्राह्यं नान्यदौ दयिकंभवेत् ॥

என்பனபோன்ற வசனங்களால் ஸங்கவத்திற்குமேல் வியாப்தியுள்ள பௌர்ணமிக்கு ஔதயிகமென்று பரிபாஷை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆதலால்காலைவேளையில் பௌர்ணமிஎப்படியிருந்தபோதிலும் அதைப்பார்க்காமல் ஸங்கவத்திற்குமேல் இருக்கிறதாவென்று பார்க்கவேண்டியதே மேற்கண்ட சாஸ்திரங்களின் தாத்பர்யமாக நிச்சயிக்கப்படுகிறது. இந்த கண்ட திதி விஷயத்தில்

संधिस्संगवतः

என்ற வசனமே முக்ய நிர்ணயக வசனமாகும். அதை அநுஸரித்தே

पर्वण्यौदयिके

முதலானவை அர்த்தம் செய்யப்படவேண்டும், அந்த

संधिस्संगवतः

என்ற பிரதான வசனத்தில் ஸங்கவாந்த வியாப்தியே விதிக்கப்படுகிறதேயல்லது உதய வியாப்தியைப்பற்றிப் பேச்சேயில்லை. ஆதலால் தான் தீக்ஷிதீயத்தில்

पर्वण्यैदयिके । संधिः संगवतः ।

முதலிய வசனங்களைச் சேர்த்து எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ஸங்கவாந்த வியாப்தி முக்யமேயல்லது அதற்குக்கீழ் எப்படியிருந்தாலும் கவனிக்கவேண்டியதில்லை.

ஸ்ரீமான் சாஸ்திரியார் குல்லாய்க்குத் தகுந்தபடி தலைசெய்ய முயற்சிக்கிறார். அதாவது வசனங்கள்யாவும் ஸங்கவாந்த வியாப்த பௌர்ணிமையை முக்கியமாகச் சொல்லுகையில் தீக்ஷிதீயத்தில் காணப்படும்

तदेवमुदयादि द्वादशघटिकाधिक किञ्चित् कालव्यापिन्यां ॥

என்ற தீக்ஷிதவாக்கியம் ஒன்றுதான் இவருக்குப் பிரபல பிரமாணமாகியிருக்கிறது. தீக்ஷிதருடைய இந்த வாக்கியத்தை வைத்துக்கொண்டு அதற்கு அநுகுணமாக சாஸ்திரங்களையும் நியாயங்களையுமிவர் மாற்றப் பார்ப்பது உசிதமாயில்லை. இந்த வாக்கியத்திற்கு இதர வசனங்களோடு விரோதம் வாராமல் அர்த்தம் செய்யவேண்டியதே ஆஸ்திகர் கடமையாகுமேயல்லாது இந்த ஒரு வாக்கியத்திற்காக எல்லாசாஸ்திரங்களையும் மாற்ற முடியாது. இத்தீக்ஷித வாக்யத்தில் "உதயாதி" என்ற பதம் காணப்படுவதே இவருக்குப் பெரிய பிரமாணமாயிருக்கிறது. இங்கு 'உதயாதி' என்பது பிராயிகமாக ஸம்பவாபிப்பிராயேண சேர்க்கப்பட்டிருக்கலாம்.

தவிரவும், கீழேயுள்ள

संगवात्परतोयदि

என்பதிலுள்ள ஸங்கவபதத்திற்கு வியாக்யான ரூபமாகவே "உதயாதித்வாசகடிக" என்ற வாக்கியம் எழுதப்பட்டிருக்கிறதாகவும் நினைக்க இடமிருக்கிறது. ஸங்கவமென்பது உதயாதி 12 நாழிகை உள்ளதென்பதை விளக்கி அந்த 12 நாழிகைக்குமேற்பட்டு பௌர்ணிமை இருக்கவேண்டுமென்று இங்கு சொல்லுவதாக ஆகிறதேயல்லாது, பௌர்ணிமை உதயத்தில் இருக்கவேண்டுமென்ற அர்த்தம் சொல்லவேண்டிய நிர்பந்தமில்லை. அதாவது ஸங்கவசப்த வாச்யமான உதயாதித்வாசகடிகா ரூபகாலத்திற்கு மேல் கொஞ்சநாழி அதிகமுள்ள, என்ற அர்த்தமே இங்கு ஸ்வரஸமாயுள்ளது. ஆதலால் உதயாதி த்வாதகடிகா என்றவரையில் சங்கவசப்தார்த்த விவரணமே இங்கு செய்யப்படுகிறதேயல்லது பௌர்ணிமையில் உதய ஸம்பந்தத்தைப்பற்றிப் பேச்சே இல்லையென்று தோன்றுகிறது.

இவர் சொல்லும் அர்த்தப்படி உதயம் முதல் ஸங்கவம் வரையில் வியாப்தியுள்ள என்ற அர்த்தம் செய்தால் அந்தமாதிரியுள்ள பௌணர்மியிலேயே செய்யவேண்டிவரும். உதயத்திற்கு முந்தியிலிருந்து பௌர்ணமி ஸம்பந்தம் இருந்துவந்தால் அதை கிரஹிப்பதா தள்ளுவதா? தீக்ஷித வாக்யத்தில் உதயம் முதல் வியாப்தியுள்ளதே பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதால் அதற்கு முன்னிருந்தே பௌர்ணமி தொடர்ந்துவந்திருந்தாலும் பிரயோஜனமில்லையென்று ஆகிவிடுமல்லவா?

ஆதலால் உதயவியாப்தியைக்கவனிக்காமல் எந்த தினத்தில் ஸங்கவாந்த வியாப்தியுள்ளதோ, அன்றுதான் யாஜுஷ சிராவணத்திற்கு முக்யகாலம். ஸங்கவத்திற்குத் கீழ் பௌர்ணமி இருக்கிறதா இல்லையா இத்யாதிகள் அவிவக்ஷிதங்கள். இவ்விஷயமாக இன்னும் சொல்லவேண்டிய பல விஷயங்களை பின்னொரு ஸமயம் விவரிப்போம்.

ஆதலால் ஆவணி-மீ 6உ சனிக்கிழமையே உபாகர்ம செய்யவேண்டும்.

கோபாலதேசிகாசாரியர்.

ஸ்ரீமான் பிரஸன்ன வெங்கடேச்வர ராவ் அவர்களின் தர்ம சிரத்தை.

இந்தப் பெரிய தார்மிகரைப்பற்றி பலர் அறிந்திருக்கலாம். ஸ்ரீரங்கத்தில்வஸித்துவரும் பெரிய தனிகர். மஹா தார்மிகர். பரமஸாத்விகர். இப்பெரியார் ஸநாதநதர்மப்பிரசாரக்கிளர்ச்சியில் மிகவும் ஈடுபட்டுஅதற்கு வேண்டிய உதவிகளும் செய்து வருகிறார். மதுரையில் நடந்த மஹாநாடுக்கும் பரிஷத்திற்கும் இவர் விஜயம் செய்து மூன்று நாள் இடைவிடாமல் நடவடிக்கைகளில் கலந்துவந்தார்.

திருவாங்கூர் ஆலயப்பிரவேச விளம்பரத்தைக் கண்டித்துவந்த தீர்மானத்தை இவர் பிரேரேபித்து வெகு அழுத்தமாக அந்த விளம்பரத்தை ஆக்ஷேபித்துப் பேசினார்.

ஸநாதனதர்மப் பிரசார [illegible] ஒருதிட்டம் போட்[illegible]தாயும் பிரம்மஸ்ரீ நடேசய்யர[illegible]களுடன் கலந்து திருச்சி ஜில்லா[illegible] கிராமந்தரங்களில் 6மாஸத்திற்கு பிரசாரம் செய்வதற்கு ஆகவேண்டிய செலவுகளைத் தாம் ஏகதேசத்தில் ஏற்றுக்கொள்ள முடிவு செய்திருப்பதாயும், ஒரு பண்டிதருக்கு மாஸச்சம்பளமும் அவருடன் கூடப்போகும் ஒரு லௌகிக கனவானுக்கு வேண்டிய பிரயாணச் செலவும் கொடுக்க நிச்சயித்திருப்பதாயும் நமது தலைவர் ஸ்ரீநடேசய்யர் யோஜனைப்படி பிரசாரம் சீக்கிரத்தில் ஆரம்பமாகுமென்றும் பலத்த கரகோஷத்தினிடையே அவர் தெரிவித்தார். இதைக்கேட்டு ஸபையோர் மிகுந்த குதூஹலமடைந்தார்கள். 6மாதம் பரீக்ஷை செய்தபிறகு மேற்கொண்டும் உதவி செய்வதாக அவர் தெரிவித்திருக்கிறார். இந்த ஆஸ்திக சிகாமணி நீடூழி வாழ்க!

ஒரு நிருபர்.

ஸ்ரீஜகத்குரு
வியாஸபூஜா முகாம்

Palokol
(க்ஷீராராம் க்ஷேத்திரம்.)
West Godavary Dt.

மதுரை பண்டித மஹாஸபை.

(5ம் பக்கத்தொடர்ச்சி.)

எதிர்கக்ஷியார் வரவில்லை.

சென்னையில் ஆசாரத்திருத்தக்காரர்களால் ஒரு பரிஷத் நடத்த யோஜிக்கப்பட்டுவருவது தெரிந்த விஷயமே. அந்த பரிஷத்தை நடத்த முன்வந்திருப்பவர்களுக்கும் மதுரை பரிஷத்திற்கு வரும்படி அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. அவர்களும் வருவார்களென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஒருவரும் மதுரைக்கு வரவில்லை.

ஆயினும் ஸர். பி. எஸ் சிவஸ்வாமியய்யர் முதலியவர்களின் கையெழுத்து இட்டு ஒரு கடிதம் மதுரை பரிஷத்திற்கு வந்திருந்தது. அக்கடிதத்தில் அவர்கள் சண்டாள ஜாதிகளுக்கு ஆலயப்பிரவேசம் ஏன் கொடுக்கக்கூடாதென்றும், மதாந்திரத்தில் புகுந்து பிரஷ்டர்களானவர்களை மீண்டும் சேர்த்துக்கொள்ளும் விஷயத்தில் பரிஷத்தின் அபிப்பிராயமென்னவென்றும், ஸம்ஸ்காரங்களில் எவை, முக்யம் எவை அநாவச்யகமென்றும் சில கேள்விகளை அனுப்பியிருந்தார்கள். அக்கேள்விகளுக்குப் பதில்சொல்லும் வகையில் பண்டித ஸபை சர்ச்சைகளும் தீர்மானங்களும் செய்தது.

முதலில் தீண்டாதார் ஆலயப்பிரவேசத்தைப்பற்றி சர்ச்சை ஆரம்பமாகியது. ஸநாதனதர்மஸபை உபசாரணைக் கமிட்டித்தலைவரும், நல்ல படிப்பாளியுமான ஸ்ரீமான் விச்வநாத அய்யரவர்கள் தாம்பூர்வபக்ஷத்தை வெளியிடுவதாக முன்வந்து, சண்டாளஜாதியே சாஸ்திரப்படி கிடையாதென்றும் சாஸ்திரப்படி கூறப்படும் சண்டாளஜாதியின் லக்ஷணத்தைப் பார்த்தால் அது பிராம்மண ஜாதிக்கு அவமானமாயிருப்பதாயும் 7கோடி சண்டாளர்கள் பிராம்மண ஸ்திரீகளுக்குப் பிறந்ததாக ஒப்புவது விகாரமென்றும் இப்போது காணப்படுகிறவர்கள்தான் சண்டாளரென்கிற நிச்சயம் ஏற்பட வழியில்லையென்றும், அவர்கள் ஆலயம் செல்வதால், பரிசுத்தனான பகவானுக்குக் குறைவு ஏற்படாதென்றும் வாதித்தார்.

இதற்குப் பதில் சொல்லுகையில் பரிஷத் அக்ராஸனாதிபதி ஸ்ரீ கோபாலதேசிகாசாரியர் இரண்டு விஷயங்களுக்கு முக்கியமாகப் பதில் சொன்னார்.

7 கோடி தீண்டாதார்களும் நேரிட பிராம்மணஸ்திரீகளுக்குப்பிறந்தவர்களாக நினைத்துப் [illegible] கருதியல்லவென்றும் யாராவது ஒரு ஸ்திரீ [illegible] கைக்கொண்டு கோடிக் கணக்கான சண்டாளர்கள் பரம்பரையாக விருத்தியாகி யிருக்கலாமென்றும் வேதங்களிலேயே, பிறப்பினால் ஒருவித சண்டாள ஜாதியிருப்பதாக நிச்சயிக்கப்பட்டிருக்கிறதென்றும், இப்போது காணப்படுகிறவர்கள்தான் சண்டாளர் என்பதற்கு பரம்பரை பரம்பரையாக அநாதியாக வந்துகொண்டிருக்கும் வியவஹாரமே பிரமாணமென்றும்,எல்லா ஜாதியாருக்கும் இந்த பரம்பரை வியவஹாரம்தான் கதியென்றும், புஸ்தகங்களிலிருந்து ஜாதிகளின் பெயரை அறியலாமேயன்றி அந்த ஜாதியை நேரிட அறிவதற்கு ஆப்த வியவஹாரமே பிரதானமென்றும், கதலீ என்பதற்கு வாழை என்ற அர்த்தமட்டும் புஸ்தகத்தால் தெரியுமேயல்லது, வாழை எது என்பதற்கு பரம்பரையாக வரும் லோக வியவஹாரமே கதியேயல்லது வேறில்லையென்றும், அதுபோல் சண்டாளஜாதி எது என்பது லோக வியவஹாரத்தால் இந்தியா முழுவதும் நிச்சயப்பட்டு நிற்பதாயும், அந்த ஜாதியாரே தங்களை அந்தமாதிரி நிராக்ஷேபமாக அங்கீகரித்து நிற்பதாயும், இது முக்யமாக கவனிக்கத்தக்கதென்றும் கூறினார்.

பிறகு தேதியூர் பிரம்மஸ்ரீ ஸுப்ரமண்ய சாஸ்திரிகளும் வெகு விரிவான பதில் கூறி பல யுக்தி நியாயங்களைக்காட்டி சண்டாள ஜாதி உண்டென்று ஸ்தாபித்தார். முக்யமாக உபநிஷத்தில் சண்டாள சப்தமிருப்பதை விளக்கிக் காட்டினார்.

இதன் பிறகு, சண்டாள சாதியொன்று பரம்பரையாக உண்டென்றும், தீண்டாமை என்பதும் சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறதென்றும், அந்த ஜாதியார் தேவாலயம் புகுவதால் ஸாந்நித்யம் கெடுமென்று சாஸ்திரம் நிச்சயமாகச் சொல்லுவதாயும் பரிஷத்தின் தீர்மானம் வெளியிடப்பட்டது.

இதன் பிறகு ருதுமதீ விவாஹத்தைப்பற்றிய சர்ச்சை ஆரம்பித்து அக்நிஹோத்ரம் ராமாநுஜதாதாசாரியர் இது விஷயமாகப் பூர்வ பக்ஷிகளின் கருத்தை நன்கு வெளியிட்டு வேதமந்திரலிங்கத்தாலோ ஸ்மிருதி விதிகளாலோ, ஸமாவேசன விதியாலோ ருதுமதீ விவாஹம் ஸித்திக்கவில்லையென்றும் நிரூபணம் செய்தார். இதையே ஸபையோர் அங்கீகரித்து இது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

பிறகு விதவா விவாஹம், விவாஹரத்து ஆகிய விஷயங்களைப்பற்றி சர்ச்சை தொடங்கியது. பலகொல்லு உமாமஹேச்வர சாஸ்திரிகள் மேற்படி இரண்டு விஷயங்களும் நம் சாஸ்திரப்படி மிகவும் அதர்மமென்று அநேக பிரமாணங்களும் ஆராய்ச்சியும் ஸத்தர்க்கமும் நிறைந்த அருமையான நிரூபணத்தால் வெளியிட்டார்.

இச்சமயம் நாரதஸ்ம்ருதியில் காணப்படும் இரண்டு வசனங்கள் விதவாவிவாஹத்திற்கு அநுகூலமாயிருக்கிறதாக சொல்லப்பட்ட கக்ஷியை பிரம்மஸ்ரீ தேதியூர் சுப்பிரமண்ய சாஸ்திரிகள் கண்டித்து அவைகளின் உண்மையான அர்த்தத்தை வெளியிட்டார். அந்த சுலோகத்தின்படி, தேசாந்திரம் போய்விட்ட பர்த்தாவிற்குப் பதிலாக வேறு கல்யாணம் அந்த ஸ்திரீ செய்துகொள்ளலாமென்று அதற்குப் பொருள் கூறக்கூடாதென்றும், வேறு ஒரு ரக்ஷகனை அடைந்து அவன் கீழ் வாழ்ந்து வரவேண்டுமென்றே அர்த்தமேற்படுகிறதென்றும் பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் விவரித்தார். இதை பண்டிதர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஸ்ரீமான் உமாமகேச்வரசாஸ்திரிகளும் இதைப்பற்றிப்பேசி மேற்படி சுலோகம் யுகாந்திரங்களிலிருந்த 'பௌனர் பவன்' என்றவன் விஷயமென்றும் இந்த யுகத்திற்கு இது நிஷித்தமென்றும் சொன்னார். பிறகு விதவா விவாஹமும், விவாஹரத்தும் அசாஸ்திரீயமென்று ஏகமனதாகத்தீர்மானிக்கப்பட்டது.

பிறகு ஸம்ஸ்காரங்களில் எது முக்யம், எது முக்யமில்லை என்ற விஷயமாக திருவையாறு பிரம்மஸ்ரீ விச்வநாத சாஸ்திரிகள் சுருக்கமாயும், தெளிவாயும் விஷயங்களைக்கூறி நம் சாஸ்திரங்களில் எல்லா ஸம்ஸ்காரங்களும் நித்யமாகவே தெரிகின்றனவென்றும், அவைகளை மாற்றிப்பேச ஒரு வைதிகனும் துணிவுகொள்ளமாட்டானென்றும், இந்த விசாரமே அநாவச்யகமென்றும் பிரயோஜனமற்றதென்றும் கூறினார். அதன்படி அந்த விவாதம் கைவிடப்பட்டது.

பிறகு ஒருநாள் விவாஹம், மதம் மாறியவர்களை மீட்பது ஆகிய இரண்டு விஷயமாகவும் பண்டிதர்கள் இன்னும் க்ரந்தங்களைப் பார்க்கவும், இதர பண்டிதர்களுடைய அபிப்பிராயத்தை அறியும் பொருட்டு ஒதுக்கி வைக்கப்பட்டு, குடந்தையில் நடக்கப்போகும் பரிஷத்தில் விவாதிக்கப்படவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

இத்துடன் பரிஷத்தின் வேலைகள் இரவு 9 மணிக்குப் பூர்த்தியடைந்ததும் அக்ராஸநாதிபதி சுருக்கமான முடிவுரை கூறுகையில், பண்டிதர்கள் ஆங்காங்கு இவ்வித சர்ச்சைகளை அடிக்கடி நடத்தியும் புஸ்தகங்களைப் பார்த்தும், எதிரிகள் புதிது புதிதாகக் கிளம்பும் எந்தக் கக்ஷியையும் தகர்க்கத் தயாராக இருக்கவேண்டுமென்றும், அபூர்வமாயும் கடினமாயும், பலத்த விவாதத்திற்கு இடமாயுமுள்ள பெரிய விஷயங்கள்கூட இந்த பரிஷத்தில் வெகு அமைதியாயும், ஒற்றுமையாயும் விசாரித்துத் தீர்மானிக்கப்பட்டதைப்பற்றி ஸந்தோஷப்படவேண்டுமென்றும், தம்முடன் பண்டிதர்கள் ஒற்றுமைகாட்டி கௌரவப்படுத்தியதற்கு நன்றி செலுத்துவதாயும் கூறினார். பிறகு பிரம்மஸ்ரீ தேதியூர் ஸுப்பிரமண்ய சாஸ்திரிகள் அவர்களால் இரண்டு அக்கிராஸநாதிபதிகளுக்கும் உபசார வார்த்தைகள் கூறப்பட்டு 9-மணிக்கு ஸபை பூர்த்தியாகியது.

கொச்சி மஹாராஜாவிடம் தூது.

அகில இந்திய வர்ணாச்ரமதர்ம ஸ்வராஜ்ய ஸங்கத்தால் ஏற்பாடு பண்ணப்பட்ட ஸநாதனர்கள் கோஷ்டியார் நாளது ஆகஸ்டு 30௳ காலை 11மணிக்கு கொச்சி திவானையும் மாலை 3மணிக்கு மஹாராஜாவையும் பேட்டிகண்டு, ஆலயப்ரவேசம் முதலிய தர்மவிஷயங்களைப் பற்றி தெரிவித்துக்கொள்ளுவார்கள். காசி பண்டிட் கேவநாயகாசாரியர், பம்பாய் ஸ்ரீ ராமபதி மிச்ரா வங்காளத்திலிருந்து பிரின்ஸ் பால் ஸ்ரீஜிவந்யாயதீர்த்தர், கோயம்புத்தூர் ஸ்ரீசங்கரநாராயணய்யர், மதுரை ஸ்ரீராமய்யங்கார், ராவ்சாகிப் என். நடேசய்யர் கும்பகோணம் பென்ஷன் இன்கம்டாக்ஸ் ஆபீஸர் ஸ்ரீ பெ. சிவராமய்யர் முதலியவர்கள் இக்கோஷ்டியில் அடங்கியுள்ளார்கள். கொல்லங்கோட்டு மகாராஜா முதலிய சில ப்ரமுகர்களும் சேருவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த Deputation விஷயமாய் தஞ்சாவூர் ஜில்லா பிராமண மஹாசபை செக்ரடரியும், சென்னை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் Tanjore Circle Organising Secretary யாகிய கும்பகோணம் ரிடயர்ட் இஞ்சினியர் ஸ்வாமிநாத சாஸ்திரியவர்கள் Deputation Secretary யாகவும் வேண்டிய விஷயங்களை கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

வி. கே. ராமாநுஜாச்சாரியாரின் நிலவரிக்கொள்கை.

மிராசுதார்களுக்குப் பிரதிகூலம்.

ஸ்ரீமான் வி. கே. ராமாநுஜாசாரியார் காங்கிரஸில் சேர்ந்த பிறகு சில அபிப்பிராயங்களை பத்திரிகைகளில் வெளியிட்டு வருகிறார். நிலவரி விஷயமாக அவர் வெளியிட்டுள்ள அபிப்பிராயம் அபேதவாதக் கொள்கையை வற்புறுத்துவதாயிருக்கிறது. ஜமீன்தாரி முறையை ஒழித்துவிட வேண்டுமென்று அவர் சொல்லுவதுடன் நிற்காமல் ரயித்வாரி நிலச்சுவான்தார் முறையும் ஜமீன்தாரி முறைக்கு ஸமமாக இருப்பதாயும், இவர்களைக் காலக்கிரமத்தில் ஒழித்துக் குடியானவர்களுக்கு நன்மை செய்வதே அவச்யமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

கல்வி விஷயமாக அவர் கூறியுள்ள யோஜனையில் கிராமப் பஞ்சாயத்தார் வசத்தில் ஆரம்ப பள்ளிக்கூட நிர்வாஹத்தை விட்டுவிடவேணுமென்றும், ஆண், பெண், யாவரும் கட்டாயப்படிப்பு சட்டமூலமாக பள்ளிக்கூடங்களில் சேர்ந்து படிக்கும்படி செய்யவேண்டுமென்றும், தீண்டாதார் பிள்ளைகளும் அந்தப் பள்ளிக்கூடங்களில் கட்டாயமாகப் படிக்கவேண்டுமென்று சட்டம் ஏற்படுத்தினால் தீண்டாமை போன்ற பிரச்னைகளே அடங்கிவிடுமென்றும் கூறியிருக்கிறார்.

இதைப்பலரும் ஊன்றிப் படித்துப்பார்க்க வேணும். ஏற்கனவே ஸ்ரீமான் ஆசாரியர் எழுதியுள்ள "நிலவரி நிர்ணயம்" என்ற புத்தகத்திற்கு, இது முற்றிலும் விரோதமாக இருக்கிறது கவனிக்கத்தக்கது. ஒரு மிராசுதார்.

Madura Sri Varnashrama Swarajya Sangha.

4th Annual Conference.

Reception Address by
M.R.Ry N. S. Viswanatha Iyer, Avl, B.A.,B.L.,
Advocate, Madura.

The fourth Annual Conference of the Madura Varnashrama Swarajya Sangha was held on the 13th, 14th, 15th August, 1937, at Sangha premises, Madura. The following Reception Address was delivered by M. R. Ry. N. S. Viswanatha Iyer, Avl., Advocate, Madura.

May I thank you for the response you have shown in attending this Conference. Your enthusiasm and response are adequate proof that there is need for an organisation of this kind for preservation and propagation of "Sanathana Dharma".

It might seem surprising to some that I should be entrusted with the task of being the Chairman of the Reception Committee and making a pronouncement in that capacity, as there are apprehensions, not without reasonable cause, that my views on 'Sanathana Dharma', are not in all their exactness and thoroughness identical with the views of many in the camp. But it was a generous act of liberal and far-seeing vision that our esteemed friend Rao Saheb N. Natesier could and did discover the usefulness of colleagues like myself that might in non-essentials differ but agree in fundamentals and make 'Sanathana Dharma' not only possible of preservation but also of active propagation.

A question is frequently asked what is "Sanathana Dharma" and it is formulated as a grievance that Sanatanis do not make themselves intelligible in their elucidation of the principles and practice of "Sanathana Dharma". An attempt at definition is bound to be elusive and it has to be admitted that there are any number of "catch expressions" good enough to be used in every-day working life, but eluding tight definition in every department of knowledge. Lawyer-friends are familiar with the oftquoted expression "Equity, Justice and Good Conscience' and none of them is prepared to furnish quite a clear and accurate definition of these words covering their full import. Liberty, Equality and Fraternity are again catchwords that have their efficacy as inspiring slogans but still do not permit of exact and accurate definition. Though Sanathanis might well plead the inherent difficulty of defining "Sanathana Dharma", an easy good enough definition is available in the words of the Lord - that the eternal Dharma is what makes possible the functioning of the world with maximum benefit and minimum injury to the constituents thereof. In other words "Loka Sangraha" or a scheme of life—individual and corporate—wherein there is full self-expression in due reconciliation with the life of the "Group" is what is sought by 'Sanathana Dharma'. This obviously involves the following prepositions.

(1) The Universe is the manifestation of the Lord.

ईशावास्यमिदं जगत्

(2) The component parts thereof are strung together in the Lord just in the same way as beads or rosaries in the thread that passes through- मत्तः परतरं नान्यत् etc.

(3) Each component part has a *function* distinct for itself and another as one of the Group. In other words, Self-determination and self-adjustment are the essential characteristics of a living organism. The crisp form in which this finds formulation in modern thought is the language of the modern cooperator — "Each for all and all for each".

4. Where 'the all' kills the individual units and their distinct functionings, it may be one man's will that does it as in Fascist Italy or Hitlerian Germany or the will of the entire community that represses individual growth as in Soviet Russia.

Where the units repress the group, there is the caprice of the capitalist and capitalist civilization. Human civilization is but an expression of this great conflict between the Individual and the 'Group' or rather the attempt to resolve this apparent conflict into a healthy reconciliation and dynamic fulfilment. In vedantic philosophy this conflict is described as between *Prarabdha* and *Paureshaya*, in metaphysics the conflict is as between "Free Will and Necessity," in Jurisprudence between 'Contract' and 'Status.'

In this great country, this reconciliation of the conflict was achieved by presenting the case of man as the case of one in quest of 'The Infinite', and integrating his acts in terms of 'The Infinite' and 'the Universal'. This obviously needs that the environments should be free from competitive struggle for bare existence, and should facilitate the pursuit aforesaid. Occupation was made available in the Varna with absolutely no struggle and that was formulated as 'Service to the Lord' and means of merger in Him. ब्रह्मकर्म समाधि·

This approach *necessarily entailed* the training of the Individual for the occupation from his very birth, regulation thereof, and retirement therefrom etc. In other words, Varna from a group stand-point and Ashrama from the Individual standpoint are but aspects of one and the same approach.

'This Grand Cooperative enterprise' is what is known as 'Varnashrama' and in spite of scoffers and sceptics, has to its credit achievements glorious and unique with which I shall deal shortly.

(a) The statement of the grand Genesis of creation from the 'Unmanifest' to 'the Manifest' from 'the One' to 'the Many' as revealed in the Vedas, is Sanatanic achievement.

(b) The application of the law of the Vedas to the extent sufficient for Humanity both from 'Individual' and 'Group standpoint' as formulated in Manu and his successors is again a Sanatanic achievement. The purpose of the Law given is obvious from the introductory words" आसीत् इदं तमोभूतं अप्रज्ञातं etc" and that is to help us in passing from 'Darkness' into 'Light' from 'Ignorance' into 'Knowledge' from undefined nebulous homogeneity to clear well-defined heterogenity' etc.

(c) Achievements of the great Sri Rama that have gathered a perennial dynamism *in the* words "Rama Rajya-the Ideal State" and those of Seetha who found the world but quintessence of Dharma (धर्मसारमिदंजगत्) are Sanatanic achievements.

(d) Later achievements of heroes like Bhishma, and heroines like Kunte praying not for glory or wealth or power but for difficulties and dangers that the presence of 'the Lord' be available, in the words "विपदः सन्तुनः शश्वत" etc are Sanatanic achievements.

(e) Later day politics of Kautilya, Sukra and the republics of Taksha Sila(Taxila) are all Sanatanic achievements.

(f) The accomodation and shelter given to alien religionists like the Parsis and the facilities given to them for healthy expansion and growth are Sanatanic achievements.

The outstanding fact remains that Christendom cannot accomodate a non-christian or his shrine or worship in spite of "The Father's house' in heaven having many mansions.

(g) The Empire of 'Vijianayagar' that has arrested the attention of medieval travellers and is mainly responsible for South Indian culture and corporate institutions owed its development to the great Advaitic Sanatanic ascetic Sri Vidyaranya.

(h) The great Maharatta history from Sivaji to Nana Saheb with the achievements of the Peshwas is but the history of Sanathana Realists.

(i) Our own beautiful city-Madura-is today what it is because of Thirumala the great and his illustrious minister Nilakanta Dikshitar, poet, philosopher, critic, administrator and ascetic.

j) The holy waters from the Himalayas to Comarin, the numerous shrines, the Melas, the festivals, the hoary chants and the thousand and one forms of worship and devotion are but evidence of Sanatanic unity.

(k) More than all, the deepest and subtlest exploring of 'Consciousness and its infinte ramifications', the enunciation of the Higher laws pertaining to acquisition of Siddhis with powers to hear all sounds from any distance and to see all things from anywhere is just the subject-matter of Patanjali's 'Yoga Darsana' and *that is an ancient Sanatanic* achievement.

(1) The Village Communities that held property in common and submitted to a reshuffling and reallotment every thirty years, wherein each class or caste brought to the general well-being its distint service, and in which even people of alien faiths found accommodation were but objective expressions of "Sanathana group-life". There can be no gainsaying the fact that the organic village that survived all shocks in the history of this country gave way with the introduction of the Ryotwari system by Sir Thomas Munro.

Sanathana is therefore 'Divine Realism'. It is making individual and Group life manifest the God within. This is the inherent property of this great country. "To live and let live" is the fundamental motto of the Sanathanist.

It has to be confessed that the Sanatani has in his desire for accomodation ignored "the need and the right to live" and exercised unto suicidal proportions the other half of "the Dharma" —— "letting others live", Budhism *represents* this lopsided projection and in spite of "the Great Bhagavat Pada" (Sankaracharya) that overthrew Budhism, later Indian history discloses a distinct veneer of Budhism in its Bikshus and Bhikshunis and begging bowls, and in the overaccentuated 'Non-violence' with the country's resultant inability to preserve its independence. It may be urged also that the temptation with most of us for metaphysical discussions, ignoring objective realities is in a way traceable to Budhistic projection. Students of history can never ignore the outstanding fact that is to Europe's eternal credit, that She absorbed and assimilated the Christian gospel of 'Non violence and Truth' unto the Pagan frame-work of dynamic group life, and never forgot the right and the need to live, though Her Saviour would prefer extinction in the Calvary. The Crusades vitalised Christianity and pagan Jurisprudence gave Europe stability and an enduring faith in 'Law and Order'. Indian History has a reverse tale and submitted to discover the Kshatriya in foreign conquerors—a fundamental violation of Varnashrama and Swadharma. Possibly the scheme of the High Gods has been to subject this great country to humiliation and agony as a legitimate punishment for her ignoring the 'Dharma', and back again there are glimpses of 'Light' that guarantee a brilliant dawn both for this country and the rest of the world.

Modern world is essentially the make-up of European civilization, and this is but a confused *allopodrida*, of Roman law scientific achievements, and Christian 'Humanism. The Civil War in Spain is but illustrative of the higher law—that others do unto you, just as you do unto them, and Spain with its long history of cruelty and arrogance does not deserve anything less. Other countries of Europe are not different from Spain and the world as it functions today is an all-terrorising powder magazine, which might at any time explode.

At the same time, there are events taking place in our country which it would be difficult to believe, were it not for the fact that we are witnessing them. The superiority-complex *of the* Services is quietly ceasing to be, Cæsar is delivering his goods unto Christ, and more than 3 crores of people—men and women have resisted lucre, patronage and influence and registered their verdict for a party which the Government was hounding to extinction. Monster-programmes like 'Prohibition' *for* redemption *enmasse* of 'the under-dogs' of humanity are launched by Congress cabinets, and it may be that privilege of being absolutely dry is that of our sacred land.

It seems to me that the success of the Congress in the elections is a distinct achievement for the Sanatana cause, as in fundamentals *both* are substantially agreed.

(1) Rural reconstruction is a programme in which the Sanatani and Congressman are vitally interested. The Sanatani is what the *ancient* village made him. His simplicity, quiet contentment, and sparkling wisdom are what the village gave him. He would gladly have his part back again in the village.

(2) In the developement of the vernaculars and Sanskrit, and in rural education, the Sanatani Pandit and Congressmen could healthily cooperate, as *both are no* costly instruments but simple effective servers of their mother-land.

(3) In personal life, both have in them the mettle to adjust their needs to their earnings and stand privations and discomfort.

(4) The Gospel of both is founded on 'Courage' and 'Wisdom' harnessed unto service.

(5) Both are agreed that there is no need in this country or anywhere in the world for fanaticism and proselytisation.

(6) Both are interested in making this Punya Bhumi good enough to accomodate well all her children, and in therefore putting an end to cruel exploitation. Hence repeal of statutes that perpetuate the privilege of 'the Haves', and imposition of additional duties on 'accumulations of' unused wealth" so that minimum bread be guaranteed for all, are common grounds between the true Sanathani and the Congressman.

There are, no doubt, issues grave and delicate in their import, where the Congressman and Sanatani need not each be wounding *one another's susceptibilities*. As regards untouchability, the Sanatani will do well to take note that in Travancore, to all appearances, nobody cares to take note of what goes on here as protest against the Proclamation, to whatever cause it may be ascribed. There is also a grim irony in the situation that, more than the orthodox Sanatani of the East coast, some of the alien religionists, always anxious about conversion, find *in the* Proclamation a violation of fundamental rights. The sting of the issue is in the far too frequent advertence to *and* accentuation of it. When higher planks of service bring people together, this issue sinks *into* insignificance, and the problem *may* die of inanition.

There is one other *problem* in which the Sanatani and the Congressman may not see eye to eye—the problem as to marriage of girls.

To the Sanatani, marriage is a sacrament and if the Congressman has helped in the Sardá Act *coming into* existence, he has not chosen to inform himself correctly of the Sanatani's position. This question of prepuberty marriage only affects a few amongst the Sanatanis, and there need not be anything like an oppression of a minority by a *majority*. It is interesting to note that in the United States of America, in very *many* States the age at which girls can marry is 14, in some 16 etc, and in the Continent girls marry early. More than all, the Sanatani has yet a distinct contribution to give to the world. Modern civilization has not tackled the problems pertaining to 'Woman'. It has made woman a competitor with man for bare bread, and deprived her of her great possibilities. Sanatana civilization discovered in her a goddess of learning, wealth, and power, and found her not a 'Samanadharma Charini (competitor), but a 'Sahadharma Charini" (cooperator) that cooperates. The Sanatani may well find a consecrated task in the womanhood of this country being helped to attain its great possibilities on the lines above indicated.

The Sanatani need not despair. The heart of this country is 'Sanatanic'. The Congressman has to saturate and purify his programme with Sanatana Shastraic sanctity. A bare dry-as-dust programme can never arrest attention, much less inspire. An Indo-British Common-wealth consecrated by Service where the 'Haves' shall not exploit the 'Have nots' is *bound to come*, and in the making thereof, the Sanatani, wedded to simplicity and wisdom, shall have a large and predominant part.

மதுரை ஸநாதநதர்ம மஹாநாடு.

ஸ்ரீமான் கதிரேசன் செட்டியார் அவர்களின் தலைமை பிரஸங்கம்.

முன்னுரை.

எல்லாம் வல்ல இறை சிவனருளாலின்று நடைபெறும் மஹாநாட்டிற்குத் தலைமைவகிக்க என்னிலும் அறிவாற்றல் மிக்க பெரியார்கள் பலர் இருக்க என்னைத் தெரிந்தெடுத்தது என்பால் தாங்கள் கொண்டுள்ள பேரபிமானத்தைக் காட்டுகின்றது. இப்பதவியை ஏற்கத் தகுதியல்லனாயினும் ஸநாதன தர்மஸேவை செய்வதை இலக்ஷியமாகக் கொண்ட சிறியேன் இப்பணியை ஏற்கவேண்டியதவசியம் எனக் கருதி இப்புனித கைங்கர்யத்தைச் செய்யத் துணிந்துள்ளேன். என் வாழ்நாளில் இன்றே எனக்குப் பெரிதும் நன்னாளாகும். இம்மகாநாடு எல்லாவகையாலும் சிறப்பாக நடைபெறவும் தர்மஸேவை புரியப்போதிய ஆற்றலை நமக்கு அளிக்கவும் பரம்பொருளை வழுத்தி எனக்கிடப்பட்ட கட்டளையை நிறைவேற்ற முற்படுகிறேன்.

மதம்.

உலகில் நடைபெறும் கார்யங்களுக்கெல்லாம் கர்த்தாக்களிருப்பதுபோல் இப்பரந்த உலகிற்கும் நானாவிதமான ஜீவர்களுக்கும் ஆதி மூலம் ஒன்று இருந்து தீரவேண்டும். அவன் ஸர்வவல்லமையுள்ளவனாகவும், பேரிஞனாகவும், ஒப்புயாவற்றனாயும் இருத்தல் வேண்டும். அவனே கடவுள். அவனறி ஓரணுவும் அசையாது, அவனை அறிந்து கொள்ளக் காரணமாயுள்ளது வேதம். வேதம் இறைவனின் சுவாசம் போன்றது. எனவே கடவுளும் வேதமும் அநாதி. கடவுள் படைப்பில் மக்கள் பிறவி மேலானது. ஈசன் திருவடி சார்தல் பிறவிப்பயன். அதனை அடையும் வழியை அறிவிப்பதற்கு சாதனமாயுள்ளது எதுவோ அது மதம் எனப்படும். அஃது தர்மம் என்னும் பெயரால் வேதசாஸ்திரங்களில் விளங்குகின்றது. தர்மத்தை உணர்ந்து நடப்பவர்கள் தர்ம தேவதையால் இரக்ஷிக்கப்படுவார்கள்.

தெய்வ வழிபாடு.

“பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்” என்று தெய்வீகப் புலவர் திருவள்ளுவர் கூறியுள்ளார். ஸம்ஸாகரத்தினின்றும் கரையேற சர்வேசுவரனின் பாதாரவிந்தங்களை நாடவேண்டும். மானிட வர்க்கத்திற்குக் கிரமமாயும் ஸ்திரமாயுமுள்ள வழியை நமது சாஸ்திரங்கள் உணர்த்துகின்றன. ஆசார, அனுஷ்டானங்கள் சித்தசுத்திக்கு ஏற்பட்டவை. சித்தசுத்தி தெய்வபக்திக்கு இன்றியமையாதது. பக்தி முக்திக்குப் பூர்வாங்கம். படைத்தல், காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிலையுடைய ஒரே பரந்தாமனை எந்த ரூபத்திலும் பெயருடனும் எவ்விதம் எவர் திரிகரணசுத்தியுடன் வழிபடினும் அவர் இறைவனருளுக்குரியவர் என்பது நமது மதத்தின் பரந்த கொள்கை. சைவம், வைணவம், சாக்தம், ஸௌரம், காணாபத்தியம், காபாலிகம், முதலான ஸநாதன தர்மத்தின் உட்பிரிவுகள் இலக்ஷியத்தில் ஒன்றே. பிறமத நிந்தனை புரியாது அவரவர் மதத்தை வழுவாது அனுஷ்டிக்க வேண்டும், எத்துறை வழி சென்றாலும் குளத்தின் நீர் அருந்தக் கூடுவதுபோல் அவைகளில் எம்மார்க்கத்தை ஒருவர் கொள்ளினும் ஈசன் அருள் அவருக்கு ஸித்திக்கும்.

வர்ணாச்ரம தர்மம்:

தெய்வ பக்தியோடு இசைந்த உலக வாழ்க்கையை மதம் ஏற்கின்றது. குணகர்மங்களுக்குத் தக்கபடி மக்கள் இறைவனால் சிருஷ்டிக்கப்படுகின்றனர். பிராமண, க்ஷத்திரிய. வைசிய, சூத்திரர் என வர்ணங்கள் நான்கு. அனுலோம ப்ரதிலோம ஜாதிகள் வேறு, வர்ணம் வேறு, ஜாதிவேறு, பிறவியால் ஜாதி தத்வம் நிர்ணயிக்கப்படுகின்றது. இந்திரிய நிக்ரஹத்துடன் தகுந்த குருவினிடம் ஆத்ம வித்தை பயிலல், பருவமடைந்த பின் தகுந்த ஒத்த மரபினில் காரிகையை மணந்து ஒத்த அன்போடு இல்வாழ்க்கை புரிதல், முதிர்ந்த பருவத்தில் இல்லாளுடன் தவ வாழ்க்கை பூணுதல், கடைசியாக அனைத்தையும் துறந்து. ஆத்மானந்தத்தை நாடிப் பேரின்பம் அடைதல் வாழ்க்கையின் அங்கங்கள். இவை முறையே பிரும்மசர்யம், கார்ஹஸ்த்யம், வானப்ரஸ்தம், சந்நியாசம் எனப்படும்.

தொன்றுதொட்டு அனுஷ்டிக்கப்பட்டுவந்துள்ள ஸ்திரமான ஜாதி முறைமை என்னும் சமுதாயக் கட்டுப்பாடு, கலை, வீரம், வாணிபம், வேளாண்மை மற்றும்பல உபத்தொழில்கள், அபிவிருத்தி அடையக் காரணமாய் உள்ளது. ஒவ்வொரு ஜாதியும் பொதுவில் எல்லோருடைய ஸௌகர்யத்திற்காகவே தொழில் செய்கின்றது. எல்லோரும் எல்லாத் தொழிலையும் செய்வது இயலாத காரியம். ஸ்திரமற்ற தொழில் முறை நாட்டின் வளர்ச்சியைத் தடை செய்யும், எத்தேசத்திலும் யாதேனும் ஒருவகையில் சமுதாயக் கட்டுப்பாடு இருந்துகொண்டுதான் வருகின்றது. ஆன்ம அபிவிருத்தி, சமுதாய முன்னேற்றம் இரண்டையும் வர்ணாசிரம தர்மம் அடிப்படையாகக்கொண்டது. ஆத்ம ஞானமடைய வர்ணாசிரமக் கட்டுப்பாடுகள் அவசியமானவை. அக்கட்டுப்பாடுகள் மாந்தர்களின் நன்மையின் பொருட்டேயாம்.

பரதகண்டத்தின் பெருமை.

ஆயுர்வேதம், அர்த்தசாஸ்திரம், தனுர்வேதம், காந்தர்வ வேதம் முதலான சகல சாஸ்திரங்களுக்கும் பிறப்பிடம் நம் பரதகண்டமன்றோ? சமய நெறிக்கும் தத்துவ ஞானத்திற்கும் தாயகம் நம் தேசமன்றோ? தொன்றுதோட்டு இன்றுவரை பிரும்மாநுபூதிச் செல்வர்களை ஈன்றுவருவது இப்புனித நாடு அல்லவா? வாணிபம், சிற்பம் முதலியவற்றில் உலகிலேயே முதன்மை பெற்றிருந்த நாடல்லவா? ஈசுவரத் தியானத்தில் ஈடுபட்ட தபஸ்விகளின் அடிபணிந்து உபதேசம் பெற்று மன்னுயிரைத் தன்னுயிர்போல் எண்ணி நாட்டின் அபிவிருத்தியில் நாட்டங்கொண்டு தர்மராஜ்ய பரிபாலனம்செய்த மன்னர்களின் தேசமல்லவா? இத்தகை வளம், செல்வச்சிறப்பு அனைத்தும் பெற்றிருந்த நம் நாட்டின் தற்கால நிலைமையாது? அந்தோ பரிதாபம்! சொல்லவும் நாவெழவில்லை. மதம், சமூகம், அரசியல் எல்லாத் துறையிலும் சீர்கேடடைந்துள்ளது.

தற்கால நிலை.

சமயபோதமல்லாத சாரமற்ற கல்வி, கலாசாலைகளில் போதிக்கப்பெற்று வருகின்றது. கண்டதே காக்ஷி கொண்டதே கோலம் என்ற உலோகாயதக் கொள்கை பரவி வருகின்றது. குறுகிய நோக்கத்துடன் கூடிய நியாயமற்ற ஆராய்ச்சிகள் பெருகுகின்றன. மனோவேகத்தை எழுப்பிக்கலக்கத்தை உண்டுபண்ணும் சினிமாப் படங்கள், ஆடம்பரமான தலைப்பெயர்களால் அலங்கரித்து ருசியூட்டும் பத்திரிகைப் பிரசுரங்கள், வெள்ளம் போல் வந்து குவியும் புதுப்புத்தகங்கள், நம்மை விரட்டுகின்றன. இவைகளுக்கிடையே அமர்ந்து யோசிக்க இடம் கிடைப்பதில்லை. சுருங்கக் கூறின் ஆத்மாவை அலக்ஷியம் செய்து கடவுளையே விரட்டி விடுகிறோம். இவ்விடத்தில் சுவாமி விவேகாநந்தர் கூறினதை ஞாபகப்படுத்துகிறேன்.

“நம் இந்தியாவிற்குள்ள விசேஷ கருத்தோ இராஜ்ய தந்திரமன்று. படைத்திறமையன்று. வாணிப மேன்மையன்று. அபாரமான யந்திர சக்தியுமன்று. நமக்குள்ள செல்வச் சிறப்பெல்லாம் சமய நெறியே. தத்வஞானமே பாரதவர்ஷத்தின் குல தனம். இனியும் சமய நெறியையே பாராட்டிப் போற்றக் கடமைப்பட்டுள்ளோம்.”

(ஸ்வாமி விவேகானந்தர்.)

சமூகங்களின் நிலையோ செப்பத்திரமன்று சுயநலம் ஒழித்துத் தியாக உணர்வு பெருகவும், அன்பு வளரவும், நல்ல சந்ததிகள் உண்டாகவும், அறநெறி ஆற்றவும் அடிப்படையாகக் கொண்ட விவாஹ முறை கலகலத்துளது. ஆடைகளை அடிக்கடி மாற்றுவது போல் ஆண் பெண் இஷ்டம்போல் விவாஹ ரத்து செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் பரவி வருகின்றது. கன்னித் தாய்களுக்கும் மணமாகாத தகப்பன்களுக்கும் பெருங் கவர்ச்சியைத் தரும் வயது மணம், ஆண் பெண் சமகல்வி, முதலான விஷயங்களில் கவனம் செலுத்தப்படுகின்றது. ஒழுங்கீனம் நரம்புத் தளர்ச்சி, இந்திரிய விரயம், பல ஹீனம், முதலானவைகள் ஏற்படுவதற்கு ஹேதுவாகவுள்ள கர்ப்பத்தடை பிரசாரம் வலுத்து வருகின்றது.

புனிதமான கர்மானுஷ்டானங்களையும், பல நூற்றாண்டுகளின் அநுபவத்தைக் கொண்டுள்ள சமுதாயச் சட்டங்களையும், எவற்றினும் மேலாக சமய நெறியையும் வேரறக் களையத்தக்க நிலையில் சீர்திருத்தத்தின் பெயரால் செயல் புரியப்பட்டு வருகின்றது. வைதிக தர்ம தத்துவங்களைத் திருத்தியும், உண்மைக்கு மாறாகவும் தேசியப் பத்திரிகைகள் எனக் கூறிக்கொள்ளும் பத்திரிகைகள் பல விஷமப் பிரசாரம் செய்து வருகின்றன. சுருதி, யுக்தி, அனுபவத்திற்கொவ்வாது வேத சாஸ்திரங்களுக்கு முரணாக இஷ்டம் போல் வியாக்கியானம் செய்யும் பாஷ்யக்காரர்கள் பலர் தோன்றியுள்ளனர். மத சமூகச் சட்டங்களைத் தங்களுக்கு ஏற்றமுறையில் மாற்றிவிட்டால் வேறு மதம் புகுவதாக பயமுறுத்துகின்றனர் நம்மவர் பலர். சிலர் விக்ரஹங்களையும் தர்ம சாஸ்திரங்களையும் அழிக்கத் துணிந்துள்ளனர். நம் கண் முன்னிலையிலேயே நமது மங்கையர் பலர் நாசோரம் (Kidnapping) செய்யப்பட்டும் நாம் செயலற்று திக்கற்றவர்களாயிருக்கின்றோம். ஹா! ஹா!! என்ன கொடுமை.

(தொடரும்.)

கூரத்தாழ்வான் அருளிச்செய்த
ஸ்ரீ ஸ்தவம்.
மூலம் நாகரத்திலும் தமிழிலும்
சிரோமணி
ஸ்ரீநிவாஸராகவாசாரியரால்
எழுதிய உரையுடன்
விலை அணு 0—4—0
கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

முக்கிய கவனிப்பு
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது.)
அசல் தங்க நகைகளைப்போன்ற “கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்” நகைகளையே கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— என் கன்னுசாமி பத்தர்
பெரியதெரு. கும்பகோணம்.

215198


அநாவசியமாக ஏன் - -
- - அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது

அமிர்தாஞ்சனம்

சண்முக செந்தூரம்:- இது மகான் அனுக்கிரகத்தால் செய்த முறை. காசரோகங்களை பூர்ணகுணமாக்குவதில் இதற்கு நிகர் வேறே ஔஷதமில்லை நாள்பட்ட இளைப்பு இருமலை ஒரு வாரத்திற்குள் குணப்படுத்தும்.

எனக்கு சுமார் 35 வருஷம் அனுபோகம். அநேகம்பேர்களுக்கு கொடுத்து பூர்ண நற்குணமாகி அவர்களால் கொடுக்கப்பட்ட நற்சாட்சிகளுமிருக்கின்றன. விலை உயர்ந்த சரக்குகளினால் செய்யப்பட்டவை. கால நிர்ணயத்திற்குத் தக்கபடி சார்ஜை குறைக்கப்பட்டிருக்கிறது. 48 நாட்களுக்கு உபயோகிக்கும் மருந்துக்கு விலை ரூ. 25. 24 நாட்களுக்கு மருந்து ரூ. 15. ஏழைகளுக்கு சக்திக்கு தகுந்தபடியும் கொடுக்க சித்தமாயிருக்கிறேன். விபரம் மருந்துகளுடன் அனுப்பப்படும். இன்னும் சகல வியாதிகளுக்கும், குழந்தைகளுக்கு ஏற்படும் ரோகங்களுக்கும் குலைகட்டி ரோகங்களுக்கும், நல்ல மருந்துகள் கொடுக்கப்படும்.

R .K. Murthi, ஆயுர்வேத நன்மருந்து வைத்தியசாலை,
உறையூர், திருச்சிறாப்பள்ளி.

வாரக்குறிப்புகள்.

(வே ரா. சர்மா.)

மேதாவிகளைக் கூட்டுக !! எல்லாமறிந்தவர் எவருமில்லை. ஒன்றுமறியாதவர் ஒருவருமிரார். பல்லாண்டுகளாக பலர் பேசியும் எல்லோரும் ஏற்கத்தக்கபடி எப்படி கல்வி கொடுப்பதென தீர்மானிக்கப் படவில்லை. ஆங்கிலங் கற்றவர் பண்டிதர்களை அலக்ஷியம் செய்து அவராலுண்டாகும் பயனை இழக்கின்றனர்! பண்டிதரையும் லௌகிக மேதாவிகளையும் ஒன்று சேர்த்து ஓர் கமிட்டி நியமித்து தீர்மானம் செய்யலாம்.

இளைஞர் மூளையில் எவ்வளவு சுமை !! முதல் மூன்றுபாரத்தில் ஹிந்தியைக்கட்டாய பாடமாக்க தேசிய மந்திரிகள் மிகப் பாடுபடுகின்றனர். சிறுவர்களுக்கு முக்கியமாக தாய் பாஷை, கணக்கு இவைகளைப் புத்தக மூலமாக போதித்து சரிதம் இயற்கைப் பாடம் முதலியவைகளை வாசா போதிக்கும்படி செய்தல் நலம். முதலில் ஹிந்தியை ராஜாங்க பாஷையாக தீர்மானம் செய்துவிட்டால் தானே எல்லோரும் படிக்கின்றனர்.

சீன ஜப்பான் யுத்தம் !! சிறுக சிறுக இச் சண்டை ஆரம்பித்துவிட்டது. வானளவ உலக யுத்தநிறுத்தப் பேச்சு நடந்தது. வல்லரசுகள் உள்ளொன்றுவைத்துப்புறமொன்று பேசுகின்றன. தங்களுக்கு நேரில் தீங்கு வந்தாலொழிய இவைகள் தலையிடப்போவதில்லை. ஸர்வதேச சங்கம் இதை நிறுத்த முடியாவிடில் அச்சங்கம் கலைவதே நலம்.

நியாயமும் உசிதமுமாம் !! மதுரை வைதிக ஸபைக்கு ஸ்ரீமான் செட்டியாரவர்கள் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டது நியாயம். பல்லாண்டுகளாக செட்டியாரவர்கள் தர்மத் தொண்டு செய்துவருவது ஆர்யதர்ம வாசகர்களுக்கும், ஆஸ்திகர்களுக்கும் தெரிந்ததே. நமக்கு பூர்ணபலமும் மதிப்பும் வேண்டுமானல் இத்தகையோரவச்யம்.

பூஜை நன்கு நடக்கவேண்டும் !! நமது ஆலயங்களை நேரில் அரசாங்கமே ஏற்பதா என்றும் பணகல் ஏற்படுத்திய கமிட்டியே போதுமென்றும் பழய தேவஸ்தான கமிட்டி போதுமென பலவகையான ப்ரஸ்தாபம் நடக்கிறது. இச்சமயம் நமது ஸபை ஓர் அழகிய திட்டத்தைத் தயார் செய்து மந்திரியிடமளித்து வேதாகம ஸம்ப்ரதாயத்தை காக்கவேண்டும். பூஜை நன்கு நடக்க வேண்டும்.

திருத்தணி கொள்ளை !! மருந்து நோயை கண்டிக்காமல் ரோகியைக் கொல்லுமானல் அது எதற்கு ! பணகல் கமிட்டி தனக்கு வரவேண்டிய பாகத்தைக் கொடுக்கவில்லை என்று ஆடி கிருத்திகையில் திருத்தணியை குஹனுக்கு பக்தரளித்த 7000-ரூ. காணிக்கையை ஜப்திசெய்ததாம். இது நியாயமா ? தர்மமா ? இந்தக் கமிட்டியால் நன்மையுண்டெனக் கூறும் டாக்டர் ராஜனிதை கவனிப்பாரா ?

வேண்டுகோள்.

உபாகர்ம காயத்ரீஜப தினக்கொண்டாட்டம். உபாகர்மதினத்தை முதல் மூன்று வர்ணத்தாரும் நன்கு அனுஷ்டிக்கக்கடவர். இவ்வருடம் அது 21—8—37௳ சனிக்கிழமை வருகிறது. ஞாயிற்றுக்கிழமை காயத்ரீஜபம்வந்தது ஆஸ்திகரது பாக்கியமே. ப்ராசீன முறைப்படி க்ரமமாக இத்தினங்கள் கொண்டாடப்பட்டால் நாடும்நகரமும் நன்கு செழித்தோங்கும். ப்ராஹ்மணன் தனது விஹித கர்மத்தை ஒழுங்காகச் செய்யின் எக்காலத்தும் எங்கும் க்ஷேமமே மல்கும். இச்சுதினங்களில் நாடெங்கும் விசேஷ ஸதஸ்ஸுக்கள்கூட்டி போதிய அளவு பலத்த ஸநாதன தர்மப்ரவசனம் செய்து, பண்டித உத்தமர்களை சம்மானித்து முறைவர ஜபாதிகளைச் செவ்வனே அநுஷ்டிக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்து சநாதனமான வேதப் பிரபாவத்தைக் கொண்டாடி மகிழுமாறு வேண்டிக்கொள்ளும்

ப. வெ, திருமலை அய்யங்கார்.
காரியதரிசி.
அகில இந்திய பிராஹ்மண மஹாசபை
சென்னை.

ஆடிப்பூர உத்ஸவம்.

கோனேரிராஜபுரம்.

நிகழும் ஈச்வர-ஷு ஆடி-மீ 16-ம் தேதி இவ்வூர் ஸ்ரீ பூமி க்ஷேத்ரத்தில் எழுந்தருளிய ஸ்ரீ தேஹஸௌந்தரி அம்பாளுக்கு ஆடிப்பூர உத்ஸவம் ஆரம்பிக்கப்பட்டது. ப்ரதிதினமும் காலையிலும் இரவிலும் அம்பாளுக்கு விசேஷ அலங்காரங்கள் செய்யப்பட்டு வீதிவலக்காக்ஷி நடைபெற்றது. 20௳ புதன்கிழமை ஐந்தாம் திருநாள் சந்தனகாப்பும் ராத்திரி ரிஷபவாஹனத்தில் புஷ்பங்களாலும் நகைகளாலும் இவ்வூர் புதுக்குடி வைத்தினாதய்யரவர்கள் குமாரர் பிரம்மஸ்ரீ குஞ்சு குருக்கள் அவர்களால் ஷை அம்பாளுக்கு விசேஷ அலங்காரங்கள் செய்யப்பட்டு சோடசோபசார தீபாராதனைகள் செய்து மேளதாள வைபவங்களுடன் அம்பாள் புறப்பட்டு சகோப்பாகாக்ஷி நடைபெற்றது. 9-ம் திருநாள் ஸ்ரீ அம்மாளுக்கு தியாகராஜஸ்வாமிபோல் அலங்காரங்கள் செய்து ரதாரோஹணம் செய்யப்பட்டது. 10-ம் திருநாள் பகல் 10-மணிக்கு அம்பாளுக்கு விசேஷ அபிஷேகங்கள் செய்து அலங்காரங்கள் செய்து ரிஷபவாஹனத்தில் இவ்வூர் கீர்த்திமான் என்கிற புண்ய நதியில் தீர்த்தவாரி நடைபெற்றது. இரவு 10-மணிக்கு ஸ்ரீதேஹஸௌந்தரி அம்பாளுக்கு புஷ்பங்களாலும் நகைகளாலும் நூதனமாக பிரம்மஸ்ரீ குஞ்சு குருக்கள் அவர்களால் அலங்காரங்கள் செய்து சோடசோபசார தீபாராதனைகள் செய்து வெள்ளி ரிஷபவாகனத்தில் புறப்பட்டு மேளதாள வைபவங்களுடன் ஸ்ரீமான் S. T. சுப்பய்யர் முயற்சியால் ரொம்பவும் விமர்சையாய் நடைபெற்றது. இவ்வூர் சிரௌதிகள் கோஷ்டிகளால் ஸாம வேத பாராயணம் நடைபெற்றது.

ஒரு நிருபர்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Publsihed by A Gopaladesikachariar, and S. Kalyanasundaam.

[illegible]
ன்

4
22

33

26-8-1937

215199

215299
27 AUG 1937

497

Registered No. M. 2913.

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 22 | கும்பகோணம். கலி 5039 ஈச்வர-௵ ஆவணி-மீ 11௳ 1937-௵ ஆகஸ்டு-மீ 26௳ | ஸ 33

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு	ரூ.	20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு	அணா	0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்.
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

பள்ளிக்கூட நேரத்தை மாற்ற யோஜனை.

சென்னை மந்திரி ஸபையாருக்கு ஸ்ரீருக்மணி லக்ஷ்மீபதி எழுதியுள்ள ஒரு கடிதத்தில் தற்போது பள்ளிக்கூடங்களில் இருந்துவரும் படிக்கும் நேரங்களை மாற்றவேண்டுமென்று கூறியிருக்கிருர்.

காலையில் 6மணி முதல் 11மணி வரையிலே பள்ளிக்கூடங்கள் நடக்க வேணும். பாக்கி நேரங்களில் மாணவர்கள் வீட்டிலேயே தங்கியிருக்கவும், அந்திப்பொழுதுகளில் உல்லாசமாகப்பொழுது போக்கவும் ஸௌகரியம் செய்து கொடுக்கவேண்டுமென்றும் சொல்லியிருக்கிருர்.

இந்த யோஜனை மந்திரி மூலமாகக்கல்வி யிலாகாத்தலைவரிடம் போயிருப்பதாயும், அவர் அதைப்பற்றி யோஜித்து வருவதாயும் தெரிகிறது.

பஞ்சாப்பில் வகுப்பு ஒற்றுமை

முதன்மந்திரியின் முயற்சி.

மசூதி முன் மேளம் வாசிப்பது, மத தூஷணம், மதமாற்றம் செய்வது போன்ற விஷயங்களை யோஜித்து எல்லாவகுப்பாரும் ஸமரஸமாக நடக்கும்படி வற்புறுத்தியும், வகுப்புச்சண்டையை அகற்றவும், ஒரு திட்டத்தைத் தயாரிக்க எல்லாவகுப்பாரும் அடங்கிய கமிட்டியொன்றை பஞ்சாப் முதல் மந்திரி ஏற்படுத்தியிருக்கிருர். அந்தக் கமிட்டியார், எல்லோரும் ஒப்பக்கூடிய சிலயோஜனைகளை வெளியிட்டிருக்கிருர்கள்.

சட்டஸபை மெம்பர்களுக்கு 75ரூ சம்பளம்.

சென்னை சட்டஸபை மெம்பர்களுக்கு மாதம் 75 ரூபாய் சம்பளம் கொடுக்கவேண்டுமென்றும், சபை நடக்கும் தினங்களில் படியும், ரெயில்செலவும் கொடுக்கவேண்டுமென்றும் ஒரு மசோதா தயாராகிவருகிறது. காங்கிரஸ் கார்யக்கமிட்டி எல்லாமாகாணச் சட்டஸபை மெம்பர்களுக்கும் ரூ.75 சம்பளம் [illegible]

ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி இதை ஆக்ஷேபித்து 200ரூ சம்பளம் கொடுக்கவேண்டுமென்று யோஜனை சொல்லுகிருர்.

3½கோடி கடன்.

சென்னை கவர்மெண்டார் 3½கோடிரூபாய் கடன் வாங்க உத்தேசித்திருப்பதாயும், இதை பொது ஜனங்களிடமிருந்து வாங்க நினைப்பதாயும், இதற்கு இந்தியா கவர்மெண்டின் அனுமதி கிடைத்திருப்பதாயும் சொல்லப்படுகிறது.

சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி.

கே. பாஷ்யம் ராஜிநாமா!

ஸ்ரீமான் கே. பாஷ்யம் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டித்தலைவர் பதவியை ராஜிநாமா செய்து விட்டார். காரணம்சொல்லவில்லை. பலவிதமாகக்காரணம் ஊஹிக்கப்படுகிறதாம்.

ஜனுப் தாவுஷா என்பவர் தலைவராகத்தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திருவாங்கூரைப்பாராட்டவா?

சென்னை சட்டஸபைக்கூட்டத்தில் திருவாங்கூர் ஆலயப்ரவேச விளம்பரத்தையும், அரசரையும் பாராட்டி ஒருதீர்மானம் கொண்டுவரப்படுமாம். இதற்கு கவர்னரின் அனுமதியும் கிடைத்திருக்கிறதாம்.

ஜமீன்தாரியை ஒழிக்க மசோதா.

சென்னையில் முயற்சி.

[illegible] செட்டியார் என்பவர் ஜமீன் [illegible] ஒரு மசோதா கொண்டுவரப்போவதாக நோட்டீஸ் கொடுத்துவிட்டாராம். இதன்படி ஜமீன்தாரிமுறை எடுக்கப்பட்டு, குடிகள் பட்டாதார்களாக மாற்றப்பட்டு கவர்ன்மெண்டுக்குச் சொந்தமாகிவிடும். இதற்காக ஜமீன்தார்களுக்கு மொத்த வருமானத்தில் 20-க்கு மேற்படாமல் நஷ்டஈடு கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமாம்.

கட்டாய ஹிந்தி கண்டனம்.

சென்னை கவர்மெண்டார் ஹிந்தியைக் கட்டாயபாடமாக வைக்க உத்தேசிப்பதைக் கண்டித்து நாகப்பட்டனம், திருச்சி முதலிய விடங்களில் பொதுக்கூட்டம் நடந்தது. தனிப்பட்டவர்களும் சிலர் இதைக் கண்டிக்கிருர்கள்.

இதனால் தமிழ் பாஷையின் கௌரவத்திற்குப் பங்கமேற்படுமென்று சொல்லப்படுகிறது.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
துணம், மணம், காறம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஷீட் ஜெம்லேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

தண்டநீதியின் மஹிமை.

(மனுஸ்மருதி.)

ராஜ தர்மங்களில்முக்யமாகச்சொல்லப்படும் தண்ட நீதி அல்லது தண்டனை அதிகாரத்தைப்பற்றி மனுஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கும் விசேஷங்களை அடியில் அப்படியே குறிப்பிடுகிறோம்.எதிலும்“மனிதஸ்வதந்திரம், என்ற சாக்கு சொல்லி அகார்யங்களைக்கூட ராஜ தண்டத்தால் அடக்குவதை ஆக்ஷேபிக்க புறப்பட்டுள்ள சில ஸ்வதந்திர வாதிகள் இந்த தண்ட நீதியின் கௌரவத்தையும், அதன் ஆவச்யகதையையும், ராஜ்ய நிர்வாஹத்திற்கு அது இன்றியமையாததொருசாதனமாயும்உயர்ந்ததர்மமாயுமிருப்பதைஅறிந்து கொள்ள வேண்டியது இக்காலத்தில் மிகவும் அவச்யமென்று நினைக்கிறோம்.

மனு இந்த தண்டநீதியைப்பற்றிச்சொல்லுவதாவது:—

𑌤𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍋𑌪𑍍𑌤𑌾𑌰𑌂 𑌧𑌰𑍍𑌮𑌮𑌾𑌤𑍍𑌮𑌜𑌮𑍍 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑍇𑌜𑍋𑌮𑌯𑌂 𑌦𑌣𑍍𑌡𑌮𑌸𑍃𑌜𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌃 ॥ (7-14)

அரசனுடைய ராஜ்ய நிர்வாககார்யம் ஒழுங்காக ஸித்திக்கும் பொருட்டு ஈச்வரன், எல்லா பிராணிகளுக்கும் ரக்ஷகமாயும், தர்மஸ்வரூபமாயும் பிரம்மாவினுடைய தேஜஸ்ஸால் உண்டாக்கப்பட்டதுமான தண்ட நீதியை முன்பு சிருஷ்டித்தார்.

𑌤𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌾𑌣𑌿 𑌚𑌰𑌾𑌣𑌿 𑌚 । 𑌭𑌯𑌾𑌦𑍍𑌭𑍋𑌗𑌾𑌯 𑌕𑌲𑍍𑌪𑌨𑍍𑌤𑍇 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍𑌨 𑌚𑌲𑌨𑍍𑌤𑌿 𑌚 ॥ (51)

அந்த தண்ட நீதியிடமுள்ள பயத்தாலே [illegible] இடைக்கூடியவைகளாயிருக்கின்றன.

𑌤𑌂 𑌦𑍇𑌶𑌕𑌾𑌲𑍌 𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌚𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃 । 𑌯𑌥𑌾𑌰𑍍𑌹𑌤𑌃 𑌸𑌂𑌪𑍍𑌰𑌣𑌯𑍇𑌨𑍍𑌨𑌰𑍇𑌷𑍍𑌵𑌨𑍍𑌯𑌾𑌯𑌵𑌰𑍍𑌤𑌿𑌷𑍁 ॥ (16)

தேசம், காலம், சக்தி, வித்யை இவைகளை உண்மையாக கவனித்து, அநியாயவழியில் செல்லுகிறவர்களுக்கு ஏற்றபடி அந்த தண்டத்தை பிரயோகிக்க வேண்டும்.

𑌸 𑌰𑌾𑌜𑌾 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌦𑌣𑍍𑌡𑌃 𑌸 𑌨𑍇𑌤𑌾 𑌶𑌾𑌸𑌿𑌤𑌾 𑌚 𑌸𑌃 । 𑌚𑌤𑍁𑌰𑍍𑌣𑌾𑌮𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑍂𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ॥ (17)

அந்த தண்ட நீதியே ராஜாவாகும். அதுவே உயர்ந்த புருஷன். அதுவே எதற்கும் நேதா, ஆஜ்ஞையிடுவதும் அதுவே.நான்கு ஆச்ரம தர்மங்களுக்கும் அதுவே ஜவாப்தாரியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

𑌦𑌣𑍍𑌡𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾 𑌦𑌣𑍍𑌡 𑌏𑌵𑌾𑌭𑌿𑌰𑌕𑍍𑌷𑌤𑌿 । 𑌦𑌣𑍍𑌡𑌃 𑌸𑍁𑌪𑍍𑌤𑍇𑌷𑍁 𑌜𑌾𑌗𑌰𑍍𑌤𑌿 𑌦𑌣𑍍𑌡𑌂 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌵𑌿𑌦𑍁𑌰𑍍𑌬𑍁𑌧𑌾𑌃 ॥ (18)

தண்டமே எல்லா பிரஜைகளையும் சாஸனம் செய்கிறது. தண்டமே எல்லோரையும் ரக்ஷிக்கிறது. பிரஜைகள் தூங்கும் போது கூட தண்டம் விழித்துக்கொண்டிருக்கிறது. அந்த தண்டத்தையே அறிஞர்கள் தர்மமாகச்சொல்லுவார்கள்.

𑌸𑌮𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌸 𑌧𑍃𑌤𑌃 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌸𑌰𑍍𑌵𑌾 𑌰𑌞𑍍𑌜𑌯𑌤𑌿 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 । 𑌅𑌸𑌮𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌪𑍍𑌰𑌣𑍀𑌤𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌨𑌾𑌶𑌯𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 ॥ (19)

அந்த தண்டமானது சாஸ்திர வழியை கவனித்து நன்கு பிரயோகிக்கப்பட்டால் எல்லாபிரஜைகளையும்திருப்தியுள்ளவர்களாகச் செய்யும். நன்கு கவனிக்காமல்பிரயோகிக்கப் பட்டால் எல்லாவற்றையும் நசிக்கச்செய்யும்

𑌯𑌦𑌿 𑌨 𑌪𑍍𑌰𑌣𑌯𑍇𑌦𑍍𑌰𑌾𑌜𑌾 𑌦𑌣𑍍𑌡𑌂 𑌦𑌣𑍍𑌡𑍍𑌯𑍇𑌷𑍍𑌵𑌤𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌤𑌃 । 𑌶𑍂𑌲𑍇 𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌨𑌿𑌵𑌾𑌪𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍍𑌦𑍁𑌰𑍍𑌬𑌲𑌾𑌨𑍍𑌬𑌲𑌵𑌤𑍍𑌤𑌰𑌾𑌃 ॥ (20)

அரசனானவர் சோம்பலை விட்டு, தண்டிக்கத்தக்கவர்களுக்கு தண்டப்பிரயோகம் செய்யாமலிருந்து விடுவானாகில், அப்போது பலிஷ்டர்கள் துர்பலர்களை, சூலத்தில் கோர்த்து மத்யஸ்த்தை சமைப்பது போல் சமைத்து விடுவார்கள்.

𑌅𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌕𑌾𑌕𑌃 𑌪𑍁𑌰𑍋𑌡𑌾𑌶𑌂 𑌶𑍍𑌵𑌾 𑌚 𑌲𑌿𑌹𑍍𑌯𑌾𑌦𑍍𑌧𑌵𑌿𑌸𑍍𑌤𑌥𑌾 । 𑌸𑍍𑌵𑌾𑌮𑍍𑌯𑌂 𑌚 𑌨 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌕𑌸𑍍𑌮𑌿𑌂𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑍇𑌤𑌾𑌧𑌰𑍋𑌤𑍍𑌤𑌰𑌮𑍍 ॥ (21)

தண்டநீதி ஒழுங்காகபிரயோகிக்காமல் போனால் பாதுகாப்பில்லாத காரணத்தால், யாகங்களில் காக்கைகள்புரோடசஹவிஸ்ஸை தின்ன முற்படும். நாய் ஹவிஸ்ஸை நக்கும். ஒன்றிலும் ஒருவனுக்கும் ஸ்வாமித்வம் அதாவது யஜமானத்வமிராது. கீழ் மேல் நிலைமை மாறித்தலை கீழான நிலைமை ஏற்படும்.

𑌸𑌰𑍍𑌵𑍋 𑌦𑌣𑍍𑌡𑌜𑌿𑌤𑍋 𑌲𑍋𑌕𑍋 𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑍋 𑌹𑌿 𑌶𑍁𑌚𑌿𑌰𑍍𑌨𑌰𑌃 । 𑌦𑌣𑍍𑌡𑌸𑍍𑌯 𑌹𑌿 𑌭𑌯𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑌗𑌦𑍍𑌭𑍋𑌗𑌾𑌯 𑌕𑌲𑍍𑌪𑌤𑍇 ॥ (22)

உலகமெங்கும் ஜனங்கள் தண்டத்தினாலேயே அடக்கப்பட்டு நிற்கின்றனர். தவறுசெய்யாத சுத்தனான மனிதன் துர்லபம். தண்டத்தின் பயத்தாலேயே ஜகத்தெல்லாம் அனுபவத்திற்கு உபயோகமாகிறது.

𑌦𑍇𑌵𑌦𑌾𑌨𑌵𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌾 𑌰𑌕𑍍𑌷𑌾𑌂𑌸𑌿 𑌪𑌤𑌗𑍋𑌰𑌗𑌾𑌃 । 𑌤𑍇𑌽𑌪𑌿 𑌭𑍋𑌗𑌾𑌯 𑌕𑌲𑍍𑌪𑌨𑍍𑌤𑍇 𑌦𑌣𑍍𑌡𑍇𑌨𑍈𑌵 𑌨𑌿𑌪𑍀𑌡𑌿𑌤𑌾𑌃 ॥

தேவர்கள், அஸுரர்கள், கந்தவர், ராக்ஷசர், பக்ஷி, பாம்பு ஆகியவைகளும் தண்டத்தினால் நிர்ப்பந்திக்கப்பட்டே உலகத்தின்க்ஷேமத்திற்கு உதவுகின்றன.

𑌦𑍁𑌷𑍍𑌯𑍇𑌯𑍁𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌚 𑌭𑌿𑌦𑍍𑌯𑍇𑌰𑌨𑍍𑌸𑌰𑍍𑌵𑌸𑍇𑌤𑌵𑌃 । 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌪𑍍𑌰𑌕𑍋𑌪𑌶𑍍𑌚 𑌭𑌵𑍇𑌦𑍍𑌦𑌣𑍍𑌡𑌸𑍍𑌯 𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ॥ (24)

தண்டநீதியைசெலுத்தாததாலும், அல்லது தகாதவழியில் செலுத்துவதாலும், எல்லா ஜாதிகளும் கெட்டுவிடும். எல்லாவித வியவஸ்தைகளும் உடைந்து விடும். எல்லா உலகத்திலும் க்ஷோபம் ஏற்படும்.

𑌯𑌤𑍍𑌰 𑌶𑍍𑌯𑌾𑌮𑍋 𑌲𑍋𑌹𑌿𑌤𑌾𑌕𑍍𑌷𑍋 𑌦𑌣𑍍𑌡𑌶𑍍𑌚𑌰𑌤𑌿 𑌪𑌾𑌪𑌹𑌾 । 𑌪𑍍𑌰𑌜𑌾𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌨 𑌮𑍁𑌹𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌨𑍇𑌤𑌾 𑌚𑍇𑌤𑍍𑌸𑌾𑌧𑍁 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ॥

எந்த தேசத்தில் சாஸ்திரீய நியமத்திற்குள்பட்டதும், சியாமளவர்ணமும், சிவந்த கண்ணுள்ளதும் பாபங்களை விலக்குவதுமான தண்ட தேவதை ஸஞ்சரித்து வருகிறதோ, அங்கு பிரஜைகள் தவறுசெய்வதில்லை. தண்டத்தைச் செலுத்துபவன் ஒழுங்காக கவனம் செலுத்தினால்.

𑌤𑌸𑍍𑌯𑌾𑌹𑍁𑌃 𑌸𑌂𑌪𑍍𑌰𑌣𑍇𑌤𑌾𑌰𑌂 𑌰𑌾𑌜𑌾𑌨𑌂 𑌸𑌤𑍍𑌯𑌵𑌾𑌦𑌿𑌨𑌮𑍍 । 𑌸𑌮𑍀𑌕𑍍𑌷𑍍𑌯𑌕𑌾𑌰𑌿𑌣𑌂 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌂 𑌧𑌰𑍍𑌮𑌕𑌾𑌮𑌾𑌰𑍍𑌥𑌕𑍋𑌵𑌿𑌦𑌮𑍍 ॥ (26)

ஸத்யவாதியும் தீர்க்காலோசனையுடன் காரியம் செய்பவனும் தர்ம, காம, அர்த்தமாகிற புருஷார்த்தங்களில் ஸமர்த்தனும், ப்ராஜ்ஞனுமான அரசனே இந்த தண்ட நீதியைப்ரயோகிக்கத்தக்கவனென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

𑌤𑌂 𑌰𑌾𑌜𑌾 𑌪𑍍𑌰𑌣𑌯𑌨𑍍𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌰𑌿𑌵𑌰𑍍𑌗𑍇𑌣𑌾𑌭𑌿𑌵𑌰𑍍𑌧𑌤𑍇 । 𑌕𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌷𑌮𑌃 𑌕𑍍𑌷𑍁𑌦𑍍𑌰𑍋 𑌦𑌣𑍍𑌡𑍇𑌨𑍈𑌵 𑌨𑌿𑌹𑌨𑍍𑌯𑌤𑍇 ॥ (27)

இந்த தண்டநீதியை நன்கு பிரயோகிக்கும் அரசன் தர்ம, அர்த்த, காம மாகிற மூன்று புருஷார்த்தங்களில் அபிவிருத்தியை அடைவான். காமத்திலேயே ருசியுள்ளவனும், கோபிஷ்டனும், அல்பனுமான அரசன் அந்த தண்டத்தினாலேயேகொல்லப்படுவான்.

𑌦𑌣𑍍𑌡𑍋 𑌹𑌿 𑌸𑍁𑌮𑌹𑌤𑍍𑌤𑍇𑌜𑍋 𑌦𑍁𑌰𑍍𑌧𑌰𑌶𑍍𑌚𑌾𑌕𑍃𑌤𑌾𑌤𑍍𑌮𑌭𑌿𑌃 । 𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌿𑌚𑌲𑌿𑌤𑌂 𑌹𑌨𑍍𑌤𑌿 𑌨𑍃𑌪𑌮𑍇𑌵 𑌸𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌮𑍍 ॥ (28)

தண்ட நீதியானது மிகுந்த தேஜஸ்பொருந்தியது. சாஸ்திர ஸம்ஸ்காரமில்லாதவர்களால் நன்கு செலுத்தமுடியாதது. ராஜ தர்மத்திலிருந்து நழுவிய அரசனையே பந்துக்களுடன் அந்த தண்டம் கொன்றுவிடும்.

𑌤𑌤𑍋 𑌦𑍁𑌰𑍍𑌗𑌂 𑌚 𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌂 𑌚 𑌲𑍋𑌕𑌂 𑌚 𑌸𑌚𑌰𑌾𑌚𑌰𑌮𑍍 । 𑌅𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌗𑌤𑌾𑌂𑌶𑍍𑌚𑍈𑌵 𑌮𑍁𑌨𑍀𑌨𑍍𑌦𑍇𑌵𑌾𑌂𑌶𑍍𑌚 𑌪𑍀𑌡𑌯𑍇𑌤𑍍 ॥

தண்டமானது நன்கு பிரயோகிக்கப்படாமல் தர்மத்திலிருந்து நழுவிய அரசனைக் கொல்லுவதுடன், ராஜ்யத்தையும், தனதான்யாதிகளையும், அந்தரிக்ஷத்திலுள்ளவர்களான, தேவர்கள் ரிஷிகள் ஆகிய எல்லாவற்றையும்பீடிக்கும்.

𑌸𑍋𑌽𑌸𑌹𑌾𑌯𑍇𑌨 𑌮𑍂𑌢𑍇𑌨 𑌲𑍁𑌬𑍍𑌧𑍇𑌨𑌾𑌕𑍃𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌨𑌾 । 𑌨 𑌶𑌕𑍍𑌯𑍋 𑌨𑍍𑌯𑌾𑌯𑌤𑍋 𑌨𑍇𑌤𑍁𑌂 𑌸𑌕𑍍𑌤𑍇𑌨 𑌵𑌿𑌷𑌯𑍇𑌷𑍁 𑌚 ॥ (30)

அந்த தண்டநீதியானது, ஸஹாயமற்றவனும், மடனும் சாஸ்திர ஸம்ஸ்காரமற்ற புத்தியில்லாதவனும் மூர்க்கனும் காமாதி விஷயங்களில் ஆஸக்தியுள்ளவனுமான அரசனால் நியாயமாகச் செலுத்தமுடியாது.

𑌶𑍁𑌚𑌿𑌨𑌾 𑌸𑌤𑍍𑌯𑌸𑌨𑍍𑌧𑍇𑌨 𑌯𑌥𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌨𑍁𑌸𑌾𑌰𑌿𑌣𑌾 । 𑌪𑍍𑌰𑌣𑍇𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌯𑌤𑍇 𑌦𑌣𑍍𑌡𑌃 𑌸𑍁𑌸𑌹𑌾𑌯𑍇𑌨 𑌧𑍀𑌮𑌤𑌾 ॥

அர்த்த காமாதிகளில் பரிசுத்தனும், ஸத்யஸந்தனும், சாஸ்திரப்படி நடப்பவனும், நல்லவர்களுடைய உதவிபெற்றவனும், புத்திசாலியுமான அரசனால் தான் அந்த தண்டமானது பிரயோகிக்கத்தகும்.

கள்குடிக்கும் உரிமை

ஜார்ஜ் ஜோஸப்பின் கருத்து.

கள் குடியை விலக்கும்விஷயமாக ஐரோப்பியர்களின் பழக்க வழக்கத்தில் தலையிடுவது கூடாதென்றும் அவர்கள்குடிப்பதற்கு வஸதி செய்து கொடுக்க வேண்டுமென்றும் காந்திஜி சொல்லியிருக்கிறார்.

இந்தியா சட்டஸபை மெம்பரும் காங்கிரஸ் வாதியுமான ஜார்ஜ் ஜோஸப் என்பவர் சென்னையில் பேசும்போது பூர்ண மதுவிலக்குத்திட்டத்தை எதிர்த்துப்பேசினார். குடிப்பது மனிதனின் உரிமையென்றும் அதில் ஆசையுள்ளவர்களுக்குத்தடை ஏற்படுவது விரும்பத்தக்கதில்லையென்றும், மதுவிலக்கு திட்டத்தை வெகு ஜாக்ருதையாக அமுல் நடத்த வேணுமென்றும், கடைகளை எடுத்து விட்டாலும், குடிப்பவர்கள் தங்கள் வீட்டிலேயே கள்ளு வாங்கி வைத்துக்கொண்டு உபயோகிக்க அநுமதி கொடுக்கவேண்டியது அவச்யமென்றும் அவர் யோஜனை சொல்லுகிறார்!

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

‘மூகபஞ்சசதீ’

(19—8—37 தொடர்ச்சி)

புத்திமான்களால், உபபோக பாக்யான் - அனுபவிக்கத் தக்கதாயுமுள்ள, கல்யாணஸூக்தி லஹரி - மங்களகரமான வாக்குகளின்பெருக்காகிற, கலமாங்குரான் - சம்பாப் பயிர்களை, கந்தலயது - செழுமையாய் வளரச் செய்யட்டும்.

1. இதில், பக்தர்களுடைய நாக்காகிற வயலில் சிறந்த வாக்குகளாகிற பயிர்களை செழுமையாய் வளரச் செய்யும் நீருண்ட மேகத்திற்கு ஒப்பிடப்பட்டது. அதாவது, அம்பிகையின் கடாக்ஷமானது கிடைக்கப் பெற்ற பக்தனுக்கு ச்ரேஷ்டமான கவிதா சக்தி ஏற்படுமென்பது தாத்பர்யம்.

14. சாஞ்சல்யமேவ நியதம் கலயன் ப்ரக்ருத்யா
மாலின்யபூ: ச்ருதிபதாக்ரமஜாகரூக: |
கைவல்யமேவ கிமு கல்பயதே நதாநாம்
காமாக்ஷி சித்ரமபி தே கருணா கடாக்ஷ:||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி!, தே கருணா கடாக்ஷ: - உன்னுடைய கருணை நிறைந்த கடாக்ஷமானது, ப்ரக்ருத்யா - இயற்கையாகவே, நியதம் - எப்போதும், சாஞ்சல்யமேவ கலயன் - சஞ்சல ஸ்வபாவத்தோடே இருந்தும், நதாநாம் - நமஸ்கரித்த பக்தர்களுக்கு, மாலின்யபூ: - அழுக்கு (அதாவது, பாபம்) நிறைந்த பூமியாகிற ஸம்ஸாரத்தை, ச்ருதி பதாக்ரம ஜாகரூக: - வேதங்களாகிய மார்க்கத்தின் வழியாய் (அவர்கள்) கடப்பதில் அக்கரையுள்ளதாய், சித்ரம் அபி - ஆச்சர்யப்படத்தக்கவிதமாய் கைவல்யமேவ - கைவல்ய மோக்ஷத்தையே, கிமு கல்பயதே - எப்படி உண்டுபண்ணுகிறது!

15. ஸஞ்ஜீவனே ஜனனி சூதசிதமுகஸ்ய
ஸம்மோஹனே சசி கிசோரக சேகரஸ்ய|
ஸம்ஸ்தம்பனே ச மமதாக்ரஹ சேஷ்டிதஸ்ய
காமாக்ஷி வீக்ஷணகலா பரமௌஷதம் தே||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி!, தே வீக்ஷணகலா - உனது பார்வையின் அம்சமானது, சூத சிலீமுகஸ்ய - (மாம் பூவை பாணமாகவுடைய) மன்மதனுக்கு, ஸஞ்ஜீவனே - பிழைப்புமூட்டுவதிலும், சசி கிசோரக சேகரஸ்ய - (சந்த்ரனுடைய கலையை சிரோபூஷணமாயுடைய) பரமசிவனுக்கு, ஸம்மோஹனே - நன்றாய் மோஹம் உண்டாக்குவதிலும், மமதாக்ரஹ சேஷ்டிதஸ்ய - மமதையாகிய ஆவேசத்தினுடைய சேஷ்டைக்கு, ஸம்ஸ்தம்பனே - அடியோடு நிறுத்துவதிலும், பரமௌஷதம் - ச்ரேஷ்டமான ஔஷதமாயிருக்கிறது.

1. இதில் அம்பிகையின் கடாக்ஷத்தை ஒரு சிறந்த ஔஷதமாகச் சொல்லப்பட்டது. அதினுடைய உயர்ந்த குணமானது இதில் வர்ணிக்கப்பட்டபடி ஸஞ்ஜீவனம், ஸம்மோஹனம், ஸம்ஸதம்பனம் முதலியவற்றால் வெளியாகிறது.

2. ஸஞ்ஜீவன சக்தியானது இதேமாதிரி
‘ஹரநேத்ராக்னிஸந்தக்த காமஸஞ்ஜீவனௌஷதி: |’
என்பதாக ‘ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாம’த்திலும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

16. நீலோऽபி ராகம் அதிகம் ஜனயன் புராரே:
லோலோऽபி பக்திம் அதிகாம் த்ருடயன் [நராணாம்|
வக்ரோऽபி தேவி நமதாம் ஸமதாம் விதன்வன்
காமாக்ஷி ந்ருத்யது மயி த்வத் அபாங்கபாத: ||

தேவி காமாக்ஷி - ஹே தேவி! ஹே காமாக்ஷி, த்வத் அபாங்கபாத; உனது கடைக்கண் பார்வையானது, நீலோऽபி - தான் கருத்திருந்தாலும், புராரே: - பரமசிவனுக்கு அதிகம் ராகம் ஜனயன் - அதிகமான ராகத்தை உண்டுபண்ணுகிறதாயும், லோலோऽபி - தான் சஞ்சலிப்பதாயிருந்தாலும், நராணாம் - ஜனங்களுக்கு (பக்தர்களுக்கு), அதிகம் பக்திம் த்ருடயன் - அதிகமான பக்தியை உறுதிப்படுத்துகிறதாயும், வக்ரோऽபி - தான் வக்ரமாயிருந்தபோதிலும், நமதாம் — நமஸ்கரிக்கும் பக்தர்களுக்கு, ஸமதாம் விதன்வன் - ஸமமாய் (ஒழுங்காய்) இருக்கும் தன்மையை உண்டுபண்ணுவதாயும், மயி - என்னிடத்தில், ந்ருத்யது - நர்த்தனம் செய்துகொண்டிருக்கட்டும்.

1. கடாக்ஷமானது கருப்பாயிருப்பதாய்ச் சொல்லப்படும். ராகமென்பது பொதுவாக வர்ணத்தைக்குறிக்கும். ராகமென்றால் ஆசையென்றும் அர்த்தம். ஆசையை (பற்றுதலை) சிகப்புநிறமாக வர்ணிப்பது வழக்கம். அம்பிகையின் கடாக்ஷமானது பரமசிவனுடைய மனதில் ஆசையை அதிகரிக்கச்செய்வதால், தான் நீலநிறமாயிருந்தும் அவரிடத்தில் ராகத்தை (சிகப்பு நிறத்தை) உண்டுபண்ணுவதாகச் சொல்லப்பட்டது.

1. அதே விதமாக, தான் சஞ்சலமாயிருந்தாலும் ஜனங்களுடைய பக்தியை கெட்டிப்படுத்துவதாயும், தான் வக்ரமாயிருந்தாலும் பக்தர்களுக்கு ருஜுபாவத்தைக் கொடுப்பதாயும் சொல்லப்பட்டது.

3. இவ்விதம் தனக்கிருக்கும் ஸ்வபாவமான குணக்களுக்கு விரோதமான செய்கைகளோடிருப்பதுபோல் சொல்லி அம்பிகையின் கடாக்ஷத்தின் மேன்மையை வர்ணித்திருக்கிறார்.

17. காமத்ருஹோ ஹ்ருதய யந்த்ரண ஜாகரூகா
காமாக்ஷி சஞ்சல த்ருகஞ்சல மேகலா தே |
ஆச்சர்யம் அம்ப பஜதாம் ஜடில ஸ்வகீய
ஸம்பர்க்க ஏவ விதுனோதி ஸமஸ்த பந்தான்||

காமாக்ஷி அம்ப - ஹே காமாக்ஷி! தாயே!, காமத்ருஹ: - பரமசிவனுடைய, ஹ்ருதய யந்த்ரண - மனதைக் கட்டுவதில், ஜாகரூகா - ஜாக்ரதை (அக்கரை) யோடிருக்கும், தே - உன்னுடைய, சஞ்சல த்ருகஞ்சல - சஞ்சலமான பார்வையென்ற, மேகலா - சரடானது, ஸ்வகீய ஸம்பர்க்க ஏவ - தனது ஸம்பந்தம் ஏற்பட்ட மாத்திரத்திலேயே, பஜதாம் - பக்தர்களுடைய, ஸமஸ்த பந்தான் - ஸகலவிதமான பந்தங்களையும், ஜடிதி - சீக்ரத்தில் (உடனேயே), விதுனோதி - போக்கடித்துவிடுகிறது, ஆச்சர்யம் - இது ஆச்சரியம்!

1. இதில் அம்பிகையின் கடாக்ஷத்திற்கிருக்கும் பந்தன சக்தியை பந்தமோசன சக்தியையும் சொல்லப்பட்டது. மன்மதனுக்கும் வசப்படாத பரமசிவனைக்கூட கட்டிவிட சக்தியுடைய அம்பிகையின் கடாக்ஷமானது பக்தர்களுக்கிருக்கும் எல்லாவிதமான ஸம்ஸாரபந்தங்களையும் போக்கடிக்கும் ஸாமர்த்யமுடையதாயிருக்கிறது. இவ்விதம் அதற்குள்ள ஆச்சர்யகரமான சக்தியை இங்கு வர்ணிக்கப்பட்டது.

18, குண்டீ கரோது விபதம் மமகுஞ்சித ப்ரூ
சாபாஞ்சித: ச்ரித விதேஹ பவானுராக: |
ரக்ஷோபகாரமனிசம் ஜனயன் ஜகத்யாம்
காமாக்ஷி ராம இவ தே கருணாகடாக்ஷ:||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி!, தே கருணா கடாக்ஷ: - உன்னுடைய கருணை நிறைந்த கடாக்ஷமானது, ராம இவ - ஸ்ரீ ராமனை போல், குஞ்சித ப்ரூசாபாஞ்சித: - வளைந்த புருவங்களாகிற வில்லையுடையதாயும், ச்ரித விதேஹ பவானுராக: - தன்னை யாச்ரயித்த மன்மதனிடத்தில் ப்ரியமுள்ளதாயும், ஜகத்யாம் - லோகத்தில், அனிசம் - எப்போதும், ரக்ஷோபகாரம் - ரக்ஷணம் என்கிற உபகாரத்தை ஜனயன் - உண்டுபண்ணிக்கொண்டு, மம விபதம் - என்னுடைய ஆபத்துக்களை, குண்டீகரோது - போக்கடிக்கட்டும்.

1. ஸ்ரீ ராமன் கோதண்டத்தை தரித்தவராகையால் ‘குஞ்சித சாபாஞ்சித:’ தன்னை ஆச்ரயித்த ஸீதா (விதேஹபவா - வைதேஹீ) தேவியிடத்தில் அனுராகத்தோடிருப்பதால் ‘ச்ரித விதேஹ பவானுராக:’ ‘ரக்ஷோபகாரம்’ என்பதற்கு ரக்ஷையாகிற உபகாரம் என்றும் ராக்ஷஸர்களுக்கு அபகாரம் என்றும் அர்த்தமுண்டு. ஸ்ரீ ராமரானவர் ஜகத்தில் ராக்ஷஸர்களுக்கு உபத்ரவத்தை எப்போதும் செய்தவராகையால் ‘ஜகத்யாம் ரக்ஷோபகாரம் அனிசம் ஜனயன், என்று சொல்லப்பட்டது.

2. மேலேவந்த பதங்களெல்லாம் அம்பிகையின் கடாக்ஷத்திற்கும் பொருந்துமாகையால் அதை ஸ்ரீ ராமருக்கு ஸமமாகச் சொல்லப்பட்டது.

19. ஸ்ரீ காமகோடி சிவலோசன சோஷிதஸ்ய
ச்ருங்கார பீஜ விபவஸ்ய புன: ப்ரரோஹே |
ப்ரேமாம்பஸார்த்ரம் அசிராத் ப்ரசுரேண சங்கே
கேதாரம் அம்ப தவ கேவல த்ருஷ்டிபாதம் ||

ஸ்ரீ காமகோடி அம்ப - ஹே காமகோடீ! தாயே!, தவ கேவல த்ருஷ்டி பாதம் - உன்னுடைய அஸாதாரணமான கடாக்ஷமானது, சிவலோசன சோஷிதஸ்ய - பரமசிவனுடைய நேத்ராக்னியால் கருகிப்போன, ச்ருங்கார பீஜ விபவஸ்ய - ச்ருங்கார ரஸத்தின் உயர்ந்ததான பீஜத்திற்கு, புன: ப்ரரோஹே - திரும்பவும் செழுமையாய் வளர்வதற்கு, அசிராத் - உடனேயே, ப்ரசுரேண ப்ரேமாம்பஸா - அதிகமான ப்ரேமையாகிற ஜலத்தினால் ஆர்த்ரம் - நனைந்ததான, கேதாரம் - வயலாக, சங்கே - நினைக்கிறேன்.

1. இதில், பரமசிவனுடைய நேத்ராக்னியால் எரிக்கப்பட்ட மன்மதனைப் பிழைப்பூட்டிய அம்பிகையின் கருணை கடாக்ஷத்தை வர்ணிக்கப்பட்டது. மன்மதனை ச்ருங்கார ரஸத்தின் பீஜ ச்ரேஷ்டமாகச் சொல்லப்பட்ட அந்த பீஜமானது பரமசிவனுடைய நேத்ராக்னியினால் கருகிப்போய் விட்டது. அப்படியிருந்தும் அது அம்பிகையின் கடாக்ஷமாகிற வயலில் மிகவும் செழுமையாய் வளருகிறது. இதற்குக் காரணம் அந்த வயலானது கருணையென்ற ரஸம் நிறைந்ததாயிருப்பதினால் கருகிப் போன விரையும் முளைத்துவிடக்கூடியதாயிருக்கிறது.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-௵ ஆவணி-௴ 11௳

நிர்ப்பந்த முறை நியாயமானதா ?

சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் ஆக்ஷி ஆரம்பமாயிருப்பினும், அதின் ராஜ்யநிர்வாஹ திட்டம் முதலியவை இன்னும் உருப்படியாக வெளிவந்தபாடில்லை. ஆயினும் மந்திரிகளும், கார்யதர்சிகளும் அங்காங்கு வெளியிட்டுவரும் அபிப்பிராயங்களைக் கொண்டு நாம் சில விஷயங்களை அறியமுடிகிறது. மதுவிலக்கு, ஹிந்தி, கதர் முதலிய அனேக காங்கிரஸ் திட்டங்களில் முதன்முதலாக அதிகக் கவனம் செலுத்தப்படுமென்று தெரிகிறது. இன்னும் வேறு சில விஷயங்களிலும் காங்கிரஸ் கக்ஷியின் கொள்கைகளை ஜனங்களின் மீது திணித்து நிறைவேற்ற திட்டம் போடப்படுமென்றும் நாம் அறிகிறோம். ஒரு கக்ஷியாரின் நிர்வாஹம் நிவிர்த்திக்கப்பட்டு மற்றொரு கக்ஷி ஆக்ஷிபுரிய ஆரம்பிக்கும்போது பல மாறுதல்கள் ஏற்படுவது ஸஹஜமேயாகும். ஆயினும் ஒரு கக்ஷியார் மீது கூறப்பட்டுவந்த தோஷங்களையெல்லாம் மற்றொரு கக்ஷியார் தங்களுடைய நிர்வாஹ காலத்திலும் செய்வது பெரும்பிசகான கார்யமேயாகும். காங்கிரஸ்கார் இந்த நியாயத்தை கவனியாமல் தங்கள் இஷ்டப்படியெல்லாம் திட்டம்போட்டு அதன்படி நடக்கும்படி ஜனங்களை நிர்பந்திப்பார்களோ வென்ற ஸந்தேஹம் பல விடங்களில் தோன்றிவருகிறது.

உதாஹரணமாக ஹிந்தி விஷயத்தை பார்க்கலாம். காங்கிரஸ்வாதிகள் வெகுகாலமாக ஹிந்திபாஷையை தேசப் பொதுபாஷையாக ஆக்கிவிட முயற்சிசெய்துவருவது தெரிந்த விஷயம். ஹிந்தியானது தேசப் பொதுப் பாஷையாக இருக்க அர்ஹதையுள்ளதா, இல்லையா என்ற சர்ச்சையில் நாம் இறங்க உத்தேசிக்கவில்லை. காங்கிரஸ்வாதிகள் அதை போற்றிவளர்க்க முயற்சிப்பதையும் ஒருவரும் ஆக்ஷேபிக்க நியாயமில்லை. ஆயினும் அவர்கள் தங்கள் கையில் ராஜ்ய நிர்வாஹம் கிடைத்தவுடன் அப்பாஷையைக் கட்டாயப் பாடமாக ஏற்படுத்தி நிர்ப்பந்த முறையில் நம்மீது திணிக்க உத்தேசிப்பது நியாயமாகத் தோற்றவில்லை.

இவ்விஷயமாகப் பிரதமமந்திரி தமது அபிப்ராயத்தை வெளியிட்டது முதல் தென்னிந்தியாவில் ஆக்ஷேபமும் அதிருப்தியும் தோன்றியிருப்பது கவனிக்கத்தக்கது. இதுவரையில் ஹிந்தி சிற்சில விடங்களில் இஷ்டப்பாடமாக இருந்துவந்ததில் ஒருவருக்கும் ஆக்ஷேபமிருந்ததில்லை. ஆனால் அதை கட்டாய முறையில் ஏற்படுத்த உத்தேசிப்பதினாலேயே எதிர்க்கிளர்ச்சி தோன்ற ஆரம்பித்துவிட்டது. இது நாளடைவில் முற்றி எங்கும் அதிருப்தி அதிகமாகி காங்கிரஸ் கக்ஷியாக்ஷிக்கே கேடுவிளைவிக்கக்கூடியதாக முடியலாம். நிர்பந்தமுறையே இதற்குக் காரணமாகும்.

காங்கிரஸ் ஆக்ஷியில் நன்மை ஏற்படுமென் எதிர்பார்த்தவர்களில் பலர் இது போன்று நிர்ப்பந்த முறைகளால் கார்யம் செய்வதைக் கண்டு கலக்கமடைந்து வருகிறார்கள். ஜஸ்டிஸ் போன்ற கக்ஷியார் தங்கள்கக்ஷி திட்டத்தை பலாத்காரமுறையில் ஜனங்கள் மீது சுமத்திவிட்டதாக காங்கிரஸ் வாதிகள் குறைகூறிவந்தார்கள்.

சிலவிஷயங்களில் அதை எதிர்க்கவும் ஸத்யாக்ரஹம் முதலியவை செய்து சிறை செல்லவும் கிளர்ச்சிசெய்தார்களல்லவா?

அதேகாங்கிரஸ்வாதிகள் தாங்கள் நிர்வாஹமேற்றபின் பலாத்கார முறையைப் பின்பற்றி கார்யங்களைச்செய்ய முற்படுவது என்ன நீதி ? ஹிந்தியை நாம் ஒரு உதாஹரணமாகக் காட்டினோமேயல்லது அதுபோல் அநேக விஷயங்களில் சட்ட நிர்ப்பந்த மூலமாகக் கார்யஸித்திபெற காங்கிரஸ் நினைப்பதாகத் தெரிவதாலேயே இதை எச்சரிக்கவேண்டியது அவச்யமாயிற்று. காங்கிரஸ் நிர்வாஹத்தில் எந்த அம்சத்திலும் நிர்ப்பந்தம் அல்லது பலாத்காரமுறை அடியோடு மறையவேண்டும். ஜனங்கள் வேண்டாத அம்சத்தையே பலாத்காரத்தினால் ஏற்படுத்த வேண்டிய அவச்யமேற்படும். ஆதலால் காங்கிரஸ்வாதிகள் நிர்ப்பந்த முறைகளால் எவ்வளவுக்கெவ்வளவு கார்யம் செய்ய முயற்சிக்கிறார்களோ, அவ்வளவுக்கு இவர்களுடைய திட்டங்களை பொதுஜனங்கள் ஸ்வத: ஏற்கவில்லையென்பது தெளிவாகுமல்லவா ?

ஒருவிஷயம் ஜனங்களுக்குப் பிடித்தமாயிருந்தால் அவர்கள் தாங்களாகவே அதை அநுஸரிப்பார்களல்லவா ? பிடிக்காததைத்தானே பலாத்காரத்தினால் புகுத்தவேண்டும் ?

ஏற்கனவேயிருந்த அதிகாரிவர்க்கம் ஜன விருப்பமற்ற கார்யங்களை நிர்ப்பந்தமாக நம்மீது சுமத்துவதாகச்சொல்லி அவைகளைத் தடுக்க ஸத்யாக்ரஹம், சட்டமறுப்பு, ஜயில்வாஸம் முதலிய சண்டித்தனங்களை காங்கிரஸ்காரர்கள் கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். இப்போது காங்கிரஸ்காரர்களே அதிகாரிவர்க்கமாக இருந்து நிர்ப்பந்தங்களை கையாள முற்பட்டால், ஜனங்கள் ஸத்யாக்ரஹம், சட்டமறுப்பு முதலிய உபாயங்களைக் கைகொள்ள முற்படலாமல்லவா? அப்போது காங்கிரஸ் அதிகாரிவர்க்கம் என்ன செய்யும்? ராஜ்ய ஸமூஹக் கட்டுப்பாடுகளையும் வரம்புகளையும் காங்கிரஸ்காரர்கள் ஏற்கனவே அழித்து வழிகாட்டியிருக்கிறார்களே ! அதே ஸாதனங்களைக்கொண்டு காங்கிரஸ்காரர்செய்யும் நிர்ப்பந்த அதிகாரச் சட்டதிட்டங்களையும் பொது ஜனங்கள் மீறலாமல்லவா? ஆதலால் எதிலும் நிர்ப்பந்தம் செய்யாமல் ஜனங்களுடைய இஷ்டப்படி நிறைவேற்றி வைக்கும்படி விட்டுவிடுவதே மந்திரிகளின் விவேகம் நிறைந்த கார்யமாகும்.

ஸ்ரீஜகத்குரு
வியாஸபூஜா முகாம்

Palokol
(க்ஷீராராம் க்ஷேத்திரம்.)
West Godavary Dt.

குறிப்புகள்.

ஆலயப்பிரவேச மசோதா வந்து விட்டது!!

சென்னை சட்ட ஸபையில் ஸ்ரீமான் வெங்கிட ஸுப்பா ரெட்டி என்பவர், தீண்டாதார் ஆலயப்பிரவேச மசோதா ஒன்றைக்கொண்டு வரப்போவதாக நோட்டீஸ்கொடுத்திருக்கிறார் ஆதித்திராவிடர், தீயர் முதலிய ஸகலதாழ்ந்த ஜாதியாருக்கும் இம்மாகாணத்திலுள்ள பொதுக்கோவில்களில் பிரவேசித்து ஜாதிஹிந்துக்களுக்கு ஸமமாக ஸ்வாமி தர்சனம் உரிமையுண்டென்று மசோதா சொல்லுகிறது. கோவில் அதிகாரிகளோ வேறு எவரோ இதைத் தடுத்தால் 100ரூபாய் அபராதம் விதிக்கபடவேண்டும். தீண்டாதார் பிரவேசத்திற்கு எதிராக கோவில் ஸம்பிரதாயமிருந்தால் அது செல்லுபடியாகாது. தீண்டாதார், சரீரசுத்தி, வஸ்திரம், புண்டரம் முதலிய சின்னங்களை ஜாதி ஹிந்துக்களைப்போல் தரித்துக்கொண்டுதான் போகவேண்டுமென்ற நியமம் உண்டு. இந்த மசோதாவைக்கொண்டு வந்ததற்கு அவர் கூறியுள்ள முகவுரை பழய கதையே. தீண்டாதாருக்கு ஜாதி ஹிந்துக்களைப்போல் கோவில் பிரவேச உரிமை இருக்கிறதாம். அவர்களும் அதை இப்போது விரும்புகிறார்களாம். ஜாதி ஹிந்துக்களும் இந்தஉரிமையை தீண்டாதாருக்கு அளிக்க உத்ஸாஹமுள்ளவர்களாக இருக்கிறார்களாம்.

இதைப்பற்றி அடுத்தஸஞ்சிகையில் விமர்சிப்போம்.

கள் குடியும் சாரதாச்சட்டமும்.

இந்தத் தலைப்பைப்பார்த்து நமது வாசகர்கள் அதிசயப்படக்கூடும். இவ்விரண்டிற்கும் என்ன ஸம்பந்தமென்றும் நினைக்கக்கூடும். உண்மையில் இரண்டுக்கும் ஸம்பந்தமில்லைதான். ஆனால் இரண்டையும் ஸம்பந்தப்படுத்திப்பேச இப்போது கிடைத்திருக்கும் ஸந்தர்ப்பத்தை உபயோகித்துக்கொள்ளவே மேற்படித் தலைப்புக்கொடுக்க முன்வந்தோம்.

காங்கிரஸ் மந்திரிஸபை ஏற்பட்டபின் கள்குடியைப்பற்றி அதிகம் பேச்சுநடக்கிறது. சில வர்ஷங்களுக்குள் பூர்ண மதுவிலக்கு ஏற்பட்டுவிடவேண்டுமென்று காந்திஜி ஆஜ்ஞை பிறப்பித்திருக்கிறார். இப்போது சில விடங்களில் பரீக்ஷார்த்தமாக மதுவிலக்கு நடத்தப்படுமாம்

இச்சமயம் காந்திஜி இதைப்பற்றி சில விவரணங்கள் வெளியிட்டுவருகிறார். பூர்ண மதுவிலக்கு ஏற்பட்டால் ஐரோப்பியர் முதலிய குடிவழக்கமுள்ள ஜாதியாரைப்பற்றி என்னசெய்வதென்பது இப்போது யோஜனை !

இதைப்பற்றி காந்திஜி என்ன சொல்லுகிறார் தெரியுமா? 14௳ வெளியான ஹரிஜனப் பத்திரிகையில் அவர் எழுதியிருப்பதைப் பாருங்கள் !

> “அஹிம்ஸை, ஸத்யம் இவற்றிடம் நான் வைத்திருக்கும் மதிப்பின் காரணமாகவே ஐரோப்பியர்களை மதுவிலக்கு விஷயத்தில் விலக்கவேண்டுமென்று நான் நினைக்கிறேன்.
>
> மானிடர் எல்லோர்க்கும் ஸரி, எல்லா தேசத்தாருக்கும்ஸரி, ஒரே மாதிரியான விதியை ஏற்படுத்த என்னால் முடியவில்லை. மதுபானம் எல்லோருக்கும் கேடுவிளைவிக்குமென்றும் நான் கூற முடியவில்லை. குளிர்ந்த பிரதேசங்களில் மதுபானம் அத்யவச்யமென்று நான் கருதக்கூடும். சாராயம் ஸாப்பிடுவதை அத்யவச்யமாகக் கருதும் ஐரோப்பியர் விஷயத்தில் நிர்பந்த முறையில் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வருவதில் நான் உஷாராக இருக்க வேண்டும்.”

இவ்வாறு காந்திஜி எழுதி ஐரோப்பியர்களின் குடிக்கும் உரிமையில் பிரவேசித்து நிர்ப்பந்தம் செய்வது அஹிம்ஸைக்கும், ஸத்யத்திற்கும் விரோதமென்கிறார். மேலும் எல்லா தேசத்திலும் எல்லா அதிகாரிகளுக்கும் பொருந்தக்கூடிய ஒரே விதியை ஏற்படுத்துவது அநீதியென்றும் காந்திஜி ஒப்புகிறார். ஆகலால் ஐரோப்பியர்களுடைய குடிக்கும் உரிமைக்கு சட்டமூலமாகத் தடை ஏற்படுத்தக் கூடாதென்கிறார்.

கள்குடி பாபச்செயலானால், அது ஸன்மார்க்க விரோதியானால், அது மனித ஸமூஹத்தை அழிக்குமானால் எல்லோருக்கும் அதில் ஒரேவிதமான நியாயமே இருக்கவேண்டும். அப்படியிருக்க காந்திஜீ குடி விஷயத்தில், ஐரோப்பியர், இந்தியர், என்ற பாகுபாடுசெய்வதில் அர்த்தமிருப்பதாகத் தெரியவில்லை. தமது கக்ஷியின் நேர்மையை காந்திஜி இதில் விட்டுக்கொடுத்துவிட்டதாகவே கருதவேண்டியிருக்கிறது. துர்மார்க்க ஹேதுவான குடியை மனித ஸமூஹத்திலுள்ள ஐரோப்பியர் விடமுடியாதென்று காந்திஜீயே கக்ஷிபேசி குடிக்கு ஆதரவுகாட்டுவது அதிசயமாயிருக்கிறது. ஐரோப்பா முதலிய தேசங்களில் குடியால் பலவிதம் ஸன்மார்க்க நெறி கெட்டிருப்பதை உலகம் அறியாததா ?

சாரதாச்சட்டத்தில் இவர் செய்ததென்ன ?

அப்படியிருந்தும் ஒருவருடைய உரிமையைப் பறிப்பது ஹிம்ஸையாகுமென்று காந்திஜீ கருதுகிறார். இந்த நியாயத்தை இந்தியர்கள் விஷயத்திலும் ஏன் சொல்லமுடியாதென்று பலர் வாதிக்கக்கூடும். ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோஸப் இப்படியே வாதிக்கிறார். குடிப்பவர்களுடைய உரிமையைப் பறிக்கக் கூடாதென்று அவர் கக்ஷி பேசுகிறார். சில வருஷங்களுக்கு முன்பும் திவான்பகதூர் ஸ்ரீநிவாஸன் முதலியவர்கள் சட்டசபையில் மதுவிலக்கை எதிர்த்துப்பேசுகையில், குடிப்பவர்களுடையஉரிமையில் தலையிடுவது அநீதியென்று பேசவில்லையா? ஆகையால் காந்திஜீ ஐரோப்பியர்களுடைய குடிக்கும் உரிமைக்கு மட்டும் பரிந்து பேசுவது விசித்திரமாயிருக்கிறது.

கிடக்க, குடிக்கும் உரிமையை நிர்ப்பந்தத்தினால் பறிப்பது அஹிம்ஸைக்கு விரோதமென்று நியாயம் பேசும் காந்திஜி, சாரதாச் சட்ட விஷயத்தில் எப்படிநடந்துகொண்டார்? மதாசாரப்படியுள்ள விவாஹ உரிமையை பறித்து நாசமாக்க இவர் செய்த விஷமமென்ன ? பெண்களுக்கு 18 வயது வரையில் கூட விவாஹவயதை உயர்த்தலாமென்று இவர் வாதிக்கவில்லையா ? சாரதாச்சட்டத்தைத் தாம் ஆதரிப்பதாக நல்ல ஸமயத்தில் தந்திகொடுத்து இந்தியா சட்டஸபை மெம்பர்களைத் தூண்டிவிடவில்லையா ? “எப்போதும் எல்லோருக்கும் பொருந்தக்கூடிய பொதுவிதி ஒன்றைச் செய்வது அநீதி” என்று இப்போது பேசும் காந்திஜி மதாபிமானிகளுக்கும் மதத்தை விட்டவர்களுக்கும் பொதுவாக சாரதாச்சட்ட அக்கிரமத்தை எப்படி ஆதரித்தார்? ஐரோப்பியர்களின் குடி உரிமைக்குக் கண்ணீர் சொரியுமிவர், தம் இனத்தாரின் மதாசார உரிமைக்கு என்ன பாதுகாப்பு அளித்தார்? குடிக்கும் உரிமையைவிட, விவாஹாதி மதாசார உரிமைகள் தாழ்ந்தவையா? ஸன்மார்க்க நாசகாரிகளா? என்னே! காந்தியத்தின் நீதிப்போக்கு? பார்த்தீர்களா?

அத்வைத ஸபை, கும்பகோணம்.

நாளது ஈச்வர-௵ ஆவணி-௴ 15௳க்குச் சரியான 1937-௵ ஆகஸ்டு-௴ 30௳ திங்கட்கிழமை அத்வைத ஸபையின் 43-வது வருஷாந்திர வித்வத் ஸதஸ் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்கள் பரிபூர்ண அனுக்ரஹத்தை முன்னிட்டு கும்பகோணம் ஸ்ரீமடத்தில் ஆரம்பித்து ஒருவாரம் வழக்கம்போல் நடத்துவதாக கமிட்டியில் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

ஆகையால் ஷை ஸதஸ் ஆரம்பத்திற்கு முன்னதாகவே தாங்கள் விஜயம் செய்து ஸதஸ் முடியும்வரையில் கூட இருந்து ஆதரிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். கூடிய வரையில் திரவிய ஸகாயம் செய்துகொடுக்கும்படி வேண்டுகிறேன்.

நாளது 1937-௵ செப்டம்பர்-௴ 5௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு கும்பகோணம் ஸ்ரீமடத்தில் அத்வைத ஸபா மெம்பர்களின் 43-வது வருஷத்திய ஜனரல் மீட்டிங் நடத்துவதாக கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு தாங்கள் அவசியம் விஜயம்செய்து ஷை சபை அபிவிருத்தி அடைவதற்குரிய தங்கள் அபிப்பிராயங்களை தெரியப்படுத்தவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

வாசிக, லேகன பரீக்ஷைகளும் வாக்யார்த்தங்களும் நடத்தப்படும்.

ஈச்வர-௵ ஆவணி-௴ 21௳ (5–9–37) ஞாயிற்றுக்கிழமை தீண்டாதாருக்கு ஆகமரீதியாய் ஆலயப்பிரவேசத்தில் அவகாசம் உண்டா என்கிற விஷயம் பரிசீலனை செய்யப்படும். வித்வான்கள் யாவரும் இதுவிஷயமாய் ஸபைக்குத் தங்கள் அபிப்பிராயங்களை ஆகம வசனப்ரமாணத்துடன் வியாஸரூபமாக கொண்டுவரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. அன்று தினம்! வைதிக கர்மாக்கள் கிருஹஸ்தர்களுக்கு சரிவர நடத்திவைக்க வேண்டியதற்கு ஸபையில் செய்யக்கூடிய ஏற்பாடுகளை யோசிக்கப்படும். வேறு தர்ம விசாரங்கள் நேர்ந்தால் அவைகளும் அன்று தினம் நடத்தப்படும்.

பரீக்ஷாதிகாரி அவர்கள் அடியில்கண்ட தினங்களில் இரவு 7-30மணிக்கு அவரவர்களுக்குக் குறிப்பிட்டிருக்கும் விஷயங்களை பற்றி தமிழ் நடையில் உபன்யாஸம் செய்வார்கள்.

30–8–37 திங்கள் ராஜமன்னார்குடி மஹாமஹோபாத்யாய, சாஸ்திர திலகம், மஹோபதேசகர், சாஸ்திர ரத்னகரம் பிரும்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளால் பகவத்பாதாள் அவதார மஹிமையும் கோவிந்த பகவத்பாதாளிடம் உபதேசக்ரஹணமும்.

31–8–37 செவ்வாய் கருங்குளம் மஹாமஹோபாத்யாய சாஸ்திர திலகம் வேதாந்த விபூஷணம் பிரும்மஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகளால் பாஷ்யாதி ப்ரணயனமும் குமரில பட்ட ஸமாகமும்.

1–9–37 புதன் திருவையார், சாஸ்திர ரத்னகா பிர்மஸ்ரீ விஸ்வநாத சாஸ்திரிகளவர்களால் மண்டன ஜயபூர்வகம் திக்விஜயாதி ஸர்வக்ஞ பீடாரோகண பர்யந்தம்.

2–9–37 வியாழன் திருக்கழுக்குன்றம் வேதாந்தலங்காரம் பிர்மஸ்ரீ ராமச்சந்திர தீக்ஷிதரவர்களால் ஹேதுபலங்களுடன் சிரவண நிரூபணம்.

3–9–37 வெள்ளி திருவையார் சாஸ்திர ரத்னகா பிர்மஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகளவர்களால் பாமதிவிவரணகாரருக்குநந்தை சலி விசேஷங்களும் அபிப்பிராய பேதங்களும்.

4–9–37 சனி திருக்கழுக்குன்றம் வேதாந்தாலங்காரம் பிர்மஸ்ரீ ராமச்சந்திரதீக்ஷிதரவர்களால் ஹேதுபலங்களுடன் மனனநிதித்யாஸன நிரூபணம்.

5–9–37 ஞாயிறு ராஜமன்னார்குடி மஹாமஹோபாத்யாய சாஸ்திர திலகம், மஹோபதேசகர், சாஸ்திர ரத்னகரம் பிர்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளவர்களால் ஜீவன் முக்தியும் விதேக முக்தியும்,

ஸதஸ்ஸுக்கு விஜயம்செய்யும் வித்வான்களில் அடியில் கண்ட வித்வான்கள் அடியில் குறிப்பிட்டிருக்கிறபடி மாலை 5 மணிக்கு உபன்யாஸம் செய்வார்கள்.

30–8–37 திங்கள் கோவிந்தபுரம் பிர்மஸ்ரீ வாஸுதேவ சாஸ்திரிகளவர்களால் மதாசார போதனை ஆவச்யகதையும் அதன் உபாயங்களும்.

31–8–37 செவ்வாய் மேலக்காவேரி பிர்மஸ்ரீ சிவராம சாஸ்திரிகள் அவர்களால் ‘காலோவாகாரணம் ராக்ஞ: ராஜாவாகாலகாரணம், இதிதே ஸம்சயோமாபூத் ராஜாகாலஸ்யகாரணம்’ என்கிற ச்லோக தாத்பர்ய நிரூபணம்.

1–9–37 புதன் போலகம் பிரும்மஸ்ரீ ராமசாஸ்திரிகள். கலியில் தர்ம ஸங்கோசம் எவ்வளவு வரையில் அனுமதிக்கலாம்.

2–9–37 வியாழன் தேவங்குடி பிர்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகளவர்களால் ஸ்மிருதிகளின் ஏக வாக்யதா ஆவச்யகதா நிரூபணம்.

3–9–37 வெள்ளி இஞ்சிக்கொல்லை ஆத்மவித்யாபூஷணம் பிர்மஸ்ரீ ஜெகதீச்வர சாஸ்திரிகள் அவர்களால் அஸ்ப்ருச்யத்வமும் ஆலயப்ரவேசமும்.

4–9–37 சனி கும்பகோணம் பிரும்மஸ்ரீ சி. சுப்பிரமணி சாஸ்திரிகளவர்களால் ப்ராசீன ராஜாங்க நிரூபணம்.

5–9–37 ஞாயிறு சேங்காலிபுரம் ப்ரஸங்க பானு பிர்மஸ்ரீ வைத்தினாத சாஸ்திரிகளவர்களால் தைவ புருஷகார பலாபல நிரூபணம்.

ஈச்வர-௵ ஆவணி-௴ 22௳ (6–9–37) திங்கட்கிழமை காலை 8-மணிக்குமேல் ஸ்ரீ பரமாசார்யாள் பூர்ண அனுக்ரஹத்துடன் கூடிய வித்வத் ஸம்மானங்கள் நடைபெறும்.

அத்வைத ஸபை கவுன்ஸில் உத்திரவுபடி,
M. K. வைத்தியநாதய்யர் B. A, B. L.,
காரியதர்சி.

இந்தியா சட்டஸபை.

ஸிம்லாக்கூட்ட ஆரம்பம்.

23௳யன்று ஸிம்லாவில் இந்தியா சட்டஸபையின் கோடைகாலக்கூட்டம் ஆரம்பமாயிற்று. பல புதிய மெம்பர்கள் ராஜவிச்வாஸப் பிரமாணம்செய்து ஆஸனத்தில் அமர்ந்தார்கள்.

ஸான்ஸிபார் கிராம்பு மசோதா விஷயமாக ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி ஒரு கண்டனப் பிரேரணை கொண்டுவந்தார். ஆனால் அது தோற்றுவிட்டது. ஜின்னா கக்ஷியார் கவர்ன்மெண்ட் தரப்பில் வோட் செய்ததே காரணமாம்.

இன்னும் பல அவஸரப்பிரேரணைகள் கொண்டுவரப்படுமாம்.

தடை நீக்கம்.

அப்துல் காபர்கான் எல்லைப்புறத்திற்குப் போகக்கூடாதென்று இருந்துவந்த தடையை அந்த கவர்ன்மெண்டார் நீக்கிவிட்டார்கள். அவர் சீக்கிரத்தில் அந்த பிரதேசங்களுக்குப் போவாராம்.

இதைப்பற்றி வெகுநாளாகப் பெரிய கிளர்ச்சி நடந்துவந்தது.

25177
சென்னை-600 005.

॥ राजा कालस्य कारणम् ॥

(ராஜா காலஸ்ய காரணம்.)

மஹாமஹோபாத்யாய ஸ்ரீ கிருஷ்ணமாசாரியார் எழுதுகிறார்:—

சீர்திருத்தக்காரர்கள், மேலே குறிப்பிட்டிருக்கும் ஒரு சிறு வாக்கியத்தை எடுத்துக்கொண்டு செய்யும் அட்டஹாஸம் அனைவரும் அறிந்ததே. ஸநாதன தார்மிகளோ, அந்த வசனத்தின் முன்னுள்ள சுலோகங்களையும் ஸந்தர்ப்பத்தையும் அநுஸரித்து, இந்த வசனத்துக்கு ஸரியான அர்த்தத்தை எழுதி, இது சீர்திருத்தவாதிகளுக்கு அநுகூலமல்லவென்றும் நேர்விரோதமானதென்றும் வாதித்துவருகிறார்கள்.

"காலத்தை தன்னிஷ்டப்படி மாற்ற அரசனுக்கு அதிகாரம் கிடையாது" என்றும், பழைய காலத்தில் ஒருவரும் இம்மாதிரி அதிகாரம் செலுத்தவில்லை என்றும் பலமாக எதிர்க்கிறார்கள்.

ஆனால் இந்த வசனத்தை வைத்துக்கொண்டே காலத்தைமாற்ற (காலம் மாறவில்லை) நினைத்த இரு பெரிய அரசர்களைக் காளிதாஸ மஹாகவி தனது கிரந்தத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

விக்ரமோர்வசீய நாடகம் 4-வது அங்கத்தில் புரூரவஸ் அரசன் "என்மனவருத்தம் வளருவதை (அடக்க வழியிருக்க) வீணாகவன்றோ நான் உபேக்ஷை செய்கின்றேன். அரசன்காலத்துக்குக் காரணம் என்று ருஷிகளே சொல்லுகிறார்களல்லவா? ஆகையால் இந்த மாரிகாலத்தை நான் ஏன் நிராகரிக்கக் (போகும்படி செய்யக்) கூடாது" என்று சிரித்துக்கொண்டு சொல்லுகிறதாக மஹாகவி எழுதியிருக்கிறார்.

சாகுந்தலத்தில் 6-வது அங்கத்தில் துஷ்யந்த மஹாராஜன்— "ஓஹோ! ஏன் கட்டளைப்படி நடக்கமாட்டாயா? …. …. உன்னை நான் தாமரையகமாகிய சிறையில் இடுவிப்பேன்" என்று சகுந்தலையின் முகத்தில் விழவரும் வண்டைக்குறித்துக் கூறினதாக எழுதப்பட்டிருக்கிறது. 'பகலாயிருந்தாலும், ராஜா காலஸ்யகாரணமாகையால் பகலைநீக்கி இரவை வருத்தி இவ்வாறு வண்டுக்குத் தண்டனை விதிப்பேனென்பது துஷ்யந்தன் கருத்து என்று பல உரைகளும் பகர்கின்றன.

இவ்விரு அரசர்களும் இவ்வசனத்தைக் கருத்தில் கொண்டே இவ்வாறு காலத்தை மாற்றப் புறப்பட்டனர் என்பது தெளிவாகவில்லையா? ஆகையால் ஸநாதன தார்மிகள் சொல்லுகிறபடி உதாஹரணமில்லை என்று சொல்லக்கூடாதென்று தோன்றக்கூடும்.

ஊர்வசியை விட்டுப்பிரிந்து அலைந்துதிரிந்து மேகத்தை ராக்ஷஸனென்றும், மழையை பாணவர்ஷமென்றும், மின்னலை ஊர்வசியென்றும் நினைக்கும்படி பயித்தியம் பிடித்துக் கண்டபடி பிதற்றும் புரூரவஸின் வார்த்தைகளே கீழில் காட்டியவைகள் என்பதும், அந்தச்சிரிப்பு பயித்தியத்தில்வரும் அசட்டுச் சிரிப்பு என்பதும், சித்திரத்தில் எழுதிய சகுந்தலையையும் வண்டையும் உண்மையாகவே எண்ணி உள்ளம் மயங்கி உன்மத்ததசையில் உழலும் துஷ்யந்தனின் பேச்சே கீழே குறிப்பிட்டது என்பதும் நன்கு ஆராயத் தக்கவை.

இதிலிருந்து "ராஜா காலஸ்ய காரணம்" என்பதை அப்படியே கொண்டு காலத்தை மாற்றப்புறப்படும் அரசர்களின் ஸ்திதி எத்தகையது என்பதும் விளங்குகிறதல்லவா!

இவ்வாறு காலத்தை மாற்றப் புறப்பட்ட பயித்தியம் பிடித்த பல அரசர்களையும் கல்பனாமயங்களான காவ்ய நாடகங்களில் (புராணங்களில் எப்படியோ!) நாம் தேடிபிடிக்க முயன்றால் பிடிக்கலாம்.

ஹத்து குறையக்கூடாது.

வங்காள சட்டசபையில் அந்தமான் கைதிகள் விஷயமாக அவஸரப்ரேரணையைப் பற்றி நடந்த விவாதத்தில் நீதியிலாகா மந்திரியான கனம் நாஸிர் செய்த எச்சரிக்கையொன்று எல்லா மாகாண மந்திரிகளாலும் கவனிக்கப்பட வேண்டியது அவசியமென்று நினைக்கிறோம். ஒருவர் அல்லது ஒரு கூட்டத்தாருடைய பயமுறுத்தலுக்கோ, பிடிவாதத்திக்கோ ஒரு கவர்ன்மெண்டு இணங்கி, விட்டுக்கொண்டேயிருந்தால் ராஜ்ய நிர்வாகத்தில் ஹத்துக் குறைந்து எல்லோருக்கும் அதனிடம் அலக்ஷ்யபுத்தி ஏற்படும் என்று அவர் சொன்னார். எல்லா விஷயங்களுக்கும் இந்த நியாயம் பொருந்தாதாயினும் சில விஷயத்தில் கவர்ன்மெண்டு ஹத்துடன் நடப்பதே விரும்பத் தக்கதாகும். காங்கிரஸ் மந்திரிசபை ஏற்பட்டதில் பலர் குதூஹலம் அடைகிறார்கள். முக்கியமாக ஸர்க்கார் ஊழியர்களுக்கு ஓர் குஷி பிறந்திருப்பதாகத் தெரிகிறது. காங்கிரஸ் மந்திரி பிகுஸூகு இல்லாமல் கண்டிப்பு, கர்வம் இல்லாமலும் ஸாதாரணமாக ஜனங்களுடன் பழகுவதால் ஸர்க்கார் ஊழியர்கள் தங்கள் வேலைகளில் பயமில்லாமல் அச்ரத்தைகொள்ள இடம் ஏற்படுமென்று சிலர் அஞ்சுவதாகத் தெரிகிறது.

கீழுள்ள கிராமாதிகாரி முதல் மேல் அதிகாரிகள் வரையில் காங்கிரஸ் மந்திரிகளின் ஸாதுத்தனத்தை அறிந்து அந்த சலுகையால் தங்கள் கடமையில் ஆலஸ்யமும் அலக்ஷ்யமும்காட்டினால் ராஜ்யநிர்வாஹமே குலைந்துவிடும். ஆதலால் மந்திரிகள் ஒரு புறம், பிரீதிவிசுவாஸம் காட்டினாலும், மற்றொருபுறம் நிர்வாஹக் கண்டிப்பைக் காட்டாத வரையில் பெரிய தீங்கு ஏற்படக் கூடும். முனிஸிபாலிடிகளும், கிராமபஞ்சாயத்து முதலியவைகளும் எப்போதும்போல் ஹத்து குறையாமல் நிர்வாஹம் நடத்திவரும்படி மந்திரிகள் செய்ய வேண்டும்.

மேலும் மந்திரிகள் தங்களுடைய ஸாத்வீகத்தனத்தால் யார் எங்கு எதற்காக அழைத்தாலும் போவது குறையவேண்டும். காங்கிரஸ் மந்திரிசபை வந்துவிட்டதற்காக எல்லோரும் ஓரேயடியாக அவர்களிடம் ஓடி ஒரு நிமிஷத்தில் தங்கள் தங்கள் குறையை அகற்றிக்கொண்டு விடப் போட்டிப் போடுகிறார்கள். பாமரர்கள் தான் இப்படி என்றால் படித்தவர்கள் கூட இந்த வேலையில் முனைந்திருப்பது விந்தையே.

இப்போது சில தினங்களாகநடந்துவரும் ஸம்பவங்களிலிருந்து ஏற்கனவே கவர்ன்மெண்டிலிருந்த ஹத்துக் குறைந்துவிடுமோ என்று நாம் நினைக்கவேண்டியிருக்கிறது.

ஒரு நியாயவாதி.

ஸநாதன தர்மிகளின் தூது.

நாளது 1937௵ ஆகஸ்டு௴ 30௳ யன்று ஆலயபிரவேச பிரசினை சம்மந்தமாக ஸநாதனிகள், மேன்மை தங்கிய கொச்சி மகாராஜா அவர்களை பேட்டிகண்டு பேச ஏற்பாடு செய்திருக்கின்றனர். அடியில்கண்ட பிரமுகர்கள் மேற்படி தூதுக்கோஷ்டியில் கலந்துகொள்வார்கள்.

1. அகில இந்திய வர்ணாசிரம சுயராஜ்ய சங்கத்தலைவர் ராவ்சாஹிப் N. நடேசய்யர் Γ.A., B L.,
2. அகில இந்திய வர்ணாசிரம சுயராஜ்ய சங்க பிரதம மந்திரி நாகபுரி ரிடையர்டு ஜில்லா ஜட்ஜு ராவ்பகதூர் பாங்கே.
3. மதுரை, மாஜீ சட்டசபை மெம்பருமான அட்வகேட் மகா-௱-ஸ்ரீ K. ராமய்யங்கார் அவர்கள் B.A., B,L.
4. பம்பாய் ஸொலிஸிட்டர் ஸ்ரீமான் பன்னுபாய் பாண்டியா.
5. பண்டரீபுரம் ஸ்ரீயுத உம்பர்கார் சாஸ்திரி.
6. காசி, பண்டிட் தேவநாயகா சாரியார்.
7. காசி, பண்டிட் ராஜஸ்ரீ ராஜேஸ்வர சாஸ்திரி (திராவிட).
8. கல்கத்தா மஹாமஹோபாத்தியாய துர்க்காசரண்.
9. கும்பகோணம் ரிடையர்டு இன்கம்டாக்ஸ் ஆபீஸர் மகா-௱-ஸ்ரீ சிவராமய்யர் அவர்கள்.
10. தஞ்சாவூர் மகா-௱-ஸ்ரீ கந்தஸாமி பிள்ளை அவர்கள் M.R., A.S.
11. கும்பகோணம் ரிடையர்டு இஞ்சினியர் மகா-௱-ஸ்ரீ S. சாமிநாத சாஸ்திரிகள் B.A. B.E C.E.
12. கும்பகோணம் மஹாமஹோபாத்தியாய பண்டிதராஜ R V. கிருஷ்ணமாசாரியார் அவர்கள்.
13. திருவடமருதூர், ரிடையர்டு இஞ்சினீர் மகா-௱-ஸ்ரீ S நடேசய்யர் B A.B.C.E.
14. அகில இந்திய வர்ணாசிரம சுயராஜ்ய சங்க ஜாயிண்டு காரியதரிசி மகா-௱-ஸ்ரீ M. வெங்கடாசலம் அவர்கள் B.A , B.L.
15. சிறுவலை ஜமீந்தார் ராவ்பஹதூர் P. C. முத்து செட்டியார். கொல்லங்கோடு ஸர் வாஸுதேவ ராஜா அவர்கள் தூதுகோஷ்டிக்கு தலைவராயிருந்து பேட்டி காண்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சீக்ரரேகா என்னும் தமிழ் ஷார்ட் ஹாண்ட்.

சென்ற 1—7—37 முதல் பிரதிதினம் காலையில் குடந்தைஸ்ரீ ஆசார்யாள் மடத்தில் இலவசமாக சீக்ரரேகா போதிக்கப்பட்டு வருகிறது சுமார் 20 பையன்கள் வரையில் வந்து கற்றுப்போகிறார்கள். 5, 6 பேர்கள் 35 வார்த்தைவேகம் எழுத சக்தியுடையவர்களாயிருக்கிறார்கள். நாளது மாதம் 30௳முதல் அத்வைத ஸதஸ் நடப்பதாக தெரிந்து, அது நடக்கும்போது பிரஸங்கங்களை சுருக்கெழுத்தில் எடுத்து போதிய பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது. ஸதஸ் முடிவில் ஷைபையன்களை வைத்து வேகப்பரீக்ஷை கொடுத்து நன்றாக எழுதக்கூடியவர்களுக்கு பயிற்சிபத்ரங்கள் (சர்டிபிகேட்டுகள்) பரிசுகளும் வழங்கவும் ஏற்பாடு ஆகிவருகிறது. ஸஜ்ஜனர்கள் எல்லோரும் ஆதரிக்கவேணுமாய் கோரப்படுகிறது.

எஸ் சந்தான ராமன்
சீக்ரகோ பிரசாரகர்.

மிருகபலியைத் தடுக்க மசோதா.

சென்னை சட்டஸபையில் ஸ்ரீமான் ராமலிங்கரெட்டி என்பவர் மிருகபலியைத் தடுக்கும் மசோதா ஒன்றைக் கொண்டுவரப்போவதாக அறிவித்திருக்கிறார். இதன்படி கோவில்கள், மசூதிகள், மாதாகோவில் முதலிய தெய்வஸ்தலங்களில் மிருகங்கள் பலியிடப்படுவது தடுக்கப்படுமாம்.

உயர்ந்தது!
15 ஜோடி யக்ஞோப வீதமும் (பூணூல்கள்) கால்வலி தைலமும் பேதி மாத்திரை 50-ம் 8 அணா ஸ்டாம்பாக அனுப்பி பெறலாம். கடிதங்கள் இங்கிலீஷில் எழுதவும்.
கிடைக்குமிடம்:—
Kalbag Gangadha & Sons,
Kumta (Karwar).

நாகப்பட்டணத்தில் உபன்யாஸங்கள்.

பிரும்மஸ்ரீ வி.கே. வெங்கடராம சாஸ்திகளின் உபன்யாஸ சுருக்கம்

பின் இரண்டாவது அம்சமாகிய ஸ்வரூபத்தை கவனிப்போம். கடவுளின் ஸ்வரூபமானது சாஸ்திரங்களில் அனேக பெயர்களால் வர்ணிக்கப்பட்டிருந்தபோதிலும் சாதாரணமாக ஆஸ்திகர்களால் அகண்டம், பரிபூர்ணம், சத்து, சித்து, ஆனந்தம் முதலிய சொற்களால் குறிக்கப்படுகிறது. ஆனால் கடவுள் ஞானஸ்வரூபம் என்னும் விஷயத்தை இன்று நாம் விசாரிப்பதாக ஆரம்பித்திருப்பதால். இதர பெயர்களாச குறிக்கப்படுவதைப் பற்றி கவனிக்க அவகாசமில்லை. ஆனால் ஞானமென்பது அறிவேயாகும். அந்த அறிவானது 'சத், சித், ஆனந்தம் என்னும் இலக்கணங்களில் நடுவாயுள்ள சித்தாகவே ஞானம் என்பதாக் வர்ணிக்கப்படுகிறது. ஹஸ்தாமலகாசார்யாளின் தகப்பனார் அவர்களுடைய சிறுவயதிலேயே அதாவது குமரப் பருவத்திலேயே தனது புத்திரனுடையபுத்தி வியாபகமற்றதாகவும் பிரம்மஹத்யாதி தோஷங்களால் பீடிக்கப்பட்டது போலவும் பேசுவதேயில்லாமல் மூகத்வத்தை அடைந்தது போலவும் வஸ்திரம், ஆஹாரம், சயனம் முதலியவைகளைப் பிறரால் கொடுக்கப்பட்டு பெற்றுக் கொள்பவனாகவும் சித்தப்பிரமம் கொண்டது போல ஜல மல மோசனங்களையும் கவனியாது இருப்பதைப் பார்த்து பிறர்களால் நிந்திக்கப்படக் கூடிய ஸ்திதியையும் பார்த்து தாங்காது ஆதிசங்கரபகவத்பாதாள் வருவதைக் கேட்டு அவர்களுடைய வீக்ஷணத்திற்குப் பாத்திரமானால் ஒருக்கால் சத்புத்தி உண்டாகலாம் என்று நினைத்து அவர்களுடைய சரணாரவிந்தங்களில் குமாரனைக் கிடத்தியபோது ஆசார்யாள் "யாரப்பா உன் பெயரென்ன" என்று வினவ அக்குமாரன் உலகவாழ்க்கையிலிருந்து தப்புவதற்கு ஓர் அவகாசம் கிடைத்திருப்பதாக எண்ணி அஞ்சலி ஹஸ்தராக ஸ்வாதீன புத்தியுடையவரைப்போல் எழுந்து நின்று கேள்விகளுக்கு அனேக, ச்லோகங்களால் பதிலுரைத்தார்.

அவைகளில் ஓர் ச்லோகத்தினால்,

मुखाभासाके दर्पणे दृश्यमानो मुखत्वात्पृथक्त्वे नैवास्तिवस्तु । चिदाभासको धीषु जीवोपितद्वत्सानित्योपलब्धिस्वरूपोहमात्मा ॥

என பதிலுரைத்தார். இதனால் ஞானஸ்வரூபனாய் விளங்குகிறவன் ஜீவனென்றும் அந்த ஜீவனே சித்தின் ஆபாஸனென்றும் ஆதலால் சிதாபாஸன் ஜீவனெனப்படுவனென்று சாஸ்திரங்களில் சொல்லப்படுகிறதென்றும் இந்த சிதாபாஸன் விளங்காத பக்ஷத்தில் ஜீவர்களெல்லாம் கல்லாலோ மரத்தாலோ மண்ணாலோ புல்லாலோ செய்யப்பட்ட பதுமைகளைப்போல் ஜடமாகத் தோற்றுவார்களென்றும் ஆனால் மிருக பக்ஷ்யாதிகளிடத்தில் விளங்கும் சிதாபஸனுக்கும் மனிதர்களிடத்தில் விளங்கும் சிதாபாஸனுக்கும் அங்கங்குள்ள சுத்த அசுத்த அந்தக் கரணங்களின் தாரதம்யங்களுக்குத் தக்கபடி கௌரவம் ஏற்படுகிறதென்றும் தெரிவிக்கப்படுகிறது. சிதா பாஸன் மனதை விட்டு இரான். இஜ்ஜீவனை மனுஷ்யனென்ற சொல்லால் வழங்கப்படுவதைக் கொண்டே மனஸ்ஸம்பந்தன் ஜீவன் எனக் கருதலாயிற்று. மெய், வாய், கண், மூக்கு, செவி, என்னும் ஐந்து வாக்காதி கர்மேந்திரியங்கள் ஐந்து ப்ராணாதிகள் ஐந்து, மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் நான்கு ஆகபத்தொன்பது தத்வங்கள் இருக்க மனதின் சேர்க்கையாலே மனுஷ்யன், என்று வழங்கப்படுவதை கவனிக்க மனத்திற்கு ஓர் உத்கிருஷ்டம் இருப்பதாக ஏற்படுகிறது. அது எதுபோலென்றால் உலகத்தில் தைலம், லேகியம், சூர்ணம் முதலிய ஔஷதங்களுக்கு அவைகளில் நிறை அதிகமாக உள்ள சரக்கை முன்னிட்டே பெயரானது ஏற்படுகிறது. அநேக சரக்குகள் சேர்க்கப்பட்டிருந்தாலும் தாய் சரக்கான அமுக்காராக்கிழங்கின் சம்பந்தத்தால் அச்வகந்தி (அமுக்கரா) சூர்ணம் என்று விளங்குவது போல் ஜீவனுடைய ஸ்தூல சரீரத்தில் மேலேசொன்ன 19 தத்வங்கள் சேர்ந்து அமைக்கப்பட்டிருந்த போதிலும்

मनएवमनुष्याणां ।

என்றபடி மனஸ்தத்வம் பெரியதாயும பெருமைவாய்ந்ததாகவும் இருப்பதால் மனுஷ்யனென அழைக்கப்படுகிறான். இம்மனதோ சித்தின் பிரதிபிம்பத்தைத் தாங்குகிறது. இன்னும் இது அபஞ்சீகிருத பஞ்சபூதங்களின் சத்வகுண சேர்க்கையேயாம். சத்வகுணமாயிருத்தலால்தான் ஸ்வச்ச பதார்த்தமாகவும் பிரதிபிம்ப கிரஹண யோக்யதையுள்ளதாகவும் இருக்கிறது. ஆனால் மனதில் குண விசேஷங்கள் இருக்கின்றனவோ எனின் விசாரித்தால் வெளியாகும். உலகத்திலுள்ள ஜீவர்கள் முக்குணங்களின் சம்பந்தத்தாலேயே சேஷ்டிக்கிறார்கள், அம் முக்குணங்களாவது சத்வ, ராஜஸ, தாமஸங்களில் பிரவர்த்திப்பதைக்கொண்டு அறியப்படுகின்றன. எவனுடைய மனது சத்வ குணத்தை அவலம்பித்திருக்கிறதோ அக்காலத்தில் வேதம் ஆகமம், சாஸ்திரம் பெரியோர்கள் இவர்களிடத்தில் சிரத்தையும் பூஜ்ய பத்தியும் ஈச்வர பக்தியும் நல்ல எண்ணங்களும் உதிக்கலாகும். ரஜோகுணமாக இருந்தால் உசித வர்ணாஸ்ரமங்களுக்குத் தகுந்தபடி நித்ய, நைமித்திக கர்மாக்களிடத்தும் சௌசாதி கிரியைகளிடத்தும் சிரத்தை யுள்ளவனாக இருப்பான். தமோகுணமாக இருந்தால் ராகத்வேஷ காமக்குரோதாதிகளான நினைப்புகளின் வழியாக பா அஹித பாப வழிகளில் பிரவர்த்திப்பான். இவைகளை விசாரித்தவனே தன்னை இன்னவித குணமுள்ளவனென்று அறியலாகும். ஆனால் சத்வகுண விருத்திக்கே பாடுபடவேண்டியது. அம் முக்குணங்களில் ஸத்வகுணத்தை மிகத் தெளிந்ததென்றும் ராஜஸகுணத்தை மிகத் தெளிவு குறைவோடு கூடியதென்றும் தமோ குணத்தை மிகத் தெளிவற்றதென்றும் வர்ணிக்கப்படுகிறது. இதற்கு திருஷ்டாந்தமாக ஊற்று நீர், ஆற்று நீர், சேற்று நீர் இம் மூன்றையும் ஒப்பிடலாம். ஊற்று நீரானது நல்ல பிரதிபிம்ப கிரஹண சக்தியுள்ளதாக இருத்தலால் ஒவ்வொருவனும் ஊற்று நீரைப்போல் தெளிவுள்ளதாக மனதை செய்துகொள்ள பாடுபடவேண்டும். அப்போதுதான் மனதானது சத்வ குணத்தோடு கூடிய மனதிற்கே 'கடவுள் ஞானஸ்வரூபன்' என்று அறிவதற்கு சக்தியுண்டு. மனதானது சிதாபாஸ பிரகாசத்தைப் பெற்றதனாலேயே சகல விஷயங்களையும் அறியும் ஆற்றல் உடையதாக ஆயிற்று.

ஆனால் இதில் ஒரு சங்கை உண்டாகலாம் ஞானஸ்வரூபமான எங்கும் நிறைந்த பரமாத்மாவுடன் மனது சம்பந்தித்திருப்பது போல பெயர் உருவம் தாங்கிய சகல வஸ்துக்களும் பரமாத்மாவினிடம் சம்பந்தித்திருப்பதால் அதுகளும் தொழிலைச் செய்யவும் அறியவும் ஆற்றல் உடையதாக ஆகவேண்டும். அப்படிக்கில்லாமையால் தடித்த தமோகுணத்தாலேலே ஆக்கப்பட்டு நாமரூபத்துடன் தோற்றுகின்றன வென்றும் அவைகளில் சித்பிரதிபிம்பம் இல்லாமையால் ஜட பதார்த்தங்களென்வும் சொல்லலாகும். இது பிரதிபிம்பத்தை ஒப்பிக்கொள்ளாத அவசசேதவாதிகளின் கக்ஷியாகும். அதை நிராகரிப்பதற்கே ஆபாஸ வாதத்தை மேன்மைபொருந்தியதாக சொல்லலாயிற்று. இதற்கு ஒரு திருஷ்டாந்தத்தை கவனிப்போம். சூர்யன் பிரகாசத்தோடு கூடியிருக்கிறான். அவனிடத்தில் சகலத்தையும் உஷ்ணப்படுத்தும்படியான தாஹ சக்தியும் இருக்கின்றது. ஆனால் அந்த சக்தியால் ஒன்றையுமே தஹிப்பதில்லை. அவ்விதம் தஹிக்காததால் ஒரு வஸ்திரத்தை தரித்து வெளியில் சஞ்சரிக்கவோ வீட்டிற்கு கூரை போடவோ பிரவர்த்திக்கிறோம். சூர்யனிடத்தில் இருக்கும் தாஹக சக்தி ஒன்றையும் எரிப்பதில்லையென்றும் நம்பிக்கையால் அதை சாமான்ய உஷ்ணசக்தியென்றும் அந்த உஷ்ண சக்தியை பிரதிபிம்பமாகப் பெற்று விளங்கும் சூர்யகாந்தக் கண்ணாடியே இலேசான பதார்த்தங்களை எரித்துவிடும் ஆற்றலுடையதாக இருப்பதை எல்லோரும் பார்த்திருக்கிறார்கள். கண்ணாடியின் அளவிற்கு சம்பந்தப்பட்ட சூர்யகிரணங்களின் உஷ்ணத்தை விசேஷ உஷ்ண சக்தியென்றும் பிரித்தறியலாம். ஆதலால் கண்ணாடியில் தோற்றிய பிரதிபிம்ப விசேஷ உஷ்ண சக்திக்கே கௌரவம் அதிகமானது போல சுத்த சித்ஸ்வரூபமான பரமாத்மாவின் ஞானப்ரகாசமே விசேஷ ஞானமென்றும் அதின் சம்பந்தத்தாலேயே திருஷ்டாந்தத்தில் கண்ணாடி எரித்துவிட்டதென்று சொல்வதுபோல திரஷ்டாந்தத்திலும் மனது சகல விஷயங்களையும் அறியும் ஆற்றலுடையதாகவாயிற்று. இவ்விதம் ஒப்பாவிடில் தமோகுண காரியமான நாமரூப ஜடவஸ்துக்களுக்கும் ஸூக்ஷ்ம பஞ்சபூத சத்வகுண சமஷ்டியான மனதிற்கும் வித்யாசமின்றிப் போம். ஆதலால் மனதிலிருக்கும் பிரகாசமான சித்தின் பிரதிபிம்பத்தையே விசேஷ ஞானமென்பர். இவ்விதமாக ஞான ஸ்வரூபம் வர்ணிக்கப்பட்டது. மேலும் சாமான்ய ஞானஸ்வரூபமான பரமாத்மாவுக்கும் அந்தக்கரணத்தில் பிரதிபிம்ப ஸ்வரூபமான விசேஷ ஞான ஸ்வரூபத்திற்கும் அபேத இலக்கணம் சித்தித்தது.

(தொடரும்.)

N. சாம்பசிவ அய்யர் B. A. B. L.

ஆர்யதர்மம் தினசரியாக.

மறை மொழிகளையும் முன்னோர் மொழிந்த வசனங்களையும் எடுத்துரைத்துக்கொண்டிருப்பதில் ஒரு பயனுமில்லை. முண்டனுக்கு முண்டன், கண்டனுக்குக் கண்டன், என்றிருக்குமிக் காலத்தில் சௌம்யமாயும், சாதாரணமாயும் எழுதிக் கொண்டிருந்தால் யார் கேட்கிறார்கள். ஆர்யதர்மத்தை ஓர் தினசரி யாக்கி இப்பொழுதிருக்கும் மாதிரியையும் வித்யாசப் படுத்தி கம்பீரமாக பிரசுரம் செய்யும் பக்ஷத்தில் ஏதோ கொஞ்சம் நலம் வரலாம். அதுக்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கும் பக்ஷத்தில் முடியாத காரியமென்று நினைப்பதற்கு இடமில்லை. ஆனால் எதுக்கும் பணம் தேவை என்று நீங்கள் சொல்லலாம். ஒருவரே இந்த விஷயத்தை ஏற்றுக்கொள்வது கஷ்டமாயிருக்கலாம். ஏன் ஆர்யதர்மத்தை ஓர் லிமிடெட் கம்பெனியாகச் செய்யமுடியாது ஒரு லக்ஷம் ரூபாய் மூலதனத்தோடும், பத்து ரூபாய் வீதம் பத்தாயிரம் ஷேருடனும் ஒரு கம்பெனி ஏற்படுத்துவதற்கு நீங்கள் எத்தனம் பண்ணுகிற பக்ஷம் நான் என் பங்கு 10 ஷேர் எடுத்துக் கொள்வதற்கு தயாராயிருக்கிறேன். இன்னும் அநேகம் சநாதனிகள் சேருவார்கள் என்பதற்கு சந்தேகமில்லை. நீங்கள் , எத்தனம் செய்வீர்களா?

இங்ஙனம்,
பி. எஸ். அனந்தநாராயணய்யர்.

வெளியூர்ச் செய்திகள்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.

உபந்நியாஸங்கள்

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்து வித்துவானாய்த் திகழ்ந்த பண்டித பூஷணம் தில்லையம்பூர் ஸ்வாமியின் ஞாபகார்த்தமாக திருவாடிப்பூரம் முதல் ஸ்வாதிவரை ஐந்துதினங்கள் சங்கக்காரியாலயமான ஸ்ரீரங்கவிலாசத்தில் அடியிற்கண்ட விபரப்படி விசேஷ உபந்யாசங்கள் நடைபெற்றன. அநேகர் கேட்டு இன்புற்றனர். கடைசி ஆடிவெள்ளிக்கிழமையன்று மங்களகரமாக முடிந்ததைக் குறித்து மிகவும் குதூகலித்தனர் வந்திருந்தோரெல்லோரும்.

9—8—37வ. 10—8—37வகளில் திங்கட்கிழமை செவ்வாய்க்கிழமைகளில் ஸ்ரீஉபவே பகவத்விஷயம் கீரனூர் அட்வகேட் நரஸிம்மாசாரியார் அவர்களால் முறையே 'ஸ்ரீ ஆண்டாள் வைபவம்' 'திருப்பாவை ஸாரார்த்தம்' உபன்யாசங்கள். 11—8—37 புதன்கிழமை பண்டித திருவாலி ராமாநுஜாசார் ஸ்வாமியால் 'மார்கழி நீராட்டம்' என்ற விஷயம் உபன்யாசம். 12—8—37வியாழன்று ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்களால் 'ஸ்ரீ ஆண்டாளும் தமிழும்' என்ற விஷயமும் 13—8—37வ வெள்ளிக்கிழமை ஸ்ரீஉபவே ஸ்ரீரங்கம் சடகோபாச்சாரியார் ஸ்வாமியால் 'ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாணம்' என்ற விஷயமும் உபந்யசிக்கப்பட்டன. பிரதிதினம் மாலை 6-30மணிமுதல் 8மணிவரை நடந்தது.

சுந்தரமூர்த்தி நாயனார் திருநாட் கொண்டாட்டம்:— திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் 15—8—37வ ஞாயிற்றுக்கிழமை மாலை 6-80மணி முதல் 8-30 மணிவரை சங்கக்காரியாலயமான ஸ்ரீ ரங்கவிலாசத்தில் ஸ்ரீசுந்தரமூர்த்திநாயனார் திருநாட்கொண்டாட்டம் வெகு சிறப்பாக நடந்தது.

ஸ்ரீமான் கயப்பாக்கம் சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள் 'ஸ்ரீ சுந்தரர் வைபவம்'எனும் விஷயம்பற்றி சேக்கிழார் பெரிய புராணத்தை அநுஸரித்து வெகு அழகாக பக்திரசம் ததும்பும்படியாக கேட்பவர் மனம் உருக, இனிய செந்தமிழில் அரியதோர் உபன்யாசம் செய்தார்.

கார்யதர்சி.

பெரியகுளம்.

நவாஹ பாராயணம்.

நானது ஈஸ்வர-ஹூ ஆடி-மீ 25வ: திங்கட்கிழமை பெரியகுளம் தெற்கு அக்ரஹாரம், சந்தோக நாகபூஷணமய்யர் அவர்களின் யஞ்ஜாயதனத்தில்; பெரியகுளம் ஆஸ்திக ஜனங்களின் ஆதரவின் பேரில் நாகையநல்லூர் ஸ்ரீ ராமநாத சாஸ்திரிகள் அவர்களால் ராமாயண நவாஹம் ஆரம்பிக்கப்பட்டது. தினந்தோறும், காலை 6 மணி முதல் 9 மணிவரை ஸ்ரீ ராமன் சந்நதியில் மூலபாராயணமும், இரவு 8 மணி முதல் 11 மணிவரை ராமாயண கதாப்ரவசனமும் நடந்தது. 250 ஜனங்களுக்குக் குறையாமல் ஆஸ்திக ஜனங்கள் கூடி ஸ்ரவணானந்தத்தை அடைந்தார்கள். ஆவணி-மீ 2வ செவ்வாய்கிழமை ஏகாதசியன்று ஸ்ரீமத் ராமாயணம் முடிவுபெற்றது. மறுநாள் புதன்கிழமை காலை 8 மணிக்கு ஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களுக்கு வெள்ளி ப்ளேட், வஸ்திரம், பணம் முதலியவைகளை கிராமத்து ஆஸ்திக மஹாஜனங்கள் மனப்பூர்வமாக வழங்கினார்கள். மஹாஜனங்கள் யாவரும் ஸ்வதர்மத்தில் மிக்க ஆசக்தியுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். எப்பொழுதும் கடவுளை நம்பினோர் கைவிடமாட்டார் என்பதை உறுதியாக நினைக்கிறார்கள்.

அன்று இரவு 8 மணிக்கு ஸ்ரீ ராமபடத்திற்கு அலங்காரங்கள் செய்து ஆஸ்திக மஹாஜனங்கள் சூழ தக்கமேளவாத்தியத்துடன் கிராமப் பிரதக்ஷிணமும் நடந்தது.

ரா. ஸோமசுந்தர சர்மா, வேதவிலாஸ்.

ஆத்தல்குடி.

ஸநாதனதர்ம மஹாஸபை.

ஈசுவர-ஹூ ஆவணி-மீ 7வ ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு இராமஸ்வாமி அய்யங்காரவர்களும் தமிழ்பண்டிதர் ஜெ. சாமிநாதய்யரவர்களும் கடவுள்வாழ்த்துப்பாட ப்ரும்மஸ்ரீ ஜெகதீசய்யரவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஸ்ரீமான் ஜெ. சாமிநாதய்யர், சுப்பிரமணிய சாஸ்திரிகள், ஸ்வாமி அய்யங்கார், கதிரேசன் செட்டியார் முறையே தமிழின் சிறப்பு, ஸம்ஸ்க்ருதத்தின் மாண்பு, தர்மம், தர்ம ஸேவாசங்கங்கள் நிறுவவேண்டிய தவசியம் என்பதைப் பொருளாகக்கொண்டு விரிவுரை நிகழ்த்தினர். சமீபத்தில் மிக்கச்சிறப்பாக நடந்தேறிய மஹாநாட்டிற்குப் ஆசாரதிருத்தக்காரர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தும் வித்வத் பரிஷத்தில் தங்கள் கக்ஷியை எடுத்துக்கூறத் தவறிவிட்டார்களென்றும், காலத்திற்குத்தகுந்தபடி சாஸ்திரங்களை மாற்ற எவருக்கும் அதிகாரமில்லையென்றும் அரசன் தர்மரக்ஷணம் செய்வதற்குரியவனேயன்றி அவைகளை மாற்ற முற்படுவது எதேச்சாதிகாரமாகுமென்றும், தீண்டாமை விலக்கு, விதவா விவாஹம், விவாஹரத்து முதலானவைகள் அசாஸ்திரியமான விஷயம் என்பதை வேதசாஸ்திர பிரமாணங்களால் சாஸ்திரரத்னம் விஸ்வநாத சாஸ்திரிகள், தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள், அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார் முதலான பிரபல பண்டிதர்கள் விளக்கிய பெருமையும், தார்மிகர்கள் ராஜீய விஷயங்களில் இன்னுமதிகமாக கலக்கவேண்டியதவசியத்தை மஹாநாடு வற்புறுத்தியதையும், கிராமங்கள்தோறும் தர்மஸேவா ஸங்கங்கள் நிறுவி தர்மப் பிரசாரம் தீவிரமாய் செய்யவேண்டிய காலம் வந்துவிட்டதென்பதையும், அத்வைதி, விசிஷ்டாத்வைதி, த்வைதி, சைவர் முதலானோர் ஏகோபித்துக் கூடித் தீர்மானங்கள் நிறைவேறப்பட்ட மதுரை மஹாநாடு விசேஷம் பொருந்தியதென்றும் இன்னோரன்ன முறையில் தலைவர்கள் முடிவுரை பகன்றார்கள். வந்தனோபசாரத்துடன் சபை இரவு 9-மணிக்கு இனிது நிறைவெய்தியது.

ஜே. சுப்ரமண்யம்.

சேங்காலிபுரம்.

ஸ்ரீஸீதாராம பட்டாபிஷேக மஹோத்ஸவம்.

ஆஸ்திக மஹாஜனங்கள் நிறைந்த இக்கிராமத்தில் மேலத்தெரு ஸ்ரீமான் எம். சுப்பிரமண்யய்யர் அவர்கள் கிருஹத்தில் சுமார் ஆறுமாத காலமாக ஷையூர் ஸ்ரீ ராமாயணம் பிரும்மஸ்ரீ அப்பாசாமி சாஸ்திரியள் அவர்களால் நடத்தப்பட்டுவந்த ஸ்ரீ வால்மீகி ராமாயண பிரவசனத்தில் ஆவணி-மீ 4வ குருவாரம் 19—8—37 அன்று ஸ்ரீ ஸீதாராமச்சந்திர ஸ்வாமியின் பட்டாபிஷேக மஹோத்ஸவம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

21—8—37 சனிக்கிழமை உபாகர்ம தினத்திலும் ஷை சாஸ்திரியள் அவர்களால் உபாகர்மாவின் கௌரவமும் ஸந்தியாவந்தனத்தின் மஹிமையையும் ரொம்ப அழகாய் உபன்யாசம் செய்யப்பட்டது,

22—8—37 ஞாயிறு உள்ளூர் குருகாஸ் ஸ்ரீமான் நடராஜய்யர் அவர்களால் தனது சிஷ்யகணங்களோடு கூட பகவத் பஜனம் பாமரனையும் பரவசமாகும்படி உருக்கமாயும் கம்பீரமாயும் நடத்தப்பட்டது. தத்ஸமயம் புதுக்குடி ஸ்ரீமான் வைத்தினாதக் குருக்கள் அவர்களின் ஸங்கீதம் ஈசுவரார்ப்பணமாக இருந்தது.

இக்கிராமவாசிகளின் பக்தி மேன்மேல் அபிவிருத்தியடையவும் ஸநாதன தர்மானுஷ்டானத்தில் அதிக சிரத்தையுண்டாகும்படிக்கும் பகவானைப் பிரார்த்திக்கிறோம்.

ஒரு நிருபர்.

மதுரை.

ஸ்ரீ பாகவத ஸ்ப்தாஹ பிரம்ம ஸத்ரம்.

இந்த க்ஷேத்திரத்தில் 'புதுத்தெரு கருப்பட்டி ஸத்திரத்தில் நிகழும் ஈச்வர-ஹூ ஆடி-மீ 20வ (3—8—37) புதன்கிழமை காலை 7 மணிக்கு சாலாப்பிரவேசம்செய்து அன்று முதல் "கவிரத்னம் பாகவத பூஷணம்" குழுமணி பிரம்மஸ்ரீ ஸேதுராம சாஸ்திரிகளவர்களைக்கொண்டு ஸ்ரீ பாகவத ஸப்தாஹ பிர்ம்ம ஸத்ரம் ஆரம்பித்து பிரதிதினம் காலை 7-மணி முதல் 11-மணி வரையிலும் இரவு 7-30-மணி முதல் 9-30 வரையிலும் விசேஷார்த்தங்களுடன் ஸ்ரீ பாகவத உபந்யாஸங்களும் நடந்து ஷை ஆடி-மீ 28வ (12—8—36) வியாழக்கிழமை ஷை பிரம்மஸத்ரம் ஸமாப்தியாயியது. பிரதிதினமும் பக்தர்கள் திரளாக விஜயம்செய்து வெகு உத்ஸாஹத்துடனும் பக்தி சிரத்தையுடனும் சிரவணம் செய்தார்கள்.

சோழவந்தான் பிரசுதார் மகா-ாஸ்ரீ ராம கிருஷ்ணய்யரவர்கள் மிகவும் சிரத்தையுடன் விரிவாக பிராமணஸந்தர்ப்பணம் நடத்தி ஷை சாஸ்திரிகளால் உபந்யாஸங்கள் சொற்சுவை, பொருட்சுவை பொருந்தி, பக்திரஸத்தால் பாமரர் பண்டிதர்கள் எல்லோருடைய மனத்தையும் பரவசப்படுத்தும்படி ஸ்வானுபவத்தோடு கூடியவைகளாயும், நுட்பமான யோகசாஸ்திரங்கள், வேதாந்தசாஸ்திரங்கள் முதலியவைகளில் ஷை உபந்யாஸங்களை எளிதில் உணர்த்தும்படி தெளிவானவைகளாயும் ஹிந்துமதத்தின் அரிய பெரிய உண்மைகளை விளக்கும்படி வெகு ஆராய்ச்சி பொருந்தியவைகளாயும் பகவத் ப்ரஸாதத்தால் கேட்போர்களுடைய மனதைக் கவரத்தக்கவைகளாயுமிருந்தன. முக்கிய கட்டங்களில் இங்குள்ள பிரபல உத்யோகஸ்தர்களும் ப்ரமுகர்களும் விஜயம்செய்து பகவத் பிரஸாதத்தைப் பெற்றார்கள். கடைசி தினத்தில் உபன்யாஸம் முடிந்ததும் ஷை சாஸ்திரிகளுக்கு மாலை சூட்டி மரியாதை செய்யப்பட்டது. வழக்கம்போல் சந்தன தாம்பூலம் பலவர்க்கங்கள் வழங்கப்பட்டன. பிறகு விஜயம்செய்திருந்த பக்தர்களுக்கு சாஸ்திரிகள் அக்ஷதைப் பிரஸாதம் ஆசீர்வாத பூர்வகம் அனுக்கிரஹித்தார்கள் வேதகோஷ வாத்யகோஷம் முதலிய வைபவங்களுடன் சாஸ்திரிகளை அவர்கள் ஜாகைக்கு ஸ்ரீ கிருஷ்ண படத்துடன் ஊர்வலமாய் அழைத்துக்கொண்டுபோய்விட்டு ஆசீர்வாதத்தை பக்தர்கள் பெற்றுப் பரமானந்தமெய்தினர்.

ஒரு நிருபர்.

முக்கிய கவனிப்பு
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது.)
அசல் தங்க நகைகளைப்போன்ற "கண்ணூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— என். கண்ணுசாமி பத்தர்
பெரியதெரு. கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Publsihed by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaam.

509

ஆர்யதர்மம்

4 ௵
22 34

2 - 9 - 1937

215200

215200

511

Registered No. M. 2913.

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

௪ 22 | கும்பகோணம். கலி 5039 ஈச்வர௵ ஆவணி௴ 18௳ 1937௵ ஸெப்டம்பர்-௴ 2௳ | வ 34

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணா 1.
விளம்பர விகிதம்
பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

ஓலையில் உபசாரப்பத்திரம்.

சென்னை மந்திரிகள் சிலர் சுற்றுப்பிரயாணம்போனவிடங்களில் சில ஊர்களில் கர்னாடக வழக்கப்படி பனை ஓலையில் எழுத்தாணியால் எழுதி உபசாரப்பத்திரங்கள் கொடுக்கப்பட்டதாகத்தெரிகிறது, மந்திரிகளும் இந்த பிராசீன வழக்கத்தைப்பாராட்டிப்பேசினார்களாம்.

உப்பு எடுக்கும் உரிமை.

1931ல் காந்தி இர்வின் ஒப்பந்தப்படி ஏற்பட்டிருந்த உப்பு எடுக்கும் உரிமையைபொதுஜனங்கள் துஷ்டப்பிரயோகம் செய்த காரணமாக கவர்மெண்டார் நிறுத்தி விட்டிருந்தார்கள். இப்போதுகாங்கிரஸ் மந்திரிகள் இந்தியா கவர்ன்மெண்டாரின் அனுமதி பெற்று சென்னை மாகாணத்தின் பலஜில்லாக்களிலும் ஏழைகள் தாங்களாகவே உப்பு எடுத்துக்கொள்ளும் உரிமையை திருப்பி ஏற்படுத்தநிச்சயித்திருக்கிறார்களாம்.

கவர்னர் சம்பளம் குறைத்துக் கொள்ளவேண்டும்.

மத்யமாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தில் கவர்னர்கள் தங்கள்சம்பளத்தில் 100க்கு 40 வீதம் குறைத்துக்கொண்டு மற்ற உத்யோகஸ்தர்களுக்கும் வழிகாட்டவேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டதாம்.

பொப்பிலி ராஜாவும் செய்கிறார்.

சென்னை கவர்மெண்டார் மது விலக்கு விஷயத்தில் முனைந்திருப்பதைக்கண்டு ஜஸ்டிஸ் கக்ஷித்தலைவரும் மாஜி முதல் மந்திரியுமான பொப்பிலி ராஜா தமது ஸமஸ்தானத்திலும் மது விலக்கு முயற்சி செய்கிறார். அங்குள்ள ஈச்சமரங்களிலிருந்து இனிமேல் கள் இறக்கக்கூடாதென்று அவர் தடுத்திருக்கிறார் இதன் மூலம் அவருக்கு வருஷம் 10 ஆயிரம் ரூ நஷ்டம் வருமாம்?

கவர்னரின் நிராகரிப்பு.

பீஹார் சட்டஸபையில் ஒரு மெம்பர், கௌரவப்பட்டங்கள் வழங்குவதை நிறுத்தி விடவும், ஸர்க்கார் கட்டிடங்களில் தேசியக்கொடி போடவும் இரண்டு பிரேரபணைகளைக்கொண்டுவரப்போவதாகநோட்டீஸ் கொடுத்திருந்தார் இவ்விரு பிரேரபணைகளுக்கும் கவர்னர் அனுமதி யளிக்க மறுத்து விட்டார்.

ரயில்வேகேட்டில் மந்திரிக்குத் தடை

ஐக்கியமாகாண மந்திரியான கனம் கட்ஜு என்றவர் சிறைச்சாலை பரிசோதனை காரியமாக உன்னாவுக்குச் செல்லுகையில் ஒரு ரயில்வே கேட் சேவகன் அவருக்கு வழிவிட மறுத்துவிட்டான். ரயில் ஸ்டேஷனைவிட்டு போனபிறகே கதவைத்திறக்க முடியுமென்றும், மந்திரியாயிருந்தாலும், தாம் சட்டப்படியே நடக்கவேண்டுமென்றும் அவன் சொல்லிவிட்டானாம்?

வைசிராயின் கால் நடை பிரயாணம்?

லார்டுலின்லித்கோவும், அவரது மனைவியும் டெல்லியிலிருந்து லாகூருக்குப்போகும்போது கால் நடையாக நடந்து போகத்தீர்மானித்திருக்கிறார்களாம்,

காந்தி படங்களுக்கு தடை நீக்கம்.

ஸ்ரீமான் காந்தி லண்டன் சென்றிருந்தபோது சக்ரவர்த்தியாருடன் பேட்டிகண்டு பேசிக்கொண்டிருந்ததையும், அவர்ஸர்வகக்ஷி மகாநாட்டிற்காக பம்பாயை விட்டுப்புறப்பட்டது, லண்டனில் இறங்கியது முதலியவைகளையும் ஸினிமாக்காரர்கள் படம் பிடித்துவைத்தார்கள், ஆனால் அந்தப்படங்களை ஸர்க்கார் இது வரையில் தடுத்து வைத்திருந்தார்கள். இப்போது பம்பாய் மந்திரிகள் மேற்படிப்படங்கள் விஷயமாக இருந்த தடைகளை நீக்கி விட்டனர்.

முஸ்லீம் மந்திரி கிடைக்கவில்லை.

பம்பாயில் 2 முஸ்லீம் மந்திரிகளை நியமிக்கக் காங்கிரஸ்வாதிகள் விரும்பினர். இதற்காக அபுல்கலாம் ஆஸாத் வெகு பாடுபட்டார். ஆனால் ஒன்றும் பலிக்கவில்லை. காங்கிரஸ் கோரிக்கையில் கையெழுத்துச்செய்து காங்கிரஸ் மெம்பராகப் பதிவுசெய்துகொள்ள ஒரு மஹம்மதியாவது விரும்பவில்லை. ஆதலால் ஆள்கிடைக்காத ஸங்கடத்தை உத்தேசித்து 2வது மந்திரி நியமன யோஜனையை கைவிட்டுவிட்டதாக அபுல்கலாம் அஸாத் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷீட் ஜெம்ஷெட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

வாரக்குறிப்புகள்.

[வே. ஸோ. சர்மா.]

விருந்துசெலவை தர்மம் செய்!! பஞ்சாப் முதல்மந்திரி தனக்காக விருந்து செய்யும் செலவை ஓர் சிறந்த தர்மத்தில் செலவு செய்என்ற பொன்னேபோல் போற்றத்தக்க சொற்களைக் கூறினர். இது உண்மைத்யாகம்! நாங்கள் முன்னே அடிபட்டோமே அதற்கு இந்த சுகத்தை அனுபவிக்கிறோம்என்றவாதத்தில் த்யாகமணமுண்டோ?

துர்மார்க்க தர்சிகள் கவனிப்பரா? எதற்கும் வேலை நிறுத்தம் உண்ணாவிரதமா? பரியாரி கடைகளுக்கு சென்னை நகரசபை வரிபோட்டது. ப்ரதம மந்திரியை பேட்டி கண்டனர். சிறுவரி குறைக்கப்பட்டது. ச்ராவணத்தன்று அவர்கள் தெருவில் நின்று வபநம் செய்பவரையும் கஷ்டப்படுத்தி ஹிம்ஸித்தனர். வைதிக ப்ரம்மசாரிகள் கஷ்டப்பட்டனர். தானே வபநம் செய்துகொள்ளுமிக்காலத்தே கஷ்டம் யாருக்கு?

வலிவுள்ள உணவு எது? நவநாகரிகப் பேய் உணவிலும் புகுந்து நம்மைக் கெடுக்கிறது. மலையாளத்தில் ஓர் ப்ரபல ஆங்கில வைத்தியர் தயிர்பச்சடி, பழனிபஞ்சாமிர்தம் காஞ்சி இட்லி, ஸ்ரீரங்கம் பொங்கல் இவைகளின் குணநிசயத்தை மிகமிக கொண்டாடுகிறார். சுருங்க சொல்லின் நம்தேசத்திற்கு ட்டிலுமில்லை. ஸகல தேசத்திற்கும் இந்திய ஆகாரம் ஒவ்வொன்றும் தேவாமிர்தமாம்.

அதிகப்ரசங்கம்! நகரசபை ஜில்லாபோர்ட் இவைகளுக்கு மிக முக்கியமாக கவனிக்க வேண்டிய பல வேலைகளுண்டு! அதில் ஊக்கத்தை செலுத்தாமல் இதர விஷயத்தில் தலையிடுவது மிக அதிகப்ரஸங்கமல்லவா? மதுரை ஜில்லா போர்ட் சண்டாளரை ஆலயத்தில் விடவேண்டுமென தீர்மானிப்பதின் அசட்டுத்தனத்தை என்னென்போம்?

வல்லவனிழுத்ததே வாக்கால்! கல்விசபைகளை எடுத்துவிட ஆங்காங்கு யோசிக்கப்படுகிறது. ஆங்கு சிலர் தன்னிஷ்டத்தை நிறைவேற்றவே அது இருப்பதாக கருதுகின்றனர். அதுமாத்திரமல்ல! தற்சமயம் காணும் பெரும்பாலான ஸபைகள் அப்படிதான்! அடியோடு இவைகளை சீர்திருத்தினாலல்லது ப்ரதிநிதித்வமென்பது பேச்சளவில்தான்! பேச்சுவாய்கிழிய!

இதில் தேசீயம் கூடாதா? நமது ராஜீய நிருத்தங்கள் அநுஷ்டானத்திற்கு வந்ததும் சட்டசபைகள் ஆரம்பமாவதும்பெரும்பாலும் செவ்வாய்க்கிழமையில்தான் தேசிய புலிகள் உள்ளே புகுந்தும் இந்த வழக்கம் மாறவில்லை இது சமயம் வெள்ளையர்களுக்கு நன்னாளாக இருக்கலாம்.

என்ன செய்வது? இப்போதுள்ள கண்மூடி தர்பாரில் வைதிகாசாரங்கள் அழிக்கப்பட்டு துராசாரங்கள் பல நிணிக்கப்படுவது திண்ணம். மஹாஜனங்கள் இன்றும் போதிய அளவு விழித்துக்கொள்ளவில்லையா! முதலில் ஆலயங்களெல்லாம் கண்காக்ஷிசாலைகளாக்கப்படும்! பின்னர் பல! பல!! இச்சமயம் நாம் என்ன செய்வது?

பஹிஷ்கார ப்ரசாரம் செய்யலாமா? அத்தகைய ஆலயங்களையும் அதை ஆமோதிப்பவர் கோரும் ப்ரார்த்தனைகளையும் பஹிஷ்கரிக்கும்படி ப்ரசாரமாரம்பித்தால் அச்சமயம் இது அவர்கள் கண்களைத் திறக்கலாம்! தடை உத்திரவு போடலாம்! அதைமீறி நமது பத்திராதிபர் காட்டியபடி ஸத்யாக்ரஹம் செய்யலாமா! கோவில் வாசலில் ப்ரசாரம் துவக்குவோம்.

நாகப்பட்டிணத்தில் உபன்யாசங்கள்.

நாகப்பட்டணம் ஹிந்து மதாபிமான ஸங்கத்தின் ஆதரவில் ஸ்ரீசட்டநாத ஸ்வாமி கோவிலில் சென்ற ஆகஸ்டுமீ 12, 13, 14தேதிகளில் ப்ரம்மஸ்ரீ விக்ரமபாண்டியம் கோபால சாஸ்திரியள் அவர்கள் கர்மபக்திஸாமரஸ்யம், குசேல உபாக்யானம், ஞானயோகம் என்ற மூன்று விஷயங்களையும் உபன்யசித்தார்கள். அவர்களுடைய மேதையும் அநாயாசமான ப்ரவசன சக்தியும் எல்லோருடைய மனதையும் மிகவும் கவர்ந்துவிட்டது. ஸ்ரீமந் நாராயணன் ஜகதுத்தாரணத்தை நோக்கமாகக்கொண்டு தன்னுடைய ஐச்வர்ய ப்ரகடனத்தால் எல்லோருடைய மனதிலும் தன்னிடத்தில் விசேஷ பக்தியை உண்டுபண்ணிக்கொண்டு உபதேசம் செய்வதற்காக க்ருஷ்ணவதாரமும் செய்தாரென்றும் யுத்தாங்கத்தில் தான் சாரதியாக இருந்து அந்த ஸ்திதியில் மேலே உட்கார்ந்திருக்கும் அர்ஜுனனை தன்னுடைய சிஷ்யனாக ஆகும்படி செய்துகொண்டு அவன் மூலம் உலகத்திற்கு கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் மூன்றையும் உபதேசம் செய்தாரென்றும் ஸ்ரீமத் பகவத்கீதையில் இல்லாத விஷயம் ஒன்றிலும் கிடையாதென்றும் யுத்தாங்கத்தில் இந்த உபதேசம் செய்ததாலேயே மைத்த சாதனங்களை ப்ரகடனம் செய்தாலும்கூட அர்ஜுனன் யுத்தம் செய்யும்படி சொல்வதே முக்யமான நோக்கமாக கொள்ளப்பட்டதால் ஸ்வதர்மாநுஷ்டமே உபதேசத்தின் முக்யதாத்பார்யமென்றும் அந்த ஸ்வதர்மாநுஷ்டானமானது நிஷ்காம்யமாக செய்யப்படவேண்டுமென்றும் அதுவே கர்மயோகமென்றும் நிஷ்காம்ய கர்மாநுஷ்டானத்தால் சித்த சுத்தி ஏற்பட்டு பகவானிடத்தில் மனதானது லயத்தை அடையுமென்றும் அந்த ஸ்திதியின் பராகாஷ்டையே பக்தியென்றும் கர்மயோக பக்தியோகங்கள் பரஸ்பர ஸம்பந்தத்தோடு அநுஷ்டிக்கப்படவேண்டுமென்றும் ஸ்வதர்மாநுஷ்டானமில்லாத பக்தி சரியான பக்தியல்லவென்றும் ஈச்வரத்யானமில்லாத கர்மாநுஷ்டானம் சரியான கர்மாநுஷ்டானமாகாதென்றும் ஈச்வர தியானத்தில் மனதானது இடைவிடாமல் லயத்தை அடைந்து கர்மாநுஷ்டான ஞாபகமே இல்லாமல் கர்மா தானே நம்மை விடும்வரையில் அதைவிட நமக்கு அதிகாரமில்லையென்றும் கர்மாநுஷ்டானமும் பக்தியின் அப்யாஸமும் சேர்ந்தே இருக்கும் பக்ஷத்தில் ஞானோதயம் தானே ஏற்படுமென்றும் கீதா ச்லோகங்கள் மூலம் உதாஹரித்து முதல் உபன்யாசத்தை வெகு விமரிசையாக செய்தார்கள்.

இரண்டாவது உபன்யாசத்தில் குசேல உபாக்யானத்தை வெகு அழகாக நிருபணம் செய்து அதில் காண்பிக்கப்பட்டிருக்கும் கார்ஹஸ்த்ய தர்மம், ஸ்திரீதர்மம், சிஷ்யதர்மம், முதலிய பல தர்மங்களையும் உபநிஷத்தி க்ரந்தங்களிலிருந்து உதாஹரண பூர்வமாக ப்ரகடனம் செய்தார்கள். முதல்நாள் செய்த கர்ம பக்தி சாமரஸ்யம் என்ற விஷயத்திற்கு குசேலருடைய சரித்திரமானது முக்கியமான உதாஹரணமென்றும் சொன்னார்கள். மறுநாள் ஞானயோகம் என்ற விஷயத்தைப்பற்றி பேசியதில் கீதாசாஸ்திரத்தில் செய்யப்பட்டபடி நிஷ்காம்யகர்மாநுஷ்டானம் அத்யாவச்யமென்றும் அதுசரிவர அநுஷ்டிக்கப்படும் பக்ஷத்தில் சித்தசுத்தியானது ஏற்படுகிறதென்றும், சித்தசுத்தி ஏற்பட்டால் சித்தமானது பரமாத்மாவினுடைய வாஸத்திற்கு யோக்யமாக ஆகிறதென்றும் அதனால் பக்தியோகத்திற்கு சாதனம் ஏற்படுகிறதென்றும் பக்தியினுடைய பராகாஷ்டையே ஜீவப்ரம்ம ஐக்யம் என்றும் அதுவே ஞானமென்றும் அதுதான் நான்காவது புருஷார்த்தமான மோக்ஷமென்றும் சொல்லி ஜீவஸ்வரூபத்தையும் (ப்ரம்ம ஸ்வரூபத்தையும் ஜீவப்ரம்ம ஐக்யத்தையும்) சுருதி, யுக்தி பூர்வமாக நிரூபணம் செய்தார்கள். இவ்விதம் அவர்களுடைய உயர்ந்த புத்திசக்தியையும் எல்லோருடைய மனதையும் கவரும்படியான ப்ரவசன சக்தியையும் கண்டு மகிழ்ச்சியடைந்தவர்களாக நகரவாசிகள் ஒன்பது தினங்களில் ஸ்ரீமத் ராமாயணத்தை சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்கி வெகு சிலாகனீயமான ரீதியில் ஸ்ரீமத் ராமாயணத்தை சாஸ்திரியள் அவர்களால் உபன்யசிக்கப்பட்டு வருகிறது. நாளது 30—8—37 திங்கட்கிழமை தினம் ஸ்ரீமத் ராமச்சந்திர பட்டாபிஷேகத்துடன் அவர்களுடைய உபன்யாசமானது முடிவடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

என். சாம்பசிவ அய்யர். பி.ஏ பி.எல்.

சென்னை.

ஸ்ரீ கோகுலாஷ்டமி! இதைக் கொண்டாடாத ஸபைகளில்லை. அமரகலாவிலாஸினீ ஸபைத் தலைவரான ப்ரம்ம-ஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா அவர்கள் ஸ்ரீ மடம், 'ஸ்ரீ கீதாச்ரவண பக்தஸபை, கோபாலபுரம் ஹிந்து தியாஜிகல் ஹைஸ்கூல், மைலாப்பூர் முதலியவிடங்களில் மிக அபூர்வமாயும்ரஸமாயுமுள்ள ஸ்ரீ க்ருஷ்ண சந்திர சரித்திரத்தை உபன்யசித்தார்.

கண்டனக்கூட்டம்! முத்யால்பேட் வர்ணாச்ரமஸ்வாராஜ்ய சங்கத்தினதாவில் ஓர் பொதுகூட்டம்கூடி ஸ்ரீபாலக்ருஷ்ண சாஸ்திரிகள் தலைமை வஹித்தார். ஸ்ரீவத்ஸ சர்மா ஆலயப்ரவேச மசோதாவை கண்டித்து அது தீர்மானிக்கப்படின் ஆலய வாசற்படிகளில் நின்று ஸத்யாக்ரஹம் செய்யப்போவதாக ஓர் தீர்மானம் செய்து டாக்டர் ராஜனுக்கு தெரிவிக்கப்பட்டது.

யதீந்த்ரமத தீபிகை.

ஸ்ரீதொட்டயாசார்யர் சிஷ்யரான ஸ்ரீநிவாஸாசார்யரால் வடமொழியில் அருளிச்செய்யப்பட்டது; ஸ்ரீ-உப-வே. V. K. ராமாநுஜாசார்யரால் எழுதப்பட்ட தெளிவான தமிழுரை, விரிவான குறிப்புகள், 16 அநுபந்தங்கள் ஆகிய இவைகளுடன் கூடினது; ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை எளிதாகவும் சுருக்கமாகவும் அறிந்துகொள்வதற்கு இன்றியமையாதது; இதில் ப்ரமாணங்களைப்பற்றிய மூன்று அவதாரங்களும் ப்ரமேயங்களைப்பற்றிய ஏழு அவதாரங்களும் இருக்கின்றன. அழகாய் நல்ல பயிண்டு செய்யப்பட்டது.

விலை ரூ. 4—0—0
மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

த்ரிமதஸ்தர்களுக்கும் மிகவும் உபயோகமானவை
(தேவநாகர எழுத்து)

1. ஸ்ரீ துர்க்கா ஸ்தோத்ரம் (ஸ்ரீ மஹா பாரதம் விராட பர்வத்திலுள்ளது) ஸம்ஸ்க்ருத மூலம் தமிழ் மூலம் பதவுரையுடன் கூடியது. 0—1—0
2. ஸ்ரீ ஆதித்யஹ்ருதய ஸ்தோத்ரம் (ஸ்ரீமத்ராமாயணம் யுத்தகாண்டத்திலுள்ளது) ஸம்ஸ்க்ருத மூலம் தமிழ்மூலம் பதவுரையுடன்கூடியது. 0-2-6
3. ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்தோத்ரம் ஸ்ரீமந் மஹாபாரதம் வனபர்வத்திலுள்ளது) ஸம்ஸ்க்ருத மூலம் தமிழ்மூலம் பதவுரையுடன்கூடியது. 0-2-0

புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஆர். எஸ். சர்மா, 'சிரோமணி'
நெ. 14. வெங்கட்டராயர் தெரு, கும்பகோணம்.

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

'மூகபஞ்சசதீ'

(19—8—37 தொடர்ச்சி)

20. மாஹாத்ம்ய சேவதிரஸௌ தவ துர்விலங்க்ய-
ஸம்ஸார விந்த்ய கிரி குண்டன கேளி சுஞ்சு: |
தைர்யாம்புதிம் பசுபதேச்சுளகீ கரோதி
காமாக்ஷி வீக்ஷண விஜ்ரும்பணகும்பஜன்மா ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! மாஹாத்ம்யசேவதி: - மாஹாத்ம்யம் நிறைந்ததான அஸௌ தவ - இந்த உன்னுடைய வீக்ஷணா விஜ்ரும்பணா - பார்வையின் ஆவிர்பமாவாகிற கும்பஜன்மா - அக த்யரானவர் துர்விலங்க்ய - தாண்டுவதற்கரிதான ஸம்ஸாரவிந்த்ய கிரி - ஸம்ஸாரமாகிற விந்த்யபர்வதத்தை குண்டன கேளி சுஞ்சு- அடக்குவதான விளையாட்டில் பெயர் பெற்றவராய், பசுபதே: - பரமசிவனுடைய தைர்யாம்புதிம் - மனவுறுதியாகிற ஸமுத்ரத்தை சுளகீ கரோதி - உள்ளங்கையளவாகச் செய்துவிடுகிறார்.

1. இதில், அம்பிகையின் கடாக்ஷத்தை அகஸ்த்யருக்கு ஸமானமாக வர்ணிக்கப்பட்டது. கும்பத்திலிருந்து உண்டானதால் அகஸ்த்யருக்குக் கும்பஜன்மா என்று பெயர். பரமசிவன் பார்வதியைக் கல்யாணம் செய்துகொள்ளும்போது அதைப் பார்க்க லோகத்தார்களெல்லாம் ஹிமாசலத்திற்கு வந்தவுடன் அது தாழ்ந்து தெற்கு ப்ரதேசமானது எக்கலடித்து மேலே வரவும், பரமசிவன் பூமியை ஸமமாக்குவதற்காக அகஸ்த்யரை தெற்கே போயிருக்கச்சொன்னார். அப்படியவர் தெற்கே வந்துகொண்டிருக்கையில் விந்த்ய பர்வதமானது வளர்ந்து வழியை மறைத்துக்கொண்டிருந்தது. அவர் அதினுடைய கர்வத்தை யடக்கி முன்போலிருக்கச்செய்தார். பிறகு ஒரு ஸமயம் ஸப்த ஸமுத்ரங்களையும் தன் உள்ளங்கை யளவு தீர்த்தமாகச் செய்து பானம் பண்ணினதாகவும் ஒரு வ்ருத்தாந்தம் உண்டு. அவர் இவ்வளவு மஹிமையுள்ளவராகையால் அவரை 'மஹாத்ம்யசேவதி:' என்று இங்கு சொல்லப்பட்டது.

2. இவ்விதமான லீலைகள் அம்பிகையின் கடாக்ஷத்தினுலும் செய்யப்பட்டதாக இங்கு வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

21. பீயூஷ வர்ஷ சிசிரா ஸ்புடத் உத்பலஸ்ரீ-
மைத்ரீ நிஸர்க மதுரா க்ருத தாரகாப்தி: |
காமாக்ஷி ஸம்ச்ரிதவதீ வபுரஷ்டமூர்த்தே:
ஜ்யோத்ஸ்னயதே பகவதி த்வத் அபாங்க
[மாலா ||

காமாக்ஷி, பகவதி - ஹே காமாக்ஷி! ஹே பகவதி! த்வத் அபாங்கமாலா - உன்னுடைய கடாக்ஷத்தின் வரிசையானது பீயூஷவர்ஷசிசிரா - அம்ருதவர்ஷத்தினால் குளிர்ச்சியுள்ளதாயும், ஸ்புடத் - மலர்கிற உத்பலஸ்ரீ மைத்ரீ - கருநெய்தல் புஷ்பத்தின் அழகுக்கு ஸ்நேஹபாவமுள்ளதாயும் நிஸர்க மதுரா - இயற்கையாகவே இனிமையானதாயும், க்ருததாரகாப்தி: - நக்ஷத்ரமண்டலத்தை அளாவினதாயும், அஷ்டமூர்த்தே: வபு: - பரமசிவனுடைய சரீரத்தை ஸம்ச்ரிதவதீ - அடைந்ததாயும் ஜ்யோத்ஸ்னயதே - நிலவைப்போலிருக்கிறது.

1. இதில் அம்பிகை கடாக்ஷ பரம்பரையை நிலவொளிக்கு ஸமானமாக வர்ணிக்கப்பட்டது. சந்த்ரனுடைய கிரணங்கள் அம்ருத வர்ஷம்போல் குளிரச்செய்வதாகச் சொல்லப்படும். புன்சிரிப்பை நிலவாக வர்ணிக்கும்போது வெண்ணிறமாகச் சொல்வது வழக்கமாயிருக்கையில், கடாக்ஷத்திலிருந்துவருவதாகச் சொல்லப்படும் நிலவானது நீல (சற்று கருமை) நிறமுடையதாக வர்ணிக்கப்படும். பரமசிவன் சந்த்ரனை சிரோபூஷணமாக தரித்திருப்பதால் அதின் கிரணங்கள் அவரை அடைவதாகச் சொல்லப்படும். அதேமாதிரி அம்பிகையின் பார்வையானது எப்போதும் தன் பதியாகிய பரமசிவனிடமே இருப்பதால் அவ்விதப் பார்வையின் நிலவானது அவரையே அடைவதாகச் சொல்லப்பட்டது.

2. தாரகா என்ற பதமானது நக்ஷத்ரத்தைக் குறிப்பதுடன் கண்ணின் கருவிழியையும் குறிக்கும். சந்த்ரனின் நிலவானது ஆகாசத்திலுள்ள நக்ஷத்ரங்களை வியாபிக்கையில் கடாக்ஷ நிலவானது கண்விழியை வியாபித்திருப்பதால் இரண்டையும் 'க்ருத தாரகாப்தி:' என்று வர்ணிக்கப்பட்டது.

22. அம்ப ஸ்மர ப்ரதிபடஸ்ய வபுர் மனோக்ஞம்
அம்போஜ கானனம் இவாஞ்சித கண்டகாபம் |
ப்ருங்கீவ சும்பதி ஸதைவ ஸபக்ஷபாதா
காமாக்ஷி கோமளருசிஸ் த்வத் அபாங்கமாலா ||

அம்ப, காமாக்ஷி - தாயே! காமாக்ஷி! கோமளருசி: - கண்களுக் கினிமையான காந்தியோடு கூடிய த்வத் அபாங்கமாலா - உனது கடாக்ஷங்களின் வரிசையானது அம்போஜகானனமிவ - தாமரஸபுஷ்பங்களின் வனம்போல் அஞ்சித கண்டகாபம் - மயிர்க்கூச்சலின் அழகோடு கூடியதும், மனோக்ஞம் - மனதை கவருகிறதுமான ஸ்மர ப்ரதிபடஸ்ய - (மன்மதனை யெதிர்த்து யுத்தம் செய்தவரான) பரமசிவனுடைய வபு: - சரீரத்தை ப்ருங்கீவ - வண்டுபோல் ஸதைவ - எப்போதும் ஸபக்ஷபாதா - விசேஷமான ஆசையுடையதாய் சும்பதி - (முத்தம் கொடுப்பதுமாதிரி) மேலே பட்டுக்கொண்டிருக்கிறது.

1. இதில் அம்பிகையின் கடாக்ஷமாலையை ஒரு வண்டு போலவும் பரமசிவனுடைய சரீரத்தை அந்த வண்டு சுற்றிக்கொண்டிருக்கும் தாமரை வனமாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. தாமரைப் புஷ்பத்தின் தண்டானது முள்ளுடனிருக்கிறாற்போல் பரமசிவனுடைய சரீரமானது புளகாங்கிதமாய் மயிர்கூச்சலோடிருப்பதால் அதை 'அம்போஜகானனம் அஞ்சிதகண்டகாபம்' என்று சொல்லப்பட்டது. இதேமாதிரி பரமசிவனுடைய ஆலிங்கனத்தால் மயிர்க்கூச்சலோடு கூடிய அம்பிகையின் கழுத்தை அவனுடைய முகமாகிற தாமர ஸபுஷ்பத்திற்குக் காம்பு போல் இருப்பதாக ஸ்ரீ மதாசார்யாள் 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

'புஜாச்லேஷான்னித்யம் புரதமயிது: கண்டகவதீ
தவ க்ரீவா தத்தே முககமல நாளச்ரியமியம் |'

இங்கு பரமசிவனுடைய சரீரம் முழுவதையும் அவ்வாறு வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

23. கேசப்ரபாபடல நீல விதானஜாலே
காமாக்ஷி குண்டலமணிச்சவி தீபசோபே |
கம்ரே கடாக்ஷருசிரங்கதலே க்ருபாக்யா
சைலூஷிகீ நடதி சங்கரவல்லபே தே ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! சங்கர வல்லபே - பரமசிவனுடைய பத்னியே! கேசப்ரபாபடல - கூந்தலின் காந்தியினுடைய வரிசையாகிற நீலவிதானஜாலே - கருத்ததான அசுமானகிரியோடு கூடியதும், குண்டல மணிச்சவி - காதின் குண்டலங்களிலுள்ள ரத்னங்களின் காந்தியாகிற தீபசோபே - தீபங்களால் ப்ரகாசமுடையதும், கம்ரே - மிகவும் அழகானதுமான கடாக்ஷருசிரங்கதலே - உனது கடாக்ஷத்தின் காந்தியாகிற நாடகமேடையில் க்ருபாக்யா - க்ருபையென்கிற சைலூஷிகீ - நடிகையானவள் நடதி - ஆடிக்கொண்டிருக்கிறாள்.

1. இதில் அம்பிகையின் கடாக்ஷகாந்தியை ரங்கஸ்தலமாகவும் அம்பிகையின் கருணையானது அதில் நடிக்கும் நடிகையாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, அம்பிகையின் கடாக்ஷமானது மிகுதியான கருணையோடு கூடியது என்பது தாத்பர்யம்.

24. அத்யந்த சீதளம் அதந்த்ரயது க்ஷணார்த்தம்
அஸ்தோக விப்ரமம் அனங்கவிலாஸகந்தம் |
அல்ப ஸ்மிதாத்ருதம் அபாரக்ருபா ப்ரவாஹம்
அக்ஷிப்ரரோஹம் அசிரான்மயி காமகோடி ||

காமகோடி - காமகோடி ஸ்வரூபிணியான ஹே காமாக்ஷி! அத்யந்த சீதளம் - மிகவும் குளிர்ச்சியானதும், அஸ்தோக விப்ரமம் - மிகுந்த அழகுள்ளதும், அனங்கவிலாஸகந்தம் - மன்மதனுடைய விலாஸத்திற்குக் காரணமானதும், அல்பஸ்மிதாத்ருதம் - கொஞ்சம் சிரிப்போடு (புன்சிரிப்போடு) கூடியதும், அபாரக்ருபாப்ரவாஹம் - கரையில்லாத கருணைப்ரவாஹத்தை யுடையதுமான, அக்ஷிப்ரரோஹம் - உனது கடாக்ஷமானது அசிராத் - சீக்ரத்தில் மயி - என்னிடம் க்ஷணார்த்தம் - அரைக்ஷணமாவது அதந்த்ரயது - இருந்து களைப்பாறட்டும்.

25. மந்தாக்ஷராக தரளீக்ருதி பாரதந்த்ர்யாத்
காமாக்ஷி மந்தரதராம் த்வத் அபாங்கதோலாம் |
ஆருஹ்ய மந்தம் அதிகௌதுகசாலி சக்ஷுர்
ஆனந்தமேதி முஹுர் அர்த சசாங்க மௌளே: ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! மந்தாக்ஷராக - உனது கடாக்ஷத்தின் அழகினால் தரளீக்ருதி பாரதந்த்ர்யாத் - தரளமான நிலையை அடைந்து பரவசப்பட்டிருப்பதினால், அதிகௌதுகசாலி - அதிகமான உத்ஸாஹத்தோடு விளங்கும் அர்த சசாங்கமௌளே:- அர்த்த சந்த்ரனை சிரஸில் தரித்திருக்கும் பரமசிவனுடைய சக்ஷு: - கண்ணானது (பார்வையானது) மந்தரதராம் - மிகவும் மெதுவாக ஆடிக்கொண்டிருக்கும் த்வத் அபாங்க தோலாம் - உனது கடாக்ஷமாகிற ஊஞ்சலில் மந்தம் ஆருஹ்ய - மெதுவாக ஏறிக்கொண்டு முஹு: ஆனந்தம் ஏதி - அடிக்கடி (இடைவிடாமல்) ஆனந்தத்தை அடைகிறது.

1. இதில் அம்பிகையினுடைய கடாக்ஷத்தை ஒரு ஊஞ்சலாகவும் அதின்மீது பரமசிவனுடைய பார்வையானது இருந்து ஆடிக்கொண்டிருப்பதாகவும் வர்ணிக்கப்பட்டது. இப்படி அம்பிகையின் கடாக்ஷத்தில் ஈடுபட்ட பார்வையோடு பரமசிவன் இருப்பதாகச் சொல்லியதினால் அவர்களுக்குள் பரஸ்பரமிருக்கும் ப்ரேமாதிசயமானது எடுத்துக் காட்டப்பட்டது.

மதுரை ஸநாதனதர்ம மகாநாடு.

ஸ்ரீமான் கதிரேசன் செட்டியார் அவர்களின் தலைமை பிரஸங்கம்.

(19—8—37 வாரத்தொடர்ச்சி.)

அரசியல்.

இந்தியநாடு தன்னரசு இழந்து வறுமையிலாழ்ந்து ஆற்றொணாத்துயர் அடைந்துள்ளது. நாட்டின் செல்வம் ஏராளமாய் அயல்நாடுகளுக்குச் செல்கின்றது. பசிப்பிணியால் மக்கள் பலர் மடிகின்றனர். கைத்தொழில்கள் நசித்தன. வேலையில்லாத் திண்டாட்டம் தாண்டவமாடுகின்றது. வரிப்பளு தாளமுடியவில்லை. ஆடம்பர அரசாங்க நிர்வாஹம் நம்மை மேலெழும்பவிடாது அமுக்குகின்றது. பொறுப்பாக்ஷி அளிப்பதாகப் பல தடவைகளில் கூறிய பிரிட்டிஷ் அரசாங்கம் இன்னமும் அளிக்கவில்லை. சமீபத்தில் தோன்றிய புதிய அரசியலோ பல விதங்களிலும் குறைபாடுடையது. "மத சமூக விஷயங்களில் தலையிடுவதில்லை" என்று மாக்ஷிமை மிக்க விக்டோரியா மஹாராணியாரால் அளிக்கப்பட்ட உறுதிமொழியில் பெரும் நம்பிக்கை கொண்டிருந்த ஸநாதனிகள் புதிய அரசியல் திட்டத்தில் அவ்வுறுதிமொழி இல்லாததைக்கண்டு பெரிதும் ஏமாற்றமடைந்தனர். அச்சட்டரீதியாக மேல் சட்டஸபையும் கீழ்ச் சட்டசபையும் மத சமூக திட்டங்களை நிர்மூலமாக்கத்தக்க வழியில் வேலைசெய்யும் சட்ட ஆதரவு பெற்ற வெடிகுண்டு தொழிற்சாலைகளாக நிலவும்.

எவர் விரும்பினும் விரும்பாவிடினும் அமுலுக்கு வந்துள்ள புதிய அரசியலை இயன்றவரை பயன்படுத்திக்கொள்ள எல்லா அரசியல் கக்ஷிகளும் முனைந்துள்ளன. ஆறு மாகாண சட்டசபைகளில் காங்கிரஸ் கக்ஷி பெரும்பான்மையாக இருக்கின்றது. பெரும்பான்மையான கக்ஷியைக்கொண்டு மந்திரி சபை அமைக்கப்படல்வேண்டும். பிரிட்டிஷ் நடைமுறையில் சந்தேகங்கொண்ட காங்கிரஸ், கவர்னர்களின் உறுதிமொழியின்றி பதவி ஏற்க மறுத்தது. காங்கிரஸ் கோரிக்கைக்கு அரசாங்கம் இணங்கவில்லை. தற்கால மந்திரிசபைகள் ஏற்படுத்தப்பட்டன. வாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்தன. காங்கிரஸ் தலைவர்கள், அரசாங்கத்தினர், அறிக்கைகள் பல வெளியிட்டனர். கடைசியாகத்தோன்றிய வைஸிராயின் அறிக்கையை பெரும்பான்மையோர் வரவேற்றனர். இனியும் காங்கிரஸ் மந்திரி பதவி ஏற்க மறுப்பது, காங்கிரஸ் கக்ஷியை சட்டசபைகளுக்கனுப்புவதன்மூலம் ஏதேனும் நன்மை பெறலாமென எண்ணி வாக்களித்த ஜனங்களுக்குத் துரோகம் விளைவிப்பதாகும் என்ற எண்ணம் மக்களிடையே பரவலாயிற்று. இந்நிலையில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடிற்று. சமயோஜிதமாக பதவி ஏற்கத் தீர்மானித்தது. மத சமூக விஷயங்களில் ஏதேச்சாதிகாரமாய் சீர்திருத்தத்தின் பெயரால் சட்டங்களாக்க மனோபாவங்கொண்ட இன்றைய காங்கிரஸ்காரர்கள் அனர்த்தமான சட்டங்களை ஆக்க முற்படாமல் பதவி ஏற்று நேரிய வழியில் பொறுப்புடன் செயலாற்றட்டும்.

காங்கிரஸ்.

இந்தியாவின் பொருளாதார நிலை சீர்பெறவும் அன்னியராக்ஷியில் விளைந்த இன்னல்கள் பலவற்றைப் போக்கி நல்லரசியலை ஏற்படுத்தவும், ஹிந்து, முஸ்லீம், கிருஸ்துவர், பார்ஸி முதலான இந்தியர்களின் பொது ஸ்தாபனமாகத் தோன்றிய காங்கிரஸ், தேசவிடுதலைக்காக செய்த தியாகங்கள் மகத்தானவை. ஸநாதனிகள் உடல், பொருள், ஆவி அனைத்தாலும் செய்த தொண்டுகள் பல. பல மத சமூகவாதிகளைக்கொண்ட அரசியல் ஸ்தாபனமாகிய காங்கிரஸ் எந்த மதசமூக விஷயங்களிலும் தலையிட்டு சீர்திருத்தம்செய்ய முற்படுவது அதன் வரம்பு மீறிய செய்கை என்பதை நன்குணர்ந்த தாதாபாய் நௌரோஜி, திலகர் போன்ற மேதாவிகள் அதனை நேரிய வழியில் செலுத்தி மேன்மையுறச் செய்தனர். "சுயராஜ்யம் பிறப்புரிமை" என்ற உணர்வை மக்கட்கு ஊட்டினார் திலகர். அரசியல் போராட்டத்தைக் கட்டுப்பாடான முறையில் நடத்திக் காட்டிய பெருமை காந்திஜிக்கு உண்டு.

சமீபகாலமாய், காந்திஜி அரசியலில் தனக்கு ஏற்பட்ட செல்வாக்கைக் கொண்டு தன் மனம் போனபடி ஹிந்துமதசமூக சீர்திருத்த விஷயங்களில் காங்கிரஸை செலுத்தலானார்கள். காங்கிரஸ் மத சமூக விஷயங்களில் தலையிடுவது வரம்புமீறிய செய்கையென்றும் அநீதியானதென்றும் ஸநாதனிகள் வேண்டுகோள், எச்சரிக்கை மூலம் பலதடவைகளில் தெரிவித்தும் பயனில்லை. திருவாங்கூர் தீண்டாதார் ஆலயப்பிரவேச பிரகடனத்தை ஆதரித்து காங்கிரஸ் கமிட்டிகள் நேரடியாகத் தீர்மானங்கள் நிறைவேற்றி பிரசாரம் செய்துவருவது 1931௵ கராச்சி காங்கிரஸில் நிர்ணயிக்கப்பட்ட "மதச்சுதந்திரம்" "மதத்தின் நடுநிலைமை" போன்ற ஜீவாதார உரிமைகளுக்கு முரணானது அல்லவா என, சென்னை மாகாண வர்ணாசிரம சுயராஜ்ய சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் T. S. ராமஸ்வாமி அய்யர் ஸ்ரீஜத் ராஜகோபாலாச்சாரியாரை வினவ, மத சமூக விஷயங்களில் தலையிடுவது என்பதற்காக தீண்டாமை விலக்கு திட்டத்தை காங்கிரஸ் கைவிடமுடியாதென கூறிவிட்டார். என்ன நேர்மையற்ற பிடிவாதமான பதில்! ருஷிய பொதுவுடைமை தத்துவத்தில் மூழ்கினவரும் மதம் அல்பவிஷயமெனக் கூறிவருபவருமான, காங்கிரஸ் தலைவர் ஸ்ரீஜத் ஜவஹர்லால்நேரு அவர்கள் ஆச்சாரியாரின் கூற்றை ஆமோதித்து ஸநாதனிகளின் கோட்பாட்டிற்குப் பெரும்பான்மையோரைக் கட்டாயப்படுத்த முடியாதென்று சொல்லிவிட்டார்.

வேதாகம சாஸ்திர விருத்தமாயும் பரம்பரை அநுஷ்டானத்திற்கு முரணாயும் கோடிக்கணக்கான ஸநாதனிகளின் உரிமையில் தலையிடும்வண்ணம் தேவாலயங்களில் தீண்டாதார்களைப் பிரவேசிக்கச்செய்ய இவர்கள் யார் என்றுதான் நாம் கேட்கின்றோம்? ஸநாதனிகளின் கோட்பாட்டை ஏற்கும்படி இவர்களைக் கட்டாயப்படுத்தவில்லையே! இவர்களல்லவோ இவர்கள் நோக்கத்திற்கு ஸநாதனிகளை இணங்கப் பலவந்தம் செய்கின்றனர்! ஸநாதனிகளின் வழி பிடித்தமில்லையானால் தங்களுக்குகந்த வழியில் இவர்கள் செல்வதல்லவோ ஒழுங்கு! பிரஜைகளின் உரிமைகளைக் காப்பாற்றுவதாகப் பறைசாற்றிவரும் இவர்கள் ஸநாதனிகளின் உரிமையைக் காப்பாற்றவேண்டிய அவசியத்தை ஏனோ உணரவில்லை? நன்று! நன்று!! இவர்களின் போக்கு! இவர்களின் அநீதியான போக்கைத் தடுக்க ஸநாதனிகள் ஏராளமாய் காங்கிரஸில் சேர்ந்து, மத சமூக விஷயங்களில் காங்கிரஸ் விபரீதமாய் தலையிட்டு வருவதை தடுத்து அதனை நேரிய வழியில் செலுத்தி தேச விடுதலைக்குப் பாடுபடலாமென்பதை யோசிக்கவேண்டும்.

மன்னனின் ஏதேச்சாதிகாரம்.

மன்னன் தர்மசாஸ்திரங்களை உணர்ந்து ராஜ்யபரிபாலனம் செய்யவேண்டுவது கடமை. அவனுக்கு தர்மசாஸ்திரங்களை மாற்ற அதிகாரம் கிடையாது. திருவாங்கூர் மன்னரோ ஏதேச்சாதிகாரத்துடன் சமீபத்தில் நடந்துகொண்டார். வேதாகம சாஸ்திரங்களுக்கு விரோதமாய் அரசன் டிரஸ்டி என்ற முறைக்கு முரணாய் திருவாங்கூர் அரசன் தேவாலயங்களில் பஞ்சமர்களை அநுமதித்துள்ளார். அச்செய்கை அநீதி எனக்கூறுவது குற்றமென [illegible] மிக்க பணச்செலவு மீது அச்செய்கைக்கு ஆதரவு மிகுதி இருப்பதுபோல் காட்டப்படுகிறது. ஆனால் திருவாங்கூர் ஸீனியர் மகாராணி அவர்களோ அச்செய்கையை ஆதரிக்கவில்லை. தன் கோவில்களில் தீண்டாதாரை அநுமதிக்கவில்லை. பத்திரிகைகளின் மாயா பிரசாரத்திற்கோ, சீர்திருத்தக்காரர்களின் மிரட்டலுக்கோ சற்றும் அஞ்சாது தீண்டாதார் ஆலயப்பிரவேசக்கிளர்ச்சியை கொச்சி மஹாராஜா அவர்கள் இலக்ஷியம்செய்யாது உறுதியுடன் தர்மத்தைக் கடைப்பிடித்துவருவது மகிழ்ச்சியைத்தருகின்றது. தர்மதேவதை தர்ம சம்ரக்ஷணம் செய்யும் மன்னர்களை ஆசீர்வதிப்பாராக.

ஆத்மஞானம் ஜீவாதாரம்.

இப்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமையில் நாம் மிகுந்த ஜாக்கிரதையோடும் பொறுப்போடும் அஞ்சா நெஞ்சத்தோடும் நடக்க வேண்டியவர்களாயிருக்கின்றோம். ஆத்மஞானம் இந்தியாவின் ஜீவாதாரமான இரத்தமாகும் (life blood). அது தெளிவாகவும், சுத்தமாயும், வீர்யமுள்ளதாயுமிருக்குமானால் இந்தியாவிற்கு யாதொரு ஹானியும் விளையாது. அந்த இரத்தம் குன்றுமானால் ராஜாங்கத்திலும் ஜனசாரத்திலும் இன்னும்பல முக்கிய விஷயங்களில் நமக்கிருக்கும் குறைகள் சீர்பெறாது. ஆத்ம ஞானத்தை அலக்ஷியம் செய்து இதரவழிகளில் சீர்திருத்தம் செய்வது உயிரில்லாத உடலை அலங்கரிப்பதற்கொப்பாகும், நம் கண்முன் நமது மதம் அழிக்கப்பட்டு நாம் உயிர்வாழ்வதைவிட நாமும் நமது தேசமும் அழிவதேமேல்.

மஹான்களின் பெருமை.

ஆசார அநுஷ்டானங்கள் குன்றி நாஸ்திகம் பெருகிய காலங்களில் தெய்வீக சக்திவாய்ந்த ஸ்ரீசங்கரர், திருநாவுக்கரசு, திருஞானசம்பந்தர் போன்ற மஹான்கள் மக்களைச் சீர்திருத்தி நம் பண்டைப்பெருமையை நிலைநாட்டினர். அவர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றியல்லவோ இன்று சீர்திருத்தம் செய்தல்வேண்டும்! நீற்றறையிலிடப்பட்டும், யானைக் காலால் இடறச்செய்தும், கல்லோடு பிணைக்கப்பட்டு சமுத்திரத்தில் தள்ளப்பட்டும், மற்றும் பல இன்னல்களுக்கு ஆட்பட்டும், சற்றும் கலங்காது பரம்பொருளின்மீது பாரத்தைப்போட்டு, கொடிய பாண்டியனை தன்வயப்படுத்தி, தர்மஸ்தாபனம் செய்தவர் நமது திருநாவுக்கரசரல்லவா?

(தொடரும்)

சட்டக்குறிப்புகள்.

இந்தியா சட்டசபைச் சட்டங்கள்.

இந்தியா சட்டசபையால் சமீபத்தில் இயற்றி அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிற இரண்டு சட்டங்கள் முக்கியமாய் கவனிக்கத்தக்கன. அவைகளாவன:—

1. ஹிந்துஸ்திரீகளின் சொத்துரிமைசட்டம்.

(1937-௵த்திய 18-ஙிர் இந்தியா சட்டம்)

அவிபக்த ஹிந்து குடும்பமானாலும் விபக்த ஹிந்து குடும்பமானாலும் எவ்வித குடும்பத்திலும் உயில் எழுதிவைக்காமல்இறந்துபோகும் ஒருவனுடைய விதவை ஸ்திரீக்கு இதுவரையில் சட்டப்படிக்கும் வழக்கப்படிக்கும் இருந்துவரும் சொத்துரிமைகளைவிட அதிக உரிமைகளை இந்தச்சட்டம் ஏற்படுத்துகிறது. இந்தச் சட்டமானது 14-4-37 தேதி முதல் அமுலுக்கு வந்துவிட்டது.

இந்தச்சட்டம் 4 பிரிவுகள் அடங்கியது. அதில் 3வது பிரிவே முக்கியமானது. மேற்படி 3வது பிரிவில் முதல் உள்பிரிவு ஹிந்துவின் ஏகதேச சொத்துக்களைப் பற்றி வார்ஸ்கிரமத்தைச் சொல்லுகிறது. அதாவது ஒருவன் இறந்தவுடன் அவனுடைய விதவையும் அவனுடைய சந்ததிகளும் அவனுடைய ஏகதேச சொத்துக்களை வார்ஸ்களாக அடைகிறார்கள். அப்படி அடைவதில் விதவையானவள் இறந்தவனின் பிள்ளைமாதிரிபாவிக்கப்படுவாள். அவள் இறந்தவனுடைய பிள்ளையாக இருந்தால் என்ன பாத்தியம் சித்திக்குமோ அதை அடைவாள்.

இறந்தவனுக்கு முந்தி இறந்துபோன ஒரு பிள்ளையின் விதவையும் அந்தப்பிள்ளைக்கு பிள்ளையாகிய ஒரு பேரன் அல்லது கொள்ளுப்பேரனும் இருக்கும்பக்ஷத்தில் ஷை விதவையானவள் மற்றொரு பேரன் அல்லது கொள்ளுப்பேரனாக பாவிக்கப்பட்டு அந்த ஸ்தானத்தில் மூலபுருஷன் சொத்துக்களை அடைவாள்.

ஷை 3வது பிரிவின் இரண்டாவது உள்பிரிவானது இறந்த ஹிந்துவின் அவிபக்த குடும்பசொத்துக்களைப் பற்றியது. ஒரு அவிபக்த ஹிந்துகுடும்பத்தில் ஒருவன் இறந்துபோனால் அவனுக்கு அந்தக் குடும்ப சொத்துக்களில் என்ன பாத்தியங்கள் இருந்ததோ அதே பாத்தியங்களை அவனுடைய விதவை அடைகிறாள்.

மேலேகண்ட இரண்டு உட்பிரிவுகளின்படி விதவைக்குக் கிடைக்கும் பாத்தியங்கள் யாவும் அவள் ஆயுசுபரியந்தம் அநுபவிக்கக்கூடிய பாத்தியமேயல்லாது சர்வ சுதந்திர பாத்தியமல்ல என்று ஷை 3வது பிரிவின் 3வது உட்பிரிவு சொல்லுகிறது. ஆனால் அவளுக்கு பாத்தியங்களைத் தனிமையில் பிரித்து அநுபவிக்க பாகவியாஜ்ஜியம் செய்யலாமென்றும் அந்த உட்பிரிவில் கண்டிருக்கிறது.

இந்தச் சட்டமானது பிரிவினைக்கு லாயக்கில்லாத ஜமீன்களுக்காவது ஹிந்துக்கள் தவிர மற்ற ஜாதியார்களுக்காவது ஏற்காது.

இந்தச் சட்டத்தின் முழு பிரயோஜனமும் பிரயோகமும் ஆலோசிக்கத்தக்கதே. ஆனால் இனி ஜீவனாம்ச நம்பர்கள் மிகவும் குறைந்து போய்விடும் என்பதில் ஐயமில்லை.

2. ஸிவில் ப்ரோஸிஜர் கோட் இரண்டாவது திருத்தல் சட்டம்.

1937-௵த்திய 9-ஙிர் இந்தியா சட்டம்.

இந்தச் சட்டத்தின்படி இனிமேல் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுடையவாவது ரயில்வேகம்பெனி உத்தியோகஸ்தர்களுடையவாவது, தொழிலாளிகளுடையவாவது வீட்டு வேலைக்காரர்களுடையவாவது சம்பளங்களில் முதல் நூறு ரூபாயும் அதற்கு மேற்பட்ட சம்பளத்தில் பாதிபாகமும் அவர்கள் பட்ட டிக்ரி கடன்களுக்காக ஜப்திசெய்யபாத்தியமில்லை. மேலேகண்டபடி நூறு ரூபாய்க்கு மேற்பட்ட சம்பளத்தில் பாதிபாகமும்கூட இரண்டு வருஷகாலம் தொடர்ந்தோ விட்டுவிட்டோ ஜப்திசெய்யப்பட்டால் பிறகு ஒருவருஷகாலம் வரையில் அதை ஒருவரும் ஜப்திசெய்ய பாத்தியமில்லை. ஒரே டிக்ரிக்காரர் இரண்டுவருஷகாலம் ஜப்திசெய்தால் பிறகு அவர் ஒருபோதும் ஷை சம்பளத்தை ஜப்திசெய்யக்கூடாது. இந்தச் சட்டத்தின் ஷரத்துக்கள் 1937-௵ ஜூன்-௴ 1௳க்கு முன் கோர்ட்டில் கொடுக்கப்பட்ட தாவாக்களின் பேரில் ஆன டிக்ரிகளையும் அவைகளின்பேரிலான நிறைவேறுதல் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்த மாட்டாது. இந்தச் சட்டம் 1937-௵ மார்ச்சு-௴ 4௳ நிறைவேற்றப்பட்டது.

கொச்சி மஹார்ராஜாவிடம் தூது.

மஹாராஜாவின் உறுதி.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி அகில இந்தியா வர்ணாச்ரம ஸ்வாராஜ்ய சங்கத்தாரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தூது கோஷ்டியார் திருப்பணித்துறையில் மஹாராஜாவையும், திவானையும் ஸந்தித்து அவர் ஆலயப்ரவேச விஷயமாக சாஸ்திரத்தையும், தர்மத்தையும் ஆதரித்து உறுதியாகநிற்பதை பாராட்டினார்கள்.

மேற்படி தூது கோஷ்டியில் கீழ்கண்ட கனவான்கள் இருந்தார்கள். ராவ்பகதூர் பாண்டே, மாஜி, ஜில்லா ஜட்ஜ் ஐக்ய மாகாணம். ஸ்ரீமான் நவாதி நாகபுரி. ஸ்ரீமான்கள் எம். ஸுப்ரமண்ய அய்யர் மாஜி ஜில்லா ஜட்ஜ் ஆனைதாண்டவபுரம். மஹாமஹோபாத்யாய பண்டித ராஜ, ஆர்.வி. கிருஷ்ணமாச்சாரியார். கும்பகோணம் ஸ்ரீகாமகோடி பீடமடத்தின் ஆஸ்தான வித்வான் பிரம்ம ஸ்ரீ ஜகதீஸ்வர சாஸ்திரிகள். வேதபாஷ்யப்ரவீண வித்வான் அக்நிஹோத்ரம் தாத தேசிகதாதாசாரியார் கும்பகோணம். ஸாமிநாத சாஸ்திரி மாஜி இஞ்சினீர். எஸ். நடேசய்யர் மாஜி இஞ்சினீயர் திருவிடமருதூர். ராவ் பகதூர் பி ஸி முத்துச்செட்டியாரவர்கள் ஜமீன்தார் சிறுவாலை. ராவ் சாஹிப் என். நடேசய்யர் மதுரை. சென்னை மாகாண வ.ஸ்.வ. ஸங்கத்தலைவர். எஸ். நடேசய்யர் மேற்படி ஸங்கக்காரியதர்சி மதுரை. எம். வெங்கடேசய்யர். ஆர். சங்கர நாராயண அய்யர். கோயம்புத்தூர் ஸனாதந ஸபை காரியதர்சி. டி எஸ். பலராமய்யர். கொச்சி சட்டஸபை மெம்பர். வி. பி. வைத்ரதய்யர். குஞ்சுணி ஆசான்.

தூது கோஷ்டியினர் முதலில் திவான். ஷண்முகம் செட்டியாரை ஸந்தித்தார்கள். பிறகு மஹாராஜாவையும் கண்டு வெகுநேரம் பேசினார்கள். ஸனாதநிகளின்மெமொராண்டம் மஹாராஜாவிடம் கொடுக்கப்பட்டது. திவானும் மஹாராஜாவும் கொச்சிஸமஸ்தானத்தில் ஆலயப்பிரவேச அதர்மத்திற்கு இடம் கொடுக்கப்படமாட்டாதென்று உறுதி கூறியதாகத்தெரிகிறது. திருச்சூரில் பெரிய பொதுக்கூட்டமும் நடந்தது. தூது கோஷ்டியினர் அதில் பேசினார்கள்.

இதன் விபரமெல்லாம் அடுத்த ஸஞ்சிகையில் வெளிவரும்.

ராஜிநாமா.

கும்பகோணத்தில் பிராம்மண அநாதைக் குழந்தைகள் உதவிச்சங்கம் மானேஜிங் மெம்பராயிருந்த ஸ்ரீமான் ராமலிங்கராமஸ்வாமி அய்யர் என்பவர் தமது ஸ்தானத்தை 28—5—37-ல் ராஜிநாமா செய்து விலகிவிட்டதாக அறிவிக்கிறார்.

தண்ட நீதியின் பெருமை.

(ஸ்ரீமஹா பாரதம்.)

[மேலக்காவேரி K. R. V. சாஸ்திரி.]

அரசனால் நன்கு செலுத்தப்படும் தண்ட நீதியானது நான்குஜாதிகளையும் தர்மங்களில் அடக்கி வைப்பதுடன் அதர்மகார்யங்களில் ஈடுபடாமலிருக்கும்படியும் செய்யும். பிராணிகளுக்கு எவ்வித பயமின்றி தண்ட நீதியால் செய்யப்படும் கார்யங்கள் க்ஷேமத்துடன் நான்குஜாதிகளும்தம் தம் கார்யங்களிலிருக்குமாயின் மரியாதைக்கு மாறுபாடன்றி முதல் மூன்றுவர்ணங்களும் விதிவிஹிதமான கார்யங்களில்முயற்சியடையும். அதன் காரணம்பற்றியே மனிதர்களுக்கு ஸுகம் நிலைபெற்றிருக்குமல்லவா? காலம் அரசனுக்குக்காரணமா? அரசன் காலத்திற்குக் காரணமா? என்ற ஸம்சயம் உனக்கு வேண்டாம். அரசன் காலத்திற்கு காரணமாவான். அரசன் தண்ட நீதியை சரிவர செலுத்துவானாகில் கிருத யுக தர்மம் உலகில் நடைபெறும். கிருத யுகத்தில் எல்லா ஜாதிகளின் மனமும் அதர்மத்தில் செல்லாதாகையால் எவ்விடத்திலும் தர்மமே விளங்கும் வைதிககர்மங்கள் நன்கு நடைபெறும். மனிதர்கள் யாதொரு நோயுமின்றி பூர்ண ஆயுளுள்ளவராயிருப்பர். கொடிய மனிதர்உண்டாவதில்லை. பூமியும்உழைவன்றி பலன்களைக்கொடுக்கும். ஔஷதிகளும் செழித்து விளங்கும். பட்டையும், இலையும், கனிகளும், வேரும், நல்ல வீர்யமுள்ளவைகளாயிருக்கும். அக்காலத்தில் அதர்மமின்றி தர்மம் ஒன்றே எங்குமிருக்கும். ஓ! யுதிஷ்டிரரே இதுவே கிருதயுக குணங்கள். அரசன்தண்ட நீதியில் ஒரு பாகத்தை தள்ளி விட்டு மற்ற மூன்று பாகங்களைத்தெரிந்து நிற்குங்கால் திரேதாயுகம் நடைபெறும். அக்காலத்தில் தர்மத்தில் மூன்று பாகங்களுடன் அதர்மத்தின் ஒருபாகம் கலந்து நிற்கும். பூமியும் ஔஷதியும் உழுதுதான் பலன்தரும்அரசன்தண்ட நீதியின் பாதி பாகத்தை விலக்கிபாதி பாகத்தை தொடர்ந்து நின்றால்அப்போது த்வாபரமென்றும் காலம் உலகில் நடைபெறும். அக்காலம் பாபம் இரண்டு பாகமும் புண்யம் இரண்டு பாகமும் கலந்து நிற்கும். பூமி உழவு முதலிய தால் அரை பாகந்தான் பயனுள்ளதாகும். அரசன் தண்டநீதியை முழுவதும் விலக்கி விட்டுக்கெட்ட வழியுடன்பிரஜைகளை துன்பப்படுத்தும்போது கலி யுகம் நடைபெறும்.

கலியுகத்தில் எங்கும் அதர்மம் ஓங்கி நிறைவதன்றித் தர்மம் எவ்விடத்திலுமிராது. எல்லா ஜாதிகளின் மனமும் தன் தர்மத்திலிருந்து நழுவும். வைதிகமான கர்மம் மிகவும் குறையும். ருதுக்கள் ஆறும் பிராணிகளுக்கு சுகமின்றி வியாதியைக் கொடுப்பவைகளாயிருக்கும். பல வியாதிகள் உண்டாவதால் நூறு பிராயம் நிரம்பாமலே மரிப்பார்கள். கொடிய பிரஜைகள் ஜனிக்கும். மேகமும் மாரி பெய்வதும் பயிர் உண்டாவதும் சில இடங்களிலேயேமட்டுமிருக்கும். அரசர் தண்டநீதியை செலுத்தி பிரஜைகளை காக்க விரும்பாமலிருக்கும்போது ரஸங்கள் யாவும் நாசமடையும் ஆகவே. அரசனே கிருதம், திரேதை, த்வாபரம், கலியுகம் என்றும் நான்கு யுகங்களுக்கும் காரணமாவான்.

முறையே நான்கு யுகதர்மங்களை அநுஷ்டிக்குமரசன் அழிவற்ற ஸுவர்கலோகம், கொஞ்சம் குறைந்த ஸ்வர்கத்தையும், ஸ்வர்க்கத்தின் ஒரு பாகத்தையும் அடைவான். கலியுகத்தை நடைபெறச்செய்யு மரசன் மிகவும் பாபமுள்ளவனாகி பாபத்திற்குறிய பலனையடைந்து கஷ்டப்படுவான். அபகீர்த்தியையும் அடைவான் ஓ பாரதா? ஆகையால்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க.)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-௵ ஆவணி-௴ 18௳

ஆலயப்பிரவேச நிர்ப்பந்தம்.

சென்னை சட்டஸபையில் ஒரு மெம்பர் ஆலயப்பிரவேச விஷயமாகக்கொண்டுவரப்போகும் தீர்மானத்தின் விவரத்தைச்சென்ற வாரம் குறிப்பிட்டிருக்கிறோம். இம்மாகாணத்திலுள்ள எல்லாக்கோவில்களிலும் தீண்டாதாரை ஜாதி ஹிந்துக்களுக்கு ஸமமாக அநுமதிக்க வேண்டுமென்றும், கோவில் வழக்கங்கள் இதற்கு எதிரிடையாகயிருந்தால் அவை செல்லத்தக்கவையல்லவென்றும், தீண்டாதார் பிரவேசத்தைத்தடுப்பவருக்கு ரூ 100 அபராதம் விதிக்கவேண்டுமென்றும் அந்த மசோதா சொல்லுகிறது.

இந்த மசோதா விஷயமாக மந்திரிகளும் மெம்பர்களும் எப்படி நடந்துகொள்ளப்போகிறார்களென்பது இப்போது நிர்ணயிக்கப்பட முடியாததாயினும், இதுபோன்ற பெரிய விஷயங்கள் ஸம்பவிக்க இனிமேல் அதிக ஸந்தர்ப்பமிருப்பது நிச்சயமாகையால், தார்மிகர்கள் இவைகளை எந்த வழி நின்று எதிர்ப்பதென்பது முக்யமான விஷயமாகும்.

இது வரையில் நாம் ஆலயப்பிரவேச இயக்கத்தை எதிர்த்ததற்கு, அது சாஸ்திர விரோதம் என்ற முக்ய அம்சம் காரணம் நிற்க, ஸமூக வ்யவஸ்தைகளிலும், ஸ்திரப்பட்டு நிற்கும் பிரஜைகளின் உரிமைகளிலும் பிறர் நிர்ப்பந்த மூலமாக மாறுதல் செய்ய முற்படுவது அநீதி யென்ற அடிப்படையான தத்வமே நமக்கு ஆதாரமாயிருந்து வருகிறது. இதன் மூலம் சீர்திருத்தக்காரர்களின் நீதியற்ற புராக்ஷிக்கொள்கையை ஆக்ஷேபிப்பது நமது நோக்கமாயிருந்தது.

ஆயினும், அவ்யவஸ்தைக் காரர்களின் விபரீத புத்திப்போக்கு தற்போதுள்ள ராஜ்யச் சலுகையால் நாளுக்குநாள் இன்னும் குரூரமாயும் உரிமை நாசகாரியாகவும் இருப்பது பிரகிருத ஆலயப்பிரவேச மசோதாவால் நன்கு வெளியாகிறது. ஏற்கனவே இந்தியா சட்டஸபையில் வந்திருந்த மசோதாவைவிட இப்போதைய மசோதா இன்னும் பெரிய அதிக்ரமம் நிறைந்ததாயிருக்கிறது. ஸ்தலவாஸிகளுடைய அபிப்பிராயத்தை அநுஸரித்து கோவில் டிரஸ்டிகளுக்கு, ஆலயப்பிரவேச அநுமதியளிக்கக்கூடிய அதிகாரம் ரங்கய்யர் மசோதாவில் கொடுக்கப்பட்டிருந்தது. இப்போது வந்துள்ள மசோதாவோ, எவ்வித வரையறையின்றியும் தீண்டாதார் கோவில் பிரவேசம் செய்யவும், அவர்களைத் தடுப்பவர்களுக்கு அபராதம் விதிக்கவும் இடம்கொடுத்திருப்பதின் மூலம் அவ்யவஸ்தைக் காரர்களின் புத்திப்போக்கு விபரீத வழியில் விருத்தியாகிவருவதைக் காட்டவில்லையா?

ஆகையால் இந்த மிடுக்கான நிலைமையில் ஆலயப் பிரவேசம் சாஸ்திரீயம் என்ற ஒரு கக்ஷியைமட்டும் நாம் வற்புறுத்திப் பேசுவதில் பயன் ஏற்பட நியாயமில்லை. எல்லா ஜாதி மதஸ்தர்களும் கவனிக்கக்கூடிய பொதுபடையான அம்சத்தைக் காட்டி, அதன்கீழ் ஆலயப்பிரவேசத்தையும் ஒரு உதாஹரணமாகக் கூறி எதிர்ப்பதே தற்போது கார்யசித்திகரமாயிருக்கும். நல்லவேளையாக அவ்யவஸ்தைக்காரர்கள் தற்போது மதாசாரவிஷயங்களோடுமட்டில் தங்கள் அசட்டை புத்தியையும் ஆக்ரமிப்பையும் நிறுத்தாமல் பிரஜைகளுடைய லௌகிக உரிமைகளிலும் புகுந்து புராக்ஷிசெய்யவும் ஆயத்தமாயிருக்கிறார்கள். இதனால் பலர் வெகுவாகப் பாதிக்கப்பட்டு அவ்யவஸ்தைக்காரர்களை எதிர்க்கவேண்டிய ஸந்தர்ப்பம் கூடிய சீக்கிரத்தில் ஏற்படும். சமூக வாழ்வு, குடும்ப வாழ்வு, மதாசாரப் பற்று, சொத்துரிமைகள் முதலிய அடிப்படையான பிரஜா உரிமைகளுக்கு பலவிதமாக கேடுகளும் விபரீதங்களும் வரக்காத்துக்கொண்டிருக்கின்றன. எதிலும் அவ்யவஸ்தைக்காரர்கள் கட்டாயமுறையை ஏற்படுத்தி பிரஜைகளை தங்களுடைய வழிக்கு எல்லாரையும் உட்படுத்த நிர்பந்திக்கத்தலைப்பட்டிருக்கிறார்கள். இத்தகைய அநேக ஆபத்துக்களை புது ஆட்சிக்காரர்கள் ஜனங்கள் மீது சிறுகச் சிறுகச் சுமத்த யத்தனிப்பதும், அதன்மூலம் அதிருப்திகள் உண்டாகக்கூடியதுமான சூசகங்கள் தோன்றியிருக்கின்றன. ஆகையால் இப்போது ஸநாதநிகள் அநாதியாக ஏற்பட்ட தர்மங்களுக்கும் ஒழுங்குகளுக்கும் உட்பட்டே ராஜாங்கச் சட்டம் ப்ரவிருத்திக்கவேண்டுமென்றும் எலக்ஷனில் மெஜாரிட்டி அடைந்த கக்ஷியார் ஒரு வரம்புக்கும் கட்டுப்படாமல் பிரஜைகளைத் தங்கள் இஷ்டம்போல் ஆட்டிவைக்கும்படியான இச்சாதிபத்யத்தை அடைந்துவிடவில்லையென்றும் எடுத்துக்காட்டி தீவ்ரகிளர்ச்சி நடத்துவது யுக்தமும் தற்கால யுக்தமானஉபாயமுமாகும்.

ஸநாதநிகளுடைய தார்மிகக் கிளர்ச்சிகள் யாவும் பரலோக சிரேயஸ்களில் கெடுதி உண்டாக்கக் கூடாதென்ற ஒரே நோக்கத்துடனேயே நடக்கிறது. லௌகிக நன்மைகளுக்காக அல்ல.

இந்த ஆலயப்பிரவேச மசோதா சட்டமாகிவிடக்கூடும். அப்போது நாம் செய்யக்கூடியதென்ன? சட்டம் சர்ச்சையாவதற்குமுன் கண்டனத் தீர்மானங்கள், கடைசியாக ஸத்யாக்ரஹமுறை ஆகிய எல்லாவிதக் கிளர்ச்சிகளையும் பலமாக நடத்திப்பார்க்கலாம். சட்டம் ஏற்பட்டுவிட்டால் ஸ்ரீ சிருங்கேரி ஸ்வாமிகள் காட்டிய வழியில் நின்று, அத்தகைய தேவாலயங்களில் தெய்வஸாந்நித்யமில்லாத காரணத்தால் அந்த ஆலயங்களுக்கு போவதைப் பூஜகர்கள் உள்பட யாவரும் கட்டுப்பாடாகநிறுத்தி, நல்லகாலம் வரும்வரையில் அவரவர் கிருஹங்களிலேயே பூஜாதிகளைச் செய்துகொண்டுச்ரேயஸ்ஸை அடையமுடியும். இதனால்வர்ணாச்ரமதர்மத்திற்கும் எவ்விதக் குறைவுமில்லையென்றும் அநேக ஸாத்விகர்கள் நினைப்பார்கள்.

குறிப்புகள்.

மற்றொரு மேயோவின் பிராம்மண நிந்தை.

மிஸ் மேயோ என்பவள் ஹிந்துக்களையும், ஆசாரப்பழக்க வழக்கங்களையும்கேவலமாகப் பரிஹஸித்து ஒரு புஸ்தகம் வெளியிட்டாள்.

இப்போது மிஸ், ஸௌத்கேட் என்ற மற்றொரு வெள்ளைக்காரி மற்றொரு புஸ்தகம் எழுதி வெளியிட்டிருக்கிறாளாம். அதில்முக்யமாகத் தென்னிந்தியர்களைப்பற்றியும் அவர்களுடைய ஆசாரங்களைப்பற்றியும் விகாரமாக தூஷணம் செய்யப்பட்டிருக்கிறதாம். விசேஷமாகத்தென்னிந்தியபிராம்மணர்களைப்பற்றி அந்த வெள்ளைக்காரி மிக ஆபாஸமான முறையில் தூஷணமும் பரிஹாஸமும் செய்திருப்பதாக லண்டன் நிருபர் பம்பாய் பத்திரிகை ஒன்றுக்கு எழுதியிருக்கிறார்.

இங்கிலாந்திலுள்ள பாதிரி ஸங்கத்தார் இந்த வெள்ளைக்காரியை 1931ல் இந்தியாவுக்கு அனுப்பி இம்மாதிரி விஷயங்களை சேகரித்துவரும்படி ஏற்பாடுசெய்தார்களாம். அதன்படியே அவள் இங்கு வந்து போய் இப்போது இப்புஸ்தகத்தை பிரசுரம் செய்திருக்கிறாள். இதிலிருந்து பாதிரிஸங்கத்தார் விஷமமே இதற்கு காரணமென்பது தெளிவாகிறது

பாதிரிகளின் மதமாற்றுவேலைக்கு ஆதாரமாகஹிந்துமத ஆசாரங்களை தூஷித்தெழுதவும் பேசுவதும், அவர்களுடைய நெடுநாளைய விஷமச்செயலாகும். நம்மைப்பற்றி அவதூறு செய்ய எவ்வளவோ கட்டுக்கதைகளையும் பொய்களையும் அவர்கள் புஸ்தகங்கள், ஸினிமா படங்கள், முதலியவை மூலமாகப்பரப்பிவருகிறார்கள்.

இந்தப் புதிய புஸ்தகத்தில் குறிப்பாக பிராம்மண ஸமூகம் தாக்கப்பட்டிருப்பதாக லண்டன் நிருபர் சொல்லுகிறார். பிராம்மண ஸமூஹம் இதற்கு என்னசெய்யப்போகிறது? மிஸ் மேயோ புஸ்தகத்திற்கு ஹிந்துக்கள் யாவருமே ஆக்ஷேபம் செய்தனர். ஆனால் பிரகிருத புஸ்தகத்தில் பிராம்மண வகுப்பை முக்யமாகத் தென்னிந்திய பிராம்மணரைத் திட்டியிருப்பதால் மற்ற வகுப்பாருக்கு இதில் சிரத்தை அதிகம் ஏற்பட நியாயமில்லை. மேலும் பிராம்மணர்களையும் அவர்களுடைய ஆசார நாகரிகாதிகளையும் தூஷிக்கவே கங்கணம் கட்டியுள்ள பல ஸ்தாபனங்கள் இந்த புஸ்தகத்தை குதூஹலத்துடன் ஆதரிக்கவே முற்படக்கூடும். தவிரவும் பிராம்மண ஸமூஹத்தினரே சிலர் தம் ஸமூஹத்திற்குத் துரோகிகளாகக் கிளம்பி அதன் ஆசாராதிகளைப் பழிக்கப் புறப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் பிராமணர்களுக்குப் பரிந்துபேசகிறவர் யார்? ஆயினும் தென்னிந்தியப் பிராம்மணர்கள் ஒன்றுபட்டு இந்த ஆபாஸப் புஸ்தகம் இந்தியாவில் வாராமல் தடுக்க இப்போதே தக்கமுயற்சிகள் எடுத்துக்கொள்வது அவச்யமாகும்.

ஏமாந்தவர் ஏமாற்றுகிறார்!

கோபிசெட்டி பாளையத்தில் தீண்டாதார் கூட்டம் 24௳யன்று நடைபெற்றது. தீண்டாத ஜாதி மந்திரியும், தமிழ்நாடு ஹரிஜன சேவாசங்கத் தலைவரான திவான் பஹதூர் வி. பாஷ்யமய்யங்காரும், அந்த ஜாதி முன்னேற்றத்தைப்பற்றி பேசினார்கள். மந்திரியின் பேச்சில் கவனிக்கவேண்டிய அம்சம் நமக்கு ஒன்றுமில்லை. ஆனால் அக்கிராஸனம் வஹித்த திவான் பஹதூர் அய்யங்கார் வெகு ஆவேசத்துடன் ஜாதிஹிந்துக்களையும், வர்ணாச்ரமமுறையையும் கடிந்துபேசினார்.

தீண்டாதார், முன்காலத்தில் மிக உயர்ந்த நிலைமையில் இருந்துவந்ததாயும், பிறகு ஆர்யர்களாலவர்களுக்கு மிக்க கொடுமைகள் செய்யப்பட்டு தீண்டாதார் தாழ்த்தப்பட்டார்களென்றும், இதற்குக் சரித்திர ஆதாரம் பிரமாணமென்றும் அவர் சொன்னார். இம்மாதிரி இவர் ஆர்யர்கள்மீது அபாண்டமான பழிசொல்லியதற்கு சரித்திரங்களை பிரமாணமென்று சிறிதும் ஸங்கோசமில்லாமல் பேசியதைப் பார்த்து நாம் வெட்கமும் வெறுப்பும் அடையவேண்டும். நம்தேசத்தில் நிஷ்பக்ஷபாதிகளாயும், லாப லோபாதிகளற்ற உத்தமர்களாயுமான ரிஷிகள் எழுதிவைத்த சாஸ்திரங்கள் இவருக்கு வேப்பங்காய்! ஆனால் நமக்குள் சண்டைமூட்டிவிடும் நோக்கத்துடன் விதேசத்தியவர்களால் எழுதப்பட்ட ஆதாரமற்ற அபத்த சரித்திரங்களோவென்றால் வேதவாக்கு இவருக்கு! இதனால் ஆர்யர்கள் பஞ்சமர்களை ஹிம்ஸித்து தாழ்த்தினார்களென்று வெள்ளைக்காரர் சொல்லிக்கொடுத்த பாட்டை இவர் அப்படியே திருப்பி ஒப்பிவித்துவிட்டார்போலும்! இக்காலத்திய விஷம சரித்திரங்களின் யோக்யதை எங்கும் வெறுக்கப்படுவதை இவர் இன்னும் அறியவில்லையா?

தீண்டாதார் நம் தேசத்தில் மிக உன்னதமான நிலைமையில் இருந்ததாக இத்தேசத்தில் புராதன சரித்திரங்களாகிய பாரதாதிகளிலிருந்து சிறிதாவது அறியப்படுகிறதா? சரித்திரக்காரர்களுக்கு இவ்விஷயத்தில் நியாயமான ஆதாரமென்ன? இது வெறும் விஷமமான கட்டுக்கதையன்றோ? ஆரியர்கள் பஞ்சமர்களைத் தாழ்த்தினார்களென்பதும் வெறும் கற்பனையே! ஸ்ரீமான் அய்யங்கார் இந்த அபத்த சரித்திரங்களை வாசித்து தாம் ஏமாந்ததுடன் இல்லாமல் பிறரையும் ஏமாற்றப் பார்ப்பது விந்தையே! ஆரியர்களின்மேல் பஞ்சமரை பாயும்படி தூண்டிவிடும் தோரணையில் இம்மாதிரியெல்லாம் பேசப்படுவது மிகவும் கண்டிக்கத்தக்கதாம்.

தவிர ஸ்ரீமான் அய்யங்கார் வர்ணாச்ரம முறையில் தீண்டாமை என்பதே சாஸ்திரப்படி கிடையாதென்றும், இரண்டிற்கும் ஸம்பந்தமேயில்லையென்றும் அந்தக்கூட்டத்தின் சாஸ்திரம் பேசிவிட்டார். அந்த ஸபையில் கூடியிருந்தவர்களுக்கு இது நன்று புரிந்திருக்குமல்லவா? சாஸ்திர நிரூபணத்திற்கு நல்ல இடம் பார்த்தார் இவர்! வர்ணாச்ரமமென்றால் சுருதிஸ்மிருதி சிஷ்டாசாரம் ஆசார்யர்களின்வியாக்யானம் இவைகளையறிந்த தார்மிகர்கள் ஒரு வியவஸ்தைவைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதில்தீண்டாமை, தீண்டாதார்முதலியவைகளுக்குபிரமாணஇருப்பதைஸாதாரணமனிதன்கூடசுலபமாக அறியமுடியும். ஆனால் காந்தியத்தில் பிரமம் கொண்டு அதில் மூழ்கியிருக்கும் இவரைப் போன்றவர்களுக்கு காந்தீய வர்ணாச்ரம முறை ஒன்று வேறு இருப்பதை நாம் அறிவோம். அதில்தீண்டாமை கிடையாதென்று இவர் சொல்லுவதாக இருந்தால் நமக்கு எவ்வித ஆக்ஷேபமுமில்லை.

பிராணி வதம்செய்வதில் போட்டியா?

பஞ்சாபில் ஸீக்கியருக்கும், துருஷ்கர்களுக்கும் கலஹம் நடக்கிறது. ஏழுபேர் இதனால் இறந்துபோய்விட்டார்கள். காரணமோ விசித்திரமானது. ஸீக்கியர் "ஜல்கா" என்ற முறைப்படி ஆடு, கோழி முதலிய பிராணிகளைக் கொல்லுவது ஸம்பிரதாயமாம். மஹம்மதியர்கள் இதை ஸஹிக்கவில்லை. அந்த மாதிரி பிராணியைக்கொல்லும் உரிமை தங்களுடையதே என்கிறார்களாம். இதனால் இருவருக்கும் யுத்தம் நடக்கிறது.

ஸீக்கியர் தங்கள் உரிமையைக் காப்பதற்காக ஏராளமான ஆடுகோழிகளை வதம்செய்து பாத்யஸ்தாபனம் செய்கிறார்களாம். இவ்விருபதாவது நாகரிக நூற்றாண்டில் இது ஓர் விசித்ரமாகச் சிலருக்குத்தோன்றக்கூடும் ஆனால் இதைப்பற்றி ஸமூஹச் சீர்திருத்தவாதிகளோ, பத்திரிகைகளோ வாய்திறப்பதில்லை. முஸ்லீம்களுடைய பக்ரீத் பசுவதத்தையோ, ஸீக்கியர்களின் மதஸம்பந்தமான பிராணி பலிகளையோ தூஷித்து ஒருவன் பேசினால் அவன் தலை தக்குமா? ஆதலால் திருத்தக்காரர்கள் இந்த பிராணிவதங்களைப் பற்றி மௌனம்சாதிப்பதுடன் அவசியமிருந்தால்இந்தஉரிமையை அவர்களுக்குரக்ஷித்துக் கொடுக்கவும் முன்வருகிறார்கள்.

பலி நிறுத்தப்பிரசாரம் செய்யலாமே?

ஆனால் இந்தப் பேர்வழிகள் ஹிந்துஸமூஹத்தினிடையில் புகுந்து விஷமம் செய்வதை மட்டும் நிறுத்தமாட்டார்கள். மதத்தின் பெயரால் பலியிடலாமாவென்று ஜீவகாருண்யம் ததும்பக் கண்ணீர்விட்டு ஜாலம்செய்வார்கள். சிலதேவாலயங்களில் நீண்டகாலமாக ஏதோ வழக்கத்தை முன்னிட்டு நடந்துவரும் பிராணிபலியைத் தடுக்க சட்டம் செய்யப்போகிறார்களாம்! மஹம்மதியர், ஸீக்கியர் விஷயத்திலும் இம்மாதிரி, சட்டம் செய்ய அவர்களுக்கு பௌருஷமுண்டாவென்று கேட்கிறோம். பலிசெய்வதற்கு நாம் பரிந்துபேச வரவில்லையாயினும் ஒரு சாராருடைய வழக்கத்தைச் சட்ட மூலமாக தடைசெய்ய இவர்கள் யார்? பிரதிதினமும் இந்தியாவில் லக்ஷக்கணக்கான பிராணிகள் மனிதன் வயிற்றுக்காகக் கோக்கொலை செய்யப்படுகின்றனவே! சீர்திருத்தவாதிகள் உண்மையான ஜீவகாருண்ய வாதிகளாயிருந்தால் இதைத் தடுக்கவேண்டியது முதல் கார்யமல்லவா? மாம்ஸம்புசிக்கலாகாதென்று இவர்கள் பிரசாரம்செய்வார்களா? சீர்திருத்தவாதிகளில் மாம்ஸம் விட்டவர்கள் எவ்வளவுபேர்?

தேசிய காங்கிரஸ் தலைவரான நேருஜி தாம் மாம்ஸம் சாப்பிடும் வழக்கம் இப்போதும் உண்டென்றும், அது தமது விருப்பமென்றும் தமது ஸ்வய சரித்திரத்தில் உத்ஸாகமாகச்சொல்லிக்கொள்கிறார். பிராணிவதம் செய்யாமல் மாம்ஸம் எங்கிருந்துவரும்?

அஹிம்ஸா மூர்த்தியான காந்திஜி, தீண்டாதாருக்குத்தோல் பதனிடும் வேலை மிகப்புனிதமென்று உபதேசித்தார். ஆடு மாடுகளைக் கொல்லாமல் தோல் எப்படிக்கிடைக்கும்? மேலும் காந்திஜி தமது யௌவன காலத்தில் மாம்ஸம் சாப்பிட்டதுண்டு என்று ஒப்புக்கொள்கிறார்.

இப்போது சென்னை மந்திரியாயிருக்கும் ஒரு கனவான் தார்சீமையில் வாஸித்துக்கொண்டிருந்தபோது, ஸ்ரீமான் ஸவர்கார், வி. வி. எஸ். அய்யர் இவர்களுடன் சேர்ந்து பலவித மாம்ஸங்களைச்சாப்பிட்டதாக ஸ்வதேசமித்ரனில் சில வருஷங்களுக்கு எழுதியிருந்தார். இப்படி சீர் திருத்த வாதிகள் யாவரும் மாம்ஸம் புஜிப்பவர்களாயிருக்கையில் ஜீவகாருண்ய பிரஸங்கமும், கோவில் பலி நிறுத்த பிரசாரமும் செய்வது வெட்கக்கேடாயிருக்கவில்லையா?

இவர்கள் உண்மையான ஜீவகாருண்யவாதிகளாயிருந்தால் இப்போது பஞ்சாபில் நடக்கும் பிராணிவதப்போட்டிக்கலகத்தில் புகுந்து பலி நிறுத்தப்பிரசாரம் செய்ய முன்வரட்டும்

நியாயவாதி.

ஸ்ரீ ஜகத்குரு
வியாஸபூஜா முகாம்

Palokol
(க்ஷீராராம் க்ஷேத்திரம்.)
West Godavary Dt.

விடுமுறை அறிவிப்பு.

அடுத்தவாரம் 15-9-37ல் விநாயக சதுர்த்தியை முன்னிட்டு நமது ஆபீஸுக்கு விடுமுறையாகும். ஆதலால் அந்தவாரம் ஆர்யதர்மம் பிரசுரமாகாது. அடுத்த ஸஞ்சிகை 22—9—37ல் வெளிவரும்.

மானேஜர்.

தேசியக்கோரிக்கைத் தீர்மானம்.

சென்னை சட்டஸபையில் முதன் மந்திரி ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியாரால் காங்கிரஸின் தேசியக் கோரிக்கைத் தீர்மானம் பிரேரேபிக்கப்பட்டது. அதில் இப்புதிய ராஜீயச் சீர்திருத்தம் ஜன ஸம்மதிபெற்றதல்லவென்றும், வயதுவந்தவர்களுடைய வோட்டைப் பெற்றுத் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனப்பிரதிநிதிகள் அடங்கிய ஸபைமூலம் இந்தியாவுக்கு விருப்பமான ராஜீயத்திட்டம் அமைக்கப்படவேண்டுமென்றும், காங்கிரஸ்காரர்கள் மந்திரி பதவி ஏற்றதைக்கொண்டு புதிய சீர்திருத்தத்தை அங்கீகரித்துவிட்டதாக ஆகாதென்றும் சொல்லப்பட்டிருந்தது.

இதைப்பற்றி ஸாதகமாயும், பாதகமாயும் பலர் பேசினர். சில திருத்தங்களும் கொண்டுவரப்பட்டன.

ஆயினும் அஸல் தீர்மானம் அப்படியே நிறைவேறிவிட்டது.

ஸமூஹத்திருத்தச் சட்டங்கள்.

காந்திஜியுடன் ஆலோசனை.

பம்பாய் மந்திரி ஸ்ரீமான் முன்ஷி வார்தா சென்று காந்திஜியுடன் யோஜனை செய்தாராம். சமூஹச் சீர்திருத்த சட்டங்களையும், முக்கியமாகத் தீண்டாதார் முன்னேற்ற விஷயமான சட்டங்களையும் பற்றி காந்திஜியுடன் அவர் யோஜித்துவந்திருப்பதாக தெரிகிறது. என்ன அனர்த்தம் விளையப்போகிறதோ?

பிராம்மண ஸமூஹத்தின் துர்கதி!

சென்றவாரம் சென்னை கார்ப்பரேஷன் கூட்டத்தில் நடந்த பிரஸ்தாபமொன்று பிராம்மண ஸமூகத்தின் மானத்தையே பாதிக்கக்கூடியதாயிருக்கிறது. கார்ப்பரேஷன் ஸுகாதார உத்யோகஸ்தர் ஒருவருடைய தினசரி வேலை என்னவென்று ஒரு கேள்விகேட்கப்பட்டது. அதற்கு மேயர் பதிலளிக்கையில் மாம்ஸக்கடைகளைச் சுற்றிப் பார்ப்பதே அவருடைய வேலையென்றார். அந்த உத்யோகஸ்தர் பிராம்மணராயிருப்பதால் மாம்ஸக் கடைகளை நன்கு கவனிக்க முடியுமாவென்று மீண்டும் கேட்கப்பட்டது. அதற்கு மேயர் பதில் சொல்லுகையில் அந்த உத்யோகஸ்தர் பிராம்மணராயிருப்பினும் தமது கடமையை மிக ஒழுங்காகச் செய்வதாயும், காலதேச நிலைமை மாறி வருவதால் ஜாதி வழக்கங்களும் மனப்போக்கும் வெகுதூரம் மாறிவிட்டதாகையால் அந்தப் பிராம்மணர் மாம்ஸக் கடைகளை மேற்பார்வையிட ஜுகுப்ஸை அடையவில்லையென்றும் அதிகப்படியான வார்த்தைகளால் மேயர் ஸமாதானம் கூறினாராம்..

கெட்டதோ,நல்லதோ, ஒருவன் உத்தியோகத்தை ஜீவனத்திற்காக ஏற்றுக்கொண்டுவிட்டால் அந்தக்கடமையை அவன் ஒழுங்காக நிறைவேற்றவேண்டுமென்பதில் நியாயமிருக்கிறது. அதன்படி பார்த்தால் அந்த அந்தணர் செய்கை நியாயமானதே. இதில் பரிஹாஸத்திற்கோ, நிந்தைக்கோ இடமில்லை. ஆதலால் அவர் தமது கடமையை ஒழுங்காக செய்துவருகிறாரென்பதோடு மட்டில் மேயர் நின்றிருந்தால் நியாயமாயிருக்கும். அப்படியின்றி அவர் காலதேசத்தை யனுஸரித்து பிராம்மணர்களின் மனப்போக்கு மாறிவருகிறதாகப் பொதுப்படையில் பேசியது அதிக வார்த்தையாகவே காண்கிறது. உத்யோகம் கிடைத்தால் பிராம்மணர்கள் எதைவேண்டுமானாலும் செய்யத்தயாராக இருப்பார்களென்று குத்திக்காண்பிப்பதாகவே இது ஆகிறதென்று சிலர் நினைக்கக்கூடும். ஜீவன சிரமத்தை உத்தேசித்தோ, அல்லது ஸமூஹ நியமங்களில் நம்பிக்கையில்லாமலோ ஒருவர் அல்லது ஒரு சிலர் அநுசித கார்யங்களைக் கொண்டதற்காக அந்த ஸமூஹத்தை முழுவதுமே பரிஹஸித்துப்பேசுவது நியாயமா? கார்ப்பரேஷனில் இந்தக்கேள்வியும் பதிலும் வேண்டுமென்றே சங்கேதத்துடன் வெளிப்பட்டதாகவும் ஊகிக்கக்கூடியதாயிருக்கிறது. இது எப்படியாயினும் இந்தப் பிரஸ்தாபம் பிராம்மண ஸமூஹத்தின் மனதை பிளக்கக்கூடியதாக இல்லையா? தம் இனத்தைக் காட்டிக்கொடுத்தும், தூஷித்தும்,அவதூறு செய்தும் திரியும் பிராம்மணவேஷதாரிகள் இனியாவது ரோஷத்துடனும், பௌருஷத்துடனும் நடந்து தங்கள் ஸமூஹத்தின் கௌரவத்தை ரக்ஷிப்பார்களா!

பிராம்மண ஸமூஹம் எந்த வேலையையும் செய்யத் தயாராக இருப்பதாக மேயர் சுட்டிக்காட்டியதிலிருந்து அந்த ஸமூகத்தின் துர்த்தசையும் நிர்க்கதியான நிலைமையும் வெளியாகிறதேயல்லது மனப்போக்குவிசாலமாகிவிட்டதாகச் சொல்ல நியாயமென்ன?

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிவுள்ள அரசன் தண்டநீதியை முன்னிட்டு அடையாததை அடையவும் அடைந்ததை ரக்ஷிக்கவும் வேண்டும் அப்பொழுதே பிரஜைகளின் யோக க்ஷேமங்கள் ஐயமின்றி நடைபெறும். தண்டநீதி தாய் தந்தைபோல உலகின் மரியாதையின் எல்லையை ரக்ஷிப்பதுடன் உலகங்களையும் பரிசுத்தப்படுத்தும். பிராணிகள் யாவும் தண்ட நீதியில் இருப்பதாகத் தெரிந்துகொள்ளவேண்டும்.இந்த நீதியொன்றே அரசனுக்கு மிகச்சிறந்ததாகும். இவ்வித ஒழுக்கத்துடன் பிரஜைகளை ரக்ஷித்துவரும் நீ ஜெயிக்க அரிதான ஸ்வர்க்கத்தை ஜயிப்பாய் எனவிஸ்தாரமாக ஸ்ரீ பீஷ்மர் தர்மருக்கு உபதேசித்தருளினர்.

சாரதாச் சட்ட
அபராதத்தொகை திருப்பிக் கொடுக்கடபடுமா ?

பிரஜைகளின் ஜீவாதார உரிமைகளைப்பற்றி காங்கிரஸ் வாதிகள் ஆகாயமளாவப் பேசுகிறார்கள். காங்கிரஸ்வாதிகளுடைய உரிமைகளைக் காப்பதிலேயே இதன் நோக்கமேயல்லது மற்றவர்கள் எப்படிப் போனாலென்ன, என்கிற மனப்போக்கே இவர்களுக்குப் பெரிதும் இருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் ஜயிலில் இருக்கக்கூடாது. அவர்களுக்கு அபராதம் விதிக்ககூடாது. அவர்களிடம் ஜாமீன் கோரக்கூடாது. அவர்களுடைய உரிமைகளுக்கு பங்கம் ஏற்படக்கூடிய சட்டம் செய்யக்கூடாது, இவ்வளவுதான் காங்கிரஸ் 'ஸ்வதந்திர வாதிகளின் போக்கு. மற்றவர்களுடைய உரிமைகளைப்பற்றி இவர்களுக்குக் கவலையில்லை. குதர்க்கமும், துர்க்கக்ஷியும் பேசி பிறருடைய உரிமைகளைப் பிடுங்க முயற்சிப்பார்கள். உண்மையான ஸ்வதந்திரவாதிகளாயிருந்தால் எல்லோருடைய பாத்யத்தையும் ரக்ஷிக்கவேண்டாமா?

காங்கிரஸ் மந்திரிபதவி யேற்பட்டபிறகு ராஜீயக் கைதிகள் விடுதலை செய்யப்படுகிறார்கள். அவர்களுடைய அபராதத்தின் தொகை,ஜாமீன் தொகைகள் திருப்பிக்கொடுக்கப் படுகின்றன. இந்த நியாயம் சாரதாச்சட்டத்தண்டனை விஷயத்திலும் ஏன் காட்டப்படக்கூடாது? மதக்கட்டளையையும் மனஸ்ஸாக்ஷியையும், கொண்டு விவாஹ உரிமையைக்கொண்டாடியவர்களை தண்டித்தது நீதியா? ஏழைகளுடைய பணத்தை அபராத மூலமாகப் பிடுங்கி ஸர்க்கார் பொக்கிஷத்தை நிரப்பவது என்ன நியாயம்? காங்கிரஸ் வாதிகள் உண்மைப் பாதுகாப்பாளராயிருந்தால், பக்ஷபாதமற்றவர்களாயிருந்தால் சாரதாச்சட்டக் குற்றவாளிகளை விடுவிக்கவேண்டியது தர்மமில்லையா? அவர்கள் செலுத்திய அபராதத்தொகைகள் வாபீஸ்செய்யப்பட வேண்டியவைகளல்லவா? இதைச்செய்து தங்களுடையநேர்மையைக் காங்கிரஸ் வாதிகள் நிரூபிக்கட்டும். இல்லையேல் இவர்களுடைய வேஷம் சீக்கிரத்தில் சிதறுண்டு போவது நிச்சயமே!

திருவாங்கூரைப்பாராட்ட நியாயமென்ன?

சென்னை சட்டஸபையின் கூட்டங்கள் ஆரம்பமாகப்போகின்றன. மனம்போனபடியெல்லாம் மசோதாக்களும், தீர்மானங்களும், வரப்போகின்றனவென்று தெரிகிறது, ஜமீன்தார் முறை ஒழிப்பு, மிருகபலி நிறுத்தம், திருவாங்கூர் ஆலயப்ரவேசப்பாராட்டு முதலிய பல தடபுடல் கார்யங்கள் நடக்குமென்று தெரிகிறது.

திருவாங்கூர் ஆலயப்பிரவேசத்தைப்பாராட்டுவதற்காக ஒருவர் ஒருதீர்மானம் கொண்டுவர நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். கவர்னரும் இதற்கு அநுமதிகொடுத்துவிட்டாராம். சட்டஸபையில் இத்தீர்மானம் வருவதும் இதை ஆதரித்து திருவாங்கூர் அரசனையும், மந்திரியையும் இந்திரன் சந்திரனென்று துதிபாடவும் பலர்முன்வருவார்கள். தீர்மானமும் நிறைவேறி விடும். ஆயினும் இது இந்தசட்டஸபைக்கு ஸம்பந்தப்பட்ட வேலையா? திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் நடக்கும்கார்யங்களை பற்றிபேச சென்னை சட்டஸபைக்கு என்ன அவச்யம்? ஆலயப்பிரவேச விஷயம் விவாதத்திற்கு இடமுள்ளதல்லவா? வோட்டர்களில் வெகுபேர் ஆலயப்பிரவேசத்தை எதிர்ப்பவர்களென்பதுமெம்பர்களுக்குத்தெரிந்தவிஷயம் திருவாங்கூர் விளம்பரத்தைக்கண்டித்து தேசத்தில் பலத்த பிரசாரம் நடப்பதும் தெரிந்த விஷயம், எலெக்ஷன் ஸமயத்தில் பல ஓட்டர்கள் ஸொந்த முறையில் உறுதியும் கூறியிருக்கிறார்கள். ஆலயப்பிரவேசத்தை ஆதரிப்பதாக வோட்டர்களிடம் அறிவித்து அவர்களுடைய அநுமதி கிடைத்திருக்கிறதா? இப்படியிருக்க சென்னை சட்டஸபையில் விவாதாஸ்பதமான இந்த விஷயத்தை கவர்னர் அநுமதித்தது நியாயமாயில்லை,இந்தத் தீர்மானம் நிறைவேறினால் சென்னை சட்டஸபைக்கு ஆலயப்பிரவேசத்தில் ஆதரவு இருப்பதாகவல்லவோ அர்த்தமாகும். இந்த தைர்யத்தைக்கொண்டு ஒரு ஆலயப்பிரவேச மசோதாவும் தலைகிளப்ப வழியுண்டாகும். தேசத்தில் ஒற்றுமையும் நிர்மாண வேலையும் ஏற்படவேண்டிய இச்சமயத்தில் பெரிதும் விவாதஸ்பதமான வேலைகளில் இறங்காமல் மெம்பர்கள் எச்சரிக்கையுடனிருப்பதே விவேகமாகும்.

சென்னை வரவு செலவு திட்டம்.

வெகு நாளாக எதிர்பார்த்திருந்தகாங்கிரஸ் ஸர்க்கார் வரவு செலவு திட்டம் நேற்று முன் சென்னை சட்ட ஸபையில் வெளியாகியிருக்கிறது. பொது ஜனங்கள் அதிகமாக எதிர்பார்த்தபடி விசேஷ தன்மை அதில் ஒன்றும் காணப்படவில்லை. நிலவரியில் 75 லக்ஷம் வஜா செய்ய ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது இது மத்யகால மந்திரிகள் செய்த ஏற்பாடே. விவஸாயிகள் கடன் பளுவுக்காக 30லக்ஷம் உதவப்படும், கைத்தறி நெசவுக்கு ஆதரவுக்கு கொடுக்க 2 லக்ஷம். 1937 ஏப்ரலுக்குப்பிறகு ஸர்க்கார் உத்யோகத்திற்கு வருகிறவர்களுக்கு சம்பளம் குறைக்கப்படும். மற்றவர்கள் விஷயத்திற்கும் இந்தியா மந்திரியின் உத்திரவு கோரப்படும்.

ஏற்கனவேயிருந்த மந்திரி ஸபையார் பாதி வருஷத்திற்கு வேண்டிய வரவு செலவுதிட்டத்தைத்தயாரித்து விட்டபடியால் இப்போது அதை அநுசரித்து நடக்க வேண்டி வந்துவிட்டதாம். அடுத்த வருஷத்தில் தான் காங்கிரஸ் கை வரிசை தெரியுமாம்.

ஸ்ரீ சங்கரபகவத் பாதாசார்யாளவர்கள்
அருளிச்செய்த
ஸௌந்தர்யலஹரி
by G.V. கணேச அய்யர், B.A., B.L.,
மூலம் நாகரத்திலும், தமிழிலும், பதவுரை,
பொழிப் புரை குறிப்புகளுடனும்,)
விலை ரூ. 1 8 0

மூகபஞ்சசதியின் முதல் பாகம்.
"ஆர்யா சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B. A., B.L.
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
100 பக்கங்களுக்குமேல் கொண்டது. தபால்செலவு வேறு] [விலை அணா 0—8—0.
மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
[illegible] அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.

Sanatanists Deputation to H. H. Cochin Maharaja

The Following are extracts from the Memorandum submitted to His Highness the Maharaja of Cochin by the Sanatanists Deputationists who waited on His Highness on 30—8—37.

May it please Your Highness,

The All India Varnashram Swarajya Sangh offers to your Highness sincere thanks for giving us (the Deputationists) an opportunity to place before Your Highness a few points to which the Sangh and Hindu India attach very great importance.

HISTORY OF THE SANGH.

To begin with, it will not be out of place to apprize Your Highness of the circumstances under which and the object for which this Sangh was called into existence.

On the faith of the assurances contained in the famous Proclamation of Her Late Majesty Queen Victoria and the consistent policy, of non-interference in Dharmic matters adhered to by the Government on the one hand and by the Indian leaders on the other, the Sanatanis in India thought that Indian legislatures would never interfere with their Dharmic and Socio-religious beliefs and practices. But they received a rude shock when, by the passing of the Sarda Act, they found the essential religious Sacrament of marriage itself made the direct object of Legislative interference. Some of the orthodox Pandits, therefore, waited in Deputation upon the Viceroy and inquired why the Government thought it proper to ignore the Royal pledges solemnly given and to depart from the policy and practice steadily pursued upto that time. The reply they received was that the Government had nothing to gain by enforcing the law but that the Act was passed in compliance with the wishes of the Hindu leaders, who represented that it was essential in the interest of the Hindu community to penalize marriages below a particular age-limit. The Deputationists informed the Viceroy that those are the views of the so-called Reformers only, who have not understood the principles on which Hindu law and the structure of Hindu society are based and who do not, in fact represent the majority of the Hindus. The Viceroy thereupon remarked that the Government was not in a position to know what the opinion on such matters of the majority of the Hindus was and suggested that it would be proper for them to form themselves into a body and inform the Government from time to time the wishes and needs of the Hindu community in general. Taking the whole situation into consideration, the leading Pandits of the time, formed this Sangh with the object of securing the highest good of the Indian nation from all points of view i. e., social, mental, moral, spiritual, political, economic etc., and of preserving, chastening and protecting Vedic religion. Vedic culture and Vedic Institutions in general. Its activities were at first confined to limited areas here and there but it has gradually developed into an All-India Institution with its branches or at least followers and admirers in every Province of British India. Within the last 8 years, it has successfuly held Conferences in different Centres in India, viz., Delhi, Calcutta, Bombay, Ahemadabad, Guruvayur, Jalgaon, Allahabad, Gaya & Puri and has stoutly opposed Legislative interference with the Dharmic affairs of the Hindus. It has exerted to send its representatives to the Imperial Legislative Council and Provincial Assemblies. The British Indian Government recognized the representative character of this Institution by allowing and arranging to send three of its representatives to give evidence before the Joint Parliamentary Committee formed to consider the Government of India Act, which was then on the anvil. Eminent Pandits learned in Dharma Shastras and Vedic literature, selected from all parts of India form the nucleus of this Sangh. This Sangh, therefore, claims to represent the true orthodox opinion of the Sanatani Hindus of India, or, in other words, of more than 90 percent of the Hindu population.

CAUSES LEADING TO THE TRAVANCORE PROCLAMATION.

To make clear the true significance of the ill-advised and calamitous Temple Entry Proclamation promulgated, recently by His Highness the Maharaja of Travancore, it is necessary to know how this perverse view of Hindu Dharma Shastra came to be formed. The system of education introduced in British India and copied by some of the Indian States had the effect of neglecting instruction in those branches of Oriental learning, which alone could have preserved the national character of the Hindus, and of concentrating all energies on diffusing Western knowledge and placing before the people Western ideals and Institutions in bright colours. The natural consequence was that men of learning created by this system began to discard everything Oriental on account of ignorance of its real nature and true value and hug to what was foreign ignoring the fact that it ill-suits Indian genius and is out of place in this country. This tendency was not confined to ways and modes of thinking but extended, gradually to habits and practices—such as food and drink, games and amusements and dress and manners—in fact to the entire day-to-day life. By reason of the temporal advantages they gained from this kind of education, these people rose to prominence in the learned professions and grew powerful in the Official field and thus loomed large in the public eyes. In the ordinary course of things they began to be regarded as leaders and people unsuspectingly submitted to their lead on the faith that their efforts were in the best interest of the nation. The consequence, was that Western mode of living and thinking became the order of the day and establishment of Western form of Government, of Western social life and of Western materialistic thought in this land of ancient Vedic culture in demolition of what was constructed by the great sages of India at a tremendous sacrifice, became the one fond ideal and ambition of the so-called leaders. However, when they began openly and directly to dabble in religious and socio-religious matters according to their whims, and attack their very foundations, thinking people began to awake to the gravity of the situation and realise gradually that things were drifting in the wrong direction.

Recent events in Russia, Germany and Italy impressed the imagination of some of these leaders in a different direction and created in them a strong desire to introduce those revolutionary methods in this country. The angle of vision was thus entirely changed. Walking in the traditional path had been regarded praiseworthy in this country.

To secure entry of untouchables in Hindu Temples by Royal proclamations in States covered by Hindu Princes, where the ruling Princes or their powerful Ministers are amenable to the influence of these Reformists, is an easier method for making a show that the so called reform is sanctioned by Hindu Scriptures and is a acceptable to and even desired by the Orthodox Hindu. If the practice can be introduced by this easy method in several Indian states—the position of the Reformists in the eyes of the British Government and the general public would surely be improved to a considerable extent. Evidently, therefore, the Travancore proclamation in question is a part of this unworthy desire or design to coerce the people not only in that state, but in other states as well and even in British India to accept the position these leaders may think fit to create for them.

ADVERSE CRITICISM (EXPOSED).

We beg to assure Your Highness that the hue and cry raised in the Press against the very proper order passed by Your Highness is unreal in fact and hollow in its nature. It has always to be borne in mind that Reformists, though small in number, are very vociferous. They have the Press on their side. They occupy positions of vantage, honor and influence. They are always alert and possess the proverbial activity and enthusiasm of a Neophyte. They are versed in the tactics of successfully carrying on any kind of artificial propaganda, and imagining that they are engaged in a crusade, they easily satisfy their conscience while acting unscrupulously by invoking the aid of the maxim "Every thing is fair in love and war." They are organised and have throughout India a net work of Institutions always ready to dance to their tune. They have succeeded in winning in ways known to them only a few Sanskrit-knowing men to their cause very few of whom are men of deep learning. The Sanatanis on the other hand are taciturn. The Press at their command is weak. They are hardly yet alive to the danger they are in and are quite unaccustomed to tactical movements. Above all they are timid and meek and unorganized. Consequently the storm of adverse comment raised by interested persons against the order passed by Your Highness in the Kudal Manikkam—case is but the result of their skill and organization.

CONCLUSION.

To expound Dharma is the duty of Brahmanas. There are thousands of Brahmanas ready and willing to do this duty of theirs but to protect and enforce the practice of Dharma is the duty of the Kshatriyas. As a true Kshatriya Prince Your Highness has discharged the duty of checking the wave from spreading into the Cochin State even as your illustrious forefathers have withstood the Muhammadan onslaughts in the past. Taking, however, into consideration the sad plight in which the Vedic Dharma stands at present, this Sangh earnestly hopes that Your Highness will always act as a valiant champion of the Vedic Dharma in general, unswayed by adverse criticism from interested Reformists in India and in conformity with the high ideals of Your Royal House. We pray to the Almighty that He may grant Your Royal Highness long life and bless you with increasing strength and courage to discharge Your duty as laid down in the Scriptures so that the Prajas of Your Highness and the Millions of Sanatanis outside may be saved from religious tyranny and persecution and from a path sure to lead to the ruin and destruction of the whole nation.

Rajendra Babu on Socialism. 'It is neither possible or desirable at this stage to embark on a radical programme involving alteration in the basic structure of society." He did not agree with the fundamentals of socialism which were based on the materialistic view of life. Mere satisfaction of material wants should not be the desideratum.'

Mr. C. Rajagopalachari, Prime Minister, addressing the students of the Christian College said :— "You cannot do two things at a time. You cannot take keen and active interest in burning topics of a political or administrative nature and also carry on your studies. It is impossible. You must decide either to give up your studies and engage your-self in active politics, or you must be patient until you become politicians yourselves."

Mr. Gandhi in his message to the Travancore Womens' Conference at Quilon wished that "Travancore women will play their part in purifying religion by removing from their heart untouchability and all it means."

The 'Madras Mail' agreeing with the Premier's view that every person should stick to a certain set of principles, says "Differences of opinion may be as firmly based on principles as agreement. Thus, the differences between the Sanatanists and Mr. C. Rajagopalachariar do not indicate perverseness in either, but the contrast between what their several consciences approve."

How Hindu India lost glory:—Pandit Nehru (Autobiography: Page-431) truly says :-" And yet with all its strength (of culture and inner unity) it could not preserve political freedom or endeavour to bring about political unity. These later do not appear to have been considered worth much trouble: their importance was very foolishly ignored, and we have suffered for this neglect."

வெளியூர்ச்செய்திகள்.

திருவையாறு.

ஜந்மாஷ்டமி உற்சவம்.

சென்ற சனிக்கிழமை (28-8-37)௳ இரவு பாவாஸாமி அக்ரஹாரம் ஹநுமார் கோயிலில் கும்பகோணம் பிரம்மஸ்ரீ அநந்தராம சாஸ்திரி குமாரரும் திருவையாறு அரசர் கல்லூரி உபாத்யாயருமான பிரம்மஸ்ரீ A. சிவராம சாஸ்திரிகள் அவர்களால் பொதுஜனநன்மையையும் வைதிக மதபிரதிஷ்டையையும் குறித்து பாகவத மஹிமையுடன் அதன் நோக்கம் என்னவென்பதையும் அதிவிமரிசையாகக்கூறி கிருஷ்ண ஜனன கட்டமும் அதன் பிரபாவமும் அதன் மூலம் நாம் நடந்து கொள்ள வேண்டியது எங்ஙனமெனவும் பல அபிமானிகள் கூட்டத்தில் நன்கு கூறப்பட்டது. இவ்வாறே ஆங்காங்கு மகா ஜனங்கள் பாகவத உபன்யாசங்கள் மூலமும் மற்றுமுள்ள பிரசங்கங்கள் மூலமும் ஆஸ்திகரிடையேயும் பாமரர்களிடையேயும் தெய்வ பக்தியின் ஆவச்யகமும் தைவதத்துவமும் ஆசார அவச்யமும் போதிக்கப்பெற்று ஸநாதனமதம் என்றும் அழியுறுவண்ணம் பாதுகாக்கப்படவேண்டுமென்று யாவரையும் கேட்டுக்கொள்வதோடு பாமனே வேண்டுகிறேன்.

ஒரு நிருபர்.

செங்கற்பட்டு.

ஹிந்துமதப்யக்கமிட்டியின் ஆதரவின் கீழ் 8-8-37 முதல் 22-8-37 வரையில் சேங்காலிபுரம் பிரங்கபானு பிரம்மஸ்ரீ வைத்தியநாத சாஸ்திரிகள் அவர்களால் 15 நாட்கள் ஸ்ரீமத் ராமாயண மஹோத்ஸவ பிரவசனம் நடைபெற்றது. சாஸ்திரிகள் ஸ்ரீமத் ராமாயணத்தில் உள்ள தத்வங்களை நவீன வாதிகளும் பிரமிக்கும்படி தகுந்த மேற்கோள்களுடன் உபன்யாசித்தது மிகவும் போற்றத்தக்கது. 22-8-37 இரவு ஸ்ரீராமபட்டாபிஷேகம் நடைபெற்றது. ஸ்ரீசிவப்ரகாச ஆனந்த கிரிஸ்வாமிகள் அனுக்ரஹமே இவைகள் நடப்பதற்கு முக்ய காரணம்.

திருக்கழுக்குன்றத்தில் அவ்வூர் வாலிகளின் வேண்டுகோளுக்கிணங்க பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் ஸ்ரீமகாபாரதம் விராட பர்வம் உபன்யாசம் நடைபெற்று 22-8-37 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ உத்ராகல்யாணம் நடைபெற்றது. 23-8-37 முதல் இவ்வூரில் பிரம்மஸ்ரீ தீக்ஷிதர் அவர்களாலேயே ஸ்ரீமத் ராமாயண நவாஹப்பிரவசனமும் நடைபெற்று வருகிறது.

24-8-37 செவ்வாய்க்கிழமையன்று, சாத்தனஞ்சேரி கிராம ஸநாதன தர்ம ஸங்க, கார்யதரிசி, பி.என். ராமநாத சாஸ்திரிகளின் வேண்டுகோளுக்கிணங்க ஷை கிராமத்தில் பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராமதீக்ஷிதர் அவர்களால் "ஸ்ரீருக்மணிகல்யாணம்" என்னும் விஷயம் வெகு விமர்சையாயும் உருக்கமாயும் உபன்யாஸிக்கப்பட்டது.

ஒரு நிருபர்.

திருவல்லிக்கேணி

உபாகர்ம தினக்கொண்டாட்டம்.

அகில இந்தியா பிராம்மண மஹா சபை திருவல்லிக்கேணி தமிழ்ச்சங்கம் இவற்றின் ஆதரவில் 21-8-37௳ சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சங்கக்காரியாலயமான ஸ்ரீரங்க விலாசத்தில் உபாகர்ம தினக்கொண்டாட்டம் வெகு சிறப்பாக நடந்தது.

ஆரம்பத்தில் பிரம்மஸ்ரீ M.M. அனந்தராவ் அவர்கள் வேதம் ஓதி பின்னர் வடமொழியில் சில அபூர்வ வந்தனை வழிபாடு செய்தார்.

ஸ்ரீமான் குறிஞ்சிப்பாடி S. துரைசாமிய்யங்காரவர்கள் ஸ்ரீ வேதவைபவம் எனும் விஷயம் பற்றி மிக வரியதோர் உபன்யாசம் செய்தார்.

ஸ்ரீஉபவே ஆர். கேசவய்யங்கார்ஸ்வாமி 'காயத்ரீ மஹிமை' என்பது பற்றி மிக விரிவான அழகிய அர்த்த புஷ்டி மிகுந்த உபன்யாசம் செய்தார்.

காரியதரிசி முடிவுரை கூறுகையில் சென்ற வருடம் லக்ஷ்மீபுரத்தில் இதே தினத்தன்று மகத்தான கூட்டம் நடந்ததை ஞாபகமூட்டியும், அநுஷ்டானத்தில் வல்லுநர்களாய்ப்பிரகாசிப்பதே வேண்டற்பாலதென்றும் எடுத்துரைத்து வந்தனோபசாரம் மொழியசபை மாலை 6 மணிக்கு இனிது முடிவடைந்தது.

ப.வெ. திருமலை ஐயங்கார்.

மதுரை.

அருமையான வெளியீடுகள். ஸ்ரீமான் டி.கே.ஜகந்நாதாச்சாரியாரால் பிரதி மாதமும் தவறாமல் ஸநாதன தர்ம பிரசாரமாக ஸமாதானவாதப்ரதிவாதங்களடங்கியதை இரண்டணா காலணா விலையில் எவரும் வாங்கி வாசிக்கும் நிலையில் மிக ரமணியமாக சிறிய புஸ்தகரூபத்தில் வெளியிட்டுபகரித்து வருகிறார். ஸ்ரீ ஜகத்குரு பூரிஜகந்நாதம் கோவர்த்தன பீடாதிபதி ஸ்ரீசங்கராச்சாரிஸ்வாமியால் ஸ்ரீமத் பகவத்கீதை உபன்யாச ஸாரம் மிகவும் அழகாக இம்மாத வெளியீடாக ஸ்ரீமான் ஆச்சாரியாரால் பிரசுரம் செய்யப்பட்டு சென்னையம் பதியங்களும் பரப்பப்பட்டிருப்பதாய்த்தெரிகிறது.

வானமாமலை ஜீயர்ஸ்வாமி தினம் ஸ்ரீஜகத்குரு வானமாமடாதிபதி ஜீயர்ஸ்வாமி பரம்பரையான நாங்குநேரி மடம் 25வது பட்டமான காலஞ்சென்ற (பரமபத மெய்திய) சின்னக்கலியன் ஸ்ரீராமாநுஜ ஜீயர்ஸ்வாமியின் ஸ்ரீவைகுண்டயாத்ராவைபவோத்ஸவ சாதுர்வார்ஷிக (சாற்றுமுறை) தீர்த்த வைபவதினம் திருவல்லிக்கேணி வானமாமடத்திலும் மிகச்சிறப்பாக நடைபெற்றது. அன்று நியூ ஜீவிட்ராணியால் ததீயாராதனம் முதலியன விமர்சையாய்ச்செய்யப்பட்டன. பட்டணமெங்குமுள்ள ஜீயர்ஸ்வாமி சிஷ்யர்களும்மற்றும் பிரமுகர்களும் திரளாக விஜயமாயிருந்தனர்.

ந. வி. தி.

குடந்தை பரஸ்பர ஸஹாயநிதி, ஒரு கொண்டாட்டம்.

குடந்தையில், சிறந்த ஆஸ்திகராயும், பெரிய மிராசுதாராயும் பர்மா ஆயில் கம்பெனி ஏஜெண்டாயும், பரஸ்பரஸஹாயநிதித் தலைவராயும் விளங்கிவரும் ஸ்ரீமான் என். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமிகளுடைய 67வது பிறந்த தினக்கொண்டாட்டமானது 28—8—37ல் வெகு சிறப்பாய்மேற்படி நிதி உத்யோகஸ்தர்களாலும் சிப்பந்திகளாலும் நடத்தப்பட்டது.

ஸ்ரீமான் அய்யங்கார் அவர்களும் அன்று தமது கிரஹத்தில் பலருக்கு தான தர்மங்கள் செய்ததாயும் தெரிகிறது.

ஒரு நிருபர்.

சென்னையில் 144.

சென்னையில் பெரம்பூர், சூளை முதலிய இடங்களில் ஹிந்து-முஸ்லீம் மனஸ்தாபம் அதிகமாகிவருவதால் 2மாத காலங்களுக்கு அந்தப் பிரதேசங்களில் பொதுக்கூட்டம், ஊர்வலம் முதலிய எவ்வித ஆர்ப்பாட்டங்களும் நடத்தக்கூடாதென்று 144வது பிரிவுப்படி உத்திரவு போடப்பட்டிருக்கிறது.

காலஞ்சென்ற பிரும்மஸ்ரீ வேதமூர்த்தி விச்வேச்வர கனபாடிகள்.

ஆஸ்திகர்களின் பெரிய நஷ்டம்.

இம்மஹான் சென்ற 20—8—1937 வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு தஞ்சையில் அகாலமரணமடைந்தார்.

இவர் தஞ்சைஜில்லா மத்யார்ஜுன க்ஷேத்ரம் என்னும் திருவிடமருதூரில் 1888௵ ஆகஸ்டு௴ 20௳யில் பிரம்மஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் என்ற பிராம்மணோத்தமருக்கு புத்திரனாக அவதரித்தார் (இவர் நைத்ருவகாச்யப கோத்ரம் யஜுச்சாகாத்யாயி) இவர் பால்யம் முதல் ஈச்வரனிடத்தில் பக்தியும், புத்திகூர்மையும் அஞ்சாத தீரத்தன்மையும் உடையவர்.

இவருடைய பிதா இவருக்கு ஸரியான வயதில் உபநயனம் செய்வித்தார். பிறகு ஒளத்காத்ராதி சிரௌத கர்மாக்களைத்தெரிந்து கொள்ளவேண்டுமென்ற எண்ணத்துடன் இவரை அவ்வூரிலேயே ஸாமவேதம் அத்யயனம் செய்யும்படி பாடசாலையில் சேர்த்தார்.

பிதாவின் அபிப்ராயப்படி ஸாமவேதத்தை அத்யயனம் செய்தபிறகு, தன் ஸொந்த சாகையாகிய யஜுர்வேதத்தையும் அத்யயனம் செய்து முடித்தார்.

பின்பு இவருடைய வேதம் சொல்வதின் திறமையையும், பாண்டித்யத்தையும் கண்டு, இவர் வாசித்த பாடசாலையிலேயே இரண்டு வேதங்களையும் சொல்லிவைக்குமாறு உபாத்யாயராக அமர்த்தப்பட்டார். இவர் அதுமுதற்கொண்டு வேதத்தைப் பரவச்செய்வதே தன் முக்கிய கடமை என்று தீர்மானித்து சிஷ்யர்களு~~க்கு அ~~[illegible]துடனும் ஊக்கத்துடன் தன் சிரமத்தை கொஞ்சமாவது கவனியாமல் உபதேசம் செய்து சிஷ்யர்களை விருத்தி அடையச்செய்தார்.

இப்படியாக அப்பாடசாலையில் சுமார் 20 வருஷகாலங்களாய் வேதங்களை அபிவிருத்தி செய்துகொண்டு, நித்யகர்மாநுஷ்டான நிரதாளாயும் இருந்துகொண்டு காலம் கழித்தார்கள்.

பின்பு சிலகாரணங்களைக்கொண்டு அதிலிருந்து விலகி திருவிடமருதூரிலேயே 'ஜ்யோதிர் மஹாலிங்க நியமாத்யயன பாடசாலை' என்ற ஓர் வேதபாடசாலையை ஏற்படுத்தி அதில் நாற்பதுசிஷ்யர்களுக்கு எப்பொழுதும் குறையாமல் யாஜுஷ, ஸாம, வேதங்களை திறமையாய் சொல்லிக்கொடுத்து வந்தார்கள். சிஷ்யர்களும் நியமனத்துடன் ஸமிதாதானம் முதலான கர்மாக்களையும் செய்துகொண்டு ஆசார்யருடைய கிரஹத்திலேயே போஜனாதி ரக்ஷணைகளுடன் சிரத்தையாய் அத்யயனம் செய்துகொண்டு, மேன்மேலும் விருத்தியடைந்து மைசூர் புதுக்கோட்டை முதலிய ஸமஸ்தானங்களில் பரீக்ஷைகொடுத்து, முதல் வகுப்பில் தேறி அதற்காக ஸன்மானங்களையும் பெற்று, உபாத்யாயருக்கும், பாடசாலைக்கும், மிகுந்த கௌரவத்தை உண்டுபண்ணினார்கள்.

இக்காரணங்களைக் கொண்டு சிஷ்யர்கள் மேன்மேலும் வந்து குவிந்தார்கள். பிறகு 28—11—35 தேதியில் முடிகொண்டான் கிராமத்தில் "ஸ்வயம்பிரகாசாநந்த ஸாஸ்வதீ ஸாமவேத பாடசாலை" என்ற ஓர் பாடசாலை ஸ்தாபித்து, அதற்கும் சிஷ்யர்கள் அனுப்பி சிவநாரகாம் சுப்பிரமணிய சிரௌதிகள் என்ற தன் சிஷ்யர் ஒருவரை உபாத்யாயராகவும் நியமித்தார்.

இவருடைய குணநிசயங்களையும், தர்ம ப்ரவர்த்தியையும் பார்த்து நமது ஆசார்யாள் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி பூர்ண அநுக்ரஹம் புரிந்தார்கள்.

இப்படியாக தன்னுடைய வாழ்நாட்களில் வேதாபிவிருத்தியையே கங்கணமாகக் கொண்டு நித்யகர்மானுஷ்டான நிரதாளாயுமிருந்ததுகொண்டு மஹாலிங்க ஸ்வாமி தர்சனம் தவறாமல் செய்துகொண்டு, ஸேது, காசி, முதலியபல புண்யக்ஷேத்திரங்கள் இரண்டுதடவைபோய் ஈச்வர தர்சனம் செய்துகொண்டு, ஒருவன் தன் ஜன்மாவை எவ்வளவு ஸாபல்யமாக செய்யமுடியுமோ அவ்வளவுவரையில் செய்து தன் 49வது வயதில் ஈச்வர ஸாயுஜ்யமடைந்தார்.

அவருடைய பிரிவானது ஆஸ்திக ஸமூஹத்திற்கும், வேத உலகிற்கும் ஒரு பெரிய நஷ்டம். அவர் வியோகத்தை ஸகிக்காமல் அவருடைய சிஷ்யகோடிகளும், அவர் குடும்பத்தார்களும் இன்னும் ஸமஸ்த ஆஸ்திகர்களும் கண்ணீர் பெருக்குகின்றனர்.

இப்படியாக ஸ்வப்ரயோஜனத்தைக் கருதாமலும், சரீர சிரமத்தைக் கருதாமலும், ஆரம்பித்த ஓர் பெரிய மகத்தான கார்யமானது மேன்மேலும் விருத்தியடைந்து நடக்கவும் அன்னவர் ஸ்ரீமஹாலிங்கஸ்வாமி கிருபையால் உத்தமகதி அடையவும் பிரார்த்திப்போமாக.

எம். ராமய்யர். முடிகொண்டான்.

முடிகொண்டானில் பொதுக்கூட்டம்.

1937-௵ ஆகஸ்டு௴ 25௳ புதன்கிழமை மாலை 3-30 மணிக்கு முடிகொண்டான் "ஸ்ரீ சங்கர ஸ்வயம்பிரகாசாநந்த ஸரஸ்வதீ" பாடசாலையில், திருவிடமருதூர் பிரும்மஸ்ரீ வேதமூர்த்திகள் விச்வேச்வர கனபாடிகள் அவர்களின் அகால மரணத்தை உத்தேசித்து உள்ளூர் பிரபல மிராசுதார் ஸ்ரீமான் ராமய்யர் அவர்களின் தலைமையில் ஓர் அநுதாபக் கூட்டம் கூடிற்று.

அக்கூட்டத்தில் அக்கிராஸனர் அவர்கள் காலஞ்சென்ற ஷை பிர்மஸ்ரீ விச்வேசுவர கனபாடிகளவர்களின் வேதாபிவிருத்தியில் ஈடுபட்டு செய்த பெருமுயற்சிகளையும், அன்னவரால் யாவரும் அதிசயிக்கும் வண்ணம் நடத்தப்பட்ட பாடசாலைகளின் பெருமையையும், அப்பெரியோரின் மரணத்தினால் ஏற்பட்ட ஆஸ்திகர்களின் ஓர் பெரிய நஷ்டத்தையும் விரிவாய் எடுத்துக்கூறி, ஷையாரின் மரணத்தினால் யாவருக்கும் ஏற்பட்டிருக்கும் வருத்தத்தையும், தெரிவித்தார்கள்.

பின்பு கூட்டத்தில்,

ஷை பிரும்மஸ்ரீ கனபாடிகள் அவர்களின் அகாலமரணத்தை உத்தேசித்து அக்கிராமத்தார்கள் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் வருத்தத்தை, அன்னவரின் குடும்பத்தாரகளுக்கு பிரஸிடெண்டு மூலம் தெரிவிக்கச்செய்கிறது என்றும்,

ஷையாரால் ஏற்படுத்தப்பட்ட உள்ளூர் பாடசாலையானது அவரின் ஞாபகார்த்தமாக மேன்மேலும் ஊக்கத்துடன் நடைபெற யாவரும் முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டுமென்றும்,

ஷையாரால் நடத்தப்பட்ட திருவிடைமருதூர் பாடசாலை இதுவரையில் அபிமானித்தவர்களும் இன்னும் எல்லா ஆஸ்திக அபிமானிகளும், ஒத்தாசைசெய்து, நீடித்து நடத்த ஏற்பாடு செய்யப்படவேண்டுமென்றும்,

ஷையாரின் மரணத்தை உத்தேசித்து (29—8—37)௳வை உள்ளூர் பாடசாலையில் அன்னவரின் மரணதினமாக பாவிக்கவேண்டுமென்றும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறி கூட்டம் கலைந்தது.

எம். ராமையர், பிரஸிடெண்டு.

தஞ்சை ஸ்ரீ காயத்ரீ ஜப தினம்.

ப்ராம்மணர் ஸங்கத்தின்
8வது ஆண்டு நிறைவும்.

வழக்கம்போல் ஸ்ரீ காயத்ரீஜபதினம் மாலை 4-15க்கு முகாஸாகட்டிடத்தில் ஸ்ரீ ஜகத்குரு ஸன்னிதியில் ப்ராம்மணர் ஸங்கம் கூடியது.

சென்ற காயத்ரீ ஜபதினமுதல் நாளது வரையில் இருப்பு, வரவு செலவுகளை கணக்கிட்டதில் கும்பகோணம் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ பரமாசார்யாள் அனுக்ரஹித்த தொகையையும் நாளடைவில் வசூலான தொகையையும் செலவுசெய்ததில் நாளதுவரையில் வரவு, செலவு, அனேகமாய் நேர் என்று கணக்கு ஒப்பிவிக்கப்பட்டது.

மேற்படி சங்கத்தின் முக்கியவேலை 'ஆர்ய மத பாடசாலையை நடத்துவதென்று'ம் அதை நடத்த இளைஞர்களும் தனவான்களும் முன்வரவேண்டுமென்றும் காரியதர்சி கேட்டுக்கொண்டதோடு 'வைதிகதர்ம வித்யா ஸங்கம் ஒன்றை (Registered Educational Society) ஆக ஸ்தாபிக்கவேண்டுமென்று வற்புறுத்தி அச்சிட்ட Articles of Association நகல்களையும் ஆஜரான கனவான்களிடம் கொடுத்தார் பிர்மஸ்ரீ தியாகராஜ சாஸ்திரிகள் அவர்கள் தர்ம ஸ்வரூபத்தை விஸ்தாரமாய் நிரூபித்து உபாகர்மாவின் விசேஷத்தையும் அன்று ப்ரயோகிக்கப்படும் மந்த்ரங்களின் பிரபாவத்தையும் வேதமாதாவாகிய ஸ்ரீ காயத்ரீயின் மகிமையையும் பற்றி உபன்யசித்தார்கள்.

முடிவில் மத்யார்ஜுனத்தில் நியமாத்யயன வேதபாடசாலை நடத்திவந்து உபாகர்ம தினத்திற்கு முந்திய தினம் 20—8—37ல் தஞ்சையில் காலகதியடைந்த விசுவேசுவர சாஸ்திரிகள் விஷயமாக அடியில்கண்ட அநுதாபத் தீர்மானம் நிறைவேறியது.

"தேகசிரமத்தையும், திரவியச்செலவையும் பாராட்டாமல் சிரத்தையுடனும் ஊக்கத்துடனும் ஸாமயஜுர் வேதங்களிரண்டையும் ப்ரதிப்ரயோஜனமின்றி அத்யயனம் செய்துவைத்து வேத ஸம்ரக்ஷணம் செய்த மஹான் விச்வேசுவர சாஸ்திரிகளின் அகால மரணத்தை ப்ராம்மண சங்கம் சோசிப்பதுடன் அவரிடம் க்ருதக்ஞதையையும் காட்டுகிறது.

மேற்படி மகானுக்கு ஸஹதர்மசாரிணியாய் ஷை தர்மத்தை காப்பாற்றின மேற்படியார் ஸம்சாரத்திற்கும் அந்தியகாலத்தில் சுச்ருஷை செய்த சிஷ்யரான பிர்மஸ்ரீ கோபாலசாஸ்திரிகள் முதலியவர்களுக்கும் இந்த ஸங்கமானது மனப்பூர்வமான அநுதாபத்தை தெரிவிக்கிறது.

மேற்படி மஹானின் உருவப்பட ப்ரதிகள் கிடைக்குமானால் பாடசாலைகளில் வைப்பது தகும்.

க. வெ. லெக்ஷ்மண சாஸ்திரிகள்
கார்யதர்சி.

உயர்ந்தது!
15 ஜோடி யக்ஞோப வீதமும் (பூணூல்கள்) கால்வலி தைலமும் பேதி மாத்திரை 50-ம் 8 அணா ஸ்டாம்பாக அனுப்பி பெறலாம். கடிதங்கள் இங்கிலீஷில் எழுதவும்.
கிடைக்குமிடம்:—
Kalbag Gangadha & Sons,
Kumta (Karwar).

முக்கிய கவனிப்பு
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது)
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ்ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— என். கண்ணுசாமி பத்தர்
பெரியதெரு, கும்பகோணம்.

215200

மார்சலியே

சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்

சண்முக சேந்நாரம்:- இது மகான் அனுக்கிரகத்தால் செய்த முறை. காசரோகங்களை பூர்ணகுணமாக்குவதில் இதற்கு நிகர் வேறே ஔஷதமில்லை சான்பட்ட இளைப்பு இருமலை ஒரு வாரத்திற்குள் குணப்படுத்தும்.

எனக்கு சுமார் 35 வருஷம் அனுபோகம். அநேகம்பேர்களுக்கு கொடுத்து பூர்ணகுணமாகி அவர்களால் கொடுக்கப்பட்ட நற்சாட்சிகளுமிருக்கின்றன. விலை உயர்ந்த சரக்குகளினால் செய்யப்பட்டவை. கால நிர்ணயத்திற்குத் தக்கபடி சார்ஜை குறைக்கப்பட்டிருக்கிறது. 48 நாட்களுக்கு உபயோகிக்கும் மருந்துக்கு விலை ரூ. 25. 24 நாட்களுக்கு மருந்து ரூ. 15. ஏழைகளுக்கு சக்திக்கு தகுந்தபடியும் கொடுக்க சித்தமாயிருக்கிறேன். விபரம் மருந்துகளுடன் அனுப்பப்படும். இன்னும் சகல வியாதிகளுக்கும், குழந்தைகளுக்கு ஏற்படும் ரோகங்களுக்கும் குலைகட்டி ரோகங்களுக்கும், நல்ல மருந்துகள் கொடுக்கப்படும்.

R .K. Murthi, ஆயுர்வேத நன்மருந்து வைத்தியசாலை,
உறையூர், திருச்சினாப்பள்ளி.

மதிப்புரை.

பொது மத போதினி.

உருவத்தில் சிறியதும், விஷயத்திலபெரிதுமான மேற்கண்ட அரிய புஸ்தகமொன்று வரப்பெற்றோம். இது கும்பகோணம் சோலையப்ப முதலித்தெரு வாஸியான மாஜி ஸப்மாஜிஸ்ட்ரேட் பிரம்மஸ்ரீ எஸ். அய்யாத்துரை அய்யர் அவர்களால் எழுதப்பட்டது. பாடசாலைகளில் படிக்கும் சிறுவர், சிறுமிகளுக்கு எல்லா மதங்களின் படியும் கடவுள் உண்டென்பதை உணர்த்தவும் உயர்ந்தநீதிகளைப்போதிக்கவும் எழுதப்பட்டது.

மஹாமஹோபாத்யாய பிரம்மஸ்ரீ உ.வே. ஸ்வாமிநாதய்யர், திவான் பகதூர் கே. எஸ். ராமஸ்வாமிசாஸ்திரியார் முதலிய அறிஞர்கள் இந்நூலை சிலாகித்து எழுதியிருப்பதிலிருந்து இதன் கௌரவமும் அவச்யத்வமும் நன்கு தெளிவாகிறது.

நம் தேசத்திய பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு, முக்யமாக ஹிந்து மாணவர்களுக்கு மத போதனை வஸதி கிடையாதென்பது வெகுகாலமாக இருந்துவரும் புகார். இதனால் மாணவர்கள் மத சிரத்தை இழந்தும் ஸதாசாரம், ஸன்மார்க்கம் இவைகளை விட்டும் நாஸ்திகபுத்தி படைத்தவர்களாகிவருகிறார்களென்பது எல்லோரும் ஒப்பிய விஷயம். கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற விஷயமே பல மாணவர்களுக்கு நினைப்பில் இல்லை. இந்தக்குறையை நிவர்த்திக்கப்பள்ளிக்கூடங்களில் மத போதனை அவச்யம் செய்து வைக்கவேண்டுமென்று இப்போது எங்கும் பேசப்பட்டு வருகிறது. ஆயினும் பல ஜாதி மதஸ்தர்கள் நிறம்பிய பாடசாலைகளில் எவருடைய மதத்தை போதிப்பது? அதற்கேற்ற நல்ல புஸ்தகங்கள் எது? இத்தகைய பல ஆக்ஷேபங்கள் செய்யப்படுவதைப்பார்க்கிறோம்.

பிரக்ருத புஸ்தகமானது மேற்படிக்குறைகளை நிவர்த்திக்கக்கூடியதாக அமைக்கப்பட்டிருக்கிறது., எல்லா மதங்களுக்கும் பொதுவான பல முக்ய அம்சங்களை இந்நூலில் ஆசிரியர் மிகத்திறமையாக வெளியிட்டிருப்பதால், கிறிஸ்தவர், மகம்மதியர், பௌத்தர், ஹிந்து முதலிய எல்லா வகுப்பு மாணவர்களுக்கும் இது மிகவும் உபயோகப்படக்கூடியதாயிருக்கிறது. கடவுள் உண்டு என்பதை ஸயன்ஸ் மூலமாகவும், பல யுக்திகள் மூலமாகவும்எல்லா மதஸ்தர்களும் அங்கீகரிக்குமாறு முதலில் விளக்கப்பட்டிருக்கிறது.

நன்னடத்தை, அஹிம்ஸை, பெரியோர்களுக்கு அடங்கி நடத்தல், ஸத்யம், லாகிரி வஸ்து பஹிஷ்காரம், முதலிய அநேக முக்ய பொது தர்மங்களை வெகு நன்றாகவும் தெளிவாயும், உதாஹரணதி மூலமாயும் வெளியிட்டிருக்கிறார். இப்புஸ்தகம் நமது பாடசாலைகளில் உடனே உபயோகத்திற்கு வருமானால் மாணவர்கள் நல்ல பயன் பெறுவார்களென்பதில் ஐயமில்லை. தேசிய மந்திரிகளடங்கிய கவர்மெண்டார் இப்புஸ்தகத்தை ஆதரித்து எங்கும் போதனைசெய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

இதன் ஆசிரியர் ஸ்ரீமான் அய்யரவர்கள் பென்ஷன் பெற்ற பிறகு வீண் பொழுது போக்காமல் நமது தர்ம விஷயங்களைப்பொது ஜனங்கள் நன்கறிந்து பயன் பெறுமாறு பல அரிய நூல்களை வெளியிட்டு வருகிறார். யோக சாஸ்திர தத்வத்தின்படி ராமாயண பாரதம், பாகவதம், அத்வைத சித்தாந்தம் இவைகளை ஆராய்ச்சி செய்து யாவரும் திருப்தியடையுமாறு புஸ்தகங்கள் இயற்றியுள்ளார். இப்போது இந்த பொதுமத போதினியை அவர் எழுதி பொது மக்களுக்கு உதவி செய்திருப்பதற்குயாவரும் நன்றி செலுத்தக்கடமைப்பட்டிருக்கிறோம். ஆசிரியரிடமும் ஆர்யதர்ம ஆபீஸிலும் கிடைக்கும். விலை அணு 4.

மேல்மங்கலம்.

ஆஸ்திக மஹாஜன சபை.

ஈஸ்வரஹு ஆவணிமீ 7உ ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு ஸ்ரீநரஸிம்ம சாஸ்திரிகள் கிரஹத்தில் சபை கூடிற்று. கிராமமகாஜனங்கள் ஏராளமாக விஜயம் செய்திருந்தனர்.

சபை அத்யக்ஷர் ஸ்ரீபிளாஞ்சேரி சுப்ரமணிய அய்யரவர்கள் அக்கிராசனம் வஹித்தார்கள். சபையின் வரவு செலவுக்கணக்குகள், போக்கு வரத்துக்கடிதங்கள் காரியதரிசியால் சபையோருக்கு தெரிவிக்கப்பட்டது,

அக்ராசனரின் அநுமதியின் பேரில் மதுரைமஹாநாட்டிற்குச்சென்றிருந்த ஸ்ரீசிவராம கனபாடிகள், கை. சுப்ரம சாஸ்திரிகள், M.S. ஹரிஹரமைய்யர் முதலியோர் மஹாநாட்டின் நடவடிக்கை விஷயங்களை ரொம்பவும் ரஸமாகவும், கேட்போர் மனம் உருகும்படியும் அழகாக உபன்யஸித்தார்கள்.

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரிகள் மதுரையில் நடந்த வித்வத்பரிக்ஷத் உபசாலைத்தலைவர் சாஸ்திர ரத்னம் ஸ்ரீ தேதியூர் சுப்ரமணிய சாஸ்திரிகளின் ஸ்வாகதபத்திரத்தை சபையில் வாசித்து, அதிலுள்ள அரியகருத்துக்களையும் ஆத்தங்குடி சு.வீர. கதிரேசன் செட்டியார் அவர்களின் தலைமைப்பிரசங்கத்தையும் சபையோர் யாவரும் அறியும் வண்ணம் அழகாக விளக்கினார்கள்.

அய்யரவர்கள் உபன்யாசாமுத வெள்ளத்தை பருகி ஆனந்தத்திலாழ்ந்தனர். பிறகு ஸ்ரீ அப்பி சிவராம ஸ்ரௌதிகளால் அங்காசனர் முதலியோருக்கு வந்தனோபசாரம் கூறப்பட்டு சபை மாலை 6மணிக்கு இனிது பூர்ணமானது

ச. கிருஷ்ண சாஸ்திரிகள்.

பட்டமங்கலம்.

ஸ்ரீ சோமசுந்தரப்பெருமான், அஷ்டம சித்திகளை உபதேசித்தருளிய திருச்க்ஷேத்திரமாகிய பட்டமங்லம் மீனாக்ஷிபுரம் அக்கிராகாரத்தில் பிராம்மண அன்பர்களும் இதர அன்பர்களுமான பக்த கோடிகள் ஏராளமாய்க்குழுமியிருந்து, கோகுலாஷ்டமி உத்ஸவத்தை அதிவிமரிசையாய்க்கொண்டாடினார்கள். பின்னர் வந்திருந்த அனைவருக்கும் சந்தன தாம்பூல பிரசாதங்களும் வழங்கப்பெற்றது, என சிவாலய பூஜகர் பிரம்மஸ்ரீ மு. நா. கைலாசக் குருக்களய்யா அறிவிக்கின்றார்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,
Publsihed by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaam.

[illegible]

4 [illegible]
22 35

16-9-1937

215201

215201
21 SEP 1937
527

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 22 கும்பகோணம் கலி 5039 ஈச்வர௵ ஆவணி௴ 32௳ 1937௵ ஸெப்டம்பர்௴ 16௳ ஸ 35

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணா 1.
விளம்பர விகிதம்.
பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

எல்லைப்புறத்திலும் காங்கிரஸ் [illegible]

வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் ஏற்பட்டிருந்த மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறி விட்டதால் அந்த மந்திரிசபை ராஜிநாமா செய்துவிட்டது. டாக்டர் கான் ஸாஹிப் என்ற காங்கிரஸ் தலைவரின் தலைமையில் புதிதாக காங்கிரஸ் மந்திரியை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த சட்டசபையில் ஏற்கனவே இருந்த காங்கிரஸ்வாதிகளுடன் ஸ்வேச்சைக் கக்ஷியாரும் சேர்ந்துவிட்டபடியால் அங்கு காங்கிரஸுக்கு மெஜாரிடி பலம் ஏற்பட்டிருக்கிறதாக நினைக்கப்படுகிறது.

தேவஸ்தானச் சட்டத்திருத்தம்.

மந்திரிகளின் ஆலோசனை.

சென்னை ஹிந்துமதஸ்தாபன போர்டை எடுத்து விடுவதா, அல்லது தகுந்த வழியில் சீர்திருத்துவதா என்ற விஷயத்தைப்பற்றி டாக்டர் ராஜன் தலைமையில் காங்கிரஸ்கக்ஷி மெம்பர்கள் கூடி யோசித்தார்கள். 16௳க்குள் அனுபவஸ்தர்களுடைய அபிப்பிராயங்களைப் பெறுவதென்றும் 20௳ முடிவாக இதைப்பற்றித் தீர்மானிப்பதென்றும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

காங்கிரஸ் ஆக்ஷியைப்பற்றி கனம் சாஸ்திரி.

ஸ்ரீமான் வி. எஸ். ஸ்ரீநிவாஸசாஸ்திரியார் சென்றவாரம் சென்னை சட்டக்கலாசாலையில் பேசும்போது தற்போது நடந்துவரும் காங்கிரஸ் ஆக்ஷியைப்பற்றிச் சில அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார். காங்கிரஸ்வாதிகளுக்கு ராஜ்ய நிர்வாஹ அநுபவம் போதாது என்றும், அவர்கள் இதர கக்ஷியாரையும் அனுசரித்து நிர்வாகம் நடத்திப் பழக்கப்பட்டவர்களல்லவென்றும், தாங்களாகவே எதையும் ஸ்வதந்திரமாக முடிவு செய்கிறவர்கள் என்றும், காங்கிரஸ்மந்திரிகள் வோட்டர்களுக்கும், பொதுஜனங்களுக்கும், ஜவாப்தாரிகளென்பதை மறந்து, காங்கிரஸ் காரியக் கமிட்டியின் ஆக்ஞைப்படி நடப்பது தவறென்றும், அது ஜனநாயகத்திற்கு விரோதம் என்றும், காங்கிரஸ் மந்திரிகள் இந்த நிலைமையை மாற்றிக் கொண்டாலல்லது எதிர்கால ஆக்ஷியில் [illegible] கனம் சாஸ்திரியார் சொன்னார்.

குடிப்பதிலும் ஸ்வதந்திரம்.

சென்னை மந்திரிகளின் மதுவிலக்குத் திட்டத்தைப்பற்றி ராஜாங்கசபையில் ஸர். கே. வி. ரெட்டியார் பலமாக ஆக்ஷேபித்துப்பேசினார். வருமானம் குறைந்துவிடுமென்ற கக்ஷியுடன் அவர் நிற்காமல், குடிப்பது சிலருக்கு நன்மைதருமென்றும், குடியில்லாமல் அவர்கள் ஜீவிக்க முடியாதென்றும், இந்தியாவின் பிராசீனகாலத்தில் குடிவழக்கமிருந்ததாயும், ஸ்ரீ ராமன் கூட அப்படிச் செய்ததாயும் குடிப்பது மனிதனுடைய ஸ்வதந்திரம் என்றும், அதைப் பறிப்பது காங்கிரஸின் ஸ்வதந்திரக் கொள்கைக்கும் அஹிம்சைக்கொள்கைக்கும் ஏற்றதில்லையென்றும் அவர் வாதித்தார்.

சென்னையில் பிச்சைக்காரர் விடுதி.

சென்றவாரம் நடந்த சென்னை கார்ப்பரேஷன் கூட்டத்தில் சென்னையிலுள்ள பிச்சைக்காரர்களை வைத்து ரக்ஷிக்க ஒரு பெரிய சத்திரம் கட்டவேண்டுமென்றும், வருஷத்தில் 60-ஆயிரம் செலவில் பிச்சைக்காரர்களுக்கு சோறுபோட்டு ரக்ஷிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு திட்டம் தயாரிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

முஸ்லீம் மாணவர்களுக்குச் சலுகை

சென்னை மாகாணத்திலுள்ள ஆரம்பப்பள் [illegible] ப்பிள்ளைகளுக்கு புஸ்தகங்கள் வகையறாக்களை இலவசமாகக் கொடுக்கவேண்டுமென்று ஸர்க்கார் உத்திரவுபிறப்பித்திருக்கிறார்கள். இந்தச் சலுகையில் மஹம்மதிய மாணவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று மந்திரி சபையார் உத்திரவு செய்திருப்பதாக ஒரு அறிக்கை கூறுகிறது.

Srimath Pagavatham.
Condensed into 18?0 slokas, translated into English and illustrated.
Price Rs. 1—8—0
Same into Tamil without slokas
700 pages Rs. 1—8—0
Skandas 7, 8 & 9 translated into Tamil with slokas, condensed As. 8
By T. R. Ganapatirama Iyer, Advocate.
apply to:— G. Subramania & Co.,
Tinnevelly Junction.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.
மேலான T. T. M. A. மிஸ்ஸி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறாதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஷீட் ஜெம்லேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

;பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டென்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

ஆலயப்பிரவேச அநீதி.

ஸ்ரீ சிருங்கேரி ஸ்வாமிகளின் ஸ்ரீமுகம்.

சிருங்கேரி ஸ்ரீஜகத்குரு ஸ்வாமிகள் அவர்களால் திருவாங்கூர் ஆலயப் பிரவேச விஷயமாக சிஷ்யர்கள் கேட்டிருந்த ஸந்தேஹத்திற்குப் பதிலாக அனுப்பப்பட்ட ஸ்ரீமுகம்.

ह्योण्या वाण्या संप्रेषितया भवद्विज्ञप्तिपत्रिकया एतावता कालेन अश्रुतादृष्टचरं सनातनधर्मसमुत्पाटन पटीयांसं राजशासनप्रचारं तद्द्वारा श्रुतिस्मृतिसदाचारशरण्यानां प्रकृतीनां इतिकर्तव्यताज्ञानराहित्यं च विज्ञाय प्रतिदेशं प्रतिग्रामं प्रतिजनं अभिव्याप्य प्रतिक्षणं साट्टहासं उज्जृम्भतो महापापीयसः कलेः विजयभेरीनाद इव उद्धतध्वजपताकेव अकस्मात्प्रकटित-राजनिदेशः सत्यं विदारयति नितान्तं सज्जनानां हृदयानीति निश्चिनुमः । ईदृशस्य दुर्विलसितस्य विधेः प्रतिविधातुं असमर्थानां परं निर्विण्णचित्तानां अस्माकं कर्तुं अकर्तुं अन्यथा कर्तुं समर्थं भगवन्तं जगदीशं अन्तरा शरण्यान्तरं अलभमानाः पर्वतारण्यप्रदेशे कस्मिंश्चित् कोणे निलीना इव स्थास्यामो वयम् ॥

अथापि धर्मतत्त्वबुभुत्सूनां श्रद्धाभक्तिमतां शुश्रूषूणां अन्तेवसतां यथाज्ञाततत्त्वोपदेशः अवश्यकर्तव्यकर्म अस्माकं आचार्य भगवत्पादपरिकल्पिताम्नाय पीठं अधितिष्ठतां इति आकलय्य अस्मदाशयं कंचित् अत्र प्रदर्शयामः

जगज्जन्मादि कारणस्य सर्वज्ञस्य ईश्वरस्य त्रिविधपरिच्छेदशून्यत्वेन व्यापकत्वं सुप्रसिद्धं वेदशास्त्रेषु । " उपासकानां कार्यार्थं ब्रह्मणो रूपकल्पना" इति प्रमाणरीत्या तत्तादृक्परमेश्वरस्य शिवशक्तिविष्ण्वादि परिकल्पितनामरूपत्वं परिच्छिन्नत्वं च शास्त्रैरेव अवगम्यते । तादृशं शास्त्रं प्रमाणीकृत्य प्राक्तनैः महर्षिभिः तत्तुल्यैः आचार्यवर्यैश्च परिकल्पिता बहवो देवालयाः, प्रतिष्ठिताश्च शिवविष्ण्वादि विविधमूर्तयः शिलादारुसुधामया,: तत्र प्रवर्तिताश्च वैदिकतान्त्रिकवर्त्मना नित्यनैमित्तिक पूजादिकर्माः, तत्तत्प्रतिमादिषु देवतासान्निध्यविशेषशक्ति संपादनाय, उपदिष्टाश्च नियमादिविषयः प्रायश्चित्तप्रकाराः तत्कारणानि च ग्रन्थरूपेण । सम्यग्विचारिते प्रमाणग्रन्थनिचये, येन केनचित् कारणेन यदि अशुद्धाः स्युः देवालयाः तत्रस्थमूर्तयो वा, यथाशास्त्रं यावच्छुद्धिः तावत् देवता सान्निध्यस्य तच्छक्तेश्च विलयनात् दोषदूषित तादृशमूर्तीनां साधारणमृत्पाषाणादीनां च न कोऽपि विशेषः इति तद्दर्शननमन पूजादिकं श्रेयोर्थिनां फलाय न भवतीति सुस्पष्टमवगम्यते ॥

तत्तद्वर्णाश्रमधर्मत्वेन धर्मशास्त्रादिष्वभिहितनित्यपूजादिकं यथाकुलाचारं स्वे स्वे गृहे यदि अनुतिष्ठेयुः प्रजाः, अवश्यं अभ्युदयभाजनानि भवेयुः इति अत्र न कश्चित् संदेहलवोऽपि इति विजानीमः । यथायोग्यं यथानुकूलं आचरन्तु श्रुतिस्मृतिशरणाः श्रद्धालवोऽस्मद्विनेयवराः इति अनुशास्यते ॥

ஷை ஸ்ரீமுகத்தின் மொழிபெயர்ப்பு.

தாங்கள் இங்கிலீஷ் பாஷையில் எழுதியனுப்பிய விக்ஞாபன பத்திரிகையிலிருந்து இதுவரையிலும் கேழ்க்கப்படாததும் பார்க்கப்படாததுமானதாக, ஸநாதன தர்மத்தை வேருடன் எடுத்துவிட வல்லமையுள்ளதுமான ஓர் ராஜசாஸனம் பிரசாரத்திற்கு வந்திருப்பதாகவும் அதன் நிமித்தமாக ச்ருதி, ஸ்ம்ருதி ஸதாசாரங்களை சரணமடைந்திருக்கும் பிரஜைகளுக்கு இன்னது செய்யவேண்டியதென்ற ஞானமில்லாமலிருப்பதாகவும் தெரிந்து கொண்டோம். ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு ஜனத்தினிடத்திலும் நன்கு வியாபித்து பிரதி க்ஷணமும் அட்டஹாஸத்துடன் வளர்ந்து வருகிற மகாபாபியான கலி புருஷனுக்கு, காரணமின்றியில் ப்ரசாரம் செய்யப்பட்டிருக்கிற இந்த ராஜசாஸனமானது விஜயபேரி கோஷம் போலவும், உயரத்தூக்கிப்பிடித்த த்வஜக் கொடிபோலவும் தோன்றியிருப்பது வாஸ்தவமாக மிகவும் ஸஜ்ஜனங்களுடைய ஹ்ருதயங்களை பிளக்குமென்றே நிச்சயிக்கிறோம். இவ்விதமான கெட்டவிதிக்கு பதில் செய்ய ஸாமர்த்யமற்று மிகவும் சோர்வடைந்த மனதோடு கூடிய நமக்கு, செய்யவும் செய்யாமலிருக்கவும் மாற்றிச்செய்யவும் வல்லமையுள்ள ஜகதீசனை பகவானைத் தவிர வேறு சரணத்தைக் காணாதவர்களாக இருக்கிற நாம் மலை, காடு நிறைந்த பிரதேசத்தில் ஏதோ ஒரு மூலையில் பதுங்கினாற்போல் இருந்துவருகிறோம்.

அப்படியிருந்தாலும் தர்ம தத்வம் தெரியவேண்டுமென்று ஆசைப்படுகிற, ச்ரத்தை பக்தியுடைய கேழ்க்க விருப்பமுள்ள சிஷ்யர்களுக்கு நாம் தெரிந்துகொண்டிருக்கிறபடி தத்துவத்தை உபதேசம் செய்யவேண்டியது என்பது ஸ்ரீமத் பகவத் பாதாச்சாரியார் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஆம்னாய பீடத்தில் அமர்ந்துள்ள நம்மால் அவசியம் செய்யவேண்டிய கார்யம் என்பதை உத்தேசித்து நம்முடைய அபிப்பிராயத்தை இங்கு கொஞ்சம் வெளியிடுகிறோம்.

ஜகத்தின் ஜன்மாதிகளுக்குக் காரணமாய், ஸர்வக்ஞனாய் இருக்கிற ஈஸ்வரனுக்கு மூன்றுவிதமான பரிச்சேதமும் அற்றிருக்கும் தன்மையினால் ஸர்வ வ்யாபகத்வம் இருப்பதாக வேத சாஸ்திரங்களில் மிகவும் பிரஸித்தம். உபாஸகர்களுடைய கார்யத்தை உத்தேசித்துத் தான் ப்ரம்மத்திற்கு ரூபம் கல்பிக்கப்படுகிறது என்ற ப்ரமாணத்தை அனுசரித்து மேலே சொல்லிய பரமேசுவரருக்கு சிவன், சக்தி, விஷ்ணு முதலான நாமரூபங்கள் கல்பிக்கப்படுகின்றனவென்றும் பரிச்சின்னத்வம் ஏற்படுகிறதென்றும் சாஸ்த்ரங்களிலிருந்தே அறியப்படுகிறது. அவ்வித சாஸ்திரங்களை ப்ரமாணமாக வைத்து ப்ராசீனமான மகர்ஷிகளாலும் அவர்களுக்குத் துல்யமான ஆசார்ய ச்ரேஷ்டர்களாலும் அனேக தேவாலயங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அங்கு சிலா, தாரு, ஸுதா இவைகளில் சிவன் விஷ்ணு முதலான அநேகவிதமான மூர்த்திகள் ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. அந்தந்த பிரதிமை முதலியதுகளில் தேவதா ஸான்னித்யமும், விசேஷ சக்தியும் ஏற்பட வேண்டியதற்காக வைதிக மார்க்கமாகவும் தாந்த்ரிக மார்க்கமாகவும் நித்ய நைமித்திக பூஜைகள்முதலான கிரமங்கள் அனுஸரிக்கப்பட்டிருக்கின்றன. நியமங்கள் முதலான விதிகளும், ப்ராயச்சித்த கிரமங்களும், அவைகளுக்குள்ள காரணங்களும் க்ரந்தங்கள் மூலமாக உபதேசிக்கப்பட்டுமிருக்கின்றன. இவ்விஷயத்தில் ப்ரமாணமாயிருக்கிற க்ரந்த ஸமூகத்தை நன்கு விசாரித்துப்பார்த்தால், எந்தக் காரணத்தினாலாவது தேவாலயங்களோ, அவைகளிலுள்ள மூர்த்திகளோ அசுத்தமாக ஏற்பட்டுவிட்டால், சாஸ்திரப்படி சுத்தி ஏற்படும் வரையில் தேவதா ஸான்னித்யமும் அதன் சக்தியும் மறைந்து போகிறபடியினால்; தோஷத்தினால் கெட்டிருக்கிற அந்த மூர்த்திகளுக்கும், ஸாதாரணமாயிருக்கிற மண் கல் முதலானதுகளுக்கும் ஒருவித வித்யாஸமும் இல்லை என்றபடியினால் அவைகளை தெரிசிப்பதிலிருந்தோ, நமஸ்காரம் செய்வதிலிருந்தோ, பூஜாதிகள் செய்வதிலிருந்தோ ச்ரேயஸ்ஸை அபேக்ஷிக்கிறவர்களுக்கு ஒருவித பலமும் ஏற்படாது என்பது நன்கு ஸ்பஷ்டமாகத் தெரிய வருகிறது.

அந்தந்த வர்ண தர்மமாகவும், ஆச்ரம தர்மமாகவும், தர்ம சாஸ்த்ரம் முதலியவைகளில் சொல்லப்பட்டிருக்கிற நித்ய பூஜாதிகளை அவரவர்கள் குல ஆசாரப்படி அவ்வரவர்கள் க்ருஹத்தில் ப்ரஜைகள் அநுஷ்டானம் செய்துவருவார்களேயானால் அவசியம் ச்ரேயஸ்ஸுக்கு பாத்ரமாவார்கள் என்ற இந்த விஷயத்தில் துளி ஸந்தேகம்கூட கொஞ்சமேனும் இல்லை என்பதை நாம் நன்கு அறிகிறோம். எவ்விதம் உசிதமோ, எவ்விதம் அநுகூலமோ அவ்விதமே ச்ருதி ஸ்ம்ருதிகளை சரணமாகக்கொண்ட ச்ரத்தாளுகளான நம் சிஷ்ய ச்ரேஷ்டர்கள் நடந்துகொள்ளவேண்டியது என்று இதன் மூலமாய் அநுசாஸனம் செய்யப்படுகிறது.

குழந்தை
குடல் ஈரல் கட்டிகளுக்கு
ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள
மதுரை வைத்ய நிபுணர் T.R.ஆராவமுதய்யங்காரின்
மருந்தை உபயோகியுங்கள். ஆயிரக்கணக்காக சௌக்கியம். தங்கமெடல் பரிசும்
பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது.
ஒரு மாதம் மருந்து விலை ரூ. 4—8—0 வி. பி. வேறு.
டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,
20, வடக்கு வெளிவீதி, மதுரை

மூகபஞ்சசதியின் முதல் பாகம்.
“ஆர்யா சதகம்”
Mr. G. V. கணேசய்யர், B. A., B.L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
100 பக்கங்களுக்குமேல் கொண்டது.
தபால்செலவு வேறு] [விலை அணா 0—8—0.
மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்,

மதுரை ஸநாதனதர்ம மகாநாடு.

ஸ்ரீமான் கதிரேசன் செட்டியார் அவர்களின் தலைமை பிரஸங்கம்.

(2—9—37 வாரத்தொடர்ச்சி.)

அன்று பரவியுள்ள துர்மதங்களைக் கண்டித்து நாஸ்திகர் வாயை அடக்கி குறுகிய காலத்தில் திக்விஜயஞ்செய்து அத்வைத சித்தாந்தம் செய்து ஆஸ்திகத்தைப் பரவச்செய்த மஹான் ஸ்ரீ சங்கரர் அல்லவா? அன்பர்களே! சற்று சிந்தியுங்கள்! அம்மகான்களின் வீர இரத்தம் உங்கள் நாடிகளில் ஓடவில்லையா? ஏனோ வாளாயிருக்கின்றீர்கள்? உங்கள் மூதாதையோர்களின் பெருமையை உணர்ந்து அச்சத்தை அறவே ஒழித்து தர்மஸேவைசெய்ய உடல், பொருள், ஆவி அனைத்தையும் தத்தம் செய்யச் சித்தமாயிருங்கள். வீர்கொண்டு எழுங்காலம் சமீபித்துவிட்டது. ஆண்டவன் கட்டளையை மறந்தோம். அதன் பயனை இன்று அநுபவித்து வருகின்றோம். இனியும் அவன் சாபத்திற்காளாகாமல் உரிய கருமத்தைச் செய்வோம். அவன் இரக்ஷிப்பான்.

மாதர் கடமை.

பாரதபுதல்விகாள்! ஒருகாலத்தில் பாண்டியநாடு முழுவதும் சைவசமயம் குன்றி மக்கள் அனலிலகப்பட்ட புழுவைப்போல் துடிக்க; அவர்கள் துயரை நீக்க முன்வந்தது மங்கையர்க்கரசி என்ற மாதுசிரோமணியல்லவா? தான் காதல்கொண்ட கட்டழகன் அற்ப ஆயுள் உடையோன் என அறிந்தும், அவனையேமணந்து, பின் அவனிறக்க காலனோடு போராடித் தன் கற்பின் மகிமையால் காதலன் உயிரை மீட்டியது சாவித்திரி தேவியல்லவா? சத்தியத்தின்பொருட்டு நாடு நகரம் அனைத்தையுமிழந்து ஆற்றொணாத்துயரத்திலாழ்ந்திருக்க நேர்ந்தும் சிறிதும் மனம்சலியாது பதிபக்தியுடனிருந்தது பெண்கள் திலகம் சந்திரமதியல்லவா? மகிமைபொருந்திய மைதிலி, சுத்தத்திலும் பரிசுத்தமானவள், ஒரு குறையுங்கூறாது வாழ்க்கையில் எல்லாம் துன்பத்தையே அனுபவித்தவள், உத்தம ஸ்திரீகளுக்கமைந்த பரிபூர்ண இலக்ஷணங்கள் யாவும் ஒருங்கே பொருந்தியவள் நமது சீதாபிராட்டியல்லவா? நம்மாதர்களைத் தற்கால நவீன நாகரீகவதிகளாக்கும்பொருட்டு செய்யப்படும் எவ்வித முயற்சியிலாவது அவர்களை சீதை, சந்திரமதி, தமயந்தி, திரௌபதை, மங்கையர்க்கரசி போன்ற நமது மாதுசிரோமணிகளின் ஒழுக்கத்திற்கு மாறாக நடக்கும்படி செய்யும் அம்சம் இருக்குமானால் அது உடனே பயனற்றுப்போவதை நாம் தினந்தோறும் பார்க்கின்றோம். மங்கையர்களின் நற்கதிக்கு அவ்வுத்தமிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதே சிறந்தவழி.

புத்துணர்ச்சி.

ஸ்ரீ புரி, கும்பகோணம் ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் முதலான மஹான்களின் அரிய பிரசாரத்தால் நம்மிடையே புத்துணர்ச்சி ஏற்பட்டுள்ளது. காந்திஜியின் சமீபதீவிர ஹரிஜனக்கிளர்ச்சி காலத்தில், ஸ்வாமி லால்நாத்ஜீ போன்ற தீரர்கள், அஹிம்ஸாவாதி தொண்டர்களென்று கூறப்படும் காந்திதொண்டர்களாலே புடைக்கப்பட்டும் பல இன்னல்களுக்கு உட்படுத்தப்பட்டும் சற்றும்பின்வாங்காது காந்திஜியின் பிரசாரம் அசாஸ்திரியமானது என்றும் பெரும்பான்மையான மக்கள் அதனை வெறுக்கின்றனர் என்றும் உணர்த்தவில்லையா? சாஸ்திர ரத்னம் தேதியூர் பிரும்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளுடன் சாஸ்திரவாதம் புரிய முன்வந்த காந்திஜீ திகைத்துப் பின்வாங்கியதை நாம் அறிவோம். நமது தலைவர் மதுரை ராவ்சாகிப் ப்ரும்மஸ்ரீ என். நடேசய்யரவர்கள் செய்துவரும் அரிய பிரசாரம் மகிழ்ச்சியைத் தருகின்றது. இச்சந்தர்ப்பத்தில் பூனாவில் ஸநாதன வீரர்கள் சமீபத்தில் மதத்திற்காகத் தீரத்துடன் போராடிய பெருமையை உங்கட்கு நினைப்பூட்டுகிறேன்

பூனா ஸோன்யா மாருதிகோவில் சத்தியாக்கிரஹம்.

ஹிந்து முஸ்லீம் கலஹம் நேரிடுமெனக்கூறி இவ்வருஷம் ஹனுமத்ஜயந்தி கொண்டாட்டத்தில் பஜனை, சங்கீதம் மணியடித்தலுங்கூடாதென பூனா ஜில்லா மாஜிஸ்டிரேட் தடை உத்திரவு பிறப்பித்தார்கள். பரம்பரையாகவும், மத உரிமையாகவும், அநுஷ்டிக்கப்பட்டுவந்த உரிமையை ஆட்சேபிக்க விரும்புகிறவர்களுக்கே நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தவேண்டியிருக்க, அதற்குப் பதிலாக ஸ்தல உத்தியோகஸ்தர்கள் அமைதிக்குறைவு ஏற்படுமென அஞ்சி இந்த உரிமையை மறுத்தது, கோர்ட் அறையில் எதிரி குழப்பம் விளைவிப்பான் என்ற பயத்தின் காரணமாக, எதிரியையும் நீதிபதியையும் கைதுசெய்வது எவ்வளவு கேலிக்கிடமோ அவ்வளவு கேலிக்கிடமானதாக இருக்கின்றது. வர்ணாசிரம சுயராஜ்ய சங்கம், ஜனநாயக சுயராஜ்யக்கக்ஷி, ஹிந்து மஹாசபையைச்சேர்ந்த ஸ்ரீமான் போபத்கார், கெல்கார், காண்டிகார், கன்பலால் புருஷோத்தமர், பண்டிதசதாவேம்கார் முதலான நூற்றுக்கணக்கான ஸநாதன வீரர்கள், மதஉரிமைக்குப் பங்கம் ஏற்பட்டதைக்கண்டு மனம் தாளாது தடியடி, சிறைவாசம் முதலான இன்னல்களுக்கு அஞ்சாது தீரத்துடன் போராடிய பெருமையை என்னென்று கூறுவது! பெண்ணரசிகள் பலர் முன்வந்து தங்கள் பங்கைச் செலுத்தியது மறக்கப்போமோ? இந்தியா சட்டசபை மாஜி அங்கத்தினர் ஸ்ரீமான் என். ஆர். குஞ்சால் பாரிசவாயுவினால் நடமாட்டமின்றிருந்தும், அவ்வநீதியான உத்திரவைக் கண்டு திடுக்கிட்டு வீர்கொண்டு தனது மோட்டார் வண்டியில் ஆலயம் வந்து மணி அடித்துத் தன் கடமையை நிறைவேற்றினர் என்றால், அன்பர்களே! அச்செய்கையின் மேன்மையைச் சற்று உன்னிப்பாருங்கள்! அவர்களுக்கு நமது வணக்கம் உரியதாகுக.

செய்யவேண்டுவன.

இந்தியாவின் பரந்த அமைப்பையும் இன்றையசீர்கேடான நிலைமையையும் எண்ணுகையில் நாம் செய்யவேண்டிய காரியங்கள் அதிகமாக இருக்கின்றன. கிராமந்தோறும் தர்ம ஸேவா சங்கங்கள் நிறுவவேண்டும். தலைமை ஸ்தாபனத்துடன் கிளைச் சங்கங்களை இணைத்துக் கட்டுப்பாடானமுறையில் வேலைசெய்ய வேண்டும். வைதிக, லௌகிக விஷயங்களில் சமர்த்தர்களான பண்டிதர்கள் இடைவிடாது பிரசாரம்செய்ய இன்றே புறப்பட வேண்டும். மடாதிபதிகள், தம்பிரான்கள், தனதனவான்கள் ஏராளமாய்ப் பொருள் உதவவேண்டும். பெரும் நிதி திரட்ட, செல்வாக்குபெற்ற தனதனவான்கள் புறப்படவேண்டும். பாடசாலைகள் பல ஏற்படுத்தி மதக்கல்வியைப் போதிக்கவேண்டும். சுதேசி சாமான்களைப் பூரணமாக ஆதரிக்கவேண்டும். அரசாங்கம் மத சமூஹ விஷயங்களில் தலையிடாதிருக்க கிருஸ்தவர், மகமதியர், பார்ஸி, சீக்கியர் முதலானவர்களுடன் ஸநாதனிகள் சேர்ந்து சட்டசபைகளிலும் வெளியிலும் வேலைசெய்யவேண்டும். காங்கிரஸை நேரிய வழியில் நடத்தி தேச விடுதலைக்குப் போராடுவதற்காக காங்கிரஸில் சேரும் விஷயத்தை யோசிக்கவேண்டும். சுதர்மம், சுயராஜ்யம், சுதேசியம் நமது இலக்ஷியம் என்பதை நாடறியச் செய்யவேண்டும். ஸநாதனதர்ம தத்துவங்களைத் தெளிவாக எளிய நடையில் பல பாஷைகளிலும் துண்டுப்பிரசுரங்கள் மூலம் வெளியிடவேண்டும். ஸநாதன தர்மாபிவிருத்தி பத்திரிகைகளுக்கு பேராதரவு அளிக்கவேண்டும். தமது இலக்ஷியங்களைப் பரப்ப தினசரிப் பத்திரிகை ஒன்று வேண்டும்.

முடிவுரை.

ஸநாதனதர்ம தத்துவங்களின் அடிப்படையான அம்சங்களையும், இந்தியாவின் தற்கால நிலைமையையும் நாம் செய்யவேண்டிய காரியங்களையும் என் சிற்றறிவிற்கு எட்டிய மட்டும் ஒருவாறு சுருங்கக் கூறிவிட்டேன். வேதசாஸ்திர விற்பன்னர்கள் அரும்பெரும் விஷயங்களைக் குறித்து விரிவுரை நிகழ்த்துவர். கூட்டங்கூடிப் பேசுவதும் தீர்மானங்கள் பல நிறைவேற்றுவதுமட்டும் போதாது. தீர்மானம், செயலில் வந்தாலன்றி தீர்மானம் செய்ததில் பொருளில்லை. எனவே வேண்டுவது செயல். செயல். நெஞ்சில் உரம்வேண்டும். நேர்மை வேண்டும். கட்டுப்பாடான வேலை வேண்டும். ஜயம் பெறுவோம் என்பதில் ஐயமில்லை. காசி ஹிந்து கலாசாலையில் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளவர்களால் செய்யப்பட்ட உபதேசம் இச்சமயம் கவனிக்கத்தக்கது.

> “தர்மத்தில் ச்ருதி ஸ்ம்ருதி முதலியவைமட்டும் பிரமாணம். ஞானத்திலேயோ ச்ருதி, ஸ்ம்ருதி, யுக்தி, அநுபவம் முதலியவை எல்லாம் பிரமாணம். ஆகவே மேனாட்டு விக்ஞான நிபுணர்களால் புத்திபலத்தைக்கொண்டு கண்டுபிடிக்கப்பட்ட விஷயங்களும் புத்தி சக்தி அபிவிருத்திக்காக அவசியம் ஆதரிக்கத்தக்கனவேயானாலும் ஆஸ்திக (கீழ்நாட்டு) வித்தைகளுடன் தேசாந்தர வித்யைகளைக் கலந்து கற்பிப்பதில் மிகுந்த ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டும். நமது ஆசாரம் முதலிய இலக்ஷணங்களெல்லாம் மேனாட்டு வாஸனையால் வெளிநாட்டு வேஷம், பாஷை முதலியவைகளைப் பின்பற்றுவதால் நமது ஸ்வரூபமே அழிந்து போவது மட்டுமின்றி ச்ரேயஸ்ஸெல்லாங்கூட நசித்துவிடக்கூடியதாயிருப்பதால் தேசாந்தரீய வித்யைகளை அப்பியசிப்பதில் ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளாமல் போனால் புண்யபூமிவாஸிகளுக்குப் பெரிய அனர்த்தம் ஸம்பவிக்கும் என்பதில் ஐயமில்லை. இப்போது தேசீயஜன சமூஹத்திற்கோ, பொது மக்களுக்கோ ஸதாசார விஷயத்தில் ஏற்பட்டுள்ள அபிப்பிராயபேதமே தர்மார்த்தாபிவிருத்தி விஷயத்தில் முக்கிய பிரதிபந்தகமாக இருக்கின்றது. ஆகவே ஜனசமூஹத்தலைவர்களனைவரும் ஸதாசாரத்தையே முக்கியமாகப் பின்பற்ற வேண்டும்”. ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி
> ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள்.

தாங்கள் இப்பதவியை அளித்ததற்கு மீண்டும் என் வணக்கத்தை உங்கட்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஈசன் இன்னருள் புரிவாராக!

“வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே”

திருஞானசம்பந்தர்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-௵ ஆவணி-௴ 32௳

நிலவரி வஜாக் கொள்கை யென்ன?

சென்னை மாகாணத்தில், முக்யமாகத் தஞ்சை முதலிய ஜில்லாக்களில் மிராசுதார்களின் நிலைமை வெகு கேவலமாக ஆகிவிட்டதை உத்தேசித்து நிலத்தீர்வை விகிதத்தை உடனே குறைத்து விட வேண்டுமென்ற கிளர்ச்சி வெகு காலமாக நடந்து வருகிறதாயினும், மிராசுதார்களுக்கு இன்னும் சாச்வதமான நல்ல காலம் பிறந்ததாகத் தெரியவில்லை. நேற்று முன் தினம், சட்ட சபையிலும், மாயவரத்திலும் மந்திரிகள் நில வரி வஜா விஷயமாக வெளியிட்டுள்ள அபிப்ராயம் மிராசுதார்களுக்குத் திருப்தியளிக்கக்கூடுமா வென்பது ஸந்தேஹமாயிருக்கிறது.

நில வரியைக்குறைக்க வேண்டுமென்ற உண்மை பழய கவர்மெண்டாராலேயே உணரப்பட்டுச்சென்ற 3 வருஷங்களாகச்சொல்பமான தாற்காலிக வஜா செய்யப்பட்டு வந்திருக்கிறது. ஆனால், இதனால் மிராசுதார்களின் ஆர்த்தசை விலகிவிட்டதாக ஒருவரும் ஒப்புக்கொள்ளவில்லை. ஆதலால் சாச்வதமாக நில வரிக்குறைவு ஏற்படுத்தாவிடில் இதில் ஒழுங்கான பரிஹாரம் கிடைத்ததாகா தென்பது கவர்மெண்டாருள்பட எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்ட விஷயமாகும். காங்கிரஸ் கக்ஷியார் இவ்விஷயத்தில் அதிக சிரத்தை காட்டி வந்தார்கள். அநேக ஜில்லா மஹாநாடுகளில் காங்கிரஸ் காரர்கள் நில வரி விஷயமாக நிறைவேற்றியுள்ள தீர்மானங்களை கவனித்தால் இது நன்கு விளங்கும். நில வரியை 100க்கு 50 விதம் குறைத்து விட வேண்டுமென்றும், 5 ஏகருக்குக்கீழ்ப்பட்ட நிலமுடையவர்களுக்கு நில வரியே விதிக்கக்கூடாதென்றும் வேறு பலவும் காங்கிரஸ் கூட்டங்களில் பேசியும் தீர்மானிக்கப்பட்டுமிருக்கின்றன. காங்கிரஸ் எலக்ஷன் அறிக்கையிலும் சாச்வத நில வஜா அளிக்க வேண்டிய விஷயம் பலமாக வற்புறுத்தப்பட்டிருக்கிறது. வியவஸாயிகள் பெருத்த இந்த மாகாணத்தில் காங்கிரஸ் வாதிகள் ஏராளமாக எலக்ஷனில் வெற்றி பெற்றதற்குக்காரணம், நில வரிவஜா விஷயமாக அவர்களால் பெரிய நன்மை உடனே ஏற்படுமென்று வியவஸாயிகள் எதிர்பார்த்ததேயாகும். சென்னை மாகாணத்திலெந்த கக்ஷியாரும் நிலைத்து ராஜ்ய நிர்வாஹம் நடத்தவேண்டுமானால் அது வியவஸாயிகள் விஷயத்தில் அவர்கள் செய்யும் நன்மையைப்பொறுத்ததாக இருக்கிறது. ஆதலால் தான் இடைக்கால மந்திரி ஸபைகூட இதில் சுறுசுறுப்புக் காட்டி மார்ஷ் பாங்க்ஸ் கமிட்டியை நியமிக்க முன் வந்தது.

இப்படி யிருக்கையில் காங்கிரஸ் மந்திரிகள் வந்த பிறகும் இவ்விஷயத்தில் இது வரையில் மிராசுதார்கள் த்ருப்தியடையக்கூடிய அடையாளம் ஒன்றும் தென்படவில்லை. பட்ஜட் காலத்தில் பிரதம மந்திரி பேசிய போதும் நில வரி வஜா விஷயமாகத்திட்டமான அபிப்ராய மொன்றையும் அவர் வெளியிடவில்லை. இடைக்கால மந்திரி ஸபை செய்திருந்த 75 லக்ஷ ரூபா வஜாவும், மார்ஷ் பாங்க்ஸ் கமிட்டி சிபார்சுமே காங்கிரஸ் பட்ஜட்டிலும் பிரதிபலித்ததே யல்லாது சாச்வதமான ஏற்பாட்டைப்பற்றி எவ்வித பேச்சுமில்லை.

காங்கிரஸ் மந்திரிகளிடமிருந்து துரிதமாக நன்மையை எதிர்பார்த்துக்கொண்டிருந்த துரதிருஷ்டம் பிடித்த நமது வியவஸாயிகள், காங்கிரஸ் பட்ஜட்டாலும் மந்திரி பிரசங்கத்தாலும் ஏமாற்றமடைந்திருப்பது பத்திரிகைகளிலிருந்து நன்கு வெளியாகிறது.

இந்த நிலைமையில் நேற்று முன் சட்ட சபையில் இந்த நிலத்தீர்வை வஜா விஷயமாக நடந்த விவாத காலத்திலாவது ரவின்யு மந்திரி தாம் இவ்விஷயமாக என்னசெய்யப்போகிறாரென்பதைத்திட்டமாக குறிப்பிடவில்லை. நில வரியைக்குறைப்பதால், வருமானம்குறைந்து விடுமென்றும், இதற்கு ஈடு செய்யும் வழி கண்டு பிடிக்கப்பட்ட பிறகு தான் இவ்விஷயம் நிச்சயப்படுமென்றும் கனம் ரவின்யு மந்திரி பேசி யிருக்கிறார். வெகு நாளாகச்சொல்லப்பட்டு வரும் இந்த வாதத்தையே காங்கிரஸ் மந்திரியும் திருப்பிக்கூறிவிட்டதில் விசேஷமொன்றுமில்லை. காங்கிரஸ் காரர்கள் வெளியில் கிளர்ச்சி செய்யும்போது நில வரியைக்குறைத்து வேறு வழியில் வருமானத்தை ஈடு செய்யப்பல வழிகளிருப்பதாயும், அவைகளை பழய ஸர்க்கார் கையாளவில்லை யென்றும் குறை கூறி வந்தார்களல்லவா? அந்த உபாயங்களை ஏன் இப்போது அநுஷ்டிக்கக்கூடாது? பழய சால்ஜாப்பையே காங்கிரஸ் மந்திரிகளும் கூறுவது விவஸாயிகளுக்குத் திருப்தியளிக்குமா?

ஸ்வல்பகால அவகாசத்தில் பெறுத்தமாறுதல் செய்வது சிரமமென்றாலும், காங்கிரஸ் மந்திரிகள் இன்னின்னவழியில் ஆலோசித்து வருகிறார்களென்ற உறுதியாவது வியவசாயிகளுக்குத் தெரியக்கூடாதா? மாயவரத்தில் மிராசுதார் ஸங்கத்திற்கு அளித்த பதிலிலும் மந்திரி திட்டமாக எதுவும் அறிவிக்கவில்லை. மதுவிலக்கு, கட்டாய ஹிந்தி போன்ற பணச்செலவு மிகுந்த திட்டங்களில் மந்திரிகள் ஒருவித முன்யோஜனையுடன் ஸங்கேதமாக நடந்துகொண்டதுபோல் நிலவரிவஜா விஷயத்திலும் ஜரூராக ஏன் நடந்துகொள்ளக்கூடாது?

மார்ஷ் பாங்க்ஸ் கமிட்டி சிபார்சினாலோ, 75லக்ஷ வஜாவினாலோ மிராசுதார்களின் நிலைமை சிறிதுகூடச் சீர்படாதென்று பிரபல அநுபவசாலிகளான மிராசுதார்கள் மந்திரிகளுக்கு எடுத்துக் காட்டிவருகிறார்கள். புதிய நிலவரிச் சட்டமூலமாக சாச்வத நன்மை ஏற்படவேண்டுமென்றே வற்புறுத்தப்பட்டு வருகையில் மார்ஷ்பாங்க்ஸ் கமிட்டியின் சிபார்சைப்பற்றி சர்க்கார் யோஜித்து வருவதாக மந்திரி கூறியதில் ஒருவரும் திருப்தியடைய முடியாது. 75லக்ஷ வஜாவிஷயமாக ஜில்லாக்களுள் பலத்த போட்டி ஏற்பட்டுவருவதால் இந்த வஜாவானது ஸமுத்திரத்தில் கரைத்த சர்க்கரையைப்போல் ஒருவருக்கும் பலனைக் கொடுக்கக்கூடியதல்ல.

மான்யக்குறைவுப் பிரேரணைமீது நேற்று சட்டஸபையில் பேசியவர்கள் 33விதமாவது சாச்வதவஜா செய்யவேண்டியதைப் பலமாகவும் நியாயமாகவும் வற்புறுத்திப் பேசியிருக்கிறார்கள். ஆதலால் காங்கிரஸ் மந்திரிகள் இனிமேலும் காலம் கடத்தாமல் நிலவரிவஜா விஷயமாகத் தாங்கள் என்னசெய்யப்போகிறார்களென்பதை திட்டமாகப் பொதுஜனங்களுக்கு அறிவிப்பது, மனமொடிந்து தவிக்கும் மிராசுதார்களுக்குச் செய்யவேண்டிய கடமையாகும்.

குறிப்புகள்.

வெள்ளைக்காரியின் தந்திரம்.

'மிஸஸ் ஹௌத்கேட்' என்ற வெள்ளைக்காரி மிஸ் மேயோவைப்போல் ஹிந்துக்களைத் தூஷித்து ஒரு புஸ்தகம் வெளியிட்டிருப்பதை ஏற்கனவே பிரஸ்தாபித்துள்ளோம். முக்யமாகத் தென்னிந்திய பிராம்மணர்களையும், அவர்களுடைய ஆசாரவழக்கங்களையும் இந்த வெள்ளைக்காரி அப்புஸ்தகத்தில் தூஷித்து எழுதியிருக்கிறாளாம். இந்தவிஷயம் பத்திரிகைகளில் வெளிவந்துவிட்டபடியால் தமக்கு எதிர்ப்பு அதிகம் ஏற்படுமென்றும் தமது புஸ்தகத்திற்கு வியாபாரம் நடக்காதென்றும் கருதி அவள் இப்போது தந்திரமாக ஸமாதானம் சொல்லப் புறப்பட்டிருக்கிறாள். எப்படியாவது தமது புஸ்தகம் பிரசாரப்பட்டு ஹிந்துக்களின் நாகரிகத்தை சிரிப்பாணியாக்கவேண்டுமென்பதே அவளது நோக்கம். அதற்காக அவள் இப்போது நம்மவர்களுக்கு குல்லாய் போட்டு ஏமாற்றப் புறப்பட்டிருக்கிறாள்.

தமது புஸ்தகத்தில் தாம் எவரையும் தூஷிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் ஒன்றும் எழுதவில்லையாம். ஹிந்துக்களின் முற்கால தற்காலப் பழக்க வழக்கங்களையே தாம் படரூபமாக வெளியிட்டிருப்பதாயும் அதில் எந்த ஜாதியாரையும் பரிஹஸிக்கும் நோக்கமில்லையென்றும், பாதிரி ஸங்கத்தாரின் தூண்டுதல்மேல் இப்புஸ்தகத்தைத் தாம் எழுதவில்லையென்றும், அதில் ஏதாவது தூஷணை பரிஹாஸாதிகள் இருந்தால் அவைகளை மன்னித்துவிட்டு யாவரும் தமது புஸ்தகத்தை ஆதரிக்கவேண்டுமென்றும் இந்த வெள்ளைக்காரியம்மா கேட்டுக்கொள்ளுகிறாள். இந்தமாதிரி ஏமாற்றும் வார்த்தையால் நம்மவர்களை வஞ்சித்துத் தமது கார்யத்தின் நோக்கத்தை பூர்த்திசெய்து கொள்ளவே இவள் விரும்புகிறாளேயல்லது வேறில்லை. இதற்கு நம்மவர்கள் உள்படாமல் இப்புஸ்தகத்தைத் தலைகிளப்பவிடாமல் செய்வதற்கு எல்லாவித உபாயங்களையும் உடனே செய்துதீரவேண்டியது அவச்யமாகும்.

மேலும் இவள் கூறியுள்ள மற்றொரு விஷயமும் கவனிக்கத்தக்கது. தானெழுதியுள்ள விஷயம் எதுவும் இந்திய சீர்திருத்தக்காரர்களாலும், இந்திய ஸ்திரீகளாலும் பல பிரஸங்க மேடைகளில் ஸாதாரணமாகச் சொல்லப்பட்டுவருவதே யல்லது புதிதல்லவென்றும், தம்மீதுமட்டும் இந்த குற்றமில்லையென்றும் வாதிக்கிறாள். இதைக்கேட்டு ஸ்வமதத்துரோஹிகளாகிய சீர்திருத்தவாதிகள் வெட்கித் தலைகுனியவேண்டாமா? மிஸ் மேயோவிற்கு ஹிந்து குலப்பழக்கங்கள் அநாகரிகமென்று சொல்லிக்கொடுத்தவர்கள் நம் சீர்திருத்தக்காரர்களல்லவோ? பிறகு மேயோவைக் கோபிப்பதில் அர்த்தமுண்டா? அதுபோலவே இந்த வெள்ளைக்காரியும் தமது அபாஸக் கூற்றுகளுக்கு இந்த வியவஸ்தை விட்டவர்களை ஆதாரமாகக் காட்டுவதில் குற்றமென்ன?

இவளுடைய பசப்புவார்த்தையைக்கேட்டு ஏமாறாமல் இத்தகைய விஷம புஸ்தகங்களை அடக்கவேண்டியது கவர்ன்மெண்டின் கடமையாகும். சென்னை சட்டஸபை மெம்பர்கள் இதை ஸர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவந்து தக்க பரிஹாரம் செய்ய வேண்டும்.

இதுதான் காங்கிரஸ் நீதியா?

சென்றவாரத்தில் சென்னைஜில்லா அரசியல் மஹாநாடு மதராஸில் நடைபெற்றது. அங்கு செய்யப்பட்ட பல தீர்மானங்களுள் திருவாங்கூர் ஆலயப்பிரவேச விளம்பரத்திற்குப் பாராட்டலும், தென்னிந்திய தேவாலயங்களிலும் தீண்டாதாரை அநுமதிக்க ஒரு சட்டம் இயற்றும்படி சென்னை ஸர்க்காரை வேண்டிக்கொள்ளுவதும் ஒரு தீர்மானமாகும்.

திருவாங்கூர் விளம்பரத்தைக் காங்கிரஸ் கூட்டங்களில் பாராட்டுவதில் சிறிதுகூட நியாயமில்லையென்று நாம் அடிக்கடி எடுத்துக்காட்டி வருகிறோம். ஜனநாயக முறையிலும், ஸ்வதந்திரத்திலும் ஊறிக்கிடப்பதாகப் பேசிக்கொள்ளும் காங்கிரஸ் வாதிகள் திருவாங்கூர் விளம்பரத்தை ஆதரிக்க வெட்கப்படவல்லோவேணும்! திருவாங்கூர் பிரஜைகளுடைய அபிப்பிராயத்தைக்கேட்டு இந்த ஆலயப்பிரவேச உத்திரவு செய்யப்பட்டதா? அங்குள்ள ஜனப்பிரதிநிதி ஸபையில் மசோதா கொண்டுவரப்பட்டு ஜனஸம்மதியின்மேல் இது நிச்சயிக்கப்பட்டதா? இல்லை. ஹிட்லரையும், முஸோலினியையும் யதேச்சாதிகாரிகளென்று தூற்றும் காங்கிரஸ் ஸ்வதந்திர வாதிகள் இந்த திருவாங்கூர் யதேச்சாதிகாரத்தைமட்டும் போற்றுவது என்ன நீதி? சுதேச ஸம்ஸ்தானங்களே யதேச்சாதிகாரம் நிறைந்தவையென்றும், அவைகளை ஒழித்துவிடவேண்டுமென்றும் வீர்யம் பேசும் காங்கிரஸ் காரர்கள் இந்த உத்திரவை மட்டும் போற்றுவது எவ்வளவு விரோதம்! ஸ்வதந்திரத்திற்காகக் கூட்டப்படும் காங்கிரஸ் கூட்டங்களில் இத்தகைய யதேச்சாதிகாரங்களையும் ஆதரிப்பது எவ்வளவு முன்பின் விருத்தமென்பதை அறிய வேண்டாமா? திருவாங்கூர் விளம்பரமானது பிரஜைகளில் பெரிய வகுப்பாருடைய உரிமையைப் பறிப்பதாயும் பலாத்காரம் பொருந்தியதாயுமிருப்பதை ஸ்வதந்திரவாதிகளான காங்கிரஸ்காரர்கள் ஆதரிப்பதிலிருந்து இவர்களுடைய ஸ்வதந்திர வேஷமே வெடித்து நிற்கிறதென்பது மறைக்க முடியுமோ?

எலெக்ஷன் வாக்குறுதி என்ன?

சென்னை சட்டஸபையில் ஓர் ஆலயப்பிரவேச மசோதா நிறைவேற்றப்படவேண்டுமென்றும் மேற்படி மஹாநாட்டில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய மசோதா ஒன்றும் வரப்போவதாக பயமுறுத்திக்கொண்டிருக்கிறது. ஸமூஹப்பழக்கவழக்கங்களைப் பற்றி சட்டம் செய்ய மந்திரிகள் யோஜிப்பதாயும் தெரிகிறது. சட்டஸபையிலுள்ள மெஜாரிடி பலத்தைக்கொண்டு எத்தகைய புரக்ஷியையும் செய்துவிடலாமென்று காங்கிரஸ்வாதிகள் நினைப்பார்களானால் அதைவிட அநீதி வேறுகிடையாது. ஸமீபத்தில் நடந்த எலெக்ஷனில் ஆலயப்பிரவேசம் முதலியவை எலெக்ஷன் பிரச்னையாக வைக்கப்பட்டு வோட்டர்களின் ஸம்மதி வாங்கப்படவில்லை யென்பது தெளிவு. அநேக விடங்களில் அபேக்ஷகர்களும், காங்கிரஸ் தலைவர்களும் சட்டஸபையில் ஆலயப்பிரவேச பிரச்னை இப்போது நேராதென்றும், சீர்திருத்தத்தைச் சிதற அடிப்பதென்ற ராஜீய நோக்கமேதான் எலெக்ஷன் பிரச்னையென்றும் உறுதிசொல்லியிருக்கிறார்கள். அப்படியிருக்க தேசத்தில் மிகுந்த விவாதத்திற்கு இடமானதாயும் பெரும்பாலோருக்கு அஸம்மதமாயுமுள்ள ஆலயப்பிரவேசாதிகளை பலாத்காரமாக நிறைவேற்றிவைக்க மெம்பர்களுக்கு எவ்வித அதிகாரமுமில்லை.

தென்னிந்தியாவில் மிகப்பெரும்பாலோரான ஜனங்கள் ஆலயப்பிரவேசத்தை எதிர்ப்பவர்களென்பது காந்திஜியுள்பட காங்கிரஸ்காரர் யாவரும் அறிந்ததே.

ஆதலால் ஆலயப்பிரவேசம்போன்றமசோதாவை நிறைவேற்றவேணுமானால் காங்கிரஸ் காரர்கள் சட்டஸபைப் பதவியை ராஜிநாமா செய்துவிட்டு மறுதேர்தல் நடத்தவேண்டியது நியாயம். அதில் ஆலயப்பிரவேசம் எலெக்ஷன் பிரச்னையாக வைக்கப்படவேணும். இதில் காங்கிரஸ் வாதிகள் வெற்றிபெற்றால் தேசமும் இவர்களுக்கு அதிகாரம் கொடுத்ததாக ஆகலாம். ஆயினும் மதாசார விஷயங்களில் இத்தகைய மெஜாரிடி ஓட்டுபலத்தைக் கொண்டு முடிவு செய்வதை தார்மிகர்கள் எக்காலத்திலும் அங்கீகரிக்க முடியாது. இருந்தபோதிலும் ஜனஸம்மதி பெறாமல் காங்கிரஸ்காரர்கள் இத்தகைய சட்டங்களைச்செய்ய அதிகாரம் பெற்றவர்களல்லவென்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளவேணும். காங்கிரஸ் கூட்டங்கள் ஆலயப்பிரவேசத் தீர்மானம் செய்யுமுன் இந்த முக்ய விஷயத்தை மறந்துவிடக்கூடாது.

காங்கிரஸ்காரர்கள், காந்திஜியும், காங்கிரஸும் போடும் உத்திரவுகளை நிறைவேற்றச் சட்டஸபைக்கு வந்திருக்கிறார்களா, அல்லது பொதுஜன அபிப்ராயங்களை நிறைவேற்றி வைக்க வந்திருக்கிறார்களாவென்று கனம் ஸ்ரீ சாஸ்திரியார் போன்ற மேதாவிகள் பஹிரங்கமாகப் பேச முன்வந்துவிட்டதைக் காங்கிரஸ்வாதிகள் கவனித்து அடக்கத்துடன் நடப்பது விவேகமாகும்.

முஸ்லீம்களுக்குச் சலுகையா?

சென்னை மாகாணத்திலுள்ள ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் தாழ்ந்த ஜாதியார்களுக்குப் புஸ்தகம், சிலேட்டு வகைராக்களை இனமாக ஸர்க்கார் வாங்கிக்கொடுக்க வேண்டுமென்று ஓர் உத்திரவு போடப்பட்டிருக்கிறதாம். இந்த உத்திரவில் மஹம்மதிய மாணவர்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று காங்கிரஸ் மந்திரிஸபை தீர்மானித்திருப்பதாக விளம்பரமந்திரி பத்திரிகைகளுக்கு அறிவித்திருக்கிறார். தாழ்ந்த ஜாதியார் ஏழைகளென்பதும், பிற்போக்கான நிலைமையில் இருப்பவர்களென்பதும் இவ்விதச் சலுகைக்குக் காரணமாயிருக்கிறது. ஆனால் முஸ்லீம் வகுப்பும் இந்த நிலைமையிலிருக்கிறதா? அந்தஸமூஹம் ஏழையானதா? பெரிய பெரிய பணக்காரர்களும், வியாபாரிகளும், தர்மவான்களும் அவர்களில்ஏராளமாக இருக்கவில்லையா? அவர்களில் படித்தவர்களும் பெரியஉத்யோகம்வகிப்பவர்களும் அநேகர் இல்லையா? பலவிடங்களில் முஸ்லீம் ஸமூஹத்தார்களுக்கென்றே அநேக கலாசாலைகளும், பள்ளிக்கூடங்களும் அந்த ஜாதியார்களால் நடத்தப்பட்டு வருவதைப் பார்க்கிறோம். அப்படியிருக்க அந்த ஸமூஹத்தை ஏழை என்பதற்காகவோ, பிற்போக்கானதென்பதற்காகவே தீண்டாதாருக்கு ஸமமாக நடத்திச் சலுகை காட்டும்படி சென்னை ஸர்க்கார் செய்திருப்பதற்குக் காரணம் என்ன? ஜாதி ஹிந்துக்களில்கூட தாழ்ந்த ஜாதியாரை விட மிகக்கேவலமான நிலைமையிலுள்ளஏழைகள் லக்ஷக்கணக்காக இல்லையா? ஒருவேளை சோற்றுக்குக் கிடைக்காமல் தவிப்பவர்கள் மேல் ஜாதியாரில் எவ்வளவோ பேர் இருக்கிறார்களே? அவர்களுடைய குழந்தைகளுக்கும் இவ்விதச் சலுகை ஏன் கொடுக்கக்கூடாது? பொது ஜனங்களுடைய வரிப்பணத்தைப்பெற்று, வரி செலுத்துவோரின் முதல்பாத்யத்தை திரஸ்கரித்துவிட்டு, வழியில் போகிறவர்களுக்கெல்லாம் அள்ளிவிடுவது நியாயமா?

ஸ்ரீ ஜகத்குரு
வியாஸபூஜா முகாம்
Palokol
(க்ஷீராராம் க்ஷேத்திரம்.)
West Godavary Dt.

வார்ஸற்ற முஸ்லீம்சொத்து மசோதா.

இந்தியா சட்டஸபையில் ஸர் மஹமத் யாகூப் என்பவரால் கொண்டுவரப்பட்டிருந்த மேற்படி மசோதாவைப்பற்றி ஏற்கனவே நாம் பிரஸ்தாபித்துள்ளோம். இந்த மசோதா சட்டமாகிவிட்டது.

இதன்படி ஒரு முஸ்லீமின் ஸொத்து வார்ஸற்றதாயிருந்தால் அது இந்தியாவிலுள்ள முஸ்லீம் ஸமூஹத்திற்குப் பொதுவான ஸொத்தாகிவிடும். முஸ்லீம் ஸமூஹத்தினர் ஏற்படுத்தும் டிரஸ்டிகள் இந்தஸொத்தைக்கொண்டு அந்த ஸமூஹ ஏழைகளின் நன்மைக்குச் செலவுசெய்யவேண்டும்.

ஏற்கனவே இருந்த சட்டப்படி வார்ஸற்ற ஸொத்துக்கள் பிரிடிஷ் ராஜ்யத்தைச் சேர்ந்தவைகளாகும். இந்த மசோதாவின்படி அந்த பாத்யம் போய் முஸ்லீம் ஸமூஹமே பாத்யஸ்தமென்று தீர்மானிக்கப்பட்டுவிட்டது.

இதிலிருந்து முஸ்லீம்கள் தங்கள் ஸமூஹ முன்னேற்றத்தில் எவ்வளவு கவலையும், கட்டுப்பாடும் உள்ளவர்களென்பதும், அவர்கள் விஷயத்தில் கவர்ன்மெண்டாரும் மற்ற வகுப்பாரும் இணங்கி எவ்வளவு விட்டுக்கொடுக்கிறார்களென்பதும் தெளிவாகும்.

இந்த மசோதா விஷயத்தில் கவர்ன்மெண்டார் வோட்செய்யாமல் நடுநிலைமை வஹித்ததேன்? வார்ஸற்ற ஸொத்துக்கள இதுவரையில் கவர்மெண்டுக்குக் கிடைத்துவந்த வருமானமாக இருந்ததை இப்போது இழக்க ஸர்க்கார் இசைந்ததேன்? நமது காங்கிரஸ் கக்ஷியார் முஸ்லீம் மனம் கோணாதபடியிருக்க வேண்டி தாங்களும் வோட்கொடாமல் நடுநிலைமை வகித்தார்களாம். ஸ்ரீமான் ஆனே எச்சரிக்கை செய்துங்கூட [illegible] மெம்பர்கள் இம்மாதிரி நடந்தது ஆச்சர்யமாகும். இதுமட்டுமா? காங்கிரஸ் கக்ஷி கொறடாவும் டில்லிநகரத் தொகுதியிலிருந்து ஹிந்துக்களுடைய வோட்டைக்கூடப்பெற்று பிரதிநிதியாக விளங்கிவரும் அஸப் அலி என்பவர் இந்த மசோதாவை தமது ஸமூஹத்திற்குப் பரிந்து ஆதரித்துப்பேச முன்வந்தார். இச்சமயம் அவர் தான் ஒரு காங்கிரஸ்வாதியென்பதை மறந்து ஸமயம் நேர்ந்தால் தாம் ஒரு முஸ்லீம் ஸமூஹவாதியென்பதையே நிரூபணம் செய்துகாட்டினர்.

இந்தியா சட்டசபையில் இவ்வாறு காங்கிரஸ்வாதிகள் விட்டுக்கொடுத்தபோதிலும் முஸ்லீம்கள் ஸமயம் நேரும்போதெல்லாம் ஜின்னாவுடன் சேர்ந்து காங்கிரஸுக்கு விரோதம் செய்வதைமட்டும் நிறுத்துவதில்லை. காங்கிரஸ்கதிதான் என்னே?

லாகூரில் பசுக்கொலை விடுதி.

லாகூரில் ராணுவத்தினரின் மாம்ஸ ஆகார ஸௌகர்யத்தை உத்தேசித்துஆடு,மாடுகளைக் கொல்லும் கட்டிடமொன்றை கட்ட கவர்ன்மெண்டார் யோஜித்து வருகிறார்கள். இதை ஆக்ஷேபித்து அங்குள்ள சீக்கியர், ஹிந்துக்கள் ஆகியவர்கள் பலமான கிளர்ச்சி நடத்தி வருகிறார்கள், வெளிமாகாணத்தவர்களின் அநுதாபமும் இதற்கு ஏற்பட்டிருக்கிறது. சென்றவாரம் லாகூரில் ஹர்த்தால் நடைபெற்றது. ஹிந்து, சீக்கியர் முதலியவர்களின் கடைகள் மூடப்பட்டன. மகம்மதியர்களும் இதில் கலந்துகொண்டனர். இந்த மாடறுக்கும் விடுதியைத் தடுக்கவேண்டுமென்றால் மகம்மதியர்களுடைய பின் பலமும் ஒத்துழைப்பும் அவச்யம் வேண்டுமென்று காந்திஜி சொல்லுகிறார்.

உ

மாணவர்களுக்கு மதாசார போதனை.

30—8—37ல் நடந்த அத்வைத ஸதஸில் மாலை 5மணிக்கு பிரம்மஸ்ரீ கோவிந்தபுரம் வாஸுதேவ சாஸ்திரிகள் அவர்களால் "மாணவர்களுக்கு மதாசார போதனையின் ஆவச்யகதையும் அதன் உபாயங்களும்" என்பதைப்பற்றி உபன்யஸிக்கப்பட்டது. அதை "சிக்ரேக்ர" முறையில் சென்ற மாதங்களாக தயார்செய்யப்பட்ட சில பையன்களைக்கொண்டு எடுத்து பிரசாரகர் எஸ். ராமன் வெளியிடுகிறார்:—

ஸகல காரியங்களையும் நாம் செய்வதற்குமுன் பகவத்பாதாளை வணங்கிவிட்டு செய்துவருகிறோம். அத்வைத மதத்தை ஒரு உருக் கொடுத்து நிலைநாட்டியது அவர்கள்தான். நம் மதவிஷயங்கள் மிகவும் சீர்குலைக்கப்பட்டு இதர தர்மங்கள் தலையெடுத்த காலத்தில் அவைகளையெல்லாம் கண்டித்து உலகத்தில் ஸத் தர்மத்தை பிரவிருத்தி செய்து அத்வைதத்தை ஸ்தாபித்தார் அந்த ஜகத்குரு. ஸாக்ஷாத் பரமேசுவரனின் அவதாரமான அவர்களை நாம் ஒவ்வொருவரும் பிரதிதினம் வைத்து வணங்கவேண்டுவது நம் கடமையாகும். அவர்களுடைய பரிபூர்ண அனுக்ரகம் நமக்கு இருக்குமானால் ஒருவிதமான கெடுதலும் குறைவும் ஏற்படாது. உலகத்தில் வர்ணாசிரம தர்மங்களை நழுவவிடாமல் சரிவர கடைப்பிடித்து நடப்பதற்கு அவர்கள் அப்பய்ய தீக்ஷிதர் முதலியோர் வழிகாட்டியிருக்கின்றார்கள். இந்த அத்வைத ஸதஸை நடத்திருப்பதும் அவர்களால்தான். நிற்க இப்போது நாம் இங்கு கூடியிருப்பது 43வது சபை. இதுபோன்ற சபைகள் அடிக்கடி நடத்தவேண்டுவது அத்யாவசியம். கிருதத்ரேதாதி யுகங்களில் நிறைந்திருந்த மதநம்பிக்கை குறைவுபட்டு கலியில் மிகவும் க்ஷீணதசையை அடைந்திருக்கிறது. சிலர் ஏன் 14வயதுக்குள் கல்யாணம் செய்யவேண்டுமென்கிறார்கள். சிலர் ஏன் ப்ரௌடா விவாஹம் கூடாதென்கிறார்கள். இப்போதுள்ள அர்ச்சகர்களை யெல்லாம் ஏன் கோவில்களில் விடக்கூடாதென்கிறார்கள். இன்னும் சாஸ்திர சம்பந்தமான பல சந்தேஹங்கள் சிலருக்கு உண்டாகின்றன. ஆகவே இது மாதிரி சபைகளை அடிக்கடி செய்துகொள்ள மிக சௌகரியமாக இருக்கும். பிரதி 3மாதம் 6 மாதமும் இதுபோன்ற சபைகள் கூட்டவேண்டுவது அவசியம். ஆனால் அதற்கு [illegible] பணம் செலவழிகிறதே என்ற யோஜனைதான். அடிக்கடி இம்மாதிரி கூட்ட ஸௌகர்யமில்லாமல் போனாலும் ஒவ்வொரு கிராமங்களிலும் பண்டிதர்கள் கோஷ்டிகளாக கூட, ஏற்பாடு செய்துகொள்ள வேண்டுவது அவசியம்.

மாணவர்களுக்கு மதாசார போதனை அளிக்கப்படவேண்டுவது அவசியம். அவர்களுக்கு ஈசுவரபக்தியும், பெரியோரிடம் பணியும் இருந்தால் தான் வித்தைவரும். வித்தைக்கு மனசுத்திதான் பிரதானம். குருக்கள் எல்லோருக்கும் சரியாகதான் சொல்லிக் கொடுக்கிறார்கள். அப்படியிருக்கையில் சிலர் நன்றாக கிரகித்துக் கொள்கிறார்கள். சிலர் கிரகிப்பதில்லை. ஈசுவரனிடம் பக்தியும் பணிவும் எவனுக்கு பூர்ணமாக இருக்கிறதோ அவனுக்கே வித்தை பூர்ணமாகவரும். சிரத்தையுடன் கற்றால்தான் அப்படி கற்றுக் கொள்ளும் வித்தை பிரயோஜனப்படும். எதற்கும் சிரத்தை என்பது இருக்கவேண்டுவது அவசியம்.

இப்போது இதர மதஸ்தர்கள் அவரவர்கள் மதத்தை பரவச் செய்வதற்கு செய்யும் முயற்சிகள் எவ்வளவோ விதம். அப்படியிருக்கையில் நாம் சும்மாயிருக்கக் கூடாது. தங்கள் தங்களது என்று சொல்லிக்கொள்ளும் மற்றவைகள் எல்லாம் மதங்கள் அல்ல. அவைகளெல்லாம் கற்பனைகள். நம்மதமோ அப்படியல்ல. ஆதியில் ப்ரும்மாவால் சிருஷ்டிபண்ணப்பட்டது. மதம் என்றால் என்ன? மதம் என்றால் நிச்சயம் என்ற ஒரு சிந்தை. அது ஒருவராலும் மாற்றமுடியாதது. வேதம் உண்டானபோது உண்டானது. வேதம் அனாதிகாலமாக இருந்துவருகிறது. அதுபோல் மதமும் அனாதி. அதிலிருந்துண்டான தர்மமும் அனாதி. அதை நாம் பஹிஷ்காரம் செய்ய முடியவேமுடியாது. அதில் வகுக்கப்பட்டபடி வர்ணாசிரமங்களுக்கு ஏற்றவாறு நாம் நடந்துகொள்ளவேண்டும். அவைகளை நாம் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு மாற்றுவதென்பது முடியவேமுடியாது. அந்த வேதம் முழுவதும் ஸம்ஸ்க்ருதத்திலேயே இருக்கிறது. இப்போது நாம் ஸம்ஸ்கிருதம் தெரியாத அனேகர்களைப் பார்க்கிறோம். அப்படியே தெரிந்திருந்தாலும் அவைகளை ஆராய்ச்சி பண்ணி அறியக்கூடியவர்கள் அதிகம் இல்லை. ஆகவே அதற்கு தப்பாக கண்டகண்டபடி அர்த்தம்செய்து நம் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு மாற்றிக்கொள்வதென்பது கூடவே கூடாது. இப்போது நம் தற்கால மாணவர்களைப் பார்த்தோமானால் முழுமோசமாக இருக்கிறார்கள். வேதம் முழுவதும் ஸ்வரம். அவற்றைச் சரியாய் உச்சரித்தால்தான் சரியானபடிசெய்ததாகும். வேதம்முன் இருந்த வேதம் தான். அதை அனுஷ்டித்துதான் முன்னோர்கள் எல்லாம் பெரிய ஞானிகளாகவும், ரிஷிகளாகவும் ஆனார்கள். நாமும் தான் அதைப் படிக்கிறோம். ஆனால் நாம் ஏன் அந்தப் பலத்தை அடையவில்லை. நாம் அதை சரியான முறையில் சரியான ஸ்வரங்களுடன் கற்று உச்சரிக்காதலால்தான் இப்பொழுதுள்ள மாணவர்களில் பலருக்கு நித்யவிதிகளாக சந்தியாவந்தனம் கூட தெரியாமல் இருக்கிறது. அத்யயனம் செய்யும் பிள்ளைகளும்தான் என்ன? ஒரு சிஷ்யன் குறைந்தது 12 வருஷமாவது அத்யயனம் செய்ய அப்போதுதான் அது பூர்த்தியாக கற்க சாதகமாகும். அத்யயனம் செய்ததால் மட்டும் பிரயோஜனமில்லை. அதை அனுஷ்டானத்திற்கு கொண்டுவரவேண்டும். அத்யயனம் செய்த ஒவ்வொருவனும் கர்மாக்களை சரியானபடி அனுஷ்டித்தால்தான் அவனுக்கும் சரியான பலன் ஏற்படுவதுடன் மற்றவர்களும் அவனைப்பார்த்து நல்வழிக்கு திருந்துவார்கள். இப்பொழுது நம் மாணாக்கர்களை கல்வி வேண்டுமென்று பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புகிறோம். அங்கே நம் தர்மங்களைப்பற்றியும், மதாசாரங்களைப்பற்றியும் கொஞ்சம்கூட போதிக்கப்படுவதில்லை. ஜீவனத்திற்காக வேண்டுமென்று நாம் நம் பண்டைய அனாதிகாலமான வேதாத்யயனத்தை விட்டுவிட்டு நீச பாஷையை கற்க அனுப்புகிறோம். அதனால் என்ன ஆகிறது. ஸம்ஸ்கிருதம் வாயில் நுழைவதில்லை. வேதம் என்றால் என்ன என்றே அவர்களுக்கு தெரிவதில்லை. கொஞ்சம் கொஞ்சமாக வேதம் என்று ஒன்று இருக்கிறதா என்ற ஸந்தேஹம் வந்துவிடுகிறது. ஜாதிப்ரஷ்டர்களின் ஸம்ஸர்க்கத்தினாலும், கர்மானுஷ்டானங்களைசெய்யாமல் விடுவதாலும் முற்றிலும் மறந்துவிடுகிறார்கள். அவநம்பிக்கையும், அவமதிப்பும், இகழ்ச்சியும் வந்துவிடுகிறது. வேதம் ஸத்யம்தான். அதில்சொல்லியிருக்கும்படி நாம் ஒன்றும்விடாமல்செய்துவந்தால் கட்டாயம் ரிஷிகளாக ஆகலாம். ஏன் ஆகமுடியாது? முன்பு வசிஷ்டர் இல்லையா, வேதாத்யயனம் செய்து மேன்மை பெற்றவர்களிடம் ராஜாக்கள் கூட ஒன்றும் செய்யமுடியவில்லை. வசிஷ்டர் ப்ரும்மதண்டத்தை வைத்து பின்னால் உட்கார்ந்து விட்டார். பெரிய பராக்கிரமசாலியான விச்வாமித்ரரால் என்ன செய்ய முடிந்தது. பாரத்வாஜர் முன்பு பரதன் முதலிய சைனியங்களுக்கு போஜனம் அளிக்கவில்லையா. அவரிடம் பணம் இருந்ததா? வேதம்தான் பணம். அதை நன்றாக அத்யயனம் செய்து அதன்படி அனுஷ்டித்து வந்தால். அதிலே பரமதமார், உலகத்தில் உத்தமமானது மனுஷ ஜன்மா. அதிலும் உத்தமம் ப்ராமண ஜன்மம். இப்படிப் பிறந்து நம் கடமையை கர்மாக்களை சரிவர செய்யாமல் நாம் கொஞ்சம் கொஞ்சமாக அசிரத்தையாக இருந்துவந்ததால்தான் இந்த கேவலமான ஸ்திதிக்கு வந்துவிட்டோம். அப்படி செய்யாமல் இருந்தால் நாம் மனுஷஜன்மமாக இருக்கவேண்டிய அவசியமில்லை. ஒவ்வொரு ப்ராம்மணனும் அவனவன் கர்மாக்களை செய்யவேண்டிய தவசியம். தபஸ் என்றால் என்ன? நியமம்தான் தபஸ். அவைகள்தான் ப்ரதானம். அதன்படி நடந்து வந்திருந்தோமானால் ஒருநாளும் ஒரு குறைவும் ஏற்பட்டிருக்காது. (ஆயினும் கலியில் ரிஷிகள் உண்டாகவே மாட்டார்கள் என்று கூறியிருக்கிறது) கலியில் புத்தி ஞானவான்களாக இருப்பார்கள் என்றால் ஏன் அப்படி சொன்னார்கள். நியமமாக இருக்கமாட்டார்கள். அப்படி இருந்தாலும் ஆத்மவிசாரணை செய்யமாட்டார்கள். வேதப்ரமாணங்களைப் பற்றியும், மதாசாரங்களைப்பற்றியும் புத்தகம் புத்தகமாக எழுதி எழுதி விட்டால் மட்டும் போதாது. நாமே அதன்படி அனுஷ்டித்து காரியமசத்தில் காட்டி சொல்லிக்கொடுக்கவேண்டும். நமக்கு பலம் எல்லாம் ஆசாரம், தர்மம், வேதம்தான். அவைகளின்படி அனுஷ்டித்தால் சிரேயஸ்ஸும், தேஜஸ்ஸும் உண்டாகும்.

நாமாக இப்பொழுது திடீரென்று எல்லாவற்றையும் சரிசெய்துவிடவும் முடியாது. ஆனால் கட்டாயம் இந்த துர்வாதங்கள் எல்லாம் கட்டாயம் ஒரு நாள் ஒழிந்துபோம். நம் வேதமும் மதமுமே நிலைத்து நிற்கும் முன்புபோலவே.

यदायदाहि धर्मस्य

என்று கூறி இருக்கிறார். அவர் ஒருநாளும் கைவிடமாட்டார். அதற்கு ஒரு காலம்வரும். அவரால் தான் செய்யமுடியும் என்றாலும் நம்மால் ஆனதை செய்யவேண்டியது நம்கடமை. இப்போது மாணவர்களுக்கு அளிக்கப்படும் படிப்பினால் ஒருநாளும் நன்மை கிடையாது. ஜீவனத்திற்கு வழிவேண்டுமே, வேண்டுமே என்று புத்திபோகிறதே நாம் அவர்களுக்கு இந்தபடிப்பைக் கொடுப்பதற்கு காரணம். உலகத்தில் மனிதனுக்கு திருப்தி என்பதே கிடையாது. அதை முதலில் ஒழிக்கவேண்டும். இந்திரியங்களை அடக்கும் சக்தியை அடையவேண்டும். காமம், க்ரோதம், இச்சை இவைகளை ஒழிக்கவேண்டும். அவைகளுக்கு சுலபமானவழி. வேதாத்யயனத்தோடல்லாமல் அதை அனுஷ்டானத்திற்கு கொண்டுவருதல் தான். ப்ரும்மணனாக பிறந்தவனுக்கு பணம் தேவையில்லை. பலம் தேவையில்லை. வேதாத்யயனமும் கர்மானுஷ்டானங்களும் தான் ப்ரதானம். ஒருசமயம் துர்வாஸர் ப்ரும்மண ரூபமாக வந்தார். அவருக்குக் கோபம் அதிகம். அவர் தன்னையார் கோபம் வாராதபடி உபசரிக்கிறார்கள் பார்ப்போம் என்று வந்தவர். இந்த காலத்திய ஜனங்களாயிருந்தால் அழைக்கவேமாட்டார்கள். கிருஷ்ணன் அழைத்தார்.

(தொடர்ச்சி 11-ம் பக்கம்பார்க்க.)

கொச்சி மஹாராஜா அவர்களுக்கு ஸநாதனிகளின் தூதுகோஷ்டி.

தஞ்சை ஜில்லா பிராம்மண மகாஸபை காரியதரிசியும் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம் Organising Secretaryயும் கொச்சி மகாராஜா அவர்களுக்கு சென்றவாரம் சென்ற (தூதுகோஷ்டி) Deputation Secretaryயுமாகிய கும்பகோணம் கடலங்குடித்தெரு Retired Engineer S. ஸ்வாமிநாத சாஸ்திரிகள் எழுதுகிறார்:—

ஸமீபத்தில் அகில பாரதீய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் சார்பாக ஷை சங்கத்தின் பிரஸிடெண்டாகிய மதுரை அட்வகேட் ராவ்ஸாஹேப் நடேசய்யர் அவர்கள் ஸநாதனிகள் தங்களுக்கு ஸமீபத்தில் ஏற்பட்டிருக்கும் சட்ட அசௌகர்யங்களைப்பற்றி மஹாராஜா அவர்கள் ஸந்நிதானத்தில் ஒரு டெபுடேஷனாக வந்து தெரிவித்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்ட பிரார்த்தனைக்கிணங்க கொச்சி திவான் அவர்களிடமிருந்து அப்பேற்பட்ட Deputation ஒன்று 30-8-37உல் எர்ணாகுளத்தில் தன்னை காலையில் 11மணிக்கும் பிறகு மத்யான்னத்தில் மாலை 3-மணிக்கு மகாராஜா அவர்களை திருப்பனித்துறை Hill Palaceலும் கண்டு விஷயங்களை தெரிவித்துக் கொள்ளலாமென்று மதுரை ராவ்சாகிப் நடேசய்யர் அவர்களுக்கு சென்றமாதம் ஆரம்பத்தில் பதில் கிடைத்தது.

அதன்படி இந்தியாவின் பல பாகங்களில் இருக்கும் ஸநாதன தர்ம அபிமானமுள்ள பல பிரமுகர்களுக்கு தெரிவித்திருந்தபடி தூதுகோஷ்டி அங்கத்தினர்களை சேர்த்து அவர்கள் எல்லோரையும் மதுரையில் அய்யரவர்கள் பங்களாவில் 28—8—37ல் வந்து சேர்ந்து கூடும்படி பிரயத்தனங்கள் செய்யப்பட்டன. இந்த டெபுடேஷன் விஷயமாய் மேல் நடக்கவேண்டிய எல்லாக் காரியங்களையும் கோஷ்டி அங்கத்தினரை நேரில்கண்டும் அங்கங்கே செய்யவேண்டிய காரியங்களை உடனே தாமதியாமல் நடத்தி ஒருதலைப்படுத்துவதற்காக கும்பகோணம் என்ஜினீயர் ஸ்வாமிநாத சாஸ்திரிகள் தஞ்சை, தென் ஆற்காடு, இரண்டு ஜில்லாக்களில் பலவிடங்களுக்குப்போய் டெபுடேஷன் மெம்பர்களை சேர்த்து, மதுரையில் 27ம் தேதியே அவர்களுடன் வந்துசேர்ந்தார். அதே ஸமயம் வட இந்தியாவிலிருந்து இதர மெம்பர்களும் அங்கு வந்து கூடினர். மதுரை கோயம்புத்தூர் ஜில்லாக்களிலிருந்து கோஷ்டி அங்கத்தினர்கள் 28ம் தேதி காலையில் வந்து சேர்ந்தனர். இப்படிக்கு ஒருங்கு சேர்க்கப்பட்ட கோஷ்டி அங்கத்தினர் 20பேர்களும் மதுரையிலிருந்து சென்ற 28உ சனிக்கிழமை மத்தியான்னம் அபிஜித் முகூர்த்தத்தில் மதுரையிலிருந்து ரோட் மார்க்கமாக நான்கு கார்களில் புறப்பட்டு, பழனி, பொள்ளாச்சி, கொல்லங்கோடு வழியாய் இரவு 10-மணிக்கு கொச்சி ஸமஸ்தானம் திருச்சூர் போய்ச் சேர்ந்தனர். அங்கு அவர்கள் வரவை எதிர்பார்த்து கொச்சி ஸமஸ்தான அதிகாரிகளால் பிரத்யேகமாக ஏற்படுத்தப்பட்டிருந்த வசதியாகிய மகாராஜா அவர்களின் அரண்மனை கட்டிடத்தில் உபசாரத்துடன்வரவேற்கப்பட்டு விருந்தளிக்கப்பட்டு அன்று இரவு சுகமாய் நித்திரை கழித்தனர்.

திருச்சூர், காலடி.

மறுநாள் 29—8—37உ காலையில் அவ்வூர் தேவஸ்வம் கமிஷனர், திவான் பேஷ்கார், நம்பூதிரிமார்கள், பிராமணஸமூக அதிகாரிகள் முதலியோர்கள் தூது கோஷ்டியார் தங்கும் ஜாகைக்கு வந்து கோஷ்டி அங்கத்தினருடன் குசலப்ரச்னம் செய்து ஸம்பாஷித்து ஸந்தோஷத்துடன் கொஞ்சநேரம் கழித்தனர். தூது கோஷ்டியார் பிறகு அவ்வூராருடன் சேர்ந்து திருச்சூர் ஆலயத்தில் எழுந்தருளி இருக்கும் வடக்குநாத ஸ்வாமியை ஸேவித்து திரும்பி ஜாகைக்கு வந்து போஜனம் செய்துகொண்டனர். பிறகு அதே தினம் மாலை 2-மணிக்கு கோஷ்டியினர் அவ்விடம் விட்டுக் கிளம்பி 4-மணி சுமாருக்கு ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதாளின் அவதார ஸ்தலமாகிய காலடி க்ஷேத்திரத்தை யடைந்தனர். அங்குள்ள பாடசாலை அத்யாபகரையும், ஸன்யாஸிகளையும், கிருஹஸ்தர்களையும், பாடசாலை வித்யார்த்திகளையும் கண்டுபேசி மனமகிழ்ந்து பூர்ணா நதியில் ஸாயங்கால ஸ்நானம் செய்து ஆன்ஹிகங்களை முடித்துக் கொண்டு அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிற ஸ்ரீ கிருஷ்ண பகவானையும் ஸ்ரீ சாரதாம்பாளையும், ஸ்ரீமத்பகவத்பாதாளையும் சிரத்தா பக்தியுடன் தர்சனம் செய்து அர்ச்சித்து வணங்கி ப்ரஸாதம் பெற்றுக்கொண்டு, அவ்விடம்விட்டு இரவு 7-மணிக்கு அந்தக்ஷேத்திர மகாஜனங்களுடைய ஆசீர்வாதத்துடன் கிளம்பினார்கள். அன்று இரவே சுமார் 10-30மணிக்கு கோஷ்டியினர் எர்ணாகுளம் போய்ச்சேர்ந்தனர். அங்கே தூது கோஷ்டியினர் தங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த ராஜமாளிகையில் அவ்வூர் முக்கிய அதிகாரிகளும் மகாஜனங்களும் கோஷ்டியினரை வரவேற்று அழைத்து அங்கேயே தங்கும்படியாக வேண்டிய சௌகர்யங்களைச் செய்துகொடுத்தனர்.

எர்ணாகுளம். திவான் சந்திப்பு.

30—8—37 காலையில் கோஷ்டியினர் எல்லோரும் ராவ்ஸாகேப் நடேசய்யர் அவர்கள் தலைமையில் திவான் அவர்களின் பங்களாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு 11-மணிக்கு திவான் அவர்களால் வரவேற்கப்பட்டனர். திவான் அவர்களுக்கு டெபுடேஷன் Secretary ஸ்வாமிநாத சாஸ்திரிகள் முதலில் Introduce செய்யப்பட்டு பிறகு ஷை Secretaryயால் டெபுடேஷன் தலைவரும் இதர மெம்பர்களும் தனித்தனியே திவான் அவர்களுக்கு Introduce செய்யப்பட்டு வந்தனோபசாரத்துடன் வரவேற்கப்பட்டனர். 11-மணி முதல் 12-மணிவரையில் டெபுடேஷன் விஷயமாய் வேண்டிய விஷயங்களெல்லாம் விஸ்தாரமாய் திவான் அவர்களுக்கு ராவ்ஸாகேப் நடேசய்யர் அவர்களாலும் ஸங்கிரகமாய் இதர மெம்பர்களாலும் எடுத்துரைக்கப்பட்டன. அவ்விஷயங்களைப் பொறுமையுடனும் ப்ரீதியுடனும் கேட்டுக்கொண்டு கடைசியில் பிரத்யுத்தரமாக திவான் அவர்களால் பதிலும் அளிக்கப்பட்டது. அந்த பதிலில் கொச்சி ஸமஸ்தானத்தில் யாவருக்கும் வேண்டிய ஸகல லௌகிகசௌகர்யங்களும் கொச்சி மகாராஜா அவர்களும், ஸர்க்காரும் எப்பொழுதும் ஊக்கத்துடன் செய்துகொண்டே வருவதாயும், அப்படியிருந்தபோதிலும் மத ஸம்பந்தமான விஷயங்களில் செய்ய வேண்டிய ஸகல காரியங்களுக்கும் மகாராஜா அவர்களுக்கு பரியாலோசனை சொல்லவேண்டியதற்கு பிரத்யேகமாக (சாஸ்திரக்ஞர்கள்) இதரர்கள் இருப்பதாயும் அவர்களைக் கலந்துகொண்டு மஹாராஜா அவர்கள் மதவிஷயங்களில் செய்கிற சகல ஏற்பாடுகளுக்கும் உத்திரவுகளுக்கும் தான் பூர்ண ஆதரவுடனும் சிரத்தையுடனும் ஒத்துழைப்பதாயும், இம்மகாராஜா அவர்கள் எப்பொழுதும் வேத விதிகளையும் சாஸ்திர நிபந்தனைகளையும் அனுசரித்தே மத விஷயங்களை நடத்திக்கொண்டு வருபவரென்றும், அப்படி நடப்பது மிகச் சிறந்ததுதானே என்றும் அவ்விஷயத்தை பஹிரங்கமாய் தான் பிரகடனம் பண்ணுவதாயும் இன்னும் பல உறுதிமொழிகளையும் கூறி முடித்தனர். இது விஷயமாய் ஸர்க்கார் விளம்பர உத்யோகஸ்தர் (Publicity officer) கையெழுத்துடன் ஒரு அறிக்கையும் உடனே வெளியிடுவதாயும் சொல்லி, தன்னை நேரில் வந்து கோஷ்டிகூடி கண்டதற்காக, தன்னுடைய மனமார்ந்த வந்தனத்தை. செலுத்தி ஸந்தோஷத்துடன் கோஷ்டியினரிடம் விடைபெற்றுக்கொண்டார்.

திருப்பனித்துறை. மஹாராஜா அவர்களுடன் பேட்டி.

மாலை 2-30க்கு தூது கோஷ்டியார் அனைவரும் எர்ணாகுளம் விட்டுப் புறப்பட்டு, அவர்களின் சொந்தக்கார்களிலும் கொச்சி ஸம்ஸ்தானம் அரண்மனை கார்களிலும் ஏறிக்கொண்டு 9மைல்களுக்கப்பால் திருப்பனித்துரையிலிருக்கும் மஹாராஜா அவர்களின் அரண்மனைக்குச் சென்றனர். சற்று முன்பே டெபுடேஷன் ஸெக்ரெட்டரி ஸ்வாமிநாத சாஸ்திரிகள் அரண்மனைக்கார் ஒன்றில் சென்று மகாராஜா அவர்களின் ஸர்வாதிகாரியாருடன் சந்தித்து இருவரும் சேர்ந்து கலந்துகொண்டு மகாராஜா அவர்களின் Reception Hallல் தூது கோஷ்டியினர் அனைவருக்கும் ஆஸனங்களை கிரம மரியாதைப்படி பிரத்யேகமாய் நிறுவிவைத்தனர். 3-மணி அடித்ததும் மகாராஜா அவர்கள் பரீக்ஷித்ராஜாவுடனும் ஒரு தர்பார் பண்டிதருடனும் ஸர்வாதிகாரியக்காரர், Palace Controller இவர்கள் பின்தொடர Hallல் வந்து கோஷ்டியினருக்கு தன்னுடைய நமஸ்காரத்தை தெரிவித்து, ஸிம்மாஸனத்தில் அமர்ந்தனர். கோஷ்டியினரும் அவரவர்களின் ஆஸனத்தில் உட்கார்ந்தனர். தலைவரால் ஒவ்வொருவரும் தனித்தனியாய் மகாராஜா அவர்களுக்கு அவரவர்களின் பெயர், உத்தியோகம், பிருதுகளுடன் தெரிவிக்கப்பட்டு மஹாராஜா அவர்களால் ஆமோதிக்கப்பட்டனர்.

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ப்ரஸாதமும் அனுக்ரஹமும்.

உடனே ஸ்ரீ காமகோடி மடத்தின் பிரதிநிதியாய் வந்திருந்த ஆத்மவித்யாபூஷணம் ஸ்ரீமடம் ஆஸ்தானவித்வான் பிரம்மஸ்ரீ வி. ஜகதீச்வர சாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீ ஆசார்யாளால் அனுக்கிரஹிக்கப்பட்ட ப்ரஸாதத்தை ஸம்பிரதாயப்படி வைதிக ஆசீர்வாதத்துடன் மகாராஜா அவர்களுக்கு ஸமர்ப்பித்தார்கள். கோஷ்டியினர் அனைவரும் எழுந்து நிற்க மகாராஜா அவர்களும் எழுந்து நின்றுகொண்டு பக்தி புரஸ்ஸரமாய் ப்ரஸாதத்தை ஏற்றுக்கொண்டார்கள்.

Address.

உபசாரப்பத்திரம்.

பின்பு மஹாராஜா அவர்களுக்கு கோஷ்டி தலைவர் ராவ்சாகிப் நடேசய்யர் Addressல் வரையப்பட்டிருந்த விஷயங்களையும் நம்முடைய ஹிந்து ஜனங்களுக்கு தற்காலம் ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களையும் எடுத்துரைத்து, கூடல்மாணிக்கம் கோவில் பூஜைவிஷயமாயும் ஆலயப்ரவேச விஷயமாயும் மகாராஜா அவர்கள் செய்த உத்தரவுகள் வைதிக சாஸ்திர ஸம்பிரதாயங்களுக்கு ஒத்திருப்பதும் தவிர, இந்தியாவில் பெரும்பான்மையாயிருக்கிற ஆஸ்திக ஸநாதன ஹிந்துக்களின் அபிப்ராயத்திற்கு ஒத்ததென்றும், அவர்கள் எல்லோரும் இந்த விஷயத்தில் மகாராஜா

அவர்களுக்கு பின்பலமாய் சந்தோஷமாய் உத்ஸாகத்துடன் காரியங்கள் செய்ய தயாராயிருப்பதாயும் கூறி, மேன்மேலும் தார்மிகர்களுக்கு வேண்டிய காரியங்களை மகாராஜா அவர்கள் செய்வித்து தலைக்கட்டிவைக்க வேண்டுமென்றும் ஸமீபத்தில் கூடப்போகிற வித்வத் பரிஷத் ஸநாதன ஸம்மேளனம் முதலிய தர்ம காரியங்களில் மகாராஜா அவர்கள் அவலம்பனமாயிருந்து ஸாதித்துகொடுக்கவேண்டுமென்றும், நீடூழிகாலம் மகாராஜா அவர்களும் அவர்களின் வம்சமும் இப்படியே வைதிகமார்க்க ஸம்ரக்ஷகர்களாய் இருந்துகொண்டு, கொச்சி ஸமஸ்தான ப்ரஜைகளுக்குமாத்திரமல்லாமல் அகில இந்திய மகாஜனங்களுக்கும் தர்ம அனுஷ்டான சிரத்தையும் ஆற்றலாதரமும் ஊட்டிக்கொண்டு இதர ஹிந்து அரசர்களுக்கும் ராஜ்ய காரியங்களிலும் தர்ம ஸம்ரக்ஷணத்திலும் வர்ணாச்ரம வ்யவஸ்தாபனங்களிலும் ஒரு உன்னத உதாஹரணம் (Example) ஆகவும் ப்ரகாசிக்க வேண்டுமென்று மனப்பூர்வமாக ஸகலதெய்வப்ரார்த்தனையுடனும் மங்களாசாஸனத்துடனும் தன்னுடைய விக்ஞாபனத்தை முடித்துக்கொண்டார். வந்திருந்த பண்டிதர்கள் எல்லோரும் மகாராஜா அவர்களுக்கு மங்களாசாஸனம் செய்தனர். இதர மெம்பர்களும் நல்வாழ்த்து கூறினர்.

மஹாராஜா அவர்களின் அபயப்ரதானம்.

மேற்கூறிய ப்ரஸாத அனுக்ரகங்களையும், நன்மொழிகளையும் மங்களாசாஸனத்தையும் நல்வாழ்த்தையும், மகாராஜா அவர்கள் பக்தி வினயத்துடன் திருமனஸில் திருவுள்ளங்கொண்டு, தாம் உள்ளவரையில் தன்னுடைய ஸமஸ்தானத்தில் தர்மானுஷ்டானங்களிலும் சாஸ்திர முறைகளிலும் குறைவு ஒன்றும் ஏற்படாமல் தான் ஜாகரூகராய் பத்தகங்கணராய் இருப்பதாயும், தனக்குப்பின் தன்னுடைய பின் வம்சஸ்தர்களும் அதே மாதிரி நடந்துகொள்வாரென்று தனக்கு பூர்ண நம்பிக்கை இருப்பதாகவும், அவ்விஷயத்தில் கோஷ்டியினருக்கும் தன் பிரஜைகளுக்கும் யாதொரு சந்தேகமும் இருக்கவேண்டியதில்லையென்றும், உத்ஸாஹத்துடன் ப்ரத்யுத்தரம் செய்து, கோஷ்டியினருக்கு ஸநாதனதர்ம ப்ரசார விஷயங்களில் தன்னால் இயன்ற ஸஹாயங்களை செய்துகொடுக்க தான் தயாராயிருப்பதாயும்கூறி, இவ்வளவு சிரமப்பட்டு தன்னைபார்க்கவந்த தூதுகோஷ்டியினருக்கு தன்னுடைய கிருதக்ஞதையும் வந்தனத்தையும் அளிப்பதாகக் கூறி, தன்னுடன் வந்த பரீக்ஷித் அரசரை இன்னும் கொஞ்சநேரம் கோஷ்டியினரிடம் கலந்து ஸம்பாஷிக்கும்படி ஆக்ஞாபித்துவிட்டு, முன்போல் தன் உத்யோகஸ்தர்களால் பின் தொடரப்பட்டு, கோஷ்டியினரிடம் விடைபெற்றுக்கொண்டு தன் அரண்மனைக்கு சென்றார்கள்.

பிறகு பரீக்ஷித்ராஜா கோஷ்டியினருடன் அனேக முக்கியமான விஷயங்களைப்பற்றி கலந்து 4-30 மணிவரை ஸம்பாஷித்து, மகாராஜா அவர்களுக்காகவும், தனக்காகவும், தன் வம்சஸ்தர்களுக்காகவும், தங்களுடைய ஸந்தோஷத்தையும், வணக்கத்தையும் விக்ஞாபித்து, வரவேற்பு விஷயங்களில் ஏதாவது குறைவுகளிருந்தால் அவைகளை க்ஷமிக்கக்கேட்டுக்கொண்டு விடைபெற்றுக்கொண்டு தன் அறைக்கு திரும்பிச்சென்றார்கள்.

இதர பேட்டிகள்.

அன்று ஸாயந்திரமே தலைவரும் கோஷ்டியினரும் இளைய ராஜா, அம்மராஜா, 4-வது இளவரசர் முதலிய அனேக ராஜவம்சஸ்தர்களை ஸந்தித்து சம்பாஷித்தனர். இவர்களும் மஹாராஜாவைப் போலவே உறுதிமொழி கூறினார்கள்.

மாலை உபன்யாஸம்.

30—8—37 மாலை 5-மணிக்கு திருப்பணித்துறை கோவில் ஸந்நிதியில் அவ்வூர் மகாஜனங்கள் அனைவரும் ஆயிரக்கணக்காகவும் ஒருங்கு திரண்டு, பூர்ண கும்பத்துடனும் வேத கோஷத்துடனும் ஸகல வாத்யங்களுடனும் கோஷ்டி தலைவரையும் அங்கத்தினரையும் வழியில் எதிர்கொண்டு அழைத்து, நிறுத்தி, உபசரித்து மாலைகள் சூட்டி சந்தன தாம்பூலங்கள் வழங்கி அவ்விடத்திலுள்ள அரசமரத்து மேடையில் விரித்திருந்த ரத்ன கம்பளங்களில் சற்று வீற்றிருந்து, அப்பெரும் கூட்டத்திற்கு உபதேசமொழிகள்கூறித்தான் அப்பால் போகவேண்டுமென்று வற்புறுத்தினர். அதற்கிணங்கி அங்கு இரண்டுமணி நேரம் தாமதித்து, தலைவரும் மற்றும் முக்ய ப்ரமுகர்களும், தர்ம விஷயமாய் உபன்யஸித்தார்கள். பிறகு அவ்வூர் வாஸிகளால் வந்தனமளிக்கப்பட்டு, வழிகொண்டு விடப்பட்டு, இரவு 7-மணிக்கு எர்ணாகுளம் ஜாகைக்கு போய்ச்சேர்ந்தார்கள்.

எர்ணாகுளம்.

31—8—37 காலை 8-மணிமுதல் 12-மணிவரையில் கோஷ்டியினர் திருப்பணித்துறை ஆலயத்தில் வழிபாடு செய்து விட்டு ஸர்க்கார் அதிகாரிகளால் கொச்சி துறைமுகத்திற்கு அழைத்து செல்லப்பட்டு அங்குள்ள விசேஷங்களை கண்டு களித்தனர்.

மாலை 3-மணிமுதல் 5-மணிவரை கொச்சி மகாராஜா அவர்கள் நடத்திய தர்பாரில்சென்று உபசரிக்கப்பட்டு அங்கு நடந்த வைபவங்களை கண்டு கேட்டு ஸந்தோஷித்து ஜாகைக்கு திரும்பினர்.

31—8—37 மாலை எர்ணாகுளம் ஸமூஹ மகாஜனங்களாலும் அதிகாரிகளாலும் ஒருபொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அவர்கள் கோஷ்டிதலைவரையும் அங்கத்தினர்களையும் தங்கின ஜாகையில் பூர்ண கும்ப வேதகோஷஉபசாரங்களுடன் ஸந்தித்து பொதுஜனங்களுக்கு தர்மவிஷய உபந்யாசங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். அப்படியே அன்று தலைவர் ஸ்ரீ நடேசய்யர் ராவ்பகதூர் பரண்டே, பண்டிதராஜ கிருஷ்ணமாசார்யஸ்வாமிகள் ராவ்பகதூர் சிறுவேலி ஜமீன்தார் முத்துசெட்டியார் முதலியவர்கள் வெகு அழகாயும், உருக்கமாகவும் உபந்யஸித்து, கொச்சி மகாராஜாவின் ஆஸ்திக்யம் ச்ரத்தை முதலிய அபூர்வ குணங்களை விளக்கித்து கேட்போர் மனமகிழச் சொற்பொழிவு பொழிந்தனர். இரவு 9-மணிக்கு கூட்டம் குதூஹலத்துடன் கலைந்தது.

மகாராஜா தனிப்பேட்டி.

1—9—37 காலையில் கோஷ்டித்தலைவர் ராவ்ஸாஹேப் நடேசய்யரவர்களும் Secretary ஸ்வாமிநாதசாஸ்திரிகள் அவர்களும் மகாராஜா அவர்களை பேட்டிகண்டு, சில முக்ய விஷயங்களைப்பற்றி ஸம்பாஷித்து, மகாராஜா அவர்களின் அபிப்ராயங்களை தெரிந்துகொண்டு, மகாராஜா அவர்களிடம் விடைபெற்று, மகாராஜா அவர்களுக்கு கோஷ்டியின் ஸந்தோஷத்தையும் கிருதக்ஞதையும் ஸமர்ப்பித்து, ஜாகைக்கு திரும்பிவந்தனர். அங்கே பிரிட்டிஷ் கொச்சியிலிருந்து சில பிரமுகர்கள் வந்து கோஷ்டியினரை தங்கள் இருப்பிடத்திற்கும் வந்து, சில உபன்யாஸங்கள் செய்துவிட்டு அவர்களின் வரவேற்பையும் ஏற்றுக்கொண்டு தான்போகவேண்டுமென்று தலைவரை மிகவும் நிர்ப்பந்தித்தனர். ஆகிலும் அன்று மாலை திருச்சூரில் ஏற்கனவே ஒரு ஸம்மேளனம் ஏற்பாடுசெய்யப்பட்டு கோஷ்டியினர் அங்குவந்து சேருவதாய் வாக்தானம் செய்திருந்தபடியால், இடையில் கொச்சிக்கு வருவதற்கு ஸாவகாசம் இல்லாததற்காக மன்னிப்பு கேட்டுக்கொண்டு, கூடிய சீக்கிரம் மறுபடியும் வந்து அவர்களின் வேண்டுகோளை நிறைவேற்றிவைப்பதாக தலைவரால் கூறப்பட்டது. அதே ஸமயம் மகாராஜா அவர்களுடன் கோஷ்டியினர் சேர்ந்து புகைப்படம் மாலை 5-மணிக்கு எடுத்துக்கொள்ளலாம் என்ற அனுமதியும் திவான ஆபீஸிலிருந்து சுமார் 12-மணிக்கு கிடைத்தது. இதற்கும் அவகாசம் இல்லாததினால் திவான் அவர்களின் பிரைவேட் காரியதர்சியிடம் கோஷ்டியினரின் மனவருத்தத்தை தெரிவித்து, மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டு, திரும்பி மதுரைக்கு கோஷ்டியினர்புறப்படுவதாக விடைபெற்றுக்கொள்ளப்பட்டது.

திருச்சூர்.

1-9-37மாலை திவான் அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு, ரோட் மார்க்கமாய் திருச்சூருக்கு கோஷ்டியினர்வந்து சேர்ந்தனர். அவ்வூரில், கேரளதர்மஸ்தாபனஸபை சார்பாக அதன் Secretary குஞ்சுண்ணி அச்சனும், பிரஸிடெண்டு Retired Judge மகா-ள-ள-ஸ்ரீ வைத்தியநாதய்யர் அவர்களும் அவ்வூர் வடக்குநாதர் கோவில் முன்புறமுள்ள அச்வத்த விருக்ஷமேடையை சுற்றி, ஒரு ஸம்மேளனம் ஏற்படுத்தியிருந்தனர். அவ்விடத்திற்கு தூதுகோஷ்டி தலைவரும் அங்கத்தினரும் அவ்வூர் பிரமுகர்களால் உபசாரத்துடன் அழைத்து செல்லப்பட்டு, மாலைகள் சூட்டப்பட்டு, ஒரு வரவேற்பு பத்திரமும் அச்சபை சார்பாக வாசிக்கப்பட்டு, தலைவரிடத்திலும் ஸங்கத்தினரிடத்திலும் அங்கத்தினரிடத்திலும் அளிக்கப்பட்டது. பிறகு அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி உபன்யாஸங்கள் செய்யப்பட்டன. தலைவர் தூதுகோஷ்டி விவரங்களைப்பற்றியும் கொச்சி மகாராஜா அவர்களுடைய ஔதார்யம் தர்மசிரத்தை பிரஜைகளுக்கு அபயப்ரதானம் முதலியவைகளைப்பற்றி சுருக்கமாய் கூறினார். நாகபுரி Retired Judge Rao Bahadur Parande அவர்கள் அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் அமைப்பு, நோக்கம், வேலை முதலியவைகளைப்பற்றி பேசினர். டெபுடேஷன் காரியதர்சி ஸ்வாமிநாத சாஸ்திரிகள் அவ்வூர் வாஸிகளுக்கு கொச்சி ஸம்ஸ்தானத்தில் அந்தப் பிராந்த்ய புண்யவசத்தால் லப்தமாயிருக்கும் காலடி க்ஷேத்ரத்தின் மகிமையும், அங்கு அவதரித்து, சீர்கெட்டு வைதிக மதத்துக்கு ஏற்பட்டிருந்த இடையூறுகளைக் களைந்து மறுபடியும் ஷண்மதஸ்தாபனம் செய்த ஸ்ரீ ஆதிசங்கரபகவத்பாதாள் அவர்களின் மகிமையையும் அவர்களின் உபதேசங்களையும் எப்பொழுதும் உள்ளத்தில் மறவாது சிந்தனைசெய்து, நியமந்தவறாது குருகுலவாஸம் செய்து, ஸகல ஹிந்துகலைகளையும், மறுபடியும் அனுபவ ப்ரஸாரமாய் ஸித்திகரித்துக்கொண்டு, தேச ஸேவைசெய்யும் பாக்யம், அந்த க்ஷேத்ர வாஸிகளுக்கே இருக்கிறதென்பதை எடுத்துக் காட்டினார். மதுரை வக்கீல் வெங்கடாசலய்யரும் தர்மானுஷ்டானத்தை விடாமல் செய்துவரும்படி வற்புறுத்தினார். வந்தனோபசாரத்துடன் இரவு 8-மணிக்கு கூட்டம் மங்களத்துடன் கலைந்தது.

குருவாயூர் அப்பன் தர்சனம்.

2—9—37 காலையில் கோஷ்டியினர் குருவாயூர் க்ஷேத்ரம் போய் குருவாயூர் அப்பன் தர்சனம் செய்துகொண்டு திரும்பி திருச்சூர் வந்து போஜனம் செய்துகொண்டு ரோட்டுமார்க்கமாய் திரும்பி அன்று இரவு 8-மணிக்கு மதுரை வந்துசேர்ந்தார்கள்.

சுபம்.

குடந்தையில் அத்வைத ஸபை.

ஆலயப்பிரவேசக்கண்டனம்.

கோச்சி மஹாராஜாவுக்குப்பாராட்டு.

கும்பகோணத்தில் பல ஆண்டுகளாக நடந்துவரும் அத்வைத ஸபையின் இவ்வருஷ வித்வத்ஸதஸ் ஸ்ரீஜகத்குரு ஸ்வாமிகள் அனுக்ரஹத்தால் சிறப்பாக நடந்துமுடிந்தது. உள்ளூர் வெளியூர்களிலிருந்து அநேகவித்வான்கள் விஜயமாகியிருந்தார்கள். பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் சரீர அசௌகர்யத்தினால் இவ்வருஷம் ஸபைக்கு வரமுடியாமல் போனது ஓர் குறையாகக் காணப்பட்டது. ஏற்கனவே ஆர்ய தர்மத்தில் குறிப்பிட்டிருந்தபடி பரீக்ஷைகளும், உபன்யாஸங்களும் வெகு நன்றாக நடந்தன. திங்கள்கிழமை காலை 9 மணிக்கு ஸம்பாவனைகள்செய்யப்பட்டன. உள்ளூர் கஸ்பா முன்ஸீப் ஸ்ரீமான் பரமேச்வர அய்யரவர்கள் அந்தஸமயம் அக்ராசனம் வஹித்து ஸம்ஸ்கிருத பாஷையிலேயே ஓர் பிரஸங்கம் செய்தார். இவ்வருஷ ஸம்பாவனைத்தொகை குறைக்க நேரிடுமோவென்று நிர்வாஹிகள் ஸந்தேஹித்திருந்தனராயினும் அந்த நிலைமை ஏற்படாமல் எப்போதும் போலவே ஸம்பாவனை செய்யப்பட்டதாகத்தெரிகிறது. கொச்சி மஹாராஜா அவர்களிடமிருந்தும் இவ்வருஷம் பண உதவி கிடைத்தது. ஸபாதிகாரிகளும், முக்யமாகக்கார்யதரிசி ஸ்ரீமான் எம்.கே. வைத்யநாதய்யரவர்களும் ஸபை நன்கு நடக்கவேண்டியதற்கு விசேஷஊக்கமும் எடுத்துக் கொண்டது பாராட்டத்தக்கது.

வித்வத் பரிஷத்.

இவ்வருஷம் அத்வைத சபையில், தற்கால நிலைமையை அநுசரித்து அநேகப்பொதுதர்ம விஷயங்களும் சர்ச்சை செய்யப்பட்டன. ஆலயப்பிரவேசம், ராஜா காலஸ்ய காரணம் என்றவை போன்ற விஷயங்களைப்பற்றி பிரஸங்கங்களும் நடைபெற்றன.

ஞாயிற்றுக்கிழமை பொது தர்ம விஷயங்களை சர்ச்சை செய்வதற்கென்றே இரு வேளையிலும் ஓர் பரிஷத் நடத்தப்பட்டது. இதில், தக்ஷிணாயனத்தில் பிரதமவிவாஹம் நடத்தலாமா என்ற விஷயத்தைப்பற்றி விசேஷமாக வாதம் நடந்தது. ஆபஸ்தம்ப கிருஹ்யஸூத்ர வியாக்யானத்தை அநுசரித்துச்சிலர் இதற்கு அநுமதி யிருப்பதாக அபிப்ராயப்பட்டனர். ஆனால் பெரும்பாலோரான பண்டிதர்கள் அந்த வியாக்யானத்தின் கருத்தை விளக்கி தக்ஷிணாயன பிரதம விவாஹத்திற்கு எந்த சாஸ்திரத்திலும் அநுமதி கிடையாதென்றும், வைத்யநாத தீக்ஷிதாதிகள் இதைப் பலமாக ஆக்ஷேபித்திருப்பதாயும் பலமாக எதிர்த்துப் பேசினார்கள். விவாதம் ஒத்திவைக்கப்பட்டது.

ஆனால் தீண்டாதார் ஆலயப்பிரவேச விஷயத்தைப்பற்றி சபையில் ஏகமனதாக விவாதம் நடந்தது. அநேக பண்டிதர்கள் சுருதி ஸ்மிருதி நிருபண மூலமாக அது அசாஸ்திரீயமென்று பலமாகக் கண்டித்தார்கள்.

பின்பு அங்கு கூடியிருந்த பரீக்ஷாதிகாரிகளுள்பட எல்லாப்பண்டிதர்களும் ஆலயப்பிரவேசம் அசாஸ்திரீயமென்கிற தீர்மானத்தில் கை எழுத்துப்போட்டார்கள்.

கொச்சி மஹாராஜாவைப்பாராட்டியும், ஆலயப்பிரவேசக்கிளர்ச்சியைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஒரு நிருபர்

அத்வைத ஸபை அக்ராஸனாதிபதியின் உபன்யாஸம்.

ஷை அத்வைதசபையில் 6-8-37ல் நடைபெற்ற ஸம்பாவனைக்காலத்தில் அக்ராஸனம் வஹித்த உள்ளூர் ஜில்லா முன்ஸீப் பிரம்மஸ்ரீ A. பரமேச்வரய்யர் அவர்கள் ஸம்ஸ்க்ருத பாஷையில் செய்த உபன்யாஸத்தின் ஸாரமாவது:—

ஸபையில் வீற்றிருக்கும் பெரியோர்களுக்கும் அனந்தகோடி நமஸ்காரம். என்னை இச்சபையில் பிரிஸிடெண்ட் என்று சொல்லுவார்கள். பிரிஸிடெண்டை அத்யக்ஷன் என்றும் சொல்லுவார்கள். அத்யக்ஷன் என்பதினால் அவர் கண்களுக்குத் தான் வேலை ஏற்படும். பிரிஸிடெண்டை அதிஜிஹ்வன் என்று சொல்வதில்லை. ஆகையால் என் கண்களுக்கு மட்டும் தான் வேலை, நாவுக்குவேலை இல்லை என்று நினைத்தேன். இப்பொழுது இச்சபையின் காரியதரிசிகள் பேசவேண்டுமென்று சொல்லுகிறார்கள். நான் என்ன விஷயத்தைப்பற்றி பேசுவது? என் போன்றவர்களுக்கு காலையில் எழுந்தால் மாலை வரையில் கசப்பு கசப்பான விவகார விஷயங்கள் தான். தள்ளுபடி செய்யப்பட்ட மனைவி ஜீவனாம்சத்துக்கு விவகாரம் செய்கிறாள். அதில் அவள் புருஷன் கண்டபடியெல்லாம் அநீதியாய் ஆபாஸமான வாதம் செய்கிறான். பிள்ளையற்ற விதந்து மதனி மச்சினன் பேரிலும் பிள்ளையற்ற விதந்து நாட்டுப் பெண் மாமனார் பேரிலும் அன்ன வஸ்த்ரத்துக்கு விவகாரம் செய்கிறார்கள். இதிலும் அநீதியான ஆபாஸமான வாதங்கள் தான். வட்டி 100க்கு 25, 30,50,75 வரையில் மிகவும் ஜாஸ்தியாக போகிறது. நித்யம் பெந்தகம், போக்யம், அக்ரம ப்ரவேசம், இஞ்செங்க்ஷன், வாரண்டு, இப்பேற்கொத்தசங்கதிகளில் உழல்பவன் வேதாந்தம் என்ன பேசப்போகிறேன்? பேசினாலும் இந்தச் சபையில் அது கொல்லத் தெருவுக்கு ஊசி விற்கப் போவதுபோலவும் ஸமுத்திரகரைக்கு உப்பு விற்கப் போவதுபோலவும் ஆகும்.

ஆனாலும் நான் பேசாமல் இருக்கமுடியவில்லை. என்னதான் பேசுவது? முதல்முதலில் இந்த மகாஸபை செய்த பேர் உபகாரத்துக்கு ஆயிரம் தடவை நன்றி சொல்லிக்கொள்வது தான். பிறகு தென்னிந்தியாவில் பிராமணர்களாகவிருக்கும் நாம் இந்த ஈனதசைக்கு வந்துவிட்டோமே. இதற்கு என்ன பரிகாரம் என்று ஸ்ரீ ஜகத்குரு ஸன்னிதியில் மகாபண்டிதர்களான உங்களைக் கேட்டுக் கொள்வதுதான். பிராமணர்கள் என்று பேரைவைத்துக்கொண்டிருக்கும் நாம் என்ன பிராமண செய்கையை செய்கிறோம். காலை முதல் மாலை வரையில் பணம் பணம் பணம் என்றுதான், நினைப்பு, பேச்சு, காரியம். மனஸா, வாசா, கர்மணா, பணம். பணம் ரூபாய், அணா, பைசா தான் திரிமூர்த்திகள். பணம் வேண்டும். பங்களா வேண்டும், மோட்டார் வேண்டும்; பரிசாரகன் வேண்டும் என்கிறார்கள் புருஷர்கள். பெண்பிள்ளைகளோ வைர நகைகள் வேண்டும், பட்டுகள் வேண்டும், பிரதாபமாக இருக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள். பிள்ளைகளோ அப்படியே. பெண்களும் தாயாரைப் போலவே. மாப்பிள்ளைகளோ ஆயிரம் பதினாயிரம் வரதக்ஷிணை கேட்கிறார்கள். இந்தப் பண ஜெபத்தைத் தவிர வேறு ஜெபம் இல்லை.

இதை நான் ஒரு பெரிய கஷ்டமாகவும் வியாதியாகவும் கருதுகிறேன். இந்த வியாதிக்கு மருந்து இல்லையா! நம்மிடத்திலேயே இருக்கிறது. அதைத்தான் संसारामयभेपजं என்று சொல்லுகிறார்கள். ஆனால் அதை நாம் தெரிந்துகொள்ளவில்லை. காலையில் நம் பெரியோர்கள் நாம ஸங்கீர்த்தனம் செய்யும் காலத்தில்,

आर्तत्राण परायणस्सभगवन् नारायणो मे
गतिः ॥

இந்த நாராயணன் எங்கும் நிறைந்து நம்மை அனுக்ரஹிக்க காத்துக்கொண்டிருக்கிறார். இதற்கு சாக்ஷிகள்,

प्रह्लादश्च विभीपणस्सकरिराट् पांचाल्यहल्या
ध्रुवः ।

அவனல்லவோ அர்ஜுனன் கேட்டகேழ்விக்கு

मां हि पार्थ व्यपाश्रित्य येपिस्युः पापयोनयः ।
नहिकल्याणकृत् कश्चित्दुर्गतिं तातगच्छति ॥
मन्मनाभवमद्भक्तो मद्याजी मां नमस्कुरु ॥
सर्वधर्मान् परित्यज्य

என்று சொல்லிய வார்த்தைகள் என்றும் நிஜம் அல்லவா. அவை நம்மிடமே இருக்கின்றன.

ஆனால் அதை கவனிக்காமலிருக்கிறோம் இப்பேற்கொத்த விஷயங்களை நாம் ஆராய்ந்து பார்க்கவேணும். வேதங்களிலும் புராணங்களிலும், சாஸ்திரங்களிலும், இருக்கும் விஷயங்களை அறிந்துகொள்ளவேண்டும். ஆனால் ஏட்டுச் சொரைக்காய் கறிக்காகாது. அந்த உபதேசப்படிக்கு நாம் நடக்கவேணும் பகவான்கீதையில் येमेमतमिदं नित्यमनुतिष्ठन्ति என்றார். ஆகையால் அனுஷ்டானந்தான் பெரியது. அனுஷ்டானமில்லாத வீண்பேச்சு பிரயோஜனமில்லை. அஹிம்ஸையை அனுஷ்டிக்கவேண்டும் சத்தியத்தையனுஷ்டிக்கவேண்டும். அஸ்தேயத்தையனுஷ்டிக்கவேண்டும். பிரம்மசர்யத்தையனுஷ்டிக்கவேண்டும். தவம் செய்யவேண்டும். கருணை, தயை, முதலான மனோபாவனைகளை [illegible] வேண்டும். ராகத்வேஷம், காமம், க்ரோதம், முதலியவைகளை ஒழிக்கவேண்டும். இதற்காக பெரிய பெரிய புஸ்தகங்களை படிக்கவேண்டியதில்லை. நமது ஸ்ரீ ஜகத்குரு ஆதிசங்கரர் உபதேச பஞ்சகம் என்று ஐந்து சுலோகங்களில் எழுதியிருக்கின்றார். (மேற்கண்ட உபதேச பஞ்சகத்தை நமது வாசகர்களின் சௌகரியத்தை முன்னிட்டு தனி ஸப்ளிமெண்டாக அச்சிட்டு அனுப்பியிருக்கிறோம்.) அதை நாம் கற்றுணர்ந்து அதன்படி நடப்போமாக. அப்படி நடப்போமென்று இந்த குரு ஸன்னிதானத்தில் ஒரு பிரதிக்ஞைசெய்வோமாக. அப்படி செய்கிற பிரதிக்ஞையை நிறைவேற்ற எல்லாம்வல்ல இறைவன் நமக்கு சக்தியையும் தைர்யத்தையும்மனோபாவத்தையும் அளிப்பாராக. இச்சபையில் ஆரம்பமுதல் இதுவரையில் இங்குநடைபெற்ற கர்மங்கள் காரியங்கள் அனைத்தையும் எவனை பாரமார்த்திக அவஸ்தையில் நாம் பரப்ரம்மம் என்று அனுபவிக்கிறோமோ வியவகார அவஸ்தையில் எவனை நாம் ஸர்வேச்வரன் என்று வணங்குகிறோமோ எவன் குருமூர்த்தி ஸ்வரூபியாய் நமது பரமாசார்ய ஸ்வரூபியாய் ஞான ஒளியை பரப்புகிறானோ, எவன் இங்கு வீற்றிருக்கும் ஸபாவாசிகள் ஸ்வரூபியாய் ஸர்வாந்தர்யாமியாய் விளங்குகிறானோ அந்த ஸ்ரீ ஹரி ஏற்றுக்கொள்ளட்டும்.

ஓம். தத்ஸத், ப்ரம்மார்ப்பணமஸ்து.

வாரக்குறிப்புகள்.

ஓர் துர்மந்திரி:— புதிய அரசியலில் மந்திரிகளே நமக்கு ராஜா. நமது புண்யத்தால் நல்லவர் கிடைத்தால் நன்மை. துர்மந்திரிகள் சிலவிடத்தே தோன்றி தர்மத்ரோகம் தேசத்ரோஹம் செய்ய அஞ்சுவதில்லை. ஒரிஸா மந்திரி நமது சற்பாசிகள் வெள்ளை ஸ்திரீயைப் போல் நாடு நாடாக சுற்றவேண்டும் என்கிறார்.

நோக்கம் ஸரி:— சேலத்தில் ஹிந்து ஆலயங்களைப் பரிபாலிக்க ஹிந்துமத பரிபாலன சங்கமொன்று தோன்றி உளது. பல ஜீவநாடியற்ற சபைகள் போலில்லாமல் அது சுறு சுறுப்பாக தர்மகைங்கர்யம் செய்யமுன்வரவேண்டும். அடியோடு (சண்டாளர்களை உள்ளே விட்டு) கோவிலைக்கெடுக்கும் கோஷ்டியைச் சார்ந்தவர் இதில் சேராதது ஓர் பாக்கியமே.

சிறையிலும்செய்க!! குஷ்டரோக ஆஸ்பத்திரியில் ஹிந்துக்களும் மதப்பிரசாரம் செய்யலாமென்று புதிய உத்திரவிற்கிணங்க ராமகிருஷ்ண மடத்தவர் அங்கு பஜனை மடம் கட்டவும் மதப்பிரசாரம் செய்யவும் முன் வந்துள்ளார். சிறைச்சாலைகளிலும் அரசாங்கமே ஹிந்து தர்ம பிரசாரத்திற்கு ஏற்பாடு செய்தால் களவு, பொய், கொலை முதலிய குற்றம் குறையும்.

உண்மை என்னவோ? காசியில் பெண் மாணவர்களுக்கு ஆண் மாணவர்கள் ஏதோ அவமதிப்பை உண்டு பண்ணியதால் வேலை நிறுத்தம் நடக்கிறது! எந்தவகையான அவமதிப்பென சொல்லாமலே விளங்குமல்லவா! வயதான ஆண் பெண்களை ஒன்று சேர்கலாகாதென்று அறிவு எப்போ உதிக்கும்?

டில்லி மாடறுக்கும் தொட்டி! இது ஒரு ஓயாத சண்டையாகி விட்டது. பொதுவாக நம் தேசத்தை விட வட தேசத்தில் ஜைநர் அதிகம். ஆதலால்கிளர்ச்சி நடக்கிறது!! உண்மையான தர்மாபிமானத்துடன் இது நடக்குமானால் அதற்கு ஸநாதநிகள் முன்னேநிற்பர். எப்படியோ இதை நிறுத்துவது நலமே?

புதுச்சேரியும் கெட்டதா? வைதிகர்கள் தங்களுக்கு சாரதாச்சட்டத்தின் மூலம் ஆபத்து வாரதபடி பாண்டிச்சேரியை உபயோகித்தனர். அங்கும் இந்த சாரதாச்சட்டம் வந்துவிட்டது? ஆனால் தர்மாபிமானிகளுக்கு எங்கும் பயமில்லை!!

அவமரியாதையான பேச்சு!! சட்டசபையில் வரவு சிலவு வாதத்தில் ஸர். கே ரெட்டி ஸ்ரீராமர் மதுபானம் செய்ய வில்லையா என்று கேட்டார்! அதற்கு தக்கபடி பதில் சொல்லாமல் விட்டு விட்டனர்!! முதலில் விஷயமறியாமல் தற்கால கள்குடியரோடு பகவானை ஒப்பிட்டுப்பேசியதை அச்சபை கண்டிக்க முன்வாரதது வருந்தத்தக்கது! ஓர் ஆஸ்திகர் அங்கு இல்லாது போய் விட்டனர்.

குலஸ்திரீகளுக்கு நாட்டியப் பயிற்சி

டாக்டர் முத்துலக்ஷ்மிரெட்டி குடித்தனப் பெண்களுக்கு அபிநய சாஸ்திரப் பயிற்சி வேண்டாமென்றும் அது அவர்கள் நடத்தையை கெடுக்கும் என்றும் ஆக்ஷேபிக்கிறார். ஸ்ரீமான் E. கிருஷ்ணய்யரோவென்றால் அபிநயத்திற்கும் நடத்தைக்கும் ஸம்பந்தமில்லையென்றும் தாஸிவர்க்கத்தில் சிலபேர்களுக்கு மாத்திரம் அபிநயம் தெரிந்திருப்பது போதாதென்றும் நம்வீட்டுப் பெண்கள் அபிநய பயிற்சி பெறவேண்டுமென்றும் சொல்லுகிறார்!!!

M. K. V.

வாழைகளுக்கு அதிகத்தீர்வை.

ஸர்க்கார் நோட்டீஸ்.

நமது மாகாணத்தில் ஏற்கனவே வாழைகளுக்கு ஏகருக்கு 17ரூ வீதம் வரி விதிக்கப்பட்டதும், பிறகு கிளர்ச்சியின் பயனாக அது குறைக்கப்பட்டதும் தெரிந்த விஷயம்.

தற்போது மீண்டும் 17ரூ வீதம் வரிவிதிக்கப்பட்டதாகச்சென்ற வார கெஸட்டில் ஸர்க்கார் நோட்டீஸ் பிறப்பித்திருக்கிறார்கள். காங்கிரஸ்மந்திரிகள் விவசாயிகளின் வரிபளுவைக்குறைக்கப்பாடுபடுவதாகச் சொல்லுகையில் இந்த அநீதியான வரி உத்திரவு எப்படி வெளியாயிற்றென்பது தெரியவில்லை. ஒருக்கால் இது இடைக்கால மந்திரிகளின் கைங்கர்யமாயிருக்கலாம். ஆயினும் தற்போதைய மந்திரிகளின் கவனம் பெறாமல் இது எப்படி பிரசுரமாகியதோ? அல்லது காங்கிரஸ் மந்திரிகளுக்கும் இது இஷ்டமா? மிராசுதார்களை இது ஆழம் பார்க்கும் காரியமா? ஒன்றும் புரிய வில்லை. மிராசுதார்களும் மந்திரிகளும் இதுவரை இந்த நோட்டீஸைப்பற்றி கவனித்ததாகத்தெரிய வில்லை. இது உடனே யாவராலும் கவனிக்கப்படுமென்று நம்புகிறோம்.

ஒரு வியவஸாயி.

கொச்சி தேசத்தார்.

காச்மீரத்திலும், இந்தியாவில் மற்ற பாகத்திலும் ஒரு மதத்தைச் சார்ந்தவர்களுக்கும் மற்றொரு மதத்தைச் சார்ந்தவர்களுக்கும் மனக்கசப்பும் சண்டையும் உண்டாகின்றன. கொச்சியிலோ பல மதஸ்தர்களிருப்பினும் அவர்கள் ஒற்றுமையாகவும், சச்சரவின்றியு மிருக்கிறார்கள். அது ஏன்? கொச்சி திவான், கொச்சிவாஸிகள் எந்த மதமாயினும் ஒரே பாஷை பேசுகிறார்கள். ஒரே ஆளுகைக்குட்பட்டிருக்கிறார்கள். ஒரே நடை மனோபாவம் (Culture) உள்ளவர்களாக இருக்கிறார்கள். இவைகள்தான் அவர்களின் ஒற்றுமைக்குக் காரணம் என்கிறார். இந்தமாதிரி அனேக ஸமஸ்தானங்களிலிருந்தும் ஒற்றுமை ஏற்படவில்லை. ஆனதால் ஷை காரணங்கள் போதுமானவைகளல்லவென்று புலப்படுகிறது. மதராஸ் மெயில் பத்திராதிபர் நன்குணர்ந்து வேறொரு காரணம் தெரிவிக்கிறார். அதாவது எவ்வித மனுஷப்ரவிர்த்திகளிலும் மதத்தை பூர்ணமாய் அவலம்பித்து கொச்சி மஹாராஜா அவர்கள் நடப்பதே. (Unwavering belief of the ruler in the value of religion in daily life.) மகாராஜா அவர்கள் மத விஷயத்தில் வேஷதாரியல்ல. மதத்தில் அவருக்கு உண்மையான முழு நம்பிக்கை அவருடைய மதப்பற்றுதல் அவர் கீழ் வாழும் பிரஜைகளுக்கும் அவர்கள் அறியாமலே ஏற்படுகிறது. இதுதான் காரணம் என்கிறார். இது ஒப்புக்கொள்ளக்கூடியதாயிருக்கிறது. பிரிட்டிஷ் இந்தியாவிலும் பல சுதேச ராஜாங்கத்திலும் இல்லாத ஒற்றுமை கொச்சியில் காணப்படுவதினால் மற்ற விடங்களில் தென்படாத காரணம் கொச்சியில் காணவேண்டும். ஸமூகத்தை இணைப்பதில் மதத்திற்கிருக்கும் வலிமையை நம் தேசாபிமானிகள் உணரக்கூடாதா?

M. K. V.

புஸ்தக வரவு.

அதிகரண சதுஷ்டயீ.

மைலாப்பூர் ஸம்ஸ்கிருத கலாசாலை பிரின்ஸிபாலாகிய கருங்குளம், மஹாமஹோபாத்யாய பிரம்ம ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகளால் இயற்றப்பட்ட மேற்கண்ட புஸ்தகம் வரப்பெற்றோம். இதைப்பற்றிய விமர்சனம் அடுத்த சஞ்சிகையில் வெளியாகும்.

யோக சாஸ்திர மஹிமை.

குடந்தையில் பிரஸங்கம்.

மைஸூரைச்சேர்ந்த ஸ்ரீமான் ரங்கநாததேசிகாசாரியார் என்பவர் நமது பிராசீன யோகசாஸ்திர மஹிமைகளைப்பற்றியும், அதில் சொல்லப்பட்டுள்ள சில முறைகளைப்பற்றியும் டவுன் ஹால் லைப்ரெரி மண்டபத்தில் 9உ யன்று ஒரு அரிய உபந்யாசம்செய்ததுடன் யோகசாஸ்திரப்படி சில ஆஸனங்களையும் செய்துகாட்டினார். நகரத்திலுள்ள பல பிரமுகர்கள் இதற்கு ஏராளமாகவிஜயம்செய்திருந்தார்கள். ஸ்ரீமான் ஆசாரியருடைய முறைகளைப்பார்த்து யாவரும் அதிசயமடைந்தனர்.

அவர் இவ்வூரில் தங்கி யோகாப்பியாஸ முறைகளை அறிய விரும்புவோருக்குப்பாடம் கற்பிக்க தயாராயிருப்பதாயும் இந்த ஸமயத்தை யாவரும் பிரயோஜனப்படுத்திக்கொள்வது அவச்யமென்றும் ஸ்ரீமான் எம். கே. வைத்தியநாதய்யர் அவர்கள் கூறினார்.

ஸ்ரீமான் அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியாரால் உபசாரவார்த்தைகள் கூறப்பட்டு ஸபை கலைந்தது.

ஒரு நிருபர்.

தஞ்சைஜில்லாபிராம்மணமகாஸபை.

ஓர் உபந்நியாஸம்.

கும்பகோணத்தில் 13-9-37ல் கோபாலராவ் நடு ஹாலில் நமது நகர் டிஸ்டிரிக்டு முன்ஸிப் பிரும்ம-ஸ்ரீ பரமேச்வரய்யர் அவர்கள் தென்னிந்திய ஹிந்துக்களின் தற்கால நிலைமையைப் பற்றி ஒரு அரிய சொற்பொழிவு செய்தனர். அவர் நம்முடைய தர்மத்திற்கு அடிப்படையான நமது காயிக மானஸிக ஆத்யாத்மிக ஸம்ஸ்காரங்களை ஹிந்துக்கள் எல்லோரும் நழுவவிடாமல் யாவதாயுஷம் அப்யஸித்துப்பயின்றும், காயத்ரீமகாமந்திரத்தை நன்றுதெரிந்து ஜபித்து உபயோகப்படுத்திக்கொண்டும் நம்முடைய பலம், வீர்யம், வர்ச்சஸ் ஐசுவர்யம் முதலிய ஸகல செல்வத்தையும் அடையலாமென்றும் மிக்க ஊக்கத்துடனும் வணக்கத்துடனும் விரித்துரைத்து சபையோரை வற்புறுத்தினர். இப்பெரியோரை இதைத் தொடர்ந்து மற்றும் பல உபந்யாஸங்களும் தஞ்சை பிராம்மண மகாசபை சார்பாக செய்யும்படி ஸபை காரியதரிசி கேட்டுக்கொண்டபடி மேல் உபந்யாஸங்களும் அதே இடத்தில் இந்த வாரம் நடைபெறும்.

எஸ். ஸ்வாமிநாத சாஸ்திரி,
காரியதரிசி.

உபந்யாஸங்கள்.

தஞ்சை ஜில்லா பிராம்மண மகாசபை ஆதரவின்கீழ் கும்பகோணம் டிஸ்டிரிக்டு முன்ஸிப் பிரும்ம-ஸ்ரீ பரமேச்வரய்யர் அவர்கள் அடியிற்கண்ட உபந்யாஸங்களை கோபாலராவ் நடு ஹாலில் மாலை 6-30 மணிக்கு செய்வார்கள். யாவரும் வந்து கௌரவிக்கும்படி கோருகிறேன்.

16—9—37 வியாழன் மாலை 6-30க்கு விநாயகசதுர்த்தி வைபவம். 18—9—37 சனி 6-30-க்கு பகவத்கீதைஸாரம். 19-8-37 ஞாயிறு 6-30க்கு ஹிந்துக்களின் நித்யாஹ்நிகம்.

எஸ். ஸ்வாமிநாத சாஸ்திரிகள்,
காரியதரிசி.

நில வரி வஜா.

பிரதம மந்திரிக்கு வேண்டுகோள்.

சென்னை பிரதம மந்திரிக்கு முடிகொண்டான் ஸ்ரீமான் வி மகாதேவய்யர் அடியிற்கண்ட விக்ஞாபனத்தை அனுப்பியிருக்கிறதாக நமக்கு அறிவிக்கிறார்:—

நல்லகாலம்.

இந்தியாவிலுள்ள 11 மாகாணங்களுள் ஆறு மாகாணங்களில் காங்கிரஸ் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டது தேசமக்கள் எல்லோருக்கும் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது. இந்த மாகாணத்தில் நிர்வாகப் பொறுப்பை ஏற்பதற்கு உங்களைக்காட்டிலும் அதிகத் தகுதியும் யோக்கியதையுமுள்ளவர்கள் கிடைப்பதில்லை.

ஜனங்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான கவர்ன்மெண்டால் செய்யப்பட வேண்டிய விஷயங்கள் பலவும் வெகுகாலமாக பாக்கி தங்கியிருக்கின்றன. 1937-38-ம் வருஷத்தின் பின்பாதி வரவு செலவு திட்டத்திற்கு நீங்கள் ஸ்வரூபத்தைக் கொடுத்து வரும் இந்தச் சமயத்தில், அவற்றில் சிலவற்றை உங்களுக்கு விக்ஞாபனம் செய்துகொள்ள விரும்புகிறேன்.

இந்த வருஷத்தின் பிற்பாதிக்கு சொற்ப அவகாசத்திற்குள் நீங்கள் வரவு செலவு திட்டத்தைத் தயாரிக்கவேண்டி வந்துவிட்டதால் ஜனங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் எல்லாக் காரியங்களையும் உடனே செய்வதற்கில்லை. ஆனால் புதிய, விரும்பத்தக்க வழிகளில் சிலபடிகளேனும் ஏறிச்செல்லலாம்.

வருமான இனத்தில் ஜனங்களை அதிகமாகப் பாதிக்கும் நிலவரியைக் குறைக்க வேண்டியது அத்யாவசியமானதாக இருக்கிறது.

ஜனங்களின் வாழ்வுக்கு இன்றியமையாதவை உணவும் உடையுமே. பிரிடிஷ் ஆட்சி இந்தியாவில் ஏற்படுவதற்குமுன் இவ்விரண்டும் நாட்டில் பூரணமாக இருந்துவந்ததோடு அன்னியதேசங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. இப்போது உடைகளுக்கே அந்நிய நாடுகளை நம்பியிருக்கவேண்டிய நிலைக்கு தேசம் வந்துவிட்டது. மகாத்மாகாந்தியின் சுதேசி, கதர் இயக்கங்களால் நெசவுத் தொழில் புனர்ஜன்மமெடுத்து வெகு துரிதமாக அபிவிருத்தி அடைந்துவருகிறது.

ஜனங்கள் க்ஷுத்பாதையை நிவர்த்தி செய்வது விவசாயத்தொழில். ஒரு தேசத்திலும் இல்லாத விதமாக இங்கு நிகர வருமானத்தில் பாதிக்கு பாதியதை கவர்ன்மெண்டார் எடுத்துக்கொண்டுவிட்டார்கள். இதனால் இந்தத் தொழில் க்ஷீணித்துவிட்டது. ஜனத்தொகையில் 100-க்கு 80 பேர்களாக இருக்கிறவர்களும் தேசத்தின் முதுகெலும்பு போன்றவர்களுமான விவசாயிகள் மிகுந்த க்ஷீணதசையை யடைந்துவிட்டனர். இந்த மூலாதாரத் தொழிலானது லாபகரமானதாக இல்லாமற் போய்விட்டதோடு, இதர தேச உணவுப்பொருள்களுடன் போட்டியிடமுடியாத நிலைமைக்கும் வந்துவிட்டது. உலகின் நெற்களஞ்சியமாக ஒரு காலத்தில் இருந்த இந்தியாவானது இப்பொழுது எத்துணை வீழ்ச்சியடைந்துவிட்டது. அந்நியநாட்டு உணவுப் பொருள்களும் இங்கு ஏராளமாக இப்பொழுது கொண்டுவந்து குவிக்கப்படுகின்றன. ஜனங்கள் தாரித்திரியத்தில் ஆழ்ந்துவிட்டார்கள்; கடன் பளு அவர்களை அதிகம் அழுத்திவருகிறது. இதை விவரிக்கவும் வேண்டுமோ?

1933-34 முதல் 1936-37 வரையில் அரைகுறையாக வருஷத்தில் 65 லட்சம் வஜா அளித்துவந்தது போதியதில்லை யென்பதை இப்பொழுது எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். காங்கிரஸ் அதிகாரப் பதவியை ஏற்குமுன் இன்னும் 10 லக்ஷம் அதிக வஜா அளிக்கப்போவதாக கவர்ன்மெண்டார் அறிவித்தார்கள். இதன் பலனாக 1913-14-ம் வருஷத்திற்குப்பிறகு மறு பைசலான ஜில்லாக்களில் பூர்வஸ்திதி ஏற்படுகிறது. விலை உயர்வை உத்தேசித்து ஏற்படுத்தியுள்ள வீதாசார உயர்வைக் குறைத்தது ரொம்ப சாதாரணகாரியம். விலைவாசி குறைந்துவிட்டதால் கஷ்டப்பட்டுவரும் விவசாயிகளுக்கு இது போதியதாகாது. தவிரவும் எல்லா ஜில்லாக்களுக்கும் பொதுவான பளுவாக இருக்கும் நிலவரி விகிதத்தையும் இதுமாற்றி விடவில்லை. ஆகவே இப்பொழுது குறிப்பிட்டவழியில் வஜாவளிக்க உத்தேசித்திருக்கும் 75 லட்சம் தவிர நிலையான விகிதத்தை குறைக்கவேண்டியதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு இந்த வருஷத்திலேயே எல்லா ஜில்லாக்களிலுமுள்ள நன்செய், புன்செய் நிலங்களின் தீர்வையில் ரூபாய்க்கு நாலணாவையும் வஜாச்செய்ய வேண்டுமென்று ஜனங்கள் வேண்டிக்கொள்ளுகிறார்கள். நிகர வருமானத்தில் நான்கிலொருபாகத்தையே கவர்ன்மெண்டார் தீர்வையாக வாங்கிக்கொள்ள வேண்டுமென்று வரி விசாரணைக் கமிட்டியார் சொல்லியுள்ள யோசனையை 2, 3 வருஷங்களில் அமுலுக்குக்கொண்டு வந்துவிடவேண்டும்.

நான் ஏற்கனவே 6-3-37ல் ஒரு மகஜரும் 21—4—37ல் ஒரு மகஜரும் கவர்னருக்கு அனுப்பியிருக்கிறேன். அதில் இவ்விதம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருப்பதுடன் இதன் மூலமாகத் தாண்டுவிழும் தொகையை 1937-38ம்-ம் வருஷத்திய வரவு செலவு திட்டத்திலேயே ஈடுசெய்துகொண்டு விடுவதற்கும் வழிகாட்டியிருக்கிறேன்.

செலவு இனங்களில் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுடைய சம்பளங்கள், அலவன்ஸ்கள் இவைகளைக் குறைக்கும் விஷயத்தில் நீங்களே ராஜதந்திரத்துடன் கவனஞ்செலுத்தி வருகிறீர்கள். 1919-ம் வருஷம் முதல் 1922ம் வருஷத்திற்குள் பொறுப்பற்ற கவர்ன்மெண்டார் சம்பள விகிதங்களை 25% முதல் 200% வரை உயர்த்தியிருப்பதை நான் ஏற்கனவே 1933-ம் வருஷம் முதல் அனுப்பிவந்திருக்கும் விக்ஞாபனங்களில் சுட்டிக்காட்டியிருக்கிறேன். இதேவிதமாக எல்லா மாகாணங்களிலும்மத்தியகவர்ன்மெண்டிலும் நடந்திருக்கிறதென்பதை ருசுபிக்கும் இன்னொரு விக்ஞாபனத்தையும் சீக்கிரத்தில் அனுப்பிவைக்கிறேன்.

சென்ற வருஷம் சம்பளங்களைக் குறைக்க வேண்டுமென்று வரவு செலவுத்திட்ட விவாத காலத்தில் 18 அங்கத்தினர்கள் அனுப்பிய வெட்டு பிரேரணைகளின் நகலை இதனுடன் அனுப்பியிருக்கிறேன். அதிலிருந்து வரி கொடுப்போர்களுக்கு இப்போதைய சம்பள விகிதங்களைப் பற்றி எவ்வித அபிப்பிராயம் இருந்துவருகிறதென்பதை தெரிந்துகொள்ளலாம்.

நிலவரியில் தகுந்த அளவு வஜா அளித்து ஜீவாதாரமான விவசாயத்தொழில் தலைதூக்குவதற்கு உதவிசெய்யும்படி உங்களை மற்றும் ஒருமுறை வேண்டிக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீ வேதாந்த தேசிக பக்த ஸபை, மதுரை.

ஆறுவது வருஷோத்ஸவம்.

நாளது ஈச்வர-ஹு புரட்டாசி-மீ 1உ (17—9—37) வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு ஷை ஸபையின் வருஷோத்ஸவம் மதுரை மேலவெளிவீதியில் மார்வாடி தர்மசாலைபீடத்தில் நடைபெறும். அவ்வமயம் திருவஹீந்திரபுரம் மஹாமஹோபாத்யாய பகவத் விஷயம் பண்டித பூஷணம் ஸ்ரீ. உப. வே. சேட்டலூர் நரஸிம்மாசாரியார் ஸ்வாமி அக்கிராஸனம் வகிக்க அன்புடன் அங்கீகரித்திருக்கிறார்கள். ஆஸ்திகர்களனைவரும் விஜயம் செய்து மஹோத்ஸவத்தை பூர்த்தி செய்து கொடுக்கப் பிரார்த்திக்கிறோம்.

ஈச்வர-ஹு புரட்டாசி-மீ 1உ (17-7-37) வெள்ளிக்கிழமை மாலை 6-30மணி பகவத்பிரார்த்தனை, ஸ்வாகத விக்ஞாபனம், அக்கிராசனாதிபர் வரணம், ஆறுவது வருஷசரி விக்ஞாபனம். 7-மணி வித்யார்த்திகளுக்கு பரிசளித்தல். 7-30மணி அக்கிராஸனாதிபரின் உபந்யாஸம் திவ்யப்ரபந்தமும், ஸ்ரீ தேசிகனும், 18-9-37 சனிக்கிழமைகாலை 7-30மணி விசிஷ்டாத்வைதம், திருக்குடந்தை வித்வான் ஸ்ரீ உப. வே. அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார் ஸ்வாமி. 9-மணி 'கோதாஸ்துதி' திருச்சி. அட்வோகேட் ஸ்ரீ. உப. வே. எ. வி. கோபாலாசாரியார் ஸ்வாமி. மாலை 2-30மணி 'ஸ்ரீ தேசிகன் ஸ்வதந்த்ர ஸ்வதந்த்ரர்' தத்தங்குடி வித்வான் ஸ்ரீ. உப. வே. கிருஷ்ணஸாமி அய்யங்கார்ஸ்வாமி. 3-30மணி வித்யாப்யாஸம், திருக்குடந்தை ரிடையர்டு வைஸ் பிரின்ஸ்பால் ஸ்ரீ. உப. வே. கே. எஸ். பாட்ராசாரியார் ஸ்வாமி. 5-மணி 'அஞ்சலி வைபவம்' ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தானவித்வான் ஸ்ரீ உப வே முடும்பி சக்ரவர்த்தி வெங்கடாசாரியார் ஸ்வாமி. 19-9-37 ஞாயிறு காலை 7-30 மணி 'ஆசாரிய லக்ஷணமும் ஸ்ரீ தேசிகனும்' ஒப்பிலியப்பன் வங்கிபுரம் நவநீதம் ஸ்ரீ உப வே ஸ்ரீ ராமதேசிகாசாரியார் ஸ்வாமி சிரோமணி. 9-மணி 'ஸ்ரீ வேதாந்ததேசிகனும் கவிதையும்' திருச்சி அட்வோகேட் ஸ்ரீ உப வே கோபாலாசாரியார்ஸ்வாமி 10-மணி 'ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் ஸ்ரீ தேசிகனின் நிலை, ஸ்ரீ உப வே நெரூர் வித்வான் நாராயணய்யங்கார் ஸ்வாமி. மாலை 2-30மணி ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தமும் வர்ணாச்ரமமும் திருக்குடந்தை வித்வான் ஸ்ரீ. உப. வே. அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார் ஸ்வாமி. 3-30மணி ஸ்ரீ வைஷ்ணவர்களின் மனப்பாங்கு அக்கிராசனாதிபர். 5-மணி அக்கிராசனாதிபதியின் முடிவுரை, வந்தனோபசாரம், மங்களம்.

ஆர். அண்ணாதுரை அய்யங்கார்,
ரிடையர்டு எக்ஸிகூடிவ் இஞ்ஜினியர்
அத்யக்ஷர்.
மாடபூசி வீ கி ஸ்ரீனிவாஸாசாரியன்,
வக்கீல், காரியதர்சி.

தக்ஷிணாயந விவாஹ விவாதம்.

ப்ரதம விவாஹங்கள் தக்ஷிணாயனத்தில் நடைபெறலாமா என்பதைப்பற்றிய சாஸ்திர விசாரமானது கும்பகோணம் ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீ மடத்தில் 30 8-37 முதல் 5-9-37 முடிய நடைபெற்ற அத்வைத ஸபையில் சர்ச்சை செய்யப்பட்டதில், பிரதம விவாஹங்கள் தக்ஷிணாயனத்தில் நடத்துவது சாஸ்திர ஸம்மதமல்லவென்றும் உத்திராயணத்தில்தான் நடைபெற வேண்டியதென்றும் வைத்யநாத தீக்ஷிதீயத்தை ஆதாரமாகக்கொண்டு போலகம் பிரம்மஸ்ரீ சுந்திரேச சாஸ்திரிகளால் நிரூபிக்கப்பட்டு ஷை ஸித்தாந்தம் அத்வைத ஸபையின்முக்ய பண்டிதர்களாலும் அங்கீகரிக்கப்பட்டது. இது ஸம்பந்தமாக மேற்கொண்டு தொடர்ச்சியான விவாதமானது ஒத்தி வைக்கப்பட்டதாயினும், தர்ம சாஸ்திர விஹிதமான உத்திராயண காலத்திலேயே பிரதம விவாகங்கள் நடைபெற வேண்டியது என்னும் இந்த சாஸ்திராசயமானது ப்ரம்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களுடைய ஆப்த ஆஸ்திக மஹா ஜனங்களின் அநுஷ்டானோபயோகமாக பிரசுரிக்கபடுகிறது.

R. நடராஜ சாஸ்திரி.

21520

வெளியூர்ச்செய்திகள்.

திருவல்லிக்கேணி தமிழ்ச்சங்கம்.

ஸ்ரீஜயந்தி மஹோற்சவக்கொண்டாட்டம்.

திருவல்லிக்கேணி த்தமிழ்ச்சங்கத்தினாதரவில் சங்கக்காரியாலயமான ஸ்ரீரங்கவிலாசத்தில் ஸ்ரீஜயந்தி மஹோற்சவக்கொண்டாட்ட உபன்யாசங்கள் நடைபெற்றன. 29-8-37௳ ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீஜயந்தி தினத்தன்று மாலை 4மணி முதல் 5 30 வரை ஸபாத்யக்ஷர் ஸ்ரீ உபவே ஆர். கேசவய்யங்கார்ஸ்வாமியால் 'கண்ணனும் ஆண்டாளும் என்ற விஷயம். 30-8-37; 31-8- 37௳ திங்கள் செவ்வாய்க்கிழமைகளில் மாலை 6 30 மணி முதல் 8.30 மணி வரை பண்டித திருவாலிராமாநுஜாசாரியார், பிரம்மஸ்ரீ கௌலிகிய துநாதாசாரியார். அவர்களால் முறையே 'சங்க நூற்கண்ணம்; 'கண்ணனும் மத்வாசாரியாரும் என்ற விஷயங்கள் உபந்யசிக்கப்பட்டன. 1-9-37௳ புதன்கிழமை யன்று மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை 'கண்ணனும் காரிமாறனும்' என்ற விஷயம் பகவத் விஷயம் ஸி. நரசிம்மாசார் ஸ்வாமியால் மிக சுருக்கமாய் உபந்யசிக்கப்பட்டது. திருக்குடந்தை பராங்குச பக்த சபை உபன்யாசகர் ஸ்ரீ உபவே இளையவில்லி ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமி 2-9-37௳ வியாழக்கிழமை யன்று மாலை 6 30 மணி முதல் 9மணி வரை 'கண்ணனும் ஆழ்வார்களும்' என்ற விஷயம் பற்றி உபந்யாசம் செய்தார். 3-9-37 வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணி முதல் 8.15 மணி வரை ஸ்ரீ உபவே குரிச்சி ஸ்ரீநிவாஸவேதாந்தாசார் ஸ்வாமியால் 'கண்ணனும் தேசிகனும்' என்ற விஷயமும் 4-9-37௳ சனிக்கிழமை மாலை 6.30 மணி முதல் 8.30 மணி வரை 'கண்ணனும் தென்னாடும்' என்ற விஷயம் ஸ்ரீ உபவே ஆர். கேசவய்யங்கார் ஸ்வாமியாலும் நன்கு விளக்கப்பட்டன.

ப. ரெ. திருமலை ஐயங்கார். கார்யதரிசி.

ஆத்தன்குடி.

ஸநாதன தர்ம மஹா சபை.

ஈச்வர ௵ ஆவணி௴ 20௳ சனிக்கிழமை மாலை6மணிக்கு பிரம்மஸ்ரீ ஜெ. சாமிநாதய்யர் கடவுள் வாழ்த்துப்பாட, வேத பாடசாலை ஆசிரியர் பிரம்மஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணிய கனபாடிகள் தலைமையில் திரு சாமி அய்யங்கார் "இராம பிரபாவ"த்தைப்பற்றியும் ஜெகதீசய்யர் "ஆஞ்சநேயரின் பிரபாவ"த்தைப் பற்றியும் விரிவுரை நிகழ்த்தினர். தலைவரவர்கள் வேத சாஸ்திரப்பிரமாணங்களால் கர்மம் பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி விளக்கினார்கள். இரவு 9மணிக்குச்சபை கலைந்தது.

கார்யதரிசி

கும்பகோணம் ராஜா தர்ம வேத ஸம்ஸ்கிருத பாடசாலை.

சென்ற 20 7.37ந்தேதி (பிரதோஷம்) மாலை 4மணிக்கு, ஷை பாடசாலையின் வித்யா விசாரணை கர்த்தரும். ஷை யூர் அத்வைதசபா பிரதான பண்டிதராயும், சாஸ்திர ரத்னாகர சாஸ்திர திலகம் மஹோபதேசக மஹா மஹோபாத்யாய பிரம்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களின் பூர்ணமான அநுக்ரஹத்தை முன்னிட்டு, ஷை பாடசாலையில், சித்ஸவர்த்தனீ ஸபா என்கிற ஓர் ஸபையானது ஆரம்பிக்கப்பட்டு ஷை பாடசாலையில் ஹெட் பண்டிதரும், ஸாஹித்ய வேதாந்த சிரோமணியாயுமான பிரம்மஸ்ரீ எம். சுவாமிநாத சாஸ்திரியவர்களால் பிராம்மண மஹிமை, என்கிற விஷயத்தை குறித்து அநேக சுருதி ஸ்மிருதி, வாக்யங்களின் கோட்பாடுடன் இனிமையாக உபன்யசிக்கப்பட்டது. அவ்வமயம் எல்லா உபாத்யாயர்கள், வித்யார்த்திகள் அநேக கனவான்கள் வந்திருந்தார்கள். ஷை ஸபைக்கு, எண்ட்ரன்ஸ் கிளாஸ் மாணாக்கனான, இராமச்சந்திரன், என்பவரை கார்யதரிசியாக நியமிக்கப்பட்டு அது ஸம்பந்தமான கார்யங்களை கவனித்து வருகிறார். இச்சபையானது பிரதி பிரதோஷத்திலும் மாலை 4மணிக்கு நடைபெற்று வருகிறது. பிறகு,4.8 37ப்ரதோஷத்தில் மாலை 4மணிக்கு திருவாதி ஸம்ஸ்கிருத காலேஜ் உபாத்யாயரும், ஸாஹித்ய மீமாம்ஸா சிரோமணியுமான பிரம்மஸ்ரீ சிவராம சாஸ்திரிகளவர்கள் தலைமையின் கீழ் வித்யை, என்னும்,விஷயத்தை குறித்து ஷைபாடசாலை மாணாக்கன் எஸ் வி ராதாகிருஷ்ணனால், ஸம்ஸ்கிருதத்தில் உபந்யாசம் எழுதப்பட்டு வாசிக்கப்பட்டது. அக்ராசனரால் ஷை விஷயத்தையே வடமொழியிலும், தமிழ் மொழியிலும் இனிமையாக உபன்யசிக்கப்பட்டது.

பிறகு 2 9 37 பிரதோஷம் மாலை4மணிக்கு மைலாப்பூர் ஸம்ஸ்கிருதகாலேஜ்sahitya resarch student)ம் ஸாஹித்யவேதாந்த சிரோமணியுமான பிரம்மஸ்ரீ கல்யாண ஸுந்தர சாஸ்திரிகளவர்கள் தலைமையின் கீழ் ஷை சபா கார்யதர்சியான எஸ், இராமச்சந்திரன் என்பவரால், விநயம், என்பதை குறித்து ஸம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டு வாசிக்கப்பட்டது அக்ராசனர் அதே விஷயத்தைக்குறித்து நன்றாக உபன்யசித்தார், அவ்வமயம், ஸம்ஸ்கிருத ஸ்கூல்களுக்கு சூபர்வைசரான கனம் பொருந்திய பிரம்மஸ்ரீ காசி விஸ்வநாத சாஸ்திரிகள் ஷைசபையில் பிரதான புருஷராயிருந்து, ஸபையை மிகவும் ரமணீயமாக நடக்கும்படி செய்தானது மிகவும்போற்றத்தக்கது. பிறகு கார்யதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு இனிது நடந்தேறியது.

ஒரு நிருபர்.

புதுக்கோட்டை, மைசூருக்கு ஸநாதனிகள் தூது கோஷ்டி.

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்யஸங்கத்தின் முயற்சியால் சென்ற 30-8-37ல் கொச்சி மஹாராஜாவுக்கு ஒரு தூது கோஷ்டி சென்றது எல்லோருக்கும் தெரியும். அதைப்போலவே சமீபத்தில் புதுக்கோட்டை, மைசூருக்கு தூதுகோஷ்டிகள் செல்லலாமென்று ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இதைப்பற்றி வேண்டியவிஷயங்களை கும்பகோணம் ரிடையர்டு இஞ்சினீர் எஸ். சுவாமிநாத சாஸ்திரிகளிடம் நேரிலேயோ கடிதம் மூலமாய் தெரிந்து கொள்ளலாம்.

எஸ். சுவாமிநாத சாஸ்திரிகள்.
ஆர்கனைஸிங் சிகரெட்டரி

காங்கிரஸ் ஆட்சியும் அதன் திறமையும்.

Caste — color — or creed வித்யாஸமன்னியில் திறமை வாய்ந்த நபர்களையே ஸர்க்கார்—உத்யோகங்களில் நியமனம் செய்ய வேண்டியதும் காங்கிரஸின்பொறுப்பு என்று தெரியப்படுத்துகிறேன். சுமார் 20 வருஷகாலமாய் சுயநலம் கொண்டு தேசத்தை ஆண்டு வந்த வகுப்பு வாரி ஆட்சி ஈசன் அருளால் இந்திய மக்களின் வாக்குறுதியை மெஜாரிடி மூலம் பெற்ற ஸர்வ ஜந ஸம்மத காங்கிரஸ் ஆட்சிக்கு இடம் கொடுத்தது.

காங்கிரஸ் மந்திரிகள் ஒவ்வொரு மாகாணங்களிலும் சுய நலக்காரர்களால் பொது தேச மக்களுக்கு இடஞ்சலாக தீர்மானம் செய்து அமுலில் இருக்கும் Commercial Get. Ordersகளை உடனே ரத்து செய்து, ஜாதி—மத—வகுப்பு வித்யாஸமன்னியில் திறமையுள்ள இந்திய தேச மக்களையே இது முதற்கொண்டு ஸர்க்கார் காலிஸ்தானங்களுக்கு நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு தேசாபிமானி.

புஸ்தக வரவு.

ஸ்ரீகாஞ்சி பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ.உ.வே. அண்ணங்கரர்சார்யஸ்வாமிகளால் எழுதப்பட்ட"அத்யமே பத்யார்த்த சத தூஷணீ,,

என்ற பெயருள்ள ஸஞ்சிகை வரப்பெற்றோம். ஸ்ரீராமாயணத்திலுள்ள ஷை ஸ்லோகத்திற்கு ஸ்ரீ பெரும்பூதூர் ஆஸூரி ஸ்ரீராமாநுஜாசார்ய ஸ்வாமியால் செய்யப்பட்ட அர்த்தத்தை மறுத்து இப்புஸ்தகத்தில் விவரமாக சர்ச்சை செய்யப்பட்டிருக்கிறது. இந்நூலாசிரியர் வெளியிட்டுள்ள அர்த்தமே நியாயமானதென்று பல வித்வான்கள் வெளியிட்டுள்ள அபிப்பிராயங்களும் அதில் அடங்கி யிருக்கின்றன. ஆசிரியர் தமது கக்ஷியை இதில் நன்கு எடுத்துக் கூறியுள்ளார். இதன் விலை அணா 8. 44 நாராயண முதலி வீதி ஜி. டி மதராஸ் என்ற விலாசத்தில் கிடைக்கும்.

குடந்தையில் ஸ்ரீமான் பரண்டேயின் பிரஸங்கம்.

அகில இந்தியா வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் பிரதான கார்யதரிசியும், ஐக்ய மாகாணத்தில் மாஜி ஜில்லா ஜட்ஜியுமான ஸ்ரீமான். ஸதாசிவ மாதவ பரண்டே என்பவர் கொச்சி மஹாராஜாவிடம் சென்ற ஸநாதந தூது கோஷ்டியங்கத்தினராகத் தென்னிந்தியாவுக்கு வந்திருந்தது நேயர்கள் அறிந்ததே. அந்த கனவான் கொச்சியிலிருந்து திரும்பும் காலையில் ஸெப்டம்பர்௴ 4௳ சனிக்கிழமை கும்பகோணத்திற்கு வந்து ஸ்ரீமான் எம், கே.வைத்திநாதய்யர் அவர்களின் அதிதியாக இருந்தார்.

அன்று மாலை 5மணிக்கு ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரிய ஸ்வாமிகள் ஸ்ரீமடத்தில் நடந்து வந்த அத்வைத ஸபைக்கு விஜயம் செய்து, ஸநாதந தர்மத்தையும், அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் வேலையைப்பற்றியும் ஓர் சிறந்த பிரசங்கம் செய்தார். அவர் ஆங்கிலத்தில் கூறியதை ஸ்ரீமான் எம். கே. வைத்திநாதைய்யரவர்கள் தமிழில் உடனுக்குடன் மொழி பெயர்த்துக்கூறி வந்தார்.

இந்தியாவில்ஆங்கில அரசாட்சி தோன்றியது முதல் ஆரம்பித்து ஆங்கிலப்படிப்பு பரவிய விதம், நம்மவர்கள், முக்யமாக பிராம்மணர்கள் அதில்அதிக உத்ஸாகம் காட்டியது, மிஷனரிகளின் பிரசாரம், விக்டோரியா மஹாராணியாரின் விளம்பரம், ஆசாரத்திருத்தக்கிளர்ச்சி, அந்நியர்களைவிட நம்மவர்களாலேயே நமது மதாசாரங்களுக்கு அதிகமாக தீங்கு ஏற்பட்டு வருவது, சாரதாச்சட்டம், ஆலயப் பிரவேசம் ஆகிய விஷயங்களை அழகாக எடுத்துரைத்து வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தை எல்லாவிடங்களிலும் ஸ்தாபித்து எல்லோரும் மெம்பராகச்சேரவேண்டிய அவச்யத்தை வற்புறுத்தினார்.

கடைசியாக திருவாதி பிரம்மஸ்ரீவித்வான் விச்வநாத சாஸ்திரிகளால் உபந்யாசகரின் அபிப்ராயங்களை ஆமோதித்து ஸம்ஸ்கிருதத்தில் பேசப்பட்டு உபசார வார்த்தை கூறப்பட்டது.

ஒரு நிருபர்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Publsihed by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaam.

ஆர்யதர்மம்

ஸ

4 36

22

23-9-1937

215202

215202

543

Registered No. M. 2913.

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 22 | கும்பகோணம் கலி 5039 ஈச்வர௵ புரட்டாசி௴ 7௳ 1937௵ ஸெப்டம்பர்௴ 23௳ | ஸ 36

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணா 1.
விளம்பர விகிதம்
பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

வாரக்குறிப்புகள்.

(வே. லோ. சர்மா.)

நல்லபெயரைக் கூறலாகாதா? தேசத்தில் அதர்மம் அதிகமானதால் காலமழை இல்லை. பலர் பலவகையாக மழைக்காக இஷ்ட தேவதையை ஆராதிக்கின்றனர். ஆக்ராவில் ஓர் பக்தர் 19-நாள் உபவாஸ நியமத்துடன் பகவதாராதனம் செய்தார். மழை பொழிந்தது. இதை இங்கால நிருபர் 19-நாள் உண்ணாவிரதம்! என்று வர்ணிக்கிறார். இது விஷமத்தன்மை பொருந்திய சொல், விபரீதப்பொருளை அளிக்குமல்லவா?

ஏமாற்றும் செயல்!! சென்னை நகர பரிபாலன ஸபை பனை ஓலையில் மந்திரிகளுக்கு உபசார பத்ரமளித்தது, பத்தி பத்தியாக படத்துடன் விஷயம் வெளிவருகிறது. எந்த மதத்தைக் காப்பாற்ற நான் முயற்சிக்கிறேனோ அந்த பனை ஓலையில் கொடுத்ததுதான் சிறப்பென்கிறார் மந்திரி. ஸாதாரண வாழ்க்கைக் கறிகுறி என்கிறார் மற்றொருவர். இவர்களது இந்திய ஹிருதயத்தை மேனாடு கொள்ளை கொண்டது! இந்த வெளிவேஷம் எதற்கு?

பார்க்கக்கூட பிடிக்கவில்லையா? அதார்மிகர்களைப் பார்ப்பதும் அவருடன் பேசுவதும் அதர்மமெனதர்மநூல் கருத்து. ஓர் ஸமயம் அவர்களையும் நல்வழிக்குக் கொண்டுவரலாகாதா என்று அ. இ. வ. ஸ்வராஜ்யஸபை திருவாங்கூர் மன்னரைக்காண விரும்பிற்று. ஸசிவோத்தமர் தன்னு பிருதை அன்வர்த்தமாக்க நல்ல தந்த்ரம் செய்தார். தானே முடியாதென்று கூறாமல் அரசனந்தரங்க கார்யதர்சியைக் கொண்டு முடியாதென்றது நல்ல தந்த்ரம்! ஸநாதனிகளுக்கு இது எச்சரிக்கை.

கேட்பாரில்லையா? பெங்களூர் படக்காக்ஷி ஒன்று உயர்ந்த ஜாதி பெண் ஒருவள், சண்டாளனை மணந்ததாக ஓர் ஆட்டம் தயார் செய்கிறது. எந்தஜாதியை அவமதிக்க இது காட்டப்படுகிறதோ அந்த ஜாதி கோடாலி காம்பே பணமளிக்கவும், வேஷந்தரிக்கவும் பார்க்கவும் அஞ்சாது. ஜைனர் கிளர்ச்சி அப்பர் படத்தை நிறுத்தியதுபோல் நமது ஸமூஹம் கிளர்ச்சிசெய்து இதை அகற்றுமா?

வேண்டாம்! வேண்டாம்!! எதிலும் பின்ன அபிப்ராயமிருக்கும். ஆனால் ஒரே நோக்கத்துடன் [illegible] முயற்சிப்பவருக்கு பேதமிருக்க முடியாது. 'ரிலிஜஸ் எண்டோன்மெண்ட் போர்ட்' செய்த வேலையை பரிசீலனை செய்து என்ன கருத்திற்காக தோன்றியதிது என்று ஆழ்ந்து பார்த்தால் மன்னார்குடி ஸபை கூறியவண்ணம் இந்தபோர்டை அடியோடு ஒழித்துவிடுவதுதான் தர்மம்! தர்மசொத்தை அநியாயமாக யாரோ சாப்பிடுகிறார். நான் சட்டப்படி சாப்பிடுகிறேனென்பது தர்மமா? இந்திய வைதிக டிப்டிகலெக்டர்கள் மேற்பார்வையே போதுமானது?

பசுக்களுக்காக இறப்பது மேலே! பசுக்களுக்கு மேய்ச்சலுக்காக சில ஆயிரம் ஏக்ராநிலம் விடவேண்டும். இல்லையேல் பட்டினி கிடந்திறப்பேனென்கிறார் வடக்கே ஓர் பெரியார். எப்படியாவது கார்யத்தைச் சாதித்தால் சிறந்ததே. ஆனால் அவர் கொள்ளும் ஸாதனவழி இதில் பயன்படுமா? அதுதான் வழியா? என்று யோசிக்கவேண்டியிருக்கிறது!

கூடி கெடுக்க பரிஷத்!! தர்மத்ரோஹிகள் தனித்தனி சாஸ்திரத்தை, தப்பாக அர்த்தஞ் செய்து தனக்கநுகூலமாக்கி தார்மிகரை நிந்திப்பது போதாமல், டிஸம்பரில் ஓர் பரிஷத் கூட்டப்போகிறார்கள்! டாக்டர் குருத்கோடியைத் தலைவராக தேர்ந்தெடுத்தனர்!! அருண்டேல் போன்றவர் வரவேற்புக்கமிட்டி அங்கத்தினர். போதுமா? ஸபை அழகு!

கடுகு சிறுத்தும் காரம் போகவில்லை! சென்னை சட்டஸபையில் ஓர் அங்கத்தினர் காங்க்ரஸ் மந்திரி, காந்தி சொற்படி தீண்டாமை விலக்கு, ஆலயப்பி[illegible]வதை முதற் சட்டமாக செய்ய[illegible] கேட்க, ராஜாஜி அப்படிவாக்களிக்கவில்லை[illegible] ஆனாலும் கட்டாயம் அதை செய்வோமென்கிறார். பொதுஜநக்கிளர்ச்சியால் பெரியவிடத்தில் [illegible] வேஷம் குலைக்கப்பட்டது! ஆனாலும் கிளர்ச்சி போதாது!! ஊர் ஊராகக் கண்டனக் கூட்டம் வேண்டும்!

உயர்ந்த புஸ்தகங்கள்.
மஹாமஹோபாத்யாய, தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்களால் எழுதப்பட்டன.

	ரூ. அ.
மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்—பாகம் 1	2—0
" " 2	2—0
உதயணன் சரித்திரம்	1—0
மணிமேகலைக் கதைச்சுருக்கம்	0–10
புத்த சரித்திரம், பௌத்த தருமம், பௌத்த சங்கம்	0–12
நான் கண்டதும் கேட்டதும்	0—8
புதியதும் பழையதும்	0—9
கனம் கிருஷ்ணையர்	0—6
கோபாலகிருஷ்ண பாரதியார்	0—8

கிடைக்குமிடம்:— ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறாதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷிட் ஜெம்ஸெட் சன்ஸ் & Co.,
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

‘மூகபஞ்சசதீ’

(2—9—37 தொடர்ச்சி)

த்ரையம்பகம் த்ரிபுரஸுந்தரி ஹர்ம்யபூமி:
அங்கம் விஹாரஸரஸீ கருணப்ரவாஹ: |
தாஸாச்ச வாஸவமுகா: பரிபாலனீயம்
காமாக்ஷி விச்வமபி வீக்ஷண பூப்ருதஸ்தே ||

த்ரிபுரஸுந்தரி காமாக்ஷி - ஹே த்ரிபுரஸுந்தரி! ஹே காமாக்ஷி!, தே வீக்ஷண பூப்ருத: - உனது பார்வையாகிற ராஜாவுக்கு, த்ரையம்பகம் அங்கம் - பரமசிவனுடைய சரீரமானது, ஹர்ம்ய பூமி: - அரண்மனையாகவும், கருணப்ரவாஹ: - உனது கருணையாகிற ப்ரவாஹமானது, விஹாரஸரஸீ - விளையாடும் குளமாகவும், வாஸவமுகா: - இந்திரன் முதலான தேவர்கள், தாஸாச்ச - வேலைக்காரர்களாகவும், விச்வம் அபி - உலகம் முழுவதுமே, பரிபாலனீயம் - ஆளுகைக்குள்பட்டதான ராஜ்யமாகவும், (இருக்கிறது).

27. வாகீச்வரீ ஸஹசரீ நியமேந லக்ஷ்மீ:
ப்ருவல்லரீ வசகரீ புவனனி கேஹம் |
ரூபம் த்ரிலோக நயனம்ருதம் அம்ப தேஷாம்
காமாக்ஷி யேஷு தவ வீக்ஷண பாரதந்த்ரீ ||

அம்ப காமாக்ஷி - தாயே! காமாக்ஷி! யேஷு - எவர்களிடத்தில், தவ வீக்ஷண பாரதந்த்ரீ - உனது பார்வைக்கு வசப்படுவதானது (பார்வையானது) ஏற்படுகிறதோ, தேஷாம் - அவர்களுக்கு, நியமேன - கட்டாயம், வாகீச்வரீ - வாக்குக்கு ஈச்வரியான ஸரஸ்வதியானவள், ஸஹசரீ - தோழியாக ஆகிறாள், லக்ஷ்மீ: - லக்ஷ்மிதேவியானவள், ப்ருவல்லரீ வசகரீ - கண்ஜாடையை அனுஸரித்து நடப்பவளாக ஆகிறாள், புவனனி - சதுர்தச புவனங்களும், கேஹம் - வீடாகவும், ரூபம் - ரூபமானது, த்ரிலோக நயனம்ருதம் - மூன்று லோகங்களிலிருப்பவர்களுடைய கண்களுக்கு அம்ருதமாகவும் ஏற்படுகிறது.

1. இதில் அம்பிகையின் கடாக்ஷமானது கிடைக்கப்பெற்றவனுக்கு ஏற்படும் பாக்யாதிசயமானது வர்ணிக்கப்பட்டது. அம்பிகையின் பக்தனுக்கு மேன்மையான வாக்கும் அதிகமான ஸம்பத்தும், மனோஹரமான ரூபமும் இம்மாதிரி ஏற்படுவதைப் பற்றி ஸ்ரீமதாசார்யாள்

‘ஸரஸ்வத்யா லக்ஷ்ம்யா விதி ஹரி ஸபத்னோ விஜயதே
ரதே: பாதிவ்ரத்யம் சிதிலயதி ரம்யேண வபுஷா |’

என்பதாக வர்ணித்திருக்கிறார்கள்.

2. புருவத்தைக் கொடிக்கு ஸமானமாக வர்ணிப்பது வழக்கமாகையால் ப்ருவல்லரீ, ப்ருலதா என்ற பதங்கள் ஏற்படுகின்றன,

28. மாஹேச்வரம் ஜடிதி மானஸமீனமம்ப
காமாக்ஷி தைர்யஜலதௌ நிதராம் நிமக்னம் |
ஜாலேன ச்ருங்கலயதி த்வதபாங்க நாம்னா
விஸ்தாரிதேன விஷமாயுத தாஸகோऽஸௌ ||

அம்ப காமாக்ஷி - தாயே! காமாக்ஷி! தைர்ய ஜலதௌ - தைர்யமாகிற ஸமுத்திரத்தில் நிதராம் நிமக்னம் - மிகவும் முழுகியிருந்த மாஹேச்வரம் - பரமசிவனுடைய மானஸ மீனம் - மனதாகிற மீனை, அஸௌ விஷமாயுத தாஸக: - இந்த மன்மதனென்கிற செம்படவனானவன், த்வத் அபாங்க நாம்னா - உனது கடாக்ஷமாகிற, விஸ்தாரிதேன ஜாலேன - வீசிப்போடப்பட்ட வலையினால், ஜடிதி - சீக்கிரத்தில், ச்ருங்கலயதி - கட்டிவிடுகிறான்.

29. உன்மத்ய போதகமலாகரம் அம்ப ஜாட்ய
ஸ்தம்பேரமம் மம மனோவிபினே ப்ரமந்தம் |
குண்டீகுருஷ்வ தரஸா குடிலாக்ரஸீம்னா
காமாக்ஷி தாவக கடாக்ஷ மஹாங்குசேன ||

அம்ப காமாக்ஷி - தாயே! காமாக்ஷி!, போத கமலாகரம் - எனது அறிவாகிற தாமரஸ புஷ்பத்தை, உன்மத்ய - நசுக்கிக்கொண்டு, மம மனோவிபினே - என்னுடைய மனதாகிற காட்டில் ப்ரமந்தம் - அலைந்துகொண்டிருக்கும், ஜாட்ய ஸ்தம்பேரமம் - அக்ஞானமாகிற யானையை, குடிலாக்ரஸீம்னா - வளைந்ததான நுனியையுடைய, தாவக கடாக்ஷ மஹாங்குசேன - உனது கடாக்ஷமாகிற ச்ரேஷ்டமான அங்குசத்தினால், தரஸா - சீக்கிரமாக குண்டீகுருஷ்வ - அடக்கிவிடு.

1. காட்டுயானைகள் காடுகளிலுள்ள தடாகங்களில் இறங்கி அங்கிருக்கும் தாமரஸ புஷ்பங்களை மிதித்துக்கொண்டு அலைந்து திரிவதாக வர்ணிக்கப்படுவது வழக்கம்.

2. கடாக்ஷமென்பது கோணலான பார்வையானதாகவும் கண்டரக்கோடாலியுானது நுனியில் வளைந்திருக்குமாகையாலும் இரண்டையும் ‘குடிலாக்ர ஸீம்னா’ என்று வர்ணிக்கப்பட்டது.

3. யானைகளைக் கட்டும் மரத்திற்கு ஸ்தம்பமென்றுபெயர். அதில் கட்டியிருந்தும் யானையானது ஆடிக்கொண்டிருக்குமாகையால் அதற்கு ‘ஸ்தம்பே ரம:’ என்றுபெயர்.

30. உத்வேல்லித ஸ்தபகிதை: லலிதை: விலாஸை:
உத்தாய தேவிதவ காட கடாக்ஷகுஞ்ஜாத் |
தூரம் பலாயயது மோஹ ம்ருகீகுலம் மே
காமாக்ஷி ஸத்வரம் அனுக்ரஹ கேஸரீந்த்ர:||

தேவி காமாக்ஷி - ஹே தேவி! காமாக்ஷி!, அனுக்ரஹ கேஸரீந்த்ர: - உனது அனுக்ரஹமாகிற ஸிம்ஹேந்திரமானது, உத்வேல்லித ஸ்தபகிதை: - பிடரிமயிர்களை உதருவதான, லலிதை: விலாஸை: - அழகான சேஷ்டையோடு, தவ காட கடாக்ஷகுஞ்ஜாத் - உனது கடாக்ஷமாகிற அடர்ந்த புதரிலிருந்து, உத்தாய - வெளிக்கிளம்பி, மே மோஹ ம்ருகீகுலம் - என்னுடைய மோஹமாகிற (அக்ஞானமாகிற) மான்கூட்டத்தை, ஸத்வரம் - வேகத்தோடு, தூரம் பலாயயது - தூரத்தில் துரத்திவிடட்டும்.

31. ஸ்னேஹாத்ருதாம் விதளிதோத்பல காந்தி
சோராம்
ஜேதாரமேவ ஜகதீச்வரி ஜேதுகாம: |
மானோத்ததோ மகரகேதுரஸௌ துனீதே
காமாக்ஷி தாவக கடாக்ஷக்ருபாண வல்லீம் ||

ஜகதீச்வரி காமக்ஷி — ஹே ஜகதீச்வரி! ஹே காமாக்ஷி!, மானோத்தத: - மிகவும் மானியான, அஸௌ மகரகேது: - இந்த மன்மதனானவன், ஜேதாரமேவ ஜேதுகாம: - தன்னை ஜயித்தவரான பரமசிவனையே திரும்பவும் ஜெயிக்கவேண்டுமென்ற ஆசையுடையவனாய், ஸ்னேகாத்ருதாம் - எண்ணெயினால் கூர்ப்புள்ளதாகச் செய்யப்பட்டதும், விதளிதோத்பல காந்தி சோராம் - மலர்ந்த நீலோத்பலத்தின் காந்தியை அபகரிப்பதுமான, தாவக கடாக்ஷ - உனது கடாக்ஷமாகிற, கடாக்ஷ க்ருபாணவல்லீம் - கத்தியை, துனீதே - சுழட்டி வீசுகிறான்.

1. பரமசிவன் தனக்கு வசப்படாமல் தன்னை ஜயித்து எரித்துவிட்டதினால் அவரிடம் பகைக்குப்பகை தீர்க்கவேண்டி மன்மதனுக்கு ஆசையிருப்பதாக சொல்லப்படும். இதை ஸ்ரீமதாசார்யாள் ‘சிராத் அந்த: சல்யம் தஹனக்ருதம் உன்மூலிதவதா’ என்பதாக ‘ஸௌந்தர்ய லஹரி’ யில் வர்ணித்திருக்கிறார்கள்.

2. ஸ்னேஹமென்பது ப்ரியத்தைக் குறிப்பதுடன் எண்ணையையும் எண்ணையுடைய வஸ்துக்களையும் குறிக்கும்.

3. கத்தியானது மெல்லியதாயும், நீண்டும், வளைக்கக் கூடியதாயுமிருப்பதால் அதை கொடிக்கு ஸமமாக வர்ணிப்பது வழக்கம்.

32. ச்ரௌதீம் வ்ரஜன்னபி ஸதாஸரணீம் முனீனாம்
காமாக்ஷி ஸந்ததமபி ஸ்ம்ருதி மார்க்க காமீ |
கௌடில்யம் அம்ப கதம் அஸ்திரதாம் ச தத்தே
சௌர்யம் ச பங்கஜருசாம் த்வத் அபாங்கபாத:||

காமாக்ஷி அம்ப - ஹே காமாக்ஷி! தாயே!, த்வத் அபாங்க பாத: - உனது பார்வையானது, ஸதா - எப்பொழுதும், ச்ரௌதீம் ஸரணீம் - ச்ருதிகளின் போக்கை (வழியை), வ்ரஜன் அபி - அனுசரித்த போதிலும், ஸந்ததம் - ஸதாகாலமும், முனீனாம் ஸ்ம்ருதிமாத்ர காமீ அபி - முனிச்ரேஷ்டர்களுடைய மனதில் இருந்தபோதிலும், கௌடில்யம் - குடில ஸ்வபாவத்தையும், அஸ்திரதாம் - ஸ்திரமில்லாதிருத்தலையும், பங்கஜருசாம் சௌர்யம் ச - தாமரஸ புஷ்பங்களின் காந்தியைத் திருடுவதையும், கதம் தத்தே - எப்படி கைக்கொள்ளுகிறது?

1. இதில் அம்பிகையின் கடாக்ஷமானது ச்ருதி, ஸ்ம்ருதிகளின் ஸம்பத்தத்தோடிருந்தும் கெடுதலான ஸ்வபாவத்தோடிருப்பதாக நிந்தாஸ்துதியாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. உத்தம ஸ்திரீகளின் கண்கள் கர்ணாந்த விச்ராந்தமாக (காதுவரையில் நீண்டு) இருப்பதாகச் சொல்லப்படுவதால் அம்பிகையின் கடாக்ஷமானது காதுக்கு ஸமீபத்தில் செல்லுவதாக ‘ச்ரௌதீம் ஸரணிம் ஸதா வ்ரஜன்’ என்று சொல்லப்பட்டது.

நாகபட்டினத்தில் உபன்யாசங்கள்.

(கீழ்வளூர் பிர்மஸ்ரீ வி. கே. வெங்கட்டராம சாஸ்திரிகள் அவர்களின் ஞானயோக உபன்யாசத்தின் தொடர்ச்சி.)

மூன்றாவது அம்சமானது காரியமாகும். சுத்தமான ஸ்வரூபம் பிரம்மம் என்றும் அப்பிரம்மத்தின் பிரதிபிம்பத்தினை சிதாபாஸனென்றும் அதையே ஆபாஸ ஞானமென்றும் வர்ணிக்கப்பட்டது. ஆபாஸஞானத்தினை ஞானமென்று வர்ணித்ததால் அந்த ஞானத்தையுடைய அந்தக்கரணவிருத்திக்கு செய்யும் ஆற்றலும், அறியும் ஆற்றலும் உண்டாகியிருக்கிறது. இந்த ஞான பிரதிபிம்ப பிரகாசம் இல்லாவிடில் இதர பூதகாரியங்களான நாமரூப வஸ்துக்களைப்போல அந்தக்கரணமும் ஜடமாகவே இருக்கவேண்டும். ஆனால் பகிர்முகத்திலேயே பிரதிபிம்ப முானபிரகாசத்தின் ஒத்தாசையால் நாமரூப விஷயங்களை இன்னதென்று அறிந்து இந்த விருத்தி எழுவாயாய் இருந்து அவ்விஷயங்களின் ஆகாரத்தை தரிக்கிறது. இவ்விதமாகவே அனேக கோடி ஜன்மங்களாக அந்தக்கரணப் ஆபாசனுடன் கூடியிருந்து அறிபவனாகவும் அறிவாகவும் அறிபடுபொருளாகவும் உள்ள இத்திரிபதார்த்தங்களில் உழல்வதே காரியமாகவும் ஏற்பட்டுவிட்டுவிட்டது. அந்தக் காரணத்திற்கு ஞானப்பிரகாசத்தின் ஒத்தாசை கிடைத்ததற்கு இவ்விதம் உழல்வது தானா பிரயோஜனம்? அப்படிக்கிருந்தாலும் இத்திருபதார்த்தங்களும் (எழுவாய் பயனிலை செயப்படுபொருள்) எவ்விதமிருக்கிறதென்றுவது விசாரித்துத் தெரிந்துகொண்டதா. ஆபாஸ ஸகித அந்தக்கரணத்தை ஜீவனெனச் சொல்வதனால், அவனே உலகத்திலுள்ள ஒவ்வொரு நாமரூப விஷயத்தினையும் அறிவதற்கு எழுங்கால் இ~~[illegible]~~ பெயர்பெறுகிறான். ஒவ்வொரு விஷயத்தையும் அறியுங்கால் ஒவ்வொருதரம் எழவேண்டியதாகயிருக்கிறது. இவ்வளவு அழதுபொருந்திய எழுவாயானவன் இதுகாறுக் ஒருவிஷயத்தை பயன்படச் செய்தானாவென்று நினைத்துப் பார்க்கில் பயனில்லாக் காரியமாகவே முடிவடைகிறது. ஆனதுபற்றியே எழுவாயின் வினையே பயனிலையென்றும் சொல்லாலே வழங்கப்படுகிறது. ஒருவனுடைய செயலைக்கொண்டுதான் அவனை பெருமைபடுத்திக் கூறவேண்டும். செயல் கெடுதலாயிருக்கின், அவனுக்குப்பெருமையேது. யாவரும் தூற்றுவார்கள். இதை ஓர் முக்கிய கருத்தென வைத்து எழுவாயால் செய்யப்படும் செயப்படுபொருள் யாவும் வினையின் வசப்பட்டதாகி பயனிலை (பயன் + இல்லை) எனத் துணிந்துசொல்ல நேர்ந்தது.

ஆனால் ஜீவனாலே செய்யப்படும் எல்லாத் தொழில்களும் பயன்படாது ஒழிவது என்பதற்கு எவ்விதம் ருசுக்கொடுக்க முடியும் என்பதையும் சற்று கவனிப்போம். உலகத்தில் பெயர் உருவத்தோடு இலங்கும் சகல விஷயங்களையும் கண்ணால் பார்த்தோ காதால் கேட்டோ சரீரத்தால் ஸ்பரிசித்தோ மூக்கால் முகர்ந்தோ நாவினால் ருசித்தோ செய்த காரியங்களையும் அனுபவத்திற்கு வந்ததாக தீர்மானிக்கிறான். ஆனால் அனுபவத்திற்கு வந்ததென்பதற் கடையாளமாக அவ்விஷயங்களின் ஒவ்வொரு இலக்கணத்தையும் அழகாக ஜீவன் தன்மனதில் பதிவுபடுத்திக்கொள்கிறான். இப்பதிவுகளே ஒருவன் அனுபவத்திற்கு அத்தாக்ஷியாகும். இவைகளே ஆங்கிலத்தில் Records என்று சொல்லப்படுகிறது. இந்தப் பதிவுகளே எல்லாம் ஒருவன் பூர்ணமாக திரும்ப நினைவுக்குக் கொண்டுவர முடியாமல் மிகவும் ரஹஸ்யமாக பதிக்கப்பட்டுள்ளனவாதலால் இதற்கு சித்திர குப்தம் என்று பெயாயிற்று. ஒருவனைப்பார்த்து ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டு நீபார்த்த விஷயத்திற்கு இலக்கணம் எப்படியென்று கேட்டால் தன் பதிவுகளிலேயிருந்து திரும்ப நினைவுக்குக் கொண்டுவந்து வெளிப்படுத்திச் சொல்கிறான். அவ்விதம் சொல்லாவிட்டால் அவ்விஷயங்கள் இவனுட்புகவில்லையென ஊகிக்கிறோம். ஆனால் சகலத்திற்கும் காப்பி (Impression) எடுக்கப்பட்டு மனதிலே தங்கியிருக்கின்றது. புத்திமான்களென ஒருவாறு ஒப்புக்கொள்ளப்படும் மேநாட்டார் ஓர் உருவத்திற்குச் சரியான புகைப்படமும் சப்தத்திற்குச் சரியான பிரதிசப்தமும் (Gramaphone record) கண்டு பிடித்திருக்கிறார்கள்.

ஆனால் ஸ்பரிசத்திற்கும் ரஸத்திற்கும் கந்தத்திற்கும் சரியான காப்பி எடுக்க இன்னும் கற்றாரில்லை. நமது அந்தக்கரணத்தின் மேன்மையை கவனிக்க அதிக ஸாமர்த்யமுள்ளதாகத் தெரிகிறது. ஆனால் அது ரூபத்திற்கு நகல் எடுத்ததே தவிர அப்பதார்த்தத்தை (ரூபத்தையுடைய வஸ்துவினை) தன்னிடத்தில் கொண்டுவந்து சேர்த்து பத்திரப்படுத்தவில்லை. அப்படி இருக்கும்பக்ஷத்தில் இந்த மனது ஒரு வஸ்துவிற்குக் கூட இடம்கொடுக்க முடியாததாக ஆகும். ஆனதால் மனது கவர்வது ஸூக்ஷ்மரூப, சப்த, ரச, ஸ்பர்ச, கந்தாதிகளையே. ஸூக்ஷ்மமாக இருத்தலால்தான் எவ்வளவு விசித்ர ஐவகை விஷயங்கள் வந்து சேர்ந்திடினும் அவ்வளவையும் பதிவு செய்து கொள்ள ஆற்றலுள்ளதாக இருக்கிறது. இது மாத்திரமா. இதனுடைய நிஜ நிலைமை இவ்விதம் தான் உள்ளதென கவனித்தார்களா? மேலும் விஷயங்களை எதிரில் இல்லாமலிருக்க பதிவுகள் மாத்திரம் மனதில் ஏற்படும் பக்ஷத்தில் அது கற்பனை (பொய்) என்று ஒப்பவேண்டாமா? அப்படிப்பட்ட பதிவுகள் இல்லையென்று மறுப்பாரில்லை. ஆகலால் பொதுவாகக் கவனிக்கும்போது ஜீவனுக்கு இப்பதிவுகளே துக்க ஹேதுக்களாக இருக்கின்றன. ஏனெனில் பதிவுகளிலே இருந்து நினைப்புண்டானால் துக்கமே ஏற்படுகிறது. சிற்சிலர் விஷயங்களுக்குப் பதிவும் அப்பதிவிலிருந்து ஏற்படும் நினைப்பும் நினைப்பினால் சுகமும் ஏற்படுவதாகச் சொல்கிறார்களே எனின் அது அறியாமையைத் தவிர வேறில்லை. இதற்கு ஒரு த்ருஷ்டாந்தம் சொல்லுவோம்.

ஒருவன் சுமார் 10 மைல் தூரத்திலுள்ள க்ஷேத்திரத்திற்கு இடபாகன தரிசனத்திற்காக கட்டமுதோடு பலரோடு கூடிச் செல்கிறான். “காதம் நடந்தால் கை மூட்டையும் கற்சுமையாகும்” என்றபடி அவன் அந்தக் கட்டமுதை ஒரு பெரிய சுமையாக நினைத்தான். இது களைப்பினால் அன்றி வேறில்ல. இப்படிக்கிருக்க கட்டமுதைச் சுமக்கும் கஷ்டத்தை நினைத்து க்ஷேத்திரத்தின் ஸமீபத்தில் ஓடும் நதியைக் கண்டு கட்டமுதைச் சாப்பிட்டான். வேண்டிய அளவு தண்ணீரையும் குடித்தான். பெரிய சுமை நீங்கினதாக நினைத்து பரமசந்தோஷத்தையும் அடைந்தான். அவனுடைய சந்தோஷமே அவனுடைய அறியாமையைத் தெரிவிக்கிறது. இப்போது எவன் சுமக்கிறான். முந்தியோ கை சுமந்தது. இப்போதோ எவன் சுமக்கிறான்? இவனுடைய சரீரத்தில் மற்றொரு பாகமாகிய வயிறு சுமக்கிறது. மேலும் குடித்த தண்ணீரும்சேர்ந்து கொண்டது. இவ்விதம் சுமையானது அவனைவிட்டு நீங்காதிருக்குங்கால் எவ்விதம் சுகமேற்படும். விசாரித்துப் பார்க்கில் சுகம் கிடைத்ததென்பது அறியாமையே. இம்மாதிரியே ஜீவர்களை துக்கத்தை சுகமென்றும் சுகத்தை துக்கமென்றும் தாறுமாறாக நினைக்கிறார்கள். கர்மாக்களின் பலன்களோ சுக துக்காதிகள். கர்மாவைச் செய்யும் காலத்திலேயும் இது புண்யம் இது பாபம் என்று கவனிக்காமலே தாறுமாறாகச் செய்கிறார்கள்.

அக்ஞான காலத்தில் ஜீவர்கள் கர்மாக்களை முறைப்படித் தெரிந்துகொள்ளாமலும் அதன் பலன்களை நன்கு விசாரிக்காமலும் எவ்வளவோ ஜன்மங்களைக் கழித்திருக்கிறார்கள். அதனால்தான் இம்மாதிரி செய்வதை விட்டு விட்டு சாஸ்திரீயமாயுள்ள நிஷ்காம்ய கர்மானுஷ்டானம் உபாசனை யோகம் முதலிய சோபான கர்மங்களை இடைவிடாது அனேக ஜன்மங்களில் அப்யாசம் செய்தவனுக்கே சுத்தசித்தமானது ஏற்பட்டு அந்த சுத்தசித்தத்தில் நான்குவித சாதன சம்பத்துக்கள் உண்டாகவே அவனுடைய புண்ய பரிபாகத்திற்குத் தக்கவாறு கிடைக்கும் குருவே செய்யப்பட்ட புண்ய கர்மாக்களிதுருவமெனத் தீர்மானித்து முறைப்படி பணிந்து அவருடைய அனுக்ரகத்தால் ஆத்மனாத்ம தீவிர விசாரணையும் அதனால் தன் லக்ஷ்யஸ்வரூப ஞானமும் கிடைக்கும். ஆகவே இச்சீவன் தன் ஸ்வரூபத்தை அவித்யா சமூஹங்களினின்றும் பிரித்து நிர்விகாரி நிஷ்க்ரியன் அசங்கன் எனத் தீர்மானிப்பான். சகல திருபுடிகளுக்கும் அதிஷ்டானமாய் தன் ஸ்வரூபம் இருக்கிறதென நிச்சயஞானமுண்டாகும், அப்படிப் பிரித்துப் பார்ப்பதே இச்சீவன் செய்யும் காரியம்.

मुन्जादिषीकादिव धीरभावात् என ஸனத்ஸுஜாதீயமும்,

नाहं कर्तानैवभोक्ता प्रकृतेस्साक्षिरूपकः ।
मत्सां निध्यात् प्रवर्तन्ते देहाद्या अजडा दिव॥

முதலிய வாக்யங்களைக் காண்க. இதுதான் ஜீவன் செய்துகொள்ளவேண்டிய முடிவான காரியம்.

என். ஸாம்பசிவ அய்யர் பி.ஏ., பி.எல்.,
(தொடரும்)

முஸ்லீம்களின் (ஷரியாத்) சட்டம்.

சென்ட்ரல் லெஜிஸ்லேடிவ் அஸெம்பிளியில் முஸ்லீம்களுக்கு அவர்கள் சட்டமே (ஷரியாத்) அமுலில் இருக்கவேண்டுமென்று அப்துல்லா அவர்கள் கொண்டுவந்த பில் நிறைவேறியது. இக்காலத்தில் மதத்தை ஒட்டிய சட்டதிட்டங்கள் தேவையென்று கேட்டதே துக்கரமென்று ஜார்ஜ ஜோஸப் அவர்கள் கூறினர். துருஷ்கர்களுக்கு அவர்கள் ஷரியத்படி (Personal law) பின்பற்றாவிட்டால் அவர்களுடைய ஐக்யபாவம் குன்றிவிடும் என்றும் காங்கிரஸ்காரர்கள் இதை ஆதரிக்க வேண்டுமென்றும் ஸாபர் அலி வாதம் செய்தார். மற்ற துருஷ்க மெம்பர்களும் ஜின்னா உள்பட தங்கள் ஷரியாத்தை சட்டசபை மாற்றக் கூடாதென்று வற்புறுத்தினார்கள். அவர்கள் இஷ்டம் நிறைவேற்றது. நம்மவர்கள் ஹிந்துக்கள் தங்கள் மதம். தங்களுக்குப் பெரியதென்று எப்போது உணர்வார்கள்? தங்கள் ஆசாரம் தங்கள் தர்மசாஸ்திரம் தங்களுக்குப் பிரமாணம் என்று எப்போது கருதுவார்கள்? மிஸ்மேயோ முதலானவர்களுடையவும் நமது சீர்திருத்தக்காரர்களுடையவும் வலையில் எப்போது சிக்காமலிருப்பார்கள்? நமது நடை உடை பாவனைகளைக் கண்டு வெட்கிக்காமல் எப்போது தைரியமாய் அவைகளை பின்பற்றுவார்கள்? அப்போதல்லவா ஹிந்துக்களுக்குள் ஐக்யபத்தியம் உண்டாகும்? அப்போதல்லவா காங்கிரஸ் காரர்களும் சீர்திருத்தக்காரர்களும் ஹிந்துக்களின் சட்டத்தை மாற்றாமலிருப்பார்கள்.

M. K. V.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-ஹு புரட்டாசி-மீ 7உ

ஆலயப்பிரவேசச் சட்டமும் ஸி. ஆர். பதிலும்.

சென்னை சட்டஸபையில் 18-உயன்று ஆலயப்பிரவேசச் சட்ட விஷயமாக நடந்த பிரஸ்தாபமும் பிரதம மந்திரி ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியர் காங்கிரஸ் கவர்ன்மெண்டின் கொள்கையை வெளியிட்டிருப்பதும் தார்மிகர்களால் கவனிக்கத்தக்கவையாயிருக்கின்றன. ஸ்ரீமான் ஸஹஜானந்தம் என்பவர், புனு ஒப்பந்தத்தின்படி காங்கிரஸ் வாதிகள் ஆலயப்பிரவேசச் சட்டமியற்றிக் கொடுக்கக் கட்டுப்பட்டிருப்பதாயும், அதன்படி கனம் ஆசாரியர் ஒரு சட்டத்தை இயற்றவேண்டுமென்றும் சொன்னார். இதற்குப் பதில் கூறுகையில் ஸ்ரீமான் ஆசாரியர் பின்வருமாறு சொல்லியதாகப் பத்திரிகைகளில் காணப்படுகிறது.

> ‘கோவில் பிரவேசச் சட்டவிஷயமாக காங்கிரஸ் கவர்ன்மெண்டார் சட்டம் இயற்றித் தருவர் என புனு ஒப்பந்தத்தில் கூறப்படவில்லை. ஆனால் தீண்டாமை கோவில் பிரவேசம் இவ்விஷயங்களில் சட்டபூர்வமாக என்னென்ன தடைகள் இருக்கின்றனவோ, அவைகளை ஒழிக்க முயற்சி செய்யப்படுமென அக்காலத்தில் உறுதி கூறப்பட்டது வாஸ்தவமே. இதைக் கண்டிப்பாகச் செய்து தீருவோம்.”

இவ்வாறு கனம் ஆசாரியர் பேசியிருப்பதின் தாத்பர்யம் சிறிது குழப்பமாயிருப்பதாகச் சிலர் நினைக்கக் கூடுமாயினும் சிலவிஷயம் இதில் தெளிவுபட்டிருப்பது கவனிக்கத்தக்கதே. ஸ்ரீமான் ஸஹஜானந்தம், நேருக்கு நேரான ஒரு ஆலயப்பிரவேசச் சட்டத்தை இயற்றிக்கொடுக்கக் காங்கிரஸ் கவர்ன்மெண்டு கட்டுப்பட்டிருப்பதாகத் தீர்ப்புப்பெற முயற்சித்ததற்கு கனம் மந்திரி இடம் கொடுக்கவில்லை. புனு ஒப்பந்தத்தில் அத்தகைய நிபந்தனை கிடையாதென்றும், காங்கிரஸ் கவர்ன்மெண்டார் ஆலயப்பிரவேசச் சட்டம் இயற்ற அதன்படி கட்டுப்பட்டிருக்கவில்லையென்றும் கனம் மந்திரி தெளிவாகக் கூறியிருக்கிறார். ஆதலால் அத்தகைய சட்டம் யாதொன்றும் செய்யப்பட அவகாசமில்லையென்று கனம் மந்திரி சொல்லிவிட்டதாக நாம் நிருப்திப்பட நியாயமிருப்பதாக நினைக்கிறோம். இவ்வாறு நாம் அவருடைய வார்த்தைக்கு வியாக்யானம் செய்துகொள்ளுவது, நம்முடைய ஆசையையும், மனோரதத்தையும் அநுஸரித்து அதிகாரச் செய்துகொண்டதாகவும் இருக்கலாம். ஆயினும், ஸாதாரணகாலத்தில் ஒரு காங்கிரஸ் தலைவர் என்ற ஹோதாவில் ஜன உகப்புக்குப் பேசுவதுபோலில்லாமல், கவர்ன்மெண்டின் பிரதான நிர்வாஹியென்ற தமது பெரும் பொறுப்பை அவர் ஒருவாறு உணர்ந்து பேசியிருப்பது ஒரு விசேஷமென்பதில் சந்தேஹமில்லை. இந்த உறுதியான எண்ணத்தையும் பொறுப்பையும் அவர் கடைசிவரையில் கடைப்பிடித்து நின்று தமது கவர்ன்மெண்டின் கொள்கையை விட்டுக்கொடுக்காமலிருக்க வேண்டியது மிக்க அவச்யமானது. இதை அவர் மறக்கமாட்டாரென்று நம்புவோம்.

கனம் மந்திரியின் பேச்சில் இவ்வாறு ஆலயப்ரவேசச்சட்டம் கொண்டு வரப்படமாட்டாதென்று உறுதி கூறப்பட்டதாக நினைக்க இடமிருப்பினும் அப்பேச்சின் பிற்பகுதியின் தாத்பர்யம் விளக்கமற்றதாயிருக்கிறது. ஆயினும், தீண்டாமையை விலக்கவும் கோவில் பிரவேசத்திற்குள்ள தடையை நீக்கவும் காங்கிரஸ்காரர் கட்டுப்பட்டிருப்பதாயும் அதன்படி கார்யம் செய்யப்படுமென்றும் அவர் கூறியிருக்கிறார். புனு ஒப்பந்த காலத்தில் இத்தகைய உறுதி மொழி வாய் மூலமாகச்செய்து கொள்ளப்பட்டதென்பதை அவர் ஒப்புகிறார். தீண்டாமை விலக்கையும், ஆலயப்பிரவேசத்தையும் சட்ட நிர்ப்பந்தமூலமாக ஸாதிக்க முடியாதென்று இவர் கூறிவிட்ட பின், அவைகளை நிறைவேற்ற வேறு வழி யென்ன? பொது ஜனங்களிடையில் போய் பிரசாரம் செய்வது தான். ஆகையால் பிரசார மூலமாக ஜனங்களுக்கு மன மாறுதல் உண்டாக்கி ஆலயப்பிரவேசத்தையும், தீண்டாமை விலக்கையும் ஏற்படுத்திவிட காங்கிரஸ் வாதிகள் உறுதி கூறியிருப்பதாகவும் அதன்படி கார்யம் நடைபெறுமென்றே கனம் ஆசாரியர் தனது பேச்சில் குறிப்பிட்டதாக நினைக்கலாமா? சட்ட நிர்ப்பந்தமின்றி பிரசார மூலமாகக்காங்கிரஸ்காரர்கள் எதை வேண்டுமானாலும் ஸாதித்துக்கொள்ளுவதைத்தடுப்பாரில்லை.

இத்துடன் ஸ்ரீமான் ஆசரியாரின் பேச்சின் பிற்பகுதியானது வேறு ஒரு அர்த்தத்திற்கும் இடம்கொடுப்பதாயிருக்கிறது. நேருக்கு நேராக தேவாலயப் பிரவேசச்சட்டம் இயற்ற இவர் விரும்பாவிடினும், அதற்குள்ள தடையை நீக்க முயற்சிக்கப்போவதாகக் கூறுகிறார். இதிலிருந்து தற்போதுள்ள தேவாலயச் சட்டத்தில் மாறுதல்செய்து, டிரஸ்டிகள் விரும்பிய இடங்களில் ரெபரெண்டம் மூலமாகப் பொதுஜன வாக்கு எடுத்து, அநுமதி கிடைத்தால் ஆலயப்பிரவேசம் செய்யப்படலாமென்று ஒரு “அனுமதிச் சட்டம்” இயற்ற இவருடைய வார்த்தை இடம்கொடுக்கக் கூடியதாயிருக்கிறது. இது ரங்கய்யர் மசோதாவை அநுஸரித்த கொள்கையாயிருக்கும். ஆயினும் இம்மாதிரி அநுமதிச்சட்டம் இயற்றுவதும், ரெபரெண்டம் எடுப்பதும் அநுபவத்தில் பிரயோஜனப்படாததுடன் பெரும் குழப்பத்திற்கும் வீண் சச்சரவுகளுக்கும் இடம் கொடுக்கக்கூடியவை என்பது ஏற்கனவே தக்க ஆதாரங்களுடன் பலமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. தேவாலயங்களின் சுத்தியையும், தெய்வ ஸான்னித்யத்தையும் பொறுத்தவரையில், நேருக்கு நேராக ஆலயப்பிரவேசச் சட்டம் செய்வதற்கும், இந்த மாதிரி அநுமதிச் சட்டத்திற்கும் எவ்வித வித்யாஸமும் இல்லை, ஆகையால் சட்டமியற்றப்போவதில்லையென்று கூறிய இவர், வேறு வழியில் மறைவாகச் சட்டமியற்ற விரும்புவதாக தோன்றுகிறது. ஆதலால் கனம் ஆசாரியர் தமதுபொறுப்பை உணர்ந்து நியாயவழியில் உறுதியாக நின்று எல்லா பிரஜைகளுடையவும் உரிமையைப் பாதுகாக்கக் கடமைப்பட்டிருப்பதை ஞாபகப்படுத்துகிறோம்.

குறிப்புகள்.

கிளர்ச்சியின் வெற்றி!

லாகூரில் ராணுவத்தினரின் மாம்ஸ ஆஹாரத்திற்காக ஒரு மாடறுக்கும் கட்டிடம் கட்ட இந்தியா கவர்ன்மெண்டார் தீர்மானித்ததை ஆக்ஷேபித்து பலமான கிளர்ச்சி நடந்ததின் பயனாக அந்தக்கட்டிடம் கட்டும் உத்தேசத்தை நிறுத்திவிட்டதாக கனம் வைஸ்ராய் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அந்தக் கட்டிடம் கட்டுவதால் கவர்ன்மெண்டுக்கு ஸௌகர்யமதிகமுண்டாயினும் பொது ஜனங்களுடைய மத உணர்ச்சியை மதித்து இந்த முயற்சியை நிறுத்திவிட்டதாக ராஜப்பிரதிநிதி கூறுகிறார். ஹிந்துக்களுடைய மனோபாவத்தை மதித்து ராஜப்பிரதிநிதி இம்மாதிரி நடந்துகொண்டதன் மூலம் அவர் பொதுஜனங்களுடைய நன்மதிப்பிற்குப்பாத்திரமாகிவிட்டாரென்பதில் ஐயமில்லை.

இந்த ஸம்பவத்திலிருந்து நமது தார்மிக ஸமூஹத்தார் கவனிக்கவேண்டிய விஷயங்கள் பல உள. லாகூரில் இந்தமுயற்சி செய்யப்பட்ட உடனேயே எல்லா ஸமூஹத்தினரும் கட்டுப்பாடாக இதை எதிர்க்க முன்வந்தார்கள். அநேக கண்டனக்கூட்டங்களும், வேலை நிறுத்தங்களும் நடைபெற்றன. செல்வாக்குள்ள பல பெரிய மனிதர்களும் தங்கள் ஸொந்த ஹோதாவில் இதை ஆக்ஷேபித்து ஸர்க்காருக்கு எழுதினார்கள். மாடறுக்கும் தொட்டி ஏற்படாமல் தடுக்க பலமான ஸத்யாக்ரஹம் ஏற்பாடுசெய்யப்பட்டது. பல பிரமுகர்கள் தைர்யமாயும், தன் மதிப்பை கருதாமலும் இதில் சேர முன் வந்தார்கள். வெளி மாகாணத்தலைவர்களுடைய பின்பலமும் இந்த கிளர்ச்சிக்கு கிடைத்தது. பண்டித மாளவியாஜி போன்ற பெரிய தேசத்தலைவர்களும் இதில் உதவி புரிய முன் வந்தார்கள்.

இவ்வளவு பலமாயும், கட்டுப்பாடுள்ளதும், உறுதியானதுமான கிளர்ச்சி கிளம்பியபிறகு கவர்ன்மெண்டார் என்ன செய்ய முடியும்? ஆதலால் தான் ராஜப்பிரதிநிதி அவர்கள் இக்கிளர்ச்சியை மதித்துத்தமது முயற்சியை நிறுத்த நேர்ந்தது.

நாம் செய்யும் ஸநாதநதர்ம பிரசாரத்திலும் மேற்கண்ட வழிகளை அநுசரித்து உண்மையான பொறுப்புடன் கார்யங்களைச்செய்தால் நாம் எந்த வெற்றியைத்தான் அடைய முடியாது?

ஸஹஜானந்தரின் நாடகம்!

சென்னை சட்டஸபை அரங்கத்தில் ஸஹஜானந்தரின் நாடகம் வெகு விசேஷமாக நடந்தது. தம்மைவிளம்பரப்படுத்திக்கொள்ள அவர் சில வழிகளைக்கையாண்டார். தீண்டாத ஸமூகத்திற்கு இவர் தலைவராக ஆகிவிட முயற்சித்துப்பலதடவைகளில் தோல்வியுற்றிருக்கிறார். அந்த ஸமூஹத்தின் உண்மையான முன்னேற்றத்திற்கு இவர் தன்னலத்யாகம் செய்து மனப்பூர்வமாகஉழைத்து வருவதாக காட்டிக்கொள்ள அடிக்கடி முயற்சிப்பதுவழக்கம். தீண்டாதாருக்கு இவர்செய்துள்ள ஊழியங்களைப்பற்றிச்சில மாதங்களுக்கு முன் பத்திரிகைகளில் பல ராகயுத்தம் நடந்ததை ஒருவரும் மறந்திருக்கமாட்டார்கள். நந்தனு கல்விக்கழகநிர்வாஹ விஷயமாக இவரைப்பற்றி வெளியான விவரங்கள் பலருடையமனதில் படிந்திருக்கும். தீண்டாத ஸமூஹத்திற்கு இவர் செய்து வரும் ஊழியத்தைப்பற்றிப்பலர்பஹிரங்கமாக தோஷம் சொல்லி விட்ட பின் அந்த ஸமூஹத்தார் இவரைப்பற்றி என்ன நினைப்பார்கள்? ஆதலால் சட்ட ஸபையில் தமது வீர்யத்தைக்காட்டிப்பேசி தீண்டாத ஸமூஹத்திற்குத்தாமே நண்பரென்பதைக்காட்டிக் கொள்ள வேண்டாமா?

அதற்காக இந்த ஆனந்தர் சட்ட ஸபையில் நீக்குப் போக்கில்லாமல் தீண்டாதாருக்கு பரிந்து பேசி ஆர்ப்பாட்டம்செய்யப்புறப்பட்டிருக்கிறார். இனி காந்திஜி, காங்கிரஸ் மந்திரிகள் இவர்களை விட ஸஹஜானந்தரே தீண்டாத ஸமூக நண்பரென்று யாவரும் நினைத்து விடுவர் போலும்!

கீதையும், உபநிஷத்தும் இவர் கொண்டு போய் சட்ட ஸபையில் அவிழ்த்தாராம். இந்தப் புஸ்தகங்களில் தீண்டாமைக்கு ஆதாரமிருப்பதாக யாராவதுகாட்ட முடியுமா வென்று அந்தக்கூட்டத்தில் இந்த ஸிம்மம் கர்ஜனை செய்து விட்டது. எவராவது பதில் சொல்ல முடிந்ததா? ஒரு வர்பாராவது வாய் திறக்க வில்லை. ஐரோப்பியர், மஹம்மதியர், கிருஸ்தவர் தாழ்ந்த வகுப்பினர் தொழிலாளர் பிரதிநிதி போன்ற பல மெம்பர்களிலிருந்தும் ஒருவராவது இவருடைய கர்ஜனைக்கு ஈடு கொடுக்க முடிந்ததா! காந்தி சிஷ்யர்களான காங்கிரஸ் வாதிகளோ மந்திரிகளோ ஸஹஜானந்தரின் சாஸ்திர வாதத்திற்கு பதில் சொல்ல முடியுமா? எல்லோரும் திகைத்துநின்றார்கள். ஸஹஜானந்தரின் கர்ஜனை வெற்றி பெற்றது. இதைவிட அவருக்கு வேறு வெற்றி எதற்கு?

எதிர்த்துப் பேசுவோர் இல்லாதவரையில் எதையும் பேசலாமல்லவா? கீதையையும் உபநிஷத்தையும் இவர் இங்கு எதெற்காகக் கொண்டுபோனாரோ தெரியவில்லை. ஸமீபத்தில் சென்னையில் நடக்கப்போகும் சீர்திருத்த பரிஷத்திற்குக் கொண்டுபோகும்படி முதன் மந்திரி இவருக்கு யோஜனை சொல்லியிருக்கலாம். ஸஹஜானந்தர் கொண்டுபோன இவ்விரு புனிதப் புஸ்தகங்களிலும் தெய்வசக்தி இருந்ததாக யாராவது ஒப்புக்கொள்ளுவார்களா? அந்தோ! பரிதாபம்!!

ஸஹஜானந்தர் இத்துடன் நிற்கவில்லை. காங்கிரஸ்காரர்கள் ஆலயப்பிரவேசச் சட்டம் செய்வதாக வாக்களித்திருந்ததும் இதுவரையில் மந்திரிகள் ஒன்றும் செய்யவில்லையென்று குற்றம் சாட்டினார்.

ஸ்ரீ வேதாந்த தேசிக பக்தஸபை மதுரை.

6-வது உத்ஸவ பூர்த்தி.

மதுரை ஸ்ரீ வேதாந்ததேசிக பக்தஸபையின் 6-வது வருஷக்கொண்டாட்டம் சென்ற வாரம் வெள்ளி, சனி, ஞாயிறு மூன்று தினங்களில் கூட்ஸ்ஷெட்டு தெருவிலுள்ள தர்மசாலைக் கட்டிடத்தில் வெகு விசேஷமாக நடந்தேறியது. மஹாமஹோபாத்யாய சேட்லூர்; ஸ்ரீ உ. வே. நரஸிம்ஹாசாரியஸ்வாமி ஸபையில் அக்ராஸனம் வஹித்தார். பிரதி தினமும் ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். உள்ளூரிலுள்ள எல்லா ஸம்பிரதாயஸ்தர்களும், பிராம்மணேதரர்களும் ஸ்திரீகளும் நிறம்ப வந்திருந்தார்கள். அக்கிராஸநாதிபதியை பூர்ண கும்பத்துடன் வேத மந்திரங்களைச்சொல்லி வரவேற்று உபசரித்தார்கள். உபசரணைக் கமிட்டித்தலைவரான ஸ்ரீமான் நெரூர் வித்வான் நாராயண அய்யங்கார் ஸ்வாமிகளால் ஸம்ஸ்கிருதத்தில் ஓர் உபசாரப்பத்திரம் படித்துக்கொடுக்கப்பட்டது. ஸபைக் கார்யதர்சி ஸ்ரீமான் வி. கே. ஸ்ரீநிவாஸாசாரியஸ்வாமிகளால் வருஷாந்தர ரிபோர்ட் வாசிக்கப்பட்டது. அக்கிராஸநாதிபதியின் தலைமைப் பிரஸங்கம் முடிந்தபின் வித்யார்த்திகள் சிலருக்குப் பரிசு வழங்கப்பட்டு வெள்ளிக்கிழமை ஸபை முடிந்தது.

மறு இரு தினங்களிலும் வித்வான்களின் உபந்யாஸங்கள் நடைபெற்றன. திருச்சி வக்கீல் ஸ்ரீமான் ஏ. வி. கோபாலாசாரியர், கும்பகோணம் காலேஜ் மாஜி பிரின்ஸிபால் ஸ்ரீமான் கே. எஸ். பாட்ராசாரியர், நெரூர் ஸ்ரீமான் நாராயண அய்யங்கார், ஸ்ரீராமதேசிகாசாரியர், தில்லையம்பூர் ஸ்ரீ வெங்கடாசாரியர் அக்னிஹோத்ரம் ஸ்ரீ கோபாலதேசிகாசாரியர் தத்தங்குடி கிருஷ்ணய்யங்கார் முதலிய பலவித்வான்களால் அநேக முக்ய விஷயங்களைப்பற்றி அழகாக உபந்யஸிக்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை மாலை 5-மணிக்கு ஸபை கார்யங்கள் முடிந்த பின் அக்ராஸநாதிபதி ஸ்வாமி ஒவ்வொரு உபன்யாஸகரின் உபன்யாஸத் திறமையையும், விஷயப் பெருமையையும் எடுத்துக் கூறி முடிவுரை சொல்லி ஸபாஸதிகாரிகளுக்குத் தமது ஸந்தோஷத்தை அறிவித்தார்.

பிறகு வித்வான் நெரூர் நாராயண அய்யங்கார் ஸ்வாமிகளால் தலைவருக்கும் பண்டிதர்களுக்கும் விஜயம்செய்திருந்த கனவான்களுக்கும், தர்மசாலா அதிகாரிகளுக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டது. ஸபையில் விஜயம் செய்திருந்த எல்லா ஸம்பிரதாயத்தைச்சேர்ந்த பிரமுகர்களுக்கும் பண்டிதர்களுக்கும் மாலை சூட்டப்பட்டு தாம்பூலம் பழம் வழங்கப்பட்டன. ராமேச்வர தேவஸ்தான பாடசாலை மாஜி பிரின்ஸிபால் அவர்களால் எழுதி அனுப்பப்பட்ட வாழ்த்து சுலோகங்கள் படிக்கப்பட்டு மங்களகரமாய் மாலை 6-மணிக்கு ஸபை பூர்த்தியாகியது. ததீயாராதனாதி வஸதிகள் தர்மசாலாதிகாரிகளால்வெகுசிரத்தையுடன் நன்கு செய்யப்பட்டன. கார்யதரிசி ஸ்ரீமான் வி. கே. ஸ்ரீநிவாஸாசாரியர் முதலியவர்களுடைய முயற்சி பாராட்டத் தக்கதே.

ஒரு நிருபர்.

தமிழ் “சீக்ரரேகா பரீக்ஷை”

5-9-37 ந் தேதிமாலை 2-மணிக்கு ‘சீக்ரரேகா’ என்ற ‘தமிழ் ஷார்ட்ஹாண்ட்’ பரீக்ஷை மகா-ள-ஸ்ரீ கே. குப்புசாமி அய்யர் அவர்கள் எம். கே. வைத்யநாதய்யர் அவர்கள், மஹாலிங்கய்யர் அவர்கள், ஆர். ஸ்வாமிநாதய்யர் அவர்கள், ஆகிய இவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. ஸ்ரீமான் மஹாலிங்கம் அய்யர் அவர்கள் 400-வார்த்தைகள் கொண்ட “பழக்கம்” என்னும் வியாஸத்தை 10-நிமிஷங்களில் படித்தார்.

கீழ்க்கண்டபையன்கள் பரீக்ஷை எழுதினார்கள்:—

1. முத்து கிருஷ்ணன் (ராஜாபாடசாலை)
2. ராஜகோபாலன்
3. G. சந்திரமௌளீஸ்வரன் VI Form T. H. S
4. R. வெங்கட சுப்ரமணியன் (Dabirwest)
5. V. கிருஷ்ணமூர்த்தி (Student II Form)

இவர்களில் முதன்மையாக முத்துகிருஷ்ணன் என்பவனும் அதற்கு அடுத்தபடியாக G. சந்திரமௌளீச்வரன் என்பவனும் நன்றாக எழுதித் தேறினார்கள்.

முதலில் தேறினவனுக்கு மெடலும் மற்றவர்களுக்கு (சர்டிபிகேட்டுகள்) பயிற்சி பத்திரங்களும் கொடுக்கப்பட்டன என்று ‘சீக்ரரேகா’ பிரசாரகர் S. S ராமன் தெரிவிக்கிறார்.

ஸ்ரீ ஜகத்குரு
வியாஸபூஜா முகாம்

Palokol
(க்ஷீராராம க்ஷேத்திரம்.)
West Godavary Dt.

ஜப்பானில் படிப்பு.

டோக்கியோவில் நடந்த அகில பூமண்டல வித்யா ஸங்கத்திற்கு டெலிகேட்டாகச் சென்ற மிஸ் க்வாமார்ஜஹான் அலி என்ற முஸ்லீம்ஸ்திரீ, ஜப்பானில் ஆண் பெண்பாலர்கள் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிப்பது(Co-education) இல்லை என்றும் அது முக்கியமாய் கவனிக்கத் தக்கதென்றும் பல்லாவரத்தில் ஒரு பிரஸங்கத்தில் தெரிவித்தார்.

M. K. V.

ஸம்ஸ்கிருதத்திற்கு பரிசு.

திருச்சிநாப்பள்ளி ஸம்ஸ்க்ருத ஸாஹித்ய பரிஷத்தில் வருகிற 10—10—37உ-க்குள் “संस्कृताभ्युन्नतौ अनुष्ठेयाः उपायविशेषाः॥” என்ற விஷயத்தைப்பற்றி பள்ளிக்கூடத்து மாணவர்களிடமிருந்து வியாஸங்கள் அபேக்ஷிப்பதாகவும் அவைகளில் ஸம்ஸ்க்ருத காலேஜ் மாணவர்களுடைய வியாசங்களில் உயர்ந்ததற்கு ஒரு பரிசும், ஆங்கில கலாசாலை மாணவர்கள் வியாசங்களில் உயர்ந்ததற்கு ஒரு பரிசும் கொடுப்பதாக திருச்சி உறையூர் S. M. High School ஸம்ஸ்க்ருத ஸாஹித்ய பரிஷத் காரியதரிசி அவர்கள் நமக்கு தெரிவித்திருக்கிறார்கள்.

ஸ்ரீ ஆராவமுதன் லக்ஷார்ச்சனை.

ஆச்ரிதஜந ஸம்ரக்ஷணார்த்தமாக பூலோக வைகுண்டம் என்றுசொல்லும் செழுமாமணிகள் சேரும் செழுநீர் திருக்குடந்தையுள் கோயில்கொண்டு எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ கோமளவல்லீ ஸமேத ஸ்ரீ அபர்யாப்தாம்ருதனுக்கு வருஷந்தோறும் செய்துவரும் லக்ஷார்ச்சனை நிகழும் ஈச்வர-ஹு புரட்டாசி மாதம் 1உ வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பித்து புரட்டாசி-மீ 30உ வரை நடத்தி அர்ச்சனை பூர்த்திக்கு புது பீதாம்பரம் ஸமர்ப்பிக்கிறபடியால் ஷை கைங்கர்யத்தை பூர்த்தி செய்து ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி கிருபா கடாக்ஷத்திற்கு பாத்திரர்களாகும்படி பிரார்த்திக்கிறோம்.

சென்ற தாது-ஹு வரையில், 15,5,0000, அர்ச்சனைகள் நடத்தப்பட்டன என்று ஷை கோயில் பூஜாமிராசு பாத்யஸ்தர்களான அ. ஸ்ரீநிவாஸ பட்டாச்சாரியரும், கோ. பத்மநாப பட்டாச்சாரியரும் அறிவிக்கிறார்கள்.

திப்பிருஜபுரத்தில் உபன்யாசங்கள்.

ஆவணிமீ 13உ வையாகரண ப்ரும்மஸ்ரீ ஸாம்பசிவ சாஸ்த்ரிகளால் பாகவதத்திலுள்ள க்ருஷ்ணாவதாரகதை உபன்யஸிக்கப்பட்டது. மறு நாள் முதல் ப்ரும்மஸ்ரீ மந்த்ரமூர்த்தி கிருஷ்ணசாஸ்திரிகளால் ப்ரம்ம வைவர்த்தம் தேவீ பாகவதம், தர்மஸம்ஹிதை இம்மூன்று புராணங்களையும் அனுஸரித்து நிரூபித்து 12 விதமான க்ருஷ்ணாவதார காரண ரஹஸ்ய சரித்ரங்களையும் ஷை-மீ 32வரையில் தினந்தோறும் உபன்யஸிக்கப்பட்டு பௌராணிக ராதாகல்யாணத்தோடு பூர்த்திசெய்யப்பட்டது. விஷயங்கள் அபூர்வமாயும், சொற்சுவை வசன சமத்காரங்களுடன் கேட்டவர்களுடைய மனஸை கவரச்செய்து பக்தியை உண்டாக்கியது.

நாராயண சிரௌதி.

நமது
ஆயுர் வேத மஹிமை.

(காக்கழனி கிருஷ்ணமூர்த்தி)

(5—8—37 தொடர்ச்சி.)

நம்நாட்டின் இயற்கைப் பொருள்களில் மஹா சக்திவாய்ந்த பல மூலிகைகளுண்டு. அம்மூலிகைகள் சமுத்திரதீர பிரதேசத்தை விட மலைப்பிராந்தியங்களில் அதி வீர்யத்துடன் உற்பத்தியாகிறது. அவ்விதம் உண்டாகும் அநேகமூலிகைகள் அயல்நாட்டுக்குக் கொண்டுபோகப்பட்டு, அங்கிருந்து (Patent Medicine) வெளிநாட்டாருக்கு அனுப்பப்பட்டு அம்மருந்துகளால் இப்பொழுது நமக்குவைத்தியம் செய்யப்படுகிறது. வெளிநாட்டு வைத்திய முறைகள் சிலாக்கியமானது போல் அவர்கள் உபயோகிக்கும் ஔஷதிகள் (Raw Drugs) நம் நாட்டில் உற்பத்தியானதாகவிருந்தும், மருந்து செய்யப்படும் ரூபங்களில் வித்தியாச பலனேற்படக்கூடியது. உதாரணமாய் ஆயுர்வேத முறையில் சுக்கு, திப்பிலி, ஏலம்போன்ற சரக்குகளை கஷாயம், வடகம், சூர்ணம் என்றவிதமான ரூபங்களாய் உபயோகிக்கப்படுகிறது. அதே சரக்குகளை யூனானி வைத்தியர்கள் வெகு ருசிகரமான முரபா, ரசாயனம், ஷர்பத்து முதலான ரூபங்களாய் செய்துகொடுக்கிறார்கள். இங்கிலீஷ் வைத்திய முறைகளிலோ அச்சரக்குகளை திரவரூபமான (Tincture) என்ற மருந்தாகச் செய்கிறார்கள். ஒவ்வொன்றிலும் அதிலதில் உள்ள சரக்குகளின் வீரியம் ஒரேமாதிரியாகவிருந்து குணம் தந்தாலும், இங்கிலீஷ் முறைகளான டிஞ்சர் என்ற ரூபம் நாட்டுக்கு ஏற்றதன்று. அதில் சாராய இனங்கள் (Alcohol) சேர்க்கப்படுவதால், அவைகள் குளிர்தேசமான ஐரோப்பிய நாடுகளுக்குப் பொருந்துமேதவிர, நம்நாட்டு சீதோஷ்ண ஸ்திதிக்குப் பொருத்தமுள்ளதல்ல. மேலும் வர்ஜிக்கப்பட்ட லாஹிரி வஸ்துக்களை ஔஷத ரூபமாய் நாம் உட்கொண்டாலும் நம் சதாசாரம் கெட வழியுண்டு.

வியாதியை நிதானித்தறியும் கிரமத்திலும் (Diagnosis) ஆயுர்வேத வழி சிலாக்கியமானது. ஆயுர்வேதத்தில் நாடிப் பரீக்ஷை முக்கியமானது. நாடிப் பரீக்ஷை செய்வதற்கு முதலில் ரோகியை அவன் வாத தேஹியா, பித்த தேஹியா, அல்லது சிலேஷ்ம தேஹியா என்று கவனித்துக்கொண்டு, எந்தெந்த தேஹிக்கு எந்தெந்த காலத்தில் நாடி பார்க்கவேணுமோ அந்த காலத்தில் கை, கண்டம், கன்னப்பொறி, கால் பெருவிரல், கணுக்கால், முதலான இடங்களில் நாடியை பரிக்ஷிக்கவேண்டிய கிரமம் ஆயுர்வேதத்திலுண்டு. தற்கால இந்திய வைத்தியர்களோ அவைகள் யாதொன்றையும் கவனிக்காமல் ரோகியின் கையில் மட்டும் நாடிபார்த்து ரோக நிதானம் செய்கிறார்கள். எல்லாம் மூடமந்திரமே யொழிய வேறல்ல. இங்கிலீஷ் வைத்தியர்களோ சப்தவேணுவென்ற ஓர் கருவியின் உதவியால் ரோகியின் ஹிருதய நடையை சோதித்து ரோக நிதானம் செய்கிறார்கள்.

நாடி நரம்போ ஒரே குழல் தான், அதில் ஓடுகிற ரத்தமும் ஒரேவிதந்தான். அப்படிக்கிருந்தும் அதை மூன்று விரல்களால் சமனாய் அழுத்தும்பொழுது, நரம்பானது ஒரு இடத்தில் அழுந்தியும் ஒரு இடத்தில் மேலாகவும் இருப்பதால் அவைகள் அடித்துக்கொள்ளும் விசையில் உள்ள வித்தியாசங்களைக்கொண்டு, வாதம், பித்தம், சிலேஷ்மம் என்ற மூன்றின் கெதியையும் ஹிந்து வைத்தியர்கள் அறிய வேண்டிய அவசியமாகிறது. அவைகளின் நடைகளை அறிவதற்கு அன்னம், அட்டை, ஓணன், காக்கை. கோழி முதலானவைகளின் நடைகளை ஒத்திட்டுபார்க்கும்படி ஆயுர்வேத நூலில் சொல்லப்படுகிறது. இதற்கே கொஞ்சம் ஊஹபுத்தி அவசியம். இதைத்தவிர நாடி நடையையனுசரித்து குருநாடி, பூதநாடி முதலான இரகஸ்ய நடைகளை அறிவதற்கு இன்னும் அதிக ஊஹபுத்தி அவசியமல்லவா! அதினால் இவ்வுயர்ந்த வித்தை குருபரம்பரையிலுள்ளதாகும். குருவன்றி இவ்வித்தையைக் கற்க வியலாது. நாடிப் பரிக்ஷைதவிர, மலம் மூத்திரம் முதலான இதரபரிக்ஷைகளுமுண்டு. அவைகள் எல்லா வைத்திய முறைகளிலும் ஒரேமாதிரியாகவே அனுசரிக்கப்படுகிறது.

ரோகியின் ரோகம் இன்னதெனக் கண்டுபிடித்தாலும், அந்த ரோகம் ஏற்பட்டதற்குக் காரணம் கண்டுபிடிக்கும் வழியில் இந்திய வைத்ய ரீதி வெகு உயர்ந்தது. காரணம் ஏதுவெனக் கண்டபின், அதற்கான சிகிச்சையும் இந்திய வைத்தியத்தில் இதர சாஸ்திர அநுசாரணையிலிருப்பதால், அந்த சிகிச்சையும் உயர்ந்ததே. நமது பூர்வாசாரியர்கள், ரோகமுண்டாகும் காரணத்தை, பொதுவாய், (2) கர்மஜம், (2) தோஷஜம், (3) உபயஜம் என்ற மூன்றுபிரிவிலடக்கியிருக்கிறார்கள். ரோகத்துக்குக் காரணம் கர்மஜமாயிருந்தால் அதற்கு நவக்கிரஹசாந்தி, ஹோமங்கள், ஸஹஸ்ரநாமாதி பாராயணங்கள், தெய்வப்பிரார்த்தனைகள் முதலான மந்திர பூர்வ சிகிச்சையும், தோஷஜமாயிருந்தால் ஔஷதங்களின் பிரயோக சிகிச்சையும், உபயஜமாயிருந்தால், மந்திரபூர்வ சிகிச்சையுடன் ஔஷதப்பிரயோக சிகிச்சையும் அவசியமாகும். இக்காலத்தில் கேவலம்ஔஷதசிகிச்சையைத் தவிற மற்றொன்றிலும் பலருக்கு நம்பிகையில்லாமல் போய்விட்டது. அந்த ஆஸ்திக அனுஷ்டானம் கைவிடப்பட்டதால், அநேகம் ரோகங்கள் சுலபமாய் நிவிர்த்தியாகாமல், கலியுக சிகிச்சையான இன்ஜக்ஷன் Injection முறையில் மருந்து செலுத்தப்பட்டு, ஏராளமான பணச்செலவுசெய்தும், பயனில்லாமல் போகிறது.

இந்து வைத்திய சிகிச்சைக் கிரமத்தை யனுசரித்து அந்நூல்களில் ரசம், கந்தகம், பாஷாணம் முதலிய தாது வர்க்கங்களைக் கொண்டு செய்யப்படும் சிகிச்சைக்கு தெய்வ சிகிச்சையென்றும், மூலிகைகளால் செய்யப்படும் மருந்தின் சிகிச்சைக்கு மானுஷ சிகிச்சையென்றும், காரம், க்ஷாரம், அக்னி, சஸ்திரம் முதலானதால் செய்யப்படும் சிகிச்சைக்கு ராக்ஷஸ சிகிச்சையென்றும், மந்திரம், பூஜை, ஜபம், ஹோமம் முதலானவைகளால் செய்யப்படும் சிகிச்சைக்கு மாந்திரீக சிகிச்சையென்றும் பெயரிடப்பட்டிருக்கிறது.

இன்னும் இவ்வரிய வித்தைக்குப் பக்கபலமாக ஜோதிஷ சாஸ்திரமும், சகுன சாஸ்திரமும் உதவுகிறது. இன்னின்ன நாள், திதி, நக்ஷத்திரங்களில் ரோகமுண்டானால், அவை சிகிச்சைக்கு சாத்தியப்படும் அல்லது அசாத்தியமாகுமென்பதையும், வைத்தியன் ஒரு ரோகிக்கு முதலில் இன்னநாளில்தான் மருந்துகொடுக்க வேணுமென்ற ஒரு விதியையும் ஜோதிஷ சாஸ்திரம் சொல்லுகிறது. அதுபோலவே, சகுன சாஸ்திரமும் ரோகியைப்பார்க்க வைத்தியன் புறப்பட்டுப் போகும்பொழுது நேரும் சகுனத்தை யனுசரித்து ரோகத்தின் சாத்தியாசாத்தியங்களை குறிப்பிடுகிறது.

இவ்விதமே நம்நாட்டு சாஸ்திரங்கள் யாவும் ஒன்றை ஒன்று தழுவி, ஒன்றுக்கொன்று உதவியாய் உண்டுபண்ணப்பட்டிருப்பதால், நாம் நமது பூர்வாசாரங்களில் எதையாவதொன்றை புறக்கணித்தாலுங்கூட, ஒவ்வொன்றையுமிழந்து, முடிவில் யாவுமிழக்கப்பட்டு பின் எதையும் சாதிக்க முடியாமல் போய்விடுகிறது.

அன்னியரால் நம் நாடு கொஞ்சங் கொஞ்சமாய் அபகரிக்கப்பட்டு, ஆளுகையும் அவர்களிடம் சிக்கியதால், அவர்கள் அந்நியர்களான அவர்களின் வைத்திய முறையையே எங்கும் பரவும்படி செய்துவிட்டார்கள். இந்திய வைத்தியத்துக்கு ஆதரவற்றதும், இந்திய வைத்தியர்கள் அரைகுறையான வைத்தியமுறைகளைக்கற்று, மனம்போனபடி சிகிச்சைசெய்து, நம் வைத்திய முறைகளை க்ஷீணகெதிக்குக் கொண்டுவந்துவிட்டார்கள். சொல்பகாலத்துக்கு முந்தித்தான் பல பிரமுகர்களின் முயற்சியால் நம் நாட்டு வைத்திய முறைகள் உத்தமமானதென கவனிக்கப்பட்டு, அவைகளை விர்த்திசெய்ய அரசாங்கத்தின் உதவியையும் அடைந்தார்கள். இதேபோல் நம் சுகாதாரங்களுக்கு இன்றியமையாத பல சதாசாரங்களும் பாழாகாமல் பார்த்துக்கொண்டால், நாம் பரம பாக்கியசாலிகளாவோம்.

சர்வ சுகத்துக்கும் சாதனமான பூர்வீக சதாசாரமானது, நமக்கு சர்வ புருஷார்த்தங்களையும் அளிக்க வல்லதாகையால், இனியாவது நாம் யாவரும் அதில் சிரத்தைகொண்டு சாச்வதமாயுள்ள க்ஷேமத்திற்கே பாடுபட பகவான் நம் யாவருக்கும் ஆஸ்திக புத்தியை தந்தருளட்டும்.

தார்மிகர்கள் செய்யவேண்டிய வேலை.

சென்னையில் ஒரு கூட்டம்.

சென்னை முத்தியால்பேட்டை வர்ணாச்ரம சுயாராஜ்ய சங்கத்தினாதரவில் 5–9–37 ஞாயிற்றுக்கிழமை காலையில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. அப்போது மாகாண வர்ணாச்ரம சுயாராஜ்ய சங்கத்தைச்சேர்ந்த ஸ்ரீமான் T S-ராமஸ்வாமியய்யர் தலைமையில் எழுமூர் R. நாராயணசாமியய்யர் மேற்கண்ட விஷயத்தைப் பற்றிப்பேசினார். பிரம்மஸ்ரீ சோமதேவ சர்மா அவர்கள் அன்று தாம் நடத்தி வரும் கீதை வகுப்பை நிறுத்தி இக்கூட்டத்திற்கு இடமளித்தார். தலைவர் முன்னுரையில் இம்மாதிரி கூட்டங்கள் எங்கும் நடத்த விரும்புவதாகத் தெரிவித்து அரசியல் வாதிகள் மத உரிமைகளைப்பற்முதல் செய்யாலாகாதென்று விளக்கினார். ஸ்ரீமான் R நாராயணசாமியய்யர் முக்ய விஷயங்களைக்குறிப்பிட்டுபேசினார். தர்மத்திற்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்துக்களை விளக்கியும் ஜனங்கள் அவற்றை தடை சேய்ய வேண்டிய வழிகளைக்காட்டியும் ஆயிரக்கணக்காக துண்டு பிரசுரங்களை அடிக்கடி வெளியிட்டுக்கொண்டும் ஆர்ய தர்மம் போன்றபத்திரிகைகளை பிரசார முறையில் பலம் பெறச்செய்து எங்கும் பரவச்செய்யவும் மற்ற பலம்மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் சொன்னார்.

மற்றும் பலர் பேசிய பிறகு குருவாயூர் கோயில் டிரஸ்டியாக இருந்து அதற்கு ஏற்பட்ட போராபத்தை தடுத்த வீரர் ஸாமரின் இறந்ததற்காகத்துக்கம் பாராட்டி ஒருதீர்மானம் ஸ்ரீவத்ஸ சோம தேவ சர்மாவால் கொண்டு வரப்பட்டு நிறை வேறியது. கொச்சி மன்னரையும் அவரிடம் தூது சென்ற சநாதநக்கூட்டத்தையும் பாராட்டி மற்றொரு தீர்மானம் நிறைவேறியது. புரசை வாக்கம் ஸ்ரீமான் B·S வைத்தினாதய்யர் 19–9–37 ல் அங்கு ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்வதாக வாக்களித்த பிறகு ஸ்ரீமான் T·K ஜகந்நாதாசாரியார் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

ந—வி—தி

Copy of a letter addressed to Mahatmajee on the necessity for restoring village autonomy in India.

Dear Mahatmajee,

Your great and noble services to the vast millions and particularly the poor toiling masses living in the 7 lakhs of villages in India have laid them all under a deep debt of gratitude towards you and the affection towards you is growing day by day in proportion to your incessant work for the welfare of the masses. In your recent article in the 'Harijan' (24-7-37) you have drawn the attention of all Congress Ministers to the fact that they have the whip hand and that they have enough freedom of action for national growth with a view to attain complete independence and secure the welfare of the starving millions. Your keen insight has made you realise that even without sufficient money much can be done on the 'service motive' as there are 70crores of hands to toil. You have found out also by experience that 'villagers may not be coerced into doing anything, but they can be educated to do things which enrich them morally, physically and economically.' The greatest problem before the country therefore is to improve the condition of the vast masses in all respects. Your aim has always been to secure atleast the substance of independence for the people.

M. Bartholemy Saint Hilarie has said: In no country in the whole world has village autonomy been so well developed as in India.'

Prof: Monier Williams has said: 'It was self Government in all its purity. well developed were the relations between the people and the state etc.'

Sir Charles Metcalfe also said: "Village communities in India are little republics having nearly everything they can want within themselves and almost independent of foreign control.

Lord Ronaldshay, late Governor of Bengal who had made a special study about the indigenous system of self Government in India has said: 'India evolved many centuries ago a higly developed system of self Government. Corporate life came spontaneously into existence from very ancient times.' He has further remarked that 'the particular type of local self Government which we have instituted, is unsuitable to the genious of the Indian people. From the knowledge which we posses of the theory and practice of Government in India if, instead of creating Municipal and District Boards of the Western type, we had begun by re-creating the village organisations which were congenial to the people, local self Government would have made more satisfactory progress than has actually been the case.'

As regards the competency and capacity of the villagers to manage their own affairs themselves the great English administrators collectors and Sub Collectors who ruled the country in the early days of the 19th century when village Self Government was in full vigour have recorded: "Whenever we were unable to find out the rights and wrongs of any case submitted to us, we discovered that the best thing to do was to consult the village Panchayats who always solved the questions to the satisfaction of all.' 'They found it perfectly easy to distribute the water for irrigation (through the Panchayats) in a way that gave satisfaction to all.'

In deciding Civil and Criminal cases and in settling disputes 'people could not give false evidence before them because others would know the truth and the Panchayat knew the character of the people who came before them.' 'Every village had a school and the people had the necessary training and intelligence, not only the knowledge as to the rights and wrongs of the cases, but also brains which had been educated and trained and were ready to take up what was really hereditary the carrying on of the work of the leaders of the village.' It has also been said 'If you take the natural, the homeway in dealing with these things you can for a trifle get schools started in every village. Justice can be administered and dispute settled promptly and cheaply.' It will be seen from the impartial opinion of able administrators which should carry weight, that the resuscitation of the village autonomy may be considered as an effective remedy for most of our ills. If the people were made to feel that the villages in which they live belong to themselves, that everything that is put into it will be of benefit to themselves, and that any work they do for it will contribute to its betterment, we may be sure that bands of self respecting villagers will come forward voluntarily in large numbers and take deep interest in all the affairs of their villages. There will be voluntary benefactors, voluntary unpaid labour, public spirit and enterprise in every village. This feeling of loyalty and duty to the society in which they live, is of the very essence of the Indian character.

Fortunately for the country at this moment congress ministries control the administrations in 7 provinces and in other provinces also the congress members may possibly make their influence felt by their wise and timely advice and popular influence. You are fortunately for us in a position to give a lead to all the Congress ministers, Congress organisations and others in the country to work for and secure restoration of the autonomy in the villages in all its purity and in your vigorous inimitable way.

This one act of resuscitation of village autonomy as before, will give the substance of independence to villagers and automatically drive away their state of helplessness, misery, starvation, dishonesty, litigation, poverty and ruin and restore honesty, economy, self-respect, self reliance, health, wealth and prosperity in its place. Congress ministries will have no difficulty in passing an Act to that effect in their respective provincial legislatures. The foundation of real independence would thus have been well and truly laid in villages and your long cherished hope of securing substance of independence for the masses will be accomplished to a very large extent and the whole of India will feel grateful for ever and ever.

Yours sincerely,
B. S. Vythinatha Iyer.

THE PROCLAMATION & AFTER.

In his lecture on the above subject at the Gokhale Hall, the other day, Sir C. P. Ramaswamy Iyer has made a statement of fact which requires correction, as otherwise it might mislead people and our legislators including the Premier who occupied the chair on the occasion.

Sir C. P. R. Iyer stated "*Some centuries ago a compromise was arrived at* that cut of the income, Rs 16 Lakhs should be spent on the temples and the rest of the revenue should go to the state for administration". If that were so, he could have given the details regarding the said compromise, if any; but he has chosen to be vague. The facts, however, are as follows; and I say this subject to correction from him.

RajaMarthanda Varma referred to, reigned only towards the close of the 18th century and died about the Malabar year 1933. His dedication of the State to Sri Padmanabhaswami, must have been some time before. His Successor reigned for a long time after him. Even *before* the said dedication, the temples of Travancore possessed extensive lands of their own which they enjoyed with full rights of ownership. It did not give them any new *swam* or property.

In the early years of the 19th century when Travancore came under the 'British overlordship, and Col Munro settled its affairs, the temple lands (including the savings and stores of grain) were taken over by the state, which thereafter appropriated to itself all their incomes, and maintained the temples at the rates of expenses then fixed for each of them. It is a misnomer to call them "state" temples. The state has founded none and maintained none at its cost. The Royal proclamations call them merely as "temples under our control".

These rates were very meagre in comparison with the incomes of the temple lands; and as time advanced and prices went up, it became difficult for the temples to make both ends meet. Complaints and murmurs were being heard from time to time all along. It all depended upon the mercies shown by government. The devaswam incomes became merged into those of the state and must have often come to the rescue of the latter.

During the Dewanship of the late Sir P. Rajagopalachariar a beginning was made to keep separate accounts of the incomes of the devaswams and the state.

Dewan Mr. T. Raghava Iyah was responsible for the allocation of the sums payable to the temples. He gave occupancy rights to the ryots of the temple lands whose revenues had become state revenues. Out of them, he allocated the Rs. 16 lakhs referred to by Sir C. P. R. Iyer, to the temples. This is but a fraction of the actual incomes of the temple lands; and even this amount does not appear to be fully spent on the temples. This was in the Malabar year 1099 corresponding to 1924. A Royal proclamation was then issued, under which the Maharajah undertook '*to administer the devaswams in accordance with recognised usage and custom.*' Apparently 'the young hero' the present ruler, has been advised that this and similar proclamations of his predecessors do not bind him!

In view of the absorption of the large incomes of the temples into the state treasury, the *devaswam department* organised by Mr. Raghava Iyah and the temple maramaths, are maintained by state itself. Our ministers may note this fact while revising the Endowment law, which they propose to do ere long.

Sir C. P. R's other arguments have been answered many a time before and need not be repeated. In his lecture to the University students, he attempted to find shelter under the Mahabharata etc., which after all proved a red rag to him. His present arguments too fail as shown above. The proclamation, therefore, proves to be out and out only an instance of the exercise of autocratic power by an Indian Prince, at which our Premier shuddered while denouncing the 'Indian Federation' in the local Assembly! The ceaseless efforts of Sir C. P. R. on all possible occasions, even at this distance of time, to canvass approbation for the proclamation, reminds one of the old saying of Goldsmith, viz., that virtue which requires to be ever guarded, is scarcely worth a sentinal'. Our Premier, who is now the responsible head of Government, remembered I hope, the story of the 'jackal without its tail', when he said from the chair that 'Sir C. P. R. had done something which *he wished* he could have done himself.'

N. Srinivasacharya.

A Report of the Deputation to the Diwan of Cochin.

A Deputation of the All India Varnashrama Swarajya Sangh waited Sir R. K. Shanmugam Chettiar, Diwan of Cochin, yesterday at the Diwan's House at 11 A. M.

The Deputation consisted of Rao Sahib N. Natesa Ayyar B. A., B. L., (Advocate, Ex- M. L. A. & Ex. Government Pleader, Ramnad and President, All India Varnashrama Swarajya Sangha & President, Madras Provincial Varnashrama Swarajya Sangh and Dharma Shastra Sabha and Dharma Seva Sabha etc., Madura). Rao Bahadur S. M. Parande (Retired District and Sessions Judge and Pradhana Mantri, All India Varnashrama Swarajya Sangh) V. M. Navathy (Editor, Dharma Veer and Auditor and joint Secretary A. I. V. S. Sangh) Mr. M. Subramania Ayyar B. A., B. L. (Retired District Judge, Anatandavapuram), Mr. S. Natesa Ayyar (P. W. D, Retired Engineer, Tiruvadamarudur), Mr. S. Swaminatha Sastrial B. A., B. E., C. E., A. M. T. P. I (Lon.) (Retired Engineer, Kumbakonam and Secretary, Tanjore Dt. Brahmana Sabha and Organizing Secretary for the Cochin Deputation), Agnihotram Tata Desikachariar Swamigal (Kumbakonam), Atma Vidya Bhushana Jagadeesa Sastrial (Astana Vidwan, Kumbakonam Mutt), Rao Bahadur P. C. Muthu Chettiar, (Zemindar of Siruvalai and Velliankundram Madura), Mr. M. Venkatachalam Aiyer (Joint Secretary A. I. V. S. Sangh and Vakil, Madura), Mr. R. Sankaranarayana Ayyr, (Merchant, Secretary, Sanatana Dharma Sabha, Coimbatore), Vidwan Singarazu Ramalinga Sastrigaru (Representative, Pushpagiri Mutt), Mr. T. S. Balaram Ayyar B. A. (Manager and Managing Director, Sitaram Mills and Cochin Legislative Council Member), Mr. V. S. Vaidyanatha Ayyar B A. B. L. (Retired Chief Judge. Trichur, Cochin), and Mr. P. Kunjunni Achan (Secretary, Kerala Dharma Sthapana Sabha, Trikkur).

The Members of the deputation were introduced to the Dewan by the Secretary of the Deputation, Mr. Swaminatha Sastrial.

Rao Sahib N. Natesa Ayyar on behalf of the deputation expressed the thanks of the Sangh to His Highness the Maharaja and the Government of Cochin for maintaining the ancient Hindu Dharma in the State. He said that although the Sanatanists were not a very vocal or well- organised community, they represented the vast majority of the Hindu population of the country. Whatever might be the intensity of the propaganda carried on in favour of throwing open the temples to Avarnas, the vast majority of the Hindu population who were orthodox at heart, said Mr. Natesa Ayyar, were opposed to the move and any executive action or legislation in the direction of throwing open these temples to Avarnas would be a coercive step.

Mr. Natesa Ayyar explained at length the reasons underlying this attitude of the Sanatanists and expressed the hope that His Highness the Maharaja of Cochin would continue to maintain the ancient usage and custom in the State.

Rao Bahadur S. M. Parande, Mr. M. Subramania Ayyar, Agnihotram Tata Desikachariar Swamigal, Atma Vidya Bhushana Jagadeesa-Sastrial and Rao Bahadur P. C. Muthu Chettiar, supplemented the observations made by the leader of the deputation.

The Diwan thanked the members of the deputation for explaining the point of view of the Varnashrama Swarajya Sangh and said that it was useful to have this point of view also, as the movement for temple entry was becoming a live issue. He explained that with regard to the moral, material and social progress of the Avarnas, the policy of His Highness the Maharaja of Cochin had for many years been a progressive one. The Government of Cochin with the full approval of His Highness the Maharaja had committed themselves to the policy of doing everything to promote the welfare of the Avarnas and to give them equal opportunities with all the other communities in sharing the civic life of the State.

With regard to spiritual matters, the Diwan observed that His Highness was the supreme authority. His Highness the Maharaja was an orthodox Hindu Ruler and it was his desire that in the management of the temples in the State, the ancient usage and custom and the injunctions of the Sastras should be scrupulously maintained. In that matter His Highness was being advised by men who were competent to tender such advice. The Officers of the State who constituted the civil Government had always scrupulously carried out the wishes and orders of His Higness in that respect.

The Diwan assured the deputationists that so long as His Highness the Maharaja of Cochin followed the ancient usages and customs, they would be scrupulously observed in State.

Rao Sahib N. Natesa Ayyar thanked the Diwan for the sympathetic hearing given to the deputation and the deputationists withdrew.

In the afternoon the deputationists waited upon His Highness the Maharaja at the Hill Palace, Trippunithura. His Highness gave a patient hearing to their representations and assured them that as a firm believer in the ancient Hindu Dharma, it would always be his duty to uphold its tenets.

The Deputationists thanked His Highness for the assurance and withdrew.

Sd. 31—8—1937, Publicity Officer.

ஸ்ரீ நாரத பக்தி ஸூத்ரங்கள்.

(திவான்பஹதூர் ராமஸ்வாமி சாஸ்திரியாரின் மொழிபெயர்ப்பு)

(12—8—37 தொடர்ச்சி)

मोदन्ते पितरो नृत्यन्ति देवताः सनाथा चेयं भूर्भवति ॥

71. அவர்கள் முத்தோர்கள் களிக்கிறார்கள். தேவர்கள் நர்த்தனம் செய்கிறார்கள். பூமியும் நாதனுள்ளவளாகிறாள்.

नास्ति तेषु जातिविद्यारूपकुलधनक्रियादिभेदः ॥

72. அவர்களுக்குள் பிறப்பு படிப்பு அழகு குலம் பணம் செய்கை முதலிய ஏற்றத்தாழ்வுகள் கிடையாது.

यतस्तदीयाः ॥

73. ஏனென்றால் அவர்கள் எல்லோரும் அவனைச் சார்ந்தபடியால்.

वादो नावलम्ब्यः ॥

74. வீண் வாதங்கள் கைக்கொள்ளக்கூடாது.

बाहुल्यावकाशत्वादनियतत्वाच्च ॥

75. அவைகள் அளவற்றதாகவும் முடிவற்றதாகவும் இருப்பதால்.

भक्तिशास्त्राणि मननीयानि तद्बोधककर्माणि करणीयानि ॥

76. பக்தி சாஸ்திரங்களை நினைக்கவேணும் பக்தியை எழுப்பும் செய்கைகளைச் செய்யவேணும்.

सुखदुःखेच्छालाभादित्यक्ते काले प्रतीक्ष्यमाणे क्षणार्धमपि व्यर्थं न नेयम् ॥

77. சுகம் துக்கம் ஆசை லாபம் முதலியவைகளிலிருந்து விடுபட்ட காலத்தை எதிர்பார்த்திருப்பதால் அரை நிமிஷங்கூட வீணாக்கக்கூடாது.

अहिंसासत्यशौचदयास्तिक्यादिचारित्र्याणि परिपालनीयानि ॥

78. அஹிம்சை, சத்யம், தூய்மை, தயை, நம்பிக்கை முதலிய நன்னடக்கைகளை கைக்கொள்ளவேணும்.

सर्वदा सर्वभावेन निश्चिन्तैर्भगवानेव भजनीयः ॥

79. எப்பொழுதும் முழு மனதுடன் பரமனையே பக்திசெய்யவேணும்.

स कीर्त्यमानः शीघ्रमेवाविर्भवति अनुभावयति भक्तान् ॥

80. தொழுதால் அவர் தாமதமின்றியில் முன்வந்து பக்தர்களுக்கு தன் அநுபவத்தை அளிக்கிறார்.

त्रिसत्यस्य भक्तिरेव गरीयसी भक्तिरेव गरीयसी ॥

81. முக்காலத்திலும் பக்தியே பெரிது. பக்தியே பெரிது.

गुणमाहात्म्यासक्ति - रूपासक्ति - पूजासक्ति - स्मरणासक्ति - दास्यासक्ति - सख्यासक्ति - वात्सल्यासक्ति - कान्तासक्ति - आत्मनिवेदनासक्ति - तन्मयासक्ति - परमविरहासक्ति - रूपैकधाप्येकादशधा भवति ॥

82. பக்தி ஒன்றேயானாலும் பதினொன்று உருவபேதமுள்ளது. அதாவது பரமனுடைய குணங்கள் பெருமைகளில் விருப்பம், பரமன் உருவத்தில் விருப்பம், பரமன் பூஜையில் விருப்பம், பரமனை நினைப்பதில் விருப்பம், பரமனுக்கு தாஸனாக இருப்பதில் விருப்பம், பரமனுக்குத் தோழனாக இருப்பதில் விருப்பம், பரமனிடம் வாத்ஸல்யத்தில் விருப்பம், பரமனிடம் தலைவியாக இருக்கும் இன்பத்தில் விருப்பம், பரமனிடம் தன்னையே அர்ப்பணம் செய்வதில் விருப்பம், பரமனிடத்தில் ஒன்றாகக்கலந்திருப்பதில் விருப்பம், பரமனைப் பிரிந்தால் மகாதுயர ரூபமான விருப்பம்.

इत्येवं वदन्ति जनजल्पनिर्भया एकमताः कुमारव्यासशुकशाण्डिल्यगर्गविष्णुकौण्डिन्यशेषोद्धवारुणिबलिहनुमद्विभीषणादयो भक्त्याचार्याः ॥

83. இப்படி ஜனங்கள் இகழ்ச்சிக்கு பயப்படாமல் ஒரே எண்ணம் உள்ளவர்களான ஸனத்குமார், வியாஸர், சுகர், சாண்டில்யர், கர்கர், விஷ்ணு, கௌண்டின்யர், சேஷர், உத்தவர், ஆருணி, பலி, ஹனுமான், விபீஷணன் முதலிய பக்தி ஆசார்யர்கள் சொல்லுகிறார்கள்.

य इदं नारदप्रोक्तं शिवानुशासनं विश्वसिति श्रद्धत्ते स भक्तिमान्भवति स प्रेष्ठं लभते स प्रेष्ठं लभत इति ॥

84. எவன் நாரதரால் கூறப்பட்ட இந்த மங்களமான உபதேசத்தை நம்பி உறுதியான சிரத்தையுடன் கூடி இருக்கிறானோ அவன் பக்தியை அடைந்து மிக ப்ரியமான வஸ்துவை (பரமனை) அடைவான். மிக ப்ரியமான வஸ்துவை (பரமனை) அடைவான்.

முற்றிற்று.

மாணவர்களுக்கு மதாசார போதனை.

(இந்த விஷயம் சென்றவாரப் பத்திரிகையில் வெளிவந்திருப்பதின் தொடர்ச்சியாகும். சென்ற பத்திரிகையில் 11ம் பக்கத்தில் இந்த தொடர்ச்சி வைக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தபடி பிரசுரிக்கப்படவில்லை)

அன்புடன் உபசாரங்கள் நன்றாக செய்தார் நல்ல போஜனம் செய்து கோபமில்லாமல் உபசரித்தார். அவர் ஒருசமயம் நிறைய சாப்பிடுவார். ஒருசமயம் என்ன உபசாரம் செய்தாலும் சாப்பிடவே மாட்டார். கடைசியில் பாயஸத்தை எடுத்து கிருஷ்ணர் சரீரம் பூராவும் தூர்வாஸர் பூசினார். கிருஷ்ணர் ஒன்றும் சொல்லவில்லை. ருக்மணி சரீரத்தில் அள்ளிக்கொட்டினார். அவளும் ஒன்றும் சொல்லவில்லை. உடனே ரதத்தை வரவழைத்து ருக்மணியை அதில் அச்வதத்திற்கு பதிலாக மூட்டி ஓட்டினர். சாட்டையால் அடித்தார். ருக்மணி ஓடினாள். அப்போதும் கிருஷ்ணன் ஒன்றும் சொல்லவில்லை. அரண்மனை பூராவும் விரட்டி தெருக்களிலும் தாத்தினர். அப்போது ருக்மணி கல்தடுக்கி கீழே விழுந்தாள். தூர்வாஸர் ஓங்கிஓங்கி அடித்தார். கிருஷ்ணனாவது ருக்மணியாவது பதில் பேசவில்லை. ஜனங்கள் எல்லோரும் மிகவும்கோபமும், பரிதாபமும் பட்டார்கள். உடனே தூர்வாஸர் கிழிரங்கி கிருஷ்ணனை தோத்தரித்து அவருக்கு அனுக்ரஹம் செய்தார். ஆகவே ப்ரும்மணர்களுக்கு ஈசுவரனுக்குகூட அனுக்ரகம் செய்ய சக்தி உண்டு என்று சொல்லப்படுகிறது.

நிற்க தற்காலம் பையன்கள் தான் ஜீவனத்துக்காக படிக்கவேண்டியிருக்கிறது. அதுவும்நம்முடைய தர்மங்களை அனுஷ்டித்து வந்தால் அவசியமில்லை. அப்படி இருக்கையில் குமாரிகளையும் எதற்காக படிக்கவைக்கவேண்டும். ஸ்திரீகளுக்கு பாதிவிரத்யமும்லஜ்ஜையும் அவச்யம். லஜ்ஜை இருந்தால்தான் பாதிவிரத்யம் பொருந்தியிருக்கும். அப்படி இருக்கையில் பிள்ளைகளுடன் பெண்களை சமமாய் பழகவிட்டு படிப்பதற்காக அனுப்புவதால் அவர்கள் லஜ்ஜை இழந்து பாதிவிரத்யம் கெட்டுவிடுகிறார்கள். நம்முடைய பெண்களை சரியான பழக்கத்தில் கொண்டுவரவேண்டியதே முக்கியம். அவர்களே பிற்கால சந்ததிகளின் அபிவிருத்திக்கு காரணபூதர்கள். அவர்களுக்குப் படிப்பு அவச்யம்தான். இந்தவிதமான படிப்பு இருந்தால் போதும். அவர்களுக்கு குடும்பத்தை நடத்துவதற்கான படிப்பு இருந்தால் போதும். அவர்களுக்கு பாதிவிரத்யமும், பதிசிச்ருஷையும், குழந்தைகளை ரக்ஷிப்பதும்தான் முக்கியம். அதை அவர்கள் தாய்மார்கள் போதித்தால் அதுவே போதும்.

சாதாரணமாக தாய் தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளை தூரதேசத்திற்கும், இடங்களுக்கும் படிப்புக்காக அனுப்புகிறார்கள். அது கூடாது அங்கு அவர்கள் என்னசெய்கிறார்கள் என்று கவனிக்க கூடுவதில்லை. வேண்டும்போதெல்லாம் பணம் மட்டும் அனுப்பிவருகிறார்கள். அவர்களில் சிலர் கருத்துடன் படித்து பாஸ் பண்ணுகிறார்கள். சிலர் திரிந்து கெட்ட பழக்கங்களுடன் Fail ஆகி தலையில் கையை வைத்துக்கொண்டு ஊர்திரும்புகின்றனர். பாஸ் ஆனாலும் சரி Fail ஆனாலும் சரி. அவர்கள் தனியாக இஷ்டம்போல் இருப்பதற்கு இடம் இருப்பதால் கண்டகண்டவர்களுடன் பழகி துர் அப்பியாஸங்கள் எல்லாம் படிந்து, மதாசாரங்களில் அவநம்பிக்கை ஏற்பட்டு, பிறகு ஒருகால், தாய் தந்தையர் நல்ல புத்திகளை சொன்னால், அதை அலக்ஷியம் செய்தும், அவர்களுக்கு ஒன்றும் தெரியாதென்றும், தான் தான் ஸர்வக்ஞன் என்னும் எண்ணம் ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே இவர்களை அருகிலேயே வைத்துக்கொண்டு தினந்தோறும் சரிவர கவனித்து நித்ய கர்மாக்களை செய்யும்படி சொல்லிக்கொடுத்து நற்பழக்கம் செய்விப்பது ஒவ்வொருதகப்பனின் கடமை. அப்படி செய்தால்தான் அவர்களுக்கு பெரியோர் பணிவு ஏற்படும்.

ஆகவே இப்போது செய்யவேண்டுவது என்ன என்றால்ஒவ்வொரு பையனுக்கும், மாணக்கனுக்கும் வேதம் கொஞ்சம், கொஞ்சமாவது கற்பிக்கவேண்டுவது அத்யாவசியம். திடீரென எல்லா படிப்பையும் நிறுத்திவிட்டு வேதாத்யயனம் எல்லோரும் செய்யவேண்டும் என்றால் அது அசாத்தியம் ஆகவே பள்ளிக்கூட விடுமுறை நாட்களில் அவர்களை கூட்டிவைத்துவேதத்தை முழுதும் முடியாவிட்டாலும், கொஞ்சம் கொஞ்சம் சொல்லிவைத்தால்தானே அவர்கள் பெரியவர்களாக ஆனால்அதில் அபிருசி ஏற்பட்டு கற்றுவர முன்வருவார்கள். முதலில் இப்போது அத்யயனம் செய்துவரும் பையன்களை நன்றாக கர்மானுஷ்டானங்களை செய்யுமாறு பழக்கி உலகத்தோருக்கு ஒருவழி காட்டியாக இருக்குமாறு செய்து, நாமும் அதுமாதிரியே அனுஷ்டித்து எல்லா ஜனங்களுக்கும் பிரசாரம் செய்யவேண்டுவது அத்யாவசியம்.

ஒரு நவீன சக்குபாய்.

பால்ய மாத்வ ஸதிரீயின் பக்தி.

ஸ்ரீமதி அம்மாரு அம்மாள் என்ற ஸ்திரீ தன் பர்த்தா இறந்தபின் தன் தேகபோஷணை சம்பந்தமாய் சகல சௌகரியங்களையும்வெறுத்து பாண்டுரங்கனுடைய பஜனையில் ஈடுபட்டு வருகிறாள். ஷை அம்மாள் பால், பழம் இவைகளை மாத்திரம் அருந்தி ஜீவித்துவருகிறாள். கும்பகோணம் ரெட்டிராயர் குளம் தென்கரை 10-நெ வீட்டில் தன் தாயார் ஸகோதாருடன் வசித்துவந்தாள். சென்ற 1935 வருஷம் மேமீ திடீரென்று கடவுள் ஆக்ஞையினால் அருள் ஏற்பட்டு ஷை அம்மாரு அம்மாள் தன் தாயார் வீட்டிலிருந்து புறப்பட்டு ஸ்தல யாத்திரை செய்துகொண்டு பண்டாரபுரம் க்ஷேத்திரத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

1937-ஸு மார்ச்சுமீ 1உ பண்டாபுரம் க்ஷேத்திரத்திலிருந்து புறப்பட்டு, நாஸிக், அயோத்தி, கோகுலம், பிருந்தாவனம், மட்ரா, காசி, கயா, பிரயாகை, முதலான புண்ய க்ஷேத்ரங்களுக்கு யாத்திரை செய்தார்கள். பண்டாபுரத்தில் தங்கின 2-வருஷங்களும் மற்றும் யாத்திரை செய்த க்ஷேத்திரங்களிலும் பிரதிதினமும் பஜனை செய்துவந்தார்கள். தக்ஷிண பூமியிலுள்ள ராமேஸ்வரம், தனுஷ்கோடி முதலிய புண்யக்ஷேத்திரங்களுக்கு தீர்த்தயாத்திரைபோக உத்தேசித்தும் யாத்ரா மார்க்கமாய் வருகையில், கும்பகோணம் பக்தகோடிகளின் வேண்டுகோளுக்கு இணங்கி கும்பகோணத்திலுள்ள பிரபல வியாபாரியான ஷராப் ஸ்ரீமான் கோ ராகவேந்திர ராவ் அவர்களின் வீடுகளில் ஒன்றில் பஜனைக்காகவே பிரத்யேகமாய் இடவசதி செய்து கொடுக்கப்பட்டும், 22-5-37ல் வந்து தங்கி ஷை ராகவேந்திரராவ் அவர்களால் மற்ற பஜனைக்குவேண்டிய சௌகரியங்களும் செய்துகொடுக்கப்பட்டு, பிரதி புதன், வெள்ளி சனிக்கிழமைகளில் விஸ்தாரமாயும், மற்ற தினங்களில் சாதாரணமாயும் பஜனை விமரிசையாய் நடந்து வருகிறது.

ஷை அம்மாரு அம்மாள், கடவுளின் பல அவதார விசேஷங்களையும், பல மஹான்களான ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகள், ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் ஸ்ரீ ரகூத்தமஸ்வாமிகள் தாரதம்யப்படி அவர்களைப் பற்றியும் ஸ்தோத்திரப் பாடல்களை கர்ணாம்ருதமாய்ப் பாடி வருகிறார்கள். பஜனை நிகழ்ச்சியில் திடீரென்று அருள் ஏற்பட்டு ஷை அம்மாள் கடவுளின் கல்யாண குணங்களை வர்ணித்து, இன்னிசையில் பாட்டு கவனம் செய்துவிடுவார்கள். அவ்விதம் இதுவரையில் சுமார் 650- பாடல்கள் கவனமாகி இருக்கிறது.

ஸ்ரீமத் பாகவதத்திலுள்ள "கோபி பக்தி "கிருஷ்ண லீலா" என்னும் பாகங்களில் விமரிசையை கானம் செய்யும்பொழுது ஷை அம்மாளின் பக்த சிஷ்யகோடிகளான சில ஸ்திரீகளால் பாட்டுக்களின் அர்த்தத்தை அபிநயித்து காட்டப்படுகிறது. ஷை அபிநயங்களில், ஸ்ரீ கிருஷ்ணபகவான் மதுரையில் பிறந்ததும் கோகுலத்தில் வளர்ந்ததும், பிருந்தாவனத்தில் பால பருவத்தில் செய்த லீலா விசேஷங்களும் பஜனையில் விசேஷ சிறப்பையும் கொடுக்கக் கூடியதாய் இருக்கிறது. S. I. Ry. ல் ரிடையர்டு ஸ்டேஷன் மாஸ்டரின் பெண் 10-வயதுள்ள சக்குபாய் என்ற சிறுமி பாடுவதும் அபிநயிப்பதும் ரொம்பவும் கொண்டாடத் தக்கதாயும் ஆச்சரியப்படும் படியாயும் இருக்கிறது.

உடுப்பி முதலிய பல மடங்களிலிருந்தும், விஜயம் செய்திருந்த பல மடாதிபதிகளும், ஸம்ஸ்க்ருத வித்வான்கள் பலரும் ஷை அம்மாளின் பஜனையை நேரில் பார்த்து ஆனந்தித்து, கடவுள் அருளால் கவனமானபாட்டுகள் என்றும் ஆச்சர்யப்பட்டிருக்கிறார்கள். சங்கீதவித்வான்களும் ஷை அம்மாளின் சுருதி, லயம், ஞானத்தைப் பற்றியும்,பாடல்களின் வர்ணமெட்டுகளைப் பற்றியும் ஆச்சர்யப்படுகிறார்கள்.

ஸ்ரீமதி அம்மாரு அம்மாளின் பஜனை இந்தக் கலியுகத்தில், பிரத்யக்ஷத்தில் பண்டித பாமர ஜனங்களையும் நல்வழிப்படுத்தி, பக்தி புகட்டி கடவுளின் கிருபாகடாக்ஷத்திற்குப் பாத்திரமாகும்படி செய்யக் கூடியதாயிருக்கிறது.

புராண சம்பந்தமாயுள்ள பிராசீன சக்குபாய் அவர்களின் புகைப்படமும், ஸ்ரீமதி அம்மாரு அம்மாளின் உருவமும் ஒற்றுமையாய் இருப்பதால் ஷை அம்மாளை ஒரு 'நவீனசக்குபாய் என்றே அழைக்கலாம்.

கும்பகோணத்தில் தற்சமயம் தன் ஜாகையையும் கொடுத்து பஜனைக்கு வேண்டியஇதர சௌகரியங்களையும் செய்துகொடுக்கும் ஸ்ரீமான் ராகவேந்திரராவ் அவர்களின் உதார குணம் கொண்டாடத் தக்கது.

ஷை அம்மாள் ராமேஸ்வரம் யாத்திரையை உத்தேசித்து சென்ற 30-8-37 ல் தன் சிஷ்ய பரிவாரங்களுடன் புறப்பட்டு திருச்சிமலைக்கோட்டையிலுள்ள உச்சிப் பிள்ளையார், என்ற விநாயகர்பேரிலும் மறு நாள் ஸ்ரீரங்கத்தில் ரெங்கநாதர் பேரிலும் கவனம் செய்து மானமதுரை முதலிய பல க்ஷேத்திரங்களில் தீர்த்தாடனம் செய்துகொண்டு தற்காலம் மதுரையில் வந்து தங்கியிருப்பதாயும் வருகிற 19-6-37 அனந்த விரதம் ஆகையால், அதற்குள், கும்பகோணத்திற்கே திரும்பிவந்து விடுவார்களென்று நம்பப்படுகிறது.

டி. எ. நாகராஜய்யர் முனிசிபல் ஸ்கூல் டீசர்

தர்மிஷ்டர்களுக்கும் மிகவும்
உபயோகமானவை.

(தேவநாகர எழுத்து)

1. ஸ்ரீ துர்க்கா ஸ்தோத்ரம் (ஸ்ரீ மஹா பாரதம் விராட பர்வத்திலுள்ளது) ஸம்ஸ்கிருத மூலம் தமிழ் மூலம் பதவுரையுடன் கூடியது. 0—1—0
2. ஸ்ரீ ஆதித்யஹ்ருதய ஸ்தோத்ரம் (ஸ்ரீமத்ராமாயண யுத்தகாண்டத்திலுள்ளது) ஸம்ஸ்கிருத மூலம் தமிழ்மூலம் பதவுரையுடன்கூடியது. 0-2-6
3. ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்தோத்ரம் (ஸ்ரீமத் மஹாபாரதம் வனபர்வத்திலுள்ளது) ஸம்ஸ்கிருத மூலம் தமிழ்மூலம் பதவுரையுடன்கூடியது. 0-2-0

புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—

ஆர். எஸ். சர்மா, 'ஷிரோமணி'
நெ. 14. வெங்கட்டராயர் தெரு, கும்பகோணம்.

215202

S351



அநாவசியமாக ஏன் - -
- - அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது

அமிர்தாஞ்சனம்

சன்முக செந்தூரம்:- இது மகான் அனுக்கிரகத்தால் செய்த முறை. காசரோகங்களை பூர்ணகுணமாக்குவதில் இதற்கு நிகர் வேறே ஔஷதமில்லை நாள்பட்ட இளைப்பு இருமலை ஒரு வாரத்திற்குள் குணப்படுத்தும்.

எனக்கு சுமார் 35 வருஷம் அனுபோகம். அநேகம்பேர்களுக்கு கொடுத்து பூர்ண நற்குணமாகி அவர்களால் கொடுக்கப்பட்ட நற்சாட்சிகளுமிருக்கின்றன. விலை உயர்ந்த சரக்குகளினால் செய்யப்பட்டவை. கால நிர்ணயத்திற்குத் தக்கபடி சார்ஜ்ஜை குறைக்கப்பட்டிருக்கிறது. 48 நாட்களுக்கு உபயோகிக்கும் மருந்துக்கு விலை ரூ. 25. 24 நாட்களுக்கு மருந்து ரூ. 15. ஏழைகளுக்கு சக்திக்கு தகுந்தபடியும் கொடுக்க சித்தமாயிருக்கிறேன். விபரம் மருந்துகளுடன் அனுப்பப்படும். இன்னும் சகல வியாதிகளுக்கும், குழந்தைகளுக்கு ஏற்படும் ரோகங்களுக்கும் குலைகட்டி ரோகங்களுக்கும், நல்ல மருந்துகள் கொடுக்கப்படும்.

R. K. Murthi, ஆயுர்வேத நன்மருந்து வைத்தியசாலை,
உறையூர், திருச்சிறாப்பள்ளி.

திருவிசலூர்.

ஓர் பெரியாரின் பிரிவு.

திருவிசலூர் கிராமத்தில் சிறிது காலம் முன்பு அபரதன்வந்திரியாக விளங்கி ஸ்ரீச்யாமஹராவய்யரென்ற வெங்கடேசய்யரின் கனிஷ்ட ஸகோதரமுயும் வைத்தியத்தில் அவருக்கு ஸமமாக விளங்கியவருமான வைத்தியம் ஸ்ரீராமச்சந்திரய்யரவர்கள் சென்றகிருஷ்ண சதுர்தசி(3-9-37)யன்று விஷ்ணுபதமேகினார்களென்பதை செவியுற்று விசனப்படாதாரில்லை. இப்பெரியார் பரோபகாரத்தையே தனது கடமையாகக்கருதி ஆயுள் முழுவதும் அதைத்தீவ்ரமாய்நடத்து காட்டிய தமனித வாழ்க்கையிலிருக்கும் ஒவ் வொருவர்க்கும் சிறந்ததோர் மார்க்க தரிசியாக விளங்கிற்று. வ்யாதி நிதானத்தில் அன்னருக்கிருந்த அஸாதாரணமானஸாமர்த்தியமும், அவரது ஜன்மாந்திரீயமானதோர் கிரந்த ஸம்ஸ்காரத்தை விளக்கிற்று. இவ்வரிய வைத்ய சிகாமணியின் பிரிவு நமது நாட்டிற்கே மிகப்பெரிதான நஷ்டமாக விருக்கிறது.

ஓர் நிருபர்.

மேல்மங்கலம்.

ஆஸ்திக மஹா ஜன சபை.

ஆவணிமீ 22ம்ல திங்கட்கிழமை மாலை 3½ மணிக்கு சபை கூடிற்று. கிராம ஜனங்கள் ஏராளமாக விஜயம் செய்திருந்தனர். பிரம்மஸ்ரீ பிளாஞ்சேரி சுப்பிரமணியய்யரவர்கள் சபைக்கு அக்ராசனம் வகித்தார்கள்.
வ்யாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ S மீனாக்ஷி சுந்தர சாஸ்திரிகள் அத்வைத தாத்பர்யம் பற்றி வேதம், உபநிஷத், ருத்திர பாஷ்யம், கீதை இத்தியாதிகளிலிருந்து உபமான உபமேயங்களுடன் கேட்போர் பிரமிக்க தக்க விதமாக வெகு விஸ்தாரமாய் பிரகடனம் செய்தார்கள். பின்னர் சபைக்கார்ய தர்சி அவர்கள் தர்மம் என்னும் விஷயத்தை விளக்கினார் ஸ்ரீமான் M.S. சுந்திரேசய்யரவர்களால் அக்ராசனர், உபன்யாசகர்களுக்கு வந்தனோபசாரம் கூறப்பட்டு சபை மாலை 6 மணிக்கு இனிது பூர்ணமானது.

சிவஸ்ரீ கணபதி கனபாடிகள்
காரியதர்சி.

சென்னை அஸெம்பிளியில் ஆலயப்பிரச அமளி.

18-9-37 வெள்ளிக்கிழமை சென்னை அஸெம்பளியில் ஸ்ரீமான் "ஸகஜானந்தம்,, அவர்கள், தீண்டாத ஜாதியைச்சேர்ந்த பல வகுப்பினருக்கும் ஆலயப்பிரவேச உரிமையளிக்க வேண்டு மென்று கவர்மெண்டைக்கேட்டுக்கொண்டிருக்கிறார். இவர் ஆலயப்பிரவேச உரிமையைப்பற்றி நாம் வருந்த வில்லை. அதற்கு கீதையும், உபநிஷத்துகள், இதர கிரந்தங்களிலும் ஆதாரம் காட்டப்புறப்படுவதே கண்டிக்கத்தக்கதாயிருக்கிறது. அவர் அஸெம்பளியில் பேசுகையில்,, "இதோ கீதை இதோ உபநிஷத் இவைகளில் தீண்டாமைக்கு ஆதாரம் காட்டுங்கள் பார்க்கலாம்" என்று ஸவால் கூறுகிறார். தீண்டாத வகுப்பைச்சேர்ந்த இவர் நமக்கு கீதையும், உபதேசிக்கப்புறப்படுவது தான் ஸாஹஸமாயிருக்கிறது, எத்தனையோ பண்டிதர்களும் தலைவர்களும், தக்க ஆதாரங்களோடும் வேதம், ஸ்மிருதி, உபநிஷத், கீதை முதலிய புராணங்களுடன், தீண்டாத ஜாதி உண்டென்றும், தற்போது அவர்களே தீண்டாதாரென்று நிரூபித்துள்ளனர். இதையறியாமல் பேசுவதும் அதைக் கண்டிப்பதற்கு நமது பிரதிநிதியாக ஒருவர் கூட யில்லாமல் போனது வருந்தத்தக்கது, இதை நமது தலைவர்கள் அஸெம்பளியில் நம் ஒரே பிரதிநிதியான ஜி கிருஷ்ணரூவ் அவர்களை இக்கூற்றைக்கண்டிக்குமாறு செய்யக் கேட்டுக்கொள்கிறேன். பொது ஜனங்களும் இதைக்கண்டிக்குமாறு அதிருதியாக நமது மாகாணத்தில் ஒரு கண்டனம் ஏற்படுத்தி ஏராளமாய் கவர்மெண்டுக்கு அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டுமாயும் நமது தலைவர்களை வணக்கமாய் பிரார்த்திக்கிறேன், "ஆர்ய தர்மம்" பத்திராதிபரும் இது விஷயத்தில் தமது பத்திரிகை மூலம் உபகாரம் செய்ய வேண்டுமாறு பிரார்த்திக்கிறேன்.

ஒரு நிருபர்

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.

ஒரு விசேஷப் பொதுக்கூட்டம்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் சங்கக் காரியாலயமான ஸ்ரீ ரங்க விலாசத்தில் 9-9-37 வியாக்கிழமை மாலை 6½ மணிக்கு ஒரு விசேஷப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கடவுள் வாழ்த்துக்குப் பிறகு காரியதரிசி பேசுகையில் தமிழ்ச் சங்கம் தேசமுன்னேற்றத்துக்கான நற்செயல்களைப் போற்றியும், தீச்செயல்களைக் கண்டித்தும் வந்திருக்கிறது என்றும் தற்காலம் ஹிந்தியைக் கட்டாயப் படிப்பாக வைக்கும் விஷயத்தில் சரியான முடிவு செய்வதற்கு அட்வோகேட் கிருனர் நரஸிம்மாசாரியார் அவர்களை அக்ராஸனம் வகிக்குமாறு கேட்டுக் கொண்டபடி அவரும் இணங்கி தலைமை வகித்தார்.

தலைவர் முன்னுரையாகப் பேசுகையில் ஹிந்தி வந்தால் தமிழபிமானம் போய்விடும். பள்ளிக்கூடங்களில் கட்டாயமாக இல்லாமல் ஆப்ஷனலாகயிருந்தால் பாதகமில்லை. எக்காரணத்தை முன்னிட்டும் தமிழ் ஸம்ஸ்க்ருதபாஷைகள் கெடுதலடைக் கூடாது. இவ்வபிப்ராயத்தை நாம் தெரிவித்துக்கொள்ளவேண்டுமென்றார்

சங்கத்தலைவரும், வியாகரணச் சிங்கமும் பிரபல அட்வோகேட்டுமான ஸ்ரீமான் ஆர். கேஸவய்யங்காரவர்கள் ஹிந்தியைக் கட்டாயமாக்குவதை ஆக்ஷேபித்தார்.

இந்தியாவில் இதர பாஷைகளும் அதை அப்யஸிக்கும் அனேக கோடி மக்களுமுளர். வடக்கத்தி ஹிந்தி ஸம்ஸ்க்ருதத்தைச் சேர்ந்தது. ஹிந்தியைக் கட்டாயப்படிப்பு ஆக்கினால் ஸம்ஸ்க்ருதம் போய்விடும். சம்ஸ்க்ருத பண்டிதர் ஒழிந்துவிடுவர். ஸம்ஸ்க்ருத வ்ருத்தி பாழாகும். தமிழும் போய்விடும். கெமிஸ்ட்ரி, சயன்ஸ், பிசியாலிஜி இவற்றைக் கட்டாயம் கற்கச் செய்தால் நலமுண்டு. நமது கடமையை நாம் சொல்லுகிறோம்.

திருவாலி ராமானுஜாசாரியார், வடகரை ராமானுஜாசார்யர், ஸ்ரீ ரங்கம் சடகோபாசாரியார், முதலியவர்கள் பேசிய பிறகு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ப. செ. திருமலை ஐயங்கார், காரியதரிசி)

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,
Published by A Gopaladesikachariar, and S. Kalyanasundaam,

அங்யதர்மம்

4 ஸ
22 37

30-9-1937

உரு203

215203

OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS
1-OCT 1937

557

Registered No. M. 2913.

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 / 22 | கும்பகோணம் கலி 5039 ஈச்வர௵ புரட்டாசி௴ 14௳ 1937௵ ஸெப்டம்பர்௴ 30௳ | வ 37

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்
பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

பிரஞ்சு பிரதேசத்தில் பால்யவிவாஹத் தடை.

சந்திரநாகூரில் எதிர்ப்பு.

இந்தியாவிலுள்ள பிரஞ்ச் பிரதேசங்களில் பால்ய விவாஹத்தைத் தடுக்கும் சட்டத்தை பிரான்ஸ் கவர்மெண்டார் அங்கீகரித்து விட்டார்கள். இந்தச் சட்டப்படி ஸ்திரீகளுக்கு 14 வயதுக்குப் பிறகும், ஆண்களுக்கு 16 வயதுக்குப் பிறகும்தான் விவாஹம் செய்யப்படவேண்டும். மீறி நடப்பவர்களுக்கு அபராதமும், சரீர தண்டனையும் விதிக்கப்படும். விவாஹமும் செல்லுபடியாகாது.

சில விசேஷ ஸந்தர்ப்பங்களில் புதுச்சேரி கவர்னரின் அநுமதிபெற்று மேற்கண்ட வயதிற்கு முந்தியும் விவாஹம் செய்யப்படலாம்.

இந்தச் சட்டத்தை சந்திரநாகூர் பிரதேசத்திலுள்ள ஹிந்து மஹம்மதிய மதாபிமானிகள் பலமாக ஆக்ஷேபித்து பிரான்ஸ்கவர்ன்மெண்டுக்கு எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

திருவாங்கூருக்கு ஸ்துதி.

சென்னை சட்டஸபையில், திருவாங்கூர் ஆலயப்பிரவேச விளம்பரத்தைப் பாராட்டி ஒரு தீர்மானம் 24௳ யன்று செய்யப்பட்டது. ஸ்ரீமான் டி. டி. கிருஷ்ணமாசாரியார் என்ற மெம்பர் இதை ஆக்ஷேபித்தார். ஒரு ஸம்ஸ்தானத்தின் கார்ய காரியங்களைப்பற்றிப் பேச இச் சட்டஸபைக்கு ஸம்பந்தமில்லையென்று அவர் வாதித்தார். அவர் தீர்மானத்திற்கு எதிராகவும் வோட் செய்தார்.

கடன் தவணை ஒத்திவைப்பு.

சென்னை மாகாணத்தில் 400 ரூபாய் கீழ்ப்பட்ட வருமானமுள்ள வியவஸாயிகளின் கடன் விஷயமாக கவர்ன்மெண்டார் ஓர் சட்டம் செய்யப்போகிறார்கள். அதன்படி ஒருவருஷ் காலத்திற்கு வியவஸாயிகள் மீது கடனுக்காக எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளக் கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறது.

[illegible] தகராறு.

மதுரை ஜில்லா கோகில்புரம் என்ற கிராமத்திலுள்ள வண்ணார்கள் தங்கள் தெருவழியாகத் தீண்டாதார்கள் போகக்கூடாதென்று தடைசெய்திருக்கிறார்கள். கிராமப் பள்ளிக்கூடத்தில் தீண்டாதாரையும் சேர்த்த விஷயமாகவே இந்தத் தகராறு முற்றிவிட்டது. தீண்டாதாருடன் சேர்ந்து தங்கள் பிள்ளைகள் படிக்க வண்ணார்கள் ஸம்மதிக்கவில்லை. அந்தப் பள்ளிக்கூடத்தை அவர்கள் பஹிஷ்கரித்து விட்டனராம்.

முஸ்லீம்களின் மூர்க்கத்தனம்.

பீஹாரில் அகோட் என்ற இடத்தில் விநாயக சதுர்த்தியை முன்னிட்டு ஸ்ரீ கணபதி விக்ரஹத்திற்கு ஊர்வலம் நடத்தியபோது பல முஸ்லீம்கள் சேர்ந்து ஊர்வலத்தைத் தாக்கினார்கள். கற்களும், கத்திகளும் உபயோகிக்கப்பட்டனவாம். ஹிந்துக்கள் கலகம் செய்யாமல் அமைதியாயிருந்தனராம்.

சீனாவில் கோரக்கொலை.

இப்போது நடந்துவரும் சீனா—ஜப்பான் யுத்தத்தில் ஜப்பானியர்கள் பல அதிக்ரமங்கள் செய்வதாகத் தெரிகிறது. 23௳ பல ஜப்பானிய விமானங்கள் காண்டன் என்ற நகரத்தின் மீது வெடிகுண்டுகளை வீசினவாம். இதனால் ஆயிரக்கணக்கான நிரபராதிகளான ஸ்திரீகளும், குழந்தைகளும் கொல்லப்பட்டனர். அவ்வூர் முழுவதும் ஒரே அழுகைக் குரலாகவேயிருக்கிறதாம். அந்தோ அன்னியாயம்!! நவீன நாகரிகம் இது!

வந்தேமாதரப்பாடல்.

சென்னை சட்டஸபையில் ஆக்ஷேபம்.

சென்னைசட்டஸபை ஆரம்பமானது முதல் தினமும், நடவடிக்கை ஆரம்பமாகுமுன் வந்தேமாதரப்பாடல் பாடுவது வழக்கமாயிருந்து வருகிறது. 23௳ யன்று சட்டஸபையில் இதைப்பற்றி ஆக்ஷேபம் ஏற்பட்டது. மிஸ்டர் லால்ஜான் என்ற மஹம்மதிய மெம்பர் வந்தேமாதர கீதத்தை ஆக்ஷேபித்து ஸபையைவிட்டு வெளியேறினார். ஒரு ஸமயம் பிரபல காங்கிரஸ்வாதியாக விளங்கிய ஜனாப்ஹமீத்கான் என்பவரும், இந்த கீதம் பல மதஸ்தருக்குப் பிடிக்கவில்லையென்றார். வெள்ளைக் காரர்களுக்கும் இது பிடிக்கவில்லையாம். ஆயினும் தலைவர் வந்தேமாதரப் பாடலுடன் கிறிஸ்தவ, மஹம்மதிய மதப்பாடல்களையும் பாட ஏற்பாடு செய்யப்படுமென்று கூறினார்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S & Co,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷீட் ஜெம்ஷேட் சன்ஸ் & Co,
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

ஜோதிஷம்.

(காக்கழனி கிருஷ்ணமூர்த்தி.)

பழையன மறைதலும், புதியன புகுதலுமான இக்கலியில் நம் நாட்டின் புராதன மேன்மைகளும், பழமையான ஆசாரங்களும் பூர்வீக சாஸ்திராப்யாஸங்களும் நாளுக்கு நாள் குன்றி, பல நவீனங்கள் தோன்றி, தலை தூக்கி தாண்டவமாடுகின்றன. க்ஷீணகதியை அடைந்துவரும் பல சாஸ்திரங்களுள் ஹிந்து மத வேத அங்கமான ஜோதிஷமும் ஒன்று.

ஜோதி: என்றால் பிரகாசம் எனப்படும். இருள் நீங்கி பொருளறிய பிரகாசம் சாதனமாகும். அதுபோல், இருள் சூழ்ந்த இவ்வுலக வாழ்க்கையில் நன்மை தீமைகளை விளக்கிவைக்கும் ஜோதிர்மார்க்கமான சாஸ்திரத்துக்கு ஜோதிஷம், எனப் பெயர் வந்தது.

ஜோஷத்தைப் பற்றி ரிக் வேதத்தில் பிரதிபாதிக்கப்படுகிறது. வேதத்தில் சொல்லப்படும் யாக, யக்ஞாதிகளுக்கு தெரிந்துகொள்ளவேண்டிய திதி, வார, நக்ஷத்திர, மூகூர்த்தங்கள் யாவும் ஜோதிஷ கணித மூலியமாகவே தெரியவேண்டியதாகிறது. சித்த சுத்தியின் பொருட்டு செய்யப்படும் நித்திய, நைமித்திய, கர்மாக்களுக்கும், அநுதினமும் சங்கல்ப பூர்வமாய்செய்யும் ஸ்னான தானாதிகளுக்கும், மதாசாரணைக்கும், அவசியம் அறியவேண்டியதாயுள்ள அமாவாசை, சூர்ய சந்திர கிரணங்கள், திதி, வார, கரண, யோகாதிகள் யாவற்றுக்கும், இன்னும் ஏகாதசி முதலிய விருத தினங்கள், சிரார்த்த திதிகள், முதலியவற்றுக்கும் ஜோதிஷ சாஸ்திர மூலியம் கணிக்கப்படும் பஞ்சாங்கத்தின் உதவியாலேயே அனுஷ்டிக்கப்படுகின்றன. இத்தியாதி காரணங்களால் ஜோதிஷமென்பது வேதாங்கங்களில் ஒன்றாக ஏற்பட்டது.

வேதத்தையே அங்கியாகவுடைய வேத புருஷனுக்கு வியாகரணம் முகமாகவும், ஜோதிஷம் நேத்திரமாகவும், நிருக்தம் காதுகளாகவும், கல்பம் கைகளாகவும். சிக்ஷை மூக்குகளாகவும், சந்தஸ் கால்களாகவும் வர்ணிக்கப்படுவதால் ஜோதிஷ சாஸ்திரம் வேதாங்கங்களுள் நேத்திர ஸ்தானமானது.

ஜோதிஷ சம்ஹிதையில் "கணிதஸ்கந்தம்" "ஜாதகஸ்கந்தம்" "சாகாஸ்கந்தம்" என்று மூன்று பிரிவுகளுண்டு.

சூரியாதி கிரஹங்களின் சஞ்சாரங்கள் எதில் உபதேசிக்கப்படுகிறதோ, அதுவே முதலாவதான கணிதஸ்கந்தமாகும். இந்த கணிதபாகம் வர்ணாசிரம தர்மம் நடந்துவர காலாதி நிச்சயங்களை நிர்ணயித்து உதவி புரிகிறது.

பிரதிஷ்டை, யாத்திரை, விவாஹாதிகள், ஜன்ம காலபலன்கள் முதலியன எதில் போதிக்கப்படுகிறதோ, அதுவே இரண்டாவதான ஜாதக ஸ்கந்தமாகும். இதினால் இன்னின்ன ஊழ்வினையின் காரணத்தால் இன்னின்ன காலத்தில் இன்னின்ன நன்மை தீமைகள் உண்டாகிறதென்பதை அறிந்து கொள்ளலாம் அதிலிருந்து ஊழ்வினையின் பலன் சாமான்ய கெடுதியாயிருந்தால் அதை இலகுவாக்கிக்கொள்ள வேதோக்தமான பிராயச்சித்தாதி கர்மாக்களைச்செய்து சித்திபெறவும், விசேஷ கெடுதிகளாயிருந்தால் "அவச்யம் அநுபோக்தவ்யம், கிருதம், கர்மசுபாசுபம்" என்பதான விதியை நினைந்து பொறுமையை அடையவும் வழியுண்டு. தவிற, வருங்காலத்தில் பாபங்கள் செய்டலாகாதென்ற ஓர் விவேகம் வரவும் பிரசக்தி உண்டு.

பிரச்னகாலத்திலுதயமாகும் லக்னத்தை முன்னிட்டு, அக்காலத்திலுள்ள கிரக நிலையை அநுசரித்து, சுப, அசுப பலன்கள் எதினாலறியப்படுகிறதோ அதுவே மூன்றாவதான சாகாஸ்கந்தமாகும். இந்தப் பிரிவின் உதவியால் வீண் பிரயாசையும், விருதா ஆசையும், வெகு நஷ்டமும் ஏற்படாமல் தப்பித்துக் கொள்வதுடன் கார்யஹானி வராமல் உள்ள வழிகளைப் பின்பற்றி நடக்கவும் ஹேதுவுண்டு.

இதில் சொல்லப்படும் இரண்டாவதான ஜாதக ஸ்கந்தம்தான் 'ஹோரா' என்று சொல்லப்படும். ஹோரா என்பதினால் பூர்வ ஜன்ம வினைகளின் பலன்கள் பிரகாசப்படுத்தப்படுகிறது. இதை அநுஸரித்து நம் குழந்தைகளுக்கு ஜனனகால ஜாதகத்தை நாம் கணிக்கும்பொழுது. [ஸம்பதாம்

"ஜநநீ ஜன்ம சௌக்யாநாம் வர்த்தநீ குல
பதவீ பூர்வ புண்யாநாம் லிக்யதே ஜன்ம
பத்ரிகா"

என்ற சுலோகத்தை முந்தி எழுதுகிறோம். பூர்வ ஜன்மத்தைப்பற்றியோ, வரும் ஜன்மத்தைப் பற்றியோ ஒப்புக்கொள்ளாத மதஸ்தர்களுக்கு இந்த ஹோரா என்ற ஜோதிஷ சாஸ்திரபாகம் பயனில்லை. அவர்களுக்கும் இதற்கும் ஞான ப்ராப்தி உறவுகூடக் கிடையாது.

உண்மை இவ்விதமிருக்க, இந்துமத வேத தர்ம சாதனமான ஜோதிஷ சாஸ்திரத்தை அன்னியர்கள் அப்யசிப்பதும், வான சாஸ்திர ஆராய்ச்சி செய்வதும். ஆருடம் சொல்லி காசுபறிக்க விளம்பரங்கள் (Advertisements) செய்வதும் எதற்கோ நாமறியோம்.

பிரத்தியக்ஷ பிரமாணத்தையே முக்கியமாக நம்பும் அன்னியர்களால் நமது பிராசீன ஜோதிஷ சாஸ்திரத்தின் கணிதபாகம் கையாளப்பட்டதினாலும், அவர்களுக்கு சூக்ஷ்மதிருஷ்டி இல்லாததாலும், நமது ஜோதிஷ சாஸ்திரத்தில் விவரிக்கப்பட்டுள்ள கலை, விகலை, தர்ப்பரை முதலான சூக்ஷ்ம பாகங்களை டிகிரிகளாகக் கணக்கிட்டுள்ள அவர்களின் ஆராய்ச்சி தற்காலம் நடந்துவருகிறது. நம் நாட்டிலும் இந்த முக்கியமான கல்வியை சரிவர அப்யசிக்காமல், அவரவர்களின் படிப்புக்கும், யுக்திக்கும் எப்படி எப்படி தோன்றுகிறதோ அப்படியப்படி 'வாக்கியம்' 'திருக்கணிதம்' 'பாஹிதம்' என்ற பல பேத கணிதங்களைப் பின்பற்றி பற்பல பஞ்சாங்கங்கள் பிரசுரிக்கிறார்கள். அதினால் ஒவ்வொரு முக்கிய தினங்களும், சிரார்த்த திதிகளும் நிர்ணயிக்க முடியாமல் அவரவர்களுக்கு அனுஷ்டானமுள்ள பஞ்சாங்கங்களைப் பின்பற்றி தினம் ஆக்ஷேபணையும் சமாதானமும் உண்டாகிக்கொண்டு வருகிறது.

அடிப்படையான கணிதபாகமே தற்காலம் தட்டுக்கெட்டு தடுமாறும்பொழுது, அதை ஆதாரமாகக்கொண்டு சொல்லும், பல பாவமும், பிரச்ன பாவமும் எவ்விதம் ஒத்து வரும்?

ஜோதிஷத்தின் தற்கால நிலைமையைப் பற்றி இங்கு விளக்குவதானால், இவ்வியாசம் அதிக விரிவடைய நேரிடும். தற்காலம் அதிகமான சந்தா நேயர்களின் ஆதரவைப் பெறாத நமது ஆர்யதர்மத்தில் அதிக பக்கங்கள் அச்சிடத்தகுந்த இடமில்லை. தவிற என்போன்றவர்கள் ஜோதிஷத்தைப்பற்றி அதிகம் எழுதுவதிற்குமில்லை.

தற்காலத்தில் ஜோதிஷ சாஸ்திரத்தை குரு மூலமாய் கற்காமலும், யுக்தி, யுக்தமுடன் படிக்காமலும், கேவலம், மேஷம், ரிஷபம் என்று எண்ணத்தெரிந்தமாத்திரத்திலேயே தங்களை ஜோதிஷ நிபுணர்களாகச் சொல்லிக்கொண்டு அநேகர் வெளிவந்துள்ள ஸ்திதியில் அதன் கௌரவத்தை எவ்வளவு தூரம் தாழ்த்திவிட்டார்களென்பதை நமது நேயர்கள் அறிந்துகொண்டால் அதுவே போதும். அவர்களால் சொல்லப்படும் பல பாவங்கள், பலிதமில்லாமல் பல பாழாவதற்குள்ள காரணங்களையும், அவைகளைப் பற்றியுள்ள ரகசியங்களையும் பற்றி மதுரையில் பிரசுரமாகும் "இந்துநேசன்" என்ற வாரப் பத்திரிகையில் என்னால் எழுதப்படபோகும் வியாசத்தில் என் சிற்றறிவுக்கு புலப்பட்ட வரையிலுள்ள யுக்தியைக்கொண்டு விரிவான வியாசம் வெளியிட நினைத்திருக்கிறேன். அதைப் பார்ப்பவர்களுக்கு அது விளங்கும்.

இந்தியர்களாயும், இந்துமத வேத ஆச்ரிதராயுமுள்ள ஆஸ்திகர்களுக்கு, அதிலும் த்விஜர்களுக்கு இந்த ஜோதிஷ சாஸ்திரம் அத்யந்த அவசியமானதாகும்.

"யோஜோதிஷம் வேத்தி நரஸ்ஸ ஸம்யக்
தர்மார்த்த மோக்ஷான் லபதே யசச்ச"

என்ற பாஸ்கரரின் வசனப்படி சதுர்வித புருஷார்த்தத்துக்கும் ஜோதிஷமும் ஓர் சாதனமாயிருப்பதால் அதில்சிரத்தைவைத்து அதன் தற்கால க்ஷீணஸ்திதியை அகற்றி, சரியான கணிதம் வெளிவரும்படி பிரயாசையெடுப்பது உத்தமர்களின் கடமையாகும். அதில் பாடுபட முன்வருபவர்கள் வேதோக்தமான தர்மத்தைச் செய்தவராவர்கள். சிரேயஸ்ஸை விரும்பும் பிரமுகர்கள் இதில் கவனம் செலுத்துவார்களாக.

நீதி - நிர்வாகப்பிரிவினை இல்லை.

சென்னை சட்ட சபையில் மான்ய விவாத காலத்தில் நீதி— நிர்வாஹ பிரிவினை விஷயமாக காங்கிரஸ் வெகுகாலமாக கிளர்ச்சிசெய்து வந்திருப்பதை ஞாபகப்படுத்தி, இப்போது காங்கிரஸ் கவர்மெண்டு நடைபெறுவதால் இதை பூர்த்தி செய்ய வேண்டுமென்றுபலர் வற்புறுத்தினார்கள்.

ஆனாலும் கனம் ராஜகோபாலாச்சாரியார், இதை ஆக்ஷேபித்துப்பேசுகையில்இப்போது காலம் மாறிவிட்டதாயும் நீதி— நிர்வாஹப்பிரிவினை அவச்யமில்லையென்றும் சொல்லிவிட்டார்.

போலீசாரும் நெற்றிக்குறியும்.

ஒரிஸா மாகாணத்திலுள்ள போலீஸ்சேவகர்கள், உத்யோக உடுப்பை அணிந்திருக்கும் போது நெற்றியில் தங்கள் மதக்குறியை இட்டுக்கொள்ளக்கூடாதென்று போலீஸ் சட்டம் தடுப்பதாயும, இது பொது ஜனங்களுடைய மத உணர்ச்சியைப்பாதிப்பதாயும் சட்டஸபை மெம்பர்கள் ஸர்க்காருக்கு எடுத்துக்காட்டினார்கள். ஸர்க்கார் இந்தத்தடையை நிவர்த்திப்பார்களா?

ஸ்வதேசி உடை தரிக்கலாம்.

சென்னை கார்ப்பரேஷனில் உள்ள சிப்பந்திகள் முதலியவர் ஆங்கில தோரணையில் உடுத்த வேண்டியதில்லையென்றும், இந்திய தேச ரீதியில் உடை தரித்து வரலாமென்றும் ஒரு தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது.

த்ரிமதஸ்தர்களுக்கும் மிகவும் உபயோகமானவை.

(தேவநாகர எழுத்து)

1. ஸ்ரீ துர்க்கா ஸ்தோத்ரம் (ஸ்ரீ மஹா பாரதம் விராட பர்வத்திலுள்ளது)ஸம்ஸ்கிருத மூலம் தமிழ் மூலம் பதவுரையுடன் கூடியது. 0—1—0
2. ஸ்ரீ ஆதித்யஹ்ருதய ஸ்தோத்ரம் (ஸ்ரீமத்ராமாயணம் யுத்தகாண்டத்திலுள்ளது) ஸம்ஸ்கிருத மூலம் தமிழ்மூலம் பதவுரையுடன்கூடியது. 0-2-6
3. ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்தோத்ரம் ஸ்ரீமந் மஹாபாரதம் வனபர்வத்திலுள்ளது) ஸம்ஸ்கிருத மூலம் தமிழ்மூலம் பதவுரையுடன்கூடியது. 0-2-0

புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—

ஆர். எஸ். சர்மா, 'சிரோமணி'
நெ. 14. வெங்கட்டராயர் தெரு கும்பகோணம்,

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

'மூகபஞ்சசதீ'

(23—9—37 தொடர்ச்சி)

2. ஸ்மிருதியென்றால் நினைவு, ஞாபகம் என்றும் அர்த்தம்.

3. ஆகவே அம்பிகையின் கடாக்ஷமானது (அம்பிகையின் காதுகளுடைய) ச்ருதிகளுடைய மார்க்கத்திலும், (முனீச்வரர்களுடைய மனதுகளுடைய) ஸ்ம்ருதிகளுடைய மார்க்கத்திலும் போவதாக ஏற்படுகிறது. இப்படி உத்தமமான பழக்கமிருந்தும் அதற்கு கௌடில்யம் முதலான தோஷங்கள் எப்படி ஏற்பட்டனவென்று கவி ஆச்சர்யப்படுகிறார்.

4. கௌடில்யம் என்பது குடிலமானஸ்வபாவம். நேராக (ஒழுங்காக) இருப்பதற்கு எதிரிடையானது! அம்பிகையின் கடைக்கண் பார்வையானது இங்கு வர்ணிக்கப்படுவதால் அதற்குக் கௌடில்யம் இருப்பதாகச் சொல்வது பொருத்தமாக இருக்கிறது. அது சஞ்சல ஸ்வபாவமுள்ளதாகையால் அதற்கு அஸ்திரதா (நிலையில்லாமலிருப்பது) உண்டென்றுசொல்வதும் பொருத்தம். மேலும், தாமரஸ புஷ்பங்களின் காந்தியைத் தோக்கடித்த காந்தியோடிருப்பதால் அந்த காந்தியை அபகரிப்பதாகச் சொல்லி அதற்கு சௌர்யம் (திருட்டுத்தனம்) இருப்பதாகச் சொல்வதும் பொருத்தம்.

33. நித்யம் ச்ருதே: பரிசிதௌ யதமானமேவ
நீலோத்பலம் நிஜஸமீப நிவாஸ லோலம் |
ப்ரீத்யைவ பாடயதி வீக்ஷண தேசிகேந்த்ர:
காமாக்ஷி கிம் நு தவ காளிம ஸம்ப்ரதாயம் ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி!, தவ - உனது, வீக்ஷண தேசிகேந்த்ர: - பார்வையாகிற குருநாதனானவர், நித்யம் - ஸதாகாலமும், ச்ருதே: பரிசிதௌ - ச்ருதியின் அப்யாஸத்தை (தெரிந்து கொள்வதை), யதமானம் ஏவ - முயற்சித்துக்கொண்டேயிருப்பதும், நிஜ ஸமீப நிவாஸ லோலம் - தன் ஸமீபத்திலிருப்பதற்கு ஆசைப்படுவதுமான, நீலோத்பலம் (கருநெய்தல் புஷ்பத்தை), காளிமஸம்ப்ரதாயம் - கல்மஷத்தின் தன்மையை ப்ரீத்யைவ - ப்ரீதியோடு, பாடயதி கிம் நு - சொல்லிவைக்கிறாரா என்ன?

1, இதில் அம்பிகையின் கடாக்ஷத்தை குருவாகவும் நீலோத்பலத்தை அதின் சிஷ்யனாகவும் வர்ணிககப்பட்டிருக்கிறது சிஷ்யன் குருவினிடமிருந்து வேதங்களை நித்யமும் அத்யயனம் செய்வானாகையால் 'நித்யம் ச்ருதே: பரிசிதௌ யதமானம்' என்று சொல்லப்பட்டது. சிஷ்யன் குருவினுடைய ஸமீபத்திலேயே இருந்துகொண்டு சுச்ருஷை செய்வானாகையால் 'நிஜ ஸமீப நிவாஸலோலம்', என்றும் சொல்லப்பட்டது.

2. உத்தமஜாதி ஸ்திரீகள் காதில் நீலோத்பலம் முதலான புஷ்பங்களை அணிந்துகொள்வது வழக்கமாகையால் 'நித்யம் ச்ருதே: பரிசிதௌ யதமானம்' என்பது நீலோத்பலத்துக்கும் பொருத்தமாக இருக்கிறது. அப்படியிருக்கையில் (உத்தம ஸ்திரீகளுடைய கண்கள் அவர்களுடைய காதுகள் வரையில் நீண்டிருப்பதாக வர்ணிக்கப்படுவதை அனுஸரித்து) அது கண்ணுக்கு ஸமீபமாயிருக்குமாகையால் 'நிஜ ஸமீப நிவாஸ லோலம்' என்பதும் அதற்குப் பொருத்தமாக இருக்கிறது,

2. இவ்விதமான சிஷ்யனுக்கு குரு என்ன உபதேசம்செய்கிறாரென்றால் அது 'காளிமஸம்ப்ரதாய'த்தைப்பற்றி. காளிமமென்றால் கறுப்பாயிருப்பது. ஸ்திரீகளுடைய கடாக்ஷத்தை கறுப்பாகவும் கண்களை நீலோத்பலத்திற்கு ஸமானமாகவும் வர்ணிப்பது கவிகளுடைய ஸம்ப்ரதாயம்.

4. பாபத்தை கறுப்பாக வர்ணிப்பதும் கவிகளுடைய வழக்கம். ஆகவே 'காளிம ஸம்ப்ரதாய'த்தைப்பற்றி சொல்லிக்கொடுப்பதென்றால் பாபத்தை உபதேசிப்பது என்று அர்த்தமாகும். அவ்வித உபதேசத்தை எதற்காக இந்த கடாக்ஷகுரு (அதுவும் ப்ரீதியோடு) செய்கிறார் என்பதாகக் கவி ஆச்சரியப்படுகிறார்.

34. ப்ராந்த்வா முஹு: ஸ்தபகித ஸ்மிதபேனராசௌ
காமாக்ஷி வக்த்ரருசி ஸஞ்சய வாரிராசௌ |
ஆனந்ததி த்ரிபுரமர்தன நேத்ரலக்ஷ்மீ:
ஆலம்ப்ய தேவி தவ மந்தம் அபாங்கஸேதும் ||

தேவி காமாக்ஷி - ஹே தேவி! காமாக்ஷி!, த்ரிபுரமர்தன - பரமசிவனுடைய, நேத்ர லக்ஷ்மீ: - பார்வையானது, ஸ்தபகித ஸ்மித - அடுக்கடுக்கான உனது புன்சிரிப்புகளாகிற, பேனராசௌ - நுரைகள் நிறைந்த,' வக்த்ர ருசி ஸஞ்சய - உனது முகத்தினுடைய காந்தியின் 'சேர்க்கையாகிற, வாரி ராசௌ - ஸமுத்ரத்தில், முஹு: 'ப்ராந்த்வா - அடிக்கடி சுழன்றுவிட்டு,' தவ அபாங்கஸேதும் - உனது கடாக்ஷமாகிற அணையை (கரையை) மந்தம் - மெதுவாக, ஆலம்ப்ய - அடைந்து, ஆனந்ததி - ஆனந்தப்படுகிறது.

1. பரமசிவனுடைய பார்வையானது அம்பிகையின் முககாந்தியாகிற ஸமுத்திரத்தில் சுழன்று தத்தளித்து கடைசியாக கடாக்ஷமாகிற அணையை யடைந்து கரையேறிக்களித்துக்கொண்டிருப்பதாக இதில் வர்ணிக்கப்பட்டது. புன்சிரிப்பை வெளுப்பாக வர்ணிப்பது ஸம்ப்ரதாயமாகையால் அதை இங்கு அம்பாளுடைய முககாந்தியாகிற ஸமுத்ரத்திலுண்டாகும் நுரையாகச் சொல்லப்பட்டது.

35. ச்யாமா தவ த்ரிபுரஸுந்தரி லோசனஸ்ரீ:
காமாக்ஷி கந்தளிதமேதுர தார காந்தி: |
ஜ்யோத்ஸ்னாவதீ ஸ்மிதருசாபி கதம் தனோதி
ஸ்பர்தாமஹோ குவலயைச்ச ததா சகோரை: ||

த்ரிபுரஸுந்தரி காமாக்ஷி - ஹே த்ரிபுரஸுந்தரி! ஹே காமாக்ஷி!, ச்யாமா - கருப்பானதும், கந்தளித மேதுர - மலர்ந்தும் ம்ருதுவானதுமான, தார காந்தி: - கருவிழியின் காந்தியையுடைய, தவ லோசனஸ்ரீ: - உனது பார்வையானது ஸ்மிதருசா - உன் புன்சிரிப்பின் காந்தியினால், ஜ்யோத்ஸ்னாவதி அபி - நிலவோடு கூடியதாயிருந்தும், குவலயைச்ச - கருநெய்தல் புஷ்பங்களோடும், ததா - அதேமாதிரி, சகோரைச்ச - சகோர பக்ஷிகளோடும் கூட, ஸ்பர்தாம் - போட்டியை (சண்டையை), கதம் தனோதி - என்செய்கிறது? அஹோ - ஆச்சர்யம்!

1. 'ச்யாமா' என்ற பதமானது கறுப்புநிறத்தைத்தவிர இரவையும் குறிக்கும்.

2. இங்கு அம்பிகையின் கடாக்ஷத்தை சந்த்ரனுக்கு ஸமானமாக வர்ணிக்கப்பட்டது. தாரமென்ற பதமானது கண்ணின் கருகணியைக் குறிப்பதுடன் நக்ஷத்திரத்தையும் குறிக்கும்.

3. சந்த்ரன் குவலயங்களை மலரச்செய்வதால் அவற்றிற்கு நண்பனாகச் சொல்லப்படுவான். சகோர பக்ஷிகள் நிலவையே பானம் பண்ணுகிறவையாகையால் அவற்றிற்கும் சந்த்ரன் நண்பனாகச் சொல்லப்படுவான். ஆகவே சந்த்ரனைப்போன்றதான அம்பிகையின் கடாக்ஷமானது குவலயங்களுடனும் நட்போடு இருக்கவேண்டியிருக்க அவற்றோடு பகை செய்ய வேண்டிய காரணமென்னவென்று கவியானவர் கேட்கிறார்.

4. உத்தம ஸ்திரீகளுடைய நேத்ரங்களுக்கு குவலயங்களை ஸமமாகச் சொல்வதுடன் சகோர பக்ஷிகளின் நேத்ரங்களையும் ஒப்பிடுவது வழக்கம். ஆகவே அவற்றோடு போட்டிபோடுவதாக அம்பிகையின் லோசனங்களைப்பற்றி இங்கு சொல்லப்பட்டது.

36. காலாஞ்ஜனம் ச தவதேவி நிரீக்ஷணம் ச
காமாக்ஷி ஸாம்யஸரணிம் ஸமுபைதி
காந்த்யா |
நி:சேஷ நேத்ர ஸுலபம் ஜகதீஷு பூர்வம்
அன்யத் த்ரிநேத்ர ஸுலபம் துஹினாத்ரி
கன்யே ||

தேவீ - தேவீ!, காமாக்ஷி - ஹே காமாக்ஷி! துஹினாத்ரி கன்யே - ஹிமவானுடைய பெண்ணே!, காலாஞ்சனம் ச - கருப்புமையும், தவ நிரீக்ஷணம் ச - உனது பார்வையும், காந்த்யா - காந்தியினால் (காந்தியில்) ஸாம்ய ஸரணிம்-ஸமமாயிருக்கும் தன்மையை, ஸமுபைதி - அடைந்திருக்கின்றன. ஆயினும், பூர்வம்-முதலில் சொல்லப்பட்ட காலாஞ்ஜனமானது, ஜகதீஷு - லோகங்களில், நி:சேஷ நேத்ர ஸுலபம் - எல்லாருடைய நேத்ரங்களுக்கும் எளிதில் கிடைக்கக்கூடியது. அன்யத் - மற்றொன்றான உனது பார்வையானது, த்ரிநேத்ர ஸுலபம் - பரமசிவனுக்கு மாத்திரம் கிடைக்கக்கூடியதாயிருக்கிறது.

1. கடாக்ஷமானது கருப்பாயிருப்பதாக வர்ணிப்பதான கவிகளின் ஸம்ப்ரதாயத்தை அனுஸரித்து இங்கு அதை காலாஞ்ஜனத்திற்கு ஸமமாகச் சொல்லப்பட்டது. ஆயினும் அவையிரண்டிற்குமுள்ள ஒரு முக்யமான வித்யாஸமும் எடுத்துக் காட்டப்பட்டது. காலாஞ்ஜனமானது எல்லாருடைய கண்களிலும் இட்டுக்கொள்ளப்படுவதாகையால் அதை 'ஜகதீஷு நிச்சேஷ நேத்ர ஸுலபம்' என்று சொல்லப்பட்டது. அம்பிகையின் கடாக்ஷமோ தன் பதியான பரமசிவனுக்கு மட்டுமே கிடைக்கப் பெறுமாதலால் 'த்ரிநேத்ர ஸுலபம்' என்று சொல்லப்பட்டது. இப்படி பிறர் யாருக்கும் ஸுலபமாயில்லாமல் பரமசிவனுக்கு மட்டும் அம்பிகையின் கடாக்ஷமானது ஸுலபமாயிருப்பதால் அதற்குத்தனியான கௌரவம் இருக்கிறது. இதனால் அம்பிகைக்குத்தன் பதியிடமிருக்கும் ப்ரேமாதிசயமானது எடுத்துக் காட்டப்பட்டது.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-௵ புரட்டாசி-௴ 14௳

மதுவிலக்குக்கும் ஸமூஹ வ்யவஸ்தையே உதவி.

சென்னை சட்டஸபையில் காங்கிரஸ் மந்திரிகள் மதுவிலக்குச் சட்டத்தை நிறைவேற்றிவிட்டார்கள். இவ்விஷயமாக எல்லா கக்ஷியினரும் அவர்களைப் பாராட்டினார்கள். இது நியாயமானதே. கோடிக்கணக்கான வருமானத்தை இழந்து, அதன் மூலம் தங்கள் நிர்வாஹத்தில் பெரிய சிரமத்தை ஏற்றுக்கொண்டாவது இந்தச் சட்டத்தை இயற்றியதில் காங்கிரஸ்காரர்கள் பெருமைப்படவேண்டியது நியாயமேயாகும். உண்மையை நோக்கினால் இது ஸநாதநதர்மத்தின் வெற்றியென்றுகூடச் சிலர் நினைக்கக்கூடும்.

தர்மதேசமாகிய இந்த பாரத பூமியில் பல ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பே கள்குடி மஹாபாதகமென்று சாஸ்திர விதியும் ஸமூஹக் கட்டுப்பாடும் ஏற்பட்டு நிற்கிறது

அதன் பலமானது, இந்த அலங்கோல நாகரிக காலத்திலகூட ஹிந்துஸமூஹத்தில் பிரபலமாக பிரகாசித்துக்கொண்டிருப்பது மறைக்க முடியாது. பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய சூத்திராதிகளும், கலப்பு ஜாதியினரும் கூட கள் குடிக்கக்கூடாதென்றும் அதனால் இஹபர க்ஷேமங்கள் பங்கப்படுமென்றும், குடிப்பவர்களை ஸமூக பஹிஷ்காரம் செய்யவேண்டுமென்றும் சொல்லி அவர்களுக்கு வெகு கடுமையான பிராயச்சித்ததண்டனைகளும் விதிக்கப் பட்டிருக்கின்றன. இந்த சாஸ்திர விதிகளுக்கும், ஸமூக வ்யவஸ்தைக்கும் கட்டுப்பட்டே இன்றுகூட பலர் பஹிரங்கமாகக் குடிக்க வெட்கமும் பயமும் கொள்வதைக் காண்கிறோம். இருப்பினும், சிறிதுகாலமாக சாஸ்திரவிதிகளிலும் ஸமூஹ தர்மங்களிலும் அலக்ஷ்ய புத்தி செய்யும்படி துஷ் பிரசாரம் நடந்ததின்பயனாக கள்குடியில் இருந்துவந்த கட்டுப்பாடும் குலைந்து இந்த துன்மார்க்கம் அதிகரிக்க நேர்ந்துவிட்டது. இதற்குக் காரணம் யாராயிருப்பினும் அந்தத் தவறுதலுக்குப் பிராயச்சித்தமாகவே இந்த மதுவிலக்குச் சட்டம் இயற்ற நேர்ந்திருக்கிறது.

தார்மிக ஜனங்கள் நிறைந்த இந்தியா போன்ற தர்மதேசத்தில் சட்டமூலமாக மதுவிலக்குச் செய்ய நேர்ந்தது பெருமைப்படக் கூடியதா வென்று நினைப்பவர்களும் பலர் இருக்கக் கூடும். எப்படியும் இந்தச் சட்டமானது ஸநாதந தர்மவழியை அநுஸரித்ததாயிருப்பது கவனிக்கத்தக்க அம்சமாகும்.

இந்தச் சட்டத்தைப்பற்றி நிகழ்ந்த வாதப்பிரதிவாதங்களும் இங்கு கவனிக்கத்தக்கவை, இந்த மதுவிலக்கு முயற்சியானது கார்யத்தில் நிறைவேறுமாவென்று பலர் சங்கை வெளியிட்டனர். அமெரிக்காவில் மதுவிலக்கு முயற்சி வீழ்ச்சியடைந்துவிட்டதை அவர்கள் உதாஹரணமாகக் காட்டினார்கள். இதை மறுத்துப் பேசிய மந்திரியும், மற்ற மதுவிலக்கு அபிமானிகளும், நமது சாஸ்திர விதிகளையும், நம் ஸமூஹ வ்யவஸ்தையையுமே தங்களுடைய முயற்சிக்குப் பின்பலமாகக் குறிப்பிட்டார்கள். அமெரிக்கா போன்ற அன்னியநாடுகளில் குடிப்பது பாபமாகக் கருதப்படுவதில்லை. இந்தியாவிலோ அப்படியில்லை. குடிப்பது பாபமென்று ஒவ்வொரு ஹிந்துவின் மனதிலும் பதிந்து கிடக்கிறது. இதனால் கள்குடியை வெறுப்பவர்களே இத்தேசத்தில் அதிகம். ஸமூஹக் கட்டுப்பாடும் இதற்கு ஏற்றபடி வேர் ஊன்றி நிற்கிறது. ஆதலால் அமெரிக்காவின் உதாஹரணம் இங்கு உபயோகப்படாதென்றும் மதுவிலக்கு இங்கு வெற்றிகரமாக முடியுமென்றும் கனம் ஆசாரியாரும் மற்றவர்களும் பேசியிருக்கிறார்கள்.

ஆகவே நம் சாஸ்திரவிதிகளுடையவும், ஸமூஹ தர்மத்தினுடையவும் பின் பலத்தை நம்பியே இந்த மதுவிலக்கு நிறைவேறுமென்று இவர்கள் த்ருடமாக நம்பியிருப்பது தெளிவாகிறதல்லவா? நமது சாஸ்திரங்களையும் ஸம்பிரதாயங்களையும் பரிஹஸித்துப் பேசி வியவஸ்தையை அழிப்பதற்கென்றே கிளம்பியுள்ள பல நாஸ்திகர்கள் கூட மதுவிலக்குப்போன்ற விஷயத்தில் சாஸ்திர, ஸமூஹ கட்டுகளையே சாக்காகக்கொண்டு பேசுவது விசேஷமல்லவா? இதுவும்ஸநாதனத்தின்வெற்றியென்று நினைக்க இடமில்லையா? குடிக்கு விரோதமாக இந்திய ஜனங்களின் மனப்போக்கைபரிபக்வப்படுத்தியிருப்பதெது? சாஸ்திரமும், ஸமூஹவ்யவஸ்தையும் அல்லவா? அவ்விரண்டும் அமெரிக்கா போன்ற அன்னிய நாடுகளில் இல்லாதகாரணத்தாலேயே அங்கு மதுவிலக்கு வெற்றியடையவில்லை யென்று மந்திரிகளும் மற்றவர்களும் ஒப்புவதிலிருந்து அந்த சாஸ்திர விதிகளையும் ஸமூஹப் பழக்கங்களையும் அப்படியே பாதுகாக்கவேண்டுமென்ற தத்வத்தை அவர்கள் உணர்வார்களா? கேவலம் சட்டபலம் ஒன்றினால் மட்டும் ஒரு கார்யத்தை ஸாதிக்க முடியாதென்பதும் அவர்களுக்கு விளங்கியிருக்கவேண்டுமல்லவா? இதைப்போலவே வேறு மற்ற விஷயங்களிலும் சாஸ்திர விதிகளையும் ஸமூஹப்பழக்கவழக்கங்களையும் காங்கிரஸ்காரர்கள் மதித்து நடக்கவேண்டியதை உணருவார்களாக.

இவர்களுடைய மதுவிலக்கு முயற்சி வெற்றியடையவேண்டுமானால் வெறும் சட்டம் மட்டும் போதாது. ஜனங்களிடையில் சாஸ்திரவிதிகளையும், நரகாதி தோஷங்களையும் எடுத்துக்காட்டி பிரசாரம் செய்வதும் மிக அவச்யமாகும். இதற்கு காங்கிரஸ் வாலண்டியர்களை மட்டும் நம்பியிருக்காமல் சிறந்த மதாபிமானிகளைக் கொண்டும் பிரசாரம் நடத்துவது விரும்பத்தக்கது. காங்கிரஸ் மந்திரிகள் இவ்விஷயத்தில் கவனம் செலுத்துவார்களா?

குறிப்புகள்.

ஆழ்வாஞ்சேரி ஸம்பவம்.

திருவாங்கூர் விளம்பரத்தைப் பலப்படுத்தி நிலைநிறுத்த எவ்வளவோ தந்திரங்கள் கையாளப்படுகின்றன. பத்திரிகைகளில்வெளிவரும் மாயா பிரசாரத்திற்கும் அளவில்லை. கேரள அரசர்களுக்கு வைதிகமார்க்க குருக்களாக விளங்கும் ஆழ்வாஞ்சேரி தம்புராக்கள் இந்த ஆலயப்பிரவேச விளம்பரத்தை ஒப்புக்கொண்டுவிட்டதாக ஒரு செய்தி பத்திரிகைகளில் பரப்பப்பட்டது. ஆனாலிவ்விஷயம் உண்மையல்லவென்றும், கூடல் மாணிக்கம் கோவில் தகராறு விஷயத்தில் கொச்சி ராஜாவுக்கு வழிகாட்டியவர்கள் இவர்களே யென்றும் அது ரிகார்டு மூலம் உறுதிப்பட்டிருக்கிறதென்றும், அப்படி பேசியவர்கள் இப்போது திருவாங்கூர் விளம்பரத்தை ஆதரிக்க நியாயமில்லையென்றும் சென்னை மெயில் பத்திரிகையில் நீண்ட மறுப்பு பிரசுரமாகியிருக்கிறது. இந்த மறுப்பை ஹிந்துப் பத்திரிகை முதலியவை பிரசுரிக்கவில்லை. மெயில் பத்திரிகையில் வந்த மறுப்பு தவறென்றும், தம்புராக்கள் ஆலயப்பிரவேச விளம்பரத்தை ஆதரித்து அறிக்கைவிட்டது தமக்குத் தெரியுமென்றும், தாம் அதை போட்டோபடம் பிடித்திருப்பதாயும் சென்னை சட்டஸபை மெம்பரொருவர் பத்திரிகைகளில் எழுதியிருக்கிறார். இந்த மெம்பர் ஆழ்வாஞ்சேரிக்குப் போகவோ, போட்டோ எடுக்கவோ அவச்யமான காரணமென்னவென்பது அதிசயமாயிருக்கிறது. பொதுவாக இந்த ஸம்பவங்களைப் பார்த்தால் வழக்கப்படி ஏதோ ஸங்கேதமான பத்திரிகைச் சூழ்ச்சி நடப்பதாகவே தெரிகிறது. இதில் நேரில் ஸம்பந்தப்பட்டவர்கள் ஒன்றும் சொல்லாதவரையில் பத்திரிகைகளில் நடக்கும் பொய்ப்பிரசாரத்தை நாம் நம்புவதா? எப்படியும் திருவாங்கூர் விளம்பரத்தை கரையேற்றுவதற்காக பல வழிகளிலும் நடந்து வரும் சூழ்ச்சிகளை கவனிக்கையில் ஆழ்வாஞ்சேரி அனுமதி கிடைத்திருந்தாலும் அதில் அதிசயப்பட காரணமில்லை.

இங்கிலாந்தில் தாய் தகப்பன் தெரியாத குழந்தைகள்.

ஸெப்டம்பர் 27௳யன்று வெளிவந்துள்ள "ஸண்டே டைம்ஸ்" என்ற ஆங்கிலப் பத்திரிகையில் மேற்கண்ட விஷயத்தைப் பற்றி ரஸமான விவரம் வெளிவந்திருக்கிறது. லண்டன் பட்டணத்தில் விவாஹமாகாத ஸ்திரீகளுக்கு வியபிசாரத்தினால் பிறக்கும் திருட்டுக்குழந்தைகள் அதிகமாகிவருகின்றனவாம். இந்தமாதிரியான குழந்தைகளை அந்த ஸ்திரீகள் தெருக்களில் போட்டுவிட்டுப் போய் விடுகிறார்களாம். போலீஸார் அந்தக் குழந்தைகளை எடுத்து, அதன் தாய்தகப்பன்களை கண்டுபிடிக்க ரகஸ்யப் போலீஸ் மூலம் பலமாக முயற்சிசெய்கிறார்களாம். அனேகம் குழந்தைகளுக்குத் தாய்தகப்பன் கிடைக்கவில்லையாம். இந்தக் கார்யத்தில் லண்டன் போலீஸாருக்கு மிகுந்த வேலைத்தொந்திரவு ஏற்பட்டுவருகிறதாம். விவாஹமாகாத ஸ்திரீகளின் நிலைமை இவ்வளவு கேவல ஸ்திதிக்கு வந்துகொண்டிருப்பதாக அந்தப் பத்திரிகை வெளியிடுகிறது.

இங்கிலாந்தில் விவாஹமாகாத ஸ்திரீகள் எறிந்துபோட்ட திருட்டுப் பிள்ளைக் குழந்தைகளின் ஸங்கியை 37ஆயிரமாக இருப்பதாயும் அவைகளை ரக்ஷிக்க ஓர் கட்டடம் கட்டவும் அக்குழந்தைகளைப் போஷிக்கவும் கிராண்டு கொடுக்கவேண்டுமென்று சிலவர்ஷங்களுக்கு முன் பார்லிமெண்டில் பிரஸ்தாபம் நடந்ததும் மறக்கக்கூடியதன்று. உலகத்தில் நாகரிகம் போதிக்கும் சட்டாம்பிள்ளையாக விளங்கும் இங்கிலாந்தின் நிலைமையே இவ்வளவு ஆபாஸமாயிருந்தால் வேறு என்னவேண்டும்!

பால்ய விவாஹத்தைத் தடுத்தும், தடித்தனம் வந்தபிறகு விவாஹம்செய்ய வற்புறுத்தியும், ஸ்வச்சந்த விவாஹம் நடத்தத் தூண்டியும் பெரும் அவ்யவஸ்தைகளை உற்பத்தி செய்துவரும் நவீனத் திருத்தக்காரர்கள், தங்களுக்கு நாகரிகவழிகாட்டியாக நினைக்கப் படும் ஆங்கில தேசத்தின் அலங்கோல நிலைமையைக் கவனிக்கட்டும். நமது சாஸ்திர ஸமூஹ கட்டுப்பாட்டின் மஹிமையை இந்த குதர்க்கவாதிகள் உணர்வார்களா?

சென்னை மதுவிலக்குச் சட்டம்.

சென்னை சட்டசபையில் முக்கிய மந்திரி ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியாரால் கொண்டு வரப்பட்ட மதுவிலக்கு மசோதாவானது சென்ற திங்கட்கிழமை (27–9–37) தினம் ஏகோபித்து நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டத்தின் முக்கிய அம்சங்கள் அடியில் வருமாறு:—நம்முடைய ராஜதானியிலுள்ள ஜனங்களின் சன்மார்க்க ஸ்வபாவத்தையும் பெருளாதார நிலைமையையும் விருத்திசெய்வதற்காகவே முக்கியமாய் இந்த சட்டம் இயற்றவேண்டியது அவசியமாயிருக்கிறது, என்றும் அதற்காக முதலில் சில குறிப்பிட்ட இடங்களில் மதுவிலக்கு நிபந்தனைகளை அமுலுக்குக் கொண்டுவருவதாகவும் அந்த அநுபவத்தைக்கொண்டு இதர இடங்களிலும் பிந்தி அமுலுக்குக் கொண்டுவரப் போவதாகவும் அதின் முகவுரை கூறுகிறது.

அந்தச் சட்டத்தின் முதல் பிரிவில் அதை இப்போது சேலம் ஜில்லாவில் அமுலுக்குக் கொண்டுவருவதாகவும் பிந்தி கவர்ன்மெண்டார் விளம்பர மூலமாக குறிப்பிடும் இடங்களில் அமுலுக்கு வருமென்றும் தெரிவிக்கிறது.

நாலாவது பிரிவில், மதுவை எவனாவது ஏற்றுமதியாவது இறக்குமதியாவது செய்தாலும் தன் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருந்தாலும், உற்பத்திசெய்தாலும் மரத்திலிருந்து இறக்கினாலும், இறக்கும்படி செய்தாலும், விற்றாலும், வாங்கினாலும், குடித்தாலும் அவைகளுக்கு இடங்கொடுத்தாலுமவனுக்கு ஆறுமாதகாவலாவது 1000-ரூ அபாதமாவது இரண்டுமாவது விதிக்கலாம் என்று தண்டனை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆறாவது பிரிவில், மதுவிளம்பரங்களாவது ப்ரசாரங்களாவது, புஸ்தகங்கள் மூலமாயாவது, ந்யூஸ்பேபர்கள் மூலமாயாவது செய்யகூடாதென்றும் மீறிசெய்பவர்களுக்கு 1000 ரூபாய்வரையில் அபாதம் விதிக்கப்படுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பிரிவு ந்யூஸ்பேபர்கள் விஷயமாக மாத்திரம் 1938-௵ ஜனவரி-௴ முதல் தேதி முதல் அமுலுக்கு வருமென்று திருத்தப்பட்டிருக்கிறது.

பதினாலாவது பிரிவில் ஷை நிபந்தனைகளுக்கு சில விலக்குகள் காணப்பட்டிருக்கின்றன. அவைகள் முக்கியமாக மருந்துக்காகவும் கைத்தொழில்கள்உபயோகத்திற்காகவும் மதுவை வாங்கிவைத்து உபயோகப்படுத்த கவர்ன்மெண்டார் லைஸென்ஸ் கொடுக்கலாம் என்பதுதான்.

இருபத்தைந்தாவது பிரிவுப்படி இந்தச்சட்டத்தின் நிபந்தனைகளையும் ஷரத்துக்களையும் அமுலுக்குக் கொண்டுவந்து நடத்த உத்தியோகஸ்தர்களை நியமித்துக்கொள்ள கவர்ன்மெண்டுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே விஷயமாக மதுவிலக்கு சங்கங்களையும் கவர்ன்மெண்டார் நியமித்துக் கொண்டு அவர்களுக்கு தக்க அதிகாரங்களை கொடுக்கலாம்.

பிந்தின பிரிவுகள் ஷை உத்தியோகஸ்தர்களின் அதிகாரங்களைப் பற்றியும் இந்தச் சட்டத்தின்படி ஏற்படும் கோர்ட்டு நடவடிக்கைகளைப் பற்றியும் விரிவாகச் சொல்லுகின்றன.

பீகானீர் மஹாராஜாவின் துலாபாரம்.

பீகானீர் மஹாராஜா ராஜ்யம் ஏற்றுக்கொண்டு 50 வருஷமாகிறது. இந்தக் கொண்டாட்டம் அங்கு வெகு விமர்சையாக நடைபெற்றது. பல கைதிகள் விடுவிக்கப்பட்டனர். வைதிக முறையில் பல தானதர்மங்கள் செய்யப்பட்டன.

3 லக்ஷம் ரூபா பொறுமானமுள்ள துலாபார தானமும் மஹாராஜாவால் செய்யப்பட்டது.

கும்பகோணத்தில் ஸ்ரீ ராமாயணப் பிரவசனம்

கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீ சங்காரிய ஸ்வாமிகள் ஸ்ரீமடத்தில் சென்ற சிலமாத காலமாக பிர்மஸ்ரீ வேம்பு சாஸ்திரிகளால் நடந்துவரும் ஸ்ரீ ராமாயணப்பிரவசனத்தில் ஜனங்கள் காட்டிவரும் அளவற்ற உத்ஸாஹத்தை நாம் நேரில் பார்க்க நேர்ந்தது. இரண்டுமாதங்களுக்குமுன் கும்பகோணத்தில் நடந்த பிராம்மண மஹாஸபைக் கூட்டத்தில் புராண பிரவசனங்களை விருத்திசெய்து ஆதரிக்கவேண்டிய அவச்யதையைப்பற்றி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மிகவும் உசிதமானதென்று இந்த பிரவசனத்தை நாம் நேரில் பார்த்த பிறகு உறுதியாக நினைக்கவேண்டியிருக்கிறது. புராணப் பிரவசனமென்பது தர்ம பிரசாரத்தின் முக்ய அம்சம்தானென்றும், ஆதலால் அந்த பிரவசனத்துக்குள் தர்ம பிரசாரத்தையும் ஐக்யப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும், எங்கும் இதைப் பிரபலப்படுத்தவேண்டுமென்றும், பல வழிகளிலும் தார்மிகர்கள் இதை ஆதரிக்கவேண்டுமென்றும் பிராம்மண ஸபைத் தீர்மானம் கேட்டுக்கொண்டது.

இந்நாஸ்திக காலத்திலகூட பொது ஜனங்களுக்கு புராணச்ரவணத்தில் மட்டில் சிரத்தை குறையவில்லை. மற்ற விஷயங்களுக்கு ஜனக்கூட்டம் வருவது சிரமமாயிருந்த போதிலும் புராண சிரவணத்திற்கு நூற்றுக்கணக்கான ஜனங்கள் நோட்டீஸில்லாமலும் அழைப்பில்லாமலும் தாங்களாகவே பக்தி சிரத்தையுடன் வந்து கூடுவதைப் பார்க்கிறோம். புராணங்களில் சொல்லப்படும் விஷயங்கள் கதைகளாகத் தோன்றின போதிலும், அவைகளிலுள்ள தர்ம தத்துவங்களும் ஸன்மார்க்க போதனைகளும் பொதுஜனங்களுக்கு விசேஷப்பயனை அளிக்கின்றனவென்பதில் ஐயமில்லை. கதைமூலமாகக் கேட்கப்படும் தர்மங்களை ஜனங்கள் மனதில் இறுத்திக்கொண்டு தெய்வ பக்தி, தர்மசிரத்தை ஸன்மார்க்க ருசி இவைகளைப் பெறுகிறார்கள். இதில் ஜாதி நிர்பந்தமில்லாமல் எல்லா ஜாதியாரும் ஹிந்துமத தர்மங்களில் பற்று அடைவது மற்றொரு முக்ய லாபமாகும். புராணங்களை எல்லா ஜாதியாதியாரும் கேட்டு க்ஷேமமடையும்படிபிரவசனம் செய்தால், தற்போது நம்தேசத்தில்தோன்றியுள்ளஜாதி. மத தெய்வ த்வேஷங்கள் யாவும் வெகு சீக்கிரமாயும் எளிதாயும் மறைந்துவிடக் கூடியவை என்பது நமது துணிபு. நமது ஸ்திரீகளுக்கும் இதனால் அளவற்ற நன்மையுண்டாகிறது. இந்த நோக்கங்களைக்கொண்டுதான் பிராம்மண ஸபையானது புராணப் பிரவசனங்களை தர்ம பிரசார ஸாதனமாக உபயோகிக்கும்படி நம்மை தூண்டிவிட்டதுபோலும்.

கும்பகோணத்தில் நடக்கும் ஸ்ரீ ராமாயண பிரவசனத்தைப்பார்த்த பின் பிராம்மண ஸபைத்தீர்மானத்தை அநுசரித்து எங்கும் இந்தமாதிரி பிரவசனம் ஏன் நடத்தக்கூடாதென்று நமக்கு தோன்றியது, இங்கு நடக்கும் ஸ்ரீ ராமாயணப்பிரவசனத்தை முன்னிட்டு தினமும் ஆயிரம் பேர்களுக்கு மேல் ஸ்திரீகளும், புருஷர்களும் வந்து கூடுகிறார்கள். கதா சிரவணத்தில் மிகுந்தசிரத்தையும், ஆஸ்திக்யமுமே இதற்கு காரணம். மிகுந்த பக்தி சிரத்தையுடன் வெகு நேரம் முன்னாடியே ஆவலுடன் ஜனங்கள் வந்து காத்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கு கண் காக்ஷியோ, வேறு தமாஷ்களோ, ஸங்கீத ஆர்ப்பாட்டமோ ஒன்றுமில்லை. அப்படியிருந்தும் நூற்றுக்கணக்கானவர்கள் வெகு தூரத்திலிருந்தும் இங்கு வந்து கூடுவதற்கு ஆஸ்திக்யத்தைத்தவிர வேறு காரணம் என்ன! ஜனங்களின் இந்த ஆஸ்திக்யத்தை இந்த வழியிலேயே விருத்தி செய்து கொள்ளும் படி தூண்டுவது விரும்பத் தக்கதல்லவா?

மேலும் இங்கு புராணப்பிரவசனம் செய்யும் பிரம்மஸ்ரீ வேம்பு சாஸ்திரிகள் மிகுந்த ஆஸ்திகர். வேதாத்யயன சீலர். சிஷ்டர். அழகிய சொல் வன்மை பொருந்தியவர். இவருடைய கம்பீரமான பிரவசன சக்தியானது நாஸ்திகர்களையும் நல்வழிப்படுத்தக்கூடியது. இந்த சக்திஇவரிடம் நிறைந்திருப்பதால் இதுவரையில் காணப்படாத கூட்டம்இவருடைய பிரவசனத்திற்கு வருவதுஅதிசயமல்ல. ஜனங்களும் இவருடைய உபன்யாஸத்தில் மனம் ஆழ்ந்து ரஸித்து உத்ஸாகம் காட்டுகிறார்கள். இங்கு கூடும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் யாவரும் வேறு அமார்க்கங்களில் புத்தி செல்லாமல் எல்லோரும் ஏககாலத்தில் ஏக முகமாக தெய்வ தர்மாதிகளின் மஹிமையைப்பற்றி மனதில் நினைத்து நிலைக்கச்செய்துகொள்ளும் படி செய்வதை விட தர்ம பிரசாரம் வேறு என்ன இருக்கிறது?

பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் போன்ற வாக்கு வன்மையுள்ள பண்டிதர்களைப்பொது ஜனங்கள் பல வழிகளிலும் ஆதரித்து எங்கும் இத்தகைய பிரவசனம் இடைவிடாமல் நடக்கும்படி செய்தால் நம் தேசத்தில்அதர்மம் தலைகாட்டவே வழியில்லாமல் போகுமென்று நினைக்கிறோம்.

நேற்றுதினம் ஷை ராமாயணப் பிரவசனத்தில் ஸ்ரீராமபட்டாபிஷேக வைபவம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. ஸ்ரீ சாஸ்திரிகள் பொதுஜனங்களால் கௌரவிக்கப்பட்டார். உத்தராராமாயணம் இவரால் பிரஸங்கிக்கப் படும்.

ஒரு நிருபர்.

வாரக்குறிப்புகள்.

தீர்மானமாக செய்க! ஒரிஸா மாகாணத்தில் போலீஸ் உத்யோகஸ்தர் நெற்றிக்கிடக்கூடாதென்ற சட்டம் மதவிஷயமான உணர்ச்சியைப் புண்படுத்துவதை அரசாங்கமறியுமாவென்று ஒருவர் கேட்க அறிவோமென்று அது கூறிற்று. அப்படி கேட்டதும் நிற்காமல் நெற்றிக்கு திலகமணிய ஸ்வாதந்த்ரியத்தை சட்டமாக்கவேண்டும்!

தக்ஷிண தேசத்திற்கே கௌரவம்!! காசி ஹிந்து ஸர்வகலாசாலை மத கலாசாலைக்கு பிரும்மஸ்ரீ மீமாம்ஸாகேசரீ அ.சின்னஸ்வாமி சாஸ்திரிகளவர் உபத்தலைவராக நியமிக்கப் பட்டார். பரம வைதிகசிகாமணியாய் சாஸ்திர ரத்னாகராய் ஸ்ரீ குருபக்த துரந்தராய் விளங்கும் இப்பெரியார் இப்பதவிக்கேற்றவர் அப்பதவி அவருக்கேற்றது. வடநாட்டார் தக்ஷிண தேசத்தையே கௌரவித்தனர்.

அச்சமா? அறியாமையா? தேசியக் கக்ஷிக்கு தக்க அறிவூட்ட ஓர் ப்ரபல எதிர்கக்ஷியோ பத்திரிகையோ இல்லாது பலர் பல்லாண்டு பாடுவதின் கெடுதல் தேசம் பின்னறிந்து வருந்தும். வந்தேமாதர கீதம் முற்றிலும் தேசியமானது. அதைக்கூட ஓர் மஹம்மதியர் ஆக்ஷேபிக்க சொக்காயணியாத தலைவர் சிங்கம் சிறிது கர்ஜித்தாலும் போதிய தைர்யமின்றி ஒரு நாள் பைபிள் ஒருநாள் குரான் பாடசொல்லப்போகிறாராம்.

ஸ்ரீ ஜகத்குரு வியாஸபூஜா முகாம்

தத்கால முகாம் மாருதேர் (மேலகோதாவரி)
நாளது-௵ ஸ்ரீசரத் நவராத்திரி மகோத்
ஸவத்தை ஹரகும்பேட்டா
போலவரம் போஸ்டு (கோதாவரி).
கோதாவரி கீழ ஜில்லாவில் நடத்துவதாக
நிச்சயமாயிருக்கிறது.

நாகபட்டிணத்தில் உபன்யாசங்கள்.

(கீழ்வளூர் பிரம்மஸ்ரீ வி. கே. வெங்கட்டராம சாஸ்திரிகள் அவர்களின் ஞானயோக உபன்யாசத்தின் தொடர்ச்சி.)

அவதி (4-வது அம்சம்) இவ்விதம் காரியமான சற்குருவினிடமிருந்து விசாரித்தறிதலையே காரியமாகக் கூறியதால் இனி செய்யவேண்டுவதும் அறியவேண்டுவதும் ஒன்றுமில்லாமலாயிற்று அப்படியாவதினால் தன்னை கிருதகிருத்யனென்றும் தன்ஸ்வரூபம் எப்போதும் அகர்த்தாவென்றும் அகர்த்தாவானதால் அபோக்தாவென்றும்ஆனால் தன்சன்னிதானத்தில்அவித்யாரூபமானஅந்தக்கரணம் முதல் சகல தத்வங்களும் அஜடங்களைப்போல் கர்த்திருத்வாகாரமாய் பரிணமித்து சகல காரியங்களையும் செய்தனவெனவும் அப்படி செய்ததால் ஏற்பட்ட நல்வினை, தீவினை, கலப்புவினை என்கிற மூன்று கர்மாக்களும் தன்னைப்பற்றவில்லையென்றும் அக்கர்மாக்களுக்கு பலன்களாய் சுகதுக்காதிகள் தன்னை ஒரு காலத்திலும் சாராதெனவும் திடமாய் தீர்மானமான ஒரு முடிவை அடைகிறான். ஆனால் அஞ்ஞான காலத்திலோ தனக்கன்னியமான தத்வங்களின் செயல்களை தன்னுடையதென்றும் அதற்கு பலன்களான சுக துக்காதிகள் தனக்கு வருமென்றும் சதா கிலேசத்தினாலே பந்திக்கப்பட்டு இடைவிடாத துக்கத்தால் உழன்றான். இவ்விதம் கர்மாக்களும் பலன்களும் தனக்குண்டென தன்னிடத்தில் ஆரோபித்துக்கொண்டு (தன்னிடத்தில் இருப்பதாக நினைத்துக்கொண்டு) பயந்தான். இல்லாத சர்ப்பத்தை பழுதையில் இருப்பது போல் பார்த்து பய கம்பாதிகள் ஏற்பட்டது போலமேல் சொன்ன சகல தத்வங்களும் அவைகளின் செயல்களும் அச்செயல்களுக்காகிய சுகதுக்காதிகளும் ஒன்றுமே யில்லையென்றும் தன்னை சஜாதீய விஜாதீயஸ்வஸ்து பேதாஹிதமென்றும் (முறையே தன்னையொத்த வஸ்து, தன்னின் வேறாகிய வஸ்து, தனக்குள்ளேயே பேதங்களோடு கூடியிருத்தல் இம் மூன்றுமில்லாமலிருத்தல்) எங்கும் தானே தானாய் விளங்குவதாய் தன் ஸ்வரூப ஞானம் ஏற்பட்டு நிர்பயத்தை அடைந்தான். இவ்விதம் அடைவதனால் தனக்குண்டாகிய ஆனந்தத்திற்கு முடிவில்லாமல் நித்யானந்தமாயிற்று.

இதற்குதாரணமாக ஒருவன் குற்றவாளியில்லாமலிருக்க ஸர்க்காராலே அவன் குற்றவாளி யென கூறப்பட்டு விசாரணை செய்யப்பட்டு முடிவில் குற்றமற்றவனென தீர்மானம் செய்யப்பட்டதைக்கேட்டு எவ்விதம் அளவிலா சந்தோஷத்தை அடைவானோ அதே மாதிரி அடைகிறான், இவ்விதம்அடைந்த பிறகு மறுபடி அந்த தத்வங்களோடு அக்ஞானியைப்போல் சம்மந்தப் படாமல் தனித்திருந்தே இச்சீவன் உலகத்தில் உழல்கிறான். ஆனால் தன் ஸ்வரூப இலக்கணத்தையும் மறப்பதில்லை. ஆதலால் தான் இவனை நித்யானந்தன், கிருதகிருத்யன் ஜீவன் முக்தன் எனச்சிருதிகள் கீர்த்திக்கின்றன. இதற்கு அத்தாட்சியாய் நமது பரமாசார்யாளும்

योगरतोवा भोगरतोवा संगरतोवा संगविहीनः ।
यस्यब्रह्मणि रमते चित्तं नन्दति नन्दति नन्दत्येव ॥

என்று சொல்லியிருப்பதைக்காண்க. இதுவே ஜீவனின் அவதியாம் (முடிவாம்)

பலம் (5-வது அம்சம்) இச்சரீரம் பிராரப்த சரீரமென்றும் அப்பிராரப்த கர்மாக்களின் (பிரயோஜனத்தைத் தருவதற்கென ஆரம்பித்த கர்மாக்கள்) பலன்களாகிய சுகதுக்காதிகள் உள்ள வரையில் இச்சரீரமானது நிலைத்து நிற்கவும் அது முடியவே நினைப்போதளவு நில்லாது விழுந்து விடவும் ஏற்படும். அப்போது இச்சீவனை விதேககைவல்யம் அடைந்தான் என்பார் சிலர். ஆனால் இவ்விதம் விதேககைவல்யத்தையடைந்த ஜீவனின் தத்வங்களோ இச்சரீரத்தோடு மறு சரீரத்தை எடுப்பதற்கு யோக்யதை யற்று நாசத்தையடைகின்றன. இதைத்தான் சிலர் விதேககைவல்ய மென்பர். ஆனால் எனது அபிப்ராயமோ இல்லாத தத்வங்களை இருக்கிறதென்றும் அப்படிக்கில்லாதிருக்க அதன் செயல்களை ஒப்புக்கொண்டும் ஒப்பவே அதன் பலன்கள் தனக்குண்டென்றும் நினைத்திருந்த ஜீவன் விசாரணைமுகத்தில் சற்குரு கடாக்ஷத்தால் இவைகள் ஒன்றும் தன்னிடத்தில் இல்லையென ஏற்பட்ட நிமிஷமே தான் தேகமல்லன் தான் தேஹியென விதேக கைவல்யத்தை அடைந்து விட்டான் என்பது தான். இதையே முக்தி யென்றும் விடுதலை யென்றும், மோக்ஷ மென்றும், ஸர்வசங்க பரித்யாகமென்றும்சொல்லுகிறார்கள். இறப்பை எதிர் பார்த்தா விதேஹகைவல்யம் கூறுவது?

உதாரணமாக விதேக கைவல்யத்தை அடைந்தவனானதால் தன்னிடம் வந்த சுகர் முதலியவர்களுக்கு உபதேசம் செய்யும் பெருமையைப்பெற்று விளங்கினான் ஜனக மஹாராஜன் என்றும் அவன் பெற்ற ஞானத்தாலேயே இனிப்பிறவா வண்ணம் பிறருக்கும் உபதேசிக முயற்சித்தான் என்றும்அப்படி அவனுக்கு பிறந்த ஞானத்தையே என்றும்

मृतामोहमयीमाता जाता ज्ञानमयीसुता ।

சொல்லப்பட்டிருக்கிறது. ஞானமாகியபெண் பிறக்க அக்ஞானமாகிய தாய் இறந்தாள் அதாவது எத்தனையோ கோடி ஜன்மாக்களில் சரீரங்களைத்தந்த அக்ஞானமாகிற தாய் நாசத்தையடைந்தாள். ஆனதால் ஜனகமஹாராஜனுக்கு பிறந்த பெண் வைதேஹி (சீதா) எனப்பெயர் பெற்றாள். விதேஹஸ்வரூபமோ பிரம்மமாதலால் ஞானம்(சித்) பிரகாசம் பிரம்மத்தினிடத்தில் உள்ளதானதால் அப்பிரம்ம ஸ்வரூபமாகிய ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்கு ஸ்வரூபமே ஞானஸ்வரூபமென்றும் காட்டுவது போல ஸ்ரீமத் ராமாயணத்தில் சீதாகல்யாண வைபவம் பிரதமகவியான வால்மீகரால் சொல்லப்பட்டுள்ளது. இவ்விதம் ஜீவப்பிரம்ம ஐக்யத்தை வெளிப்படையாக தெவிக்கிறதாதலால் அவ்விதிஹாசத்திற்கு இருக்கிற கௌரவம் முக்தி பரியந்தம் உண்டென்றும் வைதேஹியுடன் சுத்தப்பிரம்மான ஸ்ரீராமன் அவதரித்த போதிலும் விதேஹ ஸ்திதியில் சதா விளங்குகிறாரென்றும் தீர்மானத்திற்கு வாலாம். இதை அநுசரித்தே नच पुनरावर्तते । என்று சுருதிமும்முறை சொல்லிற்று,

N சாம்பசிவ அய்யர். B.A.BL.

வேஷம் வெளியாகிறது.

சென்னையில் சீர்திருத்தவாதிகள் நடத்தப்போகும் ஒரு கூட்டத்திற்கு "பண்டித பரிஷத்" என்ற புனிதமான பெத்தப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் இது ஒரு அதார்மிகர்களுடைய கூட்டமென்றும், அவ்யவஸ்தா வாதங்களை நிலை நிறுத்தவே பாடுபடுகிறதென்றும் நாம் அடிக்கடி எடுத்துக்காட்டிவருகிறோம். மிஸ் மில்லரை மதம் மாற்றி சர்மிஷ்டாதேவியாகச் செய்து இந்தூர் மஹாராஜாவுக்குக் காதல் விவாஹ கடனை செய்துவைத்த குருத்கோடி என்பவர் "சங்காசாரியர்" என்கிற பெயர் சூட்டிக்கொண்டு விளங்கி வருகிறார்கள். இவர் ஆர்ய ஸமாஜி, வைதிக தர்மத்தைக் கைவிட்டவர். இந்த 'மஹாத்மா' சென்னை பரிஷத்திற்குத் தலைவராம். இது ஒன்றே இந்தப் பரிஷத்தின் யோக்யதையை விளக்கப் போதுமானது.

இப்போது இந்தப் பரிஷத்தைப் பற்றி இன்னும் சில விரோதங்கள் வெளிவந்திருக்கின்றன. இந்த பர்ஷத்தின் உபசாரணைக் கமிட்டியில் மெம்பர்களாவுள்ள சிலரின் பெயர் இப்போது வெளியாகியிருக்கிறது. தியஸாபிகல் ஸங்கத் தலைவரும், வெள்ளைக்காரராயிருந்து இந்தியராக மாறியவரும், ஹிந்துப் பிராம்மண ஸ்திரியை மணந்தவருமான டாக்டர் அரண்டேல் என்பவரும் இந்த பரிஷத் கமிட்டியில் ஒருவராம். தவிர ஸினிமா ஆட்ட கம்பனிக்காரர் ஒருவர், சீமை சென்று வந்த ஐ. ஸி. எஸ். ஜட்ஜ் ஒருவர், எலெக்டிரிக்ட்கம்பெனி எஜமானரொருவர், இத்யாதிகளாக அநேகம் பேர் இந்த பரிஷத்தில் சேர்ந்து உழைக்க முன்வந்திருக்கிறதாகத் தெரிகிறது, இது என்ன கேலிகூத்து?

ஹிந்துக்களுடைய மதாசார விஷயங்களைப் பற்றிப் பேசவோ தீர்மானிக்கவோ மேற்படி குருத்கோடி போன்றவர்களுக்கு சிறிதாவது யோக்யதை உண்டா? நம்முடைய புனிதமான தர்மங்களில் வாய்வைத்துப்பேசத் தகுதியற்றவர்கள் எல்லோரும் கூடிப் பேசினால் இதை லக்ஷ்யம் செய்கிறவர்கள் யார்? கோடிக்கணக்கான சிஷ்யர்களை உடைய புனிதமான நமது தர்மாசாரிய பீடங்களின் முன்னிலையில் இந்த வேஷதாரிகள் நம் மதாசார தர்மங்களைப்பற்றி நிர்ணயிப்பதா? அந்தோ! அதிசயம்!! இனியும் நமது தார்மிகர்கள் இந்த வேஷதாரிப் பரிஷத்தை லக்ஷ்யம் செய்யப் போகிறார்களா? மேல் கார்யத்தை நிர்ணயித்துச் செய்வோமாக.

தார்மிகன்.

மாருதிகோவில் ஸத்யாக்ரஹிகள்.

பம்பாய் ஹைகோர்டில் விடுதலை.

புனா ஸோன்யா மாருதிகோவிலில் மணியடிக்கும் விஷயமாக நடந்த ஸத்யாக்ரஹத்தில் ஸம்பந்தப்பட்ட ஸ்ரீமான் கேல்கார் முதலிய பல தலைவர்கள் பம்பாய் ஹைகோர்ட்டாரால் குற்றவாளிகளல்லவென்று விடுதலை செய்யப்பட்டார்கள். அவர்களுடைய தண்டனை ரத்து செய்யப்பட்டது.

மாஜிஸ்ட்ரேட் உத்திரவில் ஸங்கீதம் கூடாதென்றே சொல்லியிருப்பதாயும், மணி யடிப்பது ஸங்கீத மாகாதென்றும். ஆதலால் மணியடித்தது குற்றமாகாதென்றும், இதற்காக தண்டிப்பது நியாயமில்லையென்றும் இரண்டு ஜட்ஜுகளும் தீர்ப்புக் கூறினர்.

மதுவிலக்கு மசோதா.

சென்னை சட்டஸபையில் சேலம் மதுவிலக்கு மசோதா கொண்டுவரப்பட்டு அது தனிக்கமிட்டியின் பரிசீலனைக்கு விடப்பட்டு பிறகு சட்டமாகிவிட்டது.

சென்னை சட்டஸபை.
இரவிலும் கூட்டம்.

சென்னை சட்ட ஸபையில் வரவு செலவு விவாதம் முடிந்து விட்டது. மந்திரிகள் கோரிய மான்யங்கள்யாவும் அப்படியேநிராக்ஷேபமாக அநுமதிக்கப்பட்டு விட்டன. இனிமேல் மசோதாக்கள் கவனிக்கப்படும்.

23உயன்று இரவு 8மணி முதல் 11 மணி வரையிலும்சட்டசபை நடைபெற்றது.

The Moratorium Bill.

(*Mr. M. K. Vaidianatha Iyer, B.A., B.L.,*)

A bill to provide for temporary relief of indebted agriculturists is on the legislative anvil. The Bill seems to be ill conceived and hastily drawn up and its injurious effects will be far reaching. While everybody is suffering from the unprecedented depression except those who draw fixed salaries on the same scale as they had before the depression set in, why the agriculturist alone is chosen for this preference passes one's comprehension. The trader, the lawyer, the private school-master suffer along with the agriculturist. Artisans, and skilled labourers do not get work as people have not the means to pay. How again is an agriculturist paying a tax of more than Rs. 400 better off than his brother who pays less? Co-operative societies, land mortgage and joint stock Banks have been excempted, apparently to minimise opposition to the Bill. It is again the old rule of 'divide and rule' which was held up for condemnation by the party in power during the pre-ministry days. How are lending institutions entitled to better treatment than private lenders?

Exemption is claimed again for recovery of land revenue, income-tax and loans granted by Govt—as if the Govt. which has lent its money is poorer than the poorest money-lender in the State! If the Govt. denies itself the land revenue and income-tax, it will see for itself how difficult, if not impossible, it will be for poor folk who have lent their all or almost all and live by the interest earned from the loans to run their homes and carry on their bare existence. What about those numerous families whose only means of livelihood is earning interest by lending? What is the remedy for these people?

The result of this moratorium is sure to keep the courts idle. Does the Govt. contemplate closing of the courts and granting judges leave on loss of pay?

Already the courts are made to spend time over fruitless enquiries whether warrants of arrests can be issued against defaulting judgement debtors. The courts will find engagement hereafter in settling equally profitless disputes whether particular debtors come within the purview of the Bill. Even for achieving the object of the Bill, what objection could there be to decrees being passed? Will it not be enough that execution alone is stayed?

The lender is now denied not only his right to proceed agaist the immoveables of the borrower, but also his remedy against his moveables. How does the Bill prevent the debtor from parting with his moveables? Even as regards immoveables, the Bill does not prevent alienation, but only alienation to defraud creditors. Here again the poor unoffending creditor is drawn into fresh litigation, always a costly and doubtful game.

As if there are not enough courts in the country, the Statement of Objects and Reasons tells the public that rules are to be framed to enable the Govt. to establish 'an authority to dispose of matters arising out of the Bill'—fresh appointments and increased cost of administration.

The 'Hindu' assures its readers that the Bill 'will not mean any adverse effect on the credit of the Province'. With apparently inner knowledge, it confides to us that 'whatever substantial measures of relief are devised, they will be taken after consultation with competent outside expert and officials.' According to it, levy of unconcionable interest will be prevented. It is impossible for one to share in this optimism, when one sees how this Bill has been ushered in. Public and private credit is sure to suffer alike and if the Bill is unfortunately passed into law it will take long for the Govt. to restore confidence in the minds of the public.

The true remedy to relieve this indebtedness lies in another direction.. Govt. must come in between the creditor and the indebted agriculturist. Govt. must pledge its credit and borrow and in turn lend to the agriculturists on the security of their belongings at a rate of interest cheaper than the market rate. Collection by the Govt. of the loan in instalments as they fall due will be easy and automatic and can be made with the existing village and revenue staff and there will be no need to file suits for recovery. Long term investments for moderate interest will be flowing in freely should Govt. need it. The bigger investors usually prefer safety to higher rates of interest. Will the Govt. pause and consider?

பத்திரிகை உலகம் மாயாபிரபஞ்சம்?

உலகம் தோன்றிய நாள்முதல் இந்த இருபதாவது நூற்றாண்டைப்போல் ஒரு காலம் ஏற்பட்டதில்லையென்று நினைக்கப்படுகிறது. அவ்வளவு உயர்ந்த நாகரிக காலமிது. உண்மையில் நாகரிகமா? இல்லை! இல்லை!! எல்லாம் வெளிப்பூச்சு! எல்லாம் மாயை! பேசுவதெல்லாம் ஜன நன்மையைப்பற்றி. ஆனால் கார்யத்தில் எல்லாம் மோசம்! பெரிய பெரிய ராஜதந்திரிகளும், படிப்பாளிகளும், புத்திமான்களும்கூடப் பேசுவது ஒன்று, செய்வது ஒன்று!! அஸத்யமும், ஸ்வயநல ஆசையும் தாண்டவமாடுகிறது. இத்தகைய நாகரிகத்திற்கு உயிர்கொடுத்து வளர்த்துவருவது எது தெரியுமா? அது தான் இக்காலத்திய பத்திரிகைஉலகம். பொய் மெய்யாகவும், மெய் பொய்யாகவும், உயர்ந்தவன் தாழ்ந்தவனாகவும், தாழ்ந்தவன் உயர்ந்தவனாகவும், பெரிய விஷயத்தை சிறியதாக்கவும், சிறியதை மலைபோலாக்கவும் பத்திரிகை மாயையே முக்ய ஸாதனமாயிருக்கிறது. உலகத்தையே ஒரு கொடியில் தலைகீழாக்கிவிடக்கூடிய மாயாசக்தி பத்திரிகைகளுக்குத்தான் உண்டு.

எதற்கும் "ஆப்தவாக்யம் பிரமாணம்" என்ற சிறந்த கொள்கையைக்கொண்டது நம் தேசம். அந்த ஆப்தர்கள் பக்ஷபாதமற்றவர்களும், ஸ்வயநலமற்றவர்களுமான பெரியோர்களாயிருப்பார்கள். அவர்கள் உண்மைக்கு மாறாகப் பேசமாட்டார்கள். அவர்களுடைய வார்த்தைப்படி நடந்து க்ஷேமமடைந்துவந்த நாம் இன்று பத்திரிகைகளில் அநாமதேயமாக வெளிவரும் புனசுருட்டுப் பேச்சுக்களை நம்பி பெரிய மாறுதலுக்கும் அனர்த்தத்திற்கும் ஆளாகிவருகிறோம்.

பத்திரிகைகளில் வெளிவரும் ஸமாசாரங்களுக்கு கர்த்தா யார்? யார் அவைகளுக்கு ஜவாப்தாரி? எவர் பொறுப்பாளி? இவைகளை விசாரித்தால் எல்லாம் மோசம். மூலைமுடுக்குகளிலும், மறைவிலும் இருந்துகொண்டு பேர் ஊர் இல்லாமல் எதைவேண்டுமானாலும்பத்திரிகையில் கயிறு திரிக்கலாம். நிருபர்களுக்கும் பத்திராசியர்களுக்கும் ஒன்று பிடித்த விஷயமாயிருந்தால் உலகம்முழுவதும் அதை ஆதரிப்பதாக பத்திரிகையில் ஆடம்பரம் செய்யப்படும். "இப்படி நினைக்கப்படுகிறது" 'அப்படி பேசப்படுகிறது' இத்யாதிகளான மொட்டைவார்த்தைகளால் ஜனங்கள்மனதை கலைத்துவிடுவார்கள். இப்போது இந்த நவீன காலப் பத்திரிகைகளில் இந்த மாயைதான் அதிகமாயிருக்கிறதைப் பார்க்கிறோம்.

"அமரிக்கா ஜப்பானை வெறுக்கிறது" என்று ஒரு வரியில் ஒரு ஸமாசாரம் வெளியிடப்படுகிறது. இதைப் படித்து ஜனங்கள் மனக்குழப்பமடைகிறார்கள். கோடிக்கணக்கான ஜனங்கள்உள்ள அமெரிக்காவில் எல்லோருடைய அபிப்பிராயத்தையும் இந்த நிருபர் அறிந்துகொண்டுவிட்டாரா? எவ்வளவு நகரம் எவ்வளவு கிராமம், எவ்வளவு ஜனம். எல்லோரும் ஜப்பானை வெறுப்பது உண்மையா? ஜப்பான்மேல் அமரிக்காவைக் கிளப்பிவிடவேணும், அல்லது ஜப்பானை பயமுறுத்தவேணும், அல்லது வேறு ஏதோ சில நிருபர்களுக்குள்ளும் பத்திராசிரியர்களுக்குள்ளும் சதியாலோசனை தோன்றியிருக்கும். அதை ஊர் பெயர் இல்லாமல் பத்திரிகைகளில் வெளியிட்டு பெரிய அனர்த்தத்தை உண்டுபண்ணிவிடுகிறார்கள். உடனே ஜனங்கள் இந்தப் பொய்களைப்பற்றி எங்கும் உண்மையென்று பேச ஆரம்பித்துவிடுகிறார்கள். 'என்ன ஐயா! அமரிக்கா ஜப்பான்மீது படையெடுக்குமாமே!' என்று எங்கும் பேச்சுக் கிளம்பிவிடுகிறது உள்புகுந்து உண்மையை விசாரித்தாலோ எல்லாம் முயல்கொம்புதான்.

இன்னொரு மாயையைப் பாருங்கள்! திருவாங்கூர் ஆலயப்பிரவேச விளம்பரம் தோன்றியபின் இத்தகைய ஊர்பெயர் அற்ற மாயா பிரசாரத்திற்கு அளவு உண்டா? "அங்கே கூட்டம்' 'இங்கே பலத்த ஆதரவு' 'உலகம் முழுவதும் ஒன்றுசேர்ந்துவிட்டது" இத்யாதிகளான அபாண்டகற்பனைகளுக்கு கணக்குண்டோ? கடுகுகள் மலையாக்கப்படவில்லையா? மலைகளைக் குறைக்க முற்படவில்லையா? நிருபர்கள் எவ்வளவு கயிறுதிரித்து ஜனங்கள் மனதை ஏமாற்ற முயற்சிக்கிறார்கள்! அப்பப்பா! ஸஹிக்கக்கூடவில்லையே!

ஸமீபத்தில் நடந்த ஆழ்வாஞ்சேரி ஸம்பவத்தைக் கவனியுங்கள். ஆழ்வாஞ்சேரி மதாசாரியர்களான தம்புராக்கள் திருவாங்கூர் விளம்பரத்தை பலமாக ஆதரித்து அநுமதி கொடுத்துவிட்டதாக ஒரு செய்தி வெளியிடப்பட்டது. இதைக் கண்டு தார்மிகர்கள் தைர்யமிழக்கவும், அதார்மிகர்கள் கூத்தடிக்க வேண்டுவும் மென்றே விஷமம்செய்யப்பட்டது. ஆனால் சென்னை மெயில் பத்திரிகையில் இந்த விஷயம் உண்மையல்லவென்று பலமான மறுப்பு வெளியாகியது. அதை மறுத்து ஓர் சீர்திருத்தவாதி தாம் நேரில் பார்த்ததாகவும், தம்மிடம் போடோ இருப்பதாயும் உறுமிக்கொண்டிருக்கிறார்.

பிரபல வைதிக ஆசாரியர்களான ஆழ்வாஞ்சேரித்தம்புராக்களிடம் இவருக்கு என்ன கார்யம்? எதற்காக அவ்விடம் சென்றார்? தம்புராக்கள் கையெழுத்துப்போட்டதை இவர் எதற்காக போட்டோ பிடித்தார்? அதற்கு என்ன அவச்யம் நேர்ந்தது? இதையெல்லாம் யோஜிக்கையில் இதில் ஏதோ சதி நடந்திருப்பதாக நினைக்க இடமில்லையா? தம்புராக்கள் ஆதரவு கொடுத்தது வாஸ்தவமானால் அதைமறுத்து எழுதியதற்கு என்ன ஆதாரம்? அவர் கற்பனை செய்தாரா? ஏன் இவர் சொல்லுவது உண்மையாயிருக்கக்கூடாது? தம்புராக்களின் ஆதரவை பலமாகப் பிரசுரித்த சில தேசியப் பத்திரிகைகள், அதன் மறுப்பை மட்டும் ஏன் பிரபலமாகப் பிரசுரிக்கவில்லையோ? ஒரு ஆங்கிலப்பத்திரிகை காட்டிக்கொண்ட நேர்மையை இவைகள் ஏன் காட்டிக்கொள்ளவில்லை?

இப்போது ஆழ்வாஞ்சேரி ஆதரவு பொய்யா? மெய்யா? பத்திரிகையைப் படிப்பவர்கள் என்ன நினைப்பது? எவருடைய கூற்றை நம்புவது? பத்திரிகைகள் இம்மாதிரி குழப்பமான ஸமாசாரங்களை வெளியிட்டு ஜனங்களைத்திண்டாடச் செய்வது நேர்மையா? இம்மாதிரி அநாமதேயமாயும், பொறுப்பற்றதாயும், பொய்யாயுமுள்ள விஷயங்களை எழுதுவோருக்கும், பிரசுரிப்போர்க்கும் சட்டப்படி

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க.)

"ராஜதர்மம்"

(K. R. V. சாஸ்திரி).

(மகாபாரதம்)

முன் காலத்தில் அரசனில்லாமலிருந்த போது ஜனங்களுக்குள் பெரிய கலகம் உண்டாயிற்று. பிர்ம்மதேவர் அதைக்கண்டு மனுவை ராஜ்யத்தில் வைத்தார். மன்னர்களில் நல்லது தீயவை முதலான ஒழுக்கங்கள் அப்பொழுது முதலாகத்தான் காணப்படுகின்றன. அரசன் தகப்பனாலாவது வம்ச பரம்பரையினாலாவது வந்த ராஜ்யத்தை அடைந்த பிறகு ராஜ தர்மத்தை சர்வரடத்தி ஆளவேண்டும். முதலில் தன்னிடம் நல்ல குணங்களைப் பொருத்திக்கொள்ளவேண்டும். அதன் பிறகு தனது வேலைக்காரர்களுக்கும் பிறகு பிரஜைகளுக்கும் குணங்களைப் பொருத்தச்செய்யவேண்டும். இது தான் அடக்கு முறை. கல்விகள் கற்பதினாலும், பெரியோருடன் சேருவதனாலும், தன்னை பதப்படுத்திக்கொள்ளவேண்டும். அறம், பொருள், இவ்விரண்டினையும் தருவதுதான் கல்வி. அதைக் கற்றவர்கள் தாம் பெரியோரெனப்படுவர். இதற்குமேல் இந்திரியங்களை அடக்குவது முக்யமாகும். அடக்காவிடில் அது பெரிய பிழையுண்டாகும். அது அரசனைக் கெடுத்துவிடும். ஒழுக்கம், கல்வி, நல்ல குலத்தில் பிறந்த பரிதானத்தைப் பற்றிப் பரிசோதித்து அதிலகப்படாதவர்களும் எல்லாராலும் அனுசரிக்கப்பட்டவர்களும் ஜிதேந்திரியர்களுமான மந்திரிமார்களையும் அவரவர்கள் சக்திக்கும் தகுதிக்கும் தக்கபடி வேலைகளில் நியமனம் செய்யவேண்டும். சிறந்த புத்தியுள்ள மந்திரிகள் பல ஜனங்களால் விரும்பப்பட்ட தேசம், விரோதிகளால் வெல்லமுடியாத சிறந்த நகரம். கஷ்டத்தில் தாங்கத்தக்கப் பொக்கிஷம். அன்புள்ள ஸேனை, இன்பசொல்மாறாத மந்திராலோசனை தன்னைச்சேர்ந்தவர்களை ஆளும்வகை தெரிந்த அரசர்கள் ஆகிய இவ்வேழும் பிரகிருதிகளெனப்படுகின்றன. இவைகளெல்லாம் பிரஜைகளை ரக்ஷிப்பதற்காக உண்டாகப்பட்டவை.

அரசன் மேல்சொன்ன மற்ற உதவிகளோடு உலக நன்மையைச் செய்யவேண்டும். அரசன் தன்னைக் காப்பாற்றிக்கொள்வதே, பிரஜைகளைக் காப்பாற்றுவதற்காகவே என நினைக்கப்படுகிறது. ஆகவே உணவு, உடை, ஸ்நானம், வெளியில் புறப்படுவது முதலியவைகளில் ஜாக்ரதையாய் இருக்கவேண்டும். பிரஜைகளின் நன்மையே அவனது நன்மை. ஜனங்களை ரக்ஷிக்கும் விஷயத்தில் விருப்பு, வெறுப்பு, இவைகளையொழித்து இரு தரப்பினரின் வாதங்களையும் உள்ளபடி கேட்டு உண்மை கண்டுபிடிக்கும் வரையில் அந்த விஷயத்தைப்பற்றித் தன் புத்தியினாலும் சாஸ்திரம் தெரிந்தவர்களும் மனிதர்களில் சிறந்தவர்களுமான அநேகப் பெரியோர்களுடன் சேர்ந்தும் நன்றாய் ஆராய்ந்து பார்க்கவேண்டும். அரசர் எப்பொழுதும் தன் தேசத்திலுள்ள நல்ல ஒழுக்கத்தையும் தீய ஒழுக்கத்தையும் பிரத்யக்ஷத்தினாலும் ஆப்தர்கள் வாக்யத்தினாலும், அபிமானத்தினாலும் எப்பொழுதும் அறிந்துகொண்டிருக்கவேண்டும் (1) காரியங்களை யாரம்பிக்கும்வழி. (2) மனிதர்களையும், பொருள்களையும் சேகரிப்பது. (3) அதற்கு இடத்தையும், காலத்தையும் ஏற்படுத்துவது. (4) இடையூறுகளை நிவர்த்தி செய்வது. (5) முடிப்பது என ராஜநீதி சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட இவ்வைந்து அங்கங்களையும் கவனித்து புத்திசாலிகளான மனிதர்களுடன் மந்திராலோசனை செய்யவேண்டும். குலம், ஒழுக்கம், கல்வி இம்மூன்றுமுள்ளவர்களோடேயே, எப்போதும் ஆலோசிக்கவேண்டும். தேசத்திற்குக் கெடுதலைச் செய்கிறவர்களை விலக்கிவிடவேண்டும். மனிதர்களல்லாத பாம்பு முதலிய பிராணிகளாலும் பகைவர்களாலும் பயமில்லாமலிருக்கும்படி ஜனங்களைக் காப்பாற்றவேண்டும். அரச குமாரர்களுக்கு பிறந்தது முதல் நல்ல ஒழுக்கங்களைக் கற்பிக்கவேண்டும். அவர்களுள் ஆத்ம குணங்கள் நிறம்பினவனை இளவரசாகச் செய்யவேண்டும். ஜனங்களுக்குப் பயமும் ராஜ்யத்தின் வழுவும் இல்லாமலிருக்கும்படி எப்பொழுதும் ஆலோசித்துக் காரியங்களை செய்யவேண்டும். ஒரு நிமிஷமும் ராஜ்யத்தில் அரசன் இல்லாமலிருக்கலாகாது ஆதலால் தனக்குப் பின் தொடர்ச்சிக்காக இளவரசு எப்போதும் விதிக்கப்படுகிறது. உயர்குலத்தோர், கற்றவர்கள், வேதமோதினவர்கள், தபஸ் உள்ளவர்கள் முதலியோர்களுக்கு மேன்மையைச் செய்யவேண்டும். தனக்காகவும் ராஜ்யத்தை நடத்துவதற்காகவும் பொக்கிஷத்திற்கும் தர்கங்களிலிருந்தும் தேசத்திலிருந்தும் ஸமுத்ரம் வர்த்தகர்களிடமிருந்தும் நாதனில்லாத சொத்திலிருந்தும் திரவியத்தைச் சேர்க்கவேண்டும். சிற்றரசர்களின் தனங்களாலும் தனது தனத்தைக் கொண்டும். உத்யோகஸ்தர்களையும் வாகனங்களையும், படைச் சேவகர்களையும், போஷிக்க வேண்டும். நீதி சாஸ்திரத்தை அறிந்து தேச காலங்களுக்குத் தக்கபடி தர்மத்திற்கும் உத்யோகஸ்தர்களுக்கும், தனக்கும், ஆபத்காலத்திற்குமாக நான்கு வகைகளாக பொக்கிஷத்தைப் பகுக்கவேண்டும். தன் தேசத்தில் திக்கற்றவர்களையும், நோயாளிகளையும், வயது முதிர்ந்தவர்களையும் அரசன் போஷிக்க வேண்டும். யுத்த காலத்தில் உபாயத்தினாலாவது பொருள் செலவினாலாவது சேனைகளுக்கு ஆபத்துவராமல் காப்பாற்றவேண்டும். உயிர்களைக் காப்பாற்றுவதற்காகச் சண்டையை பெரும்பாலும் விட்டுவிடவேண்டும். அதிக பலமுள்ளவனால் எதிர்க்கப்பட்ட அரசன் பிரஜைகளின் நன்மைக்காகவே மந்திரி முதலியவர்களை ஒற்றுமைப்படுத்திக்கொண்டு ஆபத்திற்குப் பரிஹாரத்தைச் செய்யவேண்டும்.

இவ்வாறு நடந்து ஜனங்களைத் தண்டித்தும் பயமுறுத்தியும் வருமரசன் தாமரையிலையில் தண்ணீர் ஒட்டாமலிருப்பதுபோல் பாவ பண்ணாமலிருப்பான்.

(7-ம் பக்கம் தொடர்ச்சி.)

சிக்ஷை விதிக்கவேண்டியதை ஹிட்லர் உணர்ந்ததுபோல் மற்ற தேசங்களும் உணர்ந்து தங்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டியது அவச்யமல்லவா? அப்படிச் செய்யாதவரை பத்திரிகைகளின் மாயாப் பிரசாரத்தினால் ஜனஸமூஹமும் உலகமும் மிகுந்த தீங்குகளை அடைந்து கஷ்டப்பட நேருமென்பது திண்ணம்.

ஓர் யதார்த்தவாதி.

கூரத்தாழ்வான் அருளிச்செய்த
ஸ்ரீ ஸ்தவம்.
மூலம் நாகரத்திலும்தமிழிலும்
சிரோமணி
ஸ்ரீநிவாஸராகவாசாரியரால்
எழுதிய உரையுடன்
விலை அணா 0—4—0
கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

வந்தேமாதரப் பாட்டுக்கு ஆக்ஷேபம்.

முஸ்லீம்களின் கட்டுப்பாடு.

சென்னை சட்டஸபையில் வந்தேமாதர கீதத்தைப்பற்றி முஸ்லீம்களின் ஆக்ஷேபக் கிளர்ச்சி வலுப்பட்டுவருகிறது. தினமும் பிரார்த்தனை காலத்தில் முஸ்லீம் மெம்பர்கள் வருவதில்லை. அதன் பிறகே ஸபைக்கு வருகிறார்கள்.

இந்தியா சட்டஸபையில் பிரேரணை.

சென்னை சட்டஸபையில் வந்தேமாதரகீதம் பாடுவதைத் தடுக்கவேண்டுமென்று இந்தியா சட்டஸபையில் ஸர் மஹமத்யாகூப் என்பவர் ஓர் அவஸரப் பிரேரணை கொண்டுவந்தார். அந்த கீதமானது இஸ்லாம் மதத்தை அவமதிப்பதாயிருப்பதாயும், முஸ்லீம்களுக்கு மனவருத்தத்தைக் கொடுப்பதாயும் ராஜப்பிரதிநிதியின் விசேஷாதிகாரத்தைச்செலுத்தி இதைத் தடுக்கவேண்டுமென்றும் அவர் கோரினார்.

இது மாகாணச் சட்டஸபையைப் பொருத்த விஷயமென்றும் இதில் ராஜப்பிரதிநிதி தலையிட அதிகாரம் கிடையாதென்றும் சென்னை சட்டஸபைத் தலைவரே இதை முடிவுசெய்ய அதிகாரம் பெற்றவரென்றும் ஸர்க்கார் தரப்பில் ஆக்ஷேபிக்கப்பட்டது. தலைவர் இந்த அவஸரப் பிரேரணைக்கு அநுமதி கொடுக்க மறுத்துவிட்டார்.

ஆதிகுடி.

மகா நவராத்திரி.

பெங்களூர் பிரம்மஸ்ரீ K L. கிருஷ்ண பாகவதர் அவர்களால் நிகழும் ஈசுவர-ஆு புரட்டாசி மீ 19-உ (5-10-1937) மங்களவாரம் முதல் ஆரம்பமாகும் ஸ்ரீமகா நவராத்திரி மஹோத்ஸவத்தை முன்னிட்டு ஸ்ரீராஜ ராஜேஸ்வரி அம்பிகையை துலாலக்னத்தில் (காலை 7 மணிக்கு மேல்) கடஸ்தாபனம் செய்து லக்ஷார்ச்சனை, மஹான்யாசம், ராமாயண பாராயணம், சூரிய நமஸ்காரம், நவக்ரக பூஜை, வேதபாராயணம், தேவிமாகாத்மியம் பாராயணம், கன்னிகா பூஜை, தம்பதி பூஜை, இத்யாதி வைபவங்களுடன் ஆரம்பித்து கடைசி தினமாகிய விஜய தசமி அன்றையதினம் பிராம்மண சந்தர்ப்பணையும் நடக்கும்.

சென்னை.

ஸ்ரீபாதராஜர் வருகை. பற்பலஇடங்களில் ஸநாதன தர்மத்திற்கு வேதபாடசாலைகள் மூலமாகவும் மற்றும் பலவகையிலும் பேருதவி செய்து வரும் ஸ்ரீபரமஹம்ஸபரிவ்ராஜக ஸ்ரீபிக்ஷு ஸ்ரீ பாதராஜஸ்வாமிகளவர்கள் 24உ சென்னை மைலைக்கு விஜயம் செய்தார்கள். சாதுர்மாஸ்ய பூஜைக்குப்பிறகு பக்ஷி தீர்த்தத்தில் பிரம்மஸ்ரீ யக்ஞேச்வர தீக்ஷிதரவர்களுக்கு பசுபந்தத்தை நடத்திவைத்து காஞ்சிமண்டலத்தில் ஓர் குருகுலம் ஸ்தாபிக்க பனையூர் சென்று இங்கு விஜயம் செய்தார்கள்!

விஜய்! ஸ்ரீசங்கர மடத்தில் நடக்கும் 18 புராணப்பிரசங்க சபைக்கு விஜயம் செய்து மஹாஸ்கந்தம் ஸ்ரீவைஷ்ணவ கண்டாம் புருஷோத்தம க்ஷேத்திர மாஹாத்மியத்தை ஸ்ரீவத்ஸ சோமதேவ சர்மா கூற அங்கு ச்ரவணம் செய்து கதை முடியும் வரை தங்கினார்கள்.

அமரகலா விலாஸினீ ஸபையும் இஷ்டாசார பரிபாலந பரிஷத்தும் நடத்தும் வேத காவ்யபாடசாலைக்கு விஜயம் செய்து சில அரிய புத்திமதிகளைக்கூறினார்கள் மாம்பலத்திற்கும் விஜயம் செயவார்களென அறிகிறோம்,

நமது நிருபர்.

மதிப்புரை.

"அதிகரண சதுஷ்டயீ"

இந்தக் கிரந்தம், வேதாந்த பூஷணம், சாஸ்திர ரத்நாகரம், குலபதி, மஹாமஹோபாத்யாய மைலாப்பூர் ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸிபால், கருங்குளம், பிரும்மஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகளவர்களால் செய்யப்பட்டது. இப்படிப்பட்ட பெரியவாள் எழுதிய கிரந்தத்துக்கு மதிப்புரை மூலமாக கௌரவம் ஏற்படவேண்டியது அவச்யமில்லை. இந்த கிரந்தம் வெகு உத்தமமானது என்பதற்கு இக்கிரந்த கர்த்தாவின் நாமதேய ச்ரவணமே போதுமான சான்றாகும்.

34 பக்கங்கொண்ட இச் சிறு நூலில் வேதாந்த மீமாம்ஸா சாஸ்திரத்தின் (4) அதிகரணங்கள் விசாரிக்கப்பட்டிருப்பதால் இந்நூலுக்கு "அதிகரண சதுஷ்டயீ" என்ற நாமகரணமேற்பட்டது. அதில், முதலில் "ஆநந்த மயாதிகரணமும்," இரண்டாவதாக "யதாச்ரய பாவாதிகரணமும்" பின்பு "ஐஹிகாதிகரணமும்" அதன் பிறகு "லிங்க பூயஸ்த்வாதிகரணமும்" கிரமமாக விமர்சிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அதிகரண விசாரத்திலும் ப்ராஸங்கிகமாக அநேக அதிகரணங்களைப் பற்றிய விசாரங்களும், அடங்கியிருக்கின்றன.

இந்த கிரந்தத்தால், ஸ்ரீ பாஷ்யத்திலும், ச்ருத ப்ரகாசிகா வ்யாக்யானத்திலும், அத்வைத மதத்தின்பேரில் கூறியுள்ள தூஷணங்களுக்கு ஸமாதானம் சொல்லியும், மேற்கண்ட தூஷணங்கள் யாவும் விசிஷ்டாத்வைத மதத்தில் தான் ஸம்பவிக்கின்றனவென்று ஸ்தாபித்தும், அத்வைத மதத்தில் தான் மேற்கண்ட அதிகரணங்கள் பொருத்தமுள்ளனவென்றும் ஸங்கிரஹமான சப்தங்களால் யுக்தி பூர்வகமாக நிர்ணயிக்கவும் பட்டிருக்கின்றன. இந்தக் கிரந்த கர்த்தாவால் "ஸூத்ராநுகுண்யஸித்தி" என்ற ஒரு பிரும்ம ஸூத்ர விமர்சாத்மகமான பெரிய கிரந்தம் எழுதப்பட்டிருக்கிறது. அதன் ஸங்கிரஹ கிரந்தமாக இது இப்போது வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த கிரந்தத்தின் நடுவில் காரிகையாக அநேக சுலோகங்கள் எழுதி அதற்குத்தானே வ்யாக்யானம் செய்திருப்பதைக் கவனித்தால் ஸ்ரீ மதப்பய்ய தீக்ஷிதரவர்களின் கிரந்த கரண ஸம்பிரதாயம் நமக்கு ஞாபகத்திற்கு வருகிறது. இந்த மாதிரி கிரந்தம் எழுதுவது எளிதல்ல. ஆதலால், இந்தப் புஸ்தகமோ, பிரும்ம ஸூத்ராநுகுண்யஸித்தியோ, இவை இரண்டும், அத்வைத விசிஷ்டாத்வைத மதங்களுக்குள் அர்த்த வித்யாஸத்தை யறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலுள்ள அத்வைதிகளுக்கு, அத்யந்தோபகாரகமாயிருக்குமென்பதில் ஐயமில்லை. ஆனால் அத்வைத மதபாஷ்யத்தை மட்டிலும், வாசித்த வித்வான்களுக்கோ, அல்லது விசிஷ்டாத்வைத மத பாஷ்யத்தை மட்டிலும் வாசித்தவர்களுக்கோ, இந்த இரண்டுக் கிரந்தங்களின் தாத்பர்யம் விளங்கமாட்டாது. அத்வைத விசிஷ்டாத்வைத பாஷ்யங்களிரண்டையும் வாசித்தவர்களுக்கே இதன் தாத்பர்யம் விளங்கும். ஆதலால் இவ்விரு கிரந்தங்களையும், ஆதரிக்க வேண்டியது அத்வைதிகளின் கடமையாகும். இதன் கௌரவத்தை நேரில் பார்த்தாலின்றி வேறு எவ்வித சப்தங்களால் வர்ணித்தாலும் போதாதென்பது எனது தாழ்ந்த அபிப்பிராயம். இப் புத்தகங்கள் கிரந்த கர்த்தாவிடம் கிடைக்கும்.

ஆத்ம வித்யாபூஷணம்.
V. ஜகதீச்வர சாஸ்திரிகள்.

எஸ்டேட் லாண்டு ஆக்ட் சீர்திருத்தம்.

நம் மாகாண ரவின்யு மந்திரி அவர்களால், நில சுவான்தார் சட்ட சீர்திருத்தம் செய்ய பரிசீலனைக்கமிட்டி ஏற்படுத்தியதாய், 25.9.37 பேபரில் ஏற்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் ராஜாங்கம் சம்மந்தப்பட்ட, சத்திரம், தேவஸ்தானம், முகாசா, சேதுபாவஸ்வாமி, எஸ்டேட்டுகள் வகை, 1908 இந்தியமுதலாவது ஆக்ட் அனுஷ்டானம் கொண்டவைகள்.

பிரிவிகவுன்ஸில், ஹைகோர்ட் தீர்ப்புகளில், பிரிட்டிஷ் கவர்மெண்டாரின் நிலவரி உரிமை பாத்யத்தை கொடுத்திருப்பதாய் தெளிவாயிருக்கிறது. ரயித்வாரி ரவின்யூ கொள்கைப்படி, ஷை எஸ்டேட்டுகள் அடையக்கூடியது, அதாவது Half ten, கணக்கு எஸ்டேட் லாண்டு சட்ட, முதல் கொள்கை, மேல்வார பொருள், தான்ய பங்கு உரிமை, அங்கங்கு மேல்வாரத்தை, ஆங்காங்குள்ள, அனுஷ்டான படி, அமானி, இஜாரு, காமுடேஷன் எங்ரிமெண்டு, தீர்ப்பு, சட்டம் ஒத்து, தான்யமாக, சுவல்ப இடத்திலும், ரொக்க நிலத்தீர்வையாகவும், தஞ்சை ஜில்லாவில் மேல்வாரதாரர்கள் வசூலித்து வருகிறார்கள்.

ஷை சட்டத்து நிலவரி, பங்கு உரிமை கணக்கு நிர்ணயமில்லாதிருக்கிறது. ரயித்வாரிகொள்கை, நிகர் மிச்சத்தில் பாதி வரை நில வரி, அக்கணக்கு நிலத்தீர்வை நியாயப்படி கம்மியாக்க, நம் [illegible] பூருவும் முயற்சிநடந்துகொண்டிருக்கிறது. மேல்வாரதாரர்களுக்கு நில வரி பங்கு வீதம், ஷை சட்டத்தில் நிர்ணயிக்க சகலரும் கோர வேண்டும். Act of 1908. செட்டில்மெண்டு அத்தியாய ஆரம்பத்தில் தத்காலமுள்ள நில வரி, நியாயமென்ற கொள்கையின்பரிசீலிக்கஏற்பட்டிருக்கிறது. கவர்மெண்டு செட்டில் மெண்டு சட்டம் கொள்கை பொருத்தமாகாதது. சர்வே கணக்குப்படி கிராம பூமி ஏகர், எல்லா இடங்களிலும், கால், அரைபங்குஜாஸ்தி ஏற்பட்டிருக்கிறது. ஆதிகால கோல் அளவும் 14.16 அடிகள் கொண்டது சமீபம், பர்லா கமிட்டி, கள்ளிக்கோட், எஸ்டேட் செட்டில்மெண்டு, சர்வே கணக்கு, ரெவின்யூ போர்டாரால்புல் போர்ட் செய்த முடிவு, சென்னை லாஜெனரல் சப்ளிமெண்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

அந்தப்பரிசீலனையில், நில வரி ஏகர் 1க்கு ஏற்பட்டதை, அளவு ஜாஸ்தி கட்டிய, பூமிக்கும் தீர்வை, ஏற்பட்டதும் அது 2மடங்குக்கு, மேல் பட்ட தென்றும், கண்டுபிடித்து நியாயப்படிக்கு வறத்திருக்கிறார்கள். எஸ்டேட் லாண்டு ஆக்ட் அனுஷ்டான மேல்வாரதாரர்கள் நில வரி, மேல் வாரம், ஓடவாரதில் 100க்கு 25 பங்கு வரை, பெறசட்டவரம்பு ஏற்படவேணும். கவர்மெண்டு வரிகள் மேல் வாரதாரர்கள் கொடுக்க வரம்பு இருக்க வேண்டியதும் முக்யம்.

எம். ராமய்யர்.

ஸ்ரீ நவராத்திரி மஹோற்சவம்.

குற்றாலம், தென்காசி.

திருநெல்வேலி ஜில்லா தென்காசிக்கு அடுத்த திருக்குற்றாலத்தில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ தத்தாத்ரேய மடாதீச ஸ்ரீ சித்தேஸ்வரி பீடஸ்தாபனாசார்ய ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய "ஸ்ரீ சிவ சிதானந்த ஸரஸ்வதி சுவாமிகள்" என்னும் "ஸ்ரீ மௌனானந்த ஸரஸ்வதி சுவாமிகள" வர்களுடைய அனுக்கிரகத்தை முன்னிட்டு ஷை சுவாமிகளால் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ தத்தாத்ரேய மந்திரத்து ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி சந்நதியிலும் ஸ்ரீ ஷண்முக ஸ்வாமி ஸந்நதியிலும் நவராத்திரி மஹோற்சவம் இந்த ஈஸ்வர-ஆு புரட்டாசி-மீ 19உ-க்குச் சரியான 1937-ஆு அக்டோபர்-மீ 5உ செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து புரட்டாசிமீ 28உ அக்டோபர்மீ 14உ வியாழக்கிழமை வரையில் சாஸ்திரோக்தமாக நடைபெறும். இம்மஹோற்சவத்தில் "குமாரி பூஜை, மஹாருத்திர குங்குமாபிஷேகம், ஸ்ரீ சக்ரமேரு நவாவரண பூஜை, ஸுவாஸினி பூஜை, ஸ்ரீ ஸஹஸ்ர சண்டி யாக ஹோமங்கள்" முதலிய விசேஷ வைபவங்கள் கண்டுகளிக்கத் தக்கவை. பக்தகோடிகளனைவரும் வந்து இந்த மஹோற்சவத்தைச் சிறப்புற நடப்பித்து ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியின் பிரஸாதத்தையும் ஸ்ரீ மௌனானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளுடைய அநுக்கிரக பாக்கியத்தையும் பெறுவார்களாக என்று அறிவிக்கப்படுகிறது.

பக்த ஜனங்கள்.

பெங்களூர்.

பெங்களூர் கண்டோன் மெண்டில் உள்ள ப்ராமண சமூகத்தின் ஆதரவின் கீழ் வருகிற அக்டோபர்மீ 5உ முதல் 14உ வரையில் 14வது ஆுத்திய நவராத்திரி உத்சவம் வைசியா ஹாஸ்டலில் நடைபெறும். அன்றும் பிரதி தினமும் தேவி பூஜை தீபாராதனை நடைபெறும் என்றும் ஒவ்வொரு நாள் இரவும் சேங்காலிபுரம் புராணகேசரி ப்ரும்மஸ்ரீ R. அப்பாசாமி சாஸ்திரிகள் அவர்களால் விமர்சையாக தேவி பாகவத புராண ப்ரவசனம் நடக்கப்படும் என்று சபையின் காரியதரிசி நமக்கு அறிவித்திருக்கிறார்.

வைணவப்பெரியார் மறைவு.

திருப்புறம்பியம் பிரபலமிராசுதார் ஸ்ரீமான் டி. கோவிந்தசாமிநாயுடு அவர்களைக்குடந்தை வாசிகள் நன்கு அறிவார்கள். இப்பெரியார் கிராம முன்னேற்ற விஷயத்தில் பல பொது ஜன நன்மைகள் செய்துள்ளார். இவர் மிகுந்த வைணவ பக்தி உள்ளவர். நமது குடந்தையிலுள்ள வைணவ கோவில்களில் 7ம் திருநாள் உத்ஸவத்தை நடத்தி வந்தார். திருவாய்மொழியில் நல்லதேர்ச்சி உள்ளவர். வருடந்தோறும் சென்னையிலும், ஸ்ரீரங்கத்திலும் வைணவ மகாநாடு இவருடைய ஊக்கத்தினாலும் சென்ற 10 ஆண்டுகளாக நடந்து வருகிறது. இப்பெரியார் 1890வது வருடத்தில் திருப்புறம்பியத்தில் சநாதன தர்மசபை ஏற்படுத்தி சில வருடம் நடத்தி வந்தார். இவர் மிகவும் தெய்வ பக்தி உள்ளவர். திருப்புறம்பியத்தில் ஒரு பெரிய நந்தவனத்தை ஸ்தாபித்து நித்தியப்படி திருமாலை கட்டி திருக்குடந்தை ஸ்ரீ சாரங்கபாணிக்கும் ஸ்ரீ சக்கிரபாணிக்கும் திருமழிசை ஆழ்வாருக்கும்; புஷ்ப கைங்கர்யம் செய்து வந்தார். ஸ்ரீ ரங்கத்தில் வைகுண்ட ஏகாதசியிலும் திருக்குடந்தையில் நடக்கும் அக்ஷயதிருதியை உத்ஸவத்திற்கும் பாகவத குழாங்களுக்கு ததியாராதனை கைங்கர்யம் செய்துவந்தார். இப்பெரியாரால் இன்னும் பல தர்மங்கள் செய்யப்பட்டு நடந்து வருகிறது;

இவ்வைணவப்பெரியார் 22-9-37 தேதி முமுக்ஷு பதவியை அடைந்தார். தற்காலம் வயது 71. இது விஷயம் வைணவ உலகிற்கு பெரிய நஷ்டம்.

இப்பெரியாரின் பெரு முயற்சியால் சொந்த குடும்பங்களிலிருந்து திருப்புறம்பியத்தில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் கோவில் ஒன்று ரூ 50000 வரையில் செலவில் கட்டப்பட்டு நித்தியப்படி கைங்கர்யமும் உத்ஸவாதிகளும் ஆழ்வாராசாரியார் திரு நக்ஷத்திர உத்ஸவாதிகளும் நடந்து வருகிறது.

T.R. ராமஸ்வாமி அய்யங்கார்.

215203

வெளியூர்ச்செய்திகள்.

சகிந்திராபாத்

சகிந்திராபாத் ரயில்வேஸ்டேஷனுக்கு அருகிலுள்ள ஸ்ரீகணபதி ஆலயத்தில் விநாயக சதுர்த்தியன்று வழக்கம்போல் உத்ஸவம் ஆரம்பித்து அன்று முதல் 19.9.37 வரையில் ஸஹஸ்ரநாம அர்ச்சனைகளும், ஹரிகதைகளும் சங்கீத கச்சேரிகளும் பஜனைகளும் விமர்சையாக நடைபெற்று உத்ஸவம் பூர்த்தியடையப்பெற்றது. ஒரு நிருபர்.

ஆத்தன்குடி.

ஸநாதன தர்ம மகா சபை,

ஈஸ்வர ஆண்டு புரட்டாசிதிங்கள் 4ம்நாள் மாலை 6மணிக்கு, திருவாளர், சு.வீ.ர. கதிரேசன் செட்டியார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பிரம்மஸ்ரீ சாமி அய்யங்கார், P.S, சுப்பிரமணிய கனபாடிகள், ஜெ சாமிநாதய்யர் மூவரும் அறிய சொற்பொழிவு ஆற்றிய பின், பிரபல ஆஸ்திகரும், தர்ம சீலரும், வைதீக கர்மாக்களில் சிரத்தையுடையவருமான அரிவளம் திருவாளர், பெரி. முரு. ராம. முருகப்ப செட்டியார் அவர்கள் காலகதி அடைந்ததற்கு அநுதாபத்தீர்மானம் நிறைவேற்ற தலைவரவர்கள் உருக்கமாய் முடிவுரை பகர, வந்தனோபசாரத்துடன் இரவு9மணிக்கு சபை கலைந்தது.

ஜி. சுப்பிரமணியன் சிகரெடரி

பெரியகுளம்

ஆவணிமீ 5உ வெள்ளிக்கிழமையன்று இரவு 8மணிக்கு சந்தோ கநாகபூஷணமய்யர் அவர்களின் யஞ்ஜயதனத்தில் பழனி பண்டித ஸ்ரீ சிவநாராயணய்யரவர்களால் சுப்பிரமணிய பக்தர்களைப்பற்றியும், 6உ சனிகிழமையன்று வர்ணாச்ரம தர்மங்களென்ன, அநேக வித ஸம்ஸ்காரங்களைப்பற்றியும், 7உ ஞாயிறன்று பக்த புரந்தர தாஸரின் சரித்திர மூலமாக பக்தியையும், 8உ திங்களன்று உத்திரராமாயணத்தையும் மிகவிஸ்தாரமாக தினந்தோறும் 11மணி வரை கூறினர்கள். அநேக மஹா ஜனங்கள் வந்திருந்து ச்ரவணானந்தத்தை அடைந்தார்கள். பிரம்மஸ்ரீ சிவநாராயணய்யாவர்களைக்கொண்டு நவருத்திரியில் தேவி பாகவதம், பகலில் மூல பாராயணமும், இரவில் கதா பிரவசனமும் சொல்லுவதற்கு உள்ளூர் மஹாஜனங்கள் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

ரா. சோமசுந்திர தீக்ஷதர்.

திருப்பதி.

ஸ்ரீஅஹோபிலமடம்.

சீரும்சிறப்பும் பெற்றுத்திகழும் திருப்பதி மலையில் ஸ்ரீ அஹோபில மடத்திற்கென ஒரு தனிக்கட்டிட மில்லாதிருந்த குறையை நீக்கி அம்மடத்தில் மூர்த்தா பிஷித்தராய் எழுந்தருளியிருக்கும் நாற்பத்தொன்றும் பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கர் ஸ்ரீ வண்ட சடகோப ஸ்ரீ லக்ஷ்மீ நரசிம்ஹ சடகோப யதீந்த்ர மஹா தேசிகர் மிகக்கிருபையுடன் சுமார் நாற்பதுனாயிரம் அளிக்க, வெகுவிசாலமாய், அழகாக கண்டவர் மனம் கவரும்படி ஸ்ரீ அழகிய சிங்கர் நியமனத்தை சிரஸா வகித்து ஷை ஸந்நிதி சிஷ்யரும், சென்னை கிறிஸ்டியன் சென்ட்ரல் கோவாப்ரேடிவ் பாங்க் மானேஜரும், எல். என். கன்பெக்ஷனரி மானேஜிங் டைரெக்டரும், திருவல்லிக்கேணி தமிழ்சங்க கமிட்டியினருமான ஸ்ரீமான் யஸ். கிருஷ்ணசாமிய்யங்கார் வேலையை நேரில் கவனித்து சீக்ரத்தில் நிறைமையாக பூர்த்திசெய்ய, ஆவணிமீ கடைசியில் அம்மடத்தில் எழுந்தருளப்பண்ணப்பட்டிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீ நரசிம்மன் முதலிய மூர்த்திகளுக்கு ஸம்ப்ரோக்ஷணம் வெகு விமரிசையாக நடத்தப்பட்டது.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

புதுக்கோட்டை

மஹாராஜா வேதசாஸ்திர பாடசாலை வித்யாபிவர்த்தினீ ஸபை.

சென்ற 18-9-37 சனிக்கிழமை திரயோதசி மாலை 4 மணிக்கு மெம்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி எஸ். வைத்திநாதன் மங்களாசரணம் செய்ய ஷை பாடசாலை ஹெட்மாஸ்டர்பிரம்மஸ்ரீ எம்.என் இராகவசாஸ்திரிகள் தலைமை வகித்தார். அதன் கீழ் குடுமியாமலை பிரம்மஸ்ரீ ஏ. கல்யாண சுந்திர சாஸ்திரிகள் "ஸநாதன தர்மம்" என்ற விஷயத்தை வேதப்பிரமாணங்களைக்கொண்டும் புராணப்பிரமாணங்களைக்கொண்டும் மிக அழகாகவும் பாமரஜனங்களுக்கும் பரமானந்தமளிக்குமாறு பேசி முடித்தார். தலைவரவர்களும் முடிவுரை பகர்ந்தனர். பிறகு காரியதரிசியின் வந்தனோபசாரத்துடன் மாலை 6மணிக்கு ஸபை இனிது நிறைவேறியது.

எஸ். வைத்திநாத சாஸ்திரி காரியதரிசி

மேல்மங்கலம்

ஆஸ்திக மஹா ஜன சபை.

ஆவணிமீ 31ம்உ வியாழக்கிழமை மாலை4 மணிக்கு பிரம்மஸ்ரீ ப. விஸ்வநாதய்யரவர்களின் அக்கிராசனத்தின் கீழ் சபை கூடிற்று. கிராம ஜனங்கள் ஏராளமாக விஜயம் செய்திருந்தனர்.

அக்கிராஸனரின் வேண்டுகோளின்படி திண்டுக்கல் பிரம்மஸ்ரீ M. S. கிருஷ்ண சர்மா (B. A. L. T.) அவர்கள் தர்மம்என்னும்பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்துகையில் பகவான் கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு யுத்தரங்கத்தில் உபதேசம் பண்ணுகையில் ஸ்வதர்மானுஷ்டானமே யாவருக்கும் முக்யமென்றும், அந்தஸ்வதர்மாநுஷ்டானம் பலேச்சையன்னியில் ஈஸ்வரார்ப்பணமாய்ச்செய்ய வேண்டுமென்றும், நிஷ்காம்ய கர்மாநுஷ்டானத்தால் தான் சித்த சுத்தி ஏற்பட்டு ஈஸ்வரனிடத்தில் மனதானது லயத்தையடைய வேண்டுமென்றும், (தூக்கத்தில் கையிலிருக்கும்பொருள் தானாக நழுவுவது போல்) ஈஸ்வர தியானத்தில் மனதானது லயத்தை அடைந்து கர்மாநுஷ்டான ஞாபகமே யில்லாமல் கர்மா, தானே நம்மை விடும் வரையில் அதை விட நமக்கதிகாரம் இல்லையென்றும், கர்மானுஷ்டானமும், பக்தியும் பரஸ்பரம் ஒற்றுமையுடன் சேர்ந்திருந்தால் தான் ஞானோதயம் ஏற்படுமென்றும், அந்த ஞானத்தால்தான் மோக்ஷத்தை அடையலாமென்றும், ஆகையால் மோக்ஷத்திற்கு அடிப்படை தர்மமென்றும்,

வெதொவிலொயஉ-ூஉ-லூ

வேதம், தர்மத்திற்கு மூலமென்றும், வேதத்தை அறிந்து நடப்பதற்கு நமக்கு சக்தியில்லை எனபதை அறிந்து

ஶ்ரு திஂவஶ்ருஜிஉ நய: ஸூ ரஷிவத யாவஸ்ய திழ

மஹரிஷிகள் வேதத்தை பிரத்யக்ஷமாக அறிந்து ஸ்மிருதிகளை எளிய நடையால் நமக்கு உபயோகமாக நிபந்தனம் செய்தார்களென்றும், ஆகையால் அவர்களின் உபதேச மொழிகளை பின் பற்றல் அவசியமென்றும்,

ஶாமவெஷாதிஷமாநா உஜ்ஞா நவிஷ வாயிநாம் । வீகிதாயஉ-மாஶ்ரூணி வூாயீநாவிவஹெஷஜ்ழ ॥

ராகத்வேஷம், அக்ஞானம் இவைகளால் பீடிக்கப்பட்ட நமக்கு தர்ம சாஸ்திரங்களே ஔஷத மென்றும், அவ்வௌஷதத்தை உட்கொண்டால் தான் பாபத்தில் பயமும், புண்யத்தில் ப்ரவிருத்தியும் ஏற்படு மென்றும், மகா ஜனங்கள் தினம் 1மணி நேரமாவது தர்ம சாஸ்திரப்பயிற்சியில் ஈடுபட வேண்டு மென்றும், அப்பொழுதுதான் ஸ்திரமான பக்தி தர்மத்தில் ஏற்படு மென்றும், பகவத்பாதாசார்யாள் அக்ஞானிகளாகிய நாம் உய்யும் வண்ணம் கிரமமாக ஆத்ம ஞானத்தை அடைவதற்காக உபதேசிக்கப்பட்ட உபதேச பஞ்சக தாத்பர்ய விரிவுரையும் மஹா ஜனங்கள் தர்மத்தில் லயம் அடையும் வண்ணம் அழகாக விமர்சித்தார்.

மஹா ஜனங்கள் உபன்யாசாமிர்த வர்ஷத்தில் மூழ்கி ஆனந்த பரவசரானார்கள். பின்னர் பிரம்மஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரிகளால் அக்ராசனர், உபன்யாசிகளுக்கு வந்தனோபசாரம் கூறப்பட்டு சபை மாலை 6 மணிக்கு இனிது பூர்ணமானது.

சிவராம கணபதி கனபாடிகள்.
காரியதரிசி

குன்றக்குடி.

லக்ஷார்ச்சனை.

பாண்டிய நாட்டின்கண் மயூரகிரி என்கிற குன்றக்குடியில் அகஸ்தியர் நாரதர் விஸ்வமித்திரர் முதலிய முனிவர்களாலும் ஸ்ரீ கிருஷ்ணன், சூரியன், பிரமா, தேவேந்திரன் பாண்டவாள் முதலியவர்களாலும் பூஜிக்கப்பெற்று அவரவர்கள் கோரிய வரப்பிரசாதங்களை அளித்தும் கலியுகாவதாரராய் தன்னை வணங்கும் பக்தகோடிகளுக்கு இஷ்டகாம்யார்த்தங்களை பூர்த்தி செய்து வருகிறவருமான ஸ்ரீவல்லீதேவநாயகி சமேத ஸ்ரீஷண்முகப்பெருமானுக்கு லக்ஷார்ச்சனை செய்யவேணுமாய் கருதி கனதனவான்களுடைய பொருளுதவியை முன்னிட்டு நடைபெறவேண்டியிருப்பதால் இதைக்கண்ணுறும் பக்தகோடிகள் ஷை கைங்கர்யத்தை அவரவர்களாலியன்ற உதவி புரிந்து ஷை அர்ச்சனையும் மங்களகரமாக நடைபெறச் செய்ய வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

V. ரகுநாத சாஸ்திரியார்.

குழந்தை
குடல் ஈரல் கட்டிகளுக்கு
ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள
மதுரை வைத்ய நிபுணர் T.R.ஆராவமுதய்யங்காரின்
மருந்தை உபயோகியுங்கள். ஆயிரக்கணக்காக சௌக்கியம். தங்கமெடல் பரிசும்
பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது.
ஒரு மாதம் மருந்து விலை ரூ. 4—8—0 வி. பி. வேறு.
டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,
20, வடக்கு வெளிவீதி, மதுரை

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A Gopaladesikachariar, and S. Kalyanasundaram.